ரோமர்

நிருபத்தின் விளக்கவுரை

ROMANS

COMMENTARY

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்

Dr. P.V. தியாகராஜ்

ரோமர்

நிருபத்தின் விளக்கவுரை

ROMANS

COMMENTARY

Dr. P.V. THIAGARAJ

EPHRATH PUBLICATIONS
54/A, Lakshmi Apartments,
Kamarajar Salai, Kottivakkam,
Chennai - 600 041.
Phone : 98415 85547, 044-24925464
E-mail : pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com

First Edition : 2006
Second Edition : 2011
Third Edition : 2017

Printed by:
Captain Press
Chennai - 600 041.
Phone: 98402 03038

Typeset by:
Smart Fonts
Chennai - 600 041.

Price Rs. 400/-

அர்ப்பணம்

தகுதியற்ற எங்களை
தமது கிருபையினால் இரட்சித்து
ஆச்சரியமாய் வழிநடத்தி, ஆசீர்வதித்து,
வேதத்தின் மகத்துவங்களை வெளிப்படுத்தி
அதைப் போதிக்கவும், எழுதவும் தகுதிப்படுத்திய
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு
இந்நூலை குடும்பமாக அர்ப்பணிக்கிறோம்.

P.V.தியாகராஜ், M.A.,
பிரிசில்லா தியாகராஜ், B.A.,

நிஷா ஜார்ஜ், M.A.,M.Phil.,
ஜார்ஜ் V.K.அய்ரூர், M.A.,

T.அமல்நாத் வேதா, M.A.,
நவீனா அமல்நாத், M.C.A.,

T.பிரேம்நாத் வேதா, B.Sc.,M.B.A.,
ஷீபா பிரேம்நாத், M.A.,

அபிஷேக், ஜாஷ்வா
எரிக், பிரிஷா
கெவின் பிரேம்வேதா

ஆசிரியரின் நூல்கள்

	விலை ரூ.
கிருபையின் மேல் கிருபை	90.00
விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்	10.00
பத்துக் கற்பனைகள்	20.00
பரிசுத்த ஆவியானவர்	100.00
உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக	25.00
1யோவான் - வேதபாடம்	45.00
மலைப்பிரசங்கம்	200.00
உலகின் ஒளி இயேசு	100.00
தெசலோனிக்கேயர் - விளக்கவுரை	275.00
வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை	350.00
எபேசியர் - விளக்கவுரை	200.00
எபிரெயர் - விளக்கவுரை	400.00
உனக்காக நான் மரித்தேன்	250.00

ஆசிரியர் உரை

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் உண்மையில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் எழுதின அன்பின் கடிதம்.

ரோமர் நிருபம் "பவுல் எழுதின சுவிசேஷம்" என்று அழைக்கப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் சுவிசேஷங்கள் என்று அழைக்கப்பட்டாலும் அவற்றில் கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, அவர் செய்த அற்புதங்கள், வழங்கிய போதனைகள் ஆகியவைதான் கூடுதலாக வலியுறுத்தப்படுகின்றன. ஆனால் பவுல் எழுதின சுவிசேஷமோ, கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் உண்டாகும் தேவநீதியைக் குறித்தும், அதை விசுவாசிப்பதினால் உண்டாகும் இலவசமான இரட்சிப்பைக் குறித்தும் பேசுகிறது.

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1:16,17) என்ற வசனங்கள் ரோமர் நிருபத்தின் மையக்கருத்தாகும்.

ஆதியாகமம் துவங்கி, வெளிப்படுத்தின விசேஷம் வரையுள்ள எல்லாப் புத்தகங்களிலும் சொல்லப்பட்ட சத்திய உபதேசங்கள் அனைத்தையும், அப்போஸ்தலனாகிய பவுல், பிரத்தியேகமாக தேவனால் தனக்கு வழங்கப்பட்ட வெளிப்பாட்டின் அடிப்படையில் முழுநிறைவாக, ஒழுங்கான முறையில், யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய விதத்தில் இந்த புத்தகத்தில் மிகுந்த கவனத்தோடு எழுதி வைத்திருப்பதால் தேவனுக்கு நன்றி சொல்வோம்.

தேவநீதி, தேவபெலன், தேவகிருபை, விசுவாசம், நம்பிக்கை, நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், இரட்சிப்பு, தெரிந்து கொள்ளப்படுதல், புறக்கணிக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய மூல உபதேசங்களை பவுல், ரோமர் நிருபத்தின் முதல் பதினொரு அதிகாரங்களில் அறிவிக்கிறார். மீதமுள்ள ஐந்து அதிகாரங்களில் கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்கள் என்ற முறையில் விசுவாசிகளாகிய நாம் ஒருவரோடொருவரும், உலக மக்களோடும் கொண்டிருக்க வேண்டிய உறவு முறைகளை வலியுறுத்துகிறார்.

ரோமர் நிருபத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்த சில தேவமனிதர்கள் அதைக் குறித்து என்ன சொல்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

" புதிய ஏற்பாட்டில் மிக முக்கியமான வேத புத்தகம் ரோமர் நிருபம்"
– மார்ட்டின் லூத்தர்

" இதைவிட மிக அறிவாழமிக்க புத்தகம் உலகில் எந்த மொழியிலும் எழுதப்படவில்லை"
– சாமுவேல் கால்ரிட்ஜ்

" ஒருவன் ரோமர் நிருபத்தை விளங்கிக் கொண்டானேயானால் முழு வேதத்தையும் அறிந்து கொள்ள அவனுக்கு எந்தத் தடையுமில்லை"
– கால்வின்

" ரோமர் நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் ஆலயம்"
– கோடெட்

" உலகளாவிய கிறிஸ்தவ சட்ட ஒழுங்கின் அடிப்படை ஆதாரம் – ரோமர் நிருபம்"
– புரூஸ் மெட்ஸ்கர்

திருச்சபையின் சரித்திரத்தில், விசுவாசிகள் எப்போதெல்லாம் ரோமர் நிருபத்தில் ஆர்வம் காட்டினார்களோ, அப்போதெல்லாம் அவர்களுக்குள் ஒரு வசன எழுப்புதல் உண்டாயிற்று என்று பார்க்கிறோம். அதன் விளைவாக சபை ஆசீர்வதிக்கப்பட்டது.

கி.பி. 386–ல் மிலான் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் புனிதர் அகஸ்தின் ரோமர் 13 : 13,14– வசனங்களை வாசித்ததின் விளைவாக இரட்சிக்கப்பட்டு மிகப்பெரிய வேத பண்டிதரானார். கத்தோலிக்க சபை துறவியும் வேத கல்லூரி பேராசிரியருமான மார்ட்டின் லூத்தர் 1513ல்

ரோமர் 1:16,17 வசனங்களைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டதன் விளைவாக கிறிஸ்தவ சமய சீர்திருத்த இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தார். 1738–ல் ஜாண் வெஸ்லி, லூத்தர் எழுதிய ரோமர் விளக்கவுரையை தியானித்து உலகமெங்கும் எழுப்புதல் அக்கினி பரவ உதவியாக இருந்தார். இதுபோலவே 1816–ல் ராபர்ட் ஹல்டேன், 1918–ல் கார்ல் பார்த் என்ற தேவமனிதர்கள் உயிர்ப்பிக்கப்பட்டு, மகத்துவமான ஊழியங்களைச் செய்வதற்கு ரோமர் நிருபமே காரணமாக இருந்தது.

இப்பொழுதோ, அதே ரோமர் நிருபமும், அதன் விளக்கவுரையும் உங்கள் கைகளில் இருக்கிறது. இதை வாசிக்கும் அனைவர் உள்ளங்களிலும், எழுப்புதல் தீ பற்றியெரிய கிறிஸ்து தாமே உதவிசெய்வாராக. "சத்தியத்தையும் அறிவீர்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32) என்கிறார் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து.

விளக்கவுரை என்பது வேதவசனத்தின் ஆழத்திற்குச் சென்று அதில் புதைந்து கிடக்கும் அர்த்தங்களையும், மேலோட்டமாக வாசித்தால் உணரமுடியாத அற்புதமான உபதேசங்களையும், குறிப்பிட்ட பதத்தின் சரியான பொருளையும், அதன் அவசியத்தையும் இணை வசனங்களின் உதவியோடு சந்தேகத்துக்கிடமின்றி தெளிவாக விளங்கிக்கொள்ள உதவுவதே. இதுவே நமது கிறிஸ்தவ இலக்கியத்தின்படி வேத தியானம் ஆகும்.

2003ல் "வெளிப்படுத்தின விசேஷம் – விளக்கவுரை" எழுதியபோது அதன் ஆசிரியர் உரையில் இவ்வாறு எழுதினேன், "இந்த மகத்துவமான வேத புத்தகத்துக்கு விளக்கவுரை எழுதும்படியாக தேவன் கொடுத்த கிருபைக்காகவும், ஞானத்துக்காகவும், தைரியத்துக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துகிறேன்". அதே கிருபை, ஞானம், தைரியம் இந்த ரோமர் நிருபத்தின் விளக்கவுரை எழுதும் போதும் எனக்குத் தரப்பட்டது. தேவன் ஒருவரே மகிமைப்படுவாராக ஆமென்.

லூக்கா 14 : 28–30ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கோபுரம் கட்டுவதைக் குறித்துப் பேசுகிறார். அது ஒரு கடினமாக காரியம். கோபுரம் கட்ட விரும்புகிறவன், முதலாவது அமர்ந்து, நன்றாக யோசித்து, அதைக் கட்டி முடிக்கும் திராணி தன்னிடம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று ஆலோசனை தருகிறார். ரோமர் நிருபத்தைத் தியானித்து, வேதத்தின் மகத்துவங்களை விளங்கிக் கொள்வது என்பது

நிச்சயமாகவே ஒரு கடினமான காரியம் தான். ஆனாலும் ஜெபத்தோடும், தாகத்தோடும், எதிர்பார்ப்போடும் தேவ சமுகத்தில் காத்திருந்து, பொறுமையோடு இந்த விளக்கவுரையை வாசிக்கும்போது ஆவியானவர் உங்களுடைய ஆவிக்குரிய கண்களைத் திறந்து இந்த சத்தியங்களை அறிந்து கொள்ளச் செய்வார் என்பதே என்னுடைய நம்பிக்கையும் ஜெபமும்.

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17) என்பதுதான் பவுல் அறிவிக்கும் சுவிசேஷம். "பிழைப்பான்" என்பது ஒருவன் பெறும் நித்திய ஜீவனைக் குறிக்கிறது. தேவனுடைய பிரமாணங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிவதால் ஒருவன் நித்திய ஜீவனைப் பெறலாம். ஆனால், சீனாய் மலையில் தேவன் வழங்கிய 613 பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய எந்த மனிதனாலும் முடியாது. எனவே கிரியைகளின் அடிப்படையில் ஒருவனும் நீதிமானாகக் கருதப்படுவதில்லை என்பது தெளிவாகிறது.

நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அடுத்த வழி தேவனால் நீதிமானாக்கப்படுவது. இது விசுவாசத்தின் மூலமாக உண்டாகிறது.

"ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது". (ரோமர் 4:3).

"ஒருவன் கிரியை செய்யாமல், பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்". (ரோமர் 4:5)

நாம் ஒருபோதும் நம்மை நாமே நீதிமான்களாக மாற்றிக் கொள்ள முடியாது. இந்த நிலையில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக, நம்முடைய சார்பில், நம்முடைய பிரதிநிதியாக, நியாயப் பிரமாணத்தின் கோரிக்கைகளை நிறைவேற்றி, மனித இனத்தின் பாவங்களுக்கான கிரையமாக தம்மைத்தாமே ஜீவாதார பலியாகச் செலுத்தி, கல்வாரி சிலுவையில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவரை விசுவாசித்து தங்களுடைய இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு தன்னுடைய தேவ நீதியை கிருபையாக, இலவசமாக வழங்குகிறார். அவர்கள் நீதிமான்கள் என்று சட்டபூர்வமாக அங்கீகரிக்கிறார்.

முழு மனித இனமும் பாவத்தின் ஆளுகைக்குள் இருக்கிறது. பாவம் தேவனுக்கு விரோதமான பகை என்பதினால் நாம் செய்த பாவங்களை நம்மாலே மன்னிக்க முடியாது. ஆனால் தேவநீதி நமக்கு

பாவ மன்னிப்பை உறுதி செய்கிறது. தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட நம்மால் எதுவுமே செய்ய முடியாது. ஆனால் தேவநீதியினிமித்தம் தேவனால் அங்கீகரிக்கப்படுகிறோம். நம்மைப் பரிசுத்தப்படுத்த நம்மால் ஒருபோதும் முடியாது. ஆனால் சத்தியம் நம்மை ஏற்கனவே பரிசுத்தப்படுத்திவிட்டது.(யோவான் 17:19)

இந்த தேவநீதி எவ்வாறு உண்டானது? நம்முடைய சகல பாவங்களும் கிறிஸ்துவின் மேல் சுமத்தப்பட்டு அவர் தண்டிக்கப்பட்டதால். ரோமர் 8:3 சொல்கிறபடி: "தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்". வேதம் கிறிஸ்துவைப்பற்றி என்ன போதிக்கிறதோ, அதை விசுவாசிக்கும்போது இரட்சிப்பு உண்டாகிறது. இதுதான் பவுல் அறிவிக்கும் சுவிசேஷம்.

நான்கு ஆண்டுகளாக நூற்றுக்கணக்கான ரோமர் விளக்கவுரைப் புத்தகங்களையும் இன்னும் பல ஆவிக்குரிய புத்தகங்களை வாசிக்கவும் தியானிக்கவும் தேவன் உதவி செய்தார். நான் சேகரித்த குறிப்புகளின் உதவியுடன் சபைகளிலும், வீடுகளிலும் வேதபாடம் எடுக்கும் வாய்ப்பை தேவன் எனக்குக் கொடுத்தார். அது பலருக்கும் ஆசீர்வாதமாக இருந்தபடியினால் அதை ஒரு புத்தகமாக எழுதி 2006ல் வெளியிட்டேன்.

ஐந்து ஆண்டுகளுக்குப்பின் இரண்டாவது பதிப்பை வெளியிட தேவன் உதவி செய்தார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் கடைசி நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சத்துரு வஞ்சனையான முறையில் கள்ள உபதேசங்களை சபைக்குள் கொண்டுவந்து கொண்டிருக்கிறான். இன்றைய கிறிஸ்தவக் சூழ்நிலைகள், பிரபலமாகி வரும் ஊழியங்கள் ஆரோக்கியமாகவும் பிரகாசமாகவும் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

வேதத்தின் ஆழத்துக்குள் பிரவேசிக்கும் வாஞ்சை ஊழியர்களிடமும், விசுவாசிகளிடமும் குறைந்து கொண்டே வருகிறது. சபைகள் ஸ்தாபனங்களாக மாறிவிட்டன. செழிப்பின் உபதேசங்கள், ஆசீர்வாதங்களையும், தீர்க்கதரிசனங்களையும் மட்டுமே வலியுறுத்தும் செய்திகள், பாடல்கள், ஆடல் அலங்காரங்களே மக்களிடம் வரவேற்பைப் பெறுகின்றன. இன்றைய கிறிஸ்தவத்துக்கு என்றுமில்லாத அளவிற்கு ஒரு ஆவிக்குரிய மறுமலர்ச்சி அவசியமாயிருக்கிறது. உண்மையான

வசன எழுப்புதல் உண்டாகவேண்டும் என்பதற்காக நாம் ஜெபிக்க வேண்டும்.

என்னுடைய முழு குடும்பமும் இந்த கிறிஸ்தவ இலக்கிய ஊழியத்தில் எனக்குத் துணை நிற்கிறது. ஆயிரக்கணக்கான பக்கங்களில் கையால் எழுதப்பட்ட பிரதிகளை வாசித்து வசனங்களைச் சரிபார்த்து, அச்சுப்பிழைகளை திருத்திக்கொடுத்து, எல்லாவற்றுக்கும் மேலாக ஜெபத்தில் தாங்கிய என் மனைவி பிரிசில்லாவுக்காக தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

மேலும் இந்த ஊழியத்தில் என்னை உற்சாகப்படுத்தி தொடர்ந்து ஜெபித்துவரும் சகோதரி மேரி அமிர்தராஜ், சகோதரி பியூலா ஜாண், சகோதரி செல்வகுமாரி, சகோதரி அனிட்டா சாமுவேல் குடும்பத்தார், மற்றும் இந்த ஊழியத்தின் எந்த ஒரு காரியத்திலும் பங்குபெற்று ஜெபித்து, தொலைபேசி மூலமாகவும், கடிதங்கள் மூலமாகவும் உற்சாகப்படுத்தும் ஒவ்வொருரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

எபிரெயர் விளக்கவுரை எழுதிக் கொண்டிருக்கும் போது 2009 ல் மாரடைப்பு ஏற்பட்டு அப்பொல்லோ ஆஸ்பத்திரியில் Artery Bypass graft surgery with aortic valve replacement செய்ய வேண்டியதிருந்தது. உபாகமம் 30:22ன் படி தேவனே எனக்கு ஜீவனும் தீர்க்காயுசுமாயிருந்தார். 2014ல் சிறுநீரகத்தில் கற்கள் Laser Lithootripsy Cystoscopy சிகிட்சைக்குப் பின் சுகம் பெற்றேன். 2016 ல் இருதயத் துடிப்புகள் குறைந்து பெலவீனப்பட்டு மீண்டும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன். மூன்று மாதங்கள் படுக்கையில் இருக்கும் போது தெசலோனிக்கேயர் விளக்கவுரையை அச்சிட்டு வெளியிட்டேன்.

09–10–2016 முதற்கொண்டு யோவான் சுவிசேஷத்தின் விளக்கவுரை எழுதும்படியாக தேவன் பெலன் தந்தார் இந்த என்னுடைய 15–வது புத்தகம் 2000 பக்கங்களுக்கு மேல் வரும் என்று எதிர்பார்க்கிறேன். மிகவும் ஆழமான சத்தியங்கள் அடங்கிய புத்தகம் ஆவிக்குரிய மறுமலர்ச்சியை உருவாக்கும் என்று எதிர் பார்க்கிறேன்.

எனக்காகவும் என்னுடைய வேதபாட ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

சென்னை
11–03–2017

P.V. தியாகராஜ்
போன் : 9841585547
044 – 24925464
Email : pv_thiagaraj@yahoo.com
web : pvthiagaraj.com

பொருளடக்கம்

1. அப்போஸ்தல அறிமுகமும் வாழ்த்துதலும் **1**
பவுலின் ஊழியம் (வசனம் 1-7) 3
பவுலின் ஜெபமும் வாஞ்சையும் (வசனம் 8-15) 16
பவுல் அறிவிக்கும் நற்செய்தி (வசனம் 16, 17) 25
கிறிஸ்துவின் நீதிமன்றமும்
மூன்று வகையான குற்றவாளிகளும் (வசனம் 1:18-3:8) 38
புறஜாதியாரின் அவலநிலை (வசனம் 18-32) 41

2. எல்லாரும் பாவிகளே ! **61**
மரியாதைக்குரிய பாவிகளின் அவலநிலை (வசனம் 1-16) 62
பிரமாணத்தை அறிந்தவர்களின் அவலநிலை (வசனம் 2:17 - 3:8) 84

3. கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பு **101**
யூதர்களின் கேள்விகளும் அதற்கான பதிலும் (வசனம் 1-8) 103
மனித இனத்துக்கு எதிரான குற்றச்சாட்டு (வசனம் 9-18) 110
நியாயப்பிரமாணம் ஒருவனையும்
நீதிமானாக்குவதில்லை (வசனம் 19,20) 121
பாவியை நீதிமானாக்கும்
விசுவாசப்பிரமாணத்தின் தேவநீதி (21-31) 125

4. ஆபிரகாம் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டார்? **153**
ஆபிரகாமின் உதாரணம் (வசனம் 1-5) 154
தாவீது அறிவிக்கும் கிரியைகளற்ற தேவநீதி (வசனம் 6-8) 164
ஆபிரகாமின் விருத்தசேதனம் (வசனம் 9-12) 168
ஆபிரகாம் நியாயப்பிரமாணத்தின் உதவியினால்
பூமியைச் சுதந்தரித்தாரா? (வசனம் 13-16) 172
ஆபிரகாம் விசுவாசித்துப் பெற்றுக்கொண்ட
ஆவிக்குரிய சந்ததி (வசனம் 17-22) 179
விசுவாசிகளின் நீதி (வசனம் 23-25) 186

5. பாவத்தை மேற்கொள்ளும் கிருபை **193**
நீதிமானாக்கப்பட்டவனின் பாதுகாப்பு (வசனம் 1-8) 194
கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் மீட்பு (வசனம் 9-11) 213
ஆதாமினால் மரணம், கிறிஸ்துவினால் ஜீவன் (வசனம் 12-14) 221
தேவகிருபையின் மேன்மை (வசனம் 15-21) 228

6. பரிசுத்தத்தின் பாதையில் நீதிமான் **247**
பாவத்துக்கு மரித்தவர்கள் (வசனம் 1-5) 249
கிறிஸ்துவின் மரணத்தோடு இணைப்பு (வசனம் 6,7) 260
உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் இணைப்பு (வசனம் 8-11) 267
பரிசுத்தமாக்கப்படுதலில் மனிதனின் பங்கு (வசனம் 12-13) 275
உங்கள் எஜமானன் யார்? (வசனம் 14-23) 282

7. கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணமும் **303**
கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவன் (வசனம் 1-6) 306
நியாயப்பிரமாணமும் பாவமும் (வசனம் 7-13) 321

8. கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய வெற்றி வாழ்க்கை **353**
ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (வசனம் 1-4) 356
மாம்சத்துக்குரிய சிந்தனையும்
ஆவிக்குரிய சிந்தனையும் (வசனம் 5-8) 375
ஆவிக்குரியவர்களின் மேன்மை (வசனம் 10-13) 383
ஆவியானவரைக்கொண்டு பெறப்படும்
குமாரத்துவம் (வசனம் 14-17) 393
பாடுகளும் தவிப்பும் (வசனம் 18-23) 406
கிறிஸ்தவர்களின் மேலான நம்பிக்கை (வசனம் 24-30) 416
தேவனுடைய முன்னறிவு 440
தேவனுடைய முன்குறித்தல் 445
தேவனுடைய அழைப்பு 447
தேவனால் நீதிமானாக்கப்படுதல் 449
தேவனால் மகிமைப்படுத்தப்படுதல் 452
தேவனுடைய மாறாத அன்பு (வசனம் 31-39) 454

9. இஸ்ரவேலின் பாரம்பரியமும் சரித்திரமும் **475**
இஸ்ரவேலரைக் குறித்து பவுலின் வேதனை (வசனம் 1-3) 478
இஸ்ரவேலின் மேன்மை (வசனம் 4-5) 482
மெய்யான இஸ்ரவேலர் யார்? (வசனம் 6-18) 489
தேவனுடைய தெரிந்துகொள்ளுதல்
நன்மையானதே (வசனம் 19-29) 517
இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கான காரணம் (வசனம் 30-33) 537

10. இஸ்ரவேல் புறக்கணிக்கப்படக் காரணம் **547**
நியாயப்பிரமாணத்தினால் வரும் சுயநீதியும்
விசுவாசத்தினால் வரும் தேவநீதியும் (வசனம் 1-11) 548
விசுவாசம் எல்லாரையும் நீதிமானாக்கும் (வசனம் 12-21) 570

11. இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் **587**
தேவன் இஸ்ரவேலரை முழுமையாகத்
தள்ளிவிடவில்லை (வசனம் 1-10) 589
இஸ்ரவேலின் வீழ்ச்சி நிரந்தரமானதல்ல (வசனம் 11-16) 604
பவுல் ஊழியத்தின் மேன்மை 610
பவுல் சபையை எச்சரிக்கிறார் (வசனம் 17-24) 615
புறஜாதியாரின் நிறைவுக்குப்பின்
இஸ்ரவேலரின் இரட்சிப்பு (வசனம் 25-32) 627
பவுலின் துதி (வசனம் 33-36) 642

12. கிறிஸ்தவ கடமைகளும் பொறுப்புகளும் **649**
ஜீவபலியும்,மறுரூபமாகுதலும் (வசனம் 1-2) 651
விசுவாச ஐக்கியம் (வசனம் 3-8) 660
கிறிஸ்துவின் பிரமாணம் - அன்பு (வசனம் 9-21) 672

13. சமுதாயத்துக்கடுத்த அறிவுரைகள் **701**
அதிகாரத்துக்குக் கீழ்ப்படியுங்கள் (வசனம் 1-7) 703
அன்பு என்கிற கடன் (வசனம் 8-10) 713
இரட்சிப்பின் நாள் சமீபம் (வசனம் 11-14) 718

14.பலவீன சகோதரர்களைத் தாங்குதல் **729**
யாரையும் நியாயந்தீர்க்காதிருங்கள் (வசனம் 1-12) 730
கிறிஸ்துவுக்குள் விடுதலை (வசனம் 13-23) 751

15.பவுலின் இறுதி ஆலோசனை **771**
பலமுள்ள விசுவாசிகளின் கடமைகள் (வசனம் 1-7) 772
யூதரானாலும், புறஜாதியாரானாலும்
இரட்சிப்பு ஒன்றே (வசனம் 8-13) 785
பவுலின் நம்பிக்கையும் விருப்பமும் (வசனம் 14-30) 793
பவுலின் ஜெபக்குறிப்புகள் (வசனம் 30-33) 814

16.பவுலின் வாழ்த்துரை **819**
பவுல் சபையாரை வாழ்த்துகிறார் (வசனம் 1-16) 820
பவுலின் இறுதி எச்சரிக்கை (வசனம் 17-20) 829
உடன் ஊழியர்கள் வாழ்த்துகிறார்கள் (வசனம் 21-24) 841
பவுலின் முடிவுரை (வசனம் 25-27) 843

அப்போஸ்தலனாகிய பவுல் - வாழ்க்கை வரலாறு **851**

1

அப்போஸ்தல அறிமுகமும் வாழ்த்துதலும்

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதிய நிருபத்தின் முன்னுரையாகக் கருதப்படும் முதலாவது அதிகாரத்தை கீழ்க்கண்ட நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. பவுலின் அறிமுகமும் வாழ்த்துதலும் (வசனம் 1-7)

2. ரோமாபுரி சபையின்மேல் பவுல் கொண்டிருக்கும் ஆர்வம் (வசனம் 8-15)

3. பவுல் அறிவிக்கும் சுவிசேஷத்தின் மையக்கருத்து (வசனம் 16,17)

4. புறஜாதி மனிதர்களின் அவலநிலை (வசனம் 18-32)

பவுல் தன்னுடைய மூன்றாவது மிஷனரி பயணத்தின் இறுதிக்கட்டத்தில் கொரிந்து பட்டணத்தில் தங்கியிருந்த நாட்களில் கி.பி.58ல் ரோமர் நிருபம் எழுதினார் என்று தெரிகிறது. பவுல் தன்னுடைய ஊழியத்தைத் துவங்கி இருபது ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டபடியால் தான் போதித்த சுவிசேஷம் உலகமுடிவுவரை எழுத்து வடிவத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்ற வாஞ்சையில் பவுல், இந்த நிருபத்தை மிகுந்த கவனத்தோடு எழுதுகிறார்.

அந்த நாட்களில் கிறிஸ்தவ வட்டாரத்தில் உலகமெங்கும் அவர் அறியப்பட்டிருந்தார் என்றாலும் முதல் 7 வசனங்களில் தன்னையும், தன்னுடைய ஊழியத்தையும், தான் இதுவரை சென்றிராத ரோமாபுரி பட்டணத்திலுள்ள சபையாருக்கு அறிமுகப்படுத்துகிறார்.

8 முதல் 15 வரையுள்ள வசனங்களில் ரோமசபையின்மேல் பவுல் கொண்டிருந்த ஆர்வம் வெளிப்படுத்தப்படுகிறது. அவர்களுடைய விசுவாசத்தை பாராட்டிப் பேசும் பவுல், அவர்களை சந்திக்கவேண்டும் என்ற தன்னுடைய நீண்டகால திட்டத்தை அறிவிக்கிறார்.

16,17 வசனங்களில் பவுலின் சுவிசேஷம் மிகவும் சுருக்கமாக அறிவிக்கப்படுகிறது. புறஜாதியானாலும் சரி, யூதரானாலும் சரி, விசுவாசத்தின் மூலமாகவே மனிதர்கள் இரட்சிக்கப்படமுடியும் என்கிறார் பவுல். இந்த இரண்டு வசனங்களின் விளக்கவுரையாகவே முழு ரோமர் நிருபமும் அமைகிறது.



18 முதல் 32 வரையுள்ள வசனங்களில் புறஜாதியாரின் தற்போதைய நிலை என்ன என்பதை பவுல் விவரிக்கிறார். தேவன் தன்னை அவர்களுக்கு பொதுவான முறையில் வெளிப்படுத்தியிருந்தும் அவர்கள் அவரை மகிமைப்படுத்தத் தவறியதின் விளைவாக (வசனம் 18-21) அவர்கள் விக்கிரகாராதனைக்காரர்களாகிறார்கள் (வசனம் 22,23). இதனால் தேவன் அவர்களை அசுத்தத்துக்கும், இச்சை ரோகங்களுக்கும், கேடான சிந்தைக்கும் ஒப்புக்கொடுக்கிறார்

(வசனம் 24, 26, 28). 29-31 வசனங்களில் புறஜாதியாரிடம் காணப்படும் 22 பாவங்கள் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன.

பவுலின் ஊழியம் (வசனம் 1-7)

இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனுமாகிய பவுல், (ரோமர் 1:1)

பொதுவாக யாருக்கேனும் கடிதம் எழுதும்போது நம்முடைய பெயரை கடிதத்தின் முடிவில்தான் எழுதுகிறோம். வேதாகம நாட்களில் கடிதம் எழுதும்முறை வித்தியாசமானது. துவக்கத்திலேயே அதை எழுதுவது யார் என்று அறிவித்துவிட்டுத் தான் கடிதத்தை எழுதுவார்கள். ரோமாபுரியில் உள்ள திருச்சபைக்கு இந்த நிருபத்தை எழுதுபவரின் பெயர் பவுல். பல நிருபங்களில் பவுல் தன்னுடைய பெயரோடு தீமோத்தேயு, சீலா, சொஸ்தெனே ஆகிய சில சக ஊழியர்களின் பெயரையும் இணைத்து எழுதுவதைப் பார்க்கிறோம். இந்த நிருபத்திலும், எபேசியருக்கு எழுதிய நிருபத்திலும் பவுல் தன்னுடைய பெயரை மட்டுமே குறிப்பிடுகிறார்.

எபிரெய மொழியில் பவுலின் பெயர் சவுல் என்பதாகும். சவுல் என்ற பெயரில்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பவுலை முதலாவதாக அழைத்தார் (அப். 9:4). நிருபத்தின் முதல் வசனத்திலேயே ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளுக்கு தன்னைப் பற்றிய மூன்று காரியங்களைச் சொல்லி அறிமுகப்படுத்துகிறார்.

1. இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரன்
2. அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன்
3. சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன்

அவருடைய பெற்றோர் செல்வாக்கும் பண வசதியும் கொண்டவர்கள், மேலும் ரோம பிரஜாஉரிமையும் பெற்றவர்கள். தர்சு பட்டணத்தில் பிறந்த பவுல் கிரேக்க கல்வியில் மனோவிருத்தி அடைந்தவர். எருசலேமில் கமாலியேல் என்னும் தலைசிறந்த யூத பண்டிதரால் போதிக்கப்பட்டவர். பரிசேயர்களால் மிகவும் கனம்பண்ணப்பட்ட பவுல் யூதர்களின் தலைமை ஆலோசனைச் சங்க உறுப்பினர் என்ற முறையில் ஸ்தேவானை கொலை செய்ய சம்மதம் கொடுத்திருந்தார் என்றும் பார்க்கிறோம். இவ்வாறு பவுல் தன்னைப்பற்றி பெருமையாகப் பேசிக்கொள்ள பல காரியங்கள்

இருந்தாலும், நியாயப் பிரமாணத்தைக் குறித்த வைராக்கியமுடைய பவுல் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் அவருக்கென்று இதுவரை எந்த மனிதனும் செய்திராத மிகப் பெரிய ஊழியத்தை பல எதிர்ப்புகளின் மத்தியில் செய்தார். எந்த மனிதனும் பெற்றிராத மிகப் பெரிய வெளிப்பாடுகளைத் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டார்.

ஆனாலும் அவர் முதலாவதாக தன்னை இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர் என்கிறார். இயேசு என்ற வார்த்தை (கிரேக்க மொழியில் Jeshoouh, எபிரெய மொழியில் யோசுவா) இரட்சகர் என்று பொருள்படும். யோசேப்பிடம் தேவதூதன் சொல்கிறார்: "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21). கிறிஸ்து என்ற வார்த்தை (கிரேக்க மொழியில் Christos, எபிரெய மொழியில் மேசியா) அபிஷேகிக்கப்பட்டவர் என்று பொருள்படும்.

'ஊழியக்காரர்' என்ற வார்த்தை சாதாரணமாக பணியாளர்களைக் குறிப்பிடுவதில்லை. இதற்கு பயன்படுத்தப்படும் 'doulas' என்ற கிரேக்க வார்த்தையும், 'ebed' என்ற எபிரெய வார்த்தையும் கிரையம் கொடுத்து வாங்கப்பட்ட அடிமைகளைக் குறிப்பிடுகிறது. சமுதாயத்தில் அவர்களுக்கு எந்த அந்தஸ்தும் உரிமையும் கிடையாது. ஆனாலும் ஆபிரகாம் (ஆதி 26:24), மோசே (எண் 12:7), யோசுவா (யோசுவா 24:29), தாவீது (2 சாமு 7:5), ஏசாயா (ஏசா 20:3) ஆகியோரை தேவன் தன்னுடைய ஊழியக்காரர் என்று அழைத்து அவர்களை கனம் பண்ணுகிறார். கிறிஸ்துஇயேசுவை சந்தித்த முதல் நாளிலேயே பவுல்: "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:6) என்ற பவுலின் வார்த்தை அவருடைய அர்ப்பணத்தையும், தேவ சித்தத்தை நிறைவேற்றும் வாஞ்சையையும் வெளிப்படுத்துகிறது. 2 கொரிந்தியர் 4:5 ல் அவர் சொல்லுகிறார்: "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்துஇயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்."

ரோம பேரரசின் குடியுரிமை பெற்றவர் என்ற முறையில் சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் ரோம அதிகாரிகளிடமே தன்னுடைய உரிமைகளையும், அதிகாரத்தையும் வலியுறுத்தும் பவுல் (அப் 16:37; 22:25; 25:10) தன்னை 'இயேசுவின் அடிமை' என்று பெருமையோடு அறிமுகப்படுத்துகிறார். ஏனென்றால்

1. கிறிஸ்துவிடமிருந்தே பவுல் 'அப்போஸ்தலர்' என்ற

அந்தஸ்தைப் பெற்றிருக்கிறார் (ரோமர் 1:7).

2. கிறிஸ்துவே பவுலின் ஊழியத்துக்கான கிருபையை வழங்கியிருக்கிறார் (ரோமர் 1:7).

3. கிறிஸ்து மூலமாகவே பவுல் பிதாவிடம் ஜெபிக்கிறார் (ரோமர் 1:8).

4. கிறிஸ்துவுக்குள்ளாகவே பவுல் ஜெபிக்கிறார் (ரோமர் 9:2).

5. கிறிஸ்துவினிமித்தமாகவே சபையாரை வேண்டிக்கொள்கிறார் (ரோமர் 15:32).

6. தன்னுடைய ஊழியத்தின் வெற்றி கிறிஸ்துவினுடையது என்கிறார் (ரோமர் 15:18).

7. கிறிஸ்துவுக்குள்ளாகவே சபையாரையும், தன்னை எதிர்ப்பவர்களையும் நேசிக்கிறார் (ரோமர் 16:3-16; 9:1-3; 10:1).

இரண்டாவதாக பவுல், தான் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவன் என்கிறார். ஒருவன் அப்போஸ்தலனாக வேண்டுமென்றால் கிறிஸ்துவிடமிருந்து நேரடியான அழைப்பைப் பெற்றிருக்கவேண்டும். "அப்போஸ்தலன்" என்பதற்குப் பயன்படுத்தப்படும் 'apostolos' என்ற கிரேக்க வார்த்தையும், 'shluh' என்ற எபிரெய வார்த்தையும் "அனுப்பப்பட்டவன்" என்று பொருள்படும். அனுப்பப்பட்ட ஒருவன் அனுப்பியவரின் அதிகாரத்தை உடையவனாகிறான். பிதாவாகிய தேவன் தனக்கு ஊழியம் செய்யும்படியாக தன் குமாரனை பூமிக்கு அனுப்பினபடியால் கிறிஸ்து எபிரெயர் 3:1ல் 'அப்போஸ்தலர்' எனப்படுகிறார். மத் 15:24, யோவான் 3:17, 34; 5:36; 6:29, 57; 7:29, 8:42; 10:36, 11:42, 17:3 வாசித்துப்பாருங்கள். பிதாவினால் உலகத்துக்கு அனுப்பப்பட்ட கிறிஸ்து இப்போது தன்னுடைய சீடர்களைக் குறித்து சொல்லுகிறார்: "நீர் என்னை உலகத்தில் அனுப்பினது போல, நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்" (யோவான் 17:18, 20:21). அவர்களே அப்போஸ்தலர்களாகிறார்கள்.

'அப்போஸ்தலர்' என்ற வார்த்தை சுவிசேஷங்களில் சுமார் பத்து தடவையும், அப்போஸ்தலருடைய நடபடிகளில் சுமார் முப்பது தடவையும், பவுலின் நிருபங்களில் சுமார் முப்பது தடவையும் மீதமுள்ள புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் எட்டு தடவையும்

பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக எல்லா இடங்களிலுமே இந்த வார்த்தை கிறிஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும், பவுலையும் மட்டுமே குறிப்பிடுகிறது. தன்னுடைய அப்போஸ்தலர்களை கிறிஸ்துவே நியமித்தார் (மத் 10:2-4). "அவர் பன்னிரண்டு பேரைத் தெரிந்துகொண்டு, அவர்கள் தம்மோடுகூட இருக்கவும், பிரசங்கம்பண்ணும்படியாகத் தாம் அவர்களை அனுப்பவும், வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும், அவர்களை ஏற்படுத்தினார்" (மாற்கு 3:14,15). மத் 10:1;8, 19:28, லூக் 22:29;30, யோவான் 6:70; 13:18; 20:21-23; 15:16, அப் 2:43; 3:2; 5:12-16; 1 கொரி 9:2, 2 கொரி 12:12, வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்துவால் ஊழியத்துக்குத் தெரிந்துகொள்ளப்பட்டு அனுப்பப்பட்டவர்களே அப்போஸ்தலர்களாக முடியும் (அப் 1:8). தேவனால் அனுப்பப்படாமலே ஊழியத்துக்கு ஓடும் மனிதர்கள் பலர் இருக்கக்கூடும் (எரே 23:21,16). அப்போஸ்தலனாகிய பவுல் இந்த ஊழியத்தை கிறிஸ்துவிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டவர் (1 கொரி 9-1; 15:8, கலா 1:12, எபே 3:2-8, அப் 26:16-18, 2 தீமோ 4:7,8). அதனால்தான் தன்னுடைய நிருபங்களில் பல இடங்களில் பவுல் தான் ஒரு 'அப்போஸ்தலன்' என்பதை வலியுறுத்துவதைப் பார்க்க முடியும் (1 கொரி 1:1, 9:1-2, 2 கொரி 1:1; 9:1,2, கலா 1:1, எபே 1:1, கொலோ 1:1, 2 தீமோ 1:1). "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரி 12:12) என்று தன் மேன்மையான ஊழியத்தைக் குறித்து சவாலிட்டுப் பேசுகிறார் பவுல்.

மூன்றாவதாக பவுல் தான் தேவனுடைய சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவன் என்கிறார். சுவிசேஷம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் 'evangelion' என்ற கிரேக்க வார்த்தை 'நற்செய்தி' என்று பொருள்படும். இந்த நற்செய்தி தேவனுடையது. ஏனெனில் தேவன்தான் உலகத்தில் அன்பு கூர்ந்தார். தேவன்தான் தன் குமாரனைத் தந்தருளினார் (யோவான் 3:16) தேவனே முதலாவதாக நற்செய்தியை ஏதேன் தோட்டத்தில் அறிவித்தார் (ஆதி 3:15). **பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாய் கல்வாரி சிலுவையில் நடப்பித்த கிரியையே நற்செய்தியாக மனித இனத்துக்கு அறிவிக்கப்படுகிறது.**

தன்னை தேவன் தன்னுடைய சுவிசேஷத்துக்காக

பிரித்தெடுத்திருப்பதாக பவுல் அறிவிக்கிறார். தேவனுடைய ஊழியத்தைச் செய்யும் ஒருவன் தான் பிரித்தெடுக்கப்பட்ட அனுபவத்தை உடையவனாய் இருக்க வேண்டும் (அப் 19:9, 2 கொரி 6:17). ஏனென்றால் "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது" (மத் 6:24) என்று சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் ஒரு பரிசேயன் என்பதை அறிவோம். பரிசேயன் என்றாலே பிரித்தெடுக்கப்பட்டவன் என்றுதான் பொருள். இது உலக ரீதியான பாரம்பரிய பிரித்தெடுத்தல். தேவனுடைய சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்படுதல் என்பது தேவனுடைய கிருபையின் செயலாற்றல்.

பவுலின் வாழ்க்கையில் திருத்துவத்தின் மூன்று நபர்களுமே மூன்று வித்தியாசமான முறையில் செயல்பட்டு பவுலைப் பிரித்தெடுப்பதைப் பார்க்கிறோம். பிதாவின் செயலாற்றலை கலாத்தியர் 1:15ல் பவுல் இவ்விதமாக அறிவிக்கிறார்: "நான் என்தாயின் வயிற்றிலிருந்ததுமுதல் என்னைப் பிரித்தெடுத்து தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன்". "நான் உன்னைத் தாயின் வயிற்றில் உருவாக்கு முன்னே உன்னை அறிந்தேன்; நீ கர்ப்பத்திலிருந்து வெளிப்படு முன்னே நான் உன்னைப் பரிசுத்தம்பண்ணி, உன்னை ஜாதிகளுக்குத் தீர்க்கதரிசியாகக் கட்டளையிட்டேன்" (எரே 1:5) என்ற வசனத்தை இந்த பிரித்தெடுத்தல் நினைவுபடுத்துகிறது. இதை நடப்பிப்பது பிதாவாகிய தேவன்.

பெருமையும், மதவைராக்கியமும் பாரம்பரியத்தில் நம்பிக்கையும் நிறைந்த ஒரு பரிசேயனாக வாழ்ந்து வந்த பவுலின் வாழ்க்கையில் இரண்டாவது பிரித்தெடுத்தல் தமஸ்கு செல்லும் பாதையில் நடக்கிறது. அப்போஸ்தலர் 9:15,16, 22:14, 26:16 வாசித்துப் பாருங்கள். யூத பாரம்பரியக் கட்டுகளிலும் நியாயப்பிரமாணக் கட்டுகளிலும் பிடிக்கப்பட்டிருந்த பவுல் சுவிசேஷ ஊழியத்துக்கென்று இயேசுகிறிஸ்துவால் பிரித்தெடுக்கப்படுகிறார்.

மூன்றாவது பிரித்தெடுத்தலை அந்தியோகியா பட்டணத்தில் சபை ஆராதனையின்போது பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கிறார். அப்போஸ்தலர் 13:2 சொல்லுகிறது: "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்". உடனடியாக சபை அவர்களை புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக அனுப்பிவிட்டதின் விளைவாக என்ன நடந்தது என்பதைப் பாருங்கள். கிறிஸ்து மரித்து முப்பது ஆண்டுகளுக்குள் ரோம சாம்ராஜ்யத்தின்

மூலை முடுக்கில் உள்ள பட்டணங்களில் எல்லாம் தேவனுடைய சபை அப்போஸ்தலனாகிய பவுலினால் ஸ்தாபிக்கப்பட்டது. நான்கு சுவிசேஷ புத்தகங்களும் எழுதப்படுவதற்கு முன்பே பவுல் ரோமர் மற்றும் பல நிருபங்களை எழுதினார்.

ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும் பரிசுத்தவான்களாகும் படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது; (ரோமர் 1:2)

முதல் வசனத்தில் தன்னை அறிமுகப்படுத்திய பவுல், இரண்டாவது வசனத்தில் தன் நிருபம் யாருக்காக எழுதப்படுகிறது என்பதை அறிவிக்கிறார். ரோமாபுரி சபையாரைக் குறித்த மூன்று குறிப்புகள் சொல்லப்படுகின்றன:

1) தேவப்பிரியர்

2) பரிசுத்தவான்கள்

3) அழைக்கப்பட்டவர்கள்

தேவப்பிரியர் (beloved of God) என்றால் தேவனுக்குப் பிரியமானவர்கள், தேவனால் நேசிக்கப்படுபவர்கள் என்று பொருள்படும். தேவனால் சிநேகிக்கப்படுவது என்பது ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும் மிகப்பெரிய சிலாக்கியம். "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்" (1 யோவான் 4:19) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தன் ஜீவனையே கொடுக்கும் அன்பு அவரிடமிருந்து வெளிப்பட்டது (ரோமர் 5:8).

அடுத்ததாக ரோமசபையார் பரிசுத்தவான்கள் என்று பார்க்கிறோம். தேவனால் நேசிக்கப்பட்டவர்கள் பரிசுத்தவான்களாகிறார்கள். பொதுவாக பவுல் தன்னுடைய நிருபங்களில் சபை விசுவாசிகளையெல்லாம் பரிசுத்தவான்கள் என்று அழைப்பதைப் பார்க்கிறோம் (ரோமர் 8:27; 12:13, 15:25, 31; 16:1, 15, 1 கொரி 1:2; 16:1,15; 2 கொரி 1:1; 8:4; 9:1,12; 13:13, எபே 1:1; 2:19). பரிசுத்தப்படுத்துதல் என்பதற்கு பயன்படுத்தப்படும் 'hagios' என்ற கிரேக்க பதம் தேவனுடைய உபயோகத்துக்கென்று வேறுபிரிக்கப்படுதலைக் குறிப்பிடுகிறது. (யாத் 13:2, லூக்கா 2:23, ரோமர் 11:16 etc.). "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1 தெச 4:7)

பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது, அவர்கள் பரிசுத்தவான்களாக இருந்தபடியால் அழைக்கப்படுகிறார்கள் என்பதல்ல. தேவப்பிரியர் என்ற முறையில் அழைக்கப்பட்டு அதன் விளைவாக பரிசுத்தவான்களாகிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இந்த பரிசுத்தவான்களுடைய பழைய பெயர் பாவிகள் என்பதுதான். **தேவன் எப்போது நம்முடைய வாழ்க்கையின் மையமாக மாறுகிறாரோ அப்போது நாம் பரிசுத்தவான்களாகிறோம்.** "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்; ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக்கொள்ளுகிறேன்" (எரே 31:3) என்கிறார் தேவன்.

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. (ரோமர் 1:3)

நம்முடைய பிதாவாகிய தேவன் என்று பிதாவை உரிமையோடும், பாசத்தோடும் பவுல் அழைப்பதைப் பாருங்கள். யெகோவா யூதருக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் தேவன்தான். பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்ட அத்தனைபேரும் அவருடைய குடும்பத்தார் (மத் 5:45, 1 பேதுரு 1:2, 1 யோவான் 3:1,2; 5:1) என்பதினால் கிறிஸ்துவுக்குள் நம் அத்தனை பேருக்கும் அவர் தகப்பனாகிறார்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை பிதாவுடன் சம அந்தஸ்து உடையவராய் பவுல் இணைத்துப் பேசுவதைக் கவனியுங்கள். அவர் தேவனுடைய ரூபமாகவும் சமமாகவும் இருப்பவர் (பிலிப் 2:6). "சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" (கொலோ 1:16). "அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ 1:18) "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோ 2:9).

பொதுவாகவே பவுல் தன்னுடைய நிருபங்களில் கிருபையையும் சமாதானத்தையும் ஆசீர்வாதமாகச் சொல்லும் பழக்கம் உடையவர் (1 கொரி 1:3, 2 கொரி 1:2, கலா 1:3, எபே 1:2, பிலி 1:2, கொலோ 1:2, 1 தெச 1:2, பில 3). **பிதாவானவர் அருளிச்செய்யும் தேவகிருபை குமாரனாகிய இயேசுவின் மூலமாக நம்மை வந்து சேருகிறது.** கிருபை என்பதற்குப் பயன்படுத்தப்படும் 'Charis' என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் சுமார் 155 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

பவுல் மட்டும் 100 தடவைக்குமேல் உபயோகப்படுத்தியிருக்கிறார். இந்த வார்த்தை மனமகிழ்ச்சியை மட்டுமல்லாமல், பொருளாதார செழிப்பையும் குறிப்பிடுகிறது. வேதத்தில் கிருபையைப் பெற்றுக் கொண்டதாகச் சொல்லப்படும் முதல் மனிதன் நோவா (ஆதி 6:8).

தேவகிருபை செயல்படுவதின் விளைவாக ஒரு மனிதன் பெற்றுக்கொள்வது சமாதானம். தேவப்பிரியருக்கும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே கிருபையும் சமாதானமும் ஆசீர்வாதமாகச் சொல்லப்படுகிறது. இவை இரண்டும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படும். சமாதானத்துக்கு சொல்லப்படும் Shalom என்ற கிரேக்க வார்த்தை சண்டை சச்சரவற்ற நிலையை மட்டும் குறிப்பிடுவதில்லை. நித்தியத்துக்கடுத்த மனமகிழ்ச்சியையும், நிச்சயத்தையும் இது பின்னணியாகக் கொண்டது. தன்னால் மன்னிக்கப்பட்ட பாவஸ்திரீயிடம் இயேசு சொல்லுகிறார்: "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" (லூக்கா 7:50). "துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லை" என்று ஏசாயா 57:21ல் வாசிக்கிறோம். பழைய ஏற்பாட்டு நாட்களில் சமாதானத்தை (மட்டும்) வாழ்த்துதலாகச் சொல்லும் பழக்கம் இருந்தது (ஆதி 43:23, நியா 6:23; 19:20).

இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குத்தத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், (ரோமர் 1:4)

தேவனுடைய சுவிசேஷத்துக்கென்று பிரித்தெடுக்கப்பட்ட பவுல் அந்த சுவிசேஷத்தை ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், தன் நிருபத்தை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அறிவிக்குமுன்பு ஒரு முக்கியமான உண்மையை அறிவிக்கிறார். தான் சொல்லவிருக்கும் சுவிசேஷம் ஏற்கனவே பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளால் வாக்குத்தத்தமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது என்கிறார். **சுவிசேஷம் பவுலினால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சத்தியம் அல்ல.**

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி 3:15) என்பதுதான் வேதத்தில் கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட முதல் தீர்க்கதரிசனம். அவருடைய பாடு மரணத்தினால் உண்டாகும் நீதியை, கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதே பவுல் அறிவிக்கும் நற்செய்தி.

இதைக் குறித்து ஏசாயா 53:11 சொல்லுகிறது : "அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார். அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே" (எரே 23:6). **கிறிஸ்துவைப் பற்றும் அறிவே ஒருவனை நீதிமானாக்குகிறது.**

"தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சுவிசேஷமாய் முன்னறிவித்தது" என்று கலாத்தியர் 3:8ல் வாசிக்கிறோம். ஏசாயா 52:7; 40:9; 61:1; எரே 33:16 வாசித்துப்பாருங்கள்

பவுலின் நாட்களில் அவர் அறிவிக்கும் உபதேசங்களை மோசே மற்றும் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் அறிவித்த சத்தியத்துக்கு விரோதமானவைகளாக யூதர்கள் கருதியபடியால் பவுலின் ஊழியத்தை கடுமையாக எதிர்த்து வந்தார்கள். பவுல் சொல்ல விரும்பும் காரியம், அவர் அறிவிக்கும் சுவிசேஷ சத்தியங்கள் அத்தனையும் பழைய ஏற்பாட்டில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டவை. அவை பிரசங்கிக்கப்படவில்லை என்றாலும், மனித இனத்துக்கு வாக்குப்பண்ணப்பட்டிருந்தன. **பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதலே புதிய ஏற்பாடு.** வேதத்தின் எல்லா புத்தகங்களும் கிறிஸ்துவின் மூலமாக வெளிப்படும் இரட்சிப்பையே அறிவிக்கின்றன. நியாயப்பிரமாணமும், அது வலியுறுத்தும் சடங்குகள், பலிகள், ஆசரிப்பு முறைகள், பண்டிகைகள், ஓய்வுநாள் அனுசரிப்பு மற்றும் சுத்திகரிப்புகள் அத்தனையும் கிறிஸ்துவுக்குள் தேவன் தரவிருக்கும் தேவநீதியை நிழலாட்டமாக அறிவிக்கின்றன.

தான் அறிவிக்கும் சுவிசேஷம் புதிதானதல்ல என்பதை நிரூபிக்கும்படியாக தன்னுடைய ரோமர் நிருபத்தில் மட்டும் பழைய ஏற்பாட்டிலிருந்து அறுபதுக்கும் மேற்பட்ட வசனங்களை ஆதாரமாக பவுல் எடுத்தாள்வதைப் பார்க்கிறோம்.

இந்த வசனத்தின் துவக்கத்திலும், முடிவிலும் இயேசுகிறிஸ்து என்ற பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. முதல் நான்கு வசனங்களில் நான்கு முறை அவருடைய பெயரை பவுல் அறிவித்து, தான் அறிவிக்கும் சுவிசேஷம் அவரையே மையமாகக் கொண்டது என்பதை உறுதிப்படுத்துகிறார். **கிறிஸ்து யார் என்பதையும், மனித இனத்துக்கு அவர் என்ன செய்தார் என்பதையும் அறிவிப்பதே சுவிசேஷம்.**

மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் நிரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமாயிருக்கிறார். (ரோமர் 1:5)

தன்னுடைய சுவிசேஷத்தின் அடிப்படையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றி பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கும் மூன்று காரியங்கள் :

1. அவர் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவர்
2. ஆனால் ஆவியின்படி அவர் தேவனுடைய சுதன்
3. அவருடைய உயிர்த்தெழுதல் அவர் தேவகுமாரன் என்று நிரூபிக்கிறது.

முதலாவதாக அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி அறிவிக்கிறார். அவர் ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்தவர் (கலா 4:5) என்பதினால் மாம்சத்தின்படி பிறந்தவராகிறார். அவ்வாறு ஒரு மனிதனாக அவர் பிறந்தபோது தாவீதின் சந்ததியில் பிறந்தார். புதிய ஏற்பாட்டின் துவக்கத்திலும் (மத் 1:1), முடிவிலும் (வெளி 22:16) அவர் தாவீதின் சந்ததி என்று பிரகடனப்படுத்தப்படுகிறார். "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்" (ஏசாயா 11:1) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாவீதிடம் தேவன் சொல்லுகிறார்: "நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்" (2 சாமு 7:12).

மேசியாவைக் குறித்த சகல வேத வசனங்களும் நிறைவேற வேண்டுமானால் அவர் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த தாவீதின் சந்ததியில் மட்டுமே வெளிப்படவேண்டும். 2 சாமு 7:12-16, சங் 89:3,4,19,24; 132:17, ஏசாயா 11:1-5,10, எரே 23:5,6; 30:9, 33:14-16, எசே 34:23,24; 37:24, மத் 1:1,20; 15:22; 21:9, மாற்கு 10:48, 12:35, லூக்கா 1:27, 32,33,69; 3:27-31, யோவான் 7:42, அப் 2:30, 2 தீமோ 2:8, வெளி 5:5; 22:16 வாசித்துப் பாருங்கள்.

இவ்விதமாக திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசுகிறிஸ்து ஏன் மாம்சத்தில் வெளிப்பட வேண்டியதிருந்தது? எபிரெயர் 2:14ல் இந்த கேள்விக்குப் பதில் காணப்படுகிறது.

"பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்". "மனித இனத்தை மீட்கவேண்டும் என்பதினால் அவர் ஒரு மனிதரானார்". ரோமர் 8:3 சொல்லுகிறது, "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்".

ஒரு மனிதனுக்குரிய சகல பெலவீனங்களும் அவரில் காணப்பட்டன. அவர் பசியடைந்தார் (மத் 4:2), தாகமடைந்தார் (யோவான் 4:9;19:28). இளைப்படைந்தார் (யோவான் 4:6), சோர்வடைந்தார் (மாற்கு 4:38), கண்ணீர் விட்டார் (யோவான் 11:35, லூக்கா 19:41), பாடுபட்டார் (1 பேதுரு 2:21), சோதிக்கப்பட்டார் (மத் 4:1), இரத்தம் சிந்தினார் (யோவான் 19:34), மரித்தார் (மத் 27:50, 2 கொரி 13:4), சொல்லப்போனால் அவருடைய மரணமே அவருடைய சகல பலவீனங்களையும் அழித்துப்போட்டது.

மாம்சத்தின்படி, மாம்சத்துக்குரிய சகல பலவீனங்களோடு பூமியில் பிறந்த இயேசுகிறிஸ்து, பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதன் என்கிறார் பவுல். பரிசுத்த ஆவியின்படி என்ற வார்த்தைக்கு பலவிதமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. இது திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதாக பொதுவாகக் கருதப்படுகிறது. "நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாக" (எபி 9:14) கிறிஸ்து ஒப்புக்கொடுத்தார் என்ற வசனமும், "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாது" (1 கொரி 12:3) என்ற வசனமும் இதற்கு ஆதாரமாகச் சொல்லப்படுகிறது. பரிசுத்த ஆவியாகிய உன்னதமானவருடைய பலம் மரியாளின்மேல் நிழலிட்டதின் விளைவாகவே அவர் உற்பத்தியானார் (லூக்கா 1:35). ஆவியினாலே நிறைந்தவராகவே அவர் செயல்பட்டார் (லூக்கா 4:1). "தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார்" என யோவான் 3:34ல் வாசிக்கிறோம்.

இன்னும் சிலர் "பரிசுத்தமுள்ள ஆவியின்படி" என்ற வார்த்தை கிறிஸ்து பாவமனுஷனுக்குரிய சரீரத்தை உடையவராக இருந்தாலும் ஆவிக்குரிய நிலையில் பாவமற்ற நிலையில் அவர் விளங்கினார் என்பதைக் குறிப்பிடுவதாக சிலர் கருதுகிறார்கள். இதற்கு ஆதாரமாகச் சொல்லப்படும் வசனம் "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்,

ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்" (1 தீமோ 3:16). இதில் சொல்லப்படும் "பரிசுத்தமுள்ள ஆவி" பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடவில்லை என்பதற்கு வேறு ஒரு காரணமும் சொல்லப்படுகிறது.

கிறிஸ்து தேவகுமாரன் என்பதை நிரூபிக்கும் உயிர்த்தெழுதலைக்குறித்தும், அதின் பின்னணியிலேயே பரிசுத்த ஆவியானவர் செயல்படுகிறார் என்றும் இந்த வசனம் அறிவிக்கிறது. ஆனால் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முற்றிலுமாக பிதாவாகிய தேவனுடைய செயலாற்றல் என்பதை பல வேதவசனங்கள் அறிவிக்கின்றன. (அப் 2:24,32; 3:15,26; 4:10; 5:30; 10:40; 13:30,33,34; 17:31, ரோ 6:4). யோவான் 10:8ல் கிறிஸ்து தன்னுடைய உயிர்த்தெழுதல், தான் பிதாவிடம் பெற்றுக் கொண்ட அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது என்கிறார். ஆனாலும் "அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18) என்கிறார் பேதுரு.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அவர் தேவகுமாரன் என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்கிறார் பவுல். "தேவகுமாரன்" என்ற வார்த்தை நான்கு சுவிசேஷங்களிலும், அப்போஸ்தலரிலும் 27 தடவையும், மீதியுள்ள புதிய ஏற்பாட்டு புத்தகங்களில் 15 தடவையும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. **ஒரு மனிதனாக பூமியில் பிறந்த கிறிஸ்து தேவனாகவும் இருந்தார்.**

கிறிஸ்து தேவகுமாரன் என்பதை நிரூபிப்பது அவருடைய பிறப்போ, அவருடைய பரிசுத்த ஜீவியமோ, அவருடைய அருமையான போதனைகளோ, அவர் நடப்பித்த அற்புத அடையாளங்களோ அல்ல. அவருடைய உயிர்த்தெழுதலே. அவர் மாம்சத்தில் வெளிப்படுவதற்கு முன்பே தேவகுமாரனாகத்தான் இருந்தார் (நீதி 8:30). ஆனாலும் பவுல் சொல்லுவதுபோல் "கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்" (1 கொரி 15:17).

மனித இனத்தின் மீட்பராக கிறிஸ்து வெளிப்பட்டார். தான் தேவனுடைய குமாரன் என்று அறிவித்தார் (மத் 26:63, 64). தான் தேவனுக்கு சரிசமமானவர் என்று சொன்னார் (யோவான் 5:17-30, 10:36). பாவங்களை மன்னிக்க தனக்கு அதிகாரம் உண்டு என்றார் (மாற்கு 2:5-11). "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (யோவான் 8:58). "என்னைக் கண்டவன்

பிதாவைக் கண்டான்" (யோவான் 14:9) என்றார். தேவன் இந்த இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்ததினால் அவருடைய அறிக்கைகள் சத்தியமானவைகள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினால் கிறிஸ்து தேவகுமாரன் என்று பலமாய் ரூபிக்கப்பட்டவர் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். மத்தேயு 27:53,54ல் அவர் உயிர்த்தபோது நித்திரையடைந்திருந்த பரிசுத்தவான்கள் எருசலேமில் காணப்பட்டதையும், பூமி அதிர்ச்சி அடைந்ததையும், இயேசுவைக் காவல் காத்தவர்கள் மெய்யாகவே இவர் தேவனுடைய குமாரன் என்று அறிவித்ததையும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

இந்த வசனத்தில் கிறிஸ்துவைப் பற்றிய இரண்டு சத்தியங்கள் தொடர் உவமைகளாகச் சொல்லப்படுவதை இந்த மாதிரிப் படம் விளக்குகிறது.

தேவனுடைய சுதன்	மாம்சத்தின்படி	பிறப்பினால்	தாவீதின் சந்ததி
	ஆவியின்படி	ரூபிக்கப்பட்டதினால்	தேவ குமாரன்

அவர் சகல ஜாதிகளையும், அவர்களுக்குள் இயேசு கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்களாகிய உங்களையும் (ரோமர் 1:6)

தான் இந்த நிருபத்தை ரோமாபுரியாருக்கு எழுதுவதற்கு காரணம் என்ன என்பதை பவுல் விளக்க ஆரம்பிக்கிறார். யூதர்களை மட்டுமல்ல, சகல ஜாதிகளையும் இயேசு அழைத்திருக்கிறார் என்பதை அறிவிக்கிறார். "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15). "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கும்படியாக" - மத்தேயு 28:19ல் இயேசு தன் அப்போஸ்தலர்களுக்கு ஆணையிட்டிருக்கிறார்.

ரோமசபையார் கிறிஸ்துவினால் அழைக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள். ரோம சபையார் பவுலின் நிருபத்தை வாசிப்பதற்கு முன்பே கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்றவர்கள். இதன் விளைவாக பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிறார்கள் (எபி 3:1). பொதுவாக

இரட்சிப்புக்கடுத்த அழைப்பு பிதாவிடமிருந்து வெளிப்படுகிறது என்பதை ரோமர் 8:30; 11:29, 1 கொரி 1:9, 2 தீமோ 1:9 அறிவிக்கின்றன என்றாலும், பிதாவாகிய தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு குமாரனுக்குக் கொடுக்கப்பட்டவர்கள் அத்தனை பேரும் அழைக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள். யோவான் 17:6,9,24; 10:27,28 வாசித்துப்பாருங்கள்.

தமது நாமத்தினிமித்தம் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியப்பண்ணும் பொருட்டு, எங்களுக்குக் கிருபையையும் அப்போஸ்தல ஊழியத்தையும் அருளிச்செய்திருக்கிறார் (ரோமர் 1:7)

அழைப்பின் நோக்கம் என்ன என்பது இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. **விசுவாசத்துக்குக் கீழ்ப்படியச் செய்யும்படியாகவே ஒரு மனிதனை கிறிஸ்து அழைக்கிறார்.** புறஜாதியார் விசுவாசத்துக்கடுத்த உபதேசங்களை அறிந்துகொள்வது மட்டுமல்ல, அவற்றுக்குக் கீழ்ப்படியவும் வேண்டும். ரோமாபுரி சபையாரைக் குறித்து பவுல் சொல்லுகிறார்: "உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது". (ரோமர் 16:19, 15:18, 2 கொரி 7:15, அப் 6:7 வாசித்துப் பாருங்கள். கீழ்ப்படியாத ஒருவன் கிறிஸ்தவன் அல்ல.

புறஜாதியாரை விசுவாசத்துக்குக் கீழ்ப்படியச் செய்யும் கிருபையையும், அப்போஸ்தல ஊழியத்தையும் கிறிஸ்து தனக்கு வழங்கியிருப்பதை பெருமையோடு ரோம சபைக்கு பவுல் சுட்டிக்காட்டுகிறார். "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே 3:8). "இதற்காகவே நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும் புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும், சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்" (1 தீமோ 2:7). 1 கொரி 15:9,10, 2 கொரி 5:20, அப் 9:15, 1 தீமோ 1:16, கலா 1:12, ரோமர் 15:15,16, கலா 2:9, எபே 3:7-9 வாசித்துப் பாருங்கள்.

பவுலின் ஜெபமும் வாஞ்சையும் (வசனம் 8-15)

உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிற படியினாலே, முதலாவது நான் உங்களெல்லாருக்காகவும்

இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். (ரோமர் 1:8)

தன்னுடைய நிருபங்களின் துவக்கத்தில் தேவனை ஸ்தோத்திரிக்கும் பழக்கம் பவுலுக்கு உண்டு (1 கொரி 1:6, எபே 1:15, 16, பிலிப் 1:6, கொலோ 1:5, 1 தெச 1:4, 2 தெச 1:3, 1 தீமோ 1:12, 2 தீமோ 1:4, பில 5). "என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" என்று சொல்லி, தேவனைக் குறித்து பவுல் மேன்மை பாராட்டுகிறார். "கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்" (சங் 18:2) என்கிறார் தாவீது. ஒரு இடத்திலும் அவர் "நம் தேவன்" என்று சொல்லுவதில்லை. **"என் தேவன்" என்று தேவனை அழைக்கும் சிலாக்கியம் நம் ஒவ்வொருவருக்கும் உண்டு.**

ரோமாபுரியாரின் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியால் பவுல் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். விசுவாசம் தேவனுடைய கிருபை வரமாக அவரால் அருளப்பட்டதால் தேவனை ஸ்தோத்திரிப்பது அவசியமாகிறது (மத் 16:17, லூக்கா 17:5, அப் 11:21; 13:48, ரோமர் 12:3, பிலிப் 1:29, கலா 5:22). இந்த கிருபைகள் அத்தனையும் ஒரே மத்தியஸ்தராகிய இயேசுவின் மூலமாக மட்டுமே வருவதினால் அவர் மூலமாகவே தேவனுக்கு நன்றி சொல்லப்படவேண்டும் (எபே 5:20). "அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" (எபி 13:15). 1 தீமோ 2:1 வாசித்துப் பாருங்கள்.

சபையில் காணப்படும் விசுவாசத்தினிமித்தம் பவுல் சபையாருக்கோ, சபை போதகருக்கோ, சபையின் ஊழியர்களுக்கோ நன்றி சொல்லாமல், தேவனையே கிறிஸ்து மூலமாய் ஸ்தோத்திரிக்கிறார். ஏனென்றால் விசுவாசம் மனிதர்களால் உண்டானதல்ல. "இது தேவனுடைய ஈவு" (எபே 2:8). சபையின் ஜெபஜீவியத்தினிமித்தமோ, பரிசுத்தத்தினிமித்தமோ, ஊழிய வாஞ்சையினிமித்தமோ, கீழ்ப்படிதலினிமித்தமோ, ஆத்தும பாரத்தினிமித்தமோ தேவனை ஸ்தோத்திரியாமல் சபையாரிடம் வெளிப்படும் விசுவாசத்தினிமித்தம் பவுல் தேவனை ஸ்தோத்திரிக்கிறார். ஏனென்றால் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்பதுதான் ரோமர் நிருபத்தின் மையக்கருத்தாக இருக்கிறது.

ஒரு மனிதனுக்கு விசுவாசத்தை இலவசமாக, கிருபையாக வழங்கி அவனைப் பிழைத்திருக்கச் செய்வது தேவனே. அவர் ஒருவரால்தான் பாவ மனிதனை தன்னுடைய பரிசுத்த ஆளுகைக்குள் கொண்டுவரமுடியும். அவர் ஒருவரால்தான் பாவத்தின் விளைவாக உண்டான சாபத்தை நீக்கமுடியும். அவர் ஒருவரால்தான் மரித்துப்போன ஆத்துமாவுக்கு புதிய ஜீவனைத் தரமுடியும்.

சபையின் விசுவாசம் உலகமெங்கும் அறியப்பட்டிருப்பதைக் குறித்து பவுல் சபையாரைப் பாராட்டுகிறார். உலகமெங்கும் என்று சொல்லும்போது ரோமாபுரியைத் தலைநகரமாகக் கொண்ட ரோமசாம்ராஜ்யத்தின் சகல பட்டணங்களிலுள்ள சபைகளிலும் அவர்களுடைய விசுவாசம் அறிந்துகொள்ளப்பட்டிருப்பதாக எடுத்துக் கொள்ளவேண்டும். "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (மத் 5:14) என்று இயேசு சொல்லியிருக்கிறார் அல்லவா? "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத் 5:16).

நான் ஜெபம்பண்ணும் போதெல்லாம் இடைவிடாமல் உங்களை நினைத்துக் கொண்டிருக்கிறதைக்குறித்துத் தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியோடு நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார் (ரோமர் 1:9)

அப்போஸ்தலனாகிய பவுலின் ஜெபஜீவியத்தைக் குறித்து இந்த வசனத்திலிருந்து அறிந்துகொள்கிறோம். தனக்காகவும், தனக்கு வேண்டியவர்களுக்காகவும், தன் சபைக்காகவும் மட்டும் ஜெபிக்காமல், தான் இதுவரை சந்தித்திராத ரோமாபுரி சபையாரை நினைத்துக்கொண்டு, அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறார். அவர்கள்மேல் பவுல் கொண்டிருந்த அன்பை இதனால் அறிந்துகொள்ளுகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவருக்காக மற்றொருவர் ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம். சபைக்காக ஊழியர்கள் ஜெபிக்கவேண்டும். ஊழியர்களுக்காக சபை ஜெபிக்கவேண்டும். எபே 1:16, 1 தெச 1:2; 5:18, பிலிப் 4:6, 2 தீமோ 1:3 வாசித்துப் பாருங்கள்.

ரோம சபையின் விசுவாசம் உலகமெங்கும் அறியப்பட்டிருக்கலாம். அந்த சபைக்கும் ஜெபம் தேவைப்படுகிறது,

தான் உண்மையிலேயே அவர்களுக்காக ஜெபிப்பதை நிச்சயப்படுத்தும்படியாக பவுல் தேவனையே சாட்சியாக வைக்கிறார். "தேவன் உள்ளிந்திரியங்களையும் இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாயாதிபதி" (எரே 11:20) என்பதினால் அவருடைய சாட்சி உண்மையானதாக இருக்கும். 2 கொரி 1:23, கலா 1:20, பிலிப் 1:8, 1 தெச 2:5,10 லும் பவுல் தேவனை சாட்சியாக அறிவிப்பதைப் பார்க்கிறோம். இதை வாசிக்கும் நீங்கள் பிறருக்காக ஜெபம் பண்ணுகிறீர்கள் என்பதற்கு தேவனை சாட்சியாக வைக்க முடியுமா?

"ஆவியோடு நான் சேவிக்கிற தேவன்" என்று பவுல் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24) என்கிறார். தன்னுடைய ஆவியினால் தேவனை சேவிப்பதாக பவுல் சொல்லுகிறார்.

ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் தேவன் மனிதனை சிருஷ்டித்தார். ஆதியாகமம் 2:7 சொல்லுகிறது: "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்". பூமியின் மண் (சரீரம்), தேவனுடைய சுவாசத்தைப் (ஆவியை) பெற்றுக்கொள்ளும்போது, அந்த சரீரத்தில் மனிதனுடைய ஆத்துமா உருவாகிறது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு ஆவி இருக்கிறது. (யோபு 12:10; 34:14; சங் 32:2, 1 கொரி 14:14, யோவான் 19:30, பிர 12:7, யாக் 2:26). இந்த ஆவியின் உதவியால்தான் அவன் ஆவியாயிருக்கிற தேவனை ஆராதிக்கமுடியும்.

மனிதனுடைய ஆவிக்கும் சரீரத்துக்கும் இடைப்பட்ட நிலையில் இருக்கும் ஆத்துமா (ஜீவாத்துமா) ஒரு மனிதனுடைய சித்தம் (செயலாற்றும் முறை), அறிவு, உணர்ச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது. ஒரு மனிதனுடைய ஆள்தத்துவத்தை ஆத்துமாவே நிர்ணயம் பண்ணுகிறது. சங் 63:1; 42:1; 103:1-3, மத் 11:29, லூக்கா 12:20 வாசித்துப் பாருங்கள்.

மனிதனுடைய ஆத்துமாவும் ஆவியும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவதையும், தேவனுடைய வார்த்தையினால் மட்டுமே அதைப் பிரித்துக் காட்டமுடியும் என்பதையும் எபிரெயர் 4:12-ஐ வாசித்து அறிந்துகொள்ளுங்கள். இவை இரண்டையுமே 'உள்ளான மனிதன்' என்று பவுல் குறிப்பிடுகிறார் (1 கொரி 4:16).

புறம்பான மனிதன் என்பது மனிதனுடைய சரீரமாகும். சரீரத்தின் செயல்பாடுகளான சுவைத்தல், பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல் ஆகிய ஐம்புலன்கள் மனிதனை வெளி உலகத்தோடும் தன்னைச் சுற்றியிருப்பவைகளோடும் உறவுகொள்ளச் செய்கின்றன.

"உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரி 6:20) என்று பவுல் ஆலோசனை தருவதைக் கவனியுங்கள். நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் ஆலயமாக இருப்பதினால் அது பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப் படவேண்டும் (ரோமர் 12:1) என்பது அவசியமாகிறது.

நீங்கள் ஸ்திரப்படுவதற்காக ஆவிக்குரிய சில வரங்களை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கும், (ரோமர் 1:10)

விசுவாசத்தில் தேர்ச்சி பெற்ற ரோமாபுரி சபையும் ஸ்திரப்படவேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஸ்திரப்படவேண்டிய கிறிஸ்தவர்கள் இன்றும் எல்லா, சபைகளிலும் இருக்கிறார்கள், அவர்கள் எதைக்குறித்தும் சந்தேகப்படுகிறவர்களாக இருப்பார்கள். "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" (யாக் 1:7) என்கிறார் யாக்கோபு.

ரோமாபுரி வரவேண்டும் என்ற தன்னுடைய நீண்ட காலத்து வாஞ்சையை 10 முதல் 15 வரையுள்ள வசனங்களில் பவுல் தெரியப்படுத்துகிறார். மூன்று காரணங்களுக்காக பவுல் ரோமாபுரி போகவிரும்புவதாக சொல்லுகிறார்.

1. அவர்களை ஸ்திரப்படுத்த (வசனம் 10)
2. அவர்களுக்கு சில வரங்களைக் கொடுக்க (வசனம் 10)
3. தான் ஆறுதல் அடையும்படியாக (வசனம் 11)

ரோமர் 15:29ல் பவுல், "நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன்" என்கிறார். எனவே ஆவிக்குரிய

வரங்களை (கிரேக்க மொழியில் Charisma) கொடுக்கவிரும்புகிறேன் என்று பவுல் சொல்லும்போது 1 கொரிந்தியர் 12ல் சொல்லப்படும் ஒன்பது வரங்களை மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஏனென்றால் "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்கும் பகிர்ந்துகொடுக்கிறார்" (1 கொரி 12:11). "நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்கள்" (ரோமர் 12:6) என்பது உண்மைதான். ஆனால் நமக்கு அருளப்பட்ட கிருபை வரங்களை மற்றவர்களுக்குக் கொடுக்க நம்மால் முடியாது. அதை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்கவும் முடியாது. மற்றவர்கள் வரங்களைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று ஜெபிக்கலாம்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனை ஸ்திரப்படுத்த முடியாது. **தேவன் ஒருவரே வரங்களைக்கொடுத்து ஒருவனை ஸ்திரப்படுத்த முடியும். அவர் ஒருவரே கொடுப்பவர்.** எனவே இந்த வசனத்தில் தன்னுடைய செய்திகள் மூலமாகவும், வழிநடத்துதல் மற்றும் ஆலோசனையின் மூலமாகவும் ரோமாபுரியில் உள்ளவர்கள் பரிசுத்த ஆவியானவரின் செயலாற்றலை விளங்கிக்கொண்டு பரிசுத்தத்திலும், விசுவாசத்திலும், சத்தியத்திலும் தேர்ச்சியடைந்து ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதே பவுலின் எதிர்பார்ப்பு.

உங்களிலும் என்னிலுமுள்ள விசுவாசத்தினால் உங்களோடேகூட நானும் ஆறுதலடையும்படிக்கும், உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறபடியினாலே (ரோமர் 1:11).

விசுவாச வீரனாகிய பவுல், விசுவாசத்தில் தேர்ச்சி பெற்ற ரோமாபுரியாரைச் சந்திக்க வாஞ்சையோடு இருந்தார் என்பது மட்டுமல்ல, அதினிமித்தம் தானும் ஆறுதலை அடையவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை இந்த வசனத்தில் அறிவிக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ளுவது நமக்கு உண்மையிலேயே ஆசீர்வாதமான காரியம் தான். பவுல் உலகின் மிகப்பெரிய ஊழியக்காரராக இருக்கலாம் ரோமாபுரி விசுவாசிகள் பெலனற்ற சாதாரணமானவர்களாக இருக்கலாம். ஆனாலும் தன்னுடைய பயணத்தின் மூலம் சபை பக்தி விருத்தி அடைவது தனக்கு மிகுந்த ஆறுதலைத் தரும் என்கிறார் பவுல்.

எவ்விதத்திலாவது நான் உங்களிடத்தில் வருகிறதற்கு தேவனுடைய சித்தத்தினாலே எனக்கு நல்ல பிரயாணம் சீக்கிரத்தில் கிடைக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் (ரோமர் 1:12).

எவ்விதத்தினாலாவது உங்களிடம் வருவேன் என்ற பவுலின் அறிவிப்பு இந்தப் பயணத்தைக் குறித்த அவருடைய உறுதியான தீர்மானத்தை அறிவிக்கிறது. "உங்களிடத்தில் வரும்படி அநேக வருஷமாய் எனக்கு மிகுந்த விருப்பம்" (ரோமர் 15:23) இருந்தது என்கிறார் பவுல். தன்னுடைய மிகுந்த விருப்பத்தின் மத்தியிலும் தன்னுடைய பிரயாணத்திட்டத்தை தேவனுடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து ஜெபிப்பதைப் பார்க்கிறோம்.

எந்தக் காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் "ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்" என்கிறார் யாக்கோபு (4:15). **தேவ சித்தத்தைக் குறித்து நிச்சயமில்லாத நிலையில் ஒரு சின்ன காரியத்தைக்கூட கிறிஸ்தவர்களாகிய நாம் செய்ய துணிந்துவிடக் கூடாது.** "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும் தாயுமாய் இருக்கிறான்" (மத் 12:50) என்கிறார் இயேசுகிறிஸ்து.

தேவன் பவுலின் வேண்டுதலைக் கேட்டு, சுமார் மூன்று ஆண்டுகளில் அவரை ரோமாபுரிக்கு அழைத்து வருகிறார். ஆனால் இந்த பிரயாணம் பவுல் எதிர்பார்த்தபடி அமையவில்லை. ரோம சாம்ராஜ்யத்தின் சிறைக்கைதியாக ரோமுக்கு அவர் கொண்டுவரப்படுவதை அப்போஸ்தலர் 27,28 அதிகாரங்களில் வாசிக்கிறோம்.

சகோதரரே, புறஜாதிகளான மற்றவர்களுக்குள்ளே நான் பலனை அடைந்தது போல உங்களுக்குள்ளும் சில பலனை அடையும்படிக்கு, உங்களிடத்தில் வர பலமுறை யோசனையாயிருந்தேன், ஆயினும் இதுவரைக்கும் எனக்குத் தடையுண்டாயிற்று என்று நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. (ரோமர் 1:13)

அப்போஸ்தலர் 19:21ல் ரோமாபுரி செல்லும் பயணத்திட்டம் ஒன்றை பவுல் அறிவிக்கிறார். ஆனால், அந்தத் திட்டம் வெற்றிபெறவில்லை. தன்னுடைய பிரயாணத்திட்டத்தின் நோக்கம் ரோமாபுரி பட்டணத்தைச் சுற்றிப் பார்ப்பதற்கு அல்ல என்கிறார் பவுல். கொரிந்து, எபேசு, அந்தியோகு, சில்சியா, லிஸ்திரா, பிலிப்பி, தெசலோனிக்கேயா முதலிய புறஜாதி நகரங்களில் தன் ஊழியத்தின் காரணமாக ஆவிக்குரிய பலன் அடைந்ததுபோல் ரோமிலும் தான் பலனடைய விரும்புவதாக பவுல் அறிவிக்கிறார். பலன் (fruit) என்ற

வார்த்தை ஆத்தும ஆதாயத்தைக் குறிப்பிடுகிறது.

"புறஜாதியாரை வார்த்தையினாலும், செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர்" (ரோமர் 15:18) பவுலைக்கொண்டு மிகப் பெரிய அறுவடையை உலகமெங்கும் நடப்பித்தார் என்பதை அப்போஸ்தலர் புத்தகம் உறுதிப்படுத்துகிறது.

1 கொரி 12:1; 2 கொரி 1:8; 1 தெச 4:13; ரோமர் 11:25, 1 கொரி 10:1 ஆகிய வசனங்களிலும் "நீங்கள் அறியாதிருக்க மனதில்லை" என்ற பொருளில் பவுல் பேசுகிறார். இந்த நிருபத்தில் 'சகோதரரே' என்று ரோம விசுவாசிகளை சுமார் 15 இடங்களில் அழைத்து, பவுல் தன் அன்பை வெளிப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

1 தெச 2:18ல் பவுல் சொல்லுகிறார்: "நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்". ஆசியாவில் வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியானவர் தன்னை தடைபண்ணியதையும், பித்தினியா நாட்டுக்கு அவரை ஆவியானவர் போகவொட்டாதிருந்ததையும் அப் 16:6,7ல் பவுல் குறிப்பிடுகிறார். நம்முடைய முயற்சிகள் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவதாக இருந்தாலும், அது தேவனுடைய சித்தத்தின்படி இல்லாதிருக்கும்போது அதை தேவன் தடைபண்ணக்கூடும் அல்லது காலதாமதத்தை ஏற்படுத்தக்கூடும். தாவீதிடம் தேவன் சொல்லுகிறார்: "என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டும் என்கிற விருப்பம் உன் மனதிலே இருந்தது நல்ல காரியந்தான். ஆகிலும் நீ அந்த ஆலயத்தைக் கட்டமாட்டாய்"(2 நாளா 6:8,9).

கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன் (ரோமர் 1:14)

கிரேக்க மொழிபேசி, கிரேக்க தேசத்து கலாச்சாரங்களைக் கடைப்பிடிப்பவர்கள் கிரேக்கர் (கிரேக்க மொழியில் Hellenes) என்று அழைக்கப்படுகிறார்கள், மாமன்னன் அலெக்சாந்தர் உலகமெங்கும் கிரேக்க பண்பாடுகளையும் கலாச்சாரத்தையும் நிலைநிறுத்தினான். ரோமர்கள் தாங்கள் அதை சுதந்தரித்துக் கொண்டதைக் குறித்து மேன்மை பாராட்டி வந்தார்கள். அந்நியர் என்ற வார்த்தை கிரேக்க கலாச்சாரமற்ற புறஜாதி மக்களைக் குறிப்பிடுகிறது. ஞானிகள் என்ற வார்த்தை கல்விகற்ற அறிவாளிகளையும், மூடர் என்ற வார்த்தை

கல்வி அறிவில்லாத சாதாரண மனிதர்களையும் குறிக்கிறது.

தேவன் அவராக நம்மைத் தேடிவந்து, இலவசமாக இரட்சிப்பை வழங்கிவிட்டபடியால், நாம் அவருக்குக் கடன்பட்டவர்களாகிறோம். இதன் விளைவாக இரட்சிப்பின் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதைப் பொறுத்தவரை, மனித இனத்தைச் சேர்ந்த அத்தனை பேருக்கும் தான் கடனாளி என்கிறார் பவுல். கொலோசெயர் 3:11 வாசித்துப்பாருங்கள். மனிதர்கள் யாராயிருந்தாலும் சரி, எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, தேவனுடைய சுவிசேஷம் அவர்களுக்கு ஆசீர்வாதமாகத்தான் இருக்கும். ஏனெனில் ஒரு மனிதன் இரட்சிக்கப்படுவதற்கு சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு ஒரு வழி சொல்லப்படவில்லை. அதை அறிவிப்பவர்களுக்கும் அது ஆசீர்வாதமாக இருக்கும். அதனால்தான் பவுல் "சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1 கொரி 9:16) என்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக தேவனிடம் இருந்து விசேஷித்த கிருபை வரங்களைப் பெற்றுக்கொண்டவர் (அப் 9:15, ரோமர் 11:13), தான் அறிவிக்கும் சுவிசேஷத்தைக் குறித்து தேவனிடமிருந்து பிரத்தியேகமான வெளிப்பாடுகளைப் பெற்றவர் (கலா 1:12). ஒரு உக்கிராணக்காரன் என்ற முறையில் அதை அவர் உலகமெங்கும் அறிவித்து செலவிடவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். **ஒரு வகையில் தேவனுடைய சுவிசேஷம் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் ஆவிக்குரிய கடனாளியாக்குகிறது.** நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் மேன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு அறிவித்து, அவற்றை அவர்களோடு பகிர்ந்துகொண்டே ஆகவேண்டும்.

சங்கீதம் 116:12,13 சொல்லுகிறது: "கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன். இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்". கிறிஸ்தவர்களாகிய நாமும் நம்மோடு வேலை செய்கிறவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கடனாளிகளாயிருக்கிறோம். கடனைத் திருப்பிக்கொடுப்பது ஒருவனுடைய கடமை. நம் உற்றார் உறவினர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கடனாளி களாயிருக்கிறோம். நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்ல கடனாளிகளாயிருக்கிறோம். **ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட**

காலகட்டத்தில், ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தேவன் உங்களை வைத்திருக்கிறார் என்றால் அதைக் குறித்து ஒரு தேவநோக்கம் நிச்சயமாகவே உண்டு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

"இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்" (2 இராஜா 7:9) என்று அறிவித்த குஷ்டரோகிகளின் உணர்வும் துணிவும் நம்மிடம் இருக்கவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் மிஷனரிகளாக மாறுவோமானால் மிகப்பெரிய எழுப்புதல் உலகமெங்கும் உண்டாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன் (ரோமர் 1:15)

அந்த நாட்களில் ரோமாபுரி பட்டணம் உலகநாடுகளின் தலைநகரமாகக் கருதப்பட்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ராஜாக்களும், அரச குடும்பத்தினரும், செல்வந்தர்களும், கல்விமான்களும், தத்துவ ஞானிகளும், கலைஞர்களும், தொழில் வல்லுனர்களும் அங்கே வசித்து வந்தார்கள். அதே நேரத்தில் இலட்சக்கணக்கான அடிமைகள் எந்தவித உரிமைகளும் இல்லாத நிலையிலும் அங்கே வாழ்ந்து வந்தார்கள். அதுமட்டுமல்ல, எல்லா புறஜாதி நகரங்களிலும் வாழ்ந்த புறஜாதியார் எண்ணிக்கையை விட கூடுதலான யூதர்கள் ரோமாபுரியில்தான் வசித்து வந்தார்கள். இவர்கள் எல்லாருக்குமே சுவிசேஷம் தேவை என்ற உணர்வோடு பவுல் தன்னுடைய விருப்பத்தை அறிவிக்கிறார்.

இந்த வசனத்துடன் நிருபத்தின் முன்னுரை நிறைவடைகிறது. முதலாவது தன்னை அறிமுகப்படுத்திய பவுல் இந்த நிருபம் யாருக்கு, எந்த நோக்கத்தோடு எழுதப்படுகிறது என்பதை அறிவிக்கிறார். தான் அறிவிக்கும் சுவிசேஷம் ஒரு புதிய சத்தியம் அல்ல, ஏற்கனவே பழைய ஏற்பாட்டில் முன்னறிவிக்கப்பட்டதுதான் என்கிறார். ரோமாபுரிக்கு நேரில் வரவேண்டும் என்ற தன்னுடைய வாஞ்சையை அறிவித்து முடிக்கிறார்.

பவுல் அறிவிக்கும் நற்செய்தி (வசனம் 16, 17)

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்,

விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16)

ரோமர் நிருபத்தின் சுருக்கமான தொகுப்பாக ரோமர் 1:16,17 ஆகிய இரண்டு வசனங்களும் கருதப்படுகின்றன. இந்த இரண்டு வசனங்களில் தான் அறிவித்த சத்தியத்தையே பின்வரும் பதினைந்து அதிகாரங்களிலும் பவுல் விளக்குகிறார். சுவிசேஷத்தைக் குறித்த விளக்கத்தை வேதத்தில் வேறு எந்த இடத்திலும் இவ்வளவு விளக்கமாக காணமுடியாது என்று சொல்லலாம். விசுவாசம், இரட்சிப்பு, தேவ நீதி, நீதிமானாக்கப்படுதல், இரட்சிப்பில் நிலைத்திருத்தல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய சகல சத்தியங்களும் இந்த இரண்டு வசனங்களில் காணப்படுகின்றன. இந்த வசனங்கள் மார்ட்டின் லூத்தரின் மனதில் எந்த அளவுக்கு மாற்றத்தை உண்டுபண்ணினதென்றால் இதன் உட்பொருளைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டதும், அவர்: "அப்பொழுது நான் மறுபடியும் பிறந்திருப்பதையும், திறந்த வாசலின் மூலமாகப் பரதீசுக்குள் நுழைந்திருப்பது போலவும் உணர்ந்தேன். முழு வேதாகமமும் ஒரு புதிய பொருள் பொதிந்ததுபோல எனக்குத் தோன்றியது, பவுலின் இந்த வேத வசனங்கள் எனக்குப் பரலோகத்துக்கான வாசலாக ஆகிவிட்டன" என்று சொல்கிறார் ('Lectures on Romans' by Luther M., tr. by W.G.Tillmoms & A.O.Prens).

"பரிசுத்த பைபிள்" என்ற புதிய மொழிபெயர்ப்பு வேதாகமத்தில் (Holy Bible : Tamil Easy to read version by World Bible Translation Centre, Inc., Texas) இந்த வசனம் இவ்வாறு மொழிபெயர்க்கப்படுகிறது: "நான் நற்செய்தியைப்பற்றி பெருமிதம் கொள்கிறேன். விசுவாசமுள்ள அனைவரையும் இரட்சிக்கவும், முதலில் யூதர்களையும், பின்னர் யூதர் அல்லாதவர்களையும் இரட்சிக்கவும் தேவன் பயன்படுத்திய வல்லமை இந்த நற்செய்தியே ஆகும்."

சுவிசேஷத்தைக் குறித்து பவுல் அறிவிக்கும் மூன்று காரியங்களாவன:

1) சுவிசேஷத்தை அறிவிக்க கடனாளியாயிருக்கிறேன். (வசனம் 14)

2) சுவிசேஷத்தை அறிவிக்க விரும்புகிறேன். (வசனம் 15)

3) சுவிசேஷத்தை அறிவிக்க வெட்கப்படேன் (வசனம் 16)

பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் இதுதான்: "நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன் ... நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் ... கிறிஸ்துவானவர் வேதவாக்கியங் களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்". (1 கொரி 15:2-4) சரித்திர ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட மூன்று சம்பவங்களை இது அறிவிக்கிறது.

1) கிறிஸ்து பாவங்களுக்காக மரித்தார் (Death)

2) கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டார் (Burial)

3) கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் (Resurrection)

உலக ஞானத்தால் நிறைந்திருக்கும் ஒரு மனிதன் வெளிப்படையாக சுவிசேஷத்தை அறிவிக்க வெட்கப்படுவான் என்பதில் சந்தேகமே இல்லை. கல்வாரி சிலுவையில், ஒரு கள்ளனைப்போல் கொலை செய்யப்பட்ட ஒரு மனிதனை உலகின் இரட்சகர் என்று அறிவிப்பது உலக ஞானிகளுக்கு முட்டாள்தனமான காரியமாகத்தான் தோன்றும். "சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாகவும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1 கொரி 1:23). "சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரி 1:18). எனவே பவுல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வெட்கப்படவில்லை.

சுவிசேஷத்தை சகலருக்கும் அறிவிக்கும் முயற்சியில் பவுல் சந்தித்த அனுபவங்கள் என்னென்ன என்பதைப் பாருங்கள். "இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமா யிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு வேண்டிக் கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற

அழுக்கைப் போலவுமானோம்" (1 கொரி 4:11-13). இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும், தான் அறிவிக்கும் சுவிசேஷத்தின் மேன்மையை உணர்ந்த பவுல் அதைக்குறித்து வெட்கப்படேன் என்கிறார். இத்தகைய பாடுகளை நவீனகாலத்து பிரசங்கிமார்கள் அனுபவிக்கவேண்டியதிருக்குமானால் எத்தனை பேர் தங்கள் ஊழியங்களில் நிலைநிற்பார்கள் என்ற கேள்வியை உங்கள்முன் வைக்க விரும்புகிறேன்.

சுவிசேஷம் தரும் இரட்சிப்பின் தேவ பெலனை அப்போஸ்தலனாகிய பவுல் தன் வாழ்க்கையில் தனிப்பட்டவிதத்தில் அனுபவித்தவர் என்பதினால், சகல உபத்திரவங்களின் மத்தியிலும் அதை அறிவிக்க வெட்கப்படவில்லை. தீமோத்தேயுவிடம் அவர் சொல்லுகிறார்: "நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தாவது, நீ வெட்கப்படாமல், தேவவல்லமைக்கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடேகூடத் தீங்கநுபவி" (2 தீமோ 1:8).

தான் வெட்கப்படுவதில்லை என்பதற்கான காரணத்தை 2 தீமோ 1:11,12ல் பவுல் இவ்விதமாகச் சொல்கிறார்: "நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும், புறஜாதியாருக்குப் போதகனாகவும் நியமிக்கப்பட்டேன். அதினிமித்தம் நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆயினும், நான் வெட்கப்படுவதில்லை; ஏனென்றால், நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்."

"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" என்று வேதம் சொல்லுகிறது (ரோமர் 10:11). "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது" (ரோமர் 5:5). "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1 பேதுரு 4:16) "நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள்" (1 யோவான் 2:28). ஒரு காரியத்தைக் குறித்து பயமுள்ளவன் நிச்சயமாக அதைக்குறித்து வெட்கப்படுகிறவனாய் இருப்பான்.

சுவிசேஷத்தைக் குறித்து பவுல் சொல்லும் காரியம் இதுதான். அதை ஏற்றுக்கொள்ளும் மனிதன் யூதன், அல்லது புறஜாதியான

கிரேக்கன் என்பதைக் குறித்து அது கவலைப்படுவதில்லை. யாராயிருந்தாலும் சரி, **அறிவிக்கப்படும் சுவிசேஷத்தை ஒருவன் விசுவாசிக்கிறானா என்பதுதான் அவனுடைய நித்தியத்தை நிர்ணயம் பண்ணுகிறதாக இருக்கிறது.** அவன் விசுவாசித்தான் என்றால் அவனுக்கு இரட்சிப்பை அருளிச் செய்வதற்குத் தேவையான தேவபெலன் போதுமான அளவு இருக்கிறது.

முன்பு யூதனிலும் பின்பு கிரேக்கனிலும் என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். முழு மனித இனத்தையும் பவுல் யூதர், கிரேக்கர் என்று இரு பிரிவினராகக் காண்கிறார். அப்போஸ்தலருடைய நடபடிகளில் முதல் பன்னிரண்டு அதிகாரங்களில் யூதர்கள் மத்தியில் நடைபெற்ற ஊழியங்களைக்குறித்து மட்டுமே ஆவியானவர் எழுதியிருப்பதைப் பார்க்கிறோம். அதற்குப் பின் புறஜாதியார் சுவிசேஷ அழைப்புக்குள் வருகிறார்கள். புறஜாதியாரின் அப்போஸ்தலனாகிய பவுலும், தான் போகுமிடமெங்கும் தன் ஊழியத்தை யூதர்களின் ஜெப ஆலயங்களில்தான் முதலாவது துவங்கும் பழக்கத்தை உடையவர். அப்போஸ்தலர் 13:42; 18:4-6; 19:8,9 வாசித்துப்பாருங்கள். தன் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் விரோதித்து தூஷிக்கும் யூதர்களிடம் சொல்லுகிறார்: "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்ல வேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராய்த் தீர்த்துக் கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" (அப் 13:46).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்தார் என்றாலும் இரட்சிப்பின் வாசல் படிப்படியாக புறஜாதியாருக்குத் திறக்கப்படுவதை மத் 8:10-12; 28:19,20, லூக்கா 14:23; 17:11-19; 20:9-16; 24:45-47, யோவான் 3:16; 4:35-42; 10:16 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 21:43) என்று இயேசு எச்சரித்திருக்கிறார்.

சுவிசேஷம் அதை விசுவாசிக்கிறவர்களுக்கோ, இரட்சிப்பு உண்டாவதற்கான தேவ பெலனாயிருக்கிறது என்கிறார் பவுல். விசுவாசியாதவர்களிடம் தேவபெலன் செயல்படுவதில்லை. "உலகமானது சுயஞானத்தினாலே தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1 கொரி 1:21). "கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த

தமது பலத்த சத்துவத்தின் வல்லமை" (எபே 1:19) மனித இரட்சிப்பில் தேவபெலனாகச் செயல்படுகிறது. "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" (1 கொரி 1:18).

'இரட்சிப்பு' (கிரேக்க பதம் soteria) என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். பொதுவாக **இரட்சிப்பு என்ற வார்த்தை ஒரு மனிதனுடைய ஆத்துமா மற்றும் ஆவியின் சுகத்தையும், ஆரோக்கியத்தையும் குறிப்பிடுகிறது.** நம்மை சிருஷ்டித்த தேவனுடன் நாம் கொண்டிருக்கும் உறவுமுறையை நிர்ணயப்படுத்துகிறது. வேதத்தில் இந்த வார்த்தை அடியிற்கண்டவாறு பல்வேறு பொருள்கொள்ளும்விதங்களில் பயன்படுத்தப்படுகிறது.

1. பாவத்திலிருந்து விடுதலை (மத் 1:21)
2. தேவகோபாக்கினையிலிருந்து விடுதலை (ரோமர்5:9)
3. சத்துருக்களின் கையிலிருந்து விடுதலை (லூக்கா 1 : 69-70)
4. வியாதிகளிலிருந்து விடுதலை (மத் 9:21,22)
5. இயற்கையினால் உண்டாகும் ஆபத்துக்களிலிருந்து விடுதலை (மத் 8:25)
6. நம்பிக்கையற்ற சூழ்நிலைகளிலிருந்து விடுதலை (மத் 18:11, லூக்கா 19:10)
7. மாறுபாடான சந்ததியிலிருந்து விடுதலை (அப் 2:40)

'இரட்சிப்பு' என்ற வார்த்தைக்கு பவுல் தரும் விளக்கங்களை இந்த நிருபத்தில் பல்வேறு இடங்களில் கற்றுக்கொள்ளப் போகிறோம். முக்கியமாக நாம் அறிந்து கொள்ளவேண்டியது இதுதான். அந்த வார்த்தை கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று பரிமாணங்களையும் உள்ளடக்கியது.

கடந்த காலத்தில் நாம் செய்த பாவத்தின் விளைவாக நாம் பெறவிருக்கும் தண்டனையிலிருந்து விடுதலை பெற்றவர்களாய் முதலாவதாக நாம் இரட்சிக்கப்படுகிறோம். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 7:23). மரணம் என்ற வார்த்தை தேவனிடமிருந்து நித்தியமாக பிரிக்கப்படும் அனுபவத்தைக் குறிப்பிடுகிறது.

தேவனற்றவனாக, தேவனை அறிந்துகொள்ள முடியாதவனாக ஆவியில் மரித்த நிலையில் இருக்கும் மனிதன் நரகத்தை நோக்கி, இருளில் நடந்துகொண்டிருக்கிறான், கிறிஸ்து அவனை இரட்சிக்கிறார். இது கடந்த கால நிகழ்ச்சி.

இவ்வாறு இரட்சிக்கப்பட்டவனும், நிகழ்காலத்தில் பாவத்தின் வல்லமையிலிருந்தும், ஆளுகையிலிருந்தும் அனுதினமும் இரட்சிக்கப்படவேண்டியதிருக்கிறது. பாவத்தை மேற்கொள்ளும் வல்லமையை தேவனே தருகிறார் என்பது நிகழ்காலத்திய இரட்சிப்பு. இரட்சிக்கப்பட்டு, பாவத்தின் தண்டனையிலிருந்து விடுவிக்கப்பட்ட எந்த மனிதனும் பாவமற்ற பரிபூரண நிலைக்குள் வரவில்லை என்பதினால் இது அவசியமாகிறது.

வருங்காலத்தில் பாவம் நம்மை அணுகாதபடி முற்றிலும் பாதுகாக்கப்படவிருக்கிறோம் என்பதையும் இரட்சிப்பு என்ற வார்த்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. இம்மைக்காக மட்டும் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை உடையவர்களாக இல்லை (1 கொரி 15:19). தேவன் நமக்கு நித்திய ஜீவனை வாக்குப்பண்ணியிருக்கிறார். பாவமற்ற மகிமைக்குள் நாம் பிரவேசிக்கும்போதே இரட்சிப்பு பூரணமாகிறது. 1 பேதுரு 1:3-5, ரோமர் 16:20 வாசித்துப்பாருங்கள்.

விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்குத்தான் இரட்சிப்பு உண்டாகிறது என்று பவுல் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். விசுவாசத்தைக் குறித்த பல காரியங்களை பவுல் தன் நிருபத்தில் அறிவிக்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால் **தேவனுடைய வார்த்தையை நம்புவதே விசுவாசம்.** எல்லா மனிதர்களும் பாவிகள் என்று தேவன் சொல்லுகிறார். அதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும். அந்த பாவத்தைக்குறித்து தான் ஏதோ ஒன்றைச் செய்திருப்பதாகச் சொல்லுகிறார். அதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். தன்னுடைய ஒரே குமாரனை பூமிக்கு அனுப்பி, மனித இனத்தின் பாவங்களை அவர்மேல் சுமத்தி, தண்டித்துவிட்டதாகச் சொல்லுகிறார். அதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். தன் குமாரனை விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள் என்கிறார். அதையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். **தேவன் தன்னுடைய வார்த்தையை விசுவாசிக்கவேண்டும் என்ற ஒரே நிபந்தனையைத்தான் இரட்சிக்கப்படவிரும்பும் மனிதனுக்கு முன்பாக வைத்திருக்கிறார்.**

மனிதனுடைய இரட்சிப்பு முற்றிலுமாக தேவனுடைய திட்டம் என்பதினால் மனித பெலனுக்கு அங்கே இடமில்லை.

"நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்" (ரோமர் 5:6). "யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார்" (1 கொரி 1:24). அது தேவ பெலனாய் இருப்பதினால் ஒரு காலத்திலும் தோல்வியடைய முடியாது. "விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே" (1 பேதுரு 1:5) இரட்சிப்புக்கேதுவாகக் காக்கப்பட்டிருப்பவர்கள் ஒருநாளும் அந்த இரட்சிப்பை இழந்துவிட முடியாது. **நம்மை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாய் நிறுத்தவும் அவருடைய வல்லமை போதுமானதாக இருக்கிறது (யூதா 24).** ஒருவன், நான் விசுவாசித்தேன்-ஆனால் வழியிலே விழுந்துபோனேன் என்று சொல்லுவானேயாகில் அவன் இரட்சிக்கப்படவே இல்லை என்றுதான் பொருள்.

சுவிசேஷம் மட்டுமே மனித இரட்சிப்பை உண்டாக்கக்கூடிய தேவவல்லமையை உடையது என்பதை அறிந்துகொள்ளுங்கள். **மனித இனத்தை ஆளுகை செய்து கொண்டிருக்கும் சாத்தானை முறியடிக்கும் ஒரே போராயுதம் தேவ வல்லமை நிறைந்த சுவிசேஷம்தான்.** வானத்தையும் பூமியையும் அதில் உள்ள சகல காரியங்களையும் தன்னுடைய வார்த்தையினால் சிருஷ்டிக்கும்போது வெளிப்பட்ட வல்லமையைவிட சுவிசேஷத்தில் வெளிப்படும் தேவ பெலன் கூடுதலாக இருக்கிறது. அது நம்முடைய உள்மனதை இறுகப்பிடித்துக்கொள்ளுகிறது. மனச்சாட்சியை உருவக் குத்துகிறது. இருதயத்தைக் கிளர்ச்சியடையச் செய்கிறது. வாழ்க்கையைப் பரிசுத்தமாக்குகிறது. ஆத்துமாவை இரட்சிக்கிறது.

"இரட்சிப்பு கர்த்தருடையது" (யோனா 2:9) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அது நித்தியத்துக்கடுத்த ஒரு காரியம் என்பதினால் எந்த விதத்திலும் அது தற்காலிகமானதல்ல. அது ஒரு மனிதனை பாவத்தின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், கட்டுகளிலிருந்தும் விடுவிக்கிறது. தேவ கோபாக்கினையிலிருந்தும், நித்திய மரணத்திலிருந்தும் தப்பிக்கவைக்கிறது. தேவ நீதியில் பங்குகொள்ளச்செய்கிறது. விடுதலையையும் பரிசுத்தத்தையும் வழங்குகிறது. தேவனோடு நம்மை ஒப்புரவாக்கி அவருடைய சுதந்தரராகவும், நித்திய ஜீவனுக்கு பாத்திரராகவும் ஆக்குகிறது.

இன்னொரு விதத்தில் சொல்வதானால், **ஒரு மனிதன் சந்திக்கக் கூடிய மிகப் பெரிய ஆபத்திலிருந்து தப்பித்து, ஒரு மனிதன் பெறக்கூடிய**

மிகப் பெரிய நித்திய சந்தோஷத்துக்குள் பிரவேசிப்பதுதான் இரட்சிப்பு. நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய மூன்றும் இரட்சிப்பின் வெவ்வேறு பகுதிகளே. இவை எல்லாவற்றையும் நடப்பிப்பது தேவனே. தங்களுடைய சுயமுயற்சியையும், சுயநீதியையும் நம்புகிறவர்கள் ஒருபோதும் இரட்சிக்கப்படுவதில்லை.

விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது (ரோமர் 1:17)

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்பதை தேவன்மேல் ஒருவன் வைத்திருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமான் என்றென்றும் வாழ்ந்திருப்பான் என்று பொருள் கொள்ளலாம். **தேவன் எவ்வாறு கிறிஸ்துவின் பாடுமரணத்தின் விளைவாக பாவமனிதர்களை நீதிமான்களாக உருவாக்குகிறார் என்பதே சுவிசேஷம் அறிவிக்கும் பிரதானமான காரியம். இந்த செயலாற்றல் மனிதனுடைய விசுவாசத்தில் உதயமாகிறது.** விசுவாசத்திலேயே நிறைவு பெறுகிறது.

இந்த மகிமையான சுவிசேஷத்தை அறிவிக்க பவுல் வெட்கப்படவில்லை. ஏனென்றால்

1) சுவிசேஷம் இரட்சிப்பை உண்டாக்க தேவபெலனுடையதாக இருக்கிறது (வசனம் 16)

2) சுவிசேஷத்தினால் விலையேறப்பெற்ற தேவநீதி உண்டாகிறது.

தேவநீதி என்பது தேவனிடத்திலிருந்து புறப்படுவதால் அவ்வாறு அழைக்கப்படுகிறது. அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது. ரோமர் நிருபத்தில் ஏழு இடங்களில் இது குறிப்பிடப்படுகிறது. "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரே 23:6) என்பது தேவனுடைய உடன்படிக்கையின் பெயர்களில் ஒன்று. "கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவர்" (சங் 145:17), "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" (சங் 97:2). சங் 48:10; 45:7; 97:2, ஏசாயா 11:5; 59:16, எரே 23:5 வாசித்துப் பாருங்கள். சுவிசேஷம் வழங்கும் தேவநீதியை மனித விசுவாசம் ஏற்றுக்கொள்கிறது.

'நீதி' (கிரேக்க பதம் dikaiosune) அல்லது

'நீதிமானாக்கப்படுதல்' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மட்டும் 91 தடவை பயன்படுத்தப்படுகிறது. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மட்டும் பவுல் இதை 35 தடவை உபயோகப்படுத்துகிறார். ரோமர் நிருபத்தின் கருப்பொருள் தேவநீதி என்று சொல்லலாம். அதன் ஒவ்வொரு அதிகாரத்திலும் தேவநீதி குறிப்பிடப்படுகிறது.

1. தேவநீதி ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படுகிறது. (1:17-3:20)
2. தேவநீதி தேவனால் வழங்கப்படுகிறது (3:21-26)
3. தேவநீதியை விசுவாசத்தினால் ஒரு மனிதன் சுதந்தரிக்கிறான் (3:27-4:25)
4. தேவநீதியை ஒருவன் தன் ஆத்துமாவில் உணர்ந்துகொள்ளும் விதம் (5:1-8:17)
5. தேவநீதி ஒரு விசுவாசிக்கு நிரந்தரமாக வாக்களிக்கப்படுகிறது (8:18-39)
6. தேவநீதி யூதர்களால் புறக்கணிக்கப்படுகிறது (அதி 9-11)
7. தேவநீதியினால் அனுதின வாழ்க்கையில் உண்டாகும் விளைவுகள் (அதி 12-16)

தன்னுடைய நீதிமன்றத்தில் குற்றவாளியாக நிறுத்தப்பட்ட ஒரு பாவமனிதனைக் குறித்த தேவனுடைய சாதகமான தீர்ப்பே நீதிமானாக்கப்படுதல். அவன் நீதிமானாகத் தீர்ப்பிடப்படும்போது, கடந்தகாலத்தில் அவன் செய்த, நிகழ்காலத்தில் அவன் செய்துகொண்டிருக்கிற, எதிர்காலத்தில் அவன் செய்யப்போகிற எல்லா பாவங்களையும் தேவன் மன்னித்து, மறந்துவிடுகிறார் என்றுதான் பொருள்.

'நீதி' என்ற வார்த்தை 'அங்கீகரிக்கப்படக் கூடிய ஆடை அணிதல்' (Right clothing) என்று பொருள்படும். பாவ மனிதன் தேவசமுகத்தில் நிர்வாணியாகக் கருதப்படுகிறான் (ஆதி 3:10, எபி 4:13, வெளி 3:17). ஆதாமும் ஏவாளும் அத்தி இலைகளினால் தங்கள் நிர்வாணத்தை மூட முயற்சி செய்ததுபோல் மனிதர்கள் ஏதேனும் நற்கிரியைகளைச்செய்து தங்கள் பாவங்களை மறைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். ஆனால் ஏசாயா 64:6 சொல்கிறது: "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது".

"அவர்கள் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்" (ரோமர் 10:3) என்கிறார் பவுல். தன்னுடைய தகுதியின்மையையும், இயலாமையையும் உணர்ந்து, தேவ சமுகத்தில் தன்னைத் தாழ்த்தி **கல்வாரி சிலுவை மரணத்தில் உண்டான தேவ நீதியை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிற மனிதன் நீதிமானாகிறான்.** "அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசாயா 61:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

தேவநீதி என்பது மனிதனுக்கு உள்ளே இருந்து அல்ல, அவனுக்குப் புறம்பே இருந்துவருகிறது. அது மனிதனுடைய கிரியைகளினால் உண்டாகும் சுயநீதியோடு எந்த விதத்திலும் சம்பந்தப்படாதது. இது முற்றிலுமாக தேவனால் உண்டாகிறது. எனவே பாவ மனிதனை பரிசுத்தமாக்கி தேவனோடு ஒப்புரவாக்கி அவர்களிடையே இருந்த பகையை நீக்கிவிடுகிறது.

நியாயப்பிரமாணத்து விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிவதால் ஒருவன் நீதியைச் சம்பாதித்துக் கொள்ளமுடியும் என்பது உண்மைதான். "என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசே 18:9) என்று தேவன் சொல்லியிருக்கிறார். "இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்" (உபா 6:25) என்று மோசேயும் சொல்லி யிருக்கிறார். ஆனால் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியும் ஒரு மனிதனே தன்னுடைய கிரியைகளின் அடிப்படையில் நீதிமானாக முடியும். "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (யாக் 2:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவன் நீதிமான் அல்ல, குற்றவாளி என்று நியாயந்தீர்க்கப்படுகிறான். அதுமட்டுமல்ல, கலாத்தியர் 3:10 சொல்கிறது : நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள், நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.

எந்த ஒரு மனிதனாலும் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய முடியாது என்பதினால்தான் பவுல் "நியாயப் பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால்

உண்டாயிருக்கிறதுமான நீதியை" (பிலிப் 3:9) உடையவனாயிருக்க தன்னை ஒப்புக்கொடுக்கிறார். நியாயப்பிரமாணத்தின் 613 பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தவராய், நம்முடைய பாவங்களை தன்மேல் சுமந்துகொண்டு, அதன் விளைவாக மரணத்தை ஏற்றுக்கொண்ட இயேசு சம்பாதித்த தேவநீதியை தேவன் நம்முடைய கணக்கில் வரவு வைத்திருக்கிறார் என்ற சத்தியத்தை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்வதால் நீதிமான்களாக்கப்படுகிறோம்.

எனவே தேவ நீதி என்பது பாவ மனிதனை தன்னுடைய பார்வையிலும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலும், குற்றமற்றவன் என்று நியாயந்தீர்த்து, அவனை நீதிமானாக்கி, நித்தியத்துக்குள் பிரவேசிக்க வைக்கும் தேவனுடைய திட்டம். தேவன் தரும் விலையேறப்பெற்ற இரட்சிப்புக்கு ஒரு மனிதனைத் தகுதிப்படுத்துவது தேவநீதியே. இந்த "நித்திய நீதி" (தானி 9:24) கிறிஸ்துவினால் உண்டானது. அதனால்தான் "நீதி எங்கே இருக்கிறது" என்ற கேள்விக்கு ஜாண் பன்யன் என்ற பரிசுத்தவான் "பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிறது" என்று பதில் சொல்லுகிறார். 2 கொரிந்தியர் 5:21 சொல்லுகிறது: "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."

மனிதனுக்கு இரட்சிப்பை உண்டுபண்ணும்படியாக தேவனுடைய நீதி வெளிப்படுவதைக் குறித்த பல தீர்க்கதரிசன வசனங்கள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. "என் நீதியைச் சமீபிக்கப் பண்ணுகிறேன், அது தூரமாயிருப்பதில்லை; என் இரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை" (ஏசாயா 46:13). சங்கீதம் 98:2 சொல்லுகிறது: "கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்". ஏசாயா 51:5 சொல்லுகிறது: "என் நீதி சமீபமாயிருக்கிறது; என் இரட்சிப்பு வெளிப்படும்". ஏசாயா 51:8 சொல்லுகிறது: "என்னுடைய நீதியோ என்றென்றைக்கும் நிலைக்கும், என் இரட்சிப்பு தலைமுறை தலைமுறைதோறும் இருக்கும்". மனித இரட்சிப்புக்கு தேவநீதியே காரணமாக அமைகிறது என்பதை இந்த வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற வசனம் பவுலின் கண்டுபிடிப்பல்ல. கலாத்தியர் 3:11, எபிரெயர் 10:38லும் அவர் இதைப் பயன்படுத்தினாலும், இந்த தேவனுடைய வார்த்தை ஆபகூக் என்ற தேவமனிதனுக்கு முதலாவதாக வெளிப்பட்டிருக்கிறது. பொதுவாக தீர்க்கத்தரிசிகள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு

சபைக்கு அறிவிப்பார்கள். ஆனால் ஆபகூக் தேவனிடம் கேள்வி கேட்கும் ஒரு மனிதர். துன்மார்க்கம் நிறைந்த பாபிலோனியர் யூதாவைக் கைப்பற்ற ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் பின்னணியில், தேவன் இது குறித்து ஏன் மௌனமாயிருக்கிறார் என்பது அவர் தேவனுக்கு எதிராகக் கொண்டுவரும் குற்றச்சாட்டு. "தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூக் 2:4) என்பதே தேவனுடைய பதில். "**தேவன் மேலுள்ள விசுவாசத்தால் நீதிமான் என்றென்றும் வாழ்ந்திருப்பான்**" என்பது புதிய மொழிபெயர்ப்பு. யூதர்கள் தோல்வியடைந்து, சிறைப்பிடிக்கப்பட்டாலும், அவர்களுடைய அடிமைத்தனம் நிரந்தரமானது அல்ல. தன்னை விசுவாசிப்பவர்கள் நிச்சயமாக மீண்டும் தங்கள் தேசத்துக்கு அழைத்துவரப்பட்டு, நிலைநிறுத்தப்படுவார்கள் என்பதே இந்த வசனத்தின் பொருள்.

"பிழைப்பான்" என்ற வார்த்தை மனிதன் பெறவிருக்கும் நித்திய ஜீவனைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும். விசுவாசத்தினால் பிழைப்பான் என்று சொல்லும்போது அவன் பிழைப்பது அவனுடைய முயற்சியினால், திறமையினால் அல்ல என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. **இந்த வசனத்தை "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்" என்றும் எடுத்துக்கொள்ளலாம்.** விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டவர்கள், விசுவாசத்தினால் பெறும் தேவ நீதியை உடையவர்களாய் இருந்து நித்திய ஜீவனை சுதந்தரித்து, தேவனோடு சஞ்சரிப்பவர்களாயிருப்பார்கள்.

விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி, விசுவாசத்துக்கென்று, சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது என்கிறார் பவுல். விளங்கிக் கொள்வதற்கு இதைவிட கடினமான வசனம் இருக்கிறதா என்று தேடித்தான் பார்க்கவேண்டும். ஆனால் இதைவிட முக்கியமான வசனம் இல்லை என்பது நிச்சயம். ஒரு கிறிஸ்தவன் விசுவாசத்தில் மென்மேலும் வளர்ச்சியடைவதால் தேவநீதியிலும் தேறினவனாகிறான் என்கிறார் மார்ட்டின் லூத்தர். **தேவ நீதியின் துவக்கமும் முடிவும் விசுவாசமே.** துவக்கத்தில் குறைவான விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட தேவ நீதி ஒருவனை எவ்வளவு தூரம் விசுவாசத்துக்குள் வழிநடத்துகிறது என்றால் படிப்படியாக அவன் வளர்ச்சியடைந்து நித்திய பேரின்பத்துக்குள் பிரவேசித்தே ஆகவேண்டும். "விசுவாச நீதியே தேவ நீதியாகிறது. தேவ நீதியின் மேன்மையை விசுவாசமே சுதந்தரிக்கிறது.

பவுல் சொல்லுகிறபடி "இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே

இல்லை" (ரோமர் 3:22). அதை விசுவாசிக்கும் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த வேதபகுதி அறிவிக்கும் நான்கு காரியங்களை மீண்டும் அறிந்துகொள்வோம்.

1. பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் மனித இனத்துக்கு இலவசமாக இரட்சிப்பை வழங்குகிறது.
2. இந்த இரட்சிப்பை பாவமனிதன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுகிறான்.
3. இரட்சிப்பைப் பொறுத்தவரை யூதர், கிரேக்கர் என்ற பாகுபாடு இல்லை.
4. இந்த சுவிசேஷ அறிவிப்பு பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் முன்னறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்துவின் நீதிமன்றமும் மூன்று வகையான குற்றவாளிகளும் (வசனம் 1:18-3:8)

முந்தின வேத பகுதியில் ஒரு மனிதனை விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்குவதே தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் என்பதைப் பார்த்தோம். மனிதனுடைய அவபக்தியும், அநியாயமும் எவ்வளவு தூரம் அவனை தேவனிடமிருந்து பிரிக்கிறது என்றால் தேவநீதி வெளிப்படாத நிலையில் தேவ கோபம் வானத்திலிருந்து வெளிப்பட்டு மனிதனை அழித்தே ஆகவேண்டும் என்ற நிலை உருவாகிக்கொண்டிருக்கிறது.

தன்னுடைய சுவிசேஷத்தைக் குறித்த புதிய வெளிப்பாடுகளைக் கொடுப்பதற்கு முன்பு மனிதர்களின் பாவ நிலை என்ன என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். **தான் ஒரு பாவி என்பதை உணர்ந்து கொள்ளாத மனிதன் இரட்சிக்கப்படுவதில்லை.** *மனித இனத்தை அடியிற்கண்டபடி மூன்று வகையினராகப் பிரித்து, இந்த மூன்று பிரிவினரின் இயல்பான பாவங்கள் என்னென்ன என்பதை ரோமர் 1:18 முதல் 3:8 வரையுள்ள வேதபகுதியில் அறிவிக்கிறார்.*

1) தேவனை அறியாத புறஜாதியார் (ரோமர் 1:18-32) (புறசமய நம்பிக்கை உடையவர்களாய் மெய் தேவனை ஏற்றுக்கொள்ளாதவர்கள்)

2) தங்கள் சுயநீதியை நம்பும் மாய்மாலக்காரர்கள் (ரோமர் 2:1-16)

3) நியாயப்பிரமாணத்தின் கிரியைகளிலும், பாரம்பரியங்களிலும் நம்பிக்கையுடைய இஸ்ரவேலர் (ரோமர் 2:17-3:8)

இந்த மூன்று வகையான மனிதர்களும் தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டு, தேவனால் நியாயம் விசாரிக்கப்படுவது போல் இந்த வேத பகுதி அமைந்திருக்கிறது. முதல் பிரிவினரான புறஜாதியார் தேவனையும் அவருடைய பிரமாணங்களையும் தாங்கள் அறியவில்லை என்று சாக்குச் சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களுடைய கூற்று ஏற்றுக்கொள்ளப்படவில்லை. "தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்" (ரோமர் 1:19) என்கிறார் நியாயாதிபதி. எந்த ஒரு மனிதனும் தனக்கு தேவனைத் தெரியாது என்று சொல்லமுடியாது.

சுயநீதியில் நம்பிக்கையுடைய இரண்டாவது பிரிவினர் தங்களை மற்ற மனிதர்களிடம் ஒப்பிட்டு, அவர்களைவிட தாங்கள் நல்லவர்கள் என்ற அடிப்படையில் தங்களை நீதிமான்களாக்க முயற்சிசெய்கிறார்கள். இவர்களுடைய வாதத்தையும் நியாயாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை. மற்றவர்களைக் "குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத் தீர்ப்புக்குத் தப்பிக் கொள்ளலாமென்று நினைக்கிறாயோ" (ரோமர் 2:3) என்று நியாயாதிபதி தீர்ப்பிடுகிறார்.

மூன்றாவது பிரிவினர் தேவனை அறிந்து, அவரால் உபதேசிக்கப்பட்ட யூதர்கள் - நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் நன்மை எது, தீமை எது என்பதை அறிந்த இவர்கள், தேவனுடைய ஊழியக்காரர்களாகக்

கருதப்படவேண்டியவர்கள். தேவனோடு கொண்டிருக்கும் உறவின் அடிப்படையில் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று இவர்கள் எண்ணுகிறார்கள். "நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மைபாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறிநடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா?" (ரோமர் 2:23) என்று நியாயாதிபதி கேட்கிறார்.

நீதியுள்ள நியாயாதிபதியாகிய இயேசுகிறிஸ்துவின் (யோவான் 5:22, அப் 17:31) தலைமையில் இந்த மூன்று பிரிவைச்சேர்ந்த மனிதர்களுக்கு எதிராக வழக்கு விசாரணை நடக்கிறது. அவர்களுடைய கிரியைகளின் அடிப்படையிலும் (ரோமர் 2:6), நியாயப் பிரமாணத்தின் பின்னணியிலும் (ரோமர் 2:12) நீதி விசாரித்த இயேசு "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:10-12) என்று முடிவு செய்கிறார். அதாவது மூன்று பிரிவினருமே பாவிகள் என்பதுதான் அவருடைய தீர்ப்பு.

அடுத்ததாக பாவிகள் என்று தீர்க்கப்பட்ட இந்த மூன்று பிரிவினரையும் நியாயாதிபதி தண்டிக்கவேண்டும். "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்ற நியதியின் அடிப்படையில், அவர்களை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். ஏனென்றால் பரிசுத்த தேவனைவிட்டு மனிதனைப் பிரிக்கும் ஒரு நிலைதான் பாவம்.

ஆனால் கிறிஸ்து என்ன செய்கிறார் தெரியுமா? தானே நியாயாசனத்திலிருந்து இறங்கி வந்து குற்றவாளிகள் நிற்கும் கூண்டில் தன்னை நிறுத்திக் கொள்ளுகிறார். அவர்களுக்குப் பதிலாக, அவர்கள் சார்பில் தன்னை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கிறார். குற்றம் செய்தவர்களையோ நீதிமான்கள் என்று அறிவித்து விடுதலை செய்கிறார்.

இதுதான் அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கும்

கிருபையினால் நீதிமானாக்கப்படும் சுவிசேஷம்.

புறஜாதியாரின் அவலநிலை (வசனம் 18-32)

சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது. *(ரோமர் 1:18)*

விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி சுவிசேஷத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை பவுல் முந்தின வசனத்தில் அறிவித்ததைப் பார்த்தோம். அந்த சுவிசேஷத்தின் நற்செய்தியை அங்கீகரிக்காமல் அடக்கிவைக்கிறவர்கள் பெற்றுக்கொள்ளும் தேவகோபம் இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது. தேவகோபம் தேவநீதியின் எதிர்பதம் என்று சொல்லலாம். **தேவநீதியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தேவகோபாக்கினையைச் சந்தித்தே ஆகவேண்டும்.**

நவீன காலத்தில் தேவனுடைய அன்பைக் குறித்துத்தான் நாம் பேசுகிறோமே தவிர, தேவகோபத்தைக் குறித்து யாருமே பேசுவதில்லை. ரோமர் நிருபத்தில் பன்னிரண்டு இடங்களிலும் புதிய ஏற்பாட்டில் மொத்தம் முப்பது முறைக்கு மேலும் தேவகோபம் (கிரேக்கமொழியில் orge) என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. தேவகோபம் மனிதர்களின் கோபத்தைப் போன்றதல்ல. ஏனெனில் தேவன் மனிதர்களைப் போல் உணர்ச்சிவசப்படுகிறவர் அல்ல. அவரது கோபம் தேவனுடைய பரிசுத்தத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. தீமையை வெறுத்து, அதை நிர்மூலமாக்கும் நோக்கத்தை உடையது. தேவன் அன்பாக இருக்கிறார் என்பது உண்மைதான். அந்த அன்பும் பரிசுத்தமானது.

"கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே" என்று யாத்திராகமம் 34:14ல் வாசிக்கிறோம். "கர்த்தரின் கோபமும், எரிச்சலும் அந்த மனிதன்மேல் புகையும்; இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சாபங்களெல்லாம் அவன்மேல் தங்கும்; கர்த்தர் அவன்பேரை வானத்தின்கீழ் இராதபடிக்குக் குலைத்துப்போடுவார்" என்று உபாகமம் 29:20ல் வாசிக்கிறோம். "கர்த்தர் எரிச்சலுள்ளவரும், நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர்

தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர்" (நாகூம் 1:2).

இப்படி நூற்றுக்கணக்கான வசனங்கள் இருக்க தேவன் பாவிகளை நேசிக்கிறார் என்று சொல்லுவது தவறான உபதேசம். அவர் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணர் என்றும், அநியாயத்தை நோக்கமாட்டாதவர் என்றும் ஆபகூக் சொல்லுகிறார் (1:13). தன்னுடைய ஒரேபேறான குமாரன் மேல் பாவம் சுமத்தப்பட்டபோது இமைப்பொழுது தேவன் அவரைக் கைவிட்டு மனுஷர்களின் பாவத்தினிமித்தம் பாவமறியாத அவரைத் தண்டித்தவர் (ஏசாயா 54:7, 53:10, மத் 27:46). பாவத்துக்கு விரோதமாக தேவகோபம் வெளிப்படவில்லை என்றால் அவர் பரிசுத்தமான தேவன் என்று சொல்லமுடியாது. பரிசுத்தமான தேவனால்தான் மனிதனை இரட்சிக்கமுடியும். எபே 5:6, கொலோ 3:6, யோவான் 3:36 வாசித்துப் பாருங்கள்.

இந்த தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுவதாக பவுல் சொல்லுகிறார். நோவா காலத்து ஜலப்பிரளயம் (ஆதி 6-8), சோதோமை அழிக்க வானத்திலிருந்து இறங்கிய கந்தக அக்கினி (ஆதி 19), எகிப்தின் வாதைகள் (யாத் 6-12), கடைசி காலத்து கோபக்கலசங்கள் (வெளி 16) ஆகிய கொடூரமான நியாயத்தீர்ப்புகள் எல்லாமே வானத்திலிருந்து இறங்கி வந்தவை.

வானத்திலிருந்து வெள்ளைக்குதிரையில் இறங்கி வரும் (இரண்டாவது வருகை) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக பாவிகள் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (அப் 17:31) என்பதாகவும் இந்த வசனத்தை எடுத்துக்கொள்ளலாம். எதுவானாலும் "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி 10:31) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நான் உன்னில் நியாயஞ்செய்யும் நாட்களில் உன் இருதயம் தாங்குமோ" (எசே 22:14) என்கிறார் சர்வவல்லமையுள்ள தேவன். தேவகோபத்திலிருந்து தப்பித்துக்கொள்கிறவன் பாக்கியவான்.

எதற்கு விரோதமாக இந்த பயங்கரமான கோபம் வெளிப்படுகிறது? மனிதர்களுடைய அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாக. 'அவபக்தி' என்ற வார்த்தை தேவனை கனம் பண்ணாமல் இருக்கும் பாவத்தையும், 'அநியாயம்' என்ற வார்த்தை அவருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியாமலிருக்கும் பாவத்தையும் குறிப்பிடுகிறது. இந்த பாவங்களைச் செய்கிற மனிதர்கள் யார்? சத்தியத்தை,

தேவனைப்பற்றிய அறிவை அதாவது தேவனுடைய சுவிசேஷத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிறவர்கள். இவர்கள் உலகரீதியாக துன்மார்க்கர்களாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அவர்கள் நல்லவர்களாகவும் இருக்கலாம். ஆனால் தங்களுடைய வாழ்க்கையில் பிரவேசிக்க தேவனை இவர்கள் அனுமதிக்கமாட்டார்கள். தேவனைப்பற்றிய சிந்தனையற்றவர்கள். தேவனைப்பற்றிய அறிவைப் புறக்கணித்தவர்கள்.

தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். (ரோமர் 1:19)

தேவன் யார் என்பதை நாங்கள் அறிந்துகொள்ளாதிருக்க எங்களுக்கு விரோதமாக தேவகோபம் வெளிப்படுவது நியாயமல்ல என்று புறஜாதியார் கேள்வி எழுப்பக்கூடும் என்று எதிர்பார்த்து, அவர்களுக்கு பவுல் இவ்விதமாக கூறுகிறார். எந்த ஒரு மனிதனும் ஒரு சிருஷ்டி கர்த்தர் இருக்கிறார் என்பதை அறியாதிருக்கமுடியாது. தன்னைப்பற்றிய அனைத்து காரியங்களையும் தேவனே சகல மனிதர்களுக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார் என்கிறார்.

லீஸ்திரா என்ற புறஜாதி பட்டணத்து மனிதர்கள் மெய்தேவனை அறியாதவர்கள்தான். அவர்களிடம் பர்னபாவும் பவுலும் சொல்கிறார்கள்: "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" (அப் 14:16,17). அவர்களும் தேவனை அறிந்தவர்களே.

தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியை மெய் தேவன் ஒருவர் உண்டு என்பதை அறிவிக்கிறது. சங்கீதம் 19:1 சொல்கிறது: "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது. ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது". தேவனுடைய மகிமையையும் மகத்துவத்தையும் அவர் வெளிப்படுத்தினால் மட்டுமே ஒருவன் பூரணமாக அறிந்துகொள்ள முடியும் என்றாலும், தான் காணும் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன் ஒருவர் இருக்கவேண்டும் என்பதை அறிந்துகொள்ள ஒருவனுக்கு மிகுந்த ஞானம் இருக்கவேண்டும் என்பதில்லை. ஆப்ரிக்காவின் இருளடைந்த காட்டுப்பிரதேசத்துக்குள்

சென்றாலும், வெளி உலகத்தோடு எந்த தொடர்பும் இல்லாத ஆதிவாசி ஜனங்களும் தேவன் ஒருவர் உண்டு என்பதை நம்புகிறார்கள் என்றால் அதற்கு காரணம் இதுதான். ஆகையால்தான் சங்கீதம் 14:1; 53:1 சொல்லுகிறது: "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியைகளைச் செய்து வருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை".

தன்னால், தன்னுடைய சாயலில், தன் ஜீவசுவாசத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனுடைய இருதயத்திலும் தன்னைக் குறித்த ஒரு தெய்வீக வெளிப்பாட்டைத் தேவன் கொடுத்திருக்கிறார். இதைத்தான் பவுல், தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்தியிருப்பதாகச் சொல்லுகிறார். அவனுடைய மனச்சாட்சி தேவனை பிரீதிப்படுத்தக்கூடிய வாழ்க்கை வாழும்படியாக அவனுக்கு ஆலோசனை சொல்லிக் கொண்டே இருக்கிறது. தவறு செய்யும் போதெல்லாம் அவனைக் குற்றப்படுத்துகிறது. அதனால்தான் கிறிஸ்துவைப் பற்றி "உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி" (யோவான் 1:9) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. (ரோமர் 1:20)

"காணப்படாதவை" என்று சொல்லும்போது நம்முடைய ஐம்புலன்களினால் அறியப்படாதவை என்று பொருள் கொள்ளலாம். தேவன் ஆவியாக இருக்கிறார் (யோவான் 4:24) என்பதினால் யாராலும் காணப்படக்கூடாதவர். "தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை" (1 யோவான் 4:12). யோபு சொல்கிறார்: "இதோ, நான் முன்னாகப் போனாலும் அவர் இல்லை; பின்னாகப்போனாலும் அவரைக் காணேன், இடதுபுறத்தில் அவர் கிரியை செய்தும் அவரைக் காணேன்; வலது புறத்திலும் நான் அவரைக் காணாதபடிக்கு ஒளித்திருக்கிறார்" (23:8,9), பிரசங்கி சொல்கிறார்: "ஆவியின் வழி இன்னதென்றும், கர்ப்பவதியின் வயிற்றில் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நீ அறியாதிருக்கிறதுபோலவே, எல்லாவற்றையும் செய்கிற தேவனுடைய செயல்களையும் நீ அறியாய்" (11:5).

தேவனைக் குறித்த, மறைவான, விளங்கிக்கொள்ள முடியாத

காரியங்கள் பல உண்டு. மனித ஞானத்தினால் அவருடைய சம்பூரணங்களை யாராலும் அறிந்துகொள்ளமுடியாது. அதனால்தான் சோப்பார் கேட்கிறார்: "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ" (யோபு 11:7). "அவர் அதரிசனமானவர்" என்பதை கொலோ 1:15, 1 தீமோ 1:17, எபி 11:27 உறுதிப்படுத்துகின்றன.

தேவனுடைய குணாதிசயங்களான முடிவில்லாத வல்லமையும், அவருடைய தேவத்துவமும் மனிதனால் காணப்படக்கூடாதவை என்கிறார் பவுல். இவை இரண்டும் உதாரணங்களாகத்தான் சொல்லப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் அவருடைய நீதி, ஞானம், மகத்துவம், மகிமை ஆகியவைகளும் யாராலும் காணப்படாதவைகளே. அவருடைய நித்திய வல்லமையை அறிவிக்கும் ஆதி 18:14, எரே 32:37 வசனங்களை வாசித்துப் பாருங்கள். அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. அதே நேரத்தில் அவருடைய செய்கைகள் மூலமாக நாம் அவரைக்குறித்து எளிதில் அறிந்துகொள்ளமுடியும். சங்கீதக்காரன் சொல்வது போல: "கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது" (சங் 111:2).

மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட விதத்தை எடுத்துக்கொள்ளுங்கள். தாவீது சொல்லுகிறார்: "நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங் 139:14). தாவீதின் சரீர கண்களுக்கு அவை புலப்படாமல் இருக்கலாம். ஆனால் அவருடைய ஆத்துமா அதை அறிந்திருக்கிறது.

கர்த்தர் தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களை பராமரித்து போஷிக்கும் விதத்திலிருந்தும் மெய்தேவன் ஒருவர் உண்டென்று கண்டுகொள்ளலாம். பவுல் சொல்கிறார்: "மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன்தீர்மானிக்கப்பட்ட காலங்களையும், அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்; கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாக தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே" (அப் 17:26,27).

பவுல் சொல்கிறார்: "சென்ற காலங்களில் அவர் சகல

ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத்தந்து, ஆகாரத்தினாலும், சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக்குறித்துச் சாட்சி விளங்கப்பண்ணாதிருந்ததில்லை" (அப் 14:16,17).

யோபுவும் இந்த சத்தியத்தை இவ்வாறு அறிவிக்கிறார் : "இப்போதும் நீ மிருகங்களைக் கேட்டுப்பார், அவைகள் உனக்குப் போதிக்கும்; ஆகாயத்துப் பறவைகளைக் கேள், அவைகள் உனக்கு அறிவிக்கும். அல்லது பூமியை விசாரித்துக்கேள், அது உனக்கு உபதேசிக்கும்; சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள், அவைகள் உனக்கு விவரிக்கும். கர்த்தருடைய கரம் இதைச் செய்ததென்று இவைகளெல்லாவற்றினாலும் அறியாதவன் யார்?" (12:7-9).

எனவே தாங்கள் தேவனை அறியவில்லை என்று புறஜாதியார் போக்குச் சொல்லி, தப்பித்துக்கொள்ள முடியாது என்கிறார் பவுல். இந்த உலகம் தானாக உருவானதல்ல. பிரெஞ்சு புரட்சியின் போது தேவனை நம்பாத ஒரு பிரசங்கி ஒரு கூட்டத்தில் "தேவனை நினைவுபடுத்தக்கூடிய சகல நினைவுச் சின்னங்களையும் வெட்டி எடுத்து உடைத்துப் போடவேண்டும். அப்போது மனிதர்களின் மூடநம்பிக்கை நீங்கிவிடும்" என்று சொன்னாராம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு ஏழை விசுவாசி உடனடியாக "வானத்து சூரிய சந்திரனையும் நட்சத்திரங்களையும் உடைத்து எறிந்துவிடலாம்" என்று பதில் சொன்னாராம். **வான மண்டலங்களைப் பார்க்கும்போது அதில் உள்ளவைகள் எல்லாம் தேவனுடைய மகத்துவமான கிரியை என்பதை உணர்ந்திருக்கிறீர்களா?**

அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப் படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. (ரோமர் 1:21)

தேவனே தன்னை புறஜாதியாருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும் (வசனம் 19), அவருடைய சிருஷ்டிப்பு தேவனையே வெளிப்படுத்துகிறது என்றும் (வசனம் 20), பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அடுத்ததாக தேவனை அறிந்த இந்த புறஜாதியார் செய்யத்தவறிய இரண்டு காரியங்கள் சொல்லப்படுகின்றன.

1. புறஜாதியார் தேவனை மகிமைப்படுத்தவில்லை. (அவரைக் கனப்படுத்தவில்லை)

2. புறஜாதியார் தேவனை ஸ்தோத்திரிக்கவில்லை. (அவருக்கு நன்றி சொல்லவில்லை)

இதன்விளைவாக நடந்த இரண்டு காரியங்களையும் பவுல் தொடர்ச்சியாக இந்த வசனத்திலேயே அறிவிக்கிறார்.

1. புறஜாதியார் தங்கள் சிந்தைகளிலே வீணரானார்கள். (அவர்கள் எண்ணங்கள் பயனற்றுப் போயின)

2. புறஜாதியாரின் உணர்வில்லாத இருதயம் இருளடைந்தது. (அவர்களுடைய நினைவுகளில் இருள் சூழ்ந்தது).

ஒரு மனிதனுக்கு தேவன் யார் என்பதைக் குறித்த அறிவு இருந்தால் மட்டும் போதாது. அவரை மகிமைப்படுத்த அவன் தவறிவிடக்கூடாது. அவருடைய பரிசுத்தம், நீதி, ஞானம், இரக்கம், மகத்துவம், வல்லமை ஆகியவற்றைக் குறித்து உணர்வுள்ளவனாக இருக்கவேண்டும். தேவனை தேவனென்று மகிமைப்படுத்துவது ஒரு மனிதனுடைய கடமை. (சங் 22:23, ஏசாயா 49:3, மத் 5:16, ரோமர் 15:5, 1 பேதுரு 4:16, வெளி 15:4). நாம் தேவனை மகிமைப்படுத்துவதினால் அவருடைய மகிமை அதிகரிக்கிறது என்பதல்ல. அவருக்கு மட்டுமே உரிய மகிமையை அவருக்கே புகழுண்டாகும்படி சாட்சியுரைக்கிறோம். அதில் அவர் பிரியப்படுகிறார்.

அடுத்தாக தேவனை அறிந்த மனிதன் அவரை ஸ்தோத்திரிக்கவேண்டும். தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக, மேன்மைகளுக்காக அவருக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவனுக்கு நன்றி சொல்லும் ஒரு மனிதன் தன்னுடைய தகுதியின்மையை உணர்ந்தவனாய் தேவ சமுகத்தில் அவருடைய மகத்துவத்தை உணர்ந்து தன்னைத் தாழ்த்துகிறான். தான் தேவனுக்கு எவ்வளவு தூரம் கடமைப்பட்டிருக்கிறான் என்பதை அறிக்கையிடுகிறான். நாம் தேவனை மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலும் இருப்பதினால் தேவனுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுவதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். பாதிக்கப்படுவது நாம் தான்.

அவர்களுடைய இருதயம் இருளடைந்துபோகிறது என்கிறார்

பவுல். அவர்கள் பெற்றிருந்த கொஞ்ச வெளிச்சமும் மங்கிப்போகிறது. வீண் சிந்தையும், இருளடைந்த சிந்தையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டது. தாங்கள் தேவனைப் போலாகிவிடக்கூடும் என்ற வீண்சிந்தை ஆதாம் ஏவாளில் விதைக்கப்பட்டதுமே அவர்கள் இருதயத்தை இருள் ஆளுகை செய்ய ஆரம்பிக்கிறது. விலக்கப்பட்ட கனியைப் புசிக்க துணிகரம் கொள்கிறார்கள்.

'இருதயம்' என்ற வார்த்தையை பவுல் தன்னுடைய நிருபங்களில் ஐம்பது தடவைக்கும் அதிகமாக பயன்படுத்துகிறார். ஒரு மனிதனுடைய எண்ணங்கள், சித்தம், வார்த்தைகள், கிரியைகள் ஆகியவற்றின் உறைவிடமாக இருதயம் கருதப்படுகிறது. "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி 23:7). "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத் 12:34). அதனால் தான் "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதி 4:23). தேவன் ஒருவரே வெளிச்சமாக இருப்பதினால் வெளிச்சத்தைப் புறக்கணித்த ஒரு மனிதனை இருள் ஆளுகை செய்கிறது. இருளடைந்த ஒரு மனிதனுடைய இருதயம் ஒரு மனிதனை தேவனுக்கு நேராக வழிநடத்தாமல் எதிர்திசையில் கொண்டுசெல்லும் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும், பயித்தியக்காரராகி (ரோமர் 1:22)

சாக்ரட்டீஸ் உலகின் தலைச்சிறந்த தத்துவஞானியாக இன்றும் கருதப்பட்டு வருகிறார். கிரேக்க தேசத்தில் காணப்பட்ட சகல மூடநம்பிக்கைகளையும் கண்டித்து வந்தவர். அரசாங்கத்தை விரோதித்துக் கொண்டதினிமித்தம் அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. விஷக்கோப்பையை தைரியமாகக் கையில் எடுத்த சாக்ரட்டீஸ் தனக்கு நெருக்கமான சீஷனிடம் தன் வீட்டின் எதிரேயிருந்த எயிஸ்குலாப்பியூஸ் (Aesculapius) என்ற தேவதைக்கு நேர்த்திக்கடனாக ஒரு கோழியை வெட்டி பலி செலுத்தும்படியாகக் கேட்டுக்கொண்டாராம். உலக ஞானிகளும் மெய்தேவனை அறிந்துகொள்ளத் தவறும்போது பயித்தியக்காரர்கள் ஆகிறார்கள். "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்கவில்லையா?" (1 கொரி 1:20). ஞானவான்களாகக் கருதப்படும் இவர்களின் நிலையே இப்படியென்றால் மற்றவர்களின் நிலை என்னவாயிருக்கும்?

இப்படி சுயஞானத்தை நம்புகிறவர்களின் சிந்தை வீணாகிறது. இருதயம் இருளடைகிறது. இதை அறிந்து கொள்ளாத இந்த மனிதர்கள் தங்களை சகலத்தையும் அறிந்த ஞானிகள் என்றே கருதுகிறார்கள். **தன்னுடைய பரிதாபத்துக்குரிய அறியாமையை மனிதன் கண்டுகொள்ள தவறுகிறான் என்பது மட்டுமல்ல, அதைக் குறித்து பெருமைப்படவும் ஆரம்பிக்கிறான்.** இதுவே பாவத்தினால் உண்டாகும் சீர்கேடு. உண்மையில் அறிவற்றவர்களாகிய இந்த மனிதர்கள் தங்களை ஞானிகளாக கற்பனை செய்து கொள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைக் குறித்து எரேமியா சொல்லுகிறார்: "ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப் போட்டார்கள் ; அவர்களுக்கு ஞானமேது" (8:9), உண்மையான ஞானி எப்படி இருப்பான்?, எரேமியா 9: 23, 24 வாசித்துப் பாருங்கள். "ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம்" (யோபு 28:28). "கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்" (நீதி 15:33), "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி 1:7; 9:10, சங் 111:10).

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். (ரோமர் 1:23).

உலக ஞானம் ஒரு மனிதனை படிப்படியாக எங்கே கொண்டு செல்லுகிறது என்பதைப் பாருங்கள். **நன்மையானதைச் செய்ய மனிதன் தவறும்போது, அவன் தீமையானதைச் செய்யத் துணிகரம் கொள்கிறான்.**

1. தேவனை மகிமைப்படுத்தத் தவறினார்கள்
2. தேவனை ஸ்தோத்திரிக்க தவறினார்கள்
3. சிந்தைகளில் வீணரானார்கள்
4. இருதயத்தில் இருளடைந்தார்கள்
5. பயித்தியக்காரர்கள் ஆனார்கள்
6. இறுதியாக விக்கிரக ஆராதனைக்கு அடிமைகளானார்கள்

அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுக்காக நியமிக்கப்பட்ட மனிதர்களால் மாற்ற முடியாது. ஆனால் இந்த

மனிதர்கள் அவ்வாறு மாற்றிவிட்டதாக நினைத்துக்கொள்கிறார்கள். தாங்கள் அறிந்திருந்த தேவனை (வசனம் 21) புறக்கணித்துவிட்டு, அழிவுள்ள மனித உருவங்களை வழிபட ஆரம்பிக்கிறார்கள். **தேவசாயலில் உருவாக்கப்பட்ட மனிதன், மனித சாயலில் தேவனை உருவாக்குகிறான்.** இதோடு நின்றுவிடாமல் பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகளைத் தேடிப்பிடித்து, அவைகளின் உருவத்தில் தேவனைத் தொழுதுகொள்ள ஆரம்பிக்கிறான். "அவர்கள் (யூதர்கள்) ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள். தங்கள் மகிமையைப் புல்லைத் தின்கிற, மாட்டின் சாயலாக மாற்றினார்கள்" (சங் 106:19,20) என்று வாசிக்கிறோம்.

'தேவனுடைய மகிமை' என்ற வார்த்தை தேவனுடைய புனிதத்தன்மை, பரிசுத்தம், மாட்சிமை, மகத்துவம், முடிவற்ற தன்மை, நீதி, வல்லமை ஆகியவற்றைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். இந்த மகிமையை நாசியில் சுவாசமுள்ள மனிதனுக்கும், மிருக ஜீவன்களுக்கும் மனிதன் உருவாக்கிய சிலைகளுக்கும் கற்பனையாகக் கூறுவது எவ்வளவு அருவருப்பான காரியம். ஆனால் இந்த உலகத்து ஞானிகள் இதை அறியாதிருக்கிறார்கள் என்றால் எவ்வளவு தூரம் அவர்கள் இருதயம் இருளடைந்திருக்கிறது என்பதை யோசித்துப் பாருங்கள்.

"ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின் கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பாயிருக்கிற விக்கிரகத்தை" (உபா 4:15-18) செய்து நமஸ்கரிப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம் என்றால், இதினிமித்தம் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிப்பதாக தேவன் எச்சரித்திருக்கிறார் (யாத் 20:5).

தேவனுடைய மகிமையை "இவைகளின் ரூபங்களுக்கு ஒப்பாக" மாற்றுவதும் தடை செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். சிலுவை வணக்கம் செய்கிறவர்கள், நற்கருணையை ஸ்தாபித்து அதை வணங்குகிறவர்கள், இயேசுவின் படம் மற்றும் சிலைகளை மாலையிட்டு, மெழுகுதிரி கொளுத்தி இல்லங்களிலும் ஆலயங்களிலும் நிலைநிறுத்துகிறவர்கள், "நாங்கள் விக்கிரங்களாகிய இவற்றை ஆராதிக்கவில்லை, இவை நினைவுபடுத்தும் மெய்யான

தெய்வத்தையே நமஸ்கரிக்கிறோம்" என்று சொல்லி தேவ கோபாக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ளமுடியாது. ஏனென்றால் இவர்களும் வேதவசனத்தின்படி விக்கிரகஆராதனைக்காரர்கள்தான்.

அத்தேனே பட்டணத்தின் மார்ஸ் மேடையில் நின்றவாறு பவுல் சொல்லுகிறார்: "நாம் தேவனுடைய சந்ததியாராயிருக்க, மனுஷருடைய சித்திரவேலையினாலும், யுக்தியினாலும் உருவாக்கின பொன், வெள்ளி, கல் இவைகளுக்குத் தெய்வம் ஒப்பாயிருக்குமென்று நாம் நினைக்கலாகாது" (அப் 17:29).

இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:24)

முந்தின வசனங்களில் சொல்லப்பட்ட பாவங்களின் விளைவு என்ன என்பதை அறிவிப்பதால் "இதினிமித்தம்" என்று பவுல் இந்த வசனத்தைத் துவங்குகிறார். விக்கிரகாராதனை என்ற மன்னிக்கப்படக்கூடாத பாதகத்தினால் நிறைந்த மக்கள் தீயவைகளைச் செய்யவே விரும்பினபடியால் தேவன் அவர்களை விட்டு விலகி, தங்கள் பாவ வழியில் அவர்கள் தொடர்ந்து செல்ல விட்டுவிட்டார். அவர்களில் இருந்த அசுத்தம் நிலைத்திருக்க, அல்லது அதிகரிக்க அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார். 1 இராஜா 22:22,23ல் தேவன் பொய்யின் ஆவிகளைப் பயன்படுத்தி ஆகாப் ராஜா தன்னுடைய சித்தத்துக்கு விரோதமாக செயல்படச் செய்வதைப் பார்க்கிறோம். "ஒப்புக்கொடுத்தார்" என்ற வார்த்தை இந்த அதிகாரத்தின் 26,28-வது வசனங்களிலும் சொல்லப்படுகிறது. தங்கள் அசுத்தத்தில் நிலைத்திருக்கும்படியாக தேவன் அவர்களை கட்டாயப்படுத்தினார் என்பதாக இதை எடுத்துக்கொள்ளக்கூடாது. "என் ஆவி என்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை" (ஆதி 6:3) என்ற வசனத்தின்படி, தங்கள் போக்கில் போகும்படியாக அவர்களை அனுமதித்தார் என்றுதான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதமாக இஸ்ரவேலர் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியை அப்போஸ்தலர் 7:41, 42ல் வாசிக்கிறோம். "அந்நாட்களில் (சீனாய் மலையடிவாரத்தில் அவர்கள் பாளயமிருந்தபோது) ஒரு கன்றுக்குட்டியை உண்டுபண்ணி, அந்த விக்கிரகத்திற்குப் பலியிட்டு, தங்கள் கையின் கிரியைகளில் களிகூர்ந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்களை விட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய

அவர்களை ஒப்புக்கொடுத்தார்". இதுவே அவர்கள் பெறும் மிகப்பெரிய தண்டனையாகிறது.

தேவன் ஒருவனை ஒப்புக் கொடுத்தார் என்பதால் அவர்களை உடனடியாக அழித்துவிடுகிறார் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. வேசித்தனம் மற்றும் விக்கிரக ஆராதனையின் பிறப்பிடமான யேசபேலுக்கே தேவன் மனந்திரும்பும்படியாக தவணை கொடுத்தார் என்பதை வெளி 2:20,21-ல் பார்க்கிறோம். நோவாவின் நாட்களில் மனுஷருடைய அக்கிரமம் பூமியிலே பெருகி, அவனுடைய நினைவுகளின் தோற்றமெல்லாம் பொல்லாதவை (ஆதி 6:5) என்று தேவன் கண்டபோதும் கூட அவர் நீடிய பொறுமையோடு காத்திருந்தார் (1 பேதுரு 3:20).

ஓசியா 13:9 ல் தேவன் சொல்கிறார் : "இஸ்ரவேலே, நீ உனக்குக் கேடுண்டாக்கிக் கொண்டாய்; ஆனாலும் என்னிடத்தில் உனக்குச் சகாயம் உண்டு". **பாவ மனிதனையும் தேவகிருபை தேடிவந்தது. அவன் வழிவிலகிப்போகும்போதும் அவனைப் பின்தொடர்ந்தது. அவனுடைய சகல முரட்டாட்டங்களின் மத்தியிலும் கிருபை மெய்தேவனை ஏற்றுக்கொள்ளும்படியாக மன்றாடியது. இறுதியில் அவனுக்காக மரித்தது.** இருந்தாலும் கிருபையின் நாட்களைப் பயன்படுத்தாமல், மனந்திரும்பாமல் தன்னுடைய பாவங்களில் ஒருவன் நிலைத்திருப்பானேயாகில் தேவன் அவனை ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இவ்வாறு தன்னால் ஒப்புக்கொடுக்கப்பட்ட மனிதனைக் குறித்து தேவன் சொல்கிறார், "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்" (வெளி 22:11). மனிதர்கள் பாவம் செய்வதை தேவன் விரும்புவதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. 1 கொரிந்தியர் 6:9,10, எபேசியர் 5:3 வாசித்துப் பாருங்கள். "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1 தெச 4:7) அப்படி இருந்தும் சிலரை அசுத்தத்துக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்றால் அதிலும் தேவநீதியே நிறைவேறுகிறது என்பதை நம்பி தேவனை ஸ்தோத்திரிப்போம். **மனிதர்கள் அத்தனை பேருக்கும் இரட்சிப்பின் கிருபையை வழங்கியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்குள் தேவன் இல்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.** ரோமர் 9-வது அதிகாரத்தில் இந்த சத்தியத்தை கூடுதலாக அறிந்துகொள்வோம். ஒருவனை ஆசீர்வதிக்கவும், ஆசீர்வதிக்காமல் இருக்கவும் தேவனால் முடியும்.

"தேவன் ஜீவனுள்ளவர்" (எரே 10:10, சங் 42:2). "விக்கிரகங்களுக்கு ஜீவன் கிடையாது" (ஏசா 40:20, 45:20, எரே 10:5). எனவே ஒரு விக்கிரகத்தை உருவாக்கி அதை வணங்கும் மனிதன் தன்னைத்தானே நமஸ்கரிக்கிறான். இதினிமித்தம் தேவன் என்ன செய்கிறார்? தங்கள் இருதயத்தில் குடிகொண்டிருக்கும் இச்சைகள் பெலனடையவும், அதன் விளைவாக சரீர இச்சைகள் பெருகவும், சரீரரீதியான பாவங்கள் உருவாகவும் அனுமதிக்கிறார். தேவன் சொல்கிறார்: "என் ஜனமோ என் சத்தத்துக்குச் செவிகொடுக்கவில்லை; இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை. ஆகையால் அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்; தங்கள் யோசனைகளின்படியே நடந்தார்கள்" (சங் 81:11, 12).

இருதயத்தின் இச்சையும் (lusts of the heart), சரீர இச்சையும் (lusts of the flesh) வித்தியாசமானவை என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இச்சையான பார்வை இருதய இச்சையோடு சம்பந்தப்பட்டது. விபசாரம் செய்வது சரீர இச்சையோடு சம்பந்தப்பட்டது (மத் 5:28). சகோதரனை நியாயமில்லாமல் கோபிப்பது இருதயத்தின் இச்சை, அவனைக் கொலைசெய்வது சரீர இச்சை (மத் 5:21, 22). சொல்லப்போனால் இருதயத்தின் இச்சை மிகவும் ஆபத்தானது. சரீர இச்சையினால் விழுந்துபோன இளைய குமாரன் எளிதாக தன் தகப்பனுடன் ஒப்புரவாகிவிடுகிறான். இருதயத்தின் இச்சையின் பிடியில் அகப்பட்டிருந்த மூத்த குமாரன் (அன்பற்ற தன்மை, மன்னிக்காத தன்மை, சுயநீதி, பெருமை, குரோதம், பிடிவாதம்) உவமையின் கடைசி வரை தன் தகப்பனுடைய வீட்டுக்குப் புறம்பாகவே காணப்படுகிறான் (லூக்கா 15:28).

புறஜாதியாரின் இருதய இச்சைகளையெல்லாம் தேவன் வெளியரங்கமாக்கி சரீர இச்சைகளாக நிறைவேற்ற அவர்களை ஒப்புக்கொடுக்கும்போது என்ன நடக்கிறது?, "அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதயக் கடினத்தினால், தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து; உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்" (எபே 4:18, 19).

தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்

பட்டவர். ஆமென். (ரோமர் 1:25)

விக்கிரக ஆராதனையைக் குறித்துப் பேசும் 23-வது வசனத்தின் தொடர்ச்சியாக இதை எடுத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய மகிமையை மனிதன், பறவைகள் மற்றும் விலங்குகளின் சாயலுக்கு ஒப்பாக மாற்றிக்கொள்ளும்படியாக என்னவெல்லாம் செய்கிறார்கள்.

1. தேவனுடைய சத்தியத்தை பொய்யாக மாற்றினார்கள்
2. சிருஷ்டிகரை தொழுது சேவிக்கத் தவறினார்கள்
3. சிருஷ்டிக்கப்பட்டவைகளை சேவிக்க ஆரம்பித்தார்கள்.

'சத்தியம்' என்ற வார்த்தை சத்திய உபதேசங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளலாம். அவரே சத்தியமாகவும் இருக்கிறார் (யோவான் 14:6, சங் 31:6, ஏசாயா 65:16). "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாகப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாக கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2 தெச 2:11, 12) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வசனத்தின்படியே கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்துவை உலகமக்கள் அனைவரும் ஆராதிப்பார்கள்.

தங்களை சிருஷ்டித்த மெய்தேவனைப் புறக்கணித்த மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட பொய் தேவர்களைச் சேவிப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. மெய்தேவன் ஒருவருக்கு மட்டுமே உரியதான மகிமையை அவரிடமிருந்து திருடிக்கொண்ட மனிதர்கள் அதை போலியானவைகளுக்குக் கொடுக்க தேவன் அனுமதிக்கிறார்.

"அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்" என்று பவுல் இந்த வேதபகுதியை முடிக்கிறார். தேவனுடைய மகத்துவத்தை உணர்ந்து அதை அறிக்கையிடும்போதெல்லாம் அவரைத் தொழுதுகொள்ளுவது யூதர்களுடைய பாரம்பரியமான பழக்கம் (ரோமர் 9:5, 2 கொரி 1:3; 11:31, எபே 1:3, லூக்கா 1:68, 1 பேதுரு 1:3).

ஆமென் என்ற எபிரெய வார்த்தை "அப்படியே ஆகக்கடவது" என்று பொருள்படும்.

இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். (ரோமர் 1:26)

இரண்டாவது தடவையாக "ஒப்புக் கொடுத்தார்" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்துகிறார். தங்களுடைய சரீரங்களை அவமானப்படுத்தக்கூடிய அசுத்தத்துக்கு புறஜாதியாரைத் தேவன் ஒப்புக்கொடுத்ததை 24-வது வசனத்தில் பார்த்தோம். இங்கே "இழிவான இச்சை ரோகங்கள்" என்று சொல்லப்படுகிறது. சுபாவமான முறையில் ஒரு கணவனும் மனைவியும் சரீர உறவு கொள்ளுவதை வேதம் தடை செய்யவில்லை. திருமண உறவையும் ஐக்கியத்தையும் தேவன் ஆசீர்வதித்தபடியால்தான் ஆதாம் ஏவாளை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்து அவர்களை பலுகிப் பெருகி பூமியை நிரப்பி அதைக் கீழ்ப்படுத்தும்படியாகக் கட்டளையிட்டார் (ஆதி 1:27, 28). மனித இனத்துக்கு தேவன் கொடுத்த முதல் கற்பனை இதுதான். மத்தேயு 19:5, மாற்கு 10:7,8 எபேசியர் 5:31 ஆகிய வசனங்கள் திருமணத்தின் மேன்மையை உறுதிப்படுத்துகின்றன.

இந்த வசனத்தில் ஆண்-பெண் சரீரத்துக்கடுத்த உறவோடு சம்பந்தப்பட்ட பாவங்களான விபசாரம், வேசித்தனம் ஆகியவை கூட சொல்லப்படவில்லை. சுபாவத்துக்கு விரோதமான முறையில் - ஆண்கள் ஆண்களுடனும், பெண்கள் பெண்களுடனும் உறவு கொள்ளும் கேவலமான காம அநுபோக உறவுமுறைகளைப்பற்றிப் பவுல் பேசுகிறார். இவை தேவனுடைய பார்வையில் அருவருப்பானது என்பதினால் இப்படிப்பட்டவர்கள் "கொலை செய்யப்படக்கடவர்கள்; அவர்கள் இரத்தப்பழி அவர்கள்மேல் இருப்பதாக" (லேவி 20:13) என்று நியாயப் பிரமாணம் அறிவிக்கிறது. இந்த ஓரினச் சேர்க்கையைப் பற்றி ஆதி 19:4-9, லேவி 18:22; 20:13, நியா 19:22-24, 1 இராஜா 14:24; 15:12; 22:46, 2 இராஜா 23:7 ஆகிய வசனங்களிலும் சொல்லப்படுகிறது. தேவனால் அசுத்தத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மனிதர்கள் மிருகங்களைவிட கேவலமானவர்களாகிவிடுகிறார்கள்.

அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர் மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள் அடைந்தார்கள். (ரோமர் 1:27)

முந்தின வசனத்தில் பெண்கள் சுபாவத்துக்கு விரோதமாகச் செய்யும் பாவத்தைக் குறித்துச் சொன்ன பவுல், இந்த வசனத்தில் ஆண்கள் ஆண்களோடு உடலுறவு கொள்ளும் அவலட்சணத்தைக் குறிப்பிடுகிறார். "இஸ்ரவேலின் குமாரரில் ஒருவனும் ஆண்புணர்ச்சிக்காரனாயிருக்கக்கூடாது" (உபா 23:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவனைப் புறக்கணிக்கும் ஒரு மனிதன் தன்னையே அழித்துக்கொள்ளுகிறான். செய்யக்கூடாதவற்றை யெல்லாம் துணிகரமாகச் செய்கிறான். பாவத்தின் வல்லமை அவனில் பெருகிக்கொண்டே போகிறது.

தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். *(ரோமர் 1:28)*

தேவனைப் பொறுத்தவரை உலகத்து மனிதர்களின் செயல்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லப்படுகின்றன. அவர்களுடைய அக்கிரமங்கள் படிப்படியாக வளர்ந்துகொண்டே போகின்றன.

1. மெய்தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொள்ளவில்லை (வசனம் 19)
2. தேவன் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தியும் கண்டுகொள்ளவில்லை (வசனம் 19)
3. தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியைகளைப் புறக்கணித்தார்கள் (வசனம் 20)
4. தேவனை அறிந்தும் மகிமைப்படுத்தவில்லை (வசனம் 21)
5. தேவனை ஸ்தோத்திரிக்கத் தவறினார்கள் (வசனம் 21)
6. தேவனுடைய மகிமையை சிருஷ்டிகளுக்குக் கொடுத்தார்கள் (வசனம் 23)
7. தேவனுடைய சத்தியத்தைப் பொய்யாக மாற்றினார்கள் (வசனம் 25)

இதினிமித்தமாய் தேவன் அவர்களை இழிவான இச்சை



ரோகங்களுக்கு ஒப்புக் கொடுத்தார் என்பதை 26,27 வசனங்களில் அறிவித்த பவுல், ஏன் இவ்வாறு செய்தார் என்ற காரணத்தை இந்த வசனத்தில் அறிவிக்கிறார். தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனது இல்லை என்கிறார். மெய்தேவன் யார் என்பதைப் பற்றியும், அவரைப் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றுக்கொள்ளவேண்டியதின் அவசியத்தையும் அவர்கள் உணர்ந்துகொள்ளத் தவறினார்கள். அதன் விளைவாக அப்படிப்பட்ட பயனற்ற சிந்தனைகளில் அமிழ்ந்துபோக தேவன் அவர்களை அனுமதிக்கிறார்.

அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய், (ரோமர் 1:29)

இந்த வசனத்தில் மட்டும் வேசித்தனம், துரோகம், பொருளாசை,

குரோதம், பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம் என்ற ஒன்பது அநியாயங்கள் புறஜாதியாரின் பாவங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்தப் பட்டியலில் பொருளாசை மூன்றாவது இடத்தைப் பெறுவதைக் கவனியுங்கள். "பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்" (1 தீமோத் 6:10) என்று வாசிக்கிறோம்.

புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களுமாய், (ரோமர் 1:30)

இந்த வசனத்தில் மொத்தம் எட்டு பாவக்கிரியைகள்தான் அறிவிக்கப்படுகின்றன என்றாலும் ஒரு சிறு வித்தியாசத்தைக் காண்கிறோம். முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட ஒன்பது பாவங்களும் மனிதர்களை புறங்கூறுகிறவர்களாகவும், அவதூறு பண்ணுகிறவர்களாகவும், தேவபகைஞர்களாக, துராகிருதம் பண்ணுகிறவர்களாகவும், அகந்தை உள்ளவர்களாக, வீம்புக்காரர்களாக, பொல்லாதவைகளை யோசித்து பிணைக்கிறவர்களாக, பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்களாக மாற்றிவிடுகிறது.

உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இணங்காதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள் (ரோமர் 1:31)

29-வது வசனத்தில் ஒன்பது பாவங்களும், 30-வது வசனத்தில் எட்டு பாவங்களும் சொல்லப்பட்டதைப் பார்த்தோம். அதைத் தொடர்ந்து மேலும் ஐந்து பாவ கிரியைகளை பவுல் அறிவிக்கிறார். அவர்கள் உணர்வில்லாதவர்களாய், உடன்படிக்கையை மீறுகிறவர்களாய், சுபாவ அன்பில்லாதவர்களாய், இணங்காதவர்களாய், இரக்கமற்றவர்களாய் மாறிவிடுகிறார்கள் என்கிறார். இந்த ஐந்து கிரியைகளும் மனிதன் தேவனுக்கு எதிராக நேரடியாக செயல்படும் விதத்தை அறிவிக்கின்றன. இந்த வசனத்தின் அடிப்படையில் அன்பும், இரக்கமும் இல்லாதவர்கள் பாவிகளே.

ரோமர் 1:29-31ல் சொல்லப்படும் பாவங்களை வேதத்தில் மற்ற இடங்களில் சொல்லப்படும் பாவங்களின் பட்டியலோடு ஒப்பிட்டுப்

பாருங்கள். (ரோமர் 13:13, 1 கொரி 5:9-11; 6:9-10, 2 கொரி 12:20,21, கலா 5:19-21, எபே 4:19; 5:3-5, கொலோ 3:5-9, 1 தெச 2:3; 4:3-7, 1 தீமோ 1:9,10; 6:4,5, 2 தீமோ 3:2-5, தீத்து 3:3,9,10).

வேதாகம நாட்களிலேயே பாவம் இவ்வளவு அதிகமாக பலுகிப் பெருகியிருக்குமேயானால், இந்த கடைசி நாட்களில் அது எவ்வளவு பெலனடைந்திருக்கவேண்டும் என்பதை சற்றே யோசித்துப் பார்ப்போம். அந்தக் காலத்து மனிதர்களையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து "பொல்லாத விபசாரச் சந்ததி" (மத் 12:39; 12:45, மாற்கு 8:38) என்று சொல்லியிருப்பாரேயானால், நம்முடைய சந்ததியைக் குறித்து என்னவெல்லாம் சொல்லுவார் ?

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள். (ரோமர் 1:32)

"இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள்" என்று பவுல் சொல்லும்போது, முந்தின மூன்று வசனங்களில் சொல்லப்பட்ட இருபதுக்கும் மேலான பாவங்களை மட்டுமல்லாது இந்த அதிகாரம் முழுவதிலும் சொல்லப்பட்ட பலவிதமான பாவங்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

மரணம் என்ற வார்த்தை வேதத்தில் மீறுதலுக்காக கொடுக்கப்படும் தண்டனையைக் குறிப்பிடுகிறது. தேவன் வழங்கும் கோபாக்கினையின் தீர்ப்பாகிய நித்திய மரணத்தையும் குறிப்பிடுகிறது. இப்படியான தண்டனை தங்களுக்கு நிச்சயமாகவே உண்டு என்பதை புறஜாதியார் அறிந்திருந்தார்கள் என்கிறார் பவுல். நியாயப்பிரமாண விதிமுறைகளை அவர்கள் அறியாதவர்களாயிருந்தாலும், "அவர்களுடைய மனச்சாட்சியும்கூட சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்" (ரோமர் 2:15).

பாவம் என்றால் என்ன? பாவத்தின் சம்பளம் என்ன? என்பதை அறிந்தும்கூட அவர்கள் இரண்டு காரியங்களைச் செய்வதாக பவுல் அறிவிக்கிறார்.

1. தண்டனை உண்டென்று அறிந்தும் பாவத்தைத் தொடர்ந்து செய்கிறார்கள்.

2. அந்த பாவங்களைச் செய்கிறவர்களை நேசிக்கிறார்கள்.

பாவத்தை அறிந்தும் தொடர்ந்து செய்யவும், மற்றவர்களை உற்சாகப்படுத்தி அவர்களை பாவம் செய்யவைத்து மகிழ்ச்சி அடைவதும் அவர்களுடைய இருதயம் தேவனுக்கு விரோதமாக எவ்வளவாய் சீர்கேடடைந்திருக்கிறது என்பதையே காட்டுகிறது. பொதுவாக மனிதர்கள் சில பாவங்களை வெளிப்படையாக கௌரவத்தின் அடையாளமாகக் கருதி நடப்பிக்கிறார்கள். குடிப்பழக்கத்தின் அடிமைத்தனத்தில் இருப்பவர்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள். குடி விருந்துகளில் தங்கள் நண்பர்களையும் கலந்துகொள்ளவைப்பதில் ஆர்வமுடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்த வசனத்துடன் ரோமர் நிருபத்தின் முதல் அதிகாரம் முடிவடைகிறது. அதிகாரத்தின் கடைசி ஒன்பது வசனங்களும் பிரசங்கிப்பதற்கு மிகவும் கடினமானவை. தேவனால் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்களின் பரிதாபத்துக்குரிய பாவ நிலையை பவுல் மிகவும் கடினமாக விமர்சிக்கிறார் என்பது உண்மைதான். **மெய்தேவனை மகிமைப்படுத்தவும் ஸ்தோத்திரிக்கவும் தவறியதின் விளைவாகவே அவர்கள் தேவனால் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்கள்.** ஆனாலும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டவர்களை தேவன் ஒருபோதும் நித்திய அழிவுக்கு ஒப்புக்கொடுப்பதில்லை. வேதம் சொல்கிறது : "அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை; கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்" (சங் 37:24).

2

எல்லாரும் பாவிகளே !

ரோமர் 1:18 முதல் 3:8 வரையுள்ள வேதபகுதியில் புறஜாதியார், சுயநீதியை நம்பும் மாய்மாலக்காரர்கள், யூதர்கள் என்று முன்று பிரிவாக மனித இனத்தைப் பிரித்து இந்த முன்று பிரிவினருமே பாவிகள்தான் என்றும், அனைவருமே தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரர் என்றும் நிரூபிக்க முயற்சி செய்கிறார் என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ரோமர் 1:18-32 வேதபகுதியில் முதல்பிரிவைச் சேர்ந்த, துன்மார்க்கம் நிறைந்த புறஜாதியாரின் பாவங்களை ஏற்கனவே பவுல் அறிவித்துவிட்டார்.

சில வேதபண்டிதர்கள் ரோமர் 2:1 முதல் 3:8 வரை யூதர்களை மனதில் வைத்துக்கொண்டுதான் பவுல் பேசுவதாகக் கருதுகிறார்கள். ஆனால் யூதர்கள் என்ற வார்த்தை ரோமர் 2:17ல் சொல்லப்பட்டு, அதற்கு பிந்தின வசனங்களில்தான் அவர்களுடைய பிரத்தியேகமான குறைபாடுகள் சொல்லப்படுகின்றன. எனவே ரோமர் 2:1 முதல் 16 வரையுள்ள வேதபகுதியில் இரண்டாவது பிரிவினரான சுயநீதியில் நம்பிக்கையுடைய மனிதர்களின் பாவங்கள் மட்டுமே சொல்லப்பட்டிருக்கின்றன என்று முடிவு செய்கிறோம்.

இந்த இரண்டாவது பிரிவினர் முந்தின வேதபகுதியில் சொல்லப்பட்ட புறஜாதியாரைப் போல் துன்மார்க்கமான மனிதர்கள் அல்ல. இவர்களது பாவங்களின் பட்டியல் எதுவுமே கொடுக்கப்படவில்லை. இவர்கள் தங்களை பாவிகளாகவே கருதுவதில்லை என்பது மட்டுமல்ல, இவர்கள் பாவம் செய்வதாக பவுலும் குறிப்பிடவில்லை. தங்களுடைய ஒழுக்க முறைகளில் மிகுந்த நம்பிக்கையுடைய இந்த இரண்டாவது பிரிவினரை ஒரு வேத பண்டிதர் 'மரியாதைக்குரிய பாவிகள்' (Respectable Sinners) என்று குறிப்பிடுகிறார். இவர்கள் புறஜாதியாராகவும் இருக்கலாம்,

யூதர்களாகவும் இருக்கலாம், மற்றவர்களோடு தங்களை ஒப்பிட்டு அதின் அடிப்படையில் தங்களை நல்லவர்களாகவும், மேன்மையானவர்களாகவும் கருதுகிறவர்கள்.

மரியாதைக்குரிய பாவிகளின் அவலநிலை (வசனம் 1-16)

ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே, நீ யாரானாலும் சரி, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத் தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ மற்றவர்களைக் குறித்துச் சொல்லுகிற தீர்ப்பினாலே உன்னைத்தானே குற்றவாளியாகத் தீர்க்கிறாய். *(ரோமர் 2:1)*

மனித இனத்தின் இரண்டாவது பிரிவினர் செய்கிற பாவங்கள் என்னென்ன என்பதை அறிவிக்காமல், முதல் வசனத்திலேயே அவர்களுடைய குறையை யாவரும் காணும்படி பவுல் வெளிப்படுத்துகிறார். இவர்கள் எப்போதுமே தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அவர்களைக் குற்றவாளிகளாக நியாயந்தீர்ப்பவர்கள். மனித இனத்தின் முதலாவது பிரிவினர் அப்படிப்பட்டோர் அல்லர். அவர்கள் தாங்களும் அக்கிரமங்கள் செய்வார்கள், மற்றவர்களையும் அக்கிரமம் செய்வதற்கு உற்சாகப்படுத்துவார்கள். தங்கள் பாவங்களைக் குறித்து மகிழ்ச்சி அடைவதோடல்லாமல் மற்றவர்களுடைய பாவங்களைக் குறித்தும் பெருமகிழ்ச்சி அடைவார்கள்.

தங்களுடைய சுயநீதியை நம்பும் இந்த இரண்டாவது பிரிவினருக்கு எதிரான பவுலின் குற்றச்சாட்டு :

1. நீ மற்றவர்களை அவர்கள் காரியங்களில் வெகுவிரைவாய் நியாயந்தீர்க்கிறாய்.
2. அதே காரியங்களை நீயும் செய்கிறாய்.
3. ஆகையால் அந்த நியாயத்தீர்ப்பு முதலாவது உனக்கே பொருந்துவதாக இருக்கிறது.
4. எனவே நீ எந்த போக்கும் சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது.

இந்த இரண்டாம் பிரிவினர் யாரைக் குற்றப்படுத்துகிறார்கள்? முதலாம் பிரிவினரான புறஜாதி பாவமனிதர்களையா அல்லது மூன்றாவது

பிரிவினரான இஸ்ரவேலரையா? யாரையானாலும் சரி, தங்களுடைய சுயநீதியின் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையினிமித்தம் தங்களுக்குத் தெரிந்த அத்தனைபேரையும் அவர்கள் ஏதேனும் ஒரு காரணத்துக்காக குற்றப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். ஆனாலும் தங்களிடம் விசுவாசம் இல்லை, தேவநீதி இல்லை, இரட்சிப்பு இல்லை என்பதைக் குறித்து கவலைப்படுவதில்லை. தங்களுக்கு விரோதமாகவும் தேவகோபம் (வசனம் 1:18) வெளிப்படுவதை உணர்ந்து கொள்ளாமலேயே இருக்கிறார்கள்.

பரிசேயன் ஒருவன் தேவாலயத்துக்கு ஜெபம்பண்ணப் போகிறான். தேவனுடன் பேசும்போதுகூட ஆலயத்துக்கு வந்திருக்கும் ஆயக்காரனோடு தன்னை ஒப்பிட்டு ஸ்தோத்திரம் பண்ணுகிறான். "தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்" (லூக்கா 18:11). தன்னுடைய சுயநீதியின்மேல் அவன் கைக்கொண்டிருந்த நம்பிக்கையின் விளைவாக ஜெபிக்கிற வேளையிலும் அவனுடைய மாய்மாலம் வெளிப்படுவதைப் பாருங்கள். **பெருமை நிறைந்த மனிதர்களிடமிருந்து உண்மையான ஜெபம் வெளிப்படமுடியாது.**

மற்றவர்களில் குற்றங்கண்டு அவற்றைப் பெரிதுபடுத்தும் மற்றொரு மனிதனை லூக்கா15:25-30ல் சந்திக்கிறோம். தன்னுடைய சொந்த சகோதரனைக் குறித்து தன்தகப்பனிடம் சொல்கிறான்: "வேசிகளிடத்தில் உம்முடைய ஆஸ்தியை அழித்துப்போட்ட உம்முடைய குமாரன்" (லூக்கா 15:30). தன் சகோதரனுடைய உண்மையான மனந்திரும்புதலை ஏற்றுக்கொள்ள அவனால் முடியவில்லை. தன்னுடைய மனக்கசப்பு, எரிச்சல், பெருமை, பொறாமை, பேராசை அவனுக்கு பாவமாகத் தெரியவில்லை. தன்னுடைய சுயநீதியை நம்பியிருக்கும் எந்த மனிதனும் வீழ்ச்சியடைவான். கிறிஸ்தவ ஆவிக்குரிய வட்டாரங்களிலும் இன்று விபசாரம், கொலை, களவு ஆகியவைதான் பாவமாகக் கருதப்படுகிறது. அன்பற்ற தன்மை ஒரு பாவமாகக் கருதப்படுவதில்லை. "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக் 4:17) என்று சொல்லப்பட்டிருக்கிறதே.

தாவீது ஒரு ஆவிக்குரிய மனிதர்தான். தேவனிடமிருந்து சாமுவேல் மூலமாக விசேஷித்த அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டவன்தான் (1 சாமு 16:13). இருந்தாலும் தன்னுடைய விபசாரம், கொலை, மாய்மாலம் ஆகிய பாவங்களை தாவீது உணர்ந்துகொள்ளவில்லை. நாத்தான் தீர்க்கதரிசி வந்து, ஒரு தரித்திரன் செல்லமாய் வளர்த்த ஆட்டுக்குட்டியை ஐசுவரியவான் அபகரித்த நிகழ்ச்சியை அறிவித்தபோது "இந்தக்

காரியத்தைச் செய்த மனுஷன் மரணத்திற்குப் பாத்திரன்" (2 சாமு 12:5) என்று அடுத்தவனை எவ்வளவு வேகமாக நியாயந்தீர்க்கிறார். மேலும் "அந்த ஆட்டுக்குட்டிக்காக நாலத்தனை திரும்பச் செலுத்தவேண்டும்" (வசனம் 6) என்கிறார்.

மற்றவர்களை நியாயந்தீர்க்கும் நாம், அதே பாவங்களை செய்கிறவர்களாவும் இருப்பதினால், நம்மை நாமே நியாயந்தீர்க்கிறவர்களாக இருக்கிறோம் என்கிறார் பவுல். "நீயே அந்த மனுஷன்" (2 சாமு 12:7) என்று தாவீதிடம் நாத்தான் சொல்வதைக் கவனியுங்கள். தன் பாவங்களினால் தாவீது அனுபவித்த பாடுகளை ஆவியானவர் விளக்கமாக எழுதிவைத்திருக்கிறார். இந்த நியாயத்தீர்ப்பில் இருந்து நாம் தப்பிக்கவேண்டும் என்பதற்காகத்தான் இயேசு தன்னுடைய மலைப்பிரசங்கத்தில் சொல்கிறார்: "உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்" (மத் 7:4,5).

பாவத்தில் பிடிபட்ட ஸ்திரீயை கொலைசெய்ய விரும்பிய வேதபாரகர்களிடம் இயேசு சொல்கிறார்: "உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்" (யோவான் 8:7). **மற்றவர்களைக் குற்றப்படுத்தும் ஒவ்வொரு சமயமும் ஏதோ ஒருவகையில் நம்மையே குற்றப்படுத்துகிறோம் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.** ஒரு காரியத்துக்காக மற்றவர்களை நியாயந்தீர்க்கப் புறப்படும்போது, அந்த காரியத்தில் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்று நம்மை நாமே நிதானிக்க வேண்டும். "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரி 11:31) என்கிறார் பவுல்.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களுக்குத் தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 2:2)

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் என்று பவுல் யாரைக் குறிப்பிடுகிறார்? முந்தின வசனத்தின்படி தாங்களே குற்றமுள்ளவர்களாயிருந்து மற்றவர்களை குற்றவாளிகளாக நியாயந்தீர்க்கிறவர்களை. இன்று அவர்கள் மற்ற மனிதர்களை நியாயந்தீர்க்கலாம். ஆனால் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்து அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. எல்லா மனிதர்களும் பாவிகள் என்று நிரூபிக்க மட்டும் பவுல் முயற்சி செய்யவில்லை. அதனால்

உண்டாகும் நியாயத்தீர்ப்பின் நிச்சயத்தையும் உறுதிப்படுத்தி, அதிலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ளமுடியாது என்கிறார்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு ரோமர் நிருபத்தின் ஒரு கருப்பொருளாகும். தேவனுடைய நியாயத்தீர்ப்பு ஆறு காரியங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கும் என்பதை இந்த அதிகாரத்தின் முதற்பகுதியிலிருந்து கண்டுகொள்கிறோம். அவை:

1. சத்தியத்தின்படி இருக்கும் (வசனம் 2)
2. குவிக்கப்பட்ட கோபாக்கினையின்படி இருக்கும் (வசனம 5)
3. கிரியைகளுக்குத்தக்கதாக இருக்கும். (வசனம் 6)
4. பட்சபாதமில்லாமல் இருக்கும் (வசனம் 11)
5. கீழ்ப்படிதலின் அடிப்படையில் இருக்கும் (வசனம் 13)
6. மனிதர்களின் அந்தரங்கங்களைப் பொறுத்ததாக இருக்கும் (வசனம் 16)

தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படி இருக்கிறது என்று பவுல் சொல்லும்போது அதை மூன்று விதத்தில் புரிந்து கொள்ளலாம். *முதலாவதாக* அது சத்தியத்தின்படி இருக்கும் என்று நம்பிக்கையோடு சொல்லமுடியும். இவ்வுலக நியாயாதிபதிகளின் தீர்ப்பு அவ்வாறு இருக்கும் என்று நம்பமுடியாது. நேர்மையான நியாயாதிபதிகள் கூட வழக்கறிஞர்களின் வாதத்திறமையினாலோ, தவறான சாட்சிகளினாலோ சரியான முடிவுக்கு வரமுடியாமற்போகலாம். தேவனோ சகலத்தையும் அறிந்தவர். எனவே அவர் நிச்சயமாக சத்தியத்தின்படியே நியாயந்தீர்ப்பார். அவருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நாம் ஒருநாள் நிச்சயமாக நிறுத்தப்படுவோம் (பிர 12:14, ஏசாயா 66:16, 2 கொரி 5:10, எபி 9:27, 1 பேதுரு 4:17).

சத்தியத்தின்படி நியாயந்தீர்ப்பார் என்று சொல்லும்போது தேவன் புறஜாதியாரை ஒருவிதமாகவும், யூதர்களை ஒருவிதமாகவும் நியாயந்தீர்ப்பார் என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. சங்கீதம் 96:13 சொல்லுகிறபடி, "அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும் ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்". எனவே 'சத்தியம்' என்ற வார்த்தை நியாயப்பிரமாணத்தை மட்டும் குறிப்பிடுவதாகக்கொள்ளக்கூடாது. 12-வது வசனத்தை வாசித்துப் பாருங்கள்.

சத்தியத்தின்படி நியாயந்தீர்ப்பார் என்று சொல்லும்போது, வெளிப்படையான தோற்றத்தின்படி தேவனுடைய நியாயத்தீர்ப்பு இருக்காது என்றும் பொருள் கொள்ளலாம். "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமு 16:7). "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபி 4:13).

"சத்தியத்தின்படியே இருக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" என்று சொல்லி பவுல் தன் வாசகர்களுடன் ஒருமைப்பாட்டுக்குள் வருவதைக் கவனியுங்கள். ரோமர் 3:19; 7:14; 8:22, 28, 2 கொரி 5:1, 1 தீமோ 1:8 ஆகிய வசனங்களிலும் இவ்வாறு எழுதியிருப்பதைப் பார்க்கிறோம்.

ஒரு காரியத்தை நாம் சந்தேகத்துக்கிடமின்றி அறிந்துகொள்ள வேண்டும். நாம் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கிறோம் என்பது முக்கியமல்ல. மற்றவர்கள் நம்மை எவ்வாறு நியாயந்தீர்க்கிறார்கள் என்பதைப்பற்றியும் நாம் அதிகமாய் கவலைப்படவேண்டியதில்லை. பிறகு எதைப்பற்றி யோசிக்கவேண்டும்?

நம்முடைய நித்தியத்தை எங்கே, எவ்வாறு செலவிடப்போகிறோம் என்பதைக் குறித்தே. ஏனெனில் இவற்றை நிர்ணயம் செய்வது நம்மைக் குறித்த தேவனுடைய தீர்ப்பு மட்டுமே. இந்த தீர்ப்பிலிருந்து ஒரு மனிதனும் தப்பித்துக்கொள்ள முடியாது. இந்தத் தீர்ப்பை ஒருவனாலும் மாற்றி அமைக்கவும் முடியாது.

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்த்தும், அவைகளையே செய்கிறவனே, நீ தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்கொள்ளலாமென்று நினைக்கிறாயோ? (ரோமர் 2:3)

தாங்களே தவறு செய்கிறவர்களாய் இருந்தும் மற்றவர்களுடைய தவறுகளை பெரிதுபடுத்துபவர்களை "தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணுகிறவர்கள்" (லூக்கா 18:9) என்று இயேசு குறிப்பிடுகிறார். "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன" (மத் 7:3) என்கிறார். நம்முடைய தவறுகளை மற்றவர்களில் பார்க்கும்போது அதை நாம் வெறுக்கிறோம் என்பது ஒரு பழமொழி. அப்படி வெறுத்து, நம்மை நீதிமான்களாக காட்டிக்கொள்ள விரும்புகிறோம் என்பது கசப்பான உண்மை.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு சத்தியத்தின்படி இருப்பதினால் இப்படிப்பட்டவர்கள் தப்பித்துக்கொள்ளவே முடியாது. உலகத்து நியாயாதிபதிகளை ஒருவேளை நாம் ஏமாற்றிவிடக்கூடும். தேவனை ஏமாற்ற ஒருவராலும் முடியாது. மனிதர்களை நியாயந்தீர்ப்பது தேவனுடைய வேலை. **உலகில் பிறந்த அத்தனைபேரும் தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நின்றுதான் ஆகவேண்டும்.** மற்றவர்களை நாம் நியாயந்தீர்க்கும்போது அவருடைய சிங்காசனத்தில் இடம்பிடிக்கப் பார்க்கிறோம்.

அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடிய சாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? (ரோமர் 2:4)

இப்படிப்பட்ட மாய்மாலமான நன்றியில்லாத மனிதர்களிடமும் தேவன் தயவோடும், பொறுமையோடும் நீடிய சாந்தத்தோடும் இருக்கிறார். **தயவு, பொறுமை, நீடிய சாந்தம் என்பவை தேவகிருபையின் வெளிப்பாடாகும்.** எனவே பாவிகளும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நல்வழிக்கு திரும்பமாட்டார்களா என்று அவர் காத்திருக்கிறார். விலக்கப்பட்ட ஆகமங்களில் ஒன்றான ஞான ஆகமம் 11:24 இவ்வாறு சொல்கிறது : "அனைவருக்கும் நீர் இரக்கம் காட்டுகிறீர்; ஏனெனில் உம்மால் எல்லாம் செய்ய இயலும், மனிதர்கள் மனம் வருந்துவதற்கு வாய்ப்பளிக்கவே, அவர்கள் பாவங்களைப் பார்த்தும் பாராமல் இருக்கிறீர்."

தாவீது சொல்கிறார்: "ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்" (சங் 86:15). "அவர் நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார்" (யோவேல் 2:13). "அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார்" (மீகா 7:18). இன்னும் சங் 103:8, 145:8,9 ஏசாயா 1:18; 55:7, எசே 18:23,32,33, ஓசியா 11:8, யோனா 4:2, நாகூம் 1:3 வாசித்துப்பாருங்கள். அவர் "வெகுவாய் மன்னிக்கிறவர்" (நெகே 9:17).

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தை அசட்டை பண்ணி, புறக்கணிக்கிற மனிதர்களை பவுல் இந்த வசனத்தில் வெளிப்படையாக எச்சரிக்கிறார். ஏனென்றால் தன்னை மோசேயிடம் அறிமுகப்படுத்தும்போது தேவன் சொல்கிறார், "கர்த்தர், கர்த்தர்; இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகாதயையும், சத்தியமுமுள்ள தேவன். ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர்; அக்கிரமத்தையும்

மீறுதலையும் பாவத்தையும் மன்னிக்கிறவர்; குற்றவாளியைக் குற்றமற்றவனாக விடாமல், பிதாக்கள் செய்த அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்திலும், பிள்ளைகளுடைய பிள்ளைகளிடத்திலும் மூன்றாம் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவர்" (யாத் 34:6,7). எண்ணாகமம் 14:17 வாசித்துப்பாருங்கள்.

தேவதயவு என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒன்பது முறை பயன்படுத்தப்படுகிறது. ஒன்பது முறையும் பவுல்தான் உபயோகப் படுத்துகிறார். தேவதயவு ஒரு பாவியை குணப்படும்படி ஏவுகிறது என்று சொல்லும்போது,. மனந்திரும்பும்படி ஏவுகிறது என்று பொருள் கொள்ளவேண்டும். ஆனால் அவருடைய தயவு, பொறுமை, சாந்தம் ஆகியவற்றின் ஐசுவரியம் தங்களுடைய சுயநீதியில் நம்பிக்கையுடைய மனிதர்களால் அசட்டை பண்ணப்படுகிறது. அசட்டை பண்ணுவது என்பது ஒரு காரியத்தின் மகத்துவத்தை உணராமல் புறக்கணிப்பதாகும். ஐசுவரியம் என்ற வார்த்தை செழிப்பையும், நிறைவையும் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும். இந்த வார்த்தை ரோமர் 9:23; 11:12,33, எபே 1:7,18; 2:4; 3:8,16 கொலோ 1:27 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இவைகளில் அவர் ஐசுவரியம் உள்ளவராய் இருப்பதினால் அவரை அண்டிக்கொள்வோமானால் தேவதயவைப் பெறுவது உறுதி.

"துர்க்கிரியைக்குத்தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால், மனுபுத்திரரின் இருதயம் பொல்லாப்பைச் செய்ய அவர்களுக்குள்ளே துணிகரங்கொண்டிருக்கிறது" என்று பிரசங்கி 8:11ல் சொல்லுகிறார். உடனடியாக தண்டனை கொடுக்க அதிகாரமும் வல்லமையும் உரிமையும் அவருக்கு உண்டு. ஆனாலும் அவர் நம்மை "மண்ணென்று நினைவுகூருகிறார்" (சங் 103:14). "நல்ல கனிகொடாத மரமெல்லாம், வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்" (மத் 7:19) என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். ஆனாலும் மூன்று வருஷமாய் கனிகொடாத மரத்தையும் உடனடியாக வெட்டிப்போடாமல், அந்த அத்திமரத்தைச் சுற்றிலும் கொத்தி எருபோட்டு இன்னும் ஒரு வருஷம் காத்திருக்கிறார் (லூக்கா 13:7-9). இது தேவகிருபையின் செயலாற்றல். "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9), "உங்களுக்கு இரங்கும்படி கர்த்தர் காத்திருப்பார், உங்கள் மேல் மனதுருகும்படி எழுந்திருப்பார்" (ஏசாயா 30:18). எசேக்கியேல் 18:23,32, ரோமர் 11:22 வாசித்துப்பாருங்கள்.

உன் மனக்கடினத்திற்கும் குணப்படாத இருதயத்துக்கும் ஏற்றபடி, தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினைநாளிலே உனக்காகக் கோபாக்கினையைக்

குவித்துக்கொள்ளுகிறாயே. (ரோமர் 2:5)

தேவன், கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் இரட்சிப்பை மனிதனுக்கு இலவசமாக வழங்க ஆயத்தமாக இருக்கிறார். அதை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுவது எளிதான காரியம்தான். ஆனாலும் கோடாகோடி மக்கள் நரகத்தை நோக்கி நடைபோடுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. இரண்டு காரணங்களை பவுல் அறிவிக்கிறார்.

1. மனிதர்களின் மனக்கடினம் (வைராக்கியம்)
2. மனிதர்களின் குணப்படாத (மனந்திரும்பாத) இருதயம்

சங்கீதம் 10:13,14 சொல்கிறது: "துன்மார்க்கன் தேவனை அசட்டைபண்ணி: நீர் கேட்டு விசாரிப்பதில்லை என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்வானேன்? அதைப் பார்த்திருக்கிறீரே! உபத்திரவத்தையும் குரோதத்தையும் கவனித்திருக்கிறீரே; நீரே பதிலளிப்பீர்". மாய்மாலக்காரர்களுடைய நியாயத்தீர்ப்பை தாமதப்படுத்தும்படியாக வெளிப்படும் தேவ கிருபையின் ஐசுவரியத்தை அவர்கள் அசட்டை பண்ணுகிறார்கள் என்பதை அவர் கவனித்துக்கொண்டிருக்கிறார். எனவே அதற்குத் தகுந்த பதிலளிப்பார்.

அவர்களுடைய மனக்கடினத்தையும், மனந்திரும்புதலுக்கு ஏதுவாக இல்லாத இருதயத்தையும் தேவன் அருவருக்கிறார். மனக்கடினத்தைப் பற்றிய பல வசனங்கள் வேதத்தில் காணப்படுகின்றன. (மத் 25:24, 19:8, மாற்கு 3:5; 6:52; 8:17; 10:5, யோவான் 12:40, எபி 3:8,15; 4:7). நீதிமொழிகள் 28:14 சொல்லுகிறது, "தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்". எனவே தேவ கோபாக்கினை நிறைந்த நியாயத்தீர்ப்பை தேவன் அவர்களுக்கென்று நியமித்திருக்கிறார். அந்த கோபாக்கினை எப்படிப்பட்டதாக இருக்கும்? குவிக்கப்பட்டதாக இருக்கும். ஒன்றன்பின் ஒன்றாக கோபாக்கினையைப் பெறுவதைவிட இது மிகவும் கடினமானதாக இருக்கும். தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்துச் சொல்லப்படும் இரண்டாவது காரியம் இது. **தேவகிருபையைப் புறக்கணிக்கும் போது தேவனுடைய தண்டனை உடனடியாக வெளிப்படாமல் இருக்கலாம். ஆனால் தவறு செய்யும் ஒவ்வொரு வேளையும் தேவகோபாக்கினை குவிந்துகொண்டே இருக்கிறது.** இதிலிருந்து ஒருவனும் தப்பித்துக்கொள்ள முடியாது.

எபேசியர் 5:6 சொல்லுகிறது: "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கை

யாயிருங்கள்". தேவகோபாக்கினை வெளிப்படும் கர்த்தரின் நாளைக் குறித்து ஏசாயா 13:6; எசே 30:3; செப் 1:7,15; யோவேல் 2:2, ஆமோஸ் 5:18, அப் 2:20;1 தெச 5:2 வாசித்துப் பாருங்கள். தேவ கோபாக்கினையைக் குறித்துப் பேசும் வெளி 6:17; யோவான் 3:36, எபே 5:6 ஆகிய வசனங்களையும் வாசித்துப்பாருங்கள். தேவன் அன்பும், இரக்கமும், மனதுருக்கமும் நிறைந்தவர்தான். அதே நேரத்தில் அவர் "நீதியுள்ள நியாயாதிபதி; அவர் நாள்தோறும் பாவியின்மேல் சினங்கொள்ளுகிற தேவன்" (சங் 7:11). **பாவத்தின் துவக்கநிலையிலேயே தேவனுடைய குரலை அசட்டை பண்ணாமல், தேவனோடு காரியங்களை சரிசெய்து ஒப்புரவாகிவிடவேண்டும்.** அதுதான் நன்மைக்கேதுவானது.

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே! உங்களுடைய ஆவிக்குரிய நிலை என்ன என்பதை சற்று யோசித்துப் பாருங்கள். மனந்திரும்பி, பாவ அறிக்கையிட்டு, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்ட அனுபவம் உங்களுக்கு உண்டா? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? இந்தக் காரியங்களில் தீர்மானம் எடுப்பதைத் தாமதப்படுத்திக் கொண்டிருப்பீர்கள் என்றால் உங்களிலும் மனக்கடினம் உண்டாகியிருக்கிறது என்றுதான் பொருள். நீங்களும் குணப்படாத இருதயம் உள்ளவர்கள்தான். நீங்களும் தேவகோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறவர்கள்தான். தேவகோபாக்கினையின் நாள் உங்களுக்கென்று காத்திருக்கிறது.

தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். (ரோமர் 2:6)

மூன்றாவதாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும் என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். பவுலைப் பொறுத்தவரை இரட்சிப்பும், நித்திய ஜீவனும் கிருபையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒருவன் பெறும் நியாயத்தீர்ப்போ கிரியையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பிரசங்கியின் கடைசி வசனம் அறிவிக்கிறது: "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்".

கிரியை என்று சொல்லும்போது வெளிப்படையான கிரியையைக் குறித்துதான் பவுல் பேசுகிறார் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. கிரியையோடு சம்பந்தப்பட்ட நினைவுகள், பேச்சுகள், கிரியையின்

நோக்கங்கள், கொள்கைகள் அத்தனையையும் இது உள்ளடக்கியது. ஒருவன் தன் கிரியையின் அடிப்படையில்தான் இரட்சிக்கப்படுகிறான் என்று பவுல் சொல்வதாகவும் எடுத்துக்கொள்ளக்கூடாது - அதே நேரத்தில் மனிதர்களுடைய கிரியைகளைக் குறித்தும் தேவன் கவனமுள்ளவராக இருக்கிறார். "மனுஷனுடைய செய்கைக்குத் தக்கதை அவனுக்குச் சரிகட்டி அவனவன் நடக்கைக்குத் தக்கதாக அவனுக்குப் பலனளிக்கிறார்" (யோபு 34:11). சங்கீதம் 62:12 சொல்கிறது : "தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாக பலனளிக்கிறீர்".

எரேமியா சொல்கிறார்: "அவனவனுக்கு அவனவனுடைய வழிக்குத்தக்கதாகவும், அவனவனுடைய கிரியைகளின் பலனுக்குத்தக்கதாகவும் அளிக்கும்படி, உம்முடைய கண்கள் மனுபுத்திரருடைய எல்லாவழிகளின் மேலும் நோக்கமாயிருக்கின்றன" (32:19). எரே 17:10, நீதி 24:12, வெளி 20:12, 22:12 வாசித்துப்பாருங்கள். அவர்கள் பெற்றுக்கொள்ளும் பலன் மட்டுமே கிரியையை அடிப்படையாகக் கொண்டது. மற்றபடி அவர்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்போ, கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நம் சார்பில் மரித்ததினால் மட்டுமே உண்டாவதாய் இருக்கிறது.

யூதர்களோ, புறஜாதியாரோ, கிறிஸ்தவர்களோ, புறமதஸ்தரோ, ஊழியரோ, விசுவாசிகளோ, படித்தவர்களோ, படிக்காதவர்களோ, நாம் யாராயிருந்தாலும் சரி "நம்மில் ஒவ்வொருவனும், தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்" (ரோமர் 14:12) என்ற வசனத்தின்படியாக நியமிக்கப்பட்டிருக்கிறோம். அந்த வேளையில் நம்முடைய கிரியைகளே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். தேவன் யாருடைய சிபாரிசுக் கடிதங்களையும் ஏற்றுக்கொள்ளமாட்டார். யோவான் 5:28,29, 1 கொரி 3:12-15; 4:5, 2 கொரி 5:10, கலா 6:7-9, வெளி 2:23; 11:18, 20:12,13 வாசித்துப்பாருங்கள்.

மனிதனுடைய இரட்சிப்பு தேவகிருபையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. தீத்து 3:5 திட்டவட்டமாக அறிவிக்கிறது: "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்". இன்னும் சங் 115:1, ஏசாயா 48:11, எசே 36:22-31, தானி 9:19, அப் 15:11, ரோமர் 3:24; 5:15, எபே 1:4-7; 2:8-10 வாசித்துப்பாருங்கள். **ஆனாலும் இரட்சிப்பை நேசிக்கும் ஒரு மனிதன் தன்னுடைய கிரியைகளில் உண்மையுள்ளவனாக இருக்கவேண்டும்** என்ற சத்தியத்தை பவுல் அறிவிக்கத் தவறுவதில்லை. (எபே 2:8-10, பிலி 2:12,13, 2 தெச 2:13, 2 தீமோ 2:10). நாம் தேவனுடைய ராஜ்யத்துக்குச்

சொந்தமானவர்கள் என்பதை நம்முடைய நற்கிரியைகளே உறுதிப்படுத்துகின்றன. தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்துக்குக் கீழ்ப்படிகிறவனே நற்கிரியைகளை நடப்பிக்கிறவன் ஆகிறான். ஒருவன் தன்னுடைய சுயபெலத்தினால் நற்கிரியைகளைச் செய்யமுடியாது என்றாலும், தனக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புகளில் உண்மையாயிருக்க முயற்சிசெய்யவேண்டும். அடுத்த வசனம் இதை உறுதிப்படுத்துகிறது.

சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார். (ரோமர் 2:7)

ஒருவன் தான் நடப்பிக்கும் நற்கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை. இரட்சிக்கப்பட்டதின் விளைவாக நற்கிரியைகளைச் செய்கிறான். தேவனுடைய பிள்ளைகளாவதற்காக நாம் நற்கிரியைகள் செய்கிறதில்லை. தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறபடியால் நற்கிரியைகளைச் செய்கிறோம். பரலோகத்துக்கு போகவேண்டும் என்பதற்காக நாம் நற்கிரியைகளைச் செய்வதில்லை. பரலோகத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறபடியால் நற்கிரியைகளைச் செய்து கொண்டிருக்கின்றோம். எபேசியர் 2:10 சொல்கிறது : "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்".

தேவன் நமக்கென்று நியமித்த நற்கிரியைகளைச் செய்தால் மட்டும் போதாது. அதில் நாம் சோர்வடைந்துவிடக்கூடாது என்று பவுல் சொல்லுகிறார். இது எதைக் காட்டுகிறது? இங்கொன்றும் அங்கொன்றுமாக சில நற்கிரியைகளைச் செய்துவிட்டு அதில் திருப்தி அடைந்துவிடக்கூடாது. **நற்கிரியை செய்வதில் நாம் நிலைத்திருக்கவேண்டும்.** "முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" (மத் 10:22) என்று சொல்லப்பட்டிருக்கிறது. வெளி 2:10, எபி 10:38,39 வாசித்துப்பாருங்கள். நற்கிரியைகளை தொடர்ச்சியாகச் செய்து கொண்டிருக்கும் மனிதனே மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் தேடுகிறவனாகிறான். "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாக அறிந்திருக்கின்றேன்" (அப் 10:35) என்கிறார் பேதுரு.

'மகிமை' என்ற வார்த்தை பொதுவாக பவுலின் நிருபங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தில் விசுவாசிகளின் இறுதிக் குறிக்கோளாகவும், எதிர்பார்ப்பாகவும் குறிப்பிடப்படுகிறது (ரோமர் 5:2; 8:18,20,30; 9:23

1 கொரி 2:7; 15:43, 2 கொரி 4:6, கொலோ 3:4). 'கனம்' என்ற வார்த்தை மகிமையோடு சார்புடையதுதான் என்றாலும் (எபி 2:7, 1 பேதுரு 1:7, 2 பேதுரு 1:17, வெளி 4:9,11; 5:13), உலகத்தில் அவர்கள் கடந்துபோகும் பாடுகளின் மத்தியில் தேவனிடமிருந்து பெறும் அங்கீகாரத்தைக் குறிப்பிடுகிறது. 'அழியாமை' என்ற வார்த்தை, ஒரு விசுவாசி மரணத்துக்குப்பின் பெறும் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையைக் குறிப்பிடுகிறது (1 கொரி 15:42, 50-54).

மகிமை, கனம், அழியாமை இவற்றை வாஞ்சித்தால் மட்டும் போதாது, அவைகளைத் தேடவேண்டும். இழந்துபோன ஒரு நன்மையான காரியத்தை அடைந்தே தீரவேண்டும் என்று தீவிர முயற்சி எடுப்பதுதான் தேடுதல் (மத் 18:12, லூக்கா 2:48, 49, 1 கொரி 10:24). "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத் 6:33) என்று சொல்லப்பட்டிருக்கிறது. நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரியைப் போல் தேடவேண்டும் (மத் 13:45).

இவ்வாறு தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவன் வாக்களிக்கப்படுகிறது. நித்திய ஜீவனை அவர்கள் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்று சொல்லாமல், அது அவர்களுக்கு அளிக்கப்படும் என்று சொல்கிறார். "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3) என்கிறார் இயேசு. **நித்திய ஜீவனை அருளிச்செய்கிறவர் பிதாவாகிய தேவனாக இருந்தாலும், கிறிஸ்துவின் பாடுமரணத்தின் மூலமாகவே அதை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது.** நிக்கொதேமுவிடம் இயேசு சொல்லுகிறார்: "தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு," (யோவான் 3:15) ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் உயர்த்தப்படவேண்டும்.

சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிர கோபாக்கினை வரும். (ரோமர் 2:8)

தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையைப் பெறும் துன்மார்க்கரின் மூன்று குணாதிசயங்கள் இங்கே சொல்லப்படுகின்றன.

1. சண்டைக்காரர்
2. சத்தியத்துக்குக் கீழ்ப்படியாதவர்கள்
3. அநியாயத்துக்குக் கீழ்ப்படிகிறவர்கள்

இந்த மனிதர்கள் யாரோடு சண்டை போடுகிறார்கள் என்பது சொல்லப்படவில்லை. சுயநல நோக்கங்களினிமித்தம் மனிதர்கள் ஒருவரோடொருவர் சண்டையிடுகிறார்கள். துன்மார்க்கர்கள் தங்கள் சண்டையை மனிதர்களோடு நிறுத்திக் கொள்வதில்லை. தேவனோடும் சண்டைபோடுகிறார்கள். பாவம் செய்கிற இவர்கள் தேவனுக்கு தங்கள்மேல் அதிகாரம் இல்லை என்கிறார்கள். தேவனுடைய பிரமாணங்களுக்கு தாங்கள் கீழ்ப்படியவேண்டியதில்லை என்கிறார்கள். இஸ்ரவேலரைக் குறித்து அவர்கள் "கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணுகிறவர்கள்" என்று உபாகமம் 9:24 சொல்லுகிறது. தேவனுக்கு விரோதமாக அவர்கள் கலகம் செய்வதைக் குறித்து உபா 9:7;31:27, ஏசாயா 1:2; 30:9; 65:2, எரே 5:23, எசே 2:3,5 ஆகிய பல வசனங்களும் அறிவிக்கின்றன. "மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ" (ஏசாயா 45:9).

இரண்டாவதாக, உண்மையை கடைப்பிடிக்க மறுக்கிறவர்கள் சத்தியத்துக்குக் கீழ்ப்படியாதவர்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். "மனிதர்களைக் குறித்த தேவனுடைய சித்தமே சத்தியம்" என்கிறார் கால்வின். தேவனைக்குறித்த உபதேசங்களும், அவர் வேதத்தில் நமக்கு வழங்கியிருக்கும் ஆலோசனைகளும் சத்தியம். இவைகளுக்குக் கீழ்ப்படியாதிருப்பது யூதர்களின் பொழுதுபோக்காகக் காணப்படுகிறது. (யோசுவா 5:6, நியா 2:2; 6:10, 2 இராஜா 18:12, எரே 3:13,25; 42:21; 43:4,7)

மூன்றாவதாக, சத்தியத்துக்குக் கீழ்ப்படியாத ஒரு மனிதன் அதோடு நிறுத்திக் கொள்ளாமல் அநியாயத்துக்குக் கீழ்ப்படிய ஆரம்பிக்கிறான். ஒரு மனிதன் இந்த இரண்டில் ஏதேனும் ஒன்றுக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படிய உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16) என்கிறார் பவுல். அநியாயத்துக்குக் கீழ்ப்படிவது துன்மார்க்கரின் துணிகரத்தை வெளிப்படுத்துகிறது. சுயநலம், பெருமை, பேராசை, வெறுப்பு, கோபம், பொருளாசை ஆகியவை அவர்களை படிப்படியாக ஆட்கொள்ள ஆரம்பிக்கிறது. ஆனாலும் அதை அவர்கள் உணர்ந்துகொள்வதில்லை.

இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய உக்கிரக் கோபாக்கினையைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. "தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36) என்று சொல்லப்பட்டிருக்கிறது, இரக்கமும் கிருபையும் நிறைந்த தேவன் அதே சமயத்தில் பட்சிக்கிற அக்கினியாகவும் இருக்கிறார். "ஜீவனுள்ள

தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபி 10:31) என்று வாசிக்கிறோம்.

முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். (ரோமர் 2:9)

தேவனுடைய உக்கிரமான கோபாக்கினையை அவர்கள் தங்களுடைய மரணத்துக்குப் பின் அக்கினிக்கடலில் தள்ளப்படும்போதுதான் அனுபவிக்கப்போகிறார்கள் என்று தவறாக நினைத்துவிடக்கூடாது. இந்த உலகத்திலேயே அவர்கள் சந்திக்கவிருக்கும் நியாயத்தீர்ப்புகள் இரண்டு :

1. உபத்திரவம்
2. வியாகுலம்

உபத்திரவம் என்ற வார்த்தை தாங்கமுடியாத சுமையை தூக்குவதால் உண்டாகும் பாரத்தையும், வருத்தத்தையும், வேதனையையும், மன அழுத்தத்தையும் குறிப்பிடுகிறது. வியாகுலம் என்ற வார்த்தை சஞ்சலம், தோல்வி, போராட்டம், தண்டனை ஆகியவற்றால் நெருக்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. உபத்திரமும், வியாகுலமும் பொதுவாக இணைத்தே சொல்லப்படுகின்றன (ரோமர் 8:36).

இந்த வேதபகுதியில் மரியாதைக்குரிய பாவிகளின் அவல நிலையை பவுல் சுட்டிக்காட்டுகிறார் என்று பார்த்தோம். அவர்கள் யூதர்களாகவும் இருக்கலாம். கிரேக்கர்களாகவும் இருக்கலாம். யாராயிருந்தாலும் சரி, அவர்கள் ஆத்துமா உபத்திரவத்தையும் வியாகுலத்தையும் சந்திக்கவேண்டும், அவர்களுள் யூதர்கள்தான் முதலாவதாக இந்த நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள். இதை அறிவிக்கும்போது "முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும்" இது உண்டாயிருக்கும் என்று சொல்கிறார். ஏனென்றால் தேவன் தன்னுடைய விருப்பு வெறுப்புகளை யூதர்களுக்கே வெளிப்படுத்தியிருக்கிறார். "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்; ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" (ஆமோஸ் 3:2) என்று தேவன் சொல்லியிருக்கிறார். பேதுரு சொல்கிறார்: "நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவங்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" (1 பேதுரு 4:17), யூதர்கள் முதலாவதாகத் தண்டிக்கப்பட்டாலும் கிரேக்கர்களும் தண்டிக்கப்படுவது உறுதி.

முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் எவன் நன்மை செய்கிறானோ, அவனுக்கு மகிமையும் கனமும் சமாதானமும் உண்டாகும். (ரோமர் 2:10)

தேவன், யூதர் செய்யும் பாவத்தை எந்த அளவு வெறுக்கிறாரோ, அதே அளவுக்கு அந்த பாவத்தை புறஜாதியார் செய்யும்போதும் வெறுக்கிறார் என்பதையும் பார்த்தோம். யூதர்களோ, கிரேக்கர்களோ, யார் நன்மை செய்தாலும், மனிதர்களைப் பொறுத்தல்லாமல், அந்த நன்மையான காரியமே தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறுகிறது. அதன் விளைவாக மகிமையும் கனமும் சமாதானமும் அவர்களுக்கு உண்டாகிறது. ஏனென்றால் மனிதர்களுடைய நற்கிரியைகள் மூலம் பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார் (மத் 5:16, 1 பேதுரு 2:12), தான் மகிமைப்படுவதினிமித்தம் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

தேவனிடத்தில் பட்சபாதமில்லை. (ரோமர் 2:11)

தேவனுடைய நியாயத்தீர்ப்பு எவ்வாறு அமைந்திருக்கும் என்பதைக் குறித்து பவுல் சொல்லும் நான்காவது காரியம் இது. அதில் எந்த விதத்திலும் பட்சபாதம் இருக்காது. அனைத்து மக்களுக்கும் அவருடைய தீர்ப்பு ஒரே விதமாகத்தான் இருக்கும். 6-வது வசனத்தின் தொடர்ச்சியாக இது அமைகிறது.

மோசே சொல்லுகிறார்: "அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல" (உபா 10:17). "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை. பரிதானமும் அவரிடத்தில் செல்லாது" (2 நாளா 19:7). "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (அப் 10:34). "தேவன் மனுஷரிடத்தில் பட்சபாதமுள்ளவரல்லவே" (கலா 2:6). "அநியாயஞ் செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை" (கொலோ 3:25). "அவர் பிரபுக்களின் முகத்தைப் பாராமலும், ஏழையைப் பார்க்கிலும் ஐசுவரியவானை அதிகமாய் எண்ணாமலும் இருக்கிறவர்" (யோபு 34:19). "அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையை பெய்யப்பண்ணுகிறார்" (மத் 5:45). 1 பேதுரு 1:17 வாசித்துப் பாருங்கள்.

தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல என்பதினால்தான் தன்னுடைய இரட்சிப்பை படித்தவர்களுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். படிக்காதவர்களுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். பணக்காரர்களுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். ஏழைகளுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். யூதனுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

கிரேக்கனுக்கும் ஆயத்தம் பண்ணியிருக்கிறார். "என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" (யோவான் 6:37) என்கிறார். எனவே **இதை வாசிக்கும் நீங்கள் யாராயிருந்தாலும் சரி. எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி. எந்த நிலையில் இருந்தாலும் சரி. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வீர்களானால் உங்கள் இரட்சிப்பு நிச்சயம்.**

எவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணமில்லாமல் கெட்டுப்போவார்கள்; எவர்கள் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாய்ப் பாவஞ்செய்கிறார்களோ, அவர்கள் நியாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைத் தீர்ப்படைவார்கள். (ரோமர் 2:12)

தேவன் பாரபட்சம் இல்லாதவர், முகத்தாட்சிணியம் அவரிடம் இல்லை என்பதைப் பார்த்தோம். அவர் எதன் அடிப்படையில் ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்பது இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. தேவனுடைய பிரமாணங்களை அறிந்தவர்களாயிருந்தாலும் சரி, அவற்றைக் குறித்து கேள்விப்படாதவர்களாக இருந்தாலும் சரி, பாவம் செய்யும்போது இருதரத்தாருமே தேவசமுகத்தில் ஒத்த நிலை உடையவர்களாகிறார்கள். பிரமாணத்தைப் பற்றிய அறிவு இல்லாதவர்களும் தேவனால் கெட்டுப்போக ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களாயிருந்து பாவம் செய்கிறவர்களும், அந்த நியாயப்பிரமாணம் போதிக்கிறவண்ணமாக ஆக்கினைத்தீர்ப்பைப் பெறுவார்கள்.

"நியாயப்பிரமாணம்" (ஆங்கிலத்தில் Law, எபிரெய மொழியில் Torah, கிரேக்க மொழியில் nomos) சீனாய் மலையில் தேவன் இஸ்ரவேலருக்கு வழங்கிய 613 சட்டதிட்டங்கள் அடங்கிய புத்தகமாகும் (உபா 31:11,26). ரோமர் நிருபத்தில் இந்த வசனத்தில்தான் நியாயப்பிரமாணம் என்ற வார்த்தை முதலாவதாக பயன்படுத்தப்படுகிறது. இதிலும் அடுத்த மூன்று வசனங்களிலும் இதை பதினோரு தடவை பயன்படுத்துகிறார். "யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்கு தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை" (சங் 147:19,20). இந்தப் புறஜாதியார் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாண முள்ளவர்களாகிறார்கள் என்ற விளக்கத்தை 14,15 வசனங்களில் பவுல் தரவிருக்கிறார். அவர்களுக்கு பிரமாணம் கற்பலகைகளில் அல்ல, இருதயத்தில், அவர்களுடைய மனச்சாட்சியில் எழுதப்பட்டிருக்கிறது. எனவே நியாயப்பிரமாணம் இன்றிப் பாவம் செய்கிறவர்களைக் குறித்து, அவர்கள் கெட்டுப்போவார்கள் (Perish)

என்று மட்டும் சொல்லுகிறார்.

ஆனால் நியாயப்பிரமாணத்தை அறிந்த யூதர்களோ, அவர்கள் தேவனுடைய சித்தத்தைக் குறித்த நேரடியான வெளிப்பாட்டை உடையவர்களாக இருப்பதினால், அவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள் (judged) என்கிறார் பவுல். தேவனிடத்தில் பட்சபாதம் இல்லாவிட்டாலும், தன்னுடைய நியமங்களை எந்த அளவுக்கு மனிதர்கள் அறிந்திருக்கிறார்கள் என்பதில் கரிசனை உள்ளவராக இருக்கிறார். தேவனைக் குறித்த வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டவர்கள் என்ற முறையில், தாங்கள் பெற்றுக்கொண்ட கூடுதலான வெளிச்சத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவார்கள். தேவன் நீதியுள்ளவர் என்பதால், தான் ஒருவனுக்குக் கொடுக்காத வெளிச்சத்தின் அடிப்படையில் அவர் அவனை நியாயந்தீர்ப்பதில்லை.

நியாயப்பிரமாணத்தைக் கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 2:13)

தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனிதர்களுடைய கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும் என்ற ஐந்தாவது சத்தியம் இங்கே அறிவிக்கப்படுகிறது. அந்த நாட்களில் சபை கூடும்போதெல்லாம் சபையார் கேட்கும்படியாக நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது. அது என்ன சொல்கிறது என்பதை அவர்கள் அறிந்திருந்தபடியால் அதில் திருப்தி அடைந்தவர்களாய் காணப்பட்டார்கள். ஆனால் அது போதாது. இன்றும் நாம் வேதத்தை வாசித்தால் போதும் என்றுதான் பொதுவாக நினைத்துக்கொள்கிறோம். ஆனால் யாக்கோபு சொல்கிறார்: "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (1:22). வேதத்தை வாசிப்பதின் விளைவாக நம்முடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாக வேண்டும். வசனத்தின் அடிப்படையில் நம் வாழ்க்கை கட்டப்படவேண்டும். மத்தேயு 7:24ல் கிறிஸ்து சொல்கிறார்: "நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன்". புத்தியுள்ள விசுவாசிகள் வசனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறார்கள். அதற்குக் கீழ்ப்படிகிறார்கள்.

வேத வசனத்தைக் கேட்பவர்களும், அதை வாசிப்பவர்களும் தேவனால் நீதிமானாக்கப்படுவதில்லை. வசனங்களின்படி

செய்கிறவர்கள், அதாவது வசனத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களே தேவனுடைய பார்வையில் நீதிமான்கள். கிறிஸ்து தன் சீஷர்களிடம் சொல்கிறார்: "நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (யோவான் 13:17). தேவன் சொல்கிறார்: "என்னுடைய நியாயங்களின்படி செய்து, என்னுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். ஆகையால் என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர்" (லேவி 18:4,5). யாக்கோபு சொல்கிறார் : "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (1:22)

நியாயப்பிரமாணம் அறிவிக்கும் 613 பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து அதினிமித்தம் ஒரு மனிதன் தன்னை நீதிமானாக்கிக் கொள்ளமுடியுமா என்ற கேள்வி எழும்புகிறது. ஒரு மனிதனாலும் அதைச் செய்யமுடியாது. யாக்கோபு சொல்கிறார் : "ஒருவர் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (2:10). இந்த வசனத்தை ஆதாரமாகக் கொண்டு பவுல் சொல்கிறார்: "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே" (கலா 3:10). எனவே பவுல் வலியுறுத்த விரும்பும் காரியம் யாதெனில், திருச்சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து, தன் முயற்சியின் அடிப்படையில் ஒருவனும் நீதிமானாவதில்லை. எனவே கிறிஸ்துவின் மூலம் கிருபை வெளிப்படவேண்டியதிருக்கிறது.

அன்றியும், நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். (ரோமர் 2:14)

யூதரல்லாத புறஜாதியாருக்கு நியாயப்பிரமாணம் வழங்கப்படவில்லை. அதை அவர்கள் அறிந்திருக்கவும் இல்லை. அதை அவர்கள் கேட்கவும் இல்லை. ஆனாலும் சுபாவமாய் அவர்கள் தங்கள் மனச்சாட்சியின் அடிப்படையில் எது சரி, எது தவறு என்பதை அறிந்திருக்கிறார்கள். பல வேளைகளில் அவர்களுடைய கிரியைகள்

நீதியுள்ளதாயும், நேர்மை நிறைந்ததாயும் இருக்கிறது. பாவத்தைக் குறித்து உணர்வுள்ளவர்களாய் இருக்கிறார்கள். தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தைக் குறித்த அறிவு இல்லாமலிருந்தும், அவர்கள் தங்கள் நடக்கைகளில் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுக்கு கற்களில் எழுதப்பட்ட பிரமாணங்கள் வழங்கப்படாமல் இருக்கலாம். ஆனால் தங்களுடைய மனச்சாட்சியின் அடிப்படையில் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாய் இருக்கிறார்கள் என்கிறார் பவுல்.

அதற்காக ஒரு புறஜாதி மனிதன் தேவனுடைய கற்பனைகளுக்கெல்லாம் கீழ்ப்படிந்து நடக்கமுடியும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆனாலும் அவர்களுடைய குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை ஏதோ ஒரு விதத்தில் தேவனுக்கு ஏற்புடையதாக இருக்கக்கூடும். இதை தேவன் அங்கீகரிக்கிறார். இதற்கான பிரதிபலனை அவர்கள் இந்த பூமியில் நிச்சயமாகப் பெறுவார்கள்.

அவர்களுடைய மனச்சாட்சியும் கூடச் சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். (ரோமர் 2:15)

ஒரு மனிதன் மெய்தேவனை அறியாதவனாக இருந்தாலும், நியாயப்பிரமாணத்தைப் பற்றி கேள்விப்பட்டிராதவனாக இருந்தாலும் அவனுக்குள் இருக்கும் மனச்சாட்சி அவனுடைய ஒவ்வொரு செயல்பாடுகளைக் குறித்தும் இது சரி, இது தவறு என்று உணர்த்திக்கொண்டே இருக்கிறது. அவனுடைய சிந்தனையே எது குற்றமுள்ளது, எது சரியானது என்று அறிவிப்பதினால், நியாயப்பிரமாணத்துக்கேற்ற செயல்கள் அவர்களுடைய உள்ளான இருதயத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்கிறார் பவுல்.

யோசேப்பின் வாழ்க்கையை எடுத்துக்கொண்டோமானால், அவர் "விபசாரம் செய்யாதிருப்பாயாக" (யாத் 20:14) என்ற பிரமாணம் வழங்கப்படுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு தேவமனிதன். ஆனாலும் அந்த பிரமாணத்துக்கேற்ற கிரியை அவருடைய இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது. தன் எஜமானனின் மனைவியின் இச்சைக்கு இணங்காமல் "இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய் பாவம்

செய்வது எப்படி?" (ஆதி 39:9) என்று விலகி ஓடிப்போகிறார்.

புறஜாதியாரின் இருதயத்தில் நியாயப்பிரமாணம் எழுதப்பட்டிருப்பதாகச் சொல்லாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியை மட்டுமே எழுதப்பட்டிருப்பதாக பவுல் சொல்கிறார். நியாயப்பிரமாணம் எதைச் செய்யும்படியாகச்சொல்கிறதோ, அதுவே நியாயப்பிரமாணத்தின் கிரியை. புறஜாதியார் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளுக்கு மட்டுமே கீழ்ப்படிகிறவர்களாக இருக்கிறார்கள். இந்த கீழ்ப்படிதல் அவர்களுடைய உள்ளார்ந்த உள்ளுணர்வை (instinct) மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. தேவபக்தியையோ, ஒழுக்கமுறைமைகளையோ, நன்னடத்தையையோ, நீதியையோ, பரிசுத்தத்தையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல. தேவ நீதியைக் குறித்த பக்தி உணர்வும், மரியாதையும் இவர்களில் காணப்படுவதில்லை என்பதினால், அவர்களுடைய நீதியான கிரியைகள் தேவனை முழுமையாக மகிமைப்படுத்துவதாய் இருக்காது.

நியாயப்பிரமாணத்துக்கேற்ற கிரியைகள் இருதயத்தில் எழுதப்பட்டதின் விளைவாகவே புறஜாதியார் மனச்சாட்சியை உடையவர்களாகிறார்கள். இதன் விளைவாக அவர்களுடைய சிந்தனை, அவர்களுடைய கிரியை தவறானது அல்லது சரியானது என்று தீர்ப்பளிக்கிறது. சொல்லப்போனால் அவர்களுக்குள் ஒரு நீதிமன்றமே செயல்படுவதுபோல் இருக்கிறது. அதன் விளைவாக அவர்கள் தங்களுடைய சில செயல்பாடுகளை அங்கீகரிக்கிறார்கள். சிலவற்றைக் குறித்தோ வெறுப்படைகிறார்கள்.

மனசாட்சி, சிந்தனைகள், கிரியை என்று மூன்று முக்கியமான வார்த்தைகளை பவுல் இந்த வசனத்தில் பயன்படுத்தி, அவற்றின் மூலம் எல்லா மனிதர்களும் நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறார்கள் என்று நிரூபிக்கிறார்.

மனச்சாட்சி : மனிதர்களுடைய கிரியைகள் சரியானது அல்லது தவறானது என்று சாட்சி கொடுக்கிறது.

சிந்தனைகள் : மனச்சாட்சியில் இருந்து வெளிப்படும் சிந்தனைகளின் விளைவாக மனிதர்கள் தங்களுடைய செயல்பாடுகளை ஆராய்ந்து அறிகிறார்கள்.

கிரியை : வெளிப்படையான கிரியைகளை அல்ல,

இருதயத்தில் எழுதப்பட்ட கிரியைகளைக் குறித்து பவுல் இந்த வசனத்தில் பேசுகிறார்.

இவைகளைக் கொண்டு ஒருவன், தேவனால் யூதர்களுக்கு சீனாய் மலையில் வழங்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் திருச்சட்டங்களை அறியாதவனாக இருந்தாலும், பொய், களவு, விபசாரம், கொலை முதலான காரியங்கள் பாவம் என்பதை அறிந்திருக்கிறான்.

என் சுவிசேஷத்தின்படியே, தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக்குறித்து நியாயத் தீர்ப்புக்கொடுக்கும் நாளிலே இது விளங்கும். (ரோமர் 2:16)

தேவனுடைய நியாயத்தீர்ப்பு மனிதர்களுடைய அந்தரங்கங்களைக் குறித்ததாக இருக்கும் என்ற ஆறாவது சத்தியம் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. அந்தரங்கம் என்றால் மறைவான எண்ணங்கள் என்று பொருள் கொள்ளலாம். நியாயத்தீர்ப்பு நாளிலே இரகசியமாக வைக்கப்பட்ட காரியங்கள் வெளிப்படுத்தப்படும். "வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை" (மத் 10:26, லூக்கா 8:17, 12:2). "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" (1 கொரி 4:5). "அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும் நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" (பிர 12:14). "இருதயத்தின் அந்தரங்கங்களை அவர் அறிந்திருக்கிறாரே" (சங் 44:21) என்று வாசிக்கிறோம்.

உலகத்தில் உள்ள நியாயாதிபதிகள் இதைச் செய்யமுடியாது. அவர்கள் ஒரு மனிதனுடைய வெளிப்படையான கிரியைகளின் அடிப்படையில் மட்டுமே செயல்படமுடியும். தேவனோ இருதயத்து நினைவுகளின் தோற்றங்களையும் அறிவார் (ஆதி 6:5). நாவில் சொல் பிறவாததற்கு முன்னே அதை அறிவார் (சங் 139:4). "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (எபி 4:13). தானியேல் 2:29, 47 வாசித்துப் பாருங்கள்.

'நியாயத்தீர்ப்பு நாள்' என்று ஒருநாள் நிச்சயமாகவே உண்டு.

அந்த நாளைக்குறித்து தேவன் நித்தியத்திலேயே தீர்மானம் பண்ணிவிட்டார் (உபா 32:36, சங் 50:4, 1 சாமு 2:10). தேவன், தான் நேரடியாக ஜனங்களை நியாயந்தீர்க்காமல் தன்னுடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலமாகச் செய்வார் என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. அப் 17:31 சொல்லுகிறது. "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்", "பிதாவைக் கனம் பண்ணுகிறது போல எல்லாரும் குமாரனையும் கனம் பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம் முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:22). 2 தீமோ 4:1,8, 1 பேதுரு 4:5, யோவான் 5:22,27, மத் 25:31-46 பிலிப் 2:6-11 வாசித்துப்பாருங்கள்.

தன்னுடைய சுவிசேஷத்தின்படி இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்று சொல்லும்போது, தான் பிரசங்கித்து வரும் சுவிசேஷ சத்தியங்களின் அடிப்படையில் இந்த நியாயத்தீர்ப்பு நடைபெறும் என்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும். **அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபமே பவுல் அறிவிக்கும் சுவிசேஷம்.** அதற்கென்றே தான் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டிருப்பதை நிருபத்தின் முதலாம் வசனத்தில் பவுல் குறிப்பிட்டிருந்ததைப் பார்த்தோம். இந்த சுவிசேஷம் பவுலின் இரத்தத்தோடு இரத்தமாகக் கலந்துவிட்டதினால் அதை என் சுவிசேஷம் என்று உரிமையோடு அழைக்கிறார்.

நான்கு முக்கியமான சத்தியங்களை இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கிறார்.

1. மனிதர்களுடைய மனதுக்குள் இருக்கும் மறைபொருட்களும் நியாயந்தீர்க்கப்படும்.
2. இவ்வாறு நியாயந்தீர்ப்பது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து
3. அது ஒரு குறிப்பிட்ட நாளில் நிச்சயமாக நடக்கும்.
4. அந்த நியாயத்தீர்ப்பு பவுல் அறிவிக்கும் சுவிசேஷத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கும்.

பிரமாணத்தை அறிந்தவர்களின் அவல நிலை (வசனம் 2:17 - 3:8)

நீ யூதனென்று பெயர்பெற்று, நியாயப்பிரமாணத்தின் மேல் பற்றுதலாயிருந்து, தேவனைக்குறித்து மேன்மை பாராட்டி (ரோமர் 2:17)

மனித இனத்தை புறஜாதியார், சுய நீதியில் நம்பிக்கை உடையவர், யூதர்கள் என்று மூன்று வகையாகப் பிரித்து, இந்த அனைத்து மனிதர்களுமே பாவிகள்தான் என்று பவுல் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். மூன்றாம் பிரிவினரான தன்னுடைய இனத்தாராகிய யூதர்களைக் குறித்து இந்த வசனம் துவங்கி 3:8 வரை பவுல் பேசுவதை தியானிப்போம். நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்கள் என்பதுதான் இவர்களுடைய முக்கியமான தகுதி.

இந்த வேத பகுதியின் முதல் நான்கு வசனங்களில் யூதர்கள் யார் என்றும், அவர்கள் தங்களைக் குறித்து வைத்திருக்கும் மேன்மையான கருத்து என்னவென்றும் பவுல் அறிவித்துவிட்டு, அதன்பின் அவர்களின் குறை என்ன என்பதைத் தெரிவிக்கிறார்.

1. யூதர் என்ற கௌரவமான நாமத்தை உடையவர்கள் (வசனம் 17)
2. நியாயப்பிரமாணத்தின்மேல் பற்றுதலாயிருந்த வர்கள் (வசனம் 17)
3. தேவனைக் குறித்து மேன்மை பாராட்டுகிறவர்கள் (வசனம் 17)
4. நியாயப்பிரமாணத்தினால் போதிக்கப்பட்டவர்கள் (வசனம் 18)
5. தேவனுடைய சித்தத்தை அறிந்தவர்கள் (வசனம் 18)
6. நன்மை தீமை எதுவென்று வகையறுக்கிறவர்கள் (வசனம் 19)
7. குருடருக்கு வழிகாட்டியானவர்கள் (வசனம் 19)
8. அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமானவர்கள் (வசனம் 19)
9. பேதைகளுக்குப் போதகர்கள் (வசனம் 20)

10. குழந்தைகளுக்கு உபாத்தியாயர் (வசனம் 20)

11. நியாயப்பிரமாணச் சட்டத்தை உடையவர்கள் (வசனம் 20)

யூதர்கள் தங்களுடைய பெயரைக் குறித்து மிகுந்த பெருமை உடையவர்கள் (கலா 2:15, வெளி 2:9). லேயாள் தன்னுடைய நான்காவது குமாரனைப் பெற்றபோது "இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன் என்று சொல்லி, அவனுக்கு யூதா (எபிரெய பதம் Yhuda) என்று பேரிட்டாள்" (ஆதி 29:35) என்று வாசிக்கிறோம். யூதா என்ற வார்த்தை துதி என்று பொருள்படும். ஒரு யூதனுடைய வாழ்க்கை தேவனுக்கு புகழ்ச்சியையும், துதியையும் கொண்டுவருவதாய் இருக்கவேண்டும். "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசாயா 43:21) என்று வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் பிறந்தவர் என்பதை அறிவோம் (ஆதி 49:8-10).

"யூதர்" என்ற வார்த்தை வேதத்தில் முதலாவதாக 2 இராஜாக்கள் 16:6ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குமுன் அவர் ஆபிரகாமின் (ஆபிராம்) சந்ததியார் என்ற முறையில் எபிரெயர் என்றும் (ஆதி 14:13), யாக்கோபின் சந்ததியார் என்ற முறையில் இஸ்ரவேலர் என்றும் (ஆதி 32:28,32) அழைக்கப்பட்டார்கள். ராஜாவாகிய சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாமின் காலத்தில் பன்னிரண்டு கோத்திரத்தார் பிரிந்தபோது, யூதா வம்சத்தாரும், பென்யமீன் வம்சத்தாரும் யூதர்கள் என்றும், மீதமுள்ள பத்து கோத்திரத்தாரும் இஸ்ரவேலர் என்றும் அழைக்கப்பட்டார்கள் (2 நாளா 10).

யூதர்களைப்பற்றி இரண்டாவது பாராட்டுதலாகச் சொல்லப்படும் காரியம் அவர்கள் நியாயப்பிரமாணத்தின்மேல் கொண்டிருந்த பற்றுதல். இது அவர்கள் பிரமாணத்தின்மேல் கொண்டிருந்த அளவற்ற நம்பிக்கையைக் காட்டுகிறது. நியாயப்பிரமாணத்தைக் குறித்து, மோசே பெருமையோடு சொல்கிறார்: "அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்கு முன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள்" (உபா 4:6).

யூதர்கள் தேவனைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள் என்பது அவர்களைக் குறித்த மூன்றாவது காரியம்: "ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான்

தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மை பாராட்ட வேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 9:23, 24). இந்த உலகத்து புறஜாதியார் தேவனற்றவர்களாய் இருந்தபோதே (எபே 2:12), "நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (லேவி 26:12) என்று அவர் வாக்குக் கொடுத்திருப்பது எவ்வளவு பெரிய மேன்மை. உபா 4:7, சங் 147:19,20, 18:2 வாசித்துப்பாருங்கள். தேவனைக் குறித்து மேன்மை பாராட்டுவது நல்லதுதான். ஆனால் அதே அளவுக்கு நாம் அவருக்கு நன்றியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்.

நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப்பட்டவனாய், அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கிறாயே. (ரோமர் 2:18)

பரிசுத்தமான நியாயப்பிரமாணத்தினால் உபதேசிக்கப் பட்டிருப்பது யூதர்கள் பெற்றுக்கொண்ட நான்காவது சிலாக்கியம், சபை கூடும்போதெல்லாம் நியாயப்பிரமாண புஸ்தகம் வாசிக்கப்பட்டது. அர்த்தம் சொல்லப்பட்டது, விளக்கம் கொடுக்கப்பட்டது. (நெகே 8:8) அவற்றைப் போதிப்பது ஆசாரியரின் நித்திய கட்டளையாயிருந்தது (லேவி 10:11). ஏசாயா 2:2,3 வாசித்துப் பாருங்கள்.

நியாயப்பிரமாணத்தின் போதனைகளைப் பெற்றுக்கொள்ளும் மனிதன் தேவனுடைய சித்தத்தை அறிகிறான். பிரமாணங்கள் தேவனுடைய சித்தத்தையே அறிவிக்கின்றன என்பதைப் பார்த்தோம். எனவே தேவசித்தத்தை அறிந்து கொள்வது யூதர்கள் பெற்றுக்கொண்ட ஐந்தாவது மேன்மை. "யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்கு தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை" (சங் 147:19,20).

யூதர்கள் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டபடியால் எது நன்மையானது, எது தீமையானது என்பதை அவர்களால் அறிந்துகொள்ள முடிந்தது. எது நன்மை, எது தீமை என்பதைக் குறித்து அவர்கள் எந்த ஆராய்ச்சியும் செய்யத்தேவையில்லை. யாரிடமும் போய்க்கேட்கவும் அவசியமில்லை. இது அவர்கள் பெற்றிருந்த ஆறாவது மேன்மை. இதினிமித்தம் யூதர்கள்

நியாயப்பிரமாணத்தை தங்களுக்கு அளித்த தேவன்மேல் மட்டும் நம்பிக்கை வைக்காமல், நியாயப்பிரமாண கட்டளைகளை நடப்பிக்கும் தங்கள்மீதே நம்பிக்கை வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்; இதுவே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாக அமைகிறது.

நீ உன்னைக் குருடருக்கு வழிகாட்டியாகவும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும் (ரோமர் 2:19)

யூதர்களின் ஏழாவது, எட்டாவது மேன்மையை இந்த வசனம் அறிவிக்கிறது. இரண்டும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. மத்தேயு 23:24ல் பரிசேயரை "குருடரான வழிகாட்டிகள்" என்று குறிப்பிடுகிறார். அதே அதிகாரத்தில் 17,26ல் அவர்களை அவர் குருடர் என்று அழைக்கிறார்.

மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதிக்கும் பரிசேயர்களைக் குறித்து இயேசு சொல்லுகிறார்: "அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" (மத் 15:14). சரீரரீதியான குருட்டுத்தன்மை வேதத்தில் லேவி 21:18, 22:22, உபா 15:21; 28:28,29, 2 சாமு 5:6, செப் 1:17 ஆகிய வசனங்களில் சொல்லப்படுகிறது. பல குருடர்களை இயேசு சுகப்படுத்தியிருக்கிறார். (மத் 9:27-30; 11:5; 12:22; 20:30-34, மாற்கு 8:22-26; 10:46-52, லூக்கா 7:21, யோவான் 11:37). ஆனால் நாம் தியானிக்கும் இந்த வசனத்தில் ஆவிக்குரிய குருட்டுத்தன்மையைக் குறித்துப் பவுல் பேசுகிறார்.

என்ன செய்கிறோம், எங்கே போகிறோம் என்பதே தெரியாமல், அறியாமையில் இருக்கும் மனிதர்கள் ஏராளமானோர் இருக்கிறார்கள். யூதர்கள் தங்களை அவர்களுக்கு வழிகாட்டியாக நினைத்துக் கொள்கிறார்கள். அதுபோலவே அறியாமை என்ற அந்தகாரக் கட்டுகளுக்குள் இருப்பவர்களுக்கு தாங்கள் வெளிச்சமாயிருப்பதாக நினைத்துக்கொள்கிறார்கள். இதுபோன்ற காரியங்களைச் செய்கிறவர்கள் அதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால் "குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" (உபா 27:18) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "குருடரான வழிகாட்டிகளே! உங்களுக்கு ஐயோ" (மத் 23:16) என்கிறார் இயேசு.

பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும், நியாயப்பிரமாணத்தின் அறிவையும்

சத்தியத்தையும் காட்டிய சட்டமுடையவனாகவும் எண்ணுகிறாயே. (ரோமர் 2:20)

யூதர்களைக் குறித்த கடைசி மூன்று காரியங்கள் (9,10,11) இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகின்றன. பேதைகள் என்ற வார்த்தை தங்களுடைய அறிவைப் பயன்படுத்தாத மனிதர்களைக் குறிப்பிடுகிறது. குழந்தைகள் என்ற வார்த்தை அறியாமையில் நிலைத்திருப்பவர்களைக் குறிப்பிடுகிறது. தலைக்கனம் நிறைந்த யூதர்கள் பொதுவாக புறஜாதியாரைத்தான் பேதைகளாகவும் குழந்தைகளாகவும் நினைப்பது வழக்கம். புறஜாதியாருக்குக் கொடுக்கப்படாத நியாயப்பிரமாணத்தின் அறிவும் சத்தியமும் தங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதே யூதர்களுடைய பெருமைக்குக் காரணம். அதிலிருந்த ஆபத்தை அவர்கள் கண்டுபிடிக்கவில்லை. யாக்கோபு 4:17 வாசித்துப் பாருங்கள்.

ரோமர் 2:17 துவங்கி யூதர்களைக் குறித்து பவுல் பேசும் காரியங்கள் இன்று கிறிஸ்தவர்களாகிய நமக்கும் பொருத்தமுடையதாக இருக்கிறது.

பவுலின் நாட்களில் யூதர்கள்	இன்றைய கிறிஸ்தவர்கள்
யூதர் என்ற பெயர் அவர்களுக்கு உண்டு (வசனம் 17)	கிறிஸ்தவர்கள் (கிறிஸ்து + அவர்கள்) என்ற பெயர் நமக்கு உண்டு
யூதர்கள் பிரமாணத்தை நேசித்து தேவனைக் குறித்து மேன்மை பாராட்டினார்கள் (வசனம் 17)	நாம் நம்முடைய சபை, மற்றும் நாம் நேசிக்கும் ஊழியக் காரர்களைக் குறித்து பெருமைப் படுகிறோம்
யூதர்கள் எது சரி, எது தவறு என்பதை அறிந்திருந்தார்கள் (வசனம் 18)	நாமும் வேதத்தின் சத்தியங்களை அறிந்து தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிவோம்
யூதர்கள் தங்களை மற்றவர் களுக்கு வழிகாட்டிகளாகவும், இருளில் இருப்போருக்கு வெளிச்சமாகவும் கருதினார்கள் (வசனம் 19)	நாமும் மற்றவர்களுக்கு ஆலோசனை வழங்கவும், அதை ஏற்றுக்கொள்ளாதவர்களைக் குற்றப்படுத்தவும் தவறுவதில்லை.

பவுலின் நாட்களில் யூதர்கள்	இன்றைய கிறிஸ்தவர்கள்
யூதர்கள் பேதைகளுக்குப் போதிக்கிறார்கள். பலருக்கு போதகர்களாக இருக்க விரும்புகிறார்கள் (வசனம் 20)	நாமும் கொஞ்ச வேதஅறிவைப் பெற்றவுடனே நம்மைப் போதகர்களாகவும் ஊழியர்களாகவும் மாற்றிக்கொள்கிறோம்.
யூதர்கள் கையில் நியாயப் பிரமாணம் இருந்தபடியால் தங்களை சகல சத்தியத்தையும் அறிந்தவர்களாக கருதினார்கள் (வசனம் 20)	நாமும் நம்மிடம் வேதபுத்தகம் இருப்பதினால் சகலத்தையும் அறிந்தவர்களாக நினைக்கிறோம்.

மேலான சிலாக்கியங்களைப் பெற்ற யூதர்கள் எவ்வாறு தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட காரணமாயிருந்தார்கள் என்பதை அடுத்துவரும் மூன்று வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். நம்முடைய நிலை என்ன என்பதை யோசித்துப் பார்ப்போம். "அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்" (2 பேதுரு 2:2,3). இதை நான் சொல்லவில்லை, வேதம் சொல்கிறது.

இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத் தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா? (ரோமர் 2:21)

மற்றவர்களுக்கு போதிக்க விரும்புகிற ஒரு மனிதன் முதலாவது தான் போதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்கிறார் பவுல். மற்றவர்களுக்கு சத்தியங்களைக் கற்றுக்கொடுப்பது நல்ல காரியம்தான். மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கப் புறப்படுவதற்கு முன் ஏன் தனக்குக் கற்றுக்கொள்ளக் கூடாது என்று வினவுகிறார். மற்றவர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் நீ, அதே குறைகள் உன்னில் இருப்பதை ஏன் கண்டுகொள்ளாமல் இருக்கிறாய் என்கிறார்.

ஒரு பிரசங்கியார் தான் போதிக்கும் நல்லொழுக்கப் போதனைகளை முதலில் தன்னுடைய வாழ்க்கையில் கடைப்பிடிக்கவேண்டும். அந்த நாட்களிலிருந்த யூதர்கள் இப்படிச்

செய்யவில்லை என்பதினால்தான் இயேசு, "நீங்கள் கைக்கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில், அவர்கள் சொல்லுகிறார்கள்; சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" (மத் 23:3). ஊழியக்காரர்களாகிய நம்மைப்பற்றி இயேசு என்ன சொல்வார் என்பதை யோசித்துப் பாருங்கள்.

யூதர்கள் தங்களைக் குறித்து நம்பிக்கை கொண்டிருந்த பல காரியங்களை இதுவரை அறிவித்த பவுல் இந்த வசனம் துவங்கி 24வது வசனம் வரை அவர்களின் குறைபாடுகள் என்னனென்ன என்பதைச் சொல்ல ஆரம்பிக்கிறார். பத்துக்கற்பனையில் தேவன் திட்டவட்டமாக தடைசெய்த களவு, விபசாரம், விக்கிரகாராதனை ஆகிய மூன்று பாவங்களும் இன்னும் பல குறைபாடுகளும் அவர்களிடம் காணப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

முதலாவது யூதர்களிடம் காணப்படும் களவு என்ற பாவம் அறிவிக்கப்படுகிறது. "என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்" (மத் 21:13) என்ற இயேசுவின் வார்த்தையை இங்கே நினைவுகூறுகிறோம். "களவு செய்யாதிருப்பாயாக" (யாத் 20:15) என்பது எட்டாவது கற்பனையாகும். மேலும் இந்த பாவத்தைக் குறித்து உபா 23 :24, எபே 4:28, தீத்து 2:10, 1 பேதுரு 4:15 ஆகிய வசனங்களும் பேசுகின்றன. ஆனாலும் பிறருடைய பொருட்களை இச்சிக்கும் பழக்கம் இயல்பாகவே யூதர்களிடம் காணப்பட்டது. இச்சிப்பதும் திருடுவதற்கு ஒப்பான பாவமாகவே கருதப்படவேண்டும்.

யூத சரித்திர ஆசிரியர் ஜோசபஸ் கி.பி.19ல் நடந்த ஒரு நிகழ்ச்சியை தன்னுடைய சரித்திர புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார் (Josephus - Antiquitos 18/81). ஒரு யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ ஊழியக்காரர் ரோமாபுரியில் ஆத்தும ஆதாயம் செய்யும்படியாக வந்தார். இவர் ஒரு பணக்கார, ராஜ குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணை ஆண்டவருக்குள் வழிநடத்தினாராம். இந்த ஸ்திரீயிடம் எருசலேம் தேவாலயத்துக்கென்று கணிசமான பணத்தை வசூல் செய்துவிட்டு அதை தன் வசப்படுத்திக் கொண்டார். இதினிமித்தமாகவே ரோம பேரரசன் கிளவுதியு ராயனின் ஆணையின்படி யூதர்கள் கி.பி.49-50ல் ரோமாபுரியை விட்டு நாடு கடத்தப்பட்டார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் கூட இதன் விளைவாக பாதிக்கப்பட்டவர்களாய் கொரிந்துவில் குடியிருந்தபோது பவுலை சந்திக்கிறார்கள்.

விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? (ரோமர் 2:22)

"விபசாரம் செய்யாதிருப்பாயாக" (யாத் 20:13) என்பது தேவனுடைய ஏழாவது கற்பனை. கிறிஸ்துவின் பிரமாணமோ கண்களினால் செய்யும் விபசாரத்தையும் தடை செய்கிறது. "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று" (மத் 5:28). இருந்தாலும் யூதர்கள் மத்தியில் இருதய விபசாரம் என்ற பாவம் பரவலாகக் காணப்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் "பொல்லாத விபசார சந்ததி" (மத் 12:13) என்று இயேசு அவர்களைக் குறிப்பிடுகிறார். யூதர்கள் போதிக்கிற காரியங்களுக்கும், அவர்களுடைய நடைமுறை வாழ்க்கைக்கும் இடையே உள்ள முரண்பாட்டைப் பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

பழைய ஏற்பாடு முழுவதிலும் பல வசனங்கள் விக்கிரக ஆராதனையை எவ்வளவு தூரம் தேவன் வெறுக்கிறார் என்பதை அறிவிக்கிறது. பத்துக் கற்பனையில் தேவன் சொல்லுகிறார்: "ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்" (யாத் 20:4). இதன் அடிப்படையில் சிலைகளை வெறுக்கும் யூதர்கள் அதே கோவில்களைக் கொள்ளையடிப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்கிறார் பவுல். பொதுவாகவே இந்தப் பாவம் யூதர்களிடம் காணப்படவில்லை என்றாலும், எழுபது ஆண்டுகால பாபிலோனிய சிறையிருப்புக்குப் பின்னர், விக்கிரக ஆராதனை செய்யும் இடங்களில் உள்ள பொன், வெள்ளியை திருடும் பழக்கம் அவர்களிடம் வந்திருக்கிறது. இந்த வசனத்தில் யூதர்கள் விக்கிரக ஆராதனை செய்வதாக பவுல் குற்றப்படுத்தவில்லை என்பதையும் கவனியுங்கள். அதனால்தான் நகரமக்கள் எபேசு பட்டணத்து அதிகாரியிடம் பவுலையும் அவருடைய உடன் ஊழியரையும் கொண்டு வந்தபோது "இவர்கள் கோவிற் கொள்ளைக்காரர் அல்ல" (அப் 19:37) என்று அவர்களைச் சாந்தப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா? (ரோமர் 2:23)

தேவன் தங்களுக்கு வழங்கிய நியாயப்பிரமாணத்தைக் குறித்து யூதர்கள் உண்மையில் மேன்மை பாராட்டுகிறவர்களாகத்தான் இருந்தார்கள். அதைக் குறித்து அவர்கள் பெருமையாகப் பேசினாலும், அதை மீறி நடக்கும்போது தங்களுக்கு பிரமாணத்தை வழங்கிய தேவனுக்கு அவமரியாதை உண்டாகும் என்பதை அறிந்துகொள்ள அவர்களுக்கு மனதில்லை. தாங்கள் கனம் பண்ணும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே அதை வழங்கிய தேவன் மகிமைப்படுவார் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய நடக்கையை சற்று ஆராய்ந்து பார்ப்போம். கிறிஸ்துவை அறிந்தவர்களாகவும், அவரை நேசிப்பவர்களாகவும் நாம் நம்மை காட்டிக்கொள்ள விரும்புகிறோம். அவரே நம் இரட்சகர் என்கிறோம். அது நல்லதுதான், **ஆனால் அவர் நம்முடைய ஆண்டவராகவும் இருக்கிறாரா? அதாவது, அவர் நம்மை, நம்முடைய வாழ்க்கையின் சகல காரியங்களையும் ஆண்டு கொண்டிருக்கிறாரா?** அல்லது நாம் ஆளுகை செய்யும்படியாக சிலவற்றை நமக்கென்று வைத்திருக்கிறோமா? அப்படி வைத்திருப்போமானால் நாம் உண்மையில் இந்த யூதர்களைப்போல தேவனைக் கனவீனம் பண்ணுகிறவர்கள்தான்.

எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே *(ரோமர் 2:24)*

தங்களைக் குறித்து மேன்மையாக யூதர்கள் நினைத்தாலும் அவர்களுடைய உண்மையான பாவநிலையை இந்த வேதபகுதியில் பவுல் அறிவித்துக் கொண்டிருக்கிறார் என்பதைப் பார்த்தோம். புறஜாதியார் தேவனைப்பற்றி இழிவாகப் பேசுவதற்கு யூதர்களே காரணம் என்கிறார். யூதர்களுக்கு எதிராக இதைவிட கடுமையான குற்றச்சாட்டை ஒருவராலும் கொண்டுவர முடியாது. ஊழியக்காரர்களாகிய நம் மூலமாக தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறதா என்பதை யோசித்துப் பார்ப்போம்.

இந்த வேதபகுதியில் யூதர்களைக் குறித்துத்தான் பவுல் பேசுகிறார் என்றாலும், அவர் சொல்லுகிற சில காரியங்கள் ஊழியக்காரர்களாகிய நமக்கும் பொருந்துவதாக இருக்கிறது. நம்மைக் குறித்து நாம் குருடருக்கு வழிகாட்டியாகவும், அந்தகாரத்திலுள்ளவர்களுக்கு வெளிச்சமாகவும், பேதைகளுக்குப் போதகனாகவும், குழந்தைகளுக்கு உபாத்தியாயனாகவும்

நினைத்துக்கொள்கிறோம். நமக்கு நாமே போதியாமல், பொருளாசை உடையவர்களாகவும், பாவம் செய்கிறவர்களாகவும், பிரமாணங்களை மீறி நடக்கிறவர்களாகவும் இருந்தால் தேவன் கனவீனப்படுவார். அவருடைய நாமம் தூஷிக்கப்படும்.

கடைசி நாட்களில் கேட்டுக்கேதுவான கள்ளப்போதகர்கள் தோன்றுவார்கள் என்பதைக் குறித்து பேதுரு எச்சரிக்கிறார். "அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும் என்கிறார்" (2 பேதுரு 2:2). இந்தத் தீர்க்கதரிசனம் இன்று நிறைவேறிக் கொண்டிருக்கிறது.

"நித்தமும் இடைவிடாமல் என் நாமம் தூஷிக்கப்படுகிறது" (ஏசாயா 52:5) என்ற வசனத்தை ஆதாரமாக இங்கே பவுல் உபயோகிப்பதைப் பார்க்கிறோம். இஸ்ரவேலர் தேவனுடைய நாமத்தை அறிந்தவர்கள்தான். பாவத்தின் காரணமாக தேவன் அவர்களை அடிமைத்தனத்துக்கு ஒப்புக்கொடுக்கிறார். அவர்களை அடிமைப்படுத்திய புறஜாதியார் தன்னையும் தன் நாமத்தையும் கேலி செய்வதாக தேவன் ஏசாயா தீர்க்கதரிசனப் புஸ்தகத்தில் சொல்கிறார். தேவனுடைய ஜனங்களாகக் கருதப்பட்டவர்கள் தங்கள் சாட்சியை இழந்தபடியால் அவர்களைச் சுற்றியிருக்கும் புறஜாதியார் தேவனையே தூஷிக்கத் துணிகிறார்கள்.

அவர்கள் (யூதர்கள்) புறஜாதிகளிடத்தில் போனபோது அந்த ஜனங்கள் இவர்களைக் குறித்து: "இவர்கள் கர்த்தருடைய ஜனங்கள், அவருடைய தேசத்திலிருந்து வந்தார்கள் என்று சொன்னதினால், இவர்கள் என் பரிசுத்தநாமத்தைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினார்கள்" (எசே 36:20) என்று தேவன் வேதனையோடே சொல்லுகிறார்.

தாவீது பாவம் செய்தபோது "இந்தக் காரியத்தினாலே கர்த்தருடைய சத்துருக்கள் தூஷிக்க" (2 சாமு 12:14) அவர் காரணமாயிருந்தார் என்பதை நாத்தான் சுட்டிக்காட்டுகிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய நாம் தவறு செய்யும் போதெல்லாம் அவருடைய நாமம் பரிசுத்தக் குலைச்சலாகிறது. நம்முடைய வாயினால் நாம் தேவனை தூஷிக்காமல் இருக்கலாம். ஆனால் நம்முடைய பாவகிரியைகள் அதைத்தான் செய்கின்றன. எனவே "தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாதபடிக்கு" (1 தீமோ 6:1) நாம் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

நீ நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தால் விருத்தசேதனம் பிரயோஜனமுள்ளதுதான்; நீ நியாயப் பிரமாணத்தை மீறி நடந்தால் உன் விருத்தசேதனம் விருத்த சேதனமில்லாமையாயிற்றே. (ரோமர் 2:25)

தங்களைப் பற்றி யூதர்கள் மேன்மை பாராட்டுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. அவர்கள் தேவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நியாயப்பிரமாணம் (வசனம் 17-24)
2. அவர்கள் தேவனோடு செய்து கொண்ட விருத்த சேதன உடன்படிக்கை (வசனம் 25-29)

நியாயப்பிரமாணத்தைக் குறித்து முந்தின வேதபகுதியில் பேசிய பவுல் இந்த வசனம் துவங்கி அதிகாரத்தின் முடிவு வரை விருத்தசேதனத்தினால் யூதர்கள் பெற்றுக்கொண்ட மேன்மையைக் குறித்து பேசுகிறார்.

நியாயப்பிரமாணம் சீனாய் மலையில் வழங்கப்படுவதற்கு சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஆபிரகாம் தேவனிடம் சொல்லுகிறார்: "உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்கும் முள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். உங்களில் தலைமுறை தலைமுறையாகப் பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாம் எட்டாம் நாளிலே விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும்" (ஆதி 17:11,12). ஆபிரகாமின் சந்ததியார் விருத்தசேதனம் செய்துகொள்ளும்போது ஆபிரகாமோடு தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கு பங்குதாரர்கள் ஆகிறார்கள்.

இயேசு இதை உறுதிப்படுத்திச் சொல்லுகிறார்: "விருத்தசேதனம் மோசேயினால் உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு மோசே அதை உங்களுக்கு நியமித்தான்" (யோவான் 7:22). ஆனாலும் விருத்தசேதனத்தின் உண்மையான மேன்மை நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதில்தான் அடங்கியிருக்கிறது. கலாத்தியர் 5:3 இதை தெளிவுபடுத்துகிறது. "விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாயிருக்கிறான்". ஆபிரகாம் எங்களுடைய பிதா என்று மேன்மை பாராட்டும் யூதர்களிடம் கிறிஸ்து சொல்லுகிறார்: "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால்

ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" (யோவான் 8:39).

தன்னுடைய குமாரனுக்கு விருத்தசேதனம் செய்து கொள்ளாததினிமித்தம் தேவன் மோசேயையே கொல்லப் பார்த்தார் (யாத் 4:24-26). விருத்தசேதனமின்மை யூதர்களால் வெறுக்கப்பட்ட, அருவருப்பான காரியமாகக் கருதப்பட்டது (ஆதி 34:14; யாத் 12:48, 1 சாமு 17:26, 2 சாமு 1:20, ஏசாயா 52:1, எசே 28:10). அதே நேரத்தில் வெளிப்படையான, சரீரரீதியான, மேலோட்டமான அடையாளம் என்ற முறையில் விருத்தசேதனத்தில் எந்த மேன்மையும் இல்லை என்பதையும் பல வசனங்கள் வலியுறுத்துகின்றன.

விருத்த சேதனத்தை யூதர்களுக்கென்று நியாயப்பிரமாணத்தின் மூலமாக நியமித்த மோசே இவ்விதமாகச் சொல்கிறார், "நீங்கள் இனி உங்கள் பிடரியைக் கடினப்படுத்தாமல், உங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணுங்கள்" (உபா 10:16). இன்னும் உபாகமம் 30:6, எரே 4:4; 9:25,26 வாசித்துப் பாருங்கள். உள்ளான மனமாற்றத்தின் வெளிப்படையான அடையாளமாகவே விருத்தசேதனம் இருக்கவேண்டும். இன்று நாம் எடுக்கும் ஞானஸ்நானம், கலந்துகொள்ளும் கர்த்தருடைய பந்தி போன்றவை உள்ளான ஆவிக்குரிய அனுபவங்களாக மாறாவிட்டால் அவற்றால் எந்த நன்மையும் இல்லை.

நியாயப்பிரமாணத்தை மீறி நடக்கிறவனைப் பொறுத்த வரையில் விருத்தசேதனம் விருத்தசேதனமில்லாததாக மாறுகிறது என்கிறார் பவுல். விருத்தசேதனத்தின் மூலம் ஒருவன் தேவனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளுவானென்றால், அதினாலே வரும் ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள அந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை கைக்கொள்ளுவது அவனுடைய கடமையாகிறது. அதனால்தான் விருத்தசேதனத்திலும் யூத பாரம்பரியங்களிலும் மிகுந்த நம்பிக்கையுடைய பரிசேயர்களை, கிறிஸ்து மத்தேயு சுவிசேஷத்தில் மட்டும் பதினான்கு இடங்களில் 'மாயக்காரர்' என்று அழைக்கிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன நினைக்கிறோம்? நாம் முழுகி எடுத்துக்கொண்ட ஞானஸ்நானம், நாம் பங்குகொள்ளும் கர்த்தருடைய பந்தி முதலான சடங்காச்சாரங்கள் நம்மை மேன்மைப்படுத்துவதாக நினைத்துக்கொள்கிறோம். யூதர்கள் தங்களுடைய விருத்தசேதனத்தில் நம்பிக்கை வைத்திருந்ததைப்போல் நாமும் இவைகளில் நம்பிக்கை வைக்கிறோம். நிச்சயமாகவே இவை தேவனுடைய நியமங்கள் தான். ஆனாலும் அவை மாத்திரம் நம்மை இரட்சிக்குமா? இல்லை -

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது உள்ளான இருதயத்தின் கீழ்ப்படிதலையும், அவரையே நம்பி முழுமனதோடு நேசிக்கும் அன்பையும் தான். இவை நம்மில் காணப்படும்போதுதான் இந்த சடங்காச்சாரங்கள் நமக்கு ஆசீர்வாதங்களைத் தரும். இதுவே மறுக்கமுடியாத உண்மை.

இந்த வசனம் அறிவிக்கும் சத்தியத்தை இந்த வரைபடத்தின் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

விருத்தசேதனம் + கீழ்ப்படிதல் = ஆசீர்வாதம்

ஆனால்

விருத்தசேதனம் + கீழ்ப்படியாமை = விருத்தசேனமின்மை

மேலும் விருத்தசேதனமில்லாதவன் நியாயப்பிரமாணத்துக் கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனம் என்றெண்ணப் படுமல்லவா? (ரோமர் 2:26)

பவுல் சொல்லுகிற காரியம் இதுதான். யூதர் அல்லாத புறஜாதியார் தங்கள் சரீரங்களில் விருத்தசேதனம் செய்துகொள்ளாதவர்களே. அவர்கள் நியாயப்பிரமாணத்துச் சட்டதிட்டங்களின்படி வாழ்வார்களேயானால் அவர்களும் விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர்களைப் போலவே கருதப்படவேண்டும்.

மனிதர்களுடைய நற்கிரியைகளை தேவன் ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்கும்போது அவன் விருத்தசேதனம் செய்திருக்கிறானா, இல்லையா என்று பார்ப்பதில்லை என்னும் கருத்தை இந்த வசனம் அறிவிக்கும் சத்தியமாகக் கொள்ளலாம். தேவனுடைய வாக்குத்தத்தத்தை நம்பி, கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் உண்டாகும் இரட்சிப்பை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் ஒருவன், யூதகுலத்தைச் சேர்ந்தவனோ, புறஜாதியானோ யாராயிருந்தாலும் சரி - அவன் தேவனால் நீதிமானாக்கப்படுவது உறுதி. பிலிப்பியர் 3:3 இப்படியாகச் சொல்லுகிறது: "மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்த சேதனமுள்ளவர்கள்".

இந்த வசனத்தின் அடிப்படையில் புறஜாதியார் நியாயப்பிரமாண விதிமுறைகளைக் கைக்கொண்டு தேவநீதியை நிறைவேற்றமுடியும் என்று எடுத்துக்கொள்ளமுடியாது. புறஜாதியாரின் உண்மையான நிலை எவ்வளவு பரிதாபத்துக்குரியது என்பதை முதலாவது அதிகாரத்தில் பவுல் அறிவித்தார். இந்த வசனம் அறிவிக்கும் சத்தியம் இதுதான். பிதாவாகிய தேவனுடைய சிங்காசனத்தின் முன்பாக ஒருவன் நீதிமானாக்கப்படுவது அல்லது ஆக்கினைத்தீர்ப்படைவது அவன் செய்துகொண்ட அல்லது செய்துகொள்ளத்தவறிய விருத்தசேதனம் அல்ல. **ஒருவன் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் எந்த அளவுக்கு தேவனுடைய நியமங்களை அனுசரித்து நடக்கிறான் என்பதே அவனுடைய நித்தியத்தை நிர்ணயிக்கிறது.** தேவன் நியமித்த ஒரு கடமையைச் செய்து முடித்துவிட்டேன் என்ற திருப்தி நம்மிடம் காணப்படுமானால் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம் என்றுதான் பொருள்.

சுபாவத்தின்படி விருத்தசேதனமில்லாதவனாயிருந்தும் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவனாயிருந்தால், அவன் வேத எழுத்தும், விருத்தசேதனமும் உள்ளவனாயிருந்தும், நியாயப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்து வானல்லவா? (ரோமர் 2:27).

பவுல் தன் இனத்தாராகிய யூதருடன் நேரடியாகப் பேசி அவர்களுடைய தவறு என்ன என்பதை அறிவிக்கிறார். நியாயப்பிரமாணம் அடங்கிய வேதவசனங்கள் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விருத்தசேதனம் செய்துகொண்டு, தேவனுடன் உடன்படிக்கையும் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனாலும் தேவனுடைய விதிமுறைகளை எல்லாம் துணிகரமாக மீறுகிறீர்கள். அதேநேரத்தில் சரீரத்தில் விருத்தசேதனம் செய்துகொள்ளாத புறஜாதியார் தங்களுடைய மனச்சாட்சியின் அடிப்படையில் தேவனுடைய சட்டவிதிகளை மதித்து நடக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் உங்கள் குற்றங்களை நிரூபித்துக் காட்டுகிறார்கள் என்கிறார். அவர்கள் உங்களைக் குற்றப்படுத்துவார்கள் என்றால் அதில் தவறில்லை என்கிறார்.

மேலும் பவுலின் நாட்களில் புறஜாதியாரின் பட்டணங்களில் சுவிசேஷம் சொல்லப்பட்டதின் விளைவாக பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, விருத்தசேதனம் என்ற வெளிப்படையான கிரியையைச் செய்துகொள்ளாமல் நீதியின் கிரியைகளை நடப்பித்து வந்தார்கள். இந்த "விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள

ஆபிரகாமோடு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்" (கலா 3:9). இவர்கள் நிச்சயமாகவே விருத்தசேதனத்தில் பெருமை பாராட்டும் யூதர்களைக் குறித்து குற்றப்படுத்திப் பேசுவார்கள் என்கிறார் பவுல்.

யூதர்கள் பெற்றிருந்த இரண்டு சிலாக்கியங்கள் மீண்டுமாக இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. யூதன் தேவனிடமிருந்து வேத எழுத்தைப் பெற்றிருக்கிறான்.

2. யூதன் தேவனுடன் விருத்தசேதனத்தின் மூலம் உடன்படிக்கை செய்திருக்கிறான்.

பவுலின் இந்த வசனம் மத் 12:41, 42, லூக்கா 11:31,32 வசனங்களை நினைவுபடுத்துவதாக இருக்கிறது. யோனாவின் ஊழியத்தினால் இஸ்ரவேலர் யாரும் பயனடையவில்லை. ஆனாலும் புறஜாதியாரின் தேசமாகிய நினிவேயில் மிகப்பெரிய மனந்திரும்புதல் உண்டாயிற்று. இதினிமித்தம் நினிவே பட்டணத்தார் இஸ்ரவேலை குற்றப்படுத்துவார்கள். சாலொமோனுடைய ஞானத்தை இஸ்ரவேலர் அங்கீகரிக்கவில்லை. தென்தேசத்து ராஜஸ்திரீ அதைக்கேட்கும்படியாக இஸ்ரவேலுக்கு வந்தாள். எனவே அவளும் இஸ்ரவேலர்மேல் குற்றஞ்சுமத்துவாள்.

ஆதலால் புறம்பான யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்த சேதனமல்ல. (ரோமர் 2:28)

ஒருவன் ஒரு யூத குடும்பத்தில், ஒரு யூத கோத்திரத்துப் பாரம்பரியமான பின்னணியில் பிறந்திருக்கிறான் என்பதினால் அவன் யூதனாகிவிடுகிறான் என்பதல்ல. தேவனுடைய பார்வையில் விருத்தசேதனம் என்பது சரீரத்தின் நுனித்தோலில் செய்யப்படும் ஒரு காரியமும் அல்ல. இருதயத்தில் செய்யப்படவேண்டிய விருத்தசேதனத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டு காலத்திலேயே தேவன் பேசியிருக்கிறார் (லேவி 26:41, உபா 10:16; 30:6, எரே 4:4; 9:26). புதிய ஏற்பாட்டு நாட்களில் தேவன் அங்கீகரித்து ஆசீர்வதிக்கும் விருத்தசேதனம் ஒன்று உண்டு. கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதை தனக்குள் பெற்றிருக்கிறான்.

பவுல் சொல்கிறார்: "நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும்

விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (கொலோ 2:11). மாம்சத்தில் விருத்தசேதனம் செய்துகொண்ட யூதரிடம் எரேமியா சொல்லுகிறார்: "நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம்பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப்போடுங்கள்" (4:4).

உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது. *(ரோமர் 2:29)*

விருத்தசேதனத்தைப்பற்றி யூதர்கள் கொண்டிருந்த தவறான நம்பிக்கை எவ்வளவு பெரியதாயிருந்தது என்றால், தங்களுடைய தவறை அவர்கள் உணர்ந்து கொள்ள மீண்டும் மீண்டும் இதே சத்தியத்தை பலமுறை பவுல் அறிவிக்கிறார். அதாவது உண்மையான விருத்தசேதனம், சரீரத்தில் செய்யப்படும் ஒரு காரியம் அல்ல - உள்ளான ஒருவனுடைய இருதயத்தில் செய்யப்படவேண்டியது. இது மனிதனுடைய கைகளினால் செய்யப்படாமல், ஆவியானவரால் செய்யப்படுகிறது. இதுவே கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசம். இதன் விளைவாக ஒரு மனிதன் தான் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டுவிட்டேன் என்ற உள்ளான உணர்வைப் பெற்றுக்கொள்ளுகிறான். முழு இருதயத்தோடும் தேவனை நேசித்து அவரையே சார்ந்து வாழும் உன்னதமான அனுபவத்தை உடையவனாகிறான் (உபா 6:5; 10:12,13,20; 30:6,14,16, ஏசாயா 1:11-20).

"ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனம்" என்று பவுல் சொல்லும்போது "ஆவியின்படி" என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடாமல், அதை 'எழுத்தின்படி' என்ற வார்த்தையின் எதிர்ப்பதமாகவே எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆனாலும் ஒரு மனிதனுடைய உள்ளான ஆத்துமாவிலும் இருதயத்திலும் கிரியை நடத்துபவர் பரிசுத்த ஆவியானவரே என்பதை நாம் அறிவோம்.

நமக்குப் புகழ்ச்சி தேவனால் மட்டுமே உண்டாயிருக்கவேண்டும் என்கிறார் பவுல். நாம் எத்தகைய ஞானஸ்நானம் எடுத்தோம் என்பதினால் நமக்குப் புகழ்ச்சி உண்டாகுமானால் அதில் எந்த மேன்மையும் இல்லை. எந்த சபையைச் சேர்ந்தவர்கள் என்பதினால்

புகழ்ச்சி உண்டாகியிருந்தால் அதில் எந்த மேன்மையும் இல்லை. எந்த ஊழியக்காரர்களோடு ஐக்கியம் கொண்டிருக்கிறோம் என்பதினால் புகழ்ச்சி உண்டாகியிருந்தால் அதில் எந்த மேன்மையும் இல்லை. கிறிஸ்து மூலமாக பிதாவாகிய தேவனோடு உள்ளான இருதயத்தில் நாம் கொண்டிருக்கும் ஐக்கியம் மட்டுமே நமக்கு உண்மையான புகழ்ச்சியைக் கொண்டுவரும்.

"இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" என்று இந்த அதிகாரம் முடிவடைகிறது. கிறிஸ்துவின் நாட்களிலே மட்டுமல்ல, இன்றும் மனிதர்கள் எல்லாருமே மனிதர்களால் உண்டாக்கப்படும் புகழ்ச்சியை விரும்புகிறவர்களாக இருக்கிறோம். இதினிமித்தம் அன்று தங்களுடைய வெளிப்படையான கிரியைகளில் எல்லாம் மிகவும் எச்சரிக்கையாகத்தான் இருந்தார்கள். மனுஷர்கள் புகழவேண்டும் என்பதற்காக ஆலயங்களிலும் வீதிகளிலும் தர்மம் பண்ணினார்கள் (மத் 6:2). ஜெபஆலயங்களிலும் வீதிகளிலும் ஜெபம் பண்ணினார்கள் (மத் 6:5, லூக்கா 18:10-12, மத்தேயு 23:23). இன்றோ ஊழியக்காரர்கள் தங்களை ஜெபவீரர்கள் என்று காட்டும்படியாக டெலிவிஷன் காமிராவுக்கு முன்பு ஜெபம் பண்ணுகிறார்கள். மத்தேயு 6:6-ஐ அவர்கள் மறந்துவிட்டார்கள்.

"மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்: கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமு 16:7). **இருதயத்தைப் பார்ப்பவரால் புகழ்ச்சி உண்டாவதே நமக்கு ஆசீர்வாதம்.** பவுல் சொல்லுகிறபடி, "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (1 கொரி 4:5).

3

கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பு

மனிதஇனத்தின் முன்றாவது பிரிவினரான யூதர்களும் பாவிகளே என்பதை ரோமர் 2:17 முதல் 3:8 வரை பவுல் அறிவிக்கிறார் என்பதை தியானித்துக்கொண்டிருக்கிறோம். முந்தின அதிகாரத்தில் அவர்கள் பெற்றிருந்த நியாயப்பிரமாணமோ, அல்லது அவர்கள் செய்துகொண்ட விருத்தசேதன உடன்படிக்கையோ அவர்களை இரட்சிக்கவில்லை என்றும் பவுல் உறுதிப்படுத்தினார். தன்னுடைய இந்த அறிவிப்புக்கு யூதர்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பு உண்டாகும் என்று பவுல் எதிர்பார்த்து, அதற்கு எதிராக எழும்பக்கூடிய நான்கு கேள்விகளையும் அதற்கான பதில்களையும் இந்த அதிகாரத்தின் முதல் பகுதியில் (ரோமர் 3:1-8) அறிவிக்கிறார்.

கேள்வி 1 : தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட யூதர்களும் உலகத்து மனிதர்களைப் போல் நியாயத்தீர்ப்படைவார்கள் என்பது உண்மையானால் யூதர்களின் மேன்மை என்ன?

பதில் : புறஜாதியாரைவிட யூதர்கள் நிச்சயமாகவே மேன்மையானவர்கள்தான். தேவன் அவர்களை நம்பியே தன்னுடைய வார்த்தையைக் கொடுத்திருக்கிறார் என்பது மிகப் பெரிய மேன்மை. (வசனம் 1 & 2)

கேள்வி 2 : தேவனுடைய வார்த்தையைப் பெற்ற யூதர்களில் சிலர் அதை விசுவாசிக்கவில்லை என்பதற்காக அவருடைய வாக்குறுதிகள் மதிப்பற்றதாய் போய்விடுமோ?

பதில் : நிச்சயமாக இல்லை. உலகில் பிறந்த அத்தனை மனிதர்களும் பொய்யராகிப்போனாலும், தேவன்

தொடர்ந்து உண்மையுள்ளவராகத்தான் இருப்பார். (வசனம் 3 & 4)

கேள்வி 3 : மனிதர்களுடைய தவறுதல் தேவனுடைய நீதியை வருவிக்கிறது என்ற பவுலின் அறிக்கை உண்மையானால், பாவத்துக்கு விரோதமாக தேவகோபாக்கினை புறப்பட்டு வருவானேன்?

பதில் : நீதியுள்ள தேவன் பாவத்துக்கு எதிராக செயல்பட்டே ஆகவேண்டும். பாவம் செய்த யூதர்களை அவர் தண்டிக்காமல் விடுவாரேயானால் உலகத்தை அவர் நியாயந் தீர்க்க முடியாமல் போய்விடுமே! (வசனம் 5,6)

கேள்வி 4 : மனிதர்கள் பொய் சொல்வதினால்தான் தேவனுடைய சத்தியம் அவருக்கு பெருமை சேர்க்கிறது. அவர்களுடைய பொய் தேவனுடைய உண்மையை விளங்க வைக்கும்போது, அவர்களுடைய பாவத்தினிமித்தம் ஏன் அவர்களை தேவன் குற்றப்படுத்த வேண்டும்?

பதில் : இந்த வாதம் தவறானது. இது நாம் எல்லாரும் நம் சுயவிருப்பத்தின்படி தீமை செய்வோமாக. அதன் மூலமும் நிச்சயமாக ஒரு நன்மை உண்டாகத்தான் செய்யும் என்று சொல்வதற்கு ஒப்பானதாக இருக்கிறது. (வசனம் 7,8)

இந்த கேள்வி-பதில் பகுதியைத் தொடர்ந்து ரோமர் 3:9 முதல் 18 வரையுள்ள வேதபகுதியில் மனிதஇனத்துக்கு எதிரான குற்றப்பத்திரிகை தேவசமுகத்தில் விசாரிக்கப்படும்படியாக சமர்ப்பிக்கப்படுகிறது. மொத்தம் பதினான்கு வகையாக இந்தக் குற்றச்சாட்டுகள் அமைகிறது. இவற்றிற்கான ஆதாரங்களாக, பழைய ஏற்பாட்டு வேத வசனங்களையே பவுல் பயன்படுத்துகிறார்.

எல்லா மனிதர்களும் பாவிகளே என்பதை சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்த பவுல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் ஒருவனை நீதிமானாக்குவதில்லை என்கிறார். நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவ நீதி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை அறிவிக்கிறார். இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (வசனம் 24) என்ற மகத்துவமான சத்தியம் அறிவிக்கப்படுகிறது. விருத்தசேதனம்

உள்ளவர்களானாலும் சரி, விருத்தசேதனமில்லாதவர்களானாலும் சரி, விசுவாசத்தின் மூலமாகவே தேவன் ஒருவனை நீதிமானாக்குகிறார் என்ற பவுலின் சுவிசேஷம் பறைசாற்றப்படுகிறது. ரோமர் நிருபத்தின் மிக முக்கியமான வேதபகுதியாக (வசனம் 21-31) இது அமைவதினால் ஜெபத்தோடு அவைகளைத் தியானிப்போம்.

யூதர்களின் கேள்விகளும் அதற்கான பதிலும் (வசனம் 1-8)

இப்படியானால் யூதருடைய மேன்மை என்ன? விருத்தசேதனத்தினாலே பிரயோஜனம் என்ன? (ரோமர் 3:1)

ரோமர் 2:26ல் "விருத்தசேதனமில்லாதவன் நியாயப் பிரமாணத்துக்கேற்ற நீதிகளைக் கைக்கொண்டால், அவனுடைய விருத்தசேதனமில்லாமை விருத்தசேதனம் என்றெண்ணப்படும்" என்ற பவுலின் அறிவிப்புக்கு எதிராக இந்தக் கேள்வி யூதர்களிடமிருந்து வெளிப்படுகிறது. தேவனால் நியமிக்கப்பட்ட விருத்தசேதனத்தில் எந்த விதமான நன்மையும், தனிச்சிறப்பும் இல்லையா? அது முற்றிலுமாக பயனற்றதாகப் போய்விட்டதா? விருத்தசேதனமில்லாத ஒரு மனிதனை தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடுமானால் "இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்?" (உபா 33:29) என்ற வசனத்தின் பொருள்தான் என்ன?

அது எவ்விதத்திலும் மிகுதியாயிருக்கிறது; தேவனுடைய வாக்கியங்கள் அவர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது விசேஷித்த மேன்மையாமே. (ரோமர் 3:2)

முந்தின வேத பகுதியில் இஸ்ரவேலரை கடுமையான முறையில் விமரிசனம் செய்து, குற்றப்படுத்திய பவுல் யூதரின் மேன்மை என்ன என்ற கேள்விக்கு "ஒரு மேன்மையும் இல்லை" என்றுதான் பதில் சொல்லுவார் என்று எதிர்பார்ப்போம். ஆனால் வித்தியாசமான பதில் பவுலிடமிருந்து வருகிறது. அவர்களுடைய மேன்மை பலவிதங்களில், பலவழிகளில் மிகுதியாய் இருக்கிறது; அவர்களிடம் நிறையச் சிறப்புத் தன்மைகள் உள்ளன என்று அறிவிக்கிறார் பவுல்.

ரோமர் 9:4,5ல் அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கும் சில மேன்மைகள் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர்கள் பெற்றுக்கொண்ட மேன்மைகளிலேயே மிகச்சிறப்பானதாக கருதப்படுவது, அவர்கள் பெற்றுக்கொண்ட தேவனுடைய போதனைகள் அடங்கிய

ஜீவனுள்ள வார்த்தையே. ஸ்தேவான் மோசேயைக் குறித்து சொல்கிறார்: "சீனாய் மலையில் தன்னுடனே பேசின தூதனோடும், நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே" (அப் 7:38), "இந்நாளிலே நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா 4:8) என்கிறார் மோசே.

தேவனுடைய வாக்கியங்கள் (Oracles of God-கிரேக்க பதம் logia) என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மொத்தம் நான்கு இடங்களில்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (அப் 7:38, எபி 5:12, பேதுரு 4:11, ரோமர் 3:2). இந்த வார்த்தை சீனாய் மலையில் மோசே மூலமாக தேவனால் வழங்கப்பட்ட நியாயப்பிரமாணத்தை மட்டும் அதாவது, வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களை மட்டும் குறிப்பிடுகிறது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அதற்குப்பின் யோசுவா துவங்கி மல்கியா வரையுள்ள சகல புத்தகங்களிலும் தேவனுடைய வார்த்தையே அறிவிக்கப்படுகின்றன. இந்த பழைய ஏற்பாட்டுப் புத்தகத்தின் அனைத்துப் பகுதிகளும் யூதர்களால் யூதர்களுக்காக மட்டுமே எழுதப்பட்டன.

தேவனுடைய வார்த்தைக்கு பவுல் கொடுக்கும் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுங்கள். யூதர்களை தேவன் அற்புதங்கள் அடையாளங்கள் மூலமாக எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்ததையோ, செங்கடலை தன்னுடைய ஓங்கிய புயத்தினால் திறந்ததையோ, அக்கினிஸ்தம்பத்தினாலும் மேகஸ்தம்பத்தினாலும் வழிநடத்தினதையோ, நாற்பது ஆண்டுகாலம் லட்சக்கணக்கான ஜனங்களை வனாந்தரத்தில் போஷித்து வழிநடத்தியதையோ யூதர்களின் மேன்மையாகக் குறிப்பிடவில்லை என்பதைக் கவனியுங்கள். தேவனுடைய வார்த்தையே அவர்கள் பெற்றிருந்த மிகப்பெரிய மேன்மை.

சிலர் விசுவாசியாமற்போனாலுமென்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்குமோ! (ரோமர் 3:3)

தேவன் யூதருக்கு தன்னுடைய வேதத்தைக் கொடுத்து ஆசீர்வதித்தது மிகப்பெரிய சிலாக்கியம்தான். ஆனாலும் அவர்களுடைய பிரச்சனை என்ன? அவர்களில் பலர் அதை விசுவாசிக்கவில்லை. ஆகையால் அவர்கள் தேவனுடைய நம்பிக்கைக்கு உரியவர்களாக

இல்லை. இதினிமித்தம் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மதிப்பற்று, செயலிழந்து போய்விடுமோ என்பது யூதர்களின் இரண்டாவது கேள்வி.

"உனக்கும் உனக்குப்பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதி 17:7) என்று தேவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் இந்த கேள்வி எழுப்பப்படுகிறது. சில யூதர்களின் பாவங்களினிமித்தம் தாங்கள் பெற்றுக்கொண்ட சிலாக்கியங்களை சகல யூதர்களும் இழந்துபோகவேண்டுமா? தேவன் உண்மையுள்ளவர் என்று சொல்லப்பட்டிருக்க (ஓசியா 2:20) சில யூதர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக அவர் உண்மையற்றவராகிவிடுவாரா? தங்களுக்கு முன் போடப்பட்ட முத்துக்களை பன்றிகள் மிதித்துப்போட்டன என்பதினால் முத்துக்கள் கல்லாக மாறிவிடுமா?

யூதர்கள் எதை விசுவாசிக்கத் தவறினார்கள் என்பது வெளிப்படையாக இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. **பவுலின் நாட்களில் இருந்த யூதர்கள் செய்த மிகப்பெரிய தவறு, மேசியாவாக வெளிப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர்கள் விசுவாசியாதிருந்ததுதான்.** ஆதியாகமம் துவங்கி மல்கியா வரை அவர்களுக்கு வழங்கப்பட்ட தேவனுடைய வார்த்தை, வெளிப்படப்போகும் இயேசுகிறிஸ்துவைப் பற்றியே அறிவித்தது. ஆனாலும் அவரை ஏற்றுக்கொள்ளாததினால், அவர் மூலமாக மனித இனத்துக்கு வழங்கப்பட்ட இரட்சிப்பின் ஆசீர்வாதத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளத் தவறினார்கள்.

சிலர் விசுவாசிக்கவில்லை என்று சொல்லும்போது சில யூதர்கள் கிறிஸ்துவை விசுவாசித்தார்கள் என்பதும் புலனாகிறது. எருசலேமில் இருந்து செயல்பட்ட ஆதி அப்போஸ்தல சபையில் அத்தனைபேரும் யூதர்களாகத்தான் இருந்திருக்கவேண்டும். பெந்தெகொஸ்தே நாளில் நடந்த முதல் எழுப்புதல் கூட்டத்தில் கலந்துகொண்டு இரட்சிக்கப்பட்ட மூவாயிரம்பேர் யூதர்கள்தான்.

அப்படியாக்கமாட்டாது: நீர் உம்முடைய வசனங்களில் நீதிபரராய் விளங்கவும், உம்முடைய நியாயம் விசாரிக்கப்படும்போது வெற்றியடையவும் இப்படியாயிற்று என்று எழுதியிருக்கிறபடி, தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக. (ரோமர் 3:4)

அப்படி இருக்கமாட்டாது

யூதரின் இரண்டாவது கேள்விக்கு பவுல் தரும் பதில் இதுதான். உலகில் பிறந்த அத்தனைபேரும் பொய்யராகப் போய்விடக்கூடும். ஆனாலும் நீதிபரராகிய தேவன் எல்லாக்காலங்களிலும், தொடர்ந்து உண்மையுள்ளவராகத்தான் இருப்பார். தன்னுடைய இந்த பதிலுக்கு ஆதாரமாக பவுல் சங்கீதம் 51:4-ஐ பயன்படுத்துகிறார். தன்னுடைய பாவத்தை அறிக்கையிடும் வேளையில் தாவீது இவ்விதமாகச் சொல்லுகிறார், "நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்". தன்னுடைய பாவத்தினிமித்தம் தன்னைத் தண்டிப்பதிலும் தேவன் நீதியுள்ளவர்தான் என்கிறார். மனிதர்களின் பாவம் தேவனுடைய பரிசுத்தத்துக்கு விரோதமானது என்பதால், அவர் பாவியை தண்டித்தே ஆக வேண்டும். இதன் மூலமாக அவருடைய நீதியே வெளிப்படுகிறது.

மனிதர்கள் உண்மையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதினால் தேவன் உண்மையற்றவராகிவிடுவதில்லை என்பதை நாம் சந்தேகத்துக்கிடமின்றி அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக "அப்படி இருக்கமாட்டாது" (ஆங்கிலத்தில் God forbid, Let it not be, Far be it). இந்தவார்த்தை ரோமரில் சுமார் பத்து தடவை பயன்படுத்தப்படுகிறது. 2 தீமோ 2:13 சொல்லுகிறது: "நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்; அவர் தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார்". தன்னைத்தானே மறுதலிப்பவர் தேவனாக இருக்கமுடியாது.

உண்மையில் மனிதர்கள் எல்லாரும் பொய்யர்களே. சங்கீதம் 62:9 சொல்லுகிறது: "கீழ்மக்கள் மாயையும், மேன்மக்கள் பொய்யுமாமே". சங்கீதம் 116:11 சொல்லுகிறது, "எந்த மனுஷனும் பொய்யன்". ஆனால் தேவனுடைய "வசனம் சமூலமும் சத்தியம், உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்" (சங் 119:160). "கர்த்தரோ மெய்யான தெய்வம்" (எரே 10:10).

நான் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன்; நம்முடைய அநீதி தேவனுடைய நீதியை விளங்கப்பண்ணினால் என்ன சொல்லுவோம்? கோபாக்கினைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா? (ரோமர் 3:5)

மனிதன் பாவம் செய்து, தேவன் அதைத் தண்டிக்கும்போது தேவ

நீதியே வெளிப்படுகிறது. தேவன் சத்தியபரர் என்பதையே இது உறுதிப்படுத்துகிறது என்று தாவீது 51-வது சங்கீதத்தில் அறிவித்தார் என்பதைப் பார்த்தோம். இதன் அடிப்படையில் மனுஷரீதியாக பவுலின் வாதத்துக்கு எதிராகக் கேட்கப்படும் மூன்றாவது கேள்வியை இவ்விதமாக புரிந்துகொள்ளலாம். மனுஷர் பேசுகிறவிதமாக பேசுகிறேன் என்று சொல்லும்போது மனிதர்கள் பொதுவாகப் பயன்படுத்தும் வாதத்தின் அடிப்படையில் பவுல் பேசுவதாக எடுத்துக்கொள்ளலாம். நம்முடைய அநீதி என்று சொல்லும்போது பவுல் யூதர்களின் அவிசுவாசத்தை மனதிற்கொண்டு பவுல் பேசுகிறார்.

1) யூதரில் சிலர் விசுவாசியாமல் பாவம் செய்தார்கள் என்பது உண்மையே.

2) ஆனாலும் தேவன் தன் வாக்குத்தத்தங்களில் உண்மையுள்ளவர்.

3) மனிதன் பாவம் செய்ததின் விளைவாகவே கிறிஸ்து மூலமாக தேவநீதி வெளிப்படுகிறது.

4) அப்படியிருக்கும்போது பாவம் செய்தவர்களை தேவன் தண்டிப்பானேன். இதுவே யூதர்களின் கேள்வி.

மனிதன் பாவமே செய்யவில்லை என்றிருந்தால், அவனை இரட்சிக்கும்படியாக தேவநீதி வெளிப்படவேண்டிய அவசியமே இல்லை. மனிதனின் அநீதியினிமித்தமே தேவனுடைய நீதி எவ்வளவு இன்றியமையானது, மேன்மையானது, வல்லமையானது என்பதை நாம் அறிந்து கொள்ளுகிறோம். மேலும் இஸ்ரவேலர் சுவிசேஷத்தைப் புறக்கணித்ததின் விளைவாகவே அது புறஜாதியாருக்குப் புறப்பட்டுச்செல்ல வழி பிறந்தது என்பதை விளக்கமாகப் பார்க்கப்போகிறோம் (அதிகாரம் 11).

அப்படியிருக்கும்போது யூதர்களின் பாவத்தை தேவன் ஏன் தண்டிக்கவேண்டும்? அவர்களுக்கு எதிராக ஏன் கோபாக்கினையை வெளிப்படுத்தவேண்டும்? இப்படிச் செய்கிற தேவனே நீதியில்லாத முறையில் செயல்படுவதாகிவிடுகிறதே என்றெல்லாம் கேள்விகள் கேட்கப்படுகின்றன. தேவ கோபம், கோபாக்கினை என்ற வார்த்தை ரோமர் 1:18, 4:15, மத் 3:7 லூக்கா 3:7; 21:23, யோவான் 3:17 ஆகிய இடங்களிலும் பயன்படுத்தப்படுவதைப் பாருங்கள்.

அப்படிச் சொல்லக்கூடாது; சொல்லக்கூடுமானால், தேவன் உலகத்தை நியாயந்தீர்ப்பதெப்படி? (ரோமர் 3:6)

அப்படிச் சொல்லக்கூடாது (கிரேக்க மொழியில் mè genoito, இப்படிப்பட்ட எண்ணத்தை விட்டுவிடு என்றும் பொருள்படும்) என்ற வார்த்தையை பவுல் மீண்டும் பயன்படுத்துகிறார். "மகாநீதிபரரைக் குற்றப்படுத்துவீரோ" (யோபு 34:17) என்கிறார் எலிகூ.

பாவம் செய்த யூதரை தேவன் தண்டிக்காமல் விடுவாரேயானால், முழு உலகத்தையும் தேவனால் தண்டிக்க முடியாமல் போய்விடும். 'உலகம்' என்ற வார்த்தை புறஜாதியாரையும் உட்படுத்துவதாக இருக்கிறது. மரித்தோராகிய சிறியோரும் பெரியோரும் தேவனுடைய பெரிய வெள்ளை சிங்காசனத்துக்கு முன்பு நிறுத்தப்பட்டு தங்கள் கிரியைகளின் அடிப்படையில் நியாயத்தீர்ப்படைவதை யோவான் வெளி 20:12ல் தரிசிக்கிறார். "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" (அப் 17:31) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் நடந்தாக வேண்டுமானால் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத யூதர்களுக்கு தண்டனை உண்டு என்பது உறுதி. இதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு, சங்கீதம் 2:11,12 அதை அறிவிக்கிறது.

அன்றியும், என் பொய்யினாலே தேவனுடைய சத்தியம் அவருக்கு மகிமையுண்டாக விளங்கினதுண்டானால், இனி நான் பாவியென்று தீர்க்கப்படுவானேன்? (ரோமர் 3:7)

இந்த நான்காவது கேள்வி முந்தினதோடு சம்பந்தப்பட்டது. நான் பொய் சொல்லுகிறேன் என்பது உண்மைதான். ஒருவிதத்தில் அது தேவனுக்கு பெருமையையே சேர்க்கிறது. ஏனென்றால் அது தேவனுடைய உண்மையை விளங்க வைக்கிறது. தான் ஒருவரே சத்தியபரர் என்ற முறையில் அவர் மகிமைப்படுகிறார். அவரை மகிமைப்படுத்தும் ஒரு காரியத்தைச் செய்யும் நான் தண்டிக்கப்படவேண்டியதென்ன?

தேவனுடைய உபதேசங்களில் குறைகண்டுபிடிக்கும் ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தன்னை முட்டாளாக்கிக் கொள்கிறான் என்பதை இந்த வசனத்தில் இருந்து அறிந்துகொள்ளுகிறோம். இது தவறான ஒரு கேள்வி. ஒருவன் யூதனாக இருந்தாலும் சரி, கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, மெய்தேவன் யார் என்பதை அறிந்து கொள்ளாதவனாக இருந்தாலும் சரி, அவனுடைய பாவத்தின் மூலமாக, தேவன் மகிமைப்படுவதில்லை, உண்மையில் பாவம் அவருடைய மகிமையில் பாதிப்பை மட்டுமே உண்டாக்குகிறது. இந்த பாதிப்பை மாற்றியமைப்பதின் மூலமாகத்தான் தேவன் மகிமைப்படுகிறார். **அநீதி ஒருபோதும் நீதியைப் பிறப்பிப்பதில்லை.** ஒரு கொலைகாரன் தனது பாவக்கிரியையின் மூலமாக அந்த தேசத்தின்

நீதி நியாயத்தை கனம்பண்ணுவதில்லை, கனவீனம் பண்ணுகிறான். ஆனாலும் அதினிமித்தம் நியாயத்தீர்ப்பைப் பெற்று, தூக்கிலிடப்படும்போது, மற்றவர்கள் இந்நிகழ்வின்மூலம் ஒரு எச்சரிப்பைப் பெற்றுக்கொள்வதினால் நீதி கனம்பண்ணப்படுகிறது.

நன்மை வரும்படிக்குத் தீமை செய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள்மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும் (ரோமர் 3:8)

எங்கள் பொய்யினால் தேவன் மகிமைப்படுகிறார் என்று சொல்லி தங்களுடைய பொல்லாப்பில் பெருமை பாராட்டும் துன்மார்க்கருக்கு பவுல் சொல்லும் பதில் இதுதான். அதாவது நாம் தீமை செய்வோம். தேவன் அதை நன்மையாக மாற்றட்டும் என்று சொல்லுவதுபோல் இருக்கிறது. நாம் கூடுதலாகப் பாவம் செய்து, கூடுதலாக நன்மை செய்ய தேவனுக்குத் தருணம் கொடுப்போம் என்று சொல்லுவது எவ்வளவு முட்டாள்தனமான வாதம். தேவனுடைய பரிசுத்தத்தின் மகத்துவத்தைக் குறித்த உணர்வற்றவர்களினால்தான் இவ்வாறு பேசமுடியும். பாவம் எந்த விதத்திலும் யாருக்கும் நன்மையைத் தரமுடியாது.

மனிதனுடைய இரட்சிப்பு அவனுடைய நற்கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது அல்ல, தேவகிருபையின் செயலாற்றல் என்ற பவுலின் உபதேசத்தை பல யூதர்கள் தவறான முறையில் விளங்கிக்கொண்டு, இது மனிதர்களில் துன்மார்க்கத்தை உருவாக்குவதாக பவுலைக் குற்றப்படுத்தி வந்தார்கள் என்பதை இந்த வசனத்தின் பின்பகுதி அறிவிக்கிறது. முக்கியமாக "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20) என்பது போன்ற சத்தியங்கள் யூதர்கள் மத்தியில் பெரிய சர்ச்சையை உண்டுபண்ணியிருக்கவேண்டும். இன்றும் இதுகுறித்த விளக்கம் சபைகளில் சொல்லப்படுவதில்லை.

இவ்வாறு தன்னைக் குற்றப்படுத்துகிறவர்களிடம் வழக்காடி தன்னுடைய நேரத்தை வீணாக்க பவுல் விரும்பவில்லை. அவர்களில் மனந்திரும்புதலையோ, மனமாற்றத்தையோ உண்டாக்க முடியாது என்பதை உணர்ந்தவராய், இப்படிப் பேசுகிறவர்கள் தேவனிடமிருந்து நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள் என்று சொல்லுவதோடு நிறுத்திக்கொள்ளுகிறார். இவர்கள் யூதர்களாகவோ, விருத்தசேதன முள்ளவர்களாகவோகூட இருக்கலாம். ஆனாலும் சத்திய உபதேசத்தை தங்கள் சுயவிருப்பத்தின்படி மாற்றிக்கொள்ள விரும்புவார்களானால்

அவர்கள் தேவகோபாக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ளவே முடியாது.

மனித இனத்துக்கு எதிரான குற்றச்சாட்டு (வசனம் 9-18)

ரோமர் மூன்றாவது அதிகாரத்தை கீழ்கண்டவாறு மூன்று பகுதிகளாகப் பிரித்து தியானித்துக்கொண்டிருக்கிறோம்.

முதல் பகுதி : பவுலின் உபதேசத்துக்கு எதிரான யூதர்களின் நான்கு கேள்விகளும், அதற்கான பதிலும். (வசனம் 1-8)

இரண்டாம் பகுதி : யூதர், கிரேக்கர் (புறஜாதியார்) அத்தனைபேருமே பாவிகள் என்பதற்கு வேதத்திலிருந்து ஆதாரம் (வசனம் 9-18). இந்த இரண்டாவது பகுதியை இப்போது தியானிக்கிறோம்.

மூன்றாம் பகுதி : ரோமர் 1:17ல் சொல்லப்பட்ட விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்ற சத்தியமும், தேவநீதியைக்குறித்த விளக்கமும் (வசனம் 19-31)

ஆனாலும் என்ன? அவர்களைப்பார்க்கிலும் நாங்கள் விசேஷித்தவர்களா? எவ்வளவேனும் விசேஷித்தவர்களல்ல. யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்களென்பதை முன்பு திருஷ்டாந்தப்படுத்தினோமே. (ரோமர் 3:9)

'நாங்கள்' என்ற வார்த்தை யூதர்களையே குறிப்பிடுகிறது. ஆனாலும் என்ன? யூதர்களாகிய நாம் புறஜாதியாரைக்காட்டிலும் சிறப்புமிக்கவர்களா என்ற கேள்வி முந்தின நான்கு கேள்விகளைக் கேட்டவர்களிடமிருந்து தான் வருகிறது. தேவனுடைய வாக்கியங்கள் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட விசேஷித்த மேன்மை என்று 2-வது வசனத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறபடியால் தங்களை விசேஷித்தவர்கள் என்று பவுல் சொல்லுவார் என்ற எதிர்பார்ப்புடன் இந்த கேள்வி கேட்கப்படுகின்றது. ஆனால் இந்த மேன்மையை அவர்கள் தங்கள் தகுதியின் அடிப்படையில் பெறவில்லை. அது முற்றிலுமாக தேவனுடைய ஈவு என்பதை பவுல் அறிவார். "விசுவாசத்தினால் ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான்" என்ற சத்தியத்தைப் பொறுத்தமட்டில் அவர்கள் புறஜாதியாரைவிட எந்த விதத்திலும் சிறப்பானவர்கள் அல்ல. எனவே

யூதர்கள் விசேஷித்தவர்கள் அல்ல என்கிறார்.

எதன் அடிப்படையில் பவுல் இதைச் சொல்லுகிறார்? யூதர், புறஜாதியார் அத்தனைபேருமே பாவிகள் என்று தேவனுடைய சமுகத்தில் நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று (ரோமர் 1:21 - 2:29). மனித இனம் முழுவதுமே பாவத்துக்குட்பட்டிருக்கிறது. யாவரும் என்று சொல்லும்போது ஆதாமின் சந்ததியார் அத்தனைபேருமே பாவிகள்தான் என்பதாகிவிடுகிறது. "நாங்கள் விசேஷித்தவர்களா" என்று சொல்லும்போது யூதனாகிய பவுல் தன்னையும் கேள்வி கேட்பவர்களோடு சேர்த்துக்கொள்வதைக் கவனியுங்கள். கிரியைகளின் அடிப்படையில் பார்க்கும்போது எந்தமனிதனும் பாவிதான் என்கிறார் பவுல். கலாத்தியர் 3:22ல் அவர் சொல்லுகிறபடி: "இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின்கீழ் அடைத்துப்போட்டது". ரோமர் 11:32 சொல்லுகிறது: "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார்". மனிதஇனம் முழுவதுமே பாவத்தின்கீழ் அடைக்கப்பட்டிருக்கிறது என்பது தேவனுடைய வார்த்தை.

பாவம் என்ற வார்த்தை ரோமர் நிருபத்தில் முதல் தடவையாக இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் 48 முறை காணலாம். யாவரும் பாவத்துக்குட்பட்டவர்கள் என்பது இதுவரை நாம் தியானித்த வசனங்களின் முடிவுரையாக அமைகிறது. தங்களுடைய பார்வையில் அவர்கள் பாவத்துக்குட்படாதவர்களாக இருக்கலாம். மற்ற மனிதர்களும் அவர்களைப் பாவிகளாகக் கருதாமல் இருக்கலாம். ஆனால் தேவ சமுகத்தில் அவர்கள் பாவிகளே.

அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:10)

இந்த வேத பகுதி (ரோமர் 3:10-18) மனித இனத்தின் மூன்று பிரிவினருக்கும் எதிராக தேவசமுகத்தில் தாக்கல் செய்யப்படும் குற்றப்பத்திரிகை என்று கருதப்படுகிறது. வேத ஆதாரங்களுடன் மொத்தம் 14 பாவங்கள் இந்த வேதபகுதியில் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த வேத பகுதி அறிவிக்கும் காரியங்கள் :

1) பொதுவான குற்றச்சாட்டு (வசனம் 10)

2) பாவத்தின் பொதுவான தன்மைகள் (வசனம் 11,12)

3) வாயின் வார்த்தையினால் வரும் பாவங்கள் (வசனம் 13,14)

4) வெளிப்படையான பாவகிரியைகள் (வசனம் 15-17)

5) பாவத்தின் மூலகாரணம் (வசனம் 18)

"நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" (குற்றச்சாட்டு எண்:1) என்கிறார் பவுல். "நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" (சங் 14:1). "எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (சங் 14:3). சங்கீதம் 53:3ல் இந்த வசனம் மீண்டுமாய் சொல்லப்படுகிறது. யோபு சொல்லுகிறார்: "தேவனுக்கு முன்பாக மனுஷன் நீதிமானாயிருப்பதெப்படி?" (9:2). பிரசங்கி 7:20 சொல்லுகிறது, "ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை." "பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே" (1 இராஜா 8:46) என்கிறார் சாலொமோன். "என் இருதயத்தைச் சுத்தமாக்கினேன், என் பாவமறத் துப்புரவானேன் என்று சொல்லத்தக்கவன் யார்?" (நீதி 20:9).

"ஒருவனாகிலும் இல்லை" என்ற அறிவிப்பு ஜாதி மதபேதமின்றி உலகமெங்கும் காணப்படும் ஒழுக்கச் சீர்கேட்டை உறுதிப்படுத்துகிறது. எனவே இந்த குற்றப்பத்திரிகை யூதர்களுக்கு மட்டும் எதிரானது அல்ல என்பது தெளிவாகிறது. **விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதற்கு முன்பாக ஆதாம் பாவமில்லாதிருந்தான் என்றுதான் சொல்லமுடியுமே தவிர அவன் நீதிமானாக இருந்தான் என்று சொல்லமுடியாது.** ஆதாம் எந்த ஒரு நீதியின் கிரியையையும் நடப்பித்ததாக வேதம் சொல்லவில்லையே. "உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்" என்று தேவனிடம் நன்னடத்தை சான்றிதழ் பெற்ற யோபுவிடமும் பல குறைகளை நாம் அறிவோம் "தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்" (அப் 13:22) என்று அழைக்கப்பட்ட தாவீது தன்னுடைய உத்தமத்தில் நிலைத்திருக்கவில்லையே (சங் 51), கர்த்தருடைய கண்களில் கிருபையைப் பெற்றுக்கொண்ட நோவா தன் நீதியில் நிலைத்திருக்கவில்லையே (ஆதி 9:21). அதனால்தான் தேவன் சொல்லுகிறார் : "மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கி பொல்லாததாயிருக்கிறது" (ஆதி 8:21).

உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத் தேடுகிறவன் இல்லை; (ரோமர் 3:11)

உணர்வில்லாத நிலை மனித இனத்துக்கு எதிரான இரண்டாவது குற்றச்சாட்டாக அமைகிறது. நீதியற்றவர்கள் வெகுவிரைவில்

உணர்வற்றவர்களாகிறார்கள். தேவனுக்கடுத்த காரியங்களைப் புரிந்துகொள்ளமுடியாத நிலையை இது அறிவிக்கிறது, 1 கொரிந்தியர் 2:14 வாசித்துப்பாருங்கள். **தேவஞானம் அவர்களுக்கு மறைக்கப்பட்டதாகி விடுகிறது. இப்படிப்பட்டவர்களால் தேவனுடைய பரிசுத்தத்தின் மகத்துவத்தையும், அவர் தங்களில் எதிர்பார்க்கும் பரிசுத்தத்தையும் அறிந்து கொள்ளமுடியாது.** அவருடைய பார்வையில் பாவம் எவ்வளவு அசுத்தமானது என்பதை விளங்கிக் கொள்ளமுடியாது. மனித இனத்தின் மீட்புக்காக தேவன் செய்த மிகப்பெரிய தியாகத்தின் மேன்மையை உணர்ந்துகொள்ளமுடியாது. "மிருக குணமுள்ள மனுஷன் அதை அறியான்; மூடன் அதை உணரான்" (சங் 92:6). "அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்" (சங் 82:5) என்றெல்லாம் வாசிக்கிறோம்.

தேவனைத் தேடுகிறவர்கள் இல்லை என்பது மனித இனத்துக்கு எதிரான மூன்றாவது குற்றச்சாட்டு. சங்கீதம் 14:2 சொல்லுகிறது, "தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்". தன்னைத் தேடுகிற ஒரு மனிதன், உலகின் எந்த ஒரு மூலைமுடுக்கில் இருந்தாலும் நிச்சயமாகவே தேவன் அவனைக் கண்டுகொள்வார். உலகத்து மனிதர்கள் தாங்கள் தேவனைத் தேடுவதாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களையே ஏமாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள்.

தேவனைத் தேடுகிறவன் என்று சொல்லும்போது அவரை அறிந்துகொள்ள விரும்புகிறவன், அவருடைய சித்தத்தைச் செய்யவிரும்புகிறவன் என்றும் பொருள் கொள்ளலாம். இப்படிப்பட்டவர்களை தேவன் ஏற்றுக்கொள்கிறார் என்பதினால் அவர்கள் பூமியில் அதிகமாய் காணப்படவில்லை என்பது தெளிவாகிறது. அவரைத் தேடி, கண்டு கொள்வது என்பது மனிதனுக்குக் கொடுக்கப்படும் மிகப்பெரிய சிலாக்கியம். "உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் அவரைத் தேடும்போது, அவரை கண்டடைவாய்" (உபா 4:29) என்கிறார் மோசே. சங் 105:4 சொல்கிறது : "கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடுங்கள்; அவர் சமுகத்தை நித்தமும் தேடுங்கள்". ஏசாயா 55:6, ஓசியா 10:12, அப் 17:27 வாசித்துப்பாருங்கள்.

வேத புத்தகத்தில் மனிதன் தேவனைத்தேடும் நிகழ்ச்சிகளைவிட தேவன் மனிதனைத் தேடும் சம்பவங்கள்தான் கூடுதலாகக் காணப்படுகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் தன் முதுகை தேவனுக்கு நேராகத் திருப்பி தன்னை மறைத்துக்கொள்ள முயற்சி செய்த நாளிலிருந்து, "நீ எங்கே இருக்கிறாய்" (ஆதி 3:9) என்ற தேவனுடைய

சத்தம் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. பாவம் செய்த ஆதாம், ஆண்டவரே நீர் எங்கே இருக்கிறீர் என்று அவரைத் தேடவில்லை. அவனுடைய பிள்ளைகளான நாமும் தேடவில்லை. "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷ குமாரன் வந்திருக்கிறார்" (லூக்கா 19:10) என்ற வசனத்தின்படி மனிதனைத் தேடி தேவன் வந்தார்.

எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. (ரோமர் 3:12)

எல்லாரும் வழிதப்பிப் போனார்கள் என்பது நான்காவது குற்றச்சாட்டு. எல்லாரும் என்ற வார்த்தை ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து (யோவான் 3:15), ஆனால் தேவனுடைய பிள்ளைகளாக உயிர்ப்பிக்கப்படாதவர்களைக் குறிப்பிடுகிறது என்று லூத்தர் சொல்கிறார். நேர்வழி இருப்பதை அறிந்தும் அதை விட்டுவிட்டு தாங்களாகவே தங்களுக்கு ஒரு வழியைத் தெரிந்து கொள்வது பாவமாகிறது. "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்" என்று ஏசாயா 53:6ல் வாசிக்கிறோம். "அவர்கள் எல்லாரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்" (சங் 53:3; 14:3). மல்கியா 2:8 வாசித்துப்பாருங்கள். இவ்வாறு வழிதப்பிப் போகிறவர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு வினாடியும் தேவனைவிட்டு விலகிப்போய்க்கொண்டே இருக்கிறார்கள். **பலர் விக்கிரகங்களை நம்பி அவற்றை ஆராதிக்கிறார்கள். மற்றும் சிலர் தங்களுடைய சுயநீதியை நம்பி தங்களையே ஆராதிக்கிறார்கள்.** அவர்களுக்கு மனநிம்மதியும் இல்லை. பாதுகாப்பும் இல்லை. ஆனாலும் தங்களுடைய பரிதாபத்துக்குரிய நிலையைக் கண்டுகொள்ளாமலேயே இருக்கிறார்கள்.

வழிதப்பிப் போகிறவர்களின் இறுதி முடிவு கெட்டுப்போவதுதான். இது மனித இனத்துக்கு எதிரான ஐந்தாவது குற்றச்சாட்டு. கெட்டுப்போகிறது என்பதற்குப் பயன்படுத்தப்படும் வார்த்தை பழங்கள் அழுகி கெட்டுப்போவதற்கு ஒப்பனையாயிருக்கிறது. அவை எவருக்கும் பிரயோஜனமற்றதாகப் போய்விடுகிறது. "அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான அக்கிரமங்களைச் செய்துவருகிறார்கள்; நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை" (சங் 53:1; சங் 14:1).

நன்மை செய்கிறவன் ஒருவனும் இல்லை என்பது ஆறாவது குற்றச்சாட்டு. ஆதியாகமம் 6:5 இதை உறுதிப்படுத்துகிறது. அவர்கள்

என்ன முயற்சி செய்தாலும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய விதத்தில் எந்த நன்மையும் செய்யமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிடுகிறது. இதன் விளைவாக தேவன் அவர்களைச் சிருஷ்டித்த நோக்கம் நிறைவேறாமல் போய்விடுகிறது. தங்களுக்கானாலும் சரி, பிறருக்கானாலும் சரி, அவர்களால் எந்த நன்மையும் செய்ய முடிவதில்லை.

அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி, தங்கள் நாவுகளால் வஞ்சனை செய்கிறார்கள்; அவர்களுடைய உதடுகளின் கீழே பாம்பின் விஷம் இருக்கிறது; (ரோமர் 3:13)

13,14 ஆகிய வசனங்களில் வாயின் வார்த்தையினால் உண்டாகும் நான்கு பாவங்கள் சொல்லப்படுகின்றன. ஏற்கனவே ஆறு குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டதைப் பார்த்தோம். மனிதர்களுடைய சுபாவம் எந்த அளவுக்கு சீரழிந்துவிட்டது என்றால்,

7) அவர்கள் வாய் திறந்த சவக்குழி போலாகிறது.

8) அவர்கள் தங்கள் நாவுகளை பொய் சொல்லவே பயன்படுத்துகிறார்கள்.

9) அவர்களுடைய பேச்சு விஷத்தைப்போல் ஆபத்தானதாகிறது.

10) அவர்கள் வாயில் சாபமும் கசப்புமே இருக்கிறது (வசனம் 14).

இந்த பாவங்கள் சங்கீதம் 5:9ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றன. "அவர்கள் வாயில் உண்மை இல்லை, அவர்கள் உள்ளம் கேடுபாடுள்ளது; அவர்கள் தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி; தங்கள் நாவினால் இச்சகம் பேசுகிறார்கள்". "அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப் போலப் படரும்" (2 தீமோ 2:17).

ஒருவனுடைய தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழி என்று சொல்லும்போது, அவன் மனிதர்களை அப்படியே விழுங்கிப் போட ஆயத்தமாயிருக்கிறான் என்று எடுத்துக்கொள்ளலாம். ஒரு துன்மார்க்கனின் வார்த்தைகள் பிரேதக்குழியைப்போன்று நாற்றமுடையதாய் அசுத்தமானவைகளாகத்தான் இருக்கும். அவை வஞ்சனையுள்ளவை. அந்த வஞ்சனையோ விஷத்தைப் போல வேலை செய்கின்றது. தாவீது சொல்கிறார்: "சர்ப்பத்தைப் போல் தங்கள் நாவைக் கூர்மையாக்குகிறார்கள்; அவர்கள் உதடுகளின்கீழ் விரியன் பாம்பின் விஷம் இருக்கிறது" (சங் 140:3). "அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப்போல

மெதுவானவைகள், அவன் இருதயமோ யுத்தம்; அவன் வார்த்தைகள் எண்ணெயிலும் மிருதுவானவைகள், ஆனாலும் அவைகள் உருவின பட்டயங்கள்" (சங் 55:21). மற்றவர்களுடைய புகழ்ச்சி, அந்தஸ்து, மரியாதை ஆகியவற்றை தங்கள் பேச்சின்மூலமாக இவர்கள் அழித்துப் போடுகிறார்கள்.

இவ்வாறு வாயின் வார்த்தையில் வெளிப்படும் வஞ்சனையைக் குறித்துப் பேசிய அதே தாவீது, தன் போர் வீரனாகிய உரியாவை வஞ்சிக்கும் நோக்கத்தில் எவ்வாறு பேசுகிறான் என்பதை 2 சாமுவேல் 11 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். "அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும், அவர்கள் உதடுகள் தீவினையைப் பேசும்" (நீதி 24:2) என்று சரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அவன் வாயின் வார்த்தைகள் அக்கிரமமும் வஞ்சகமுமுள்ளது" (சங் 36:3). யாக்கோபு சொல்கிறார் : "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும், சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது" (3:8).

அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது. (ரோமர் 3:14)

மனித இனத்துக்கு எதிரான பத்தாவது குற்றச்சாட்டு இது. "அவன் வாய் சபிப்பினாலும் கபடத்தினாலும் கொடுமையினாலும் நிறைந்திருக்கிறது; அவன் நாவின்கீழ் தீவினையும் அக்கிரமமும் உண்டு" (சங் 10:7) என்ற வசனத்தைப் பவுல் பயன்படுத்துகிறார். தாவீதுக்கு விரோதமாக சீமேயி சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்தவனாய் பேசுவதை 2 சாமுவேல் 16:5-8ல் வாசித்துப்பாருங்கள். வாயின் வார்த்தைகள் எவ்வளவு கொடூரமானவை என்றால் யாக்கோபு சொல்லுகிறார், "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது" (யாக் 3:6). யாக் 3:6-10 வசனங்களையும் வாசித்துப்பாருங்கள். "தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம்" (வசனம் 9).

நீதிமொழிகள் 10:19 சொல்லுகிறது: "சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது; தன் உதடுகளை அடக்குகிறவனே புத்திமான்". சங்கீதம் 39:1, நீதி 17:27, மத் 5:22,37; 10:19,20, தீத்து 3:2, யாக் 1:19,26, 1 பேதுரு 3:10 வாசித்துப்பாருங்கள்.

அவர்கள் கால்கள் இரத்தஞ்சிந்துகிறதற்குத் தீவிரிக்கிறது; (ரோமர் 3:15)

பாவம் பாவத்தைப் பிறப்பிக்கிறது. எந்த அளவுக்கு ஒருவன் பாவம் செய்கிறானோ, அந்த அளவுக்கு பாவம் செய்வது எளிதாகிவிடுகிறது. துவக்கத்தில் பயத்தோடும் நடுக்கத்தோடும் பாவம் செய்ய ஆரம்பித்தவன் பிறகு விடுதலையோடு செய்கிறான், மட்டுமல்ல பாவம் செய்யத் தீவிரிக்கிறான். தேவன் அந்தப் பாவியைத் தண்டிக்கிறார் என்பதல்ல, அவன் தன்னைத்தானே தண்டிக்கிறான்.

15 முதல் 18 வரையுள்ள வசனங்களில் வெளிப்படையான கிரியைகளில் வெளிப்படும் நான்கு பாவங்கள் சொல்லப்படுகின்றன.

11) மற்றவர்களைத் தாக்கவும் கொலைசெய்யவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். (வசனம் 15)

12) அவர்கள் போகும் வழியெல்லாம் நாசமும் துன்பமும்தான் உண்டு (வசனம் 16)

13) சமாதானத்தை அவர்கள் அறியமாட்டார்கள் (வசனம் 17)

14) அவர்களிடம் தெய்வபயம் இருப்பதில்லை (வசனம் 18)

ஏசாயா 59:7ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அவர்கள் கால்கள் பொல்லாப்புச் செய்ய ஓடி, குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தத் தீவிரிக்கிறது". ஏதேன் தோட்டத்துக்கு வெளியே செய்யப்பட்ட முதல் பாவம் கொலை. "காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொலை செய்தான்" (ஆதி 4:8) என்று வாசிக்கிறோம். **உலகின் முதலாவது பாவம் மனிதனை தேவனிடமிருந்து பிரித்தது என்றால் இரண்டாவது பாவம் மனிதனை அவன் சகோதரனிடமிருந்து பிரித்தது.** காயீன் காலம் துவங்கி மனிதன் ஒரு கொலைகாரனாகத்தான் உலகில் சுற்றித்திரிகிறான். நீதிமொழிகள் 1:16 சொல்லுகிறது, "அவர்கள் கால்கள் தீங்குசெய்ய ஓடி, இரத்தஞ்சிந்தத் தீவிரிக்கிறது" (நீதி 1:16). பவுலைக் கொலைசெய்யும்வரை புசிப்பதும் இல்லை, குடிப்பதும் இல்லை என்று உபவாசமிருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட யூதர்களைக் குறித்து அப் 23:21ல் வாசியுங்கள்.

நாசமும் நிர்ப்பந்தமும் அவர்கள் வழிகளிலிருக்கிறது. (ரோமர் 3:16)

ஏசாயா 59:7ன் பின்பகுதி இவ்வாறு சொல்லுகிறது: "அவர்கள் நினைவுகள் அக்கிரமநினைவுகள்; பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது". அவர்கள் போகிற வழிகளில் எல்லாம் அழிவுதான் மிஞ்சுகிறது. நோவாவின் காலத்தைப் பார்த்தோமானால், "பூமியானது தேவனுக்கு முன்பாகச் சீர்கெட்டதாயிருந்தது; பூமி கொடுமையினால் நிறைந்திருந்தது. தேவன் பூமியைப் பார்த்தார்; இதோ அது சீர்கெட்டதாயிருந்தது; மாம்சமான யாவரும் பூமியின்மேல் தங்கள் வழியைக் கெடுத்துக்கொண்டிருந்தார்கள்" (ஆதி 6:11,12) என்று வாசிக்கிறோம்.

சமாதான வழியை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; (ரோமர் 3:17)

ஏசாயா சொல்லுகிறார்: "சமாதான வழியை அறியார்கள்; அவர்கள் நடைகளில் நியாயமில்லை; தங்கள் பாதைகளைத் தாங்களே கோணலாக்கிக்கொண்டார்கள்; அவைகளில் நடக்கிற ஒருவனும் சமாதானத்தை அறியான்" (59:8). துன்மார்க்கர் தெரிந்து கொண்ட அழிவின் பாதை அவர்களை எங்கே வழிநடத்துகிறது என்பதைப் பாருங்கள். அவர்களுடைய சிந்தையை பொறாமை, சண்டை, வெறுப்பு, பகை, குரோதம், பழிவாங்குதல் ஆகியவைகளே மேற்கொள்கிறது. தனது அயலான் வீட்டில் சமாதானம், மகிழ்ச்சி, செழிப்பு உண்டாயிருப்பதை அவர்கள் விரும்புவதில்லை.

ஆதியாகமம் முதலாவது அதிகாரத்தில் ஒரு காரியத்தை நன்கு கவனிக்கவேண்டும். வெளிச்சத்தை உண்டாக்கிய தேவன் அது நல்லது என்று கண்டார். பூமியையும், சமுத்திரத்தையும் உண்டாக்கிய தேவன் அது நல்லது என்று கண்டார். புல்லையும் பூண்டுகளையும் மரங்களையும் உண்டாக்கிய தேவன் அவை நல்லவை என்று கண்டார். பகலையும், இரவையும் உண்டாக்கிய தேவன் அவை நல்லவை என்று கண்டார். மீன்வகைகளையும் பறவைகளையும் உண்டாக்கிய தேவன் அவை நல்லவை என்று கண்டார். மிருகங்களையும், பிராணிகளையும் உருவாக்கிய தேவன் அவை நல்லவை என்று கண்டார். ஆனால் மனிதனை உண்டாக்கியபின் தேவன் அந்த சிருஷ்டியை நல்லது என்று கண்டதாக வேதத்தில் சொல்லப்படவில்லை. மாறாக, "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்" (ஆதி 6:6).

அவர்கள் கண்களுக்கு முன்பாகத் தெய்வபயமில்லை, என்று எழுதியிருக்கிறதே. (ரோமர் 3:18)

மனித இனத்துக்கு எதிரான பதினான்காவது (கடைசி) குற்றச்சாட்டு இது. 11-வது வசனத்தின்படி அவர்கள் தேவனைத் தேடுவதில்லை என்பதினால் தேவனைக் குறித்த மரியாதை அவர்களிடம் இருப்பதில்லை. பவுலின் இந்த அறிக்கைக்கு ஆதாரமாக சங்கீதம் 36:1 பயன்படுத்தப்படுகிறது. "அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை". பூமியில் காணப்படும் சகல சீர்கேடுகளுக்கும் பிரதானமான ஒரு காரணம் உண்டென்றால் அது அவர்களிடம் காணப்படும் தெய்வ பயமின்மைதான். எந்த அளவுக்கு அவர்களிடத்தில் துணிகரம் உண்டாகிறது என்றால் அவர்கள் தேவனிடம்: "எங்களை விட்டு விலகியிரும், உம்முடைய வழிகளை அறிய விரும்போம்" (யோபு 21:14) என்கிறார்கள்.

தேவனுடைய மாட்சிமை, மகத்துவம், நீதி, பரிசுத்தம் ஆகியவற்றை உணர்ந்தும் தன் எண்ணத்திலோ, செயலிலோ தேவனுக்கு எதிரானவற்றைக்குறித்து மனிதனின் இருதயத்தில் ஒரு அச்சம் உண்டாகுமானால் அதுவே தெய்வபயமாகும். மெய் தேவனைக் குறித்த அச்சம் இன்று மனிதர்களிடம் குறைந்துகொண்டே இருக்கிறது. தெய்வபயமில்லாமல் மனிதர்கள் இருப்பதினால்தான் உலகில் பாவங்கள் பெருகிக்கொண்டு இருக்கின்றன. "அவன் கண்களுக்குமுன் தெய்வபயம் இல்லை" (சங் 36:11) என்று வாசிக்கிறோம். **இன்று சபைகளும், விசுவாசிகள் தேவனை நேசிக்கும்படியாக போதிக்கின்றனவே தவிர, அவருக்கு முன்பாக பயந்து நடக்கும்படி சொல்லித்தருவதில்லை.** ஒரு குற்றவாளி நீதிபதியால் மன்னிக்கப்பட்டாலொழிய, தான் என்ன தண்டனையைப் பெறவிருக்கிறான் என்பதை மறைத்து வைப்பது சரியல்ல. தன்னுடைய நோயாளிக்கு இருக்கும் நோய் கான்சர் கட்டி என்பதையும், அது உடனடியாக வெட்டி எடுக்கப்படாவிடில் அவன் மரணத்தைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பதை அறிவிக்காத ஒரு வைத்தியன் உண்மையான வைத்தியன் அல்ல. **தேவன் அன்புள்ளவர், இரக்கமுள்ளவர் என்பதெல்லாம் உண்மைதான். அதே நேரத்தில் அவர் பாவத்தை நியாயந்தீர்ப்பதில் பயங்கரமான பராக்கிரமசாலியாகவும், நீதியுள்ள நியாயாதிபதியாகவும் இருக்கிறார்.**

தேவனுக்கு பயப்படுகிறவனாக வேதத்தில் குறிப்பிடப்படும் முதல் மனிதன் கேராரின் ராஜாவாகிய அபிமெலேக்கு (ஆதி 20:11). தேவனைப்பற்றிய பயமே ஒருவனை சகல நீதியிலும் நிலைத்திருக்கச் செய்கிறது, தேவனுக்குப் பயப்படுவதினால்தான் உடல் ஊனமுற்றோரை அசட்டைபண்ணாமல் இருக்கிறோம் (லேவி 19:14), முதிர்வயதுள்ளோரை கனம் பண்ணுகிறோம் (லேவி 19:32), பிறருக்கு அநியாயம் செய்யாமல் இருக்கிறோம் (லேவி 25:17), சகோதரனிடம் வட்டி வாங்காமல் இருக்கிறோம் (லேவி 25:36), கொடூரமாய் ஆளுகை செய்யாமல்

இருக்கிறோம் (லேவி 25:43), மெய்தேவனை சேவிக்கிறோம் (உபா 13:4).

ரோமர் 3:9-18 வேதபகுதி இரட்சிக்கப்படாத ஒரு மனிதனுடைய அவலநிலை என்ன என்பதை திட்டவட்டமாக அறிவிக்கிறது. நம்முடைய தாழ்மையான நிலையிலும் தேவன் நம்மை நோக்கிப்பார்த்தார் என்பதை உணர்ந்தவர்களாய் நன்றியுள்ள இருதயத்தோடு அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும். **மனித முயற்சியில் எதுவுமே செய்துகொள்ள முடியாது என்ற நிலையில் தேவன் நம்மை நீதிமானாக்கும்படியாக ஒரு இரட்சிப்பின் திட்டத்தை உருவாக்கி, நமக்காக அதை தன்னுடைய குமாரன் மூலமாக நிறைவேற்றி முடித்தார்.** இதைத்தான் பவுலின் சுவிசேஷம் நமக்கு அறிவிக்கிறது.

"எழுதியிருக்கிறதே" என்று இந்த வேதபகுதி நிறைவடைகிறது. தான் அறிவித்த காரியங்கள் அத்தனையும் தேவனுடைய வார்த்தையை ஆதாரமாகக் கொண்டவை என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார்.

வசனம்	சரீரபகுதி	செயல்படும் முறை	பாவநிலை
3:13	தொண்டை	பேச்சினால்	திறக்கப்பட்ட பிரேதக்குழி
	நாவு	பேச்சினால்	வஞ்சனை
	உதடு	பேச்சினால்	பாம்பின் விஷம்
3:14	வாய்	பேச்சினால்	சபிப்பு, கசப்பு
3:15	கால்கள்	கிரியையினால்	கொலை
3:16	நடக்கும் வழி	கிரியையினால்	நாசம், நிர்ப்பந்தம்
	நடக்கும் வழி	கிரியையினால்	சமாதானமின்மை
3:18	கண்கள்	மனப்பான்மையினால்	தெய்வபயமின்மை

வேதவாக்கியம் மட்டுமே தவறாதது (யோவான் 10:35) தேவனுடைய பார்வையில் மனிதன் யார் என்பதை இந்த வேதபகுதி அறிவிக்கிறது. இதைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றதின் விளைவாகவே தாவீது ஜெபிக்கிறார் : "ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந் தீர்க்கப் பிரவேசியாதேயும்" (சங் 143:2).

நியாயப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்குவதில்லை (வசனம் 19,20)

மேலும், வாய்கள் யாவும் அடைக்கப்படும்படிக்கும், உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும் படிக்கும், நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 3:19)

மனிதர்கள், அவர்கள் யாராயிருந்தாலும் சரி, தங்களுடைய கீழ்ப்படிதல் என்ற கிரியையினால் தேவ சமுகத்தில் நீதிமான்களாகக் கருதப்படுவதில்லை என்பதினால் அவர்கள் தங்களைக் குறித்து மேன்மைபாராட்ட ஒன்றும் இல்லை. இதைத்தான் பவுல் வாய்கள் யாவும் அடைக்கப்படும் என்கிறார். யோபுவின் மேட்டிமை நிறைந்த வாய் எவ்வாறு அடைக்கப்பட்டது என்பதை யோபு 40:2-5 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். தங்கள் கிரியைகள் அவர்களை இரட்சிப்பதில்லை என்பதினால் அவர்கள் எல்லாருமே தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகிறார்கள். முந்தின வேத பகுதியில் பவுல் மனிதர்கள் அத்தனை பேருமே பாவிகள்தான் என்பதை வேத வசனங்களின் அடிப்படையிலே நிரூபித்துவிட்டதைப் பார்த்தோம். இதன் அடிப்படையில் உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத் தீர்ப்புக்குத் தங்களை உட்படுத்திக்கொள்கிறார்கள்.

இந்த வசனத்தில் நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்கள் அதற்கு உட்பட்டவர்களுக்கு, அதாவது அதற்குக் கீழ்ப்படிவதாக வாக்குப் பண்ணியவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்கிறார் பவுல். சீனாய் மலையில் அதைப் பெற்றுக்கொண்டு "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" (யாத் 19:8) என்று அறிக்கையிட்ட யூதர்களை மனதிற்கொண்டு பவுல் பேசுகிறார். புறஜாதியார் கற்பலகைகளில் எழுதப்பட்ட பிரமாணங்களுக்கு உட்படாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய இருதயத்தில் தேவனுடைய பிரமாணம் இருந்ததினால் அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாய் இருக்கிறார்கள்

என்பதை ரோமர் 2:14ல் பார்த்தோம்.

இந்த வசனம் அறிவிக்கும் காரியங்கள் இரண்டு. அவை:

1) நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்களாக இருந்தும் அதற்கு யூதர்கள் கீழ்ப்படியவில்லை. ஆகையால் அவர்களுடைய வாய் அடைக்கப்பட்டது.

2) புறஜாதியாரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது.

"**கர்த்தாவே, நீர் அக்கிரமங்களைக் கவனித்திருப்பீரானால், யார் நிலை நிற்பான்**" (சங் 130:3) என்ற ஆரோகண சங்கீதத்தை இங்கே நினைவுகூருகிறோம். "ஆண்டவரே, நீதி உமக்கே உரியது . . . வெட்கம் எங்களுக்கே உரியது" (தானி 9:7) என்று அறிக்கையிட்டு, ஆயக்காரனைப்போல் "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்கா 18:13) என்று சொல்லி அவர் பாதத்தில் விழுவதைத் தவிர வேறு வழியே இல்லை.

இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப் பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. *(ரோமர் 3:20)*

பிரமாணம் (Law) என்ற வார்த்தை மேலதிகாரம் பெற்ற ஒருவர் தனக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கு அவர்கள் கடைப்பிடிக்கும்படியாக நியமிக்கும் கட்டளைகளையும் சட்டதிட்டங்களையுமே குறிப்பிடுகிறது. பாவத்தைப் பற்றிய அறிவை மனிதர்களுக்குள் கொண்டுவருவதுதான் நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டதின் நோக்கம். அது செய்யாதே என தடுக்கும் காரியத்தைச் செய்வதுதான் பாவம். யோவான் சொல்லுகிறபடி "பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4). ரோமர் 7:7-ல் பவுல் வெளிப்படையாகச் சொல்லுகிறார் : "பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை. இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால் இச்சை பாவம் என்று நான் அறியாதிருப்பேனே"

நியாயப்பிரமாணத்தைக் குறித்த முக்கியமான வெளிப்பாடு இந்த வசனத்தில் காணப்படுகிறது.

கேள்வி 1 : நியாயப்பிரமாணம் என்ன செய்கிறது?
பதில் : பாவத்தைக் குறித்த உணர்வைக் கொண்டுவருகிறது.

கேள்வி 2 : நியாயப்பிரமாணம் என்ன செய்வதில்லை?
பதில் : ஒருவனையும் நீதிமானாக்குவதில்லை.

தேவனுக்கு முன்பாக ஒருவனும் நீதிமானாக்கப்படுவதில்லை என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். தங்களுடைய நற்கிரியைகளினால் தங்களைத் தானே நீதிமான் என்று கருதும் பலர் உண்டு. அதனால் எந்த பிரயோஜனமும் இல்லை. நீதிமொழிகள் 21:2 சொல்லுகிறது: "மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்; கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப்பார்க்கிறார்". "தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" (2 கொரி 10:18). இயேசு சொல்லுகிறார்: "நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்; மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது" (லூக்கா 16:15).

"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" என்ற வசனம் கலாத்தியர் 2:16லும் காணப்படுகிறது. "நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" (கலா 3:11). தீத்து 3:5, அப் 13:29, எபே 2:8,9 வாசித்துப்பாருங்கள்.

ஆனாலும் இந்த வசனங்களின் அடிப்படையில் நியாயப்பிரமாணத்துக்கு மனிதனை இரட்சிக்கும் வல்லமை இல்லை என்று முடிவு செய்துவிட முடியாது. "நியாயப்பிரமாணத்தின் எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால் நமக்கு நீதியாயிருக்கும்" (உபா 6:25) என்கிறார் மோசே. கர்த்தர் சொல்லியிருக்கிறார்: "என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்" (லேவி 18:5). பவுல் சொல்வதுபோல் "நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப் படுவார்கள்" (ரோமர் 2:13). "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (யாக் 2:10). **எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியாத நிலையில் ஒருவனும் தேவனுடைய பார்வையில் நீதிமானாவதில்லை.** எனவே நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதின் நோக்கத்தை நாம்

அறிந்துகொள்ளவேண்டும். அதாவது ஒரு மனிதன் அவைகளுக்குக் கீழ்ப்படிந்து நீதிமானாக்கப்படுவதற்காக அல்ல - தன்னுடைய இயலாமையையும், தகுதியின்மையையும் உணர்ந்து தேவகிருபையைத் தேடி ஓடிவரும்படியாக மட்டுமே நியாயப்பிரமாணம் மனிதர்களுக்குக் கட்டளையிடப்பட்டது.

நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதுதான் (ரோமர் 7:14). பரிசுத்தமானதுதான் (ரோமர் 7:12). ஆனால் அது எதிர்பார்க்கும் பூரணத்துவத்துக்குள் எந்த மனிதனாலும் கிட்டிச்சேர முடியாது. ஏனென்றால் எந்த ஒரு மனிதனாலும் தன்னுடைய சுயபலத்தினால் முழு மனதோடும் முழு விருப்பத்தோடும் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிய முடியாது. வேண்டாவெறுப்பாக அவன் கீழ்ப்படியும்போது, அவன் தேவனுக்குப் பிரியமாயிருக்கமுடியாது. ஒருவேளை ஒருவன் சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிவதாகவே வைத்துக்கொள்ளுவோம். அதன் விளைவாக அவனில் பாவங்கள் காணப்படுவதில்லை. நரக வேதனை அவனுக்கு இருக்கப்போவதில்லை. ஆனாலும் அதினிமித்தம் அவனுக்கு பரலோகத்துக்குள் பிரவேசிக்கும் சிலாக்கியம் உண்டாகுமா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டும். நற்கிரியைகளினிமித்தம் தன்னுடைய சாபக்கட்டுகளில் இருந்து அவன் விடுதலை பெறலாம். ஆனால் தேவனுடைய புத்திரனாகும் சிலாக்கியத்தை அவன் பெறமுடியுமா? அவனுடைய கை விலங்குகள் அகற்றப்படலாம், பிதாவின் முத்திரைமோதிரம் அவனுக்கு அணிவிக்கப்படுமா? இது தீவிரமாக யோசிக்க வேண்டிய காரியம் தான்.

நீதியில்லாத ஒரு மனிதனை நீதிமானாக்கும் தேவன் அதை கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய கிரியையின் அடிப்படையிலேயே செய்கிறார். மனித இனத்தின் பாவங்களை தன்மேல் ஏற்றுக்கொண்ட கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினார் என்பது உண்மையானால், யாருடைய பாவங்களை கிறிஸ்து சுமந்தாரோ அவர்களையும் உயிர்ப்பிப்பதே பிதாவினுடைய நீதிமானாக்கும் கிரியையாகும். இதன் விளைவாக ஒரு மனிதன் தேவசமுகத்தில் பயமின்றி, குற்ற உணர்வின்றி, ஆக்கினைத் தீர்ப்பைக் குறித்த அச்சமின்றி தைரியமாக நிற்கமுடிகிறது.

இந்த வசனத்தோடு பாவம், நியாயத்தீர்ப்பு ஆகியவற்றைப்பற்றி அறிவிக்கும் ரோமர் நிருபத்தின் முதல்பகுதி முடிவடைகிறது. வேதம் எழுதப்பட்டு பல நூற்றாண்டுகள் கழித்துதான் ஒவ்வொரு புத்தகமும் அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரமும் வசனங்களாகவும் பிரிக்கப்பட்டன என்பதை அறிவோம். இந்த வசனத்துடன் இந்த அதிகாரம்

முடியும்படியாகப் பிரிக்கப்பட்டிருந்தால் பொருத்தமானதாக இருந்திருக்கும். பாவத்தின் அடிமைத்தனத்தில் பிடிக்கப்பட்டு நியாயத்தீர்ப்புக்காக காத்திருக்கும் மனிதனை மீட்கும்படியாக தேவநீதி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை அதிகாரத்தின் மீதமுள்ள வசனங்களில் பவுல் அறிவிக்கிறார்.

பாவியை நீதிமானாக்கும் விசுவாச பிரமாணத்தின் தேவநீதி (21-31)

இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. (ரோமர் 3:21)

தான் அறிவிக்கும் சுவிசேஷம் விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியை அடிப்படையாகக் கொண்டது என்பதை ரோமர் 1:17ல் பவுல் ஏற்கனவே அறிவித்ததைப் பார்த்தோம். தன்னுடைய தேவநீதியை வழங்குவதின் மூலமாகவே தேவன் நீதிமான்களை உருவாக்குகிறார் என்பதை சுருக்கமாக அறிவித்த பவுல், மூன்றாம் அதிகாரத்தின் பின்பகுதியில் மனித இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய திட்டமாகிய தேவநீதி யாருக்கு வழங்கப்படுகிறது என்பதை அறிவிக்கிறார்.

நாம் தியானிக்கும் ரோமர் 3:21-24 வேத பகுதியில் கீழ்கண்ட சத்தியங்கள் அறிவிக்கப்படுகிறபடியால் மிகவும் விலையேறப்பெற்றதாகக் கருதப்படுகின்றன.

1) தேவநீதி நியாயப்பிரமாணத்தின் உதவியின்றி வெளிப்படுகிறது. (வசனம் 21)

2) தேவநீதியைக் குறித்து வேதம் சாட்சியளிக்கிறது. (வசனம் 21)

3) தேவநீதி கிறிஸ்துவைப் பற்றிய விசுவாசத்தினால் மட்டுமே வருகிறது. (வசனம் 22)

இந்த முக்கியமான வேதபகுதியை பவுல் "இப்படியிருக்க" என்று துவங்குவதைக் கவனியுங்கள். ரோமர் நிருபத்தின் திருப்புமுனையாக இது அமைகிறது. "எந்த மனிதனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் விளைவாக தேவசமுகத்தில் நீதிமானாவதில்லை என்ற பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்க" என்று பொருள் கொள்ளவேண்டும்.

எல்லா மனிதரும் பாவம் செய்ததினாலும், ஒருவனாலும் நியாயப்பிரமாண விதிமுறைகளுக்கு முழுமையாக கீழ்ப்படிய முடியவில்லை என்பதினாலும், நியாயப்பிரமாணம் இல்லாமலேயே நீதி வெளிப்படவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. "ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" (ரோமர் 5:18) என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார் பவுல்.

இந்த நீதி தேவனுடைய குணாதிசயங்களில் ஒன்றாக இருப்பதினால் தேவனுடையதாக இருந்தாகவேண்டும், அப்படியானால்தான் அது பரிசுத்தமான தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியும். கிறிஸ்துவின் வாழ்க்கையினாலும், பாடு மரணத்தினாலும் கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பட்ட தேவநீதியை மனித இரட்சிப்புக்குப் போதுமானதாக பிதா ஏற்றுக்கொள்வதின் மூலம் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் நீதிமானாக்கப்படுகிறார்கள்.

மூன்று காரியங்களை பவுல் அறிவிப்பதைக் கவனியுங்கள்.

1) தேவன் தன்னில்தானே நீதியுள்ளவர்.

2) தேவன் தன் சாயலில் உருவாக்கப்பட்ட மனிதரில் நீதியை எதிர்பார்க்கிறார்.

3) தேவன் தன்னுடைய நீதியை அவர்களுக்கு வழங்குகிறார்.

இந்த தேவநீதியைக் குறித்து பவுல் அறிவிக்கும் முதலாவது சத்தியம் அது 'நியாயப்பிரமாணமின்றி' (ஆங்கிலத்தில் apart from law, கிரேக்க மொழியில் chōris nomon = உதவி இன்றி) வெளியாக்கப்பட்டிருக்கிறது என்பதுதான். **பிரமாணங்களுக்கு கீழ்ப்படிதலின் அடிப்படை இல்லாமல் தேவநீதி வெளிப்படுகிறது.** அதற்காக தேவன் நியாயப்பிரமாணத்தைப் புறக்கணித்துவிட்டார் என்றோ, கிறிஸ்து அதைக் கனம் பண்ணவில்லை என்றோ முடிவு செய்துவிடக்கூடாது. மத் 5:17, ஏசாயா 42:21 இதை உறுதிப்படுத்துகிறது. நியாயப்பிரமாணத்தின் மூலமாக தேவன் மனிதர்களுடைய கண்களைத் திறந்து, தங்களுடைய அவலமான நிலையை உணரச் செய்து தன்னுடைய குமாரனை ஏற்றுக் கொள்ளச் செய்து, நீதியை வழங்கி இரட்சிப்புக்குள் கொண்டுவரச்செய்வதுதான் தேவனுடைய திட்டம். பவுலின் சுவிசேஷம் கீழ்ப்படிதலை அல்ல, விசுவாசத்தை முக்கியப்படுத்துகிறது. "மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" (ரோமர் 3:28), ரோமர் 4:6-8 சலா 2:16,21; 3:10-13, எபே 2:9 பிலிப் 3:9, 2

தீமோ 1:9, தீத்து 3:5 வாசித்துப்பாருங்கள்.

தேவநீதி மனித நீதியிலிருந்து முற்றிலுமாக மாறுபட்டது. மனிதநீதி குறைவுபட்டது. பூரணமானதல்ல. பூரணப்படக்கூடியதும் அல்ல. எனவே அதின் அடிப்படையில் தேவன் மனிதனை மன்னிக்க முடியாது என்பதினால் தேவநீதி வெளிப்படவேண்டியது அவசியமாகிறது. **இந்த தேவநீதி மனிதனுடைய பாவங்களை மன்னிப்பதோடு நின்றுவிடவில்லை. அவனை தேவனுடைய கண்ணோட்டத்தில் நீதிமானாக்குகிறது.** கிறிஸ்துவின் நீதி தேவனுடைய நீதியாக இருப்பதினால் பிதாவாகிய தேவன் எந்த காரணத்துக்காகவும் அதை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியாது. "நாம் அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21) என்று வாசிக்கிறோம்.

நியாயப்பிரமாணத்தை மீறுவதே பாவம் என்று பார்த்தோம். பாவம் தேவனுக்கு விரோதமான பகையாக இருப்பதினால் அது தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும். தேவன் நீதியுள்ளவர் என்பதினால் பாவத்தைக் கண்டுகொள்ளாமல் இருக்கமுடியாது. பாவம் ஒரு பாவிக்குள் வாசம் செய்வதினால், நீதிபரராகிய தேவன், பாவத்தை நடப்பித்த பாவியை தண்டிக்கவேண்டும். இந்த நிலையில் நம் பாவங்கள் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்படுகிறது. அந்த பாவங்களை பாவம் அறியாத அவரும் தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார். நீதியுள்ள தேவன் பாவத்தையும், பாவத்தைச் சுமந்த கிறிஸ்துவையும் கல்வாரி சிலுவையில் தண்டிக்கிறார் (ஏசாயா 53:10). தேவநீதி செயல்பட்டாயிற்று. பாவத்துக்கான தண்டனை வழங்கப்பட்டாயிற்று. அந்த பாவத்துக்கான தண்டனை இனி வேறு யார் மேலும் வழங்கப்படமுடியாது என்ற நிலை உண்டாகிறது ஏனென்றால் ஒரு தவறுக்கு ஒரு தண்டனைதான் வழங்கப்படமுடியும். ஒரே தவறுக்கு மீண்டும் மீண்டும் தண்டனை கொடுத்துக் கொண்டிருக்க முடியாது. **எனவே நியாயப்பிரமாணமின்றி தேவநீதி வெளிப்பட்டிருக்கிறது என்று சொல்லும்போது, கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் ஒருவன் இரட்சிக்கப்படமுடியும் என்ற பழைய நிலை மாறி, கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் உண்டான தேவநீதி நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை விசுவாசிக்கிறோம்.**

நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளிப்படுகிறது என்பதே பவுல் அறிவிக்கும் சுவிசேஷம். புனித அகஸ்தின் சொல்வதுபோல : "மனிதன் கிருபையைத் தேடும்படியாக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றும்படியாக கிருபை கொடுக்கப்பட்டது." (Concerning the spirit and the letter by Ausgustine).

இந்த மகிமையான சுவிசேஷம் முந்தின காலங்களில் மறைக்கப்பட்டதுபோலக் காணப்படலாம். ஆனாலும் பல பழைய ஏற்பாட்டு வசனங்கள் இதைக் குறித்துப் பேசுகின்றன. (ஏசாயா 9:1; 49:6; 58:8; 60:1,3,19,20, மீகா 7:8). கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடுகளை மோசே பெற்றிருந்தார் (உபா 18:15,19). எனவே நியாயப்பிரமாணத்தினால் மனிதனை நீதிமானாக்க முடியவில்லை என்பதினால் தேவநீதியை வழங்குவது தேவனுடைய அதிரடித்திட்டம் அல்ல. இது உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவனால் தீர்மானிக்கப்பட்ட ஒரு காரியம்தான். மத் 4:16, லூக்கா 1:78,79; 2:32, யோவான் 1:9; 8:12, அப் 13:47, எபே 5:8, வெளி 22:5 ஆகிய வசனங்கள் இதைக் குறித்து கூடுதலான வெளிச்சத்தை உடையதாக இருந்தாலும், இதை வெளியரங்கமாக சபைக்கு அறிவிக்கும் கிருபையை தேவன் பவுலுக்கு வழங்கியிருக்கிறார்.

நியாயப்பிரமாணமின்றி தேவநீதி வெளிப்படும் உபதேசத்தைக் குறித்த இரண்டு சாட்சிகளை பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படி எந்த ஒரு காரியமும் நிலைவரப்படவேண்டுமானால் குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகள் வேண்டும் என்பதை பல வேதவசனங்கள் அறிவிக்கின்றன. (உபா 17:4; 19:15, மத் 18:16, 2 கொரி 13:1, 1 தீமோ 5:19, எபி 10:28).

1) நியாயப்பிரமாணம் (வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்கள்)

2) தீர்க்கதரிசனங்கள் (யோசுவா முதல் மல்கியா வரையுள்ள 34 புத்தகங்கள்).

சர்ப்பத்தின் தலை ஸ்திரீயின் வித்தாக வெளிப்படவிருக்கும் கிறிஸ்துவினால் நசுக்கப்படும் என்பதே வேதத்தில் சொல்லப்படும் முதல் நற்செய்தி. இந்த முதல் தீர்க்கதரிசனம் சர்ப்பத்திடமே சொல்லப்படுகிறது என்பதைக் கவனியுங்கள் (ஆதி 3:15). ஆபிரகாமின் விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டதைக் குறித்து (ஆதி 15:6) ஏற்கனவே தியானித்திருக்கிறோம். தேவநீதியைக் குறித்து சங் 31:1, 35:24, 51:14; 71:15,16,19,24; 50:6, 85:8-11; 89:16; 98:1,2 119:142, ஏசாயா 42:21; 45:8,24,25; 46:13; 51:5,7; 53:11; 54:17; 56:1; 61:11, தானி 9:24; ஓசியா 10:12, மல் 4:2 ஆகிய தீர்க்கதரிசன புத்தகங்களில் உள்ள வசனங்களும் சாட்சியிடுகின்றன. நீதி என்ற வார்த்தை ஏசாயாவில் ஐம்பது தடவைக்கும் மேலாகக் காணப்படுகிறது. நீதி மற்றும் நீதிமானாக்கப்படுவது என்ற வார்த்தைகள் (கிரேக்க மொழியில் dikaioó, dikaiosymé) வேதத்தில் 520 வசனங்களில் 540 தடவை சொல்லப்படுகிறது. விசுவாசத்தைக் குறித்த வார்த்தைகள் 328 வசனங்களில்

348 தடவைகள் சொல்லப்படுகிறது. தேவநீதிக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுங்கள்.

இன்னொரு முக்கியமான சத்தியத்தை நாம் அறிந்துகொள்வது நமக்கு ஆசீர்வாதமாக இருக்கும். பொதுவாக இது நமக்குச் சொல்லித்தரப்படுவதில்லை. **கிறிஸ்தவர்களாகிய நாம், இன்று எந்த விதத்திலும் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்கள் அல்லர்** (ரோமர் 6:14). நாம் நியாயப்பிரமாணத்துக்கு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களாக இருக்கிறோம் (கலா 2:20). நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் (ரோமர் 8:9). அதுவும், உயிர்த்தெழுந்து, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். இன்று அவர் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர் அல்ல. எனவே அவருக்குள் இருக்கும் நாம் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாக இருக்க முடியாது! அப்படி இருப்பதாக நாம் நினைப்போமானால் நாம் ரோமர், கலாத்தியர், எபேசியர், கொலோசெயர் நிருபங்களை சரியான விதத்தில் விளங்கிக்கொள்ளவில்லை என்றுதான் பொருள். "புத்தியில்லாத கலாத்தியரே" (3:1) என்று பவுல் நிச்சயமாக நம்மை அழைப்பார்.

சபையாராகிய நாம் இன்று நியாயப்பிரமாணத்தின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதை அறிவிக்கும் வசனங்களான ரோமர் 3:20,28; 4:5,13,14; 7:4,6; 10:4, 2 கொரி 3:14, கலா 2:16; 5:18, 1 தீமோ 1:9 எபி 7:18,19 ஆகியவற்றை வாசித்துப்பாருங்கள்.

அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. (ரோமர் 3:22)

இந்த வேதபகுதியில் (வசனம் 21,22) தேவநீதியைக் குறித்த நான்கு சத்தியங்களைப் பவுல் அறிவிக்கிறார்.

1) தேவநீதி நியாயப்பிரமாணமில்லாமல் வெளியாகிறது (வசனம் 21) எனவே அது நியாயப்பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.

2) தேவநீதியைக் குறித்த சாட்சிகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. (வசனம் 21) எனவே அது தேவனால் ஆயத்தமாக்கப்பட்டது.

3) தேவநீதி கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது. (வசனம் 22) கிரியைகளை அல்ல.

4) தேவநீதி யூதர் புறஜாதியார் என்று வித்தியாசம் பார்ப்பதில்லை.

"விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி" என்று ரோமர் 1:17ல் அறிவித்த பவுல் இந்த வசனத்தில் அந்த விசுவாசம் யார்மேல் வைக்கப்படவேண்டும் என்பதை அறிவிக்கிறார். ஒரு பாவ மனிதன் தன் பாவங்களுக்காக மரித்த கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக (மத் 1:21, யோவான் 3:16; அப் 4:12) அவர் ஒருவருக்கே சொந்தமான தேவ நீதியைப் பெற்றுக்கொள்கிறான். நம்முடைய ஜெபத்தினாலோ, மனந்திரும்புதலினாலோ, தேவநீதி உண்டாவதில்லை. **கிறிஸ்து இயேசு கல்வாரி சிலுவையில் செய்துமுடித்த கிரியையை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் தேவநீதியை ஈவாகப் பெற்றுக்கொள்கிறார்கள்.**

தேவநீதி என்பது கிறிஸ்து தன்னுடையவர்களுக்காக தன்னுடைய இரத்தத்தைக் கிரையமாகக் கொடுத்து வாங்கிக்கொண்ட மேலான ஆசீர்வாதம் (ரோமர் 5:17-19). எனவே கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசி பெறும் உரிமைகளையும், சிலாக்கியங்களையும், தேவநீதி என்ற வார்த்தை குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். **தேவநீதியும் விசுவாசமும் ஒன்றுதான் என்பதாக நினைத்துவிடக்கூடாது. கிறிஸ்துவின் நீதியினால் மனிதன் நீதிமானாக்கப்படுவதில் ஒரு கருவியாக மட்டுமே விசுவாசம் அமைந்திருக்கிறது.** தேவன் இலவசமாக வழங்கிய கிருபையை உரிமைப்படுத்திக்கொள்கிறது. கிறிஸ்துவுக்குள் ஒருவன் நீதிமான் மட்டுமல்ல, அவனுடைய எல்லா கிரியைகளும் நீதியானவைகளாக கருதப்படுகிறது. அவைகளில் குறைபாடுகள் இருந்தாலும், கிறிஸ்துவின் இரத்தம் அவற்றை நீக்கிவிடுகிறது. எனவே கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசி பெறும் உரிமைகளையும், சிலாக்கியங்களையும், தேவநீதி என்ற வார்த்தை குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

ஒரு மனிதனுடைய விசுவாசம் ஒருவனை இரட்சிப்பதில்லை என்பதையும் அது மனிதனையும் தேவனையும் இணைக்கும் ஒரு கருவியாக மட்டுமே செயல்படுகிறது என்பதையும் பவுல் அடியிற்கண்ட வசனங்களில் திட்டவட்டமாய் உறுதிப்படுத்துவதைப் பாருங்கள்.

1. "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" (by faith, ek pisteos ரோமர் 1:17)

2. "விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன்" (through faith, ek pisteos ரோமர் 3:30)

3. "விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி" (by faith, dia pisteos) (பிலிப் 3:9)

4. "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே" நீதிமான்களாகி விடுகிறோம். (by faith, dia pisteos கலா 2:15)

விசுவாசம் என்றால் என்ன என்பதைக் குறித்து பல விளக்கங்களை வேதபண்டிதர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஒருவராகிய தேவனை நம்புவதும், அவர் நமக்கு நன்மையே செய்வார் என்று எதிர்பார்ப்பதும் விசுவாசம்தான். தேவனுடைய வார்த்தைகளை நம்பி ஏற்றுக்கொள்வதும் விசுவாசம் தான். கிறிஸ்துவைப் பற்றிய சாட்சிகளை அங்கீகரிப்பதும் விசவாசம்தான். விசுவாசம் ஒரு மனிதனுடைய கண்கள் என்று வருணிக்கப்படுகிறது. மாமிசக்கண்களினால் ஒருவன் காணக்கூடாத காரியங்களையும் இந்த ஆவிக்குரிய கண்கள் காண்கின்றன. **விசுவாசக் கண்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளை எல்லாம் ஊடுருவிச் சென்று, தேவனுடைய காணக்கூடாத, மகத்துவமான செயலாற்றலையும், வல்லமையையும் ஒரு மனிதன் அறிந்துகொள்ளும்படியாகச் செய்கிறது.**

ஒரு மனிதனுடைய இரட்சிப்பின் பின்னணியில் செயல்படும் விசுவாசம் முற்றிலுமாக தேவனுடைய செயலாற்றல். கிருபையின் உடன்படிக்கையின் விளைவாகத் தேவனால் கிறிஸ்துவுக்குள் அவர் தெரிந்து கொண்ட மனிதர்களுக்கு இது இலவசமாக வழங்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒரு மனிதனை மறுபடியும் பிறப்பிக்கும்போது அவன் கிறிஸ்துவைத் தன் இரட்சகராகவும், ஆண்டவராகவும் நம்பி ஏற்றுக்கொள்ளும் ஒரு சுபாவத்தையும் மனப்பாங்கையும் அவனுடைய இருதயத்தில் தேவனே பதிப்பிக்கிறார். "**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு**" (எபே 2:8) என்ற வசனத்தில் "இது" என்ற வார்த்தை இரட்சிக்கும் விசுவாசத்தையே குறிப்பிடுகிறது. கிருபையும் விசுவாசமும் ஒன்றோடு ஒன்று இணைந்திருக்கிறது. **கிருபையை அங்கீகரிக்காத விசுவாசம் செயலற்றது. விசுவாசம் செயல்படாத நிலையில் கிருபையினால் பிரயோஜனமில்லை.**

இந்த தேவனுடைய ஈவைப் பெறுபவர்களுடைய மனதிலும் இருதயத்திலும், சித்தத்திலும், கிரியைகளிலும் அவர்கள் அறிந்து கொள்ளக் கூடாத, விளங்கிக் கொள்ள முடியாத மாற்றங்கள் உருவாகின்றன. இந்த விசுவாசத்தைத் துவங்குபவர் பிதாவாகிய தேவன். அதைப்

பெற்றுக்கொள்ளும் மனிதர்கள் அதுவரை அவிசுவாசிகளாகத் தான் இருந்தார்கள். அது வழங்கப்படாத நிலையில் அவர்கள் அவிசுவாசியாகத்தான் மரித்திருப்பார்கள். இந்த விசுவாசம் பரத்திலிருந்து வழங்கப்பட்டதின் விளைவாகவே அவர்களால் கிறிஸ்துவை விசுவாசிக்க முடிகிறது. "உன்னுடைய மரணத்துக்குப் பதிலாக என்னுடைய குமாரனுடைய மரணத்தை ஏற்றுக்கொண்டேன் என்பதை நம்பு" என்னும் பிதாவின் வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடிகிறது.

இரட்சிக்கும் விசுவாசம் என்பது மனுஷீக விசுவாசத்திலிருந்து முற்றிலுமாக மாறுபட்டது. கிறிஸ்து உலகத்தில் இருந்த நாட்களில் "அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு; அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை" (யோவான் 2:23, 24) என்று வாசிக்கிறோம். இந்த விசுவாசம் மனிதர்களுடைய உணர்ச்சிகளையும், எதிர்பார்ப்புகளையும் அடிப்படையாகக் கொண்டது. மேலும் அது தற்காலிகமானது. நிலைத்திருக்கக்கூடாதது. "கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்; ஆயினும் தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியினாலே, கொஞ்சக் காலமாத்திரம் விசுவாசித்து சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகிறார்கள்" (லூக்கா 8:13). மனுஷீக விசுவாசத்தை உடையவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? நான் ஜெபித்தேன், உபவாசமிருந்தேன், காணிக்கை கொடுத்தேன், எனவே நான் இரட்சிக்கப்படுவேன் என்கிறார்கள். இவர்களுடைய விசுவாசம் அவர்கள் நடப்பித்த கிரியைகளை ஆதாரமாகக் கொண்டது. இதை தேவன் அங்கீகரிப்பதில்லை.

மனுஷீக விசுவாசம் அதிசயங்களையும் அற்புதங்களையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இன்றைய எழுப்புதல் கூட்டங்களிலும், டெலிவிஷன் ஊழியங்களிலும் உருவாகும் விசுவாசத்தை இரட்சிக்கும் விசுவாசம் என்று முடிவு செய்துவிடமுடியாது. யாக்கோபு சொல்கிறார்: "தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன" (2:19). **ஒரு வகையில் பார்த்தால் எல்லா பிசாசுகளும் விசுவாசிகளே! ஆனாலும் அவை இரட்சிக்கப்படுவதில்லையே !**

இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவ நீதியை உடையவன் என்ன செய்கிறான் தெரியுமா? அவன் தன்னையோ தன்னுடைய கிரியைகளையோ தான் சார்ந்திருக்கும் ஊழியக்காரரையோ,

தான் ஐக்கியம் கொள்ளும் சபையையோ நம்புவதில்லை. அவன் யாராக இருந்தான் யாராக இருக்கிறான் என்பதைக் கணக்கிட்டுப் பார்ப்பதில்லை. கிறிஸ்துவுக்குள் தான் யார் என்பதை மட்டும் அவன் தனக்குள்ளாக நிச்சயித்திருக்கிறான். **ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தவராக, கல்வாரி சிலுவையில் மரித்து சம்பாதித்துக் கொண்ட தேவநீதியை பிதாவாகிய தேவன், அவருடைய சொந்த தீர்மானத்தின் அடிப்படையில், தனது கணக்கில் வரவு வைத்துக் கொண்டார் என்பதை மட்டும் அவன் விசுவாசிக்கிறான்** (2 கொரி 5:21)

"கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி" (பிலிப் 3:9) எனப் பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். அதனால்தான் பவுல் நாம் தியானிக்கும் வசனத்தில் "விசுவாசிக்கிற எவர்களுக்கும் எவர்கள் மேலும் அது பலிக்கும். வித்தியாசமே இல்லை" என்கிறார். தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ, அதை அப்படியே ஏற்றுக்கொள்வதுதான் விசுவாசம். கிறிஸ்து ஏதோ ஒன்றைச் செய்யப்போகிறார் என்று விசுவாசம் எதிர்நோக்குவதில்லை. **கிறிஸ்து சிலுவையில் என்ன செய்து முடித்தார் என்பதைக்குறித்த தேவனுடைய சாட்சியை நம்புவதே விசுவாசம்.** கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் உண்டாகும் தேவநீதி அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கப்படுகிறது என்பதுதான் தேவனுடைய சாட்சி.

எருசலேம் தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்தபோது யூதர் புறஜாதியார் என்ற வித்தியாசம் மறைந்துவிட்டது. யூதர்களின் பிரச்சனை இதுதான். "அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர் 10:3, 4) என்பதை அறிந்துகொள்ளத் தவறினார்கள். கிறிஸ்துவோடு நியாயப்பிரமாணம் முடிவடைந்துவிட்டது.

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபி 11:1) என்று வாசிக்கிறோம். **கிறிஸ்துவுக்குள் நமக்கு தேவ நீதி உண்டாகிறது என்று நம்புகிறோம். அது எவ்வாறு நம்முடைய கணக்கில் வைக்கப்படுகிறது என்பது நமக்குத் தெரியாது.** ஆனாலும் காணப்படாத ஒன்றைக் குறித்து நாம் நிச்சயமுள்ளவர்களாக இருக்கிறோம். இன்னொரு காரியத்தையும் கவனியுங்கள். வேதத்தில் எல்லா இடங்களிலுமே தேவநீதி விசுவாசத்தினால்

உருவாகுவதாகத்தான் சொல்லப்படுகிறது. மனந்திரும்புதலினாலோ, அறிக்கையிடுகிறதினாலோ, ஜெப ஜீவியத்தினாலோ தேவநீதி உண்டாகி, இரட்சிப்பைத் தருவதாக எந்த வேத வசனமும் சொல்லவில்லை. ரோமர் 4:5 சொல்கிறது, "**ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்**", "கிரியை செய்யாமல்" என்பதை எத்தனை முறை பவுல் வலியுத்துகிறார் என்பதைக் கவனியுங்கள்.

"வித்தியாசமே இல்லை" என்று பவுல் இந்த வசனத்தை முடிக்கிறார். தேவநீதியைப் பெற கிறிஸ்துவையன்றி வேறு மார்க்கம் யூதர்களுக்கும் இல்லை, புறஜாதியாருக்கும் இல்லை. சிலரை நீதிமானாக்க ஒருவழியும் சிலரை நீதிமானாக்க வேறு ஒரு வழியும் தேவன் ஆயத்தம் பண்ணவில்லை. எல்லா மனிதர்களும் தேவனுடைய பார்வையில் பாவிகளே. கிறிஸ்துவின்மேல் அவர்கள் வைக்கும் விசுவாசமே அவர்களை இரட்சிக்கிறது.

எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, (ரோமர் 3:23)

தேவநீதி வெளிப்படவேண்டியதின் அவசியத்தை இந்த வசனம் அறிவிக்கிறது. மனித இனம் முழுவதுமே பாவத்திற்குட்பட்டது (ரோமர் 3:9-12). மனிதனுடைய உள்ளான தன்மைகளில் பாவம் குடிகொண்டிருக்கிறது (ரோமர் 3:13,14). மனிதனுடைய வெளிப்படையான கிரியைகளிலும் நீதி இல்லை (ரோமர் 3:15-18). மோசேயின் பிரமாணங்களின் அடிப்படையில் மனித இனத்துக்கு விரோதமான பதினான்கு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்த அதிகாரத்தில் ஒரு வழக்கு மன்றம் செயல்படுவதைப் போன்ற ஒரு காட்சி உருவாக்கப்பட்டதைப் பார்த்தோம்.

நியாயாதிபதி	:	பிதாவாகிய தேவன்
குற்றச்சாட்டப்பட்டவர்கள்	:	மனித இனம்
குற்றப்பத்திரிகை	:	பதினான்கு பாவங்கள்
குற்றஞ்சாட்டும் வழக்கறிஞர்	:	நியாயப்பிரமாணம்
ஜூரிகள்	:	நியாயப்பிரமாண கிரியைகள்
நியாயத்தீர்ப்பு	:	எல்லாரும் பாவிகள்
வழங்கப்படவேண்டிய தண்டனை	:	மரணம்

பாவம் என்பது ஒரு வெளிப்படையான கிரியை என்பது மட்டுமல்ல, தேவனை விரோதிக்கும் மனநிலை. ஆதாமின் பாவத்தின் நிமித்தம் இந்த

பாவ சுபாவம் நம்முடைய பிறப்பிலிருந்தே காணப்படுகிறது. "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங் 51:5) என்கிறார் தாவீது. அதே சங்கீதத்தில் அவர் சொல்கிறார்: "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" (வசனம் 3). பாவத்தில் பிறந்த தாவீது பாவம் செய்கிறவராகிறார். மரணதண்டனை பெற பாத்திரர் ஆகிறார். "ஒரே மனுஷனாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று" (ரோமர் 5:12).

பாவம் செய்ததின் விளைவு என்ன என்பதை பவுல் உடனடியாக அறிவிக்கிறார். அவர்கள் துன்மார்க்கர்களாகவும், தேவனுடைய பகைஞர்களாகவும் மாறிவிடுகிறார்கள் என்பது மட்டுமல்ல, தேவனுடைய மகிமையையும் இழந்து போகிறார்கள். தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன்னையே சார்ந்திருப்பதின் மூலம் தன்னுடைய சம்பூரணமான மகிமையைப் பிரதிபலிக்கவேண்டும் என்பதற்காகவே தேவன் மனிதனை தன்னுடைய சாயலில் சிருஷ்டித்தார். மகிமை என்ற வார்த்தை யோவான் 5:41, 44; 8:50.54; 12:43ல் தேவனுடைய குணாதிசயங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டிருப்பதனால், தங்கள் பாவத்தினிமித்தம் தேவனுடைய மகிமையை அறிந்துகொள்ள முடியாமற்போகிறார்கள். கீழ்க்கண்ட காரியங்களையும் பாவிகள் செய்வதாக எடுத்துக்கொள்ளலாம்.

1. தேவனுடைய மகிமைக்கென்று எதையும் செய்ய அவர்கள் தவறினார்கள் (1 கொரி 10:31)
2. தேவன் ஒருவருக்கே சொந்தமான மகிமையை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் (யோவான் 5:41, 44)
3. மனுஷரால் வருகிற மகிமையை விரும்பினார்கள் (யோவான் 12:43)

எல்லாரும் பாவம் செய்தார்கள் என்பது தேவனுடைய திட்டவட்டமான அறிக்கை. வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினால் உருவாக்கிய தேவன் அவ்வாறு அறிவிக்கிறார். ரோமர் 1:16 முதல் இதுவரை சொல்லப்பட்ட சகல சத்தியங்களும் இந்த ஒரே வசனத்தில் காணப்படுகின்றன.

இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள். (ரோமர் 3:24)

தேவன் தன்னுடைய நீதியை எவ்வாறு மனிதனுக்கு வழங்குகிறார்? பாவமனிதன் எவ்வாறு தேவநீதியை உரிமைப்படுத்திக்கொள்கிறான்? மனிதன் நீதிமானாக்கப்படுவதில் கிறிஸ்துவின் பங்கு என்ன? இந்த மூன்று கேள்விகளுக்கும் பதில் இந்த வசனத்தில் காணப்படுகிறது.

"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்று நான்கு வசனங்களுக்கு முன்பு அறிவித்த பவுல், மூன்று முக்கியமான சத்தியங்களை அறிவிக்கிறார்.

1. நீதிமானாக்கப்படுவது முற்றிலுமாக இலவசமானது. (நாம் அதற்கு எந்த கிரையமும் கொடுப்பதில்லை)
2. நீதிமானாக்கப்படுவது கிருபையை அடிப்படையாகக் கொண்டது. (அது கிரியையோடு சம்பந்தப்பட்டதல்ல)
3. நீதிமானாக்கப்படுவது கிறிஸ்துவினால் உண்டாகும் மீட்பை அடிப்படையாகக் கொண்டது (அது நியாயப் பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டதல்ல)

முதலாவதாக இலவசமாக நீதிமானாக்கப்படுகிறோம் என்று சொல்லும்போது, ஒருவனும் தன்னை நீதிமானாக்கமுடியாது என்பதும் தன்னை நீதிமானாக்க அவன் எந்தக் கிரையமும் கொடுப்பதில்லை, கொடுக்கவும் தேவையில்லை என்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. சொல்லப்போனால் அதற்கான கிரையங் கொடுக்க எந்த மனிதனாலும் இயலாது. அதற்கான கிரையத்தை கிறிஸ்துதாமே கல்வாரியில் செலுத்திவிட்டபடியால் (1 கொரி 6:20; 7:23, 2 பேதுரு 2:1, அப் 20:28), அது நமக்கு முற்றிலுமாக இலவசமாகிறது (doream, freely, gratis). நம்முடைய தேவன் ஒரு பெரிய வள்ளல். **விலையேறப்பெற்ற இரட்சிப்பைக் கூட அவர் இலவசமாகத்தான் கொடுக்கிறார்.** "தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவத்தண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்" (வெளி 21:6; 22:17). "பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்" (ஏசாயா 55:1) என்கிறார் அவர். எனவே நாம் நம்முடைய அல்லது பிறருடைய இரட்சிப்பை ஏதேனும் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாமென்று நினையாதிருப்போமாக.

இரண்டாவதாக நீதிமானாக்கப்படுதல் தேவனுடைய கிருபையை (charis) அடிப்படையாகக் கொண்டது. கிருபை என்ற வார்த்தையை பவுல் தன்னுடைய நிருபங்களில் நூறுதடவைக்கு மேலாகப் பயன்படுத்துகிறார். கிருபை பொதுவான கிருபை, இரட்சிக்கும் கிருபை என்று இரண்டு வகைப்படும். பொதுவான கிருபையை தேவன்

உலகத்தில் பிறந்திருக்கும் அத்தனை பேருக்கும் வழங்கியிருக்கிறார். அதனால்தான் அவர்கள் உயிர்வாழ முடிகிறது (சங் 145:9, 15-16). எந்த விதத்திலும் தகுதியில்லாத மனிதன்மேல் தேவன் பாராட்டும் இரக்கமே கிருபை. இரட்சிக்கும் கிருபையை தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ளுகிறார்கள். இதன் விளைவாக பரிசுத்தமான தேவனுடன் ஒப்புரவாகிறார்கள் என்பது மட்டுமல்ல, அந்த ஒப்புரவில் நிலைத்திருக்கிறார்கள் (ரோமர் 5:21, 1 கொரி 15:10, 2 கொரி 12:9). கொலோ 1:20 வாசித்துப்பாருங்கள். இது தேவனுடைய தீர்மானம். முன்னறிதல், முன்குறிப்பு, அழைப்பு, மறுபடியும் பிறத்தல், நீதிமான்களாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாய் இருப்பதால் முற்றிலுமாக இலவசமானது (ரோமர் 8:28-30).

மூன்றாவதாக இயேசுவில் உள்ள மீட்பைக்கொண்டு ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்கிறார் பவுல். மனிதனை இரட்சிக்க கிருபை மட்டுமே போதும் என்றிருந்தால் எல்லா மனிதர்களுமே இரட்சிக்கப்பட்டு விடுவார்கள். இயேசுவில் உள்ள மீட்பை அவர்கள் விசுவாசிக்கும்போது மட்டுமே நீதிமான்களாகிறார்கள். இவ்வாறு நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாகிறான் (2 கொரி 5:17). தேவனுடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகிறான் (2 பேதுரு 1:4). கொலோ 1:14 சொல்லுகிறபடி "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது". மீட்பு என்பதற்கு பயன்படுத்தப்படும் apolutrōsis என்ற கிரேக்க வார்த்தை ஒரு எஜமானனின் ஆதிக்கத்தில் இருக்கும் ஒரு அடிமையை, விலைக்கிரையம் கொடுத்து இன்னொருவன் மீட்டுக்கொள்ளுவதைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவின் கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே 1:7). மனிதனைப் பொறுத்தவரை இரட்சிப்பு இலவசமானதுதான். ஆனால் தேவனோ தன்னுடைய குமாரனின் இரத்தத்தை கிரையமாகக் கொடுக்கவேண்டியதிருந்தது.

ஒரு மனிதன் தேவசமுகத்தில் குற்றவாளி என்பது மட்டுமல்ல, சாத்தான் என்கிற கொடூரமான எஜமானனின் அடிமையாகக் காணப்படுகிறான். அவனை இன்னொரு பாவ மனிதனால் மீட்டுக்கொள்ள முடியாது (சங் 49:7-9). "இந்த நிலையில் அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத் 20:28) கிறிஸ்து. மனித இனத்துக்கு இரட்சிப்பை அறிவிக்கும்படியாக கிறிஸ்து வரவில்லை. கல்வாரியில் நிறைவேற்றும் படியாகவே வந்தார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே

மீட்கப்பட்டீர்கள்" (1 பேதுரு 1:19). "மீட்கப்பட்ட நாம் கிரையத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்" (1 கொரி 6:20; 7:23).

மீட்பு என்ற வார்த்தை நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுவதையும் குறிப்பிடுகிறது. "மீட்பு" என்ற வார்த்தை பவுலின் நிருபங்களில் ஏழு தடவையும், எபிரெயரில் இரண்டு தடவையும், லூக்காவில் ஒரு தடவையும் பயன்படுத்தப்படுகிறது. கலா 3:13 சொல்லுகிறபடி, "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்". "நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும், நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா 4:4,5).

நம்மை மீட்கும்படியான கிரையம் கிறிஸ்துவின் இரத்தம் என்பதினால் "அவரில் உள்ள மீட்பு" என்கிறார் பவுல். நம்முடைய பாவங்களும் சாபங்களும் அவர்மேல் சுமத்தப்பட்டன. அவர் தண்டிக்கப்பட்டதின் விளைவாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று சொல்லாமல், நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்கிறார் பவுல். **நாம் மன்னிக்கப்பட்ட பாவிகள் அல்ல. குற்றமே செய்யாத நிலையில் இருக்கும் நீதிமான்கள்.** உலகத்தில் உள்ள நியாயாதிபதிகள் தவறு செய்த ஒருவனை மன்னிக்க முடியும். ஆனால் அவனை நிச்சயமாக நீதிமானாக்க முடியாது. தேவன் நம்மை நீதிமானாக்கும்போது நம்மில் எந்த மாற்றமும் உண்டாவதில்லை. நமக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவு முறையில் மட்டுமே ஒரு பெரிய மாற்றம் ஏற்படுகிறது. பாவம் செய்த ஒரு மனிதனை தண்டிக்கப்படவேண்டிய ஒரு குற்றவாளியாக தேவன் கருதுவதில்லை. தவறு செய்த ஒரு மகனை அவனுடைய தாய் எவ்வாறு நடத்துவாளோ அவ்வாறு நடத்த ஆரம்பிக்கிறார். "தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர்" (ரோமர் 8:33). தான் பெறவேண்டிய மரணதண்டனைக்குப் பதிலாக நீதிமான் என்ற கௌரவப் பட்டத்தை தேவகிருபை அவனுக்கு வழங்குகிறது. அதனால்தான் மனித இரட்சிப்பைக்குறித்து மார்ட்டின் லூத்தர் sola gratia, sola fide, soli Deo gloria கிருபையினால் - விசுவாசத்தின் மூலமாக - தேவன் மட்டுமே மகிமைப்படுவாராக என்கிறார்.

தேவன் ஒரு காரியத்தைச் செய்வாரானால் அது நித்தியத்துக்கும் நிலைத்திருக்கும் என்பதை நம்பலாம். பாவத்திலிருந்தும், நியாயப்பிரமாணத்தின் சாபத்திலிருந்தும் கிறிஸ்து தன்னுடைய இரத்தம் சிந்தி மீட்டுக்கொண்டதின் விளைவாக நாம் நீதிமான்களாக்கப்

பட்டோமானால், அது நித்திய மீட்பாகத்தான் இருக்கமுடியும் (எபி 9:12). ஒரு வருடகாலம் அல்லது பத்து வருடகாலம் நிலைத்திருக்கும் மீட்பானது நித்திய மீட்பாக இருக்கமுடியாது. நம்மை மீட்டுக்கொண்டபின் தேவன் நடுவழியில் நம்மை விட்டுவிடுவாரோ என்றும் சந்தேகப்படவும்முடியாது. "நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:9).

நாம் தியானித்துக்கொண்டிருக்கும் இந்த வசனமாகிய ரோமர் 3:24 வேதத்தில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுவதினால் அடுத்த வசனத்துக்குப் போகுமுன்பு இதை மீண்டும் வாசித்து அதை உங்களுக்கு உரிமையாக்கிக் கொள்ளுங்கள். தேவன் நம்மை நீதிமான் என்று அறிக்கையிடுவதை நம்புங்கள். அதற்கு நாம் தகுதிதானா என்று ஆராய்ச்சி செய்யாதிருங்கள். இது உங்களைக் குறித்த தேவனுடைய அறிக்கை. ஒருவனுடைய வாழ்க்கையின் முடிவில் அவனுடைய கிரியைகளை எல்லாம் சோதித்துப் பார்த்து அதின் அடிப்படையில் தேவன் இதை அறிவிப்பதில்லை. அவன் தன் தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே இதை தேவன் தீர்மானித்திருக்கிறார். தேவன் ஒரு பாவியிடம் இவ்விதமாகப் பேசுவதாக கற்பனை செய்து ஜாண்பன்யன் என்ற ஊழியர் எழுதிவைத்திருக்கிறார். நம் ஆத்துமாவுடன் தேவன் சொல்லுகிறார்: "பாவியே, உன்னுடைய பாவம் மற்றும் பெலவீனத்தின் மத்தியில் நான் உன்னை நீதிமானாக்க முடியாது என்று நினைக்கிறாயோ. என்னோடு நிற்கும் என் நேசகுமாரனாகிய இயேசுவைப் பார். நானும் அவரைத்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உன்னை நோக்கி அல்ல. நான் அவருக்கு என்ன செய்ய நினைக்கிறேனோ அதையே உனக்கும் செய்கிறேன்".

நாம் தியானித்த வேதபகுதி (வசனம் 21-24) அறிவிக்கும் மூன்று காரியங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

1. மனிதன் உருவாக்கமுடியாத நீதியை தேவன் அவனுக்கு வழங்குகிறார்.
2. நியாயப்பிரமாணம் வழங்கமுடியாத நீதியை கிருபை இலவசமாக வழங்குகிறது.
3. மோசே தராத நீதியை கிறிஸ்து தருகிறார்.

தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும்,

இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்கு கிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், (ரோமர் 3:25)

இந்த வசனம் நீளமானதாயும், சற்றுக் குழப்பமானதாகவும் இருக்கிறது. முதலாவதாக இரண்டு காலகட்டங்கள் இங்கே சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். "முற்காலம்" பழைய ஏற்பாட்டுக் காலத்தைக் குறிக்கிறது. முதல் மனிதனாகிய ஆதாம் சிருஷ்டிக்கப்பட்ட நாட்களிலிருந்து கிறிஸ்து வெளிப்பட்ட காலமான சுமார் 4,000 ஆண்டுகளில் நடப்பிக்கப்பட்ட பாவங்களை தேவன் எவ்வாறு மன்னித்தார் என்பதை பவுல் அறிவிக்கிறார். கிறிஸ்துவுக்குமுன் ஜீவித்த மனிதர்களும் கிறிஸ்துவின் மூலமாக உண்டான மீட்பையே சுதந்தரிக்கிறார்கள்.

இக்காலம் என்பது கிறிஸ்துவின் பாடு மரணத்துக்கும் அவருடைய இரகசிய வருகைக்கும் இடைப்பட்ட கிருபையின் காலம். இதிலும் தேவன் பாவங்களை மன்னிக்கிறார். இந்த இரண்டு காலகட்டங்களிலுமே விசுவாசத்தின் மூலமாக, கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் நீதியின் மூலமாகவே பாவ மன்னிப்பு உண்டாகிறது.

தேவன் தன்னில்தானே நீதியுள்ளவர். "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரே 23:6; 33:16) என்பது அவருடைய உடன்படிக்கையின் பெயர்களில் ஒன்று. அவருடைய கிரியைகளில் எல்லாம் நீதி மட்டுமே வெளிப்படுகிறது. சிலருடைய பாவங்களை கிறிஸ்துவின் மேல் சுமத்தி அவரைத் தண்டித்ததின் விளைவாக அவர்களை மன்னித்து, நீதிமானாக்குகிறார். மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறார். இரண்டிலுமே அவருடைய நீதிதான் வெளிப்படுகிறது. எது சரியானது மற்றும் நியாயமானது என்பது அவருக்கு மட்டுமே தெரியும். அதை மட்டுமே அவர் செய்வார்.

இரண்டு காரணங்களுக்காக கிறிஸ்து உலகத்துக்கு வந்து மரித்தார் என்பதை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. தேவன் நியாயாதிபதியாகவும் அதே நேரத்தில் இரட்சகராகவும் செயல்படுவதைப் பார்க்கிறோம்.

1) தேவநீதியை வெளிப்படுத்த

2) மனிதனுக்கு தேவநீதியை வழங்க

முற்காலத்தில் செய்யப்பட்ட பாவங்களைப் பொறுத்தவரை தேவன் மிகப் பொறுமையாகவே இருந்தார். அவர்களைத் தண்டிக்காமல்

விட்டதாகவே தோன்றுகிறது. "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்" (அப் 17:30). "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும்" என்று அப் 14:16ல் வாசிக்கிறோம். அவர் பொறுமையாக இருந்தார் என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. பாவங்களை மன்னித்தார் என்று சொல்லப்படவில்லை. **பழைய ஏற்பாட்டுக் காலங்களில் பாவமன்னிப்பை ஏற்படுத்தும்படியாக கிறிஸ்துவின் மரணம் சம்பவிக்கவில்லை என்பதினால் பாவங்கள் மூடப்பட்டன,** மன்னிக்கப்படவில்லை. இதிலும் அவருடைய நீதியே வெளிப்படுகிறது. நோவா காலத்து பெருவெள்ளம், சோதோம் கொமோராவின் அக்கினி, எகிப்தியர் சந்தித்த வாதைகள் ஆகிய நாட்களிலும் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வெளிப்பட்டன. ஆனாலும், பழைய ஏற்பாட்டு காலத்து பாவங்களும் கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டதின் விளைவாகவே பாவமன்னிப்பு உண்டானது.

இக்காலத்திலும் தேவன் நீதியுள்ளவராகவே இருக்கிறார். தன்னுடைய நீதியை கிறிஸ்துவினிமித்தம் மனிதர்களுடன் பகிர்ந்துகொள்ள ஆயத்தமாயிருக்கிறார். இன்று செய்யப்படும் பாவங்களும் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டு, அவரைப் பற்றிய விசுவாசத்தினால் வரும் நீதியின் விளைவாகவே மன்னிக்கப்படுகின்றன. மனித சரித்திரத்தின் மையப்பகுதியில் கல்வாரி சிலுவை நிறுத்தப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். **சிலுவைக்கு முந்தின காலகட்டத்திலும், சிலுவைக்குப் பிந்தின காலகட்டத்திலும் கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை மனித இனத்துக்கு தேவன் வழங்கிக்கொண்டே இருக்கிறார்.** கல்வாரி இரத்தம் சகல பாவங்களையும் மன்னிக்கப்போதுமானது. "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). பாவம் தண்டிக்கப்படாத நிலையில் தேவநீதி வெளிப்படமுடியாது.

மனிதனுடைய இரட்சிப்பில் கிறிஸ்துவின் செயலாற்றல் தனித்தன்மை வாய்ந்தது. தேவனுடைய பிரதிநிதியாக அவர் மனிதனுடன் செயல்பட்டார். மனிதனுடைய பிரதிநிதி என்ற முறையில் பாவத்தினிமித்தம் மனிதன் அனுபவிக்கவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார். தேவனுடைய பிரதிநிதி என்ற முறையில் பாவ மன்னிப்பு என்ற மீட்பை வழங்கினார். யோவான் 3:16, 2 கொரி 5:18 வாசித்துப் பாருங்கள்.

கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார். (ரோமர் 3:26)

தேவநீதியை வழங்க மனிதனுக்கு மீட்பை வழங்கும்படியாக கிறிஸ்து ஏன் மரிக்கவேண்டியதிருந்தது என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தைப்பற்றியும், அவர் கிருபாதார பலியாக மரித்ததைப் பற்றியும் பேசும் மத் 20:28, 26:28, மாற்கு 10:45; 14:24, லூக்கா 20:20, அப் 20:28, 1 கொரி 10:16; 11:25, எபே 1:7; 2:13, கொலோ 1:20, எபி 9:11,12; 23-28, வெளி 1:5; 5:9; 7:14, 12:11, 13:8 வாசித்துபாருங்கள்.

தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. அது ஒரு பாவமனிதன் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது என்று சொல்லும்போது, கல்வாரி சிலுவையில், தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்ததின் விளைவாக உண்டான தேவநீதியை நம்பி, அதினால் உண்டாகும் மீட்பை விசுவாசித்து, மனித இரட்சிப்புக்கு தேவன் வகுத்த ஒரே வழி அதுதான் என்பதை அங்கீகரிப்பதைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவே இரட்சகர் என்று அறிவிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், அவருடைய பாடுமரணத்தினால்தான் இரட்சிக்கும் வல்லமை வெளிப்பட்டது என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே 1:7). கொலோ 1:14, ரோமர் 5:9, எபி 9:12,14; 13:12, வெளி 1:6, 1 பேதுரு 1:19, 1 யோவான் 1:7 வாசித்துப் பாருங்கள்.

கிறிஸ்துவின் மரணத்தினால் பாவமன்னிப்பு உண்டாயிற்று என்று சொல்லாமல், அவருடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினால் பலிக்கும் கிருபாதார பலியாக பிதா கிறிஸ்துவை ஏற்படுத்தினார் என்று பவுல் சொல்வதற்கு காரணம் உண்டு. இரத்தம் என்ற வார்த்தை மட்டுமே பழைய ஏற்பாட்டு பலிகளை நம்மில் நினைவுபடுத்தும் என்பதை பவுல் அறிவார். லேவியர் 17:14 சொல்லுகிறது, "சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது". "இரத்தமே உயிர்" (உபா 12:23). விலக்கப்பட்ட கனியை "நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி 2:17) என்பது தேவனுடைய நியமம். இஸ்ரவேலரின் பாவமன்னிப்புக்காக ஆசாரியர்கள் பாவ நிவாரண பலியான வெள்ளாட்டுக் கடாவைக் கொன்று, அதின் இரத்தத்தை கிருபாசனத்தின்மேல் தெளித்து (லேவி 16:15) பாவத்தின் சம்பளமான மரணம் (ரோமர் 6:23) சம்பவித்தாயிற்று என்று தேவசமுகத்தில்

அறிக்கையிட்டு மன்னிப்பைப் பெற்றுக்கொண்டார்கள். பாவநிவாரண பலிகளைக் குறித்த பழைய ஏற்பாட்டு வெளிப்பாடுகளோடு கிறிஸ்து இரத்தம் சிந்தி மரணமடைந்ததை இணைக்கும்படியாகவே பவுல் இவ்வாறு சொல்லுகிறார்.

"இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" (மத் 26:28) என்கிறார் இயேசு. எபிரெயர் 9:12 சொல்லுகிறபடி: "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்." தற்காலிகமான மீட்பை அல்ல, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். ரோமர் நிருபத்தில் இரத்தம் என்ற வார்த்தை இந்த வசனத்தில்தான் முதலாவதாக பயன்படுத்தப்படுகிறது.

கிருபாதார பலியாக கிறிஸ்துவை ஏற்படுத்தியது பிதாவாகிய தேவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள் (2 கொரி 5:21, கலா 3:13). "நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10). மனிதனுடைய இரட்சிப்பில் பிதாவின் பங்கைக் குறித்து பல வசனங்கள் உண்டு. 2 கொரி 5:18-21, கலா 3:13, 1 கொரி 8:6, எபே 4:4-6, எபி 2:10-13 வாசித்துப் பாருங்கள்.

இதை வாசிக்கிற சகோதரனே, சகோதரியே, **நீ செய்த பாவங்கள் ஒன்று உன்மேல் இருக்கவேண்டும் அல்லது கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டிருக்கவேண்டும்.** உன்மேல் இருக்கிறதென்றால் அக்கினிக்கடலில் நீ தண்டிக்கப்படுவது உறுதி. அவை கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டது என்றால் உன் சார்பில் அவர் தண்டிக்கப்பட்டது உறுதி. அவை கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டது என்றால் உன் சார்பில் அவர் தண்டிக்கப்பட்டுவிட்டார் என்பது நிச்சயம். எனவே நீ ஒருபோதும் தண்டிக்கப்படுவதில்லை. நீ ஏற்கனவே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டாயிற்று.

"கிருபாதார பலி" என்ற வார்த்தை ஆங்கிலத்தில் propitiation என்றும், கிரேக்க பாஷையில் hilastérion என்றும், எபிரெய மொழியில் capporeth என்றும் சொல்லப்படுகிறது. இது கிருபாசனத்தோடு சம்பந்தப்பட்டது (யாத் 25:17-21, 35:17-22; 30:6; 31:7; 35:11; 37:6-9; 40:18, லேவி 16:2,13). "கிருபாசனம்" பழைய ஏற்பாட்டு காலத்தில் கல்வாரி

சிலுவைக்கு நிழலாட்டமாக இருக்கிறது. இந்த வசனத்தில் வரும் இரத்தம் என்ற வார்த்தையும் கிருபாதாரபலி என்ற வார்த்தையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கொல்கொதாவில் என்ன நடந்தது, கிறிஸ்துவின் பாடு மரணத்தின் பின்னணி என்ன என்பதை அறிவிக்கின்றன.

தேவநீதி

இதன் காரணகர்த்தா யார்?

பிதா (வசனம் 25)

நியாயப்பிரமாணத்துடன் உள்ள உறவு என்ன?

1. நியாயப்பிரமாணமின்றி வெளியாக்கப்படுகிறது (வசனம்21)
2. நியாயப்பிரமாணம் சாட்சி கொடுக்கிறது (வசனம் 21)

அதின் மேன்மை என்ன?

கிறிஸ்துவின் இரத்தத்தில் வைக்கும் விசுவாசம் (வசனம் 26)

யாருக்குப் பொருந்தும்?

விசுவாசிக்கிற எல்லாருக்கும் (வசனம் 27)

நீதிமானாக்கப்படும் விதம்

1. இலவசமாய் (வசனம் 24)
2. கிருபையாய் (வசனம் 24)
3. இயேசுவில் உள்ள மீட்பைக் கொண்டு (வசனம் 24)

எதற்காக ?

1. தான் நீதியுள்ளவர் என்பதைக் காண்பிக்கும் பொருட்டு (வசனம் 25)

2. பாவமனிதர்களுக்கு தேவநீதியை வழங்கும் பொருட்டு

தேவன் ஒருவரே நீதிபரர். தன்னுடைய நீதியை கிறிஸ்து மூலமாக யாருக்கெல்லாம் வழங்குகிறாரோ அவர்கள் நீதிமான்கள். அவர்கள் மன்னிக்கப்பட்ட பாவிகள் அல்ல, பரிசுத்தவான்கள்.

ரோமர் 3:21-26 வேத பகுதி அறிவிக்கும் காரியங்கள்:

1. நியாயப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்கு-வதில்லை (வசனம் 21)

2. கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் (வசனம் 22)

3. கிறிஸ்துவில் விசுவாசம் வைத்திருப்பவர்கள் எவரானாலும் நீதிமானாக்கப்படுவார்கள் (வசனம் 22,23)

4. பாவிகள் மன்னிக்கப்பட கிறிஸ்து ஒருவரே வழி (வசனம் 24-26)

இப்படியிருக்க மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசுவாசப் பிரமாணத்தினாலேயே (ரோமர் 3:27).

இப்படியிருக்க என்று பவுல் இந்த வசனத்தை முந்தின வேத பகுதியோடு இணைத்துக் கொள்கிறார். **கிறிஸ்து கிருபாதார பலியாக இருப்பதினால் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய இரட்சிப்பைக் குறித்து மேன்மை பாராட்ட முடியாது.** ஏனென்றால் விருத்தசேதனமோ, நியாயப்பிரமாண கிரியைகளோ ஒருவனுக்கும் துணைசெய்வதில்லை. நாம் பார்த்தபடி:

1. எல்லாருமே பாவிகள் (வசனம் 23)

2. எல்லாருமே தேவமகிமையற்றவர்கள் (வசனம் 23)

3. எல்லாருக்குமே மீட்பு இலவசமானது. (வசனம் 24)

4. எல்லாருமே கிருபையினால் நீதிமான்களாகிறார்கள் (வசனம் 24)

5. எல்லாருமே இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறார்கள் (வசனம் 26)

ஒருவனுடைய மீட்பு கிரியாப்பிரமாணத்தினால், அதாவது அவனுடைய கிரியைகளின் அடிப்படையில் உண்டாயிருக்குமானால் அவன் தன்னைக் குறித்து மேன்மை பாராட்ட இடமுண்டு. மனிதர்களுடைய நீதியான கிரியைகள்கூட தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையாக இருக்கிறது (ஏசாயா 64:6). பரிசுத்தமான தேவன் அதை ஏற்றுக்கொள்ளுவதில்லை. எபேசியர் 2:8-9 சொல்லுகிறபடி: "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல". உங்களுடைய ஜெபஜீவியத்தினால், பக்தி வைராக்கியத்தினால், நன்னடத்தையினால்

நீங்கள் இரட்சிக்கப்பட்டிருப்பதாகவும், அல்லது பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருப்பதாகவும் நீங்கள் நினைப்பீர்களானால்-நம்மை நாமே இரட்சித்துக்கொண்டோமே, பின்னே இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் அவசியம் நமக்கெதற்கு என துணிகரகமாகவும் எண்ணுவீர்கள். இரட்சகராகிய இயேசுகிறிஸ்து உங்களுக்கு அவசியமில்லை என்ற ஆவிக்குரிய பரிதாபமான கீழான நிலைக்கும் வரத்தலைப்படுவீர்கள்

ஜெபம் பண்ணும்படியாகத்தான் பரிசேயன் ஒருவன் தேவாலயத்துக்கு வருகிறான். ஆனாலும் தன்னைக் குறித்து மேன்மை பாராட்டியதின் விளைவாக நீதிமானாக்கப்படாதவனாக வீட்டுக்குத் திரும்புகிறான் (லூக்கா 18:10-14). **தங்களுடைய தகுதியை தேவசமுகத்தில் அறிக்கையிடுகிறவர்கள் தேவனை அல்ல, தங்களையே ஆராதிக்கிறார்கள்.** தன்னைக்குறித்து மேன்மை பாராட்டிய ஒருவனுடைய பரிதாபத்துக்குரிய நிலையைக்குறித்து ஏசாயா 14:12-17, எசேக் 28:12-19 வாசித்து அறிந்து கொள்ளுங்கள். "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு" தேவன் என்னவெல்லாம் செய்தார் என்பது 1 கொரிந்தியர் 1:27-29ல் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் உண்மையில் தேவனிடமிருந்து மேலான சிலாக்கியங்களைப் பெற்றவர்கள்தான். அதினிமித்தம் நம்மை இன்னும் தேவசமுகத்தில் தாழ்த்துவதுதான் நம்முடைய கடமை. ஆயக்காரனைப் போல் "தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்கா 18:13) என்று சொல்வோமானால் நாம் நீதிமானாக்கப்படுவோம்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எதைக்குறித்தும் மேன்மைபாராட்டக் கூடாதா என்ற கேள்வி எழும்புகிறது. கீழ்கண்ட ஆறு காரியங்களைக் குறித்து மட்டுமே மேன்மை பாராட்ட வேதம் அனுமதிக்கிறது.

1. தேவனைக் குறித்து மேன்மைபாராட்டலாம். (ரோமர் 5:11)
2. கிறிஸ்துவைக் குறித்து மேன்மைபாராட்டலாம். (1 கொரி 1:30, பிலிப் 3:3)
3. நாம் பெறவிருக்கும் தேவமகிமையைக் குறித்து மேன்மை பாராட்டலாம். (ரோமர் 5:2)
4. நாம் ஊழியத்தில் சந்திக்கும் உபத்திரவங்களைக் குறித்து மேன்மை பாராட்டலாம். (ரோமர் 5:4)

5. நம்முடைய பெலவீனத்தைக் குறித்து மேன்மை பாராட்டலாம். (2 கொரி 11:30)

6. கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்து மேன்மை பாராட்டலாம். (கலா 6:14)

ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப் படுகிறான் என்று தீர்க்கிறோம். (ரோமர் 3:28)

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" என்ற அறிவிப்பின் விளக்கம் இந்த வசனத்தோடு நிறைவடைகிறது என்பதினால் "ஆதலால்" என்று வசனம் துவங்குகிறது. அதே நேரத்தில் முந்தின வசனத்தில் மேன்மை பாராட்டல் நீக்கப்பட்டது என்பதையும் இது உறுதிப்படுத்துகிறது.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை தேவன் நிச்சயமாகவே ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஏனென்றால் எந்த ஒரு மனிதனும் அதற்கு முழுமையாகக் கீழ்ப்படிய முடியாது. எனவே இரட்சிப்பை மனிதனுக்கு வழங்கும்படியாக வேறு ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறார். அதை மனிதர்கள் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

அதே நேரத்தில் விசுவாசம் நம்மை இரட்சிப்பதில்லை என்பதை மீண்டும் நினைவுபடுத்துகிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே நம்மை இரட்சிக்கிறார். பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரன் நியாயப்பிரமாணத்தின் சகல கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்தவராய், பழுதற்ற ஆட்டுக்குட்டியாக தன்னை பாடுமரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததின் விளைவாக சம்பாதித்த தேவநீதியை பாவ மனிதர்களாகிய நம்முடைய கணக்கில் வரவு வைத்ததின் விளைவாகவே இரட்சிப்பு உண்டாகிறது. கிறிஸ்துவுக்குச் சொந்தமான இந்த நீதியை மனிதனுக்கு கொண்டுவரும் வாய்க்காலாகவே விசுவாசம் செயல்படுகிறது. விசுவாசத்தினிமித்தம் நாம் இரட்சிக்கப்படுவதாக எந்த வேதவசனமும் சொல்லவில்லை. **நம்முடைய விசுவாசம் ஒருநாளும் தேவநீதியாக மாறுவதில்லை, மாறவும் முடியாது.** "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2 தீமோ 1:12) என்ற அறிக்கையில்தான் நம்முடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது.

நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் (நற்கிரியைகள்) நம்மை நீதிமானாக்குவதில்லை என்பதற்காக கிறிஸ்தவர்களாகிய நாம் நற்கிரியைகள் செய்ய வேண்டியது இல்லை என்பதல்ல.

நீதிமான்களாக்கப்பட்டவர்கள் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியமாட்டார்கள் என்பதும் அல்ல. எந்த ஒரு மனிதனும் தன்னுடைய சுயநீதியின் அடிப்படையில் நீதிமான் ஆவதில்லை என்பதையே பவுல் இந்த வேதபகுதியில் வலியுறுத்துகிறார். பல வேத வசனங்கள் நாம் நற்கிரியை செய்யவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. எபேசியர் 2:10 சொல்லுகிறது : "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்". இன்னும் ரோமர் 2:7, 2 கொரி 9:8, 1 தீமோ 2:10; 5:10,25; 6:18, 2 தீமோ 3:17, தீத்து 2:7, 14; 3:8, எபி 10:24, வாசித்துப் பாருங்கள்.

நாம் ஒரு காரியத்தை திட்டமாக அறிந்து கொள்ளவேண்டும். தேவனுடைய பிள்ளைகளாகும்படியாக நாம் நற்கிரியைகள் செய்வதில்லை, தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதினால் நற்கிரியைகள் செய்கிறோம். பரலோகத்துக்குப் போவதற்காக நற்கிரியைகள் செய்வதில்லை. பரலோகத்துக்குப் போய்க்கொண்டிருப்பதினால் நற்கிரியைகள் செய்கிறோம்.

தேவன் யூதருக்குமாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம், புறஜாதிகளுக்கும் தேவன்தான். (ரோமர் 3:29)

தேவனைக் குறித்த சகல வெளிப்பாடுகளையும் யூதர்கள் மட்டுமே பெற்றிருந்தார்கள் என்பதினால் தேவன் தங்களுக்கு மட்டுமே சொந்தமானவர் என்ற தவறான நம்பிக்கை யூதர்களிடம் காணப்பட்டது. தேவனுடைய சகல ஆசீர்வாதங்களுக்கும் தாங்களே சொந்தமானவர்கள் என்று அவர்கள் நம்பி வந்தார்கள். அவருடைய வாக்குத்தத்தங்களை தாங்கள் மட்டுமே சுதந்தரிக்க முடியும் என்று கருதினார்கள். இந்த நம்பிக்கை முற்றிலும் தவறு என்கிறார் பவுல். புறஜாதியாருக்கும் அவர் தேவன்தான் என்கிறார். அவர்களையும் சிருஷ்டித்து, போஷித்து வழிநடத்துகிற தேவன் ஒருவரே.

விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாயும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே. (ரோமர் 3:30)

"தேவன் ஒருவரே" (1 தீமோ 2:5) என்பதில் யூதர்கள் மிகுந்த

நம்பிக்கை உடையவர்கள். "இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா 6:4) என்பது யூதர்களின் மிக முக்கியமான பிரமாணம். "நான், நானே கர்த்தர்; என்னையல்லாமல் ரட்சகர் இல்லை" (ஏசாயா 43:11) என்று பல இடங்களில் தேவன் பேசியிருக்கிறார். "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" (1 தீமோ 2:5).

தேவன் ஒருவரே என்று நம்பும் யூதர்கள், தங்களைச் சுற்றியிருக்கும் கோடிக்கணக்கான புறஜாதியாருக்கும் அவரே தேவனாக இருப்பார் என்பதை நம்புவது கடினமாக இருந்தது. ஒரே தேவன் என்று இருக்கும்போது யூதர்களுக்கு ஒரு தேவன், புறஜாதியாருக்கு ஒரு தேவன் என்று இருக்கமுடியாது. "நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை; என்னைத்தவிர வேறொருவரும் இல்லை" (ஏசாயா 45:21,22). ஒரே தேவனாகிய கர்த்தர் பூமியின் எல்லையெங்கிலுமுள்ள புறஜாதியாருக்கும் அழைப்பு விடுவிப்பதைப் பாருங்கள். இந்த ஒரே தேவன் முழுமனித இனத்தையும் மீட்க ஒரே ஒரு விசுவாச மார்க்கத்தைத்தான் உண்டாக்கியிருக்கிறார்.

விருத்தசேதனம் செய்யும்படியாக ஆணையிடப்பட்ட முதல் மனிதன் ஆபிரகாம். அந்த ஆபிரகாம் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டார்? "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதி 15:6) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே ஆபிரகாமிடம் தேவன் சொல்லுகிறார் : "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" என்று சொல்லும்போது புறஜாதியாரும் ஆசீர்வதிக்கப்படவிருக்கிறார்கள் என்பதை முன்னறிவிக்கிறது.

புறஜாதியாரை விருத்தசேதனம் செய்துகொள்ளும்படியாக தேவன் ஒருபோதும் சொன்னதில்லை. அவர்களை விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்க தேவன் சித்தம் கொண்டார். கலாத்தியர் 3:7,8 இவ்விதமாகச் சொல்லுகிறது : "விசுவாச மார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. மேலும் தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறாரென்று வேதம் முன்னாகக் கண்டு: உனக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் முன்னறிவித்தது".

யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, ஒருவரும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை என்று

பவுல் ஏற்கனவே அறிவித்திருக்கிறார். இந்த வசனம் நீதிமானாக்கும் வழிமுறைகளிலும் யூதர், புறஜாதியார் என்ற வித்தியாசம் இல்லை என்பதை நிரூபிக்கிறது. அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர், தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்" (ரோமர் 10:11,12). சகரியா 14:9 சொல்லுகிறபடி, "அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்".

யூதர்களை "விசுவாசத்தினாலும்" புறஜாதியாரை "விசுவாசத்தின் மூலமாயும்" தேவன் நீதிமானாக்குகிறார் என்று சொல்லும்போது, ஒரு சிறிய வித்தியாசத்தை பவுல் மனதில் வைத்துக்கொண்டு பேசுவதைப்போல் தெரிகிறது. ஆனாலும் இருதரத்தாரையும் அவர்களுடைய விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே தேவன் ஏற்றுக் கொள்ளுகிறார் என்பது தெளிவாகிறது. அதனால்தான் பவுல் சொல்லுகிறார், "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம்" (கலா 2:15).

கிறிஸ்தவர்களாகிய நாம் விருத்தசேதன உடன்படிக்கைக்குப் புறம்பானவர்கள். நம்முடைய இரட்சிப்பு விசுவாசத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. ஆனாலும் பலவேளைகளில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில் நம்பிக்கை உடையவர்களாய் இடங்கொள்ளாமற்போகுமட்டும் தேவன் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டாரா என்று எதிர்பார்க்க ஆரம்பிக்கிறோம். "நாம் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்கள் அல்ல" (ரோமர் 6:14). "நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். யூதர்களை இரட்சிக்கும்படியாய் நியாயப் பிரமாணத்துக்குக் கீழானவராய் ஸ்திரீயினிடத்தில் பிறந்தாலும்" (கலா 4:5). இன்று அவர் பரலோகத்தில் இருக்கிறார் என்று பார்த்தோம். அங்கு நியாயப்பிரமாணம் அமுலில் இல்லை. எபேசியர் 2:11-16 நீளமான வேதபகுதியாக இருந்தாலும் வாசித்துப்பாருங்கள்.

அப்படியானால், விசுவாசத்தினாலே நியாயப்பிரமாணத்தை அவமாக்குகிறோமா? அப்படி அல்ல; நியாயப்பிரமாணத்தை நிலை நிறுத்துகிறோமே. (ரோமர் 3:31)

யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, இரட்சிப்பின் பின்னணியில் விசுவாசமே செயல்படுகிறது என்பதைப் பார்த்தோம். நியாயப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்குவதில்லை, நியாயப்பிரமாணம் இன்றி தேவநீதி வெளிப்படுகிறது. இந்த சத்தியங்களுக்கு விரோதமாக உடனடியாக யூதர்களிடமிருந்து வெளிப்படும் எதிர்ப்பு இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. இத்தகைய அறிக்கைகள் நியாயப்பிரமாணத்தையும், அதை வழங்கிய தேவனையும் கனவீனப்படுத்துவதாக இருக்காதா? விசுவாச வழியைப் பின்பற்றி தேவனுடைய சட்ட விதிகளை அழித்து விடுவதுபோல் இது இருக்கிறதே! நியாயப்பிரமாணம் முற்றிலும் பலனற்றதாகி விடுகிறதா? நியாயப்பிரமாணத்துக்கு யாரும் கீழ்ப்படிய வேண்டியதில்லையா?

"அப்படி அல்ல" என்கிறார் பவுல். இதுவரை பவுல் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாக பேசுவதுபோல தோன்றியது உண்மைதான். ஆனால் அவருடைய நோக்கம் என்ன? தங்களுடைய கீழ்ப்படிதல் என்னும் கிரியை இரட்சிக்கப்போதுமானது என்ற யூதர்களுடைய நம்பிக்கையை தகர்க்கும்படியாகவே அவ்வளவு தூரம் பவுல் பேசவேண்டியதாயிற்று. "நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்" (மத் 19:16) என்று துணிகரமாக கேட்கும் மனப்பான்மை அவர்களிடமிருந்து நீங்க வேண்டும் எனபதற்காகவே பவுல் பேசினாலும், இந்த வசனத்தில் நியாயப்பிரமாணம் அவமாக்கப்படவில்லை என்கிறார். அவமாக்குதல் என்றால் அழித்துப்போடுதல் என்று பொருள். அது ஒழித்துப் போடப்படவில்லை. அவசர அவசரமாக நிர்மூலமாக்கப்படவில்லை.

உண்மையில் நியாயப்பிரமாணத்தை "நிலைநிறுத்துகிறோம் என்கிறார் பவுல். நம்முடைய நற்கிரியையினால் நம்மில் இரட்சிப்பு உண்டாவதில்லை என்பதை உணர்ந்து, நமக்காக கல்வாரியில் மரித்த இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறும்போது நாம் நியாயப்பிரமாணத்தையே நிலைநிறுத்துகிறோம். மனிதனுடைய மீறுதலினால் உண்டான தேவகோபாக்கினையை கல்வாரியில் கிறிஸ்து ஏற்றுக்கொள்ளும்போது நியாயப்பிரமாணமே நிலைநிறுத்தப்படுகிறது.

தேவனுக்குப் பிரியமானது எது, பிரியமில்லாதது எது என்பதை அறிந்துகொள்ள நியாயப்பிரமாணமே உதவி செய்கிறது. எனவே நியாயப்பிரமாணம் நிலைநிறுத்தப்படவேண்டிய ஒரு காரியம்தான், சந்தேகமே இல்லை.

4

ஆபிரகாம் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டார்?

நற்கிரியைகள் செய்வதின் மூலமாக எந்த மனிதனும் நித்திய ஜீவனைப் பெறமுடியாது என்பதை பவுல் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துவிட்டார் (3:21-31). நம்முடைய முயற்சிகளினாலும், கிரியைகளினாலும் நாம் பரலோகம் போய்விட்டால், பரலோகத்தில் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அங்கிருந்துகொண்டு நித்திய நித்தியமாக நம்முடைய சாதனைகளைக் குறித்துத்தான் பெருமையடித்துக்கொண்டிருப்போம். புத்திசாலித்தனமாக அதைச்செய்தேன், இதைச்செய்தேன். அதனால்தான் பரலோகத்தில் இருக்கிறேன். நான், நானே என்னை இரட்சித்துக் கொண்டேன் என்றுதான் பேசிக்கொண்டிருப்போம். நம்மைநாமே இவ்வாறு புகழ்ந்துகொண்டிருக்கும்போது அதன் மூலமாக தேவன் மகிமைப்படுவாரா? இரட்சிப்பைப் பொறுத்தவரை எந்த மனிதனும் பெருமைபாராட்டமுடியாது (3:27).

ஒருவன் தேவனுடைய ஈவாக வழங்கப்படும் விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படுகிறான் என்ற உபதேசத்தை அறிவித்த பவுல், இந்த அதிகாரத்தில் இந்த சத்தியம் தன்னுடைய கண்டுபிடிப்பு அல்ல, ஏற்கனவே வேதத்தில் தேவனால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிறார். ஆனாலும் நற்கிரியைகளினால் தேவநீதியை சுதந்தரிக்கமுடியாது என்பதை ஏற்றுக்கொள்ள மனிதனால் முடியவில்லை.

அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களில் ஆபிரகாம் தன்னுடைய விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்டார் என்பதையும், கிரியையினால் அல்ல என்பதையும் பவுல் நிரூபிக்கிறார். ஆபிரகாம்

தேவனால் அழைக்கப்பட்டபோது விக்கிரக வழிபாடுகளில் இருந்த புறஜாதி மனிதனாகத்தான் இருந்தார். ஒருவேளை ரோமர் 1-வது அதிகாரத்தின் கடைசி வேதபகுதியில் சொல்லப்பட்ட எல்லாப் பாவங்களும் அவரிடம் காணப்பட்டிருக்கலாம். ஆனாலும் தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டதால் நீதிமானாகிறார். இந்த சத்தியம் தாவீதால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததை 6 முதல் 8 வரையுள்ள வசனங்களிலும் சுட்டிக்காட்டுகிறார். இந்த இரண்டு பரிசுத்தவான்களுமே யூதர்களால் மிகவும் மரியாதைக்குரியவர்களாக கருதப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆபிரகாமும் தாவீதும் விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர்கள். இதினிமித்தம் அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டிருக்கலாம் என்ற எண்ணம் தன் வாசகர்களுடைய மனதில் எழும்பக்கூடும் என்பதனால் 9 முதல் 12 வரையுள்ள வசனங்களில் ஆபிரகாம் விருத்தசேதனம் செய்துகொள்வதற்குமுன்பே நீதிமானாக்கப்பட்டான் என்பதை பவுல் தெளிவுபடுத்துகிறார். ஆபிரகாமின் சந்ததியார் பூமியைச் சுதந்தரிப்பார்கள் என்ற வாக்குத்தத்தம் நியாயப்பிரமாணத்தோடு சம்பந்தப்பட்டதல்ல (வசனம் 13-22) என்கிறார்.

கிரியைகளினால் ஒருவன் நீதிமானாக்கப்படக்கூடுமானால் விசுவாசமும், வாக்குத்தத்தமும் பயனற்றதாகிவிடும் (வசனம் 13,14). தேவன் ஆபிரகாமின் விசுவாசத்தை நீதியாக ஏற்றுக்கொண்டதுபோல், நம்முடைய விசுவாசத்தின் பொருட்டு நம்மையும் நீதிமான்களாக ஏற்றுக்கொள்ளுவார். ஆபிரகாம் கிரியையினால் நீதிமானாக்கப்படவில்லை என்பது உண்மையானால் எந்த ஒரு மனிதனும் கிரியையினால் நீதிமானாக்கப்படுவதில்லை. அதனால்தான் ஆபிரகாம் அநேக தேசத்து மக்களுக்கு தகப்பனாகக் கருதப்படுகிறார் என்பதை பவுல் இந்த அதிகாரத்தில் விளக்குகிறார். ஆபிரகாமை விசுவாசத்தினால் நீதிமானாக்கிய அதே தேவன் நம்மை நீதிமானாக்கும்படியாக மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒவ்வொருவரையும் நீதிமானாக்குகிறார் (வசனம் 23-25).

ஆபிரகாமின் உதாரணம் (வசனம் 1-5)

அப்படியானால், நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லுவோம்? (ரோமர் 4:1)

தான் ஒரு யூதன் என்ற முறையில் (பிலிப் 3:5) தன்னையும் வாசகர்களோடு இணைத்துக்கொண்டு, "நம் தகப்பனாகிய ஆபிரகாம்" என்று உரிமையோடு அவரை சொந்தங்கொண்டாடுகிறார் பவுல். யோவான் 8:39ல் "ஆபிரகாமே எங்கள் பிதா" என்று பரிசேயர் உரிமை பாராட்டுவதைப் பார்க்கிறோம். ஆயக்காரனாயிருந்த சகேயுவைப்பற்றி இயேசுகிறிஸ்து சொல்லுகிறார்: "இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே" (லூக்கா 19:9), இஸ்மவேலுக்கும் ஆபிரகாம் தகப்பனாக இருந்தான் என்பதை அறிவோம். கேத்தூராள் மூலமாக சிம்ரான், யக்ஷான், மேதான், மீதியான், இஸ்பாக் என்ற குமாரர்களும் ஆபிரகாமுக்கு இருந்தார்கள். பல மறுமனையாட்டிகள் ஆபிரகாமுக்கு இருந்தபடியால் (ஆதி 25:1-6) இன்னும் பலர் ஆபிரகாம் எங்கள் தகப்பன் என்று மாம்சத்தின்படி உரிமைபாராட்டக்கூடும். இயேசு யூதர்களிடம் என்ன சொல்லுகிறார் என்பதைக் கவனியுங்கள்: "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" (யோவான் 8:39). தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளாகக் கருதப்படமுடியும். யோவான் ஸ்நானன் சொல்லுகிறார்: "ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்" (மத் 3:9).

ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தவன் என்றும் என் விதிகளையும் என் கற்பனைகளையும் என் நியமங்களையும் என் பிரமாணங்களையும் கைக்கொண்டவன் என்றும் (ஆதி 26:4) தேவனிடமிருந்து சான்றிதழ் பெற்றுக்கொண்டவன். "என் சிநேகிதனாகிய ஆபிரகாம்" (ஏசாயா 41:8) என்று தேவன் அழைக்குமளவு அவரிடம் நன்மதிப்பைப் பெற்றிருந்த ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான் என்று சொல்லும்போது, "மாம்சத்தின்படி" என்ற வார்த்தை மூன்று காரியங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

1) சகல யூதர்களுக்கும் ஆதி தகப்பன் என்ற முறையில் சரீரரீதியாக ஆபிரகாம் பெற்றுக்கொண்ட மேன்மை.

2) தன் சரீரத்தின் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் செய்ததினால் ஆபிரகாம் பெற்றுக்கொண்ட மேன்மை.

3) ஆபிரகாம் தேவனுக்கு பல விதங்களில் கீழ்ப்படிந்தார் என்பதால் உண்டான மேன்மை.

சுருக்கமாகச் சொல்லுவதானால் ஆபிரகாம் தன்னில் காணப்பட்ட அல்லது தான் செய்த, ஏதோ ஒரு நல்ல காரியத்தினால் நீதிமானாகக் கருதப்படும் சிலாக்கியத்தைப் பெற்றாரா என்பதுதான் இந்த முதலாம் வசனத்தில் பவுல் கேட்கும் கேள்வி.

ஆபிரகாம் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட்டானாகில் மேன்மை பாராட்ட அவனுக்கு ஏதுவுண்டு; ஆகிலும் தேவனுக்கு முன்பாக மேன்மைபாராட்ட ஏதுவில்லை. (ரோமர் 4:2)

மாம்சத்தின்படி ஆபிரகாம் ஒன்றையும் காணவில்லை என்ற பதில் இங்கே சொல்லப்படுகிறது. "மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே" (ரோமர் 3:27) என்று முந்தின அதிகாரத்தில் அறிவித்த பவுல் மீண்டுமாக மேன்மை பாராட்ட ஒன்றும் இல்லை என்கிறார். நீதிமானாக்கப்பட்டதற்கு அவருடைய கிரியைகளே காரணமாக இருந்திருக்குமானால் அவைகளைக் குறித்து ஆபிரகாம் பெருமைப்படுவதில் தவறில்லை என்கிறார் பவுல். கிரியைகள் என்று பன்மையில் பவுல் சொல்லுகிறார். அவையாவன

1) விருத்தசேதனக் கிரியை

2) நியாயப்பிரமாணக் கிரியை

தான் செய்துகொண்ட விருத்தசேதனத்தினிமித்தம் ஆபிரகாம் நீதிமானாகக் கருதப்பட்டாரா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. ஆபிரகாம் விருத்தசேதனம் செய்துகொண்ட நிகழ்ச்சி ஆதியாகமம் 17-வது அதிகாரத்தில்தான் சொல்லப்படுகிறது. அதற்கு சுமார் பதினான்கு ஆண்டுகள் முன்பாகவே ஆபிரகாமின் விசுவாசத்தை நீதியான காரியமாக தேவன் எண்ணினார் என்று ஆதி 15:6ல் பார்க்கிறோம். சிறைப்பிடிக்கப்பட்ட லோத்துவை மீட்டு ஊர் திரும்பிவரும்போது மெல்கிசேதேக்கிடம் ஆசீர்வாதத்தைப் பெறும் ஆபிரகாம், தனக்குப்பிள்ளை இல்லையே என்ற வருத்தத்தை தேவனிடம் தெரிவிக்கிறார். அப்போது தேவன் அவனை வெளியே அழைத்து: "நீ வானத்தை அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதி 15:5,6) என்று வாசிக்கிறோம். தன்னுடைய பார்வையில் ஆபிரகாம் ஒரு நீதிமான் என்று தேவன் முடிவுசெய்த அந்த வேளையிலேயே அதை வெளிப்படையாக ஆவியானவர் உறுதிப்படுத்துகிறார்.

இவ்வாறு நீதிமானாக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்குப் பிறகும் ஆபிரகாமுக்கு குழந்தைகள் இல்லை. அவருடைய 86-வது வயதில்தான் ஆகார் மூலமாக முதல் மகன் இஸ்மவேல் பிறக்கிறான் (ஆதி 16:16). நீண்ட இடைவெளிக்குப்பின் 99-வது வயதில் (ஆதி 17:1) ஆபிரகாம் தேவனைத் தரிசிக்கிறார். அப்போது தேவன் சொல்லுகிறார்: "எனக்கும் உங்களுக்கும், உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நடுவே உண்டாகிறதும், நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான என் உடன்படிக்கை என்னவென்றால், உங்களுக்குள் பிறக்கும் சகல ஆண்பிள்ளைகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்; உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள்; அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாள மாயிருக்கும்" (ஆதி 17:10-11) என்கிறார்.

எனவே விருத்தசேதனக் கிரியையைக் குறித்தும் ஆபிரகாம் பெருமையாகப் பேசிக்கொள்ளமுடியாது. நியாயப்பிரமாணக் கிரியைகள் மூலமாகவும் அவர் தன்னை மேன்மையாக கருதமுடியாது. ஏனென்றால் ஆபிரகாமின் மரணத்துக்குப்பின், பல ஆண்டுகள் கழிந்து அவருடைய சந்ததியார் நானூறு ஆண்டுகள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து, பின் அங்கிருந்து கானானுக்குப் புறப்பட்டுப்போகும் வழியில்தான் சீனாய் மலையில் நியாயப்பிரமாணம் வழங்கப்படுகிறது.

தேவனுக்கு முன்பாக எந்த மனிதனும் எந்த காலத்திலும், எந்தக் காரணத்தைக்கொண்டும் மேன்மைபாராட்ட முடியாது என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஒருவேளை தாங்கள் பெற்றுக்கொண்ட பல்வேறு சிலாக்கியங்களைக் குறித்து மனிதர்கள் முன்பாக சிலர் மேன்மைபாராட்டலாம். இந்த சிலாக்கியங்களை தகுதியின் அடிப்படையில் இல்லாமல் தேவன் கிருபையாக, இலவசமாக வழங்கியிருக்கிறார் என்பதை அறிந்துகொள்பவர்கள் நிச்சயமாக அப்படிச் செய்யமாட்டார்கள். **தேவசமுகத்தில் தான் ஒன்றுமில்லை என்பதை அறிந்து கொண்டிருப்பவன்தான் உண்மையான கிறிஸ்தவன்.** "எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல் ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" (2 கொரி 3:5) என்கிறார் பவுல். தன்னுடைய தகுதியை நம்பும் மனிதன் இரட்சிக்கப்படுவதே இல்லை.

வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது? ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று சொல்லுகிறது. (ரோமர் 4:3)

தேவனுடைய உபதேசத்துக்கடுத்த காரியங்களில் சந்தேகங்கள், குழப்பங்கள், தர்க்கங்கள் ஏற்படும்போது நாம் வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது என்பதை மட்டுமே ஆராய்ச்சி செய்யவேண்டும். அதைக்குறித்து மனிதர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதல்ல. தேவன் சொல்லுவதும் வேதம் சொல்லுவதும் ஒன்றுதான். ஏசாயா 8:20 சொல்லுகிறது: "வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்", ஒரு வேதவசனத்திற்குரிய விளக்கத்தை இன்னொரு வசனம்தான் தரவேண்டும். இந்த நிருபம் முழுவதிலும் பவுல் இதைத்தான் செய்கிறார்.

ஆதியாகமம் 15:6-ஐ பவுல் சுட்டிக்காட்டுகிறார். அது சொல்லுகிறது : "அவன் (ஆபிரகாம்) கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்". தேவன்மேல் ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசம் ஆபிரகாமின் நீதியின் கணக்கில் வரவு வைக்கப்பட்டது. தேவன் தான் சொன்னதைச் செய்வார் என்பதை ஆபிரகாம் விசுவாசித்தார். ஒரு மனிதன் வெளிப்படையாக எதையும் செய்யாமல் தனக்குள்ளேயே செய்யக்கூடிய மிகப்பெரிய காரியத்தை ஆபிரகாம் செய்தார். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்" (ரோமர் 10:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. **விசுவாசம் ஒரு கிரியை அல்ல, ஒரு மனநிலை.** தேவனையும் அவருடைய வார்த்தையையும் நம்பும் அனுபவமுடைய ஆபேல், ஏனோக்கு, நோவா போன்ற பல பரிசுத்தவான்கள் ஆபிரகாமின் காலத்துக்கு முன்பாக இருந்தார்கள். அவருக்குப்பின் இன்றுவரை எத்தனையோ பேர் இருந்திருக்கிறார்கள். சொல்லப்போனால் தேவனை விசுவாசிப்பது ஒரு கடினமான காரியம் அல்ல. ஆனாலும் தேவனுடைய இரக்கத்தினாலும் கிருபையினாலும் ஆபிரகாமின் விசுவாசம் நீதியாக எண்ணப்படும் வெளிப்படையான அங்கீகாரத்தைப் பெறுகிறது. விலக்கப்பட்ட ஆகமம் 1 மக்கபே 2:52 சொல்லுகிறது : "ஆபிரகாம் சோதனையில் விசுவாசியாய் நிலைகொள்ளவில்லையோ? நீதிமானாக எண்ணப்படவில்லையோ?"

ஆபிரகாம் நீதிமானாக மாறினார் என்றோ, நீதி செய்ய ஆரம்பித்தார் என்றோ வேதம் சொல்லவில்லை. அவருடைய விசுவாசம் அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது என்றுதான் வசனத்தில் வாசிக்கிறோம் (கலா 3:6, யாக் 2:23). எண்ணப்பட்டது (imputed, counted) என்ற வார்த்தை இந்த அதிகாரத்தில் மட்டும் 11 வசனங்களில் (3,4,5,6,8,9,10,11,22,23,24) பயன்படுத்தப்படுகிறது. கிரேக்க மூலவார்த்தையான Logidzomai புதிய ஏற்பாட்டில் 41 இடங்களில் சொல்லப்படுகிறது. பவுல் மட்டும் 35 இடங்களில் பயன்படுத்துகிறார். ஆபிரகாமின் விசுவாசத்தை நீதியாக எண்ணுபவர் யார்? சர்வ வல்லமையுள்ள தேவன். ஒரு காரியத்தை அவ்வப்போது யோசித்து முடிவு செய்பவர் அல்ல தேவன். அவர் ஒருவனைக் குறித்து நீதிமான் என்று

அறிவிப்பாரானால், அந்தத் தருணத்தில் மாத்திரமல்ல, கடைசிவரை அவன் நீதிமானாகத்தான் இருக்கமுடியும்.

அது அவனுக்கு நீதியாக எண்ணப்படுகிறது என்று சொல்லும்போது 'அது' என்ற வார்த்தை விசுவாசம் என்ற தன்மையைக் குறிப்பிடாமல் 'விசுவாசிப்பதை' மட்டுமே குறிப்பிடுகிறது. ஏனென்றால் ஒருபோதும் விசுவாசம் நீதியாக மாறுவதில்லை. தேவனுடைய வார்த்தையில் ஆபிரகாம் வைத்த அசைக்கமுடியாத நம்பிக்கையை தேவன் நீதியாக கருதுகிறார். இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் எதனடிப்படையில் நீதிமானாக்கப்படுகிறோமோ அதன் அடிப்படையிலேயே ஆபிரகாமும் நீதிமானாக்கப்பட்டார். அவன் நீதிமான் என்று தேவன் தீர்ப்பளிக்கிறார். இந்த அதிகாரத்தில் 18-22 வசனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. இந்த நம்பிக்கையின் அடிப்படையில் நடக்கும் காரியங்களாவன:

1) தேவனால் ஆபிரகாம் நீதிமானாகக் கருதப்படுகிறார்.

2) ஆபிரகாமின் பாவங்கள் தேவனால் மறக்கப்படுகின்றன.

3) ஆபிரகாம் தேவனிடம் இரக்கம் பெறுகிறார்.

4) ஆபிரகாம் தேவனுடைய சிநேகிதனாகிறார்.

5) ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாகிறார்.

கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும். (ரோமர் 4:4)

4,5 ஆகிய வசனங்களில் பவுல் கிரியையின் தத்துவம் என்ன, கிருபையின் தத்துவம் என்ன என்பதை விளக்குகிறார். ஒருவன் வேலை செய்து என்ன பெற்றுக்கொள்ளுகிறான். விசுவாசித்து என்ன பெற்றுக்கொள்ளுகிறான் என்பதை பவுல் விளக்குகிறார்.

இந்த வசனத்தில் பவுல் சொல்லுகிற காரியம் இதுதான். வேலை செய்கிற ஒருவனுக்கு, அவனுக்குரிய சம்பளத்தை எஜமானன் அன்பளிப்பாகவோ, பரிசாகவோ கொடுப்பதில்லை. அதை அவன் வேலை செய்து சம்பாதித்திருக்கிறான். அது அவனுக்கு கிடைக்கும் கூலி. அதைக் கொடுப்பதற்கு எஜமான் கடமைப்பட்டிருக்கிறான், கடன்பட்டிருக்கிறான். "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" (1 தீமோ 5:18). "வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது" என்று கூலியைக் கொடுக்காத எஜமானர்களை யாக் 5:4 குற்றப்படுத்துகிறது. லூக்கா 10:7, மத் 20:8 வாசித்துப்பாருங்கள்.

ஒருவன் தன்னுடைய கிரியையினால் நீதிமானாக்கப்படக்கூடும் என்றால் அதைக்குறித்து தேவனிடம் உரிமைபாராட்ட அவனால் கூடும். கிரியைகளை நிறைவேற்றிய அவனை தேவன் நீதிமானாக்காத பட்சத்தில் அவரோடு அவன் வழக்காடவும் முடியும். தான் இரட்சிக்கப்பட தேவனுடைய கிருபையை எதிர்பார்க்க வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லாமல் போய்விடுகிறது. இந்த சத்தியத்தின் விளக்கம் ரோமர் 11:6ல் இவ்விதமாகச் சொல்லப்படுகிறது. "இரட்சிப்பு கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே".

நற்கிரியைகள் செய்வதின் மூலமாக ஒருவனும் இரட்சிக்கப்படுவதில்லை என்பதை திட்டவட்டமாக அறிந்துகொள்ளுங்கள். **நல்லவர்கள் எல்லாரும் பரலோகத்துக்குப் போவார்கள் என்று வேதத்தில் ஒரு வசனமும் சொல்லவில்லை.** ஒருவன் சகல நற்குணங்களையும் உடையவனாக இருக்கலாம். ஆனாலும் அதினிமித்தம் அவன் இரட்சிக்கப்படுவதில்லை. அப்போஸ்தலர் 10-வது அதிகாரத்தில் நாம் சந்திக்கும் நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு தேவபக்தியுள்ளவன். தருமங்கள் செய்பவன். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருப்பவன் (வசனம் 2). அவனுடைய ஜெபம் எவ்வளவு வல்லமையானது என்றால் அது தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவருடைய சந்நிதியில் வந்தெட்டியது (வசனம் 4). அதினிமித்தம் அவன் இரட்சிக்கப்பட்டிருந்தானா? நிச்சயமாக இல்லை. பேதுரு வந்து அவனுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டியதிருந்தது. "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்" (வசனம் 43) என்று சொல்லவேண்டியதிருந்தது. சுவிசேஷத்தை விசுவாசிக்காத எந்த ஒரு மனிதனும் இரட்சிக்கப்படுவதில்லை.

ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிற வரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும். (ரோமர் 4:5)

ஒருவன் காரிய ரீதியாக எதையோ செய்து தேவனுடைய பார்வையில் நீதிமானாகமுடியாது என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. தன்னை நீதிமானாக மாற்றுபவர் தேவனே என்பதை உணர்ந்துகொண்டு, தேவன் அதை கிறிஸ்துவுக்குள் தனக்குச் செய்வார் என்று விசுவாசிக்கவேண்டும். கிரியைகளேதும் செய்யாமல், அதாவது, தான்

நீதிமானாகும்படி நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படிகிற தன் கிரியைகளின்மேல் நம்பிக்கை வைக்காமல், தேவன் நியமித்த வேறொரு வழியில் தனக்கு நீதி உண்டாகமுடியும் என்று நம்புகிறவனே நீதிமானாகக் கருதப்படுகிறான். தேவன் நியமித்த அந்த வேறு வழி கிறிஸ்துவை விசுவாசிப்பதுதான்.

நியாயப்பிரமாணத்தின் நாட்கள் துவங்கி கிறிஸ்துவின் மரணநாள் வரை கிரியையினால் உண்டாகும் இரட்சிப்பு வலியுறுத்தப்பட்டது என்பது உண்மைதான். "நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்" (லூக்கா 10:25) என்ற கேள்வியை நியாயசாஸ்திரி இயேசுவிடம் கேட்கிறார். லூக்கா 18:18லும் இதே கேள்வி கேட்கப்படுகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நிறைவேற்றும்படியாகவே இரண்டு இடத்திலும் கிறிஸ்து ஆலோசனை தருகிறார்.

கிறிஸ்துவின் பாடுமரணத்துக்குப்பின் "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" (அப் 16:30) என்ற கேள்வி பவுலிடம் எழுப்பப்படுகிறது. அப்போது பவுல் கிரியைகளைக் குறித்து எதுவுமே பேசவில்லை. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்", என்றார்.

தேவன் பாவியை விசுவாசத்தின் அடிப்படையில் நீதிமானாக்குகிறார் என்பது இந்த நிருபத்தின் சவால் நிறைந்த வசனமாக அமைகிறது. **பாவியைப் பரிசுத்தவானாக்கி, அதன்பின் நீதிமானாக்குகிறார் என்று வசனம் சொல்லவில்லை. பாவியாகிய மனிதன் கிறிஸ்துவை விசுவாசித்து அதன் விளைவாக பரிசுத்தவானாக்கப்படுகிறான்.** தேவன் ஒரு மனிதனிடம் நீ நல்லவனாகு, அதன்பின் என்னை விசுவாசி, அப்போது உன்னை நீதிமானாக்குவேன் என்று சொல்லவில்லை. நீ இருக்கிறவண்ணமாகவே என்னை விசுவாசி, நான் உன்னை ஏற்றுக்கொள்ளுகிறேன் என்கிறார். பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் இந்த வசனத்தையே மையமாகக் கொண்டிருக்கிறது.

நீதிமானாக்கப்படும் பாவிகள் தன்னில்தானே எந்த தகுதியும் இல்லாதவர்கள். நீதிமானாக்கப்பட்டதும் உடனடியாக அவர்கள் மேலான தகுதியுள்ளவர்களாகிறார்களா என்றால் அதற்கும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. தேவன் அவர்களில் காண்கிற ஒரே காரியம், அவர்கள் தங்கள் விசுவாசத்தினாலே கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாக இருப்பதுதான். சில வேத பண்டிதர்கள் மனிதர்களுடைய பாவங்கள் கல்வாரியில் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டதுபோல் கிறிஸ்துவின் நீதி பாவிகள்மேல் சுமத்தப்பட்டது

நியாயப்பிரமாணத்தின் காலமும் கிருபையின் காலமும்



என்றும் அதன்விளைவாகவே தேவன் அவர்களை வித்தியாசமான முறையில் பார்க்கிறார் என்றும் சொல்லுகிறார்கள். எதுவானாலும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய காரியம், **தன்னை விசுவாசிப்பவர்களின் பாவங்களை தன்மேல் ஏற்றுக்கொண்டு கிறிஸ்து மரித்தார். இதனால், அந்த பாவிகளே பாவத்தின் தண்டனையை ஏற்றுக்கொண்டு மரித்ததாக, தேவன் ஏற்றுக்கொள்ளுகிறார்.** அவர்களுக்கு நியாயப்பிரமாணம் நியமித்திருந்த தண்டனை அவர்களுக்காக கிறிஸ்துவுக்குள் வழங்கப்பட்டாயிற்று. அதன் விளைவாக அவர்கள் நியாயப்பிரமாணத்துக்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்தவர்கள் ஆகிறார்கள். எனவே தன்னில்தானே தகுதியற்றவர்களாக இருந்தாலும் ஆபிரகாமைப்போல் தேவனுடைய நண்பர்கள் என்ற அங்கீகாரத்தைப் பெறுகிறார்கள்.

ரோமர் 5:6 சொல்கிறது: "நாம் பெலனற்றவர்களா யிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்". அவருடைய மரணத்தினால் உண்டாகும் நீதியை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுவதே ஒருவனை நித்தியத்துக்குள் வழிநடத்துகிறது. இந்த தேவநீதி எவ்வளவு வல்லமையானது என்றால் ஒருவன் எப்படிப்பட்ட உளையான சேற்றில் காணப்பட்டாலும் அவன் நீதிமானாக்கப்படுகிறான். **அவன் நீதிமானாகி கிறிஸ்துவை விசுவாசிப்பதில்லை. விசுவாசித்து நீதிமானாகிறான்.** இதே சத்தியத்தை மீண்டும் மீண்டும் நான் சொல்லிக்கொண்டிருப்பதைப் போல வாசகர்களுக்குத் தோன்றலாம். பவுலும் இதைத்தான் செய்கிறார். அடுத்த அதிகாரத்திலும் செய்யப்போகிறார்.

ஒரு பரிசுத்தவானை தேவன் நீதிமானாக்குவதாக பவுல் சொல்லவில்லை. ஜெபிக்கிறவனை நீதிமானாக்குவதாகச் சொல்லவில்லை. நல்லவனை நீதிமானாக்குவதாகச் சொல்லவில்லை. தனக்கு ஊழியம் செய்கிறவனை நீதிமானாக்குவதாகச் சொல்லவில்லை. பக்தியுள்ளவனை நீதிமானாக்குவதாகச் சொல்லவில்லை. பாவியை நீதிமானாக்குவதாகச் சொல்கிறார். மேலோட்டமாய்ப் பார்ப்போமானால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயல்புக்கு மாறான அறிவிப்பாகத்தான் இது இருக்கிறது. புரிந்துகொள்ள கடினமானதாகவும் இருக்கிறது. ஏனென்றால் யாத்திராகமம் 23:7ல் தேவன் சொல்கிறார் : "நான் துன்மார்க்கனை நீதிமான் என்று தீர்க்கமாட்டேன்". நீதிமொழிகள் 17:15 சொல்கிறது : "துன்மார்க்கனை நீதிமானக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்". நீதிமாழிகள் 24:24 சொல்கிறது : "துன்மார்க்கனைப் பார்த்து நீ நீதிமானாயிருக்கிறாய் என்று சொல்லுகிறவனை ஜனங்கள் சபிப்பார்கள்". ஏசாயா 5:23 வாசித்துப்பாருங்கள். பழைய ஏற்பாட்டில் தான் தடைசெய்த காரியத்தை தேவன் இப்போது செய்வதுபோல் காணப்படுகிறது.

பாவி என்பதற்கு பயன்படுத்தப்படும் ungodly என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஒன்பது இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அவை எல்லாவற்றிலுமே மிகவும் துன்மார்க்கம் நிறைந்தவர்களையே அது குறிப்பிடுகிறது. ஆதாமின் சந்ததியார் என்ற முறையில் எல்லாருமே பாவிகள்தான் என்றாலும் தங்கள் கிரியைகளினாலும் இவர்கள் மிகவும் பாவிகளாகக் காணப்படுகிறார்கள். ஆனாலும் நீதியை நிறைவேற்றியது பரிசேயன் அல்ல, பாவத்தோடு வந்த ஆயக்காரனே நீதிமானாக்கப்படுகிறான் (லூக்கா 18:14).

நாம் தியானிக்கும் ரோமர் 4:5ஐ மீண்டும் ஒருமுறை வாசித்துப்பாருங்கள். ஏனென்றால் இது வேதத்தின் மிகமுக்கியமான வசனங்களில் ஒன்று. பாவியை நீதிமானாக்க தேவன் அவனிடமிருந்து எந்த கிரியையும் எதிர்பார்க்கவில்லை. அவனுக்குத் தேவை விசுவாசம் மட்டுமே, எதை விசுவாசிக்கவேண்டும்? கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் உண்டான தேவநீதி அவனுடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டது என்பதை விசுவாசிக்கவேண்டும்.

தேவன் நடப்பித்த மிகச்சிறப்பான அற்புதங்களாக அடியில்கண்ட மூன்று கருதப்படுகின்றன.

1. ஒன்றுமில்லாமையிலிருந்து உலகத்தை சிருஷ்டித்தது (ரோமர் 1:19-20)
2. மரித்தோரை உயிர்ப்பித்து இல்லாதவைகளை இருக்கிறவை போல அழைக்கிறது (ரோமர் 4:17)
3. கிரியை செய்யாத பாவியை நீதிமானாக்குவது (ரோமர் 4:5)

தாவீது அறிவிக்கும் கிரியைகளற்ற தேவநீதி (வசனம் 6-8)

அந்தப்படி, கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனுடைய பாக்கியத்தைக் காண்பிக்கும் பொருட்டு: (ரோமர் 4:6)

ஆபிரகாமுக்கு அடுத்தபடியாக யூதர்களால் அதிகமாக நேசிக்கப்பட்ட ஒருவர் தாவீது. ஆபிரகாம் கிரியைகளின் அடிப்படையில் அல்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்பட்டார் என்பதை 6-8 வசனங்களில் அறிவித்த பவுல் அடுத்ததாக கிரியைகளின் உதவியின்றியே

தேவனால் பாவத்தை மன்னிக்கமுடியும் என்பதை தாவீதின் 32-வது சங்கீதத்திலிருந்து நிரூபிக்கிறார். இவ்வாறு தேவனால் நீதிமான் என்று எண்ணப்படுவது ஒருவன் பெற்றுக்கொள்ளக்கூடிய மிகப்பெரிய சிலாக்கியம் என்கிறார். ஆபிரகாமின் உதாரணத்தில் விசுவாசம் வலியுறுத்தப்பட்டது என்றால், தாவீதின் சங்கீதத்தில் கிரியைகள் இல்லாமலேயே ஒருவன் நீதிமானாக்கப்படும் அனுபவம் குறிப்பிடப்படுவதை பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

எவர்களுடைய அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்டதோ, எவர்களுடைய பாவங்கள் மூடப்பட்டதோ, அவர்கள் பாக்கியவான்கள். (ரோமர் 4:7)

தாவீது சொல்கிறார், "எவனுடைய மீறுதல் (iniquity, amonia) மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் (sin, hamartia) மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லா திருக்கிறதோ அவன் பாக்கியவான்" (சங் 32:1, 2). தாவீது இந்த சங்கீதத்தில் தன்னுடைய பாவம் மன்னிக்கப்பட்ட அனுபவத்தைக் குறித்து "பாக்கியவான்" என்று ஒருமையில் பேசினாலும், இந்த ஆசீர்வாதம் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருத்தமானது என்பதை உறுதிப்படுத்தும்படியாக "பாக்கியவான்கள்" என்று பவுல் பன்மையில் குறிப்பிடுகிறார்.

பழைய ஏற்பாட்டு நியமங்களின் அடிப்படையில் யாருடைய பாவங்களும் மன்னிக்கப்படவில்லை, தற்காலிகமாக மூடப்பட்டன, அதாவது தேவனுடைய பார்வையிலிருந்து அகற்றப்பட்டன. சங்கீதம் 85:2 சொல்கிறது : "உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர்". நீதி 10:12 சொல்கிறது : "அன்போ சகல பாவங்களையும் மூடும்". மூடப்பட்டதைக்குறித்து புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு வசனம் மட்டுமே பேசுகிறது. கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, முற்றிலுமாக அகற்றப்பட்டன. அதனால்தான் "எந்த ஆசாரியனும் நாடோறும் ஆராதனை செய்கிறவனாயும், பாவங்களை ஒருக்காலும் நிவிர்த்தி செய்யக்கூடாத ஒரேவித பலிகளை அநேகந்தரம் செலுத்திவருகிறவனாயும் நிற்பான்" (எபி 10:11) என்று வாசிக்கிறோம். அவன் தொடர்ந்து பலிசெலுத்தவேண்டியதிருந்தது. கிறிஸ்து தம்மைத்தாமே பலியிட்டதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார் (எபி 9:26) என்ற வசனத்தின்படி பாவமன்னிப்பு கிறிஸ்துவின் மரணத்தினால் மட்டுமே உண்டாயிற்று. அவர் உலகின் பாவங்களைச் சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29).

பாவங்களும் அக்கிரமங்களும் தேவனுக்கு விரோதமானவைதான். அவை தேவனைக் கனவீனப்படுத்துபவைதான். அசுத்தமானவைதான். அதனால்தான் ஆபகூக் தேவனை, "தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே" (1:13) என்று அழைக்கிறார். ஆனால் அதே பாவியை தேவன் மன்னிக்கும்போது அவன் பாக்கியவானாகக் கருதப்படுகிறான். பாவம் செய்த இளையகுமாரனின் பாவம் மன்னிக்கப்பட்டபோது தகப்பனுடைய கழுத்தைக் கட்டிக்கொள்ளவும், முத்தத்தைப் பெறவும் தகுதியைப் பெறுகிறான். **நற்கிரியைகளை மாத்திரமே செய்துவந்த மூத்த குமாரனோ தகப்பனுடைய வீட்டிற்கு வெளியே நிற்கிறான்.**

பாவங்களை தேவன் மன்னிக்கும்போது என்ன செய்கிறார் என்பதைப் பாருங்கள். "நம்முடைய அக்கிரமங்களை அடக்கி, நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்" (மீகா 7:19). தாவீது சொல்கிறார்: "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்" (சங் 103:12). யோசுவாவிடம் தேவன் சொல்கிறார்: "நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து, உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன்" (சக 3:4). ஏசாயா சொல்கிறார்: "அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (61:10), அதனால்தான் மீகா சொல்கிறார்: "அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்?" (7:18).

அக்கிரமத்துக்கும், பாவத்துக்குமிடையே உள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்ளவேண்டும். எல்லா பாவமும் அக்கிரமம் ஆகாது. வீட்டில் வைத்திருக்கும் பலகாரத்தைச் சாப்பிடக்கூடாது என்று தகப்பனார் மகனிடம் சொல்கிறார். அதை மீறி மகன் சாப்பிடும்போது அது கீழ்ப்படியாமை, திருட்டு என்று பாவமாக கருதப்படவேண்டும். ஆனால் அது நிச்சயமாக அக்கிரமம் அல்ல. எனவே தகப்பன் தன் மகனை போலீஸில் பிடித்துக்கொடுப்பதில்லை. தாவீது பத்சேபாளிடம் பாவம் செய்தார். உரியாவை திட்டமிட்டு கொன்றபோது அக்கிரமம் செய்தார்.

மூன்று பாக்கியங்களைக் குறித்து தாவீது தன்னுடைய சங்கீதத்தில் குறிப்பிடுகிறார்.

1) அக்கிரமங்கள் மன்னிக்கப்பட்ட பாக்கியம் (சங் 32:1)

2) பாவங்கள் மூடப்பட்ட பாக்கியம் (சங் 32:1)

3) பாவங்கள் எண்ணாதிருக்கப்படும் பாக்கியம் (சங் 32:2)

எவனுடைய பாவத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, அவன் பாக்கியவான் என்று தாவீது சொல்லியிருக்கிறான். (ரோமர் 4:8)

சங்கீதம் 32:2 சொல்லுகிறபடி யார் யாருடைய பாவங்களைத் தேவன் அவர்களுக்கு எதிராக எண்ணாமல் இருக்கிறாரோ, அவர்கள் உண்மையிலேயே ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். பழைய ஏற்பாட்டில் தாவீதும், புதிய ஏற்பாட்டில் பேதுருவும் மிகப்பெரிய பாவம் செய்தவர்கள்தான். அந்த பாவங்களைத் தேவன் எண்ணவில்லையே. தேவன் பாவங்களை எண்ணாதிருக்கிறார் என்று சொல்லும்போது அவைகளை முழுமையாக மன்னித்து மறந்துவிட்டார் என்றுதான் பொருள். தேவன் இப்படிப்பட்டவராக இருப்பதினால்தான் கொலைகாரனாயிருந்த (யாத் 2:12) மோசே மூலமாக கொலை "செய்யாதிருப்பாயாக" என்ற பிரமாணத்தைக் கொடுக்கமுடிந்தது. எரேமியா 31:34ல் தேவன் சொல்கிறார்: "நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்". "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" (எபி 8:12). நம் பாவங்களை மன்னிப்பதோடு தேவன் நிறுத்திக்கொள்வதில்லை. நினையாமலிருக்கிறார். அதாவது நம்மோடு ஒப்புரவாகிவிடுகிறார். பாவத்தை மன்னித்துவிட்டு அதற்கான தண்டனையை அவ்வப்போது பூமியில் கொடுத்துக்கொண்டே இருப்பார் என்பது தவறான உபதேசம். "நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசாயா 43:25).

இவ்வாறு பாவங்களை தேவன் எண்ணாதிருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் என்ன? நம்முடைய பாவங்களை நம்மிடமிருந்து பிரித்து கிறிஸ்துஇயேசுவின்மேல் சுமத்தி அவற்றை தண்டித்துவிட்டார். உலகத்து நியாயாதிபதியினால் ஒரு மனிதனின் பாவத்தை அவனிலிருந்து பிரிக்கமுடியாது. அதனால்தான் அவனை ஜெயிலில் போடுகிறார். தேவன் அப்படிச் செய்வதில்லை. நாம் பெற்றிருக்கும் பாவமன்னிப்பின் அடிப்படையான காரணம் தேவன் நம்முடைய பாவங்களை பிரித்து எடுப்பதில்தான் அடங்கியிருக்கிறது என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. யாருடைய பாவங்கள் எல்லாம் காளை மற்றும் ஆட்டுக்கடாக்களின் இரத்தத்தால் மூடப்பட்டிருந்ததோ அவை இப்போது முற்றிலுமாக பரிகரிக்கப்படுகின்றன. இதன் விளைவாகவே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான்.

நீதிமானாக்கப்படும் ஆவிக்குரிய அனுபவமும், பாவம்

மன்னிக்கப்படும் ஆவிக்குரிய அனுபவமும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவைதான் என்றாலும் இரண்டுக்குமிடையே பெரிய வித்தியாசம் உண்டு. இதைக் குறித்து ரோமர் 5:17-21; 10:3-6 வசனங்களைத் தியானிக்கும்போது விளக்கமாக அறிந்துகொள்வோம். **ஒரு மனிதனில் பாவம் எண்ணப்படாதிருக்கும்போது அது நீதியாக எண்ணப்படுகிறது.** மனித இனத்தின் பாவங்கள் கிறிஸ்துவின் மேல் எண்ணப்பட்டபோது அவர் சாபமாகிறார் (கலா 3:13). நம்முடைய சாபங்கள் நீக்கப்படுகின்றன. 2 கொரி 5:21, 1 பேதுரு 2:24 வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பாவங்களைத் தேவன் எண்ணாதிருக்கிறார் என்பதை நம்புங்கள். அவற்றை அவர் கடலின் ஆழத்தில் போட்டுவிட்டு மறந்துவிட்டார். எனவே நாம் பரலோகத்தில் இருக்கும்போது அங்குள்ள யாருக்குமே நாம் செய்த பாவங்கள் என்னவென்று தெரியாது. எபிரெயர் 11-வது அதிகாரம் இதைத்தான் உறுதிப்படுத்துகிறது. பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுடைய எந்த பாவமாவது அங்கே சொல்லப்படுகிறதா? அந்த பரிசுத்தவான்கள் அத்தனைபேருமே பாவம் செய்தவர்கள் என்பதையும் பெலவீன மனிதர்கள்தான் என்பதையும் நாம் அறிவோம். ஆபிரகாமின் பாவங்கள் (மனைவியைக் குறித்துப் பேசிய பொய், எகிப்துக்குப் போனது, எகிப்திய பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொண்டது) எதுவுமே இந்த அதிகாரத்தில் சொல்லப்படவில்லையே. இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்துகொள்வோம், பரலோகத்திலிருக்கும் போது நம்முடைய பாவங்களை நாமே மறந்துபோய்விடுவோம்.

ஆபிரகாமின் விருத்தசேதனம் (வசனம் 9-12)

இந்தப் பாக்கியம் விருத்தசேதனமுள்ளவனுக்குமாத்திரம் வருமோ, விருத்தசேதனமில்லாதவனுக்கும் வருமோ? ஆபிரகாமுக்கு விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டதென்று சொல்லுகிறோமே. (ரோமர் 4:9)

பாவங்களை தேவன் எண்ணாதிருப்பது முந்தின வசனத்தில் ஒரு பாக்கியமாக குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். இது தங்களுடைய மாம்சத்தில் விருத்தசேதனம் செய்துகொண்டவர்களுக்கு மட்டும் வருவதில்லை. விருத்தசேதனம் செய்துகொள்ளாதவர்களும் இந்த பாக்கியத்தைப் பெறுகிறார்கள். ஆபிரகாம் இந்த சத்தியத்துக்கு நல்லதொரு உதாரணமாய் அமைகிறார். ஏனென்றால் அவருடைய விசுவாசமே நீதியாக எண்ணப்பட்டது என்று மோசேயினால் எழுதப்பட்டுள்ளது (ஆதி 15:6).

விருத்தசேதனத்தின்மீது யூதர்கள் எந்தளவு நம்பிக்கை வைத்திருந்தார்கள் என்றால் அந்தியோகியா பட்டணத்தில் கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின்னும், சிலர் எருசலேமிலிருந்த ஆதிஅப்போஸ்தலசபையில் இருந்து வந்து: "நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதன மடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" (அப் 15:1) என்று வாசிக்கிறோம். தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு பவுலும் இத்தகைய சடங்காச்சாரங்களில் நம்பிக்கை கொண்டிருந்தவர்தான் (அப் 22:3,4; கலா 1:13; பிலிப் 3:4-7). இவைகளிலிருந்து சபை விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தவேத பகுதியில் விருத்தசேதனத்துக்கு விரோதமாக பேசுகிறார். யூதர்கள் விருத்தசேதனத்தில் நம்பிக்கை கொண்டிருந்ததைப்போல் கிறிஸ்தவர்களாகிய நாமும் ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தி போன்ற நியமங்களில் அளவுக்கு அதிகமாக நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறோமா என்பதை யோசித்துப் பாருங்கள்.

அது எப்பொழுது அவனுக்கு அப்படி எண்ணப்பட்டது? அவன் விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதோ, விருத்தசேதனமில்லாத வனாயிருந்தபோதோ? விருத்தசேதனமுள்ளவனாயிருந்தபோதல்ல, விருத்தசேதனமில்லாதவனாயிருந்தபோதே. (ரோமர் 4:10)

இந்த அதிகாரத்தின் 2-வது வசனத்தைத் தியானிக்கும்போது ஆதியாகமம் 15:6 (நீதிமானாக்கப்படும் நிகழ்ச்சி) ஆதியாகமம் 17:9,10 (ஆபிரகாம் விருத்தசேதனம் செய்து கொண்ட நிகழ்ச்சி) ஆகிய இரண்டு வசனங்களுக்கும் இடையே குறைந்தபட்சம் 14 ஆண்டுகள் கடந்துபோயிருக்கவேண்டும் என்பதைப் பார்த்தோம். கீழ்க்கண்ட வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

ஆதி 15:6 ஆபிரகாமின் விசுவாசம் நீதியாக எண்ணப்படுகிறது.

ஆதி 15:18 தேவன் ஆபிரகாமோடு உடன்படிக்கை செய்து கொள்கிறார்.

ஆதி 16:16 ஆபிரகாம் 86 வயதானபோது இஸ்மவேல் பிறக்கிறான்.

ஆதி 17:1 ஆபிரகாம் 99 வயதானபோது தேவனைத் தரிசிக்கிறான்.

ஆதி 17:11 விருத்தசேதனம் செய்துகொள்ளும்படியாக

தேவன் ஆணையிடுகிறார்.

ஆதி 17:24 ஆபிரகாம் தன் 99வது வயதிலும்,
இஸ்மவேல் 13வது வயதிலும்
விருத்தசேதனம் செய்து கொள்கிறார்கள்.

யூதர்களுடைய எல்லா தற்பெருமைகளையும் நீக்கவேண்டும் என்பதற்காக பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான். ஆபிரகாம் நீதிமானாக்கப்படவேண்டும் என்பதற்காக விருத்தசேதனம் செய்துகொள்ளவில்லை. நீதிமானாக்கப்பட்டதின் விளைவாகவே விருத்தசேதனம் செய்துகொண்டான்.

மேலும், விருத்தசேதனமில்லாத காலத்தில் அவன் விசுவாசத்தினாலே அடைந்த நீதிக்கு முத்திரையாக விருத்தசேதனமாகிய அடையாளத்தைப் பெற்றான். விருத்தசேதன மில்லாதவர்களாய் விசுவாசிக்கிற யாவருக்கும் நீதி எண்ணப்படும்பொருட்டாக அவர்களுக்கு அவன் தகப்பனாயிருக்கும் படிக்கும் (ரோமர் 4:11)

ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டதில் விருத்தசேதனத்துக்கு எந்த பங்கும் இல்லை என்றாலும், விருத்தசேதனத்தின் மேன்மை என்ன என்பதை பவுல் இங்கே அறிவிக்கிறார். அவர் பெற்றுக்கொண்ட தேவநீதிக்கு அது ஒரு முத்திரையாக விளங்குகிறது என்கிறார். ஒரு பத்திரம் அல்லது ஒப்பந்தத்தில் அரக்கினால் முத்திரைபோடுவதென்பது, அதை உறுதிப்படுத்துவதாகவும், சம்பந்தப்பட்ட நபர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள் என்பதை நிச்சயப்படுத்துவதாகவும் இருக்கிறது. பொதுவாக அந்த நபர்கள் தங்கள் மோதிரத்தை அரக்கில் பதிவு செய்வது வழக்கமாய் இருந்தது (எஸ்தர் 8:8; ஆதி 41:42; 38:18, யாத் 28:11,36). ஆபிரகாமும் தேவனும் செய்துகொண்ட உடன்படிக்கை ஆதி 17:1-10ல் சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் சொல்லுகிறார்: "விருத்தசேதனம் எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும்" (ஆதி 17:11)

விருத்தசேதனமில்லாதவர்களாய் இருந்தாலும் கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்கள் நீதிமானாக்கப்படுவார்கள் என்பதையும் ஆபிரகாமின் உதாரணத்திலிருந்து பவுல் அறிவிக்கிறார். ஏனென்றால் ஆபிரகாம் விருத்தசேதனம் செய்துகொள்வதற்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு நீதிமானாக்கப்பட்டு தன் நீதியில் நிலைத்திருந்தார். எனவே அவர் சகல விசுவாசிகளுக்கும் தகப்பன் என்ற அங்கீகாரத்தைப் பெற்றவராகிறார்.

ஏற்கனவே நீதிமானாக்கப்பட்ட ஆபிரகாம், விருத்தசேதனம்

செய்துகொண்டதின் மூலமாக எந்தவிதத்திலும் கூடுதலான நீதியைப் பெற்றுக்கொள்ளவில்லை. விருத்தசேதனம் தன்னில் தானே நீதியானதல்ல, நீதியை உருவாக்குகிறதும் அல்ல. அது விசுவாசத்தின் முத்திரை என்று சொல்லப்படாமல், விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியின் முத்திரையாக மட்டுமே சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். எந்த விதத்திலும் அது விசுவாசத்துக்கு இணையாகாது. விருத்தசேதனமானாலும் சரி, இன்று நாம் முக்கியப்படுத்திப்பேசும் ஞானஸ்நானம், பந்தி, கர்த்தருடைய பந்தியில் கால்களைக் கழுவுதல், திருப்பலி, உறுதிபூசுதல், சபை பாரம்பரியம் போன்ற புனித சடங்குகளானாலும் சரி-அவை தேவனுடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டுமானால், அவை வெளிப்படையான சடங்காக மட்டும் இருந்தால் போதாது. உள்ளான மனமாற்றத்தின் வெளிப்படையான அடையாளமாக இருக்கவேண்டும்.

கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்ட குற்றவாளிகளில் ஒருவன் ஞானஸ்நானம் பெறவில்லை. கர்த்தருடைய பந்தியில் பங்கு கொள்ளவுமில்லை. இருந்தாலும் கிறிஸ்துவுடன் பரதீசியில் இருந்தான் (லூக்கா 23:43). சீமோன் என்ற மாயவித்தைக்காரன் விசுவாசித்து ஞானஸ்நானம் எடுத்தவன் (அப் 8:13). ஆனாலும் அவனுடைய இருதயமோ தேவனுக்குமுன் செம்மையானதாகக் காணப்படவில்லை (அப் 8:21). கொரிந்து சபையில் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணிய பலர் ஆக்கினைத்தீர்ப்படைந்தார்கள் என்று 1 கொரி 11:29,30ல் சொல்லப்பட்டிருக்கிறது.

விருத்தசேதனத்தைப் பெற்றவர்களாய் மாத்திரமல்ல, நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் விருத்தசேதனமில்லாத காலத்தில் அடைந்த விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிறவர்களாயுமிருக்கிறவர்களுக்குத் தகப்பனாயிருக்கும்படிக்கும், அந்த அடையாளத்தைப் பெற்றான். (ரோமர் 4:12)

முந்தின வசனத்தில் விருத்தசேதனம் ஒரு முத்திரை என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த வசனத்தில் அது ஒரு அடையாளமாகச் சொல்லப்படுகிறது. இந்த வசனம் அறிவிக்கும் காரியம் இதுதான். விருத்தசேதனம் செய்து கொண்டதால் அவர் விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர்களுக்கு தகப்பனாகக் கருதப்படுகிறார். அதே நேரத்தில் அவர் விருத்தசேதனம் செய்துகொள்வதற்குமுன்பு அவர் தேவன் மேல் வைத்திருந்த விசுவாசத்தைப்போன்று, புறஜாதியார் தேவன்மேல் விசுவாசம் வைப்பார்களேயானால், விருத்தசேதனக் கிரியை இல்லாத அவர்களுக்கும் ஆபிரகாம் தகப்பனாகிறார்.

பவுல் தெளிவாகச் சொல்கிறார்: "விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" (கலா 3:7). "விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்" (கலா 3:9). "பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 12:3) என்று கர்த்தர் சொல்லும்போது வம்சங்கங்களெல்லாம் என்னும் சொல் புறஜாதியாரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பது தெளிவாகிறது.

தேவ நீதியைப் பெற்றுக்கொள்ளும்படியாக இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் ஒரு புறஜாதி மனிதன் விருத்தசேதனம் செய்துகொள்ளவேண்டியதில்லை. அதே நேரத்தில் விருத்தசேதனம் செய்துகொண்ட ஒரு யூதன், தான் நீதிமானாக்கப்படவேண்டுமானால் தன்னை விசுவாசப்பிரமாணத்துக்குள் கொண்டுவர வேண்டியதிருக்கிறது. விருத்தசேதனம் உடையவர்களுக்குத்தான் ஆபிரகாம் தகப்பன் என்றல்ல, ஆபிரகாமின் விசுவாசத்தையுடைய அத்தனைபேருமே அவருடைய பிள்ளைகளாகிறார்கள். விருத்தசேதனம் உடையவர்களாக இருந்தும், அவர்களில் ஆபிரகாமின் விசுவாசம் காணப்படவில்லை என்றால் அதில் எந்த மேன்மையும் இல்லை. அதனால்தான் மாம்சத்தில் விருத்தசேதனம் செய்துகொண்ட யூதர்களுக்கே தங்கள் இருதயத்தின் நுனித்தோலை விருத்தசேதனம் செய்யும்படியாக தேவன் கட்டளையிடுவதைப் பார்க்கிறோம் (உபா 10:16; 30:6, எரே 4:4).

"மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்துஇயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" (பிலி 3:3) என்கிறார் பவுல். மேலும் சொல்லுகிறார்: "நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்" (கொலோ 2:11). கையால் செய்யப்படாத விருத்தசேதனம் உள்ளவர்கள் யார்? கிறிஸ்துஇயேசுவுக்குள் தங்களை இணைத்துக்கொண்டவர்களாய் அவரை விசுவாசித்து அவரை மட்டுமே மேன்மை பாராட்டுகிறவர்களே.

ஆபிரகாம் நியாயப்பிரமாணத்தின் உதவியினால் பூமியைச் சுதந்தரித்தாரா? (வசனம் 13-16)

அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது. (ரோமர் 4:13)

முந்தின வேதபகுதியில் (ரோமர் 4:9-12) பவுல் விருத்தசேதனத்தின் மூலமாய் ஆபிரகாம் நீதிமானாக்கப்படவில்லை என்பதை நிரூபித்துவிட்டார். நியாயப்பிரமாணமும் இந்த காரியத்தில் எந்த உதவியும் செய்யவில்லை என்பதை பவுல் இந்த வேதபகுதியில் (13-16) அறிவிக்கிறார். நியாயப்பிரமாணத்தினால் வரும் நீதியைவிட விசுவாசத்தினால் வரும் நீதி மேன்மையானது என்கிறார்.

ஆபிரகாம் பூமியைத் தனக்காகவும் தன் சந்ததிக்காகவும் சுதந்தரித்துக் கொள்வார் என்பது உண்மையிலேயே அவர் பெற்றுக்கொண்ட மிகச்சிறந்த வாக்குத்தத்தமாகும். தான் சிருஷ்டித்த உலகத்தையும், சர்வ சிருஷ்டிகளையும் ஆண்டுகொள்ளும் அதிகாரத்தோடுதான் தேவன் ஆதாமை உருவாக்கினார் (ஆதி 1:26). அவனோ பாவத்தினிமித்தம் அதை இழந்துபோகிறான். ஆனாலும் அவை ஆபிரகாமுக்கும் அவருடைய சந்ததியாருக்கும் எவ்வித நிபந்தனையுமின்றி வாக்களிக்கப்படுகிறது. தேவன் சொல்லுகிறார்: "நீ பார்க்கிற இந்தப்பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைக்கும் இருக்கும்படி கொடுத்து உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணுவேன்; . . . நீ எழுந்து தேசத்தின் நீளமும் அகலமும் எம்மட்டோ, அம்மட்டும் நடந்துதிரி; உனக்கு அதைத் தருவேன்" (ஆதி 13:15-17). இன்னும் ஆதி 12:3; 15:1-5; 18-21; 17:2-11; 22:15-18 வாசித்துப்பாருங்கள். வாக்குப்பண்ணியவர் உண்மையுள்ளவராய் இருந்தால் மட்டுமே வாக்குத்தத்தம் நிலைவரப்படும்.

'சுதந்தரம்' என்ற வார்த்தை ஒரு தகப்பனுடைய வாரிசுகள் என்ற முறையில் அவருடைய பிள்ளைகள் அவருடைய சொத்துக்களின் மேல் புத்திர சுவிகாரத்தின் அடிப்படையில் பெறும் உரிமையாகும். தேவன் ஆபிரகாமுக்கு வழங்கிய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் ஆபிரகாம் பெறும் ஆசீர்வாதங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1) உலகமனைத்தையும் அவருடைய சந்ததியார் சுதந்தரிப்பார்கள் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் முதலாவதாக கானான் தேசத்தைப் பெறுவார்கள்.

2) ஆதி 3:15ல் வாக்குப்பண்ணப்பட்ட ஸ்திரீயின் வித்து ஆபிரகாமின் சந்ததியிலிருந்து வெளிப்படுவார்.

3) ஆபிரகாம் மூலமாக பூமியின் சந்ததியார் யாவருமே ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இந்த வாக்குத்தத்தங்கள் ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்டு சுமார் நானூறு ஆண்டுகளுக்குப் பின்புதான் ஆபிரகாமின் சந்ததியாருக்கு நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது என்பதினால் இவை நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் கொடுக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

இந்த வசனத்தின் விளக்கத்தை கலாத்தியர் 3:16-18ல் இவ்வாறு பவுல் அறிவிக்கிறார்: "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன. சந்ததிகளுக்கு என்று அநேகரைக்குறித்துச் சொல்லாமல், உன் சந்ததிக்கு என்று ஒருவனைக்குறித்துச் சொல்லியிருக்கிறார். அந்தச் சந்ததி கிறிஸ்துவே. ஆதலால் நான் சொல்லுகிறதென்னவெனில், கிறிஸ்துவை முன்னிட்டுத் தேவனால் முன் உறுதிபண்ணப்பட்ட உடன்படிக்கையை நானூற்றுமுப்பது வருஷத்திற்குப்பின்பு உண்டான நியாயப் பிரமாணமானது தள்ளி, வாக்குத்தத்தத்தை வியர்த்தமாக்கமாட்டாது".

நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீணாய்ப்போம், வாக்குத்தத்தமும் அவமாகும். (ரோமர் 4:14)

நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்கள் என்று பவுல் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதினால் தங்களை நீதிமானாக்குவதற்கு முயற்சி செய்கிறவர்களைக் குறிப்பிடுகிறார். ஆபிரகாமுக்கு வழங்கப்பட்ட வாக்குத்தத்தங்களின் ஆசீர்வாதங்களை இவர்கள் தங்கள் கிரியைகளால் சுதந்தரித்துக் கொள்ளக்கூடுமெனில், விசுவாசம் தேவையில்லாத, புறக்கணிக்கப்படக்கூடிய ஒரு காரியமாகிவிடும், அதுமட்டுமல்ல தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த சகல வாக்குத்தத்தங்களும் பயனில்லாமல் போய்விடும் என்கிறார் பவுல்.

ஏனென்றால் எல்லா வாக்குத்தத்தங்களுமே வருங்காலத்தைக் குறித்தவை. ஒருவன் தான் ஏற்கனவே செய்துமுடித்த காரியத்தை மற்றவர்களுக்கு வாக்குப்பண்ண முடியாது. சொல்லப்போனால் வாக்குத்தத்தங்கள் வாக்குப் பண்ணியவரை நம்புவதற்கு மனிதர்களை உற்சாகப்படுத்துபவை. தன்னை விசுவாசித்து, தான் சொல்லுவதைச் செய்யக்கூடியவர் என்பதை தன்னுடைய ஜனங்கள் நம்பவேண்டும் என்பதற்காகவே தேவன் பல காரியங்களை ஆபிரகாமுக்கு மட்டுமல்ல, இன்று நமக்கும் வேதவசனங்கள் மூலமாகவும், தீர்க்கதரிசனங்கள் மூலமாகவும் வாக்குபண்ணுகிறார். நம்முடைய கிரியைகளினால்

தேவனுடைய சகல ஆசீர்வாதங்களையும் சுதந்தரித்துக் கொள்ளமுடியுமென்றால் தேவன் வாக்குப்பண்ணவேண்டியதன் அவசியம் என்ன? வாக்குத்தத்தம் இல்லாமலேயே நாம் அவற்றைச் சுதந்தரித்துக்கொள்ள முடியுமே.

ஒரு மனிதனுடைய இரட்சிப்பு அவனுடைய கடந்த கால, நிகழ்கால உழைப்பையும், முயற்சியையும், வெளிப்படையான செயலாற்றலையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தால், அவன் யாரையும் எதையும் விசுவாசிக்கவேண்டியதில்லை. ஒருவனுடைய தகுதியின் அடிப்படையில்தான் ஒருவன் தேவனுடைய பிள்ளையாகிறான் என்றால் அவன் தன்னை தேவனுடைய சுதந்தரவாளி என்று எவ்வாறு தைரியமாகச் சொல்லமுடியும். தன்னுடைய தகப்பனிடம் திரளான மன்னிப்பு உண்டு என்பதை விசுவாசித்து வந்த இளையகுமாரன் ஏற்றுக்கொள்ளப்படுகிறான். இத்தனை வருஷகாலமாய் உமக்கு ஊழியம் செய்கிறேன். ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறவில்லை (லூக்கா 15:29) என்ற அறிக்கையோடு வரும் மூத்தகுமாரன், தகப்பன் வருந்தி அழைத்தும் அவருடைய சுதந்தரத்துக்குள் பிரவேசிக்க மனதில்லாதிருக்கிறான் (லூக்கா 15:28).

"அவமாகும்" (void) என்பதற்குப் பயன்படுத்தப்படும் 'Ratargeo' என்ற கிரேக்க வார்த்தை "பயனற்றுப்போகும்" என்று பொருள்கொள்ளும் விதத்தில் பவுல் 26 இடங்களில் பயன்படுத்துகிறார்.

இரட்சிப்புக்கு தங்களுடைய கிரியைகளை நம்பும் மனிதர்கள் தங்களுக்காக கிறிஸ்துஇயேசு கல்வாரி சிலுவையில் நிறைவேற்றிய இரட்சிப்பின் மேன்மையை உணர்ந்து கொள்ளத் தவறுகிறார்கள். தன்னுடைய ஒரே குமாரனை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்த பிதாவின் அன்பை அறிந்துகொள்ளத் தவறுகிறார்கள். பாவமனிதனுக்குள் வாசம் செய்து கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பகிர்ந்தளித்த ஆவியானவரின் பரிசுத்தத்தை கனப்படுத்தத் தவறுகிறார்கள். திருத்துவத்தின் மூன்று நபர்களையும் அவர்கள் புறக்கணித்தவர்களாகிறார்கள். எனவே இவர்கள் ஒருநாளும் இரட்சிக்கப்படப்போவதில்லை.

அதனால்தான் பவுல் சொல்லுகிறார்: "மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி நீதிமான்களாக்கப்படக் கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான்". (அப் 13:39)

மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை. (ரோமர் 4:15)

நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதன் மூலம் யாரும் தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரிப்பதில்லை என்பதை முந்தின இரண்டு வசனங்களில் நிரூபித்த பவுல், நியாயப்பிரமாணமானது, அதைக் கடைப்பிடிக்காதவர்களிடத்தில் தேவனுடைய கோபாக்கினையை உருவாக்குகிறது என்ற புதிய உண்மையை அறிவிக்கிறார். அவர்கள் தேவனால் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் ஆகிறார்கள். இந்த சட்டவிதிகள் இல்லாதிருந்தால் நிச்சயமாக மீறுதலும் இல்லாமல் இருந்திருக்கும் என்கிறார். மீறுதலுக்கான தருணத்தையே நியாயப்பிரமாணம் உருவாக்குகிறது. சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியக்கூடிய மனிதர்கள் யாரும் இல்லை. கீழ்ப்படியமுடியாத நிலையிலிருக்கும் மனிதர்கள் அவற்றைத் தங்களுக்குத் தந்த தேவனை தங்களுடைய எதிரியாக நினைக்கிறார்கள். இதன் விளைவாக தேவகோபாக்கினை வெளிப்படவேண்டியதிருக்கிறது.

நியாயப்பிரமாணம் கோபாக்கினையை கொண்டுவருவதால் தாவீது ஜெபிக்கிறார்: "ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும்" (சங் 143:2). **நியாயப்பிரமாணம் ஒரு மனிதனை நீதிமானாக்குவதற்குப் பதிலாக அவனை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்குகிறது.** மோசே இதைத் திட்டவட்டமாக "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக்கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்" (உபா 28:15) என்று அறிவிக்கிறார். இந்த சாபங்களின் பட்டியலை உபா 28:16 முதல் 68 வரையுள்ள வசனங்களில் வாசித்துப்பாருங்கள்.

நியாயப்பிரமாணம் இல்லாமல் மீறுதலும் இல்லை என்கிறார் பவுல். எந்த ஒரு கிரியையும் தன்னில்தானே பாவமாவதில்லை. பரிசுத்தமான தேவன் ஒரு கிரியையை பாவம் என்று அறிவிக்கும்போது மட்டுமே அது பாவமாக எண்ணப்படுகிறது. "நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது" (ரோமர் 5:13). காயின் தன் சகோதரனை கொலைசெய்தான், காம் தன் தகப்பன் நோவாவை கனவீனம் பண்ணினான். இவை பாவமாக

எண்ணப்படவில்லை "பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே" (ரோமர் 7:8). "பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (ரோமர் 7:11) என்ற வசனங்களைத் தியானியுங்கள்.

பரிசுத்தமானதும், தேவனால் வழங்கப்பட்டதுமான நியாயப்பிரமாணம் தேவகோபாக்கினையை உண்டாக்குகிறது என்றால் அதற்குக் காரணம் மனிதனே. சீனாய் மலையடிவாரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள், "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" (யாத் 19:8) என்றார்கள். தங்களுடைய சுயபெலத்தில், தங்களுடைய கிரியைகளில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாகிறது. அவர்களுடைய அறிக்கையின் அடிப்படையில், தேவனுடைய இரக்கம் வெளிப்படவேண்டுமானால், அவர்களிடம் முழுமையான கீழ்ப்படிதல் இருந்திருக்கவேண்டும். ஆனால் முடிவோ பரிதாபம். நியாயப்பிரமாணம் எந்தவொரு மனிதனையும் நீதிமானாக்கவில்லை. நியாயப்பிரமாணம் செய்யும் ஒரே காரியம் அதற்குக் கீழ்ப்படியாதவர்களை சாபத்துக்குட்படுத்துவதுதான். நியாயப்பிரமாணம் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. அவர்கள் அதை மீறியதன் விளைவாக பூமியைச் சுதந்தரிக்கும் பாக்கியத்தை இழந்துபோனார்கள் என்பதை சரித்திரம் உறுதிப்படுத்துகிறது.

ஆதலால், சுதந்தரமானது கிருபையினால் உண்டாகிறதாயிருக்கும் படிக்கு அது விசுவாசத்தினாலே வருகிறது; நியாயப்பிரமாணத்தைச் சார்ந்தவர்களாகிய சந்ததியாருக்கு மாத்திரமல்ல, நம்மெல்லாருக்கும் தகப்பனாகிய ஆபிரகாமுடைய விசுவாசத்தைச் சார்ந்தவர்களான எல்லாச் சந்ததியாருக்கும் அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கும்படிக்கு அப்படி வருகிறது. *(ரோமர் 4:16)*

சற்று நீளமான வசனமாயிருந்தாலும், கவனமாக வாசித்தால் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியதுதான். தேவனுடைய வாக்குறுதியை நாம் எல்லாருமே விசுவாசத்தின் மூலமாகவே சுதந்தரித்துக் கொள்ளுகிறோம். விசுவாசம் கிருபையினால் உண்டாவதினால் அது அவருடைய இலவசமான கொடையாகிறது (எபே 2:8,9). இது முற்றிலுமாக இலவசமானது என்பதினால் ஆபிரகாமின் பிள்ளைகளாக விளங்கும் அத்தனைபேருமே இதைப் பெற்றுக்கொள்ளமுடியும். நியாயப்பிரமாணத்துக்குட்பட்ட யூதர்கள் மாத்திரமல்ல, புறஜாதியாரும் தேவனுடைய வாக்குத்தத்தத்தினால் உண்டாகும் சகல ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

இந்த இடத்தில் சுதந்தரம் என்பது தேவனால் மனிதனுக்கு வாக்களிக்கப்பட்ட நித்திய ஜீவனைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த நித்திய ஜீவனை சுதந்தரிக்க வாஞ்சையில்லாதவர்கள் உலகில் இருக்கமுடியாது. "பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம்" (எபி 10 :34) உண்டு. கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம் (எபே 1:12) என்ற வசனத்தைத் தியானியுங்கள். "இந்த சுதந்தரம் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் உண்டாவதில்லை. சுதந்தரமானது நியாயப்பிரமாணத்தினாலே உண்டானால் அது வாக்குத்தத்தத்தினாலே உண்டாயிராது; தேவன் அதை ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தத்தினாலே அருளிச்செய்தாரே" (கலா 3:18) என்கிறார் பவுல். **எதையோ செய்து நித்திய ஜீவனைச் சுதந்தரிக்கலாம் என்பது சாத்தானுடைய உபதேசம்.**

அந்த வாக்குத்தத்தம் நிச்சயமாயிருக்கிறது என்று பவுல் சொல்லும்போது அவர் 13வது வசனத்தில் குறிப்பிட்ட வாக்குத்தத்தத்தைப் பற்றி பேசுகிறார். ஆபிரகாம் உலகத்தைச் சுதந்தரிப்பான் என்பதே அந்த வாக்குத்தத்தம். இது நியாயப்பிரமாண கிரியைகளின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. விசுவாசத்தினால் வரும் நீதியின் விளைவாகவே ஆபிரகாம் இந்த வாக்குத்தத்தத்தைப் பெற்றார். எனவே யூதர்களுக்கு மாத்திரமல்ல, புறஜாதியாருக்கும் இது பொருந்துவதாக இருக்கிறது. யூதருக்கு அவர் தகப்பனாயிருப்பது போல விசுவாசிக்கிற புறஜாதியினருக்கும் அவர் தகப்பனாக இருக்கிறார். தேவனுடைய வாக்குத்தத்தம் நிச்சயமானதாக இருக்கும். அவர் தம்முடைய ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாகக் காட்டுகிறவர்(எபி 6:17). "என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவை-களையெல்லாம் செய்வேன்" (ஏசாயா 46 : 10) என்று சொல்லியிருக்கிறார்.

சுதந்தரமானது கிருபையினால் உண்டாகும்படிக்கு விசுவாசத்தினால் வருகிறது. அதாவது அது நியாயப்பிரமாண விதிகளுக்குக் கீழ்ப்படிவதினால் உண்டாகும் கிரியைகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. எனவே இந்த வாக்குத்தத்தம் மாறாத நிச்சயத்தை உடையதாகத்தான் இருக்கும். கீழ்க்கண்ட சத்தியங்களை நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

1. இரட்சிப்பு கர்த்தருடையது (யோனா 2:9, சங் 3:8; 37:39)
2. எனவே இரட்சிப்பு மனிதனுடையதல்ல.
3. இரட்சிப்பு விசுவாசத்தினால் உண்டாவது.

4. எனவே அது கிருபையை மட்டுமே அடிப்படையாக கொண்டது.

5. விசுவாசம் முற்றிலுமாக தேவனுடைய ஈவு.

6. விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை மட்டுமே நம்புகிறது.

7. விசுவாசமானது, மனிதன் என்ன செய்கிறான் என்பதைப் பார்ப்பதில்லை.

8. விசுவாசம், தேவன் தன் குமாரனை அனுப்பி, என்ன செய்தார் என்பதைப் பார்க்கிறது.

9. அதாவது, விசுவாசம், குமாரன் கல்வாரி சிலுவையில் நிறைவேற்றி முடித்த கிரியையை நோக்கிப் பார்க்கிறது.

10. விசுவாசம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை நோக்கிப் பார்க்கிறது.

11. விசுவாசம், கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை நோக்கிப் பார்க்கிறது.

பாவ மனிதனுக்கும் தேவனுடைய இலவசமான கிருபைக்கும் நடுவே ஒரு பாலத்தை உருவாக்குவதே விசுவாசத்தின் செயல்பாடு. தன்னுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை பிதா பூமிக்கு அனுப்பிவைத்த நோக்கம் என்ன என்பதை ஒரு மனிதனுடைய விசுவாசம் கண்டு கொள்ளச் செய்கிறது. கிறிஸ்து சிலுவையில் தன் சார்பில், தனக்காக என்ன செய்தார் என்பதை பாவ மனிதனின் விசுவாசக் கண்கள் காண்கின்றன. தன்னுடைய பாவங்கள் கிறிஸ்துவின் கணக்கிலும், கிறிஸ்துவின் நீதி தன்னுடைய கணக்கிலும் வரவு வைக்கப்படுவதை அவன் பார்க்கிறான். **அவர் சம்பாதித்த நீதியை தன்னுடையதாக அங்கீகரித்து, ஏற்றுக்கொள்ளும் நம்பிக்கையை ஒருவன் பெறும் அந்தவேளையிலேயே அவன் இரட்சிக்கப்படுகிறான்.** இவ்விதமாக விசுவாசம் ஒரு பாவமனிதனை தேவனுடைய குடும்பத்தில் ஒருவனாக மாற்றிவிடுகிறது.

ஆபிரகாம் விசுவாசித்துப் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய சந்ததி (வசனம் 17-22)

அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் விசுவாசித்தவருமாய்,

மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான். (ரோமர் 4:17)

"ஆபிரகாம் மாம்சத்தின்படி என்னத்தைக் கண்டடைந்தான்" என்று இந்த அதிகாரம் துவங்கியது. அவர் பெற்றுக்கொண்ட விருத்தசேதனம் விசுவாசமாகிய அடிச்சுவடுகளில் நடக்கிற புறஜாதியார்களின் தகப்பனாயிருக்கும்படியான ஒரு அடையாளம் மட்டுமே என்பதை 12-வது வசனத்தில் பவுல் அறிவித்தைப் பார்த்தோம். 17முதல் 22 வரையுள்ள வேதபகுதியில் ஆபிரகாம் ஈசாக்கு மூலமாக திரளான ஆவிக்குரிய சந்ததிக்குத் தகப்பன் என்ற கனத்தைப் பெற்றுக் கொண்டதை, ஆபிரகாம் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதமாக பவுல் குறிப்பிடுகிறார். ஆபிரகாமின் விசுவாசம் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிலைவரப்படுத்துகிறது. வாக்குத்தத்தம் யாருக்குக் கொடுக்கப்படுகிறதோ அவர்களிடமிருந்து விசுவாசத்தை வாக்குத்தத்தம் எதிர்பார்க்கிறது. இந்த விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது.

எழுதியிருக்கிறபடி என்று பவுல் ஆதியாகமம் 17:5ம் வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார். அதில் தேவன் சொல்கிறார், "இனி உன்பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் எனப்படும்". "இஸ்மவேல் உமக்கு முன்பாகப் பிழைப்பானாக" என்றுதான் ஆபிரகாம் தேவனிடம் விண்ணப்பம் பண்ணுகிறார். ஆனால் தேவன் சொல்கிறார், "உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (வசனம் 19)

திரளான ஜாதிகள் என்று தேவன் சொல்லும்போது ஆபிரகாமின் சரீரரீதியான யூதர்கள் அடங்கிய வாரிசுகளை மட்டும் குறிப்பிடாமல், ஆபிரகாமைப்போல் தேவனை விசுவாசிக்கும் சகல ஆவிக்குரிய சந்ததியாரைக் குறிப்பிடுவதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். திரளான ஜாதிகள் என்பது புறஜாதியாரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது என்பதை ஒருவேளை ஆபிரகாம் விளங்கிக் கொண்டிருக்கமாட்டார். அந்த அநேக ஜாதியாரும் ஆபிரகாமின் சந்ததியார் என்றே ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன" (கலா 3:16). "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலா 3:29).

கிறிஸ்துவின் மூலமாக நாம் தேவனுடைய சுதந்தரராகிறோம். என்றாலும் இதைக் குறித்த வாக்குத்தத்தத்தைப் பெற்றுக்கொண்டவர் ஆபிரகாம்.

விசுவாசம் எப்போதுமே ஒரு நபரின்மேல் வைக்கப்படவேண்டும் (2 தீமோ 1:12) என்பதை அறிவோம். ஆபிரகாம் விசுவாசிக்கும் தேவனைக் குறித்து இரண்டு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

1. தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர்.
2. தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகள் போல் அழைக்கிறவர்.

தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர் என்பதை அறிவோம். அவர் சொல்கிறார் : "நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்" (உபா 32:39). "கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார்; அவரே பாதாளத்தில் இறங்கவும் அதிலிருந்து ஏறவும் பண்ணுகிறவர்" (1 சாமு 2:6). விலக்கப்பட்ட ஞானஆகமம் 16:13 சொல்கிறது : "வாழ்வும் சாவும் உமக்குக் கட்டுப்பட்டவை; மனிதர்களை கீழுலக வாயில்வரை கொண்டுசென்று திரும்பக்கூட்டி வருகிறவர் நீரே".

தேவன் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவர் என்பது ஆபிரகாமின் வாழ்க்கையில் நிரூபிக்கப்படுகிறது. "சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்" (எபி 11:12) என்று வாசிக்கிறோம். ஆவியில் மரித்தவர்களாயிருந்த நம்மையும் தேவன் உயிர்ப்பித்தார். எபேசியர் 2:1 சொல்லுகிறது: "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்". "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார்" (வசனம் 5). "மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்" (யோவான் 5:25) என்கிறார் இயேசு. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோவான் 11:25).

அடுத்ததாக ஆபிரகாமின் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவர். தேவனுடைய சிருஷ்டிப்பின் கிரியையை இந்த வார்த்தை நினைவுபடுத்துகிறது. "வெளிச்சம் உண்டாகக்கடவது" (ஆதி 1:3), "ஆகாயவிரிவு உண்டாகக்கடவது" (ஆதி 1:6) என்று அவர் ஆணையிடுமுன் வெளிச்சமும் ஆகாய விரிவும் பூமியில் இல்லாதிருந்தது. இருக்கிறவைகளின் மேல் மட்டுமல்ல, இல்லாதவைகளின்

மேலும் அவர் அதிகாரம் படைத்தவர். அவரைப் பொறுத்தவரை இல்லாதவைகளும் இருப்பவைகளும் ஒன்றுதான். அவர் பாவிகளை நீதிமான்களாக அழைக்கிறவர். ஒரு நீதியும் இல்லாதவர்களை நீதிமான்களாக்குகிறவர். இந்த வல்லமை அவரிடம் இருப்பதினால்தான் "தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்" (மத் 3:9) என்கிறார் இயேசு.

உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான். (ரோமர் 4:18)

தனக்கு பிள்ளை பிறக்கும் என்கிற நம்பிக்கை ஆபிரகாமுக்கு கொஞ்சமும் இல்லை. தன் முதிர்வயதினிமித்தம் சாராளுக்கும் அந்த நம்பிக்கை இல்லை. ஆனால் மரித்தோரை உயிர்ப்பிக்கிறவரும், இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாகிய தேவன் சொல்கிறார்: "ஒரு உற்பவகாலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்" (ஆதி 18:10). ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்று போயிருந்ததினிமித்தம் சாராள் இதைக் கேட்டு நகைக்கிறாள். ஆனாலும் தேவன் சொல்கிறார்: "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ?" (வசனம் 14). நம்புகிறதற்கு ஏதுவல்லாதிருந்தும் ஆபிரகாம் தேவனை நம்பினபடியால் தன்னில் ஒரு சந்ததி மாத்திரம் அல்ல, அநேக சந்ததிகள் உண்டாவதற்கு அவர் காரணமாக இருந்தார். பலதேசத்து, பல இனத்து, பல மொழிபேசும் மக்களுக்கு அவர் தந்தையானார். ஈசாக்கு மூலமாக இஸ்ரவேலரும், ஏதோமியரும், இஸ்மவேல் மூலமாக பன்னிரெண்டு சந்ததியாரும் (ஆதி 25:12-18), கேத்தூராள் மூலமாக திரளான சந்ததியாரும் (ஆதி 25:2-4) ஆபிரகாமுக்கு உண்டாயிருந்தார்கள்.

நம்புகிறதற்கு ஏதுவல்லாதிருந்தும் ஆபிரகாம் நம்பிக்கையோடே விசுவாசித்ததாக இந்த வசனம் அறிவிப்பதைக் கவனியுங்கள். **நம்பிக்கை, விசுவாசம் என்ற இரண்டு வார்த்தைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இரண்டுமே தேவனுடைய வார்த்தையை அடிப்படையாகக் கொண்டவை.** தேவன் சொல்லுவதை, ஒரு சிறு குழந்தையைப்போல் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவன் நம் ஒவ்வொருவருக்கும் பல வாக்குத்தத்தங்களைத் தந்திருக்கிறார். அவை நம்புவதற்கு ஏதுவல்லாததுபோல் காணப்படலாம். ஆபிரகாமின் பிள்ளைகள் என்று உரிமை கொண்டாடும் நாம், ஆபிரகாமைப்போல் தேவன் சொல்வதை எல்லாம் விசுவாசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பவுல் சொல்லுகிறதுபோல்: "காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன?" (ரோமர் 8:24). நாம் எதை நம்புகிறோம் என்பதை யோசித்துப்பாருங்கள். உண்மையான விசுவாசம் தடைகளையும், எதிர்ப்புகளையும் பாராமல், தேவனை மட்டுமே நோக்கிப் பார்க்கிறது.

அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். (ரோமர் 4:19)

நூறு வயதான ஆபிரகாமின் சரீரத்தில் நிச்சயமாக பிள்ளைகளை உருவாக்கும் உயிர்சக்தி இருந்திருக்க முடியாது. சாராளாலும் குழந்தை பெற்றுக்கொடுக்கமுடியாது. ஆனாலும் சாராள் மூலமாக ஆபிரகாமுக்கு சந்ததி உருவாகும் என்பதுதான் தேவனுடைய வாக்குத்தத்தம். "நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன்" (ஆதி 17:16). தங்கள் இருவருடைய சரீரத்தின் நிலையையும் ஆபிரகாம் எண்ணாதிருந்தார் என்று சொல்லும்போது, சகலத்தையும் எண்ணி, அதற்குப்பின், நம்பிக்கையற்ற அந்த சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தையை நம்பினார் என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.

"அவன் விசுவாசத்தில் பலவீனமாயிருக்கவில்லை" என்று இரண்டு எதிர்மறைகளில் சொல்லப்படுவது (Negative + Negative = Confirmed Positive), ஆபிரகாம் விசுவாசத்தில் மிகவும் பலமுள்ளவராக இருந்தார் என்பதையே சந்தேகமற உறுதிப்படுத்துகிறது. உண்மையான விசுவாசம் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கவனிக்காது. அது தேவனுடைய பெலனையும் அவருடைய உண்மையையும் மட்டுமே நம்புகிறது. எபிரெயர் 11:11,12 சொல்கிறது: "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள். ஆனபடியால், சரீரஞ் செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப் போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்".

தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், (ரோமர் 4:20)

ஆபிரகாமும் சாராளும் தங்களுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தைக் குறித்து தேவனிடம் கேள்வி கேட்டார்கள் என்பது உண்மைதான் (ஆதி 17:17; 18:12,13). அவர்கள் நகைத்தார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக்குறித்து தயக்கமடைந்திருக்கலாம். இது எவ்வாறு ஆகும் என்று மனுஷீகமாய் யோசித்திருக்கலாம். ஆனால் நிச்சயமாகவே அவர்கள் சந்தேகப்படவில்லை. ஆபிரகாமைப்போல் நாமும் தேவனை, அவருடைய வார்த்தையை, பற்றிக்கொள்ள அறிந்துகொள்ளவேண்டும். வேதம் சொல்கிறது: "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" (யாக் 1:6,7); இந்த அதிகாரம் முழுவதிலுமே பவுல் தேவனைக்குறித்த சகல காரியங்களிலும் ஒரு நிச்சயத்தை உடையவர்களாக நாம் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தப் பார்க்கிறார். தேவனை விசுவாசியாதவர்கள் தேவனைப் பொய்யராக்குகிறார்கள் என்று 1 யோவான் 5:10ல் வாசிக்கிறோம். தேவனை விசுவாசிக்கும்போது அவரை கனம் பண்ணுகிறோம். பாலாக் பண ஆசையினால் விழுந்துபோன ஒரு ஊழியக்காரன்தான். ஆனாலும் அவர் சொல்கிறார். "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம் மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண் 23:19).

தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். (ரோமர் 4:21)

மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்ற விருப்பம் பலருக்கு இருக்கலாம். ஆனால் அதைச் செய்யும் திறமை இல்லாதிருக்கும். தேவனுக்கோ தான் வாஞ்சிப்பதை எல்லாம் நிறைவேற்றும் ஆற்றல் உண்டு. இதை ஆபிரகாம் நம்பினதின் விளைவாகவே விசுவாசத்தில் வல்லவராகிறார். இதன் விளைவாக ஆபிரகாம் தன்னுடைய விசுவாசப் பரீட்சையில் தோல்வி அடையவில்லை என்பது மட்டுமல்ல, மிகப்பெரிய வெற்றியையும் சந்திக்கிறார்.

தேவனுடைய வாயிலிருந்து வெளிப்படும் வார்த்தையை அவருடைய ஓங்கிய புயம் நிறைவேற்றும் என்பதை ஆபிரகாம் நம்பினார். 19-வது வசனத்தில் விசுவாசத்தில் பலவீனமாயிருக்கவில்லை என்று அறிவித்த பவுல் இந்த வசனத்தில் அவர் விசுவாசத்தில் வல்லவனானார் என்று சொல்கிறார். அதாவது விசுவாசத்தில் தேர்ச்சி பெற்றவராகிறார்.

படிப்படியாக வளர்ந்துகொண்டே போகிறார். பல வித்தியாசமான விசுவாச அளவுகள் வேதத்தில் சொல்லப்படுகின்றன. அற்ப விசுவாசம் (மத் 6:30; 14:31), பெரிய விசுவாசம் (மத் 15:28; 8:10). அவனவனுடைய தேவைக்குத் தகுந்தபடி தேவன் விசுவாசத்தைப் பகிர்ந்து கொடுப்பது குறித்து ரோமர் 12:3ல் தியானிப்போம். "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணவேண்டும்" (லூக்கா 17:5) என்று சீஷர்கள் ஜெபிப்பதைப் பார்க்கிறோம். **அனுதினமும் நம்மில் விசுவாசம் அதிகரித்துக்கொண்டே இருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தினாலும், நம்பிக்கையினாலும் அன்பினாலும் மட்டுமே தேவன் மகிமைப்படுகிறார்.**

ஆபிரகாமின் விசுவாசம் தேவனை மகிமைப்படுத்துகிற ஒரு காரியம் என்று இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. தான் சிருஷ்டித்த எல்லா காரியங்களுமே தன்னை மகிமைப்படுத்தவேண்டும் என்றுதான் தேவன் விரும்புகிறார். விசுவாச வாழ்க்கையில் ஆபிரகாம் பெற்ற வெற்றியின் இரகசியம் நாம் தியானித்த மூன்று வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

1) ஆபிரகாம் விசுவாசத்தில் பலவீனமாய் இருக்கவில்லை. (வசனம் 19)

2) தன் சரீரம் செத்துப்போயிருந்ததைக் குறித்து அவர் கவலைப்படவில்லை. அதாவது அவரில் உள்ளான குழப்பம் இல்லை. (வசனம் 19)

3) ஆபிரகாம் சாராளின் பெலவீனத்தைக் குறித்தும் கவலைப்படவில்லை. அவருக்கு வெளியே இருந்தும் எந்த குழப்பமும் உண்டாக அவர் அனுமதிக்கவில்லை. (வசனம் 19)

4) ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை அப்படியே நம்பினார் (வசனம் 20)

5) ஆபிரகாமின் கண்கள் தேவன்மேல் பதிக்கப்பட்டிருந்தபடியால் அவருடைய வல்லமையை அவர் நம்பினார். (வசனம் 20)

6) தான் நம்பியதை அடைவதற்கு முன்பே ஆபிரகாம் தேவனை மகிமைப்படுத்தி அவருக்கு நன்றி சொன்னார். (வசனம் 21)

7) அதுமட்டுமல்ல, ஆபிரகாமின் விசுவாசம் படிப்படியாக வளர்ந்து கொண்டிருந்தது. (வசனம் 21)

ஆகையால், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. (ரோமர் 4:22)

ஆகையால் என்ற வார்த்தை ஆபிரகாம் "விசுவாசத்தில் வல்லவனானபடியால்" என்பதைக் குறிப்பிடுகிறது. பெலப்படுத்தப்பட்ட விசுவாசத்தை தேவன் நீதியாக ஏற்றுக்கொள்ளுகிறார். அவருடைய விசுவாசம் நீதியாக மாறினதாக வேதம் சொல்லவில்லை. அவருடைய கணக்கில் நீதியாக வரவு வைக்கப்பட்டது. NIV ஆங்கில மொழிபெயர்ப்பு சொல்கிறது It was credited to him as righteousness. தன்னுடைய பெலத்தையோ, சாராளின் பெலத்தையோ நம்பாமல் தேவனுடைய வார்த்தையின் பெலத்தை நம்பினபடியால் அப்படி ஆயிற்று.

நன்றாகக் கவனியுங்கள். ஆபிரகாமின் கீழ்ப்படிதல் நீதியாக எண்ணப்படவில்லை. அவருடைய பக்தி வைராக்கியம் நீதியாக எண்ணப்படவில்லை. அவருடைய பரிசுத்தம் நீதியாக எண்ணப்படவில்லை. அவருடைய நீதியே நீதியாக எண்ணப்படவில்லை. **தேவன் தன்னுடைய வார்த்தையினால் வாக்குப்பண்ணினதை நிறைவேற்றுவார் என்ற அவருடைய விசுவாசம்தான் நீதியாக எண்ணப்பட்டது.** சொல்லப்போனால் அவரிடம் இருந்த ஒரே காரியம் அவருடைய விசுவாசம்தான். தேவனுடைய பார்வையில் மற்ற எல்லாவற்றிலுமே அவர் குறைவானவராகத்தான் காணப்பட்டிருக்க வேண்டும்.

விசுவாசிகளின் நீதி (வசனம் 23-25)

அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது. (ரோமர் 4:23)

தேவனால், ஆபிரகாமின் விசுவாசம் நீதியாக தேவனால் எண்ணப்பட்டது எவ்வாறு என்பதை இந்த அதிகாரத்தின் முதல் 22 வசனங்களில் அறிவித்த பவுல், மீதியான மூன்று வசனங்களில் அந்த விளக்கம் சபை விசுவாசிகளாகிய நமக்கு எவ்வாறு பொருத்தமுடையதாகிறது என்பதை அறிவிக்கிறார். 1 கொரி 10:11ல் இவ்வாறு வாசிக்கிறோம். இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. ஆபிரகாமின் விசுவாசம் உண்மையிலேயே பாராட்டுதலுக்குரியதுதான். ஆபிரகாமை மேன்மைப்படுத்தும் நோக்கத்தோடு பவுல் அதை வலியுறுத்தவில்லை. தேவ சமுகத்தில் சபையாராகிய நாம் நீதிமானாகக்

கருதப்படவேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும் என்ற ஆலோசனையை பவுல் தருகிறார்.

ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையின்மேல் கொண்டிருந்த விசுவாசம் நீதியாக எண்ணப்படக்கூடுமானால், இன்று நம்முடைய விசுவாசமும் நீதியாக எண்ணப்படக்கூடும். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவானானாலும் சரி, புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவானானாலும் சரி, அவர்களின் விசுவாசத்தின் அடிப்படையிலேயே அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆளுக்கு ஆள், காலத்துக்குக் காலம் என்று தேவன் தன் இரட்சிப்பின் திட்டத்தை மாற்றுவதில்லை. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்.

"நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது" என்று சொல்லும்போது விசுவாசிகளாகிய நம்மை மட்டுமே பவுல் மனதில் வைத்துப்பேசுகிறார். **தேவனுடைய வாக்குத்தத்தங்களும், அவருடைய வார்த்தைகளும் இரட்சிக்கப்படாத மனிதர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள்.** ஏனென்றால் அவைகளை ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாகவே சுதந்தரித்துக் கொள்ளமுடியும். (2 கொரி 1:20).

நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவரை விசுவாசிக்கிற நமக்கும் அப்படியே எண்ணப்படும். (ரோமர் 4:24)

இரண்டு முக்கியமான கேள்விகளுக்கு இந்த வசனம் பதில் சொல்கிறது.

1) யாரை விசுவாசிக்கவேண்டும்? பிதாவை

2) யார் மூலமாக விசுவாசிக்கவேண்டும்?
குமாரன் மூலமாக

நாம் ஒரு சத்தியத்தையோ, கொள்கையையோ, தத்துவத்தையோ உபதேசத்தையோ விசுவாசிப்பதில்லை. ஒரு நபரை விசுவாசிக்கிறோம். பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறோம். எதற்காக விசுவாசிக்கிறோம்? நம்முடைய பாவங்களை எல்லாம் சிலுவையில் சுமந்து, நாம் அனுபவிக்கவேண்டிய மரணத்தை தான் ஏற்றுக்கொண்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, இன்று பிதாவின் பாரிசங்களின் வீற்றிருக்கும் கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து

எழுப்பினபடியால் அவரை விசுவாசிக்கிறோம். பிதாவாகிய தேவனை அறிந்து வெறுமனே விசுவாசித்தால் மட்டும் போதாது, ஏனெனில் இன்றும் எல்லா யூதர்களும் யெகோவா தேவனை விசுவாசிக்கிறார்கள். ஆனாலும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பின பிதா என்ற முறையில் அவர்கள் தேவனை அறிந்துகொள்ளாதபடியால் அவர்கள் விசுவாசம் குறைவுபட்டதாகிறது.

ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த மிகப்பெரிய வெளிப்பாடு அவர் பெற்றுக்கொள்ளவிருக்கும் திரளான சந்ததியைப் பற்றியது. அதை அவர் விசுவாசித்தார். **இன்று தேவன் நமக்கு அருளிச்செய்த மிகப்பெரிய வெளிப்பாடு தன்னுடைய குமாரனுடைய மரணத்தின் மூலமாக நமக்கு உண்டாகும் இரட்சிப்பைப் பற்றியது. நாம் தேவநீதியை சுதந்தரித்துக்கொள்ள தேவன் இந்த ஒரு வழியைத்தான் நியமித்திருக்கிறார்.** அதை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் ஆபிரகாமின் வழியைப் பின்பற்றுகிறார்கள். இதை விசுவாசிக்கும்போது ஆபிரகாம் விசுவாசித்த அதே தேவனை விசுவாசிக்கிறவர்கள் ஆகிறார்கள். "அந்தப்படி விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள்" (கலா 3:9). விசுவாசமார்க்கத்தார் என்ற இனத்திற்குள்ளாக சேரும்போது, அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

ஆபிரகாமின் விசுவாசத்துக்கும் நம்முடைய விசுவாசத்துக்கும் ஒரேயொரு வித்தியாசத்தை மட்டும் சுட்டிக்காட்டலாம். ஆபிரகாம் வருங்காலத்தில் நடக்கப்போகிற ஒரு காரியத்தைக் குறித்து தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தார். அநேக ஜாதிகளுக்குத் தகப்பன் என்பதை அவர் நம்பினார். இன்று நாம் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கிறிஸ்து நம் சார்பில் மரித்தார் என்பதையும், பிதாவாகிய தேவனால் அவர் உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதையும் விசுவாசிக்கிறோம். "அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ 2:12) என்கிறார் பவுல்.

ரோமர் 3:25ல் தேவன் "இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவர்" என்று வாசித்தோம். இந்த வசனத்தில் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்மேல் வைக்கும் விசுவாசம் பாராட்டப்படுகிறது. கிறிஸ்துவின் மரணமும் உயிர்த்தெழுதலுமே இரட்சிப்பின் ஆதாரம்.

அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். (ரோமர் 4:25)

நம்முடைய கண்கள் கிறிஸ்துவின்மேல் பதிக்கப்பட்டிருந்தால் மட்டும் போதாது. அவர் நம் இரட்சிப்புக்கான கிரியையை செய்து முடித்ததை அவை காணவேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய மிக முக்கியமான சத்தியம் இந்த வசனத்தில் சுருக்கமாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துவின் மரணம் பாவத்தின் மரணம், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நீதியின் உதயம்.

1) கிறிஸ்து நம் பாவங்களுக்காக ஒப்புக் கொடுக்கப்பட்டார்.

2) கிறிஸ்து நம்மை நீதிமான்களாக்குவதற்காக உயிர்த்தெழுந்தார்.

நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து மரித்தார் என்று சொல்லாமல் ஒரு குற்றவாளியைப்போல் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். **அவர் மரிக்கவில்லை. கொல்லப்பட்டார். இவ்வாறு அவரை ஒப்புக் கொடுத்தவர் பிதாவாகிய தேவன்** என்பதை ஏசாயா 53:4-6, 10-12 வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. "கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (வசனம் 6). "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (வசனம் 10). "மனித இனத்தின் பாவங்களை பிதாவாகிய தேவன் அவர்மேல் சுமத்தியதின் விளைவாக (அவருடைய கணக்கில் வரவு வைக்கப்பட்டதின் விளைவாக) கிறிஸ்து நம்முடைய சார்பில், நம்முடைய பிரதிநிதியாக மரணத்தை ருசிபார்த்தார். "தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் பிதாவாகிய தேவன் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தார்" (ரோமர் 8:23), "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும்" (அப் 2:23) குமாரன் ஒப்புக்கொடுக்கப்பட்டார்.

கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனாலும் நம்மை நீதிமான்களாக்குவதற்கு அவர் உயிரோடு எழும்பவேண்டியதாயிற்று. **நாம் மன்னிக்கப்பட்ட பாவிகள் என்பது மட்டுமல்ல, பாவமே செய்யாத நீதிமான்கள்**

என்றால் அதற்குக் காரணம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல். மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தவரே இதையும் நம்மில் நடப்பிக்கிறார். "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்" (அப் 2:24). "ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்: அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்" (அப் 3:15). இன்னும் அப் 2:32; 3:26; 10:40; 13:30,37, ரோமர் 6:4; 8:11, 1 கொரி 6:14; 15:15, 2 கொரி 4:14, கலா 1:1, எபே 1:19,20, கொலோ 2:12, 1 தெச 1:10, 1 பேதுரு 1:21 வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழாவிட்டால் நாம் மன்னிக்கப்பட்ட பாவிகளாகத்தான் இருந்திருப்போம். நீதிமான்களாயிருக்கமாட்டோம். ஏனென்றால்

1) உயிர்த்தெழுதலின் மூலமாகவே கிறிஸ்துவின் கிரியைகள் பூரணமாகின்றன. மரணத்தின் கூர், பாதாளத்தின் ஜெயம் அதன் மூலமாகவே பரிகரிக்கப்படுகிறது (1 கொரி 15:55)

2) பிதாவாகிய தேவன் தன் குமாரன் தன்னை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்ததை ஏற்றுக் கொண்டார் என்பதை அவருடைய உயிர்த்தெழுதலே நிரூபிக்கிறது (1 பேதுரு 1:21).

3) அவருடைய உயிர்த்தெழுதலே அழியாத, மாசற்ற, வாடாத சுதந்தரத்திற்கேதுவான ஜீவனுள்ள நம்பிக்கையை நமக்கு வழங்குகிறது (1 பேதுரு 1:4). நாமும் ஒருநாள் உயிர்த்தெழுவோம் என்ற நிச்சயத்தை உருவாக்குகிறது (1 தெச 4:14).

நம்முடைய உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு சம்பந்தப்பட்டது. "நான் பிழைக்கிறபடியால் நீங்களும் பிழைப்பீர்கள்" (யோவான் 14:19) என்கிறார் இயேசு. "கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" (1 கொரி 15:17).

ரோமர் நிருபத்தின் மிகமுக்கியமான வசனங்களில் ஒன்றான "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக

எண்ணப்பட்டது" இந்த அதிகாரத்தில் காணப்படுகிறது. மேலும் தேவநீதியைக் குறித்த முக்கியமான சத்தியங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1) கிறிஸ்துவின் நீதி நம்மில் எண்ணப்படுவதால், நம் கணக்கில் வரவு வைக்கப்படுவதினால் நாம் நீதியைப் பெறுகிறோம் என்பது பதினொரு இடத்தில் குறிப்பிடப்படுகிறது. (வசனம் 3,4,5,6,8,9,10,11,22,23,24)

2) ஒன்பது இடங்களில் நீதி விசுவாசத்தோடு இணைக்கப்பட்டு சொல்லப்படுகிறது. (வசனம் 3, 5, 9, 11, 13, 14, 16, 20, 21)

3) நீதி ஒருவனுடைய கிரியையோடு சம்பந்தப்பட்டதல்ல என்பது மூன்று இடங்களில் வலியுறுத்தப்படுகிறது. (வசனம் 2, 5, 6)

4) நீதிக்கும் விருத்தசேதனத்துக்கும் உறவு இல்லை என்பது இரண்டுமுறை சொல்லப்பட்டிருக்கிறது. (வசனம் 10,11)

5) நீதி நியாயப்பிரமாணத்தினால் வருவதில்லை என்பது மூன்று முறை சொல்லப்பட்டிருக்கிறது. (வசனம் 13, 14, 16)

6) நீதி தேவ கிருபையை மட்டுமே சார்ந்திருக்கிறது. (வசனம் 16)

7) நீதி கிறிஸ்துவின் பாடு மரணத்தினால் மட்டுமே உருவாகிறது. (வசனம் 25)

பவுல் அறிவிக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகியவற்றையெல்லாம் வெளிப்படுத்துகிறது என்பது உண்மைதான். ஆனால் இவை எல்லாவற்றுக்கும் மேலாக அது தேவநீதியை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் சிலுவை மரணம் தேவன் நீதியுள்ளவர் என்பதை உலகத்துக்கு பறைசாற்றுகிறது. ஏனென்றால் உலகின் பாவத்தை கிறிஸ்துவில் அவர் தண்டித்தார். அதே நேரத்தில் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் உண்டாகும் நீதியை மனிதர்களுக்கு இலவசமாக வழங்கினார். தேவன் சொல்கிறார் : "என் தாசனாகிய நீதிபரர்

தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்" (ஏசாயா 53 : 11). எரேமியா 23:6ல் இவ்வாறு வாசிக்கிறோம் : "அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே".

எனவே கிறிஸ்து சிலுவையில் தேவனுக்காகவும் மரித்தார். மனிதர்களுக்காகவும் மரித்தார் என்று சொல்லலாம். அப்படி இருக்கும்போது நம்முடைய பொல்லாத இருதயங்களிலிருந்து வெளிப்படும் போலியான கிரியைகளை நாம் நம்பவேண்டிய அவசியமே இல்லை. **தேவன் நமக்காக என்ன செய்தாரோ அதை மட்டும் விசுவாசியுங்கள். இலவசமாக அருளப்படும் தேவநீதியை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுங்கள்.** ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டது உண்மையானால் நாமும் நீதிமானாக்கப்படுவது உறுதி.

5

பாவத்தை மேற்கொள்ளும் கிருபை

மனிதஇனத்தை இரட்சித்து, பாவமனிதனை தன்னோடு ஒப்புரவாக்கிக்கொள்ள ஒரேவழி தன்னுடைய தேவநீதியை வழங்குவதுதான் என்று தேவன் கண்டார். தேவனுடைய இந்த இரட்சிப்பின் திட்டத்தை ஒரு மனிதன் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறான். ஆபிரகாம் தன்னுடைய விருத்தசேதனம் அல்லது நியாயப்பிரமாண கிரியைகளின் மூலமாக அல்ல, தேவனுடைய வார்த்தையை விசுவாசித்ததின் மூலமாகவே நீதிமானாக்கப்பட்டார் என்பதை முந்தின அதிகாரத்தில் பவுல் தெளிவுபடுத்தியதைப் பார்த்தோம்.

முந்தின நான்கு அதிகாரங்களிலும் நாம் கற்றுக்கொண்ட பாடங்களைச் சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

1) மனிதர்கள் அத்தனைபேரும் பாவிகள்.

2) எனவே யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, ஆக்கினைத்தீர்ப்பை அவர்கள் எதிர்நோக்குகிறார்கள்.

3) அவர்களை மீட்கும்படியாக கல்வாரியில் தேவநீதி கிறிஸ்து மூலமாய் கிருபையாக வெளிப்படுகிறது.

4) விசுவாசத்தின் மூலமாக தேவநீதியைப் பெற்றுக் கொள்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

5) சுவிசேஷம் என்று அழைக்கப்படும் இந்த உபதேசத்தைக் குறித்து பழைய ஏற்பாட்டு வசனங்கள் சாட்சி கொடுக்கின்றன.

6) ஆபிரகாம் தாவீது போன்ற முற்பிதாக்களும் தங்கள்

விசுவாசத்தின் மூலமாகவே நீதிமான்களாக்கப் பட்டார்கள் என்பது சரித்திர ரீதியான உண்மை.

இந்த ஐந்தாவது அதிகாரத்தை இரண்டு பகுதிகளாக பவுல் பிரித்திருக்கிறார்.

1) நீதிமானாக்கப்பட்ட மனிதனுக்குப் பாதுகாப்பைத் தரும் ஏழு மேன்மைகள் (வசனம் 1-11).

2) நீதிமானாக்கப்பட்டதைத் தொடர்ந்து மனிதன் பரிசுத்தமாக்கப்படும் விதம் (வசனம் 12-21).

பாவமனிதனை நீதிமானாக்குவதோடு தேவகிருபையின் செயலாற்றல் நின்றுவிடுவதில்லை. ஒருவனை நீதிமானாக்குவது ஒரு நிமிடத்தில் நடந்து முடிந்துவிடுகிறது. கிறிஸ்து இயேசுவுக்குள் ஒருவனை தேவன் நீதிமானாகக் கண்டு, அவ்வாறு தீர்ப்பளிக்கிறார். அதன்பின் அவன் பரிசுத்தமாக்கப்படவேண்டும். இது ஒரு தொடர்கிரியை. இது அவனுடைய வாழ்நாள் முழுவதும் நடந்து, அவன் மகிமைப்படுத்தப்படும் போது மட்டுமே நிறைவடைகிறது. ரோமர் 5:12 துவங்கி 8-வது அதிகாரம் கடைசிவரை பரிசுத்தமாக்கப்படுதலைக் குறித்து பவுல் பேசுகிறார். 9 முதல் 11 வரை உள்ள அதிகாரங்களில் யூதர்களின் காரியங்களை பவுல் அறிவித்துவிட்டு, தன்னுடைய நிருபத்தின் கடைசி ஐந்து அதிகாரங்களில் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தேவையான பொதுவான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் தருகிறார்.

இந்த அதிகாரத்தின் இரண்டாவது வேதபகுதியிலிருந்து கிறிஸ்துவோடு ஒரு மனிதன் இணைக்கப்படுவதின் மூலமாக ஒருவன் பெறும் இரட்சிப்பானது அவனுடைய விசுவாசத்தினால் பெற்றுக்கொண்ட தேவநீதியை அடிப்படையாகக் கொண்டபடியினால் அந்த இரட்சிப்பில் நிலைத்திருப்பது உறுதி என்பதை பவுல் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். தன்னால் நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதனை அதிலிருந்து வழுவாதபடி காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மாசற்றவர்களாக நிறுத்தவும் அவர் வல்லமையுள்ளவராக இருக்கிறார் (யூதா 24).

நீதிமானாக்கப்பட்டவனின் பாதுகாப்பு
(வசனம் 1-8)

இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப் பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து

மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)

நாம் தேவகிருபையால் விசுவாசத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டவர்கள். தேவ கிருபையினால் மட்டுமே நாம் சகல ஆசீர்வாதங்களையும் பெறுகிறோம் என்பதை நம் விசுவாசமே அங்கீகரிக்கிறது. அதுமட்டுமல்ல நம் விசுவாசம் மேலும் கிருபையைப் பெற வாஞ்சிக்கிறது. இதுதான் விசுவாசத்தின் மேலான தத்துவம். விசுவாசம் தன்னில் ஒரு தகுதியும் இல்லை என்பதை அறிந்து ஏற்றுக்கொள்கிறது. விசுவாசிப்பதை நாம் செய்யவேண்டிய நிற்கிரியைகளில் ஒன்றாக கருதுவது தவறு. அது கிறிஸ்துவோடு பாவமனிதனை இணைக்கும் ஒரு பாலம் மட்டுமே.

நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன், படிப்படியாக பரிசுத்தமாக்கப்பட வேண்டியதிருக்கிறது. அவனுடைய இரட்சிப்பைக் குறித்த பாதுகாப்பையும் நிச்சயத்தையும் தரும் ஏழு ஆசீர்வாதங்களை இந்த அதிகாரத்தின் முதல் வேதபகுதி (1-11 வசனங்கள்) அறிவிக்கின்றன. இந்த நிச்சயமே ஒருவனை பரிசுத்தத்துக்குள் வழிநடத்துகிறது.

1) தேவனிடத்தில் சமாதானம் (வசனம் 1)

2) தேவகிருபை (வசனம் 2)

3) தேவமகிமையைக் குறித்த நம்பிக்கை (வசனம் 2)

4) உபத்திரவங்களால் உருவாகும் நற்குணங்கள் (வசனம் 3)

5) ஆவியானவர் பொழிந்தருளும் தேவஅன்பு (வசனம் 5)

6) தேவனுடன் ஒப்புரவு (வசனம் 10)

7) தேவனுடன் உண்டான நட்புறவைக்குறித்து மேன்மை பாராட்டுதல் (வசனம் 11)

"இவ்விதமாக நாம்" என்று பவுல் இந்த அதிகாரத்தைத் துவங்கி, தன்னுடைய வாசகர்களோடு பவுல் தன்னையும் இணைத்துக் கொள்கிறார். முந்தின நான்கு அதிகாரங்களில் தான் அறிவித்த உபதேச சத்தியங்களின் பின்னணியில் நாம் நீதிமானாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை பவுல் மீண்டும் உறுதிப்படுத்துகிறார்.

நீதிமானாக்கப்படப்போகிறபடியால் என்று சொல்லாமல்

"நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். **நீதிமானாக்கப்படுவது என்பது எதிர்காலத்தில் நடக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கும் காரியம் அல்ல. தேவனுடைய பார்வையில் அது ஏற்கனவே நடந்து முடிந்த காரியம்.** நம்முடைய எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிட்டன என்பது மட்டுமல்ல, வரும் நாட்களில் நமக்கும் தேவனுக்குமிடையே உள்ள சகல உறவுமுறைகளும் இதன் அடிப்படையிலேயே நடக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். நம்மேல் சுமத்தப்பட்ட தேவநீதியை மனிதனோ, சாத்தானோ, அபகரிக்க முடியாது என்பதை நாம் உறுதியாக நம்பலாம்.

இவ்வாறு நீதிமானாக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் எவை? முதலாவது ஆசீர்வாதம் - தேவனிடத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் சமாதானம். உலகில் ஒரு மனிதன் பெறக்கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதம் பணம் அல்ல, அதிகாரம் அல்ல, புகழ் அல்ல, தெய்வீக சமாதானம். அதை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் பெற்றுக்கொள்கிறோம் என்கிறார் பவுல். முந்தின நான்கு அதிகாரங்களிலும் எத்தனை தடவை "இயேசுவின் மூலமாய்" என்ற வார்த்தையை பவுல் பயன்படுத்தியிருக்கிறார் என்பதைப் பாருங்கள். கிறிஸ்துவினாலேயன்றி எந்தவிதமான ஆசீர்வாதமோ மேன்மையோ மனிதனுக்கு இல்லை என்பதை சந்தேகத்திற்கிடமின்றி நாம் அறிந்துகொள்ளவேண்டும். "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா 53:5) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அவரே நம்முடைய சமாதான காரணர்" (எபே 2:14).

நீதிமானாக்கப்பட்டவர்கள் பெறும் ஆசீர்வாதம் உலகரீதியான சமாதானம் மட்டும் அல்ல, தேவனிடத்தில் சமாதானம். தேவனோடு தன்னை ஒப்புரவாக்கிக் கொண்ட மனிதனால்தான் இந்த சமாதானத்தைப் பெறமுடியும். தேவனை அறியாத உலகத்து மனிதர்களும் சமாதானத்தைத் தேடுகிறார்கள். அவர்கள் பெறும் சமாதானமோ வஞ்சனையானது, தற்காலிகமானது. "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை" (யோவான் 14:27) என்கிறார் இயேசு. "எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப் 4:7) என்கிறார் பவுல். தேவனிடத்திலிருந்து சமாதானம் பெற்றவர்கள் மட்டுமே தேவசமாதானத்தை அனுபவிக்க முடியும். இதை தேவனே அருளிச்செய்கிறார் ஒரு மனிதன் தன்னுடைய சுயமுயற்சியினால் இதைப்பெறுவதில்லை. இது தேவனுடைய இலவசமான ஈவு.

நமக்கு தேவனோடு சமாதானம் ஏன் தேவைப்படுகிறது? மனிதன் தன் பிறப்பிலிருந்தே தேவனைப் பகைக்கிறவனாகத்தான் காணப்படுகிறான். ரோமர் 8:7 சொல்லுகிறது: "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை". எனவே "நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்சஇச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபே 2:3). "தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்தோம்" (எபே 4:18). நமது சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் தேவனுக்கு சத்துருக்களாயிருக்கிறோம். ஆனாலும் கொலோசெயர் 1:20 சொல்லுகிறபடி "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று".

கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமாதானத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு மனிதனுடைய படிப்படியான ஆவிக்குரிய வளர்ச்சியை அறிந்துகொள்வோம். அவன் சொல்கிறான் :

1) நான் ஒரு பாவியாக இருந்தேன்.

2) ஆவியானவர் என்னில் பாவ உணர்வை ஏற்படுத்தினார்.

3) கிறிஸ்து மூலமாக தேவன் நிறைவேற்றிய இரட்சிப்பைக் குறித்து அறிந்துகொண்டேன்.

4) என் பாவத்தினிமித்தம் கிறிஸ்து தண்டிக்கப்பட்டார் என்பதை விசுவாசிக்கும் கிருபை பெற்றேன்.

5) தேவகோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொண்டேன்.

6) தேவனுடைய பார்வையில் நான் நீதிமான் என்ற முறையில் தேவசமாதானம் என்னுடையதாகிறது.

தேவனால் நீதிமானாக்கப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளாத எந்த மனிதனாலும் தேவனிடத்தில் சமாதானமாய் இருக்கவே முடியாது. தேவன் தன்னுடைய குமாரனை பூமிக்கு அனுப்பி தன்னுடைய பாவத்துக்காக அவரைத் தண்டித்தார் என்று விசுவாசிக்கும் ஒரு மனிதனால்தான் தேவனிடத்தில் சமாதானமாயிருக்க முடியும். இப்படிப்பட்ட மனிதனால்தான் மரணத்தைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் பயமில்லாமல் இருக்கமுடியும். 2 கொரி 5:18,19 வாசித்துப் பாருங்கள். உயிர்த்தெழுந்த

இயேசு தன்னுடைய சீஷர்களிடம் பேசிய முதல் வார்த்தை "உங்களுக்குச் சமாதானம்" (யோவான் 20:19) என்பதுதான். ஆவியின் கனிகளில் சமாதானமும் ஒன்று (கலா 5:22). இந்த சமாதானம் தற்காலிகமானதல்ல. இது சந்தர்ப்ப சூழ்நிலையைச் சார்ந்ததல்ல. இதைக் குலைக்கவோ அழிக்கவோ யாராலும் முடியாது. நாம் கிறிஸ்துவின் சிநேகிதர் என்பதை நம்புங்கள் (யோவான் 15:15).

அவர்மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலைகொண்டிருந்து, தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். (ரோமர் 5:2)

நீதிமானாக்கப்பட்டவர்கள் பெறக்கூடிய இரண்டாவது ஆசீர்வாதம் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம் என்பதை பவுல் இந்த வசனத்தில் சுட்டிக்காட்டுகிறார். கிறிஸ்து மூலமாக கிருபையைப் பெற்றுக்கொள்கிறோம் என்பது மட்டுமல்ல, கிருபைக்குள் பிரவேசிக்கும் வாசலாகவும் அவர் இருக்கிறார் (யோவான் 10:9). "அவர் மூலமாக" அதாவது கிறிஸ்துவின் பாடு மரணத்தினாலும், உயிர்த்தெழுந்தவராய் பிதாவின் வலதுபாரிசத்தில் இருந்து பரிந்துபேசுவதினாலும், தேவனோடு ஒப்புரவானதின் மூலமாகவே இந்த சிலாக்கியம் நம்முடையதாகிறது. "தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே" (1 தீமோ 2:5) என்று வாசிக்கிறோம். எனவே பவுல் அறிவிக்கும் எந்தவொரு ஆசீர்வாதமும் கிறிஸ்துவை சொந்தமாக்கிக்கொள்ளாத ஒரு மனிதனுக்கு சொந்தமாகாது.

கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம் இப்போது உண்டாயிருக்கிறது என்று பவுல் சொல்லும்போது, நாம் நீதிமானாக்கப்படுவதற்கு முன்பு இந்த சிலாக்கியம் நமக்கு இல்லை என்று பார்க்கிறோம். 'சிலாக்கியம்' என்பதற்கு பயன்படுத்தப்படும் 'access' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இன்னும் இரண்டு இடங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நீதிமானாக்கப்பட்டவர்கள் தேவனுடைய குடும்பத்தார் என்பதினால் எந்த நேரத்திலும் அவரைக் கிட்டிச்சேரமுடியும். "ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர்மூலமாய்ப் பெற்றிருக்கிறோம்" (எபே 2:18). "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" (எபே 3:12). தேவ பிரசன்னத்துக்குள், அவருடைய கிருபாசனத்துக்கு முன்சென்று அவரோடு ஐக்கியம் கொள்ளும் மேன்மையைப் பெறுபவர்களையே இந்த வசனம் குறிப்பிடுகிறது. இயேசுகிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் இருந்தவராய் நம்மை அவருடைய ஊழியக்காரர்களாக அல்ல, நண்பர்களாக அல்ல,

தன்னுடைய சொந்த சகோதரர்களாக பிதாவிடம் அறிமுகப்படுத்துவதின் மூலமாகவே இது சாத்தியமாகிறது.

கிருபையில் பிரவேசித்த நாம் கிருபையில் நிலை கொண்டிருக்கிறோம் என்கிறார் பவுல். ஏற்றுக்கொள்ளப்படுவதற்கும் கிருபை, கிட்டிச் சேர்தலுக்கும் கிருபை. தகுதியில்லாத மனிதர்களுக்கு, தண்டனைக்கு மட்டுமே பாத்திரராக தன் சமுகத்தில் நிற்பவர்களுக்கு, கிறிஸ்துவின் அறிமுகத்தினால் கிறிஸ்துவுக்குள் இரக்கம் கிடைக்கிறது என்பது மட்டுமல்ல, அந்த இரக்கத்தில் நிலைத்திருக்கும் சிலாக்கியமும் கிடைக்கிறது. **கிருபைக்குள் பிரவேசித்த ஒரு மனிதன் கிருபையைவிட்டு வெளியே வருவதில்லை. வரவும் முடியாது.** ஏனென்றால் அவன் தேவனுடைய குடும்பத்தில் முழு அங்கத்தினன் ஆகிவிடுகிறான். கிருபைக்குள் பிரவேசிப்பவர்கள் கிறிஸ்துவின் நீதியை விசுவாசித்தவர்களாய்ப் பிரவேசிக்கிறார்கள். அந்த விசுவாசத்தினால் நிலைநிற்கிறார்கள் (2 கொரி 1:24). எனவே நிச்சயத்தோடும், நம்பிக்கையோடும் தேவனுடைய கிருபாசனத்தைக் கிட்டிச்சேர நமக்கு அதிகாரமும் உண்டு, உரிமையும் உண்டு. ஆசிரியரின் "கிருபையின் மேல் கிருபை" என்ற புத்தகத்தில் கிருபையின் உபதேசம் விளக்கப்பட்டிருக்கிறது.

மூன்றாவதாக, நீதிமானாக்கப்பட்டவர்கள் தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையில் மேன்மைபாராட்டுவார்கள் என்கிறார் பவுல். "தேவனுடைய மகிமையை நீதிமானாக்கப்பட்டவர்கள் பங்கிட்டுக்கொள்வதினால் அதைக்குறித்த நம்பிக்கையில் மகிழ்ச்சியடைவார்கள்" என்று ஒரு மொழிபெயர்ப்பு சொல்கிறது. மேன்மை பாராட்டுகிற ஒரு மனிதன், தான் பெற்றுக்கொண்ட அல்லது சாதித்த ஒரு காரியத்தைக் குறித்து பெருமைபாராட்டுகிறவனாகவும், அதினிமித்தம் தன்னைத்தானே பாராட்டுகிறவனாயும் இருப்பான். தேவ மகிமையை அடைவோம் என்கிற அசைக்கமுடியாத நம்பிக்கையை உடையவனால்தான் இதைச் செய்யமுடியும். தேவமகிமையைப் பெறுவதைத்தவிர வேறொரு மேலான ஆசீர்வாதம் இருக்கமுடியாது. மகிமை என்ற வார்த்தை இரட்சிக்கப்பட்டவர்கள் மீட்பின் முழுமையான சிலாக்கியங்களை சுதந்தரிக்கும் போது பெற்றுக்கொள்ளும் கனத்தையும், மேன்மையையும் உள்ளடக்கியதாக எடுத்துக்கொள்ளலாம். ரோமர் 2:7, 8:18,30; 1 கொரி 15:43; 2 கொரி 4:17; கொலோ 1:27, 3:4 வாசித்துப்பாருங்கள். அதன் விளைவாக "அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்" (1 யோவான் 3:2) என்கிறார் யோவான். நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதனை பிதாவாகிய தேவன் கிறிஸ்துவின் மகிமையை உடையவனாகவே பார்க்கிறார்.

நீதிமானாக்கப்பட்டவர்கள் நிச்சயமாக தேவனுடைய மகிமையை தரிசிக்கிறவர்களாக இருப்பார்கள். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத் 5:8) என்று இயேசு சொன்னார் என்பது மட்டுமல்ல, பிதா அவருக்குக் கொடுத்த மகிமையை தன்னுடையவர்கள் பார்க்கவேண்டும் என்று ஜெபம் பண்ணுகிறார் (யோவான் 17:24). கல்லெறிந்து கொல்லப்படுமுன் ஸ்தேவான் தேவனுடைய மகிமையைக் கண்டார் என்று அப் 7:55ல் வாசிக்கிறோம். மறுரூபமலையில் பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரும் கிறிஸ்துவின் மகிமையைக் கண்டார்கள் (மத் 17:2, 2 பேதுரு 1:16).

தேவனுடைய மகிமையை பார்ப்பது மட்டுமல்ல, அதை நீதிமானாக்கப்பட்டவர்கள் தங்களுக்கென்று பெற்றுக்கொள்வார்கள். அதாவது நம்மில், நம்மூலமாக தேவமகிமை வெளிப்படும் என்கிறார் பவுல். **பாவத்தின் விளைவாக மனிதர்கள் தேவமகிமையற்றவர்களாகிறார்கள் (ரோமர் 3:23) என்பது உண்மையானால், நீதிமானாக்கப்படும்போது அதை நிச்சயமாக மீண்டும் பெற்றுக்கொண்டே ஆகவேண்டும்.** அவருக்கு ஒப்பாயிருக்கும் மகிமையை நாம் பெறவிருக்கிறோம் (1 யோவான் 3:2) என்று பார்த்தோம். இந்த நம்பிக்கையில்தான் பவுல் சொல்லுகிறார், "இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:18). கிறிஸ்துவின் இரகசிய வருகையில் நம்முடைய சரீரம் மறுரூபமடையும்போது தேவமகிமை நம்மில் உண்டாயிருக்கும் என்று எதிர்பார்க்கலாம். "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ 3:4) என்கிறார் பவுல். 2 கொரி 3:18ல் சொல்கிறார்: "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்". ரோமர் 2:7; 8:18,30; 1 கொரி 15:51;52, கொலோ 1:27, 2 தீமோ 2:10, ஏசாயா 60:19,20 வாசித்துப்பாருங்கள்.

இந்த அதிகாரத்தின் முதல் இரண்டு வசனங்களில் இரட்சிப்பு கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலகட்டங்களையும் உள்ளடக்கியது என்பதை உறுதிப்படுத்துகிறோம். நாம் இரட்சிக்கப்பட்டோம், இரட்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இரட்சிக்கப்படுவோம். அல்லேலூயா !

கடந்தகாலம்	நீதிமானாக்கப்பட்டபடியால் - வசனம் 1
நிகழ்காலம்	சமாதானம் பெற்றிருக்கிறோம் - வசனம் 1
எதிர்காலம்	தேவமகிமையை அடைவோம் - வசனம் 2

அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, (ரோமர் 5:3)

"அதுமாத்திரமல்ல" என்று இந்த வசனம் துவங்குகிறது. ரோமர் 5:11, 8:23, 9:10 ஆகிய இடங்களிலும் இந்த வார்த்தை காணப்படுகிறது. ஏற்கனவே சொல்லப்பட்ட மூன்று ஆசீர்வாதங்களை மட்டுமல்ல, இந்த நான்காவது மேன்மையையும் தேவனால் நீதிமானாக்கப்பட்டவர்கள் சுதந்தரிக்கிறார்கள் என்கிறார் பவுல். 3,4 வசனங்களில் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கும் உபத்திரவங்கள்கூட ஆசீர்வாதமானவைதான் என்கிறார். ஏனென்றால் பொறுமை, பரீட்சை, நம்பிக்கை ஆகிய நற்குணங்களை உபத்திரவங்கள் மூலமாகவே நம்மில் உருவாக்க சித்தங்கொண்டிருக்கிறார்.

தேவ மகிமையை அடைவோம் என்ற நம்பிக்கையை உடைய ஒரு கிறிஸ்தவன் தன் வாழ்க்கையில் எல்லாமே சாதகமாக, அனுகூலமாகத்தான் நடக்கும் என்று எதிர்பார்ப்பானேயானால் நிச்சயமாக ஏமாற்றமடைவான். "மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்" (யோபு 5:7) என்று வாசிக்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கை செழிப்பானதாகத்தான் இருக்கும் என்ற உபதேசம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு நம்முடைய ஆவிக்குரிய சபைகளிலும் இந்த நாட்களில் போதிக்கப்பட்டு வருகின்றன. "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவான் 16:33) என்றுதான் இயேசு சொல்லியிருக்கிறார் - செழிப்பு உண்டு என்று அல்ல. "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" (அப் 14:22) என்றுதான் பவுலும்; பர்னபாவும் அந்தியோகியாவில் பிரசங்கித்தார்கள். தன்னுடைய ஊழிய நாட்களில் மிகப்பெரிய உபத்திரவங்களைச் சந்தித்த ஒரு மனிதன் அப்போஸ்தலனாகிய பவுல் (2 கொரி 11:24-29; 12:9,10). ஆனாலும் பவுலைவிட மகத்துவமான ஊழியத்தை எந்த ஒரு ஊழியக்காரரும் செய்ததில்லை. இன்று பல ஊழியக்காரர்கள் அளவுக்கு மிஞ்சி செழிப்பாக

இருப்பதினால் இந்த செழிப்பின் உபதேசத்தை மக்கள் நம்ப ஆரம்பித்திருக்கிறார்கள்.

உபத்திரவம் என்ற வார்த்தை பாடுகள், கஷ்டங்கள், ஒடுக்கங்கள், நெருக்கங்கள், தட்டுப்பாடுகள், போராட்டங்கள், மனஅழுத்தங்கள், தோல்விகள் ஆகிய சகலவிதமான கடினமான அனுபவங்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். கால்வின் சொல்லுகிறபடி உலகத்து மனிதர்கள் உபத்திரவத்தைச் சந்திக்கும்போது முறுமுறுப்பார்கள். ஆனால் தேவனுடைய பிள்ளைகளுக்கோ உபத்திரவமும் ஆசீர்வாதமாகவே அமைகிறது. சுவிசேஷத்தினிமித்தம் உபத்திரவங்களைச் சந்திப்பது ஒரு மனிதனுக்கு தேவன் வழங்கும் சிலாக்கியமாகும். மலைப்பிரசங்கத்தில் அவர் சொல்லியிருக்கிறார், "நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாகச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே" (மத் 5:10-12). இன்னும் அப் 5:41, 2 கொரி 4:17, 1 தெச 3:3 வாசித்துப்பாருங்கள்.

உபத்திரவங்கள் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் மூன்று ஆசீர்வாதங்களை இந்த வசனம் அறிவிக்கின்றது:

பொறுமை - உபத்திரவங்களே நம்மில் பொறுமையை உருவாக்குகிறது.

பரீட்சை - உபத்திரவ அனுபவங்கள் நம்மை பலமுள்ளவர்களாக்குகிறது.

நம்பிக்கை - எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையை உருவாக்குகிறது.

முதலாவதாக உபத்திரவங்கள் எவ்வாறு பொறுமையை உண்டாக்குகிறது என்பதை அறிந்துகொள்வோம். யாக்கோபு சொல்கிறார்: "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" (1:2,3). உலகத்து மனிதர்கள் உபத்திரவத்தைச் சந்திக்கும்போது அதினிமித்தம் எரிச்சலடைகிறார்கள், முணுமுணுக்கிறார்கள், சமாதானத்தை இழந்துபோகிறார்கள். நீதிமானாக்கப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கையில் உபத்திரவத்தைச் சந்திக்கும்போது விரக்தியடைவதில்லை. இன்னும் அதிகமாக கிறிஸ்துவைப்

பற்றிக்கொள்வதின் அவசியத்தை உணர்கிறார்கள். அவர்கள் சந்திக்கும் பாடுகள் தேவனோடு ஜெபத்தின் மூலமாக அவர்களை இன்னும் கூடுதலாக ஐக்கியம் கொள்ளச்செய்கிறது.

மேலும் அவர்கள் சந்திக்கும் உபத்திரவங்கள் மூலமாகவே தாங்கள் யார் என்பதைக் குறித்தும், தங்கள் ஆவிக்குரிய நிலை உண்மையில் என்ன என்பதைக் குறித்தும் அறிந்துகொள்கிறார்கள். இவ்வாறு தங்களையே ஆராய்ந்துகொள்ள அவர்களுக்குத் தருணம் உண்டாவதினால் அவர்களில் பொறுமை உருவாகிறது. இதன் விளைவாக அவர்களுடைய பெலவீனம் என்ன என்பதை அறிந்துகொண்டவர்களாய் தேவனையே சகலத்துக்கும் சார்ந்துகொண்டு, அவர் தரும் விடுதலைக்காகக் காத்திருப்பதைத்தவிர வேறுவழி இல்லை என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளச் செய்கிறது. எபிரெயர் 12:6 வாசித்துப்பாருங்கள்.

இரண்டாவதாக உபத்திரவம் பரீட்சையை (experience =அனுபவம்) உருவாக்குவதாக பவுல் சொல்லுகிறார். பரீட்சிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட தன்மையை உபத்திரவம் மூலமே நாம் பெற்றுக்கொள்கிறோம். "சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்" (யாக் 1:12). பேதுரு சொல்லுகிறார், "அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்" (1 பேதுரு 1:7). தேவன் நம்மை சோதிக்கிறார் என்பதிலிருந்தே நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பது நிரூபணமாகிறது என்பதை எபிரெயர் 12:5-11 வாசித்து தெரிந்துகொள்ளுங்கள். "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ" (வசனம் 7).

இவ்விதமாக உபத்திரவங்கள் தேவன் நம்மேல் வைத்திருக்கும் அன்பை பரீட்சித்து உறுதிப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல, நாம் தேவன்மேல் எவ்வளவு அன்புள்ளவர்களாயிருக்கிறோம் என்பதையும் பரீட்சிக்கிறது. "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்று அறிக்கையிடக் கூடியவன்தான் உண்மையான கிறிஸ்தவன். நம்மை உருக்குகிறார், புடமிடுகிறார் என்றால் அதின் நோக்கம் நம்மை அழிப்பது அல்ல. "வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என்

நாமத்தைத் தொழுது கொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன்" (சக 13:9) என்கிறார் தேவன்.

மூன்றாவதாக உபத்திரவத்தினால் உண்டாகும் பரீட்சை இவ்விதமாக தேவன்மேல் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை வளர்ப்பிக்கிறது என்கிறார் பவுல். கிறிஸ்தவ வாழ்க்கை நம்பிக்கையில் துவங்கி நம்பிக்கையில் நிறைவடைகிறது. **நம் வாழ்க்கையில் எல்லாமே நன்மையாக நடந்துகொண்டிருக்கும்போது நாம் தேவன்மேல் நம்பிக்கையுடையவர்களாயிருப்பது ஒரு மேன்மையான காரியம் அல்ல.** அந்த நம்பிக்கையை நாம் சந்திக்கும் உபத்திரவங்கள் சிதறடிக்க முயற்சி செய்யும் வேளையிலும், நம் தேவன் நம்மை உபத்திரவங்கள் மூலம் சிட்சிக்கிறார், நாம் அவருடைய பிள்ளைகள் என்பதினால் அப்படிச் செய்கிறார் என்று அறிக்கையிடுவோமானால் நம்முடைய நம்பிக்கை பூரணமடைகிறது. "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:18) என்பதே நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை.

வேதம் சொல்கிறது: "அவர் உட்கார்ந்து, வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார்; அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும், அவர்களைப் பொன்னைப் போலவும் வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" (மல் 3:3). **நம்மை இரட்சித்ததோடு தேவன் தன்னுடைய கிரியையை நிறுத்திக்கொள்ளவில்லை. தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படியாக நம்மை வனைந்து கொண்டிருக்கிறார்** (ரோமர் 8:29). நாம் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக வேண்டியதிருக்கிறது (ரோமர் 8:17).

உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:4)

2-வது வசனத்தில் நம்பிக்கையைக் குறித்து மேன்மை பாராட்டிய பவுல் இங்கு உபத்திரவங்களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறார். "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதுமில்லை (2 கொரி 4:8,9). உபத்திரவங்கள் மன வேதனையையும், நெருக்கத்தையும், பயத்தையும், சோர்வையும் உலகத்தாருக்குக் கொடுக்கலாம். ஆனாலும் தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்களுக்கோ, அதே உபத்திரவங்கள்

மூன்று விதமான நற்குணங்களை உருவாக்குவதினால் அவற்றைக் குறித்து மகிழ்ச்சியடைவதாக பவுல் அறிவிக்கிறார். எனவே உபத்திரவங்களை பாவத்தினிமித்தம் தேவன் வழங்கும் தண்டனையாக மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடாது.

சங்கீதக்காரன் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள்: "நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன் ..... நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்கிறேன்" (சங் 119:67,71), தேவன் சொல்லியிருக்கிறார்: "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்" (வெளி 3:19). ரோமர் 8:35-39, 2 கொரி 4:9-13, 2 கொரி 1:4-10; 11:23-30; 12:7-10, கலா 6:7, 2 தீமோ 3:11, 12, 1 பேதுரு 1:6,7 வாசித்துப்பாருங்கள்.

மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)

மூன்று காரியங்களை இந்த வேதவசனம் அறிவிக்கிறது.

1) எல்லா விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கிறார்கள்.

2) அதன் விளைவாக விசுவாசிகளின் இருதயங்களில் தேவஅன்பு ஊற்றப்பட்டிருக்கிறது.

3) அந்த அன்பு ஒருபோதும் நம்மை ஏமாற்றாது.

தேவனால் நீதிமானாக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளும் ஐந்தாவது ஆசீர்வாதம் அவர்களின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளும் தேவஅன்பு. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து ரோமர் நிருபத்தில் முதல்முறையாக இந்த வசனம்தான் பேசுகிறது. அவருடைய செயலாற்றல் ரோமர் 8-வது அதிகாரத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. உபத்திரவங்கள் நம்மை நம்பிக்கைக்குள் வழிநடத்துகிறது என்று 3-வது வசனத்தில் அறிவித்த பவுல் அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது என்கிறார். பாவம்தான் ஒரு மனிதனில் வெட்கத்தை உண்டாக்கும் (ஆதி 3:8). "வெட்கப்படுத்தாது" என்று சொல்லும்போது அது குழப்பமடையச் செய்யாது, ஏமாற்றத்துக்குள்ளாக்காது என்று பொருள்கொள்ளலாம்.

ஒரு காலத்தில் நாம் நம்பிக்கையில்லாதவர்களாயும் (எபே 2:12), நம்பிக்கையற்றவர்களாயும் (1 தெச 4:13) இருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் நீதிமானாக்கப்பட்டபின் நம்முடைய நம்பிக்கை ஒருநாளும் தோல்வியடைவதில்லை. "விசுவாசிக்கிறவன் பதறான்" (ஏசாயா 28:16) என்று வாசிக்கிறோம். தாவீது சொல்லுகிறார்: "நம்பின அவர்களை நீர் விடுவித்தீர்; உம்மை நோக்கிக் கூப்பிட்டுத் தப்பினார்கள்; உம்மை நம்பி வெட்கப்பட்டுப்போகாதிருந்தார்கள்" (சங் 22:4,5). ஆனாலும் ஆவியானவர் நமக்கு அருளப்பட்டார். "அருளப்பட்டார்" என்று சொல்லும்போது நம்முடைய தகுதியின் அடிப்படையில் நாம் அவரைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாகிறது.

தான் கொண்டிருந்த நம்பிக்கையை இழக்கும்போதுதான் மனிதன் வெட்கமடையும் சூழ்நிலை உண்டாகிறது. ஆனால் நாம் ஒருபோதும் நம்பிக்கையை இழக்கப்போவதில்லை என்கிறார் பவுல். ஏனென்றால் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவஅன்பு நம் இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ஒருவன் தேவனுடைய அன்பைப் பெற்றிருக்கிறான் என்பதைவிட மேலான ஆசீர்வாதம் இருக்கமுடியாது.

பரிசுத்த ஆவியானவர் நம் ஒவ்வொருவருக்கும் அருளப்பட்டிருக்கிறார். **ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளாத ஒருவன் கிறிஸ்தவனாயிருக்க முடியாது.** நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறவர் நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரே. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" (ரோமர் 8:16). ஆவியானவர் நம் இருதயங்களில் தேவஅன்பை ஊற்றியிருப்பதாக பவுல் குறிப்பிடுகிறார். இருதயம் என்ற வார்த்தை ஒரு மனிதனுடைய உள்ளான ஆள்தத்துவத்தைக் குறிப்பிடுகிறபடியால் அவனுடைய அறிவு, சிந்தை, உணர்ச்சிகள், செயல்திறன்கள், எதிர்பார்ப்பு எல்லாவற்றையும் தேவஅன்பு ஆட்கொள்ளுகிறது என்று எடுத்துக்கொள்ளவேண்டும். தேவனை நேசிக்க ஒரு கிறிஸ்தவன் எந்த முயற்சியும் எடுக்கத்தேவையில்லை என்பது தெளிவாகிறது.

தேவஅன்பு அரைகுறையாக அல்ல, சொட்டு சொட்டாக அல்ல, பரிபூரணமாக, தேவைக்கும் அதிகமான அளவில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையே "ஊற்றப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தை குறிப்பிடுகிறது. பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள் ஒருபோதும் சிக்கனமாக இருப்பதில்லை. "கடைசி நாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என்

ஆவியை ஊற்றுவேன்" (அப் 2:17) என்று தேவன் யோவேலிடம் பேசுகிறார். "பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டது" (அப் 10:46) என்றும் வாசிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் ஒரு மனிதன் நிறைவான சம்பூரணமான ஆசீர்வாதங்களையே மட்டுமே பெற்றுக்கொள்கிறான்.

"தேவஅன்பு" என்ற வார்த்தை மூன்று காரியங்களைக் குறிப்பிடுவதாக வேத வசனங்களின் ஆதாரங்களின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளலாம்.

1) தேவன் மனித இனத்தின்மேல் பாராட்டும் அன்பு (யோவான் 3:16 ரோமர் 5:6, 8:39, etc). இந்த வசனத்தில் இந்த அன்புதான் குறிப்பிடப்படுகிறது.

2) மனிதன் தேவனிடத்தில் காட்டும் அன்பு (லூக்கா 11:42, யோவான் 5:42, உபா 6:5; 7:9; 10:12; 11:1,13,22; 19:9; 30:6).

3) தேவ அன்பும் மனித அன்பும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவது (1 யோவான் 4:19).

இந்த அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களில் திருத்துவத்தின் மூன்று நபர்களும் நடப்பிக்கும் மூன்று முக்கியமான செயல்பாடுகளை பவுல் சுட்டிக் காட்டுகிறார். மனிதனுடைய இரட்சிப்பைப் பொறுத்தவரையில் சகல காரியங்களையும் செய்துமுடிப்பவர் தேவனே.

1) பிதா ஒருவனை நீதிமானாக்குகிறார் (வசனம் 1).

2) இயேசுகிறிஸ்து சமாதானத்தைத் தருகிறார் (வசனம் 1).

3) பரிசுத்த ஆவியானவர் தேவஅன்பை ஊற்றுகிறார் (வசனம் 5).

முதல் இரண்டு வசனங்களில் விசுவாசத்தை மேன்மைப்படுத்திய பவுல், 2,3 வசனங்களில் நம்பிக்கையைக் குறித்தும், 5வது வசனத்தில் அன்பைக் குறித்தும் பேசுவதைக் கவனியுங்கள். இவ்வண்ணமாகவே 1 கொரி 13:13, 2 தெச 1:3 ஆகிய வசனங்களிலும் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவை ஒன்றோடொன்று இணைந்து சொல்லப்பட்டிருக்கிறது. "விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது" (1 கொரி 13:13). இந்த மூன்றையும் உடையவர்களே கிறிஸ்தவர்கள்.

அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். (ரோமர் 5:6)

பாவம் நிறைந்த மனித இனத்தின்மேல் தேவன் பாராட்டும் அன்பு இந்த வேதபகுதியில் (6-11) விளக்கப்பட்டிருக்கிறது. ஒரு மனிதனை தேவன் நீதிமானாக்குமுன் எப்படிப்பட்டவனாக இருந்தான் என்பதையும் பவுல் இதேபகுதியில் அறிவிக்கிறார்.

1) பெலனற்றவர்கள் (without strength-வசனம் 6)

2) அக்கிரமக்காரர்கள் (ungodly-வசனம் 6)

3) பாவிகள் (sinners-வசனம் 8)

4) தேவனுக்குச் சத்துருக்கள் (enemies-வசனம் 10)

மேற்கண்டபடி பரிதாபத்துக்குரிய நிலையில் இருந்த மனிதர்களை தேவன் நீதிமான்களாக்கினார் என்பது மட்டுமல்ல, அதில் நாம் நிலைத்திருக்கும்படியாகவும் செய்கிறார் என்பதை இந்த வேதபகுதி உறுதிப்படுத்துகிறது. **இரட்சிப்பின் ஆரம்ப கிரியையை நடப்பித்தபின் தேவன் நம்மை அப்படியே விட்டுவிடுவாரானால் எந்த ஒரு மனிதனானாலும் தான் பரலோகத்துக்குப் போவோம் என்ற நிச்சயத்தோடு இருக்கமுடியாது.** நீதிமானாக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு கீழ்க்கண்ட இரண்டு காரியங்களில் அடங்கி இருக்கிறது.

1) கிறிஸ்துவின் சிலுவை மரணம் (வசனம் 6-8).

2) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (வசனம் 9-11).

நாம் தியானிக்கும் ரோமர் 5:6 வேதத்தின் மிக முக்கியமான வசனங்களில் ஒன்று. தேவன் பாவமனிதன்மேல் பாராட்டும் அன்பின் மகத்துவம் இதைவிட வெளிப்படையான முறையில் வேறு எந்த வசனத்திலும் அறிவிக்கப்படவில்லை என்றுகூட சொல்லலாம். தேவன் எந்த அளவு மனித இனத்தை நேசிக்கிறார் (யோவான் 3:16) என்பதை நாம் அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டும் என்பதற்காக மீண்டும் மீண்டும் அதைக்குறித்து பவுல் பேசுவதைப் பார்க்கிறோம். **நம்முடைய இரட்சிப்பும், இரட்சிப்பைக் குறித்து நாம் பெற்றிருக்கும் நிச்சயமும் நாம் தேவன்மேல் செலுத்தும் அன்பை அல்ல, தேவன் நம்மேல் பாராட்டும் அன்பை பொறுத்ததாக இருக்கிறது.**

நம்மில்தானே நாம் எந்த பெலனும் இல்லாதவர்கள் என்பதை

தேவன் அறிவார். நம்மை இரட்சிக்க நம்மிடம் பெலன் இல்லை. மோசே சொல்லுகிறபடி: "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்த்து, அவர்கள் பெலன் போயிற்றென்றும், அடைக்கப்பட்டவர்களாவது, விடுதலை பெற்றவர்களாவது ஒருவரும் இல்லையென்றும் காணும்போது, தம்முடைய ஊழியக்காரர்மேல் பரிதாபப்படுவார்" (உபா 32:36). "பெலனற்றவர்கள்" என்பதற்குப் பயன்படுத்தப்படும் வார்த்தை வியாதியஸ்தர்களையும் (மத் 25:39), பிணியாளிகளையும் (லூக்கா 10:9, அப் 4:9; 5:15) குறிப்பிடும் என்றாலும், ஆவிக்குரிய பெலவீனத்தையும் இது குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். தன்னை நீதிமானாக்க அவனால் முடியாது. தேவ கோபாக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ள அவனால் முடியாது. தேவனை சந்தோஷிப்பிக்க அவனால் முடியாது, **தன்னை பெலனுள்ளவனாகக் கருதும் ஒரு மனிதன் ஒரு நாளும் இரட்சிக்கப்படுவதில்லை.**

மனிதன் எவ்வளவு பெலவீனன் என்றால் வேத வசனங்கள் சொல்லுகிறபடி :

1) அவனால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமுடியாது. (யோவான் 3:3)

2) கிறிஸ்துவின் உபதேசத்தைக் கேட்கமுடியாது. (யோவான் 8:43)

3) பரிசுத்த ஆவியானவரைக் காணவும், அறியவும் முடியாது. (யோவான் 14:16,17)

4) நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியமுடியாது. (ரோமர் 8:7,8)

5) தேவனுக்குப் பிரியமாயிருக்கமுடியாது. (1 கொரி 2:14)

6) ஆவிக்குரியவைகளை அறிந்துகொள்ளமுடியாது (1 கொரி 2:14)

7) பாவம் செய்யாமல் ஓய்ந்திருக்கமுடியாது. (2 பேதுரு 2:14)

மனிதனுடைய பெலனற்ற நிலையிலும் முன்குறித்த நேரத்தில் அவனுக்காக, அவன் சார்பில் கிறிஸ்து மரித்தார். அவரது மரணம் நம்முடைய ஜீவனுக்கு ஆதாரமாய் இருக்கிறது. உலகத் தோற்றத்துக்கு முன்பாகவே கிறிஸ்துவின் பாடுமரணம் முன்குறிக்கப்பட்டிருப்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. **மனிதன் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பே, உலகில் பாவம் பிரவேசிக்குமுன்பே பாவநிவாரணபலி தீர்மானிக்கப்பட்டாயிற்று.** அவருடைய தீர்மானம் ஒருபோதும் மாறுவதில்லை. "காலம்

நிறைவேறினபோது" (கலா 4:5) தம்முடைய குமாரனை தேவன் பூமிக்கு அனுப்பினார். அதனால்தான் கிறிஸ்து "உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" (வெளி 13:5) என்று குறிப்பிடப்படுகிறார். உலகத் தோற்றத்துக்கு முன்பே நாம் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் (எபே 1:4). "தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1 யோவான் 4:9). அப் 2:22, 23, 1 பேதுரு 1:18-20, எபி 9:24-26 வாசித்துப்பாருங்கள்.

பெலனற்றவர்களாக மட்டும் நாம் இருக்கவில்லை, அக்கிரமக்காரர்களாகவும் இருந்தோம் என்கிறார் பவுல். தேவனுடைய சித்தத்தை நன்றாக அறிந்தும் அதற்கு நேர் விரோதமாக செயல்படுகிறவர்களே அக்கிரமக்காரர். இதை 10-வது வசனத்தில் நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருந்தோம் என்று பவுல் குறிப்பிடுகிறார். தேவனைக் குறித்தும் அவருடைய பிரமாணங்களைக் குறித்தும் பயமற்றவர்களாக இருந்தோம். தேவனுக்கு விரோதமான பகை (ரோமர் 8:7) என்று அழைக்கப்படும் மாம்சசிந்தை உடையவர்களாக இருந்தோம். எபேசியர் 2:12ன்படி கிறிஸ்துவைச் சேராதவர்களாக, இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களாக, வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியராக, நம்பிக்கையில்லாதவர்களாக, தேவனற்றவர்களாக இருந்தோம்.

இன்று நீதிமான்களாக்கப்பட்ட ஒவ்வொருவருடைய நிலையும் இப்படியாகத்தான் இருந்தது. நீதிமான்களாக்கப்படாத மற்றவர்களும் அக்கிரமக்காரர்களாகவே தங்கள் அக்கிரமங்களில் நிலைத்திருக்கிறார்கள். உலகில் அவர்கள் நல்லவர்களாகக் கருதப்படலாம். பல நற்கிரியைகளைச் செய்யலாம். ஜெபம் பண்ணலாம். தான தருமங்கள் செய்யலாம். கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர்கள் தேவனுடைய பார்வையில் அக்கிரமக்காரர்களே.

இந்த வசனம் அறிவிக்கும் காரியங்கள்

1) நாம் பெலனற்றவர்கள், அக்கிரமக்காரர்கள்.

2) நமக்காகக் கிறிஸ்து மரிப்பதை தேவன் தீர்மானம் பண்ணினார்.

3) பிதா திட்டமிட்ட நேரத்தில் கிறிஸ்து மரித்தார்.

நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணிவான். (ரோமர் 5:7)

நீதிமான் யார், நல்லவன் யார் என்பதை முதலாவதாக அறிந்துகொள்ளவேண்டும். உபாகமம் 6:25ன் படி நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளின்படி செய்கிறவன் நீதிமான். இவன் நீதியான கிரியைகளை நடப்பிக்கிறான். சட்டதிட்டங்களை அனுசரிக்கிறான். அவனுடைய நடத்தைகள் ஒழுங்கின்படி அமைந்திருக்கிறது. எவருக்கும் தீங்கு செய்ய முற்படமாட்டான்.

ஆனால் நல்லவன் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நீதிமானாகவும் இருக்கிறான். நீதிமானைவிட மேலானவனாகவும் இருக்கிறான். ஏனென்றால் அவன் எவருக்கும் தீங்கு செய்யாமல் இருப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல், மற்றவர்களுக்கு நன்மை செய்ய வாஞ்சிக்கிறான். முந்தினவன் நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கும் கிரியைகளைச் செய்து மனிதர்களுடைய மரியாதையைப் பெறவிரும்பும் மனிதனாக இருக்கிறான் என்றால் பிந்தினவன் அன்பின் பிரமாணத்தை நிறைவேற்றி மக்களுடைய நேசத்தை அனுபவிக்கிறவனாக இருக்கிறான்.

ஒரு உதாரணத்தின் மூலம் இதை விளங்கிக் கொள்வோம். ஒரு அலுவலகத்தில் இரண்டுபேர் வேலை செய்கிறார்கள். ஒருவன் சரியான நேரத்துக்கு வருகிறான், நியமிக்கப்பட்ட வேலையை ஒழுங்காகச் செய்கிறான். மேலதிகாரிகளுக்குக் கீழ்ப்படிகிறான் என்றாலும் வேலை நேரம் முடிந்த அடுத்த வினாடி அலுவலகத்தைவிட்டு புறப்பட்டுவிடுகிறான். தன் எஜமானனைக் குறித்தோ, அலுவலகத்தைக் குறித்தோ எந்த பாசமும் உற்சாகமும் இல்லாதிருக்கிறான். அலுவலகத்தில் திருட்டு, நெருப்பு முதலியவற்றினால் ஏதேனும் நஷ்டம் உண்டானாலும் அதைப்பற்றி கவலைப்படமாட்டான். இருந்தாலும் தன்னுடைய கீழ்ப்படிதலினிமித்தம் இவன் நீதிமான் என்றுதான் கருதப்படவேண்டும்.

பரிசேயர்கள் நியாயப்பிரமாண விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்களை நீதிமான்களாகவே கருதினார்கள். கெட்ட குமாரன் உவமையில் வரும் மூத்தகுமாரன் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்தான் என்பது உண்மைதான். ஆனால் மனந்திரும்பிய இளைய குமாரனோடு சிநேகமாயிருந்தானா? இந்த நீதிமான்களிடம் அன்பு இல்லை என்பதினால் நல்லவர்களாகக் கருதப்படமுடியாது. ஆனால் நல்லவனோ, தன்னுடைய கடமைகளை செய்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், அதைக் குறித்து மிக்க உற்சாகமுடையவனாக இருப்பான். தன்னுடைய எஜமானனின் வளர்ச்சியில் வாஞ்சையுடையவனாக இருப்பான். நியமிக்கப்பட்ட வேலையைவிட கூடுதலாக செய்ய தயங்கமாட்டான். தன்னோடு வேலை செய்பவர்களோடு ஐக்கியம் கொண்டிருப்பான். அவனுடைய கிரியைகள் அன்பை அடிப்படையாகக் கொண்டிருப்பதினால் நல்லவனாகக் கருதப்படுகிறான்.

பொதுவாக உலகில் நீதியாக நடப்பவர்களுக்காக யாரும் உயிர் தியாகம் செய்ய விரும்புவதில்லை. ஆனால் நல்லவர்களாக இருப்பவர்களுக்கு சிலர் தங்கள் ஜீவனைக் கொடுக்கவும் துணியலாம். நல்லவர்களாக கருதப்பட்ட சில அரசியல் கட்சித் தலைவர்கள் மரித்தபோது தங்கள் ஜீவனைக் கொடுத்தவர்கள் பலர் நம் தேசத்தில் உண்டு. "என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்" (ரோமர் 16:4) என்று ஆக்கில்லா, பிரிஸ்கில்லாளைக் குறித்து பவுல் பேசுகிறார். தாவீதுக்காக தன் ஜீவனைக் கொடுக்க யோனத்தான் ஆயத்தமாயிருந்தான். "தன் உயிரைச் சிநேகித்ததுபோல அவனைச் (தாவீதை) சிநேகித்தான்" (1 சாமு 20:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். *(ரோமர் 5:8)*

மனிதர்கள் மற்றவர்களுக்காக எந்த அளவுக்கு தியாகம் செய்வார்கள் என்பதை முந்தின வசனத்தில் பவுல் அறிவித்தார். அவன் எவ்வளவுதான் நீதிமானாக இருந்தாலும் சிலர் மட்டுமே அவனைக் காப்பாற்றும்படியாக தங்கள் ஜீவனைக் கொடுப்பார்கள். ஒருவன் நல்லவனாக இருந்தால் ஒருவேளை ஜீவனைக் கொடுப்பார்கள் என்று பவுல் சொல்லாமல் கொடுக்குமளவுக்கு துணிவை உடையவர்களாக இருப்பார்கள் என்கிறார். இது மனிதர்களுடைய நிலை. ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து என்ன செய்தார்? நாம் நீதிமான்களாயும் இல்லை, நல்லவர்களாயும் இல்லை. பாவிகளாக இருக்கிறோம். நாம் பாவிகளாயிருக்கையில், தேவனற்றவர்களாய் இருக்கையில், தேவகோபாக்கினைக்குப் பாத்திரராக இருக்கையில், தேவன் நமக்காக மரித்து நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார். **சுயநலமற்ற அன்பு தேவன் ஒருவரிடமிருந்துதான் வெளிப்படமுடியும்.** அதனால்தான் "கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக" (எபே 3:18,19) நாம் மாறவேண்டும் என்று பவுல் விண்ணப்பிக்கிறார்.

நீதிமானாக்கப்படும் முன்பு நம்முடைய நிலை என்ன என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். வேதம் சொல்கிறது: "நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபே 2:3). "முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும்,

வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத் தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம்" (தீத்து 3:3).

இப்படிப்பட்ட கேவலமான பாவிகளாயிருக்கும் மனிதர்களுக்காக பிதாவாகிய தேவன் தன் குமாரனை மரிக்கும்படியாக அனுப்பினார். குமாரனில் அவர் இருந்தார், மனிதர்கள் மனந்திரும்பி தன்னைத் தேடிவரட்டும் என்று காத்திருக்கவில்லை. இது தேவனுடைய அன்பை உறுதிப்படுத்தவில்லை என்றால் வேறு ஒன்றும் அவருடைய அன்பை நிரூபிக்காது. **கிறிஸ்துவின் பிறப்பும் அவருடைய கல்வாரி மரணமும் தேவ அன்பின் உன்னத வெளிப்பாடுகள்.** "அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:16). "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13).

மனிதனுடைய இரட்சிப்பு தேவனுடைய அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. நாம் பெலனற்றவர்களாக, அக்கிரமக்காரராக, பாவிகளாக இருக்கையில் அவருடைய கல்வாரி அன்பு வெளிப்பட்டு நம்மை நீதிமானாக்கியது. 1 பேதுரு 3:18 சொல்லுகிறது: "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்". "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ 1:15). "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" (மத் 9:13) என்கிறார் இயேசு. "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாயும், கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன்நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ 1:21). நாம் பாவிகள் என்பதை உணராதநிலையில் தேவனுடைய அன்பின் மேன்மையை நாம் அறிந்துகொள்ள முடியாது.

கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் மீட்பு (வசனம் 9-11)

இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்

பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர் 5:9)

இந்த அதிகாரத்தில் ஒரு பாவ மனிதன் நீதிமானாக்கப்படுவதன் பின்னணியில் செயல்படும் மூன்று முக்கியமான காரணங்களை பவுல் அறிவிக்கிறார். மூன்றும் கிறிஸ்துவோடு சம்பந்தப்பட்டது.

1) கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசம் (வசனம் 1)

2) கிறிஸ்து சிந்திய இரத்தம் (வசனம் 9)

3) கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் (வசனம் 19)

கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாகவே மனிதன் நீதிமானாக்கப்படுகிறான் என்பதை 9 முதல் 11 வரையுள்ள வேதபகுதி விளக்குகிறது. கிறிஸ்துவின் இரத்தத்தினாலே நீதிமானாக்கப் பட்டிருப்பதை இந்த வசனத்தின் முதல் பகுதி அறிவிக்கிறது. "கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார்" (ரோமர் 3:26) என்ற வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். இரத்தம் என்ற வார்த்தை கிறிஸ்துவின் பாடுமரணத்தையே அறிவிக்கிறது (லேவி 17:11, எபி 9:22).

விசுவாசத்தினாலே நாம் நீதிமானாக்கப்படுகிறோம் என்பது உண்மைதான். அதற்காக மனித இரட்சிப்புக்கு விசுவாசமே மூலகாரணமாக அமைகிறது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. விலையேறப்பெற்ற அவருடைய இரத்தத்தின்மேல் வைக்கும் விசுவாசமே நம்மை இரட்சிக்கிறது. கொலோசெயர் 1:20 சொல்லுகிறபடி "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று". "அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:14). "வெள்ளியினாலும் பொன்னினாலும் அல்ல, குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டிருக்கிறோம்" (1 பேதுரு 1:19). எனவே நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றவர்களாயிருப்போம் என்பதில் சந்தேகமே இல்லை.

குமாரனுடைய இரத்தத்தினால் நாம் நீதிமானாக்கப்பட்டவர்கள் என்பதினால் கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே (நமக்காக இரத்தம்

சிந்தினவராலே) இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே என்கிறார் பவுல். "அதிக நிச்சயமாமே" என்ற வார்த்தை 10,17 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. இரவுக்குப் பின் பகல் வருவது எவ்வளவு நிச்சயமோ, அதைப்போல் இரத்தத்தினாலே நீதிமானாக்கப்பட்டவர்கள் வரப்போகிற கோபாக்கினைக்குத் தப்பிக்கொள்ளுவது உறுதி என்ற நிச்சயத்தை பவுல் அறிவிக்கிறார். தேவன் எதையும் அறைகுறையாகச் செய்வதில்லை, இரட்சித்த அவர் நம்மை பாதிவழியில் விட்டுவிட்டுப் போகமாட்டார் என்பதை உறுதியாக நம்பலாம். **பெலனற்றவர்களாய் இருந்தபோது நம்மைத் தேடிவந்த அவர் நீதிமான்களாக்கியபின் கைவிடமாட்டார்.**

"இரட்சிப்பு" என்ற வார்த்தை நடந்து முடிந்த கடந்த கால நிகழ்ச்சியாகவும் (1 கொரி 15:2, அப் 15:11, ரோமர் 13:11, எபி 9:28), நடந்துகொண்டிருக்கும் நிகழ்கால நிகழ்ச்சியாகவும் (1 கொரி 1:18, அப் 2:47), நடக்கப்போகிற எதிர்கால நிகழ்ச்சியாகவும் (2 தீமோ 1:9, தீத்து 2:11) வேதத்தில் சொல்லப்படுகிறது. பாவத்தின் குற்ற உணர்விலிருந்து நாம் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டோம். பாவத்தின் வல்லமையிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆதாம் மூலமாக நாம் பெற்றுக்கொண்ட பாவசுபாவம் நம்மில் இருப்பதினால் இவ்வாறு அனுதினமும் நாம் இரட்சிக்கப்படுவது அவசியமாகிறது. இதுதான் பரிசுத்தமாக்கப்படும் அனுபவம் என்பதை விளக்கமாக நாம் அடுத்த அதிகாரத்திலிருந்து அறிந்துகொள்ளவிருக்கிறோம். அடுத்ததாக எதிர்காலத்தில் நாம் பெறும் இரட்சிப்பின்போதுதான் நம்முடைய பாவசரீரம் மறுரூபமடைகிறது. இதைக்குறித்துதான் "நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்" (ரோமர் 8:23) என்கிறார் பவுல். தேவனுடைய இரட்சிப்பின் கிரியை இதோடு நிறைவுபெறுகிறது.

தேவனால் நீதிமானாக்கப்பட்டவர்கள் எதிர்காலத்தில் கோபாக்கினையைச் சந்திக்கப்போவதே இல்லை என்பதை பவுல் இந்த வசனத்தில் உறுதிப்படுத்துகிறார். கிறிஸ்து "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவர்" (1 தெச 1:10) என்று அழைக்கப்படுகிறார். தேவ கோபாக்கினை என்பது நித்திய நரக வேதனையைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம் (1 தெச 5:9). பிலதெல்பியா சபையின் தூதனிடம் கிறிஸ்து சொல்லுகிறார்: "பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி 3:10).

நீதிமானாக்கப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாகிறார்கள். அவருடைய நீதியின் வஸ்திரத்தைத் தரித்தவர்களாகிறார்கள். கிறிஸ்து திட்டவட்டமாகச் சொல்லுகிறார்: "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 5:24). மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனைப் பெற்றவனாகிறான் என்ற கிறிஸ்துவின் வார்த்தை எவ்வளவு அற்புதமானது என்பதை அறிந்திருக்கிறீர்களா? கிறிஸ்து மரணத்தை மேற்கொண்டு ஜீவனை உடையவராய் இருப்பது உண்மையானால் இது நமக்கும் நடந்தே தீரும். **நம்முடைய நித்தியத்தைக்குறித்த தேவனுடைய தீர்மானத்தை எவரும் மாற்றமுடியாது.** யூதா 24,25 தயவுசெய்து வாசித்துப்பாருங்கள்.

இந்த வசனம் அறிவிக்கும் காரியம் :

1) ஒரு மனிதன் தன்னை நீதிமானாக்குகிறதில்லை. அதைச் செய்பவர் தேவனே.

2) ஒருவன் தன் வாழ்நாளில் ஒரு தடவைதான் நீதிமானாக்கப்படுகிறான்.

3) நீதிமானாக்கப்பட்டவன் தன் நீதியில் கடைசிவரை நிலைத்திருக்கிறான்.

நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே. (ரோமர் 5:10)

சத்துருக்கள் என்பது சற்று கடினமான வார்த்தைதான் (ரோமர் 8:7). நாம் தேவனுடைய பகைவர்களாக இருந்தபோது தனது குமாரனுடைய மரணத்தின் மூலமாக நம்மை தன்னுடன் ஒப்புரவாக்கி அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். அப்படியிருக்கும்போது உயிர்த்து ஜீவனோடிருக்கும் இயேசு, நமக்காக மரிக்குமளவு அன்பு கூர்ந்தவர் நம்மை இரட்சிப்பது நிச்சயம் என்கிறார் பவுல். முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட காரியத்தையே மீண்டும் பவுல் சொல்கிறார் என்றாலும், வேறு விதத்தில் அதைச் சொல்லி, இரட்சிப்பின் நிச்சயத்தை வலியுறுத்துகிறார், தேவனுடன் நாம் பெற்றுக்கொள்ளும் ஒப்புரவு தேவனால் நீதிமானாக்கப்பட்டதினால் நாம் பெறும் ஆறாவது ஆசீர்வாதம்.

இந்த வசனத்தை கீழ்க்கண்டவாறு இரண்டு பகுதிகளாகப் பிரித்து தியானிப்போம்.

1) நாம் அவருடைய விரோதிகளாக இருக்கும்போது நம்மை தேவன் தன்னுடன் ஒப்புரவாக்கிக்கொண்டார். இது அவர் ஏற்கனவே நமக்காக செய்து முடித்த மகத்துவமான காரியம்.

2) இவ்வாறு ஒப்புரவாக்கப்பட்டு அவருடைய செல்லப்பிள்ளைகளாகிவிட்ட நம்மை இரட்சிப்பது, அதாவது இரட்சிப்பில் நிலைநிறுத்துவது அவர் செய்யப்போகிற அடுத்த காரியம்.



பவுல் சொல்லுகிறார்: "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ 1:20-22). **தேவனுக்கு பகைவர்களாக இருந்தவர்கள் ஒப்புரவாக்கப்பட்டதின் மூலமாக பரிசுத்தமுள்ளவர்களாக தேவனுக்கு முன் நிறுத்தப்படுகிறார்கள்.** சங்கீதம் 85:2,3 சொல்லுகிறது: "உமது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவத்தையெல்லாம் மூடினீர். உமது உக்கிரத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, உமது கோபத்தின் எரிச்சலைவிட்டுத் திரும்பினீர்".

தேவனோடு ஒப்புரவானோம் என்று சொல்லாமல், ஒப்புரவாக்கப்பட்டோம் என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். பாவிகளான, தேவனுடைய சத்துருக்களாக இருந்த நாம், அவரோடு ஒப்புரவாக ஏதேனும் முயற்சி செய்தோமா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டும். நாம் அவரை விரோதித்துக் கொண்டிருந்த போதே, நம்மை அவர் பகைவர்களாகக் கருதவில்லை. நம்மைக்குறித்து உயர்வாக நினைக்க ஆரம்பித்தார். நம்மை நண்பர்களாகக் கருதினார். அதுமட்டுமல்ல தன்னுடைய சொந்த பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டார். அதை உறுதிப்படுத்தும்படியாக அவராகவே தன்னுடைய குமாரனை உலகத்துக்கு அனுப்பினார் (யோவான் 3:16). ஒப்புரவாக்குதலின் கிரியையை துவக்கினவர் பிதாவாகிய தேவன். "அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கினார்" (2 கொரி 5:18).

இந்த ஒப்புரவாகுதலின் மூலமாக தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள உறவில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படுகிறது. 2 கொரி 5:19-21 வாசித்துப் பாருங்கள். கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் மட்டுமே இது சாத்தியமாகிறது. தன்னுடைய குமாரனை பூமிக்கு அனுப்பினதின் விளைவாக ஒப்புரவாகுதல் நடைபெறவில்லை. அவருடைய போதனைகளினால் ஒப்புரவாகுதல் நடைபெறவில்லை. **இரட்சிக்கப்படுவது எப்படி என்பதைச் சொல்லித் தரும்படியாக கிறிஸ்து உலகத்துக்கு வரவில்லை.** தன்னுடைய மரணத்தின் மூலமாக பாவமனிதனுக்கும் தேவனுக்குமிடையே ஒப்புரவை உண்டாக்கும்படியாக வந்தார். எபேசியர் 2:16 சொல்கிறது : "பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு

ஒப்புரவாக்கினார்". மனிதன் செய்யவேண்டிய ஒரே காரியம் கல்வாரி சிலுவையில் உருவான ஒப்புரவாக்குதலை ஏற்றுக்கொள்வதுதான்.

இவ்வாறு அவருடைய மரணத்தினாலே ஒப்புரவாகுதல் உண்டாயிருக்க அவருடைய ஜீவன் நம்மை இரட்சிப்பது அதிக நிச்சயம் என்கிறார் பவுல். கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்" (யோவான் 14:19). சத்துரு-ஒப்புரவு; மரணம்-ஜீவன் என்று இரண்டு எதிர்மறையான காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுவதைக் கவனியுங்கள். "ஜீவன்" என்ற வார்த்தை கிறிஸ்து மாம்சத்தில் உயிரோடிருந்த 33½ வருடங்களைக் குறிப்பிடாமல், அவரது பாடுமரணத்துக்குப் பின் நித்திய நித்தியமாக ஜீவனோடிருக்கும் நாட்களைக் குறிப்பிடுகிறது. "அவருக்குள் ஜீவன் இருந்தது" (யோவான் 1:4) என்று வாசிக்கிறோம். அந்த ஜீவன் இப்போது நமக்குள் இருக்கிறது. அது நம்மை முற்றுமுடிய இரட்சிக்கப்போதுமானது. அவருடைய ஜீவன் கீழ்கண்ட ஆறு பகுதிகளை உள்ளடக்கியது.

1) நித்திய நித்தியமாக பிதாவோடு இருந்த ஜீவிதம் (நீதி 8:28-31).

2) ஸ்திரீயிடம் பிறந்து பூமியில் 33½ ஆண்டு கால ஜீவிதம் (கலா 4:5).

3) மரித்து, உயிர்த்தபின் ஆறுவாரங்கள் சீடர்களோடு சஞ்சரித்த ஜீவிதம்.

4) பரலோகத்தில் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் ஜீவிதம்.

5) பூமியை நியாயந்தீர்த்து ஆயிரவருட அரசாட்சியின் ஜீவிதம்.

6) சகல அதிகாரங்களையும் பிதாவிடம் ஒப்புக்கொடுத்த பின் அவருடைய ஜீவிதம் (1 கொரி 15:24).

"கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" (ரோமர் 8:34). எனவே, அவருடைய ஜீவனால் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயம். ஏனென்றால், எபிரெயர் 7:25 சொல்லுகிறபடி, "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் **அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்.**" நான் பாவியாயிருந்தேன். தேவ கிருபை என்னை

இரட்சித்திருக்கிறது. இனி பாவம் செய்து, அதை இழந்துபோவேனோ என்று பயத்தோடு இருக்கிறீர்களா? திடன் கொள்ளுங்கள். அவர் முற்றும் முடிய நம்மை இரட்சிக்க வல்லவர். யோவான் சொல்லியிருக்கிறார்: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1). தேவனுடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்ட நம்முடைய பாதுகாப்பு கிறிஸ்துவின் பரிந்துபேசுதலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. பாவம் செய்யும் அதே வேளையில் பரலோகத்தில் பரிந்துபேசுதல் நடைபெறுகிறது.

அதுவுமல்லாமல், இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:11)

மூன்று அதிகாரங்களுக்கு முன் நாம் தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்பாக குற்றவாளிகளாக நின்று கொண்டிருந்தோம் என்பதை நினைவுபடுத்திப்பாருங்கள். நமக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகளை நியாயப்பிரமாணம் கொண்டுவந்தது. நம்முடைய கிரியைகள் எதுவும் அங்கீகரிக்கப்படாத நிலையில் மரணம் என்ற ஆக்கினைத்தீர்ப்பை எதிர்பார்த்துக்கொண்டிருந்த நாம் ஐந்தாவது அதிகாரத்தில் தேவனோடு கிறிஸ்துவின் பாடுமரணத்தின் மூலமாக நீதிமானாக்கப்பட்டு தேவசமுகத்தில் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறவர்களாகக் காணப்படுகிறோம். பரிசுத்தமான தேவனுக்கும் பாவ மனிதனுக்கும் இடையே இருந்த பகை முற்றிலுமாக நீக்கப்பட்டாயிற்று. நீதிமானாக்கப்பட்டவர்கள் அனுபவிக்கும் ஏழாவது ஆசீர்வாதமாக இது சொல்லப்படுகிறது. அதையும் கிறிஸ்து மூலமாகவே பெறுகிறோம். ஏனென்றால் அவர் மூலமாகவே தேவனுடன் நட்புறவு உண்டாயிருக்கிறது. சொல்லப்போனால் சகல ஆசீர்வாதங்களும் மேன்மைகளும் கிறிஸ்து மூலமாகவே நம்மை வந்தடைகிறது.

"மேன்மை பாராட்டுகிறோம்" என்பதற்கு பயன்படுத்தப்படும் வார்த்தை மனமகிழ்ச்சியோடு இருப்பதையும், களிகூருதலையும் குறிப்பிடுகிறது. தாவீது சொல்லுகிறார்: "கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மைபாராட்டும்" (சங் 34:2). மரியாள் சொல்கிறாள்: "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது". "என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது" (லூக்கா 1:46,47). பவுல் ஆலோசனை தருகிறார்: "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலிப் 4:4).

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தேவனைப்பற்றி மேன்மைபாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். அவரைக்குறித்து மேன்மைபாராட்டாமலும், அவருக்குள் மனமகிழ்ச்சியாயிராமலும் இருப்பது என்பது பாவமாகக் கருதப்படவேண்டிய ஒன்று. தன்னுடைய கிரியைகளினால் அல்ல, கிறிஸ்துவின் கிருபையினால் மட்டுமே இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை நன்றாக உணர்ந்த எந்தவொரு மனிதனும் தேவனைக் குறித்து மேன்மை பாராட்டாமல் இருக்கமாட்டான். **தேவனை மேன்மை பாராட்டத் தவறுகிற ஒரு மனிதன் வெகுவிரைவில் முறுமுறுக்கிறவனாக மாறிவிடுவான்.**

"மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரி 1:30,31) என்கிறார் பவுல். இந்த அதிகாரத்தில் இதுவரை கிறிஸ்து மூலமாய் நாம் பெற்றுக்கொண்ட ஐந்து ஆசீர்வாதங்களை பவுல் அறிவித்திருக்கிறார்.

1) கிறிஸ்து மூலமாய் தேவனிடம் சமாதானம் பெற்றோம் (வசனம் 1)

2) கிறிஸ்து மூலமாய் கிருபைக்குள் பிரவேசிக்கிறோம் (வசனம் 2)

3) கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீதிமானாக்கப்பட்டோம் (வசனம் 9)

4) கிறிஸ்துவின் மரணத்தினால் ஒப்புரவாக்கப்பட்டோம் (வசனம் 10)

5) கிறிஸ்துவின் மூலமாய் தேவனைப்பற்றி மேன்மை பாராட்டுகிறோம். (வசனம் 11)

ஆதாமினால் மரணம், கிறிஸ்துவினால் ஜீவன் (வசனம் 12-14)

விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படும் இரட்சிப்பின் அனுபவத்தோடு நீதிமானாக்கப்படுதலைக் குறித்து ரோமர் 5-வது அதிகாரம் பேசுகிறது. முதல் 11 வசனங்களில் நீதிமானாக்கப்படும் ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும் ஏழு சிலாக்கியங்கள் என்னென்ன என்பதை பவுல் அறிவித்தார். மீதமுள்ள பத்து வசனங்களில் நான்கு சத்தியங்கள் அறிவிக்கப்படுகின்றன.

1) ஆதாமின் பாவத்தின் விளைவாக உலகமெங்கும் சகல மனிதர்களிடமும் பாவம் பரவிக்கிடக்கிறது. (வசனம் 12-14)

2) ஆனாலும் கிறிஸ்துவின் நீதியினால் உண்டான கிருபை ஆதாமின் பாவத்தினால் உண்டான வீழ்ச்சியை ஈடுசெய்யவும், அதை மேற்கொள்ளவும் போதுமானதாக இருக்கிறது. (வசனம் 15-17)

3) கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் உண்டாகும் நீதி, ஆதாமின் கீழ்ப்படியாமையினால் உண்டான ஆக்கினைத் தீர்ப்பைவிட சகலவிதத்திலும் மேன்மையானது. (வசனம் 18,19)

4) பாவம் பெருகுவதற்கு நியாயப்பிரமாணம் காரணமாக இருந்தாலும், கிறிஸ்துவினால் உண்டாகும் நீதி நம்மை நித்திய ஜீவனுக்குள் வழிநடத்த போதுமானதாய் இருக்கிறது. (வசனம் 20,21)

ஆதாம் என்ற ஒரு மனிதனின் பாவத்தினால் எல்லா மனிதர்களும் எவ்வாறு பாவிகளாவார்கள், கிறிஸ்து என்ற மனிதனின் நீதியினால் எவ்வாறு எல்லாரும் நீதிமான்களாகிறார்கள் என்று ஆச்சரியப்படவேண்டியதில்லை. "ஆதாம்" என்ற எபிரெய வார்த்தை மனித இனம் அல்லது மனிதத் தன்மை என்று பொருள்படும். ஆதாம் முதல் மனிதன் என்பது மட்டுமல்ல, முழு மனித இனமும் அவனோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆதாமுக்குள் முழு மனித இனமும் இணைக்கப்பட்டிருக்கிறதுபோல், கிறிஸ்துவுக்குள்ளும் முழு மனித இனமும் இணைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மரத்தின் அடிவேரில் நோய் உண்டானால் கிளைகளில் உள்ள எல்லா இலைகளும் பாதிப்படைகின்றன. அந்த வேர் சீர்செய்யப்படும்போது எல்லா இலைகளும் செழிப்படைகின்றன.

இந்த வேதபகுதியில் ஆதாமைக் குறித்தும், இயேசுகிறிஸ்துவைப் பற்றியும் (வசனம் 14), ஆதாமின் பாவத்தைக் குறித்தும் (வசனம் 12,15,17-19), கிறிஸ்துவின் நீதியைக் குறித்தும் (வசனம் 18) ஆதாமின் பாவத்தின் விளைவுகளான மரணம், நியாயத்தீர்ப்பு, குற்றஉணர்வு ஆகியவற்றைக் குறித்தும் (வசனம் 15-19), கிறிஸ்துவின் நீதியினால் உண்டாகும் விளைவுகளான நீதிமானாக்கப்படுதல், ஜீவன் ஆளுகையைக் குறித்தும் (வசனம் 17-19) வாசிக்கிறோம்.

முதல் மனிதனாகிய ஆதாமையும், பிந்தின ஆதாமாகிய கிறிஸ்துவையும் ஒப்பிட்டு இந்த வேதபகுதியில் பவுல்

பேசுவதைக் கவனியுங்கள்.



1 கொரி 15:45ல் கிறிஸ்து பிந்தின ஆதாம் என்றும், அழைக்கப்படுகிறார். "முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்" (வசனம் 47). இந்த இருவருமே தேவனால் மனித இனத்தின் தலைவர்களாக அல்லது பிரதிநிதிகளாக கருதப்படுகிறார்கள். **உலகில் பிறந்த மனிதர்கள் ஒவ்வொருவரும் ஆதாமுக்குள் இருக்கவேண்டும். அல்லது கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும்.** தேவனால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் முன்பு ஆதாமுக்குள் இருந்தாலும் பின்பு கிறிஸ்துவுக்குள் வந்துவிடுகிறார்கள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒவ்வொருவரும் தேவனுக்குள் இருக்கிறார்கள். ஏசாயா 53:11 சொல்கிறபடி தேவனுடைய சொந்த குடும்பத்தாராகிவிடுகிறார்கள். "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:17) என்ற உன்னதமான அனுபவத்தை உடையவர்களாகிறார்கள். கிறிஸ்துவுக்குள்ளும், தேவனுக்குள்ளும் இருக்கும் ஒரு மனிதனை எந்த சக்தியாலும் அவர்களிலிருந்து பிரிக்கமுடியாது என்று வேத வசனங்களின் அடிப்படையில் நிச்சயித்திருக்கிறோம் (ரோமர் 8:39, யோவான் 10:29).

இப்படியாக, ஒரு மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும்

வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)

பாவம் என்கிற வார்த்தை ரோமர் நிருபத்தில் முதல்முறையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரை பல்வேறு பாவங்களை பட்டியலிட்டு விளக்கமாக பேசிக்கொண்டிருந்த பவுல், இந்த வசனம் துவங்கி ஒருமையில் பாவம் என்பது பற்றி கூடுதலாக பேசத்துவங்குகிறார். மனித இனத்தின் சகல பாவங்களும் ஏதேன் தோட்டத்தில் செய்யப்பட்ட ஒரு பாவத்தில்தான் வேர் கொண்டிருக்கிறது. அவனில் அன்று உருவான பாவசுபாவம் அவனுடைய சந்ததியாரில் நிலைத்து நிற்கிறது. "தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே" அவன் குமாரனைப் பெற்றதாகச் சொல்லப்பட்டிருக்கிறது (ஆதி 5:3).

உலகத்தின் நிலை என்ன என்பதை நாம் சிந்திப்போமானால், இந்த வசனம் அறிவிக்கிறபடி கீழ்க்கண்ட மூன்று காரியங்களை உடனடியாகக் கண்டுகொள்ளலாம்.

1) ஒரு மனிதனால் உலகில் பாவம் பிரவேசித்தது.
2) பாவம் உலகமுழுவதும் காணப்படுகிறது.
3) எனவே மரணம் பூமியில் எல்லாருக்கும் பொதுவானது.

பாவத்தையும் மரணத்தையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கமுடியாது (ஆதி 2:17; 3:17-19, ரோமர் 1:32). இவ்விதமாக பாவமும் மரணமும் உலகளாவிய நிலையில் இருக்கின்றன என்றால் அதின் அடிப்படையான காரணம் என்ன? ஆதாம் என்ற ஒரு மனிதன் மூலமாகவே பாவம் உலகத்துக்குள் பிரவேசித்தது. அது உலகத்து மனிதர்கள் அத்தனைபேரையும் ஆண்டு கொண்டது. ஆதாமுக்குள் எல்லாரும் பாவம் செய்தவர்கள் ஆகிறார்கள். பாவத்தோடு மரணமும் உலகில் பிரவேசித்தது. அதன்விளைவாக மனிதர்கள் அத்தனைபேரும் மரணத்தைச் சந்திக்கிறார்கள்.

"நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4) என்று சொல்லப்பட்டாலும் **பாவம் தேவனுக்கு எதிரான ஒரு மனப்பான்மை. இந்த மனநிலையை முதல் மனிதனாகிய ஆதாமில் உருவாக்கியது சாத்தான்.** மனுக்குலத்தின் தகப்பன் என்ற முறையிலும், பூமியில் பிறக்கும் மனிதர்களின் பிரதிநிதி என்ற முறையிலும் தன் சந்ததியார் பாவத்தில் பிறக்க ஆதாம் காரணமாக இருந்தான். முதலில் பாவம் செய்தது ஏவாள்தான்.

"விலக்கப்பட்ட விருட்சத்தைக் கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி 3:6) என்று திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏவாளுக்கு முன்பே ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டிருந்தாலும் பாவம் செய்ததில் அவள் முந்திக்கொள்ளுகிறாள். "ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள்" (1 தீமோ 2:14) என்று வாசிக்கிறோம். ஏவாள் மட்டுமே பாவம் செய்திருப்பாளேயானால் அதற்கான தண்டனையை அவள் மட்டுமே பெற்றிருப்பாள், அவளுடைய சந்ததியார் அல்ல, மனித இனத்தின் பிரதிநிதி என்ற முறையிலும் ஆதி தகப்பன் என்ற முறையிலும் ஆதாம் ஏவாளின் பாவத்தில் ஒருமனப்பட்டதின் விளைவாகவே அவனுடைய சந்ததியார் பாவத்தின் அடிமைத்தனத்துக்குள் பிரவேசிக்கிறார்கள்.

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக் 18:4). "விலக்கப்பட்ட கனியை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்" (ஆதி 2:17); "நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதி 3:19) என்பது தேவகட்டளை. ஜீவனுக்கு எதிர்பதம் மரணம். இந்த வசனத்தில் மரணம் என்ற வார்த்தை சரீரமரணத்தை மட்டுமே குறிப்பிடாமல், இரண்டாவது மரணம் என்று அழைக்கப்படும் ஆவிக்குரிய மரணத்தையும் குறிப்பிடுகிறது (யோவான் 8:51,52, ரோமர் 1:32; 6:21; 7:5, 2 தீமோ 1:10, எபி 2:14, யாக் 5:20, வெளி 2:11; 20:6,21; 21:8). இது தேவனிடமிருந்து நித்திய நித்தியமாகப் பிரிக்கப்படும் பயங்கரமான அனுபவம்.

ஆதாமின் பாவம் மரணத்தை உலகத்துக்குள் கொண்டு வந்தது. முதல் மனிதனே முதல் பாவியானான். ஆதாம் பாவம் செய்வதற்கு முன் ஏதேன் தோட்டத்தின் மிருக ஜீவன்களும், அங்கிருந்த கனி மரங்களும், விருட்சங்களும், சகலவித பூண்டுகளும் கூட மரணத்தைச் சந்தித்திருக்காது. மரம், செடி, கொடிகளில் இருந்து ஒரு இலைகூட பழுத்து கீழே விழுந்திருக்காது. மிருகங்கள், பறவைகள், மீன்கள் கூட பெலவீனமடைந்து மரித்திருக்காது. ஒரு மனிதனின் ஒரே பாவம் மரணத்தைப் பூமிக்குக் கொண்டுவந்தது. ஆதாமுக்குள் எல்லாரும் பாவிகள் ஆனபடியால்தான் பிறக்கும் சிறு குழந்தைகளும் மரிக்கின்றன. ஆதாமை மேற்கொண்ட பாவம் அவனுடைய சந்ததியாரையும் மேற்கொள்கிறது. எனவே மனித இனம் மரணத்தின் அடிமைத்தனத்துக்குள் கொண்டுவரப்படுகிறது.

நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம்

எண்ணப்படமாட்டாது (ரோமர் 5:13)

மோசே மூலமாக கிட்டத்தட்ட கி.மு. 1400ல் நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது. கி.மு.2500ல் தேவன் ஆதாம் ஏவாளை சிருஷ்டித்தார் என்று வேத பண்டிதர்கள் கணித்திருக்கிறார்கள். 1 யோவான் 3:4ன் படி "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்". **ஆதாமுக்கும் மோசேக்கும் இடைப்பட்ட சுமார் 1100 ஆண்டுகால சரித்திரத்தில் உலகத்தில் பாவம் இல்லை என்று சொல்லமுடியாது.** ஏவாளும் ஆதாமும் ஏதேன் தோட்டத்திலிருந்து கொண்டே பாவம் செய்தார்கள். ஏதேனுக்கு வெளியே உலகில் பிறந்த முதல் மனிதனான காயீனும் கொலை செய்தான். நோவாவின் நாட்களில் "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது" (ஆதி 6:5) என்று வாசிக்கிறோம். அந்த நாட்களில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லை. எந்தக் கற்பனையையும் மீறாத நிலையிலும் பாவம் இருக்கலாம். ஜலப்பிரளயத்துக்குப் பின் நோவா குடித்து வெறிகொண்டிருந்ததை ஆதி 9:21ல் வாசிக்கிறோம். தேவசித்தத்துக்கு விரோதமாக துன்மார்க்கமான மனிதர்கள் பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள் (ஆதி 11). சோதோம் கொமோராவின் பாவம் கொடியதாயிருந்தது என்று ஆதி 18:20ல் வாசிக்கிறோம்.

இவ்வாறு நியாயப்பிரமாணம் வழங்கப்படுவதற்குமுன்பும் பாவம் உலகத்தில் இருந்தாலும் பாவம் பாவமாக எண்ணப்படவில்லை என்கிறார் பவுல். அதற்காக தேவன் அவர்களை நியாயந்தீர்க்காமல் அல்லது தண்டிக்காமல் விட்டுவிட்டார் என்று நினைத்துவிடக்கூடாது. நோவா காலத்து பெருவெள்ளமும், லோத்து காலத்து கந்தக அக்கினியும் பாவத்துக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்பதில் சந்தேகமே இல்லை. பவுல் சொல்லுகிற காரியம் இதுதான். அந்நாட்களில் வாழ்ந்தவர்கள் தாங்கள் செய்த பாவங்களை பாவமாக நினைக்காமல் இருந்திருக்கலாம். ஏனென்றால் "நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்" (யாத் 32:34) என்ற எச்சரிக்கை அவர்களுக்கு வழங்கப்படவில்லை. "நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (ரோமர் 4:15) என்ற வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்" (அப் 17:30) என்ற வசனம் இந்த காலத்துக்குப் பொருந்தும் எனக்கொள்ளலாம்.

மோசே மூலமாக சட்டதிட்டங்கள் வழங்கப்படுவதற்கு முன்பே உலகில் பாவம் இருந்தது என்று சொல்லும்போது, ஆதாமுக்கும் மோசேக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்களும் தங்கள் இருதயத்தில் பாவத்தைக் குறித்த ஏதோ ஒரு பிரமாணத்தை

உடையவர்களாக இருந்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது. அதை அவர்கள் மீறியதின் விளைவாகவே பாவம் உருவாகிறது. "நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறது" என்றும், "அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்" என்றும் ரோமர் 2:14,15ல் வாசித்தோம்.

அப்படியிருந்தும், மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர் களையும் ஆண்டுகொண்டது; அந்த ஆதாம் பின்பு வந்தவருக்கு முன்னடையாளமானவன். *(ரோமர் 5:14)*

ஆதாம் என்ற தனிப்பட்ட மனிதனுக்கு தேவன் ஒரே ஒரு பிரமாணத்தைக் கொடுத்தார். ஆதியாகமம் 9:1-7ல் நோவாவுக்கு தேவன் ஏழு கற்பனைகளைக் கொடுத்தார். இறுதியாக இஸ்ரவேலருக்கு மோசே மூலமாக சீனாய் மலையில் 613 பிரமாணங்களைக் கொடுத்தார். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலும் மனிதர்களை மரணம் ஆண்டுகொண்டிருந்தது என்பதினால் அந்த நாட்களிலும் பாவம் உலகில் இருந்தது என்பது நிரூபணம் ஆகிறது. பாவம் செய்யாத சிறு குழந்தைகளையும் மரணம் ஆண்டுகொண்டிருந்தது என்றால் அது யாருடைய பாவமாக இருக்கமுடியும்? மனித இனத்தின் தகப்பனான ஆதாமின் மீறுதல் அவர்கள் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது என்றுதான் எடுத்துக்கொள்ள முடியும். அதனால்தான் ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவம் செய்யாதவர்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார்.

பாவம் ஆண்டுகொள்ளுகிறது என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். **ஏதேன் தோட்டத்தில் இரகசியமாய், திருட்டுத்தனமாய் நுழைந்த பாவம், தருணம் பார்த்து ஏவாள் மூலமாக ஆதாமை விழத்தட்டியது. ஆனால் படிப்படியாக அது பெலனடைந்து இப்போது ஒரு மாமன்னனைப்போல் உலகமனைத்தையும் ஆளுகை செய்துகொண்டிருக்கிறது.** இதன் விளைவாகத்தான் பட்டணங்கள் தோறும் கல்லறைத்தோட்டங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. மரணப்பிடியிலிருந்து நல்லவனும் தப்பமுடியவில்லை, துன்மார்க்கனும் தப்பமுடியவில்லை, ஏழை-பணக்காரன், படிக்காதவன்-படித்தவன், ஊழியக்காரன்-விசுவாசி என்று மரணம் வித்தியாசம் பார்ப்பதில்லை.

வசனத்தின் முடிவில், இந்த ஆதாம் பின்வந்தவரான கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன் (type-கிரேக்கபதம் typos) என்று பவுல் அறிவிக்கிறார். உலகில் தோன்றிய கோடிக்கணக்கான மனிதர்களில் ஆதாமையும் கிறிஸ்துவையும் போல் வேறு யாரும் மனித இனத்தின்மேல்

இவ்வளவு பெரிய மாற்றத்தை உருவாக்கியதில்லை. ஆதாம் மனிதனுடைய மரணத்துக்குக் காரணமாக இருந்தானென்றால் கிறிஸ்து மனிதனுடைய நித்திய ஜீவனுக்குக் காரணமாயிருந்தார். "முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1 கொரி 15:45). "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" (வசனம் 21). "ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்". (1 கொரி 15:22). ஆதாம் பாவம் செய்தான். எல்லாரும் மரித்தார்கள். கிறிஸ்து மரித்தார். எல்லாரும் பிழைத்தார்கள்.

தேவகிருபையின் மேன்மை
(வசனம் 15-21)

ஆனாலும் மீறுதலின் பலன் கிருபை வரத்தின் பலனுக்கு ஒப்பானதல்ல. எப்படியெனில், ஒருவனுடைய மீறுதலினாலே அநேகர் மரித்திருக்க, தேவனுடைய கிருபையும் இயேசுகிறிஸ்து என்னும் ஒரே மனுஷனுடைய கிருபையினாலே வரும் ஈவும் அநேகர்மேல் அதிகமாய்ப் பெருகியிருக்கிறது. (ரோமர் 5:15)

தேவன் தரும் கிருபை வரமாகிய ஈவு எவ்வளவு மேம்பட்டது என்றால், அது ஆதாம் செய்த பாவத்தைப் போன்றதல்ல. முந்தின வசனத்தின்படி, ஆதாமின் பாவத்தினால் மரணம் எல்லாரையும் ஆட்கொண்டது என்பது உண்மைதான். ஆனாலும் அதின் வெற்றி தற்காலிகமானது. தேவகிருபை எவ்வளவு உயர்ந்தது என்றால், அதின் மூலமாக எண்ணிலடங்காதவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று மகிழ்கிறார்கள். அதை அவர்கள் ஒருபோதும் இழப்பதில்லை இறுதியில் அவர்கள் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்கிறார்கள்.

ஆதாம், பிறகு வந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன் என்று 14-ம் வசனத்தில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். இருவருமே மனித இனத்தின் தலைவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்பதால் அவர்களிருவருடனும் தேவன் மனித இனத்தின் எதிர்காலத்தைக் குறித்து உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார். அதனடிப்படையில் அவர்களுடைய கிரியைகளின் விளைவாக மனிதஇனம் வித்தியாசமான முறையில் பாதிக்கப்பட்டிருப்பதைப் பார்த்தோம். இந்த பாதிப்பைக் குறித்தும், அதின் விளைவுகளைக் குறித்தும் பவுல் 15-19 ஆகிய வசனங்களில் பேசுகிறார்.

ஆதாம் என்று சொன்னதுமே அவனுடைய மீறுதல்தான் நம்முடைய நினைவுக்கு வருகிறது. அவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரேயொரு கற்பனையையும் மீறி தேவனுடைய உடன்படிக்கையை உடைத்துப்போட்டான் (ஓசியா 6:7) அதன்விளைவாக அவனும் அவனுடைய சந்ததியாரும் மரணத்தைச் சந்தித்தார்கள். ஆனாலும் ரோமர் 6:23 சொல்லுகிறபடி: "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்". மனிதன் பெற்றுக்கொள்ளும் நித்திய ஜீவனில் இரண்டு காரியங்கள் செயல்படுவதை பவுல் இந்த வசனத்தில் சுட்டிக்காட்டுகிறார்:

1) தேவனுடைய கிருபை - இது பிதாவினுடையது
(Grace of God - அதாவது
தேவனுடைய இரக்கத்தின் விளைவு)

2) கிருபையினால் வரும் ஈவு - இது கிறிஸ்துவினுடையது
(Gift of Grace - அதாவது
தேவனுடன் ஒப்புரவு, தேவநீதி)

பிதாவாகிய தேவனிடமிருந்து புறப்பட்டுவரும் கிருபை என்னும் ஜீவநதி, கிறிஸ்து மூலமாக - கிறிஸ்து வழியாக தேவநீதி என்னும் கிருபையினால் வரும் ஈவு (நன்கொடை) நம்மை வந்தடைகிறது. தன்னை பாவநிவாரண பலியாக கிறிஸ்து ஒப்புக்கொடுத்திராவிட்டால் அது நம்மை வந்து சேர்ந்திருக்காது. **தேவன் மனிதனுக்குக் கொடுத்த எல்லா ஆசீர்வாதங்களும், கொடுக்க விரும்பும் எல்லா ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவுக்குள்ளாக மட்டுமே இருக்கிறது.**

கிருபையினால் வரும் ஈவு அநேகர்மேல் அதிகமாய் பெருகியிருக்கிறது என்கிறார் பவுல். ஏனென்றால் இது தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக வருகிறது. யோவான் 1:16 சொல்லுகிறபடி: "அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபைபெற்றோம்". நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதோடு தேவகிருபையின் செயலாற்றல் நின்றுவிடுதில்லை. மனிதனுக்கு பாவமன்னிப்பை தரும்படியாகமட்டும் கிறிஸ்துஇயேசு பூமியில் வந்து பாடுமரணத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கவில்லை. **ஆதாம் தன் பாவத்தினால் இழந்துபோன ஆசீர்வாதங்களோடு, பல கோடி மடங்கு மேலான ஆசீர்வாதங்களை மனித இனத்துக்கு வழங்கும்படியாக அவர் உலகத்துக்கு வந்தார்.** தன் மரணத்துக்கு முன்பாக அவர் பிதாவிடம் ஜெபிக்கிறார்: "நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும்

இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்" (யோவான் 17:23). பிதாவும் குமாரனும் நம்மில் இருப்பது எவ்வளவு பெரிய மேன்மை?

கிறிஸ்து தன்னால் நீதிமானாக்கப்பட்டவர்களுக்குள் வாசமாயிருக்கவேண்டும் என்று வாஞ்சிப்பது நமக்குக் கொடுக்கப்பட்ட மிகப்பெரிய மேன்மை. "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (யோவான் 15:4) என்று அவர் வாக்கு கொடுத்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஆதாம் விலக்கப்பட்ட கனியைப் புசிக்குமுன் குற்றமற்ற நிலையில், மாசற்றவனாகத்தான் இருந்தான் என்பது உண்மைதான். ஆனால் அவன் கிறிஸ்துவுக்குள் இருந்ததாகச் சொல்ல முடியாது. நீதிமானாக்கப்பட்ட நிலையில் இருந்தான் என்றும் சொல்ல முடியாது. அப்படியே அவன் ஏதாவது நீதியான கிரியைகளை நடப்பித்திருந்தாலும் அது மனித நீதியாகத்தான் இருந்திருக்கமுடியும். கிறிஸ்துவின் நீதி அவனுக்கு தரிப்பிக்கப்பட வாய்ப்பில்லை.

ஆதாம் தேவனுடைய சாயலில் உருவாக்கப்பட்டவன்தான் என்றாலும் தேவனுடைய ஜீவனுக்குப் புறம்பானவனாகத்தான் இருந்தான். நாமோ கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இருக்கிறோம் (1 கொரி 12:27). ரோமர் 5:2ல் பார்த்தபடி "தேவமகிமையை அடைவோம் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டு". ஆதாமோ தனக்கு நியமிக்கப்பட்ட தேர்வில் வெற்றி உண்டு என்கிற நிச்சயம் இல்லாத நிலையில் தான் இருந்தான். இறுதியில் தோல்வியையும் சந்தித்தான். ஆனால் கிறிஸ்துவில் இறுதிவரை நிலைத்திருப்பதைக் குறித்த நிச்சயம் நமக்கு உண்டு.

ஆதாம் பாவம் செய்யவில்லை என்றே வைத்துக்கொள்ளுங்கள். அப்படியானால் இன்று அவனுடைய சந்ததிகளாகிய நாம் ஏதேன் தோட்டத்தின் அதிபதிகளாக அங்கே உலாவிக் கொண்டிருப்போம். ஆனால் இன்று நாம் எங்கே இருக்கிறோம்? பிதாவாகிய தேவன் நமக்கு என்ன செய்திருக்கிறார்? எபேசியர் 2:7 சொல்லுகிறது: "கிறிஸ்துஇயேசுவுக்குள் நம்மை உயிரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்". நாம் உட்காருவோம் என்று எதிர்காலத்தில் பவுல் சொல்லவில்லை. கிறிஸ்துவுக்குள் இருப்பதால் ஏற்கனவே ஏதோ ஒரு பரிமாணத்தில் பிதாவோடு உட்கார்ந்திருக்கிறோம். நாம் வாசம் செய்யும் இடம் ஏதேன் தோட்டம் அல்ல, பரலோகம். அதின் மேன்மையைக் குறித்து வெளி 21, 22 அதிகாரத்தில் வாசியுங்கள்.

ஆதாமுக்கு சிருஷ்டி கர்த்தராக தேவன் இருந்தார் என்பது உண்மைதான். ஆனால் அவனுடைய இரட்சகராக இருந்தாரா? நாம் கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம் (எபே 1:12). தேவராஜ்யத்தின் பிரஜைகள் என்ற சிலாக்கியம் மட்டும் நமக்குக் கொடுக்கப்படவில்லை. தேவனுடைய புத்திரராகிறோம் (ரோமர் 8:14). அவருடைய வாரிசுதாரர்கள் ஆகிறோம். "அப்பா, பிதாவே" என்று அவரைக் கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவி (வசனம் 15) நமக்கு வழங்கப்பட்டுள்ளது. ரோமர் 8:17 சொல்லுகிறது, "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே". கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமாகும் சிலாக்கியம் ஆதாமுக்கு ஒருபோதும் கொடுக்கப்படவில்லையே. தேவ கிருபையினாலே வரும் ஈவு உண்மையிலேயே மேலானது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

மேலும் ஒருவன் பாவஞ்செய்ததினால் உண்டான தீர்ப்பு தேவன் அருளும் ஈவுக்கு ஒப்பானதல்ல; அந்தத் தீர்ப்பு ஒரே குற்றத்தினிமித்தம் ஆக்கினைக்கு ஏதுவாயிருந்தது; கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதிவிளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது. (ரோமர் 5:16)

முந்தின வசனத்தில், பொதுவான முறையில் மனிதன் பாவத்தினிமித்தம் இழந்துபோனதைவிட மேலான ஆசீர்வாதங்களை கிறிஸ்து மூலமாகப் பெற்றுக்கொள்கிறான் என்பதைப் பவுல் அறிவித்தார். தொடர்ந்து வரும் வசனங்களில் அந்த ஆசீர்வாதங்களின் தன்மை என்ன என்பதை விளக்க ஆரம்பிக்கிறார்.

ஒருவன் பாவம் செய்தான் என்பது புசிக்காதே என தேவனால் கட்டளையிடப்பட்ட கனியைப் புசித்து, தேவனுடைய ஆணையை மீறிய ஆதாமின் பாவத்தை (ஓசியா 6:7) குறிப்பிடுகிறது. "ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது" (ரோமர் 5:12) என்று பார்த்தோம். ஆதாம் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்-பட்டபோது, அவனுக்குள் அந்த ஒரேயொரு பாவத்தினிமித்தம் அவனுடைய சந்ததிகளும் ஆக்கினைத்தீர்ப்பைப் பெறுகிறார்கள். ஆதாமுடைய பாவத்தின் விளைவாக அவர்களில் உண்டான பாவ சுபாவத்தினிமித்தம் சந்ததியார் ஆக்கினைத்தீர்ப்பைப் பெற்றார்கள் என்பதல்ல. அந்த பாவ சுபாவத்தினிமித்தம் அவர்கள் பாவம் செய்தவர்கள் அல்லது செய்வார்கள் என்பதினால் ஆக்கினைத்தீர்ப்பைப் பெற்றார்கள் என்பதுமல்ல. ஆதாமின் ஒரே பாவமே மனித இனத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கிறது என்பதாகும்.

அடுத்ததாக பவுல் ஆதாமின் கீழ்ப்படியாமையை "சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்த" (பிலிப் 2:9) மேலான மகத்துவமான கீழ்ப்படிதலோடு ஒப்பிடுகிறார். முந்தினவன் தன் சந்ததியாருக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாக்கினான். பிந்தினவர் கிருபை வரத்தை வழங்கினார். இந்த கிருபை வரத்தின் மேன்மை என்ன? இதனால் பிதாவின் நியாயாசனத்துக்கு முன்பாக குற்றவாளிகளாய் நிறுத்தப்படுபவர்கள் பெறும் தீர்ப்பு என்ன? ஆதாமின் சந்ததி என்ற முறையில் அவர்கள் பிறப்பினாலேயே சுதந்தரித்துக்கொண்ட கீழ்ப்படியாமை என்ற பாவம் மட்டுமல்ல, அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் நடப்பித்த, செய்த சகல குற்றங்களில் இருந்தும் நீக்கப்படும்படியாக "நீதிவழங்கும் தீர்ப்பு", அதாவது அவர்கள் நீதிமான்கள் என்கிற தீர்ப்பைப் பெறுகிறார்கள். இது எவ்வாறு சாத்தியமாகிறது? **கிறிஸ்துவுக்குள் தங்களை மறைத்துக் கொள்ளும் ஒவ்வொரு மனிதனின் பாவங்களும் கல்வாரி சிலுவையில் அவர்மேல் சுமத்தப்பட்டாயிற்று. பாவத்துக்கான தண்டனை வழங்கப்பட்டாயிற்று.** எனவே கிறிஸ்துவுக்குள் நாம் நீதிமான்கள் என்ற தீர்ப்பைப் பெறுகிறோம்.

ஆதாம் நாசியில் சுவாசமுள்ள ஒரு மனிதன். தன் மனைவியின் ஆலோசனைக்குக் கீழ்ப்படிய தன்னை ஒப்புக்கொடுத்த ஒரு பெலவீனமான மனிதன். அவனுடைய சந்ததியில் வெளிப்பட்ட நாம் அவனுடைய பாவத்தில் நேரடியாக சம்பந்தப்படாதவர்களானாலும் அந்த ஒரே பாவம் மனிதஇனம் முழுவதையும் மரணத்தின் அடிமைத்தனத்துக்குள் கொண்டு வந்தது. பிந்தின மனிதனாகிய இயேசு ஆதாமைப்போல் சிருஷ்டிக்கப்பட்டவர் அல்ல. அவர் நித்தியவாசி. சர்வ வல்லமையுள்ள தேவகுமாரன். அவர் மூலமாக அவருக்குள் நாம் சுதந்தரிக்கும் கிருபைவரமாகிய இரட்சிப்பு எவ்வளவு மேன்மையானதாக இருக்கும்! அநேக குற்றங்களை நீக்க அது போதுமானதாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. தேவன் சொல்லியிருக்கிறார், "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாகும்" (ஏசாயா 1:18). ஏனென்றால் கிறிஸ்துவின் இரத்தஞ்சிந்துதலினால் பாவமன்னிப்பு உண்டாகிறது.

அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அவன் ஒருவன் மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை

அடைந்து ஆளுவார்களென்பது அதிக நிச்சயமாமே.
(ரோமர் 5:17)

ஏற்கனவே அறிவித்த சத்தியத்தை வித்தியாசமான வார்த்தைகளில் பவுல் வலியுறுத்துகிறார். ஒரு முக்கியமான வசனத்தை நாம் தியானித்துக்கொண்டிருக்கிறோம். ஒரு மனிதன் செய்த பாவத்தின் விளைவாக மரணதண்டனை அனைவருக்கும் விதிக்கப்பட்டது. ஆனாலும் இப்போது கிறிஸ்துவின் மூலமாக பாவ மனிதர்கள் தேவனுடைய கிருபை வரங்களுக்கும் நித்திய ஜீவனுக்கும் சொந்தக்காரர்கள் ஆகிறார்கள். இதன்விளைவாக மனுஷகுமாரனாகிய இயேசுவினால் அவர்கள் நித்திய ஜீவனைப்பெற்று ஆளுகை செய்வதின் நிச்சயத்தைப் பவுல் அறிவிக்கிறார். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் நீதிமானாக்கப்பட்டதின் விளைவாக ஆளுகை செய்கிறவர்களாகிறோம். சங் 113:78 வாசித்துப்பாருங்கள்.



"ஒருவனுடைய மீறுதலினாலே" என்று அறிவித்து ஆதாமின் ஒரு பாவத்தின் மூலமாகவே மரணம் பூமியை ஆண்டுகொண்டது என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. "மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும் ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ் செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது" (ரோமர் 5:14). மரணம் ஒரு வெற்றி வீரனைப் போல் பூமியெங்கும் பவனி வருவதைப்போல் பவுல் உருவகப்படுத்துகிறார். ஆனாலும் கிறிஸ்துவுக்குள் ஒரு மனிதன் கிருபையின் பரிபூரணத்தையும் நீதியின் ஈவின் பரிபூரணத்தையும் பெற்றுக்கொள்கிறான். அதன் விளைவாக ஜீவனை அடைந்து ஆளுகை செய்கிறான். பூமியை ஆண்டுகொண்டிருந்த மரணத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது.

எபிரெயர் 2:14,15 சொல்லுகிறது: "பிள்ளைகள் மாம்சத்தையும்

இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்". மரணத்தின் ஆளுகை முறியடிக்கப்பட்டதினால் தான் பவுல் சவாலிட்டுப் பேசுகிறார் : "மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே?" (1 கொரி 15:55).

நீதிமானாக்கப்பட்டவர்கள் ஜீவனை அடைந்து ஆளுகை செய்வது நிச்சயம் என்கிறார் பவுல். பாவத்தின் மீதும், அதின் சம்பளமான மரணத்தின் மீதும் அதிகாரம் உள்ளவர்களே ஜீவனை அடைந்து ஆளுகை செய்ய முடியும். கிறிஸ்துவின் இரத்தத்தினாலே பாவங்களற கழுவப்பட்டதின் விளைவாகவே நாம் ராஜாக்களும் ஆசாரியர்களுமாகிறோம் (வெளி 1:6). ஏனென்றால் கிறிஸ்துவே வாக்குப்பண்ணியிருக்கிறார் : "நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படி அருள் செய்வேன்" (வெளி 3:21). "அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி 22:5). 2 தீமோ 2:12, வெளி 5:10 லூக்கா 22:30 வாசித்துப்பாருங்கள். "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி 20:6) என்று வாசிக்கிறோம்.

அர்மகெதோனில் தன் எதிரிகளை மேற்கொள்ளும்படியாக வெள்ளைக் குதிரையில் இறங்கி வரும்போது அவருடைய வஸ்திரத்தில் "ராஜாதி ராஜா" (வெளி 19:16) என்று எழுதப்பட்டிருக்கும். ராஜாக்களுக்கு மேல் ராஜாவாக இருப்பவர்தான் ராஜாதிராஜாவாக இருக்கமுடியும். இந்த ராஜாக்கள் நீங்களும் நானும்தான் என்பதை அறிந்துகொள்ளுங்கள். இஸ்ரவேலை ஆளுகை செய்யும்படியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்தான் சவுல். ஆனால் அதற்குப் பயந்து சவுல் தளவாடங்கள் இருக்கிற இடத்திலே ஒளிந்து கொண்டிருந்ததைப்போல் (1 சாமு 10:21-23), நாமும் நமது ராஜாக்கள் என்ற மேன்மையை அறிந்துகொள்ளாமல் அச்சத்தோடு காணப்படுகிறோம். பாவி, பாவி என்று புலம்பிக்கொண்டிருக்கிறோம். **ஆனால் இன்று பிதாவாகிய தேவனுடன் உன்னதங்களிலே உட்கார்ந்திருக்கிறோம் என்பதை எபேசியர் 2:7ன் ஆதாரத்தின்படி நம்புங்கள்.** ஆயிரவருஷ அரசாட்சியின்போதுதான் நாம் ஆளுகை

செய்வோம் என்பதல்ல. இந்த உலகத்தில் இருக்கும் நாட்களிலேயே நாம் ஆளுகை செய்ய முடியும் - கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்பதை உணரக்கூடுமானால், தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதை நம்புங்கள்.

ரோமர் 5:15,16,17 ஆகிய மூன்று வசனங்களில் முதல் மனிதனாகிய ஆதாமையும், இரண்டாம் மனிதனாகிய கிறிஸ்துவையும் இணைத்து மூன்று சத்தியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

வசனம்	ஆதாம்	கிறிஸ்து
5:15	ஒருவனுடைய மீறுதலினால் அநேகர் மரித்தார்கள்	ஒருவரால் அநேகர் கிருபையைப் பெறுகிறார்கள்
5:16	ஒருவனுடைய குற்றத்தினால் அநேகர் நியாயத்தீர்ப்பை அடைந்தார்கள்	ஒருவரால் உண்டான கிருபை வரம் அநேகரை நீதிமான்-களாக்கியது
5:17	ஒருவனுடைய பாவத்தின் விளைவாக மரணம் உலகை ஆண்டுகொண்டது	ஒருவருடைய தியாக பலியினால் அநேகர் ஜீவனை அடைந்து ஆளுவார்கள்

ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது போல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. (ரோமர் 5:18)

முந்தின வசனத்தில் பவுல் அறிவித்த காரியங்களின் முடிவுரையாக இந்த வசனம் அமைகிறது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் செய்த ஒரே பாவத்தினால் மனிதஇனம் மரணதண்டனை என்ற தீர்ப்பைப் பெற்றது போல், ஆதாமிலும் பெரியவரான இயேசுகிறிஸ்துவின் ஒரே நீதியின் கிரியையினாலே எல்லாரும் நீதிமான்களாக்கப்பட்டு நித்தியஜீவன் என்ற தீர்ப்பைப் பெறுகிறார்கள். சுருக்கமாகச் சொல்லுவதானால்

1. ஆதாம் பாவம் செய்தான். எல்லா மனுஷரும் ஆக்கினைத் தீர்ப்பைப் பெற்றார்கள் அதன் முடிவு மரணம்.

2. கிறிஸ்து கல்வாரியில் நீதியை நிறைவேற்றினார். அதன் விளைவாக எல்லா மனுஷரும் நீதிமானாக்கப்பட்டார்கள். அதன் முடிவு நித்தியஜீவன்.

ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு, நீதிக்கு ஏதுவான தீர்ப்பு என்று இரண்டு வகையான தீர்ப்புகளைக் குறித்து இந்த வசனம் பேசுகிறது. ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு தேவனுடைய வெள்ளை சிங்காசனத்திலிருந்து வெளிப்படும். அதற்கு ஒருவன் தப்பித்துக்கொள்ளவேண்டுமானால் அவனுடைய பாவங்கள் கல்வாரி சிலுவையில் தீர்க்கப்படவேண்டும். இது ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பாக இருக்கும்.

"எல்லா மனுஷரும்" என்ற வார்த்தை யூதரையும், புறஜாதியாரையும் குறிப்பிடுகிறது. இரட்சிப்பைப் பொறுத்தவரை யூதர் புறஜாதியார் என்ற எந்தப் பாகுபாடும் இல்லை என்பதை பவுல் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். (ரோமர் 1:16, 17; 2:7-11; 3:21-31; 4:3-16; 9:18, 22-33; 10:11-13; 11:32; 15:7-12; 16:25-27). கிறிஸ்து ஒருவரைத் தவிர உலகில் பிறந்த அத்தனைபேருமே ஆதாமின் மீறுதலினால் பாதிப்படைகிறார்கள்.

"ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" என்ற வசனத்திலிருந்து உலகத்து மனிதர்கள் அத்தனை பேருமே இரட்சிக்கப்படுவார்கள் (Universal salvation) என்று சிலர் தவறாக போதிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். பவுல் இந்த கொள்கையை உடையவர் அல்லர். 2 தெச 1:9, 10; பிலிப் 3:19 வாசித்துப்பாருங்கள். எல்லா மனிதரையும் இரட்சிக்கும் படியான நீதி கல்வாரி சிலுவையில் வெளிப்பட்டது என்பதை மட்டுமே இந்த வசனம் அறிவிக்கிறது. "சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்திசெய்கிற பரிகாரியாயிருக்கிறார்" கிறிஸ்து, (1 யோவான் 2:2). ஆனாலும் **அவரை விசுவாசித்து, அவருடைய மரணத்தோடு தங்களை இணைத்துக்கொண்டவர்கள் (கொலோ 3:3) மட்டுமே நித்திய ஜீவனை உடையவர்களாகிறார்கள்.** சூரிய வெளிச்சம் எல்லாருக்குமே போதுமானது தான். கண்களை மூடிக்கொள்கிறவர்கள், இருட்டறைக்குள் தங்களை அடைத்துக்கொள்கிறவர்கள், குருடர்கள்

ஆகியோர் வெளிச்சத்தைப் பார்க்காமலே இருக்கலாம். வெளிச்சத்தினால் உண்டாகும் நன்மைகளை இவர்களால் அனுபவிக்கமுடியாது.

அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். (ரோமர் 5:19)

ஆதாமின் கீழ்ப்படியாமையும் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலும் ஒப்பிடப்பட்டு, அவைகளின் விளைவுகள் சுருக்கமாக இங்கே சொல்லப்படுகிறது. ஆதாமின் பாவத்தினால் மனித இனத்தை மரணம் ஆண்டு கொண்டது, மனிதர்களை ஆக்கினைத் தீர்ப்புக்கு உள்ளாக்கியது என்பது மட்டுமல்ல அவர்களை பாவிகளாக்கியது. ஆதாமின் பாவம் அவனுடைய சந்ததியாரின் கணக்கிலும் வரவு வைக்கப்படுகிறது, அது அவர்களே செய்த பாவமாகத் கருதப்படுகிறது. இது எவ்வாறு சாத்தியமாகும்? ஆதாம் ஒருவரின் பாவத்துக்காக முழுமனிதஇனத்தையும் தேவன் எவ்வாறு தண்டிக்க முடியும் என்பது போன்ற கேள்விகள் ஜென்ம சுபாவமுள்ள மனிதர்களிடமிருந்து வெளிப்படக்கூடும். ஆனால் தேவனுடைய வார்த்தை இப்படிச் சொல்கிறது என்பதினால் அதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளுகிறோம். அதை விளங்கிக்கொள்ள நாம் உலக ஞானத்தின் அடிப்படையில் முயற்சி செய்ய வேண்டியதில்லை. "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்" (உபா 29:29). யோபு 33:12,13 வாசித்துப் பாருங்கள்.

ஆதாமின் கீழ்ப்படியாமை மனிதர்களை பாவிகளாக்கியது உண்மையானால், கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் மனிதர்களை நீதிமான்களாக்கியதும் உண்மை என்கிறார் பவுல். கிறிஸ்துவின் **வாழ்க்கையில் நாம் காணும் பிரதானமான காரியம் அவர் முற்றிலுமாக பிதாவாகிய தேவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என்பதே,** யோவான் 6:38, 39; 10:17,18; 17:4,5 எபி 2:10; 5:8,9 வாசித்துப்பாருங்கள், திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டவராக, ஸ்திரீயினிடத்தில் பிறந்ததே (கலா 4:5) அவருடைய முதலாவது கீழ்ப்படிதல். பாவமில்லாத தேவகுமாரன் "இப்பொழுது இடங்கொடு" (மத் 3:15) என்று யோவான் ஸ்நானனிடம் சொல்லி பாவிகளின் ஞானஸ்நானத்துக்கு ஒப்புக்கொடுத்ததும் அவருடைய கீழ்ப்படிதலையே காட்டுகிறது. "என் சித்தத்தின்படியல்ல; உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (மத் 26:39) என்று

தன்னை அவமானமான பாடு மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததும் அவருடைய கீழ்ப்படிதலைக் காட்டுகிறது. கல்வாரி சிலுவையின் அவருடைய கீழ்ப்படிதல் உச்சக்கட்டத்தை அடைகிறது. "சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப் 2:8) என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் பரிசுத்தமான வாழ்க்கையினால் அல்ல, நம்முடைய பாவங்களுக்காக, பழுதற்ற ஜீவாதார பலியாக தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்ததினாலேயே நாம் நீதிமான்களாகிறோம்.

கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் அநேகர் நீதிமானாக்கப்படுவார்கள் என்று வருங்காலத்தில் அறிவித்து மனித இனத்தின் ஒவ்வொரு காலக்கட்டத்திலும், ஒவ்வொரு சந்ததியிலும் நீதிமானாக்கப்படுதல் தொடர் கிரியையாக நடந்து கொண்டே இருக்கும் என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். இது எவ்வாறு சாத்தியமாகிறது? "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21) என்கிறார் பவுல். மனித இரட்சிப்பு கிறிஸ்துவுக்குள் அடங்கியிருக்கிறது. **கிறிஸ்துவுக்குள்ளாக வைக்கப்பட்ட ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக சிலுவையில் அறையப்பட்டு விட்டான். கிறிஸ்துவுக்குள்ளாக மரித்துவிட்டான். கிறிஸ்துவுக்குள்ளாக உயிர்த்தெழுந்தும் இருக்கிறான்.** "அவரே தேவனால் நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரி 1:31).

உலகில் உள்ள எல்லா மதங்களுமே மனிதன் செய்யும் தர்மகாரியங்களினால் மட்டுமே அவன் மோட்சத்துக்கு போகிறான் என்று அறிவிக்கிறது. ஆனால் வேதம் சொல்லுவதென்ன? எந்த மனிதனும், தேவனுக்காக, தேவனுக்கென்று எந்தக் காரியமும் செய்யமுடியாது. மனித இரட்சிப்புக்கு தேவையான எல்லாவற்றையும் கிறிஸ்து இயேசு செய்து முடித்துவிட்டார். தேவனுக்கு நாம் என்ன செய்தோம் என்பதல்ல, தேவன் நமக்கு என்ன செய்தார் என்பதே முக்கியம்.

மேலும், மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. (ரோமர் 5:20)

மீறுதலை குறைக்கும்படியாக மோசே மூலமாக நியாயப்பிரமாணம் வந்தது என்று பவுல் சொல்லுவார் என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாற்றமடைவார்கள். தன்னுடைய நிருபத்தை வாசிப்பவர்கள், அவர்கள் யூதர்களானாலும் சரி, புறஜாதிக்

கிறிஸ்தவர்களானாலும் சரி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின்மேல் நம்பிக்கை வைக்கக்கூடாது என்ற வைராக்கியத்தின் விளைவாக பவுல் சொல்லுகிறார். "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது". நியாயப்பிரமாணம் வந்தபிறகு தான், பாவத்தைக் குறித்த உணர்வும், பாவங்களும் அதிகரித்தன. ஆனாலும் இவ்வாறு மனிதர்கள் மிகுதியாக பாவம் செய்யும் போதும் தேவன் சளைக்காமல் தன்னுடைய கிருபை வரங்களை அதிகமாக வெளிப்படுத்துகிறார். பாவம் மேற்கொள்ளப்படுகிறது. பாவி, தேவனுடைய குமாரன் என்ற அங்கீகாரத்தைப் பெறுகிறான்.

இந்த அதிகாரத்தின் 13-வது வசனத்திலேயே "நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்தது; நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது" என்று அறிவித்ததைப் பார்த்தோம். இதுவரை நியாயப்பிரமாணத்தைக் குறித்து பவுல் அறிவித்த காரியங்களை சுருக்கமாக அறிந்துகொள்ளுவோம்.

1. நியாயப்பிரமாணம் ஒருவனையும் நீதிமானாக்குவதில்லை, மனிதனிடம் நீதியை எதிர்பார்க்கிறது. (ரோமர் 3:20)

2. நியாயப்பிரமாணம் ஒருவனையும் புதிதாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதும் இல்லை. ஏனெனில், ஆதாமின் பாவத்தினால் ஆக்கினைத்தீர்ப்பாகிய மரணம் உலகில் ஏற்கனவே பிரவேசித்தாயிற்று. (வசனம் 12-14)

நியாயப்பிரமாணத்தினால் எந்த பிரயோஜனமும் இல்லை என்பதை பவுலின் வாதம் உறுதிப்படுத்துகிறது. மனித சரித்திரத்தில் முதல் 1100 ஆண்டுகள் நியாயப்பிரமாணம் இல்லாமல் இருந்தது. இப்போது திடீரென்று ஏன் இந்த நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது என்ற கேள்வி யூதர்களிடமிருந்து எழும்பக்கூடும் என எதிர்பார்த்து, இந்த வசனத்தில், "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" என்கிறார் பவுல். நியாயப்பிரமாணத்தின் விளைவாக எவ்வாறு பாவம் பெருகுகிறது என்பதை அறிந்துகொள்ளுவோம்.

முதலாவதாக எவையெல்லாம் பாவம் என்பதை நியாயப்பிரமாணம் வெளிப்படுத்துவதால் அது பாவத்தைக் குறித்த அறிவை மனிதனில் உண்டாக்குகிறது. தாங்கள் செய்வது பாவம் என்பதை அறிந்துகொள்ளாமலேயே பலர் பாவம் செய்யக்கூடும்.

வருடக்கணக்கில் ஒரு பாவத்தைச் செய்து கொண்டிருக்கும் மனிதன் அது பாவம் என்பதை உணர்ந்து கொள்ளாமலே இருக்கலாம். ரோமர் 3:20 சொல்லுகிறபடி, "பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது" உதாரணமாக "இச்சியாதிருப்பாயாக" என்ற கற்பனையைக் (யாத் 20:17) குறிப்பிடலாம். "பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாதிருப்பேனே" (ரோமர் 7:7) என்கிறார் பவுல். அதனால்தான் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் என்று ரோமர் 7:5ல் வாசிக்கிறோம்.

இரண்டாவதாக பாவத்தின் உண்மையான தன்மை என்ன என்பதை நியாயப்பிரமாணத்திலிருந்தே அறிந்து கொள்ளுகிறோம். "பாவம் கற்பனையினாலே (நியாயப்பிரமாணத்தினாலே) மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று" (ரோமர் 7:13) என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவைத்தவிர யாராலும் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிய முடியவில்லை.

பாவத்தின் வல்லமை என்ன என்பதை நியாயப்பிரமாணத்தின் உதவியின்றி ஒருவரும் அறிந்துகொள்ள முடியாது. பாவம் செய்துகொண்டு அதை ஒரு பலவீனமாக, பழக்கதோஷமாகத்தான் கருதுவோமே தவிர, அது எந்த அளவுக்கு நம்மை ஆளுகைசெய்கிறது என்பதை நியாயப்பிரமாணத்தின் மூலமாகவே அறிந்து கொள்கிறோம். தேவன் நியமித்த நேர்மை நிலையிலிருந்து மனிதன் எந்த அளவுக்கு வழிவிலகிப்போயிருக்கிறான் என்பதை நியாயப்பிரமாணமே வெளிப்படுத்துகிறது.

"பாவமானது கற்பனையினாலே" (நியாயப்பிரமாணத்தினாலே) சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (ரோமர் 7:11) என்கிறார் பவுல். மூன்றாவதாக பாவத்தின் வஞ்சனையை நியாயப்பிரமாணமே வெளிப்படுத்துகிறது. நியாயப்பிரமாணம் இல்லாத நிலையில், அல்லது நியாயப்பிரமாணத்தை அறிந்து கொள்ளாத நிலையில் பாவம் செய்கிறவன், தான் தேவனுடைய மாட்சிமையை எதிர்த்து செயல்படுபவன் என்பதை உணர்ந்துகொள்வதே இல்லை. 13,

14 வது வசனங்களில் நாம் பார்த்ததுபோல் ஆதாமுக்கும் மோசேக்கும் இடைப்பட்ட காலங்களில் இருந்த மனிதர்கள், தாங்கள் பாவம் செய்தபோதெல்லாம் சர்வ வல்லமையுள்ள தேவனை எதிர்த்து நிற்கிறோம் என்பதை நிச்சயமாகவே அறிந்திருக்கமாட்டார்கள். அதனால்தான் நியாயப்பிரமாணம் "பாவபிரமாணம்" (ரோமர் 8:2) என்றும், "ஆக்கினைத்தீர்ப்பு கொடுக்கும் ஊழியம்" (2 கொரி 3:9) என்றும் அழைக்கப்படுகிறது.

"நியாயப்பிரமாணத்தினால் பாவம் பெருகுகிறது" என்று பவுல் சொல்லுவதற்கு நான்காவது காரணம் இதுதான். நியாயப்பிரமாணம் பாவத்தைக் குறித்த அறிவை உண்டாக்குகிறது என்பது மட்டுமல்ல, அதன் வஞ்சனையை வெளிப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல, உண்மையிலேயே நாம் பாவம் செய்ய காரணமாக அது இருக்கிறது. இதைத்தான் பவுல் ரோமர் 7:8ல் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே". இந்த வசனத்தை தியானிக்கும்போது இந்த சத்தியத்தை அறிந்துகொள்வோம்.

பாவம் பெருகிய இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று என்று பவுல் சொல்லும்போது பாவம் கிருபையின் செயலாற்றலை மட்டுப்படுத்தாது என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம். பாவம் செய்த ஆதாமை கிருபை தேடிவந்தது. ஆதாமை பெயர் சொல்லி அழைத்தது, கிருபையின் வாக்குத்தத்தத்தை அறிவித்தது, 1 கொரி 15:8-10, 2 கொரி 4:15 வாசித்துப்பாருங்கள்.

ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டதுபோல, கிருபையானது, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது. (ரோமர் 5:21)

பாவம், மரணம், கிருபை, நீதி, நித்தியஜீவன் என்ற ஐந்து முக்கியமான வேத வார்த்தைகள் இந்த ஒரு வசனத்தில் காணப்படுகின்றன. பாவத்துக்கும் கிருபைக்கும் இடையே தினம் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் என்றாலும் இறுதியில் வெற்றியைப் பெறுவது கிருபையே என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

பாவத்தை கிருபை மேற்கொள்வதில்தான் மனிதனுடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது.

பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் இதுதான், உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் பாவநிலையில் இருக்கவேண்டும், அல்லது கிருபைநிலையில் இருக்கவேண்டும். பாவம் அவனை ஆளுகை செய்ய வேண்டும் அல்லது கிருபை அவனை ஆளுகை செய்யவேண்டும். ஒருவன் ஆதாமுக்குள் இருக்கவேண்டும் அல்லது கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும். ஆதாமுக்குள் இருக்கும் மனிதன் பாவத்தின் விளைவாக ஆக்கினைத்தீர்ப்பை அடைந்து நித்திய மரணத்துக்குள் பிரவேசிக்கிறான். கிறிஸ்துவுக்குள் இருக்கும் மனிதன் கிருபையின் விளைவாக தேவநீதியைப் பெற்றவனாய் நித்தியஜீவனுக்குள் பிரவேசிக்கிறான்.

ஆதாம் ⟶ பாவம் ⟶ கோபாக்கினை ⟶ நித்தியமரணம்

கிறிஸ்து ⟶ கிருபை ⟶ தேவநீதி ⟶ நித்தியஜீவன்

முந்தின வசனத்தில் பாவம் பெருகியது என்று அறிவித்த பவுல் இங்கே பாவம் ஆண்டுகொண்டது என்கிறார். ஆதாமை பாவம் ஆண்டுகொண்டதின் விளைவாக அவன் மூலமாக மரணம் மனித இனம் முழுவதையுமே ஆண்டுகொண்டது.

பாவம், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத மனித இனத்தை ஆண்டுகொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய முந்தின நிலையும் பாவ அடிமைத்தனத்துக்குட்பட்டதாகத்தான் இருந்தது. பவுல் சொல்லுகிறார்: "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" (எபே 2:1,2).

உலகில் பாவம் பெருகிக் கொண்டிருப்பதைக் குறித்து நாம் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. மனிதன் பாவம் செய்கிறான் என்பது மட்டுமல்ல, பாவத்தின் அடிமைத்தனத்திலிருக்கிறான். பாவம் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிர்பந்தத்துக்குள் இருக்கிறான்.

அதனால்தான் கிறிஸ்து சொல்லுகிறார்: "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" (யோவான் 8:34). தங்கள் அடிமைத்தனத்தை அவர்கள் அறிந்துகொள்ளாதபடிக்கு "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" (2 கொரி 4:4) என்று வாசிக்கிறோம். தங்களுடைய சுயவிருப்பத்தின் அடிப்படையில்தான் பாவம் செய்வதாக நாம் நினைத்துக்கொள்ளுகிறோம், அப்படி இல்லை. நம்முடைய மனதை குருடாக்கி நம்மை பாவம்செய்ய தூண்டுவது சாத்தான்.

மரணத்துக்கு ஏதுவான பாவம் ஆண்டுகொண்டிருப்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார். மரணம் என்ற வார்த்தை சரீரத்துக்குரிய மரணத்தை மட்டும் குறிப்பிடாமல் ஆவிக்குரிய மரணத்தையும் குறிப்பிடுகிறது. மெய்தேவனை அறிந்துகொள்ளாத ஒரு மனிதன் நித்திய மரணத்துக்குள் பிரவேசித்தவனாகிறான் (யோவான் 17:3). பாவம் ஒருவனை நித்திய நரகத்துக்குள்ளாக வழிநடத்துகிறது.

மனிதஇனத்தை பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது உண்மைதான் என்றாலும் பவுல் இந்த அதிகாரத்தின் கடைசிவசனத்தை உற்சாகமான ஒரு அறிவிப்போடு நிறைவு செய்கிறார். கிருபை கிறிஸ்து மூலமாய் நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது என்கிறார். பாவத்தின் எதிர்பதம் நீதி. மரணமும் கிருபையும் ஆளுகை செய்யும் மாமன்னர்களாக உருவகப்படுத்தப்பட்டு, கிருபை என்ற மன்னன் மரணம் என்ற மன்னனைத் தோற்கடிப்பது போல பவுல் சித்தரிக்கிறார். **கிருபை ஒன்றுதான் பாவத்தையும் அதன் வல்லமையையும் எதிர்த்து நிற்கக்கூடிய ஒரே சக்தி. நியாயப்பிரமாணம் பரிசுத்தமானதுதான் என்றாலும் அது நீதியை பிறப்பிக்கவில்லை என்பதினால் பாவத்தை மேற்கொள்ள முடியவில்லை.**

ஒரு மனிதன் நீதிமானாக்கப்படும்போது தேவகிருபை அவனுக்கு வழங்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, அது அவனில் செயல்பட, அதாவது கிரியை செய்ய ஆரம்பிக்கிறது. அவனையும், அவனைச் சுற்றியுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் அரசாள ஆரம்பிக்கிறது. அந்த ஆட்சி கிறிஸ்துவின் நீதியை அடிப்படையாகக் கொண்டது (ரோமர் 3:24-26). நியாயப்பிரமாணத்தின் சகல நியமங்களையும் அவர் தன்னுடைய பரிபூரணமான கீழ்ப்படிதலினாலே நிறைவேற்றினார் (மத் 5:17). அதன் விளைவாகவே கல்வாரி சிலுவையில் தேவகிருபை வெளிப்பட்டது. இதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரையும் கிருபை ஆளுகை

செய்கிறது. பாவத்தின் வல்லமைகளையும் சாத்தானுடைய கிரியைகளையும் மேற்கொள்ள தேவகிருபை போதுமானதாக இருக்கிறது.

ஆவிக்குரிய மரணத்தின் அடிமைத்தனத்திலிருந்த நம்மை கிருபை உயிர்ப்பிக்கிறது. "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே 2:1) என்று வாசிக்கிறோம். "மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை" (ரோமர் 8:7) என்ற வசனத்தின்படி மனிதன் தேவனுக்கு எதிராக செயல்படும் ஜென்ம சுபாவத்தை கிருபை மேற்கொள்ளுகிறது. **"இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய்" (அப் 26:9) வைராக்கியமாய் செயல்பட்ட பவுலையே தேவகிருபை மேற்கொண்டது என்று பார்க்கிறோம்.** தேவகிருபையின் செயலாற்றலை யூத பாரம்பரியங்களில் மூழ்கிக்கிடந்த பவுலினால் மட்டுப்படுத்த முடியவில்லை என்பதினால் இவ்வாறு அறிக்கையிடுகிறார்: "நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; ..... நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது" (1 கொரி 15:10).

தேவகிருபையின் செயலாற்றலின் விளைவால்தான் தேவனுக்கடுத்த காரியங்களிலும், சத்திய உபதேசங்களிலும், தேவனுடைய வார்த்தையிலும் நாம் ஆர்வம் காட்ட ஆரம்பிக்கிறோம். கிருபை நம்மை ஆண்டு கொள்ளாத நிலையில் ரோமருக்கு எழுதின நிருபத்தையும், அதின் விளக்கவுரையையும் வாஞ்சையோடு நம்மால் வாசிக்கமுடியும் என்று நினைக்கிறீர்களா?

அடுத்ததாக, இரட்சிக்கப்பட்ட நாம் வழிவிலகிப்போகாதபடி காத்துக்கொள்வதும் தேவகிருபையே, இரட்சிப்பில் நிலைத்திருக்கச் செய்வது மட்டுமல்ல, நம்மை தேவகிருபையே அனுதினமும் பரிசுத்தப்படுத்துவதாய் இருக்கிறது. "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பதையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிற வராயிருக்கிறார்" (பிலிப் 2:13) என்று வாசிக்கிறோம்.

தேவகிருபை நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டிருக்கிறது, கிருபை ஒருநாளும் தோல்வியடைவதில்லை என திட்டவட்டமாக அறிவிக்கும் பவுல் நம்பிக்கையோடு ஜெபிக்கிறார்: "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிற

பொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (பிலிப் 1:5,6). கிருபையின் செயலாற்றலைக்குறித்து ரோமர் 6,7,8 ஆகிய மூன்று அதிகாரங்களில் விளக்கங்களைத் தரும் பவுல் இந்த வசனத்தோடு அதை முடிக்கிறார்: "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்டியானாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8:38,39).

தேவ கிருபையின் வல்லமையான செயலாற்றலை நன்றாக அறிந்துகொள்ளுங்கள். பாவச்சேற்றில் கிடந்த நம்மைத்தேடி வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவன் இறங்கி வந்தார். தன்னுடைய குமாரனை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரையும் நீதிமான் என்று அறிவித்தார். ஒரு விசுவாசி அறிந்துகொள்ளவேண்டிய முதல் காரியம் இதுதான்: நான் பெலனற்ற பாவி அல்ல, நான் தேவனுடைய குடும்பத்தைச் சேர்ந்தவன் **"நான் பாவி, நான் பாவி" என்று எல்லாவேளைகளிலும் சொல்லிக்கொண்டிருப்பீர்கள் என்றால் தேவனுடைய வார்த்தையை நீங்கள் சரியாக அறிந்துகொள்ளவில்லை என்றுதான் பொருள்.** கிறிஸ்து கல்வாரி சிலுவையில் நிறைவேற்றி முடித்த இரட்சிப்பின் மேன்மையை உணர்ந்தவர்கள் தங்களை நீதிமான்களாகவே கருதுவார்கள். அதைத்தான் தேவனுடைய வார்த்தை சொல்கிறது.

இந்த அதிகாரத்தில் சொல்லப்படும் முக்கியமான சத்தியங்களை சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

1) எதினால் நீதிமானாக்கப்பட்டோம்?

1. விசுவாசத்தினால் (வசனம் 1)
2. இரத்தத்தினால் (வசனம் 9)

2) நாம் எதைக்குறித்து மேன்மை பாராட்டலாம்?

1. தேவ மகிமையை அடைவோமென்று (வசனம் 2)
2. நம் உபத்திரவங்களைக் குறித்து (வசனம் 4)
3. தேவனைக்குறித்து (வசனம் 11)

3) நாம் எதினால் இரட்சிக்கப்படுகிறோம்?

கிறிஸ்துவினுடைய ஜீவனால் (வசனம் 10)

4) நாம் எதிலிருந்து இரட்சிக்கப்படுகிறோம்?
தேவ கோபாக்கினையிலிருந்து (வசனம் 9)

5) பாவத்தின் விளைவு என்ன?
1. ஆக்கினைத் தீர்ப்பு (வசனம் 16,18)
2. மரணம் (வசனம் 12,15)

6) இந்த அதிகாரம் அறிவிக்கும் ஆளுகைகள் எவை?
1. பாவத்தின் ஆளுகை (வசனம் 21)
2. மரணத்தின் ஆளுகை (வசனம் 14,17)
3. கிருபையின் ஆளுகை (வசனம் 21)

6

பரிசுத்தத்தின் பாதையில் நீதிமான்

"ஆகையால் என்ன சொல்லுவோம்" என்று இந்த அதிகாரம் துவங்குகிறது. முந்தின வசனத்தின் (ரோமர் 5:21) தொடர்ச்சியாக பவுல் இந்த கேள்வியை எழுப்புவதினால், இந்த வசனத்தின் அடிப்படையில் பவுல் எதிர்கொள்ளும் இரண்டு முக்கியமான கேள்விகளுக்கான பதில்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம்.

முந்தின அதிகாரத்தில் பவுல் இரட்சிப்பின் நிச்சயம், குமாரனின் மரணத்தின் மூலமாக பாவிகள் தேவனுடன் ஒப்புரவாகுவதினால் நடைபெறுகிறது என்பதை வலியுறுத்தினார். முதல் நான்கு அதிகாரங்களில் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்ற உபதேசத்தை அறிவித்த பவுல் ஐந்தாவது அதிகாரத்தில் ஒருவர் நீதிமானாக்கப்பட்டதின் விளைவாக பெறும் சிலாக்கியங்கள் என்னவென்பதை அறிவித்தார். "தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம்" (ரோமர் 5:2) என்றார்.

நீதிமானாக்கப்பட்டவர்கள் பரிசுத்தமாக்கப்பட்டு மகிமைப்படுத்தப்படுவதின் நிச்சயமே கிறிஸ்தவத்தின் ஆதார சத்தியம். ரோமர் 5:10ல் பார்த்தபடி: "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" அவருடைய ஜீவன் நம் மூலமாக வெளிப்படவிருக்கிறது. அவருடைய ஜீவன் ஒருபோதும் தோல்வியடைவதில்லை. அது நம்மை நீதிமானாக்குவதோடு நின்றுவிடாமல் நம்மைப் பரிசுத்தப்படுத்தவும் ஆரம்பிக்கிறது.

முந்தின இரண்டு வசனங்களில் பவுல் அறிவித்த சத்தியத்தைக்

குறித்து யூதர்கள் மத்தியில் பெரிய சர்ச்சை உருவாகும் என்று பவுல் எதிர்பார்க்கிறார். "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது; அப்படியிருந்தும், பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று. ஆதலால் பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோமர் 5:20,21) கிருபையைக்குறித்தும், நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் பவுல் சொன்ன இந்த உபதேச சத்தியங்களுக்கு எதிராக இரண்டு கேள்விகள் சபையில் எழும்புகின்றன.

1) கிருபையின் உபதேசம் மனிதர்களை கூடுதலாக பாவம் செய்ய உற்சாகப்படுத்தாதா?

2) நியாயப்பிரமாணம் மீறுதல் பெருகுவதற்குக் காரணமாய் இருந்தது என்பதானால் தேவன் அதை ஏன் கொடுக்கவேண்டும்?

இந்த 6-வது அதிகாரத்தில் முதல் கேள்விக்கான பதிலையும், 7-வது அதிகாரத்தில் இரண்டாம் கேள்விக்கான பதிலையும் பவுல் கொடுத்துவிட்டு, ஐந்தாவது அதிகாரத்தின் தொடர்ச்சியாக 8-வது அதிகாரத்தில் நீதிமானாக்கப்பட்ட பரிசுத்தவான் பரிசுத்தமாக்கப்பட்ட நிலையில் இரட்சிப்பில் நிலைத்திருந்து மகிமைப்படுத்தப்படுகிறான் என்பதை அறிவிக்கிறார். பரிசுத்தம், பரிசுத்தமாகுதல் என்ற வார்த்தைகள் இந்த அதிகாரத்தில் இரண்டு வசனங்களில் மட்டும் சொல்லப்பட்டிருந்தாலும் (12,19), அதிகாரம் முழுவதிலும் நீதிமானாக்கப்பட்ட ஒருவன் கடந்து செல்லவேண்டிய பரிசுத்தத்தின் பாதையை மனதில் வைத்துக்கொண்டே பவுல் எழுதுகிறார்.

நாம் அறிந்துகொள்ளவேண்டிய காரியம் இதுதான். சிலுவையில் மரித்த கிறிஸ்துவின்மேல் ஒரு பாவி வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்பதை ரோமர் 3:21 முதல் 5:21 வரை அறிவித்ததைப் பார்த்தோம். இதை அடுத்து ரோமர் 6:1 முதல் 8:39 வரை உயிர்த்தெழுந்த இயேசுவின்மேல் ஒருவன் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் அவன் பரிசுத்தமாக்கப்படுகிறான் என்பதை பவுல் அறிவிக்கிறார். இந்த இரண்டு ஆவிக்குரிய அனுபவங்களும் ஒருவன் கிறிஸ்துவோடு இணைக்கப்படுவதின் விளைவாகவே சாத்தியமாகிறது. கலா 2:20, 2 கொரி 5:15 வாசித்துப்பாருங்கள்.

ஒரு கிறிஸ்தவன் இடுக்கமான வாசல்வழியாகப் பிரவேசித்து நெருக்கமான வழியிலே நடந்து ஜீவனுக்குள் பிரவேசிக்கவேண்டும் என்று

கிறிஸ்து சொல்லுகிறார் (மத் 7:13,14). நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன் இடுக்கமான வாசல்வழியாக கடந்து வந்துவிட்டான். இது நடந்துமுடிந்துவிட்ட ஒரு காரியம் என்பதினால் இனி அவன் அதைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை. ஆனால் அனுதினமும் பரிசுத்தமாக்கப்பட்டவனாய் நெருக்கமான வழியில் நடந்து ஜீவனைப் பெறவேண்டும்.

நீதிமானாக்கப்படுதலும், பரிசுத்தமாக்கப்படுதலும் ஒன்றோடொன்று இணைந்த கிரியைகள். **நீதிமானாக்கப்படுவது என்பது ஒரே நேரத்தில் நடந்துமுடிகிறது. பரிசுத்தமாக்கப்படுவது என்பது ஒரு தொடர் கிரியை. நீதிமானாக்கப்படாத ஒரு மனிதன் பரிசுத்தமாக்கப்படுவதில்லை.** இன்னொரு வகையில் சொல்வதானால் விசுவாசத்தில் துவங்கும் நீதிமானாக்கப்படுதல், அதே விசுவாசத்தினால் பரிசுத்தமாக்கப்படுவதின் மூலமாக மகிமைப்படுத்தப்படுதலில் பூரணமடைகிறது. எனவே சில வேத பண்டிதர்கள் ரோமர் நிருபத்தின் 6,7,8 அதிகாரங்களை இவ்விதமாக தலைப்பிட்டு விளக்கம் தருகிறார்கள்.

அதிகாரம் 6	பரிசுத்தமாக்கப்படுதலின் துவக்கம்.
அதிகாரம் 7	பரிசுத்தமாக்கப்படுதலில் உண்டாகும் தடைகள்.
அதிகாரம் 8	பூரணப்படுத்தப்பட்ட பரிசுத்தமாக்கப்படுதல்.

பாவத்துக்கு மரித்தவர்கள் (வசனம் 1-5)

ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. (ரோமர் 6:1)

"ஆகையால் என்ன சொல்லுவோம்?" என்று பவுல் சொல்லும்போது, அதின் பின்னணியில் நம்முடைய நினைவுக்கு அவர் கொண்டுவரும் முந்தின அதிகாரத்து வசனங்கள்

1) நாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனுக்கேற்ற நீதிமான்களானோம் (வசனம் 9)

2) நாம் தேவனுக்கு பகைவர்களாயிருக்கும்போது கிறிஸ்துவின் மரணம் நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியது. (வசனம் 10)

3) மீறுதலின் பலனைவிட கிருபை வரத்தின் பலன் மேம்பட்டது. (வசனம் 15)

4) தேவனுடைய கிருபை அநேக குற்றங்களை நீக்கி நீதியை வெளிப்படுத்துகிறது. (வசனம் 16)

5) இதனால் அநேகர் கிறிஸ்து மூலமாக ஜீவனை அடைந்து ஆளுவார்கள். (வசனம் 17)

6) கிறிஸ்துவின் பரிபூரணமான கீழ்ப்படிதலினால் பலர் நீதிமான்களாவார்கள். (வசனம் 19)

7) மனிதர்கள் மிகுதியாய் பாவம் செய்யும்போது தேவன் தன் கிருபையை இன்னும் அதிகமாக வெளிப்படுத்துகிறார் (வசனம் 20)

கிறிஸ்துவின் மூலமாக பெறும் இலவசமான இரட்சிப்பு, பாவத்தை மேற்கொள்ளும் கிருபை ஆகியவற்றை பவுல் சுட்டிக்காட்டும்போது உலக மக்கள் என்ன சொல்கிறார்கள்? "கிருபை பெருகும்படிக்கு பாவம் செய்யலாமே" என்கிறார்கள். ரோமர் 3:8ல் "நன்மை வரும்படிக்குத் தீமைசெய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா" என்று கேள்வி எழுப்பப்பட்டதைப் பார்த்தோம். தேவகிருபைக்கு எதிராகச் சொல்லப்படும் "Antinomianism" என்ற தவறான உபதேசம் சபையின் வரலாற்றில் பலகாலக்கட்டங்களில் போதிக்கப்பட்டு வந்துள்ளதைப் பார்க்கிறோம். கிருபையின் உபதேசம் காமவிகாரத்துக்கேதுவாக புரட்டப்பட்டுவருகிறது என்று யூதா 4ல் இதைக்குறித்து வாசிக்கிறோம். 2 பேதுரு 3:16 வாசித்துப்பாருங்கள்.

ரஷ்யாவின் இரண்டாம் நிக்கொலோஸ் என்ற அரசனின் நாட்களில் ரஸ்புட்டின் என்ற துறவி, ஒரு மனிதன் மனப்பூர்வமாகப் பாவம் செய்து, அதன்பின் தான் மனந்திரும்புவதாக அறிவிக்கும்போது ஒரு சாதாரண மனிதனைவிட கூடுதலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதினால் பாவம் செய்துகொண்டே இருப்பது நல்லது என்று போதித்து வந்ததை ரஷ்யா நாட்டின் சரித்திரத்தில் இருந்து அறிந்துகொள்கிறோம். பாவத்தை மேற்கொள்ளும் கிருபை பாவம் பெருகுவதற்குக் காரணமாக இருக்கமுடியாது.

இந்தத் தவறான எதிர்ப்புக்கு 'கூடாதே' என்று உடனடியாக பதில் சொல்லுகிறார் பவுல். ஆங்கிலத்தில் 'தேவன் தடை செய்வாராக' God forbid என்றும், சில மொழிபெயர்ப்புகளில் "அப்படி இருக்காது, அப்படிச் சொல்லவேகூடாது" என்றும் இந்த வார்த்தை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவஞ்செய்யலாமா? கூடாதே? (ரோமர் 6:15) என்கிறார். **தேவகிருபை பாவத்திலிருந்து விடுதலை தருகிறது என்பது உண்மைதான். பாவம் செய்வதற்கு விடுதலை தரவில்லை (1 பேதுரு 2:16).**

இந்த வசனம் அறிவிக்கும் சத்தியத்தை இந்த வரைபடம் விளக்குகிறது.

கேள்வி	பதில்	பவுல் தரும் ஆலோசனை
கிறிஸ்தவன் பாவம் செய்யலாமா? வசனம் 1,16	**கூடாது. ஏனென்றால்** **1. நாம் பாவத்துக்கு மரித்த வர்கள் (வசனம் 1)** **2. நாம் கிறிஸ்துவுக்குள் பிழைத் திருக்கிறோம் (வசனம் 11)** **3. நாம் நீதிக்கு மட்டும் அடிமைகள் (வசனம் 16)**	**பாவம் உங்களை ஆளாதிருக்கட்டும்**

பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்? (ரோமர் 6:2)

கிருபை பெருகும்படிக்கு பாவம் செய்யலாம் என்று சொல்வது அபத்தமானது, முட்டாள்தனமானது, பைத்தியக்காரத்தனமானது. ஏனென்றால் இப்படிச் சொல்பவர்கள் மூன்று காரியங்களைக் குறித்து உணர்வற்றவர்களாய் இருக்கிறார்கள்.

1) அவர்கள் பாவத்தின் கொடூரத்தையும், அதின் ஆளுகையையும் அறியாதிருக்கிறார்கள்.

2) அவர்கள் தேவகிருபை வெளிப்பட்டதின் பின்னணி என்ன என்பதை உணர்ந்து கொள்ளாதிருக்கிறார்கள்.

3) அவர்கள் நீதிமானாக்கப்பட்டவர்களை ஆளுகை செய்யும் கிருபையின் மேன்மையை ருசிக்காதவர்களாக இருக்கிறார்கள்.

"பாவத்துக்கு மரித்த நாம் அதில் எவ்வாறு பிழைப்போம்" என்ற எதிர்கேள்வியை பவுல் சபைக்கு முன்பாக வைக்கிறார். பாவம் செய்கிறவன் பாவத்தில் வாழ்கிறான். நாமோ பாவத்துக்கு மரித்துவிட்டோம் என்கிறார்.

பாவத்துக்கு மரிப்பது என்பது ஒரு மகத்துவமான காரியம். இதன் விளைவாகவே ஆத்துமா இரட்சிக்கப்படுகிறது. சரீரம் மகிமைப்படுத்தப்படுகிறது. ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது. நீதிமான்களாக்கப்பட்ட யாவரும் ஒருகாலத்தில் பாவிகளாக இருந்தவர்கள்தான். பேதுரு சொல்வதுபோல "சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம் பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்து வந்தோம்" (1 பேதுரு 4:3).

ஆனால் அந்த பாவங்களுக்கெல்லாம் நாம் இப்போது கிறிஸ்துவுக்குள் மரித்துவிட்டோம். "நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ 3:3). "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு" (1 பேதுரு 2:24) கிறிஸ்து மரித்தார். இந்த மரணத்தின் அனுபவத்தை பவுல் இவ்வாறு குறிப்பிடுகிறார். "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்" (கலா 2:20) சிலுவையில் அறையப்பட்டு மரித்த ஒரு மனிதனால் எவ்வாறு பாவம் செய்யமுடியும்? தொடர்ந்து பவுல் சொல்கிறார்: "ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்", பவுல் சிலுவையில் அறையப்பட்டபின்னும் அவர் பிழைத்திருக்கிறார் என்றாலும் கிறிஸ்துவே அவருக்குள் பிழைத்திருக்கிறார். அவர் ஒருபோதும் பாவம் செய்வதில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்துக்கு மரித்தவர்கள் என்பது ரோமர் நிருபத்தில் பவுல் அறிவிக்கும் மூல உபதேசங்களில் ஒன்று என்பதினால் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களின் அடிப்படையில் இதை நம்புவது கடினமான காரியம்தான். ஆனால் இந்த நம்பிக்கை இல்லாத நிலையில் ஒருவன் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியாது. எனவேதான் இந்த அதிகாரத்தின் துவக்கத்திலேயே ஒன்பது இடங்களில் ஒரு கிறிஸ்தவன் பாவத்துக்கு மரித்தவன் என்பதை உறுதிப்படுத்தி பவுல் பேசுகிறார்.

1) பாவத்துக்கு மரித்தோம். (வசனம் 2)

2) கிறிஸ்துவுடைய மரணத்துக்குள் ஞானஸ்நானம் பெற்றோம். (வசனம் 3)

3) கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டோம். (வசனம் 4)

4) கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டோம் (வசனம் 5)

5) கிறிஸ்துவோடேகூட சிலுவையில் அறையப்பட்டோம் (வசனம் 6)

6) மரித்தவன் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் படுகிறான் (வசனம் 7)

7) கிறிஸ்துவுடன் மரித்தவர்கள் அவரோடு பிழைத்திருப்பார்கள். (வசனம் 8)

8) பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ள வேண்டும். (வசனம் 11)

9) மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக ஒப்புக்கொடுக்கவேண்டும். (வசனம் 13)

"பாவத்துக்கு மரித்த நாம்" என்று பவுல் சொல்வதினால் அந்த மரணம் ஏற்கனவே நடந்து முடிந்த நிகழ்ச்சியாக எடுத்துக்கொள்ளவேண்டும். 6,7,8,10,11 ஆகிய வசனங்களிலும் மரணம் கடந்தகால நிகழ்ச்சியாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நாம் மரித்துவிட்டோம் என்றாலும் நாம் பாவத்தின் செல்வாக்கு, சக்தி, வல்லமை, ஆளுகை ஆகியவற்றை முற்றிலுமாக மேற்கொண்டுவிட்டோம் என்று சொல்லிவிடமுடியாது. கிறிஸ்துவைத் தவிர முற்றிலுமாக பாவத்தை மேற்கொண்ட ஒரு மனிதனும் உலகில் இல்லை. "பாவத்துக்கு மரித்தவர்கள்" என்று சொல்லும்போது பாவத்தின் குற்றப்பழிக்கும், தண்டனைக்குள்ளாக்கப்படும் நிலைக்கும் தப்புவிக்கப்பட்டதாக சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். **உண்மையில் கிறிஸ்தவர்கள் பாவத்தின் ஆளுகைக்கும் அடிமைத்தனத்துக்கும் மரித்திருக்கிறார்கள். மரித்த ஒரு மனிதனைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் எந்த சக்திக்கும் இல்லை.** மரித்த ஒரு மனிதன் யாருக்கும் கடனாளியாயிருப்பதில்லை.

தேவனால் நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் முற்றிலுமாக பாவத்தின் ஆளுகைக்கும், அதிகாரத்துக்கும் மரித்தவனாகிறான். இருளின் அதிகாரத்தினின்று நாம் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் (கொலோ 1:13). பாவத்துக்கு மரித்ததின் விளைவாகவே "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது" (பிலிப் 3:20) என்று பவுல் சொல்கிறார். "பரலோகத்தில் இருக்கும்" என்று சொல்லாமல் ஏற்கனவே நாம் அங்கே இருப்பதாகப் பவுல் குறிப்பிடுகிறார். ஏனென்றால் பாவத்துக்கு மரித்தவர்கள் பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்க முடியாது. 1 யோவான் 3:9 சொல்லுகிறபடி: "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய

வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்".

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 6:3)

கிறிஸ்துவோடு இணைத்துக்கொண்ட நாம் எல்லாருமே பாவத்துக்கு மரித்தவர்கள் என்று பார்த்தோம். நாம் பாவத்துக்கு மரித்தோம் என்பதை உறுதிப்படுத்தும் காரியங்களை பவுல் 3 முதல் 11 வரையுள்ள வேதபகுதியில் அறிவிக்கிறார். சுருக்கமாகச் சொல்வதானால் **கிறிஸ்துவுக்குள் நாம் வைத்திருக்கும் ஐக்கியத்தின் விளைவாகவே நம்மால் பாவத்துக்கு மரிக்கமுடிகிறது.** கொடியானது திராட்சைச் செடியில் நிலைத்திருப்பதைப்போல் (யோவான் 15:4), கிறிஸ்துவில் நிலைத்திருந்தால் மட்டுமே நாம் பாவத்தை மேற்கொள்ளமுடியும்:

இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் பயன்படுத்தப்படும் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தை கிறிஸ்தவர்களாகிய நாம் சபைகளில் எடுக்கும் ஞானஸ்நானம் என்ற புனிதச்சடங்கைக் குறிப்பிடவில்லை. இந்த சடங்கை நாம் அனுசரிக்கும்போது கிறிஸ்துவின் பிரமாணத்துக்கு கீழ்ப்படிகிறோம் என்பது உண்மைதான். ஆனால் இந்த ஞானஸ்நானம் என்ற சடங்கு நம்மை கிறிஸ்துவோடு இணைப்பதில்லை. கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த சடங்கு உறுதிப்படுத்துகிறது என்பதே உண்மை. கிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறுவது (மத் 28:19, அப் 2:38; 10:48; 19:5) கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தையே வெளிப்படுத்துகிறது.

ஞானஸ்நானம் ஒரு மனிதனை விசுவாசியாக்குவதில்லை. ஒரு மனந்திரும்பிய விசுவாசியே ஞானஸ்நானம் எடுக்கிறான். எத்தியோப்பிய ராஜஸ்திரீயின் மந்திரியும், எத்தியோப்பிய பொக்கிஷசாலையின் தலைவனுமாகியவன், பிலிப்பு மூலமாக சொல்லப்பட்ட சத்தியத்தை விசுவாசித்ததின் விளைவாகவே (அப் 8:37) ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிறான். கொர்நேலியு குடும்பத்தாரைப் பற்றி பேதுரு சொல்லுகிறார். "நம்மைப்போல் பரிசுத்த ஆவியைப் பெற்ற இவர்களும் ஞானஸ்நானம் பெறாதபடிக்கு எவனாகிலும் தண்ணீரை விலக்கலாமா" (அப் 10:47). இந்த இடத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை ஏற்கனவே பெற்றவர்கள் ஞானஸ்நானம் பெறுகிறார்கள். "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும்

இரட்சிக்கப்படுவீர்கள்" என்ற உபதேசத்தைக் கேட்டு, அதற்குக் கீழ்ப்படிந்து இயேசுவை விசுவாசித்ததின் விளைவாகவே பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரரும் அவர் குடும்பத்தாரும் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் (அப் 16:31). பவுல் சொல்கிறார்: "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே" (கலா 3:27).

"எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்" (1 கொரி 10:2) என்ற வசனம் இஸ்ரவேலர் செய்த வெளிப்படையான சடங்கைக் குறிப்பிடாமல் அவர்கள் மோசேயோடு கொண்டிருந்த ஐக்கியத்தையும், அர்ப்பணிப்பையுமே வெளிப்படுத்துகிறது. 1 கொரிந்தியர் 12:13 வாசித்துப்பாருங்கள். "எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்". முந்தின வசனங்களையும் வாசித்தால் கிறிஸ்துவின் சரீர அவயவங்களாகிய ஒவ்வொரு விசுவாசியையும் இணைப்பது பரிசுத்த ஆவியானவரின் செயலாற்றல் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

கிறிஸ்துவின் மரணத்துக்கு மனித இனத்தின் பாவமே காரணம் என்பதைப் பார்த்தோம். "அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரு தரம் மரித்தார்" (ரோமர் 6:10). எபி 7:27; 9:12,28; 10:10 வாசித்துப்பாருங்கள். கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு அவருக்குள் நிலைத்திருக்கும் நாம் அவருடைய மரணத்திலும் பங்கு கொண்டவர்கள் ஆகிறோம். இந்த அனுபவத்தையே பவுல் "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்" (கலா 2:20) என்கிறார். கிறிஸ்துவோடு அரைகுறையாக அல்ல, முழுமையாக இணைக்கப்படவேண்டும். **நாம் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் மேன்மை நம்முடைய பாவமன்னிப்பில் மட்டும் அடங்கியிருக்கவில்லை. கிறிஸ்துவோடு, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக இணைக்கப்படுவதிலும் அடங்கியிருக்கிறது.** கிறிஸ்து நமக்குள் இருக்கிறார். நாம் அவருக்குள் இருக்கிறோம். முன்பு ஆதாமுக்குள் இருந்த நாம் இப்போது கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். ஒரு மனிதன் ஆதாமுக்குள் இருக்கவேண்டும், அல்லது கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டும். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவும் கிடையாது. கிறிஸ்துவோடு இணைக்கப்படாத ஒரு மனிதன் கிறிஸ்தவனாக இருக்கமுடியாது.

கிறிஸ்துவின் மரணத்தோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்கள் அதினால் உண்டாகும் சகல ஆசீர்வாதங்களையும்



சுதந்தரிக்கிறவர்கள் ஆகிறார்கள். இதை "அறியாதிருக்கிறீர்களா" (know ye not) என்று பவுல் உரிமையோடு ரோமாபுரி சபையாரைக் கேட்கிறார். ஆவிக்குரிய சத்தியங்களை அறியாதிருப்பது மிகவும் ஆபத்தானது என்பதினால் நிக்கொதேமுவிடமும் "நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?" (யோவான் 3:10) என்று கிறிஸ்து வேதனையோடு கேட்பதைப் பார்க்கிறோம். இந்த கடைசிநாட்களில் சபைகளில் போதகர்கள் பெருகிவருவது உண்மைதான். அவர்களில் பலருக்கு உபதேச சத்தியங்கள் தெரியாது. ரோமர், எபேசியர், எபிரெயர் நிருபங்களில் இருந்தும், வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்தும் வசனங்கள் பிரசங்கிக்கப்படுவதை இந்த நாட்களில் கேட்கமுடிவதில்லையே.

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். (ரோமர் 6:4)

கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளான ஞானஸ்நானத்தைப் பற்றி முந்தின வசனத்தில் அறிவித்த பவுல் இங்கு அந்த மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் என்கிறார். **நாம் அடக்கம் பண்ணப்பட்டதினால் மரித்தோம் என்பதல்ல, மரித்ததின் விளைவாகவே நாம் அடக்கம்பண்ணப்படுகிறோம்.** அடக்கம் என்பது மரணத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது. அடக்கம் பண்ணப்படும்போது

இறந்துபோன மனித சரீரம் பூமியில் தோண்டப்பட்ட ஒரு குழியில் வைக்கப்பட்டு, மண்ணினால் மூடப்படுகிறது. அந்த மனிதன் அதற்குப்பின் இந்த உலகத்தோடு சம்பந்தமில்லாதவனாகப் போய்விடுகிறான். உயிரோடிருக்கும்போது கிறிஸ்துவோடு ஐக்கியங்கொண்டிருந்த நாம் அவருடைய மரணத்தில் மட்டுமல்ல, அவருடைய அடக்கத்திலும் ஐக்கியங் கொண்டவர்கள் ஆகிறோம். அதன் விளைவாக முற்றிலுமாக பாவத்தின் ஆளுகையில் இருந்து விடுதலை பெற்றவர்களாகிறோம் (ரோமர் 5:21). உலகத்தோடு எந்த தொடர்பும் இல்லாமல் போகிறது.

மரித்து, அடக்கம்பண்ணப்பட்ட கிறிஸ்து பிதாவின் மகிமையினால் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். பிதாவின் மகிமையின் வல்லமை அதில் செயல்பட்டதாக பவுல் அறிவிக்கிறார். "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமை"யைக் குறித்து பவுல் எபேசியர் 1:19ல் பேசுகிறார். "அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்" (2 கொரி 13:4). லாசருவை உயிரோடு எழுப்புவதற்குமுன் கிறிஸ்து மார்த்தாளிடம்: "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" (யோவான் 11:40) என்று சொல்வதிலிருந்து 'மகிமை' என்ற வார்த்தை தேவனுடைய வல்லமையையும் சேர்த்து குறிப்பிடுகிறது என்பதை அறிந்துகொள்கிறோம். புதிய ஏற்பாட்டில் இந்த இரண்டு வார்த்தைகளுமே இணைத்துச் சொல்லப்படுவதைப் பார்க்கிறோம். (மத் 24:30, மாற்கு 13:26, லூக்கா 21:27, வெளி 5:12,13).

"பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது" என்று ரோமர் 5:21ல் வாசித்தோம். இந்த ஆளுகையை முறியடிக்கவேண்டுமானால் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டே ஆகவேண்டும். "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது" (அப் 2:24) என்கிறார் பேதுரு. பாவமும், மரணமும் கிறிஸ்துவை கல்லறைக்குள் வைத்து ஜெயங்கொண்டதாக நினைத்துக் கொண்டிருக்கும்போது பிதாவாகிய தேவன் அவரை எழுப்பினார். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை இனி பாவமும் மரணமும் ஆண்டுகொள்ள முடியாது. இனி அவர் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவரல்ல. சிலுவையின் மரணம் வரைக்கும் அவர் கீழ்ப்படிந்தவராகவும், பணிவுள்ளவராகவும் இருந்தபடியால், பிதா அவருடைய பெயரை மேன்மைப்படுத்தி உயர்த்தினார் (பிலிப் 2:8,9).

"கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால் எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா" (1 கொரி 15:14) என்கிறார் பவுல்.

பிதாவாகிய தேவன், கிறிஸ்து தன்னை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்ததை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்தும்படியாக, மூன்றாம் நாளில் எழுப்பினார். **அவருடைய சிலுவை மரணம் பாவத்தின் வல்லமையை மேற்கொள்கிறது என்றால் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை அவருடையவர்களை நீதியில் நிலைத்திருக்கச் செய்து பரிசுத்தப்படுத்துகிறது.** அவரால் நீதிமானாக்கப்பட்டவர்கள் அவரோடு மரித்தார்கள் என்பது மட்டுமல்ல, உயிர்த்த இயேசுவுக்குள் இன்று ஜீவிக்கிறார்கள். நித்திய நித்தியமாக ஜீவிக்கப்போகிறார்கள்.

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாக நடந்துகொள்ளும்படியாக எழுப்பப்படுவது உறுதி என்கிறார் பவுல். "தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார்" (1 கொரி 6:14), ஏனென்றால் அவருடைய மரணத்திலும் அடக்கத்திலும் நாம் ஐக்கியங்கொண்டவர்கள். "ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" (கொலோ 2:12).

இவ்வாறு நாமும் எழுப்பப்படுகிறோம் என்றால் அதின் நோக்கம் என்ன? "புதிதான ஜீவனுடையவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு" என்கிறார் பவுல். மரணத்துக்குப் பின் புதிதான ஜீவனைப் பெறுவோம் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அதற்காக முயற்சி செய்யவில்லை. கிறிஸ்துவுக்குள் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டதின் விளைவாக இது தானாக நமக்குச் சம்பவிக்கிறது. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்" (2 கொரி 5:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது. நடப்பது என்பது நாம் ஜீவனுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகிறது. மேலும் "நடந்துகொள்வது" என்ற வார்த்தை ஒரு மனிதனுடைய பொதுவான, புதிய வாழ்க்கை முறையில் நிலைத்திருப்பதைக் குறிப்பிடுகிறது. (ஆதி 17:1, யாத் 16:4, சங் 56:13; 101:2; 119:1, ரோமர் 4:12; 8:1,4; 13:13; 14:5, 1 கொரி 3:3; 2 கொரி 5:17, கலா 5:16,25, எபே 2:10). இந்த புதிய ஜீவனுள்ள வாழ்க்கை பரலோகத்தில் நாம் வாழப்போகும் விதத்தை மட்டும் குறிப்பிடவில்லை. இங்கே, இந்த பாவ உலகில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே புதிய ஜீவனுள்ள வித்தியாசமான வாழ்க்கை நம்முடையதாக இருக்கும். ஏனென்றால் நம் வாழ்க்கை கிறிஸ்துவுக்குள் மறைந்திருக்கிறது. பரிசுத்தத்தின் பாதையில் நாம் அடியெடுத்து வைக்கத் துவங்குகிறோம்.

ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். (ரோமர் 6:5).

கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்துக்கு மரித்தோம் என்பது மட்டுமல்ல, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்பட்டோம் என்பதை முந்தின வசனத்தில் பார்த்தோம். இந்த அதிகாரத்தின் முக்கியமான வசனமாகக் கருதப்படும் இந்த வசனம் என்ன சொல்கிறது? கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் (மரணத்தில் அல்ல) இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பது உண்மையானால் அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம். ஒருவன் அவருடைய மரணத்தில் பங்கு கொண்டபின் அதோடு நின்றுவிடுவதில்லை. அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் அவர் நடப்பித்த சகல காரியங்களிலும் பங்குள்ளவனாகிறான். கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்தார் என்றால் நாமும் மரித்து உயிர்த்தெழுவோம். "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" (2 தீமோ 2:11) என்கிறார் பவுல். கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் நம்மை இணைத்தது நாமல்ல, பிதாவாகிய தேவன். அவரே நம்மை உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைப்பார்.

"கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டவர்களானால்" என்று பவுல் சொல்வதினால் கிறிஸ்தவர்களாகிய நாம் அவ்வாறு இணைக்கப்படாமல் இருக்கமுடியும் என்று யோசித்துவிடக்கூடாது. கிறிஸ்துவோடு இணைக்கப்படாதவன் கிறிஸ்தவனே அல்ல என்பதைப் பார்த்தோம். "மரணத்தின் சாயல்", "உயிர்த்தெழுதலின் சாயல்" என்று பவுல் குறிப்பிடுவதையும் கவனியுங்கள். நிச்சயமாகவே நம்முடைய மரணமும் உயிர்த்தெழுதலும் திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும்விட மகிமையில் குறைவானதாகத்தான் இருக்கும் என்பதை உணர்ந்தவராய் பவுல் "சாயல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். ரோமர் 8:3லும் கிறிஸ்து பாவமாம்சத்தில் பிதா அனுப்பிவைத்ததாகப் பவுல் குறிப்பிடாமல், பாவமாம்சத்தின் சாயலாக அனுப்பப்பட்டதாக பவுல் குறிப்பிடுகிறார்.

"கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலில் இணைக்கப்பட்டிருப்போம்" என்று எதிர்காலத்தில் நடக்கும் ஒரு நிகழ்ச்சியாக பவுல் அறிவிப்பதையும் கவனியுங்கள். சில வேத ஆராய்ச்சியாளர்கள், நித்தியத்தில், நாம் மகிமையின் சரீரத்தோடு பரலோகத்துக்குள் பிரவேசித்தபின்புதான் இது சம்பவிக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால் பவுல் இந்த வேதபகுதியில் இந்த பூமியிலேயே

பாவத்தை மேற்கொள்ளும் அதிகாரமுடையவர்களாக இருப்பார்கள் என்பதைக் குறித்து பேசுகிறார். உலகத்திலேயே "புதிதான ஜீவனுள்ளவர்களாய்" (வசனம் 4) நடக்கும்படியாக கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தியானித்தோம்.

கிறிஸ்துவின் மரணத்தோடு ஐக்கியங்கொள்ள விரும்பும் தனது வாஞ்சையை பிலிப்பியர் 3:10,11ல் பவுல் இவ்வாறு அறிவிக்கிறார்: "நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்". **கிறிஸ்துவினிமித்தம் தங்களையும், தங்களுக்குரியவைகளையும் தியாகம் பண்ணுகிறவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள்.**

கிறிஸ்துவின் மரணத்தோடு இணைப்பு (வசனம் 6,7)

நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 6:6)

நம்முடைய பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா 2:20), "நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்" (கலா 6:14) என்ற நிச்சயம் உடையவர்களே கிறிஸ்தவர்கள் என்கிறார் பவுல். இவ்வாறு பழைய மனுஷன் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுவதினால் உண்டாகும் விளைவுகள் என்னென்ன என்பதையும் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

1) நாம் பாவத்துக்கு ஊழியம் செய்யமாட்டோம்.

2) நம்முடைய பாவ சரீரம் அழிந்துபோகும்.

"பழைய மனிதன்" என்று பவுல் யாரை குறிப்பிடுகிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இந்தப்பதம் வேதத்தில் இன்னும் இரண்டு

வசனங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு . . . தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபே 4:22-24). "பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு . . . புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ 3:9,10).

இந்த வசனங்களில் பழைய மனுஷன் என்ற வார்த்தை இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஒரு மனிதனில் இயல்பாகக் காணப்படும் பாவ சுபாவம், ஒழுக்கக் குறைவு, வெறி உணர்வுகள், இச்சை, கோபம் மற்றும் சகலவிதமான தவறான மனப்பாங்குகளையும் குறிப்பிடுவதாகவும், புதிய மனுஷன் என்ற வார்த்தை தேவனால் நீதிமானாக்கப்பட்டதின் விளைவாக ஒருவனில் தோன்றும் சுபாவ மாற்றத்தையும் குறிப்பிடுவதாக பொதுவாகக் கருதப்படுகிறது. இந்த பழைய மனுஷனை நாம் சிலுவையில் அறைவதில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் அறையப்பட்டு விட்டான் என்று விசுவாசிக்கிறோம்.

இதின் அடிப்படையில் நாம் நம்முடைய பழைய சுபாவத்துக்கு மரித்தவர்களாகிவிட்டோம் என்ற உறுதி நம்மில் உருவாகவேண்டும். இந்த அனுபவத்தையே பவுல் "நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" (கொலோ 3:3) என்கிறார். "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்" (கலா 2:20) என்கிறார். சிலுவையில் அறையப்படுதல் என்றால் என்ன? கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மாத்திரம் சிலுவையில் அறையப்படாமல், நம்முடைய மாம்சத்தையும் அதின் இச்சைகளையும் தன்னில் ஏற்று சிலுவையில் அறையுண்டார் என்று பொருள் கொள்ளவேண்டும். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது நம்முடைய பாவங்களை தன்மேல் ஏற்றுக்கொண்டதுபோல், அவரோடு இணைந்துகொண்டு, நம்முடைய மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிட்டதாகவும் பொருள் கொள்ளவேண்டும். அதாவது அவை இறந்து போய்விட்டன. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா 5:24).

இவ்வாறு சிலுவையில் அறையப்பட்டது நம்முடைய பழைய மனுஷன். அவன் மரித்துவிட்டான் என்பதினால் இனி நாம் பாவம் செய்வதில்லை என்பது மட்டுமல்ல, பாவம் இனி நம்மை ஆளுகை செய்யாது என்பது மட்டுமல்ல, நாள் ஒன்று வரும் அப்போது பாவம்

நம்மை அணுகாது என்ற நிலை ஏற்படும். வேதத்தில் ஒரு இடத்திலும் பாவம் மரித்ததாகச் சொல்லப்படவில்லை. பாவத்துக்கு நாம் மரிக்கிறோம்.

"பழைய மனுஷன்" என்ற வார்த்தை இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஒருவனில் காணப்பட்ட பாவசுபாவத்தையும், மாம்ச இச்சைகளையும் உலகத்துக்கடுத்த ஆசாபாசங்களையும் மட்டுமே குறிப்பிடுவதாக எடுத்துக்கெள்ளக்கூடாது. **ஆதாமுக்குள் நான் யாராக இருந்தேனோ, அதுதான் என்னுடைய பழைய மனுஷன். கிறிஸ்துவுக்குள்ளாக இன்று நான் யாராக இருக்கிறேனோ அதுதான் என்னுடைய புதிய மனுஷன்.** ஆதாமுக்குள்ளாக இருந்த என்னுடைய பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டுவிட்டான் என்பதை இந்த வசனத்தின்படி நம்புங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னைத்தானே சிலுவையில் அறைந்துகொள்ளமுடியாது. நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கிறிஸ்துவின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்கும்போது அவரே அவனை தன்னோடு சிலுவையில் அறைகிறார்.

இந்த வசனத்தைச் சற்று கவனமாக வாசித்தோமானால், இதிலும், மற்ற இடங்களிலும் நம்முடைய பழைய மனுஷனை சிலுவையில் அறையும்படியான ஆலோசனை தரப்படாமல், அவன் ஏற்கனவே அறையப்பட்டுவிட்டதாகவே நாம் வாசிக்கிறோம். நாம் செய்ய வேண்டிய ஒரே காரியம் ஆதாமுக்குள் இருப்பதைப்போல் நினைத்துக்கொண்டு நம்முடைய கிரியைகளை செய்யக்கூடாது என்பதே. **நமக்குள் ஆதாம் இல்லை என்பதை அறிந்து செயல்படுவதே பரிசுத்தமாக்கப்படும் உன்னதமான அனுபவமாகும்.** நாம் ஆதாமுக்குள் இல்லை, கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் என்ற உணர்வுடன் வாழ்கிறவர்களால் மட்டுமே வெற்றியுள்ள மகிழ்ச்சி நிறைந்த கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியும். பழைய மனுஷன் நம்மில் இல்லை என்பதை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம். இதன் விளைவாகவே நம்முடைய இரட்சிப்பு நிலைநிறுத்தப்படுகிறது.

பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டதின் விளைவாக நாம் பாவத்துக்கு ஊழியம் செய்வதில்லை. இதை விளங்கிக்கொள்வது எளிதாக இருக்கிறது. நாம் பாவம் செய்வதில்லை என்று பவுல் சொல்லவில்லை. பாவத்தில் நிலைத்திருப்பதில்லை. பாவம் செய்தே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இல்லை. இவ்வாறு பாவத்துக்கு ஊழியம் செய்யாதிருப்பதினால் நாம் பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டு வருகிறோம். நம்முடைய பாவசரீரம் அழிந்துபோவது இரண்டாவது விளைவாகக் குறிப்பிடப்படுகிறது. பாவ சரீரம் என்ற வார்த்தை நம்முடைய பாவ சுபாவத்தையோ, பழைய மனுஷனையோ குறிப்பிடாமல் நம்முடைய

மாம்சசரீரத்தை மட்டுமே குறிப்பிடுகிறது. இது பாவத்தின் ஆளுகைக்குட்பட்டதாக இருக்கிறது. இது ஒழிந்து போகவேண்டுமானால் பழைய மனுஷன் சிலுவையில் அறையப்படவேண்டும். "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" (ரோமர் 6:12), மற்றும் ரோமர் 6:19 இதை உறுதிப்படுத்துகிறது.

"என்னிடத்தில் அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லை" (ரோமர் 7:18) என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இரட்சிக்கப்படும்போது **ஒரு மனிதன் தன்னுடைய ஆவியில்தான் உயிர்ப்பிக்கப்படுகிறான். ஆவியில்தான் மறுபடியும் பிறக்கிறான் - சரீரத்தில் அல்ல.** அவனுக்குள், அவன் சரீரத்தில் இன்னும் பாவம் வாசமாயிருக்கிறது. அதனால்தான் கொலோ 2:11ல் "மாம்சத்துக்குரிய பாவசரீரம்" என்று பவுல் நம் சரீரத்தைக் குறிப்பிடுகிறார். இன்னும் ரோமர் 8:10,11,13,23; 12:1, 1 கொரி 6:13,15,16,20; 2 கொரி 4:10, பிலிப் 1:20,1 தெச 5:23 வாசித்துப்பாருங்கள். இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனின் பல அங்கங்களிலும் பாவத்தின் செயல்பாடு தொடர்ந்து காணப்படுவதின் விளைவாகத்தான் **பரிசுத்தமாக்கப்படும் அனுபவம் ஒரு தொடர்கிரியையாக அவனுடைய வாழ்நாள் முழுவதிலும் காணப்படுகிறது.** நாள் ஒன்று வரும். அப்பொழுது "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப் 3:21). அப்போதுதான் பாவசரீரம் முற்றிலுமாக மரிக்கிறது. அதற்குப்பின் பாவம் நம்மை அணுகவேமுடியாது. பரிசுத்தமாக்கப்படுதலின் இறுதிக்கட்டம் அதுதான்.

இரட்சிக்கப்பட்டபின்னும் ஒரு மனிதனில் பாவசரீரம் செயல்படுகிறது என்பதை ரோமர் 7:15-24 வேதபகுதியை தியானிக்கும்போது விளக்கமாக அறிந்துகொள்வோம். நாம் கிறிஸ்துவுக்குள் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டவர்கள்தான், அவரோடு எழுப்பப்பட்டு, உன்னதங்களிலே அவரோடு உட்கார்ந்திருப்பவர்கள்தான், அந்த வேளையிலும் நம்முடைய சரீரத்தில் பாவம் வாசமாயிருக்கிறது. ஆனாலும் நாம் பாவத்துக்கு அடிமைகளாக மாறுவதில்லை. **இந்த பாவசரீரம் நம்மைப் பெலவீனப்படுத்தி, மரணத்துக்கு நேராக வழிநடத்த நாம் அனுமதிக்கப்போவதில்லை.** ஏனென்றால் பிலிப்பியர் 3:20 சொல்கிறபடி, "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்". அவர் வரும்போது ரோமர் 8:30ன்படி நம் பாவசரீரம் மறுரூபமாகும் என்பது உறுதி.

மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப் பட்டிருக்கிறானே. (ரோமர் 6:7)

நம்முடைய பாவசரீரம் அழிந்துபோகும்படியாக நம்முடைய பழைய மனுஷன் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டு மரித்துவிட்டான் என்பதை முந்தின வசனத்தில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். நம்முடைய பழைய வாழ்வு கொல்லப்பட்டுவிட்டது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். எனவே சகலவிதமான பாவத்தன்மைகளுக்கும் நம்மீது அதிகாரம் இல்லை. பாவம் செய்யாமலிருக்க நம்மால் முடியும். இனி நாம் ஒருபோதும் பாவத்துக்கு அடிமையாகப் போவதில்லை. நாம் மறுபடியும் பிறந்தபோது உயிர்ப்பிக்கப்பட்ட நம்முடைய ஆவி எந்தவிதத்திலும் பாதிப்படைவதில்லை. நம்மில் இருந்த பாவ சுபாவத்தை நாம் முற்றிலுமாக மேற்கொண்டவர்கள். ஆதாமுக்குள் நாம் இருந்தபோது இந்த பாவசுபாவம் நம்மை ஆண்டுகொண்டிருந்தது என்பது உண்மைதான். கிறிஸ்துவுக்குள் வந்துவிட்ட நம்மில் இனி பாவத்தின் ஆதிக்கம் இல்லை, நம்முடைய சரீரத்தின் சில அவயவங்களில் பாவம் காணப்படலாம், ஆனாலும் அது நம்மை மேற்கொள்ளப்போவதில்லை. **கிறிஸ்துவுக்குள் இருக்கும் நாம் பாவிகளாய் இருக்கமுடியாது.**

'மரித்தவன்' என்ற வார்த்தை இந்த வசனத்தில் கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களை மட்டுமே குறிப்பிடுகிறது என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். அதாவது அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்கள் (ரோமர் 6:4). இவ்வாறு மரித்ததினால் உண்டாகும் இரண்டு விளைவுகளை இந்த வசனத்தில் காண்கிறோம்.

1) பாவத்துக்கு நீங்கலாக்கப்பட்டிருக்கிறோம்.

2) பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்.

ரோமர் 6:20 சொல்லுகிறபடி பாவத்திற்கு அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தோம். ஆனால் ரோமர் 6:18ன் படி இப்போது பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளாயிருக்கிறோம். ரோமர் 6:22ன் படி பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுடைய அடிமைகளாக மாறியிருக்கிறோம். **நமக்கு பாவமன்னிப்பைத் தரும்படியாக கிறிஸ்து மரித்தாரென்றால், நாம் பரிசுத்தத்தில் தேர்ச்சியடையும்படியாக கிறிஸ்துவோடு மரிக்கிறோம்.** 1 கொரி 1.31 வாசித்துப்பாருங்கள்.

பாவத்துக்கு நீங்கலாக்கப்பட்ட நிலையிலும், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்ட நிலையிலும் பாவகிரியைகள் நம்மிலிருந்து சிலவேளைகளில் வெளிப்படுகின்றன என்பது உண்மைதான். 1 யோவான் 1:10 சொல்லுகிறபடி: "நாம்

பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்". முழுமையான, பூரணமான பரிசுத்தம் எந்த மனிதனிலும் காணப்படுவதில்லை. கிறிஸ்துவை தனிப்பட்டமுறையில் அறிந்து அவரைக் குறித்து சாட்சிகொடுத்த பவுல், பேதுரு, யோவான், யாக்கோபு ஆகியோரிடமும் பலவீனங்கள் காணப்பட்டன.

ஆனால் கிறிஸ்துவுக்குள் பிதாவாகிய தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாகிய நாம் நம்மில் உருவாகும் பாவத்தினிமித்தம் அவரிலிருந்து பிரிக்கப்படுவதில்லை. ஏனென்றால் கிறிஸ்துவின் இரத்தம் நம் பாவங்களை மூடிவிட்டது. நம்முடைய பாவசரீரமும், நம்மில் வாசமாயிருக்கிற பாவமும் பலவேளைகளில் நம்மை வீழ்த்தக்கூடும். ஆனாலும், நம்முடைய இரட்சிப்பில் பிரச்சனை உண்டுபண்ணும் வல்லமை அதற்கு இல்லை. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவன் பாவம் செய்வது என்பது நிச்சயமாக ஒரு முரண்பாடான காரியம்தான். ஆனாலும் பாவம் செய்கிறோம். அதனால்தான் பாவத்திற்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளும்படியான ஆலோசனை ரோமர் 6:11ல் தரப்படுகிறது. **கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவராலும் பிரிக்கக்கூடாத முறையில் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டிருக்கிறோம்** (ரோமர் 6:4,5). அந்த நிச்சயத்தில்தான் பவுல் சொல்லுகிறார்: "மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8:38,39).

ஒரு மனிதன் மரிக்கும்போது அவனை ஆண்டுகொண்டிருக்கும் பாவம் என்கிற எஜமானனின் அடிமைத்தனத்திலிருந்து உடனடியாக விடுதலையாகிறான். அதற்குமேல் அவனால் பாவம் செய்யமுடியாது. யோபு சொல்லுகிறார், மரித்த ஒரு "அடிமை தன் எஜமானுக்கு நீங்கலாயிருக்கிறான்" (3:19). சகலவிதமான பாவ இச்சைகளின் சோதனைகளையும் மரித்த ஒரு மனிதன் சந்திப்பதில்லை. அவனுக்கு எதிராக எந்த நீதிமன்றத்திலும் எந்தவிதமான குற்றச்சாட்டையும் கொண்டுவருவதில்லை. "பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்" (ரோமர் 6:2) என்ற வசனத்தைத் தியானித்தோம். கிறிஸ்து நம் பாவத்துக்கு மரித்தார். அவருடைய மரணத்தில் பங்குகொண்ட அத்தனைபேரும் பாவத்துக்கு மரித்தவர்களாகிறார்கள். இந்த சத்தியம் புரிந்துகொள்ள கடினமாக இருக்கலாம். மனித ஞானம் இதை ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். ஆனால் தேவன் நம் சார்பில் நடப்பித்த இந்த கிரியையை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம். ஏனென்றால்

தேவனுடைய வார்த்தை இதை அறிவிக்கிறது.

"மரித்தவன் பாவத்துக்கு நீங்கலாக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்டிருக்கிறான்" என்ற சத்தியத்தை சபைகளில் போதிப்பதற்கு ஊழியர்களும் பயப்படுவதுபோல் தெரிகிறது. இந்த சத்தியத்தை அறிந்துகொள்ளாததினால் கிறிஸ்தவர்கள் பலர் தங்களுடைய பாவங்களை கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார் என்ற நம்பிக்கை இல்லாதவர்களாய், தங்கள் இரட்சிப்பைக் குறித்த நிச்சயமற்றவர்களாய் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்பதையும், அதனால் தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்பதையும் விசுவாசித்தாலும், "நிர்ப்பந்தமான மனுஷன் நான்" (ரோமர் 7:24) என்று தங்களுக்குள்ளேயே புலம்பிக்கொண்டு, தங்களுடைய தகுதியின்மையை அறிக்கையிட்டுக்கொண்டு துக்கமுகத்தோடு காணப்படுகிறார்கள். வேதம் திட்டவட்டமாக அறிவிக்கும் அடியிற்கண்ட சத்தியங்களை நம்புங்கள்.

1) அடக்கம் பண்ணப்பட்ட கிறிஸ்துவோடு நாம் இணைக்கப்பட்டதினால் அவரோடு உயிர்த்தெழுந்திருக்கிறோம்.

2) இயேசுவின் இரத்தம் நம் பாவங்களை நீக்கிவிட்டது.

3) ஆதாமோடு நமக்கு இனி எந்த உறவும் இல்லை.

4) நம் பழைய மனுஷன் இனி உயிர்பெற்று எழும்புவதில்லை.

5) நாம் பாவத்துக்கு மரித்திருக்கிறோம்.

6) பாவத்துக்கு மரித்தவர்கள் பாவமற்ற பரிபூரணத்துக்குள் வந்துவிடுவதில்லை என்பது உண்மைதான்.

7) ஆனாலும் ஒருபோதும் பாவத்தின் அடிமைத்தனத்தில் நாம் நிலைத்திருப்பதில்லை.

8) பாவம் செய்யாமலிருக்க நம்மால் முடியும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்றால் நாம் செய்த பாவங்கள் எங்கே இருக்கிறது? அவற்றுக்கு என்ன நடந்தது? வேத வசனங்கள் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம்.

1. நம் பாவங்கள் கிறிஸ்துவினிமித்தம் மன்னிக்கப்பட்டன. (1 யோவான் 2:12)
2. சகல அக்கிரமங்களும் சுத்திகரிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டன. (எரே 33:8)
3. மன்னிக்கப்பட்டு, மூடப்பட்டன (சங் 32:1)
4. அக்கிரமங்கள் அடக்கப்பட்டு, பாவங்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் போடப்பட்டன (மீகா 7:19)
5. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாய் விலக்கப்பட்டன (சங் 103:12)
6. மேகத்தைப் போலவும் கார்மேகத்தைப்போலவும் அகற்றப்பட்டன (ஏசாயா 44:22)
7. தேவனுடைய முதுகுக்குப்பின்னால் எறியப்பட்டன (ஏசாயா 38:17)
8. தேவனால் நம்முடைய பாவங்கள் மறக்கப்பட்டன (எரே 31:34)

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுடன் இணைப்பு (வசனம் 8-11)

ஆகையால் கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம். (ரோமர் 6:8)

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரைத் தங்கள் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டவர்கள் தங்கள் ஞானஸ்நான உடன்படிக்கையின் மூலம் அவருடைய மரணத்தில் பங்கு கொண்டவர்கள் ஆகிறார்கள். **கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதை நம்புகிற நமக்கும் கல்லறையைக் கடந்த வாழ்க்கை உண்டு.** அது நிச்சயமாக மகிமை நிறைந்ததாக இருக்கும். கிறிஸ்துவோடு மரிக்காத நிலையில் எந்த ஒரு மனிதனும் கிறிஸ்துவோடு ஜீவிக்கமுடியாது. இந்த அனுபவத்தையே பவுல் கலாத்தியர் 2:20ல் இவ்வாறு குறிப்பிடுகிறார்: "கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்". உயிர்த்தெழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை என்பது உண்மையானால், அவரோடு எழும்புகிற நாமும் மரணத்தைச் சந்திப்பதில்லை.

கிறிஸ்துவோடு நாம் பாவத்துக்கு மரித்தோம் என்பதைப் பார்த்தோம். எனவே 'பிழைப்பது' என்று பவுல் நித்திய நித்தியமாக பரலோகத்தில் கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையைமட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த உலகத்தில் வாழும் நாட்களிலும் நாம் பாவத்தை மேற்கொள்ளும் வாழ்க்கை வாழக்கூடும். பாவத்தின் அதிகார எல்லைக்கு நாம் புறம்பானவர்களாகிறோம். இது எவ்வாறு சாத்தியமாகிறது? பவுலின் ஆலோசனையைக் கவனியுங்கள்: "உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோமர் 6:13). இவ்வாறு நாம் நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதின் மூலமாக இது நடக்கிறது. பரிசுத்தமாக்கப்படுவதில் நமக்கும் ஒரு பங்கு உண்டு. நம்முடைய சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று ரோமர் 12:1ல் பவுல் சொல்வதைக் கவனியுங்கள்.

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லையென்று அறிந்திருக்கிறோம்; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை. (ரோமர் 6:9)

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து பூமியில் 40 நாட்கள் இருந்தார். அதன்பின் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்று பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் தன்னுடையவர்களுக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். எபிரெயர் 10:22 சொல்லுகிறது: "இவரோ பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார்". இனி அவர் மரிப்பதில்லை. ஏனென்றால் அவர் இனி மரணம் அடையத்தேவையில்லை. தன்னை பாவநிவாரண பலியாக ஒருதடவை ஒப்புக்கொடுத்ததின் விளைவாக, மனித இனத்தின் சகல பாவங்களும் மன்னிக்கப்பட்டாயிற்று. பிதாவாகிய தேவன் தன் குமாரனை பூமிக்கு அனுப்பியதின் நோக்கம் முற்றிலும் நிறைவேறிவிட்டது. பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார் என்பதை 4-வது வசனத்தில் பார்த்தோம். குமாரனின் இரட்சிப்பின் கிரியை பிதாவாகிய தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே யாருடைய பாவமும் இனி அவர்மேல் சுமத்தப்படுவதில்லை. பாவத்தின் சம்பளமான மரணம் இனி அவருக்கு சம்பவிப்பதில்லை. மரணம் அவரை ஆண்டுகொள்வதில்லை. அப்படிச் செய்ய மரணத்துக்கு அதிகாரம் இல்லை. "மரணமே! உன் கூர் எங்கே?" (1 கொரி 1:55) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை" என்று பவுல் சொல்வது, ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் மரணம் அவரை ஆண்டுகொண்டது என்பதை உறுதிப்படுத்துகிறது. "அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப் 2:8) என்று வாசிக்கிறோம். கல்வாரியில் மரணம் அவரை ஆண்டுகொண்டது என்பது உண்மைதான். நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டதின் விளைவாக மரணம் அவரை ஆண்டுகொண்டது. கிறிஸ்து ஒரு பாவமனிதனைப் போல் மரணத்தை ருசிபார்த்தார். 1 பேதுரு 3:18 சொல்லுகிறபடி: "அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்". மனுஷகுமாரன் என்ற முறையில் பூமியில் அவர் பேசிய கடைசி வார்த்தை இதுதான்: "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46). இனி அவர் தன்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்கப்போவதில்லை. அதற்கு அவசியமுமில்லை. எனவேதான் கிறிஸ்து சொல்லுகிறார், "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" (வெளி 1:18). **கிறிஸ்து மரணத்தின் மேலும் பாதாளத்தின் மேலும் அதிகாரமுடையவர் என்பது உண்மையானால் கிறிஸ்துவுக்குள் நமக்கும் அந்த அதிகாரம் உண்டு.**

எபிரெயர் 9:27,28ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்".

அவர் மரித்தது, பாவத்திற்கென்று ஒரேதரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். (ரோமர் 6:10)

"பாவத்திற்கென்று", என்று சொல்லும்போது, மனித இனத்தின் பாவங்களை தானே சுமந்து தீர்த்து பாவநிவாரண பலியாக அவர் மரித்தார் என்று பொருள்கொள்ளவேண்டும். "அவர் பிரதான ஆசாரியர்களைப் போல் முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார்" (எபி 7:27). "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய

இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி 9:12). "இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (எபி 10:10). "கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1 பேதுரு 3:18). மரணம் "ஒரே ஒருதரம் தான்" என்ற சத்தியம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். "ஒரே தரம்" என்ற வார்த்தை எபி 7:27; 9:12, 26, 28; 10:10. 1 பேதுரு 3:18 ஆகிய வசனங்களிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிறிஸ்து பாவத்தில் மரித்தார் என்று சொல்லப்படாமல், "பாவத்திற்கென்று" ஒரேதரம் மரித்ததாகச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அவருடைய வாழ்க்கையில் ஒரு நாளும், ஒரு நிமிடமும் பாவம் இருந்ததில்லை. ஆனாலும் பிதா "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21). மனித இனத்தின் பாவத்தின் வல்லமை அவரை மேற்கொண்டதன்விளைவாகவே அவர் மரித்தார் (2 கொரி 5:21, 1 பேதுரு 2:24). **நாம் யாராக இருக்கிறோமோ அவர்களாக கிறிஸ்து மாறினார். அதன் விளைவாக கிறிஸ்து யாராக இருக்கிறாரோ, அவராக நாம் மாறினோம். இதைத்தான் பாவத்துக்கென்று மரித்தார் என்று இந்த வசனம் சொல்லுகிறது.** மத்தேயு 20:28, மாற்கு 10:45 சொல்லுகிறபடி, "அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்". "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" என்று எபிரெயர் 7:26ல் வாசிக்கிறோம்.

பாவமற்ற கிறிஸ்து மரித்து இப்போது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். மரித்து உயிர்த்தெழுந்த வேறு யாரும் தேவனுக்கென்று பிழைத்திருப்பதாகச் சொல்லப்படவில்லை. அவர்கள், முன்பு வாழ்ந்த பூலோக வாழ்க்கைக்கே திரும்பினார்கள். பிதாவாகிய தேவனை மகிமைப்படுத்தும்படியாகவே கிறிஸ்து உயிர்வாழ்கிறார். பவுல் சொல்லவிரும்பும் காரியம் இதுதான். கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக்கொள்ளும் நாம் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டவர்கள். அவரையே முன்மாதிரியாக வைத்துக்கொள்ளவும், அவரையே பின்பற்றவும் கடமைப்பட்டவர்கள். **கிறிஸ்து இன்று தேவனுக்காகப்**

பிழைத்திருக்கிறார் என்றால் கிறிஸ்தவர்களாகிய நாமும் அதையே செய்யவேண்டும், செய்ய முயற்சிக்கவேண்டும். பவுல் அழகாகச் சொல்கிறார்: "எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரி 5:15,16).

அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். (ரோமர் 6:11)

"அப்படியே" (Likewise, கிரேக்க மொழியில் Houto) என்ற வார்த்தை எட்டாவது முறையாக இந்த நிருபத்தில் பயன்படுத்தப்படுகிறது. கிறிஸ்து மரித்து, இப்போது பிழைத்திருப்பதைப்போல் நாமும் பாவத்துக்கு மரித்து எழுந்திருப்பது உறுதி என்கிறார் பவுல். இனி கிறிஸ்து மரிப்பதில்லை என்பதால் நாமும் மரிப்பதில்லை. மரித்து உயிர்த்தெழுந்த ஜீவியத்துக்குள் நாம் ஏற்கனவே பிரவேசித்துவிட்டோம் என்ற உணர்வோடு வாழும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார்.

ரோமருக்கு எழுதின நிருபத்தில் இந்த வசனம் வரைக்கும் சத்திய உபதேசங்களுக்கடுத்த காரியங்களைப்பற்றி மட்டும் பேசிக்கொண்டுவந்த அப்போஸ்தலனாகிய பவுல் சபைக்கு வழங்கும் முதல் ஆலோசனை இந்த வசனத்தில்தான் காணப்படுகிறது. முதல் ஐந்து அதிகாரங்களிலும், இந்த அதிகாரத்தின் பாதிவரையிலும் ஆவிக்குரிய உண்மைகளை அறிவித்த பவுல், கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய அனுதின வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய செயல்முறைத் திட்டம் ஒன்றை இதில் அறிவிக்கிறார். சத்திய உபதேசங்களின் அடிப்படையில்தான் ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும் என்ற கொள்கையை அவர் கடைப்பிடிக்கிறார்.

அதிகாரத்தின் முதல்வசனத்தில் பவுல் சொன்னபடி, கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்தில் நிலைநிற்க முடியாது, ஏனென்றால் நாம் பாவத்துக்கு மரித்தவர்கள். உண்மையிலேயே நாம் இவ்வாறு மரித்திருக்கிறோமா என்ற சந்தேகம் நம்மில் உருவாகும் என்பதை அறிந்தவராய், நாம் தியானித்துக்கொண்டிருக்கும் இந்த வசனத்தில் பவுல் சொல்கிறார்: "நீங்கள் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்". பரிசுத்த ஆவியானவர் நம்மோடு பேசிக்கொண்டிருக்கிறார் என்ற

உணர்வோடும், பயபக்தியோடும் இந்த தேவ ஆலோசனைக்குக் கீழ்ப்படிவோமாக.

இரண்டு ஆழமான, மகத்துவமான அறிவுரைகள் இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகின்றன.

1) கிறிஸ்தவர்களாகிய நாம் பாவத்துக்கு மரித்தவர்கள் என்று எண்ணிக்கொள்ளுங்கள்.

2) அதன் விளைவாக நம்மை கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள்.

இந்த உண்மைகளை நம்முடைய வாழ்க்கையின் அனுபவங்களின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கலாம். இவை உண்மையாக இருக்கமுடியாது என்று நம்முடைய மனச்சாட்சியும், அறிவும் சொல்லலாம். அதனால்தான் அப்படி எண்ணிக்கொள்ளும்படியாக, அதை நம்பும்படியாக அந்த நம்பிக்கையில் வளரும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். நாம் பெற்றுக்கொண்டு அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் காரியத்தை எண்ணிக்கொள்ளும்படியாக யாரும் சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மையில் நம்மிடம் பாவம் இல்லை என்றால் பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளும்படியாக ஆலோசனை தரவேண்டியதில்லை.

"எண்ணிக்கொள்ளுங்கள்" என்ற வார்த்தையை (கிரேக்க மொழியில் logizomai) இந்த நிருபத்தில் 19 இடங்களில் பயன்படுத்துகிறார். ஆங்கிலத்தில் counted, reckoned, computed, accounted என்று பல வார்த்தைகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. பவுலின் மற்ற நிருபங்களிலும் மொத்தம் 16 இடங்களில் மட்டுமே இந்த வார்த்தை வருகிறது. புதிய ஏற்பாட்டில் பவுலைத்தவிர மற்றவர்கள் 6 இடங்களில் மட்டுமே இந்த வார்த்தையை பயன்படுத்தியுள்ளார்கள். "எண்ணிக்கொள்ளுங்கள்" என்று பவுல் சொல்லும்போது தான் சொல்லும் சத்தியத்தை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், உங்கள் கண்களுக்கு முன்பாக நிலைநிறுத்திக்கொள்ளுங்கள், அந்த சத்தியத்தின் அடிப்படையில் நடந்துகொள்ளுங்கள் என்று சொல்வதாகப் பொருள் கொள்ளலாம்.

பவுல் சொல்லும் காரியம் இதுதான், முந்தின வசனத்தின்படி கிறிஸ்து பாவத்துக்கென்று மரித்து, இப்பொழுது தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அதன் விளைவாக அவர்மேல் சுமத்தப்பட்ட பாவத்துக்கும் அவருக்கும் சம்பந்தமில்லாமல் போகிறது. இனிபாவம் அவரைத் தொடுவதில்லை. பிழைத்திருக்கும் அவர் நித்திய நித்தியமாகப்

பிழைத்திருக்கப்போகிறார். விசுவாசிகளாகிய நாம் அவருடைய மரணத்தில் அவரோடு இணைக்கப்பட்டவர்கள். அவரோடு பாவத்துக்கு மரித்து, அவரோடு உயிர்த்தெழுந்ததினால் இப்போது பிழைத்திருக்கிறோம். அவருக்கும் பாவத்துக்கும் எப்படி எந்தவிதமான தொடர்பும் இல்லாமல் இருக்கிறதோ, அவ்வாறு நாம் உயிர்த்தெழுந்த நாள் துவங்கி நமக்கும் பாவத்துக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கமுடியாது. அவரோடுகூட நாமும் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாக அவருக்கு ஒப்பானவர்களாகிறோம்.

இதை நம்புவதற்குக் கடினமானதாக இருக்கிறது, ஆனால் தேவனுடைய வார்த்தை அறிவிக்கும் இந்த சத்தியத்தை அப்படியே நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறோம். ஆபிரகாமுக்கு 99-வது வயதும் சாராளுக்கு 90 வயதும் நடக்கும்போது அவருக்கு தன்னுடைய திரளான சந்ததியைக் குறித்து சொல்லப்பட்ட தேவனுடைய வார்த்தையை எவ்வாறு ஆபிரகாம் விசுவாசித்தாரோ, அதே காரியத்தையே இன்று நாம் செய்கிறோம். இது எவ்வாறு சாத்தியமாகும் என்று யோசிக்கவேண்டியதில்லை, கவலைப்படவேண்டியதுமில்லை. முன்பு ஆதாமுக்குள் நாம் இணைக்கப்பட்டவர்களாக இருந்தோம். ஆதாம் பாவத்தில் விழுந்தபோது நாமும் விழுந்தோம். இப்போதோ நாம் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டிருக்கிறோம். **கிறிஸ்துவுக்கு என்னவெல்லாம் சம்பவிக்கிறதோ, அவை எல்லாம் நமக்கும் சம்பவித்தே ஆகவேண்டும்.** மற்றபடி நம்முடைய பரிசுத்த ஜீவியத்தின் நிமித்தமாக நாம் பாவத்துக்கு மரித்து, தேவனுக்குள் பிழைத்திருக்கிறவர்கள் என்பதல்ல. அதனால்தான் இந்த முக்கியமான வசனத்தில் "இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம்" என்று பவுல் அறிவிக்கிறார்.

நாம் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் (எபே 1:4) என்பதினால் அவருக்குள் எழுப்பப்பட்டு, அவருக்குள் உன்னதங்களில் வாசமாயிருக்கிறோம். (எபே 2:7) அவருக்குள் சிலுவையில் அறையப்பட்டு, அவருக்குள் பிழைத்திருக்கிறோம் (கலா 2:20). இன்று கிறிஸ்துவுக்குள் ஜீவிக்கிறோம். (பிலிப் 1:21) அவருக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறோம். (2 தீமோ 3:12) சகலமும் கிறிஸ்து மூலமாய் நடக்கிறது என்பது மட்டுமல்ல, அவருக்குள் நடக்கிறது என்பதே ரோமர் 5:10 துவங்கி பவுல் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கும் மேன்மையான சத்தியம். ஏனென்றால் அவரே மெய்யான திராட்சச்செடி, நாம் கொடிகள். யோவான் 15:1-6 வாசித்துப்பாருங்கள். "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்" (வசனம் 4) என்று அவர் வாக்கு பண்ணியிருக்கிறார்.

"பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள்" என்றுதான் பவுல் சொல்லுகிறார் - பாவத்துக்கு மரிக்கும்படியாக பவுல் ஆலோசனை தரவில்லை என்பதைக் கவனியுங்கள். பாவத்துக்கு மரிப்பது கிறிஸ்தவர்களின் கடமை என்றும் சொல்லவில்லை. பாவம் மரித்துவிட்டது என்றும் அறிவிக்கவில்லை. பாவத்தின் ஆதிக்கம் நீக்கப்பட்டுவிட்டது என்றும் சொல்லவில்லை. எப்போதெல்லாம் பாவத்தின்மேல் ஜெயங்கொள்கிறீர்களோ, அப்போதெல்லாம் பாவத்துக்கு மரித்தவர்களாகிறீர்கள் என்றும் பவுல் சொல்லவில்லை. தேவனால் நீதிமானாக்கப்பட்டவன் என்ற நிலையில், கிறிஸ்துவுக்குள் நம்முடைய நிலை என்ன என்பதைத்தான் இந்த வசனம் அறிவிக்கின்றது. ஆபிரகாமைப்போல் தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசிக்க தேவன் உதவி செய்வாராக.

இன்னொரு காரியத்தையும் அறிந்துகொள்ளுங்கள். பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்வதினால் நாம் பாவத்துக்கு மரித்தவர்கள் ஆவதில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து பாவத்துக்கு மரித்ததின் விளைவாக ஏற்கனவே நாம் அவரோடு இணைக்கப்பட்டவர்களாய் மரித்தவர்களாகிவிட்டோம். அதுமட்டுமல்ல தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் இருக்கிறோம். இது ஏற்கனவே நடந்து முடிந்துபோன ஒரு காரியம். தேவனுக்கென்று பிழைத்திருக்கிற நாம் இனி மரிப்பதில்லை. ரோமர் 8:10 சொல்லுகிறபடி "கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயுமிருக்கும்" 2 கொரி 4:16; 5:1, யோவான் 5:24-26; 11:25,26, கொலோ 3:3,4 வாசித்துப்பாருங்கள்.

நாம் கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறவர்கள் என்ற நம்பிக்கை நமக்குவேண்டும். நம்மைப் பொறுத்தவரை மரணம் ஒரு தோற்கடிக்கப்பட்ட சத்துரு (1 கொரி 15:26). ஒருநாள் நம்முடைய சரீரம் மரணத்தின் வழியாக கடந்துபோகவேண்டியதிருக்கிறது என்றாலும், அதின் மூலமாக நாம் மேலான ஆசீர்வாதங்களைத்தான் சுதந்தரிக்கப்போகிறோம். ஏனென்றால் அநேக வாசஸ்தலங்கள் நமக்கென்று ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கின்றன. (யோவான் 14:2,3). மரணத்துக்குப் பயப்படுகிற ஒரு மனிதன் மெய் கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. ஏனென்றால் இப்படிப்பட்ட மனிதன் தான் கிறிஸ்துவோடு மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் இணைக்கப்பட்டதின் மேன்மையை உணர்ந்து கொள்ளாமல் இருக்கிறான்.

பாவத்துக்கு மரித்து தேவனுக்கென்று நாம் பிழைத்திருக்கும்போது கீழ்க்கண்ட மேன்மையான ஆசீர்வாதங்கள் நம்முடையதாகின்றன.

1) தேவனுடன் நிரந்தரமான முறையில் ஒப்புரவாகிறோம்.

2) தேவ கோபாக்கினையிலிருந்து தப்பித்துக் கொள்கிறோம்.

3) நாம் தேவனுடைய திட்டத்துக்கும் தீர்மானத்துக்கும் உட்பட்டவர்களாகிறோம்.

4) நம் வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்க ஆரம்பிக்கின்றன.

5) நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாகிறோம்.

6) பரிசுத்த ஆவியானவர் நிரந்தரமான முறையில் நமக்குள் வாசமாயிருக்கிறார்.

7) ஆவியின் கனிகளும், வரங்களும் நம்மிலிருந்து வெளிப்படுகின்றன.

8) வேண்டிக்கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் மேலான காரியங்கள் நமக்கு கிடைக்கின்றன.

9) நாம் மகிமையின்மேல் மகிமை அடைவதை எந்த சக்தியாலும் தடைசெய்யமுடியாத நிலை ஏற்படுகிறது.

பரிசுத்தமாக்கப்படுதலில் மனிதனின் பங்கு (வசனம் 12-13)

ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. (ரோமர் 6:12)

தேவனால், நீதிமானாக்கப்பட்டவர்கள் பாவத்தில் நிலைநிற்க முடியாது, பாவத்தில் பிழைத்திருக்க முடியாது (வசனம் 1 & 2) என்ற தன்னுடைய அறிவிப்பை மீண்டுமாக உறுதிப்படுத்தும் வசனமாக இது அமைகிறது. நான்கு காரியங்களை இந்த வசனத்திலிருந்து அறிந்துகொள்கிறோம்.

1) மனிதனுடைய சரீரம் மரணத்துக்கு ஏதுவானது.

2) இரட்சிக்கப்பட்ட மனிதனுடைய சரீரத்தில் பாவம் காணப்படுகிறது.

3) இந்த பாவம் நம்மை ஆளுகை செய்யும்படியாக சரீர இச்சைகள் முயற்சி செய்கின்றன.

4) இந்த ஆளுகையை அனுமதிக்காதிருங்கள் என்பது பவுல் தரும் ஆலோசனை.

'ஆகையால்' என்று வசனத்தைத் துவங்கி இது முந்தின வசனத்தின் தொடர்ச்சி என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். நாம் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் இருப்பதால், தான் அறிவித்த சத்திய உபதேசங்களின் அடிப்படையில் சபை செய்யவேண்டிய காரியம் என்ன என்பதை ரோமர் 6 : 12 முதல் 14 வரையுள்ள வேதபகுதியில் பவுல் ஆலோசனையாக அறிவிக்கிறார். பரிசுத்தமாக்கப்படுவதில் விசுவாசிகளாகிய நாம் செய்யவேண்டிய காரியங்களும் உண்டு.

நம்முடைய சரீரம் சாவுக்கேதுவானது என்று பவுல் அறிவிப்பதைக் கவனியுங்கள். நம்முடைய ஆவி ஆத்துமாவைப்பற்றிப் பவுல் இந்த வசனத்தில் பேசவில்லை என்பது உறுதியாகிறது, ஏனென்றால் அவை ஒருபோதும் மரிப்பதில்லை. மண்ணிலிருந்து வந்த சரீரமோ அதிகநாட்களுக்கு நிலைத்திருப்பதில்லை. சங்கீதக்காரன் சொல்வதுபோல் ஆயுசுநாட்கள் பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம் வரைதான் இருக்கிறது (சங் 90:10). ஒருவனுடைய பிறப்பின் நாள் துவங்கி அது அனுதினமும் ஏதேனும் ஒருவகையில் மரித்துக்கொண்டுதான் இருக்கிறது. இவ்வாறு சரீரம் தற்காலிகமானது என்பதை நிரூபிக்கும்படியாகவே பவுல், அது சாவுக்கேதுவானது என்கிறார்.

6-வது வசனத்தில் "பாவசரீரம்" என்று அழைக்கப்படுவது இங்கே "சாவுக்கேதுவான சரீரம்" என்று அழைக்கப்படுகிறது. மேலும் "சாவுக்கேதுவான சரீரம்" என்று சொல்லி அது கிறிஸ்துவின் வருகையின்போது நாம் பெற்றுக்கொள்ளவிருக்கும் மறுரூபமாக்கப்பட்ட மகிமையின் சரீரத்திலிருந்து வித்தியாசமானது என்பதையும் பவுல் அறிவிக்கிறார். பிலிப்பியர் 3:21ல், ". . .நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று வாசிக்கிறோம்.

"சரீரம்" என்ற வார்த்தை மனிதனில் காணப்படும் பாவ சுபாவத்தையோ, மனுஷீக பலவீனங்களையோ குறிப்பிடாமல் மாமிசம், எலும்பு, இரத்தம் உள்ளடங்கிய சரீரத்தை மட்டுமே இந்த வசனம் குறிப்பிடுகிறது. "சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம்

ஆளாதிருப்பதாக" என்று சொல்லும்போது "நீங்கள் வேறு, உங்கள் சரீரம் வேறு" என்று பவுல் இரண்டையும் வித்தியாசப்படுத்துவதைப் பார்க்கிறோம். இரட்சிக்கப்பட்ட நம்மை பாவம் ஆளுகை செய்வதில்லை, ஏனென்றால் நாம் பாவத்துக்கு ஊழியம் செய்யாதபடிக்கும் பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாகவும் நம் பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் என்பதை 6-வது வசனத்தில் பார்த்தோம். ஆனாலும் நம்முடைய சரீரத்தில் பாவம் காணப்படுகிறது. பவுல் அறிவிக்கும் "சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம்" (ரோமர் 8:23) இன்னும் உண்டாகவில்லை. மனித சரீரம் இன்னும் இரட்சிக்கப்படாத நிலையில் சரீரத்தின் ஒவ்வொரு அவயவத்திலும் பாவம் காணப்படுகிறது. அது மரித்த நிலையிலும் இல்லை. தீவிரமாக செயல்பட்டுக் கொண்டே இருக்கிறது. மனிதனுடைய சரீர இச்சைகள் இந்தப் பாவத்தைத் தூண்டிக்கொண்டே இருக்கின்றன. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனின் சரீரத்தை பாவம் முற்றிலுமாக மேற்கொள்ளமுடியவதில்லை என்றாலும் இந்தப் போராட்டம் அவனுடைய மரணநாள்வரை தொடர்கிறது.

இந்த போராட்டத்தில் பலமுறை நாம் தோல்வியைச் சந்திக்கிறோம் என்பது உண்மைதான். கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்றவன் (2 சாமு 13:14) என்று அழைக்கப்பட்ட தாவீதையே, விபசாரம், கொலை, மாய்மாலம் என்ற பாவங்கள் மேற்கொண்டன. இவ்விதமாக நம்முடைய சரீரம் பாவத்தின் ஆளுகைக்குள் வருவதையே நாம் பின்மாற்றம் என்று அழைக்கிறோம். இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் மட்டுமே பின்மாற்றம் என்ற அனுபவத்தில் கடந்துபோக முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். **இரட்சிக்கப்படாத மனிதன் முற்றிலுமாக பாவத்தில் மூழ்கிவிட்டான். பின்மாற்றம் என்ற பிரச்சனை அவனுக்கு வருவதில்லை.** 7-வது அதிகாரத்தில் 18-24 வசனங்களைத் தியானிக்கும்போது சரீரத்தில் வாசமாயிருக்கும் பாவத்தின் செயல்பாடுகளைக் குறித்து கூடுதலாக அறிந்துகொள்ளலாம். இந்த பாவம் நம்மை வேதனைப்படுத்துகிறது. அதன் விளைவாக நாம் சமாதானத்தை இழந்துபோகிறோம் என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் முந்தின வசனத்தின்படி பாவத்துக்கு மரித்து, தேவனுக்கென்று பிழைத்திருக்கிற நம்முடைய இரட்சிப்பு அதன் விளைவாக எந்தவிதத்திலும் பாதிக்கப்படுவதில்லை என்னும் சத்தியம் இந்த நிருபத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

இருந்தாலும் கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யக்கூடிய கடமை ஒன்று உண்டு. சரீர இச்சைகளை பெலனடையச்செய்து, அதன்விளைவாக சரீரத்தைப் பாவம் ஆளுகை செய்ய அனுமதிக்கக்கூடாது என்கிறார் பவுல். **இவ்வாறு பாவத்தை ஆளுகைக்கு அனுமதிக்காமலிருக்க**

இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனால்தான் முடியும். ஏனென்றால் அவனில் இருக்கிற பரிசுத்த ஆவியானவர் உலகத்தில் இருக்கிறவனிலும் பெரியவர் (1 யோவான் 4:4). ஒரு கிறிஸ்தவன் தன் சொந்த பெலத்தில் பாவத்தோடு போராட்டம் செய்வதில்லை. தேவனுடைய பலத்தோடு சரீர இச்சைகளை எதிர்த்து நிற்பதனால் மட்டுமே அவன் வெற்றியடைகிறான். "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக் 4:7) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த வசனம் துவங்கி பரிசுத்தமாக்கப்படுதல் என்ற ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்து சில சத்தியங்களை வெளிப்படையாக அறிந்துகொள்கிறோம். பரிசுத்தமாக்கப்படுதல் மனித முயற்சியை (தேவனுடைய ஒத்தாசையோடு) அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அது ஒரு கிருபைவரமாக மட்டும் கருதப்படக்கூடாது. **விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டதைப்போல் விசுவாசத்தினால் மட்டும் நாம் பரிசுத்தமாக்கப்படுவதில்லை. அதைக்குறித்து தீர்மானம் எடுத்து செயல்படவேண்டியது ஒரு கிறிஸ்தவனின் கடமையும் பொறுப்புமாகும்.** அனுதினமும் சரீர இச்சைகளோடு போராடி பாவத்தின் ஆளுகையை மேற்கொள்ளவேண்டும். அதனால்தான் பவுல் இந்த ஆலோசனையைத் தருகிறார். நீதிமானாக்கப்படுவதைப்போல, இது ஒரு நேரத்தில் நடந்து முடிந்துவிடுவதில்லை. நம்முடைய பாவசரீரம் மறுரூபமடையும் நாள்வரையும் நாம் பரிசுத்தமாக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறோம். ஒரே நாளில் முற்றிலுமாகப் பரிசுத்தமாக்கப்பட்ட ஒரு மனிதனும் உலகத்தில் தோன்றினதில்லை. அது ஒரு தொடர்கிரியை. என்னிடத்தில் பாவம் இல்லை. இனி நான் பாவம் செய்வதில்லை என்று எந்த ஒரு மனிதனாலும் சொல்லமுடியாது.

"உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக" என்று சொல்லும்போது, பாவம் இன்னும் உயிரோடு இருந்து நம்மை ஆளுகை செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. அது நம்முடைய சரீரத்தில் வாசமாயிருந்து நம்முடைய ஆத்துமாவை ஆளுகை செய்ய முயற்சி செய்துகொண்டே இருக்கிறது.

பாவம் ஆளாதிருக்கவேண்டுமென்றால் நாம் செய்யவேண்டிய காரியம் இரண்டு. முதலாவதாக கிறிஸ்துவுக்குள் நாம் யார், நம்மைக் குறித்து தேவனுடைய நோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட நம்மை தேவன் நீதிமானாக்கியதின் நோக்கம் மீண்டுமாக தேவசாயலை நம்மில் உருவாக்குவதுதான். கிறிஸ்து சொல்கிறார்: "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான்

என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:19). "நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத்து 2:14) என்கிறார் பவுல். அப்படி இருக்கும்போது பாவம் நம் சரீரத்தை ஆட்சி செய்ய நம்மால் எவ்வாறு அனுமதிக்கமுடியும்?

இரண்டாவதாக **பாவத்தை மேற்கொண்டு, நம்மைப் பரிசுத்தமாக்குவது நாம் உட்கொள்ளும் தேவனுடைய வார்த்தையாகிய வேதவசனம்** என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து ஜெபிக்கிறார்: "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" (யோவான் 17:17). "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32). வேதவசனம் திட்டவட்டமாக அறிவிக்கிறது, "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது". (1 தெச 4:3). நம்மில் தேவனுடைய சித்தம் அனுதினமும் நிறைவேறும்படியாக நம்முடைய சரீரத்தின் அவயவங்களை தேவ ஆலோசனையின் அடிப்படையில் ஒப்புக்கொடுக்கும்போது நாம் பரிசுத்தமாகிக்கொண்டே இருக்கிறோம். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றிக்கொண்டே இருக்கிறோம்.

இவ்வாறு செய்யத்தவறும்போது என்ன நடக்கிறது என்பதையும் நாம் அறிந்துகொள்வோம். கிறிஸ்தவர்களாகிய நாம் பாவம் செய்வது முரண்பாடான காரியம் என்பதைப் பார்த்தோம். ஆனாலும் யோவான் சொல்கிறார்: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவான் 2:1). அதன் விளைவாக தேவன் நம்மைச் சிட்சிக்க ஆரம்பிக்கிறார். "கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" (எபி 12:6). "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்" (எபி 12:11). இந்த சிட்சையினிமித்தம் கொரிந்து சபையில் "அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்" (1 கொரி 11:30) என்று வாசிக்கிறோம். இரட்சிக்கப்பட்ட நாம் நம்முடைய சரீரத்தில் பாவம் ஆளுகை செய்ய அனுமதித்ததின் விளைவாகவே வாழ்க்கையில் வியாதிகள், விபத்துக்கள், மரணம், துயரம், கடன் பிரச்சனை, பலவிதமான தோல்விகள், பிரிவினைகள் ஆகியவற்றைத் தேவன் அனுமதிக்கிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6:13)

உங்கள் சரீரங்களில் பாவம் ஆளாதிருப்பதாக என்று முந்தின வசனத்தில் ஆலோசனை தந்த பவுல், இந்த வசனத்தில் இவ்வாறு பாவம் ஆளுகை செய்யும் தருணத்தையே உருவாக்கக்கூடாது என்ற புதிய அறிவுரையைத் தருகிறார், "**ஆண்டவரே என்னைப் பரிசுத்தமாக்கும்" என்று ஜெபம் பண்ணினால் மட்டும் போதாது.** அதைக்குறித்து தீவிரமாக செயல்படவேண்டும். இரண்டு காரியங்களைச் செய்யும்படியாக பவுல் சொல்லுகிறார்.

1) உங்கள் சரீரத்தின் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாதிருங்கள்.

2) உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

இந்த இரண்டு காரியங்களையும் நம்முடைய சுயசித்தத்தைப் பயன்படுத்தி நம்மால் செய்யமுடியும் என்பதினால்தான் இந்த தேவ ஆலோசனை வழங்கப்படுகிறது. **நம்மால் செய்யமுடியாத ஒரு காரியத்தைச் செய்யும்படியாக தேவன் சொல்லவேமாட்டார்.** மேலும் இந்த ஆலோசனை உலகத்து மனிதர்களுக்கு வழங்கப்படவில்லை. மரித்தோரிலிருந்து இன்று தேவனுடைய கிருபையின் செயலாற்றலின் விளைவாக பிழைத்திருக்கும் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. அவர்களால் மட்டுமே இந்தக் கட்டளையின்படி நடக்கமுடியும்.

அவயவங்கள் என்று இந்த வசனத்தில் பவுல் சொல்லும்போது ஒரு மனிதனுடைய சரீர உறுப்புகளான கை, கால், வாய், காது முதலியவற்றை மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அவனுடைய உணர்ச்சிகள், அறிவாற்றல், ஞானம், மனப்பாங்கு, விருப்பம், செயல்படும் தன்மை, கற்பனைத்திறன், தனிப்பட்ட நுட்பத்திறமை ஆகியவற்றையும் இது உள்ளடக்கியதாக இருக்கிறது. ஒரு மனிதன் நடப்பிக்கக்கூடிய சகலவிதமான செயல்பாடுகளும் அநீதியின் கருவிகளாக பாவத்துக்கு ஒப்புக்கொடுக்கப்படாமல் நீதிக்குரிய கருவிகளாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்கிறார் பவுல். இதன் விளைவாக நாம் பரிசுத்தத்தில் தேர்ச்சி அடைகிறோம்.

இந்த வசனத்திலும் பாவம் நம்மை எதிர்கொண்டிருக்கும் வல்லமையான சத்துருவைப்போல் உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. மனித இனத்தை பாவத்தின் மூலமாக அநீதிக்குள் வழிநடத்துவதே சாத்தானுடைய நோக்கமாக இருக்கிறது. நம்முடைய தேவனோ நீதி நிறைந்தவர். எனவே தேவனைப் பிரியப்படுத்த விரும்புகிறவர்களின் அவயவங்களில் எந்தக் காரணத்தைக் கொண்டும் அநீதி காணப்படக்கூடாது. பவுல் சொல்கிறார்: "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ 3:5). "கோபமும், மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" (கொலோ 3:8). தன்னுடைய கண்களோடு உடன்படிக்கை பண்ணிய யோபு (31:1) தன் அவயவத்தை அநீதியின் ஆயுதமாக பாவத்துக்கு ஒப்புக்கொடுக்காத மனிதனாகக் காணப்படுகிறார். ஏவாளும் ஆதாமும் இந்த விஷயத்தில் தவறிவிட்டார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம், நம் அவயவங்களை பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் நம்மைக் காத்துக்கொள்ளவேண்டிய அதே வேளையில், இரண்டு காரியங்களைச் செய்யும்படியாக பவுல் வலியுறுத்துகிறார். அவை :

1) உங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

2) உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் பாவத்துக்கு நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டியதில்லை. ஏனென்றால் இந்த அதிகாரத்தின் முந்தின வேதபகுதியில் (வசனம் 1-11) பார்த்தபடி நாம் பாவத்துக்கு மரித்துவிட்டோம். நாம் பாவத்தின் ஆளுகையில் அல்ல, கிருபையின் ஆளுகையில் இருக்கிறோம். அதனால் நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க நம்மால் முடியும். நமக்கு அந்த அதிகாரமும், உரிமையும் கடமையும் உண்டு. கிறிஸ்துவின் தியாகபலி மூலமாக இந்த சிலாக்கியம் நம்முடையதாகிறது. **கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத ஒரு மனிதன், அவன் யாராயிருந்தாலும் சரி, எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி, தன்னை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க முடியாது.**

ஒரு கிறிஸ்தவன் தன்னையும் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறான். தன்னுடைய அவயவங்களையும் நீதிக்குரிய கருவிகளாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறான். நம்முடைய சகலமும் அவருக்கு

அர்ப்பணிக்கப்படவேண்டும் என்பது தெளிவாகிறது. ஒரு போர்வீரன் தன்னுடைய ஆயுதங்களை தளபதியின் உத்தரவைப் பெற்றதும் உடனடியாகப் பயன்படுத்த ஆயத்தத்தோடு இருப்பதுபோல் ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய அவயவங்களை தேவனுக்கென்று உபயோகப்படுத்தி எதிரிகளை மேற்கொள்ள ஆயத்தத்தோடு இருக்கவேண்டும்.

இதை பவுல் வெறுமனே ஒரு ஆலோசனையாக மட்டுமல்ல, கட்டளையாக அறிவிப்பதுபோல் காணப்படுகிறது. தேவனை மகிமைப்படுத்தி அவருடைய துதியைச் சொல்லிவருவதே நம்முடைய வாழ்க்கையின் பிரதானமான நோக்கமாகக் காணப்படவேண்டும். நம்முடைய நாவு அவரைத் துதிக்கவும், நம்முடைய கைகள் அவருக்காக வேலை செய்யவும், நம்முடைய கால்கள் அவருக்காக உழைக்கவும், நம்முடைய கண்கள் அவருடைய மகத்துவத்தைக் காணவும், நம்முடைய காதுகள் அவருடைய அமர்ந்த மெல்லிய குரலைக்கேட்கவும் எல்லாவேளையிலும் ஆயத்தத்தோடு இருக்கவேண்டும். "... ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேதுரு 5:8).

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கை புதிராகவும், போராட்டமாகவும் இருக்கிறது. பாவத்துக்கு மரித்த அவன் பாவம் செய்கிறான். கிறிஸ்துவின் ஜீவனை தனக்குள் கொண்டிருக்கும் அவனுடைய சரீரம் மரணத்துக்கு ஏதுவானதாக இருக்கிறது. இதன் விளைவாகவே, தேவனால் நீதிமானாக்கப்பட்ட அவன் அனுதினமும் முயற்சி எடுத்து பரிசுத்தத்தில் வளரவேண்டியதிருக்கிறது.

உங்கள் எஜமானன் யார்? (வசனம் 14-23)

நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. (ரோமர் 6:14)

இந்த அதிகாரத்தின் முதல் 13 வசனங்களின் முடிவுரையாகவும், ரோமர் நிருபத்தில் சொல்லப்படும் ஒரு முக்கியமான வாக்குத்தத்தமாகவும் இந்த வசனம் அமைகிறது. அடுத்த வசனம் துவங்கி அதிகாரத்தின் முடிவு வரை ஒரு புதிய சத்தியத்தை பவுல் விளக்க ஆரம்பிக்கிறார். முந்தின இரண்டு வசனங்களும் பவுல் சபைக்குத்தரும் ஆலோசனை என்று பார்த்தோம். ஆனால் இது ஒரு ஆலோசனை அல்ல, ஒரு அறிவிப்பு, தேவனுடைய ராஜரீகபிரமாணமாக இதை பவுல் பிரகடனப்படுத்துகிறார்.

12-வது வசனத்தில் பாவம் உங்களை ஆளாதிருப்பதாக என்ற அறிவுரையை வழங்கிய பவுல் இந்த வசனத்தில் பாவம் உங்களை மேற்கொள்ளமுடியாது, அதற்கு அந்த அதிகாரம் இல்லை, பாவம் உங்கள் எஜமானன் அல்ல, என்கிறார். இது எவ்வாறு சாத்தியமாகிறது?

1) கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டிருக்கவில்லை.

2) ஏனென்றால் கிறிஸ்தவர்கள் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள்.

துவக்கத்திலேயே ஒரு காரியத்தை அறிந்துகொள்ளவேண்டும். உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருந்தால் (வசனம் 12), உங்கள் அவயவங்களை பாவத்திற்கு ஒப்புக்கொடாமல் தேவனுக்கு ஒப்புக்கொடுத்தால் (வசனம் 13) பாவம் உங்களை மேற்கொள்ளாது என்று பவுல் அறிவிக்கவில்லை. அவருடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்குத்தான் இந்த ஆசீர்வாதம் வாக்களிக்கப்பட்டிருக்கிறது என்றும் பவுல் சொல்லவில்லை. **நியாயப்பிரமாண சட்டவிதிகளுக்குக் கீழ்ப்படியாமல், தேவனுடைய கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்கள் எவர்கள்மேலும் பாவத்துக்கு அதிகாரம் இல்லாமல் போகிறது என்கிறார்.** ஏனென்றால் பாவத்தின் ஆளுகையை முறியடிப்பதே கிருபையினால் உண்டான இரட்சிப்பின் நோக்கம். தேவன் இதை நம்மில் செயல்படுத்தியே ஆகவேண்டும். பாவத்தின் ஆளுகையை கிருபை முறியடிக்கிறது, கலாத்தியர் 3:10-14 வாசித்துப்பாருங்கள்.

பாவம் கிறிஸ்தவர்களை மேற்கொள்வதில்லை என்கிறார் பவுல். "பாவம் உங்கள் எஜமான் அல்ல" என்று ஒரு மொழிபெயர்ப்பு கூறுகிறது. பாவத்தின் அரசாட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. கிறிஸ்து என்கிற புதிய எஜமானன் நம்மை ஆண்டு கொண்டிருக்கிறார் என்றால் அதற்கு பவுல் அறிவிக்கும் முதலாவது காரணம் கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவர்கள் அல்ல என்பதுதான். மோசே மூலமாக சீனாய் மலையில் வழங்கப்பட்ட 613 பிரமாணங்களும் யூதர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது, "கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" (யாத் 19:8) என்ற நிபந்தனையின் அடிப்படையில் யூதர்களுக்கு மட்டுமே ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டது. அந்த நாட்களில் இருந்த எகிப்தியர்களுக்கோ, கானானியருக்கோ மற்ற புறஜாதியார்களுக்கோ நியாயப்பிரமாணம் வழங்கப்படவில்லை.

கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்விதத்திலும் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நியாயப்பிரமாணம் ஒருவனை அடிமைத்தனத்துக்குள் கொண்டுவருகிறது. நாம் கிருபைக்குக் கீழ்ப்பட்டவர்கள். **கிருபை ஒருவனை குமாரத்துவத்துக்குள் கொண்டுவருகிறது.** கலாத்தியர் 4:22-28 வாசித்துப்பாருங்கள். ஆபிரகாமின் மூத்தமகன் இஸ்மவேல் அடிமையான ஆகாருக்குப் பிறந்தவன். ஈசாக்கு சுயாதீனமுள்ள சாராளுக்குப் பிறந்தவன். இஸ்மவேல் மாம்சத்தின்படி பிறந்தவன். ஈசாக்கு ஆவியின்படி பிறந்தவன். ஆகார் பழைய ஏற்பாட்டுக்கு அடையாளமாய் இருப்பதுபோல், சாராள் புதிய ஏற்பாட்டுக்கு அடையாளமாயிருக்கிறாள். "அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்: ஒன்று சீனாய் மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளை பெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே" (வசனம் 24). "மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள், அவளே நம்மெல்லாருக்கும் தாயானவள்" (வசனம் 26).

கிறிஸ்தவர்களாகிய நாம் அடிமைகள் அல்ல, சுயாதீனமுள்ள குமாரர்கள் "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" (ரோமர் 8:17) என்று சொல்லப்பட்டிருக்க, நம்மை இஸ்ரவேலரோடு இணைத்துக்கொண்டு நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்தில் நிலைநிறுத்திக்கொள்வது தவறு. வேதம் திட்டவட்டமாகச் சொல்லுகிறது: "**ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல**" (கலா 5:18). "விசுவாசம் வருகிறதற்கு முன்னே, வெளிப்படப்போகிற விசுவாசத்திற்கு ஏதுவாக நாம் அடைக்கப்பட்டவர்களாய் நியாயப்பிரமாணத்தின் கீழ் காவல்பண்ணப்பட்டிருந்தோம். இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா 3:23-26).

கிறிஸ்தவர்களாகிய நாம் கிருபைக்குட்பட்டவர்கள். கிருபை என்ற வார்த்தை இந்த இடத்தில் இரண்டு காரியங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

1. நீதிமானாக்கப்பட்டதினால் உண்டான பாவமன்னிப்பு

2 ஆவியானவரால் உண்டாகும் பரிசுத்தமாக்கப்படுதல்

கிருபை தேவனுடைய அன்பையும் இரக்கத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. அதாவது நாம் "கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவர்கள்" (1 கொரி 9:21). "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலா 5:4) என்கிறார் பவுல், கிருபைக்குட்பட்டவர்கள் தங்கள் கிரியைகளை அல்ல, கிறிஸ்து கல்வாரி சிலுவையில் முற்றிலுமாக சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தவராய், தங்கள் பாவத்துக்கான தண்டனையைப் பெற்றுக்கொண்டார் என்பதை விசுவாசித்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பாவத்தின் அதிகாரம் அவர்களை மேற்கொள்வதில்லை.

இன்னொரு உண்மையையும் அறிந்துகொள்வோம். கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறவர்களை பாவம் மேற்கொள்ளாது என்றுதான் பவுல் சொல்கிறார். அவர்களில் பாவம் காணப்படாது என்று சொல்லவில்லை. அவர்களுடைய சரீரத்தின் அவயவங்களில் பாவம் செயல்படுவதைக்குறித்தும், சரீர இச்சைகள் எவ்விதமாக பாவத்தைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் விளக்கமாக முந்தின வசனங்களில் பார்த்தோம். **நம்முடைய பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் என்பது உண்மைதான். ஆனாலும் அவன் இன்னும் மரணமடையவில்லை.** அதன்விளைவாகவே கோபம், பகை, பொறாமை, பொருளாசை, இச்சை, பெருமை, எரிச்சல் போன்ற பாவங்கள் நம்மில் காணப்படுகின்றன. ஆனாலும் அவை நம்மை மேற்கொள்வதில்லை. ஏனென்றால் கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9). வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லவரின் பெலன் நம்மில் விளங்குமானால் பாவம் எவ்விதத்தில் நம்மை மேற்கொள்ளமுடியும்?

நாம் பெற்றுக்கொண்ட தேவகிருபை எவ்வாறு பாவத்தை நம்மிடமிருந்து படிப்படியாக நீக்கி, அதை எவ்வாறு முற்றிலுமாக மேற்கொண்டு நம்மை பரிசுத்தப்படுத்துகிறது என்பதை பவுல் அதிகாரத்தின் பின்பகுதியில் விளக்குகிறார். இதன் பின்னணியை விளங்கிக்கொள்ள ஏசாயா 43:25, எரே 31:34, சங் 78:38, 39; 103:14; 105:42, எபி 8:12; 10:16, 17 வாசித்துப்பாருங்கள்.

இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால்,

பாவஞ்செய்யலாமா? கூடாதே. (ரோமர் 6:15)

இந்த அதிகாரத்தில் கேட்கப்படும் இரண்டாவது கேள்வி இது. "முதல் வசனத்தில் கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா" என்ற முதலாவது கேள்வி கேட்கப்பட்டு "கூடாதே" என்று முந்தின 14-வது வசனம் வரை பதில் சொல்லப்பட்டதைத் தியானித்தோம். முதலாவது கேள்வி கிருபையோடும் பாவத்தோடும் மட்டும் சம்பந்தப்பட்டது. இந்த வசனத்தில் நியாயப்பிரமாணமும் அவைகளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. இந்த இரண்டாவது கேள்விக்கான பதில் 7:25வரை சொல்லப்படுகிறது.

முந்தின 14-வது வசனத்தில் "நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என்று அறிவித்த பவுல், இந்த வசனத்தில் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் செய்யலாமா? என்ற தன்னுடைய எதிராளிகளின் கேள்வியை வாசகர்களுக்கு முன்பாக வைக்கிறார். **உலக ஞானம் தேவனுடைய இரகசியங்களுக்கு எதிராக கேள்வி எழுப்பிக்கொண்டே இருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.** "பாவம் பெருகின இடத்தில் கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" (ரோமர் 5:20) என்பது உண்மையானால், பவுல் சொல்லுகிறபடி நாம் நியாயப் பிரமாணத்தின் ஆளுகைக்குள் இல்லை என்பது உண்மையானால் நம்முடைய மனவிருப்பத்தின்படியெல்லாம் வாழ்க்கை நடத்துவதில் தவறு ஒன்றும் இல்லையே என்ற தவறான போதனை பவுலின் காலத்தில் மட்டுமல்ல, சபையின் வரலாற்றில் பல காலகட்டங்களில் தொடர்ந்து எழுப்பப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம்.

நாம் நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியவில்லை என்றால் நம்முடைய கிரியைகளில் "எது சரி, எது தவறு" என்பதை நாம் அறிந்துகொள்ளமுடியாது என்பது பவுல் அறிவிக்கும் உபதேசங்களை எதிர்த்துப் பேசுகிறவர்களின் வாதம். நியாயப்பிரமாணம் இல்லாத நிலையில் மனிதன் பாவம் செய்வதைத் தடைசெய்யும் காரியம் ஒன்றும் உலகில் இருக்கப்போவதில்லை என்பதினால் பவுலின் போதனை மிகவும் ஆபத்தானது என்பது இவர்களுடைய கருத்து. கிருபைக்கு உட்பட்ட ஒரு மனிதனுடைய கிரியைகள் அவனுடைய நித்தியத்தை நிர்ணயம் பண்ணுவதில்லை என்பது உண்மையானால் அவன் எதைச் செய்தால் என்ன? கிருபை பாவமன்னிப்புக்குக் காரணமாக இருக்கிறது என்பதானால் அதிகமாய் பாவம் செய்து அதிகமாக கிருபையைப்பெற்று மன்னிப்பைப் பெற்றுக்கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்பது இவர்களுடைய வாதம்.

இப்படிச் சொல்வது தவறு என்கிறார் பவுல். இந்த அதிகாரத்தின் கடைசி வசனம் வரையிலும் கிருபைக்குட்பட்ட நிலையில் கிறிஸ்தவர்கள் பாவம் செய்யமுடியாது என்ற சத்தியத்தையே பவுல் தொடர்ச்சியாக விளக்குவதைப் பார்க்கிறோம். தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றவர்கள் பாவம் செய்துகொண்டிருக்க முடியாது என்பதை வேதம் சந்தேகத்துக்கிடமின்றி அறிவிக்கிறது. பெதஸ்தாவில் தெய்வீக சுகத்தைப் பெற்ற மனிதனிடம் கிறிஸ்து சொல்கிறார்: "நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவஞ்செய்யாதே" (யோவான் 5:14). விபசாரத்தில் பிடிபட்ட ஸ்திரீயிடம் சொல்லுகிறார்: "இனிப்பாவஞ்செய்யாதே" (யோவான் 8:11) 1 கொரி 15:34ல் பவுல் சொல்கிறார்: "நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்ப விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்". யோவான் சொல்கிறார் "தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்". (1 யோவான் 3:9). பாவம் தேவ சித்தத்துக்கு விரோதமான மனித செயல்பாடு என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். **தொடர்ச்சியாக, மனப்பூர்வமாக பாவத்தில் நிலைத்திருக்கிற ஒரு மனிதன் தன்னைக் கிறிஸ்தவன் என்று அழைத்துக்கொள்ள முடியாது.** இப்படிப்பட்டவர்களைக் குறித்தே வேதம் சொல்கிறது : "பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்". (1 யோவான் 3:8)

மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? (ரோமர் 6:16)

"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது" (மத் 6:24). எந்த ஒரு மனிதனும் தான் கீழ்ப்படியும்படியாக ஒரு எஜமானுக்கு தன்னை ஒப்புக்கொடுத்தவனாகத்தான் இருப்பான். அவனுக்கு ஊழியம் செய்யும் அடிமையாகத்தான் இருப்பான். கிறிஸ்து திட்டவட்டமாக அறிவிக்கிறார் "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" (யோவான் 8:34). ஒருவன் பாவத்துக்கு அடிமையாயிருந்து நித்திய மரணத்துக்குள் கடந்து செல்லவேண்டும் அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிந்து தேவ நீதிக்குள் கடந்து செல்லவேண்டும். பவுல் சொல்கிற காரியம் இதுதான்: **உங்கள் மனதையும், ஆத்துமாவையும் ஆளும்படியாக நீங்கள் எதைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்களோ, அதுவே உங்களை ஆளும்.**

எந்த எஜமானனுக்குக் கீழ்ப்படிய நீங்கள் உங்களை

ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள் என்பதைக் குறித்து யோசித்துப்பார்த்திருக்கிறீர்களா? ஒரு மனிதன் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். அல்லது கிருபைக்கு அடிமையாயிருக்கிறான். பாவம் மரணத்துக்கேதுவானது. கிருபை ஜீவனுக்கேதுவானது. பாவம் எவ்வளவு வல்லமையும் அதிகாரமும் நிறைந்ததோ, அவ்வண்ணமாகவே கிருபையும் வல்லமையும் அதிகாரமும் நிறைந்தது. இவைகளில் ஏதேனும் ஒன்றின் அடிமைத்தனத்தில் மனிதன் இருக்கிறான். ஏற்கனவே நாம் பார்த்ததுபோல் ஒரு மனிதன் ஆதாமுக்குள் இருக்கிறான், அல்லது கிறிஸ்துவுக்குள் இருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று எதுவும் இல்லை. ஒன்று நாம் மரணத்துக்கேதுவான பாவத்தின் அடிமைத்தனத்தில் இருக்கவேண்டும். அல்லது நீதிக்கேதுவான கீழ்ப்படிதலின் அடிமைத்தனத்தில் இருக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எந்த மனிதனாலும் இந்த இரண்டின் அடிமைத்தனத்துக்குள்ளும் இருக்க முடியாது. ஒரு மனிதன் ஒரு நேரத்தில் கிழக்கு நோக்கியும் மேற்கு நோக்கியும் நடந்து கொண்டிருக்கமுடியாது. இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய விரும்பும் மனிதன் "ஒருவனைப் பகைத்து, மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்" (மத் 6:24) என்கிறார் கிறிஸ்து.

நம்முடைய எஜமான் யார் என்பதை நிர்ணயம் பண்ணுவது நம்முடைய கீழ்ப்படிதல் என்பதை அறிந்துகொள்ளுங்கள். **நாம் என்ன சொல்கிறோம், எதைப் பிரசங்கிக்கிறோம் என்பதல்ல, நாம் எதைச் செய்கிறோம் என்பதே நம்முடைய நித்தியத்தை நிர்ணயம்பண்ணுகிறது.** "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை". (மத் 7:21) என்கிறார் இயேசு. தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்கள், பிசாசுகளைத் துரத்துகிறவர்கள், அற்புதங்களைச் செய்கிறவர்கள் ஆகியோருக்கும் பரலோகத்தில் இடம் இல்லாமல் போகலாம். இவர்களை மிகப்பெரிய ஊழியக்காரர்களாக உலகம் அங்கீகரித்திருக்கலாம், ஆனாலும் தனக்கு ஊழியம் செய்கிறவர்களில் பலரை "அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள்" (மத் 7:23) என்று கிறிஸ்து சொல்லக்கூடும், எச்சரிக்கையாயிருங்கள்.

கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கும் ஒரு மனிதனால் தொடர்ந்து பாவம் செய்துகொண்டிருக்க முடியாது என்பது இந்த வசனத்தில் தெளிவுபடுத்தப்படுகிறது. 1 யோவான் 1:6 சொல்கிறபடி, "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே

நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம் அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான், அவனுக்குள் சத்தியமில்லை". (1 யோவான் 2:4)

பாவம் மரணத்துக்கு ஏதுவானது என்றும், கீழ்ப்படிதல் நீதிக்கு ஏதுவானது என்றும் பவுல் இந்த இடத்தில் சொல்வதினால் கீழ்ப்படிதல் என்ற கிரியையினால் ஒருவன் நீதியைப் பெற்றுக்கொள்கிறான் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒருவனுடைய கீழ்ப்படிதல் அவனை நீதிக்கு நேராக வழிநடத்துகிறது என்று வேண்டுமானால் சொல்லமுடியும். **இந்த அதிகாரத்தின் கடைசியில் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்று அறிவிக்கும் பவுல் எந்த இடத்திலும் "கீழ்ப்படிதலின் சம்பளம் ஜீவன்" என்று அறிவிக்கவில்லை.** நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கு ஒப்புக்கொடுப்பவர்கள் பாவம் செய்து கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை மட்டுமே பவுல் இந்த வேதபகுதியில் வலியுறுத்துகிறார்.

முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். (ரோமர் 6:17)

ஒரு மனிதன் பாவம் என்ற எஜமானனுக்கு அடிமையாயிருக்கவேண்டும், அல்லது கிருபை என்ற எஜமானனுக்கு அடிமையாயிருக்கவேண்டும் என்று பொதுவான முறையில் அறிவித்த பவுல், இங்கே ரோமசபை விசுவாசிகளுடன் நேரடியாகப் பேச ஆரம்பிக்கிறார். அவர்கள் கடந்த நாட்களில் பாவத்துக்கு அடிமைகளாக இருந்தவர்கள்தான். ஆனாலும் கிறிஸ்துவின் பாடு மரணத்தினால் உண்டான இலவசமான இரட்சிப்பைக் குறித்த உபதேச சட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதற்கு முழுமனதோடு கீழ்ப்படிந்துவிட்டதினால் பவுல் பிதாவாகிய தேவனை இந்த வசனத்தில் ஸ்தோத்திரிக்கிறார். ஏனென்றால் அவர்களுடைய கீழ்ப்படிதலின் பின்னணியில் செயல்பட்டது தேவன் ஒருவரே.

கிறிஸ்தவர்களாகிய நாம் முன்னே யாராக இருந்தோம் என்பதை அடிக்கடி நினைவில் கொள்ளவேண்டும். நிச்சயமாக நாமும் பாவத்துக்கு அடிமைகளாகத்தான் இருந்தோம் (யோவான் 8:34). ஒருவன் ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, சிறந்த பக்திமார்க்கத்தில் வளர்க்கப்பட்டிருக்கலாம். ஆனாலும் அவன் பிறக்கும்போது கிறிஸ்தவனாகப் பிறந்திருக்கமுடியாது. உலகில் பிறக்கும் அத்தனைபேரும்

ஆதாமின் குமாரர்களாக, அவனுடைய பாவ சுபாவத்தோடுதான் பிறக்கிறார்கள். ஆதாமின் மீறுதலில் நமக்கும் பங்கு உண்டு என்பதினால் நாம் அத்தனைபேருமே ஆதாமோடு இணைந்து பாவம் செய்தவர்களாகிறோம். "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" (சங் 51:5) என்கிறார் தாவீது. **எதையோ செய்வதினால் நாம் பாவிகள் ஆவதில்லை. பிறப்பிலேயே நாம் பாவிகள்.** "சுபாவத்தினாலே மற்றவர்களைப்போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்" (எபே 2:3).

பாவத்தின் அடிமைத்தனத்தில், சாத்தானை தங்கள் எஜமானனாக ஏற்றுக்கொண்டிருந்த ரோம சபையார் தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட கிருபையின் உபதேச சட்டத்துக்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினிமித்தம் பவுல் தேவனுக்கு நன்றிசொல்கிறார். ரோமர் 7:25, 1 கொரி 15:57, 2 கொரி 2:14; 8:16; 9:15 ஆகிய வசனங்களிலும் பவுல் தேவனை ஸ்தோத்திரிப்பதைப் பார்க்கிறோம். இந்த புதிய சட்டத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டதினிமித்தம் அல்ல, அதை விசுவாசித்ததினிமித்தம் அல்ல, ஒரு அடிமையைப் போல் இந்த புதிய எஜமானுக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்பதால்தான் ஸ்தோத்திரிக்கிறார். **உண்மையான, மனப்பூர்வமான கீழ்ப்படிதலே ஒருவனைக் கிறிஸ்தவனாக்குகிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.** நம்முடைய விசுவாசம், கீழ்ப்படிதல் என்கிற கிரியையில் வெளிப்படவேண்டியது அவசியமாகிறது "கிரியைகளில்லாத விசுவாசம் செத்தது" (யாக் 2:20).

எபேசியர் 2:10 சொல்லுகிறபடி: "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்". மனிதனை இரட்சிப்பதோடு தேவன் நிறுத்திக் கொள்ளவில்லை. அவன் முற்றிலுமாகத் தன்னுடைய செய்கையாக மாறவேண்டும் என்று விரும்புகிறார். "அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" (தீத்து 2:14). "பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" (1 சாமு 15:22) என்கிறார் சாமுவேல்.

பவுல் மூலமாக ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டம் பாவத்தின் கொடூரத்தையும், மனிதன் அதன் அடிமைத்தனத்தில் இருப்பதின் விளைவாக சந்திக்கவிருக்கும் தேவ கோபாக்கினையையும் அறிவிப்பதோடு, மனிதனுடைய கீழ்ப்படியாமையே பாவத்தின்

மூலகாரணம் என்பதையும் வெளிப்படுத்துகிறது. ரோமாபுரி விசுவாசிகள் இந்த சட்டத்துக்கு அரைகுறையாக அல்ல, மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தார்கள் என்பதால் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார். மனந்திரும்புகிற ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் சந்தோஷம் உண்டாயிருக்குமானால், (லூக்கா 15:10), ரோமாபுரியில் உள்ள ஆயிரக்கணக்கான விசுவாசிகள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டதினிமித்தம் தேவன் ஸ்தோத்திரிக்கப்பட பாத்திரர் ஆகிறார். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெச 5:18). சங் 50:14;92:1, எபே 5:20, பிலி 4:6, கொலோ 3:17, 1 தீமோ 4:4 வாசித்துப்பாருங்கள்.

நன்றி நிறைந்த உள்ளத்தோடு தேவனை துதித்து ஸ்தோத்திரிப்பது நம்முடைய கடமை. "இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன்; இவர்கள் என் துதியைச் சொல்லிவருவார்கள்" (ஏசாயா 43:21) என்று எழுதப்பட்டிருக்கிறது. மனிதர்களுடைய ஸ்தோத்திரத்தில் அவர் பிரியமாயிருக்கிறார் (எபி 13:15-16, சங் 107:21,22). அதைப் பெற்றுக்கொள்ள அவர் பாத்திரராயிருக்கிறார் (வெளி 5:9-14). நாம் ஸ்தோத்திரிக்கும்போது அவரை உயர்த்துகிறோம் (சங் 34:3; 99:5), மேன்மைப்படுத்துகிறோம் (தானி 4:34-37), மகிமைப்படுத்துகிறோம் (லூக்கா 1:46). இதன் விளைவாக தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறோம் (சங் 67:5-7).

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். (ரோமர் 6:18)

ரோமாபுரி விசுவாசிகள் பாவத்தின் அடிமைத்தனத்தில், சாத்தானுடைய ஆளுகையில் இருந்தவர்கள்தான் என்றாலும், உபதேச சட்டத்துக்குக் கீழ்ப்படிந்ததின் விளைவாக விடுதலையாக்கப்படுகிறார்கள். அவர்கள் தங்களுடைய முயற்சியினாலோ, திறமையினாலோ விடுதலையை சுதந்தரித்துக்கொள்வதில்லை, தேவனே அதை அருளிச் செய்கிறார். விடுதலைபெற்ற அவர்கள் தங்களையே எஜமானனாக்கிக்கொண்டு, சுயாதீனமாக, தங்கள் மனவிருப்பத்தின்படி வாழமுடியுமா என்றால் இல்லை என்று இந்த வசனம் அறிவிக்கிறது. ஒரு அடிமைத்தனத்திலிருந்து இன்னொரு அடிமைத்தனத்துக்குள் அவர்கள் பிரவேசிக்கிறார்கள். இப்போது அவர்கள் நீதியின் அடிமைகளாகிறார்கள். உலகில் பிறந்த யாருமே சுயாதீனர்கள் அல்ல, ஏதோ ஒன்றுக்கு அடிமையாகவே இருக்கிறார்கள். **பாவத்தின் அடிமைத்தனத்தில் பிறந்தவர்கள் மறுபடியும் பிறக்கும்போது கிறிஸ்துவின் அடிமையாக மாறுகிறார்கள்.** ஏனென்றால் இப்போது அவர்கள் சகல உபதேச

சட்டத்திற்கும் கீழ்ப்படியும் நிர்பந்தத்துக்குள் இருக்கிறார்கள். இதன் விளைவாகவே அவர்கள் பரிசுத்தப்படுத்தப்படுகிறார்கள் என்பதை இந்த அதிகாரத்தின் 22-வது வசனம் இவ்வாறு அறிவிக்கிறது: "இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன்".

பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட சுயாதீனம் உண்மையில் நம்மை தேவனுடைய அடிமைத்தனத்துக்குள் வழிநடத்தவேண்டும். பேதுரு சொல்கிறார்: "சுயாதீனமுள்ளவர்-களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்" (1 பேதுரு 2:16). கிறிஸ்து தன்னுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தைக் கொடுத்து நம்மை கிரயத்துக்கு வாங்கியிருக்கிறார் (1 கொரி 6:20). **பாவத்திலிருந்து விடுதலைபெற்ற அதே வேளையில் அதே நிமிடத்தில் நாம் நீதியின் அடிமைகளாகிவிடுகிறோம். இரண்டுக்கும் இடைப்பட்ட காலம் என்று எதுவும் இல்லை.** பார்வோனின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களிடம் விடுதலையோடு எதைவேண்டுமானாலும் செய்யுங்கள் என்று தேவன் சொல்லவில்லை. கானானுக்குள் பிரவேசிக்கும் முன்பே தன்னுடைய நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து அவர்கள் அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் ஆணையிடுகிறார்.

விசுவாசிகள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டதாக பவுல் குறிப்பிடுவதினால், இரட்சிக்கப்படும் ஒரு மனிதன் பாவமற்ற பரிபூரணத்துக்குள் பிரவேசிப்பதாகவோ, அவனுடைய பாவ சுபாவம் முற்றிலுமாக நீக்கப்படுவதாகவோ, சகலவிதமான பாவசோதனைகளிலிருந்தும் விடுதலைபெறுவதாகவோ எடுத்துக்கொள்ளக்கூடாது. அவன் நீதிக்கு அடிமையாகும்படியாக பாவத்தின் ஆளுகை அவனிலிருந்து நீக்கப்படுகிறது. அவனுடைய பழைய மனுஷன் சிலுவையில் அறையப்பட்டதின் விளைவாக பாவம் அவனை மேற்கொள்வதில்லை அவனுக்குள்ளிருக்கும் பரிசுத்த ஆவியானவர் அவனை பரிசுத்தத்துக்குள் வழிநடத்த ஆரம்பிக்கிறார். நீதிமானாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவன் பரிசுத்தமாக்கப்படுகிறான். "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெச 4:3) என்கிறார் பவுல். தேவன் தன்னுடைய சித்தத்தை உங்களில் நிறைவேற்றியே தீருவார்.

"நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக்

கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா" (வசனம் 15) என்ற கேள்விக்கு பதில் இந்த வசனத்தில்தான் கிடைக்கிறது. **நீதியின் ஆளுகைக்குள் வந்திருக்கும் ஒரு மனிதனால் நிச்சயமாக பாவம் செய்யமுடியாது.** நியாயப்பிரமாணத்தைவிட பரிசுத்தமான கிறிஸ்துவின் உபதேச சட்டங்களை ஏற்றுக்கொண்டிருக்கும் மனிதன் பாவத்தில் நிலைத்திருக்கமுடியாது ஏனென்றால் தன்னுடைய மனதையும், ஆத்துமாவையும், சரீரத்தையும் ஆளும்படியாக ஒருவன் எதைத் தெரிந்து கொண்டிருக்கிறானோ, அதுவே அவனை ஆளுகைசெய்யும்.

ஒருவகையில் பார்த்தால் அப்போஸ்தலனாகிய பவுல் கிருபைக்குள்ளேயே ஒரு பிரமாணத்தைக் காண்பதுபோல் தெரிகிறது. இந்த பிரமாணம் முற்றிலுமாக ஆவிக்குரியது. உள்ளான மனிதனுக்குள் இருந்து கிரியை நடத்துவது கற்பலகைகளில் அல்ல, ஒருவனுடைய இருதயத்தில் எழுதப்படுவது (எரே 31:33). தன்னுடைய பாடு மரணத்தினால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவித்த கிறிஸ்து, தன்னுடைய உயிர்த்தெழுந்த ஜீவனோடு நம்மை இணைத்துக்கொண்டு, நீதியின் ஆளுகைக்குள் நம்மைச் சிறைப்படுத்துகிறார். அல்லேலூயா! நாம் "கிறிஸ்துவுக்குள்" இணைக்கப்பட்டவர்களாகிறோம்.

உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிற பிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6:19)

ஏற்கனவே 12,13 ஆகிய இரண்டு வசனங்களில் இந்த சத்தியத்தை பவுல் அறிவித்திருக்கிறார். இரட்சிக்கப்பட்ட ஒரு விசுவாசி பழைய எஜமானனிடமிருந்து விடுதலை பெற்ற நிலையில் புதிய எஜமானனின் ஆளுகைக்குட்பட்டவனாய் என்ன செய்யவேண்டும் என்ற கேள்விக்கு பதில் இங்கே வழங்கப்படுகிறது. இந்த உண்மை புரிந்துகொள்வதற்கு சற்று கடினமானது என்பதால் மனிதர்களின் அன்றாட வாழ்க்கையிலிருந்தே ஒரு உதாரணத்தை எடுத்துக் கொண்டு, ரோமாபுரி விசுவாசிகளின் மாம்ச பலவீனத்தினிமித்தம் "மனுஷர் பேசுகிற பிரகாரமாய்" தான் பேசுவதாக பவுல் அறிவிக்கிறார். ரோமர் 3:15, 1 கொரி 9:8, கலா 3:15 ஆகிய வசனங்களிலும் பவுல் இவ்விதமான வார்த்தைகளை பயன்படுத்துகிறார்.

அந்த நாட்களில் உலகமெங்கும், முக்கியமாக ரோமாபுரியில் மனிதர்கள் அடிமைகளாக வாங்கப்படுவதும், விற்கப்படுவதும் பழக்கத்தில்

இருந்தது. ஒரு அடிமை தன் எஜமானனிடமிருந்து விடுதலை பெறவேண்டுமானால் அதற்கு தனக்குரிய கிரையத்தை அவன் கொடுத்தாகவேண்டும். அதை ஏற்றுக்கொள்ள எஜமானன் மறுப்பானேயானால் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் ஊரிலுள்ள ஆலயத்தில் ஏதேனும் ஒரு தெய்வத்துக்கு அந்த கிரையத்தை காணிக்கையாக செலுத்துவான். அது முதற்கொண்டு அவன் அந்த தேவனுடைய அடிமையாக அங்கீகரிக்கப்படுகிறான். பழைய அடிமைத்தனம் முடிவடைகிறது. இன்னொரு மனிதன் அந்த கிரையத்தைச் செலுத்துவானேயாகில் அவன் புதிய எஜமானனாகிறான். பழைய எஜமானனுக்கு இனி அவன் ஊழியம் செய்யத் தேவையில்லை.

ரோமாபுரி விசுவாசிகள் முன்பு பாவத்தின் அடிமைத்தனத்தில் இருந்தபோது, பாவ கிரியைகளை நடப்பிக்கும்படியாக உற்சாகமாகவும் மனநிறைவோடும் தங்கள் அவயவங்களை அசுத்தத்துக்கும் அக்கிரமத்துக்கும் ஒப்புக்கொடுத்தார்கள். அசுத்தம் என்ற பாவம் பரிசுத்தம் மற்றும் கற்புநெறிகளுக்கு விரோதமானது. அக்கிரமம் என்ற பாவம் அயலார் மற்றும் தேவனுக்கு விரோதமான துன்மார்க்கமான பாவம். அவயவம் என்ற வார்த்தை கண், நாக்கு, காது போன்ற உடலுறுப்புகளை மட்டும் குறிப்பிடாமல், மனிதனுடைய அறிவுத்திறன், மனது, கற்பனை, உள்ளுணர்வுகள் ஆகிய சகலத்தையும் குறிப்பிடுவதாகக் கொள்ளவேண்டும். இவைகளெல்லாம் முன்பு பாவத்தின் ஆளுகைக்குட்பட்டதாக இருந்தன. இரட்சிக்கப்படும்போது இந்த அவயவங்கள் மாற்றப்படுவதில்லை. அவை மாற்றப்படவேண்டிய அவசியமும் இல்லை. ஆனால் அதே அவயவங்கள் இப்போது ஒரு வித்தியாசமான காரியத்தைச் செய்யவேண்டும் என்கிறார் பவுல். அவை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்பட்ட நிலையில் பரிசுத்தமானதை நடப்பிக்கவேண்டும். **தவறான பாதையில் உங்களை வழிநடத்திச் சென்ற அதே அவயங்கள், அதே தீவிரத்தோடு உங்களை சரியான பாதையில் நடத்திச் செல்லவேண்டும்.** பரிசுத்தமாக்கப்படுதல் இதையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" என்ற ரோமர் 6:13ம் வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். ஒப்புக்கொடுப்பது என்பது ஒரு ஆலோசனையாக அல்ல, கட்டளையாக வெளிப்படுகிறது என்பதைக் கவனியுங்கள். தேவனிடமிருந்து ஒரு கட்டளை வெளிப்படுமானால் அதற்கு நாம்

கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். நம்மால் செய்யமுடியாத ஒரு காரியத்தைச் செய்யும்படியாக தேவன் ஒருபோதும் சொல்லமாட்டார்.

எந்த அளவுக்கு உற்சாகமாக, தன்னிச்சையாக, நம் முழுபெலத்தோடு நம் அவயவங்களை பாவக்கிரியைகளில் ஈடுபடுத்தினோமோ, அதைப்போல் நீதியின் கிரியைகளை நடப்பிப்பதிலும் அதிகமான உற்சாகம் காட்டவேண்டும் என்கிறார் பவுல். இதன் விளைவாக மட்டுமே நம்மில் தாழ்மை, சாந்தம், கபடற்ற சுபாவம், உண்மை, சகிப்புத்தன்மை, ஜெபஈடுபாடு போன்ற பரிசுத்தமான பண்புகள் உண்டாகும். முந்தின நாட்களில் சாத்தானின் அடிமைகளாக எவ்வளவு தீவிரமாக அவனுக்கென்று வேலைகளை செய்தோமோ, அதே அளவு இப்போது தேவனுடைய ராஜ்யம் கட்டப்படுவதற்கு வேலை செய்ய ஆரம்பித்தோமானால் உலகமெங்கும் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாகும் என்பதில் சந்தேகமே இல்லை.

பாவத்திற்கு நீங்கள் அடிமைகளாயிருந்த காலத்தில் நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள். (ரோமர் 6:20)

பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பவர்களின் அவல நிலை என்ன என்பது இந்த வேதபகுதியில் அறிவிக்கப்படுகிறது.

1. அவர்கள் நீதியிலிருந்து நீக்கப்பட்டார்கள். (வசனம் 20)
2. அவர்கள் வெட்கமடைந்தார்கள். (வசனம் 21)
3. அவர்கள் நித்திய மரணத்தை சந்திப்பார்கள். (வசனம் 21)

நீதிக்கு நீங்கினவர்களாய் இருந்தார்கள் என்று பவுல் சொல்வது, அவர்கள் நீதியின் கிரியைகளை நடப்பிக்கும் வல்லமையை இழந்தவர்களாக இருந்தார்கள் என்று பொருள்கொள்ளலாம். அவர்களால் நற்கிரியைகளைச் செய்யவே முடியாது. அப்படியே ஏதேனும் செய்தாலும் அவை தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையாகக் கருதப்படுகிறது (ஏசாயா 64:6). மனிதர்களுடைய சுயநீதியை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பவர்களின் நற்கிரியைகளை நன்கு கவனித்தோமானால், அவை, அவர்களுடைய சுயநீதியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கும், அவர்களை மட்டுமே மகிமைப்படுத்துவதாக இருக்கும்.

இப்பொழுது உங்களுக்கு வெட்கமாகத் தோன்றுகிற காரியங்களினாலே அக்காலத்தில் உங்களுக்கு என்ன பலன் கிடைத்தது? அவைகளின் முடிவு மரணமே. (ரோமர் 6:21)

ரோமாபுரி விசுவாசிகள் இப்போது இரட்சிக்கப்பட்ட தேவனுடைய பரிசுத்தவான்கள்தான். ஆனாலும் அவர்களுடைய முந்தின நிலைமை எவ்வளவு கேவலமாக இருந்தது என்பதை பவுல் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். அவர்களுடைய பாவகிரியைகளினால் அவர்கள் எந்த பலனும் பெறவில்லை. எந்த ஒரு நன்மையும், பிரயோஜனமும் அடையவில்லை. அதுமட்டுமல்ல, அதை இப்போது நினைத்துப் பார்த்தாலும் அதைக்குறித்து வெட்கப்படவேண்டியதிருக்கிறது என்கிறார் பவுல். "அவர்களால் ஒளிப்பிடத்தில் செய்யப்படும் கிரியைகளைச் சொல்லுகிறதும் அவலட்சணமாயிருக்கிறதே" (எபே 5:12).

பாவம் என்ற எஜமானனின் அடிமைத்தனத்தில் இருந்த நாட்களில் நமக்கு அவை வெட்கமாகத் தோன்றவில்லை. மாறாக அது மிகுந்த மனமகிழ்ச்சியும், பெருமையுமாக இருந்தது. இப்போது அது அருவருப்பானதாக காணப்படுகிறது. இந்த மாற்றமே நாம் நீதியின் அடிமைத்தனத்துக்குள் வந்துவிட்டோம் என்பதை உறுதிப்படுத்துகிறது. எசேக்கியேல் 16:63-வது வசனத்தில் தேவன் சொல்கிறார் : "நீ செய்த எல்லாவற்றையும் நான் மன்னித்தருளும்போது, நீ நினைத்து, வெட்கி, உன் நாணத்தினால் உன் வாயை இனித் திறக்கமாட்டாதிருப்பாய்". **மன்னிக்கப்பட்ட பாவமே ஒருவனை வெட்கப்படுத்துமானால் மன்னிக்கப்படாத பாவம் எவ்வளவு கொடூரமானது என்பதை யோசித்துப்பாருங்கள்.**

பாவக்கிரியைகள் ஒரு மனிதனை வெட்கப்படுத்துகிறது என்பது மட்டுமல்ல, அவனை மரணத்துக்கு நேராக வழிநடத்துகிறது. யாக்கோபு சொல்கிறார்: "அவனவன் தன்தன் சுயஇச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (1:14,15). "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவம் முந்தி பிரவேசிக்காத நிலையில் மரணம் பூமிக்குள் பிரவேசித்திருக்க முடியாது. மரணம் என்ற வார்த்தை சரீர மரணத்தை மட்டும் அல்ல, "இரண்டாம் மரணம்" என்று சொல்லப்படும் ஆவிக்குரிய மரணத்தையும் உள்ளடக்கியது. **தேவனுடைய ஜீவனுக்குப் புறம்பாகும் நிலையே மரணம்.** பாவத்தில் நிலைத்திருப்பவர்கள் சகலரும் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை

அடைவார்கள்" (2 தெச 1:10) என்று வாசிக்கிறோம்.

இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன். (ரோமர் 6:22)

19-வது வசனத்தில் "பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" என்ற கட்டளை வெளிப்பட்டதைப் பார்த்தோம். தேவன் ஒரு உத்தரவைப் பிறப்பிக்கும்போது, அதற்கான காரணங்களை அறிவிக்கவேண்டிய அவசியமில்லை. இருந்தாலும் அவர் நம்முடைய தகப்பனாகவும் இருப்பதினால், அந்த கட்டளையைக் கைக்கொள்வதினால் உண்டாகும் இரண்டு ஆசீர்வாதங்களையும் இந்த வசனத்தில் சொல்லி, நம்மை உற்சாகப்படுத்துகிறார்.

1. பரிசுத்தமாக்கப்படுதல்
2. நித்திய ஜீவன்

இந்த ஆசீர்வாதங்களின் பின்னணியில் ஒரு கிறிஸ்தவனில் நடக்கும் இரண்டு செயல்பாடுகளும் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. ஒரு கிறிஸ்தவன் பாவத்திலிருந்து விடுதலையாக்கப் படுகிறான்
2. இதன் விளைவாக ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு அடிமையாகிறான்.

பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படுகிறான் என்று சொல்லும்போது அதை நடப்பிப்பது நாம் அல்ல, தேவன் என்பது தெளிவாகிறது. இது ஒரு பாவமனிதன் செய்கிற, அல்லது செய்யக்கூடிய காரியம் அல்ல. **பாவம் என்ற எஜமானுக்கு கிரயம் கொடுத்து விடுதலையாக்குபவரும், அந்த கிரயத்தைக் கொடுத்து தனக்கென்று வாங்கிக்கொண்டதன்மூலம் தன்னுடைய அன்பின் அடிமைத்தனத்துக்குள்ளாகக் கொண்டுவருபவரும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே.** இந்த அனுபவத்தைத்தான் கிறிஸ்து "சிறைப்பட்டவர்களை சிறையாக்கினார்" என்று எபேசியர் 4:8ல் குறிப்பிடுகிறார். "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே" (1 கொரி 6:20) என்கிறார் பவுல். 17-வது வசனத்தில் "முன்னே நீங்கள்" பாவத்திற்கு அடிமையாயிருந்தீர்கள் என்று அறிவித்த பவுல் இந்த வசனத்தில் "இப்பொழுது நீங்கள்" பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டீர்கள் என்கிறார். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு மனிதனில்

எவ்வளவு பெரிய மாற்றம் உண்டாகிறது என்பதைப் பாருங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பாவத்திலிருந்து விடுதலைபெற்று, தேவனுக்கு அடிமையாக இருக்கிறோம் என்பதை நம்பி, அதை அறிக்கையிடுங்கள். **நாம் கிறிஸ்துவுக்குள் சிறைப்பட்டிருக்கிறோம். நாம் எல்லாரும் கிறிஸ்துவுக்குள் மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்து, அவருடைய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம்.** பாவத்துக்கு மரித்து, பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டபடியினால் பாவம் நம்மை ஆளுகை செய்யமுடியாது. அதற்காக நாம் பாவமற்ற பரிபூரணத்துக்குள் வந்துவிட்டோம் என்று சொல்லமுடியாது என்பதை ஏற்கனவே பார்த்தோம். நம்முடைய, சரீரத்தின் அவயவங்களில் பாவம் இன்னும் வாசமாயிருக்கிறது. இதைக்குறித்து அடுத்த அதிகாரம் 14-25 வசனங்களில் விளக்கமாக அறிந்துகொள்ளலாம். மகிமையின் சரீரத்தை நாம் பெற்றுக்கொள்ளும் நாள்வரை பாவத்தோடு நாம் போராடவேண்டியதிருக்கிறது என்றாலும் இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன் பாவத்தை எதிர்த்து நின்று மேற்கொள்ளும் அதிகாரத்தை உடையவனாக இருக்கிறான் (1 பேதுரு 5:9). பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பவன் கிறிஸ்தவன் அல்ல.

இன்று நாம் தேவனால் அடிமைப்படுத்தப்பட்டு அவருடைய அடிமையாயிருக்கிறோம். நம்முடைய ஆவி மட்டுமல்ல, நம்முடைய சரீரமும் நமக்குச் சொந்தமானதல்ல. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா" (1 கொரி 6:19) என்கிறார் பவுல். **நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதினால் நமக்கென்று வாழவோ, நம் மனவிருப்பத்தின்படி செயல்படவோ நமக்கு அனுமதி இல்லை, உரிமையும் இல்லை.** தேவனுக்கு அடிமைகளாய் இருந்துகொண்டு, அவருக்கு விரோதமான பாவத்தைச் செய்வது துணிகரமான காரியம். நாம் தேவனுடைய அடிமைகள் என்பதை உணர்ந்துகொள்வதில்தான் நம்முடைய மெய்யான பரிசுத்தம் அடங்கியிருக்கிறது. தேவனுடைய அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறவோ, விடுவிக்கப்படவோ எந்த மனிதனாலும் முடியாது. நித்திய நித்தியமாக நாம் அவருக்குச் சொந்தமானவர்கள். "ஒருவனும் அவைகளை (தன்னுடையவர்களை) என்கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை" (யோவான் 10:28) என்று இயேசு சொல்லியிருக்கிறார்.

தேவனுடைய அடிமைத்தனத்துக்குள் நாம் இருப்பதின் விளைவாக நாம் பெறும் மேன்மை பரிசுத்தமாக்கப்படுதல். **பரிசுத்தமாக்கப்படுவது**

என்பது தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்பட்டு, அவருக்கென்று வாழும் உன்னத அனுபவத்தைக் குறிப்பிடுகிறது. பலிபீடம், தேவாலயத்தில் பயன்படுத்தப்பட்ட பாத்திரங்கள் பரிசுத்தமானதாக வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, ஏனென்றால் அவை தேவனுக்கென்று மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டன. ஒருவகையில் பார்த்தால் ஒரு மனிதன் கிறிஸ்துவைப்போல் மாறும் அனுபவமே பரிசுத்தமாக்கப்படுதல். தன் வாழ்நாள் முழுவதிலும் அவர் தன்னுடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதிலே கவனம் செலுத்தினார் (யோவான் 6:38). திருத்துவத்தின் இரண்டாவது நபர் என்ற முறையில் சர்வ வல்லமையுள்ள தேவனாக இருந்தும் அவர் சொல்கிறார்: "என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது" (யோவான் 7:16). "நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்" (யோவான் 8:28). முற்றிலுமாக கிறிஸ்து தேவனால் பயன்படுத்தப்பட்டார்.

நித்திய ஜீவன் என்றால் என்ன என்ற கேள்விக்கு கிறிஸ்து இவ்வாறு பதில் தருகிறார்: "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்" (யோவான் 17:3). நித்திய ஜீவன் என்றால் நித்திய நித்தியமாய் வாழ்வது மட்டுமல்ல, மெய்தேவனை அறிந்து அவரோடு ஐக்கியம் கொண்டிருப்பதுவுமாகும். எனவே நித்திய ஜீவன் ஒரு மனிதனுடைய மரணத்துக்குப் பின்புதான் துவங்குகிறது என்பதல்ல. ஒருவன் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் அந்த வினாடியில்தானே நாம் நித்தியவாசியான "கிறிஸ்துவுக்குள்" இணைக்கப்படுகிறோம் என்பதினால் நித்தியஜீவன் உடனடியாக ஆரம்பமாகிறது.

பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)



இந்த அதிகாரத்தில் பவுல் அறிவித்த சகல உபதேசங்களின் முடிவுரையாக இந்த வசனம் அமைகிறது. முந்தின அதிகாரத்தின் கடைசி வசனத்தை இது நினைவுபடுத்துவதாகவும் இருக்கிறது. "பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டதுபோல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நீதியினாலே நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" (ரோமர் 5:21). தான் அறிவிக்கும் இரட்சிப்பின் சுவிசேஷம் என்ன என்பதை மிகவும் சுருக்கமாக பவுல் இந்த வசனத்தில் வெளிப்படுத்துகிறார்.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்நாட்களில் மரணத்துக்கு நேராக சென்று கொண்டிருக்கவேண்டும். அல்லது நித்திய ஜீவனுக்கு நேராகச் சென்றுகொண்டிருக்கவேண்டும். விரிவான வாசலில் பிரவேசிக்கவேண்டும், அல்லது இடுக்கமான வாசலில் பிரவேசிக்கவேண்டும். விசாலமான வழியைத் தெரிந்துகொள்ளவேண்டும் அல்லது நெருக்கமான வழியைத் தெரிந்துகொள்ளவேண்டும் (மத் 7:13,14). உலகப்பொருளுக்கு ஊழியம் செய்யவேண்டும், அல்லது தேவனுக்கு ஊழியம் செய்யவேண்டும்.

நாம் யாருக்கு ஊழியம் செய்கிறோம், யாருடைய அடிமைகளாக இருக்கிறோம் என்பதின் அடிப்படையில் மனித இனம் இவ்விதமாக இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது. பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்போமானால் அதன் கூலியாக மரணத்தை நாம் சுதந்தரித்துக்கொள்ளுவது உறுதி. கிறிஸ்துவின் அடிமைத்தனத்தில் இருப்போமானால் நித்திய ஜீவன் கிருபை வரமாக, இலவசமாக நமக்கு அருளப்படுகிறது. தேவன் யாருக்கும் கடன்படுகிறவரல்ல என்பதால் எதையும் கூலியாகத் தருவதில்லை. அவர் கொடைவள்ளலாக இருப்பதால் நித்திய ஜீவனுக்கு குறைவானதொன்றையும் கொடுப்பதில்லை. நாம் எவ்வளவு நற்கிரியைகள் செய்தோம், எத்தனைபேருக்கு ஆதரவாக இருந்தோம், எவ்வளவு ஞானமாக செயல்பட்டோம் என்பதல்ல, நம்முடைய எஜமானனாக யாரைத் தெரிந்துகொண்டோம் என்பதே நம்முடைய நித்தியத்தை முடிவு செய்கிறது.

"பாவத்தின் சம்பளம் மரணம்" என்கிறார் பவுல். பாவம் செய்கிறவர்கள் அதை உரிமையோடு தங்கள் எஜமானனிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள். ஒருவகையில் பார்த்தால் மரணத்தை அவர்கள் அதிகாரத்தோடு சுதந்தரித்துக்கொள்கிறார்கள். அதைப்பெற்றுக்கொள்ளும்

தகுதி அவர்களுக்கு உண்டு. "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக் 18:4,20) "பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக் 1:15). யோபு 18:14ல் ஒரு மனிதனுடைய நம்பிக்கையை அவனுடைய கூடாரத்திலிருந்து வேரோடு பிடுங்கும் பயங்கர ராஜாவாக மரணம் உருவகப்படுத்தப்படுகிறது. ஒருவனுடைய திட்டங்கள், தீர்மானங்கள், எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் எல்லாமே அவனுடைய மரணத்தோடு முடிவடைகிறது.

நித்தியஜீவனையோ ஒரு மனிதன் தன் எஜமானனாகிய கிறிஸ்துவிடமிருந்து சம்பளமாகப் பெற்றுக்கொள்வதில்லை. **எந்த ஒரு மனிதனும் தன்னுடைய கிரியைகளினிமித்தம் நித்தியஜீவனை உரிமையோடு பெற்றுகொள்ளமுடியாது. நித்தியஜீவனை ஒருவனும் சம்பாதித்துக்கொள்வதில்லை.**

"நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" (மத் 19:16) என்ற கேள்வியோடு இயேசுவிடம் வந்த வாலிபன் துக்கத்தோடுதான் திரும்பிப்போகிறான். **நித்திய ஜீவன் ஒரு கிருபை வரம். ஒருவனுடைய தகுதியின் அடிப்படையில் அல்ல, தேவனுடைய அன்பையும், தயவையும், இரக்கத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.** தன் மந்தையின் ஆடுகளுக்கு மேய்ப்பன் நித்தியஜீவனை தன் மனவிருப்பத்தின்படி கொடுக்கிறான். "நான் அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" (யோவான் 10:28,29). நித்தியஜீவன் என்பது தேவனுடைய இலவசமான ஈவு. "இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோமர் 3:24).

மரணம் என்ற வார்த்தை சரீர மரணத்தையும், ஆவிக்குரிய மரணத்தையும் உள்ளடக்கியது என்று பார்த்தோம். தேவனுடைய சுவாசத்தைப் பெற்றுக்கொண்ட மனிதன் மரணத்தைச் சந்தித்திருக்கவேண்டிய அவசியமில்லை. ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தமே மரணம் உலகில் பிரவேசித்தது (ஆதி 2:17). ஆதாம் தனது வீழ்ச்சிக்குமுன் பூரணமானவனாகவும், குற்றமற்றவனாகவும்

இருந்தான் என்பது உண்மைதான். ஆனால் அவன் பரிசுத்தவானாக இருந்தான் என்று சொல்லமுடியாது. நித்தியஜீவன் அவனுக்கு அருளப்பட்டிருக்கவில்லை. **நித்தியஜீவனைப் பெற்றுக்கொண்ட ஒரு மனிதன் அதை ஒருபோதும் இழந்துபோவதில்லை,** அவன் ஒருபோதும் மரணத்தைச் சந்திப்பதில்லை. ஆதாம் தனக்குமுன் வைக்கப்பட்ட பரீட்சையில் வெற்றிபெற்று, பாவம் செய்யாதிருந்திருப்பானேயாகில் தேவன் நிச்சயமாக அவனுக்கு நித்தியஜீவனை வழங்கியிருப்பார். ஒரு தவறான எஜமானனை தனக்கென்று தெரிந்துகொண்டதின் விளைவாக மரணம் என்ற சம்பளத்தை ஆதாம் பெற்றுக்கொண்டான்.

7

கிறிஸ்தவனும் நியாயப்பிரமாணமும்

கிரியைகளின் அடிப்படையில் இல்லாமல், தேவகிருபையின் செயலாற்றலின் விளைவாக, விசுவாசத்தின் மூலமாக ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் என்பதை நிரூபிக்கும் முயற்சியில், நியாயப் பிரமாணத்துக்கு எதிராக பவுல் தைரியமாக பேசுவதைப் பார்த்தோம். ஆனாலும்: "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20), "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" (ரோமர் 5:20), "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" (ரோமர் 6:14) என்ற முன்று வசனங்களினிமித்தம் பவுல் பாவ வாழ்க்கையை மேன்மைப்படுத்துவதாக யூதர்கள் அவர்மேல் குற்றஞ்சாட்டினார்கள்.

கிருபையின் உபதேசம் நியாயப்பிரமாணத்தைக் குறித்த பயத்தை நீக்குவதினால் மனிதர்கள் பாவத்தில் நிலைத்திருப்பார்கள் என்பது அவர்களுடைய வாதம். தான் நியாயப்பிரமாணத்தின் எதிரி அல்ல என்பதை நிரூபிக்கும்படியாக, நியாயப்பிரமாணத்தின் மேன்மை என்ன? அது இஸ்ரவேலருக்கு மோசே மூலமாக கொடுக்கப்பட்டதின் நோக்கம் என்ன? நியாயப்பிரமாணத்தின் பெலவீனம் எதனால் உண்டானது என்பதை இந்த அதிகாரத்தில் பவுல் விளக்குகிறார்.

இந்த அதிகாரத்தை வேதபண்டிதர்கள் முன்று பகுதிகளாகப் பிரித்து விளக்கம் தருகிறார்கள். **முதல்பகுதியில்** (வசனம் 1-6) ஒரு விசுவாசிக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் இடையே உள்ள உறவு என்ன என்பதை பவுல் அறிவிக்கிறார். நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்து அதிலிருந்து விடுதலை ஆக்கப்பட்டு விட்டோம் என்பதினால் மாம்சம் நம்மை

ஆளுவதில்லை. நம்மில் உள்ள பழைய பாவத்தன்மைகளுக்கு நம்மேல் எந்த அதிகாரம் இல்லை என்பதினால் பாவங்களுக்கு நாம் இனிமேல் அடிமைகளாக இருப்பதில்லை. நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள். அவரோடு இறந்து, அடக்கம் பண்ணப்பட்டு, அவருடைய மரணத்தில் பங்கு கொண்டதின் விளைவாக, தேவனுக்கென்று கனிகொடுக்கும் புதுவாழ்வு வாழத் தொடங்குகிறோம் என்பதை இந்த முதல்பகுதியில் பவுல் அறிவிக்கிறார்.

இரண்டாவது பகுதி (வசனம் 7-13) "நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே" என்று துவங்குகிறது. உண்மையில் நியாயப்பிரமாணத்தின் உதவியினால் மட்டுமே, பாவமென்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்கிறோம். நியாயப்பிரமாணம் மனிதனைக் குறித்த தன்னுடைய சித்தத்தை வெளிப்படுத்தும்படியாக, தேவனால் வழங்கப்பட்டபடியால் பரிசுத்தமானதாயும், நீதியாயும், நன்மையானதாயும் இருக்கிறது. மனித பெலவீனங்களால் அதற்கு நாம் கீழ்ப்படியத் தவறியதின் மூலமாகவே பிரச்சனை உருவாகிறது என்கிறார் பவுல். மாம்சத்தினால் பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவன் செய்து, எவ்வாறு மனித இரட்சிப்பை நிறைவேற்றினார் (ரோமர் 8:3) என்பதே பவுல் தன் நிருபத்தில் அறிவிக்கும் சுவிசேஷம்.

அதிகாரத்தின் **மூன்றாவது பகுதியில்** (13-25) மனித சரீரத்திலிருக்கும் பாவத்தின் வல்லமையை பவுல் அறிவிக்கிறார். பாவத்தின் வஞ்சனை, வல்லமை, கொடூரம், அது செயல்படும் முறை ஆகியவற்றைக் குறித்து, வேதத்தில் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத புதிய விளக்கங்களை அனுபவரீதியாக பவுல் இந்த அதிகாரத்தில் அறிவிக்கிறார். தங்களுடைய சுயநீதியையும், நற்கிரியைகளையும் நம்பி வாழும் கிறிஸ்தவர்களுக்கு இந்த வேதபகுதி மரண அடியைக் கொடுப்பதாக அமைகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் ஒருபோதும் நம்மை தேவனுக்கென்று கனிகொடுப்பவர்களாக மாற்றாது என்பது மீண்டுமாக உறுதிப்படுத்தப்படுகிறது.

"எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20) என்று திட்டவட்டமாக அறிவித்த பவுல், இந்த அதிகாரத்தில் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் பரிசுத்தமாக்கப்படுவதில்லை என்பதை உணர்த்துகிறார். சொல்லப்போனால் நியாயப்பிரமாணம் ஒருவனுக்கு பரிசுத்தமாக்கப் படுவதில் பல தடைகளை உருவாக்குகிறது. நியாயப்பிரமாணத்தின்மூலம்

நீதியோ ஜீவனோ உண்டாவதில்லை (ரோமர் 3:20, கலா 3:21), அதே நேரத்தில் நியாயப்பிரமாணம் எல்லாரையும் குற்றவாளி என்று தீர்க்கிறது (ரோமர் 3:19). இதன் விளைவாக இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களும் தங்கள் பெலவீனத்தினிமித்தம் சிலசமயம் தங்கள் இரட்சிப்பைக் குறித்து சந்தேகப்பட ஆரம்பிக்கிறார்கள். தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள முடியாமல் போகிறார்கள். "நம்மைக் கட்டியிருந்த நியாயப் பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" (வசனம் 6) என்ற நிச்சயம் நம்மில் உருவாகாவிட்டால், எந்த ஒரு மனிதனாலும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழவே முடியாது.

மனிதனுடைய இரட்சிப்பு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்படிவதில் அல்ல, கிருபையையே அடிப்படையாகக் கொண்டது என்பதை நம்புங்கள், ஏனென்றால்:

1. நியாயப்பிரமாணம் நம்மை ஒரு வேலையைச் செய்யும்படியாகச் சொல்லுகிறது. கிருபையோ அந்த வேலை கல்வாரியில் செய்யப்பட்டாயிற்று என்கிறது.

2. "இதைச் செய், அப்போது நீ ஜீவித்திருப்பாய்" என்கிறது நியாயப்பிரமாணம், கிருபையோ "நீ ஜீவித்திரு, அப்போது நீ அதைச் செய்வாய்" என்கிறது.

3. தேவனிடத்தில் அன்பு கூரும்படியாக நியாயப்பிரமாணம் சொல்கிறது. தேவன் உன்மேல் அன்பாயிருக்கிறார் என்கிறது கிருபை.

4. நியாயப்பிரமாணம் பூமியின் மிகச்சிறந்த மனிதர்களை பாவி என்று நியாயந்தீர்க்கிறது. கிருபையோ மிகப்பெரிய பாவியை நீதிமான் என்கிறது.

5. நியாயப்பிரமாணம் நம்முடைய பாவத்தை நாம் காணும்படியாகச் செய்கிறது. கிருபையோ நம்முடைய இரட்சிப்பைக் காணும்படியாகச் செய்கிறது.

ஒரு ஓட்டப்பந்தயம் நடப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். பலர் அதில் கலந்துகொண்டு ஓடுகிறார்கள். இறுதியில் வெற்றிபெற்றவர்

களுக்கு தங்களிடம் சூட்டப்படுகிறது. இதுதான் நியாயப்பிரமாணம் செயல்படும் விதம். கிருபை செயல்படும் விதம் வித்தியாசமானது. பந்தயம் துவங்குவதற்கு முன்பே தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனுக்கு கிரீடம் அணிவிக்கப்படுகிறது. அதற்குப்பின் அவன் ஓட ஆரம்பிக்கிறான். இவன் கிருபையின் விளைவாக ஜெயங்கொண்டவன் ஆகிறான்.

கிறிஸ்தவன் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவன் (வசனம் 1-6)

நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா? (ரோமர் 7:1)

நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களுடனே பேசுகிறேன் என்று பவுல் சொல்லி, அவர்களை 'சகோதரரே' என்று அழைப்பதினால் ரோமாபுரியிலுள்ள யூத கிறிஸ்தவர்களுடனே மட்டும் பவுல் பேசுகிறார் என்று சில வேதபண்டிதர்கள் கருதினாலும், பொதுவாக எல்லா கிறிஸ்தவர்களையும் மனதிற்கொண்டு பவுல் இந்த அதிகாரத்தை எழுதுவதாக எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் யூதர்களை மட்டும் பிரத்தியேகமாக மனதில் வைத்துப் பேசும்போது "மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரர்" (ரோமர் 9:3) என்று பவுல் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். சகோதரர் என்ற வார்த்தையை இன்னும் ஏழு இடங்களில் ரோமர் நிருபத்தில் பவுல் பயன்படுத்தி, ரோமசபையார்மேல் தனக்கிருந்த அன்பை வெளிப்படுத்துகிறார் (1:13; 8:12; 10:1; 11:25; 12:1; 15:30; 16:17).

நியாயப்பிரமாணம் (யாத் 31:18, நெகே 13:14, அப் 7:53) என்பது மோசே மூலமாக சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களுக்கு வழங்கப்பட்ட சட்டவிதிகளைக் குறிப்பிடுகிறது. நியாயப்பிரமாணம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் Torah என்ற வார்த்தை போதனை என்று பொருள்படும். வேதத்தின் முதல் ஐந்து புத்தகங்களை உள்ளடக்கிய இது யூதர்களின் வேதாகமாகக் கருதப்படுகிறது. இதைக் குறித்து யூதர்கள் எவ்வளவு மேன்மை பாராட்டினார்கள் என்பதை முழு வேதமும் அறிவிக்கிறது. ஆயிரக்கணக்கான ஆண்டுகள் இஸ்ரவேலரின் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் நியாயப்பிரமாணமே ஆண்டுகொண்டிருந்தது. யூதர்கள் மட்டுமல்ல, புறஜாதியாரில் இருந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களும் நியாயப்பிரமாணத்தை கனம்பண்ண விரும்பினார்கள். அவ்வாறு செய்யும்படியாக யூதர்கள்

அவர்களை வற்புறுத்தினார்கள்.

ரோமர் 2:14 சொல்கிறபடி, "நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டிருக்கிறது" (வசனம் 15) என்கிறார் பவுல். **எனவே மனித இனம் முழுவதுமே, அவர்கள் மெய்தேவனை அறிந்திருக்கிறார்களோ, அல்லவோ, தேவனுடைய பிரமாணத்துக்கு உட்பட்டதாகவே இருக்கிறது.** சீனாய் மலையில் தேவன் மோசே மூலமாக நியாயப்பிரமாணத்தை வழங்குவதற்கு முன்பும் மனித இனம் தேவனுடைய கற்பனைகளுக்கு உட்பட்டதாகவே இருந்தது. அதனால்தான் மோசேக்கு பல நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த யோபு தேவனுடைய ஆலோசனைகளை "கற்பனை" என்று அழைக்கிறார் (23:12).

நியாயப்பிரமாணத்தை அடியிற்கண்டபடி மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. பத்துக்கற்பனைகள் (யாத் 20:3-17, உபா 5:7-21) (தேவனால் எழுதப்பட்டவை)
2. சமூக ஒழுங்குமுறைகள், சடங்காச்சாரம் மற்றும் சுகாதாரத்துக்கடுத்த பிரமாணங்கள் (யாத் 21 - 23 அதிகாரங்கள்)
3. மதரீதியான மற்றும் பலிமுறைகளுக்கடுத்த சட்டவிதிகள் (யாத் 24-40 அதிகாரங்கள்)

இந்த வசனத்தில் நியாயப்பிரமாணம் என்று சொல்லும்போது திருமண உறவுமுறைகளைப் பற்றி மோசே மூலமாக தேவன் வழங்கிய சட்டதிட்டங்களை மட்டும் பவுல் குறிப்பிடுவதாக சில வேத ஆசிரியர்கள் கருதுகிறார்கள். ஆனால் பொதுவாக நியாயப்பிரமாணம் என்ற வார்த்தையை மோசே மூலமாக சீனாயில் வெளிப்பட்ட சகல சட்டங்களையும் உள்ளடக்கியதாகவே பவுல் பயன்படுத்துகிறார் (ரோமர் 3:19; 5:13; 1 கொரி 9:8,9; கலா 3:10,19) என்பதினால் இந்த கருத்து தவறானது என்று முடிவுசெய்கிறோம்.

ஒரு மனிதன் உயிரோடு இருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறது என்கிறார் பவுல். அதாவது ஒருவனுடைய மரணத்துக்குப் பின் அவனைப் பொறுத்தவரை சகல பிரமாணங்களும் செயலிழந்து போகிறது. **ஒருவன் உயிரோடிருக்கும்போதுதான் அந்த நாட்டின்**

சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியும் நிர்ப்பந்தம் உண்டாயிருக்கிறது. மரணமடைந்த ஒரு மனிதன்மேல் யாரும் நீதிமன்றத்தில் வழக்கு போடமுடியாது. வழக்கு நடந்துகொண்டிருக்கும் போது அவன் மரித்துப்போய்விட்டான் என்றாலும், அந்த நிமிடத்திலிருந்து சட்டத்துக்கு அவன்மேல் அதிகாரம் இல்லை. அவனை யாரும் தண்டிக்கமுடியாது. சிறையில் தள்ள முடியாது. இந்த பொதுவான நியதியை நீங்கள் அறியாமலிருக்கிறீர்களா என்று பவுல் ரோமாபுரி விசுவாசிகளைக் கேட்கிறார்.

அதெப்படியென்றால், புருஷனையுடைய ஸ்திரீ தன் புருஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணத்தின்படியே அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டிருக்கிறாள்; புருஷன் மரித்தபின்பு புருஷனைப் பற்றிய பிரமாணத்தினின்று விடுதலையாயிருக்கிறாள். (ரோமர் 7:2)

ஒருவன் உயிரோடிருக்கும்வரைதான் சட்டதிட்டங்கள் அவனை ஆளுகை செய்கின்றன என்பதை நிரூபிக்கும்படியாக பவுல் ஒரு உதாரணத்தை இங்கே சொல்கிறார். திருமண உறவு நிரந்தரமானது என்றாலும் (ஆதி 2:22-24, மல் 2:14-16) ஒரு திருமணமான பெண் அவளுடைய கணவன் உயிரோடு இருக்கும்வரைதான் அவனுடன் வாழ்க்கை நடத்தவேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறாள். கணவனுடைய மரணத்துக்குப்பின் இந்த திருமண விதியிலிருந்து மனைவியானவள் விடுதலை பெறுகிறாள். அவர்கள் உயிரோடிருக்கும் வரை "அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி 2:24) என்பது தேவனுடைய நியதி. "ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" (மல் 2:15, 16) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கணவன் உயிரோடிருக்கும்வரை ஒரு ஸ்திரீ அவனுடைய நிபந்தனைக்குட்பட்டவள், அவனுடைய ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருப்பவள் என்பது தேவனுடைய நியமம். பெண்கள் சம உரிமையும், சம ஆளுகை அதிகாரமும் கேட்கும் நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் கணவன் மனைவி உறவு முறைகளைக் குறித்து சொல்வதை எபேசியர் 5:22-24, 33 வாசித்து அறியலாம். "உன் ஆசை உன் புருஷனைப் பற்றியிருக்கும், அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான்" (ஆதி 3:16) என்ற தேவனுடைய ஆணை இன்னும் மாற்றப்படவில்லை என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

இந்த வசனத்தில் 'ஸ்திரீ' என்ற வார்த்தை யூதர்களாயிருந்து

இப்போது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். நியாயப்பிரமாணம் அவளை ஆண்டுகொண்டிருக்கும் கணவனாக உருவகப்படுத்தப்படுகிறது. நிரந்தரமானதைப் போல் காணப்படும் புருஷனுடைய ஆளுகை அதிகாரம் அவனுடைய மரணத்தோடு முடிவடைகிறது. அவனுடைய மரணத்துக்குப்பின் புருஷனைப் பற்றிய பிரமாணத்திலிருந்து ஸ்திரீ விடுதலை அடைகிறாள். கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவுடன் நியாயப்பிரமாணமும் அறையப்பட்டு, மரித்துவிட்டது. எந்தப் பிரமாணம் அவளை கணவனோடு இணைத்து கட்டிவைத்ததோ, அதே பிரமாணம் அவனுடைய மரணத்துக்குப்பின் அவளை அவனிடமிருந்து பிரித்தும் வைக்கிறது. பவுல் சொல்கிறபடி, "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே" (கலா 2:20). ஒருவனுடைய மனைவி என்ற ஸ்தானத்துக்கு அந்த ஸ்திரீ மரித்தவள் ஆகிறாள். விடுதலையாயிருக்கிறாள் என்று சொல்லும்போது பவுல் அறிவிக்கும் காரியமானது : "மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள்; தன் புருஷன் மரித்தபின் தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்பட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்" (1 கொரி 7:39). நியாயப்பிரமாணமாகிய புருஷன் மரித்த நிலையில் உயிர்த்தெழுந்த இயேசுவை அந்த ஸ்திரீ திருமணம் செய்வதில் தடையேதும் இல்லை.

ஆகையால், புருஷன் உயிரோடிருக்கையில் அவள் வேறொரு புருஷனை விவாகம் பண்ணினால் விபசாரியென்னப்படுவாள்; புருஷன் மரித்தபின்பு அவள் அந்தப் பிரமாணத்தினின்று விடுதலையான படியால், வேறொரு புருஷனை விவாகம் பண்ணினாலும் விபசாரியல்ல. (ரோமர் 7:3)

தன் கணவன் உயிரோடிருக்கையில் இன்னொருவனை மணந்துகொள்ளும் பெண் விபசாரம் என்ற குற்றத்துக்கு ஆளாகிறாள் என்று அறிவிக்கும் நியாயப்பிரமாணம், கணவன் இறந்தபின் இன்னொருவனை மணக்கவிரும்பினால் அதை தடை செய்வதில்லை. ஏனென்றால் அவள் திருமண விதிகளில் இருந்து விடுதலை பெற்றவளாகிறாள், விபசாரி என்னும் குற்றச்சாட்டுக்கு ஆளாவதில்லை. மரணத்தினிமித்தம் ஏழு சகோதரர்களை ஒன்றன்பின் ஒன்றாக திருமணம் செய்த பெண் லூக்கா 20:29-34 ல் விபசாரியாக கருதப்படவில்லை. அந்த திருமணம் சட்டபூர்வமானதாக நியாயப்பிரமாணத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இந்த வசனத்தில் நியாயப்பிரமாணம் மரித்துவிட்டதாக பவுல் அறிவிக்கவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் 1500 ஆண்டுகளுக்கு மேலாக நியாயப்பிரமாணத்தை பற்றிமட்டுமே பெருமை பாராட்டி வந்த யூதர்கள் மத்தியில் பெரிய எதிர்ப்பு உண்டாயிருக்கும். கணவனுடைய மரணம் மனைவியின் விடுதலைக்குக் காரணமாக இருந்தது என்கிறார். ஒரு பெண் தன் கணவன் என்ற எஜமானனின் ஆளுகையில் இருக்கிறாள். அதைப் போலவே நாம் நியாயப்பிரமாணத்தின்விளைவான பாவம் என்ற எஜமானனின் அடிமைத்தனத்தில் இருக்கிறோம். அதிலிருந்து நாம் வெளியேவர முடிவதில்லை. ஆனாலும் கிறிஸ்து இயேசுவின் கல்வாரி மரணத்தின் மூலமாக பாவப்பிரமாணம் மரணமடைகிறது. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலை அடைகிறோம். மீண்டும் திருமணம் செய்ய, இன்னொரு எஜமானைத் தெரிந்து கொள்ளும் உரிமை நமக்கு உண்டு. யார் அந்த எஜமானன்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே. "நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" (ரோமர் 6:11) என்ற பவுலின் அறிவுரையை ஏற்கனவே தியானித்தோம்.

அப்படிப்போல, என் சகோதரரே, நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள். (ரோமர் 7:4)

நியாயப்பிரமாணம் என்கிற கணவன் ஒரு எஜமானனைப்போல் ஒவ்வொரு மனிதனையும் ஆளுகை செய்து, தன்னுடைய அடிமைத்தனத்தில் வைத்திருக்கிறது. கிறிஸ்துவின் பாடு மரணத்தின் விளைவாக பாவத்தின் ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டுவரப்படுகிறது. நியாயப்பிரமாணம் மரணமடைகிறது. நம்மை ஆளுகை செய்யும் கணவனாகிய பாவப்பிரமாணத்திலிருந்து நாம் விடுதலை பெற்றவர்களாகிறோம். ஒரு புதிய எஜமானனை கணவனாகத் தெரிந்து கொண்டு புதிய எஜமானனின் அடிமைகள் என்ற அங்கீகாரத்துக்குள் நாம் வருகிறோம். "நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி... " என்கிறார் பவுல். ஆங்கில மொழிபெயர்ப்புகள் "நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்பவரை திருமணம் செய்து கொண்டவர்களாகிறீர்கள்" (that ye should be married to another, even to Him who is raised from the dead) என்று சொல்லுகிறது. திருமண உறவு குறித்த பிரமாணம் நினைவுபடுத்தப்படுகிறது.

வேதத்தின் மிக முக்கியமான வசனங்களில் ஒன்றாக இது கருதப்படுவதற்கு பல காரணங்கள் உண்டு. **நியாயப்பிரமாணத்துக்கு மரித்து கிறிஸ்துவோடு உயிர்த்தெழுவதை மையமாகக் கொண்டதே கிறிஸ்தவ வாழ்க்கை.** கிறிஸ்துவை அறிந்து, அவரை ஏற்றுக்கொள்வது என்பது ஒருவனுடைய வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்குவதாக இருக்கிறது, ஏனென்றால் பாவத்துக்கு மரித்த ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு மிகவும் நெருக்கமான உறவுக்குள் வருகிறான். கிறிஸ்து அவனை தன்னோடு இணைத்துக்கொண்டவராய் ஜீவபலியாக பிதாவிடம் ஒப்புக்கொடுத்தபடியினால் நியாயப்பிரமாணத்துக்கு மரித்த நிலையில் அவன் புதிய ஜீவனைப் பெற்றவனாகிறான். அதன் விளைவாக கனிகொடுக்கும் அனுபவம் உறுதிப்படுத்தப்படுகிறது. பரிசுத்தமும் நீதியுமே நம்மில் தேவன் எதிர்பார்க்கும் கனிகள். முதல் புருஷனான நியாயப்பிரமாணத்தினால் இந்தக் கனிகளை அவனில் உருவாக்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மேன்மைகளுக்கெல்லாம் அடிப்படையான காரணம் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்துவை மணவாளனாக நாம் ஏற்றுக் கொண்டதுதான். **கிறிஸ்துவை மணவாளனாக அறிந்துகொள்ளாத ஒருவன் கிறிஸ்தவனாக இருக்கமுடியாது.** அவரோடு நாம் நெருக்கமான ஐக்கியங்கொண்டவர்கள் ஆகிறோம். கல்வாரி சிலுவையில் அவரோடு நாமும் மரித்தோம். கிறிஸ்து மாம்சத்தில் உயிரோடிருக்கும்போது நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராயிருந்தார் (கலா 4:4,5). மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின்மேல் நியாயப்பிரமாணத்துக்கு அதிகாரமில்லை. அதுபோல் நாமும் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள் ஆகிறோம். "கிறிஸ்துவின் சரீரத்தினால் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என்கிறார் பவுல்.

"சரீரம்" என்ற வார்த்தை இந்த வசனத்தில் எதைக் குறிப்பிடுகிறது என்பதைக் கவனியுங்கள். "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24). திருத்துவத்தின் இரண்டாவது நபர் என்ற முறையில் அவருக்கு சரீரம் இல்லை. 'சரீரம்' என்ற வார்த்தை கிறிஸ்துவின் மனித அவதாரத்தைக் குறிப்பிடுகிறது. "வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவான் 1:14) என்று வாசிக்கிறோம். ஒரு மனிதனாய் வாழ்ந்து, மரித்ததின் விளைவாகவே நாம் நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெறுகிறோம். கிறிஸ்துவின் அற்புதமான போதனைகளினால் நாம் இரட்சிக்கப்படவில்லை. அவருடைய சாட்சியின் ஜீவியத்தினால் நாம் இரட்சிக்கப்படவில்லை. அவர் நடப்பித்த அற்புத அடையாளங்களினால் நாம் இரட்சிக்கப்படவில்லை. "**அநேகருக்காக பிட்கப்படுகிற கிறிஸ்துவின்**

சரீரத்தினாலே" (1 கொரி 11:24), அதாவது அவருடைய பாடு மரணத்தில் மட்டுமே மனிதனுடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. 1 பேதுரு 2:24 சொல்கிறது : "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும் படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். "முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்குமுன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ 1:21)

சரீரம் பிட்கப்பட்டவராய், இரத்தம் சிந்தி கிறிஸ்து ஏன் மரித்தார் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அவர் மரித்தார் என்று சொல்வதை விட அவர் கொல்லப்பட்டார் என்பதே சரியானது. பரிசேயர், சதுசேயர்களின் பொறாமையும், யூதாசின் பொருளாசையும், பிலாத்துவின் அநீதியான நியாயத்தீர்ப்பும் மட்டுமே அவருடைய மரணத்துக்குக் காரணம் என்று சொல்லிவிடமுடியாது. பிதாவாகிய தேவன் மனித இனத்தின்மேல் பாராட்டிய அன்பினிமித்தம் அவர் மரிக்கவேண்டியதிருந்தது என்பதுதான் உண்மை (யோவான் 3:16). எல்லாவற்றுக்கும் மேலாக நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றும் படியாகவே அவர் கல்வாரி சிலுவையில் மரணத்தைச் சந்தித்தார். "நாம் புத்திரசுவிகாரத்தை யடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக்கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்" (கலா 4:4,5).

மாம்சத்தில் வெளிப்பட்ட கிறிஸ்து நியாயப்பிரமாணத்துக்குட் பட்டவராக, தான் உயிரோடிருந்த நாட்களில் அதன் அடிமைத்தனத்தில் இருந்தார். அதனால்தான் அவர் பாவமில்லாத பரிசுத்தராக இருந்தும் யோவான் மூலம் ஞானஸ்நானம் பெற்றார் (மத் 3:13-15). பாவிகளோடு தன்னை ஐக்கியப்படுத்தினார். "நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" (மத் 5:17) என்றார். நியாயப்பிரமாணத்தின் சகல நியதிகளையும் அவர் கைக்கொண்டார். நியாயப்பிரமாணம் அறிவிக்கிறது: "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எபே 18:4). நம்முடைய பாவங்களினிமித்தம் நாம் பெற வேண்டிய சாபத்தையும் மரணத்தையும் தன்மேல் ஏற்றுக்கொண்டதன் விளைவாக கிறிஸ்து மரித்தார். "கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா 3:13) என்று வாசிக்கிறோம்.

அவருடைய மரணத்தோடு காரியங்கள் நின்றுவிடவில்லை. மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை பவுல் உடனடியாகச் சுட்டிக்காட்டுகிறார். எந்த சரீரத்தில் அவர் மரித்தாரோ, அதே சரீரத்தில், ஆனால் சரீரம் மகிமை அடைந்தநிலையில் அவர் உயிர்த்தெழுந்தார். அதனால்தான் அவருடைய கல்லறை காலியாக இருக்கிறது. "நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோமர் 4:25). கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களான நாமும் கிறிஸ்துவோடு மரித்தோம், அடக்கம் பண்ணப்பட்டோம், உயிர்த்தெழுவோம். ரோமர் 6:4-5 மீண்டும் வாசித்துப்பாருங்கள். **கிறிஸ்துவோடு இறந்து, அடக்கம்பண்ணப்பட்டு மரணத்தைப் பகிர்ந்துகொண்டவர்கள், அவரோடு எழுந்து புதிய ஜீவனுடையவர்களாய் புதுவாழ்வு வாழ்வார்கள் என்ற நிச்சயம் அவருடைய உயிர்த்தெழுதலினால் மட்டுமே உண்டாகியிருக்கிறது.**

கிறிஸ்துவோடு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தவர்கள் என்ற நிலையில் நாம்பெறும் மிகப்பெரிய ஆசீர்வாதம் என்ன என்பதை பவுல் இவ்விதமாக அறிவிக்கிறார்: "நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்". கிறிஸ்தவர்கள் இனி மரிக்கப்போகிறார்கள் என்பதல்ல, ஏற்கனவே மரித்தவர் களாயிருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தின் நியமங்களின்படி நாம் பெறவேண்டிய தண்டனையை நம்முடைய பிரதிநிதி என்ற முறையில் கிறிஸ்து ஏற்றுக்கொண்டு மரித்ததின் விளைவாக, அந்த நியாயப்பிரமாணமே நம்மை நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை தந்துவிட்டது. தேவனுக்கென்று கனிகொடுக்கும்படியாக இது சம்பவித்தது. இதன் விளைவாக நம்மை ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்க்கும் அதிகாரம் யாருக்கும் இல்லாமல் போகிறது. **தேவனுடைய அங்கீகரிப்பைப் பெறுவதற்கு நியாயப்பிரமாணத்தை நம்பியிருக்கவேண்டும் என்கிற அவசியம் இல்லாமற் போகிறது.**

பாவத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் மரித்தவர்கள் தேவனுக்கென்று கனிகொடுக்க ஆரம்பிக்கிறார்கள். "இயேசு கிறிஸ்துவினால் வருகிற நீதியின் கனிகள்" (பிலிப் 1:10) நம்மில் உருவாக ஆரம்பிக்கிறது. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் முதலிய ஆவியின் கனிகளைப்பற்றி கலாத்தியர் 5:23,24ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவோடு நாம் நிலைத்திருப்பதன் விளைவாக இக்கனிகள் தோன்றுகின்றன. இதன் விளைவாக தேவனுக்கு ஊழியம் செய்ய தேவன் நம்மை பயன்படுத்துகிறார். **இந்த கடைசிநாட்களில் ஆவியின் வரங்களே முக்கியப்படுத்தப்படுகின்றன. வரங்களைவிட ஆவியின் கனிகளே நம்மை**

தேவனுடைய சாட்சிகளாக நிலைநிறுத்தும். எபேசியர் 2:10 சொல்லுகிறபடி: "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்". நற்கிரியைகளாகிய கனிகளைக் கொடுப்பதுதான் கிறிஸ்துவோடு நாம் இணைக்கப்பட்டதன் நோக்கம். (சங் 1:3, எரே 17:8,10; நீதி 11:30, யோவான் 15:1-8, எபே 2:10;5:9, பிலிப் 4:8,9,17). "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (மத் 7:20) என்கிறார் இயேசு.

"கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" என்கிறார் பவுல். நியாயப்பிரமாணம் தேவனால் வழங்கப்பட்டது என்பதால் ஒருபோதும் மரிப்பதில்லை. நியாயப்பிரமாணத்தை, ஒரு ஸ்திரீயை ஆளுகைசெய்யும் கணவனாக உருவகப்படுத்திப் பேசிய பவுல், அவனுடைய மரணத்துக்குப்பின் மனைவி கிறிஸ்துவை மணந்துகொள்ளுவதாக அறிவித்ததைப் பார்த்தோம். இந்த வசனத்தில் மனைவி மரித்ததாகக் குறிப்பிடுகிறார். கணவனோ, மனைவியோ யார் மரித்தாலும் பழைய திருமண உறவு முடிவுக்குக்கொண்டுவரப்படுகிறது. புதிய திருமண உறவுக்கு சட்டபூர்வமாக வழி திறக்கப்படுகிறது. "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே" (கலா 2:19) என்கிறார் பவுல்.

இந்த அதிகாரத்தின் முதல் நான்கு வசனங்களை சுருக்கமாக அறிந்துகொள்வோம்.

1. நியாயப்பிரமாணம் ஒரு விசுவாசியை ஆண்டுகொள்ளும் கணவனாக உருவகப்படுத்தப் படுகிறது.
2. நியாயப்பிரமாணம் மரித்ததாகச் சொன்னால் யூதர்கள் மத்தியில் எதிர்ப்பு உண்டாகும் என்பதினால் விசுவாசியாகிய நாம் (மனைவி) மரித்ததாக பவுல் அறிவிக்கிறார்.
3. திருமண உடன்படிக்கை செய்தவர்களுள் ஒருவர் மரிக்கும்போது அடுத்தவர் அதின் சகல நிபந்தனைகளிலிருந்தும் விடுதலை பெறுகிறார்.
4. விடுதலை பெற்ற மனைவி கிறிஸ்து என்ற மணவாளனை ஏற்றுக்கொள்ள எந்த தடையும் இல்லை.

5. இதன் விளைவாக அவள் தேவனுக்கென்று கனிகொடுக்கிறவளாகிறாள்.

நாம் மாம்சத்திற்கு உட்பட்டிருந்த காலத்தில் நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள் மரணத்திற்கு ஏதுவான கனிகளைக் கொடுக்கத்தக்கதாக நம்முடைய அவயவங்களிலே பெலன் செய்தது. (ரோமர் 7:5)

கிறிஸ்துவை மணவாளனாக ஏற்றுக்கொண்டவர்கள் தேவனுக்கென்று கனிகொடுக்கிறார்கள் என்பதை முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், நியாயப்பிரமாணத்துக்கு வாழ்க்கைப்பட்டு, மாம்சத்துக்கு உட்பட்டிருந்த நாட்களில் வித்தியாசமான கனிகளை கொடுக்கிறவர்களாய் இருந்தோம் என்பதையும் நினைவூட்டுகிறார். முன்பு நாம் மாம்சத்தினாலே ஆளப்பட்டிருந்தபடியால் நம்மில் பாவ இச்சைகள் தோன்றிக் கொண்டிருந்தன. அவை நம் சரீர உறுப்புகள்மீது ஆட்சி செலுத்தியன. இதன் விளைவாக மரணத்துக்கு ஏதுவான கனிகளை நாம் பிறப்பித்துக்கொண்டிருந்தோம். எல்லா பாவக்கிரியைகளும் மனிதனை மரணத்துக்கு நேராக வழிநடத்துகின்றன. ஆவிக்குரிய மரணத்தைத் தொடர்ந்து வருவது சரீர மரணம். ஆதாம் பாவம் செய்தபோது முதலாவது ஆவிக்குரிய மரணத்தைச் சந்தித்தான். விளைவு, தேவனோடு கொண்டிருந்த உறவை இழந்துபோனான். அடுத்து அவன் சரீரத்திலும் மரித்தான். தேவனால் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் மரணத்துக்கென்று நியமிக்கப்பட்டவனல்ல என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இன்று நாம் தேவனுடைய பரிசுத்தவான்களாக இருந்தாலும் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நாம் மாம்சத்திற்கு உட்பட்டவர்களாகத்தான் இருந்தோம் என்பதை மறந்துவிடக்கூடாது. மாம்சம் (flesh) (கிரேக்க பதம் sarx) என்ற வார்த்தை இந்த நிருபத்தில் முதல் தடவையாக இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், தொடர்ந்து பல இடங்களிலும் மற்ற நிருபங்களிலும் அது சொல்லப்படுகிறது. கீழ்க்கண்டவாறு பல அர்த்தங்களை அது உள்ளடக்கியது.

1) மனிதனுடைய வெளிப்படையான சரீரம் (1 கொரி 15:39)

2) அழிவுக்கு எத்தனமான மனித இனம் (1 கொரி 1:29)

3) மனித சந்ததி (ரோமர் 9:8)

4) மனித சுபாவம் (ரோமர் 9:5)

5) மனுஷீக பெலன் (பிலிப் 3:3)

6) மனிதனில் வாசமாயிருக்கும் பாவம் (ரோமர் 7:5, 25, 8:3-9,12,13; கலா 5:16, 17)

'நாம்' என்று பவுல் தன்னையும் தன்னுடைய ரோமாபுரி வாசகர்களோடு இணைத்துக்கொண்டு பேசுகிறார். நாம் எல்லாருமே இரட்சிக்கப்படுவதற்கு முன்பு மாம்சத்தின் ஆளுகையில்தான் இருந்தோம் என்று பவுல் சொல்லும்போது ஆவிக்குரியவர்களாக இல்லாத நம்முடைய பழைய வாழ்க்கையை பவுல் மனதில் வைத்துப்பேசுகிறார். "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது" (கலா 5:17) என்று வாசிக்கிறோம். இதன் விளைவாகவே பாவ இச்சைகள் நம் அவயவங்களில் பெலன் கொள்ளுகிறது. மரணத்துக்கு ஏதுவான கனிகள் உருவாகின்றன.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பு ஒரு மனிதன் நல்லவனாக நற்கிரியைகள் செய்கிறவனாக, பக்திமானாக, ஜெபிக்கிறவனாக, பலருக்கு ஆசீர்வாதமான ஒரு மனிதனாக இருந்திருக்கலாம். கிறிஸ்துவை அறிந்து ஏற்றுக்கொள்ளாத ஒரு மனிதனை உலகம் தலைசிறந்தவனாக, மாமனிதனாக, நீதிமானாகக் கருதலாம். ஆனால் வேதம் அவனை மாம்சத்துக்குரியவன் என்றுதான் சொல்கிறது. அதனால்தான் பவுல் சொல்கிறார்: "நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்" (எபே 2:2).

மனித இனத்தை கீழ்க்கண்ட இரண்டு வகையாகப் பிரிக்கலாம். இவையன்றி இவைகளுக்கு இடைப்பட்ட மூன்றாவது பிரிவினரென்று யாரும் உலகில் இல்லை.

1) மாம்சத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் உட்பட்டவர்கள்

2) ஆவிக்கும் கிருபைக்கும் உட்பட்டவர்கள்.

"நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவஇச்சைகள்" என்ற அறிவிப்பு நிச்சயமாகவே பவுலின் மிகவும் தைரியமான அறிவிப்புகளில் ஒன்றாகும். "பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரி 15:56), "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" (ரோமர் 5:20) என்ற வசனங்களினிமித்தம் பாவ இச்சைகளை நியாயப்பிரமாணம்

உருவாக்குகிறது எனக் கொள்ளலாகாது. பாவஇச்சைகளை ஊக்குவிக்கிறது என்று வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம். **சகல பாவ இச்சைகளுக்கும் மூலகாரணம் ஏதேன் தோட்டத்தில் நடந்த வீழ்ச்சியே ஆகும். பிரமாணங்கள் மீறப்படுவதின் விளைவாக பாவ இச்சைகள் பெலனடைகின்றன.** அவற்றை எதிர்த்து நிற்கும் வல்லமையை நம் அவயவங்கள் படிப்படியாக இழந்துபோகின்றன. அவயவங்கள் என்பது நம்முடைய சரீர உறுப்புகளை மட்டுமல்ல, சகல மனுஷீக திறமைகளையும் உள்ளடக்கியது என்று பார்த்தோம். இரட்சிக்கப்பட்ட பின்பும் ஒரு மனிதனின் அவயவங்களில் பாவஇச்சையோடு மிகப்பெரிய போராட்டம் நடப்பதைக்குறித்து அதிகாரத்தின் கடைசி வேத பகுதியில் பவுல் அறிவிக்கிறார். பாவ இச்சையின் ஆதிக்கத்தைக் குறித்து 8,11,13 ஆகிய வசனங்களில் கூடுதலாக அறிந்துகொள்வோம்.

மனிதன் மாம்சத்திற்கு உட்பட்டிருக்கும் நிலை
(ஆத்துமாவும் சரீரமும் ஆவியின்றி தன்னிச்சையாக செயல்படுவது)



இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். (ரோமர் 7:6)

யூதர்களாயிருந்தாலும் சரி, புறஜாதியாரில் இருந்து இயேசுவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்களானாலும் சரி - இரட்சிக்கப்பட்டபின் அவர்கள் நியாயப்பிரமாணத்தின் ஆளுகைக்கு உட்பட்டவர்கள் அல்ல. சீனாய் மலையிலே நியாயப்பிரமாணம் மோசே மூலமாக யூதர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது (யாத் 20:2, உபா 5:15) என்பதைப் பார்த்தோம். அதற்கு முற்றிலுமாக கீழ்ப்படிவதாக அவர்கள் வாக்குபண்ணியிருந்தார்கள்

(யாத் 19:7,8). ஆனாலும் தேவனுடைய வார்த்தை சொல்வது என்ன? நியாயப்பிரமாணத்துக்கு யூதர்களும் மரித்தவர்கள் ஆகிறார்கள். இது எவ்வாறு சாத்தியமாகிறது? "சட்டதிட்டங்களாகிய நியாயப் பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து" (எபே 2:15) என்று சொல்லப்பட்டபடி சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து (மத் 5:17) கல்வாரி சிலுவையில் மரித்த இயேசு கிறிஸ்துவின் மரணத்தோடு தங்களை இணைத்துக்கொண்டதின் விளைவாக இது சம்பவிக்கிறது.

மரித்தவர்கள் மேல் எந்தவொரு சட்டதிட்டத்திற்கும் அதிகாரம் இல்லாமற்போகிறது என்று பார்த்தோம். தேவனால் நியாயப்பிரமாணத்துக்குட்படுத்தப்பட்ட யூதர்களுக்கே இந்த விடுதலை உண்டாகியிருக்கிறது என்றால், ஒருபோதும் நியாயப்பிரமாணத்தின் ஆளுகைக்குள் கொண்டுவரப்படாத கிறிஸ்தவர்களாகிய நாம் அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருப்பது எவ்வளவு நிச்சயம். கிறிஸ்தவர்களாகிய நமக்கு நியாயப்பிரமாணம் ஒருபோதும் வழங்கப்படவில்லை. அதற்குக் கீழ்ப்படிவதாக நாம் கூட்டமாக நின்றுகொண்டோ, அல்லது தனிப்பட்டவிதத்திலோ ஒருபோதும் வாக்குகொடுக்கவும் இல்லை. **நாம் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்கள் அல்ல. கிறிஸ்துவோடு இணைத்துக்கொண்டவர்கள் என்பதினால் கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள்.** கிறிஸ்து மாம்சத்தில் உயிரோடிருந்த நாட்களில் நியாயப்பிரமாணத்துக்குட்பட்டிருந்தார் என்பது உண்மைதான் (கலா 4:5). ஆனால் மரித்து, உயிர்த்தெழுந்து, பிதாவின் வலது பாரிசத்தில் சிங்காசனத்தில் வீற்றிருக்கும் கிறிஸ்துவின்மேல் நியாயப்பிரமாணத்துக்கு அதிகாரம் இல்லை என்பதே உண்மை-அவ்வாறானால், அவருடைய சரீரத்தின் அவயவங்களான நம்மீதும் அதற்கு அதிகாரம் இல்லை என்பதே நிச்சயமான உண்மை. இந்த சத்தியத்தை நன்றாக அறிந்து கொள்ளுங்கள்.

நியாயப்பிரமாணம் பரிசுத்தமானதுதான், நீதியானதுதான். ஆவிக்குரியதுதான் என்றாலும் அது யாரையும் நீதிமானாக்குவதில்லை (ரோமர் 3:20). அதன்மூலம் நீதியோ, ஜீவனோ உண்டாவதில்லை (கலா 3:21). மாறாக அது எல்லாரையும் குற்றவாளிகள் என்று தீர்க்கக்கூடியது (ரோ 3:19). அதனால்தான் அதன் அடிமைத்தனம் ஆகாருக்கு ஒத்ததாகக் கருதப்படுகிறது (கலா 4:21-5:1). அது மீறுதலை பெருகவைக்கிறது (ரோமர் 5:20; 7:7, 13:1). கிறிஸ்துவின் பாடுமரணம் வரை நியாயப்பிரமாணம் இஸ்ரவேலரை வழிநடத்தும் உபாத்தியாய் இருந்தது. "நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது" (கலா 3:24) என்கிறார் பவுல். கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் இந்த உபாத்தியாயர் இஸ்ரவேலருக்கே தேவையில்லை என்கிறபோது, இன்று கிறிஸ்தவர்கள்

தங்களை நியாயப்பிரமாணத்துக்குட்பட்டவர்களாக கருதினால் அந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை அறியவேண்டிய விதத்தில் அறிந்துகொள்ளவில்லை என்றுதான் பொருள். "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்" (கலா 2:10) என்கிறார் பவுல். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவன் சாபத்துக்குட்பட்டிருக்க முடியாது.

இவ்வாறு நியாயப்பிரமாணத்திலிருந்து கிறிஸ்தவர்களாகிய நாம் விடுதலையாக்கப்பட்டிருப்பதின் நோக்கம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். இப்பொழுது பழமையான எழுத்தின்படி அல்லாமல் புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யவேண்டும் என்பதற்காகவே இந்த விடுதலை உண்டாயிருக்கிறது. "இப்பொழுதோ" என்று இந்த வசனம் துவங்குவதைக் கவனியுங்கள். முன்பு பழைமையான எழுத்தின்படி ஊழியம் செய்தவர்கள் இப்போது புதுமையான ஆவியின்படி ஊழியம் செய்தவர்களாகிறார்கள். நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலை பெற்றுவிட்டோம் என்பதினால் நாம் நம்முடைய மனவிருப்பத்தின்படி நடக்கப்போவதில்லை. இன்னும் ஒரு அடிமையைப்போல் தான் ஊழியம் செய்யப்போகிறோம். ஏனென்றால் 4-வது வசனத்தில் பார்த்தபடி நியாயப்பிரமாணத்துக்கு மரித்து, மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்பவரை மணவாளனாகக் கொண்டு அவருடைய ஊழியர்களாக மாறிவிடுகிறோம். நாம் கிறிஸ்துவின் அடிமைகளாகிறோம்.

பழைமையான எழுத்து என்பது கற்பலகைகளில் எழுதப்பட்ட கற்பனைகளைக் குறிப்பிடுகிறது. இது பழைய உடன்படிக்கைக்கு அடையாளமாக இருக்கிறது. தேவன் இப்போது செய்துகொண்ட புது உடன்படிக்கை ஆவிக்குரியது புதுமையானது, "புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர் களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற் குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரி 3:6) என்கிறார் பவுல். "ஆவியினாலே நாம் தேவனுக்கு ஆராதனை செய்கிறவர்களாகிறோம்" (பிலிப் 3:3). ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்ளும் காலத்தில் நாம் இருக்கிறோம் (யோவான் 4:23). நியாயப்பிரமாண சடங்காச்சாரங்கள் எல்லாம் ஒழிந்துபோயின.

பழைமையான எழுத்தின்படி ஊழியம் செய்யும் ஒரு மனிதன் தனக்குப்புறம்பாக, வெளியே, கற்பலகைகளில் எழுதப்பட்ட கற்பனைகளின் அடிப்படையில் செய்கிறபடியினால் அதின் மேன்மை குறைவுபட்டதாக இருக்கிறது. புதுமையான ஆவியின்படி செய்யும் ஊழியம் மகத்துவமானது.

ஏனென்றால் "என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்" (எபி 8:10) என்று தேவன் சொல்லியிருக்கிறார் எரேமியா 31:32-34 வாசித்துப்பாருங்கள். **தேவனுடைய மனவிருப்பத்தின்படியும் சித்தத்தின்படியும் செயல்படவேண்டும் என்ற வாஞ்சை நம்முடைய உள்ளான ஆவியில் தேவனால் பதிப்பிக்கப்படுகிறது.** "தேவனே, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிற வராயிருக்கிறார்" (பிலி 2:13).

மேலும் பழைமையான எழுத்தின்படி நாம் செய்த ஊழியம் பயத்தை அடிப்படையாகக் கொண்டது. தேவனுக்கு பயந்ததின் விளைவாக, அவரிடமிருந்து வரக்கூடிய நியாயத்தீர்ப்புக்குப் பயந்து, நரக ஆக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்த நாம், இப்பொழுது புதுமையான ஆவியின்படி, அதாவது அவரைப் பிரியப்படுத்தும்படியாக, நம்முடைய நன்றியறிதலையும், துதியையும் வெளிப்படுத்தும் நோக்கத்தோடு மனமகிழ்ச்சியோடும், நிறைவோடும் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிகிறோம். எல்லாவிதத்திலும் அவரை மகிமைப்படுத்தவேண்டும் என்பதே நம்முடைய வாழ்க்கையின் பிரதான நோக்கமாகிறது. அடிமைத்தனத்தின் ஆவியோடு இல்லாமல், புத்திர சுவிகாரத்தின் ஆவியோடு, (ரோமர் 8:15) தேவனை மகிழ்விக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு கற்பனைகளைக் கைக்கொள்கிறோம். "தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளும்போது" (1 யோவான் 5:2) அவருடைய கற்பனைகள் பாரமானவைகளாகத் தெரிவதில்லை (வசனம் 3). "கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரி 3:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் தியானிக்கும் 6வது வசனத்தின் விளக்கவுரையாக 8-வது அதிகாரம் அமைகிறது என்றுகூட சொல்லலாம். மூன்று முக்கியமான சத்தியங்களை இந்த வேத பகுதி அறிவிக்கிறது.

1) கிறிஸ்தவர்கள் பாவத்துக்கு மரித்தவர்கள்.

2) கிறிஸ்தவர்கள் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள்.

3) கிறிஸ்தவர்கள் மரணத்துக்கு மரித்தவர்கள்.

மரணத்துக்கு மரித்தவர்களாகிய நாம் இனி மரிக்கப் போவதில்லை. நாம் எல்லாரும் நித்திரை அடைவோம் என்பது உண்மைதான். **கிறிஸ்துவோடு இணைக்கப்பட்ட ஒரு மனிதன் ஒருநாளும் மரணத்தைச்**

சந்திப்பதில்லை. ஏனென்றால் கிறிஸ்து இனி மரிப்பதில்லை (ரோமர் 6:9,10). அல்லேலூயா.

நியாயப்பிரமாணமும் பாவமும் (வசனம் 7-13)

ஆகையால் என்ன சொல்லுவோம்? நியாயப்பிரமாணம் பாவமோ? அல்லவே. பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றப்படி அறியவில்லை; இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. (ரோமர் 7:7)

தாங்கள் பெற்றுக்கொண்ட நியாயப்பிரமாணத்தினிமித்தம் தங்களை மேன்மைப்படுத்திக் கொண்டுவந்த யூதர்களை உணர்வடையச் செய்யும்படியாக அதின் குறைபாடுகளையும், அது செய்யத்தவறிய காரியத்தையும் பவுல் அறிவித்து வந்ததைப் பார்த்தோம். "நியாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவ இச்சைகள்" (வசனம் 5) என்ற பவுலுடைய அறிவிப்பு, நியாயப்பிரமாணத்தையும் பாவத்தையும் தான் ஒரேவிதமாக நினைப்பது போன்ற ஒரு கருத்தை உருவாக்கிவிடக்கூடும் என்பதினால், உடனடியாக நியாயப்பிரமாணம் பாவமோ என்ற கேள்வியை எழுப்பி, ஒருமனிதன் பாவம் செய்ய அது காரணமாக இருக்கிறதா என்கிறார். நியாயப்பிரமாணம் செய்யும் சில நற்காரியங்களை இந்த வேத பகுதியில் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

1) பாவமென்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளச் செய்கிறது (வசனம் 7)

2) நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது (வசனம் 12)

3) நியாயப்பிரமாணம் நீதியானதாயும் நன்மை யானதாயும் இருக்கிறது (வசனம் 12)

4) நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது (வசனம் 14)

நியாயப்பிரமாணத்தின் மேன்மையை பவுல் நன்கு அறிந்திருந்தபடியினாலே, தான் தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பரிசுத்தத்தைக் குறித்துப் பேசும்வேளையில் பவுல் "நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்" (பிலிப் 3:6) என்கிறார். சங்கீதம் 19:7 சொல்கிறது : "கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது".

பாவமென்றால் என்ன என்பதை நியாயப்பிரமாண சட்டவிதிகளின் மூலமாகவே தான் விளங்கிக் கொண்டதாக பவுல் அறிவிக்கிறார். பாவத்தைக்குறித்த பொதுவான உணர்வு எல்லா மனிதர்களுக்குள்ளும் உண்டாயிருக்கும் என்றாலும், அதின் உண்மையான தன்மை என்ன என்பதையும், அது எவ்வளவு ஆபத்தானது என்பதையும், அது உண்மையில் தேவனுக்கு விரோதமான பகை என்பதையும் நியாயப்பிரமாணத்தின் உதவியின்றி யாரும் அறிந்துகொள்ளமுடியாது. பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினாலே வருகிறது என்பதை ரோமர் 3:20ல் பார்த்தோம். பாவம் நம்மில் வாசமாயிருக்கிறது, நியாயப்பிரமாணத்தினால் அல்ல. **பாவத்தைக் குறித்த சரியான அறிவு உலகமனிதர்களிடம் இல்லை என்பதினால்தான் அதிலிருந்து மீட்கப்பட தங்களுக்கு ஒரு இரட்சகர் தேவை என்பதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள்.** நியாயப்பிரமாணத்தை அறியாதிருந்தால், தான் பாவியாக இருந்திருப்பேன் என்று பவுல் சொல்லவில்லை. இப்போது அறிந்துகொண்டிருக்கிற விதத்தில் அறிந்து, இரட்சிப்பின் நிச்சயத்தை உடையவனாக இருந்திருக்கமாட்டேன் என்ற விதத்தில் பவுல் பேசுகிறார்.

இச்சை என்ற பாவத்தை உதாரணமாக பவுல் எடுத்துக்கொள்கிறார். இதைக்குறித்து நியாயப்பிரமாணம் சொல்வதென்ன? "பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக" (யாத் 20:17) உபாகமம் 5:21-ம் வாசித்துப்பாருங்கள். பத்துக்கட்டளைகளில் இந்த கடைசி கட்டளையின் தனிச்சிறப்பு இதுதான். இது விபசாரம், கொலை, களவு, விக்கிரக ஆராதனை போன்ற வெளியரங்கமான செய்கையைக் குறித்ததாயிராமல் இருதயத்தின் நினைவுகளைப் பற்றியது. **சகல பாவங்களுக்கும் ஆணி வேர் ஒரு மனிதனுடைய இருதயத்தில்தான் இருக்கிறது.**

அடுத்தவர்களுக்குச் சொந்தமானவைகளை அடைய விரும்பும் கேவலமான ஆசையே இச்சை எனப்படுகிறது. தேவன் தனக்குக் கொடுத்திருக்கும் நன்மைகளில் திருப்தியடையாதிருப்பவன் மற்றவர்களிடத்தில் இருப்பது தனக்கு வேண்டும் என பேராசைப்பட ஆரம்பிக்கிறான். துவக்கத்தில் இது கிரியையாக வெளிப்படுவதில்லை என்பதினால் பாவமாகக் கருதப்படுவதில்லை. மனிதனின் எண்ணத்தில் உருவாகும் இந்த தவறான உணர்வு ஒருவனை வெகுவிரைவில் தவறான செயல்களைச் செய்யத்தூண்டுகிறது என்பதினால் அது ஒரு பாவமாகத்தான் கருதப்படவேண்டும். ஒரு உதாரணம் மூலம் இதை விளங்கிக்கொள்ளலாம். சுவரை வெள்ளையடிக்கப் பயன்படுத்தும்

சுண்ணாம்பில் வெப்பம் இருக்கிறது. ஆனால் அது வெளிப்படையாகத் தெரிவதில்லை. அதன்மேல் கொஞ்சம் தண்ணீர் ஊற்றும்போது, பொங்கி எழுந்து வெப்பம் வெளிப்படுவதைப் பார்க்கலாம். அந்த வெப்பத்தை தண்ணீர் உருவாக்குவதில்லை. சுண்ணாம்பில் இருக்கும் வெப்பத்தன்மையை வெளிப்படுத்துகிறது. இவ்வண்ணமாகவே இருதயத்தில் இருக்கும்போது இச்சை என்ற பாவம் நியாயப்பிரமாணத்து கற்பனையினால் வெளியரங்கமாகிறது.

லூசிபர் தேவனுடைய சிங்காசனத்தை இச்சித்தான் (ஏசா 14:13), ஏவாள் விலக்கப்பட்ட கனியை இச்சித்தாள் (ஆதி 3:6), ஆகான் பார்வோனின் சால்வையை இச்சித்தான் (யோசுவா 7:21), ஆகாப் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை இச்சித்தான் (1 இராஜா 21:2), அப்சலோம் ராஜகிரீடத்தை இச்சித்தான் (2 சாமு 15:3-6). இவர்களுடைய இச்சை அவர்களை எங்கே வழிநடத்தியது என்பதை நாம் அறிவோம்.

இச்சையானது விபசாரம், அசுத்தம், மோகம், பொருளாசை ஆகிய பாவங்களுக்கு இணையாக கொலோசெயர் 3:5ல் குறிப்பிடப்படுகிறது. "மோசம் போக்கும் இச்சை" (எபே 4:22) என்று பவுல் இந்த பாவத்தைக் குறிப்பிடுகிறார். இதே பவுல் நியாயப்பிரமாணத்தின் வெளிச்சத்தைப் பெறுவதற்குமுன் இச்சை பாவம் என்பதை அறிந்துகொள்ளவில்லை என்கிறார். ஒரு கிரியையாக வெளிப்படாத நிலையில் இச்சை பாவமாக இருக்கமுடியாது என்ற அவருடைய நம்பிக்கையை பிரமாணம் மாற்றியமைக்கிறது. தேவ சமுகத்தில் தான் பாவி என்பதை அறிக்கையிடச்செய்கிறது. இச்சை ஒரு பாவம் என்பதை அறிந்து உணர்ந்துகொள்ளாத நிலையில் ஒரு மனிதன் இரட்சிப்பின் நிச்சயத்தைப்பெறவே முடியாது. தன்னுடைய சுயநீதியில் நம்பிக்கை உடையவராய், பெருமை நிறைந்த பரிசேயனாய் வாழ்ந்துவந்த பவுல், தன்னுடைய வாழ்க்கையை இந்த பத்தாவது கற்பனையோடு ஒப்பிட்டுப் பார்த்து, மாற்றி அமைத்ததின் விளைவாகவே தேவசித்தத்தை நிறைவேற்றுகிறார். தேவனுடைய ஊழியக்காரராகிறார்.

பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் செத்ததாயிருக்குமே. (ரோமர் 7:8)

பாவம் நியாயப்பிரமாணத்தை உபயோகப்படுத்தி, தவறான ஆசைகளை மனதில் உருவாக்கி தன்னை விழவைத்ததாக பவுல் அறிவிக்கிறார். கற்பனைகள் பாவத்தைப் பெலனடையச் செய்கின்றன. சட்டவிதிகள் இல்லாவிட்டால் பாவம் இல்லாமல் போயிருக்கும். ஒருவேளை

பாவம் இருந்திருந்தாலும் அது வல்லமையற்றதாக இருந்திருக்கும். ஏனென்றால் நியாயப்பிரமாணத்தை அறிந்துகொள்வதற்கு முன் ஒருமனிதனிடம் பாவத்தைக் குறித்த உணர்வோ, அச்சமோ உண்டாவதில்லை. தான் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பதை அறிந்துகொள்ளாமல், போலியான சமாதானத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அவன், பாவம் தன்னில் வாசம் செய்வதையும், அது தன்னை ஆண்டுகொண்டிருப்பதையும் அறிந்து கொள்ளாமலேயே இருக்கிறான்.

"நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்" (ஆதி 2:17) என்ற கற்பனை வெளிப்படுவதற்கு முன்பேயும் ஏதேன் தோட்டத்தில் சர்ப்பம் இருந்திருக்கும். ஆனாலும் அது செயல்படாத நிலையில், மரக்கிளைகளில் மறைந்துகொண்டு செத்ததைப்போலக் காணப்பட்டிருக்கும். அந்த கனி தேவனால் விலக்கப்பட்ட அதேவேளையில் சர்ப்பம் உயிர்பெற்று எழும்புகிறது. கற்பனை வழங்கப்பட்டதும் கனி இச்சிக்கப்படத்தக்கதாக மாறுகிறது. இதன் விளைவாக நடப்பதென்ன? "அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக் 1:14,15) என்ற வசனம் நிறைவேறுகிறது.

நாம் தியானிக்கும் வேதபகுதியில் பாவம் ஒரு துன்மார்க்கமான வல்லமையாக உருவகப்படுத்தப்பட்டிருக்கிறது. பாவத்தின் வல்லமை என்ன என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. தேவனால் வழங்கப்பட்ட பரிசுத்தமான நியாயப்பிரமாணத்தையே மனிதன் இடறலடையும்படியாக பாவம் பயன்படுத்துகிறது என்றால் அது எவ்வளவு வஞ்சனையானது என்பதைக் கவனியுங்கள். ஆதாமின் மீறுதலினிமித்தம் இயல்பாகவே மனிதர்கள் தேவனுக்கடுத்த காரியங்களை எதிர்த்து நிற்கிறவர்களாக இருக்கிறார்கள்.

"மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" (ரோமர் 8:7) என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், ஒரு காரியம் தடைசெய்யப்படும்போது அதைச் செய்யும் வாஞ்சை இயல்பாகவே அதிகரிக்கிறது. "திருட்டுத் தண்ணீர் தித்திக்கும், அந்தரங்கத்தில் புசிக்கும் அப்பம் இன்பமாயிருக்கும்" (நீதி 9:17) என்று வாசிக்கிறோம். அதனால்தான் "பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரி 15:56) என்கிறார் பவுல். "சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது" என்று சொல்லி பரிசுத்த பவுல் தன்னையும் ஒரு பாவியாகக்

குறிப்பிடுவதைக் கவனியுங்கள்.

"நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது" (ரோமர் 5:15), "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" (ரோமர் 5:20), "நியாயப்பிரமாண மில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (ரோமர் 4:15) ஆகிய வசனங்களின் மையக்கருத்தாக இந்த வசனம் அமைகிறது. சாலையில் வேகத்தடை குறித்த எச்சரிக்கை இல்லாதபோது 60 மைல் வேகத்தில் கார் ஓட்டினால் அதுகுறித்து எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆனால் 40 மைல் என்ற வேகத்தடை எச்சரிக்கைப்பலகை வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்தபின்னும் 60 மைல் வேகத்தில் போனால் அது மீறுதல் என்ற பாவமாகிறது. யூத குடும்பத்தில் பிறந்த ஒருவன் தன்னுடைய 13-வது வயதுவரை நியாயப்பிரமாணத்தின் நியமங்களின்படி நடக்கவேண்டியதில்லை. அதை மீறி அவன் செய்யும் காரியங்கள் பாவமாகக் கருதப்படுவதில்லை. 13-வது வயதில் Bar mitzwah (நியாயப் பிரமாணத்தின் மகன்) என்ற சடங்கை அவன் அனுசரிக்கிறான். அதற்குப் பிறகுதான் அவனைப்பொறுத்தவரை நியாயப்பிரமாணம் உயிரடைகிறது. அவனுடைய மீறுதல் பாவமாகக் கருதப்படுகிறது.

முன்னே நியாயப்பிரமாணமில்லாதவனாயிருந்தபோது நான் ஜீவனுள்ளவனாயிருந்தேன்; கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது, நான் மரித்தவனானேன். (ரோமர் 7:9)

"நியாயப்பிரமாணமில்லாமல்" என்பதற்கு பயன்படுத்தப்படும் Choris nomou என்ற கிரேக்க வார்த்தை ரோமர் 3:21லும் பயன்படுத்தப்படுகிறது. தன்னுடைய 13-வது வயதில் நியாயப்பிரமாணத்தைக் குறித்த பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்கு முன் இளைஞனாக இருந்த காலக்கட்டத்தை பவுல் குறிப்பிடுவதாக சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். இன்னும் சிலர் பவுல் தமஸ்குப் பட்டணத்துக்குப் பிரயாணப்படுவதற்கு முன்பு ஆவிக்குரிய மரித்த நிலையில் இருந்த காலக்கட்டதை பவுல் குறிப்பிடுவதாகக் கருதுகிறார்கள். "தன்னுடைய சுயநீதியில் நம்பிக்கை உடைய பரிசேயனாய்" (பிலிப் 3:4-6, அப் 23:1, 26:4,5) அதினிமித்தம் தான் ஜீவனை உடையவராயிருப்பதாக கருதிக்கொண்டிருந்த காலக்கட்டத்தை குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

பவுல் ஒரு தத்துவஞானியாக பேசுவதினால் இதை விளங்கிக்கொள்ள சற்று கடினமாக இருக்கிறது. பாவத்தின் மரணம் ஒருவனுக்கு ஜீவனையும், பாவத்தின் ஜீவன் ஒருவனுக்கு மரணத்தையும் தருவதாகச் சொல்கிறார். நியாயப்பிரமாணம் வருவதற்கு முன்பிருந்த

காலக்கட்டம், நியாயப்பிரமாணம் வந்தபின்பிருந்த காலக்கட்டம் என்று இரண்டு காலக்கட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. முந்தினதில் ஜீவனுள்ளவராயிருந்த பவுல் பிந்தினதில் மரித்தவராகிறார். **சொல்லப்போனால் நியாயப்பிரமாணம் இல்லாத காலக்கட்டம் என்று ஒருபோதும் இருந்ததில்லை.** ஏதேன் தோட்டத்து தம்பதிகளே ஒரு பிரமாணத்துக்கு உட்பட்டவர்களாகத்தான் இருந்தார்கள் என்பதை அறிவோம். யூதனாகிய பவுல் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிராத காலமே இல்லை. ஏனென்றால் பவுலுக்கு சுமார் 1400 ஆண்டுகளுக்கு முன்பே மோசே மூலமாக இஸ்ரவேலர் அத்தனைபேருக்கும் நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டாயிற்று.

எனவே "நியாயப்பிரமாணமில்லாதபோது" என்று பவுல் சொல்லும்போது பிரமாணத்தை எழுத்தின்படியாக அறிந்துகொண்டிருந்தும் ஆவியின்படி ஏற்றுக்கொண்டிராத நாட்களை பவுல் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும் (2 கொரி 3:6-8). அவ்வாறு இருந்த நாட்களில் தான் ஜீவன் உடையவராக இருப்பதாக அவர் நம்பிக்கையோடு இருந்தார் என்று பார்க்கிறோம். வேகத்தடை பற்றிய எச்சரிக்கைப்பலகை சாலையில் வைக்கப்படும்வரை மணிக்கு 100 மைல் வேகத்தில் கார் ஓட்டினாலும் அதில் எந்த பிரச்சனையும் இருக்கப்போவதில்லை. அது ஒரு மீறுதலான குற்றமாகக் கருதப்படுவதில்லை. அப்போது பாவம் செத்த நிலையில் இருப்பதாக எடுத்துக் கொள்ளலாம்.

மரித்த பாவம் எப்போது உயிர் கொள்கிறது? "கற்பனை வந்தபோது" என்கிறார் பவுல். நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை **புசிக்காதே என்ற பிரமாணம் கொடுக்கப்பட்டபோது உறங்கிக்கொண்டிருந்த சர்ப்பம் உயிர்பெற்று எழும்புகிறது.** அதன் விளைவு என்ன? பாவம் உயிர்கொண்டதும் மனிதன் மரித்தவனாகிறான் (ரோமர் 5:12, 14; 6:23). பாவம் உயிரோருக்கிறது என்பதை அறியாதிருந்த காலக்கட்டத்தில் தான் உயிரோடிருப்பதாக மனிதன் தனக்குள் நினைத்துக்கொள்கிறான். ஆதாமைப்போல் பாவத்துக்குப் பின்னும் உயிரோடிருந்தாலும் "சாகவே சாவாய்" என்ற ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுத்திக்கொண்டவனாக இருக்கிறான்.

தேவனால் வழங்கப்பட்ட பரிசுத்தமான நியாயப்பிரமாணம் பாவத்தை அழித்துப்போடும் என்றுதான் நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? பாவத்தின் வல்லமையும் வஞ்சனையும் நியாயப்பிரமாணத்தின் மூலமாக உயிர்ப்பிக்கப்படுகிறது. அதன் விளைவாக ஒரு மனிதன் தான் மரித்தவன் என்ற உணர்வைப் பெற்றுக்கொள்கிறான். அவன் மரித்தவனைப்போல் செயலற்றவனாகிறான் என்பதாக

எடுத்துக்கொள்ளவேண்டும். தன்னுடைய பெலவீனத்தையும், நம்பிக்கையற்ற தன்மையையும் உணர்ந்து கொள்கிறான். தன்னைப்பற்றி அவன் கொண்டிருந்த உயர்வான எண்ணங்கள், சுயநம்பிக்கை ஆகியவை அழிந்துபோகின்றன. "நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:6) என்று அறிக்கையிட்டு தன்னைத் தாழ்த்தும் உன்னதமான அனுபவத்தைப் பெறுகிறான். "தேவனுக்கென்று பிழைக்கும்படி நான் நியாயப்பிரமாணத்தினாலே நியாயப்பிரமாணத்திற்கு மரித்தேனே" (கலா 2:19) என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள்.

தன்னுடைய மரித்த நிலையை உணர்ந்துகொண்ட ஒரு மனிதனைத்தான் தேவனால் உயிர்ப்பிக்கமுடியும். பரிசுத்தமான நியாயப்பிரமாண நியமங்களுக்குக் கீழ்ப்படிந்து தன்னை நீதிமானாக்கிக்கொள்ளவோ, பரிசுத்தப்படுத்திக்கொள்ளவோ முடியாது என்ற உணர்வடையும்போதுதான் ஒரு மனிதன் தான் தேவ சமுகத்தில் தன்னுடைய தகுதியின் அடிப்படையில் நிலைநிற்கமுடியாது என்பதை அறிந்துகொள்கிறான். நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதாக நினைத்துக்கொண்டு தேவாலயத்துக்குச் சென்ற பரிசேயன், தன்னுடைய சுயநீதியின்மேல் நம்பிக்கை உடையவனாக ஜெபிக்கிறான் (லூக்கா 1:9-14). ஆயக்காரனோ தன்னுடைய கீழ்ப்படிய முடியாத நிலையை உணர்ந்தவனாய் தேவ சமுகத்தில் மரித்தவனாகக் காணப்படுகிறான் "நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும்" (மத் 19:16) என்ற கேள்வியோடு கிறிஸ்துவிடம் வந்த மனிதன் பிரமாணங்களை எல்லாம் "என் சிறுவயதுமுதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன" (வசனம் 20) என்ற உணர்வோடு, தான் உயிரோடிருக்கும் நம்பிக்கையோடு வருகிறான். "துக்கமடைந்தவனாய் போய்விட்டான்" (வசனம் 22) என்று ஆவியானவர் அவனைக் குறித்து எழுதி வைத்திருக்கிறார். கிறிஸ்துவை சந்தித்தபின்னும் துக்கமுடையவனாய், அவன் போகிறான் என்றால் அதற்குக் காரணம் அவன் தன்னை ஜீவனுள்ளவனாகக் கருதியபடியால்தான்.

இப்படியிருக்க, ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக்கண்டேன். (ரோமர் 7:10)

நியாயப்பிரமாணத்துக்கு எதிராக பவுல் பல காரியங்களை அறிவித்ததைப் பார்த்தோம். முக்கியமாக "எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை" என்று 3:20ல் அறிவித்தார். அதே நேரத்தில் தேவனுடைய பரிசுத்தமான பிரமாணம் ஜீவனுக்கேதுவானது என்பதையும்

பவுல் அங்கீகரிக்கிறார். ரோமர் 10:5ல் பவுல், லேவியர் 18:5 வசனத்தின் அடிப்படையில் சொல்லுகிறார்: "மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக்குறித்து இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிறான் என்கிறார். ஒருவன் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து நடப்பானேயாகில் அது நிச்சயமாக அவனுக்கு ஜீவனை அருளிச்செய்யும் என்பதைப் பார்த்தோம்.

நியாயப்பிரமாணம் ஜீவனுக்கேதுவானது என்பதில் சந்தேகமே இல்லை. தேவன் சொல்கிறார்: "நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்" (யாத் 19:5). "என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்" (லேவி 18:5). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னிடம் வந்த நியாயசாஸ்திரியிடம் சொல்கிறார்: "அப்படியே (நியாயப்பிரமாணத்தின்படியே) செய், அப்பொழுது பிழைப்பாய்" (லூக்கா 10:28) என்று சொல்லி கற்பனை ஜீவனுக்கேதுவானது என்பதை உறுதிப்படுத்துகிறார். "என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசே 18:9), "என் கட்டளைகளை அவர்களுக்குக் கொடுத்து, என் நியாயங்களை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான்" (எசே 20:11). இன்னும் எசே 20:13,21; 18:21 வாசித்துப்பாருங்கள்.

ஜீவனுக்கேதுவான தேவனுடைய பிரமாணங்களை மரணத்துக்கேதுவாக மாற்றியது மனிதனுடைய கீழ்ப்படியாமைதான். மனிதனுக்கு நித்திய ஜீவனை வழங்கவேண்டும் என்பதற்காகவே தேவனுடைய முதலாவது பிரமாணம் நன்மை தீமை அறியத்தக்க கனியை புசிக்க ஏதேன் தோட்டத்தில் தடைசெய்தது. ஆனால் மனிதனோ அந்தக் கற்பனையை மீறி மரணத்தைச் சுதந்தரித்துக்கொள்கிறான். அதனால்தான் பவுல் சொல்லுகிறார்: "ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம்" (1 தீமோ 1:8). பாவ மனிதனால் அதை நியாயப்படி அநுசரிக்கமுடியாமல் போவதினால்தான் "பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரி 15:56) என்று சொல்லவேண்டியதாயிருக்கிறது. கீழ்ப்படியாமையினிமித்தம் தேவனுடைய பரிசுத்தமான பிரமாணங்கள் பாவத்தின் வல்லமையை அதிகரிக்கச் செய்கின்றன. அதன் முடிவு நித்திய மரணம்.

பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை

வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது. (ரோமர் 7:11)

8-வது வசனத்தில் "பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்றுச் சகலவித இச்சைகளையும் என்னில் நடப்பித்தது" என்று அறிவித்த பவுல், "பாவமானது சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" என்கிறார். பாவம் இச்சைகளை உருவாக்குகிறது என்பது மட்டுமல்ல, அது வஞ்சனையான முறையில் செயல்படுகிறது என்பதை தன் வாசகர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். தேவனுக்கடுத்து ஒரு வல்லமையான சக்தி ஒன்று உலகில் உண்டென்றால் அது பாவமே. அது வல்லமையானது என்பது மட்டுமல்ல, வஞ்சனையானதும் கூட. பாவத்தின் ஏமாற்றும் தன்மையையும், வஞ்சிக்கும் தன்மையையும், பாவம் எவ்வாறு மனிதனை மேற்கொண்டு கொன்றுபோடுகிறது என்பதையும் மனித இனம் உணர்ந்து கொள்ளாததின் விளைவாகவே கோடிக்கணக்கான மனிதர்கள் நித்திய நரகத்துக்கு நேராக உற்சாகத்தோடு பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் மனிதன்செய்த முதல் பாவத்திலேயே பாவத்தின் வஞ்சனை வெளிப்படுகிறது. "சர்ப்பமானது என்னை வஞ்சித்தது" (ஆதி 3:13) என்கிறாள் ஏவாள். பவுல் இதை 2 கொரி 11:3ல் உறுதிப்படுத்துகிறார். பாவத்தின் வஞ்சனையைக் குறித்த எச்சரிக்கையை எபிரெயர் 3:13லும் வாசிக்கிறோம். அந்திக்கிறிஸ்துவின் வருகை "சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" என்று 2 தெச 2:10ல் வாசிக்கிறோம். போர்க்கலையை நன்றாக அறிந்த ஒரு ராணுவ தளபதி சாதகமான நேரத்தை அறிந்தவராய், எதிரி சற்றும் எதிர்பாராத சமயத்தில் தாக்குவதுபோல மனிதனின் பெலவீனமான நேரத்தில் பாவம் அவனை எதிர்கொள்ளுகிறது. ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வது போலும், ஒரு மூடன் விலங்கிடப்பட்டுத் தண்டனைக்குப் போவதுபோலும், ஒரு குருவி தன் பிராணனை வாங்கும் கண்ணியை அறியாமல் அதில் விழத் தீவிரிக்கிறதுபோலும் (நீதி 7:22,23) மனிதன் பாவத்தின் வஞ்சனையினால் மேற்கொள்ளப்படுகிறான்.

"பாவம் கற்பனையினாலே சமயம்பெற்று தன்னை வஞ்சித்து கொன்றுபோட்டது" என்கிறார் பவுல். அதாவது நியாயப்பிரமாணத்தின் வழியாக, நியாயப்பிரமாணத்தின் மூலமாக இந்த வஞ்சனை நடைபெறுகிறது. "நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லது" (1 தீமோ 1:8) என்று பார்த்தோம். பாவம் மனிதர்களை நியாயப்படி பிரமாணத்தை அனுசரிக்க அனுமதிப்பதில்லை. பவுல் இரட்சிக்கப்படுவதற்குமுன் "நியாயப் பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்" (பிலி 3:6) என்ற சுயநீதியில் நம்பிக்கை உடையவனாய் இருக்கும்படி அவரை வஞ்சித்திருந்தது. **சில கிரியைகளைச்**

செய்து, சில கிரியைகளைச் செய்யாதிருந்தால் போதுமானது என்ற நம்பிக்கை கிறிஸ்தவர்கள் மத்தியில் இன்றும் காணப்படுகிறது. இது பாவத்தின் வஞ்சனை என்பதில் சந்தேகமேயில்லை. ஒரு காரியம் கிரியையில் வெளிப்பட்டால்தான் பாவமாகக் கருதப்படுமென்றும், மற்றபடி இருதயத்தின் யோசனைகளைக் குறித்து தேவன் நியாயந்தீர்க்கமாட்டார் என்றும் எண்ணுவோமானால் அதுவும் ஒரு வஞ்சனையே. அன்பும் இரக்கமும் நிறைந்த தேவன் தன்னுடைய சாயலில் தான் உருவாக்கிய மனிதனை நித்திய நரகத்துக்குள் தள்ள மாட்டார் என்று நினைப்போமானால் அதுவும் ஒரு வஞ்சனையே.

நியாயப்பிரமாணத்துக்கு முன்	நியாயப்பிரமாணத்துக்கு பின்
கிரியைகள் பாவமாகக் கருதப்படவில்லை (வசனம் 7)	பாவம் உயிர் கொண்டது (வசனம் 9)
பாவம் செத்ததாயிருந்தது (வசனம் 8)	பவுல் மரித்தவனானார் (வசனம் 9)
இச்சை ஒரு பிரச்சனை அல்ல (வசனம் 7)	இச்சை பாவமாகி பவுலை கொல்கிறது (வசனம் 11)

ஆகையால் நியாயப்பிரமாணம் பரிசுத்தமுள்ளதுதான், கற்பனையும் பரிசுத்தமாயும் நீதியாயும் நன்மையாயும் இருக்கிறது. (*ரோமர் 7:12*)

"நியாயப்பிரமாணம் பாவமா?" (வசனம் 7) என்ற கேள்விக்கான பதில் இந்த வசனத்தில் முடிவுபெறுகிறது. நியாயப்பிரமாணத்தில் பிரச்சனை ஒன்றும் இல்லை. பாவம் அதை தவறானமுறையில் பயன்படுத்தி மனித இனத்தை வஞ்சிக்கிறது என்பதை பவுல் ஏற்கனவே அறிவித்துவிட்டார். ஆனாலும் கற்பனை தன்னுடைய மரணத்துக்கு ஏதுவாக இருந்தது என்றும் (வசனம் 10), தன்னை வஞ்சித்துக் கொன்றுபோட்டது என்றும் (வசனம் 11) அவர் பேசிய காரியங்களினிமித்தம் யாரும் நியாயப்பிரமாணத்தை தவறாக நினைத்துவிடக்கூடாது என்பதற்காக நியாயப்பிரமாணத்தின் மூன்று தன்மைகளை முடிவுரையாக அறிவிக்கிறார்.

1) நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது (Holy)

2) நியாயப்பிரமாணம் நீதியானது (Just)

3) நியாயப்பிரமாணம் நன்மையானது (Good)

முதலாவதாக பவுல் பிரமாணத்தின் பரிசுத்தத்தைக் குறித்து பேசுகிறார். உண்மையான பரிசுத்தம் பாவத்திலிருந்தும், அசுத்தத்திலிருந்தும் தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படுவதில்தான் அடங்கியிருக்கிறது. தேவன் பரிசுத்தர் (லேவி 11:45) என்பதினால் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தும் நியாயப்பிரமாணம் பரிசுத்தமானதாகத்தான் இருக்கமுடியும். அடுத்ததாக அவருடைய கற்பனை பரிசுத்தமாயும் நீதியாயும் இருக்கிறது என்கிறார். கற்பனை என்று பவுல் சொல்லும்போது பத்துக்கற்பனையின் பத்தாவது கற்பனையை மட்டும் குறிப்பிடாமல் பொதுவாக சகல கற்பனைகளையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு பொருளை இச்சிப்பதே பாவம் என்ற கற்பனை அநீதியானது என்று நிரூபிக்கும் முயற்சியில் சத்துரு முயற்சி செய்து கொண்டிருக்கிறான். பாவத்தின் வஞ்சனை அதில்தான் இருக்கிறது. தேவனுடைய கற்பனைகளில் அநீதி காணப்படமுடியாது. மூன்றாவதாக அவை நல்லவை என்பதை பவுல் உறுதிப்படுத்துகிறார். எது பாவம் என்பதை நியாயப்பிரமாணத்திலிருந்துதான் அறிந்துகொள்கிறோம் என்பதினால் (வசனம் 7) அது நல்லதாகத்தான் இருக்கமுடியும். நம்முடைய வாழ்க்கைக்கு எது நலமானது என்பதை பிரமாணம் வெளிப்படுத்துகிறது.

1 தீமோ 1:8 சொல்கிறது: "ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால் நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம்". மோசே சொல்கிறார்: "இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்" (உபா 6:25). சங்கீதம் 119 முழுவதுமே நியாயப்பிரமாணத்தின் மேன்மையையும் மகத்துவத்தையும் அதன் பரிசுத்தத்தையும் பற்றியே பேசுகிறது. தாவீது சொல்கிறார்: "கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது" (சங் 19:9). சங்கீதம் 19:7-11 வாசித்துப்பாருங்கள்.

இப்படியிருக்க, நன்மையானது எனக்கு மரணமாயிற்றோ? அப்படியல்ல; பாவமே எனக்கு மரணமாயிற்று; பாவம் கற்பனையினாலே மிகுந்த பாவமுள்ளதாகும்படிக்கும், அது நன்மையானதைக் கொண்டு எனக்கு மரணத்தை உண்டாக்கினதினாலே, பாவமாகவே விளங்கும்படிக்கும் அப்படியாயிற்று. (ரோமர் 7:13)

"இப்படியிருக்க" என்ற வார்த்தை, "கற்பனை பரிசுத்தமானதாயும், நீதியாயும், நன்மையானதாயும் இருக்க" என்பதாகப் பொருள் கொள்ளவேண்டும். நன்மையான நியாயப்பிரமாணம் பவுலின் மரணத்துக்கு (வசனம் 10,11) எவ்வாறு காரணமாக இருக்கமுடியும் என்ற கேள்வி இந்த

வசனத்தில் கேட்கப்படுகிறது. "அப்படி அல்ல" (God forbid) என்ற பதில் உடனடியாக பவுலிடமிருந்து வெளிப்படுகிறது. தன்னைக் கொன்றது நியாயப்பிரமாணம் அல்ல, பாவமே என்கிறார் பவுல். பாவமே தன்னை மரணத்துக்கு நேராக வழிநடத்தியது என்கிறார். "கற்பனை வந்தபோது பாவம் உயிர்கொண்டது" (வசனம் 9). "பாவம் கற்பனையினாலே சமயம்பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது" (வசனம் 11) என்பதெல்லாம் உண்மைதான். ஆனாலும் பவுலின் மரணத்துக்கு நேரடியான காரணம் நியாயப்பிரமாணம் அல்ல, பாவமே என்கிறார் பவுல்.

பரிசுத்தமும், நீதியும், நன்மையுமான நியாயப்பிரமாணத்தை பாவம் திசைதிருப்பியதின் விளைவாக பவுலின் மரணம் சம்பவிக்க தேவன் ஏன் அனுமதித்தார் என்பதற்கான பதில் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. இரண்டு காரணங்களை பவுல் அறிவிக்கிறார்.

1) பாவம் கற்பனையினாலே பலமுள்ளதாகும்படியாக

2) பாவம் பாவமாகவே விளங்கும்படியாக

பாவம் நன்மையான நியாயப்பிரமாணத்தை பயன்படுத்தி பவுலின் மரணத்துக்குக் காரணமாயிருந்து மனிதனை மேற்கொண்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறது. ஆனால் உண்மையில் பாவத்தின் வஞ்சனை, கேடு, அகோரம், உக்கிரத்தன்மை எத்தகையது என்பதை மனிதஇனம் கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காகவே தேவன் நியாயப்பிரமாணத்தைச் செயல்படுத்துகிறார். உண்மையில் தேவன் பிரமாணங்களை வழங்கியதின் நோக்கமே அதுதான். ரோமர் 3:20ல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதின் நோக்கம் பாவம் பற்றிய அறிவையும், உணர்வையும் கொண்டுவருவதுதான் என்று பார்த்தோம். **மனிதனை இரட்சிக்கும்படியாக நியாயப்பிரமாணம் வழங்கப்படவில்லை என்பதை சந்தேகத்துக்கிடமின்றி அறிந்துகொள்ளுங்கள்.** இன்றும் சில ஊழியக்காரர்கள் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து தங்களை இரட்சிக்கும்படியாக தேவன் பிரமாணங்களை வழங்கியிருப்பதாக பிரசங்கிக்கிறார்கள். மனிதஇரட்சிப்பென்பது தேவகிருபையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. நியாயப்பிரமாணம் ஒருவனையும் இரட்சிப்பதில்லை. "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4) என்பதினால் பாவம் என்றால் என்ன என்பதை அறிவித்து நம்மை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்துகிறது. இரட்சகரிடம் நம்மை அழைத்துவருகிறது. நியாயப்பிரமாணம் நம்மை நீதிமானாக்கும், பரிசுத்தமாக்கும் என்று நினைப்போமானால், தவறு நம்முடையது.

"பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரி 15:56) என்ற வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். இவ்வாறு பாவம் நியாயப்பிரமாண கற்பனையினாலே பெலமுள்ளதாகும்படி தேவன் அனுமதித்தற்கு காரண காரியங்களை முழுமையாக நாம் அறிந்துகொள்ளமுடியாது.

இந்த வேதபகுதியிலிருந்து நியாயப்பிரமாணத்தைக் குறித்து நாம் அறிந்துகொள்ளும் சில காரியங்கள்

1) எது பாவம் என்பதை நியாயப்பிரமாணம் அறிவிக்கிறது. (வசனம் 7)

2) ஒருவனில் உறங்கிக்கொண்டிருக்கும் பாவத்தை நியாயப்பிரமாணம் உயிர்ப்பிக்கிறது. (வசனம் 8)

3) பாவத்தின் வல்லமையை நியாயப்பிரமாணம் அறிவிக்கிறது. (வசனம் 9)

4) பிரமாணத்தை மீறுவதினால் மரணம் உண்டாகிறது. (வசனம் 10)

5) பாவத்தின் வஞ்சனை என்ன என்பதை நியாயப்பிரமாணம் கற்றுக்கொடுக்கிறது. (வசனம் 11)

6) பாவத்தின் கொடூரம் என்ன என்பதை நியாயப் பிரமாணத்திலிருந்தே அறிகிறோம். (வசனம் 12,13).

பாவத்தோடு போராட்டம் (வசனம் 14-25)

மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன் (ரோமர் 7:14)

ஒரு மனிதன் தன்னுடைய அனுதின வாழ்க்கையில் பாவத்தோடு நடப்பிக்கும் போராட்டத்தைக் குறித்து இந்த வேதபகுதியில் (வசனம் 14-25) தியானிக்கவிருக்கிறோம். பவுல் குறிப்பிடும் மனிதன் யார் என்பதைக் குறித்து பல கருத்துவேறுபாடுகள் வேதபண்டிதர்களிடம் காணப்படுகின்றது. மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெறாமல் பாவத்தில் ஜீவிக்கும் துன்மார்க்கமான ஒரு மனிதனை பவுல் குறிப்பிடுவதாக முதலில் கருதப்பட்டது. பிந்தின நாட்களில், இது அப்போஸ்தலனாகிய பவுலின் தனிப்பட்ட ஆவிக்குரிய போராட்டம் என்றும், அதனால்தான் இதுவரை கடந்த காலத்தில் ஒரு மனிதனின் செயல்பாடுகளைக் குறித்துப் பேசிவந்த

பவுல் இந்த வேத பகுதியில் நிகழ்காலத்தில் எழுதியிருப்பதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். வேறு சிலர் இது பவுல் அல்ல, ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனின் அனுபவம் என்கிறார்கள்.

மூன்று வகையான மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் இத்தகைய பொதுவான போராட்டத்தைச் சந்திக்கக்கூடும்.

1. இரட்சிக்கப்படாத ஒரு மனிதன்
2. பவுலைப்போல் ஒரு பரிசுத்தமான மனிதன்
3. ஆவிக்குரிய வளர்ச்சியில் முதிர்ச்சியடையாத, ஆனால் இரட்சிக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவன்

இந்த மனிதன் யாராக இருக்கக்கூடும் என்று முடிவு செய்வதற்குமுன், இந்த வேத பகுதியில் இந்த மனிதன் என்ன சொல்கிறான், அவன் கடந்து செல்லும் அனுபவங்கள் அல்லது நடப்பிக்கும் காரியங்கள் என்ன என்பதை முதலாவது அறிந்து கொள்வோம். இந்த வசனத்தில் இந்த மனிதனைக்குறித்து பவுல் சொல்லும் காரியங்கள் மூன்று.

1. நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது என்பதை அவன் அறிந்தவன்.
2. ஆனால் அவன் பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு பாவத்தின் அடிமைத்தனத்தில் இருக்கிறான்.
3. அதுமட்டுமல்ல தான் மாம்சத்துக்குரிய ஒரு மனிதன் என்பதை அவன் பகிரங்கமாக ஏற்றுக்கொள்கிறான்.

"மேலும் நமக்குத் தெரிந்திருக்கிறபடி" என்று இந்த வசனம் துவங்குவதால், தொடர்ச்சியாக பவுல் நியாயப்பிரமாணத்தைப் பற்றியும், அது மனிதனில் நடப்பிக்கும் காரியம் என்ன என்பதையும், நியாயப்பிரமாணத்தினால் நடப்பிக்கமுடியாத காரியம் என்ன என்பதையும் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறார் என்பது தெளிவாகிறது.

ஒரு தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையில் கடந்து செல்லும் அனுபவங்களை அறிவிக்கும் அதே வேளையில் நியாயப்பிரமாணத்தின் உண்மையான தன்மை என்ன என்பதை மீண்டும் பவுல் தன் வாசகர்களுக்கு அறிவிக்க விரும்புகிறார். "மீறுதல் பெருகும்படிக்கு நியாயப்பிரமாணம் வந்தது" (ரோமர் 5:20) என்பது உண்மைதான், அதன்விளைவாக "மரணம் எல்லாருக்கும் வந்தது" (ரோமர் 5:12) என்பதும் உண்மைதான். ஆனாலும் நியாயப்பிரமாணம் நிச்சயமாக ஆவிக்குரியதாயிருக்கிறது. அது ஆவிக்குரியதாக இராமல்

சரீரத்துக்குரியதாக இருந்தால் ஒருவேளை ஒரு மனிதன் தன்னுடைய கிரியைகளினால் அதை நிறைவேற்றியிருக்கமுடியும்.

நியாயப்பிரமாணம் மனிதனைக்குறித்த பரிசுத்தமான தேவனுடைய பரிபூரணமான சித்தத்தை வெளிப்படுத்துகிறது. "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24) என்பதினால் அவர் வழங்கிய நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாகத்தான் இருக்கமுடியும். "அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது: எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரி 3:6) என்கிறார் பவுல். தேவனுடைய பிரமாணம் ஆவிக்குரியது என்பதை உணர்ந்து கொள்ளத் தவறிய யூதர்கள் உடன்படிக்கையின் எழுத்தின்படி நடந்து தங்களுடைய வெளிப்படையான கிரியைகளை முக்கியப்படுத்தி அதன் மூலம் தேவனைப் பிரியப்படுத்த முயற்சி அடைந்து தோல்வியடைந்தார்கள். கிரியைகள் மட்டுமல்ல, அவற்றின் நோக்கம், உள்ளான இருதயத்தின் வாஞ்சைகள், மனதின் ஆழத்தில் உள்ள விருப்பு வெறுப்புகள் மற்றும் கற்பனைகளும் பரிசுத்தமானவைகளாக இருக்கவேண்டும் என்பதை அறிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள். ரோமர் 8:5,6, கலாத்தியர் 5:16-23 வாசித்துப் பாருங்கள். ஆவிக்குரிய நியாயப்பிரமாணத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது உலகின் மிகச்சிறந்த மிக நேர்மையான மனிதனுடைய மிக மேன்மையான நற்கிரியையும் மாம்சத்துக்குரியதாகவே கருதவேண்டும். கலாத்தியர் 6:16-18 வாசித்துப்பாருங்கள். இதன் விளைவாகவே இந்த வேதபகுதியில் பவுல் விவரிக்கும் போராட்டத்தை ஒரு விசுவாசி சந்திக்க வேண்டியதிருக்கிறது (1 கொரி 3:1-4). "நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது" என்பதற்கு மார்ட்டின் லூத்தர் இந்த புதிய விளக்கத்தைத் தருகிறார். அது ஆவிக்குரியதாயிராமல் சரீரத்துக்குரியதாயிருந்தால் ஒரு மனிதன் தன்னுடைய கிரியைகளினால் அதை நிறைவேற்றியிருக்கமுடியும். ஆவிக்குரிய நியாயப்பிரமாணத்தை கிரியைகளினால் நிறைவேற்றவேண்டுமானால் அந்த கிரியைகள் இருதயத்தின் ஆழத்தில் இருந்து வெளிப்படவேண்டும். அப்படிப்பட்ட இருதயத்தை தேவனுடைய ஆவியானவர்தான் வழங்கமுடியும். நியாயப்பிரமாணம் இருதயத்தில் எழுதப்படுவதின்மூலம் (எரே 31:33) கீழ்ப்படிதல் உண்டாகவேண்டும். கல்லான இருதயம் அகற்றப்படவேண்டும் (எசே 36:26). அதற்குப்பின் ஒருவன் நிர்ப்பந்தத்தினாலோ பயத்தினாலோ அல்லாமல் முழுமனதோடு கீழ்ப்படிய ஆரம்பிக்கிறார்.

இவ்விதமாக நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்க, தான் மாம்சத்துக்குரியவன் (Carnal) என்கிறார் பவுல், மாம்சத்தின் அதிகாரத்துக்கும் ஆளுகைக்கும் உட்பட்ட மனித வாழ்க்கை

இப்படிப்பட்டதாக இருக்கும். **தேவனையும் பரிசுத்த ஆவியானவரையும் தன்னுடைய வாழ்க்கையிலிருந்து வெளியே நிறுத்திவைத்திருக்கும் ஒரு மனிதனை மாம்சத்துக்குரியவன் என்று அழைக்கலாம்.** இப்படிப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்க்கை ரோமர் 7:5ல் சொல்லப்பட்டிருப்பதைத் தியானித்தோம். அதைக்குறித்த விளக்கம் ரோமர் 8:5-9ல் பார்க்கலாம்.

'மாம்சத்துக்குரியவர்கள்' என்னும் பதம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகள், பெலனில்லாதவர்கள், முதிர்ச்சியற்றவர்கள் ஆகியோரையும் குறிப்பிடுவதாக 1 கொரி 3:1-4ல் இருந்து, அறிந்துகொள்ளலாம். இவர்களைக் "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்" என்று பவுல் சொல்வதிலிருந்து அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள்தான் என்பது தெளிவாகிறது. ஆனாலும் தங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியையும், தங்களில் உண்டான மிகப்பெரிய மாற்றத்தையும் உணராதவர்களாய், முன்பு தங்களைக் குறித்து என்ன நினைத்துக் கொண்டிருந்தார்களோ, அவ்வாறே இப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் தாங்கள் யார் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். இன்றும் கிறிஸ்தவ உலகில், ஆவிக்குரிய சபைகளிலுங்கூட இப்படிப்பட்ட விசுவாசிகளைக் காணமுடியும்.

"தான் பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். பாவத்துக்கு கீழாக விற்கப்படுவது என்பது பாவம் என்ற எஜமானனின் அடிமைத்தனத்துக்குள் அடைபட்டுக் கிடப்பதைக் காட்டுகிறது. பவுல் தன்னை பாவத்துக்கு விற்றுப்போட்டதாகக் குறிப்பிடவில்லை. வேறொருவர் தன்னை விற்றுப்போட்டதாகச் சொல்கிறார். ஆகாப் ராஜாவோ தன்னை விற்றுப்போட்டதாகக் குறிப்பிடப்படுகிறான் (1 இராஜா 21:25, 2 இராஜா 17:17).

அடிமைத்தனத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தன் அவல நிலையை பவுல் ரோமர் 5:12-21ல் குறிப்பிடுகிறார். "எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" (ரோமர் 6:16) என்ற வசனத்தைத் தியானித்தோம். ஒரு மனிதன் பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்துக்குரியவனாக இருக்கவேண்டும். அல்லது கிருபைக்குக் கீழாக வாங்கப்பட்டு கிறிஸ்துவுக்குரியவனாக இருக்கவேண்டும். விற்றுப்போடுவது என்பது இன்னொருவனுடைய சித்தத்தைச் செய்யும்படியாக, அவனுக்கு முற்றிலுமாகக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுப்பதாகும். ஆகாப் ராஜா "தன் மனைவியாகிய யேசபேல் தூண்டிவிட்டபடியே கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்ய

தன்னை விற்றுப்போட்டதாக" 1 இராஜா 21:25ல் வாசிக்கிறோம். 2 இராஜா 17:17ம் வாசித்துப் பாருங்கள்.

மாம்சத்தின் கிரியைகள் என்னென்ன என்பதை கலா 5:19-21 பட்டியலிட்டிருக்கிறது. "மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன : விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காம விகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே". இவை ஆவியின் கனிகளுக்கு (கலா 5:23, 24) நேர்விரோதமானவை.

எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். (ரோமர் 7:15)

முந்தின வசனத்தில் பவுல் அறிவித்த ஒரு மனிதனுடைய வாழ்க்கை எவ்வாறு இருக்கும் என்பது இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. நன்மை எது, தீமை எது என்பதை இவன் நன்றாகவே அறிந்திருக்கிறான் என்பது உடனடியாகப் புலனாகிறது. நல்லதையே செய்ய வேண்டும் என்ற விருப்பமுடைய இந்த மனிதன், தீமையை வெறுக்கிறவனாகவும் காணப்படுகிறான். "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்" (நீதி 8:13) என்பதை அவன் அறிந்திருக்கவேண்டும். "கர்த்தரில் அன்பு கூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்" (சங் 97:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் தான் செய்ய விரும்பும் நற்கிரியைகளை அவன் செய்ய முடியாமல் தவிக்கிறான். தான் ஏன் இப்படியாக நடக்கிறான் என்பதை அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தன்னுடைய செயல்பாடுகளை அவனாலேயே புரிந்துகொள்ள முடியவில்லை. ஏதோ ஒரு வல்லமையான சக்தி அவனை ஆண்டுகொண்டிருக்கிறது என்பதை மட்டும் அவன் அவ்வப்போது உணர்கிறான். ஏனென்றால் அவன் விரும்பாத காரியத்தை மட்டுமல்ல, மனப்பூர்வமாக வெறுக்கிற காரியத்தையும் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் இருக்கிறான்.

இந்த மனிதன் செய்வதெல்லாம் தவறுதான் என்றோ அவன் நன்மை எதையுமே செய்வதில்லை என்றோ பவுல் சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அல்லது சிலவேளைகளில் தவறு செய்கிறவனாகவும் பொதுவாக நற்கிரியைகளைச் செய்வதில்லை என்றும் பொருள்கொள்ளமுடியாது. நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை,

வெறுக்கிறதைச் செய்கிறேன் என்பதினால் வெளிப்படையான கிரியைகளில்தான் பாவம் உருவாகிறது என்றும் கருதமுடியாது. பாவத்தின் வல்லமை என்ன என்பதை உணர்ந்த ஒரு மனிதனின் நிர்பந்தமான அவலநிலையை இந்த வசனம் தெளிவுபடுத்துகிறது. கலாத்தியர் 5:17ல் பவுல் சொல்வது போல "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது".

இப்படிப்பட்ட ஆவிக்கும் மாம்சத்துக்கும் விரோதமான போராட்டம் தேவனை அறியாத இரட்சிக்கப்படாத ஒரு துன்மார்க்கமான மனிதனில் காணப்படுமா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. கொலை, விபசாரம், திருட்டு முதலான பாவங்களைச் செய்யும்போதும் அது தவறு என்று அவன் நினைப்பதே இல்லை. பாவத்தை வெறுப்பதாக அவன் ஒருபோதும் சொல்வதில்லை தன்னுடைய பாவக்கிரியைகளைக் குறித்து கவலைப்படுவதும் இல்லை. சொல்லப்போனால் அவன் பாவத்தை நேசிக்கிறான். பாவம் செய்ய விரும்புகிறான். தன்னைப்போல் பாவம் செய்பவர்கள்மேல் அன்பு செலுத்துகிறான் (ரோமர் 1:32).

முந்தின வசனத்தில் இந்த மனிதன் நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது என்று அறிவித்ததைப் பார்த்தோம். இரட்சிக்கப்படாத ஒரு மனிதனிடமிருந்து பிரமாணத்தின் பரிசுத்த மேன்மையைக் குறித்து இப்படிப்பட்ட ஒரு அறிக்கை வெளிப்பட முடியாது. இந்த மனிதனோ பிரமாணத்தைக் கைக்கொள்ளவே விரும்புகிறான். அதற்கான முயற்சியும் செய்கிறான். ஆனாலும் நியாயப்பிரமாணம், அவனுடைய முயற்சியில் வெற்றியடைய எந்த உதவியும் செய்யவில்லை. இதன் விளைவாக தான் விரும்புகிறதைச் செய்யாமல் வெறுக்கிறதைச் செய்யும் நிர்ப்பந்தத்துக்குள்ளாக இருக்கிறான்.

இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக் கொள்ளுகிறேனே. (ரோமர் 7:16)

பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரிய ஒரு மனிதனின் (வசனம் 14) கிரியைகள் என்னென்னவென்பதை முந்தின வசனத்தில் பார்த்தோம். அவன் தான் விரும்புகிற காரியத்தைச் செய்யாமல் தன்னால் வெறுக்கப்படும் தீயவற்றையே செய்கிறான். அதே நேரத்தில் அவன் செய்யும் இன்னொரு காரியத்தை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

தனக்கு விருப்பமில்லாத, சொல்லப்போனால் தான் வெறுக்கும் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் அதே வேளையில், நியாயப்பிரமாணம் நல்லது என்பதையும் ஒத்துக்கொள்கிறான்.

ஒரு மனிதன் தான் செய்வது தவறு என்பதை அறிந்துகொண்டு அறிக்கையிடும்போது, தான் செய்கிற காரியத்தைக் குறித்து நியாயப்பிரமாணம் சொல்லுகிறதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஏனென்றால் ஒரு கிரியை பாவம் என்பதை நியாயப்பிரமாணமே நிர்ணயம் செய்கிறது என்பதைப் பார்த்தோம். "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4). எனவே ஒருவன் தன்னுடைய கிரியையைக் குற்றப்படுத்தும்போது நியாயப்பிரமாணத்தைக் கனம்பண்ணுகிறவனாகிறான். 14-வது வசனத்தில் நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது என்று அறிக்கையிட்ட அதே மனிதன் இந்த வசனத்தில் அது நல்லது என்கிறான்.

இந்த அறிக்கைகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் காரியம் இதுதான். ஒரு மனிதன் செய்கிற பாவங்களுக்குக் காரணமாக அமைவது நியாயப்பிரமாணம் அல்ல. கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பைக் குறித்தும், விசுவாசத்தினால் உண்டாகும் நீதியைக் குறித்தும் பவுல் சுவிசேஷமாக அறிவிப்பது எந்த விதத்திலும் நியாயப்பிரமாணத்தை குற்றப்படுத்தும் நோக்கத்தோடு செய்யப்படவில்லை என்பதை இந்த வேத பகுதி நிரூபிக்கிறது.

ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. (ரோமர் 7:17)

இந்த நிர்ப்பந்தமான மனிதன் சொல்கிறான்: "நான் உண்மையில் கெட்ட காரியங்களைச் செய்யக்கூடிய ஆள்அல்ல. ஆனாலும் எனக்குள் ஏதோ ஒரு பகுதியில், ஏதோ ஒரு விதத்தில் பாவம் குடிகொண்டிருக்கிறது. அந்த பாவமே நான் விரும்பாத தீமையான செயல்பாடுகளை என்னில் நடப்பிக்கிறது. அவை என்னுடைய மனச்சாட்சிக்கும், உள்ளான இருதயத்தின் வாஞ்சைகளுக்கும் விரோதமாகத்தான் இருக்கிறது". ஏற்கனவே பார்த்தபடி அந்த கிரியைகளை அந்த மனிதன் வெறுக்கிறான் என்றாலும், அவைகளைச் செய்யாமலிருக்க அவனால் முடியவில்லை.

நியாயப்பிரமாணம் ஆவிக்குரியது என்பதை அறிந்த ஒரு மனிதன், அது நல்லது என்பதை ஒத்துக்கொள்ளும் ஒரு மனிதன், பாவத்தை உண்மையில் வெறுக்கிற ஒரு மனிதனாகத்தான் இருக்கமுடியும். இப்படிப்பட்ட ஒரு மனிதன் பாவம் செய்கிறான் என்றால் அதை எவ்வாறு புரிந்து கொள்ளுவது என்ற சத்தியத்தை பவுல் இந்த வசனத்தில் விளக்குகிறார்.

இந்த வேளையில் 1 கொரிந்தியர் 2:14 முதல் 1 கொரிந்தியர் 3:4 வசனங்களை வாசித்து பவுல் அறிவிக்கும் மூன்றுவகையான மனிதர்களைப் பற்றி அறிந்துகொள்வோம்.

ஜென்மசுபாவமான மனிதன்:

இரட்சிக்கப்படாதவன். ஆவிக்குரிய காரியங்களை அறியமாட்டான் என்பது மட்டுமல்ல, அவற்றை பைத்தியமாகக் கருதுபவன். ஆன்மீக வாழ்க்கையில் ஈடுபடாதவன் (1 கொரி 2:14).

ஆவிக்குரிய மனிதன்:

இரட்சிக்கப்பட்டு ஆன்மீக உணர்வுள்ள இந்த மனிதன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கும் வல்லமையுள்ளவன். இவன் தேவனை அறிந்தவன் என்பதினால் இவனை நியாயந்தீர்க்க எவராலும் முடியாது (1 கொரி 2:15).

மாம்சத்துக்குரிய மனிதன்:

இப்படிப்பட்ட ஒருமனிதனைப் பற்றியே பவுல் பேசிக்கொண்டிருக்கிறார். இரட்சிக்கப்பட்டு நியாயப்பிரமாணத்தை நேசிக்கும் இந்த மனிதன் பரிசுத்தமாக வாழ விரும்புகிறான். ஆனால் தன்முயற்சியில் தோல்வியைத்தான் சந்திக்கிறான். பெலனில்லாத, திடவுணவை உட்கொள்ளும் பக்குவம் இல்லாத இந்த மனிதனை பவுல் கிறிஸ்துவுக்குள் ஒரு குழந்தையாகப் பார்க்கிறார். (2 கொரி 3:1-4)

"எனக்குள் வாசமாயிருக்கும் பாவம்" (indwelling sin) என்ற பவுலின் அறிவிப்பு புரிந்துகொள்ள மிகவும் கடினமானது என்பதை வேத பண்டிதர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அது ஒரு துணிச்சலான அறிக்கை என்பதில் சந்தேகமில்லை. பவுல் விவரித்துக்கொண்டிருக்கும் மனிதனில் ஏதோ ஒரு இரட்டைத்தன்மை (duality) காணப்படுவதுபோல் தோன்றுகிறது. இரட்சிக்கப்பட்ட அவன் தேவனுடைய பரிசுத்தவான்தான். தேவனே அவனை நீதிமானாக்கியிருக்கிறார். ஆனாலும் கிறிஸ்துவுக்குள் குழந்தையாகவே இருக்கிறான். ஆவிக்குரிய முதிர்ச்சி அவனில் உருவாகவில்லை. அதன் விளைவாகவே பாவத்தோடு போராட்டம் அவனில் நடந்துகொண்டே இருக்கிறது. பாவத்தை வெறுக்கும் அவன், பாவம் செய்கிறவனாகிறான்.

வாசமாயிருக்கும் பாவம் என்று பவுல் சொல்லும்போது ஆதாமின்

வீழ்ச்சியினிமித்தம் அவனுடைய சந்ததியார் அத்தனைபேருக்குள்ளும் குடிகொண்டிருக்கும் பழைய மனிதன் என்று சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஒருவன் இரட்சிக்கப்படும்போது அவன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான் என்றாலும் அவன் உடனடியாக மரிப்பதில்லை என்பதை ஏற்கனவே பார்த்தோம் (ரோமர் 6:6).

எவ்வாறாயினும் பாவம் ஒரு மனிதனுக்குப் புறம்பாக இருந்து கிரியை நடத்துவதில்லை. வெளியே இருந்து ஒருமனிதனை சோதனைகளில் விழச்செய்வதில்லை. அது ஜென்மசுபாவமாக நமக்குள் குடிகொண்டிருக்கிறது. இதைத்தான் தாவீது, "என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்" (சங் 51:5) என்று குறிப்பிடுகிறார். **ஒருவன் பாவம் செய்வதினால் அவன் பாவியாகிறான் என்பதல்ல. பிறக்கும்போதே பாவம் அவனில் வாசமாயிருக்கிறது என்பது மட்டுமல்ல, பாவம் ஒரு வல்லமையான சக்தியாக அவனை ஆட்கொண்டு செயல்படுகிறது.** இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனையே அது பலவேளைகளில் விழவைக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

எந்த ஒருமனிதனும், அவன் தன்னை பெரிய பரிசுத்தவானாக உலகத்துக்குக் காட்டுகிறவனாய் இருந்தாலும், அவனில் பாவம் இருக்கிறது. பாவமற்ற பரிபூரணத்துக்குள்ளும், முழுமையான பரிசுத்தத்துக்குள்ளும் இருப்பதாக ஒருவன் தன்னைக் கருதினால் அவன் தன்னையும், தன்னைச் சுற்றியிருப்பவர்களையும் ஏமாற்றுகிறவனாய் இருக்கிறான்.

நம்மில் வாசமாயிருக்கும் பாவத்தைக்குறித்துப்பேசும் இதே அப்போஸ்தலனாகிய பவுல், இதற்கு எதிர்மறையாக நம்மில் வாசமாயிருக்கும் ஆவியானவரைக் குறித்து ரோமர் 8:9, 1 கொரி 3:16 ஆகிய வசனங்களிலும் பேசுவதை வாசித்துப்பாருங்கள். **நாம் என்ன செய்கிறோம், என்ன செய்யாமலிருக்கிறோம் என்பதின் அடிப்படையில் நாம் இரட்சிக்கப்படுவதில்லை.** கிறிஸ்து இயேசு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு என்ன செய்தார் என்பதை விசுவாசிப்பதினால் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. (ரோமர் 7:18)

நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்கிறேன் என்றால் அதற்குக்காரணம் "நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கும் பாவமே"

என்ற அறிவிப்பு கிறிஸ்தவர்கள் மத்தியில் தயக்கத்தையும், தடுமாற்றத்தையும் உருவாக்கும் என்பதை அறிந்தவராய், அந்த சத்தியத்தை மீண்டுமாக 18 முதல் 24 வரையுள்ள வசனங்களில் பவுல் அறிவித்து, உறுதிப்படுத்துகிறார்.

"என்னிடத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை" என்று அறிவிப்பது, தனக்குள் பாவம் வாசமாயிருக்கிறது என்று அறிக்கையிட்ட அதே மனிதனாகத்தான் இருக்கவேண்டும். **பாவம் வாசமாயிருப்பதும், நன்மை வாசமில்லாமல் போவதும் ஒரு மனிதன் ஒன்றன்பின் ஒன்றாக பெறக்கூடிய தொடர் அனுபவங்கள்.** தன் மாம்சத்தில், நன்மை இல்லை என்பதை "நான் அறிந்திருக்கிறேன்" என்று சொல்லும்போது, அதைக்குறித்த நிச்சயம் அறிவிக்கப்படுகிறது. மாம்சம் என்ற வார்த்தை மனித சரீரத்தை மட்டும் குறிப்பிடாமல் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையை முழுமையாக ஏற்றுக்கொள்ளாத மனிதனைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

நன்மை செய்யவேண்டும், அதாவது பரிசுத்தமான கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து தேவனைப் பிரியப்படுத்தவேண்டும் என்ற வாஞ்சை இந்த மனிதனில் இல்லாமல் இல்லை. ஆனாலும் இந்த மனிதனில் ஒரு இரட்டைத்தன்மை காணப்படுவதை முந்தின வசனத்தில் பார்த்தோம். அதன் விளைவாக தான் விரும்பும் நன்மையைச் செய்ய அவனால் முடியவில்லை. நற்கிரியைகளை தொடர்ச்சியாக செயல்படுத்தும் சித்தம், தைரியம், மனஉறுதி அவனிடம் இல்லை. அதிகாரத்தின் கடைசி வசனத்தில் பவுல் இந்த அனுபவத்தை இவ்வாறு விவரிக்கிறார்: "என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்".

நன்மை செய்யவேண்டும் என்ற விருப்பம் ஒரு பாவ மனிதனில் உருவாகிறது என்றால் அது அவனில் தோன்றும் தேவகிருபையின் செயலாற்றல். அவன் ஏற்கனவே மறுபடியும் பிறந்துவிட்டான் என்பதே அதன் பொருள். உடனடியாக பாவமற்ற பரிபூரணத்துக்குள்ளும், பரிசுத்தத்துக்கும் அவனால் பிரவேசிக்க முடியாமல் இருக்கலாம். ஆனாலும் இப்போது அநீதியை மனவிருப்பத்தோடும், விடுதலையோடும் செய்துகொண்டிருக்கும் ஜென்மசுபாவமுள்ள மனிதனுடைய துன்மார்க்கமான மனக்கடினம் அவனில் இல்லை. முழுமையான ஆவிக்குரிய முதிர்ச்சி அவனில் இல்லை என்பதினால்தான் ஒரு குழந்தையாக அவனை பவுல் உருவகப்படுத்துகிறார். புதுப்பிக்கப்பட்ட தேவசித்தத்தை செயல்படுத்தமுடியாததினால் உண்டாகும் தவிப்பை "நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை" என்ற வசனம் அறிவிக்கிறது.

ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் விரும்பாத தீமையையே செய்கிறேன் (ரோமர் 7:19)

15-வது வசனத்தில் தான் அறிவித்த அதே சத்தியம் வித்தியாசமான வார்த்தைகளில், ஆனால் பொருளில் எந்த மாற்றமுமின்றி பவுல் அறிவிக்கிறார். இந்த சத்தியம் ஒவ்வொருவருடைய மனதிலும் பதிப்பிக்கப்படவேண்டும் என்று பவுல் விரும்புவதினால் அப்படிச் செய்கிறார். நன்மை செய்ய விரும்பினால் மட்டும் போதாது. அதைச் செய்யவேண்டும். ஆனாலும் இந்த மனிதனில் வாசமாயிருக்கும் பாவசுபாவம் அவனைத் தீமை செய்யத்தூண்டுகிறது.

அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. (ரோமர் 7:20)

ஒரு காரியத்தைக் கவனியுங்கள். அவனுக்குள் வாசமாயிருக்கும் பாவமே அவன் விரும்பாத காரியத்தைச் செய்யவைக்கிறது என்பதினால், அவனுக்கும் அவன் செய்யும் பாவத்துக்கும் தொடர்பு இல்லை என்றமுறையில் இந்த மனிதன் பேசவில்லை. அவனுடைய பாவங்களுக்கு தான் பொறுப்பல்ல என்றும் அறிவிக்கவில்லை. அவனுடைய கிரியைகளை ஆளுகை செய்யும் அதிகாரம் தன்னில் இன்னும் உருவாகவில்லையே என்ற ஆதங்கத்தோடு இந்த மனிதன் பேசுகிறான் என்பது தெளிவாகிறது. மற்றபடி அவனுடைய தோல்வியையும், இயலாமையையும் குறித்து மற்றவர்கள் அவன்மேல் பரிதாபப்படவேண்டுமென்றோ, அல்லது அவனுடைய பாவக்கிரியைகளைக் குறித்து சாக்குப்போக்கு சொல்லவேண்டுமென்றோ இந்த மனிதன் பேசுவதாகத் தெரியவில்லை. அவனுடைய கிரியைகளுக்கு தானே பொறுப்பு என்பதை உணர்ந்த நிலையில் தன் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்கிறான் என்பதே உண்மை.

ஆனபடியால் நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். (ரோமர் 7:21)

தன்னுடைய போராட்டத்தின் விளைவாக இந்த மனிதன் அறிந்துகொள்ளும் காரியம் என்ன என்பதை பவுல் அறிவிக்கிறார். தனக்குள் தீமை உண்டு, அது தனக்குள் சகலவேளைகளிலும் வாசமாயிருக்கிறது என்கிற வெளிச்சத்தை அவன் பெறுகிறான். இந்த பிரமாணமே அவனை நன்மை செய்யாதபடி முடக்கிப்போடுகிறது. தேவனுடைய நியாயப்பிரமாணம் ஒரு மனிதனுக்குப் புறம்பாக இருந்து

அவனில் செயல்படுகிறது என்றால் இந்த பாவப்பிரமாணம் அவனுக்குள்ளேயே இருக்கிறது. இந்த பாவப்பிரமாணம் அவன் தொடர்ச்சியாக நற்காரியங்களைச் செய்ய அனுமதிக்கவில்லை.

ஒருவன் இரட்சிக்கப்பட்ட பின்பும் அவனுடைய சரீரத்தில் இருந்துகொண்டே, அவனுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை தடைசெய்துகொண்டு, அவனை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு வல்லமை செயல்படுவதை பவுல் இங்கே அறிவிக்கிறார். இதை சரிவர விளங்கிக்கொள்ளாததினால் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் பலவிதமான பின்மாற்றங்களைச் சந்திக்கவேண்டி வருகிறது. நம்முடைய சரீர மீட்பாகிய இரட்சிப்பு உண்டாகும்வரை இந்தப் போராட்டம், அங்கலாய்ப்பு நம்மில் அவ்வப்போது காணப்படும். "மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது" (கலா 5:17). இதன் விளைவாக என்ன நடக்கிறது? நன்மை செய்யும் அதே வேளையில் தீமை வெளிப்படுகிறது. ஏனென்றால் தீமை என்கிற நியமம் நமக்குள்ளேயே காணப்படுகிறது.

உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப் பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். (ரோமர் 7:22)

உள்ளான மனிதன் (inward man) என்பது புறம்பான (மாம்சீக) மனிதனுக்கு விரோதமானது. "மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை" என்று 18-வது வசனத்தில் பார்த்தோம். நம்முடைய மாம்ச பலத்தின் அடிப்படையில், மாம்சீகமான முறையில் தேவனை பிரியப்படுத்த பலவேளைகளில் முயற்சி செய்கிறோம், தோல்வியடைகிறோம். பழைய மனிதன் (மாம்சம்) மோசம்போக்கும் இச்சைகளை உருவாக்குவதினால் அதை முற்றிலுமாகக் களைந்து போடவேண்டும் (எபே 4:24) என்கிறார் பவுல்.

உள்ளான மனிதன் (2 கொரி 4:16, எபே 3:16) என்று பவுல் இந்த இடத்தில் குறிப்பிடுவது, யாரும் காணக்கூடாதபடி அவனுக்குள் இருந்து செயல்படும் மனதின் பிரமாணம் என்று சில வேத பண்டிதர்கள் குறிப்பிடுகிறார்கள். அடுத்த வசனத்தில் மனதின் பிரமாணமும் அதற்கு விரோதமாக செயல்படும் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணமும் குறிப்பிடப்படுவதை இவர்கள் ஆதாரமாகக் கொள்கிறார்கள். அவயவங்கள் என்ற வார்த்தை யாவரும் காணக்கூடிய சரீர உறுப்புகளைக் குறிப்பிடுகிறது என்பதை முந்தின அதிகாரத்தில்

பார்த்தோம். இந்த அவயவங்கள் மூலமாகவே பொதுவான பாவக்கிரியைகளைச் செய்கிறோம். உள்ளான மனிதன் என்று அழைக்கப்படும் மனது, புரிந்துகொள்ளும் தன்மை, சிந்திக்கும் திறன் ஆகியவற்றை யாராலும் பார்க்கமுடியாது. ஒருவனுடைய மூளையை நாம் காணமுடியலாம். அவனுடைய மனதைக் காணமுடியுமா?

இதன் அடிப்படையில் உள்ளான மனிதன் என்பது யாரும் காணக்கூடாத ஆவி, ஆத்துமாவைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். அதனால்தான் பவுல் சொல்கிறார்: "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது" (2 கொரி 4:16).

இந்த உள்ளான மனிதனுக்கேற்றபடி இந்த மனிதன் தேவனுடைய நியாயப்பிரமாணத்தில் பிரியமாயிருப்பதாக பவுல் குறிப்பிடுகிறார். இதுவரை நியாயப்பிரமாணம் என்று பொதுவாகக் குறிப்பிட்டு வந்த பவுல் இந்த இடத்தில் "தேவனுடைய நியாயப்பிரமாணம்" என்கிறார். இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனால்தான் தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கமுடியும். சங்கீதம் 119:16ல் வாசிக்கிறோம் : "உமது பிரமாணங்களில் மன மகிழ்ச்சியாயிருக்கிறேன்". சங்கீதம் 119:87; 104, 1:2, 19:7-11 வாசித்துப் பாருங்கள்.

நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருந்தும், இந்த மனிதனால் அதற்குக் கீழ்ப்படிய முடியவில்லை என்றால் அதற்குக் காரணம் என்ன? இந்த மனதின் பிரமாணத்துக்கு விரோதமாக செய்யப்படும் சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணமே அதற்குக் காரணம் என்பது அடுத்த வசனத்தில் சொல்லப்படுகிறது.

ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. (ரோமர் 7:23)

இரண்டு வித்தியாசமான பிரமாணங்களைக் குறித்து பவுல் பேசுவதினால் அவற்றை முதலாவது அறிந்துகொள்வோம்.

மனதின் பிரமாணம்

முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட இந்தப்பிரமாணம் உள்ளான மனுஷனோடு சம்பந்தப்பட்டது. யாராலும்

காணக்கூடாத, ஆனாலும் ஒரு மனிதனுக்குள் இருந்து செயல்படும் ஆவி ஆத்துமாவின் செயல்பாடாக எடுத்துக்கொள்ளலாம்.

பாவப்பிரமாணம்

மனிதனுடைய வாய், நாக்கு, கண், காது, கை, கால் முதலிய சரீர உறுப்புகளோடு சம்பந்தப்பட்டது. மனதின் பிரமாணத்திலிருந்தும் தேவனுடைய பரிசுத்தமான நியாயப்பிரமாணத்திலிருந்தும் முற்றிலுமாக வேறுபட்டது. பாவப்பிரமாணம் என்பதை ஒருவனில் வாசமாயிருக்கும் பாவமாகவும் எடுத்துக்கொள்ளலாம். மனிதனுடைய மாம்சத்தின் உறுப்புகள் மூலமாக வல்லமையோடு செயல்பட்டு இது மனிதனுடைய சகல செயல்பாடுகளையும் ஆட்கொள்ளுகிறது. பாவத்துக்கு நேராக ஒருவனை வழிநடத்துகிறது.

நியாயப்பிரமாணத்தை நேசிக்கும் ஒருவன் தவறு செய்வதற்குக் காரணம் மனிதனின் புறம்பான சரீர அவயவங்களிலிருந்து உருவாகி செயல்படும் பாவப்பிரமாணமே என்கிறார் பவுல். உள்ளான மனிதனோடு சம்பந்தப்பட்ட மனதின் பிரமாணத்தோடு அது அனுதினமும் யுத்தம் செய்துகொண்டே இருக்கிறது. இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறவேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டிய காரியம் என்ன? கொலோசெயர் 3:5ல் பவுல் தரும் ஆலோசனை இதுதான் : "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்". நமக்கு இடறலுண்டாக்கும் கண்ணையும், கையையும் பிடுங்கி எடுத்துப்போடும்படி இயேசு சொல்கிறார் (மத் 5:29,30). அதாவது இந்த அவயவங்கள் செயல்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

இதைச்செய்யத் தவறும்போது என்ன நடக்கிறது? **சரீர அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணம் மனதின் பிரமாணத்தை சிறைப்பிடித்துக் கொள்கிறது.** மனதின் பிரமாணம் தன்னுடைய சுயாதீனத்தை இழந்துபோகிறது. அந்த மனிதன் தன்னிச்சையாக எதையும் செய்யமுடியாமற்போகிறது. தான் செய்யவிரும்புகிற காரியங்களை அவனால் செய்யமுடியாமற்போகிறது. செய்யவேண்டாம் என்று நினைக்கிற காரியங்களை விடுதலையோடு செய்கிறவனாகிறான்.



நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார் ? (ரோமர் 7:24)

"நிர்ப்பந்தமான மனுஷன் நான்" என்று குறிப்பிடுவதினால் இந்த வேதபகுதியில் சொல்லப்படும் மனிதன் இரட்சிக்கப்படாத ஜென்மசுபாவமான மனிதனாகத்தான் இருக்கக்கூடும் என்று சில வேதபண்டிதர்கள் தவறாகக் கருதுகிறார்கள். தன்னைச் சிறைப்படுத்தியிருக்கும் பாவப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க எத்தனையோ தடவை முயற்சி செய்தும், தோல்விமேல் தோல்வியைச் சந்திப்பதின் விளைவாக ஒரு மனிதன் தான் ஒரு நிர்ப்பந்தமான மனிதன் என்று அழுதுபுலம்புகிறான் என்பதாக எடுத்துக்கொள்ளவேண்டும். நிர்ப்பந்தமான அவலநிலையைக் குறிப்பிடும் கிரேக்க வார்த்தை முழு வேதத்திலும் இந்த இடத்திலும் வெளி 3:17-லும் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கே லவோதிக்கேயா சபையின் தூதன் தான் நிர்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறிந்துகொள்ளாமலிருக்கிறான். **பவுல் இந்த வேதபகுதியில் விவரிக்கும் மனிதன் தன்னுடைய ஆவிக்குரிய நிலை நிர்பந்தமானது என்பதை அறிந்திருக்கிறான்.**

பாவத்தின் வல்லமை எவ்வளவு பெரியது என்பதை உணர்ந்த இந்த மனிதன் தன்னுடைய பெலத்தினால் தான் விடுவிக்கப்பட முடியாது என்பதையும் அறிந்திருக்கிறான். அதனால்தான் "இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுவிக்கக்கூடும்" என்கிறான். தான் அறிந்திருக்கும் பரிசுத்தமானதும் (வசனம் 12) ஆவிக்குரியதுமாயிருக்கிற (வசனம் 14) நியாயப் பிரமாணத்தினாலும் கூட தன்னை விடுவித்துக் கொள்ளமுடியாது என்பதையும் அவன் அறிந்திருக்கிறான். அவனை ஆட்கொண்டிருக்கும் பாவப்பிரமாணம் அவனைவிட வல்லமை நிறைந்தது.

அதனால் தன்னை விடுதலையாக்கக்கூடிய ஒரு மீட்பரை, இரட்சகரை அவன் தேட ஆரம்பிக்கிறான். **தனக்கு உதவி செய்யக்கூடிய ஒருவரைத் தேடும்படியாகவே தேவன் ஒருவனுடைய வாழ்க்கையில் நிர்ப்பந்தமான நிலையை அனுமதிக்கிறார்.** ஆனாலும் இந்த மனிதன் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை பெற வழிதேடுகிறானா அல்லது பாவத்தினால் உண்டாகும் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுதலை பெற வழிதேடுகிறானா என்பது இந்த வசனத்தில் புலப்படவில்லை. மரண சரீரத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்றுதான் அவன் வாஞ்சிக்கிறான். அதற்கு தனக்கு வெளியே இருந்து இரட்சகர் வரவேண்டும் என்பதை அவன் அறிந்துகொள்கிறான்.

"மரணசரீரம்" என்ற வார்த்தை மரணத்துக்கு ஏதுவான அல்லது மரணத்துக்குள் வழிநடத்தும் சரீரம் என்று பொருள்கொள்ளலாம். பிலிப்பியர் 3:21ல் "அற்பமான சரீரம்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" என்று வாசிக்கிறோம். இந்த இரட்சகர் யார் என்பதை இந்த மனிதன் முழுமையாக அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை என்றாலும் ஏதோவொரு விதத்தில் அவரைத் தேட ஆரம்பிக்கிறான். தன்னுடைய நிர்ப்பந்த நிலைமாற அவர் ஒருவரே வழி என்பதை உணர்ந்து கொள்ளத் துவங்குகிறான்.

"மரண சரீரம்" (body of death) என்ற வார்த்தையை பயன்படுத்தும்போது பவுல் அந்த நாட்களில் ரோமில் கொலைகாரர்களைத் தண்டிக்க பயன்படுத்தப்பட்ட ஒரு தண்டனையை மனதில் வைத்திருக்கலாம். மரித்த மனிதனின் சரீரத்தை கொலை செய்தவனுடைய முதுகோடு இறுக்கமாகச் சேர்த்துக்கட்டி அவனை ஊருக்கு வெளியே போட்டு விடுவார்களாம். மரித்த சரீரம் அழுகி, நாற்றம் எடுத்து கொலைகாரனையும் கொஞ்சங்கொஞ்சமாக சாகவைக்கும்போது "இந்த மரணசரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்" என்பதுதான் அவனுடைய புலம்பலாக இருக்கும். **நாமும் நமக்குள் வாசமாயிருக்கும் பாவத்திலிருந்து விடுதலை பெறமுடியுமா என்று பலவேளைகளில் புலம்புகிறோம்.** நம்முடைய சரீரம் செய்யவிரும்பும் காரியங்களிலிருந்து அதைத் தடைசெய்யமுடியுமா என்று தவிக்கிறோம். மாம்ச இச்சை சம்பந்தமான பாவங்கள் பலவேளைகளில் நம்மில் இவ்விதமான அங்கலாய்ப்பை உண்டாக்குகிறது.

யார் என்னை விடுதலையாக்குவார்? விடுதலை தரும் இரட்சகர் நமக்குப் புறம்பே இருந்து வரவேண்டும். அவர் யார் என்பதை அதிகாரத்தின் கடைசி வசனம் அறிவிக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ் செய்கிறேன். (ரோமர் 7:25)

தன் மனதினாலே நியாயப்பிரமாணத்திற்கும், மாம்சத்தினாலே பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்வதற்காக இந்த மனிதன் தேவனை ஸ்தோத்திரிப்பதாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது. உலகில் இருக்கும் நாட்களில் ஒரு மனிதனின் போராட்டத்தின் விளைவாக அவனில் காணப்படும் அவல நிலை என்ன என்பதை சுருக்கமாக பவுல் இந்த வசனத்தில் பின்பகுதியில் அறிவிப்பதாக மட்டுமே எடுத்துக்கொள்ளவேண்டும். மனிதனில் உள்ள இரட்டைத்தன்மையின் அடிப்படையில் ஒரு பகுதி நியாயப்பிரமாணத்துக்கும் ஒரு பகுதி பாவப்பிரமாணத்துக்கும் ஊழியம் செய்கிறது. அவனுடைய உண்மையான விருப்பம், தான் தன்னுடைய உள்மனதோடு ஐக்கியப்படுத்தி ஜீவிக்கவேண்டும் என்பதுதான். ஆனால் மாம்சத்திலுள்ள தேவனைப் பிரியப்படுத்தும் விதத்தில் பாவப்பிரமாணம் அவனை தோல்வியடையச்செய்கிறது. அதேநேரத்தில் பாவம் செய்வது தன்னுடைய மாம்சம்தான் என்பதினால் அதற்கு தான் பொறுப்பல்ல என்றும் அவன் சொல்லி தப்பித்துக்கொள்ளமுடியாது.

பாவத்தோடு தான் நடத்திய போராட்டத்தின் முடிவில் இந்த மனிதன் கற்றுக்கொண்ட பாடம் இதுதான். நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதும், நல்லதுமானது என்பதை அறிந்துகொண்ட நிலையிலும், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று முழுமனதோடு வாஞ்சித்தும், தன்னில் உள்ள பாவப்பிரமாணம் அவனை மேற்கொள்கிறது. அவனைவிட அவனில் உள்ள பாவம் வல்லமையுள்ளதாக இருப்பதினால் அது அவனைத் தோல்வியடையச் செய்கிறது.

இந்த அதிகாரம் முழுவதிலும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்து எதுவுமே சொல்லப்படவில்லை என்பதையும் கவனியுங்கள். ரோமர் நிருபத்தில் இதுவரை ஒருதடவைதான் ஆவியானவர்

குறிப்பிடப்படுகிறார் (5:5). அவருடைய ஒத்தாசையின்றி, அவரிடமிருந்து வல்லமையைப் பெற்றுக்கொள்ளாமலேயே தான் பரிசுத்தமாக ஜீவிக்கலாம் என்று இந்த மனிதன் முயற்சி செய்வதுபோல் தெரிகிறது. அந்தோ பரிதாபம் . . . **தன்னுடைய சுயபெலத்தினாலும், மனுஷீக ஞானத்தினாலும் தேவனைப் பிரியப்படுத்த முயற்சிப்பதின் விளைவு தோல்வியாகத்தான் இருக்கும்.** "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலா 5:16) என்பதை இந்த மனிதன் அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் அவன் கடந்துபோகும் இரண்டு வித்தியாசமான அனுபவங்களை பவுல் தனக்கேயுரிய பாணியில் சித்தரிக்கிறார்.



தேவனுடைய நியாயப்பிரமாணம் உள்ளான மனிதனில் எழுதப்படுவதினால் அவைகளில் பிரியமாயிருக்கிறான். ஆனாலும் புறம்பான மனிதனில் பாவப்பிரமாணம் செயல்படுவதினால் மரண சரீரத்தோடு கட்டுண்டவனாகக் காணப்படுகிறான். "முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை" களைந்து போடும் முயற்சியே இந்தப் போராட்டம்.

பாவ மன்னிப்பையும் சமாதானத்தையும் தேடி ஓடி அலைந்து, இளைப்பாறுதலின்றி விரக்தி அடைந்த இந்த மனிதனின் கண்கள் தன்னை இரட்சிக்கக் கூடியவரைக் கண்டுகொள்கின்றன. கிறிஸ்துவைத் தவிர தனக்கு வேறு வழியே இல்லை என்ற நிலைக்குள்ளாக தேவன் நம்மை வழிநடத்துகிறார். ஏனென்றால் அப்போதுதான் நாம் அவரை முழுமையாக நம்ப ஆரம்பிப்போம். இந்த மனிதன் உடனடியாக தேவனை ஸ்தோத்திரிப்பதைக் கவனியுங்கள். இவ்வாறு இந்த மனிதன் அறிக்கையிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். "இயேசுகிறிஸ்து மூலமாய்

நான் கடந்துபோகும் நிர்ப்பந்தமான நிலையிலிருந்தும், மரண சரீரத்திலிருந்தும் விடுதலையையும், ஆறுதலையும் அளித்த பிதாவாகிய தேவனுக்கு நன்றி உண்டாவதாக. அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாக என்னுடைய பழைய மனிதன் சிலுவையில் அறையப்பட்டாயிற்று. அதன் விளைவாக என்னுடைய பாவ சரீரமும், மரண சரீரமும் ஏற்ற வேளையில் நிர்மூலமாக்கப்படும் என்ற நிச்சயம் எனக்கு உண்டு. அதைக்குறித்து புதிதாக நான் எதுவும் செய்யத் தேவையில்லை. என்னுடைய மாம்சத்தன்மையால் பாவப் பிரமாணத்துக்கு சிலவேளைகளில் சேவை செய்தாலும், எனக்குள் வாசமாயிருக்கும் பாவம் என்னை மேற்கொள்ளவே முடியாது".

பவுல் தான் கடந்து செல்லும் போராட்டத்தை விவரிப்பதாக இந்த வேதபகுதியை எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் 1:21), "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப் 3:14), "நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (பிலிப் 3:17), "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, நாங்களும் சாட்சி" (1 தெச 2:10) என்றெல்லாம் தன்னைக் குறித்து அறிக்கையிட்ட பவுல் ரோமர் 7ல் சொல்லப்படும் மனிதனாக இருக்கமுடியாது. நியாயப்பிரமாணம் ஒருவனை இரட்சிக்காது, நீதிமானாக்காது, பரிசுத்தமாக்காது என்பதை தன் வாசகர்கள் சந்தேகத்துக்கிடமின்றி கண்டுகொள்ளவேண்டும் என்பதற்காக ஒரு மனிதனை பவுல் உருவகப்படுத்தி அவனைப் பேசவைப்பதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும்.

எந்த ஒரு கிறிஸ்தவனும் தன்னிச்சையாக தொடர்ந்து பாவம் செய்துகொண்டு, அவற்றைச் செய்வது தானல்ல, தன்னிலிருக்கும் பாவம்தான், எனவே அதற்கு தான் பொறுப்பல்ல என்று சாக்குப்போக்குச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது. **ஒரு கிறிஸ்தவன் பாவத்தில் தவறிவிழக்கூடும். ஆனால் மனப்பூர்வமாக அவன் பாவத்தில் நிலைத்திருக்கமுடியாது.** ஒருவன் தன் பாவத்தைக் குறித்தும், அதை மேற்கொள்ளமுடியாமல் இருப்பதைக் குறித்தும் வேதனை அடைந்து அழுது புலம்பி தன்னுடைய நிர்ப்பந்தத்தை அறிக்கையிடாமல் இருப்பானேயாகில் தவறு அவனுடையது. பாவத்தை வெறுத்து, அதிலிருந்து விடுதலை பெற முயற்சி செய்யாமல் ஒருவன்

இருப்பானேயாகில் பவுல் விவரிக்கும் இந்த மனிதன் தன் போராட்டத்தின் முடிவில் பெற்றுக்கொண்ட ஆறுதலைப் பெறாமல் போய்விடுவான். தான் கடந்துபோகும் போராட்டத்தினிமித்தமும் கிறிஸ்து மூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கும் இருதயத்தை உடையவனே தேவகோபாக்கினையிலிருந்து தப்பிக்கமுடியும்.

பாவம் வாசமாயிருத்தல், அதன் விளைவாக ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதன் கடந்துபோகும் போராட்டம் குறித்த பவுலின் அறிவிப்பு பல வேளைகளில் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது உண்மைதான். எனவே இது குறித்த விளக்கங்களை சரியாக அறிந்துகொளள வேண்டியது அவசியமாகிறது.

எல்லா விசுவாசிகளுமே கிறிஸ்துவுக்குள் நீதிமான்கள் என்பது உண்மைதான். கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் அவர்கள் தேவனால் நீதிமான்களாக்கப்படுகிறார்கள். ஏனென்றால் கல்வாரி சிலுவையில் கிறிஸ்து சம்பாதித்த தேவநீதி அவர்களுடைய கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அதே நேரத்தில் அவர்கள் பாவிகளாகவும் இருக்கிறார்கள். பாவப்பிரமாணம் அவர்களின் மாம்ச இச்சைகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது. ஏனென்றால் அவர்கள் சரீரத்தில் பாவம் வாசமாயிருக்கிறது.

அவர்களுடைய பலவீனமான நிலைமையை ஒரு நல்ல மருத்துவரிடம் சிகிச்சை பெறும் ஒரு நோயாளியோடு ஒப்பிடலாம். அவருடைய வியாதி கொடூரமானதுதான் என்றாலும் அந்த மருத்துவரின் வைத்தியத்தினால் அவர் குணப்பட்டுக்கொண்டே இருக்கிறார். அவரை நம்பி, அவருக்குக் கீழ்ப்படிவதில்தான் நோயாளியின் பாதுகாப்பு இருக்கிறது. நான் குணமாகிவிட்டேன். இனி வைத்தியம் தேவையில்லை என்று தன்னிச்சையாகச் செயல்பட்டால் பாதிக்கப்படுவது நோயாளிதான். இந்த வைத்தியர் வேறு யாரும் அல்ல. நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரே. அவருடைய செயல்பாடுகள் என்னென்ன என்பதை பவுல் அடுத்த அதிகாரத்தில் அறிவிக்கிறார். நியாயப்பிரமாணம் அல்ல, ஒருவனுக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரே ஒருவனை இரட்சிப்பில் நிலைநிறுத்துபவர்.

8

கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய வெற்றி வாழ்க்கை

பரிசுத்த வேதாகமம் ஒரு மோதிரமாக உருவகப்படுத்தப்பட்டால் பவுலின் ரோமர் நிருபம் அதிலுள்ள விலையேறப்பெற்ற வைரக்கல்லாகவும், அதின் 8-வது அதிகாரம் அதிலிருந்து வெளிப்படும் மிகப்பிரகாசமான ஒளியாகவும் இருக்கும் என்று ஒரு வேதபண்டிதர் குறிப்பிடுகிறார். "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" என்ற முந்தின அதிகாரத்தின் கேள்விக்குப் பதிலாக இந்த அதிகாரம் விளங்குகிறது. வேதத்தின் மிகமுக்கியமான பொக்கிஷமாகக் கருதப்படக்கூடிய இந்த அதிகாரத்தைத் தியானிக்க பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்வாராக.

முந்தின அதிகாரத்தில் "நான்", என்ற வார்த்தை சுமார் 15 இடங்களில் சொல்லப்பட்டிருந்ததைப் பார்த்தோம். இது ஒரு மனிதன் தன்னுடைய பெலத்தின்மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து எதுவுமே சொல்லப்படவில்லை. இந்த அதிகாரமோ துவக்கமுதல் முடிவுவரை ஆவியானவரின் செயல்பாடுகளைப் பற்றியே பேசுகிறது. "ஆவி" என்கிற பதம் 17 தடவை சொல்லப்படுகிறது. "ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை" என்று துவங்கும் இந்த அதிகாரம், எந்த சக்தியானாலும் "தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது" என்ற நிச்சயத்துடன் முடிவடைகிறது. நமக்குள் வாசமாயிருக்கும் பாவத்தின் வல்லமை நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவரால் முறியடிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக உண்டாகும் இரட்சிப்பு ஆவியானவர் மூலமாகவே

மனிதர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இதன் விளைவாக நாம் இரட்சிக்கப்பட்டு, நித்திய ஜீவனுடையவர்களாகிறோம். இந்த இரட்சிப்பில் நிலைத்திருக்கும்படியாக நம்மை அனுதினமும் பரிசுத்தமாக்கிக்கொண்டிருக்கும் ஆவியானவர் நம்மை வழுவாதபடி காத்துக்கொள்கிறார் (யூதா 24).

பரிசுத்த ஆவியானவராகிய தேவன் ஒரு விசுவாசிக்குள் வாசமாயிருக்கிறார் என்ற சத்தியம் இந்த அதிகாரத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. வேதம் முழுவதையும் கீழ்க்கண்ட மூன்று யுகங்களாக வேத பண்டிதர்கள் பிரித்திருக்கிறார்கள்.

பிதாவின் யுகம்
பழைய ஏற்பாட்டுக்காலம். தேவன் மக்கள் 'நடுவில்' இருந்தார்

குமாரனின் யுகம்
சுவிசேஷங்களின் காலம். இம்மானுவேலாக தேவன் "நம்முடன்" இருந்தார்

ஆவியானவரின் யுகம்
பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தேவன் "நமக்குள்ளே" இருக்கிறார்.

நீதிமானாக்கப்படும் ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்து முந்தின அதிகாரங்களில் பேசிய பவுல் இந்த அதிகாரத்தில் பரிசுத்தமாக்கப்படும் அனுபவத்தைக் குறித்துப் பேசுவதாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். பரிசுத்த ஆவியானவர் மூலமாகவே பரிசுத்தமாக்கப்படுதல் நம்மில் உண்டாகிறது என்பது உண்மைதான் என்றாலும் - இந்த அதிகாரத்தின் மையக்கருத்து "கிறிஸ்துவுக்குள்" ஒருவன் பெற்றுக்கொள்ளும் "இரட்சிப்பின் நிச்சயம்" என்பதை அறிந்துகொள்ளவேண்டும். **நித்தியத்தில் துவங்கும் இரட்சிப்பு, நித்தியம் வரை நிலைத்திருக்கிறது** என்ற சத்தியத்தை அறிந்துகொள்ளாதபடியால்தான் பல கிறிஸ்தவர்கள் தேவன் தரும் சமாதானத்தை உடையவர்களாயிராமல், பயத்தோடு தங்கள் பழைய அடிமைத்தனத்தில் தொடர்ந்து காணப்படுகிறார்கள். இந்த அதிகாரத்தை ஆழமாக தியானித்து அவர்கள் உண்மையான விடுதலையைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதே ஆசிரியரின் வாஞ்சை.

அப்போஸ்தலனாகிய பவுல் மூலமாக தேவன் மனித இனத்துக்கு அறிவிக்கும் சுவிசேஷத்தின் மகத்துவம் இந்த அதிகாரத்தில்

வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதில்தான் இவ்வதிகாரத்தின் முக்கியத்துவமே அடங்கியிருக்கிறது. தன்னுடைய சுவிசேஷம் மனித இனத்துக்குச் செய்யும் எட்டுக் காரியங்களை பவுல் அறிவிக்கிறார்.

1) ஆவியானவர் ஒரு விசுவாசிக்குள் வாசமாயிருக்கிற படியால் ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. அவர்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்கிறார்கள் (வசனம் 1-13).

2) மறுபடியும் பிறந்த இவர்கள் தேவனுடைய குமாரர்களாயிருப்பதினால் புத்திரசுவிகாரத்தை (பிள்ளைகள் என்ற முறையில் பெறும் சகல உரிமைகளும், அதிகாரங்களும்) பெறுகிறார்கள். கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமாகிறார்கள் (வசனம் 14-17).

3) உலகத்துப் பாடுகள், தவிப்புகள், தோல்விகள் இவர்களுக்கு உண்டு என்றாலும் அவர்களுக்கென்று தேவன் மகிமையான சுயாதீனத்தை ஆயத்தம் பண்ணியிருக்கிறார். ஆனாலும் சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரத்தைப் பெறுவதற்கு பொறுமையோடு காத்துக்கொண்டிருக்கிறார்கள் (வசனம் 18-25).

4) நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய தேவைகளை அறிந்துகொள்வதிலும், அதற்காக ஜெபிப்பதிலும் நாம் உலகில் இருக்கும் இந்த நாட்களில் இந்த உலகத்தின் பாடுகள் மத்தியில் உதவி செய்து கொண்டிருக்கிறார் (வசனம் 26,27).

5) தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்கள் மகிமைப்படுத்தப்படும் நாள்வரை சகலமும் நன்மைக்கு ஏதுவாகவே அவர்களுக்கு நடக்கிறது. நன்மைக்கு ஏதுவல்லாத எந்தவொரு காரியமும் அவர்கள் வாழ்க்கையில் நடப்பதில்லை (வசனம் 28-30).

6) இவ்வாறு இரட்சிப்பில் நிலைத்திருப்பது நம்முடைய முயற்சியினாலோ அல்லது திறமையினாலோ அல்ல, தன்னுடைய சொந்த குமாரனையே நமக்காக ஒப்புக்கொடுத்த பிதாவாகிய தேவன் நம்மை

நீதிமானாக்கியபடியாலேயே இது சாத்தியமாகிறது. நம்மேல் குற்றஞ்சாட்ட யாருக்கும் அதிகாரமும் உரிமையும் இல்லை (ரோமர் 31-33).

7) நாம் இரட்சிப்பில் நிலைத்திருக்கவேண்டும் என்பதற்காக இன்றும் குமாரனாகிய இயேசுகிறீஸ்து நமக்காக பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார் (வசனம் 34).

8) இவ்விதமாக நாம் பெறும் சகல ஆசீர்வாதங்களுக்கும் தேவன் நம்மேல் பாராட்டும் அன்பே மூலகாரணமாகிறது. எந்த ஒரு சக்தியாலும், தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமுடியாது (வசனம் 35-39).

ஆக்கினைத் தீர்ப்பு இல்லை (வசனம் 1-4)

ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை. (ரோமர் 8:1)

சுவிசேஷம் ஒரு நற்செய்தி என்று சொல்வோமானால், அது அறிவிக்கும் நற்செய்தி இதுதான் - கிறிஸ்து இயேசுவுக்குட் பட்டவர்களாயிருந்து மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. அதனால்தான் பவுல் சொல்கிறார் : "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்" (கலா 5:16)

நன்றாகக் கவனியுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு தோல்வி இல்லை, வீழ்ச்சி இல்லை, பின்மாற்றம் இல்லை, பாவம் இல்லை என்று பவுல் சொல்லவில்லை. ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்று மட்டும் சொல்லுகிறார். கிறிஸ்துவை தனது இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்ட ஒரு மனிதனுக்கும், ஒரு அவிசுவாசிக்கும் இடையேயுள்ள ஒரு முக்கியமான வித்தியாசம் இது. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு அவனுடைய சகல குறைபாடுகளின் மத்தியிலும் ஆக்கினைத் தீர்ப்பு இல்லை. இரட்சிக்கப்படாதவனுக்கு உலகப்பிரகாரமான நிறைவுகள் எத்தனை இருந்தாலும், நிச்சயமாக ஆக்கினைத்தீர்ப்பு உண்டு. ஆக்கினைத்தீர்ப்புக்கு பயன்படுத்தப்படும் katakrima என்ற கிரேக்கபதம் நியாயத்தீர்ப்புக்குப் பின் ஒரு குற்றவாளி பெறும் தண்டனையைக் குறிப்பிடுகிறது.

"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு" என்ற வாசகம் ஆங்கில King James Version - ஐப் பின்பற்றி தமிழ் வேதாகமத்தில் சேர்க்கப்பட்டிருந்தாலும், மூல கிரேக்க மொழியில் இந்த வாசகம் இல்லை என்பதினால் மற்ற எல்லா பிரபலமான ஆங்கில வேதாகமங்களிலும் இது சொல்லப்படவில்லை. ஆனாலும் இவ்வாசகம் 4-வது வசனத்தில் சகல மொழிபெயர்ப்பிலும், கிரேக்க வேதாகமத்திலும் ஒரே விதமாகக் காணப்படுகிறது. **கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் யாராயிருந்தாலும் சரி, அவர்கள் பெலசாலிகளோ, பெலவீனர்களோ, - அவர்கள் கிறிஸ்துவின் உடன்சுதந்தரர் என்ற முறையில் அவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்பதே பவுல் அறிவிக்கும் சுவிசேஷம்.**

அப்போஸ்தலனாகிய பவுல் மிக முக்கியமான வேதசத்தியத்தை இந்த வசனத்தில் அறிவிக்கிறார். இந்த உண்மை ரோமர் நிருபத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. ஏற்கனவே பவுல் 5-வது அதிகாரத்தில் "கிறிஸ்து மூலமாய்" தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறபடியால் (வசனம் 1), கிருபைவரம் அநேக குற்றங்களை நீக்கி நீதி வழங்கும் தீர்ப்புக்கு ஏதுவாக இருக்கிறபடியால் (வசனம் 16), கிறிஸ்துவின் ஒரே நீதியினாலே எல்லா மனிதருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிருக்கிறபடியால் (வசனம் 18), கிறிஸ்து இயேசுவில் உள்ள மீட்பைக்கொண்டு நீதிமானாக்கப் பட்டிருக்கிறபடியால் (ரோமர் 3:24) கிறிஸ்துவுக்குள் ஒருவனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்று குறிப்பிடுவதைப் பார்த்தோம். 1 கொரி 5:21, எபே 1:7, கொலோ 1:14, எபி 9:12,26; 10:12, யோவான் 5:24, 1 யோவான் 4:17 மற்றும் பல வசனங்கள் இந்த விடுதலையை உறுதிப்படுத்துகின்றன.

யாரெல்லாம் கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் என்பதைக் குறித்து ஏற்கனவே ரோமர் 6:3-11ல் தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்வோம்.

1) கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் (வசனம் 3). அதாவது அவருடைய சரீரத்தின் அங்கங்களாகி, அவருடைய மரணத்தில் பங்குபெற்றவர்கள்.

2) அந்த மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினால் கிறிஸ்துவுடனே அடக்கம் பண்ணப்பட்டவர்கள் (வசனம் 4). அதாவது கிறிஸ்துவோடு மரித்து அடக்கம்பண்ணப்பட்டவர்கள்.

3) கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்பட்டதன் விளைவாக அவருடைய

உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டவர்கள் (வசனம் 5). அதாவது கிறிஸ்துவின் மரணத்தில் பங்குகொண்டவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பங்குகொள்கிறார்கள்.

4) கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட தங்களுடைய பழைய மனிதனை ஒப்புக்கொடுத்தவர்கள் (வசனம் 6). அதாவது தங்களுடைய பழைய வாழ்க்கை, பழைய பாவத் தன்மைகளை முற்றிலுமாக புறக்கணித்தவர்கள்.

கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களே மெய்யான கிறிஸ்தவர்கள் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்குள் இல்லாதவர்கள் மனிதர்களே அல்ல, சாத்தானின் ஊழியக்காரர்கள். கிறிஸ்துவுடன் மரித்து அவரோடுகூடப் பிழைத்திருப்பவர்கள் (வசனம் 8), அதாவது அவருடைய மரணத்தின் சாயலிலும் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டவர்கள் மட்டுமே (ரோமர் 6:5), அவருக்குள் இருக்கும் நிச்சயத்தை உடையவர்கள். ஆனால் உலகம் பொதுவாக என்ன நினைக்கிறது? ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்ததால், கிறிஸ்தவ கடமைகள் சிலவற்றை நிறைவேற்றுவதினால், கிறிஸ்தவ சபை ஆராதனைகளில் கலந்துகொள்வதால், ஒருவன் கிறிஸ்தவன் என்று நினைக்கிறது.

கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன நினைக்கிறோம்? ஒருவன் தன் பாவங்களை தேவசமுகத்தில் அறிக்கையிட்டு, பாவமன்னிப்புக்காக ஜெபம்பண்ணி அவருக்காக தீர்மானம் எடுக்கும்போது அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதாக நினைக்கிறோம். இப்படிப்பட்டவனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்று முடிவு செய்கிறோம். மறுநாள் அவன் பாவம் செய்கிறான் என்று வைத்துக்கொள்ளுங்கள். உடனே அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குப் பாத்திரனாகிவிட்டதாக நினைக்கிறோம். அதற்கு மறுநாள் அவன் மனந்திரும்பி, மன்னிப்பை பெற்றுக்கொள்ளும்போது மீண்டும் ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டதாக நினைக்கிறோம். ஆக்கினைத் தீர்ப்பை அடைவதும், அதிலிருந்து விடுதலைபெறுவதும் ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் மாறி மாறி நடப்பதாக நினைக்கிறோம். **ஒருநாள் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதாகவும் மறுநாள் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பதாகவும் நினைக்கிறோம் - அப்படி அல்ல, அப்படி இருக்கமுடியாது.** கிரியை செய்யாத நிலையில் நம் விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டாயிற்று (ரோமர் 4:5) என்பதைப் பார்த்தோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருப்போமானால், ஒருகாரியத்தைக் குறித்த முழு நிச்சயம் நமக்குத்தேவை. **நாம் செய்த பாவங்கள், செய்துகொண்டிருக்கும் பாவங்கள், செய்யப்போகிற பாவங்கள் எல்லாமே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவின் மேல் சுமத்தப்பட்டுவிட்டன.** அதற்கான தண்டனை வழங்கப்பட்டாயிற்று. எனவே நாம் ஒருபோதும் ஆக்கினைத்தீர்ப்பை பெறப்போவதில்லை. பிதாவாகிய தேவன் நம்மை நீதிமானாக்குவதோடு தன்னுடைய கிரியையை நிறுத்திவிடுவதில்லை, நம்மை கிறிஸ்துவுக்குள் வைக்கிறார். "நீங்கள் அவராலே (பிதா) கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்" (1 கொரி 1:30) என்று வாசிக்கிறோம். உலகத்தோற்றத்திற்கு முன்னே நாம் கிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்டோம் (எபே 1:4). அவர் உலகில் அவதரித்தபோது கிறிஸ்துவுக்குள் இருந்தோம். அவர் மரித்தபோது அவருக்குள் இருந்தோம். அவர் உயிர்த்தபோது அவருக்குள் இருந்தோம். இன்று அவருக்குள் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறோம். தான் துவங்கிய ஒரு கிரியையை தேவன் ஒருநாளும் நடுவில் நிறுத்துபவரல்ல. **பிறப்பினால் ஆதாமுக்குள் இருந்த நாம் மறுபடியும் பிறந்து இன்று கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்.** கிறிஸ்துவுக்கு ஆக்கினைத் தீர்ப்பளிக்க யாராலும் முடியாது என்பது உண்மையானால் நமக்கும் ஆக்கினைத் தீர்ப்பு இருக்கமுடியாது. ஆதாமுக்குள் கசப்பான கனிகளைமட்டுமே பிறப்பித்த நாம் கிறிஸ்துவுக்குள் நற்கனிகளைக் கொடுக்கிறவர்களாகிறோம். முந்தின அதிகாரத்தில் பவுல் சொன்னபடி "நீங்கள் மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து என்னும் வேறொருவருடையவர்களாகி, தேவனுக்கென்று கனிகொடுக்கும்படி கிறிஸ்துவின் சரீரத்தினாலே நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்" (ரோமர் 7:4). மரித்த ஒரு மனிதனுக்கு ஆக்கினைத்தீர்ப்பளிக்க நியாயப்பிரமாணத்துக்கு அதிகாரம் இல்லை.

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" (யோவான் 15:5) என்று கிறிஸ்து சொல்லும்போது நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் அனுபவத்தைப் பற்றியே பேசுகிறார். "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1 கொரி 12:27) என்று பவுல் சொல்லும்போதும், கிறிஸ்துவுக்கும் ஒரு விசுவாசிக்குமிடையே உள்ள நெருக்கத்தைப் பற்றியே பேசுகிறார். பிலிப்பியர் 1:1; 3:9, ரோமர் 16:7-11 வாசித்துப்பாருங்கள். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே 5:30). ஒரு சரீரத்தின் அவயவம் ஒருபோதும் சரீரத்திலிருந்து விலகிச்செல்வதில்லை. ஒருநாள் விலகிச் சென்று மறுநாள் ஒட்டிக்கொள்வதுமில்லை.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை

என்று சொல்லும்போது, அவர்களில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்குமளவு எந்த குற்றமும் காணப்படுவதில்லை என்று பவுல் சொல்லவில்லை. தேவன் அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை என்பதுதான் பவுல் அறிவிக்கும் சத்தியம். ஏனென்றால் தேவனே அவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார். **கிறிஸ்து தான் யாருக்காக மரித்தாரோ அவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை.** சங்கீதம் 32:1 சொல்கிறபடி, "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்".

கிறிஸ்தவர்களுக்கு நியாயத்தீர்ப்பே இல்லை என்றும் பவுல் சொல்லவில்லை. ஏனென்றால் கிறிஸ்துவுக்குட்பட்டவர்கள் இரகசிய வருகையைத் தொடர்ந்து கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டு (2 கொரி 5:10, 1 கொரி 3:11-15) ஒரு நியாயத்தீர்ப்பைப் பெறுவார்கள். ஆனால் அது ஆக்கினைத்தீர்ப்பாக இருக்காது. அங்கே அவர்களுடைய கிரியைகள் பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் சோதிக்கப்பட்டு, குறைகள் நீக்கப்படும். "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்" (1 கொரி 3:13-15). கிறிஸ்துவின் நியாயாசன நியாயத்தீர்ப்பில் இரட்சிப்பு தீர்மானிக்கப்படுவதில்லை. ஒருவன் பெறும் கூலி (reward) என்னவென்பதே நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆதாம் காலம் துவங்கி உலகின் முடிவுவரை வாழ்ந்த துன்மார்க்கர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு ஆயிரவருட அரசாட்சிக்குப்பின் பிதாவின் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் மட்டுமே வழங்கப்படும் (வெளி 20:11,12). ஆசிரியரின் "வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை" புத்தகத்தில் இந்த கடைசிகாலத்துக்கடுத்த சத்தியங்கள் விளக்கப்பட்டுள்ளன.

இவ்விதமாக ஒருவன் கிறிஸ்துவுக்குள் ஆக்கினைத் தீர்ப்படையாமலிருப்பது எவ்வாறு சாத்தியமாகிறது? நாம் ஏற்கனவே பார்த்தபடி அவருடைய சரீரத்தின் அவயவங்களாக மாறிவிட்டோம். ஒருபோதும் பிரிக்கப்படக்கூடாதபடி நாம் அவருக்குள் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் அவருக்குரியவை எல்லாம் நமக்குரியவைகளாகிறது. **கிறிஸ்து மரித்தபோது நாம் மரிக்கிறோம், அவர் உயிர்த்தெழுந்தபோது நாமும் உயிர்த்தெழுந்தோம் என்பது உண்மையானால் இன்று நாம் அவரோடு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதும் உண்மை.**

பவுல் சொல்கிறார்: "கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை (பிதா) அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும்

செய்தார்" (எபே 2:7). ஏதோ ஒருநாளில் நாம் உன்னதங்களில் உட்காருவோம் என்று வசனம் சொல்லவில்லை. ஏற்கனவே, ஏதோ ஒரு பரிமாணத்தில் நாம் கிறிஸ்துவோடு சிங்காசனங்களில் வீற்றிருக்கிறோம் என்பதே உண்மை. அங்கு நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்போவது யார்? பிதாவாகிய தேவனா? இல்லை. அவர்தானே நம்மை அங்கே உட்காரச்செய்தவர். "அவர் (கிறிஸ்து) இருக்கிறபிரகாரமாக நாமும் இவ்வுலகத்தில் இருக்கிறோம்" (1 யோவான் 4:17) என்கிறார் யோவான். இன்று நாம் உலகத்தில் இருந்தாலும் கிறிஸ்து இருக்கிற பிரகாரமாக இருக்கிறோமாம். "நியாயத்தீர்ப்பு நாளிலே நமக்குத் தைரியமுண்டாயிருக்கத்தக்கதாக" யோவான் இதை அந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

இவ்விதமாக கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்கள் செய்கிற இரண்டு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1) இவர்கள் மாம்சத்தின்படி நடப்பதில்லை.

2) இவர்கள் ஆவியின்படி நடக்கிறார்கள்.

சொல்லப்போனால் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களால் மாம்சத்தின்படி நடக்கமுடியாது. ஏனென்றால் மாம்சமாகிய பழைய மனிதன் கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்பட்டுவிட்டான் (ரோமர் 6:6). கிறிஸ்துவுக்குள் இருந்துகொண்டு மாம்சத்தின்படி நடவாதவர்கள் ஆவியின்படி நடப்பதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. ஏனென்றால் "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2 கொரி 5:17). கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஆவியின்படி நடப்பது சுலபமாகிவிடுகிறது. கிறிஸ்து பிதாவை வேண்டிக்கொள்வதின் விளைவாக பிதா தந்தருளும் பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணி, அவர்களோடு இருக்கிறார். யோவான் 14:16,17 வாசித்துப்பாருங்கள். ஆவியின்படி நடந்தால் ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்றும் பவுல் சொல்லவில்லை. ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்று பவுல் சொல்லுவது கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஆவியின்படி நடக்கிற காரியம் எளிதானதாகிவிடுகிறது என்ற உண்மையை அறிவிக்கிறது.

முக்கியமான இவ்வசனத்தின் விளக்கமாகவே இந்த அதிகாரத்தின் மீதியுள்ள 38 வசனங்களும் அமைந்திருக்கின்றன. கிறிஸ்துவுக்குள்ளிருக்கும் ஒரு மனிதனுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்பதற்கான மூன்று காரணங்களை பவுல் அடுத்த மூன்று வசனங்களில் தொடர்ச்சியாக அறிவிக்கிறார்.

1) பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து புதிய உயிருள்ள பிரமாணம் கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு மனிதனை விடுதலை செய்திருக்கிறது (வசனம் 2).

2) பெலவீனமான மனிதனால் நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிய முடியாதநிலையில் தேவன் தன் குமாரனை மனித சாயலில் அனுப்பி, அவருடைய பாடுமரணத்தின் மூலமாக பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் (வசனம் 3).

3) கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் தேவநீதி கிறிஸ்துவுக்குட்பட்டவர்களுக்கு கிருபையாக வழங்கப்படுகிறது (வசனம் 4).



கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

கிறிஸ்தவர்களாகிய நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்பதை நாம் நிச்சயமாகவே நம்பலாம். ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அதைச் சொல்கிறது. தேவனுடைய வார்த்தையை நம்பாமல் இருப்பதும் ஒரு பாவமே. தேவனுடைய வார்த்தையைக் குறித்த சந்தேகங்களையும், கருத்துவேறுபாடுகளையும் நம் மனதில் பிசாசு உருவாக்குவான்.

ஏவாளைப்போல அவனுடைய வஞ்சனையில் விழாமலிருக்க எச்சரிக்கையாயிருங்கள்.

கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் ஏன் தண்டனைக்குரியவர்களாகத் தீர்ப்பளிக்கப்படமாட்டார்கள் என்பதற்கான பதில் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. இந்த வசனம் அறிவிக்கும் அடியிற்கண்ட இரண்டு பிரமாணங்கள் எவற்றைக் குறிப்பிடுகின்றன என்பதையும் இவைகளுக்கிடையே நடக்கும் போராட்டத்தின் முடிவு என்ன என்பதையும் நாம் விளக்கமாக அறிந்துகொள்ளவேண்டும்.

1) ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் (Law of the Spirit of Life)

2) பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம் (Law of the sin and death)

ஜீவனுடைய ஆவியின் பிரமாணம், பாவம் மரணம் என்னும் பிரமாணத்திலிருந்து விடுதலையைத் தந்தது என்கிறார் பவுல். இது ஏற்கனவே நடந்து முடிந்த நிகழ்ச்சியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" (2 கொரி 3:17) என்ற வசனத்தை இது நினைவுபடுத்துகிறது. நாம் சுயாதீனத்துக்கு அழைக்கப்பட்டவர்கள் (கலா 5:13). பரிசுத்த ஆவியானவர் ஜீவனுள்ளவர் என்பது மட்டுமல்ல ஜீவனை அருளிச்செய்கிறவர். "ஆவியோ உயிர்ப்பிக்கிறது" (2 கொரி 3:6). யோவான் 6:63, கலா 6:8 வாசித்துப்பாருங்கள். ஜீவனுள்ள ஆவியின் பிரமாணம் என்பது ஒரு மனிதனுடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும் பெலத்த கிரியையைக் குறிப்பிடுகிறது. இது பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்துக்கு எதிர்மறையானது என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம் (ரோமர் 23-25). "பிரமாணம்" என்ற வார்த்தையை, ஒரு மனிதன் எவ்வாறு செயல்படுகிறான் என்பதை நிர்ணயம் செய்யும் வல்லமையாக பவுல் கருதுகிறார். கிரியாப்பிரமாணம், விசுவாசப்பிரமாணம் என்ற இரண்டு பிரமாணங்களை ரோமர் 3:27ல் குறிப்பிடுவதைப் பார்த்தோம். ஜீவனுடைய ஆவி என்ற வார்த்தை திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுகிறது (வசனம் 6,10,11, யோவான் 6:63, 1 கொரி 15:45,46; 2 கொரி 3:6,17,18, கலா 6:8). அவரே ஜீவனாகவும், ஜீவனுக்குக் காரணராகவும் அமைகிறார். "என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்" (எசே 37:14) என்கிறார் தேவன்.

ஆவியின் பிரமாணம் ஜீவனை உடையதாக இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒரு விசுவாசிக்குள் கிறிஸ்துவின் ஜீவன் இருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. கிறிஸ்துவுக்குள் மரித்து அடக்கம் பண்ணப்பட்டதின் விளைவாக தேவன் என்ன செய்கிறார்? "அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்" (எபே 2:1). "பிந்தின ஆதாம் (கிறிஸ்து) உயிர்ப்பிக்கிற ஆவியானார்" (1 கொரி 15:45) என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் ஜீவன் நமக்கு உண்டாயிருக்கிறது என்றால் அதில் செயல்படுகிறவர் பரிசுத்த ஆவியானவர் (1 கொரி 12:13). கிறிஸ்துவுக்குள் இருந்த அதே ஆவியானவர் நமக்குள்ளும் வாசமாயிருப்பதின் விளைவாகவே நாம் "கிறிஸ்துவுக்குள்" இணைக்கப்படுகிறோம். ஆவியானவர் நமக்குள் வாசமாயிருந்து செயல்படும் வித்தியாசமான காரியங்களை பவுல் இந்த அதிகாரத்தில் விளக்கவிருக்கிறார்.

1) ஆவியானவர் நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறார். (வசனம் 4)

2) ஆவியானவர் நீதிமானாக்கப்பட்டவர்களை பரிசுத்தப்படுத்துகிறார். (வசனம் 4-13)

3) ஆவியானவர் அவர்களை தேவனுடைய புத்திரர்களாக்குகிறார். (வசனம் 14-17)

4) ஆவியானவர் அவர்களுடைய பலவீனமான நேரங்களில் ஜெபிக்க உதவுகிறார். (வசனம் 26,27)

இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் செயல்படுவதின் மூலமாக ஒரு மனிதனில் பாவம், மரணம் என்கிற பிரமாணங்களிலிருந்து விடுதலை உண்டாகிறது என்கிறார் பவுல். பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணம் என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது என்பதையும் அறிந்துகொள்வோம். ரோமர் 7:23ல் பவுல் "என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது" என்று சொல்வதினால் ஒரு மனிதனுடைய சரீரத்திற்குள் இருந்து ஒருமனிதனை ஆளுகை செய்யும் பாவம் பற்றிய விதிமுறைகளை பவுல் குறிப்பிடுவதாக சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். ஆவியானவரின் பரிசுத்தமாக்கும் செயல்பாட்டினால் இந்த பாவசுபாவம் மேற்கொள்ளப்படுவதாக இவர்கள் அறிவிக்கிறார்கள். இது உண்மையானால் ஒரு கிறிஸ்தவன் பரிசுத்தமாக்கப்படுவதின் விளைவாக அவனுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லாமல் போகிறது என்று பொருள்கொள்ளவேண்டும். உண்மையில் ஒருவன் நீதிமானாக்கப் படுவதினால்தான் ஆக்கினைத்தீர்ப்பிலிருந்து தப்பித்துக்கொள்கிறான். நீதிமானாக்கப்படுதலின் எதிர்பதமே ஆக்கினைத்தீர்ப்பைப் பெறுதல்.

பாவம் மரணம் என்பவற்றின் பிரமாணம் என்ற வார்த்தை மோசே மூலமாக தேவன் சீனாய் மலையில் இஸ்ரவேலருக்குக் கொடுத்த நியாயப்பிரமாணத்தை, அதிலும் பிரத்தியேகமாக பத்துக்கற்பனைகளைக் குறிப்பிடுகிறதாக எடுத்துக்கொள்ளவேண்டும். "உலகத்தார் யாவரும் தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்புக்கு ஏதுவானவர்களாகும்படி" (ரோமர் 3:19) "நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது" (ரோமர் 4:15). நன்மையான நியாயப்பிரமாணம் மனிதனுக்கு மரணத்தை உண்டாக்கினதாக ரோமர் 7:13ல் வாசிக்கிறோம். "மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம்" (1 கொரி 15:56) என்று சொல்லப்பட்டிருக்கிறபடி, ஒரு மனிதனுடைய மரணத்துக்கு நியாயப்பிரமாணம், பாவத்தின் அடிப்படையில் காரணமாக இருப்பதினால் பாவம் மரணம் என்கிற பிரமாணம் நியாயப்பிரமாணத்தையே குறிப்பிடுகிறது என்பதில் சந்தேகமில்லை. நாம் தியானிக்கவிருக்கும் அடுத்த வசனம் இதை உறுதிப்படுத்துகிறது.

"ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற் குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படி" (எபி 2:15) கிறிஸ்து வெளிப்பட்டார். "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21). கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் நீதியை நமக்கும் இலவசமாக பகிர்ந்தளிப்பது பரிசுத்த ஆவியானவரே. நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவது நமக்கு நீதியை வருவித்திருக்கும் (உபா 6:25) என்பது உண்மைதான் ஆனால் ஒருவனாலும் அதற்குக் கீழ்ப்படிய முடியவில்லையே! கீழ்ப்படியக்கூடிய திறனை, அல்லது கிருபையை நியாயப்பிரமாணத்தினால் நமக்கு வழங்கமுடியவில்லையே!

அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். (ரோமர் 8:3)

"அதெப்படியெனில்" என்று இந்த வசனம் துவங்குவது, முந்தின இரண்டு வசனங்களோடு இது கொண்டுள்ள தொடர்பை வலியுறுத்துவதாய் இருக்கிறது. கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்பதை முதலாவது வசனத்தில் அறிவித்த பவுல் அதற்குக் காரணம் என்ன என்பதை இந்த மூன்றாவது வசனத்தின் பிற்பகுதியில் அறிவிக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன்பே கிறிஸ்து தன்னுடைய சரீரத்தினாலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துவிட்டார். இதைச்

செய்யும்படியாகவே கிறிஸ்து உலகத்துக்கு வந்தார். நம்மிலிருந்து பாவத்தை நீக்கி, நம்மைக்கழுவி சுத்தப்படுத்திவிட்டார் என்பது மட்டுமல்ல, நாம் முழு விடுதலையைப் பெறும்படியாக பாவத்தின் சகல வல்லமைகளையும், அதன் விளைவாக மனிதன் பெறும் சகல சாபக்கட்டுகளையும் இயேசு தன்னுடைய பாடு மரணத்தினாலே நிர்மூலமாக்கிவிட்டார். இனி நம்மை பாவம் தன்னுடைய அடிமைத்தனத்துக்குள் கொண்டுவரமுடியாது. நம்மேல் பாவத்துக்கு எந்த அதிகாரமும், உரிமையும் இல்லை. எனவே நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை.

ஏற்கனவே ரோமர் 5:6,7,10,20,21; 6:14 ஆகிய வசனங்களில் அறிவித்த சத்தியத்தையே பவுல் கொஞ்சம் வித்தியாசமான விதத்தில் இங்கே அறிவித்து, மூன்று காரியங்களை சபை தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும் என்று விரும்புகிறார்.

1) மனிதனில் உள்ள இயல்பான பாவ பெலவீனம்

2) மனிதனை மீட்கும்படியாக வெளிப்பட்ட தேவ அன்பு

3) கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டதன் விளைவுகள்

நியாயப்பிரமாணம் செய்யக்கூடாத ஒரு காரியத்தை தேவனே செய்ததாக பவுல் அறிவிக்கிறார். அந்தக் காரியம் என்ன என்பது அடுத்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. மனிதனில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறவேண்டும் என்று தேவன் விரும்பினார். அதை, தேவன் இங்கே நடப்பிக்கிறார். நியாயப்பிரமாணம் நன்மையானதுதான் (ரோமர் 7:13). ஜீவனுக்கேதுவானதுதான் (ரோமர் 7:10). ஆவிக்குரியதுதான் (7:14). ஆனாலும் தேவநீதியை வருவிப்பதில் அது முற்றிலுமாக தோல்வியடைந்துவிட்டது. எனவே தேவன் செயல்பட ஆரம்பிக்கிறார்.

ஒரு மனிதனுடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு அவனுடைய இரட்சிப்பின் அனுபவம் முடிந்துவிடுவதில்லை. பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்ட ஒரு மனிதன் ஆக்கினைத்தீர்ப்பாகிய நரக வேதனையில் இருந்து தப்பித்துக் கொள்கிறான் என்பது உண்மைதான். ஆனால் பரிசுத்தமான தேவனுடைய பிள்ளையாக மாறி, நித்திய நித்தியமாக அவரோடு வாசமாயிருக்கும் உன்னதமான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெறுவதற்கு அவன் தேவனுடைய நீதியை உடையவனாக இருக்கவேண்டும் என்பது அவசியமாகிறது. நீதியின் வஸ்திரத்தை தரித்துக்கொள்ளவேண்டும் (வெளி 19:8). **சகல பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்தவராய் சிலுவை மரணத்தைச் சந்திக்கும்போது கிறிஸ்து தான் சம்பாதித்த தேவநீதியை, அவர் தன்னுடைய இரட்சிக்கும்**

கிரியையை விசுவாசிக்கும் பரிசுத்தவான்களுக்கு பரிசுத்த ஆவியின் மூலமாக, முற்றிலும் இலவசமாக வழங்குகிறார். இதை நாம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இலவசமாகப் பெற்றுக்கொள்கிறோம் என்பதினால் "விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி" (ரோமர் 1:17) என்று தேவநீதி அழைக்கப்படுகிறது.

தேவநீதியை மனிதனுக்கு வழங்க நியாயப்பிரமாணம் தவறிவிட்டது. இப்போது "நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது. அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும், எவர்கள் மேலும் அது பலிக்கும்" (ரோமர் 3:21,22). இந்த வசனம் அறிவிக்கும் காரியம் இதுதான். **பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதின் மூலமாகத்தான் இரட்சிக்கப்படமுடியும் என்கிற பழைய நிலைமாறிவிட்டது.** கிறிஸ்து நம்முடைய சார்பில் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து சம்பாதித்துக்கொண்ட தேவநீதி அவரை விசுவாசிப்பவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள். "ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" (ரோமர் 5:18). அவர்கள் நீதிமான்கள் என்று தீர்க்கப்படுகிறார்கள்.

"உயிரைக்கொடுக்கத்தக்க நியாயப்பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால், நீதியானது நியாயப்பிரமாணத்தினால் உண்டாயிருக்குமே" (கலா 3:21) என்ற வசனம் நியாயப்பிரமாணத்தினால் தேவன் எதிர்பார்க்கும், தேவன் விரும்பும், தேவன் ஏற்றுக்கொள்ளும் நீதி உருவாகவில்லை என்பதை நிரூபிக்கிறது.

அதே நேரத்தில் தவறு நியாயப்பிரமாணத்தின்மேல் இல்லை என்பதை பவுல் அறிவிக்கத் தவறவில்லை. "மாம்சத்தினாலே பெலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை" என்று அவர் அறிவிப்பதைக் கவனியுங்கள். நியாயப்பிரமாணம் பெலவீனமாயிருந்தது என்று பவுல் சொல்லவில்லை. மாம்சமே பெலவீனமாயிருந்தது என்கிறார். நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிக்க மனிதன் தன்னுடைய பெலவீனத்தினால் தவறியதின் விளைவாகவே நீதி உருவாகவில்லை. மோசே சொல்கிறார் : "நம்முடைய தேவனாகிய கர்த்தர் நமக்குக் கட்டளையிட்டபடியே நாம் அவர் சமுகத்தில் இந்த எல்லாக் கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும்" (உபா 6:25). ஆனால் மாம்ச பெலவீனத்தினால் மனிதனால்

அந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படியமுடியாததால் நீதி உருவாகவில்லை. அதற்கு மாறாக "மரணத்துக்கு ஏதுவான கனிகள்" (ரோமர் 7:5) உருவாயிற்று. நன்மைக்குப் பதிலாக தீமை வந்தது.

அடுத்ததாக தேவன் வழங்கிய நியாயப்பிரமாணம் உருவாக்கத் தவறிய நீதியை தேவன் எவ்வாறு மனிதனுக்கு வழங்கினார், மனிதனின் பாவத்தை எவ்வாறு ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் என்ற கேள்விகளுக்கு பவுல் பதில் தருகிறார். சொல்லப்போனால் இந்த பதிலில்தான் பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் அடங்கியிருக்கிறது (ரோமர் 1:16,17). நியாயப்பிரமாணத்தினால் செய்யக்கூடாததை தேவனாகிய கர்த்தரே செய்யும்படிக்கு தம்முடைய குமாரனை பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப்போக்கும் பலியாகவும் அனுப்பி, பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். மூன்று காரியங்களை இங்கே கவனிக்கிறோம்.

1) இரட்சிப்பின் கிரியையை தேவனே துவங்கிவைத்தார்.

2) அதற்காகவே தேவன் தன் குமாரனை அவரே அனுப்பினார்.

3) தேவன் தன் குமாரனாகிய இயேசுவின் மாம்சத்தில் பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.

"இரட்சிப்பு கர்த்தருடையது" (யோனா 2:9). இரட்சிப்பின் திட்டம் கர்த்தருடையது. மனிதனுக்கு அதில் எந்தப் பங்கும் இல்லை. உலகத்தில் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பே இது தேவனால் திட்டமிடப்பட்டுவிட்டது. யார் இரட்சிக்கப்படுவார்கள் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார். "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில்" (வெளி 13:8) நாம் நம் தாயின் வயிற்றில் உருவாவதற்கு முன்பே நம்முடைய பெயர் எழுதப்பட்டாயிற்று. தேவனே இதைச் செய்தார் என்பது நம்முடைய இரட்சிப்பு நித்தியம்வரை நிலைத்திருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறது. **தேவனால் ஆயத்தம்பண்ணப்பட்டு, தேவனால் திட்டமிடப்பட்ட ஒரு மனிதனைக்குறித்த இரட்சிப்பின் தீர்மானத்தை மாற்றியமைக்க அந்த மனிதனாலேயே கூடாது,** சாத்தானாலும் கூடாது, எந்த ஒரு சக்தியானாலும் கூடாது. அவர் இரட்சித்தார் என்பது மட்டுமல்ல, வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் (யூதா 24). அவருடைய வல்லமையைக் குறைத்து மதிப்பீடு செய்யாதிருங்கள்.

மனிதனுக்கு தன்னுடைய நீதியை, வழங்கி இரட்சிப்பை

வழங்கும்படியாக பிதாவாகிய தேவன் தன் குமாரனை அனுப்பினார். குமாரன் இன்றி மனித இரட்சிப்பு நடைபெற்றிருக்கமுடியாது. நாங்கள் யேகோவாவை அறிந்திருக்கிறோம், யேகோவாவுக்கு ஊழியம் செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டே கிறிஸ்துவைப் புறக்கணிக்கும் கிறிஸ்தவ கூட்டத்தார் சாத்தானின் வஞ்சனையில் அகப்பட்டிருக்கிறார்கள் என்பது உறுதி. "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்" (2 கொரி 5:19). "தம்முடைய குமாரனை" என்று பவுல் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள உறவின் மேன்மையை வலியுறுத்துவதைக் கவனியுங்கள். "பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரன்" (யோவான் 1:18) என்று அவர் அழைக்கப்படுகிறார். **நாம் எல்லாருமே தேவனுடைய குமாரர்கள்தான் என்றாலும் கிறிஸ்துவின் குமாரத்துவம் வித்தியாசமானது. ஏனென்றால் அது நித்தியமானது.** கிறிஸ்து நம்மைப்போல் சிருஷ்டிக்கப்பட்டவரல்ல (யோவான் 1:1,2). "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16). தன்னுடைய ஒரே பேறான குமாரனை அனுப்பி மனிதனை மீட்டுக்கொண்டது தேவனுடைய அன்பை நிரூபிக்கிறது. நம்முடைய இரட்சிப்புக்காக தன்னுடைய இரத்தத்தைச் சிந்திய "கிறிஸ்துவுக்குள்" நாம் இருப்பதினால் நம்முடைய இரட்சிப்பு நித்தியத்திலேயே துவங்கிவிட்டது. அவர் உலகத்தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் (வெளி 13:8) என்பதைப் பார்த்தோம். நித்தியம்வரை இரட்சிப்பு நிலைத்திருக்கக்கூடியது.

பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படியாக கிறிஸ்து இரண்டு காரியங்களைச் செய்யவேண்டியதிருந்தது.

1) கிறிஸ்து பாவமாம்சத்தின் சாயலானார்.

2) கிறிஸ்து பாவத்தைப் போக்கும் பலியானார்.

திருத்துவத்தின் இரண்டாவது நபரும், பிதாவின் அருகே அவருடைய செல்லப்பிள்ளையாகவும், நித்தமும் அவருடைய மனமகிழ்ச்சியாயும் இருந்து அவர் சமுகத்தில் எப்பொழுதும் களிகூர்ந்தவர் (நீதி 8:30). கிறிஸ்து ஒரு மெய்யான மனிதனாக இந்தப் பாவ உலகில் பிறந்தார் என்பதை கிறிஸ்து மாம்சத்தின் சாயலானார் என்பது அறிவிக்கிறது. அவருடைய சரீரப் பிறப்பைக் குறித்து பல தவறான உபதேசங்கள் சொல்லப்படுகின்றன. கிறிஸ்து உண்மையில் சரீரத்தில் பிறக்கவில்லை என்றும் ஒரு மனிதனைப்போல் தோற்றமளித்ததாகவும், சில வேதப்புரட்டர்கள் சொல்கிறார்கள். தேவன் பாவ சரீரத்துக்குள்

தன்னை அடக்கிக்கொண்டு உலகத்தில் இருந்திருக்கமுடியாது என்பது இவர்களின் வாதம். 1 தீமோ 3:16 சொல்கிறது, "தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்", "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்" (எபி 2:14). "அவர் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார்" என்று கலாத்தியர் 4:4 அறிவிக்கிறது. அவர் "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலிப் 2:7,8) என்று வாசிக்கிறோம்.

கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டாலும், மாம்சத்தில் பாவம் வாசமாயிருக்கிறது என்றாலும் அவரில் பாவம் இல்லை என்பதை அறிவிக்கும்படியாக "பாவ மாம்சத்தின் சாயலாக" கிறிஸ்து வெளிப்பட்டார் என்கிறார் பவுல். உலகத்தில் இருந்த நாட்களிலும் அவரில் பாவம் இல்லை, இருந்திருக்க முடியாது. "பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்றுதான் 2 கொரி 5:21ல் வாசிக்கிறோம். நம்முடைய பாவங்களைத் தன்னுடையதாக ஏற்றுக்கொண்டதாலேயே அவர் பாதிக்கப்பட்டார். "எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர்" (எபி 4:15) என்று அவர் அழைக்கப்படுகிறார். "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்" (எபி 7:26). "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1 பேதுரு 1:19) என்கிறார் பேதுரு.

பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க கிறிஸ்து பாவத்தைப்போக்கும் பலியாக வெளிப்பட்டதாக பவுல் அறிவிக்கிறார். "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). பழைய ஏற்பாட்டு நாட்களில் மனிதனுடைய பாவமன்னிப்புக்காக மிருகங்கள் பாவநிவாரணபலியாகவும், குற்ற நிவாரணபலியாகவும் செலுத்தப்பட்டன. இது கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு முன்னடையாளமாக இருந்தது. கிறிஸ்துவின் பாடு மரணத்தினால் மட்டுமே மனிதனுக்கு இரட்சிப்பு உண்டானது. "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே" (1 தீமோ 2:6) என்று வாசிக்கிறோம். அவர் யாருக்காக மரித்தாரோ, அவர்கள்

மரணத்துக்கு பயப்படத் தேவையில்லை.

கிறிஸ்துவின் பாவமற்ற, பரிசுத்தமான வாழ்க்கையினால் மனிதனுக்கு இரட்சிப்பு உண்டாகவில்லை. அவருடைய அருமையான, விலையேறப்பெற்ற போதனைகளினால் மனிதன் இரட்சிக்கப்படவில்லை. அவர் நடப்பித்த அதிசயங்களினாலும் அற்புதங்களினாலும் மனித மீட்பு சம்பவிக்கவில்லை. அவருடைய மரணமே நமக்கு மீட்பைத் தந்தது. ஏசாயா 53:5 சொல்கிறபடி "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்" (வசனம் 10). மத்20:28, மாற்கு 10:45, யோவான் 1:29; 10:11,15, ரோமர் 5:6-9, 18, 19, 2 கொரி 5:21, கலா 5:21 வாசித்துப்பாருங்கள். தன்னுடைய விரோதிகளுக்கும் தன்னைப் பகைக்கிறவர்களுக்கும் தான் தகப்பனாகவேண்டும் என்பதற்காக, தன் ஒரே பேறான குமாரனுக்கு விரோதியாக மாறி அவரை கல்வாரி சிலுவையில் கொலை செய்தது பிதாவாகிய தேவனே.

இதனால்தான் தேவன் மாம்சத்திலே (கிறிஸ்துவின் சரீரத்தில்) பாவத்தை ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்த்தார் என்று இந்த வசனம் அறிவிக்கிறது. மனித இனத்தின் பாவங்கள் கிறிஸ்துவின்மேல் சுமத்தப்பட்டபோது அவர் மாம்சத்தில் இருந்தார். **நாம் மாம்சத்தில் பாவம் செய்தபடியால் நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் தண்டிக்கப்பட்டன.** கிறிஸ்து உலகத்துக்கு மனிதனாக வந்ததின் நோக்கமே, பாவத்தை தன் சரீரத்தில் சுமந்து அதை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படியாகத்தான். "அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத் 20:28, மாற்கு 10:45). "நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் ஜீவனையும் கொடுக்கிறான்" (யோவான் 10:11), "ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" (யோவான் 10:15) என்கிறார் இயேசு. "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்" (1 பேதுரு 2:24). மனித இனத்தின் பாவங்கள் அத்தனையும் இவ்விதமாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டது. "அவர் தம்மைத்தானே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார்" (எபி 9:26). தனக்குச் சொந்தமான நீதியை நமக்கு வழங்கிவிட்டு அதற்குப்பதிலாக நமக்குச் சொந்தமான பாவத்தை அவர் ஏற்றுக்கொண்டார்.

மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்

செய்தார். (ரோமர் 8:4)

நியாயப்பிரமாணத்தின் நீதி ஒரு மனிதனில் நூற்றுக்கு நூறு பரிசுத்தமான, கீழ்ப்படிதல் நிறைந்த வாழ்க்கையை எதிர்பார்க்கிறது. அந்த கீழ்ப்படிதல் அன்பின் அடிப்படையில் இருக்கவேண்டும். ஆனால் தன்னுடைய மாம்ச பெலவீனத்தினிமித்தம் மனிதன் அவ்வாறு வாழ்ந்து, தேவனைப் பிரியப்படுத்தி, தன்னை நீதிமானாக்கிக்கொள்ள முடியவில்லை. எனவே இந்தப் பிரச்சனையைத் தீர்வுசெய்யும்படியாக தன்னுடைய ஒரே பேறான குமாரனை உலகத்தில் அனுப்பி, அவருடைய மாம்சத்தில் மனித இனத்தின் பாவத்தைத் தண்டித்தார். நியாயப்பிரமாணத்தின் நீதி இவ்விதமாக நிறைவேறுகிறது.

நியாயப்பிரமாணம் மனிதனில் எதிர்பார்க்கும் பூரணமான கீழ்ப்படிதல் கிறிஸ்துவில் காணப்பட்டது. பிரமாணத்தை மீறுபவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று நியாயப்பிரமாணம் எதிர்பார்க்கிறது. எனவே மனிதர்களின் மீறுதல்களினிமித்தம் கிறிஸ்து தண்டிக்கப்பட்டார். அவருடைய மரணத்தின் மூலமாக நியாயப்பிரமாணத்தின் ஆளுகையும் அதிகாரமும் நம்மிலிருந்து நீக்கப்படுகிறது. பாவத்தின் ஆளுகையும் முடிவடைகிறது. **கிறிஸ்துவுக்குள் நியாயப்பிரமாணத்துக்கு மரித்தவர்கள் பாவத்துக்கு மரித்தவர்களாகிறார்கள்.** "நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 6:6) என்ற பவுலின் நிச்சயத்தைக் குறித்து ஏற்கனவே தியானித்திருக்கிறோம்.

நியாயப்பிரமாணத்தின் நீதி யாரில் நிறைவேறுகிறது என்பதை இந்த வசனத்தில் பவுல் உறுதிப்படுத்துகிறார். இவர்கள்

1) மாம்சத்தின்படி நடக்கிறவர்களல்லர்.

2) ஆவியின்படி நடக்கிறவர்கள்.

வேதத்தில் "நடக்கிறவர்கள்" என்ற வார்த்தை பொதுவாக ஒரு மனிதன் தனக்கென்று அமைத்துக்கொள்ளும் வாழ்க்கை முறையையும், பழக்க வழக்கங்களையும் குறிப்பிடுகிறது (எபே 2:2, அப் 21:21, கலா 5:25, பிலிப் 3:16). ஒரு மனிதனுடைய வாழ்க்கைப் பயணத்தில் அவன் பரலோகத்தை நோக்கியோ, நரகத்தை நோக்கியோ நடந்துகொண்டிருக்கிறான். மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் தங்களில் உள்ள ஆதாமுக்குரிய ஜென்மசுபாவத்தின் ஆளுகைக்குள் இருப்பதினால் நரகத்துக்கு நேராக விரைந்து பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆவியின்படி நடப்பவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குட் பட்டவர்களாய் பரலோகத்துக்கு நேராக பயணம் செய்து கொண்டிருக்கிறார்கள். **மாம்சத்தின்படி நடப்பவர்களால் ஆவியின்படி நடக்கமுடியாது. ஆவியின்படி நடப்பவர்களால் மாம்சத்தின்படி நடக்கமுடியாது.**

இன்னொரு விதமாகச் சொல்வோமென்றால் மாம்சத்தின்படி நடப்பவர்கள் மோசே மூலமாக வழங்கப்பட்ட பழைய உடன்படிக்கையான நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் அடிப்படையில் தாங்கள் நீதிமான்களாக்கப்படக்கூடும் என்ற நம்பிக்கை உடையவர்கள். ஆவியின்படி நடப்பவர்கள் கிறிஸ்துவை தங்கள் மீட்பராகவும், மத்தியஸ்தராகவும், பிணையாளியாகவும் ஏற்றுக்கொண்டதின் விளைவாக, புதிய உடன்படிக்கையின்படி, அவருடைய மரணத்தின்மேல் வைக்கும் நம்பிக்கையின் அடிப்படையில் நீதிமான்களாக்கப்பட்டு பரிசுத்த ஆவியானவரின் உயிர்ப்பிக்கும் கிரியையினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் ஆகிறார்கள்.

மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பவர்கள் உடனடியாக பாவமற்ற பரிபூரணத்துக்குள் கடந்துபோகிறார்கள் என்பதல்ல. அவர்கள் இனி பாவமே செய்வதில்லை என்று பொருள்கொள்ள முடியாது (1 யோவான் 1:10). ஆவியில் நடக்கத்துவங்கும் ஒருவன், ஒரு வயது குழந்தைக்கு ஒப்பனையாய் இருக்கிறான். பலவேளைகளில் நடக்கும் முயற்சியில் அக்குழந்தை தவறி விழக்கூடும். எழும்பி நடந்து மீண்டும் விழக்கூடும். ஆனாலும் தன்னுடைய முயற்சியில் நிலைத்திருந்து விரைவில் நன்றாக நடக்கக் கற்றுக்கொள்கிறது. இவ்வாறு ஆவியில் நடக்கும் ஒரு மனிதன் ஒரு குழந்தையைப் போல் படிப்படியாக பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறான். முதிர்ச்சி அடைந்து ஒரு வாலிபனாக வளர்ந்தபின்னும் சிலவேளைகளில் கல்தட்டி அல்லது தடுமாறிக் கீழே விழக்கூடும். ஆனாலும் உடனே எழும்பி நிற்கிறான். இவ்வாறு செய்துகொள்வது ஆவிக்குரிய மனிதனின் கடமையாக இருக்கிறது. அதனால்தான் பவுல் சொல்கிறார்: "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப் 2:12). மகிமையின் சரீரத்தோடு, பரிசுத்தமான மணவாட்டியாக பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் நாள்வரை ஆவியின்படி நடந்து அனுதினமும் பரிசுத்தத்தில் வளர்ந்து கொண்டிருப்பது ஒரு கிறிஸ்தவனின் பொறுப்பு.

மாம்சத்தின்படி நடப்பவர்கள் என்று சொல்லும்போது பவுல் கடினமான துன்மார்க்கர்களையும், பாவிகளையும்தான் குறிப்பிடுகிறார் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. கொலை, விபசாரம், வெறித்தனம்,

திருட்டு ஆகிய காரியங்களில் ஈடுபாடு உள்ளவர்கள்தான் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் அல்ல. உலகரீதியாக மாம்சத்தின்படி நடப்பவர்கள் கௌரவமான நல்ல மனிதர்களாகவும் இருக்கலாம். **தான தருமங்களையும் நற்கிரியைகளையும் செய்பவர்கள் பரலோகத்துக்குப் போவார்கள் என்று எந்த வேதவசனமும் சொல்லவில்லை.** தங்கள் நற்கிரியைகளின் அடிப்படையில் தாங்கள் இரட்சிக்கப்படக்கூடும் என்ற நம்பிக்கை உடையவர்களும், மாம்சத்தின்படிநடப்பவர்கள் தான். பரிசுத்த ஆவியானவரை நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று சொல்லியும், தங்களை ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுக்காமல் இருப்பவர்களும் மாம்சத்துக்குரியவர்களே.

ஒருவகையில் பார்த்தால் இவர்கள் அந்த நாட்களில் இருந்த பரிசேயர்களைப் போல் இருக்கிறார்கள். தாங்கள் ஆபிரகாமின் சந்ததிகளாக இருப்பதினால், தாங்கள் விருத்தசேதனமுடையவர்களாக இருப்பதினால், தாங்கள் நியாயப்பிரமாணத்தை அறிந்தவர்களாக இருப்பதினால், தாங்கள் வாரத்தில் இரண்டுமுறை உபவாசிப்பதினால், தாங்கள் தசமபாகம் செலுத்துவதினால் தங்களை தேவனுக்கு உகந்தவர்களாக கருதிய இவர்களும் மாம்சத்துக்குரியவர்களே, மாம்சத்தின்படி நடப்பவர்களே. விரிவான வாசல்வழியே பிரவேசித்து விசாலமான வழியிலே நடக்கும் இவர்களுடைய முடிவு அழிவு (மத் 7:13).

ஆவியின்படி நடப்பவர்களில் இருந்து ஆவிக்குரிய நற்கிரியைகள் வெளிப்படவேண்டும் என்ற அவசியத்தையும் நாம் மறந்துவிடக்கூடாது. "நாம் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவியின்படி நடக்கவும் கடவோம்" (கலா 5:25). கிறிஸ்தவர்களுடைய எல்லா நடத்தைகளும், செயல்பாடுகளும் தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். ஆனாலும் ஒரு காரியத்தை நன்கு அறிந்துகொள்ளுங்கள். **நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறும்படியாக நற்கிரியைகளைச் செய்வதில்லை. தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதினால் நற்கிரியைகளைச் செய்கிறோம். பரலோகத்துக்கு போகவேண்டும் என்பதற்காக நற்கிரியைகள் செய்வதில்லை. பரலோகத்துக்குப் போய்கொண்டிருக்கிறபடியால் நற்கிரியைகள் செய்கிறோம்.** புனிதர் அகஸ்டின் சொல்கிறார் : "Gratia data est, ut lex impleretur (On Spirit and letters) இதன் பொருள் - நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை நிறைவேற்றவே கிருபை கொடுக்கப்பட்டது.

மாம்சத்துக்குரிய சிந்தனையும் ஆவிக்குரிய சிந்தனையும் (வசனம் 5-8)

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரிய வைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். (ரோமர் 8:5)

முந்தின 7-வது அதிகாரத்தில் இரண்டு வித்தியாசமான சுபாவங்கள் கொண்ட மனிதர்களைக் குறித்து தியானித்தோம். புதிய சுபாவமுடையவன் கர்த்தருக்கடுத்த காரியங்களைத் தேடுகிறான். பழைய சுபாவமுள்ளவனோ மாம்ச இச்சைகளுக்கடுத்த காரியங்களை நாடுகிறான். இந்த வேத பகுதியில் (வசனம் 5-8) இரண்டு வித்தியாசமான சிந்தனைகளோடு கூடிய மனிதர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கவிருக்கிறார்.

முந்தின இரண்டு வசனங்களில் மாம்சத்தின்படி நடக்காமல் ஆவியின்படி நடக்கிறவர்கள், அதாவது தங்களுடைய கிரியைகளை பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கு ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் தேவநீதியை சுதந்தரித்துக் கொள்வார்கள் என்பதைப் பார்த்தோம். ஒரு மனிதன் ஆவியின்படி நடக்கிறவனா அல்லது மாம்சத்தின்படி நடக்கிறவனா என்பதை எவ்வாறு நிர்ணயம் பண்ணுவது என்ற கேள்வி உடனடியாக எழும்புகிறது. அவர்களுடைய சிந்தனை எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதே அவர்கள் யார் என்பதை வெளிப்படுத்தும் என்கிறார் பவுல். ஒரு மனிதன் தன் உள்ளான மனதில் (sub-conscious mind) என்ன நினைக்கிறானோ அதையே நடப்பிக்கிறவனாக இருப்பான்.

மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளையே சிந்திப்பார்கள். **ஒருவன் எதைக்குறித்து அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கிறானோ, அதுவே அவனை ஆளுகை செய்ய ஆரம்பிக்கிறது.** அதன்படியே அவன் நடக்கத் துவங்குகிறான். நீதிமொழிகள் 23:7 சொல்கிறபடி, "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்". பேதுருவின் பாவத்தினிமித்தம் கிறிஸ்து அவரைப்பார்த்துச் சொல்கிறார், "தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய்" (மத் 16:23). நம்முடைய சிந்தனையே நாம் யார் என்பதை நிர்ணயம் பண்ணுகிறது.

உலகத்து மனிதர்கள் எதைக்குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பார்கள் என்று யோசித்துப் பாருங்கள். அவர்கள் விருப்பு, எதிர்பார்ப்பு, வாஞ்சை, எல்லாமே உலகத்து மேன்மை, அதிகாரம், பொருள், புகழ் இவைகளைப்

பற்றியதாகவே இருக்கும். அவற்றை அடைவதற்கும், தங்களுடைய தனிப்பட்ட மாம்ச இச்சைகளை நிறைவேற்றுவதற்கும் எதை வேண்டுமானாலும் செய்ய ஆயத்தமாயிருப்பார்கள். அசுத்தம், பொருளாசை, பேராசை, பெருமை, மேட்டிமை, வேசித்தனம், குடி, பெருந்தீனி, போட்டி மனப்பான்மை, வீண்கற்பனைகள் ஆகியவைகளில் உற்சாகமாக தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்கள். அப்படியாக அவர்களுடைய உள்மனது அவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கும்.

"மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்" (யோவான் 3:6) என்கிறார் இயேசு. "மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது" (யோவான் 6:63). "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டான வைகளல்ல" (1 யோவான் 2:16). மாம்சம் என்ற வார்த்தை ஆதாம் மூலமாக நாம் சுதந்தரித்துக்கொண்ட பாவசுபாவத்தைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். மாம்சத்துக்குரியவைகளைச் சிந்தித்து, மாம்சத்தின்படி நடந்த காயீன், ஏசா, பாலாம், சவுல், யூதாஸ் போன்ற பல மனிதர்களை நாம் வேதத்தில் சந்திக்கிறோம்.

ஆவிக்குரியவைகளைச் சிந்திப்பவர்களோ ஆவியின்படி நடக்க ஆரம்பிப்பார்கள். பரிசுத்த ஆவியானவரின் அமர்ந்த மெல்லிய சத்தத்தை இவர்கள் கேட்டு, அதன்படி தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறார்கள் என்பதினால் அவர்கள் நடக்கும் பாதை வித்தியாசமானதாக இருக்கும். **இவர்களுடைய பரிசுத்தமான வாழ்க்கையினால் இவர்கள் இடுக்கமான வாசலில் பிரவேசித்து நெருக்கமான வழியிலே இவர்கள் நடந்து கொண்டிருப்பார்கள்** (மத் 7:14). வேத தியானம், ஜெபம், நித்தியத்துக்கடுத்த காரியங்களில் ஆர்வம், ஊழிய வாஞ்சை இவர்களில் காணப்படும். ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகியவை (கலா 5:22, 23) இவர்களில் தாராளமாக வெளிப்படும். திருப்தி நிறைந்த வாழ்க்கை இவர்களுடையதாக இருக்கும். பவுலைப்போல், எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருப்பார்கள் (பிலிப் 4:11). **இவர்களுடைய எதிர்காலம் பரலோகத்தில் திட்டமிடப்படுவதினால் அதைக்குறித்த எந்த அச்சமும் இவர்களிடம் இருப்பதில்லை.**

மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். (ரோமர் 8:6)

ஒரு மனிதன் மாம்ச சிந்தையை உடையவனாக இருக்கவேண்டும் அல்லது ஆவியின் சிந்தையை உடையவனாக இருக்க வேண்டும்.

ஒருவன் மாம்சத்தின்படி நடக்கவேண்டும் அல்லது ஆவியின்படி நடக்கவேண்டும். இதற்கு இடைப்பட்ட வழிகளில் எவராலும் நடக்க முடியாது. மாம்ச சிந்தனையின் விளைவுகள் என்னென்ன என்பதை இந்த வேத பகுதி திட்டவட்டமாக அறிவிக்கிறது.

1. மாம்ச சிந்தனை மரணத்தைக் கொண்டு வருகிறது (வசனம் 6)
2. மாம்ச சிந்தனையுள்ள ஒரு மனிதன் தேவனைப் பகைக்கிறான் (வசனம் 7)
3. மாம்ச சிந்தனையுள்ளவன் நியாயப் பிரமாணத்துக்குக் கட்டுப்பட மறுக்கிறான் (வசனம் 7)
4. சொல்லப்போனால் அவனால் எந்தப் பிரமாணத்துக்கும் கீழ்ப்படிய முடியாது (வசனம் 7)
5. மாம்ச சிந்தனையுள்ளவர்கள் தேவனுக்கு வேண்டியவர்களாக இருக்க முடியாது (வசனம் 8)

"பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23) என்பதினால் மாம்ச சிந்தனையுள்ளவனின் பயணம் நித்திய மரணத்துக்கு நேராகவே இருக்கிறது. "அவர்களுடைய முடிவு அழிவு, ... அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" (பிலிப் 3:19). "துன்மார்க்கனுக்கு ஐயோ! அவனுக்குக் கேடு உண்டாகும்; அவன் கைகளின் பலன் அவனுக்குக் கிடைக்கும்" (ஏசாயா 3:11). மரணம் என்ற வார்த்தை சரீரத்துக்கடுத்த மரணத்தையும், ஆவிக்குரிய இரண்டாவது மரணத்தையும் குறிப்பிடுகிறது.

கலாத்தியர் 6:8ல் வாசிக்கிறோம் : "தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்." ஆவியின் சிந்தை ஒருவனுக்கு ஜீவனையும் சமாதானத்தையும் கொடுப்பதாக நாம் தியானிக்கும் வசனம் அறிவிக்கிறது. ஜீவன் என்ற வார்த்தை நித்திய ஜீவனைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். ஆவியின் சிந்தனையுள்ளவர்கள் உலக ரீதியாகவும் மனமகிழ்ச்சியான, திருப்தியான நிம்மதியான வாழ்க்கை உடையவர்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

அவர்கள் பெறும் இரண்டாவது ஆசீர்வாதம் சமாதானம். ஆவியின் சிந்தையுடையவர்களுக்கு இம்மையிலும், மறுமையிலும் இந்த சமாதானம்

வாக்களிக்கப்பட்டிருக்கிறது (ரோமர் 5:1). இந்த சமாதானத்தைத் தரும்படியாகவே கிறிஸ்து உலகத்துக்கு வந்தார். "என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27). சமாதானத்தைப் பற்றி பேசும் சில வேத வசனங்களை வாசித்துப்பாருங்கள் (சங் 4:8; 37:37; 119:165; 122:7 ஏசாயா 26:3; 48:22, லூக்கா 1:79; 2:14, யோவான் 14:27 ரோமர் 14:17; 15:13; 15:33, பிலிப் 4:7).

எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. *(ரோமர் 8:7)*

மாம்ச சிந்தை ஏன் மரணமாகக் கருதப்படவேண்டும் என்பதை பவுல் உடனடியாக அறிவிக்கிறார். ***முதலாவது*** அவர் சொல்லும் காரியம் அது தேவனுக்கு விரோதமான பகை என்பதாகும். பகை என்ற வார்த்தை பயங்கரமான வெறுப்பையும், குரோதத்தையும் அறிவிக்கிறது. சர்வ வல்லவரான தேவனை பகைக்கத் துணிவது எவ்வளவு ஆபத்தான காரியம் என்பதை மாம்ச சிந்தனையுள்ள மனிதன் யோசிப்பதில்லை. "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைவனாகிறான்" (யாக் 4:4). தேவனைப் பகைக்குமளவுக்கு அவன் துணிகரம் கொள்ளுவதற்குக் காரணம் இதுதான். "ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால் அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரி 2:14).

இரண்டாவதாக, மாம்சசிந்தையுடையவர்கள் நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படிவதில்லை என்று பார்க்கிறோம். ரோமர் 7:18ல் நாம் பார்த்தபடி, "அவர்களில் நன்மை வாழ்வதில்லை". நன்மை செய்யவேண்டும் என்ற விருப்பம் அவர்களில் இருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும் நன்மை செய்தல் என்னும் கிரியை அவர்களிடத்தில் இல்லை. ஆவிக்கு எதிராக மாம்ச இச்சையும், மாம்ச இச்சைக்கு எதிராக ஆவியும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறபடியால் அவர்கள் விரும்புவதைச் செய்யமுடிவதில்லை (கலா 5:17).

பவுல் சொல்லும் ***மூன்றாவது*** காரியம், மாம்ச சிந்தையுள்ளவர்களால் பரிசுத்தமான நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியமுடியாது. எந்த ஒரு

மனிதனாலும், அவன் எவ்வளவுதான் மனவலிமை படைத்தவனாக இருந்தாலும், அவனுடைய முயற்சியால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் தேவனுக்கு நண்பனாக மாறமுடியாது. "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்" (யோவான் 3:6) என்கிறார் இயேசு. மாம்சத்தைக் கட்டுப்படுத்தி தேவனை பிரியப்படுத்த ஒருவனாலும் முடியாது. பொதுவாக எல்லா மனிதர்களுமே தங்கள் மாம்ச இச்சையின்படி நடந்து, மாம்சமும் மனமும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தின்படி உலகத்து மனிதர்களைப்போல் கோபாக்கினையின் பிள்ளைகளாகத்தான் இருக்கிறார்கள் (எபே 2:3). **மாம்சம் தன்னுடைய சுபாவத்தை ஒருபோதும் மாற்றுவதில்லை.** "கெட்டமரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது" (மத் 7:18). "எத்தியோப்பியன் தன் தோலையும், சிவிங்கி தன் புள்ளிகளையும் மாற்றக்கூடுமோ? கூடுமானால், தீமை செய்யப்பழகின நீங்களும் நன்மைசெய்யக்கூடும்" (எரே 13:23) என்கிறார் தேவன்.

மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். (ரோமர் 8:8)

மாம்சத்தின்படி நடக்கிறவர்கள், மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறவர்கள் ஆகியோரைப்பற்றி பேசிவந்த பவுல் இங்கே மாம்சத்துக்குட்பட்டவர்களைப் பற்றி பேசுகிறார். **இரட்சிக்கப்படாத ஒரு மனிதனே மாம்சத்துக்குட்பட்டவன்.** இந்த மூன்றாவது வகை மனிதர்கள் இன்னும் ஒருபடி மேலே சென்று முற்றிலுமாக தேவனை விட்டு வெகுதூரத்துக்குச் சென்றுவிட்டார்கள். இப்படிப்பட்ட மாம்சத்துக்குட்பட்ட மனிதர்களால் தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியவே முடியாது.

மாம்சத்தின்படி நடப்பவர்கள் எல்லாரும் மாம்சத்துக்குட்பட்டவர்கள் என்று முடிவுசெய்யமுடியாது. வேதத்தில் சில பரிசுத்தவான்களும் பலவேளைகளில் மாம்சத்தின்படி நடந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். தேவனுடைய நண்பனாகக் கருதப்பட்ட ஆபிரகாம் ஆகாரிடம் கொண்டிருந்த உறவு அவருடைய மாம்ச சிந்தையை வெளிப்படுத்துகிறது. தேவனுடன் முகமுகமாகப் பேசிய மோசே எகிப்தியன் ஒருவனைக்கொன்று புதைத்தது (யாத் 2:12) ஒரு மாம்சீக கிரியையே, ஆனால் இவர்கள் இரண்டுபேருமே மாம்சத்துக்குட்பட்டவர்கள் அல்ல. கிறிஸ்துவை மறுதலித்தபோது மாம்சீகக்கிரியை பேதுருவிடமிருந்து வெளிப்பட்டது. ஆனாலும் அவர் ஆவிக்குட்பட்டவராக இருந்தபடியால்தான் அவரால் மனந்திரும்ப முடிந்தது.

கர்த்தருக்கு பிரியமாயிருப்பதுதான் ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும். அதனால்தான்

பவுல் சொல்கிறார்: "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்" (எபே 5:10). நம்முடைய சரீரங்கள் "தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக" (ரோமர் 12:1) ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும். "கர்த்தருக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று, கர்த்தருக்குரியவைகளுக்காகக்" (1 கொரி 7:32) கவலைப்படவேண்டும். "அவருக்குப் பிரியமாயிருக்க" (2 கொரி 5:9) வேண்டும்.

ஒரு காரியத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளவேண்டும். பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படாதநிலையில் எந்த மனிதனாலும் தேவனுக்குப் பிரியமாயிருக்கமுடியாது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி 11:16) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விசுவாசம் ஆவியானவர் தரும் ஈவு (எபே 2:8) **ஒரு கிரியை தன்னில்தானே நலமானதாக இருக்கலாம். ஆனாலும் அது விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிராவிட்டால் அது தேவனைப் பிரியப்படுத்துவதில்லை.** காயீன் தேவனுக்கென்று காணிக்கை கொண்டுவந்தது நல்ல காரியம்தான். ஆனால் அவனில் விசுவாசம் இல்லை. காயீனை அங்கீகரிக்காத தேவன் அவனுடைய காணிக்கையை அங்கீகரியாமல் இருந்ததில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. "துன்மார்க்கருடைய பலி கர்த்தருக்கு அருவருப்பானது" (நீதி 15:8). தேவன், உங்களையே ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், உங்கள் காணிக்கைகளையும் உங்கள் ஊழியங்களையும் கூட ஏற்றுக்கொள்ள மாட்டார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இந்த வேதபகுதியில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் சில பாடங்கள் :

1) ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படாதவர்களை தேவன் விரும்பமாட்டார்.

2) அவர்களுடைய நற்கிரியைகளையும் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

3) தாமதமின்றி அவர்கள் தேவனுடன் ஒப்புரவாகவேண்டும்.

4) இல்லாதபட்சத்தில் அவர்களுடைய முடிவு நித்திய மரணம்.

வாசமாயிருக்கும் ஆவியானவர் (வசனம் 9)

தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள்

மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர் களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:9)

ஒரு மனிதன் மாம்சத்துக்குட்பட்டவனா அல்லது ஆவிக்குட்பட்டவனா என்பதை எப்படி நிர்ணயம் பண்ணுவது? பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வாசமாயிருக்கிறாரா என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும் என்கிறார் பவுல். பழைய ஏற்பாட்டு காலங்களில் சவுல் போன்ற துன்மார்க்கர்களும் அவ்வப்போது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றிருந்தார்கள் என்பதை அறிவோம். ஆனால் அவர்களுக்குள் ஒருபோதும் அவர் வாசமாயிருந்ததில்லை. இப்போதோ ஆவியானவர் கிறிஸ்தவர்களுக்குள் வாசமாயிருக்கிறார். "நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்" (யோவான் 14:16) என்ற வசனத்தின்படி, கிறிஸ்துவின் ஜெபத்துக்குப் பதிலாக இன்று மறுபடியும் பிறந்த அனுபவமுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருக்கிறார், நிரந்தரமாக இருக்கிறார், ஆளுகை செய்கிறார். வாசமாயிருப்பதைக் குறிப்பிடும் Dikeo என்ற கிரேக்க பதம் (ரோமர் 7:17, 18, 20; 8:11, 1 கொரி 3:16, கொலோ 3:16) ஒரு மேலான வல்லமை நம்மை ஆட்கொள்வதைக் குறிப்பிடுகிறது.

தேவனுடைய ஆவியானவர் நமக்குள் வாசமாயிருப்பது எவ்வளவு பெரிய மேன்மை என்பதை யோசித்துப்பாருங்கள். நம்முடைய சரீரத்தின் முந்தின நிலை என்ன என்பதை ரோமர் 3:13-15ல் வாசித்தோம். நம்முடைய தொண்டை திறக்கப்பட்ட பிரேதக்குழியாய் இருந்தது. நாவு வஞ்சனை செய்தது. உதடுகளின் கீழ் பாம்பின் விஷம் இருந்தது. வாய் கசப்பினாலும் சபிப்பினாலும் நிறைந்திருந்தது. நம்முடைய கால்கள் இரத்தம் சிந்த தீவிரித்தது. ஆனால் இப்போதோ திருத்துவத்தின் மூன்றாவது நபர் நம்மில் வாசமாயிருக்கிறார். அவர் என்றென்றைக்கும் நமக்குள் வாசமாயிருக்கிறார் என்பது மட்டுமல்ல, நாம் அதை அறிந்துகொள்ளும் விதத்திலும் இருக்கிறார். கிறிஸ்து சொல்கிறார்: "உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி, உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்" (யோவான் 14:17). ஆவியானவரை அறிந்துகொண்டவர்களே கிறிஸ்தவர்கள்.

1 கொரி 3:16ல் பவுல் கொரிந்து சபையாரிடம் கேட்கிறார்: "நீங்கள்

தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? அவர் தம்முடைய ஆவியில் நமக்குத் தந்தருளினதினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 4:13) என்கிறார் யோவான். "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது" (1 யோவான் 2:27). எசேக்கியேல் 36:27 மற்றும் பழைய ஏற்பாட்டில் தேவன் கொடுத்த பல வாக்குறுதிகள் இந்தக் கடைசி நாட்களில் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. யோவான் 16:7, 2 கொரி 6:16, கலாத் 4:6, எபே 2:21,22, 2 தீமோத் 1:14 வாசித்துப்பாருங்கள்.

பரிசுத்த ஆவியானவர் ஒருவனுக்குள் வாசமாயிருப்பதின் விளைவாகப் பெறும் மேன்மைகளைக் குறித்தும் ஆசீர்வாதங்களைக் குறித்தும் தொடர்ச்சியாக பவுல் வெளிப்படையாகப் பேச ஆரம்பிக்கிறார். முதலாவதாக அவன் மாம்சத்திற்குட்பட்டவனாயிராமல் ஆவிக்குட்பட்டவனாக இருப்பான். தன்னுடைய பழைய மனிதனைப் பிரியப்படுத்தமாட்டான்.அவனிலிருந்து புதிய மனிதனுக்குரிய கிரியைகள் வெளிப்படும். ஆவிக்குட்பட்ட ஒரு மனிதனிடமிருந்துதான் ஆவிக்குரிய கனிகள் வெளிப்படமுடியும். ஏனென்றால் அப்போதுதான் அவனில் மாம்சக் கிரியைகள் முற்றிலுமாக முறியடிக்கப்படுகிறது. ஆவியானவருடைய பரிசுத்தமாக்கும் செயல்பாடு தொடர்ச்சியாக அவனில் நடைபெற்றுக்கொண்டு வருவதினால், ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கட்டப்பட்டுக்கொண்டு வருகிறான் (எபே 2:22).

"கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவன் அல்ல" என்ற அறிக்கை தொடர்கிறது. தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் என்று கலாத்தியர் 4:6ல் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் ஆவி நம்மைக் கிறிஸ்துவுடனும், கிறிஸ்துவை நம்முடனும் ஐக்கியப்படுத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவி என்று பிலிப்பியர் 1:19, 1 பேதுரு 1:11 ஆகிய வசனங்களிலும் குறிப்பிடப்படுகிறார். மத்தேயு 12:28, 1 கொரி 2:11,14; 3:16; 6:11, எபே 4:30 ஆகிய வசனங்களில் தேவனுடைய ஆவி என்றும் குறிக்கப்படுகிறார்.

விசுவாசிகளை பொதுவாக ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட விசுவாசிகள் என்றும், ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளாத விசுவாசிகள் என்றும் மனுஷரீதியாகப் பிரித்துப் பேசுகிறோம். ஆனால் பவுல் சொல்லும் காரியம் என்ன? "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருக்குரியவன் அல்ல". எனவே **ஆவிக்குரிய கிறிஸ்தவன் என்று யாரையும் அழைக்கவேண்டியதில்லை. எல்லா கிறிஸ்தவர்களுமே**

ஆவிக்குரியவர்களாகத்தான் இருக்கவேண்டும் (யூதா 19). கிருபையின் உடன்படிக்கையின்படி தேவன் மனித இனத்துக்கு வாக்களித்த மிகப்பெரிய ஆசீர்வாதம் பரிசுத்த ஆவியானவர்தான் (ஏசாயா 44:3-5, எசேக் 36:25-27) லூக்கா 11:13, மத் 7:11, யோவான் 4:10 வாசித்துப்பாருங்கள்.

இந்த வசனத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் காரியங்கள் இவைதான்:

1) பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவி (மற்றும் தேவனுடைய ஆவி) என்று அழைக்கப்படுகிறார்.

2) பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் இந்த உலகத்திலும் மாம்ச சிந்தனையில்லாத சில மனிதர்கள் இருக்கிறார்கள்.

3) மாம்சத்தை மேற்கொண்டவர்களிடத்தில் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருக்கிறார்.

4) ஆவியானவரை தங்களுக்குள் பெற்றிராத மனிதர்களின் நிலை மிகவும் பரிதாபமானது.

ஆவிக்குரியவர்களின் மேன்மை (வசனம் 10-13)

மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். (ரோமர் 8:10)

கிறிஸ்து ஒரு விசுவாசிக்குள் வாசமாயிருக்கும் அனுபவம் பல இடங்களில் அறிவிக்கப்படுகிறது. கலாத்தியர் 2:20ல் பவுல், "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்கிறார். "விசுவாசத்தினாலே கிறிஸ்து நம் இருதயங்களில் வாசமாயிருக்கவேண்டும்" என்று எபேசியர் 3:17ல் ஜெபிக்கிறார். "ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன்" (வெளி 3:20) என்கிறார் இயேசு. இயேசுகிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக விசுவாசிகளுக்குள் இருப்பதாக கொலோசெயர் சபையை பவுல் உற்சாகப்படுத்துவதை 1:27ல் பார்க்கிறோம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்" (2 கொரி 5:17). "இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா" (2 கொரி 13:5). கிறிஸ்து இன்று பரலோகத்தில் பிதாவின் வலதுபாரிசத்திலிருந்து (எபி 12:2) நமக்காக பரிந்துபேசிக்

கொண்டிருக்கிறார். என்றாலும் தன்னுடைய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர் மூலம் ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசிக்குள்ளும் இருக்கிறார் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். இந்த நிச்சயத்தை நாம் உடையவர்களாக இருக்கவேண்டும் என்பதினால்தான் பவுல் மீண்டும் மீண்டும் அதை சொல்லவேண்டியதாயிருக்கிறது.

இவ்வாறு கிறிஸ்து நமக்குள் வாசமாயிருப்பதின் விளைவாக நாம் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் என்னென்ன என்பதை இந்த வேதபகுதி அறிவிக்கிறது.

1) நம்முடைய ஆவி ஜீவனுள்ளதாகிறது. (வசனம் 8-13)

2) நமக்கு தேவனுடைய புத்திரர் என்ற அங்கீகாரம் வழங்கப்படுகிறது. (வசனம் 14-16)

மனிதன், ஆவி ஆத்துமா சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் சிருஷ்டிக்கப்பட்டவன் (ஆதி 2:7, 1 தெச 5:25). ஆதாம் பாவம் செய்தபோது அவனுடைய ஆவி மரித்தது (ஆதி 2:17). அவன் தேவனோடு உறவுகொள்ளும் சிலாக்கியத்தை இழந்துபோகிறான். அவனுடைய சரீரமும் ஆத்துமாவும் மரணம் என்ற பிரமாணத்தின் ஆளுகைக்குள் வந்துவிடுகிறது. ஆதாமுக்குள் பிறக்கும் எல்லா மனிதர்களும் ஆவியில் மரித்தநிலையிலேயே பிறக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய இருதயக் கதவை அவருக்காகத் திறந்துகொடுக்கும்போது ஆவியானவர் அவர்களுக்குள் வாசமாயிருக்க ஆரம்பிக்கிறார். அப்பொழுது அவர்களுடைய ஆவி உயிர்ப்பிக்கப்படுகிறது. அது ஜீவனை உடையதாக மாறுகிறது.

கிறிஸ்து நம்மில் வாசமாயிருக்கும்போது அதினிமித்தம் நம்முடைய ஆவி, தான் பெற்றுக்கொண்ட நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாக இருந்தாலும் நம்முடைய சரீரம் பாவத்தினிமித்தம் மரித்ததாக இருக்கலாம் என்பதை பவுல் அறிவிக்கத் தவறவில்லை. நம்முடைய சரீரம் இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்பதே அதற்குக் காரணம். மூன்று வகையான மரணத்தைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம்:

ஆவிக்குரிய மரணம்:

ஆதாமின் பாவமே இதற்குக்காரணமாகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத நிலையில். ஆவி ஜீவனைப்பெற்றுக் கொள்ளாது என்பதினால், நாம் பூமியில் சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே ஆவிக்குரிய மரணத்தில் நிலைத்திருக்கிறோம் (எபே 2:1, கொலோ 2:13).

சரீர மரணம் :

கிறிஸ்து நம்மில் வாசமாயிருக்கும் போதும், வாழ்க்கையின் முடிவில் எந்த ஒரு மனிதனும் சரீர மரணத்தைச் சந்தித்தே ஆகவேண்டும். மனித சரீரம் பூமியின் மண்ணில் இருந்து உருவாக்கப்பட்டது (ஆதி 2:7). எனவே அது பூமிக்குத் திரும்பியே ஆகவேண்டும் (ஆதி 3:19).

நித்திய மரணம் :

இந்த பிரபஞ்சத்தின் முடிவில், மனிதனுடைய ஆத்துமா நித்திய நித்தியமாக தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, அக்கினிக் கடலிலே தள்ளப்படும் அனுபவத்தை இது குறிப்பிடுகிறது. இதுவே இரண்டாம் மரணம் என்று அழைக்கப்படுகிறது (வெளி 20:14).

பவுல் இந்த வசனத்தில் சரீர மரணத்தைக் குறித்தே பேசுகிறார் என்பது தெளிவாகிறது. ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் ஆவிக்குரிய மரணத்தையும், நித்திய மரணத்தையும் ஒருபோதும் சந்திப்பதில்லை. ஆனால் இரட்சிக்கப்பட்ட பரிசுத்தவான்களும் சரீர மரணத்துக்குப் பாத்திரர்களாக இருக்கிறார்கள். பாவத்தினிமித்தம் மரித்ததாக பவுல் சொல்லும்போது அது ஏதேன் தோட்டத்தில் செய்யப்பட்ட பாவத்தைக்குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். (ரோமர் 5:12,15,17). பாவத்தின் சம்பளமான இந்த சரீர மரணம் இன்னும் பரிகரிக்கப்படவில்லை (1 கொரி 15:26). ஆனாலும் கிறிஸ்துவின் மரணத்துக்கொப்பான மரணத்துக்குள்ளாகி, அதன்பின் அவரைப்போல் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருக்கும் சிலாக்கியம் இரட்சிக்கப்பட்ட நமக்குத் தரப்படுகிறது (பிலிப் 3:10). இந்த சரீர மரணம் எவ்விதத்திலும் பரிசுத்தவான்களில் எந்த இழப்பையும் உருவாக்குவதில்லை. சொல்லப்போனால் இது மறுரூபமாகும் உன்னதமான அனுபவம். ஏனென்றால் மரித்து நாம் உயிர்த்தெழும்போது கிறிஸ்துவின் சரீரத்துக்கொப்ப மகிமையின் சரீரத்தைப் பெற்றுக்கொள்கிறோம் (1 யோவான் 3:2).

"ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுக்கேதுவாக இருக்கும்" என்று சொல்லும்போது "ஆவி" என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடாமல் மனிதன் தன் சரீரத்தில் தேவன் தன்னுடைய ஜீவசுவாசத்தை ஊதியதின் விளைவாகப் பெற்றுக்கொண்ட ஆவியையே குறிப்பிடுகிறது (ஆதி 2:7).

நீதி என்ற வார்த்தை இந்த இடத்தில் மூன்று காரியங்களை குறிப்பிடலாம் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

1) தன்னுடைய உடன்படிக்கையின்படி நடந்து கொள்ளும் தேவனுடைய பண்பு மற்றும் குணாதிசயம்.

2) மனிதன் இரட்சிக்கப்பட்டு, ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதினால் அவனில் உண்டாகும் நற்பண்புகள்.

3) கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலின் விளைவாக மனிதன் பெற்றுக்கொள்ளும் தேவநீதி.

இந்த வசனத்தில் நீதி என்ற வார்த்தை கிறிஸ்து தன்னை விசுவாசிப்பவர்களுக்கு வழங்கும் நீதி எனப்பொருள் கொள்ளவேண்டும். இதன் விளைவாகவே மரித்த நிலையிலிருக்கும் மனிதனுடைய ஆவி ஜீவனுடையதாகிறது. மனிதன் தேவனுடன் உறவுகொள்ளும் சிலாக்கியம் உண்டாகிறது. நம்முடைய சகல போராட்டங்கள், பெலவீனங்களின் மத்தியிலும் நம்முடைய ஆவி ஜீவனுடையதாய் இருக்கிறது என்பதை நம்புங்கள். உங்களுடைய உணர்வுகள் உங்களுடைய உலக ஞானம் உங்களிடம் என்ன பேசுகிறது என்பதல்ல, தேவனுடைய வார்த்தை என்ன பேசுகிறது என்பதே முக்கியம்.

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11)

சரீரமானது ஆதாமின் பாவத்தினிமித்தம் மரித்ததாயிருப்பதாக முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக அந்த சாவுக்கேதுவான சரீரம் உயிர்ப்பிக்கப்படும் நாள் ஒன்று உண்டு என்ற நிச்சயத்தை இங்கே அறிவிக்கிறார். அவை மறுரூபமாக்கப்பட்டு, மரணத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு, மகிமையின் சரீரமாக மாறும். அவருக்கு ஒப்பாயிருக்கும் மேலான நிலை உருவாகவிருக்கிறது (1 யோவான் 3:2).

இது எவ்வாறு சாத்தியமாகும் என்று நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. இயேசுவை மரித்தோரிலிருந்து மூன்றாம்

நாளில் உயிரோடு எழுப்பிய ஆவியானவர் நமக்குள் இப்போது வாசமாயிருக்கிறார். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடப்பித்த அதே கிரியையை அவரால் மீண்டும் நடப்பிக்கமுடியும். "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரி 15:20) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு நம்முடைய உயிர்த்தெழுதல் இணைந்திருப்பதை பல வசனங்கள் தெரிவிக்கின்றன. 1 கொரி 6:14, 15:20, 23; 2 கொரி 4:14. பிலிப் 3:21. 1 தெச 4:14 வாசித்துப்பாருங்கள்.

முதற்பலன் (first fruits) என்ற வார்த்தை, அவருடைய உயிர்த்தெழுதலைத் தொடர்ந்து, பல சரீர உயிர்த்தெழுதல்கள் உண்டு என்பதை நிரூபிக்கிறது. "அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1 கொரி 15:23). 1 கொரிந்தியர் 6:14 சொல்கிறது: "தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்" (1 தெச 4:14). "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்பி, உங்களுடனே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்" (2 கொரி 4:14) என்கிறார் பவுல்.

"மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே" (1 கொரி 15:55) என்ற பவுலின் அறிக்கை இந்த உயிர்ப்பிக்கப்படும் நிச்சயத்தை அறிவிக்கிறது. தெசலோனிக்கேயே சபையாருக்கு அவர் சொல்கிறார், "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெச 4:16,17). மரித்த கிறிஸ்தவர்களுடைய சரீரங்கள் அடக்கம்பண்ணப்பட்டு, மண்ணோடு மண்ணாகியிருக்கலாம். தேவனுடைய வல்லமை அந்த மக்கிப்போன சரீரங்களை எழுப்பி மகிமைப்படுத்தும் நாள் ஒன்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பவிக்கும்போது உயிரோடிருக்கும் விசுவாசிகளின் சரீரமும் தேவனால் மகிமைப்படுத்தப்படும். ரோமர் 8:29 சொல்கிறபடி, நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும் நாள் சமீபமாயிருக்கிறது. "நம்முடைய

அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப் 3:21) என்கிறார் பவுல்.

நாம் இரட்சிக்கப்பட்டபின்பும் நம்முடைய சரீரம் இரட்சிக்கப் படவில்லை என்பது உண்மைதான். நம்முடைய சரீரம் பாவத்தின் அடிமைத்தனத்துக்குள்ளும், அதன் விளைவாக மரணத்தின் அடிமைத்தனத்துக்குள்ளும் இருக்கிறது என்பதும் உண்மைதான். மண்ணில் இருந்து உருவான நம்முடைய சரீரம் நிச்சயமாக மரித்துப்போகும் என்பதை நாம் அறிவோம். அந்த சரீரம் நம்மில் பாவம் உருவாக, பாவம் செயல்பட காரணமாக இருக்கிறது என்பதையும் நாம் அறிவோம். நாம் விரும்பாத காரியங்களை அது நம்மைச் செய்யவைக்கிறது. ஆனாலும் மிகப்பெரியவர் ஒருவர் அந்த சரீரத்தில் வாசமாயிருக்கிறார். "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" என்று சவாலிட்டவரின் ஆவியானவர் நமக்குள் இருக்கிறார். இதன் விளைவாக மரணமானது ஜீவனாலே விழுங்கப்படும் நாள் ஒன்று உண்டு (2 கொரி 5:4). அல்லேலூயா !

ஒரு மனிதனுடைய சரீரம் உயிர்ப்பிக்கப்படும் அனுபவத்தை பவுல் இந்த வசனத்தில் விவரிக்கும்போது திருத்துவத்தின் மூன்று நபர்களின் செயல்பாடுகளையும் குறிப்பிடுவதைக் கவனியுங்கள். வேதத்தில் சில வசனங்களில் மட்டும் ஒரே இடத்தில் திருத்துவத்தின் மூன்று நபர்களும் சொல்லப்படுகிறார்கள்.

பிதா - கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்

இயேசு - மரித்தோரிலிருந்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தவர்

ஆவி - மனித சரீரத்தில் வாசமாயிருந்து செயல்படுபவர்

கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவராக பிதா இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறார். "தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்" (அப் 2:24), "இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார்" (அப் 2:32), "ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்" (அப் 3:15), "மூன்றாம் நாளிலே தேவன் அவரை எழுப்பிப் பிரத்தியட்சமாய்க் காணும்படி செய்தார்" (அப் 10:40) ஆகிய வசனங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பிதாவாகிய தேவனுடைய பங்கு முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்றன.

"இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே

இதை எழுப்புவேன்" (யோவான் 2:19), "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக்கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு" (யோவான் 10:17,18) ஆகிய வசனங்கள் கிறிஸ்து தன்னுடைய சொந்த அதிகாரத்தின் அடிப்படையில் உயிர்த்தெழுந்ததாக அறிவிக்கின்றன.

நாம் தியானிக்கும் வசனத்தில் பிதாவாகிய தேவனும் பரிசுத்த ஆவியானவரும் இணைந்து நடப்பிக்கும் கிரியையாக உயிர்த்தெழுதல் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். திருத்துவத்தின் ஒரு நபர் செயல்படுகிறார் என்றால் அதில் மூவரும் இணைந்தே செயல்படுவதாகக் கொள்ளவேண்டும். பிதா, குமாரன், ஆவியானவர் மூவரும் ஒரே தேவன் என்பதை இது உறுதிப்படுத்துகிறது.

முந்தின வசனத்தில் மரித்த சரீரம் என்று குறிப்பிடும் பவுல் இந்த வசனத்தில் சாவுக்கேதுவான சரீரம் என்று அழைப்பதைக் கவனியுங்கள். ஏனென்றால் பாவத்தின் விளைவாக மரித்ததைப்போல் காணப்பட்டாலும் முற்றிலுமாக சரீரம் மரிக்கவில்லை. அது அதில் வாசமாயிருக்கும் ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படப் போகிறது. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது" (1 கொரி 6:19) என்கிறார். "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?" (1 கொரி 3:16). தான் வாசமாயிருந்த தன்னுடைய ஆலயத்தை நித்திய அழிவுக்கு பரிசுத்த ஆவியானவர் ஒப்புக்கொடுக்கமாட்டார் என்பதை நம்பலாம். ஏற்கனவே அவர் கிறிஸ்துவை உயிர்ப்பித்தவர் என்பதினால், அதே வல்லமையை நம்முடைய சரீரத்தில் வெளிப்படுத்தி தான் வாசம்செய்யும் ஆலயத்தை மறுரூபப்படுத்துவார்.

நாம் தியானித்த வேதபகுதி அறிவிக்கும் காரியங்கள்:

1) கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் எழுப்பினார்

2) கிறிஸ்துவை எழுப்பியதில் பிதாவின் ஆவியாகிய பரிசுத்த ஆவியானவருக்கும் பங்கு உண்டு

3) அதே பிதாவின் ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் வாசமாயிருக்கிறார்

4) கிறிஸ்துவை எழுப்பியவர் நமக்குள் வாசமாயிருப்பது நம்முடைய சரீரமும் உயிர்ப்பிக்கப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறது

இந்த வேதபகுதியில் (வசனம் 9-11) பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஆவி, கிறிஸ்துவின் ஆவி, ஆவி, என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

ஆகையால் சகோதரரே, மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல. (ரோமர் 8:12)

மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்குக் கடனாளிகளல்ல என்று வசனத்தை பவுல் முடித்திருப்பது தவறு, "நாம் ஆவியானவருக்கு கடனாளிகள்" என்பதைச் சேர்த்திருக்கவேண்டும் என்கிறார் கால்வின்.

"ஆகையால்" என்ற வார்த்தையை தேவனுடைய ஆவி நம்மில் வாசமாயிருப்பதினால், கிறிஸ்து நம்மில் இருப்பதினால், நம்முடைய ஆவி கிறிஸ்துவின் நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாய் இருப்பதினால் என்று மூன்று விதங்களில் பொருள்கொள்ளலாம். 'சகோதரரே' என்று அழைக்கும்போதெல்லாம் பொதுவாக பவுல் தன் வாசகர்களுக்கு முக்கியமான அறிவுரை வழங்குவதைப் பார்க்கிறோம். இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் பவுல் சொல்லும் ஆலோசனை இன்றும் நமக்குப் பிரயோஜனமாக இருக்கிறது. கருத்தாய் தியானியுங்கள்.

"மாம்ச சிந்தை மரணம்" (வசனம் 6); "தேவனுக்கு விரோதமான பகை" (வசனம் 7), "மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்" (வசனம் 8) என்றெல்லாம் அறிவித்த பவுல், மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் மாம்சத்துக்கு எந்த விதத்திலும் கடன்பட்டவர்கள் அல்ல என்கிறார். அதற்கு கடன்படுவதற்கு அது நமக்கு எந்த நன்மையையும், உதவியையும் செய்யவில்லை. நாம் நமது மாம்சங்களினால் ஆளப்பட அனுமதிக்கக்கூடாது. நம்முடைய சரீரத்தைப் போஷிப்பது, கவனிப்பது, உடுத்துவது ஆகியவற்றுக்கு மேலாக வேறு எந்த நன்மையையும் சரீரத்திற்கு நாம் செய்யவேண்டியதில்லை. மாம்சத்தில் பாவம் செய்ய எந்த மனிதனுக்கும் உரிமை இல்லை. அந்த அதிகாரம் யாருக்கும் கொடுக்கப்படவில்லை. மாறாக எந்த மாம்ச சோதனையையும் மேற்கொள்ளும் அதிகாரம் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 10:13 சொல்கிறபடி: "உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான

போக்கையும் உண்டாக்குவார்".

தேவன் நமக்காக இரத்தம் சிந்தி மரித்தார், நம்மை இரட்சித்தார், நீதிமானாக்கினார், பரிசுத்தப்படுத்துகிறார். நமக்குள் வாசமாயிருக்கிறார், பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார். நியாயப்பிரமாணத்தின் நுகத்தை நம்மிலிருந்து நீக்கினார். நம்மை கிறிஸ்துவுக்குள் வைத்தார். நமக்குள் வாசமாயிருக்கிறார். நம்முடைய சரீரத்தை ஒருநாளில் மகிமைப்படுத்தப்போகிறார். எனவே **நாம் யாருக்காவது கடன்பட்டிருக்கவேண்டுமானால், தேவனுக்கு மட்டுமே கடன்பட்டிருக்கவேண்டும்.** "நாம் தேவனால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள்" (1 கொரி 6:20). தேவன் நமக்குக்கொடுத்த ஜீவனுக்காகவும், வல்லமைக்காகவும், அதிகாரத்துக்காகவும், விடுதலைக்காகவும் நாம் அவருக்குக் கடன்பட்டிருக்கிறோம். ஆனாலும் தேவன் நீங்கள் எனக்கு கடனாளிகளாயிருங்கள் என்று ஒருபோதும் நம்மைப்பார்த்து சொல்வதில்லை. நம்முடைய அன்றாட வாழ்க்கையில் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை மகிமைப்படுத்தவேண்டும் என்பதே நம்மைப்பொறுத்தவரை அவருடைய ஒரே விருப்பமும் எதிர்பார்ப்புமாய் இருக்கிறது.

மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். (ரோமர் 8:13)

ரோமர் நிருபத்தில் பவுல் மூலமாக பரிசுத்த ஆவியானவர் சபைக்கு வழங்கும் மிகப்பெரிய எச்சரிப்பும், மிகமுக்கியமான ஆலோசனையும் இந்த சிறிய வசனத்தில் காணப்படுவதாக எல்லா வேதபண்டிதர்களும் கருதுகிறார்கள். இரண்டு எதிர்மறையான காரியங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. ஒருவன் மாம்சத்தின்படியும் பிழைக்கலாம், ஆவியின்படியும் பிழைக்கலாம். இந்த அறிவிப்பு உபா 11:26; 30:15ஐ நினைவுபடுத்துகிறது. நம்முடைய வாழ்க்கையில் மாம்சம் தூண்டும் தவறான காரியங்களைச் செய்ய நம்மை ஒப்புக்கொடுப்போமானால், ஆவிக்குரிய வாழ்க்கை மரித்த நிலையில் காணப்படுவது உறுதி. அதற்கு எதிர்மறையாக பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு சரீரத்தின் துன்மார்க்கமான கிரியைகளை அழிப்பீர்கள் என்றால் மெய்யான வாழ்வைப் பெறுவீர்கள் என்கிறார் பவுல். **பரிசுத்தமாக்கப்படுவதில் மனிதனுக்கு பங்கு உண்டு என்பது தெளிவாகிறது.** மாம்சத்தின்படி பிழைக்காமல் ஆவியின்படி பிழைக்கவேண்டும்.

"சாவீர்கள்" என்றும், "பிழைப்பீர்கள்" என்றும் இரண்டு எதிர்மறையான வார்த்தைகளை பவுல் இந்த வசனத்தில் பயன்படுத்துகிறார்.

ஒரு மனிதன் கடந்து செல்லக்கூடிய இரண்டு பாதைகளைச் சுட்டிக்காட்டி அதின் முடிவு என்னவாக இருக்கும் என்பதை பவுல் அறிவிக்கிறார். ஒரு கிறிஸ்தவன் தவறான பாதையைத் தெரிந்துகொண்டு, மாம்சத்தில் பிழைக்கிறவனாய் இருக்கக்கூடாது என்பதே இந்த எச்சரிப்பின் நோக்கம். பாவம் தூண்டும் தவறான செய்கைகளைச் செய்தால் ஆவிக்குரிய மரணம் நிச்சயம். ஆவியினாலே சரீரத்தின் பாவச்செய்கைகளை அழிப்பது என்பது நமக்குள் வாசமாயிருக்கும் ஆவியானவரின் ஒத்தாசையோடு பரிசுத்தமாக்கப்படுதலைக் (பரிசுத்தத்தில் அனுதின வளர்ச்சியடைவது) குறிப்பிடுகிறது. **பரிசுத்தத்தில் வளரவேண்டுமானால் நாம் அதற்காக முயற்சி செய்யவேண்டும் என்பது அவசியமாகிறது.** இவ்வாறு நாம் முயற்சி செய்தாலும் "ஆவியினாலே" பரிசுத்த ஆவியானவரின் கிரியையால்தான் நாம் வெற்றிபெறமுடியும். எனவே அவருடைய செயல்பாட்டுக்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

"சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். **நம்முடைய நேர்மையான, சட்டபூர்வமான சரீர தேவைகளை நிறைவேற்றும்போதுகூட, நம்முடைய மாம்சம் அந்த விருப்பத்தை ஆளுகை செய்யுமானால் அது ஆபத்தானது.** நற்கிரியைகளை மாம்ச ரீதியாக, மாம்சத்தின் உந்துதலின்பேரில் செய்வது பாவமே. சுயநல நோக்கத்தோடு செய்யப்படும் ஊழியங்கள் கூட மாம்சக்கிரியைகளே. தங்களுடைய விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில், உலகத்திலும், உலகப்பொருட்களிலும் அந்தஸ்திலும் ஈடுபாடுகொண்டு, மனுஷீகமாக செயல்படும் ஊழியக்காரர்களின் முடிவும் மரணமே. பாவத்தில் வாழ்ந்து, அந்த வாழ்க்கையை மனமகிழ்ச்சியோடு அனுபவித்துக்கொண்டிருக்கும் ஒருமனிதனை நியாயப்பிரமாணம் எவ்வாறு இரட்சிக்காதோ, அவ்வாறே அப்படிப்பட்ட நடத்தையுள்ள ஒரு மனிதனை பவுல் அறிவிக்கும் சுவிசேஷத்தினாலும் இரட்சிக்கமுடியாது என்பதே உண்மை. அதனால்தான் பவுல் இந்த மிகமுக்கியமான ஆலோசனையை தன் நிருபத்தின் மையத்தில் வைத்து முக்கியப்படுத்துகிறார்.

எந்த ஒரு மனிதனாலும் தன்னுடைய முயற்சியினால் அல்லது திறமையினால் சரீரத்தின் செய்கைகளை அழித்துப்போடமுடியாது என்பதால்தான் ஆவியினாலே அவற்றை அழித்துப்போட்டு, அதன் விளைவாக பிழைக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். ஆவியானவர் கிரியை செய்து, அவனுடைய ஆவியை உயிர்ப்பித்து பெலப்படுத்தவேண்டும். தேவன் மண்ணிலிருந்து மனித சரீரத்தை உருவாக்கி தன்னுடைய ஆவியை (சுவாசத்தை) அந்த சரீரத்தில் ஊதி அதை ஜீவாத்துமாவாக்கினார் (ஆதி 2:7). **மனிதனுடைய ஆவி அவனுடைய ஆத்துமாவையும் சரீரத்தையும் ஆளுகை செய்யவேண்டும் என்பதே தேவனுடைய**

நியமம். சரீரம் ஐம்புலன்கள் மூலமாக (பார்வை, கேள்வி, தொடுதல், வாசனை, சுவாசித்தல்) மனிதனில் செயல்படுகிறது. தன்னுடைய ஆத்துமா மூலம் (உணர்ச்சி, சித்தம், அறிவு) மனிதன் வெளிஉலகத்தோடு தொடர்புகொள்கிறான். அவனில் உள்ள ஆவியின் உதவியோடு தேவனுடன் உறவுகொள்கிறான். உலகில் பாவம் பிரவேசித்தபோது ஆவி மரித்துவிட்டதினால் மனிதன் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை இழக்கிறான். ஆவி இல்லாத நிலையில் சரீரத்தின் ஆளுகைக்குள்ளாக ஆத்துமா வந்துவிடுகிறது. எனவே ஆவி உயிர்ப்பிக்கப்பட்ட நிலையில்தான் சரீர இச்சைகளை ஒருவன் மேற்கொண்டு, அனுதினமும் பரிசுத்தத்தில் வளரமுடியும்.

ஆவியானவரைக்கொண்டு பெறப்படும் குமாரத்துவம் (வசனம் 14-17)

மேலும், எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள் (ரோமர் 8:14)

மாம்சத்தின்படி நடக்கிறவர்களைக் குறித்தும், ஆவியின்படி நடக்கிறவர்களைக்குறித்தும் 5-வது வசனத்தில் பேசிய பவுல் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்களைக்குறித்து இந்த வசனத்தில் பேசுகிறார். இவர்கள் தாங்களாக நடப்பதில்லை, ஆவியானவரால் நடத்தப்படுகிறார்கள். "சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்" (யோவான் 16:13) என்ற கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் யார் யாரையெல்லாம் சத்தியத்துக்குள் நடத்துவாரோ அவர்கள் எல்லாரும் தேவனுடைய புத்திரர் ஆகிறார்கள். புத்திரர் என்பதற்கு பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை சிறு குழந்தைகளைக் குறிப்பிடாமல் (Children), வளர்ந்த, முதிர்ச்சி அடைந்த குமாரர்களைக் (Sons) குறிப்பிடுகிறது.

யோவான் 1:12 சொல்கிறது: "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்". யோவான் 3:3-8ன் படி ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்தவர்கள் (மறுபடியும் பிறந்த அனுபவம்) அத்தனைபேரும் தேவனுடைய பிள்ளைகளே. ஏனென்றால் இவர்கள் "இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:13). இவர்கள் தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே

மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் (1 பேதுரு 1:23). தேவனுடைய மாசற்ற பிள்ளைகள் (பிலிப் 2:15). "அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்" (1 யோவான் 4:7) என்று வாசிக்கிறோம். "சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" என்று மத்தேயு 5:9ல் வாசிக்கிறோம். சத்துருக்களைச் சிநேகிப்பவர்கள், நன்மை செய்பவர்கள், கைம்மாறு கருதாமல் கடன் கொடுப்பவர்கள் உன்னதமானவரின் பிள்ளைகள் என்று லூக்கா 6:35 அறிவிக்கிறது. 1 யோவான் 3:9; 5:1, 4 வாசித்துப்பாருங்கள்.

ஆவியானவரால் நடத்தப்படுகிறவர்கள் மட்டுமே மேற்சொன்ன குமாரத்துவத்தை உடையவர்களாக இருப்பார்கள். உலகில் பிறந்த அத்தனைபேரும் தேவனுடைய புத்திரர் என்று அழைக்கப்படமுடியாது யோவான் 8:44 வாசித்துப்பாருங்கள். இவர்களோ தங்கள் தகப்பனுடைய திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாக இருக்கிறார்கள் (2 பேதுரு 1:4). தகப்பனுடைய நற்பண்புகள் பிள்ளைகளில் பிரதிபலித்துக் கொண்டே இருக்கவேண்டும். கிறிஸ்து சொல்கிறார்: "உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும், நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத் 5:44,45).

ஆவியானவரால் நடத்தப்படுவது ஒரு கிறிஸ்தவன் பெற்றுக்கொள்ளும் மிகப்பெரிய சிலாக்கியம். இவர்கள் ஏற்கனவே செய்துகொண்டிருக்கும் நான்கு காரியங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருந்ததைப் பார்த்தோம்.

1) இவர்கள் ஆவியின்படி நடக்கிறார்கள் (வசனம் 1,4,5)

2) இவர்கள் ஆவிக்குட்பட்டவர்களாய் இருப்பார்கள் (வசனம் 9)

3) இவர்கள் மாம்சத்துக்குக் கடனாளிகளாய் இருக்கமாட்டார்கள் (வசனம் 12)

4) இவர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிப்பார்கள் (வசனம் 13)

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். பழைய ஏற்பாட்டு நாட்களில் பரிசுத்தவான்களும், தீர்க்கதரிசிகளும்கூட தங்களை தேவனுடைய பிள்ளைகளாகக் கருதவில்லை. அதைக்குறித்த அச்சம் அவர்களிடம் காணப்பட்டது. சர்வ வல்லமையும் அதிகாரமும் நிறைந்த தேவனை "எங்கள் பிதாவே" என்று அழைக்கும் சிலாக்கியம் கிறிஸ்துவினால் மட்டுமே உண்டானது. இதன் விளைவாக 2 கொரிந்தியர் 6:18ல் தேவன் சொல்கிறார்: "நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்".

தேவன் என்ன சொல்கிறாரோ அதை நாம் நிச்சயமாகவே, எவ்வித சந்தேகத்துக்குமிடமின்றி நம்பலாம். "அப்பா பிதாவே" என்று அவரை அழைக்கும் அதிகாரம் நமக்கு உண்டு (வசனம் 15, கலா 4:6). நாம் அவருடைய பிள்ளைகள் என்பதைக் குறித்த பரிசுத்த ஆவியானவரின் சாட்சி நமக்கு உண்டு (வசனம் 16). பிள்ளைகள் என்ற முறையில் தேவனுடைய சுதந்தரர், கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்ற நிச்சயமும் நமக்கு உண்டு (வசனம் 17). அவர் நம்மை தன்னுடைய சுவிகாரப்புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் (எபே 1:6). அதே நேரத்தில் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் பல பொறுப்புகளும் நமக்கு உண்டு. கொலோ 1:10, எபே 4:1 வாசித்துப்பாருங்கள்.

அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப்பெற்றீர்கள். (ரோமர் 8:15)

நம்மை மீண்டுமாக அடிமைப்படுத்தி, துக்கப்படுத்தி கொடூரமான முறையில் ஆளுகை செய்யவிரும்பும் ஒரு ஆவியை நாம் பெற்றுக்கொள்ளவில்லை. தேவனுடைய பிள்ளைகளாக நம்மை உருவாக்கி, நம்மை அந்த உறவில் நிலைத்திருக்கச் செய்யும் ஆவியைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம். இதன் விளைவாக "என் அன்புள்ள அப்பா" என்று நம் பரம தகப்பனை அழைத்து "என்னால் சமாளிக்க முடியவில்லை. உடனே வந்து உதவி செய்யுங்கள்" என்று உரிமையோடும், பாசத்தோடும், அதிகாரத்தோடும் அழைக்கும் சிலாக்கியம் நமக்கு உண்டாயிருக்கிறது.

கிறிஸ்துவை எப்போது நம்முடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டோமோ, அந்த தினத்திலிருந்தே நாம் தேவனுக்குள் குமாரத்துவம் என்ற ஒரு புது உறவுமுறையையும்,

ஐக்கியத்தையும் பெறுகிறோம். அவருடைய குடும்பத்தில் ஒரு அங்கமாகிவிடுகிறோம். **நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதோடு காரியங்கள் நின்றுவிடவில்லை. நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம்.** எல்லா பாவமும் அதனால் உண்டாகும் குற்ற உணர்வும் நம்மிலிருந்து நீக்கப்படுகிறது. 6-வது அதிகாரத்தில் சொல்லப்பட்டபடி இனி நாம் பாவத்துக்கு ஊழியம் செய்யத்தேவையில்லை. 7-வது அதிகாரத்தில் பார்த்தபடி நியாயப்பிரமாணமும் நம்மை ஆண்டுகொள்வதில்லை. இனி எதைக்குறித்தும் நாம் பயப்படத்தேவையில்லை. நம்முடைய எதிர்காலம் மட்டுமல்ல - நம்முடைய நித்திய மகிமை எவ்வாறு இருக்கும் என்பதை நம்முடைய அன்பான தகப்பன் நிர்ணயம் பண்ணிவிட்டார். தன்னுடைய திட்டத்தை அவர் ஒருபோதும் மாற்றப்போவதில்லை. அவருடைய அன்பு மாறுவதில்லை.

அதன் விளைவாக அப்பா பிதாவே என்று உரிமையோடு வானத்தையும் பூமியையும் தன்னுடைய வார்த்தையினாலே சிருஷ்டித்த சர்வவல்ல தேவனை அழைக்கும் உரிமை நமக்கு உண்டு. கெத்செமனே தோட்டத்தில் இயேசு, அப்பா பிதாவே (Abba Father, My Daddy, என் அன்பான பிதாவே) என்று அழைத்ததை நினைவுகூருகிறோம் (மாற்கு 14:36). யூதர்கள் பேசிய சீரிய அரமேய பாஷையில் abba "அப்பா" என்ற வார்த்தையும் புறஜாதியார் பயன்படுத்திய கிரேக்க பாஷையில் Pater "பிதா" என்ற வார்த்தையும் ஒருவனுடைய தகப்பனாரைக் குறிப்பிடுகிறது.

அடிமைத்தனத்தின் ஆவி (Spirit of Bondage), புத்திரசுவிகாரத்தின் ஆவி (Spirit of Adoption) என்று இரண்டு எதிர்மறையான ஆவிகள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

அடிமைத்தனத்தின் ஆவி:

நியாயப்பிரமாணம் தரும் பரிசு, பயத்தை உருவாக்குகிறது.

புத்திர சுவிகாரத்தின் ஆவி:

கிருபை தரும் பரிசு, இரட்சிப்பைக் குறித்த நிச்சயத்தை உருவாக்குகிறது.

ஆவி என்ற பதம் ஆசீர்வாதமான காரியத்தைத்தான் குறிப்பிடவேண்டும் என்பதில்லை. அடிமைத்தனத்தின் ஆவியைப்போல் "தாறுமாறுகளின் ஆவி" (ஏசாயா 19:14). "கனநித்திரையின் ஆவி" (ஏசாயா 29:10, ரோமர் 11:8) என்று துன்மார்க்கமான ஆவிகளும் வேதத்தில் குறிப்பிடப்படுகின்றன. 'ஆவி' என்ற வார்த்தை பரிசுத்த

ஆவியானவரைத்தான் சுட்டிக்காட்டும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு பொதுவான மனநிலை, மனபக்குவம், பழக்கவழக்கம் ஆகியவற்றையும் குறிப்பிடலாம் (ஏசாயா 37:7, ரோமர் 11:8, 1 கொரி 4:21, கலா 6:1, 1 பேதுரு 3:4).

பரிசுத்த ஆவியானவர் விடுதலையின் ஆவியானவராகவும் (2 கொரி 3:17) இருப்பதினால் பயமுள்ள அடிமைத்தனத்தின் ஆவியை ஒருவனில் உருவாக்கி செயல்படுவதில்லை. 2 தீமோ 1:7 சொல்லுகிறபடி, "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக்கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்" 1 யோவான் 4:18 சொல்லுகிறது: "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல." **பயத்தின் ஆவியை உடையவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.**

அடிமைத்தனத்தின் ஆவியை உடையவர்கள் யார்? இயேசு கிறிஸ்து சொல்கிறார்: "பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" (யோவான் 8:34). நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே தேவகோபாக்கினைக்குத் தப்பித்துக்கொள்ள முடியும் என்றும், அதில் மட்டுமே தங்களுடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது என்றும் நம்பிக்கை உடையவர்கள் அடிமைத்தனத்தின் ஆவியை உடையவர்கள்தான். கிறிஸ்து "நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணர்" (எபி 4:9) என்று சொல்லப்பட்டிருக்க, தங்களுடைய இரட்சிப்பு நிரந்தரமானது என்ற நம்பிக்கை இல்லாதவர்களும் அடிமைத்தனத்தின் ஆவியை உடையவர்கள்தான். கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பை அங்கீகரிக்காத கிறிஸ்தவர்களும் அடிமைத்தனத்தின் ஆவியை உடையவர்கள்தான்.

"நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால் கிறிஸ்துமூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா 4:6,7). அவருடைய குமாரனுடைய ஆவி நமக்குத் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய பிறப்பினால் நாம் சுதந்தரித்துக்கொண்ட அடிமைத்தனத்தின் ஆவியை நீக்கும்படியாகவே பிதா தன்னுடைய குமாரனை நம்மோடு மத்தியஸ்தம் பண்ணும்படியாக அனுப்பினார். "புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக" (எபி 9:15, 8:6), உலகில் அவதரித்த இயேசு தன்னுடைய சொந்த

இரத்தத்தினாலே நமக்கு நித்திய மீட்பை ஏற்படுத்தினார் (எபி 9:12). மீட்பு நித்தியமானது என்பதை உறுதிப்படுத்தும்படியாக, இரட்சிப்பின் உடன்படிக்கைக்குப் பிணையாளியானார் (எபி 7:22) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர் மூலமாக புத்திரசுவிகாரத்தின் ஆவியோடு பிதாவின் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறோம். தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாக கிழிக்கப்பட்டுவிட்டது (மத் 27:51). இனி நாம் வெளிப்பிரகாரங்களில் பயத்தோடும் அச்சத்தோடும் நடமாடிக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

அடுத்ததாக புத்திரசுவிகாரத்தின் ஆவியைக் குறித்து தியானிப்போம். புத்திர சுவிகாரம் (hyiothesia = sonship = குமாரத்துவம்) என்பது தனக்குப் பிறக்காத, தனக்குச் சொந்தமில்லாத குழந்தைகளை சட்டபூர்வமாக தத்து எடுத்து, தனது சொத்துக்களுக்கும் உடமைகளுக்கும் வாரிசுகளாக நியமிப்பதாகும். பவுலின் நாட்களில் அரசாங்க விதிமுறைகளின்படி சாட்சிகளின் முன்னிலையில் எழுத்துபூர்வமாக வாரிசுகள் நியமிக்கப்பட்டார்கள். பிறப்பினால் நாம் சாத்தானின் குடும்பத்தாராகவும், கோபாக்கினையின் பிள்ளைகளாகவும் இருந்தோம். தேவனுடைய பிள்ளைகளாகக் கருதப்பட எந்த தகுதியும் நமக்கு இல்லாதிருந்தது. ஆனாலும் "பிரியமானவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்" (எபே 1:5,6). "முன்குறித்திருக்கிறார்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள், அதை ரோமர் 8:29,30 வசனங்களில் அதிகமாக தியானிக்கப்போகிறோம்.

"புத்திரசுவிகாரத்தின் ஆவி" என்ற வார்த்தை பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் அவர் மூலமாகவும், அவர் நிமித்தமாகவும்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று ஆவியானவரே சாட்சி கொடுக்கிறார் என்பதை அடுத்த வசனம் உறுதிப்படுத்துகிறது. நம்முடைய குமாரத்துவத்துக்கு அவரே முத்திரையாகவும் அச்சாரமாகவும் (எபே 1:13,14) இருக்கிறார். அவர் "என்றென்றைக்கும்" நமக்குள் வாசமாயிருந்து, "பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும்" (யோவான் 14:6; 16:8) கண்டித்து உணர்த்துவதால்தான் அந்த குமாரத்துவத்தில் நிலைத்திருந்து, சர்வ வல்லமையுள்ள தேவனை "அப்பா பிதாவே" என்று நம்மால் அழைக்கமுடிகிறது. இவ்வாறு "அப்பா" என்று தேவனைக் கூப்பிடும்போது அடியிற்கண்ட நான்கு காரியங்களைச் செய்கிறவர்களாகிறோம்.

1) ஒரு தகப்பனுக்குரிய கனத்தையும் மரியாதையையும் தேவனுக்குக் கொடுக்கிறோம்.

2) நாம் அவரையே நம்பியிருக்கிறோம் என்பதை பகிரங்கமாக அறிக்கையிடுகிறோம்.

3) அவர் நம்மை கடைசிவரை பாதுகாத்து நித்தியத்துக்குள் வழிநடத்துவார் என்பதை நம்புகிறோம்.

4) அவருக்குரியவை எல்லாம் நமக்கும் உரியவை என்ற உரிமையை நிலைநாட்டுகிறோம்.

ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள். நம்மைவிட பெலன்மிக்க, ஞானம் நிறைந்த, பரிசுத்தமான தேவதூதர்களுக்குக்கூட தேவனை 'அப்பா' என்று அழைக்கும் உரிமை கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலருக்குத் தகப்பனாக தேவன் தன்னை வெளிப்படுத்தினாலும் அவர்கள் அவரை 'அப்பா' என்று அழைக்கும் தைரியம் இல்லாதவர்களாய் இருந்தார்கள். கர்த்தர், யேகோவா என்றுதான் அவரை அழைத்தார்கள். "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே" (லூக்கா 11:2) என்று அவரை அழைக்கும் உரிமையையும் அதிகாரத்தையும் நமக்குத் தந்தவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே. "அவருடைய (கிறிஸ்து) நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12). "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே" (கலா 3:26) என்று வாசிக்கிறோம்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். (ரோமர் 8:16)

திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர், ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதனில் இருக்கும் ஆவியோடு இணைந்துகொண்டு ஒரு முக்கியமான காரியத்தைச் செய்கிறார் - நாம் தேவனுடைய குமாரர்கள் என்று சாட்சி கொடுக்கிறார். நாம் தேவனால் அவருடைய பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதையும், அவருடைய குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்று அங்கீகரிக்கப்பட்டிருப்பதையும் பரிசுத்த ஆவியானவரே உறுதிப்படுத்துகிறார். தேவனே அதைக்குறித்து சாட்சி

கொடுப்பதினால் அதை உறுதியாக நம்பலாம் (1 யோவான் 5:9). "தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்" (1 கொரி 2:11). "அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்" (வசனம் 10). எல்லாவற்றையும் அறிந்த அவர் நம்மைத் தேவனுடைய பிள்ளைகள் என்கிறார். மற்றபடி இந்த மேலான சிலாக்கியத்தை நம்மால் கற்பனை பண்ணக்கூட முடியாது.

யோவான் சொல்கிறார்: "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1). இந்த உறவுமுறையை, ஒரு தீர்க்கதரிசி அல்ல, ஒரு தேவதூதன் அல்ல, திருத்துவத்தின் மூன்றாவது நபரே சாட்சி கொடுக்கிறார் என்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம். "ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சி கொடுக்கிறவர்" (1 யோவான் 5:6). "தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்" (1 யோவான் 5:10). எனவே நாம் அப்பா பிதாவே என்று பிதாவை அழைப்போமானால் அவர் "அருமை மகனே" என்று பதில் கொடுக்கிறார். நாம்தான் பரலோகத்துக்கு நேராக கரங்களைத் தூக்கி தேவனைத் தேடுகிறோம் என்பதல்ல, நாம் கைகளை நீட்டத்துவங்குமுன்பே பரிசுத்த ஆவியானவர் மூலமாக நம்மிடம் மனதுருகி ஓடிவந்து, நம்மைக் கட்டிக்கொண்டு முந்தஞ்செய்யும் தேவன் ஒருவர் நமக்கு உண்டு (லூக்கா 15:20).

பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு நம்முடைய ஆவியில் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற சாட்சியைக் கொடுக்கிறார்? "நீ தேவனுக்குச் சொந்தமானவன்" என்று சொல்லிக்கொண்டே இருப்பார். அவர் பலத்த குரலோடு நம்மோடு பேசலாம், தன்னுடைய தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசலாம், கனவுகள் தரிசனங்கள் மூலமாகப் பேசலாம், சந்தர்ப்ப சூழ்நிலைகள் மூலமாகப் பேசலாம், நம்முடைய ஆவியில் அமர்ந்த மெல்லிய குரல் மூலமாகவும் பேசலாம். நாம் எல்லாருமே பாவிகள், பரிதாபத்துக்குரியவர்கள், அழிவின் பாதையிலே போய்க்கொண்டிருப்பவர்கள் என்பதையும், கிறிஸ்துவின் நீதியின் நிமித்தமாக மட்டுமே பரிசுத்தமான தேவனால் நம்மை ஏற்றுக்கொள்ளமுடியும் என்பதையும் நம்முடைய ஆவி நம்புகிறது என்றால் அதில் கிரியை செய்யும் பரிசுத்த ஆவியானவரே காரணம். நம்முடைய இருதயம் இன்னும் கடினப்படாமல் இருக்குமேயானால் அதற்கும் அவரே காரணமாயிருக்கிறார். பாவத்தைக் குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் நம் ஆவியில் கண்டித்து

உணர்த்த அவர் ஒருவரால்தான் கூடும். கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்ற உணர்வை நம் ஆவியில் கட்டளையிடுவது பரிசுத்த ஆவியானவரே.

14-வது வசனத்தில் "தேவனுடைய புத்திரர்" என்றும் இந்த வசனத்தில் "தேவனுடைய பிள்ளைகள்" என்றும் பவுல் வித்தியாசப்படுத்தி எழுதுவதைக் கவனியுங்கள். புத்திரர் என்ற வார்த்தை முதிர்ச்சியடைந்த, ஆவியானவரால் நடத்தப்படும் வளர்ச்சியடைந்த விசுவாசிகளைக் குறிப்பிடுகிறது. பிள்ளைகள் என்ற வார்த்தை அவர்கள் தேவனுடைய குடும்பத்தாராக இருந்தாலும் ஆவியானவரின் ஆளுகைக்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்காத பிள்ளைகளைக் குறிப்பிடுகிறது.

நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும். (ரோமர் 8:17)

நாம் தேவனுடைய "சுவிகாரப்புத்திரர்" (எபே 1:6) என்ற நிச்சயத்தை நம்முடைய ஆவியில் உருவாக்குவது பரிசுத்த ஆவியானவர் என்பதை அறிவித்த பவுல், அதன் விளைவாக நாம் பெறும் மேலான சிலாக்கியம் என்ன என்பதை அறிவிக்கிறார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கென்று வைத்திருக்கும் மகிமையும் சுயாதீனங்களும் சட்டபூர்வமான முறையில் பிள்ளைகளுடையதாகிறது. கிறிஸ்துவிடம் உள்ள அதே மகிமையும் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் நாம் பெறும் சுதந்தரத்தை ஒருபோதும் இழக்கப்போவதில்லை.

'சுதந்தரம்' என்பது ஒரு மகன் தனது தகப்பனுடைய சொத்துக்களின்மேல் பெறும் சட்டபூர்வமான உரிமையைக் குறிப்பிடுகிறது. தகப்பனுடைய ஐசுவரியங்களை தன்னுடைய பிள்ளைகள் பெற்றுக்கொள்ள உலகில் உள்ள எல்லா நாடுகளும் அனுமதிக்கின்றன. அந்த மகன் ஒருவேளை தன்னுடைய உழைப்பினால் ஐசுவரியங்களைச் சம்பாதிக்கலாம், வீடுகளைக் கட்டலாம், சொத்துக்களைச் சேர்க்கலாம், இவை அவனுடைய சுதந்தரமாக அமையாது. குமாரத்துவத்தின் ஆதாரத்தில் தகப்பனிடமிருந்து இலவசமாக, மகன் என்ற அந்தஸ்தின் அடிப்படையில் எந்த ஒரு கிரியையையும் செய்யாமலேயே பெற்றுக்கொள்வதே சுதந்தரமாகும்.

நாம் தேவனுடைய சுதந்தரர் மட்டுமல்ல, கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் (Joint heir) என்கிறார் பவுல். சுதந்தரர் என்பதற்கும் உடன்

சுதந்தரர் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஒருவருக்கு நூறு ஏக்கர் நிலம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவருக்கு நான்கு பிள்ளைகள். சுதந்தரர் என்ற முறையில் ஆளுக்கு 25 ஏக்கர் நிலம் அவர்களுக்குக் கிடைக்கும். அதை அவர்கள் தனித்தனியே பிரித்து, வேலிபோட்டு அதன் பலனை அனுபவித்துக்கொள்ளலாம். ஆனால் அந்த தகப்பன் அந்த நான்குபேரையும் உடன் சுதந்தரராக நியமித்தால் அவர்கள் அவ்வாறு செய்யமுடியாது. அந்த நூறு ஏக்கரின் ஒவ்வொரு பகுதியும் அந்த நான்குபேருக்கும் சொந்தமாகிறது. இதன் விளைவாக உலகரீதியாக சகோதரர்களிடையே பிரச்சனைகள் உண்டாகும். ஆனால் ஆவிக்குரிய விதத்தில் பார்ப்போமானால் குழப்பம் வராது. கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் என்ற முறையில் பிதாவாகிய தேவன் தன் ஒரே பேறான குமாரனுக்கு வழங்கும் சகல நன்மைகளும், மேன்மைகளும், ஆசீர்வாதங்களும் நம் எல்லாருக்கும் சொந்தமாகிறது. வேதம் இப்படித்தான் சொல்கிறது என்பதினால் அதை நம்புங்கள்.

பவுல் சொல்கிறார்: "நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா 4:6,7). "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலா 3:29).

பூமியும் அதின் நிறைவும் நம் பரமதகப்பனாகிய தேவனுக்குச் சொந்தமானவை (சங் 50:12) என்பதினால் அவை எல்லாவற்றையும் நாமும் உரிமையோடு சுதந்தரித்துக் கொள்ளலாம். தேவன் நித்தியவாசியாக இருப்பதினால் நாம் சுதந்தரிக்கும் ஆசீர்வாதங்களும் நித்திய நித்தியமாக நிலைத்திருக்கக் கூடியதாகத்தான் இருக்கும். தேவன் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறபடியால் அவர் தரும் சுதந்தரம் மாறாதது. எபிரெயர் 6:17 சொல்லுகிறது: "தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார்". இந்த சுதந்தரங்கள் தன்னுடைய பிள்ளைகளுக்குரியவை என்று தேவன் சட்டபூர்வமாக வாக்குபண்ணியிருக்கிறார். அவர் வாக்குமாறாதவர்.

எபிரெயர் 1:14ல் இரட்சிப்பு நாம் பெற்றுக்கொள்ளும் ஒரு சுதந்தரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீத்து 3:6, 1 பேதுரு 3:7ல் நித்திய ஜீவன் ஒரு சுதந்தரமாகக் குறிப்பிடப்படுகிறது. யாக்கோபு 2:5ல் தேவன்

வாக்குபண்ணின ராஜ்யம் ஒரு சுதந்தரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. **ஒருவகையில் பார்த்தால் கிறிஸ்து மூலமாக பிதாவாகிய தேவனே நம்முடைய சுதந்தரமாகிறார்.** அதனால்தான் தாவீது சொல்கிறார்: "கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர்; என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர். நேர்த்தியான இடங்களில் எனக்குப் பங்கு கிடைத்தது; ஆம், சிறப்பான சுதந்தரம் எனக்கு உண்டு" (சங் 16:5,6). ஆசாப் சொல்கிறார்: "தேவன் என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிறார்". எரேமியா சொல்கிறார்: "கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கைக்கொண்டிருப்பேன்" (புலம் 3:24).

எல்லாவற்றுக்கும் மேலாக கர்த்தராகிய ஆண்டவரே ஆரோனிடம் சொல்கிறார்: "அவர்களுடைய தேசத்தில் நீ ஒன்றையும் சுதந்தரித்துக் கொள்ளவேண்டாம், அவர்கள் நடுவே உனக்குப் பங்கு உண்டாயிருக்கவும் வேண்டாம்; இஸ்ரவேல் புத்திரர் நடுவில் நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்" (எண் 18:20). இஸ்ரவேலில் ஒரு நிலத்தையும் நீ பெற்றுக்கொள்ளமாட்டாய். ஆனால் கர்த்தராகிய நானே உனக்கு உரியவர். என்னைத்தானே உனக்கு சுதந்தரமாகத் தந்துள்ளேன் என்கிறார் தேவன். உலகரீதியான சுதந்தரங்கள் ஊழியக்காரர்களை இடறலடையச் செய்யும் என்பதை தேவன் அறிவார்.

நாம் தேவனுடைய சுதந்தரர் மட்டுமல்ல, "சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமிக்கப்பட்ட" (எபி 1:2) கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்ற மேன்மையைக் குறித்துப் பார்த்தோம். ஒரு பாவ மனிதன், புழுபோன்று பெலவீனமான மனிதன், புல்லைப் போல் இன்று இருந்து நாளை மறைந்துபோகும் மனிதன் எவ்வாறு நித்தியவாசியான கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகக் கருதப்படமுடியும்? வேதம் இதை அறிவிக்காதபட்சத்தில் நாம் நம்மை கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்று சொல்வோமானால் அது நிச்சயமாக ஒரு துணிகரமான அறிவிப்பாகத்தான் கருதப்படவேண்டும். **கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் என்ற முறையில் பிதாவாகிய தேவன் தன் ஒரே பேறான குமாரனுக்கு வழங்கிய, வழங்கும், வழங்கவிருக்கும் சகல மகிமைகளுக்கும், மேன்மைகளுக்கும், மகத்துவத்துக்கும் நாம் பங்குதாரர் ஆகிவிடுகிறோம்.**

அதனால்தான் "அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம்" (1 பேதுரு 1:4) என்று பேதுரு குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட மேலான சுதந்தரம் சேராபீன்களுக்கும், கேருபீன்களுக்கும், தேவதூதர்களுக்கும் வாக்களிக்கப்படவில்லை. நாம் கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்பதினால்தான் யோவான் 17:22ல் கிறிஸ்து பிதாவிடம் சொல்கிறார்: "நாம்

ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்". 'கொடுப்பேன்' என்று எதிர்காலத்தில் சொல்லாமல் ஏற்கனவே கொடுத்து முடித்துவிட்டதாக இயேசு பேசுகிறார். யோவான் 17:10ல் சொல்லுகிறார்: "என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்," ஒருவகையில் பார்த்தால் நாம் கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்ற முறையில்தான் தேவனுடைய சுதந்தரர் ஆகிறோம். கிறிஸ்துவுக்குள் இல்லாத ஒரு மனிதன் அவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் தேவனுடைய சுதந்தரமாகிவிட முடியாது.

வசனத்தின் பின்பகுதி "கிறிஸ்துவோடேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூட பாடுபட்டால் அப்படி ஆகும்" என்று அறிவிக்கிறது. இதன் அடிப்படையில் அவரோடு பாடுபடுகிறவர்கள் மட்டுமே தேவனுடைய சுதந்தரராகமுடியும் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. **சுதந்தரம் தேவனுடைய கிருபையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது.** "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ 3:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த சிலாக்கியத்தைப்பெற உயிரோடிருக்கும் நாட்களில் அவரோடுகூட பாடுபட நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும் என்கிறார் பவுல். "நீயும் இயேசுகிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி" (2 தீமோ 2:3) என்கிறார். தன்னுடைய சுவிசேஷ ஊழியத்தின்போது தான் அனுபவித்த பாடுகளை மனதில் வைத்துக்கொண்டு பவுல் பேசுவதுபோல் தெரிகிறது (2 கொரி 11:23-28). 2 தீமோ 2:11,12ல் அவர் சொல்கிறார்: "அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்". அவரோடு கொண்டுள்ள ஐக்கியமே நம்முடைய சுதந்தரத்தை நிர்ணயம் செய்கிறது. பாடுகளும் மகிமையும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவை என்று பார்க்கிறோம். யோவான் 16:1-3, 33 வாசித்துப்பாருங்கள்.

பிலிப்பியர் 3:10,11ல் பவுல் சொல்கிறார்: "நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றுவிட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்". "இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அனுபவிக்கிற

பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்" (கொலோ 1:24). "கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" (2 கொரி 1:5). பேதுரு சொல்கிறார்: "கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" (1 பேதுரு 4:13).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய பாடுகள் வழியாகத்தான் மகிமைக்குள் பிரவேசித்தார் என்பதை அறிவோம் (லூக்கா 24:26; பிலிப் 2:6-11; 1 பேதுரு 1:11), எபிரெயர் 12:2 சொல்கிறது: "அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்". ஆதி அப்போஸ்தல சபையும் பல பாடுகளைச் சந்தித்தது. "அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானப்படுவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால்" (அப் 5:41) அவர்கள் சந்தோஷமடைந்தார்கள். ஏனென்றால் அவர் சொல்லியிருக்கிறார்: "என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்" (மத் 5:11), மத்தேயு 10:22; 10:39; 19:29, 2 கொரி 4:11, கலா 6:17 வாசித்துப்பாருங்கள். நம்மில் எத்தனைபேர் அவர் நிமித்தம் பாடுபட ஆயத்தமாயிருக்கிறோம்?

அவருடனேகூட பாடுபடுவது என்பது அவருக்காக, அவர் சார்பில், அவருடைய நாமத்தின் மகிமைக்காக, அவருடைய பிரதிநிதி என்ற முறையில், அவருடைய சுவிசேஷ பணியில் நாம் அனுபவிக்கும் பாடுகளைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். சரீரமாகிய சபை பாடுபடும்போது கிறிஸ்துவும் பாடுபடுகிறார் என்று பார்க்கிறோம். அப் 9:4, பிலிப் 1:29, கொலோ 1:24, 1 பேதுரு 4:13 வாசித்துப் பாருங்கள். நம்முடைய விசுவாசம் பலவழிகளில் சோதிக்கப்படும்போது நாம் பாடுபடுகிறோம். இடுக்கமான வாசலைத் தெரிந்து கொள்ளும்போது நாம் பாடுபடுகிறோம். கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறும்போது பாடுபடுகிறோம். **அவரோடு பாடுபடும் ஊழியக்காரர்கள்தான் இன்றைய கிறிஸ்தவத்தின் பிரதானமான தேவை.** செழிப்பையும், பொருளாதார ஆசீர்வாதத்தையும், சரீர சுகத்தையும் மட்டுமே சுவிசேஷமாக அறிவிக்கும் நவீனகாலத்து ஊழியக்காரர்கள் பாடுகளைக் குறித்து பேசுவார்களா?

பாடுகளும் தவிப்பும் (வசனம் 18-23)

ஆதலால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன். (ரோமர் 8:18)

இந்த வசனத்திலிருந்து இந்த அதிகாரத்தில் ஒரு புதிய பகுதி ஆரம்பமாகிறது. நாம் நம்முடைய மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கமுடியாது என்று பார்த்தோம். அதனால் ஆவியின்படி நடக்கவேண்டும் என்ற ஆலோசனை நமக்குத்தரப்பட்டது. அவ்வாறு நடக்கும்போது மட்டுமே நமக்குள் இருக்கிற கிறிஸ்துவை பிரதிபலிப்பவர்களாக இருப்போம். இவ்வாறு நாம் செய்யும்போது பாடுகளையும், உபத்திரவங்களையும் நாம் சந்திக்கவேண்டியதாகிறது. தேவனுடைய சுதந்தரமும், கிறிஸ்துவின் உடன் சுதந்தரர்களாகவும் மாறிவிட்டபின் நமக்கு ஏன் பாடுகள் வரக்கூடும் என்ற கேள்வி எழும்புகிறது. அதற்கான பதில் இந்த வசனத்தில் காணப்படுகிறது. இப்பொழுது நாம் துன்பப்படுகிறோம் என்பது உண்மைதான். ஆனாலும் இந்த நிகழ்காலத் துன்பத்தை வருங்காலத்தில் நமக்குக் கொடுக்கப்படவிருக்கும் மேன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த உபத்திரவம் ஒன்றுமில்லாமல் போகும் என்கிறார் பவுல். இரண்டு காரியங்களை பவுல் தன் வாசகர்களுக்கு முன்பாகக் கொண்டுவருகிறார்.

இக்காலத்துப் பாடுகள்
கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டநாள் முதல் வருகை வரையுள்ள பாடுகள்

வருங்காலத்து மகிமை
ஆண்டவருடைய வருகை துவங்கி நித்திய நித்தியமாய் அனுபவிக்கும் மகிமை

கிறிஸ்தவர்களாகிய நாம் பல பாடுகள் வழியாக கடந்துபோக வேண்டியதிருக்கிறது. வியாதிகள், வருத்தம், வலி, வேதனை, பொருள் நஷ்டம் முதலிய சரீர ரீதியான பாடுகள் மட்டுமல்ல, மன அழுத்தம், பாரம், பிரிவினைகள் போன்ற மனரீதியான பாடுகளும் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றன. சபை ஏன் பாடுகளைச் சந்திக்கவேண்டும் என்பதை பவுல் அறிவிக்கவில்லை. சிலவேளைகளில் நாம் யாரை நேசிக்கிறோமோ அவர்களும் நம்முடைய பாடுகளுக்குக் காரணமாயிருக்கிறார்கள். நம்முடைய விரோதிகளும் காரணமாயிருக்கிறார்கள். தேவனுடைய அனுமதியின்றி நம்முடைய

வாழ்க்கையில் எதுவுமே நடப்பதில்லை என்பதை மட்டும் நிச்சயமாக நம்பலாம்.

இந்த வசனத்தில் சொல்லப்படும் கருத்தை பவுல் வேறுவிதமாக 2 கொரிந்தியர் 4:17,18ல் சொல்வதைக் கவனியுங்கள்: "காணப்படுகிறவை களையல்ல, "காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்". அப்போஸ்தலனாகிய பவுல் அனுபவித்த பாடுகளைக் குறித்து அப் 19:23-41; 20:18-35, 1 கொரி 4:9, 2 கொரி 1:3-15; 6:4-10; 11:23-33; 12:2-4 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். இவைகளின் மத்தியிலும் பவுல், தான் பூமியில் இருக்கும் நாட்களிலேயே, மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டதாகப் பார்க்கிறோம். பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷர் பேசப்படாததும், வாக்குக்கெட்டாததுமாகிய வார்த்தைகளை அங்கே கேட்டதாகச் சொல்கிறார் (2 கொரி 12:2-4).

இக்காலத்துப் பாடுகளைக்குறித்து பவுல் கவலைப்படாததற்கு காரணம் என்ன என்பதை 2 தீமோ 2:10-12 இவ்விதமாக அறிவிக்கிறது. "தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாகச் சகிக்கிறேன். இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்". இப்படிப்பட்ட மேலான நிச்சயம் ஊழியக்காரர்களாகிய நம்மிடம் காணப்படுகிறதா என்று யோசித்துப்பாருங்கள். "மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள். அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (லூக்கா 6:22,23).

கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொள்ளவிருக்கும் மகிமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை வெளி 21:10,23,24; 22:5 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். **இந்த மகிமைகளை யோவான் தன்னுடைய கண்களினால் வெளிப்படுத்தின விசேஷத்தில் பார்க்கிறார் என்பதினால் அவை ஏற்கனவே ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கவேண்டும்.** அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கும்படியாகவே

இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசுகிறிஸ்து உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டார் என்று எபிரெயர் 2:10 சொல்கிறது. வரவிருக்கும் மகிமையைக் குறித்த நம்பிக்கை தேவனுடைய பிள்ளைகளுக்கென்று மட்டுமல்ல, இப்போது மாயைக்குட்பட்டு, அடிமைத்தனத்திலிருக்கும் சகல சிருஷ்டிக்கும் இருக்கிறது என்பதை அடுத்துவரும் 19-22 வசனங்கள் அறிவிக்கின்றன.

மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. (ரோமர் 8:19)

இந்த வேதபகுதியில் 19,20,21,22 ஆகிய நான்கு வசனங்களிலுமே 'சிருஷ்டி' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'சிருஷ்டி' என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார் என்பதில் வேதபண்டிதர்களிடம் கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. பொதுவாக சிருஷ்டி என்பது வானம், பூமி, மலைகள் போன்ற தேவனின் படைப்புகளையும், உயிருள்ள ஆனால் பகுத்தறிவற்ற மரம், செடி, கொடிகள், விலங்குகள், பறவைகள் மற்றும் ஊர்வனவற்றைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். சிருஷ்டி என்ற வார்த்தையில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட சாத்தானும், அவனுடைய தூதர்களும் சேர்க்கப்படமுடியாது. ஏனென்றால் அவர்கள் இந்த வசனத்தின்படி தேவபுத்திரர் யார் என்பதை அறிந்துகொள்ள ஆர்வத்தோடு காணப்படமாட்டார்கள். சொல்லப்போனால் தேவபுத்திரர் என்று யாருமே வெளிப்படக்கூடாது என்பதுதான் அவர்களுடைய விருப்பம். வேதத்தில் பல இடங்களில் உயிரற்ற இயற்கை சிருஷ்டிப்புகளும், உயிருள்ள ஆனால் சிந்திக்கமுடியாத படைப்புகளும் ஒரு மனிதனைப்போல் செயல்படுவதாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கலாம். உதாரணமாக பூமி தன் வாயைத் திறக்கிறது (ஆதி 4:11). ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாக கெம்பீரித்துப் பாடுகின்றன (சங் 98:7,8). வானமும் பூமியும் கர்த்தருக்குச் செவிகொடுக்கிறது (ஏசாயா 1:2). இன்னும் சங் 19:1-4; 77:16; 96:11-13, 97:4,5; 114:3-6. ஏசாயா 11:6-9; 24:4-7; 55:12. எரே 12:4 வாசித்துப்பாருங்கள்.

தேவனுடைய புத்திரர் என்பது, புத்திர சுவிகாரத்தையுடைய தேவனுடைய பிள்ளைகள் என்ற குமாரத்துவத்தைக் குறிப்பிடுகிறது. 17-வது வசனத்தில் இவர்கள் தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரரும் என்று அழைக்கப்பட்டதைப் பார்த்தோம். ஆனாலும் இந்த குமாரத்துவம் வெளிப்படையாக தெரிவதில்லை. விசுவாசக் கண்களினால்தான் அதை இப்போது காண்கிறோம். "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட

மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ 3:4) என்ற வசனத்தின்படி, தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காக சர்வ சிருஷ்டியும் (பிசாசுகள் தவிர) ஆவலோடு காத்துக்கொண்டிருக்கின்றன. அவருடைய வருகையின்போது தேவனுடைய புத்திரர் யார் என்பதை எல்லாக் கண்களும் காணும்.

அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே (ரோமர் 8:20)

தேவன் சர்வ சிருஷ்டியையும் உருவாக்கியபோது எல்லாமே நல்லது என்றுதான் கண்டார் என்பதை பல வசனங்கள் அறிவிக்கின்றன (ஆதி 1:10,12,18,21,25) "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது" (ஆதி 1:31) என்று வாசிக்கிறோம். ஆனாலும் அவை எல்லாமே பாவத்தின் விளைவினால் உண்டான அழிவுக்குரிய அடிமைத்தனத்தினால் பயனற்றவைகளாகவும், ஆபத்தானவைகளாகவும் மாற்றம் அடைந்துள்ளன. ஆதாமின் பாவத்தினிமித்தம் வெளிப்பட்ட தேவசாபத்தின் மூலமாகவே இந்த அழிவு ஏற்பட்டது.

ஆதாமிடம் தேவன் சொல்கிறார் "பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும்; நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய். அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும்" (ஆதி 3:17,18). ஆதாமை தேவன் சபித்ததாகச் சொல்லப்படவில்லை. அவன் தண்டிக்கப்பட்டான். அதினிமித்தம் பூமி பெற்றுக்கொண்ட சாபத்தில் இயற்கையும் சகல மிருக ஜீவன்களும் பங்குகொள்கின்றன. இதன் விளைவாக தேசம் புலம்புகிறது. எல்லா வெளியின் புல்லும் வாடுகிறது, மிருகங்களும், பறவைகளும் அழிகின்றன (எரே 12:4). திராட்சரசம் துக்கங்கொண்டாடுகிறது, திராட்சச்செடி வதங்குகிறது (ஏசாயா 24:7) பூமி தன்னிடத்தைவிட்டு நீங்குகிறது (ஏசாயா 13:13) வானத்தின் சர்வசேனையும் கரைகிறது. வானங்கள் புஸ்தகச்சுருளைப்போல் சுருட்டப்படுகிறது (ஏசாயா 34:4). யோவேல் 1:10-20 அறிவிக்கும் மிகப்பெரிய அழிவை வாசித்துப்பாருங்கள். இவ்வாறு தேவனால் சபிக்கப்பட்ட பூமியில் இரட்சிக்கப்பட்ட தேவஜனங்களும் வாசம் செய்கிறார்கள் என்பதால் அவர்களும் பல நாசமோசங்களையும், பாடுகளையும் சந்திக்கவேண்டியதிருக்கிறது.

இந்த அழிவுக்குரிய அடிமைத்தனம் நிரந்தரமானது அல்ல என்ற

நற்செய்தி இந்த வசனத்தில் காணப்படுகிறது. தேவனுடைய பிள்ளைகள் தங்களுடைய மகிமையான சுயாதீனத்தைப் பெறும் நாள் சமீபமாயிருக்கிறது. அப்பொழுது சர்வசிருஷ்டிகளின் வேதனையான அனுபவங்களும் மாற்றப்படும் என்பது உறுதி. தேவனுடைய பிள்ளைகளாக இவர்கள் எப்போது வெளிப்படுவார்கள்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போது. பவுல் சொல்கிறார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்" (1 கொரி 1:7). "மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை" (1 தெச 1:10) எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்களே என்கிறார் பவுல். ஆயிரவருட அரசாட்சியின்போது சாபமும் அடிமைத்தனமும் பூமியில் இராது.

அந்தச் சிருஷ்டியானது சுயஇஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது. (ரோமர் 8:21)

முழுசிருஷ்டியும் இன்று வேதனையால் புலம்பிக் கொண்டிருக்கிறது. அது பிரசவ வேதனைக்கு ஒப்பானதாயிருப்பதாக அடுத்த வசனம் அறிவிக்கிறது. மனிதனுடைய பாவம் எவ்வளவு பெரிய அலங்கோலத்தை பூமியில் உருவாக்கிவிட்டது என்பதைக் கவனியுங்கள். ஆதாம், ஏவாள் மூலமாக சாத்தான் உலகில் பாவத்தைக் கொண்டுவந்து சர்வ சிருஷ்டியையும் மாயைக்குள் (கிரேக்க பதம் mataioteti) பிரவேசிக்கும்படியாகச் செய்துவிட்டான். அவை சிருஷ்டிக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றமுடியாமல் வீணாக அழிந்துகொண்டிருக்கின்றன.

ஆனாலும் இந்த அழிவு சிருஷ்டியின் சுயஇஷ்டத்தினால் நடந்துவிட்ட ஒரு காரியம் அல்ல. இந்த மாயைக்கு இந்த சிருஷ்டியை காரணமாகச் சொல்லமுடியாது. கீழ்ப்படுத்தினவரே இதற்கு காரணகர்த்தாவாக விளங்குகிறார். பூமியெங்கும் முள்ளையும் குருக்கையும் முளைக்கப்பண்ணியது யார்? பிதாவாகிய தேவனே. அவர் பூமியைச் சபிப்பதற்கு முன் ஏதேன் தோட்டத்திலிருந்த மரங்களிலிருந்து ஒரு இலைகூட வாடி கீழே விழுந்திருக்காது. அங்கிருந்த மிருக ஜீவன்களில் ஒன்றுகூட மரணத்தைச் சந்தித்திருக்காது. எனவே 'கீழ்ப்படுத்தினவர்' என்ற வார்த்தை பிதாவையே குறிப்பிடுகிறது.

'சிருஷ்டி' என்ற வார்த்தை விழுந்துபோன லூசிபரையும் அவனுடைய தூதர்களையும் குறிப்பிடாது என்று 19-வது வசனத்தில்

பார்த்தோம். இந்த வசனத்திலிருந்து அது தேவனுடைய பரிசுத்தமான தேவதூதர்களையும் குறிப்பிடாது என்று கண்டுகொள்கிறோம். ஏனென்றால் காபிரியேலும், மிகாவேலும் மற்றும் தேவனுடைய தூதர்களும் மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்க மாட்டார்கள். மனிதனின் பாவத்தின் நிமித்தமாகவே தேவன் பூமியை சபித்து (ஆதி 3:17; 5:29) உலகத்தை மாயைக்கு ஒப்புக்கொடுத்தார். "மாயை, மாயை, எல்லாம் மாயை" (பிர 1:2) என்று பிரசங்கி புலம்புவதைக் கவனியுங்கள். பூமியையும், சிருஷ்டியையும் மாயைக்குக் கீழ்ப்படுத்தக்கூடிய வல்லமையும் அதிகாரமும் தேவன் ஒருவருக்கே உண்டு. நித்தியத்துக்கடுத்த சகல காரியங்களையும் அவர் ஒருவரே நிர்ணயம் பண்ணுகிறார்.

ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது. (ரோமர் 8:22)

தான் அறிவிக்கவிருக்கும் சத்தியம் என்ன என்பதை தன்னுடைய வாசகர்கள் ஏற்கனவே அறிந்திருக்கிறார்கள் என்று பவுல் நம்புகிறார். அதனால்தான் "நமக்குத் தெரிந்திருக்கிறபடி" என்று வசனத்தின் துவக்கத்தில் பேசுகிறார். எல்லாரும் அறிந்திருக்கும் ஒரு சத்தியத்தை அறிவித்துவிட்டு அதின் தொடர்ச்சியாக புதிய சத்தியங்களை வெளிப்படுத்தும் பாணியை பவுலின் எல்லா நிருபங்களிலும் காண்கிறோம்.

சர்வ சிருஷ்டியும் பிரசவ வேதனைக்குள் இருப்பதாக அவர் சொல்கிறார். மனிதனுடைய பாவம் சகல சிருஷ்டிகளுக்கும் சுமக்கமுடியாத பாரமாக அமைகிறது. அதினிமித்தம் அவை வேதனை அடைகின்றன. பிரசவ வேதனை என்பது தாங்கமுடியாத சரீர பெலவீனத்தையும், மனச்சோர்வையும், பயத்தையும், வருத்தத்தையும் குறிப்பிடுகிறது. ஆனாலும் இந்த வேதனைகளின் மத்தியில் அதை அனுபவிக்கும் ஒரு பெண் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைச் செல்வத்தைக் குறித்த நம்பிக்கையினால் ஆறுதல் அடைகிறாள். சர்வ சிருஷ்டியும் இன்று வேதனைப்பட்டுக்கொண்டிருந்தாலும், கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்குப்பின் புதியவானம் புதிய பூமி உருவாகும்போது அடிமைத்தனத்தின் சகல வேதனைகளும் நீங்கும் என்ற நிச்சயத்தோடு இருக்கின்றன என்கிறார் பவுல். பேதுரு சொல்கிறார்: "அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" (2 பேதுரு 3:13). நீதி வாசமாயிருக்கும் இடத்தில் சாபம் வாசமாயிருப்பதில்லை.

சர்வ சிருஷ்டிகளும் வேதனையோடும் தவிப்போடும்

காணப்படுவதற்கான காரணம் முந்தின இரண்டு வசனங்களில் சுருக்கமாக அறிவிக்கப்பட்டதைப் பார்த்தோம்.

1) அழிவுக்குரிய பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பதினால் உண்டாகும் வேதனை (வசனம் 20),

2) தேவபிள்ளைகள் மகிமையான சுயாதீனத்தை இன்னும் பெறவில்லையே என்ற வேதனை (வசனம் 20),

3) சிருஷ்டிகள் மாயைக்குக் கீழ்ப்பட்டிருந்ததினால் உண்டாகும் வேதனை (வசனம் 21)

"இதுவரைக்கும்" என்று பவுல் குறிப்பிடும்போது தான் தன்னுடைய ரோமர் நிருபத்தை எழுதிக்கொண்டிருக்கும் காலம் வரைக்கும் என்று பவுல் சொல்லுதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. இந்த நிருபத்தை பல நூற்றாண்டுகள் கழித்தும் விசுவாசிகள் வாசிப்பார்கள் என்பது மட்டுமல்ல, அதை தியானிப்பார்கள் என்பதையும் பவுல் அறிந்தவராக, அந்தக் காலம்வரைக்கும் சர்வ சிருஷ்டியும் வேதனைப்படுவதாகவே எழுதியிருக்கிறார் என்று பொருள் கொள்ளவேண்டும். தேவனாலேயே அவை மாயைக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. சிருஷ்டிகள் எவ்வாறு வேதனைப்படும் என்று ஆச்சரியப்பட வேண்டியதில்லை. "கல்லு சுவரிலிருந்து கூப்பிடும், உத்திரம் மச்சிலிருந்து சாட்சியிடும்" என்று ஆபகூக் 2:11ல் வாசிக்கிறோம். மனிதனுடைய துன்பத்திலும் இன்பத்திலும் சர்வ சிருஷ்டியும் பங்குகொள்வதுபோல் பல வேதவசனங்கள் பேசுகின்றன.

20-வது வசனத்தில் பார்த்தபடி, தேவனுடைய பிள்ளைகள் விடுதலையும் மகிமையும் பெற்று வெளிப்படும் நாள் சமீபத்தில் இருக்கிறது. அப்பொழுது பிரசவ வேதனை முற்றிலுமாக நீங்கிப்போகும். வானங்கள் மகிழும், சமுத்திரம் முழங்கும், நாடும் அதிலுள்ள யாவும் களிகூரும், காட்டு விருட்சங்கள் கெம்பீரிக்கும் (சங் 96:11,12). ஆறுகள் கைகொட்டும், பர்வதங்கள் கெம்பீரித்துப்பாடும் (சங் 98:8). வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழும். கடுவெளி களித்து, புஷ்பத்தைப்போல் செழிக்கும் (ஏசாயா 35:1). பர்வதங்களும் மலைகளும் கெம்பீரமாக முழங்கும். வெளியின் மரங்களெல்லாம் கைகொட்டும் (ஏசாயா 55:12) இப்படிப்பட்ட பல உருவகங்களை வேதபுஸ்தகத்தில் நாம் காண்கிறோம்.

அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம்

வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம். (ரோமர் 8:23)

மனிதனுடைய பாவத்தினிமித்தம் உலகமெங்கும், சர்வ சிருஷ்டியும் ஏகமாகத் தவித்துக்கொண்டு, தங்களுடைய விடுதலையின் நாளை வாஞ்சையோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்பதை அறிவித்த பவுல், இந்த தவிப்பு இரட்சிப்பின் அனுபவத்தைப்பெற்று, தேவனுடைய வாக்குறுதியினுடைய முதல் பாகம் போல ஆவியின் முதல் பலனைப்பெற்ற விசுவாசிகளாகிய நம்மிடமும் காணப்படுகிறது என்கிறார் பவுல். ஆவியின் முதற்பலனாக இருப்பது உண்மையிலேயே ஒரு விலையேறப்பெற்ற ஆசீர்வாதம்தான். ஆனால் இதிலும் மேலான ஆசீர்வாதங்களை தேவன் நமக்கென்று ஆயத்தப்படுத்தியிருக்கிறார். நாம் தேவனுடைய புத்திரர்கள்தான். அவருடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாக இருக்கிறோம் என்பது உண்மைதான் (வசனம் 17). ஆனாலும், சரீரமீட்பாகிய இரட்சிப்பு இன்னும் நமக்கு அருளப்படவில்லை என்பதே அந்த தவிப்புக்குக் காரணம்.

நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படி விளைச்சலின் முதற்பலன் தேவனுக்குரியது. "உன் நிலத்தின் முதல் விளைச்சல்களில் முதற்கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவாயாக" (யாத் 23:19). "தேசத்தில் முதற்பழுத்த பலன்" (எண் 18:13) கர்த்தருடையது. லேவியராகமம் 23:10, உபாகமம் 26:1-3 வாசித்துப்பாருங்கள். நாம் இரட்சிக்கப்படும்போது நம்முடைய தகப்பன் பல கிருபை வரங்களையும், பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் கனிகளையும் நமக்குத் தருகிறார். இவை மேன்மையானவைதான் என்றாலும் இவைகளிலும் மேலதிகமான கிருபைகளை நமக்காக நம் பரம தகப்பன் ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

இந்த ஆவியின் முதற்பலன்கள் (கிரேக்க பதம் aparché) ஆவிக்குரியது என்பதினால் இரட்சிக்கப்படும்போது நமக்குள் வாசமாயிருக்கும்படியாக நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவரைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். "அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" (2 கொரி 1:22) "**அவர் (பிதா) ஆவியென்றும் அச்சாரத்தை நமக்குத் தந்தவரும் அவரே**" (2 கொரி 5:5) "அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்" (எபே 1:14).

ஆவியானவரை நாம் பெற்றிருந்தும், அவர் நம்முடைய சரீரத்தில் குடிகொண்டிருந்தும், சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரத்தை நாம் பெற்றுக்கொள்ளவில்லை என்பதே நம்முடைய தவிப்புக்குக் காரணம். சரீர மீட்பு என்பது மரித்தோரிலிருந்து மகிமையின் சரீரத்தோடு எழும்புவதைக் குறிப்பிடுகிறது. இதைக்குறித்து 2 கொரி 4:7 முதல் 5:10 வரை பவுல் பேசுகிறார். இந்த மாம்ச சரீரத்தில் நாம் பரலோகத்துக்குள் பிரவேசிக்க முடியாது. ஏனென்றால் அது இன்னும் மீட்கப்படவில்லை. அதில் பாவம் வாசமாயிருப்பதினால் பலவிதமான பெலவீனங்கள் காணப்படுகின்றன. "மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாக" (எபே 4:30) மட்டுமே ஆவியானவர் நமக்குள் இருக்கிறார். ஆனாலும் நாள் ஒன்று வரும், இந்த சரீரம் "அழிவுள்ளதாய் விதைக்கப்படும்., அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்" (1 கொரி 15:42-44). சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் அப்போதுதான் நடக்கிறது.

இந்த சரீர மீட்பு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையின்போதுதான் நடக்கும் என்பதினால் அதற்காக நாம் காத்திருக்கவேண்டியதிருக்கிறது. நாம் ஏற்கனவே தேவனுடைய பிள்ளைகளாகிவிட்டாலும் அதைக்குறித்த வெளிப்படையான அங்கீகாரத்தை அவருடைய வருகையின்போதுதான் பெறுகிறோம். பவுல் சொல்கிறார்: "நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்" (1 கொரி 1:7). 1 கொரிந்தியர் 15:52-54 சொல்கிறபடி "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது (சரீரம்) அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்".

இந்த சரீர மீட்பாகிய இரட்சிப்புக்காகவே இன்று கிறிஸ்தவர்களாகிய நாம் காத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய இரட்சிப்பு அடியிற்கண்டபடி மூன்றுகாலக்கட்டங்களில் நடைபெறுகிறது.

கடந்தகால நிகழ்ச்சி

நம்முடைய ஆவியில் இரட்சிக்கப்பட்டுவிட்டோம்.

நிகழ்கால நிகழ்ச்சி

நம்முடைய ஆத்துமாவில் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

எதிர்கால நிகழ்ச்சி

நம்முடைய சரீரத்தில் இரட்சிக்கப்படும்படியாகக் காத்திருக்கிறோம்.

நம்முடைய மகிமையின் சரீரத்தோடு கிறிஸ்து நமக்காக ஆயத்தம் பண்ணிய ஸ்தலத்துக்குள் பிரவேசிக்கும்போதுதான் இரட்சிப்பு நிறைவடைகிறது. அதனால்தான் பவுல் "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப் 2:12) என்கிறார். "நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் நீதியின் கிரீடத்தை நமக்கு தந்தருளவேண்டுமென்று அந்த நாளுக்காக காத்திருக்கிறோம்" (2 தீமோ 4:8). "நாங்களோ நீதி கிடைக்குமென்று ஆவியைக்கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம்" (கலா 5:5).

நாம் தியானித்த இந்த வேத பகுதியில் (18-23) ஆழமான உபதேசத்துக்கடுத்த சத்தியங்கள் சொல்லப்படவில்லை என்றாலும் பவுல் அறிவிக்கும் காரியம் விளங்குவதற்கு கடினமாக காணப்படுகிறது, சுருக்கமாகச் சொல்வதானால்:

1) தேவனுடைய புத்திரர் யார் என்பதை சர்வ சிருஷ்டியும் அறிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறது. (வசனம் 19)

2) தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மேன்மையை நிச்சயமாக பெறுவார்கள் என்ற நம்பிக்கை அவற்றுக்கு உண்டு. (வசனம் 20)

3) தேவபுத்திரர் வெளிப்படும்வரை சர்வ சிருஷ்டிகளையும் ஒரு விதமான மாயைக்குள்ளாக தேவனே அடைத்துவைத்திருக்கிறார். (வசனம் 21)

4) இதன் விளைவாகவே சர்வசிருஷ்டியும் பிரசவ வேதனைப்படுகிறது. (வசனம் 22)

5) ஆவியானவரைப் பெற்று, இரட்சிப்பின் நிச்சயத்தை உடையவர்களும், தங்கள் சரீர மீட்புக்காக வேதனையோடு ஆனால் நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். (வசனம் 23)

கிறிஸ்தவர்களின் மேலான நம்பிக்கை (வசனம் 24-27)

அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம், காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல: ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? (ரோமர் 8:24)

சர்வ சிருஷ்டிக்கும் ஒரு நம்பிக்கை உண்டு என்று முந்தின வேதபகுதியில் பார்த்தோம். தேவனுடைய பிள்ளைகளெல்லாரும் தேவன் அவர்களுக்கென்று நியமித்த விடுதலையையும், மகிமையையும், சுயாதீனத்தையும் பெற்றுக்கொள்வார்கள் என்பதே அந்த நம்பிக்கை. வானமும் பூமியும், அவற்றிலுள்ள பர்வதங்கள், கடல், மிருகஜீவன்களும், பறவையினங்களும் அந்த நம்பிக்கையோடு காத்திருக்கின்றன. தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட மகிமையின் சரீரத்தோடு நிச்சயமாக வெளிப்படுவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எல்லாருக்குமே உண்டு. அவர்கள் வெளிப்படும்போதுதான் மாயைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கும் சிருஷ்டிகள் விடுதலை பெறுவார்கள். அப்போது என்ன நடக்கும் என்பதை ஏசாயா 11:6-9 யோவேல் 2:21-26 வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

"அந்த நம்பிக்கையினாலேயே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" என்று சொல்லும்போது, புத்திரசுவிகாரத்தினால் உண்டாகும் சரீர மீட்பைக்குறித்த நம்பிக்கையைக் குறித்து பவுல் பேசுகிறார். "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப் 3:21) என்ற நம்பிக்கையினாலே நாம் இரட்சிப்பைக் குறித்த நிச்சயமுடையவர்களாக இருக்கிறோம்.

இந்த வசனத்தின் அடிப்படையில் மனிதனுடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையே காரணமாக அமைகிறது என்று எடுத்துக் கொள்ளக்கூடாது. எபேசியர் 2:8 சொல்கிறபடி "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு". இரட்சிப்பின் அடித்தளம் கிருபையே. விசுவாசத்தின் மூலமாக தேவ கிருபையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறோம் என்றாலும் (ரோமர் 5:1) விசுவாசமும் தேவன் அருளும் ஈவாகவே இருக்கிறது. **விசுவாசத்தினால் நாம் பெற்றுக்கொண்ட தேவ கிருபையை நம்முடைய நம்பிக்கை பூர்த்தி செய்கிறது, முழுமையாக்குகிறது. அதன் விளைவாக நம் சரீரம் மறுரூபமாகிறது.** நம்மில் நற்கிரியைகளைச் செய்யத்துவங்கிய இயேசு அதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார் என்பது மட்டுமல்ல, கிறிஸ்து மீண்டும் வரும்வேளையில் தன் வேலையைப் பூரணப்படுத்தி செய்துமுடிப்பார்

என்பதே கிறிஸ்தவர்களுடைய பிரதானமான நம்பிக்கை (பிலிப் 1:5).

இரட்சிப்பின் மூன்று பகுதிகளாவன:

1) **கிருபையினால் இரட்சிக்கப்பட்டோம்:** இது மனிதனில் இரட்சிப்பைத் துவங்கிவைக்கும் தேவனுடைய செயல்பாடு.

2) **விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்:** தேவனுடைய கிரியை தொடர்கிறது.

3) **நம்பிக்கையினாலே இரட்சிக்கப்படுவோம்:** தேவனுடைய இரட்சிப்பின் கிரியை நிறைவடைகிறது.

பவுல் சொல்வதைப்போல்: "நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்" (பிலிப் 3:20). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இரட்சிப்பின் கிரியையை துவக்கிவைத்த அதே இயேசுகிறிஸ்து மீண்டும் வந்து எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, இரட்சிப்பின் கிரியையை செய்துமுடிப்பார்.

இந்த நம்பிக்கை கிறிஸ்தவர்களாகிய நமக்கு மட்டுமே உண்டு. இது எவ்வளவு பெரிய சிலாக்கியம் என்பதை யோசித்துப்பாருங்கள். நடந்து முடிந்த ஒரு காரியத்தையோ, நம் கண்களுக்கு முன்பாக நடந்துகொண்டிருக்கிற ஒரு காரியத்தையோ நாம் நம்பவேண்டியதில்லை. கிருபை துவங்கிவைத்த இரட்சிப்பை விசுவாசத்தினாலே ஏற்கனவே நாம் பெற்றுக்கொண்டாயிற்று. இனி நடக்கவிருப்பது புத்திர சுவிகாரத்தினால் உண்டாகும் சரீரமீட்பு. இது இன்னும் நடைபெறவில்லை என்பதினால் நம்பவேண்டியதிருக்கிறது. விசுவாசம் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்த ஒரு காரியத்தை நம்பிக்கை எதிர்நோக்குகிறது. வாக்கு கொடுத்தவர் தேவன் என்பதே விசுவாசத்தின் ஆதாரம். என்ன வாக்கு கொடுக்கப்பட்டது என்பதே நம்பிக்கையின் ஆதாரம். நம்முடைய நம்பிக்கை நம் விசுவாசத்தை ஊக்குவித்து, நிலைநிறுத்தி, போஷிக்கிறது என்கிறார் கால்வின். அப்போஸ்தலனாகிய பவுல் எப்போதுமே விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வித்தியாசப்படுத்தியே பேசுவதைப் பார்க்கமுடியும். (ரோமர் 5:1-5, 1 கொரி 13:13, கொலோ 1:5-7).

நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம். (ரோமர் 8:25)

நாம் இதுவரை பெற்றுக்கொள்ளாததைப் பெறவேண்டுமானால், அதைப் பெறுவதற்குப் பொறுமையோடு காத்திருப்பது அவசியமாகிறது. நம்முடைய விசுவாசத்தின் அடிப்படையில் நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட ஒரு காரியத்தை பெற்றுக்கொள்வோமென்று நம்புகிறோம். தேவனோடு இடைபட விரும்பும் ஒரு மனிதன் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அவரோடு உறவுகொள்ளவேண்டும். காணாததை, அதாவது நாம் இதுவரை பெற்று அனுபவித்திராத, ஒரு காரியத்துக்காக காத்திருக்க நமக்கு பொறுமையும் வேண்டும், நம்பிக்கையும் வேண்டும். 2 கொரி 4:18 சொல்கிறது: "காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்". "அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" (எபி 6:19).

எரேமியா 17:7 சொல்கிறது: "கர்த்தர்மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்". இவ்வாறு நம்பிக்கையோடு காத்திருக்க நமக்கு பொறுமை தேவைப்படுகிறது என்கிறார் பவுல். 23-வது வசனத்தின்படி சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரத்துக்காக காத்துக்கொண்டிருப்பவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கத்துடன் பொறுமையைப்பற்றி பவுல் பேசுகிறார். அவர்கள் நம்பிக்கொண்டிருக்கும் காரியத்தைப் பெறுவது நிச்சயம், ஏனென்றால் தேவனுடைய வார்த்தை அதை உறுதிப்படுத்துகிறது. "ஆபிரகாம் பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" (எபி 6:15) என்று வாசிக்கிறோம். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபி 10:36). "பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (யாக் 5:11) என்கிறார் யாக்கோபு. பிர 7:8, வெளி 1:9; 2:2; 14:12 வாசித்துப்பாருங்கள்.

எப்போதெல்லாம் நம்முடைய வாழ்க்கையில் பொறுமை தேவைப்படுகிறது தெரியுமா?

1) நாம் எதிர்பார்க்கும் நன்மைகளைப் பெற முடியாதபோது

2) அவற்றை அடைவதில் வீண் காலதாமதம் ஆகும்போது

3) அவற்றைப் பெறுவதில் புதிய தடைகள் உருவாகும்போது

"பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்" (யாக் 5:7) என்று வாசிக்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாமும் அந்த பொறுமையைக் கற்றுக்கொள்வோம்.

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (ரோமர் 8:26)

கிறிஸ்தவர்களாகிய நாம் காணாததை நம்புகிறவர்களாக இருப்பதினால் நமக்கு அதிகமான பொறுமை தேவைப்படுகிறது என்பதைப் பார்த்தோம். ஆனால் போதுமான பொறுமை நம்மில் இருப்பதில்லை. இதனையே நம்முடைய முக்கியமான பலவீனமாக பவுல் இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். **பொறுமையை இழந்த நாம் எரிச்சலின் ஆவியை உடையவர்களாக மாறிவிடுகிறோம்.** மோசே வழிநடத்திச் சென்ற இஸ்ரவேலர்களுக்கும் கிறிஸ்தவர்களாகிய நமக்கும் அதிக வித்தியாசம் இல்லாமற்போகிறது. பொறுமையிழந்த நிலையில் நம்மால் ஜெபிக்கமுடியாமல் போய்விடுகிறது. அப்போது நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆரம்பிக்கிறார். அவர் நமக்காக தேவனிடம் வேண்டுதல் செய்ய துவங்கிவிடுகிறார் என்கிறார் பவுல். அவருடைய வேண்டுதல்களை வார்த்தைகளால் விளக்கிச் சொல்லவே முடியாது என்கிறார். நாம் ஆவிக்குரிய முதற்பலன்களைப் பெற்றுக்கொண்ட நாள் துவங்கி, சரீர மீட்பு உண்டாகும் வருகையின்நாள் வரையிலும் ஆவியானவரின் இந்த கிரியை நடந்துகொண்டே இருக்கிறது. "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" (2 கொரி 12:10) என்ற வசனத்தின்படி திருத்துவத்தின் மூன்றாவது நபரே நமக்குள் இருந்து வேண்டுதல் செய்வதினால் நம்முடைய சகல பலவீனங்களின் மத்தியிலும் சரீரமீட்பாகிய புத்திரசுவிகாரத்தைப் பெறுவது நிச்சயம். "பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (2 கொரி 12:9) என்கிறார் தேவன்.

ஆவியானவர் நம்முடைய (பலவீனத்தில் என்று சொல்லாமல்) பலவீனங்களில் உதவி செய்வதாக பவுல் சொல்வதால், ஒன்றுக்கு மேற்பட்ட பலவீனங்கள் நம்மில் காணப்படுகிறது என்று பார்க்கிறோம். **நமக்கு நாமே**

உதவி செய்யமுடியாமல் இருப்பதுதான் நம்முடைய மிகப்பெரிய பலவீனம். "நம்முடைய பலவீனங்களில்" என்று சொல்லி, பவுல் தன்னையும் வாசகர்களுடன் சேர்த்துக்கொள்கிறார். பலவீனம் என்ற வார்த்தை சரீர பலவீனத்தை மட்டும் குறிப்பிடாமல் (1 தீமோ 5:23) ஆத்துமாவுக்கடுத்த பலவீனங்களையும் குறிப்பிடுகிறது (மத் 8:17, எபி 4:15, 2 கொரி 9:16). பலவீனங்களை ஆவியானவர் நீக்கிப்போடுகிறார் என்றும் வசனம் அறிவிக்கவில்லை. உதவி செய்கிறார் என்று மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. உதவி செய்வதை அறிவிக்கும் 'synantilamba metai' என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இந்த இடத்திலும், லூக்கா 10:40-ம் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "நிலைநிறுத்துகிறார்" என்பதாகும்.

16வது வசனத்தில் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதைக்குறித்த சாட்சியை ஆவியானவர் கொடுக்கிறார் என்பதைப் பார்த்தோம். இன்னொரு உதவியையும் அவர் செய்கிறார். எப்படி ஜெபிப்பது என்பதை நாம் தெரிந்துகொள்ளாமல் இருப்பதினால் நமக்கு அவருடைய உதவி தேவைப்படுகிறது. **ஏற்றபடி வேண்டிக்கொள்வது என்பது எளிதான ஒரு காரியம் அல்ல.** அப்போஸ்தலனாகிய பவுல் தனக்கும் ஏற்றபடி ஜெபம்பண்ணத் தெரியவில்லை என்கிறார். நமக்கு ஜெபம் பண்ணத் தெரியவில்லை என்றால் அதற்கு நான்கு காரணங்களைச் சொல்லலாம்.

1) நமக்கு எது நன்மை பயக்கும் என்பதை நாம் அறிந்து கொள்வதில்லை (பிர 6:12)

2) தேவன் நமக்கு என்ன செய்ய சித்தமாயிருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது (மத் 6:10)

3) தேவன் நம்மில் எவ்வாறு, எப்போது செயல்படவிருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளும் பொறுமை நம்மில் இல்லை (ரோமர் 8:24)

4) பெரிய பிரச்சனைகளில் எவ்வாறு தேவன் செயல்படக்கூடும் என்கிற அவநம்பிக்கை நம்மில் காணப்படுகிறது (ஓசியா 7:14).

"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக் 4:3) என்கிறார் யாக்கோபு. "தேவன் என்னை நொறுக்கச் சித்தமாய், தம்முடைய கையை நீட்டி என்னைத் துண்டித்துப் போட்டால்

நலமாயிருக்கும்" என்பது பரிசுத்தவானாகிய யோபு ஜெபித்த தகாத விண்ணப்பம். "என் பிராணனை என்னைவிட்டு எடுத்துக்கொள்ளும்" (யோனா 4:3) என்பது யோனாவின் தகாத விண்ணப்பம். செபெதேயுவின் குமாரருடைய தாயிடம் கிறிஸ்து "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை" (மத் 20:22) என்று சொல்வதைக் கவனியுங்கள். அப்போஸ்தலனாகிய பவுலே தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளாமல் மூன்று முறை தன் மாம்சத்திலிருந்த முள் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்று ஜெபம் பண்ணுகிறார் (2 கொரி 12:7-9).

பலவேளைகளில் நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளாத நிலையில் எப்படி ஜெபிப்பது, எதற்காக ஜெபிப்பது என்பதை புரிந்துகொள்ளாமல் இருக்கிறோம் என்பது உண்மைதான். அதற்கான காரணம் ஏசாயா 55:8,9ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும் நமக்குள் ஆவியானவர் வாசமாயிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவர் நம்முடைய தேவைகளையும் அறிந்திருக்கிறார். அவற்றைக் குறித்த தேவனுடைய சித்தத்தையும் அறிந்திருக்கிறார். **நமக்குப் பதிலாக பரிசுத்த ஆவியானவர் ஜெபிப்பார் என்றும் முடிவு செய்துவிடக்கூடாது. நம்முடைய பெலவீனமான, குறைகள் நிறைந்த ஜெபத்தை தேவன் ஏற்குமளவு அவர் சீர்செய்கிறார் என்பதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும்.**

நாம் பெருமூச்சோடும், அழுகையோடும் ஜெபம் பண்ணுவதை வேதம் தடை பண்ணுவதில்லை. இஸ்ரவேல் புத்திரரின் பெருமூச்சின் சத்தத்தை தேவன் கேட்டார் (யாத் 4:5). எளியவர்களின் பெருமூச்சின் நிமித்தம் தேவன் செயல்பட்டார் (சங் 12:5; 102:19, எசே 9:4). நமுட்டைப்போலும், தகைவிலான் குருவியைப்போலும், புறாவைப்போலும் கூவி புலம்பின எசேக்கியா ராஜாவின் ஜெபம் உடனடியாக கேட்கப்பட்டது (ஏசாயா 38:14). பெருமூச்சின் பாஷையை தேவன் அறிவார். கெத்செமனே தோட்டத்தில் இயேசு துக்கத்தோடும், வியாகுலத்தோடும் ஜெபித்தார் (மத் 26:37). பலத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் ஜெபித்தார் (எபி 4:7). அன்னாளுடைய இருதயத்தின் சத்தமில்லாத பேச்சையும் தேவன் கவனித்துக்கேட்டார் (1 சாமு 1:13). தாவீது சொல்கிறார் : "என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது. என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை" (சங் 38:9)

திருத்துவத்தின் மூன்றாவது நபராகிய பரிசுத்த ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்வாரா என்ற கேள்வி எழும்புகிறது. அவருடைய வேண்டுதல்களை வார்த்தைகளினால் விளக்கிச் சொல்லமுடியாது என்பதையே இந்த வசனம் குறிப்பிடுவதாக

எடுத்துக்கொள்ளவேண்டும். அந்நிய பாஷைகளில் ஜெபம் ஏறெடுக்கப்படுவதாக பொருள் கொள்ளவேண்டியதில்லை (அப் 2:4, 1 கொரி 12:10,11). எபிரெயர் 5:7ல் "கிறிஸ்து மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம் பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டதாக" வாசிக்கிறோம். இவ்வாறு அவர் ஜெபிக்கும்போது மனிதகுமாரனாக மாம்சத்தில் இருந்தார். இன்று தேவகுமாரனாக அவர் பிதாவின் வலதுபாரிசத்தில் இருந்து நமக்காக பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் (எபி 7:25, ரோமர் 8:34, 1 யோவான் 2:1). எனவே ஆவியானவர் நமக்குள் இருந்துகொண்டு, நம்மில் சீரர மீட்பாகிய புத்திரசுவிகாரம் பூரணமாக நிறைவேறும்படி தொடர்ந்து கிரியை நடத்திக்கொண்டிருக்கிறார் என்பதையே இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:27)

பிதாவாகிய தேவன் தன்னுடைய பிள்ளைகள் உலகில் இருக்கும் நாட்களில் அவர்களை வழிநடத்தவும், அவர்களுக்குத் தேவையான போதனைகளை வழங்கவும், துணை நிற்கவும் பரிசுத்த ஆவியானவரைத் தந்தருளினார். அந்த ஆவியானவரால்தான் நாம் தேவனுடைய குடும்பத்தாராக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். ஆவியானவரால்தான் கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறோம். நம்முடைய சரீரம் அவர் தங்கும் ஆலயமாயிருக்கிறது. அவர் மூலமாகவே மீட்கப்படும் நாளுக்கென்று நாம் முத்திரிக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த வசனத்தில் ஆவியானவரின் இன்னொரு செயல்பாடு அறிவிக்கப்படுகிறது. அவர் பரிசுத்தவான்களுக்காக ஜெபிக்கும்போது அது தேவனுடைய சித்தத்தின்படி மட்டுமே இருக்கும் என்பதை நம்பலாம். பிதாவாகிய தேவன் எல்லாருடைய இருதயங்களையும் ஆராய்ந்து பார்க்கிறவர். ஆவியானவரும் பிதாவும் ஒருவராக இருப்பதினால் ஆவியானவரின் சிந்தையை அவர் அறிந்தவராக இருக்கிறார். விசுவாசிகளின் தேவைகளைக் குறித்த பாரம் அவருடைய சிந்தையில் இருப்பதைக் கண்டுகொண்ட பிதா அந்த ஜெபத்துக்குப் பதில் தருவது நிச்சயம்.

தேவன் இருதயங்களை ஆராய்ந்து பார்ப்பதன் நோக்கம் அதில்

குறைகண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கும்படியாக அல்ல. நம்மை நேசிக்கிறபடியாலும், நம் உள்ளான தேவைகளைக் கண்டுகொள்ளும்படியாகவும் அவர் அப்படிச் செய்கிறார்.

இந்த அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியானவரின் எட்டு வித்தியாசமான செயல்பாடுகளைக் குறித்து பேசுவதைப் பார்க்கிறோம்.

1. பாவம் மரணம் என்கிற பிரமாணத்திலிருந்து விடுதலை தருகிறார். (வசனம் 2)
2. பாவ மாம்சத்திலிருந்து வெற்றி தருகிறார். (வசனம் 2-4)
3. நம்முடைய சரீரத்தில் வாசமாயிருக்கிறார். (வசனம் 9-14)
4. சாவுக்கேதுவான சரீரத்தை உயிர்ப்பிக்கிறார். (வசனம் 11)
5. நம்முடைய புத்திர சுவிகாரத்தைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். (வசனம் 15,16)
6. நம்மை சீரானபாதையில் நடத்துகிறார். (வசனம் 14)
7. நம்முடைய பலவீனங்களில் உதவி செய்கிறார். (வசனம் 26)
8. நமக்காக பெருமூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார். (வசனம் 26)

நமக்குள் வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர், நம்மைக் குறித்த தேவனுடைய சித்தத்தை அறிந்தவர் என்பது மட்டுமல்ல, பிதாவாகிய தேவன் ஆவியானவரின் சிந்தையை அறிந்தவர். ஏனென்றால் அவர்கள் இரண்டு நபர்களாக இருந்தாலும் ஒரே தேவனாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்வது என்பது கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றிருக்கும் மிகப்பெரிய சிலாக்கியம்.

பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தவான்களுக்காக செய்யும் ஜெபம் நிச்சயமாகவே கேட்கப்படும் என்பதற்கான மூன்று காரணங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

1) ஆவியானவரின் ஜெபம் தேவனுடைய

சித்தத்தின்படியே அமைந்திருக்கும்.

2) தேவன் நம் ஒவ்வொருவருடைய இருதயத்தை ஆராய்வதால், நம்முடைய உண்மையான தேவைகளை அறிந்திருக்கிறார்.

3) ஆவியானவரும் பிதாவாகிய தேவனும் ஒரே சிந்தையை உடையவர்கள்.

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறார்" (1 யோவான் 5:14) என்கிறார் யோவான். பொதுவாக நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளாதபடியால்தான் நம்முடைய ஜெபத்துக்கு பதில் கிடைப்பதில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானவர் தேவனாகவே இருப்பதினால் அவருடைய வேண்டுதல் தேவனுடைய விருப்பத்தின் அடிப்படையிலேயே இருக்கும். தேவ சித்தத்துக்கு விரோதமான காரியம் ஆவியானவரின் சிந்தையில் உருவாகவே முடியாது. நாம் ஜெபிக்கும்போதும் அது தேவனுக்குப் பிரீதியாக அமையவேண்டும் என்பதற்காக அவர் வேண்டுதல் செய்து கொண்டிருப்பதாக இந்த வசனம் அறிவிக்கிறது. "நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து ட்பசுகிறவராயிருக்கிறார்" என்று 1 யோவான் 2:1 அறிவிக்கிறது. இவ்விதமாய் திருத்துவத்தின் இரண்டு நபர்கள் நமக்காக திருத்துவத்தின் முதலாவது நபராகிய பிதாவிடம் வேண்டுதல் செய்கிறார்கள். ஒருவர் பூமியில் இருந்துகொண்டு ஜெபிக்கிறார். அடுத்தவர் பரலோகத்திலிருந்துகொண்டு பரிந்துபேசுகிறார். இந்த ஜெபம் கேட்கப்படாமல் போகுமா?

தேவன் நம் இருதயத்தை, உள்ளான நினைவுகளை ஆராய்வதினால் நம்முடைய உண்மையான தேவைகளை அவர் அறிவார். அவர் "உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர்" (வெளி 2:23). 1 சாமு 16:7, 1 இராஜா 8:39, நீதி 15:11, சங் 7:9; 17:3; 44:21, அப் 1:24; 15:8 வாசித்துப்பாருங்கள். "கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார்" (1 நாளா 28:9). தாவீது சொல்கிறார்: "கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்" (சங் 139:1), "தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும்" (வசனம் 23). "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" (1 கொரி 4:5). "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக

நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" (எபி 4:13). தேவன் சொல்கிறார்: "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும்படிக்கு, இருதயத்தை ஆராய்கிறவரும், உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்" (எரே 17:10).

ஆண்டவராகிய கர்த்தர் நம்முடைய உள்ளிந்திரியங்களை ஆராய்ந்து, சோதித்தறிகிறவர் என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்கு மிகுந்த ஆறுதலைத் தருவதாக இருக்கிறது. தாவீது சொல்கிறார்: "நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்; என் உட்காருதலையும், என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர். என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்; நான் நடந்தாலும் படுத்திருந்தாலும் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்; என் வழிகளெல்லாம் உமக்குத்தெரியும்" (சங் 139:1-3). தேவன் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்பது மாய்மாலக்காரர்களை மிகுந்த குழப்பமடையச் செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை, தேவனை ஏமாற்ற யாராலும் முடியாது.

மூன்றாவதாக ஆவியானவரின் சிந்தையும், தேவனுடைய சிந்தையும் ஒன்றாக இருக்கிறது என்று பார்க்கிறோம். எனவே நம்முடைய சார்பில் பரிசுத்த ஆவியானவர் பரிந்துபேசும் காரியங்கள் எல்லாமே உடனடியாக அங்கீகரிக்கப்படுகின்றன. நம்முடைய அறியாமையினிமித்தம் பலவேளைகளில் தேவசமுகத்தில் எதைக்கேட்பது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் இருக்கிறோம். தனக்கென்று தன் தகப்பன் ஆயத்தம்பண்ணியிருக்கும் மேலான ஆசீர்வாதங்களை உணர்ந்து கொள்ளாதவனாய் "உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்" (லூக்கா 15:19) என்று விண்ணப்பிக்கும் தீர்மானத்தோடுதான் இளையகுமாரன் வருகிறான். ஆனால் அவனுடைய தகப்பனோ, அவனை ஜெபம் பண்ணவே அனுமதிக்கவில்லை. அதற்கு அவனுக்கு தருணமே கொடுக்கவில்லை.

நன்றாக அறிந்துகொள்ளுங்கள், **திருத்துவத்தின் மூன்றாவது நபரும் தேவனுடைய ஆவியானவருமாகிய பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருந்து, நமக்காக தொடர்ந்து வேண்டுதல் செய்து கொண்டே இருக்கிறார்.** அவர் ஒருபோதும் நம்மை கைவிடப்போவதில்லை. அவர் என்றென்றைக்கும் நமக்குள் இருக்கும்படியாக கிறிஸ்துவின் வேண்டுதலின் அடிப்படையில் வந்திருக்கிறார் (யோவான் 14:16). ஒரு நிமிடம்கூட அவர் நம்மைவிட்டு விலகுவதில்லை. **இதன் விளைவாகவே நம்முடைய வாழ்க்கையில் சகலமும் ஆசீர்வாதமாக நடக்கிறது.** இந்த நிச்சயத்தைக்

குறித்தே பவுல் அடுத்த மூன்று வசனங்களில் பேசவிருக்கிறார்.

அழைக்கப்பட்டவர்கள் மகிமைப்படுத்தப்படுகிறார்கள் (வசனம் 28-30)

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)

புதிய ஏற்பாட்டில் இந்த வேதபகுதியே (வசனம் 28-30) மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆனாலும் இதில் சொல்லப்படும் சத்தியத்தை பிரசங்க மேடைகளில் அறிவிப்பதற்கு ஊழியர்கள் மத்தியில் தயக்கம் காணப்படுகிறது. தேவ தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும் என்பதையும், அவர்கள் அதைத் தொடர்ந்து நீதிமானாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்படும் வரை இரட்சிப்பில் நிலைத்திருப்பார்கள் என்ற சத்தியத்தை வேதம் வெளிப்படையாக அறிவிப்பதினால், தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறதோ அதை நாம் தைரியமாகச் சொல்லலாம்.

ரோமர் 8-வது அதிகாரத்தில் இதுவரை நாம் தியானித்த முதல் 27 வசனங்களின் தொகுப்புரையாக இந்த வேதபகுதி அமைகிறது என்பதால், இதை நாம் "அறிந்திருக்கிறோம்" என்று இந்த பகுதியை பவுல் துவங்குகிறார். இந்த வேதபகுதியின் விளக்கவுரையாக எபேசியர் 1:3-12 அமைவதால் அதை ஒருமுறை வாசித்துவிட்டு இந்த மூன்று வசனங்களையும் தியானிப்பது ஆசீர்வாதமாக இருக்கும்.

இந்த வேதபகுதி அறிவிக்கும் மேலான சத்தியங்களை நாம் சந்தேகத்துக்கிடமின்றி அறிந்திருப்பது நல்லது. "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12) என்ற நிச்சயம் பவுலிடம் இருந்தது. "நாம் சத்தியமுள்ளவரை அறிந்துகொள்வதற்குத் தேவனுடைய குமாரன் வந்து நமக்குப் புத்தியைத் தந்திருக்கிறாரென்றும் அறிவோம்" (1 யோவான் 5:20) என்கிறார் யோவான். **கிறிஸ்து யார் என்பதையும் அவர் அறிவிக்கும் சத்தியங்களையும் அறிந்துகொண்டவர்களே வெற்றியுள்ள வாழ்க்கை வாழமுடியும்.**

நம்முடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது

என்றால் அதன் அடிப்படையான காரணங்கள் மூன்று இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1) தேவனுடைய தீர்மானம் (திட்டம்)

2) தேவனுடைய அழைப்பு (தெரிந்தெடுத்தல்)

3) நாம் தேவனில் அன்புகூருதல் (முந்தின இரண்டு காரியங்களின் விளைவு)

முந்தின வேதபகுதியில் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய பலவீனங்களில் உதவிசெய்கிறார் என்றும், நாம் எவ்வாறு வேண்டிக்கொள்வது என்பதை அறியாத வேளைகளிலும், தேவனுடைய சித்தத்தின்படி வேண்டுதல் செய்கிறார் என்றும், அவருடைய வேண்டுதல்களை வார்த்தைகளாய் விளக்கிச்சொல்லமுடியாது என்றும் அதன் விளைவாக அவருடைய ஜெபம் கேட்கப்படுகிறது என்றும் பார்த்தோம். இவைகளுக்குப் பின்னும் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய வாழ்க்கையில் பல குழப்பங்களையும், வேதனைகளையும் சந்திக்கிறோம் என்றால் அதன் காரணம் என்ன என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. இந்த இடர்ப்பாடுகளின் மூலமும் தேவன் தன்னை நேசிக்கும் மக்களுக்கு இன்னும் பெரிதான ஒரு நன்மையைத் தரவிருக்கிறார் என்கிற நிச்சயத்தை பவுல் அறிவிக்கிறார்.

சகலமும் (all things) நன்மைக்கு ஏதுவாக நடப்பதாக பவுல் அறிவிக்கிறார். ஒன்றிரண்டு காரியங்கள் நன்மைக்கு ஏதுவல்லாமல், அதாவது தீமைக்கேதுவாக அவ்வப்போது நடக்கலாம் என்று பவுல் சொல்லவில்லை. சகலமும் என்று சொல்லும்போது நம்முடைய அனுதின வாழ்க்கையில் நாம் கடந்துபோகும் சரீரப்பிரகாரமான, பொருளாதாரரீதியான, ஆவிக்குரிய நிலைகளிலான எல்லா காரியங்களையும் பவுல் உள்ளடக்கிப் பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள். **கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் சந்திக்கும் உபத்திரவங்கள் எதுவானாலும் சரி, எப்படிப்பட்டவைகளானாலும் சரி, அவை எங்கே இருந்து வருகிறதானாலும் சரி, எத்தனையாக இருந்தாலும் சரி - எல்லாமே முடிவில் நமக்கு நன்மையாக மாறியே ஆகவேண்டும்.** ஏனென்றால் வேதம் அப்படித்தான் சொல்கிறது. தேவனுடைய வார்த்தையில் தவறு இருக்கமுடியாது.

இந்த உலகத்தில் உள்ள மனிதர்கள், அதிகாரிகள் மட்டுமல்ல, உலகத்தின் இயற்கைச் சூழ்நிலைகள், இயற்கையின் சீற்றத்தினால் உண்டாகும் பேரழிவுகள், அரசியல் மாற்றங்கள், பொருளாதார குழப்பங்கள், சுனாமிகள் - இவை ஒரு பரிசுத்தவானுக்கு விரோதமாக குறிவைத்து

தாக்கமுயற்சிக்கலாம். அந்த பரிசுத்தவானில் காணப்படும் குறைபாடுகள், பெலவீனங்கள், மாம்சீக விருப்பு வெறுப்புகள் அவனைப் பாரப்படுத்திக் கொண்டிருக்கலாம். எல்லாவற்றுக்கும் மேலாக சாத்தான், யோபுவைப் புடமிட்டதுபோல் முகமுகமாக ஒரு பரிசுத்தவானுக்கு எதிராக யுத்தம் செய்யலாம். ஒன்றுக்கும் அவன் பயப்படத் தேவையில்லை.

சர்வ வல்லமையுள்ள தேவன் இந்த உலகத்தை ஆளுகை செய்கிறார் என்பது உண்மையானால், அவர் யாருக்காக தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி மரித்தாரோ, அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவானதாகத்தான் இருக்கும். ஏனென்றால் தேவதூதர்களானாலும் சரி, அசுத்த ஆவிகளானாலும் சரி, இயற்கை சூழ்நிலைகளானாலும் சரி, அவருக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். அசுத்த ஆவிகள் பன்றிகளுக்குள் பிரவேசிக்கக்கூட அவரிடம் அனுமதி கேட்கின்றன (மத் 8:28-32). தேவன் சொல்லியிருக்கிறார், "நான் அவர்களுக்காகக் காட்டு மிருகங்களோடும், ஆகாயத்துப்பறவைகளோடும், பூமியிலே ஊரும் பிராணிகளோடும், ஒரு உடன்படிக்கை பண்ணி, வில்லையும் பட்டயத்தையும் யுத்தத்தையும் தேசத்திலே இராதபடிக்கு முறித்து, அவர்களைச் சுகமாகப் படுத்துக் கொண்டிருக்கப்பண்ணுவேன்" (ஓசியா 2:18). மிருகஜீவன்களும் அவருக்குக் கீழ்ப்படிகின்றன.

சகலமும் நன்மையாக நடக்கிறது என்று பவுல் சொல்லவில்லை. நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்றுதான் பவுல் அறிவிக்கிறார். **நன்மையற்ற, சொல்லப்போனால் தீமையான காரியங்கள் கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் நடக்கலாம். ஆனால் அவை நன்மையாக மாற்றப்படும்** என்பதே இந்த வசனத்தின் அடிப்படையில் நம்முடைய எதிர்பார்ப்பாக இருக்கவேண்டும். அப்படித்தான் தேவனுடைய வார்த்தை சொல்கிறது. ஏனென்றால் **நம்முடைய வாழ்க்கையில் சம்பவிக்கும் ஒவ்வொரு காரியமும் தேவனால் ஏற்கனவே திட்டமிடப்பட்டவை.** நம் தாயின் வயிற்றில் நாம் உருவாகுமுன்பே தீர்மானிக்கப்பட்டவை. அவர் அனுமதிக்காத எந்தவொரு சிறிய காரியமும் நம்மில் நடப்பதில்லை, நடக்கப் போவதுமில்லை. நம் பரமபிதா ஆகாயத்துப் பட்சிகளுக்குப் பிழைப்பூட்டுகிறவர். காட்டுப் புஷ்பங்களைப் போஷிக்கிறவர். அவற்றுக்காக அவர் இரத்தம் சிந்தவில்லை. நமக்கு மீட்பை உண்டாக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர் மரித்தார். எனவே அவற்றைப் பார்க்கிலும் நாம் எவ்வளவோ விசேஷித்தவர்கள் (மத் 6:26-28). அவருடைய உத்தரவின்றி நம்முடைய தலைமயிரைக்கூட யாராலும் சேதப்படுத்தமுடியாது (மத் 10:30).

சகலமும் நன்மைக்கு ஏதுவாக இருக்கிறது என்ற நிச்சயத்தினால்

சங்கீதக்காரன் சொல்லுகிறார்: "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்" (சங் 119:71). பவுலும் சீலாவும் பிலிப்பி பட்டணத்தில் சிறையில் அடைக்கப்பட்டு உபத்திரவப்படுத்தப்பட்டார்கள். சிறைச்சாலைக்காரனின் குடும்பத்தாருக்கு அங்கே இரட்சிப்பு வெளிப்பட்டது (அப் 16:24-34).

"சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது" என்று பவுல் சொல்வதால், கிறிஸ்தவர்கள் செய்யும் பாவங்கள் (1 யோவான் 1:10) நன்மைக்கு ஏதுவானவைகளா என்ற கேள்வி எழும்புகிறது. பாவம் தேவனுக்கு விரோதமான பகை என்பதையும், தேவன் அதை அருவருத்து பாவம் செய்த கிறிஸ்தவர்களை சிட்சிக்கிறார் என்பதையும் அறிவோம். நிச்சயமாக ஒருவனையும் பாவம் நன்மைக்கு ஏதுவாக நடத்தமுடியாது என்றாலும், பாவத்தினால் உண்டாகும் விளைவுகள் விஷயத்தில் அவற்றை நன்மைக்கு ஏதுவாக மாற்ற தேவன் வல்லவராயிருக்கிறார். **சவுல், தாவீது இருவருமே பாவம் செய்தார்கள். சவுல் செய்த பாவத்தின் விளைவாக அவனுடைய துணிகரமும், கீழ்ப்படியாமையும் அதிகரித்துக்கொண்டே போகிறது. தாவீது செய்த பாவமோ அவர் தேவனைக் கிட்டிச்சேர வழிவகுத்தது.** தன்னுடைய பெலனற்ற தன்மையை தாவீது உணர்ந்து தேவசமுகத்தில் தன்னைத்தாழ்த்த, மீறுதல்களை அறிக்கையிட, நிலைவரமான ஆவியைப் பெற்றுக்கொள்ள உதவி செய்தது. அவருடைய நொறுங்கிப்போன, இருதயத்தில் இருந்து வெளிப்பட்ட சங்கீதம் 51 இன்றும் எத்தனையோ பேருக்கு ஆறுதலாக இருக்கிறது. யோசேப்பின் சகோதரர்கள் பாவம் செய்தார்கள். அதன் விளைவாகவே பஞ்சநாட்களில் அவர்களுக்கு எகிப்தில் புகலிடம் கிடைத்தது. நகோமியின் மகன் மோவாபியரில் பெண்கொண்டது பாவம். ஆனால் அதன் விளைவாகவே ருத் மெய்தேவனை அறிந்துகொண்டாள்.

பாவம் செய்த ஆயக்காரன் தேவாலயத்துக்கு வந்து, அவற்றை அறிக்கையிட்டு, அதன் விளைவாக நீதிமானாக்கப்பட்டவனாய்த் திரும்பிப்போகிறான். ஆனால் தான் செய்த நற்கிரியைகளை பட்டியலிட்டுக்கொண்டு வந்து, அவைகளை பெருமையோடு அறிக்கையிட்ட பரிசேயனின் நிலைதான் பரிதாபத்துக்குரியதாய் இருந்தது (லூக்கா 18:9-13). கிறிஸ்துவை விருந்துக்கு அழைத்த பரிசேயன் தன்னை நீதிமானாக கருதியவனாய், பரிமளத்தைலம் கொண்டுவந்து கிறிஸ்துவின் பாதங்களை தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து முத்தம் செய்த பெண்ணை பாவி என்று நியாயந்தீர்க்கிறான். ஆனால் கிறிஸ்துவோ "இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது" (லூக்கா 7:47) என்கிறார்.

கிறிஸ்தவர்கள் செய்யும் பாவங்களை நன்மைக்கு ஏதுவாக தேவன் மாற்றுவார் என்றாலும் பாவம் தேவனுக்கு விரோதமான பகை என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவைகளினிமித்தம் அவர்கள் உலகத்தில் சிட்சிக்கப்படுகிறார்கள். வேதம் என்ன சொல்கிறது? "தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபி 12:7). இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும் பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத்தரும்" (வசனம் 10,11). பாவத்தின் விளைவாக நாம் பெறும் சிட்சையும் நம்மில் நீதியை உருவாக்குகிறது.

எபேசியர் 2:10 சொல்கிறது: "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்". எனவே கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாகத்தான் நடக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

சகலமும் நமக்கு நன்மைக்கு ஏதுவாய் நடப்பதற்கு இரண்டு நிபந்தனைகள் இந்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1) நாம் அவருடைய தீர்மானத்தின்படி (according to His purpose) அழைக்கப்படவேண்டும்.

2) நாம் அவரில் அன்பு கூரவேண்டும்.

தேவனில் அன்பு கூருபவன் யார்? தேவன் தன்மேல் முந்தி அன்புகூர்ந்தார் என்பதையும், அதினிமித்தம் தன் குமாரனை பாடுமரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார் என்பதையும், குமாரன் கல்வாரியில் இலவசமாக நீதியை வழங்கி தன்னை இரட்சித்தார் என்பதையும் அறிந்து உணர்ந்தவனால்தான் தேவனில் அன்புகூர முடியும். அவனையே தேவன் தன்னுடைய தீர்மானத்தின்படி அழைக்கிறார். அவனுக்கே சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது.

தேவனுடைய தீர்மானம்

நம்முடைய தகுதியின் அடிப்படையிலோ, அல்லது நாம் நடப்பித்த நற்கிரியைகளின் அடிப்படையிலோ நாம் அழைக்கப்படுவதில்லை என்பதை பவுல் திட்டவட்டமாக அறிவிக்க விரும்புகிறார் என்று தெரிகிறது.

நம்முடைய சொந்த தீர்மானத்தின் அடிப்படையிலும் நாம் அழைக்கப்படுவதில்லை. தீர்மானம் என்றால் போதுமான ஆலோசனையின் அடிப்படையில், நன்றாக யோசனை பண்ணி ஒரு மனிதன் எடுக்கும் ஒரு முடிவு. சுவிசேஷக் கூட்டங்களில் ஊழியர்கள் கூடிவந்திருக்கிறவர்களை தேவனுக்கென்று தீர்மானம் எடுக்கும்படியாக உற்சாகப்படுத்துவதைப் பார்க்கலாம், அது நல்லதுதான். ஆனால் மனிதன் எடுக்கும் எந்த தீர்மானமும் நிலைத்து நிற்பதில்லை. **நாம் எடுக்கும் தீர்மானமல்ல, தேவனுடைய தீர்மானமே நம்மில் இரட்சிப்பைத் துவங்கிவைக்கிறது. இறுதிவரை நிலைத்து நிற்கச் செய்கிறது.**

2 தீமோத்தேயு 1:9ல் பவுல் சொல்கிறார்: "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்துஇயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்". எபேசியர் 1:12ல் சொல்கிறார்: "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப்பட்டோம்". இன்று நாம் தேவனுடைய சுதந்தரராயிருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் நித்தியத்தில் நம்மைக் குறித்து தேவன் செய்துகொண்ட தீர்மானம்.

அந்த தீர்மானம் எவராலும் மாற்றப்படக்கூடாதது. யாரிடமும் ஆலோசனை செய்து தேவன் அந்த தீர்மானத்தைச் செய்துகொள்ளவில்லை. அந்த தீர்மானத்தின் அடிப்படையில் சகலகாரியங்களும் சரிசெய்து கொள்ளப்படும். தீர்மானம் என்பதற்குப் பயன்படுத்தப்படும் prothesis என்ற கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் 12 இடங்களில் பயன்படுத்தப்படுகிறது.

நாம் இன்று அழைக்கப்பட்டிருக்கிறோம் என்றால் அதன் பின்னணியில் செயல்படுவது தேவனுடைய தீர்மானம், இது நம்மைக்குறித்த தேவனுடைய நேரடியான சித்தம். ஏசாயா 48:11ல் தேவன் சொல்கிறார்: "என்னிமித்தம், என்னிமித்தமே, அப்படிச் செய்வேன்". "விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோமர் 9:16). "கர்த்தர் நினைத்தவைகள் நிலைக்கும்" (எரே 51:29). தேவன் தன்னுடைய சித்தத்தை நிறைவேற்றும்போது நம்மிடம் ஆலோசனை கேட்பதில்லை. ஆதாமிடம் கேட்டு அவனுடைய சம்மதத்தின் அடிப்படையில் தேவன் ஏவாளை சிருஷ்டிக்கவில்லை.

நாம் தேவனுடைய தீர்மானத்தின் அடிப்படையில் மட்டுமே அழைக்கப்படுகிறோம் என்பதினால், அதைக்குறித்த சில உண்மைகளை

மனதில் வைத்துக்கொள்வோம்.

1) தேவனுடைய தீர்மானத்தில் மனிதனுக்கு எந்த பங்கும் இல்லை

2) ஏனென்றால் தேவனுடைய தீர்மானம் நித்தியமானது (2 தீமோ 1:9)

3) தேவனுடைய தீர்மானம் மனிதனுடைய தகுதியை அல்லது கிரியையை அடிப்படையாகக் கொண்டது அல்ல (2 தீமோ 1:9)

4) தேவனுடைய தீர்மானம் அவருடைய தெரிந்து கொள்ளுதலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது (ரோமர் 9:11)

5) தேவனுடைய தீர்மானம் கிறிஸ்துவுக்குள் மறைந்துள்ளது (எபே 3:11)

6) தேவனுடைய தீர்மானம் மட்டுமே நித்தியம்வரை நிலைத்திருக்கக்கூடியது (ரோமர் 9:11).

ஒரு மனிதனின் இரட்சிப்பைக்குறித்த தேவனுடைய தீர்மானம் நித்தியத்தில், உலகத்தோற்றத்துக்கு முன்பே முடிவெடுக்கப்பட்ட ஒரு காரியம் என்றாலும், அதைக்குறித்த அழைப்பை அவன் தன்னுடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட வேளையில் பெற்றுக்கொள்கிறான். இந்த அழைப்பும், சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும்படியாக ஊழியர்களால் விடுவிக்கப்படும் அழைப்பும் ஒன்றுதான் என்று முடிவு செய்துவிடக்கூடாது. "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்ற ஆணையின்படி நாம் எல்லாரையும் இரட்சிப்புக்குள் வரும்படியாக அழைக்கிறோம் என்றாலும், அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கக்கூடும்.

ஆனால் தேவனுடைய நித்தியதீர்மானத்தின் அடிப்படையில் அழைக்கப்படுபவர்கள் அதற்குக் கீழ்ப்படிவார்கள். அந்த அழைப்பில் நிலைத்திருப்பார்கள். ஏனென்றால் 1 கொரிந்தியர் 1:24 சொல்லுகிறபடி, "யூதரானாலும், கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்". அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளும் பெலனையும் ஞானத்தையும் கிறிஸ்துவே வழங்குகிறார். இந்த மேன்மையான அழைப்பை அவர்கள் தங்கள் காதுகளின் மூலமாகப் பெற்றுக்கொள்வதில்லை. ஒரு மனிதனுடைய உள்ளான இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும்

விளங்கிக்கொள்ளமுடியாத செயலாற்றலின் மூலமாக இந்த அழைப்பு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இப்படிப்பட்டவர்களே ஜலத்தினாலும், (தேவனுடைய வார்த்தை), ஆவியினாலும் (பரிசுத்த ஆவியானவராலும்) பிறக்கிறவர்கள் ஆகிறார்கள் (யோவான் 3:5). தேவனுடைய அழைப்பைக்குறித்து 30-வது வசனத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அதை தியானிக்கும்போது அதைக்குறித்து கூடுதலாக அறிந்துகொள்வோம்.

தேவனுடைய தீர்மானத்தின்படி, தேவனுடைய அழைப்பைப் பெற்றுக்கொண்டவர்கள் செய்கிற காரியம் என்ன என்பதை உடனடியாக பவுல் அறிவிக்கிறார். அவர்கள் தேவனிடத்தில் அன்பு கூருவார்கள். உலகத்து மனிதர்கள் எல்லாருமே தாங்கள் தேவனை நேசிப்பதாகச் சொல்வார்கள். ஆனால் உண்மையான அன்பு அவர்களிடமிருந்து வெளிப்படுவதில்லை. அது சுயநலம் நிறைந்ததாக இருக்கும். அவருடைய அழைப்பைப் பெற்ற மெய்கிறிஸ்தவர்களால் மட்டுமே அவரை உண்மையாக நேசிக்கமுடியும். அவர்களால் மட்டுமே அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள முடியும் (யோவான் 4:23). நாம் முழுமனதோடு நம்பும் ஒருவரைத்தான் நம்மால் நேசிக்கமுடியும். தேவனோடு ஒப்புரவான ஒரு மனிதனால்தான் தேவனை நம்பமுடியும். அப்படிப்பட்டவனால்தான் அவர்மேல் அன்பு செலுத்தமுடியும். 1 யோவான் 4:16 இவ்வாறு சொல்லுகிறது, "தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்". இந்த அன்பு எவ்வாறு உருவாகிறது. வசனம் 19ல் யோவான் சொல்கிறார்: "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்". இவர்களுக்கு மட்டுமே சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. (யாத் 20:6; உபா 7:9; நெகே 1:5; சங் 37:37-40, 116:1; ஏசாயா 56:6,7; 1 கொரி 2:9, 8:13 வாசித்துப்பாருங்கள்)

தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்கள் அவருடைய வார்த்தையை நேசிப்பார்கள். தேவனுடைய வீட்டை நேசிப்பார்கள். தேவனுடைய பிரமாணங்களை நேசிப்பார்கள். (1 யோவான் 5:3). தேவனுடைய பிள்ளைகளை நேசிப்பார்கள் (1 யோவான் 3:17). "வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்" (1 யோவான் 3:18) என்கிறார் யோவான். கிரியையில் வெளிப்படாத அன்பு போலியானது.

தேவனிடத்தில் எவ்வாறு அன்பு கூரவேண்டும் என்பதையும் வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது. "நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்

உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும் அன்புகூருவாயாக" (உபா 6:5). சங்கீதம் 31:23 சொல்லுகிறது: "கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்". உபாகமம் 10:12, சங் 18:1; 42:1, 73:25; 84:2, 116:1 எபி 6:10, யூதா 21 வாசித்துப்பாருங்கள். அவரில் அன்புகூர நாம் எல்லாருமே கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் அவரிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதற்கு அடிப்படையான பத்து காரணங்கள் இந்த அதிகாரத்தின் பல்வேறு வசனங்களில் இதுவரை சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

1) இவர்கள் மாம்சத்தின்படி நடக்காமல் ஆவியைப் பின்பற்றி வாழ்கிறவர்கள் (வசனம் 4)

2) இவர்களுடைய சிந்தனை ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது (வசனம் 6)

3) இவர்களுக்குள் தேவனுடைய ஆவியானவர் வாசமாயிருக்கிறார் (வசனம் 11)

4) இவர்களுடைய மாம்சம் அவர்களை ஆளுவதில்லை (வசனம் 12)

5) இவர்கள் தேவனுடைய ஆவியால் நடத்தப்படுகிறார்கள் (வசனம் 14)

6) இவர்களை தேவனுடைய பிள்ளைகளாக உருவாக்கும் ஆவி இவர்களில் இருக்கிறார் (வசனம் 15)

7) இவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் அவருடைய சுதந்தரராகிறார்கள் (வசனம் 17)

8) இவர்கள் கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்ற முறையில் அவருடைய மகிமையை உடையவர்கள் (வசனம் 17)

9) இவர்கள் ஆவியின் முதற்பலன் என்ற ஆசீர்வாதத்தைப் பெற்றவர்கள் (வசனம் 23)

10) இவர்களுக்காக ஆவியானவர் தேவனிடம் வேண்டுதல் செய்துகொண்டே இருக்கிறார் (வசனம் 26).

இனி வரும் வசனங்களிலும் தேவனுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அழைக்கப்பட்டு அவரில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடப்பதற்கான காரணங்கள் சொல்லப்படுவதை தியானிக்கப்போகிறோம்.

11) தேவன் இவர்களை உலகத்தோற்றத்துக்கு முன்பே அறிந்திருக்கிறார். (வசனம் 29)

12) இவர்கள் தன்னுடைய குமாரனைப்போல் இருக்கவேண்டும் என்று தேவன் முடிவு செய்திருக்கிறார். (வசனம் 29)

13) தேவன் இவர்களை தன் தீர்மானத்தின்படி தெரிந்தெடுத்திருக்கிறார். (வசனம் 30)

14) தேவன் இவர்களை நீதிமான்களாக்கியிருக்கிறார் (வசனம் 30)

15) தேவன் இவர்களை மகிமைப்படுத்தியிருக்கிறார் (வசனம் 30)

16) தேவன் இவர்கள் பட்சத்திலிருக்கிறார் (வசனம் 31)

17) இவர்கள் மீட்புக்காக தன் குமாரனையே தேவன் ஒப்புக்கொடுத்திருக்கிறார் (வசனம் 32)

18) இவர்களுக்கு எதிராக யாரும் குற்றஞ் சாட்ட முடியாதபடி செய்திருக்கிறார் (வசனம் 33)

19) இதன்விளைவாக இவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இருக்கப்போவதில்லை (வசனம் 34)

20) தேவனுடைய அன்பைவிட்டு இவர்களை எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது (வசனம் 36)

21) இவர்கள் முற்றும் முடிய ஜெயம் கொள்கிறவர்கள் (வசனம் 37).

தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப்படாதவர்களாய் அவரிடத்தில் அன்பு கூராதவர்களுக்கு சகலமும் தீமைக்கேதுவாகத்தான் நடக்கும் என்பதையும் அறிந்துகொள்ளுங்கள். "இதெல்லாம் எனக்கு விரோதமாய் நேரிடுகிறது" (யாக் 42:36) என்று புலம்புவதைத்தவிர இவர்களுக்கு வேறு வழியே இல்லை.

தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே

முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார் *(ரோமர் 8:29)*

ஒரு கிறிஸ்தவனைப் பொறுத்தவரை தேவன் செய்யும் மூன்று முக்கியமான செயல்பாடுகளை முந்தின வசனத்தில் பார்த்தோம்.

1) தன்னுடைய தீர்மானத்தின்படி அழைக்கிறார்

2) அவர்களைத் தன்னில் அன்புகூர வைக்கிறார்

3) அவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடப்பிக்கிறார்.

தேவன் நடப்பிக்கும் இந்த காரியங்களின் நோக்கம் என்ன என்பது இந்த வசனத்தில் அறிவிக்கப்படுகிறது.

1) அவர்களை தன்னுடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக்கும்படியாக

2) அவர்கள் அத்தனைபேருக்கும் தன்னுடைய குமாரன் மூத்த சகோதரனாக இருக்கும்படியாக

இந்த தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் தேவன் சிலரை முன்னறிகிறார் (foreknowledge) என்பதும், அவர்களை முன்குறிக்கிறார் (predestination) என்பதும் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. இவ்வாறு முன்குறிக்கப்பட்டவர்கள் அழைக்கப்படுகிறார்கள் (called) என்றும், நீதிமானாக்கப்படுகிறார்கள் (justified) என்றும், மகிமைப்படுத்தப் படுகிறார்கள் என்றும் (glorified) தொடர்ச்சியாக அடுத்த வசனத்தில் பவுல் அறிவிக்கிறார். இவை எல்லாமே தேவன் நம்மை அறிந்திருக்கிறார் என்பதையே ஆதாரமாகக் கொண்டவை (1 கொரி 8:3, ஆமோஸ் 3:2, ஓசியா 13:5) என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

தன்னை, தன்னுடைய தீர்மானத்தின்படி நேசிக்கும் அத்தனைபேருக்கும் தேவன் வைத்திருக்கும் இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய, மாறாத, தனியாற்றலுடைய திட்டம் திட்டவட்டமாக பவுலினால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கால்வினுடைய கொள்கையையோ, ஆர்மீனியரின் கொள்கையையோ, லூத்தருடைய விளக்கத்தையோ நாம் இந்த விளக்கவுரையில் தியானிக்கப்போவதில்லை. தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை மட்டும் நாம் அறிந்து அதை ஏற்றுக்கொள்ள தேவன் உதவிசெய்வாராக.

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய முதற்பேறான இயேசு கிறிஸ்துவைப்போலவே இருக்கவேண்டும் என்பது தேவனுடைய திட்டமான முடிவு. அதன் விளைவாக அநேக சகோதரர்களுக்குள் தன்னுடைய குமாரன் முதற்பேறானவராக விளங்கவேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவருடைய விருப்பம் நிறைவேறுமா ஆகாதா என்பது குறித்து நாம் ஆராய்ச்சிபண்ணத் தேவையில்லை. "நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும் என்று சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்னார்" (ஏசாயா 14:24) என்று வாசிக்கிறோம். "சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" (வசனம் 27). இப்படிப்பட்ட பல வசனங்கள் வேதத்தில் உண்டு.

நாம் ஒருபோதும் குமாரனுக்கு ஒப்பாகப்போவதில்லை. கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக்கி, அவரை நம் எல்லாருக்கும் பெரிய சகோதரனாக ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பது நம்முடைய திட்டம் அல்ல. **கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும் திட்டம் மனிதனுடைய கற்பனையில்கூட உருவாகியிருக்கமுடியாது.** இது தேவனுடைய முன்னறிதலையும், முன்குறித்தலையும், தீர்மானத்தையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. சுருக்கமாகச் சொல்வோமானால் **இதுவே தேவனுடைய தெரிந்துகொள்ளுதல்.** எபேசியர் 1:4-6 சொல்கிறபடி: "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களு மாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே, கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார்".

நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் திருப்தி அடைந்துவிடக்கூடாது என்பதை இந்த வசனம் வலியுறுத்துகிறது. **நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாறவேண்டும், அல்லது வளர்ச்சி அடையவேண்டும் என்பதே தேவனுடைய மகா பெரிய திட்டம். இதுதான் நம்மைக்குறித்த தேவனுடைய எதிர்பார்ப்பு.** "ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி 3:18) என்று வாசிக்கிறோம். அவருடைய சாயலை நம்முயற்சியினால் நாம் பெறமுடியாது. ஏனென்றால் "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" (கொலோ 1:15). ஆனாலும் அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறுவோமானால் அதுவே மிகப்பெரிய சாதனையாக இருக்கும். தேவன்

இதை முன்குறித்திருக்கிறபடியால் கிறிஸ்துவின் சாயலைப் பெற நம்மால் முடியும் என்பதை நாம் நிச்சயமாகவே நம்பலாம். ஏனென்றால் துவக்கத்திலேயே தேவன் மனிதனை தமது சாயலாகவும் ரூபத்தின்படியேயும் சிருஷ்டித்தார் என்பதை ஆதி 1:26 உறுதிப்படுத்துகிறது. அதுமட்டுமல்ல பிலிப்பியர் 3:21 சொல்கிறது: "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்".

"முந்தின மனுஷன் பூமியிலிருந்து உண்டான மண்ணானவன் (ஆதாம்); இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். ..... மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்" (1 கொரி 15:47,49) என்கிறார் பவுல். வானவருடைய சாயல் நமக்கு வாக்களிக்கப்பட்டிருக்கிறது. "நாம் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு, தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரராகும்படி தெரிந்துகொள்ளப் பட்டோம்" (எபே 1:11,12) என்பதால், தேவனுடைய குமாரனுடைய சாயலை நாம் நிச்சயமாகவே பெறுவோம்.

கிறிஸ்து, தேவனுடைய சாயலை உடையவர் என்பதை 2 கொரி 4:4, கொலோ 1:15 அறிவிக்கின்றது. அப்படியிருக்கும்போது, கிறிஸ்துவின் சாயல் இன்று நம்மிடம் இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. ஆனால் அதுபற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை. நம் தேவன் "இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர்" (ரோமர் 4:17). ஆவியானவர் நமக்குள் வாசமாயிருந்து நாம் அறிந்துகொள்ளமுடியாத, விளங்கிக்கொள்ளமுடியாத கிரியைகளை நடத்திக்கொண்டே இருக்கிறார். நாம் எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டிருக்கும் "சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம்" (ரோமர் 8:23) நிறைவேறும் நாளில் இதைக் குறித்த நிச்சயம் நம்மில் உண்டாயிருக்கும். யோவான் அழகாகச் சொல்லுகிறார்: "பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2) இதுதான் இன்று நம்முடைய நம்பிக்கை. "அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை

நம்பவேண்டுவதென்ன?" (ரோமர் 8:24) என்று வாசித்தோம்.

கிறிஸ்தவர்களாகிய நம்மை கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருக்கும்படி தேவன் முன்குறித்திருக்கிறார் என்பது நாம் பெறும் மிகப்பெரிய சிலாக்கியம். அவர் யாரை முன்குறித்திருக்கிறார்? யாரை முன்னறிந்திருக்கிறாரோ அவர்களை என்று வசனத்தின் முன்பகுதி அறிவிக்கிறது. முன்னறிதல், முன்குறித்தல் ஆகிய சத்தியங்களைக் குறித்து தியானிப்பதற்குமுன் தன்னுடைய குமாரன் அநேக சகோதரருக்கு முதற்பேறானவராக இருக்கவேண்டும் என்ற தேவனுடைய வாஞ்சையைக் குறித்து அறிந்துகொள்வோம்.

புதிய ஏற்பாட்டில் ஒன்பது இடங்களில் பயன்படுத்தப்படும் "முதற்பேறு" என்ற வார்த்தை ஒருவன் தன் தகப்பனுடைய மூத்தகுமாரனாகப் பிறப்பதினால் சுதந்தரித்துக்கொள்ளும் முதன்மையையும், மேன்மையையும், தகப்பனுடைய சொத்துக்களில் பெறும் கூடுதலான உரிமையையும் அதிகாரத்தையும் குறிப்பிடுகிறது. இந்த சிலாக்கியம் வேதத்தில் "சேஷ்டபுத்திரபாகம்" (எபி 12:16) என்று அழைக்கப்படுகிறது. தன்னுடைய சேஷ்டபுத்திரபாகத்தை ஏசா யாக்கோபுக்கு ஆணையிட்டு விற்றுப்போட்டான் என்று ஆதியாகமம் 25:33ல் வாசிக்கிறோம். நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படியும் ஒரு தகப்பனுடைய சொத்துக்களில் மூத்த மகனுக்கு மற்ற பிள்ளைகளைவிட இரட்டிப்பான பாத்தியதை உண்டு என்று பார்க்கிறோம். மூத்தமகன்தான் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆசாரிய ஊழியத்தைச் செய்யமுடியும். யாக்கோபின் மூத்த குமாரனாகிய ரூபன் செய்த அருவருப்பான பாவத்தினிமித்தமே ஆளுகை அதிகாரம் யூதாவுக்கும், ஆசாரிய ஊழியம் லேவிக்கும் வழங்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவின் முதற்பேறு குறித்து பல வசனங்கள் வேதத்தில் சொல்லப்படுகின்றன. அவர் "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்" (கொலோ 1:15). "அவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ 1:18). "அவர் மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்" (வெளி 1:5). தேவனுடைய பிள்ளைகளும், சுதந்தரரும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமான நாம் கிறிஸ்துவின் இளைய சகோதரர்களாக பரிசுத்தமாக்கப்பட்டு வருகிறோம்.

எபிரெயர் 2:11,12ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்: இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்; உம்முடைய நாமத்தை

என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப்பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ, நானும் தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார்". இந்த வசனம் அறிவிக்கும் காரியம், பரிசுத்தமாக்குபவரும், பரிசுத்தமாக்கப்படுகிறவர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவுக்காரர்கள் என்பதினால் (தேவனுடைய பிள்ளைகள் என்பதினால்) அவர்களை கிறிஸ்து தன் சகோதரர்களாகவும் சகோதரிகளாகவும் அழைக்க எந்த விதத்திலும் வெட்கப்படவில்லை.

"என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்; ..... அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்" என்று ஏசாயா 53:11,12ல் தேவன் அறிவிக்கிறார். **திரளான ஜனங்களை கிறிஸ்துவினிமித்தமும், கிறிஸ்துவின் மூலமாகவும் ஆசீர்வதிப்பதுதான் பிதாவின் நோக்கம். அதற்கும் மேலாக அவர்களை கிறிஸ்துவோடு, கிறிஸ்துவுக்குள் ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார்.** பெரிய சகோதரன் நிமித்தமாக அவருடைய இளைய சகோதரர்களும் தகப்பனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

மனித இரட்சிப்பின் பின்னணியில் இருந்து செய்யப்படும் முன்னறிதல், முன்குறித்தல் என்ற இரண்டு ஆழமான சத்தியங்களை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். முன்குறித்தலைக் குறித்து அடுத்த வசனத்திலும் சொல்லப்படுவதினால் இந்த வசனத்தில் முன்னறிதல் குறித்து மட்டும் சற்று விளக்கமாக அறிந்துகொள்வோம்.

தேவனுடைய முன்னறிவு

'முன்னறிவு' என்பதற்குப் பயன்படுத்தப்படும் proginōskō என்ற கிரேக்க பதம், ஒரு காரியம் நடப்பதற்கு முன்பே தேவன் அதை அறிந்திருக்கிறார் என்பதை மட்டும் குறிப்பிடாமல், முன்னறிகிற ஒருவர், தான் முன்னறியும் நபருடன் கொள்ளவிருக்கும் நெருக்கமான உறவையும் ஐக்கியத்தையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது (ஆமோஸ் 3:2, எபே 1:4-6). தன்னுடையவர்கள் யார் என்பதை மட்டுமல்ல, அவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்களின் குறைகள் என்ன, திறமைகள் என்ன, அவர்களுடைய செயல்பாடுகள் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது போன்ற சகல காரியங்களையும் தேவன் அறிந்திருக்கிறார். அவர்களுடைய வாழ்க்கையில் நடக்கப்போகிற ஒவ்வொரு காரியத்தையும் அவர் அறிந்திருக்கிறார். "உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய

கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது" (அப் 15:18). ஒரு காரியம் நடப்பதற்கு முன்பாகவே அது எவ்வாறு, எப்போது நடக்கும் என்பதை அவர் அறிவார். தேவன் சொல்கிறார்: "அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்" (ஏசாயா 46:10). "பூர்வகாலத்து ஜனங்களை நான் ஸ்தாபித்தது முதற்கொண்டு, என்னைப்போல எதையாகிலும் வரவழைத்து, இன்னின்னதென்று முன்னறிவித்து, எனக்கு முன்னே வரிசையாக நிறுத்தத்தக்கவன் யார்? நிகழ்காரியங்களையும் வருங்காரியங்களையும் தங்களுக்கு அவர்கள் அறிவிக்கட்டும்" (ஏசாயா 44:7). அவருடைய முன்னறிவைக் குறித்து ஆதி 18:19, எரே 1:5, சங் 1:6, ஓசியா 13:5, ஆமோஸ் 3:2, 1 கொரி 8:3, கலா 4:9, 2 தீமோ 2:19 ஆகிய வசனங்கள் பேசுகின்றன.

தேவனுடைய முன்னறிவு அவருடைய தெரிந்துகொள்ளுதலோடு (election) சம்பந்தப்பட்டது என்பதை 1 பேதுரு 1:2 உறுதிப்படுத்துகிறது. "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது" என்று பேதுரு தன் நிருபத்தைத் துவங்கி, **திருத்துவத்தின் மூன்று நபர்களும் இரட்சிப்பின் கிரியையில் செயல்படுவதைக் காட்டுகிறார்.** "தேவன் தான் முன்னறிந்துகொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை" (ரோமர் 11:12) என்கிறார் பவுல். "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்" (ரோமர் 8:33) என்று பவுல் சொல்லும்போது தேவனால் முன்னறிந்துகொள்ளப் பட்டவர்களையே குறிப்பிடுகிறார். நித்திய ஜீவன் நித்தியத்திலேயே அவர்களுக்கென்று ஆயத்தமாக்கப்பட்டுவிட்டது. 2 தெச 2:13, 14 வாசித்துப் பாருங்கள்.

அதுமட்டுமல்ல, தேவனுடைய முன்னறிவு முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட அவருடைய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது. **தேவன் ஒரு காரியத்தை முன்னறிகிறார் என்று சொல்லும்போது, ஏற்கனவே அதைக் குறித்த நிச்சயமான தீர்மானம் அவரிடம் உண்டு என்று எதிர்பார்க்கலாம். அதை அவர் அப்படியே நடப்பிப்பார் என்பதையும் நம்பலாம்.** இது நடக்குமோ நடக்காதோ என்று சந்தேகப்படும் ஒரு காரியத்தைக்குறித்து யாரும் முன்னறிவு உடையவர்களாக இருக்கமுடியாது. சில காரியங்களை நாம் முன்னறிகிறோம் என்பது உண்மைதான் - உதாரணமாக நாளை மழைபெய்யலாம் என்பதை அறியலாம். முன்கூட்டியே அதை அறிந்தாலும் அது நம் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல, ஏனென்றால் அதை நாம்

நடப்பிப்பதில்லை.

தேவன் ஒரு காரியத்தை முன்னறிந்திருக்கிறார் என்றால் அது அந்தப்படியே, எந்த மாற்றமுமின்றி, அவர் குறிப்பிட்ட வேளையில் நடந்தே தீரும். "தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும்" (அப் 2:23) கிறிஸ்துவை தீயவர்களின் உதவியோடு யூதர்கள் சிலுவையில் அறைந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இன்னொரு காரியத்தையும், அறிந்து கொள்ளுங்கள். ஒரு காரியத்தை **தேவன்** முன்னறிகிறார் என்பதால் அது தீர்மானிக்கப்படுவதில்லை. அதை **அவர்** தீர்மானித்ததின் விளைவாகவே அதை முன்னறிகிறார். **அதனால்தான்** முந்தின வசனத்திலேயே பவுல் தேவனுடைய **தீர்மானத்தைக்** குறித்து பேசுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். தேவனுடைய தீர்மானத்தையும் முன்னறிதலையும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது. இவை இரண்டிலும் தீர்மானமே முந்தினது.

தேவன் ஒரு மனிதனில் எதை முன்னறிந்ததின் விளைவாக முன்குறிக்கிறார்? எதின் அடிப்படையில் சிலரை முன்னறிகிறார் என்பதை சரியானபடி மனித ஞானத்தினால் விளங்கிக்கொள்ள முடியாது. அவர்களில் வெளிப்படவிருக்கும் விசுவாசத்தை முன்னறிகிறாரா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஏனென்றால் அவர்களை முன்னறிந்ததின் விளைவாகவே அவர்கள் விசுவாசமுள்ளவர்களாகிறார்கள். அவர்களில் தேவனே விசுவாசத்தை உருவாக்குகிறார் என்பதே உண்மை. **இரட்சிப்பு தேவனில் துவங்கி தேவனில் நிறைவடைகிறது என்பதைப் பார்த்தோம்.** அப்போஸ்தலர் 13:48 திட்டவட்டமாக அறிவிக்கிறது, "நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்". **தன்னால் ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்ட ஒரு மனிதனில், அவன் வாழ்நாட்களில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தான் உருவாக்கவிருக்கும் விசுவாசத்தை அவர் முன்னறிந்திருந்தார் என்று வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாம்.**

ஒரு மனிதன் நடப்பிக்கவிருக்கும் நற்கிரியைகளை தேவன் முன்னறிந்ததின் விளைவாக முன்குறிக்கிறாரா என்றால் அதற்கும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டும். ஏனென்றால் நற்கிரியைகளைச் செய்யும்படியாகவே நாம் தேவனால் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம். "ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே 2:10) தேவனுடைய முன்னறிவே ஒருவனில்

நற்கிரியைகளை உருவாக்குகிறது. அந்த நற்கிரியைகளை நமக்கென்று ஆயத்தம் பண்ணியது தேவனே.

தன்னுடையவர்களை தான் ஒரு குறிப்பிட்ட நாளில் அழைக்கும்போது அதை அவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு முழுமையாகத் தன்னைப்பின்பற்றுவார்களா, மாட்டார்களா என்பதை தேவன் முன்னறிந்ததின் விளைவாக முன்குறிக்கிறாரா என்ற கேள்விக்கும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது. ஏனென்றால் அவருடைய அழைப்பு அவருடைய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டது. "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ 1:9) என்று வாசிக்கிறோம். **இவ்வாறு அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களால் அவரைப் பின்பற்றாமல் இருக்கவே முடியாது.** தம்முடைய ஒரே பேறான குமாரனுடைய சாயலுக்கொப்பாக நாம் உருவாகவேண்டும் என்று தேவன் நம்மை முன்னறிந்திருக்கிறபடியால் நிச்சயமாகவே அவர் அதைக்குறித்து கரிசனையுடைவராக இருப்பார் என்பதை நம்பலாம்.

தேவனுடைய முன்னறிதலைக் குறித்து ஆறு காரியங்கள் வேதத்தில் சொல்லப்படுகின்றன.

1) அது நித்திய நித்தியமாக செயல்படுகிறது (எரே 31:3, எபே 3:11, 1 பேதுரு 1:20)

2) அது மாறாதது, உறுதியானது, தீர்மானிக்கப்பட்டது (ஏசா 46:10, மல் 3:6, ரோமர் 9:11)

3) அது ஒரு மனிதனுடைய தகுதியை அடிப்படையாகக் கொண்டதல்ல (ரோமர் 9:11)

4) அது பரிசுத்த ஆவியானவரால் உண்டாகும் பரிசுத்தமாக்கப்படுதலை உள்ளடக்கியது (2 தெச 2:13)

5) அதனால் உண்டாகும் இரட்சிப்பு எவராலும் மாற்றி அமைக்கப்படக்கூடாதது (அப் 13:48)

6) அதன் மூலமாக தேவன் ஒருவரே மகிமைப்படுகிறார் (எபே 1:3-6).

எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்து மிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கி

யுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார். (ரோமர் 8:30)

தேவனுடைய தனிப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்தான் நாம் அழைக்கப்படுகிறோம் என்பதை பவுல் 28ம் வசனத்தில் அறிவித்ததைப் பார்த்தோம். அவருடைய தீர்மானமே நாம் அவரால் அழைக்கப்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. உலகத் தோற்றத்துக்கு முன்பே நாம் இரட்சிக்கப்படுவதற்காக தெரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம். என்றாலும், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலமாகவே இரட்சிப்பு சாத்தியமாயிற்று.

இரட்சிப்பு என்பது கீழ்கண்ட பத்து காரியங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

1) **தெரிந்துகொள்ளுதல்**
தேவனுடைய முன்னறிவின் அடிப்படையில் இரட்சிப்புக்கென்று வேறுபிரிக்கப்படுவது

2) **அழைப்பு**
இரட்சிப்பின் நற்செய்தி அறிவிக்கப்படுவது

3) **மறுபடியும் பிறத்தல்**
மனிதனுடைய ஆவி பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படுவது

4) **மனமாற்றம்**
விசுவாசமும், மனந்திரும்புதலும்

5) **நீதிமானாக்கப்படுதல்**
மன்னிக்கப்பட்ட பாவிகள் என்றல்ல, நாம் நீதிமான்கள்

6) **குமாரத்துவம்**
தேவனுடைய புத்திரர்களாக ஏற்றுக்கொள்ளப்படுதல்

7) **பரிசுத்தமாக்கப்படுதல்**
இரட்சிக்கப்பட்ட மனிதனில் ஆவியானவரின் அனுதின செயல்பாடு

8) **இரட்சிப்பில் நிலைத்திருத்தல்**
கிறிஸ்துவுக்குள் வைக்கப்படுவதின் விளைவு

9) **சரீர மரணம்**
கிறிஸ்துவோடு ஐக்கியப்படுதல்

10) மகிமைப்படுத்தப்படுதல்
மரித்து, உயிர்த்தெழுந்து மகிமையின் சரீரத்தைப் பெறுதல்

இவை படிப்படியாக எவ்வாறு நம்மில் நடைபெறுகிறது என்ற சத்தியத்தை இந்த வேதபகுதியில் பவுல் அறிவிக்கிறார். தேவன் தன்னுடைய தீர்மானத்தின் அடிப்படையில் நம்மை முன்னறிந்திருக்கிறார் என்பதைக் குறித்து முந்தின வசனத்தில் விளக்கமாகப் பார்த்தோம். அவருடைய முன்னறிவின் விளைவாக நம்மில் நடைபெறும் காரியங்களாவன :

முன்குறித்தல் (Predestination)

அழைக்கப்படுதல் (Call)

நீதிமான்களாக்கப்படுதல் (Justification)

மகிமைப்படுத்தப்படுதல் (Glorification)

தேவனுடைய முன்குறித்தல்

தேவனுடைய முன்னறிவைக் குறித்த சத்தியங்களை முந்தின வசனத்திலேயே தியானித்திருக்கிறோம். இஸ்ரவேலரிடம் தேவன் சொல்கிறார்: "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" (ஆமோஸ் 3:2). தேவன் சிலரை முன்னறிந்ததின் விளைவாக அவர்களை முன்குறித்திருப்பதாக முந்தின வசனம் அறிவிக்கிறது. ஏனென்றால் தேவனுடைய முன்னறிவு அவர் எதை அல்லது யாரை முன்னறிந்தாரோ அதைக்குறித்த ஒரு திட்டவட்டமான ஆணையோடு (decree) மட்டுமே நிறைவேறமுடியும். அதை அவர் செயல்படுத்தியே ஆகவேண்டும். ஏன் என்றால் அவர் மனிதன் அல்ல, சர்வ வல்லமையுள்ள தேவன். ரோமர் 11:2 சொல்லுகிறது: "தேவன் தாம் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை". இஸ்ரவேலரை தான் தள்ளுவது இல்லை என்பதே தேவனுடைய ஆணை. "உலகத்தோற்றமுதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது" (அப் 15:18). **தன்னால் முன்னறிந்துகொள்ளப்பட்டவர்களின் பெலன் என்ன, பெலவீனம் என்ன என்பதை அறிந்த தேவன், அவர்களை தன்னுடைய மாறாத, மாற்றப்படக்கூடாத தீர்மானத்துக்குட்படுத்திவிடுகிறார். இதுவே முன்குறித்தல் என்று அழைக்கப்படுகிறது.**

முன்னறிதலில் தேவன் சிலரை இரட்சிப்புக்கென்று

தெரிந்துகொள்கிறார் என்றால் முன்குறித்தலில் அவர்களுக்கென்று தேவன் நியமித்திருக்கும் ஆசீர்வாதங்களையும், மேன்மைகளையும் அவர்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படியாக அவர்கள் கடந்துபோக வேண்டிய வழி என்ன என்பதையும், அவர்கள் சேரவேண்டிய இலக்கு என்ன என்பதையும் தேவன் ஒரு ஆணையின் மூலம் உறுதிப்படுத்துகிறார். இவ்வாறு அவர் உறுதிப்படுத்திய பின் அந்தக்காரியத்தை யாராலும் மாற்றமுடியாது.

எபேசியர் 1:4-6 இவ்விதமாகச் சொல்லுகிறது: "தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்பே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசுகிறிஸ்து மூலமாய்த் தமக்குச் சுவிகாரப் புத்திரராகும்படி (குமாரத்துவம்) முன்குறித்திருக்கிறார்". இந்த வேதபகுதி முன்குறித்தலைப் பற்றிய ஏழு பாடங்களைக் கற்றுத்தருகிறது.

1) முன்குறித்தல் தேவனுடைய தெரிந்து கொள்ளுதலோடு இணைந்து செயல்படுகிறது.

2) முன்குறித்தலும், தெரிந்துகொள்ளுதலும் நித்தியத்தைப் பின்னணியாகக் கொண்டவை.

3) இவை இரண்டுமே தேவ கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக அமைகின்றன.

4) இவைகளின் விளைவாகவே புத்திரசுவிகாரம் உண்டாகிறது.

5) இவை இரண்டுமே மனிதனுடைய கிரியைகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல.

6) இவை இரண்டுமே தேவனுடைய தீர்மானத்தை (சித்தம்) மட்டுமே அடிப்படையாகக் கொண்டவை.

7) இவை இரண்டுமே கிறிஸ்துவுக்குள்ளாகவும், கிறிஸ்து மூலமாகவும் நடைபெறுகிறது.

அப்போஸ்தலர் 13:48ல் பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்: "நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்". தேவனால் நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்களே

நித்தியமான வாழ்க்கைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகிறார்கள். இதன் அடிப்படையில் பார்ப்போமானால் சிலரை அவர் நித்திய ஜீவனுக்குத் தெரிந்துகொள்ளவில்லை என்பதும் புலனாகிறது. அடுத்த 9-வது அதிகாரத்தில் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையிலேயே யாக்கோபு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதையும், ஏசா தேவனால் புறக்கணிக்கப்பட்டதையும் தியானிப்போம்.

தேவனால் முன்குறிக்கப்பட்ட மனிதர்களை எந்த சக்தியாலும் திசைதிருப்பமுடியாது. தேவன் முன்குறிக்காத நிலையில் எந்த மனிதனும் தேவனிடம் வரவும் முடியாது. யோவான் 6:44ல் கிறிஸ்து சொல்லுகிறார்: "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான். பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்" (யோவான் 6:37). பிதா யாரை இழுத்துக்கொள்கிறாரோ அவர் கிறிஸ்துவிடம் வந்தே ஆகவேண்டும். இந்த இழுத்துக்கொள்ளலே அழைப்பு.

தேவனுடைய அழைப்பு

அடுத்ததாக அழைப்பைக் குறித்து தியானிப்போம், தேவனுடைய முன்குறித்தல் நித்தியத்தில் உலகத்தோற்றத்துக்குமுன் நடைபெறுகிறது என்றால் அதன் விளைவாக உண்டாகும் அழைப்பை இவ்வாறு முன்குறிக்கப்பட்டவன் தன் வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பெற்றுக்கொள்கிறான். பாவங்களினாலும் அக்கிரமங்களினாலும் மரித்த நிலையில் இருக்கும் ஆத்துமா தேவனுடைய சத்தத்தை இந்த அழைப்பின் விளைவாகவே கேட்கிறது. "தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள்" என்று 28-வது வசனத்தில் பார்த்தோம். இதுவரை மறைவாக இருந்த தேவனுடைய தீர்மானம் இப்போது அழைப்பின் மூலமாக வெளியரங்கமாகிறது. இந்த அழைப்பின் அடிப்படையில்தான் நீதிமானாக்கப்படுதலும், மகிமைப்படுத்தப்படுதலும் நடக்கிறது. அழைக்கிறவர் தேவன் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. தேவன் என்ன செய்கிறார் ?

1) அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைக்கிறார் (1 பேதுரு 2:9)

2) கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ள அழைக்கிறார் (1 கொரி 1:9)

3) தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும்

பாத்திரராயிருக்கும்படி அழைக்கிறார் (1 தெச 2:11)

4) இயேசுகிறிஸ்து மூலமாய் சகல ஜாதிகளிலிருந்தும் அழைக்கிறார் (ரோமர் 1:6)

5) சகல சபைகளிலிருந்தும் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கிறார் (1 கொரி 1:2, 1 தெச 4:7)

6) சமாதானமாயிருக்கும்படிக்கு அழைத்திருக்கிறார் (1 கொரி 7:15)

7) சுயாதீனத்திற்கு அழைத்திருக்கிறார் (கலா 5:13)

8) நம்பிக்கையை வழங்கும்படியாக அழைத்திருக்கிறார் (எபே 1:18)

9) ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அழைத்திருக்கிறார் (1 பேதுரு 3:9)

10) நித்திய ஜீவனை வழங்கும்படியாக அழைத்திருக்கிறார் (1 தீமோ 6:12)

அழைப்பு இரண்டு வகைப்படும். பொதுவான சுவிசேஷ அழைப்பு எல்லா மனிதர்களுக்கும் வழங்கப்படுகிறது. "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத் 3:2) என்பது பொதுவான அழைப்பு. இதைக்குறித்து பவுல் சொல்லும்போது: "நீங்கள் தம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமையை அடையும்பொருட்டாக எங்கள் சுவிசேஷத்தினாலே அந்த இரட்சிப்புக்கு அவர் உங்களை அழைத்தார்" (2 தெச 2:14) என்கிறார். "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது" (கொலோ 1:23) என்பது உண்மைதான். ஆனால் இந்த பொதுவான அழைப்பை, கேட்பவர்கள் எல்லாரும் அதை ஏற்றுக்கொள்வதில்லை. ஆனாலும் இந்த அழைப்பு சகலருக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதுதான் தேவனுடைய கட்டளை (மத் 28:19,20). இதை அவர்கள் புறக்கணிக்கக்கூடும். பிலிப்பி பட்டணத்தின் ஆற்றினருகே கூடிவந்திருந்த பெண்களுக்கு பவுல் மூலமாக இந்த அழைப்பு விடுவிக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தையை அவர்கள் அத்தனைபேரும் ஏற்றுக் கொண்டார்களா? இல்லையே (அப் 16:13,14). மத்தேயு 22:1-6, லூக்கா 14:16-20 வாசித்துப்பாருங்கள்.

தேவனுடைய அழைப்பை அதைக்கேட்டுக்கொண்டிருப்பவர் களிடம் பரிசுத்த ஆவியானவர் உயிர்ப்பிக்கும்போது பொதுவான அழைப்பு இரட்சிப்புக்கேதுவான பிரத்தியேகமான உள்ளான அழைப்பாக மாறுகிறது.

இதுவே இரண்டாவது வகை அழைப்பு. லீதியாள் என்ற பெண் பவுலின் உபதேசத்தை ஆற்றங்கரையிலே கேட்டுக் கொண்டிருக்கிறாள். "பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார்". அதன் விளைவாக அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெறுகிறார்கள் (வசனம் 15). இந்த அழைப்பைக் குறித்தே பவுல் இவ்விதமாகச் சொல்கிறார்: "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ 1:9). மனிதர்கள் அறிவிக்கும் தேவ செய்தியின் மூலமாக பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாக கிரியை செய்து, தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டவரின் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்து, அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளச் செய்கிறார். **இந்த அழைப்பு-ஒரு குருடனைப் பார்த்து 'உன் கண்களைத் திறந்துபார்' என்று சொல்வதில்லை. அவனுக்குப் பார்வையைக் கொடுத்து அவனைப் பார்க்கும்படியாகச் சொல்லுகிறது.** இந்த பிரத்தியேகமான அழைப்பை எவராலும் புறக்கணிக்கமுடியாது.

சுவிசேஷத்தை அறிவித்து எல்லா மனிதர்களையும் இரட்சிப்புக்கென்று அழைப்பது ஊழியக்காரர்களாகிய நம்முடைய கடமை. அதைக்குறித்து பவுல் சொல்கிறார்: "அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" (ரோமர் 10:14). இந்த வெளிப்படையான அழைப்பை உள்ளான அழைப்பாக மாற்றுவது பரிசுத்த ஆவியானவரின் வேலை. அவர் ஒருவரால்தான் ஒருவனுடைய இருதயத்தின் ஆழத்தில் கிரியை செய்யமுடியும். காதின் வழியாக உட்செல்லும் சுவிசேஷம் இருதயத்துக்குள் பிரவேசிக்கவேண்டும். பவுல் நடலாம், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சலாம். இரண்டுபேரும் வல்லமையான ஊழியக்காரர்கள்தான். ஆனால் விளையச் செய்வது யார்? தேவன். (1 கொரி 3:6).

தேவனால் நீதிமானாக்கப்படுதல்

தேவனால் அழைக்கப்பட்டவர்கள் அத்தனைபேருமே நீதிமானாக்கப்படுவார்கள் என்ற நிச்சயத்தை பவுல் அறிவிக்கிறார். அழைப்புக்கும் நீதிமானாக்கப்படுதலுக்கும் இடைப்பட்ட நிலையில் உள்ள இரட்சிப்பின் அனுபவங்களான மறுபடியும் பிறத்தல், மனமாற்றம் (விசுவாசித்தல், மனந்திரும்புதல்) ஆகியவற்றைக் குறித்து பவுல் பேசாமல் நீதிமானாக்கப்படுதலைக் குறிப்பிடுகிறார். என்றாலும் தேவன்

விசுவாசமாயிருக்கிறவனையே நீதிமானாக்குகிறார் என்ற சத்தியம் ரோமர் 3:25ல் சொல்லப்பட்டிருக்கிறது. "மனுஷன் நியாயப் பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான்" (ரோமர் 3:28). "நாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்" (ரோமர் 5:1). "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும் படிக்குக் கிறிஸ்து இயேசுவின் மேல் விசுவாசிகளானோம்" (கலா 2:15). விசுவாசத்துக்கும் நீதிமானாக்கப்படுவதற்கும் உள்ள நெருக்கமான உறவு ரோமர் 4:5ல் இவ்விதமாகச் சொல்லப்படுகிறது: "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே நீதியாக எண்ணப்படும்".

நீதிமானாக்கப்படுதல் என்பது மூன்று காரியங்களை அறிவிக்கிறது. இந்த மூன்றையும் தேவனே நடப்பிக்கிறார்.

1) தேவன் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு எடுத்து கிறிஸ்துவின் கணக்கில் வைத்து நம்மை மன்னிக்கிறார்.

2) தேவன் கிறிஸ்துவின் கீழ்ப்படிதலினால் உண்டாகும் நீதியை நம்முடைய கணக்கில் வைத்து ஆசீர்வதிக்கிறார்.

3) தேவன் பாவமனிதனை ஒரு நீதிமான் என்று சட்டபூர்வமாக பிரகடனப்படுத்தி கனம்பண்ணுகிறார்.

நீதிமானாக்கப்படும் ஆவிக்குரிய அனுபவத்தைக் குறித்து ஏற்கனவே ரோமர் முதல் மூன்று அதிகாரங்களில் பவுல் பேசினதைத் தியானித்திருக்கிறோம். நியாயப்பிரமாணத்தின் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதின் மூலமாக ஒருவன் நீதிமானாக முடியும் என்றாலும் (ரோமர் 2:13, உபா 6:25), யாக்கோபு 2:10 சொல்கிறபடி "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்". கல்வாரி சிலுவையில் நியாயப்பிரமாணம் இல்லாமல் தேவநீதி வெளிப்பட்டது (ரோமர் 3:21). எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிந்து சிலுவை மரணத்தை ஏற்றுக்கொண்டதினால் வெளிப்பட்ட கிறிஸ்துவின் நீதியை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்வதினால் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 3:22,26,28).

கிறிஸ்துவின் நீதியைத் தன்னில் தரித்துக்கொள்ளும் ஒரு மனிதன் உடனடியாக பிதாவாகிய தேவனுடைய அன்புக்கும் இரக்கத்துக்கும் பாத்திரனாகிறான். இதன் விளைவாக அவனுடைய பாவம் மன்னிக்கப்படுகிறது என்பது மட்டுமல்ல, தேவநீதி என்று அழைக்கப்படும் கிறிஸ்துவின் நீதியை சுதந்தரித்துக் கொள்கிறான். நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டால் மட்டும் போதாது. பாவம் மன்னிக்கப்பட்ட மனிதன் ஏதேனில் விலக்கப்பட்ட கனியைப் புசிப்பதற்கு முன்பு ஆதாம் இருந்த அதே நிலையில்தான் இருந்திருப்பான். தேவ சமுகத்தில் அப்போது ஆதாம் பாவி அல்ல என்றாலும், அவன் நீதியை உடையவனாக இருக்கவில்லை. எனவே நீதிமானாகக் கருதப்படமுடியாது. "அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசாயா 61:10) என்கிற அனுபவம் தேவனால் நீதிமானாக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே உண்டு.

இவ்வாறு தேவ சமுகத்தில் நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன் மன்னிக்கப்பட்ட ஒரு பாவியாக அல்ல, பாவமே செய்யாத பரிசுத்தவானாகக் கருதப்படுகிறான். அவன் கிறிஸ்துவுக்குள் தன்னை மறைத்துக்கொண்டவன் ஆகிறான். இது தேவனுடைய தெரிந்து கொள்ளுதலையும் கிருபையையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. கிரியைகளை அல்ல. "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" (கலா 2:16). ஏசாயா சொல்லுகிறார்: "எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை போல இருக்கிறது" (64:6). மனிதர்களுடைய நற்கிரியைகளினால் உண்டாகும் நீதியை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை, கிறிஸ்துவுக்குள் நாம் நடத்தும் கிரியைகளின்மேல் மட்டுமே அவர் பிரியப்படுகிறார்.

நாம் கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவோடும் இருப்பதால்தான், நீதிமான்களாகக் கருதப்படுகிறோம். கிறிஸ்து மரித்தபோது நாமும் மரித்தோம். அவர் அடக்கம் பண்ணப்பட்டபோது நாமும் அடக்கம்பண்ணப்பட்டோம். நம்முடைய பாவங்களும் அடக்கம் பண்ணப்பட்டன. அவர் உயிர்த்தெழுந்தபோது நாமும் உயிர்த்தெழுந்தோம். பிதாவின் வலது பாரிசத்தில் அவர் அமர்ந்தபோது நாமும் அவரோடு அங்கே அமர்ந்திருக்கிறோம். எனவே தேவன் நம்மைப் பார்த்துச் சொல்லும் காரியம், என்னுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நீங்கள் பாவிகளாகவும் இருக்கமுடியாது. மன்னிக்கப்பட்ட பாவிகளாக இருக்கமுடியாது. நீங்கள் கிறிஸ்துவைப்போல் நீதிமான்கள்.

தேவனால் மகிமைப்படுத்தப்படுதல்

பிதாவாகிய தேவனுடைய தீர்மானத்தின்படியும், முன்னறிவின்படியும் யாரை அவர் முன்குறிக்கிறாரோ, அவர்களை அவர் அழைக்கிறார், நீதிமான்களாக்குகிறார். இறுதியில் மகிமைப்படுத்துகிறார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த மகிமையில் பங்குகொள்வதே மகிமைப்படுத்தப்படும் அனுபவம் "தேவமகிமையை அடைவோம்" (ரோமர் 5:2) என்று எதிர்காலத்தில் பவுல் பேசியதைப் பார்த்தோம்.

நீதிமானாக்கப்படுவதற்கும் மகிமைப்படுத்தப்படுவதற்கும் இடைப்பட்ட அனுபவங்களான குமாரத்துவம், பரிசுத்தமாக்கப்படுதல், இரட்சிப்பில் நிலைத்திருத்தல் ஆகியவற்றைக் குறித்து பவுல் இந்த வசனத்தில் பேசவில்லை. மகிமைப்படுதல் என்பது இரட்சிப்பின் கடைசி அனுபவம், என்றாலும் அவர்கள் மகிமைப்படுத்தப்படுவார்கள் என்று பவுல் எதிர்காலத்தில் பேசாமல் அது ஏற்கனவே நடந்துமுடிந்த நிகழ்ச்சியாக "மகிமைப்படுத்தியுமிருக்கிறார்" என்கிறார். தேவனுடைய தீர்மானம் ஒருவன் மகிமைப்படுத்தப்படும் வரையில் நிலைத்திருக்கக் கூடியது. தேவனால் நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன் அந்த நீதியை ஒருபோதும் நிரந்தரமான முறையில் இழந்துபோவதில்லை. **தேவனால் முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்ட ஒரு மனிதன் மகிமைப்படுத்தப்படாமல் நித்திய ஜீவனை இழந்துபோகக்கூடும் என்று துணிகரமாகச் சொல்கிறவர்கள் சர்வ வல்லமையுள்ள தேவனை அவமதிக்கிறார்கள்.**

இரட்சிக்கப்பட்ட நாம், இரட்சிக்கப்படாத நம்முடைய சரீரத்தோடு இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த சரீரமும் மீட்கப்பட்டு ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தை நாம் பெற வேண்டும். இது மரித்து எழுந்து, இயேசு கிறிஸ்துவின் சரீரத்துக்கு இணையானதாக இருக்கும். "சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம், அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்" (ரோமர் 8:23,24) என்ற வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். **இந்த சரீர மீட்பே மகிமைப்படுத்தப்படுதல் என்று அழைக்கப்படுகிறது.** இது இயேசுகிறிஸ்துவின் வருகையின்போது நடைபெறவிருக்கிறது. பிரதான தூதனுடைய எக்காளச் சத்தம் கேட்கும்போது மரித்தவர்கள் எழும்புவார்கள். அவர்களோடு உயிரோடிருப்பவர்களும் மகிமையின் சாயலைப்பெற்றவர்களாய், என்றென்றைக்கும் கர்த்தருடன் இருக்கும்படியாக ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் (1 தெச 4:14-17). பவுல் சொல்கிறார்: "நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு

இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது (சரீரம்) அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்" (1 கொரி 15:51,52). இந்த சரீரத்துக்கு வலி, வருத்தம், பெலவீனம், வியாதி, மரணம் உண்டாவதில்லை.

பிலிப்பியர் 3:21ல் பவுல் சொல்கிறார்: "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்". "மண்ணானவனுடைய (ஆதாம்) சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய (கிறிஸ்து) சாயலையும் அணிந்துகொள்வோம்" (1 கொரி 15:49). மகிமையின் சரீரம் "ஆவிக்குரிய சரீரம்" (1 கொரி 15:46) என்று அழைக்கப்படுகிறது. "இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 3:2) என்கிறார் யோவான். இந்த சரீரம் அழிவில்லாதது, மகிமையுள்ளது, பலமுள்ளது, ஆவிக்குரியது (1 கொரிந்தியர் 15:42-44) வாசித்துப்பாருங்கள்.

வேத வசனங்களின் ஆதாரத்தில் ஒரு காரியத்தை நிச்சயமாக அறிந்துகொள்ளுங்கள். நாம் தேவகுமாரனுடைய சாயலைவிட குறைந்த சாயலை உடையவர்களாக இருக்கப்போவதில்லை. பிதா தன்னுடைய குமாரனை எந்த அளவுக்கு நேசிக்கிறார் என்றால் உலகமுழுவதும் தன்னுடைய குமாரனுடைய மகிமைக்கு ஒப்பானவர்களால் நிரப்பப்படவேண்டும் என்று விரும்புகிறார். முந்தின வசனத்தில் நாம் அதைத்தான் பார்த்தோம் என்பதை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். எல்லாவிதத்திலும் நாம் அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருக்கவேண்டும் என்பதே சர்வல்லமையுமுள்ள தேவனுடைய தீர்மானம்.

இந்த இரட்சிப்பின் மகத்துவமான மேன்மைகள் எல்லாமே தேவனுடைய தீர்மானத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. எனவே அது கடைசிவரை நிலைநிற்கக்கூடியது. தேவன் சொல்கிறார்: "அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்". யாரை மகிமைப்படுத்தவேண்டும் என்று அவர் சித்தங்கொண்டிருக்கிறாரோ அவர்கள் நிச்சயமாகவே மகிமைப்படுத்தப்படுவார்கள்.

எப்போது இயேசுகிறிஸ்துவை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் முழுமனதோடு ஏற்றுக்கொண்டீர்களோ, அன்று அவர் உங்களில் ஒரு கிரியையைத் துவங்கியிருக்கிறார். அதன் நோக்கம் உங்களை தன் குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மகிமைப்படுத்துவதுதான். அது அவருடைய தீர்மானம். அவர் சொல்கிறார்: "நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்" (ஏசாயா 14:24). "சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கிறார், யார் அதை வியர்த்தமாக்குவான்? அவருடைய கை நீட்டப்பட்டிருக்கிறது, யார் அதைத் திருப்புவான்?" (வசனம் 27). உங்களாலும் அதைச் செய்யமுடியாது. என்னாலும் அதைச் செய்யமுடியாது. சாத்தானாலும் செய்யமுடியாது. தேவதூதர்களாலும் செய்யமுடியாது.

தேவனுடைய மாறாத அன்பு (வசனம் 31-39)

இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்? (ரோமர் 8:31)

விசுவாசத்தின் மகத்துவமான வெற்றியைக் குறித்துப் பேசும் 8-வது அதிகாரத்தின் கடைசி வேதபகுதியை தியானிக்கவிருக்கிறோம். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் துதியின் பாடலாகவும் ஆர்ப்பரிப்பாகவும் இது அமைகிறது. தேவனுடைய அன்பின் மகத்துவத்தைக் குறித்துப் பேசும் இந்த வேதபகுதி ஆறு கேள்விகளையும், அதற்கான பதில்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. முதல் இரண்டு கேள்விகள் இந்த வசனத்தில் கேட்கப்படுகிறன.

"இவைகளைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம்" என்ற கேள்வியோடு இந்த வேதபகுதியை பவுல் துவக்குகிறார். "இவைகள்" என்ற வார்த்தை முந்தின மூன்று வசனங்களில் பவுல் அறிவித்த தேவனுடைய தீர்மானம், முன்னறிவு, முன்குறித்தல், அழைப்பு, நீதிமானாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகிய உபதேச சத்தியங்களை மட்டுமல்லாமல் ரோமர் 3:21 முதல் 8:30 வரை சொல்லப்பட்ட கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் பாதுகாப்பைக்குறித்த சத்தியங்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். தன்னுடைய தீர்மானத்தின் அடிப்படையில் சிலரை அவர் இரட்சிப்புக்கென்று முன்குறித்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, அவர்கள் கடந்துசெல்லும் வித்தியாசமான ஆவிக்குரிய அனுபவங்களையும் பாதைகளையும் தன்னுடைய ஆளுகைக்குள் வைத்து மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவர்களாய் நிறுத்தும்

வல்லமை அவருக்கு நிச்சயமாகவே உண்டு (யூதா 24). அவர் தேவனாயிருக்கிறபடியால் இரட்சிப்பில் நாம் நிலைத்திருப்பது உறுதி.

இரண்டு சத்தியங்களை இந்த வேத வசனம் நம் கண்களுக்கு முன்பாகக் கொண்டு வருகிறது.

1) தேவன் நம்மோடு இருக்கிறார்.

2) நமக்கு விரோதமாக யாரும் செயல்படமுடியாது.

தேவன் நம்மோடு நம்பட்சத்தில் இருக்கிறார் என்பது எவ்வளவு ஆறுதலான வாக்குத்தத்தம். நம்முடைய பெலவீனங்கள், குறைகள் மத்தியிலும் தேவன் நம்மோடு இருக்கிறார் என்பதே இந்த நிருபம் அறிவிக்கும் சத்தியம். ஏனென்றால் நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம். தாவீது சொல்கிறார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும், பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்" (சங் 23:4). "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (நியா 6:12) என்ற அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட கிதியோன் செய்த பராக்கிரமமான காரியங்களை எல்லாம் நாம் அறிவோம்.

தேவன் நம் பட்சத்தில் இருக்கும்போது நமக்கு விரோதியாயிருக்க எவராலும் கூடாது. ஏனென்றால் யாராலும் எந்த சக்தியாலும் நம்மை தோற்கடிக்க முடியாது. நாம் முற்றிலும் ஜெயங்கொண்டவர்கள் என்பதைப் பார்த்தோம். "எனக்கு விரோதமாகச் சுற்றிலும் படையெடுத்து வருகிற பதினாயிரம் பேருக்கும் நான் பயப்படேன்" (சங் 3:6) என்கிறார் தாவீது. "தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்" (ஏசாயா 12:2). "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே 6:12). ஆனாலும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தைரியமாகச் சொல்லலாம்: "கர்த்தர் என் பட்சத்தில் இருக்கிறார், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்ன செய்வான்? எனக்கு அநுகூலம் பண்ணுகிறவர்கள் நடுவில் கர்த்தர் என்பட்சத்தில் இருக்கிறார்; என் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காண்பேன்" (சங் 118:6,7).

தேவன் நம் பட்சத்தில் இருக்கும்போது நம்முடைய விரோதிகளின் நிலை என்னவாகும் என்பதை ஏசாயா 41:11-13 இவ்விதமாக அறிவிக்கிறது. "இதோ, உன்மேல் எரிச்சலாயிருக்கிற யாவரும் வெட்கி இலட்சையடைவார்கள்; உன்னோடே வழக்காடுகிறவர்கள் நாசமாகி

ஒன்றுமில்லாமற்போவார்கள். உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய்; உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள்".

தேவன் நம் விரோதியாயிருப்பாரானால், நம் பட்சத்தில் இருப்பவன் யார்? என்று இந்த வசனத்தை மாற்றி அமைத்து, சற்றே யோசித்துப் பாருங்கள். நிலைமை எவ்வளவு பயங்கரமானதாக இருக்கும். நம்மை நேசித்து, தன்னுடைய குமாரனையே மரணத்துக்கு ஒப்புக்கொடுத்த, நித்தியவாசியும், சர்வ வல்லமையும், சர்வ ஞானமும் நிறைந்த அன்பு தகப்பன் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயம் உங்களில் காணப்படவேண்டும் என்பதற்காகவே பவுல் தேவனுடைய மாறாத அன்பைக் குறித்து இந்த வேதபகுதியில் பேசவிருக்கிறார். வாக்குமாறாத தேவன் சொல்லியிருக்கிறார்: "பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜ்வாலை உன்பேரில் பற்றாது" (ஏசாயா 43:1,2). தண்ணீரின் அனுபவங்கள், ஆறுகளின் அனுபவங்கள், அக்கினியின் அனுபவங்கள் ஆகியவற்றை நாம் சந்திக்கவேண்டி வரலாம், வரும், ஆனால் எதுவும் நம்மை மேற்கொள்ளப்போவதில்லை.

தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி? (ரோமர் 8:32)

தேவன் நம்பட்சத்தில் இருக்கும்போது ஒருவனும் நமக்கு விரோதமாக எழும்பமுடியாது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனாலும் பலவேளைகளில் நாம் சந்திக்கும் போராட்டங்கள், சோதனைகள், வியாதிகள், வருத்தங்கள், பின்மாற்றங்கள் போன்றவை தேவன் நம்மோடு இருக்கிறாரா என்ற சந்தேகத்தை உருவாக்குகின்றன. "ஆ! என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்" (நியா 6:13) என்ற கிதியோனின் கேள்வி நம்மிலும் உருவாகிறது. இப்படிப்பட்ட அவநம்பிக்கையான அறிக்கை மிகவும் ஆபத்தானது, இதை நீக்கவேண்டும் என்பதற்காகவே பிதாவாகிய தேவன் நம்மேல் கொண்டிருந்த அன்பின் நிமித்தமாக தன்னுடைய சொந்த குமாரனை நமக்காக கல்வாரி சிலுவையில் அர்ப்பணித்தார் என்பதையும், அவர்

இப்போது நம்மோடு இருப்பதினால் எல்லாவற்றிலும் வெற்றியைத்தருவது உறுதி என்பதையும் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

"உன் புத்திரனும் உன் ஏகசுதனும், உன் நேச குமாரனுமாகிய" (ஆதி 22:2) ஈசாக்கை தகனபலியாக பலியிடு என்று ஆபிரகாமிடம் தேவன் ஆணையிட்டார் என்பது உண்மைதான். ஆனால் ஆபிரகாமின் குமாரனை அவர் மரணத்துக்கு ஒப்புக்கொடுக்கவில்லையே. "பிள்ளையாண்டான்மேல் உன் கையைப்போடாதே" (வசனம் 12) என்று தடைபண்ணுகிறார். ஆனால் நாம் அவருக்கு விரோதிகளாயிருக்கும் போதே, தன்னுடைய அன்பு குமாரனை பாவநிவாரண பலியாக வேதனைநிறைந்த, கொடூரமான, கேவலமான சிலுவை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தார். இதன் விளைவாக எதிரிகளாயிருந்த நாம் இன்று தேவனுடைய பிள்ளைகள் என்ற சுதந்தரத்தை உடையவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவையே அவர் நமக்காகத் தந்தார். விலைமதிப்பற்ற கிறிஸ்துவை தந்த பிதா மற்ற காரியங்களைத் தராதிருப்பது எப்படி என்கிறார் பவுல்.

நமக்காக ஒப்புக்கொடுக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவின் மகத்துவம் என்ன என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

1. கிறிஸ்து, பிதாவாகிய தேவனுக்கு இணையானவர் (யோவான் 1:1).
2. இந்த உலகத்தை சிருஷ்டித்தவர் (யோவான் 1:3).
3. பூமி உண்டாகுமுன்னும், ஆதிமுதற்கொண்டும் அநாதியாய் அபிஷேகம்பண்ணப்பட்டவர் (நீதி 8:23)
4. நித்தம் பிதாவின் அருகே அவருடைய செல்லப்பிள்ளையாய், அவருடைய மனமகிழ்ச்சியாயிருந்து, அவர் சமுகத்தில் களிகூர்ந்தவர் (நீதி 8:30).
5. தேவதூதர்களால் தொழுதுகொள்ளப்பட்டவர் (எபி 1:6)
6. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர். அல்பாவும் ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறவர் (வெளி 1:8).
7. பிதாவாகிய தேவனுக்கு இணையானவர் (யோவான் 10:30, 14:9)
8. தன்னில்தானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருப்பவர் (யோவான் 11:25).

9. மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர் (1 கொரி 15:20).

இப்படிப்பட்ட மேலான அந்தஸ்தை உடைய கிறிஸ்து பிதாவினால் கைவிடப்பட்டவராக கல்வாரி சிலுவையில் தொங்கினார் என்றால் அது பிதாவாகிய தேவனுடைய அன்பின் செயல்பாடு. கிறிஸ்துவின் மரணம் தற்செயலாக நடந்த ஒரு காரியம் அல்ல. பிதாவாகிய தேவனே அவரை பாடுமரணத்துக்கு உட்படுத்தினார். அவருடைய மரணத்தின் பின்னணியில் பரிசேயர்கள், பிரதான ஆசாரியன், யூதாஸ், பிலாத்து, ரோம போர்வீரர்கள், ஆகியோர் செயல்பட்டார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் அவருடைய சிலுவை மரணம் தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் (அப் 2:23) நடந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக அல்ல, அவர் "உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி" (வெளி 13:8). ஏசாயா 53:10 சொல்கிறது: "கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்". பிதா அவரை மரணத்துக்கு ஒப்புக்கொடுக்காத நிலையில், அவரை யாராலும் சிலுவையில் அறைந்திருக்கமுடியாது. "தமக்காகவும், தம்மாலேயும் சகலத்தையும் உண்டாக்கினவர், (பிதா) அநேகம் பிள்ளைகளை (தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை) மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில், அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை (கிறிஸ்துவை) உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது" (எபி 2:10). கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவை பிதாவாகிய தேவன் கொலை செய்தார் என்பதற்கு ஒரு காரணம் உண்டு என்றால் அது அவர் மனித இனத்தின்மேல் கொண்டிருந்த அன்புதான். "குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ 1:14). **மனிதனுக்கு மீட்பை வழங்க நீதியுள்ள தேவனால் தன் குமாரனைப் பாவமாக்கி தண்டிப்பதைத் தவிர வேறு மார்க்கத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லை.**

நம்மெல்லாருக்காகவும் பிதா தன் குமாரனை ஒப்புக்கொடுத்தார் என்று பவுல் அறிவிப்பதினால் அதினிமித்தம் உலகமனிதர்கள் அத்தனைபேரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே அவருடைய பாடுமரணத்தினால் உண்டாகும் சிலாக்கியங்களைச் சுதந்தரித்துக்கொள்ள முடியும்.

எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி? என்ற

மூன்றாவது கேள்வியோடு பவுல் இந்த வசனத்தை முடிக்கிறார். வெளியூரில் இருந்து உங்களை வரவழைத்து, நன்றாக உபசரித்து, தன்னுடைய அன்பளிப்பாக வைரக்கல் பதித்த மோதிரத்தை ஒரு நண்பர் தருகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஊருக்குத் திருப்பிப்போக பஸ் செலவுக்கு ரூ.50/- கேட்டால் தராமல் இருப்பாரா?

தேவனுடைய பிள்ளைகள் தங்களுக்குத் தேவையான சகல நன்மைகளையும் பரலோகத்தின் தேவனிடமிருந்து மட்டுமே பெற்றுக்கொள்கிறார்கள். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்தவரமும் பரத்திலிருந்துண்டாகி சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக் 1:17). நன்மையான யாவற்றையும் அவர் மிகுந்த சந்தோஷத்தோடு தன்னுடைய பிள்ளைகளுக்குத் தர அவர் விருப்பமுடையவராய் இருக்கிறார். அவ்வப்போது அவர் கொடுப்பதில்லை. அரைமனதோடு அவர் கொடுப்பதில்லை. முறுமுறுப்போடு அவர் கொடுப்பதில்லை. சங்கீதம் 34:10 சொல்கிறது: "கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது". ஏனென்றால் அவர் தன்னுடைய சொந்த குமாரனையே நமக்கென்று அர்ப்பணித்திருக்கிறார். கல்வாரி சிலுவையில் வெளிப்பட்ட பிதாவின் அன்பை முழுமனதோடு நம்பக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய அனுபவங்கள், உங்களுடைய ஆலோசனைகள் என்ன சொல்கிறது என்பதைவிட தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதே உண்மையானதாக இருக்கும்.

தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர் (ரோமர் 8:33)

தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார் என்ற பவுல், நான்காவது கேள்வியாக தேவன் தெரிந்துகொண்டவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார் என்கிறார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று சொல்லும்போது அவர்கள் தேவனுடைய தீர்மானத்தின்படி முன்னறியப்பட்டு, முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்படப் போகிறவர்களை மனதில் கொள்ளவேண்டும். அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் நிச்சயமாகவே எழும்பும், ஆனாலும் அதைக்குறித்து அவர்கள் கவலைப்படவேண்டியதில்லை. உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன் என்று தேவனுடைய நற்சான்றைப் பெற்ற யோபுவுக்கு எதிராக தேவ சமுகத்திலேயே சாத்தான் குற்றஞ்சாட்டினான் என்பதை அறிவோம் (யோபு 1:8-11) அதின் முடிவு என்ன? "கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார்" (யோபு 42:12).

சாத்தானுடைய முடிவு என்ன? "இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ்சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப் போனான்" (வெளி 12:10). "கந்தகம் எரிகிற அக்கினிக்கடலே அவனுடைய முடிவு" (வெளி 19:20).

ஏசாயா 54:15,17ல் தேவன் சொல்லுகிறார், "எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ, அவர்கள் உன் பட்சத்தில் வருவார்கள். உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்". யோசுவாவுக்கு எதிராக சாத்தான் குற்றஞ்சாட்டினான், நடந்தது என்ன? உடனடியாக யோசுவா சிறந்த வஸ்திரங்களையும் சுத்தமான பாகையையும் பெறுகிறான் (சக 3:1-5). ஒரு தேசத்தின் சுப்ரீம் கோர்ட் ஒருவனை குற்றமற்றவன் என்று தீர்ப்பளித்தபின் வேறு எந்த நீதிமன்றமும் அவனுக்கு எதிராக தீர்ப்பிடமுடியாது.

தேவன் தெரிந்து கொண்டவர்கள்மேல் யாரும் குற்றஞ்சாட்டமுடியாது என்பதற்கான காரணம் உடனே அறிவிக்கப்படுகிறது. அவர்களை நீதிமானாக்குவது தேவன். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் பாவம் செய்வதில்லை என்பதல்ல. "நான், நானே உன் மீறுதல்களை என் நிமித்தமாகவே குலைத்துப்போடுகிறேன்; உன் பாவங்களை நினையாமலும் இருப்பேன்" (ஏசாயா 43:25) என்கிறார் தேவன். பாவங்களை மன்னித்து பாவிகளை நீதிமானாக்குகிறவர் தேவன். "உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்" (ஏசாயா 1:18) என்று அவர் சொல்வதினால் நாம் துணிந்து சொல்லலாம்: "என்னை நீதிமானாக்குகிறவர் சமீபமாயிருக்கிறார்; என்னோடே வழக்காடுகிறவன் யார்? ஏகமாய் நிற்போமாக, யார் எனக்கு எதிராளி? அவன் என்னிடத்தில் வரட்டும். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் எனக்குத் துணை செய்கிறார். என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்?" (ஏசாயா 50:8,9).

தேவனைத் தவிர வேறு யாராலும், அல்லது எந்த சக்தியாலும் ஒருவனை நீதிமானாக்கமுடியாது. ஏனென்றால் எல்லா பாவங்களும் தேவன் ஒருவருக்கே விரோதமானவை (சங் 51:4, ஆதி 39:9). எனவே பாவமன்னிப்பை வழங்க அவர் ஒருவரால்தான் முடியும். ஒருவன் நீதிமான் என்று தீர்ப்பளிக்கவும் அவர் ஒருவரால்தான் முடியும். அது மட்டுமல்ல, அந்த தீர்ப்புக்கு எதிராக எந்த மேல்முறையீடும் சாத்தியமில்லை. அந்தத்தீர்ப்பை அவர் ஒருபோதும் மாற்றப்போவதில்லை. "மனம் மாற

அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" (எண் 23:19). "அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம்பார்க்கிறதும் இல்லை" (எண் 23:21) என்கிறார் பிலேயாம்.

இந்த வசனம் துவங்கி பவுல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைப் (Elect of God) பற்றி பவுல் வெளிப்படையாகப் பேச ஆரம்பிக்கிறார். தெரிந்துகொள்ளுதலைப் பற்றிய சத்தியம் (Doctrine of Election) அடுத்த அதிகாரத்தில் கூடுதலாகச் சொல்லப்படவிருக்கிறது. அவர்கள் எபேசியர் 1:4ன் படி தமக்கு முன்பாக அன்பில் தூய்மையானவர்களும், குற்றமில்லாதவர்களுமாய் (நீதிமான்களாக) இருப்பதற்காக உலகம் படைக்கப்படுவதற்கு முன்னரே கிறிஸ்துவுக்குள் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டவர்கள். இவ்வாறு தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களே நீதிமான்களாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். தெரிந்துகொள்ளுதலைப்பற்றி அறிவிக்கும் சில வேத வசனங்களை வாசித்துப்பாருங்கள். (மத் 24:22,24; மாற்கு 13:20,22; லூக்கா 18:7; அப் 9:15; ரோமர் 9:11; 11:5,7; 16:13; கொலோ 3:12; 1 தெச 1:3; 2 தீமோ 2:10; தீத்து 1:3; 2 பேதுரு 1:10).

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலது பாரிசத்திலும் இருக்கிறவர்; நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே (ரோமர் 8:34)

தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார் என்று முந்தின வசனத்தில் கேள்வி எழுப்பிய பவுல் இந்த வசனத்தில் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார் என்ற ஐந்தாவது கேள்வியை எழுப்புகிறார். யார் வேண்டுமானாலும் யாரையும் குற்றஞ்சாட்ட முடியும். சாத்தான் மட்டுமல்ல, மனிதர்களே தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டலாம். ஆனால் எந்த மனிதனையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும் அதிகாரம் கிறிஸ்து ஒருவருக்கே உண்டு (யோவான் 5:22). அவர் ஒருவரே ஒருவனை நித்திய அக்கினிக்கடலுக்குள் தள்ளமுடியும். கிறிஸ்து ஒருவரே "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி" (அப் 10:42). "அவர் (பிதா) தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்" (அப் 17:31) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை"

என்று இந்த அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே பார்த்தோம். நம்மை மரணம் என்கிற ஆக்கினைத் தீர்ப்பில் இருந்து தப்புவிக்கவேண்டும் என்பதற்காகவே கிறிஸ்து மரித்தார். அவருடைய மரணத்தோடு காரியங்கள் முடிவடையவில்லை. மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இதன் விளைவாக "நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம் ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" (ரோமர் 4:8). இன்று அவர் பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். அங்கிருந்தவாறு, நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார். "அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்" (ரோமர் 4:25). "கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்" (ரோமர் 14:9)

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்பதற்கான நான்கு காரணங்கள் இந்த வசனத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

1) கிறிஸ்துவின் மரணம் - பாவ நிவாரண பலியாக

2) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - நாம் நீதிமான்களாக்கப்பட்டதை உறுதிப்படுத்த

3) கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருத்தல் - ஆளுகை செய்ய

4) கிறிஸ்துவின் பரிந்துபேசுதல் - பரிசுத்தப்படுத்த

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் பாவத்தை தேவன் இவ்வாறு மறந்துபோகிறார் என்றால் அதற்கு முதலாவது காரணம் கிறிஸ்து அவர்களுக்காக மரித்தார் என்பதே. அவர்களுடைய பாவங்கள் கல்வாரி சிலுவையில் அவருடைய குமாரன்மேல் சுமத்தப்பட்டுவிட்டது. பாவத்தினிமித்தம் உண்டாகும் ஆக்கினைத்தீர்ப்பை அவர்மேல் வழங்கியதின் விளைவாக பாவமறியாத கிறிஸ்து நமக்காக பாவமானார், சாபமானார். பாவத்தின் சம்பளமான மரணத்தை நாம் அடைவதற்குப் பதிலாக அவர் மரணத்தை ருசிபார்த்தார். இந்த சத்தியத்தை பவுல் ஏற்கனவே ரோமர் 3:21-26; 4:25; 5:8-11; 6:4-10; 8:3,4 ஆகிய வசனங்களில் அறிவித்ததை தியானித்திருக்கிறோம். கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவத்தினால் உண்டாகும் விளைவுகளை முற்றிலுமாக நீக்கிவிட்டது என்பதை ரோமர் 3,4 அதிகாரங்களில் பார்த்தோம்.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஆக்கினைத் தீர்ப்படைவதில்லை என்பதற்கு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இரண்டாவது காரணமாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்து சிலுவையைச் சுமந்து செல்லும்போது நம்முடைய பாவங்களை சுமந்துசென்றார் என்பது மட்டுமல்ல, நம்மையும் அவரோடு அழைத்துச்சென்றார். அவர் மரிக்கும்போது நாமும் அவரோடு மரித்தோம். கிறிஸ்துவின் மரணத்தோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்கள் அவருடைய உயிர்த்தெழுதலிலும் பங்குகொள்கிறார்கள். கிறிஸ்து இன்று கல்லறையில் இல்லை, நாமும் கல்லறையில் இருக்கப்போவதில்லை. "அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்" (எபே 2:5) என்று வாசிக்கிறோம். இன்று உயிர்த்த கிறிஸ்துவோடு நாம் இணைக்கப்பட்டிருக்கிறோம். உயிர்த்த அவருடைய சரீரத்தின் அவயவங்களாக இருக்கிறோம், அவருடைய ஜீவன் இன்று நம்முடையதாக இருக்கிறது. பாவம் இனி நம்மை ஆண்டுகொள்ளமுடியாது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டதை உறுதிப்படுத்துகிறது. கல்வாரியில் அவர் நிறைவேற்றிய பாவநிவாரண பலியை தேவன் அங்கீகரித்தார் என்பதை அறிவிக்கிறது. ரோமர் 5,6,7 அதிகாரங்கள் இதையே வலியுறுத்துகின்றன.

மூன்றாவதாக, உயிர்த்தெழுந்த இயேசு இன்று என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை பவுல் அறிவிக்கிறார். பலமுறை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து பேசும் பவுல், தனது நிருபத்தில் இந்த ஒரு இடத்தில்தான் உயிர்த்த இயேசுவின் செயல்பாட்டைக் குறித்துப் பேசுகிறார். அவர் தேவனுடைய வலது பாரிசத்தில் அவருடைய ஆணையின்படி உட்கார்ந்திருக்கிறார் (சங் 110:1). எபிரெயர் 1:3 சொல்கிறது: "தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்". எபேசியர் 1:21 சொல்லுகிறது: "அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினார்". இது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மேலான அந்தஸ்தையும், அதிகாரத்தையும், ஆளுகையையும் மேன்மையையும் உறுதிப்படுத்துகிறது. மத் 26:64, மாற்கு 14:62, அப் 2:35; 5:31; 7:55,56, கொலோ 3:1, எபி 8:1; 10:12; 12:2, 1 பேதுரு 3:22 வாசித்துப்பாருங்கள்.

நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படி பிரதான ஆசாரியன் பாவநிவாரணபலிகளை செலுத்தினாலும், அவை முழுமையாக, நிரந்தரமாக பாவத்தை நிவர்த்தி செய்வதில்லை என்பதினால் தேவ சமுகத்தில் அவன் நிற்பான் என்றுதான் எபிரெயர் 10:11ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும்

உயிர்த்து எழுந்துவந்த இயேசுவை "நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்" (சங் 110:1) என்று சொல்லியிருப்பது அவருடைய சிலுவைபலி முற்றிலுமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது என்பதை அறிவிக்கிறது. மனித இனத்தின் பாவங்களுக்கு மன்னிப்பு உண்டாகிவிட்டது என்பதை பிதாவாகிய தேவன் இவ்விதமாக அங்கீகரிக்கிறார்.

"நம்முடைய நீதி எங்கே இருக்கிறது?" என்ற கேள்விக்கு "பரலோகத்தில்" என்று ஜாண்பன்யன் என்ற வேதபண்டிதர் பதில் தருகிறார். ஏனென்றால் நம்முடைய நீதியாயிருக்கிற கிறிஸ்து அங்குதான் இருக்கிறார். தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பவருக்கு விரோதமாக யாராலும் எந்தக்குற்றச்சாட்டையும் கொண்டுவரமுடியாது என்பது உண்மையானால், அவருடைய மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்குகொண்டவர்களாய், கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்மை எந்த மனிதனாலும் குற்றப்படுத்த முடியாது. எந்த தேவதூதனாலும் முடியாது. எந்த அசுத்த ஆவியினாலும் முடியாது.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை யாராலும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கமுடியாது என்பதற்கு நான்காவதாக ஒரு காரணமும் சொல்லப்படுகிறது. தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இயேசு சர்வலோகத்தையும் ஆளுகைசெய்கிறார் என்பது மட்டுமல்ல, நமக்காக தேவசமுகத்தில் வேண்டுதல் செய்துகொண்டிருக்கிறார். தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே மத்தியஸ்தராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார் (1 தீமோ 2:15). எபிரெயர் 7:25 சொல்கிறது, "தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிற வராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்".

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவர் துவங்கிய பரிந்துபேசும் ஊழியம் இன்னும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. 1 யோவான் 2:1 சொல்கிறது: "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவரா யிருக்கிறார்". "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணிய" (எபி 9:12) இயேசு இன்றும் நமக்காக பரிந்துபேசிக்கொண்டிருக்கும் அன்பை எண்ணிப்பாருங்கள். "அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக

வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார்" (ஏசாயா 53:13) என்கிறார் தேவன்.

ஆக்கினைத்தீர்ப்பு இல்லாமற்போவதை முன்னறிவிக்கும் சில வேத வசனங்கள் நம்முடைய பாவங்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று சொல்கின்றன.

1) **மீகா 7:19**
நம்முடைய பாவங்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் போடப்படும்.

2) **சங் 103:12**
நம்முடைய பாவங்களை மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் நம்மை விட்டு விலக்குவார்.

3) **ஏசாயா 38:17**
நம்முடைய பாவங்களை அவருடைய முதுகுக்குப் பின்னால் எறிந்துவிட்டார்.

4) **ஏசாயா 44:22**
நம்முடைய பாவங்களை கார்மேகத்தைப் போல அகற்றிவிட்டார்.

5) **எரேமியா 31:34**
நம்முடைய பாவங்களை மன்னித்து நினையாதிருப்பார்.

உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், (ரோமர் 8:35)

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டுதலும் இல்லை, ஆக்கினைத்தீர்ப்பும் இல்லை என்ற சத்தியத்தை முந்தின இரண்டு வசனங்களில் அறிவித்த பவுல், அடுத்துவரும் நான்கு வசனங்களில் அவர்கள் சந்திக்கக்கூடிய உபத்திரவங்கள், பாடுகள், அவமானங்கள், தோல்விகள், தொல்லைகள், பிரச்சனைகள், தண்டனைகள், வறுமை, மரணம் ஆகியவற்றின் மத்தியிலும், தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருந்து

முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்களாக இருப்பார்கள் என்ற சத்தியத்தை அறிவிக்கிறார். தேவதூதர்களாலோ, ஆவிகளாலோ, தற்கால பொருட்களாலோ, வானமண்டலங்களிலுள்ள சக்திகளாலோ, பூமிக்குக் கீழேயுள்ள சக்திகளாலோ, உலகிலுள்ள வேறு எந்த வல்லமைகளினாலும், இவர்களை கிறிஸ்துவின் அன்பைவிட்டு பிரிக்கமுடியாது என்ற சத்தியத்தை அறிவித்து 8-வது அதிகாரத்தை முடிக்கிறார்.

"எழுதியிருக்கிறபடி" என்று பவுல் சொல்லும்போது "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்" என்று சங்கீதம் 44:22ல் சொல்லப்படும் வசனத்தை பவுல் இங்கே குறிப்பிடுகிறார். இந்த சங்கீதத்தில் உலகத்தார் மத்தியில் எவ்வித முகாந்திரமுமின்றி அவருடைய நாமத்தினிமித்தம் தேவனுடைய பிள்ளைகள் சந்திக்கும் பாடுகள் குறிப்பிடப்படுகின்றன. அந்த உபத்திரவத்திற்கான காரண காரியங்களை அவர்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ஆனால் இதைக்குறித்து பல வேத வசனங்களைப் பார்க்கமுடியும். யோவான் சொல்கிறார்: "உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப் படாதிருங்கள்" (1 யோவான் 3:13). "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" (அப் 14:22). "கிறிஸ்துஇயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ 3:12). மத்தேயு 5:11; 10:22; 10:39, அப் 9:16, 2 கொரி 4:11 வாசித்துப்பாருங்கள்.

எபிரெயர் 11:35-38 வசனங்களில் சபை சந்தித்த சரீரமரணம், வாதை, நிந்தை, அடிகள், கட்டுகள், கல்லெறிதல், வாளால் அறுக்கப்படுதல், பட்டயத்தால் வெட்டப்படுதல், சிதறடிக்கப்படுதல் ஆகியவை சொல்லப்படுகின்றன. பவுல் தன்னுடைய அனுபவத்தை இவ்வாறு சொல்கிறார்: "இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினால் வேலை செய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்" (1 கொரி 4:11-13).

"எந்நேரமும் கொல்லப்படுகிறோம்" என்பது தொடர்ச்சியாக, இடைவெளியின்றி விசுவாசிகளின் உயிருக்கு உண்டாகும் ஆபத்தைக் குறிக்கிறது. "நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன்" (1 கொரி 15:30,31) என்கிறார் பவுல். பேதுரு சொல்கிறார்: "நீங்கள் கிறிஸ்துவின்

நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார்" (1 பேதுரு 4:14).

கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? (ரோமர் 8:36)

இந்த வேதபகுதியில் பவுல் கேட்கும் ஆறாவது கேள்வி இது. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கொல்லப்படலாம், அடிக்கப்படலாம் என்பதை முந்தின வசனத்தில் அறிவித்த பவுல், சாத்தான் இத்தகைய பாடுகளை அவர்களில் உருவாக்குவதின் நோக்கம் என்ன என்பதை இந்த வசனத்தின் துவக்கத்திலேயே சொல்கிறார். கிறிஸ்துவின் அன்பைவிட்டு அவர்களைப் பிரிக்கவேண்டும் என்பதற்காகவே இவற்றையெல்லாம் சாத்தான் நடப்பிக்கிறான். ஆனாலும் அவன் தோல்வி அடையப்போவது உறுதி என்கிறார் பவுல். இந்த வசனத்தில் சொல்லப்படும் ஏழு வாதைகளையும் பவுல் அனுபவித்திருக்கிறார்.

"கிறிஸ்துவின் அன்பு" என்ற வார்த்தை இரண்டு காரியங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

1) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்துவின்மேல் வைக்கும் அன்பு

2) கிறிஸ்து தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் வைக்கும் அன்பு (எபே 3:18,19)

ஆனாலும் முந்தின வேதபகுதியில் தேவனுடைய தீர்மானம், முன்னறிவு, முன்குறித்தல், அழைப்பு, நீதிமானாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் ஆகியவற்றைக் குறித்து பவுல் பேசுவதினால் கிறிஸ்து சபையின்மேல் வைக்கும் அன்பையே இது குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். நாம் தேவன்மேல் வைக்கும் அன்பைவிட அவர் நம்மேல் வைக்கும் அன்பே நிரந்தரமானது, நித்தியமானது, மாறாதது. மாறாத அந்த அன்பே அவரைப் பரலோகத்திலிருந்து கீழே இறங்கிவரச் செய்தது. அது எவ்வளவு ஆழமானது என்றால் அது அவரை கல்வாரிக்கு வழிநடத்தியது. அது எவ்வளவு அகலமானது என்றால் அது அவர் தன் ஜீவனைவிட காரணமாக இருந்தது.

மனிதர்களின் அன்பு குறைவானது, பலவீனம் நிறைந்தது,

மாறக்கூடியது. "நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10). "அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:7). "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப்பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்" (1 யோவான் 3:1). "அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்" (1 யோவான் 4:19). எல்லாவற்றுக்கும் மேலாக "தேவன் அன்பாகவே இருக்கிறார்; அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 4:16).

பல்வேறு உபத்திரவங்களை பவுல் இந்த வசனத்தில் பட்டியலிட்டுக்காட்டுவது, "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" (யோவான் 16:33) என்ற வசனத்தை நினைவுபடுத்துகிறது. பல்வேறு காலகட்டங்களில் விசுவாசிகள் சந்தித்த உபத்திரவங்கள் எபி 11:33-38ல் சொல்லப்பட்டிருக்கின்றன. பவுல் தன்னுடைய அனுபவங்களை இவ்விதமாகச் சொல்கிறார்: "நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன், அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளர்களால் வந்த மோசங்களிலும் என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், அந்நிய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும், பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" (2 கொரி 11:23-27).

இந்த வசனத்தில் 'வியாகுலம்' என்ற வார்த்தை உள்ளான மனப்போராட்டத்தையும், 'துன்பம்' என்ற வார்த்தை வெளிப்படையான நெருக்கங்களையும், பசி, நிர்வாணம் என்ற வார்த்தைகள் பொருளாதார தரித்திரத்தையும், நாசமோசம், பட்டயம் என்ற வார்த்தை எதிரிகளால்வரும்

ஆபத்துக்களையும் குறிப்பிடுகின்றன. இந்த வசனங்களை வாசிக்கும்போது கிறிஸ்துவின் ஊழியக்காரர்களாகிய நாம், அவர் நிமித்தமாக ஏற்றுக்கொண்ட பாடுகளை பவுல் அனுபவித்த பாடுகளோடு ஒரு நிமிடம் ஒப்பிட்டுப் பார்ப்போமா? சற்று யோசித்துப்பாருங்கள்.

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிற வராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. (ரோமர் 8:37)

"இவையெல்லாவற்றிலேயும்" என்று பவுல் சொல்லும்போது முந்தின வசனத்தில் அறிவித்த உபத்திரவம், வியாகுலம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் ஆகிய ஏழு பாடுகளோடு அதற்கு முந்தின வசனம் குறிப்பிட்ட மரணபயத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய நாம் பலவிதமான போராட்டங்களை சந்தித்தே ஆகவேண்டும். பவுல் சொல்கிறபடி "மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே 6:12).

இவைகள் எல்லாவற்றிலேயும் நாம் ஜெயம்கொள்கிறோம் hypernikōmen என்றால் அதற்குக் காரணம் நாம் அல்ல. கிறிஸ்துவின் அன்பு. **நம்முடைய பெலன், திறமை, சாமர்த்தியம், தகுதி நமக்கு எந்த விதத்திலும் இந்த போராட்டத்தில் வெற்றியைத் தருவதில்லை.** கிறிஸ்துவே நம்மை வெற்றி சிறக்க வைக்கிறார் என்பதினால்தான் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி 15:57) என்கிறார் பவுல்.

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங் களானாலும், வருங்காரியங்களானாலும் (ரோமர் 8:38)

36-வது வசனத்தில் ஏழு உலக ரீதியான பாடுகளை பவுல் குறிப்பிட்டதைப் பார்த்தோம்.

1)	உபத்திரவம்	2)	வியாகுலம்
3)	துன்பம்	4)	பசி
5)	நிர்வாணம்	6)	நாசமோசம்
7)	பட்டயம்		

நம்மில் அன்புகூருகிற கிறிஸ்துவினால் நாம் அவைகளில் ஜெயம் கொள்ளுகிறோம்.

இந்த வசனத்திலும் அடுத்த வசனத்திலும் பத்து காரியங்களில் சிலவற்றை ஜோடி ஜோடியாகக் குறிப்பிட்டு அவையும் நம்மை தேவனுடைய அன்பைவிட்டு பிரிக்கமுடியாது என்கிறார். ஏழு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

8) மரணம் 9) ஜீவன்
10) தேவ தூதர்கள் 11) அதிகாரங்கள்
12) வல்லமைகள்
13) நிகழ்காரியங்கள் 14) வருங்காரியங்கள்
15) உயர்வு (வசனம் 39) 16) தாழ்வு (வசனம் 39)
17) வேறு எந்த சிருஷ்டிகள் (வசனம் 39)

மரணம் நம்மை தேவனுடைய அன்பைவிட்டுபிரிக்காது என்கிறார் பவுல். மரணத்துக்குப் பயப்படாத மனிதர்களே உலகில் இல்லை என்று சொல்லலாம். உலகில் பிறந்த அத்தனைபேருக்கும் மரணம் நியமிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய பரிசுத்தவான்களும் மரணத்தைச் சந்திக்கிறார்கள் என்பதினால் தேவன் அவர்களை நேசிக்கவில்லை என்று சொல்லமுடியாது. அவர்களின் மரணம் அவர்களை உடனடியாகத் தேவனோடு ஐக்கியப்படுத்துகிறது என்பதினால் பவுல் சொல்கிறார்: "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாக விரும்புகிறோம்" (2 கொரி 5:8).

அடுத்ததாக மரணத்தின் ஜோடியான ஜீவனைக்குறித்து பேசுகிறார். "ஜீவனாகிலும், மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும், வருங்காரியங்களாகிலும் எல்லாம் உங்களுடையது" (1 கொரி 3:22) என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஜீவனோடிருக்கும் நாட்களில் பல போராட்டங்களைச் சந்திக்கவேண்டியதிருக்கும். ஆனாலும் கர்த்தர் நம்முடைய மேய்ப்பராயிருக்கிறபடியால் நாம் குறைவுபடுவதில்லை (சங் 23:1). அவர் நம்மை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடு மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவராய் இருக்கிறார் (யூதா 24), சகல போராட்டங்களிலும் நாம் வெற்றியடைவது உறுதி.

அடுத்ததாக தேவதூதர்களை பவுல் குறிப்பிடுகிறார், "தூதர்கள்"

என்ற வார்த்தை பரிசுத்தமான தூதர்களையும் (எபி 1:14) பொல்லாத ஆவிகளையும் (யூதா 6, மத் 18:10, 1 கொரி 6:3) பொதுவான முறையில் குறிப்பிட்டாலும், இந்த இடத்தில் விழுந்துபோன தூதர்களையே குறிப்பிடுகிறது. "நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா 1:8) என்கிறார் பவுல். தூதர்கள் மூலமாகக்கூட நாம் இடறல் அடைந்துவிடக்கூடாது. "சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டு நம்மிடம் வரலாம்" (2 கொரி 11:14). "அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே" (2 கொரி 11:15) என்கிறார் பவுல். சாத்தானுடைய ஊழியக்காரர்கள் பலர் உலகில் செயல்படுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

'அதிகாரம்' என்ற வார்த்தையை பவுல் பல இடங்களில் பயன்படுத்தினாலும் (கொலோ 1:16, 2:10) அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்று சரியாக சொல்லமுடியவில்லை. கொலோசெயர் 2:15, 1 கொரி 15:24ல் அது அதிகாரம் படைத்த தூதர்களைக் குறிப்பிடுகிறது. அரசாங்கம், நீதிமன்றம் மற்றும் அதிகாரிகளும் அதிகாரம் உடையவர்கள்தான்.

'வல்லமை' என்ற வார்த்தை அதிகாரத்தோடு இணைத்து பவுல் சொல்வதாக சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். வியாதி, மரணம், பொருள் நஷ்டம் மூலமாக மனிதர்களுக்கு எதிராக சாத்தான் கொண்டுவரும் போராட்டங்களும் வல்லமை என்று அழைக்கப்படலாம்.

இறுதியில் நிகழ்காலங்களும், வருங்காலங்களும் தேவனுடைய அன்பைவிட்டு பிரிக்கமுடியாது என்கிறார் பவுல். கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் கடந்துபோன கடினமான அனுபவங்களானாலும் சரி, நாம் பயத்தோடும் கலக்கத்தோடும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் வருங்கால நிகழ்ச்சிகளானாலும் சரி, அவற்றால் தேவன் மேல் வைத்திருக்கும் நம்முடைய அன்பில் எந்தவிதமான பாதிப்பும் உண்டாகக்கூடாது. தேவன் அனுமதிக்காத எந்த ஒரு காரியமும் நம்முடைய வாழ்க்கையில் நடந்ததுமில்லை, நடக்கப்போவதும் இல்லை என்ற நம்பிக்கையோடு இருப்போம். "கர்த்தர் நல்லவர்" என்பதை நம்புவோம்.

உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப்

பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:39)

"அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்" என்று பரிதாபமாகப் பேசிய பவுலின் இப்போதைய நிச்சயம் என்ன என்பதைக் கவனியுங்கள். பிதாவாகிய தேவன் மனித இனத்தின் இரட்சிப்புக்காக தன்னுடைய குமாரனையே கொடுத்தார். தன்னுடைய அன்பினிமித்தமே அவர் அதைச் செய்தார். எனவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு எந்த சக்தியாலும் நம்மைப் பிரிக்கமுடியாது என்ற நிச்சயம் நம்மிடம் இருக்கிறதா? யோவான் 13:1 சொல்லுகிறது: "தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார்".

கிறிஸ்தவ வாழ்க்கையில் நமக்கு உயர்வும் உண்டு, தாழ்வும் உண்டு. யோபுவின் வாழ்க்கையில் மேன்மையான நிலையும் இருந்தது. தாழ்மையான நிலையும் இருந்தது. "கிழக்கத்திப் புத்திரர் எல்லாரிலும் பெரியவனாயிருந்தான்" (யோபு 1:3) என்று அவருடைய செழிப்பைக்குறித்து சொல்லப்பட்டிருக்கிறது. அந்த நாட்களிலும் தன்குமாரர் பாவஞ்செய்து, தேவனைத் தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்களோ என்ற பயத்தோடு அவர்களுக்காக தேவனுக்கென்று சர்வாங்க தகனபலிகளை செலுத்தி வந்தார் (யோபு 1:5). தாழ்த்தப்பட்ட நிலையிலும் : "தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ" (2:10) என்று தன் மனைவியிடம் சொல்கிறார். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15) என்கிறார்.

"வேறெந்த சிருஷ்டியானாலும்" என்று பவுல் எதைக் குறிப்பிடுகிறார் என்பதை திட்டவட்டமாகச் சொல்லமுடியவில்லை. பவுலின் நாட்களில் இனங்கண்டு கொள்ளக்கூடாத பல சிருஷ்டிகள், விலங்கினங்கள், நட்சத்திரங்கள், விண்கோள்கள் இருந்திருக்கலாம். இன்றைய விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பவுல் அவைகளைக் குறிப்பிடுகிறாரா? அவைகளினாலும் நம்மை தேவனுடைய அன்பைவிட்டுப்பிரிக்க முடியாது.

36-வது வசனத்தில் பிதாவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? என்ற கேள்வி எழுப்பிய பவுல் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு யாரும்

நம்மைப்பிரிக்கமுடியாது என்கிறார். **தேவன் நம்மை நேசிக்கிறார் என்பது உண்மைதான். கிறிஸ்துவுக்குள் நம்மை நேசிக்கிறார் என்பதே மேன்மையான உண்மை. கிறிஸ்துவன்றி தேவனால் மனிதன் ஒருவனையும் நேசிக்கமுடியாது.** கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை நேசிப்பதினால் அதைக்குறித்த நிச்சயத்தை பவுல் பெற்றிருக்கிறார். தன்னுடைய, இன்னும் சில நிச்சயத்தையும் நம்பிக்கைகளையும் குறித்து ரோமர் 15:14, 2 கொரி 2:3, கலா 5:10, பிலிப் 3:3, 2 தெச 3:4 ஆகிய வசனங்களிலும் பவுல் பேசுகிறார்.

இந்த வேதபகுதி கற்றுத்தரும் காரியங்கள்:

1) கிறிஸ்தவர்களாயிருப்பது நாம் பெற்றுக் கொண்ட மிகப்பெரிய மேன்மை

2) இன்று நாம் அனுபவிக்கும் பாடுகளை, நாம் பெறவிருக்கும் மகிமையோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், அவற்றில் ஒன்றுமே இல்லை.

3) எனவே கிறிஸ்தவர்கள் எதினிமித்தமும் முறுமுறுக்கிறவர்களாக இருக்கக்கூடாது.

4) தன் இரட்சிப்பைக் குறித்த பூரணமான நிச்சயத்தை உடையவனே உண்மையான கிறிஸ்தவன்.

இந்த அதிகாரத்தோடு ரோமர் நிருபத்தின் ஒரு முக்கியமான பகுதி நிறைவடைகிறது. முந்தின 7-வது அதிகாரத்தில் தனக்குள் பாவம் வாசமாயிருப்பதின் விளைவாக ஒரு கிறிஸ்தவனின் நிர்ப்பந்தமான நிலமையைக் குறித்து வேதனையோடு பேசிய பவுல், 8-வது அதிகாரத்தில் அவனில் பரிசுத்த ஆவியானவர் செயல்படுவதன் விளைவாக தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு இல்லை என்ற நிச்சயங்கொண்டவராய், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?" என்று அதிகாரத்தோடு பேசுகிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்ட மேலான, ஆவிக்குரிய நித்தியத்துக்கடுத்த ஆசீர்வாதங்களை எல்லாம் சுதந்தரித்துக்கொள்ள ஒரு மனிதன் எவ்வாறு தகுதிபெறுகிறான்? உண்மையில் தகுதி அவனுடையது அல்ல. அவனை பிதாவாகிய தேவன் கிறிஸ்துவுக்குள் வைப்பதின் மூலமாகவே இது சாத்தியமாகிறது. இந்த விளக்கவுரையை எழுதிக்கொண்டிருக்கும்போது என்னுடைய அறைக்குள் இருக்கிறேன். அதன் பொருள் என்ன? என்னை சுற்றி நான்குபக்கமும் அறைச்சுவர்கள்

இருக்கின்றன. என் தலைக்கு மேல் அறையின் மேற்கூரை இருக்கிறது. என் கால்களுக்குக் கீழாய் தரை (அறையின் நிலத்தளம்) இருக்கிறது. எனவே நான் அறைக்குள் இருக்கிறேன். நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதும், நம்மைச்சுற்றிலும் அவர் இருந்து அவர் நமக்குத் தரும் பாதுகாப்பைக் குறிக்கிறது. "நான் அதற்குச் (எருசலேமுக்கு) சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன்" (சக 2:5) என்ற வசனம் கிறிஸ்துவுக்குள் நாம் பெறும் பாதுகாப்பை முன்னறிவிக்கிறது.

9

இஸ்ரவேலின் பாரம்பரியமும் சரித்திரமும்

ரோமர் நிருபத்தில் 9,10,11 அதிகாரங்களில் முந்தின அதிகாரங்களைப்போல் உபதேசத்துக்கடுத்த காரியங்கள் அதிகமாகச் சொல்லப்படவில்லை. ரோமர் நிருபத்தின் ஒரு புதிய பகுதி 9-வது அதிகாரத்தில் துவங்குகிறது. நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், மகிமைப்படுத்தப்படுதல் போன்ற வேதத்தின் மூல உபதேசங்களை இதுவரை அறிவித்த பவுல், இந்த மூன்று அதிகாரங்களில், அவைகளின் அடிப்படையில் தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேலரின் நம்பிக்கை என்ன என்பதை ரோமாபுரியில் உள்ள சபையாரிடம் தெரிவிக்கிறார்.

இந்த மூன்று அதிகாரங்களில் பவுல் அறிவிக்கும் மூன்று காரியங்கள்:

1. புறஜாதியார் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருந்த நாட்களில் இஸ்ரவேலர் தேவனுடைய நேரான வெளிப்பாட்டை பெற்றிருந்தவர்களாக, தெரிந்து கொள்ளப்பட்டவர்களாக இருந்தது உண்மைதான்.
2. ஆனால் இன்று அவர்கள் தேவநீதியை ஏற்றுக்கொள்ளத் தவறியதின் விளைவாக தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.
3. ஆனாலும் அந்தப் புறக்கணிப்பு நிரந்தரமானதல்ல, மகிமையான எதிர்காலத்தை தேவன் இஸ்ரவேலருக்கு நியமித்திருக்கிறார்.

இஸ்ரவேலைக் குறித்த இந்த மூன்று அதிகாரங்களையும் தியானிப்பதற்கு முன்பாக முந்தின எட்டு அதிகாரங்களில் நாம் கற்றுக்கொண்ட உபதேச சத்தியங்களை சுருக்கமாக நினைவுபடுத்திக் கொள்வது பிரயோஜனமாக இருக்கும்.

முதல் இரண்டு அதிகாரங்களில் புறஜாதியாரானாலும் சரி, யூதர்களானாலும் சரி, யாருமே நீதிமான்கள் இல்லை என்பதை திட்டவட்டமாக பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். தேவனுடைய வெளிப்பாடுகளைப் பெற்றிருந்த யூதர்களும் பாவிகள். புறஜாதியாரும் பாவிகளே.

மனிதனுடைய இரட்சிப்பு விசுவாசத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இரட்சிப்பு என்பது விசுவாசத்தில் துவங்கி விசுவாசத்தில் நிறைவடைகிறது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகளின் அடிப்படையில் ஒருவனும் நீதிமானாக்கப்படுவதில்லை. தேவன் மேலுள்ள விசுவாசத்தினால் மட்டுமே நீதிமான் என்றென்றும் வாழ்ந்திருப்பான் என்ற மூல உபதேசம் மூன்றாவது அதிகாரத்தில் அறிவிக்கப்பட்டது.

நான்காவது அதிகாரத்தில் நியாயப்பிரமாணம் வழங்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்த ஆபிரகாமானாலும் சரி, நியாயப்பிரமாணம் வழங்கப்பட்ட பின்பு வாழ்ந்த தாவீதானாலும் சரி, தேவகிருபையினால் வெளிப்பட்ட விசுவாசத்தின் மூலமாகவே நீதிமானாக்கப்பட்டார்கள் என்பதை பவுல் உறுதிப்படுத்தினார்.

ஐந்தாவது அதிகாரம் முந்தினதின் தொடர்ச்சியாக, கிறிஸ்துவுடைய இரத்தத்தின்மீது (மரணத்தில்) ஒரு மனிதன் வைக்கும் விசுவாசத்தினாலேயே அவன் தேவனால் நீதிமானாகக் கருதப்படுகிறான் என்ற சத்தியத்தை அறிவிக்கிறது.

கிறிஸ்துவுக்குள் பாவத்துக்கு மரித்த பரிசுத்தவான்கள், தேவனுக்கென்று பிழைத்திருப்பதினால் பாவத்தின்மேல் அவர்கள் ஜெயங்கொள்கிறவர்களாகிறார்கள் என்னும் கருத்து ஆறாவது அதிகாரத்தில் சொல்லப்படுகிறது.

ஏழாவது அதிகாரத்தில் ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதன் தனக்குள் வாசமாயிருக்கும் பாவத்தின் விளைவாக சந்திக்கும் ஆவிக்குரிய மரணப் போராட்டத்தையும் நிர்ப்பந்தமான நிலைமையையும் திறம்பட பவுல் விவரிக்கிறார்.

எட்டாவது அதிகாரம் உண்மையிலேயே விலையேறப் பெற்றது. நமக்குள் வாசமாயிருக்கும் பாவத்தை பரிசுத்த ஆவியானவர் மேற்கொள்ளும்படியாக, அவருடைய பரிசுத்தமாக்கப்படுதலுக்கு முழுமையாக ஒப்புக்கொடுப்பதிலேயே இரட்சிப்பில் நாம் நிலைத்திருக்கமுடியும் என்பதை பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். நம்மைப்பற்றிய தேவனுடைய இரட்சிப்பின் தீர்மானம், தேவ அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருப்பதினால், கர்த்தராகிய இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மை எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது என்ற அறிவிப்போடு ரோமர் நிருபத்தின் முதலாவது பகுதி - இந்த எட்டாவது அதிகாரத்துடன் முடிவடைகிறது.

இதன் தொடர்ச்சியாக 12-வது அதிகாரம் அமைகிறது. இதற்கு இடைப்பட்ட மூன்று அதிகாரங்களில் பவுல் இஸ்ரவேலர்களைக் குறித்த காரியங்களை அறிவிக்கிறார்.

அதிகாரம் 9 : **இஸ்ரவேலின் பாரம்பரிய சரித்திரம்**

> எத்தனையோ ஜாதிகள் மத்தியில் தேவன் இஸ்ரவேலை தனக்கென்று தெரிந்துகொண்டு, மேன்மைப்படுத்தி, மேசியாவை அவர்களில் பிறக்கச் செய்தார்.

அதிகாரம் 10 : **இஸ்ரவேலின் தற்போதைய நிலை**

> தான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலை அவர்களுடைய கீழ்ப்படியாமையினிமித்தம் புறக்கணித்து, தன் இரட்சிப்பின் திட்டத்தில் புறஜாதியாரை இணைத்துக் கொண்டார்.

அதிகாரம் 11 : **இஸ்ரவேலின் மகிமையான எதிர்காலம்**

> இந்த புறக்கணிப்பின் மூலம் இஸ்ரவேல் சிட்சிக்கப்பட்டாலும் அவர்களுடைய சகல அவபக்தியையும் நீக்கி, இஸ்ரவேலை மீண்டுமாக இரட்சித்து மகிமைப்படுத்துவார்.

இஸ்ரவேலரைக் குறித்து பவுலின் வேதனை (வசனம் 1-3)

எனக்கு மிகுந்த துக்கமும் இடைவிடாத மனவேதனையும் உண்டாயிருக்கிறது. (ரோமர் 9:1)

நிருபத்தின் துவக்கத்தில் "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16) என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். கிரேக்கர் என்ற வார்த்தை புறஜாதியாரைக் குறிப்பிடுவதினால் மனித இனம் யூதர், கிரேக்கர் என்று இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டது.

புறஜாதியாரைப் பொறுத்தவரை கிறிஸ்துவின் சுவிசேஷம் அவர்களுடைய விசுவாசத்தின் அடிப்படையில் எவ்வாறு இரட்சிப்பை உண்டாக்குகிறது என்பதை முதல் எட்டு அதிகாரங்களில் பவுல் அறிவித்துவிட்டு, 9, 10, 11-வது அதிகாரங்களில் இரட்சிப்பைப் பொறுத்தவரை தன்னுடைய இனத்தாராகிய யூதர்களின் நிலை என்ன என்பதைச் சொல்கிறார்.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை யூதர்கள் முதலாவதாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக, தான் ஊழியம் செய்யும் பட்டணங்களில் எல்லாம் அவர்களுடைய ஜெப ஆலயங்களில்தான் பவுல் பிரசங்கித்தார் என்பது அப்போஸ்தலருடைய நடபடிகளில் பல இடங்களில் அறிவிக்கப்படுகிறது. அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளாததினிமித்தம் பவுல் துக்கமடைகிறார் என்பது மட்டுமல்ல, இடைவிடாத மனவேதனை அடைவதாகச் சொல்லுகிறார். அந்த வருத்தம் அவருடைய வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியாக இருந்திருக்கவேண்டும். சுவிசேஷத்தைப் புறக்கணித்ததினிமித்தம் இஸ்ரவேல் சந்திக்கவிருக்கும் பேரழிவு அவர் கண்களுக்கு முன் இருந்திருக்கவேண்டும். "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று. இதோ, உங்கள் வீடு உங்களுக்குப் பாழாக்கிவிடப்படும்" (லூக்கா 13:34,35) என்று இஸ்ரவேலின் அழிவினிமித்தம் இயேசு கண்ணீர்விட்டார் என்பதை லூக்கா 19:41-44, மத் 23:37-39 வசனங்களில் வாசிக்கிறோம். இந்த அழிவிலிருந்து இஸ்ரவேல் காத்துக்கொள்ளப்படவேண்டும் என்பதே பவுலின் ஆத்தும பாரம். இதினிமித்தமாகவே தான் வேதனைப்படுவதாக பவுல் சொல்கிறார்.

நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது. (ரோமர் 9:2)

2 கொரி 11:31ல் பவுல் சொல்கிறார்: "நான் பொய் சொல்லுகிறதில்லை". கலா 1:20ல் சொல்கிறார்: "நான் உங்களுக்கு எழுதுகிற இவைகள் பொய்யல்லவென்று தேவனுக்குமுன்பாக நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்". 1 தீமோ 2:7ல் சொல்லுகிறார்: "நான் பொய்சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்" இவ்வாறு பொதுவான முறையில் தான் சொல்வது பொய்யல்ல என்று சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் மூன்று காரியங்களைச் சொல்லி, இஸ்ரவேலரைக் குறித்த தன்னுடைய ஆத்துமபாரம் உண்மையானது என்கிறார்.

1) பவுல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்கிறார்.

2) பவுல் பரிசுத்த ஆவிக்குள் சாட்சியிடுகிறார்.

3) பவுலின் மனச்சாட்சியும் அவர் சொல்வதை உறுதிப்படுத்துகிறது.

இயேசு கிறிஸ்துவுக்குள் தன்னை மறைத்துக்கொள்ளும் ஒரு மனிதன் பொய் பேசுவதில்லை. 2 கொரி 2:17ல் பவுல் சொல்கிறார்: "அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவ சந்நிதியில் பேசுகிறோம்". **தேவ வசனம் கலப்பாகப்படக்கூடும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். இந்த கடைசி நாட்களில் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது.** 2 கொரி 12:19ல் சொல்லுகிறார்: "நாங்கள் யோக்கியர்களென்று விளங்கும்படி உங்களிடத்தில் பேசுகிறோமென்று எண்ணுகிறீர்களோ? தேவனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள் பேசுகிறோம்".

யூதர்களினிமித்தம் பவுல் அனுபவிக்கும் வேதனைகளைக் குறித்த சாட்சி பரிசுத்த ஆவிக்குள் அடங்கியிருக்கிறது. எந்த அளவு யூதர்கள் பவுலைப் பகைத்தார்கள் என்பது அப்போஸ்தலருடைய நடபடிகளில் சொல்லப்பட்டிருக்கிறது. 1 தெச 2:15,16ல் பவுல் சொல்கிறார்: "அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து, புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள் மேல் கோபாக்கினை

பூரணமாய் வந்திருக்கிறது". இவ்வாறு யூதர்களுக்கும் பவுலுக்குமிடையே மிகப்பெரிய விரோதம் காணப்பட்டதினால் மூன்றாவதாக தன்னுடைய மனச்சாட்சியையும் தன்னுடைய அறிக்கைக்கு ஒரு சாட்சியாகக் கொண்டு வருகிறார். இரண்டு மூன்று சாட்சிகளின் அடிப்படையிலேயே ஒரு காரியத்தைக் குறித்து நிர்ணயம் பண்ணமுடியும் (உபா 17:6, 19:15).

அப் 23:1, 2 கொரி 1:12; 4:2; 5:11, 1 தீமோ 1:5,19; 3:9, 2 தீமோ 1:4, தீத்து 1:15 ஆகிய வசனங்களிலும் பவுல் தன்னுடைய மனச்சாட்சியைக்குறித்துப் பேசுவதைப் பார்க்கிறோம். நம்முடைய பொதுவான செயல்பாடுகள் அல்லது நடவடிக்கைகள் சரியானதா என்பதை நம் உள்மனது முடிவுசெய்கிறது. அது நீதியானதாகக் கருதப்பட்டால் மனச்சாட்சி அதை அங்கீகரிக்கிறது. நாம் நல்மனச்சாட்சியை உடையவர்களாகிறோம் (அப் 23:1, 1 தீமோ 1:5,19, எபி 13:18, 1 பேதுரு 3:11,21). அங்கீகரிக்கவில்லை என்றால் துர்மனச்சாட்சி அல்லது பாவ உணர்வுடையவர்களாகிறோம் (யோவான் 8:9, ரோமர் 2:15, தீத்து 2:15; எபி 10:22).

ஆனாலும் ஒரு மனிதன் தன்னுடைய மனச்சாட்சியை முற்றிலுமாக நம்பிவிடக்கூடாது என்பதினால் அதைப் பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்குள் கொண்டுவந்து பவுல் பேசுகிறார். ஆவியானவர் நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கும்போது மட்டுமே (ரோமர் 8:16) மனச்சாட்சியின் செயல்பாடு சீரானதாகவும், உண்மையுள்ளதாயும் இருக்கும்.

மாம்சத்தின்படி என் இனத்தாராகிய என் சகோதரருக்குப் பதிலாக நானே கிறிஸ்துவைவிட்டுச் சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே. (ரோமர் 9:3)

சற்று நேரத்துக்கு முன்பாக "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்" (ரோமர் 8:36) என்று சவாலிட்டுப் பேசிய அப்போஸ்தலனாகிய பவுல் தனகுண்டான அளவுகடந்த ஆத்துமபாரத்தினால், அவர்களுக்குப் பதிலாக கிறிஸ்துவைவிட்டு சபிக்கப்பட, அதாவது கிறிஸ்துவிலிருந்து துண்டிக்கப்பட தான் ஆயத்தமாக இருப்பதாகச் சொல்வது நிச்சயமாகவே குழப்பமானதாகத்தான் இருக்கிறது. "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா 2:20) என்று பேசிய பவுல் எவ்வாறு தான் கிறிஸ்துவைவிட்டு சபிக்கப்பட்டவனாக போகட்டும் என்று சொல்லமுடியும்? மூலபாஷையில் இந்த வசனம் இப்படிப்பட்ட அர்த்தம் உடையதல்ல என்று பல வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

"சபிக்கப்பட்டவன்" என்பதற்கு பவுல் பயன்படுத்தும் வார்த்தையாகிய anathema தேவ ஐக்கியத்திலிருந்து நிரந்தரமானமுறையில் பிரிக்கப்படுவதைக் குறிப்பிடுகிறது. சாபத்தீட்டையும் (லேவி 27:21, எண் 18:14), சாபத்துக்குள்ளாக்கும் அருவருப்பையும் (உபா 7:26) இந்த வார்த்தை பின்னணியாகக் கொண்டிருக்கிறது. தன்னுடைய இனத்தாராகிய யூதர்களுடைய இரட்சிப்புக்கென்று தான் ஏதேனும் உதவி செய்யக்கூடுமானால், கிறிஸ்துவைப் புறக்கணிக்கவும், அல்லது அவரால் புறக்கணிக்கப்படவும் ஆயத்தம் என்ற முறையில் பவுல் பேசுகிறாரா? தனக்கு விரோதமாய் துன்மார்க்கமாய் செயல்பட்டு, கொலை செய்யப்பட்ட அப்சலோமினிமித்தம் "என் மகனாகிய அப்சலோமே, நான் உனக்குப் பதிலாகச் செத்தேனானால் நலமாயிருக்கும்" (2 சாமு 18:33) என்று அழுது புலம்பிய தாவீதைப்போல் பவுல் மாறிவிட்டாரா?

இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனையினிமித்தம் தேவன் அவர்களைத் தண்டிக்கிறார். அப்போது மோசே எவ்வாறு ஜெபிக்கிறார் என்று பாருங்கள்: "தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" (யாத் 32:32), சங்கீதம் 106:23 சொல்கிறது, "அவர்களை நாசம் பண்ணுவேன் என்றார் (தேவன்); அப்பொழுது அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்களை அவர் அழிக்காதபடிக்கு, அவருடைய உக்கிரத்தை ஆற்றும்பொருட்டு, அவருக்கு முன்பாகத் திறப்பின் வாயிலே நின்றான்".

முழுவேதத்திலும் மோசேயும் பவுலும் மட்டும்தான் மற்றவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு தாங்கள் நரகத்துக்குப் போக ஆயத்தம் என்று விண்ணப்பித்திருக்கிறார்கள். இது அவர்களுடைய சுயநலமற்ற தியாகம் நிறைந்த அன்பைக் காட்டுகிறது என்பது உண்மைதான். ஆனாலும், "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" (மத் 22:29) என்றுதான் தேவன் சொல்லியிருக்கிறார். **உன்னைவிட அதிகமாக பிறனை நேசிக்கும்படியாக அவர் சொல்லவில்லை.** உன்னை சபித்து, தேவ சமுகத்தில் ஆக்கினைக்குள்ளாக உன்னை நியாயந்தீர்த்து, பிறனை நேசிக்கும்படியாக எந்த இடத்திலும் வேதத்தில் ஆலோசனை சொல்லப்படவில்லை. சிருஷ்டிக்கப்பட்ட மனிதனில் அன்புகூர்ந்து சிருஷ்டிகரின் அன்பை இழக்கத்துணிவது புத்திசாலித்தனம் அல்ல.

பவுலின் அறிவிப்பில் ஒரு நல்ல காரியத்தையும் பார்க்கிறோம். யூதர்களினிமித்தம் தான் கிறிஸ்துவைவிட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே என்றுதான் பவுல் சொல்கிறார். தான்

சபிக்கப்பட்டவனாகப் போகட்டும் என்று அவர் சொல்லவில்லை. **மனிதர்களின் இரட்சிப்பைக் குறித்து கரிசனை இல்லாதவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது.** இதன் அடிப்படையில் மோசேயைப்போல பவுலும் உணர்ச்சிவசப்பட்டவராக ஆத்துமபாரத்தோடு இப்படி பேசுவதாகவே எடுத்துக்கொள்ளவேண்டும். ஆத்தும பாரம் நல்லதுதான். பவுல் மிகுந்த ஆத்துமபாரம் உள்ளவர் (1 கொரி 9:19-23). பாவ மனிதனை மீட்கும்படியாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவமானார் (2 கொரி 5:21), சாபமானார் (கலா 3:13). அவரைவிட கூடுதலான ஆத்துமபாரம் நமக்கு இருக்கவேண்டியதில்லை.

இஸ்ரவேலின் மேன்மை (வசனம் 4-5)

அவர்கள் இஸ்ரவேலரே; புத்திரசுவிகாரமும், மகிமையும் உடன்படிக்கைகளும், நியாயப்பிரமாணமும், தேவாராதனையும், வாக்குத்தத்தங்களும் அவர்களுடையவைகளே. (ரோமர் 9:4)

யூதர்களின் பாரம்பரிய மேன்மை என்ன என்பதை 4,5 ஆகிய இரண்டு வசனங்களில் பவுல் மிகவும் சுருக்கமாக அறிவிக்கிறார்.

1) அவர்கள் இஸ்ரவேலர் என்று அழைக்கப் படுகிறவர்கள் (யாக்கோபின் வம்சத்தார்)

2) அவர்கள் புத்திர சுவிகாரமுடையவர்கள் (தேவன் தெரிந்துகொண்ட அவருடைய பிள்ளைகள்)

3) அவர்கள் மகிமையை உடையவர்கள் (தேவ மகிமையை அடையப்போகிறவர்கள்)

4) அவர்கள் உடன்படிக்கையை உடையவர்கள் (தேவன் அவர்களுடன் ஒப்பந்தம் செய்திருக்கிறார்)

5) அவர்கள் நியாயப்பிரமாணத்தை உடையவர்கள் (அவர்களுக்கு மட்டுமே நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது)

6) அவர்கள் தேவாராதனையை உடையவர்கள் (அவர்கள் மட்டுமே தேவனுடைய வழிபாட்டு முறையை அறிந்தவர்கள்)

7) அவர்கள் வாக்குத்தத்தத்தை உடையவர்கள் (அவர்கள் மட்டுமே தேவனிடமிருந்து வாக்குறுதிகளைப் பெற்றிருக்கிறார்கள்)

இஸ்ரவேலர் என்று அழைக்கப்படுவது யாக்கோபின் சந்ததியார் என்ற முறையில் யூதர்கள் பெற்றுக்கொண்ட முதலாவது சிலாக்கியம். சூரியன் உதயமாகும்வரை "நீர் என்னை ஆசீர்வதித்தே ஆகவேண்டும்" என்று போராடியதினிமித்தம் தேவன், "உன் பேர் இனி யாக்கோபு (எத்தன்) என்னப்படாமல் இஸ்ரவேல் (தேவனுக்காக / தேவனுடன் போராடுகிறவன்) என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே" (ஆதி 32:28) என்கிறார்.

இஸ்ரவேல் என்ற வார்த்தை பொதுவாகவே வேதத்தில் ஒரு கனத்துக்குரிய வார்த்தையாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவான் 1:47, ஏசாயா 43:1; 45:3,4, யாத் 6:6, எண் 23:10). சங்கீதம் 135:4 சொல்கிறது: "கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்துகொண்டார்". தாவீது சொல்கிறார்: "உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு நிகரான ஜனமும் உண்டோ? பூலோகத்து ஜாதிகளில் இந்த ஒரே ஜாதியைத் தேவன் தமக்கு ஜனமாக மீட்கிறதற்கும், தமக்குக் கீர்த்தி விளங்கப்பண்ணுகிறதற்கும் ஏற்பட்டாரே" (2 சாமு 7:23).

யூதர்கள் தேவனுடைய புத்திரசுவிகாரத்தை உடையவர்கள் என்பது அவர்கள் பெற்றுக்கொண்ட இரண்டாவது மேன்மை. "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" (யாத் 4:22) "இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன்" (ஓசியா 11:1) என்கிறார் தேவன். மோசே சொல்கிறார்: "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்" (உபா 7:6). "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரின் பிள்ளைகள்" (உபா 14:1). யூதர்கள் "ராஜ்யத்தின் பிள்ளைகள்" (மத் 8:12) என்று அழைக்கப்படுவதை கவனியுங்கள். அவர்களைத் தண்டிக்கும்போதும் தேவன், "எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன்" (எரே 31:20) என்று தேவன் இஸ்ரவேலுக்காக இரங்குவதைப் பாருங்கள்.

மூன்றாவதாக "மகிமை" அவர்களுடையது என்கிறார் பவுல். இந்த வார்த்தை தேவபிரசன்னத்தை அறிவிக்கிறது. "கர்த்தருடைய மகிமை சீனாய் மலையின்மேல் தங்கியிருந்தது" (யாத் 24:16). "மலையின் கொடுமுடியிலே கர்த்தருடைய மகிமையின் காட்சி இஸ்ரவேல் புத்திரருடைய கண்களுக்குப் பட்சிக்கிற அக்கினியைப் போல் இருந்தது"

(யாத் 24:17) என்று வாசிக்கிறோம். அக்கினி ஸ்தம்பமாகவும் மேக ஸ்தம்பமாகவும் தேவனுடைய மகிமை அவர்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கானானுக்குள் வழிநடத்தியது (யாத் 13:21,22; 14:19,20). "கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பினதினால் மோசே ஆசரிப்புக்கூடாரத்துக்குள் பிரவேசிக்கக்கூடாமல் இருந்தது" (யாத் 40:35) என்று வாசிக்கிறோம். சாலொமோன் கட்டிய ஆலயத்தைக் குறித்தும், "கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று" (1 இராஜா 8:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் யாத் 16:7,10; 24:16; 40:34,38, 1 இராஜா 8:10,11, 2 நாளா 5:14; 7:1-3, எசேக் 1:28 வாசித்துப்பாருங்கள்.

ஆண்டவராகிய தேவன் அவர்களோடு உடன்படிக்கை செய்திருந்தார் என்பது யூதர்கள் பெருமைப்படக்கூடிய நான்காவது காரியம் என்பதாக பவுல் அறிவிக்கிறார். சபையைக் குறித்து பேசும்போது, அவர்கள் "வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியர்" (எபே 2:12) என்று பவுல் குறிப்பிட்டு, எந்த புறஜாதியாரோடும் தேவன் உடன்படிக்கை செய்துகொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறார். **தேவன், தன்னுடைய சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் மனிதர்களுக்கு வழங்கும் வாக்குறுதியே வாக்குத்தத்தம் எனப்படும்.** நான்கு முக்கியமான உடன்படிக்கைகளைக் குறித்து வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆபிரகாமுடன் உடன்படிக்கை :

எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் இல்லாமல் தேவன் ஆபிரகாமுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையைக் குறித்து ஆதி 12:1-3; 13:14-17; 15:1-15; 17:4-8; 22:15-18ல் வாசித்துப்பாருங்கள். பிந்தின உடன்படிக்கைகள் எல்லாமே ஆபிரகாமுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின் தொடர்ச்சியே.

சீனாய் மலையின் உடன்படிக்கை :

கீழ்ப்படிதல் என்ற நிபந்தனையின் அடிப்படையில் (உபா 28:1-68) தேவன் இஸ்ரவேலோடு தனிப்பட்ட விதத்திலும், ஒரு தேசம் என்கிற அமைப்பின் அடிப்படையிலும் செய்து கொண்ட உடன்படிக்கையைக் குறித்து உபாகமம் 27:25; 29:14,15; 30:1-10ல் வாசித்துப்பாருங்கள். இது முதலாம் உடன்படிக்கை என்றும் பழைய உடன்படிக்கை என்றும் அழைக்கப்படுகிறது (எபி 8:13; 9:15)

தாவீதுடன் உடன்படிக்கை :

தாவீதின் வீட்டைக்குறித்தும், ராஜ்யத்தைக் குறித்தும்,

அவருடைய சந்ததியைக்குறித்தும் (கிறிஸ்து) தேவன் அவருடன் உடன்படிக்கை செய்து (2 சாமு 7:14-16) "தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" (ஏசாயா 55:3) என்கிறார்.

புதிய உடன்படிக்கை :

நிபந்தனையற்ற இந்த உடன்படிக்கையை எரேமியா 31:31-34 முன்னறிவிக்கிறது. இது குறித்து கூடுதலாக எரேமியா 32:37-41; எசேக் 34:22-24; 37:21-28ல் சொல்லப்பட்டு எபிரெயர் 8:6-13ல் உறுதிப்படுத்தப்படுகிறது. முதலாம் உடன்படிக்கை நியாயப்பிரமாண கிரியைகளை அடிப்படையாகக் கொண்டது. புதிய உடன்படிக்கை கிருபையை அடிப்படையாகக் கொண்டது.

யூதர்களுக்கு மோசே மூலமாக சீனாய் மலையில் வழங்கப்பட்ட நியாயப்பிரமாணம் (யாத் 20) யூதர்கள் சுதந்தரித்துக்கொண்ட ஐந்தாவது சிலாக்கியமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தைக் குறித்த பல காரியங்களை முந்தின அதிகாரங்களில் தியானித்திருக்கிறோம். தேவன் வேறு எந்த ஜாதியோடும் நேரடியாக பேசி இடைபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சங்கீதம் 147:19,20 சொல்கிறது: "யாக்கோபுக்குத் தம்முடைய வசனங்களையும், இஸ்ரவேலுக்குத் தமது பிரமாணங்களையும் தமது நியாயங்களையும் அறிவிக்கிறார். அவர் வேறே எந்த ஜாதிக்கும் இப்படிச் செய்ததில்லை; அவருடைய நியாயங்களை அறியாமற் போகிறார்கள்".

ஆறாவதாக, தேவாராதனை என்று பவுல் சொல்லும்போது அது தேவனால் அங்கீகரிக்கப்படும் பலிகள், பண்டிகை, மற்றும் ஆராதனை முறைமைகளைக் (எபி 9:6) குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். மனிதன் தன்னுடைய விருப்பத்தின் அடிப்படையில் பரிசுத்தமான தேவனைத் தொழுதுகொள்ள முடியாது. ஆரோனின் குமாரர்கள் தங்கள் தூபகலசங்களில் அக்கினியோடும் தூபவர்க்கத்தோடும் தேவனை ஆராதிக்க வரும்போது தேவன் கட்டளையிடாத அக்கினியை கொண்டுவந்ததினிமித்தம் கர்த்தரின் சந்நிதியிலிருந்து அக்கினி கிளம்பி அவர்களை அழித்த நிகழ்ச்சி லேவியராகமம் 10:1,2ல் சொல்லப்பட்டிருக்கிறது. உடன்படிக்கைப் பெட்டி, ஆசரிப்புக்கூடாரம், பலி மற்றும் பலிபீடங்கள், ஆசாரிய ஊழியங்கள், சபைகூடுதல், பண்டிகைகள் ஆகியவற்றைக் குறித்த திட்டவட்டமான ஆலோசனைகளை தேவன் இஸ்ரவேலருக்கு மட்டுமே வழங்கியிருந்தார் என்பதை அறிவோம்.

யூதர்கள் பெற்றுக்கொண்ட ஏழாவது ஆசீர்வாதம் அவர்களுக்கு தேவன் வழங்கிய வாக்குத்தத்தங்கள். "ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன" (கலா 3:16) என்கிறார் பவுல். வாக்குத்தத்தங்கள் பொதுவாக தேவனுடைய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. சாலொமோன் ஜெபிக்கிறார் : "தாம் வாக்குத்தத்தம் பண்ணினபடியெல்லாம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு இளைப்பாறுதலை அருளின கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" (1 இராஜா 8:56).

இரட்சிப்பைக் குறித்த வாக்குத்தத்தங்களை கூடுதலாக ஆபிரகாமுக்கும், ராஜ்யத்தைக் குறித்த வாக்குத்தத்தங்களை தாவீதுக்கும் கூடுதலாக தேவன் வழங்கியிருப்பதைப் பார்க்கிறோம். புறஜாதியாரான நமக்கு (சபை) தேவன் வாக்குத்தத்தங்களை வழங்கியிருப்பதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. கிறிஸ்துவின் சுவிசேஷம் நமக்கு ஒரு வாக்குத்தத்தம் அல்ல, விசுவாசித்து நாம் ஏற்றுக்கொள்ளப்படவேண்டிய ஒரு சத்தியம். சுவிசேஷம் தேசங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு நற்செய்தி அல்ல, தனிப்பட்ட மனிதர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு நற்செய்தி.

பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே, இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன். ஆமென். *(ரோமர் 9:5)*

இஸ்ரவேலர் தேவனிடமிருந்து சுதந்தரித்துக் கொண்ட மேலும் இரண்டு சிலாக்கியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

8) அவர்கள் பிதாக்களை உடையவர்கள் (அவர்கள் தங்கள் முற்பிதாக்களின் வழிவந்தவர்கள்)

9) அவர்களில் கிறிஸ்து பிறந்தார் (யூதர்கள் வழியில், ஒரு யூதனாக கிறிஸ்து அவதரித்தார்)

யூதர்களின் முற்பிதாவாக ஆபிரகாம் கருதப்படுவதினால்தான் "நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம்" (ரோமர் 4:1) என்று பெருமையோடு பவுல் அவரைக் குறிப்பிடுகிறார். அவரைக்குறித்து பவுல் சொல்கிறார்: "தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்" (ரோமர் 4:21) என்று பார்த்தோம். ஆபிரகாம் (ரோமர் 4:1-3), ஈசாக்கு (ரோமர் 9:10, அப் 3:13), யாக்கோபு (ரோமர் 9:13), தாவீது (ரோமர் 4:8), மோசே (1 கொரி 10:2)

ஆகிய முற்பிதாக்கள் எந்தவிதத்திலும் பாவம் அறியாத பரிசுத்தவான்கள் என்றோ, பரிபூரணமானவர்கள் என்றோ நாம் கருதிவிடக்கூடாது. மனிதர்களுக்குரிய சகல குறைபாடுகளும் பாவங்களும் தாராளமாக அவர்களில் காணப்பட்டது. இருந்தாலும், தேவன், தன்னுடைய தயவுள்ள சித்தத்தின்படி தன்னுடைய மனித இரட்சிப்பின் திட்டத்தில் அவர்களைக் கருவிகளாக உபயோகப்படுத்தினார் என்பதே உண்மை.

யூதர்களின் 9-வது சிலாக்கியத்தை பவுல் அறிவிக்கும்போது முந்தின பாணியில் கிறிஸ்துவும் அவர்களுடையவரே என்று அறிவிக்கவில்லை. ஏனென்றால் கிறிஸ்து அவர்களுக்கு மாத்திரம் சொந்தமானவர் அல்ல. புறஜாதியார்களான நமக்கும் அவர் சொந்தமானவர். எனவே, மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே என்று மட்டும் அறிவிக்கிறார். எவ்வளவு கவனமாக பவுல் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார் என்பதைக் கவனியுங்கள். மனித ஞானத்தினால் மட்டும் இதைச் செய்திருக்கமுடியாது. யூதர்களைத் தவிர வேறு எந்த ஜாதியாரும் கிறிஸ்துவைக் குறித்து "அவர் எங்கள் எலும்பின் எலும்பும், மாம்சத்தின் மாம்சமுமாய் இருக்கிறார்" என்று சொல்லமுடியாது. மனித இனத்தின் பாவத்தை நீக்கும்படியாக தேவனோடிருந்த இயேசுகிறிஸ்து (யோவான் 1:1) "மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோவான் 1:14) என்கிறார் யூதனாகிய யோவான். ஆனாலும் அவர் யூதர்களுக்கு மட்டும் சொந்தமானவரல்ல. அவருடைய நாட்களிலேயே சமாரியர்கள் மட்டுமே அவரை "கிறிஸ்துவாகிய உலகரட்சகர்" (யோவான் 4:42) என்று அழைத்தார்கள்.

கிறிஸ்து என்று சொன்னதுமே அவருடைய மேன்மையையும் மகத்துவத்தையும் பவுலால் அறிவிக்காமல் இருக்கமுடியவில்லை. அவரைக் குறித்த மூன்று காரியங்களை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

1) கிறிஸ்து என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்படத் தக்கவர்.

2) கிறிஸ்து சர்வத்துக்கும் மேலானவர்.

3) கிறிஸ்து தேவன்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மாம்சத்தில் வெளிப்படுவதற்கு முன்பாகவே சர்வ வல்லமையுள்ள தேவனாக இருந்தார் என்பதனால் அவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட பாத்திரராயிருக்கிறார். அவர்

மாம்சத்தில் வெளிப்பட்டதின் நோக்கம் எபிரெயர் 2:14,15ல் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது. "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும் படிக்கும் அப்படியானார்".

கிறிஸ்து சர்வத்துக்கும் மேலானவர் என்பது கிறிஸ்துவின் தெய்வீகத்தை நிரூபிக்கிறது. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலிப் 2:6,7) என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவின் தெய்வீகத்தைக் குறித்து நூற்றுக்கணக்கான வசனங்கள் வேதத்தில் காணப்பட்டும் (ஏசாயா 9:6,7, சக 9:10, மத் 3:17; 8:27-29; 16:16; 28:18, மாற்கு 1:24; 3:11; 16:19; லூக்கா 4:41; 6:5; 22:69,70; யோவான் 1:1,2; 6:64; 8:18,58; 12:45; 14:7-10; 16:5; 17:5,24; 18:4, ரோமர் 1:4; 9:5, எபே 1:20-22, பிலிப் 2:9,10; கொலோ 1:15; 2:9, 1 தீமோ 3:16, தீத்து 2:13, எபி 1:3,8; 7:3, 1 பேதுரு 3:22, 1 யோவான் 5:9, வெளி 1:5; 17:14; 19:16; 22:13) இதை மறுதலிக்கும் பல புத்திசாலிகள் தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைப்பதை நாம் பார்க்கமுடியும்.

கிறிஸ்து சர்வத்துக்கும் மேலான தேவன் என்ற திட்டவட்டமான அறிவிப்புடன் இந்த வேதபகுதி நிறைவடைகிறது. "அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்" (கொலோ 1:15-18). வேதத்தின் கடைசி புஸ்தகத்தில் அவர் சொல்கிறார்: "நான் அல்பாவும் ஓமெகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்" (வெளி 22:13).

கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் மகிமையையும் அறிவித்த பவுல்

உடனடியாக தன்னுடைய துதியை "ஆமென்" என்று சொல்லி இந்த வேதபகுதியை முடிவுக்குக் கொண்டுவருகிறார். பிதாவாகிய தேவனைப்பற்றி ரோமர் 1:25ல் பேசும்போதும் "அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" என்று வசனத்தை முடிவுக்குக் கொண்டுவருவதைப் பார்த்தோம். "ஆமென்" என்ற வார்த்தை அறிவிக்கப்பட்ட சத்தியத்தின் நிச்சயத்தையும், உறுதியையும் வெளிப்படுத்துகிறது. (ரோமர் 11:36, கலா 1:5, எபே 3:21, பிலிப் 4:20, 1 தீமோ 1:17; 6:16, 2 தீமோ 6:18).

மெய்யான இஸ்ரவேலர் யார்? (வசனம் 6-18)

தேவ வசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது; ஏனென்றால், இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே. (ரோமர் 9:6)

யூதர்களின் மகத்துவமான மேன்மைகள் என்னென்ன என்பதை முந்தின வேதபகுதியில் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அவர்களைக் குறித்த பல வசனங்கள் வேதத்தில் உண்டு. தேவன் எவ்வளவு வைராக்கியமாய், ஆவேசத்தோடு பேசுகிறார் பாருங்கள்: "சூரியனைப் பகல் வெளிச்சத்துக்காகவும் சந்திரநட்சத்திர நியமங்களை இராவெளிச்சத்துக்காகவும் கட்டளையிட்டவரும், அலைகள் கொந்தளிக்கத்தக்கதாகச் சமுத்திரத்தைக் குலுக்குகிறவரும், சேனைகளின் கர்த்தர் என்னும் நாமமுள்ளவருமாகிய கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: இந்த நியமங்கள் எனக்கு முன்பாக இல்லாதபடிக்கு ஒழிந்துபோனால், அப்பொழுது இஸ்ரவேல் சந்ததியும் எனக்கு முன்பாக என்றைக்கும் ஒரு ஜாதியாயிராதபடிக்கு அற்றுப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றி னிமித்தமும் வெறுத்துவிடுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே 31:35-37).

இப்படிப்பட்ட வாக்குறுதிகள் அடங்கிய தேவ வசனங்கள் பல வேதத்தில் இருப்பதினால் அவை தற்போதைய சூழ்நிலையில் வீணாய் போயிற்று, தேவன் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்று நினைக்கக்கூடாது என்கிறார் பவுல். "அவருடைய நல்வார்த்தைகளில் எல்லாம் ஒரு வார்த்தையானாலும் தவறிப்போகவில்லை" (1 இராஜா 8:56), தேவன் சொல்கிறார்: "நான்

சொல்லுவேன், நான் சொல்லும் வார்த்தை நிறைவேறும்" (எசே 12:25) "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (லூக்கா 21:33). தன் வாயிலிருந்து புறப்படும் வசனத்தைக்குறித்து அவர் சொல்கிறார்: "அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" (ஏசாயா 55:11).

அப்படியிருக்க, ஒன்பது மகத்துவமான சிலாக்கியங்களைப் பெற்றுக்கொண்ட இஸ்ரவேலரின் நிலை இன்று பரிதாபத்துக் குரியதாயிருக்கிறதென்றால் அதற்குக் காரணம் என்ன? பவுல் சுருக்கமாகச் சொல்கிறார் : "இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலல்லவே". இந்த சத்தியம் இந்த நிருபத்தில் ஏற்கனவே மறைமுகமாகச் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். "புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்" (ரோமர் 2:28,29). தேவன் இஸ்ரவேலரைத் தன்னுடைய ஜனமாகத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்பது உண்மைதான், அவருடைய தெரிந்துகொள்ளுதல் தோல்வியடைய முடியாது. **ஆனால் அந்த தெரிந்துகொள்ளுதலுக்குள் இன்னொரு தெரிந்துகொள்ளுதல் இருக்கிறது என்பதை பவுல் இந்த வேதபகுதியில் அறிவிக்கிறார்.**

"ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன்" (மத் 3:9, யோவான் 8:33,39) என்று தங்களைக்குறித்து பெருமையடித்துக்கொள்ளும் யூதர்கள் பவுல் கூறும் இந்த உள்ளான தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அதிர்ச்சியடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. **ஆபிரகாமோடு தேவன் செய்துகொண்ட நிபந்தனையற்ற உடன்படிக்கையினிமித்தம் தங்களுக்கு நித்தியமான பாதுகாப்பு உண்டென்றும், ஒருபோதும் தேவன் தங்களைப் புறக்கணிக்கமாட்டார் என்றும் அவர்கள் நம்பிக்கொண்டிந்தார்கள்.** "பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்துகொண்டேன்" (ஆமோஸ் 3:2) என்ற வசனம் இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்தும் வசனங்களில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. "ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்" என்ற அந்த வசனத்தின் பின்பகுதியை இஸ்ரவேலர் கவனிக்கத் தவறிவிட்டார்கள்.

ஆபிரகாமின் சந்ததியாரில் மாம்சத்தின்படி பிறந்தவர்கள் என்றும்,

ஆவியின்படி பிறந்தவர்கள் என்றும் இரண்டு பிரிவினர் இருப்பதை பவுல் கலாத்தியர் 4:29ல் சுட்டிக்காட்டுகிறார். நாத்தான்வேலைக் குறித்து, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" (யோவான் 1:47) என்று சொல்வதால், கபடமுள்ள, உத்தமத்தில் குறைவுள்ள இஸ்ரவேலரும் இருக்கக்கூடும் என்பது தெளிவாகிறது.

சரீர ரீதியாக, மாம்சத்தின்படி ஒருவன் ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதினால் மட்டும் அவன் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாவதில்லை. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில், விசுவாசத்தின் மூலமாக மட்டுமே அவர்கள் வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக்கொள்ள முடியும்.

"ஆபிரகாமே எங்கள் பிதா" என்று உரிமை கொண்டாடிக்கொண்டு தன்னிடம் வந்த யூதர்களிடம் கிறிஸ்து சொல்கிறார்: "நீங்கள் ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்" (யோவான் 8:37), "நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே" (யோவான் 8:39). பவுல் சொல்கிறார்: "விசுவாசமார்க்கத்தார் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக" (கலா 3:7). "விசுவாச மார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப் படுகிறார்கள்" (கலா 3:9).

குமாரத்துவம் பிறப்பை அல்ல, விசுவாசத்தையே அடிப்படையாகக் கொண்டது. **பக்தியான கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருப்பதினால் ஒருவன் தேவனுடைய வாக்குத்தத்தங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் பாத்திரனாக முடியும் என்று நினைத்துக்கொள்ளமுடியாது,** தேவகிருபை இரத்தத்தின் வழியாக சந்ததி சந்ததியாகக் கடந்து செல்வதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும்" (யோவான் 3:6) என்கிறார் இயேசு. எந்த ஒரு மனிதனும் தன்னுடைய பிறப்பினாலோ, தன்னுடைய கிரியைகளினாலோ, தன்னுடைய பெலத்தினாலோ, தன்னுடைய நீதியினாலோ தேவனிடம் வரவே முடியாது.

அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும் பிள்ளைகளல்லவே; ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று சொல்லியிருக்கிறதே. *(ரோமர் 9:7)*

கலாத்தியர் 4:22,23ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "ஆபிரகாமுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்று எழுதியிருக்கிறது; ஒருவன் அடிமையா-னவளிடத்தில் பிறந்தவன், ஒருவன் சுயாதீன முள்ளவளிடத்தில் பிறந்தவன். அடிமையானவளிடத்தில் பிறந்தவன் மாம்சத்தின்படி பிறந்தான்,

சுயாதீனமுள்ளவளிடத்தில் பிறந்தவன் வாக்குத்தத்தத்தின்படி பிறந்தான்".



இஸ்மவேல் ஆபிரகாமின் மூத்தமகன் என்ற முறையில் சுதந்தரவாளியாகவும் இருக்கிறான். ஆனால் ஈசாக்கு பிறப்பதற்கு முன்பாகவே தேவன் சாராளை ஆசீர்வதித்து, "அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும் அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன்" (ஆதி 17:16). இதைக்கேட்ட ஆபிரகாம் உடனடியாக இஸ்மவேலுக்காக விண்ணப்பம் பண்ணுகிறார் (வசனம் 18). ஆனால் தேவன் சொல்கிறார், "உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (வசனம் 19). இஸ்மவேலையும் தேவன் ஆபிரகாமின் நிமித்தம் ஆசீர்வதித்தார் என்று பார்க்கிறோம். அவர் சொல்கிறார் : "இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன்; நான் அவனை ஆசீர்வதித்து, அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன். அவன் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவான்; அவனைப் பெரிய ஜாதியாக்குவேன்" (ஆதி 17:20). ஆதி 16:10-14; 21:13; 17:20 வாசித்துப் பாருங்கள். இருந்தாலும் **தேவன் இஸ்மவேலோடு எந்த உடன்படிக்கையையும் செய்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது** (வசனம் 20,21).

"ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும்" (ஆதி 21:12, எபி 11:18)

என்ற தேவனுடைய தீர்மானத்தின் அடிப்படையில் வெளிப்பட்ட அறிவிப்பு தேவனுடைய தெரிந்துகொள்ளுதலுக்குள் இருக்கும் இரண்டாவது தெரிந்துகொள்ளுதலை உறுதிப்படுத்துகிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் மாம்சத்தின்படி பிறந்தவர்கள் அல்ல, தேவனால் பிறந்தவர்கள். நம்மைக்குறித்தே யோவான் சொல்கிறார்: "அவர்கள், இரத்தத்தினாலாவது, மாம்சசித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்" (யோவான் 1:13). ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறந்து, மறுபடியும் பிறந்த நிச்சயத்தை உடையவர்கள் (யோவான் 3:3-5). பவுல் சொல்கிறார்: "சகோதரரே, நாம் ஈசாக்கைப்போல வாக்குத்தத்தத்துப் பிள்ளைகளாயிருக்கிறோம்" (கலா 4:28).

அதெப்படியென்றால், மாம்சத்தின்படி பிள்ளைகளானவர்கள் தேவனுடைய பிள்ளைகளல்ல, வாக்குத்தத்தின்படி பிள்ளைகளானவர்களே அந்தச்சந்ததி என்றெண்ணப்படுகிறார்கள். (ரோமர் 9:8)

ஆபிரகாமை தேவன் தெரிந்துகொண்டபோது அவர் ஒரு விக்கிரக ஆராதனைக்காரராக இருந்தார். ஆனாலும் தேவன் சொல்கிறார்: "உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள்; அவன் ஒருவனாயிருக்கையில் நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப்பண்ணினேன்" (ஏசாயா 51:2) இவ்விதமாக ஆபிரகாம், சாராள் ஆகியோரின் சந்ததியாரே இரண்டாவது தெரிந்துகொள்ளுதலின்படி வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் ஆகிறார்கள்.

ஆபிரகாமுக்கு மாம்சத்தின்படி இஸ்மவேல் ஒருவன்தான் குமாரன் என்பதல்ல. "ஆபிரகாம் கேத்தூராள் என்னும் பேர்கொண்ட ஒரு ஸ்திரீயையும் விவாகம் பண்ணியிருந்தான். அவள் அவனுக்குச் சிம்ரானையும், யக்ஷானையும், மேதானையும், மீதியானையும், இஸ்பாக்கையும், சூவாகையும் பெற்றாள்" (ஆதி 25:1,2) என்று வாசிக்கிறோம். இந்த ஆறுபிள்ளைகளின் சந்ததியார் யார் என்றும் அடுத்த இரண்டு வசனங்கள் அறிவிக்கின்றன. "இன்னும் சில மறுமனையாட்டிகள் ஆபிரகாமுக்கு இருந்தபடியால்" (வசனம் 6) அவர்கள் மூலமாகவும் ஆபிரகாமுக்கு பல சந்ததிகள் உருவாகியிருக்கவேண்டும். இவர்கள் எல்லாருமே மாம்சத்தின்படி பிறந்தவர்கள் ஆகிறார்கள்.

வாக்குத்தத்தத்தின்படி பிறந்த ஒரே மகன் ஈசாக்கு. "நான் பிள்ளையில்லாமல் இருக்கிறேனே" என்று ஆபிரகாம் தேவனிடம் வேண்டிக்கொள்ளும்போது அவர் வாக்குகொடுக்கிறார்: "நீ வானத்தை

அண்ணாந்துபார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும்" (ஆதி 15:5) என்கிறார். ஆபிரகாமின் மாம்சபலத்தின் அடிப்படையில் ஈசாக்கு பிறக்கவில்லை. "தன் குமாரனாகிய ஈசாக்கு பிறந்தபோது ஆபிரகாம் நூறு வயதாயிருந்தான்" (ஆதி 21:5). "ஆபிரகாமும் சாராளும் வயது சென்று முதிர்ந்தவர்களாயிருந்தார்கள்; ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாராளுக்கு நின்றுபோயிற்று" (ஆதி 18:11). "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி, கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள். ஆனபடியால், சரீரஞ்செத்தவனென்று எண்ணத்தகும் ஒருவனாலே, வானத்திலுள்ள பெருக்கமான நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரையிலுள்ள எண்ணிறந்த மணலைப்போலவும், மிகுந்த ஜனங்கள் பிறந்தார்கள்" எபி (11:11,12) என்று வாசிக்கிறோம்.

அந்த வாக்குத்தத்தமான வார்த்தையாவது: குறித்த காலத்திலே வருவேன், அப்பொழுது சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்பதே. (ரோமர் 9:9)

ஆதியாகமம் 18:10ல் தேவன் ஆபிரகாமிடம் இவ்வாறு வாக்கு பண்ணுகிறார்: "ஒரு உற்பவ காலத்திட்டத்தில் நிச்சயமாய் உன்னிடத்திற்குத் திரும்பவருவேன்; அப்பொழுது உன் மனைவியாகிய சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்". ஆதியாகமம் 18:14ல் சொல்கிறார்: "கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? உற்பவகாலத்திட்டத்தில் உன்னிடத்திற்குத் திரும்பவருவேன்; அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான்", இதுவே தேவனுடைய வாக்குத்தத்தமான வார்த்தை.

ஈசாக்கின் பிறப்பு ஒரு அற்புதமான நிகழ்ச்சி, அது தேவனுடைய வாக்குத்தத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. தான் வாக்குபண்ணிய ஒரு காரியத்தை தன்னுடைய வல்லமையையும், பராக்கிரமத்தையும் பயன்படுத்தி தேவன் நிறைவேற்றுகிறார். இஸ்மவேலின் பிறப்பைக் குறித்து இவ்விதமாக நாம் சொல்லமுடியாது. தேவன் திட்டவட்டமாக அறிவிக்கிறார்: "வருகிற வருஷத்தில் குறித்த காலத்திலே சாராள் உனக்குப் பெறப்போகிற ஈசாக்கோடே நான் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்" (ஆதி 17:21). **வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கு மட்டுமே ஆபிரகாமைத் தொடர்ந்து தேவனுடன் உடன்படிக்கை செய்துகொள்ளும் மேன்மையைப் பெறுகிறான்.**

இதுவுமல்லாமல், நம்முடைய பிதாவாகிய ஈசாக்கு என்னும்

ஒருவனாலே ரெபெக்காள் கர்ப்பவதியானபோது (ரோமர் 9:10)

முந்தின மூன்று வசனங்களில் ஆபிரகாமின் குமாரர்களுக்குள் வாக்குத்தத்தத்தின் பிள்ளை என்ற அங்கீகாரம் தேவன் செய்துகொண்ட உடன்படிக்கையின் அடிப்படையில் ஈசாக்குக்கு மட்டுமே உண்டாகியிருந்தது என்பதை பவுல் நிரூபித்துவிட்டு அடுத்த நான்கு வசனங்களில் ஈசாக்கின் பிள்ளைகளான யாக்கோபு, ஏசா ஆகிய இருவரைக்குறித்து விளக்கமாகப் பேசுகிறார். அவர்களில் யாக்கோபு மட்டுமே தெரிந்துகொள்ளப்பட்டவனாகிறான்.

இஸ்மவேலும் ஈசாக்கும் ஆபிரகாமின் பிள்ளைகள்தான் என்றாலும் இஸ்மவேலின் தாய் எகிப்து தேசத்து அடிமைப்பெண்ணாகிய ஆகார். ஈசாக்கின் தாய் ஆபிரகாமின் மனைவியாகிய சுயாதீனமுள்ள சாராள். ஆகார் அரபிதேசத்திலுள்ள சீனாய் மலைக்குரிய அடிமைத்தனத்தையும், சாராள் எருசலேமின் சுயாதீனமுள்ள கிருபையையும் வெளிப்படுத்துவதாக, பவுல் கலாத்தியர் 4:22-28ல் அறிவிப்பதைப் பார்க்கிறோம். தகப்பன் ஒருவர்தான் என்றாலும் இருவரும் வெவ்வேறு நிலையிலுள்ள பெண்களுக்குப் பிறந்தவர்கள். ஆனால் ஈசாக்கின் பிள்ளைகளான ஏசாவும் யாக்கோபும், ஒரே தகப்பனுக்கு ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள். ஆபிரகாம் ஒருவரே இவர்கள் இருவருடைய தாத்தா. அவர்கள் ஒரே நேரத்தில் பிறந்த இரட்டைப்பிள்ளைகள், மட்டுமல்ல, ஈசாக்கின் ஜெபவேண்டுதலின் விளைவாக தேவனால் அருளப்பட்டவர்கள். ஆதி 25:21 சொல்கிறது: "மலடியாயிருந்த தன் மனைவிக்காக ஈசாக்கு கர்த்தரை நோக்கி வேண்டுதல் செய்தான்; கர்த்தர் அவன் வேண்டுதலைக் கேட்டருளினார்; அவன் மனைவி ரெபெக்காள் கர்ப்பந்தரித்தாள். தாயின் வயிற்றிலிருந்து முதலாவது வெளிப்பட்டது ஏசா".

அப்படி இருந்தும் ஈசாக்கின் இந்த இரண்டு பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் என்ற தீர்மானம் வித்தியாசமான முறையில் செயல்படும் விதத்தை பவுல் அடுத்த மூன்று வசனங்களில் அறிவிக்கிறார்.

பிள்ளைகள் இன்னும் பிறவாமலும், நல்வினை தீவினை ஒன்றும் செய்யாமலுமிருக்கையில், தேவனுடைய தெரிந்து கொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலே நிலைநிற்காமல், அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு (ரோமர் 9:11)

உபதேசத்துக்கடுத்த நான்கு முக்கியமான காரியங்கள் இந்த

வசனத்தில் சொல்லப்படுவதால், இந்த வசனம் வேதத்தின் ஆழமான வசனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தேவனுடைய தீர்மானம்	- திட்டம் (Purpose)
தெரிந்துகொள்ளுதல்	- தேர்ந்தெடுத்தல் (Election)
அழைப்பு	- (Call)
நிலைநிற்றல்	- (Stand - persevere)

இந்த நான்கில் தேவனுடைய தீர்மானத்தைக் குறித்தும், அழைப்பைக் குறித்தும் ரோமர் 8:28-30 வேதபகுதியில் ஏற்கனவே தியானித்திருக்கிறோம்.

ஈசாக்கு ரெபெக்கா தம்பதிகளுக்கு பிள்ளைகள் பிறப்பதற்கு முன்பாகவே, அந்த குழந்தைகள் நல்லதோ அல்லது தீயதோ எதையாது செய்வதற்கு முன்னரே, அவர்களில் ஒரு பிள்ளையை தேவன் தன்னுடைய ராஜரீக தீர்மானத்தின் அடிப்படையில், தனக்கென்று தெரிந்துகொள்ளும்படியாக தீர்மானம் செய்தார். அவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்தார். அது எந்தவிதத்திலும் அந்த பிள்ளைகளின் செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதல்ல. அவர்கள் பிறக்குமுன்பாகவே தேவன் தன்னை உலகத்துக்கு அறிவிக்கக்கூடிய, தன்னுடைய வார்த்தையைப் பெற்றுக் கொள்ளக்கூடிய, தன்னைப்பற்றிய வெளிப்பாடுகளைப் பெறக்கூடிய, எல்லாவற்றுக்கும் மேலாக தன்னுடைய நேசகுமாரன் மேசியாவாக வெளிப்படும்போது அவரைப் பிறப்பிக்கக்கூடிய ஒரு சந்ததியாராக இருக்கவேண்டும் என்று ஒருவரைக் குறித்து தனக்குள்ளாகவே தீர்மானம் செய்தார். இஸ்மவேலைத் தெரிந்துகொள்ளாமல் எவ்வாறு ஈசாக்கைத் தெரிந்துகொண்டாரோ, அவ்வண்ணமாகவே ஏசா முதலாவது பிறந்தவனாக இருந்தும் அவனைத் தெரிந்துகொள்ளாமல் யாக்கோபைத் தெரிந்துகொண்டார்.

எத்தனையோ புறஜாதியார் மத்தியில் 4,5 வசனங்களில் நாம் தியானித்த மேலான ஒன்பது ஆசீர்வாதங்களை பெறும்படியாக யூதர்களை மட்டும் தேவன் தெரிந்துகொண்டார் என்பதை அறிவோம் (உபா 4:37; 7:7,8; 10:15; 14:2, 1 இராஜா 3:8, சங் 33:12; 105:5, 43; 135:4, ஏசாயா 41:8,9; 43:20,21; 44:1,2, ஆமோஸ் 3:2). இதன் பின்னணியில் நாம் தியானிக்கும் வசனத்தில் ஒரு தாயின் வயிற்றில் ஒரே சமயத்தில் கருத்தரித்து வளர்ந்துகொண்டிருக்கும் இரண்டு பிள்ளைகளில் தேவனுடைய தெரிந்துகொள்ளும் தீர்மானம் வித்தியாசமான முறையில் செய்யப்படும் விதத்தைப் பவுல் அறிவிக்கிறார்.

எந்த ஒரு மனிதனையும் தெரிந்து கொள்ளும் அதிகாரம் அவருக்கு உண்டு. ஒருவனுடைய தகுதியையோ, தகுதியின்மையையோ நிர்ணயம் பண்ணுகிறவர் அவரே. அந்த தீர்மானத்தை எதிர்த்து நிற்கவோ, அதற்கான காரண காரியங்களைக் கேட்கவோ எவருக்கும் அதிகாரம் இல்லை. இவற்றைக் குறித்து பவுல் விளக்கமாக அறிவிக்கவிருக்கிறார்.

பிள்ளைகள் இன்னும் பிறக்கவும் இல்லை. நன்மை தீமை எதுவும் செய்யவும் இல்லை என்பதை பவுல் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். அவர்களுடைய கிரியைகளின் அடிப்படையில் தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் அமையவில்லை என்பதை வாசகர்கள் அறிந்துகொள்ளவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஆபிரகாமின் பிள்ளைகளான இஸ்மவேலும், ஈசாக்கும் வளர்ந்து வரும்போது அவர்களுடைய குணாதிசயங்கள், செயல்பாடுகளில் வித்தியாசம் காணப்பட்டது என்பது உண்மைதான். ஈசாக்கு குணசாலியாகக் காணப்பட்டான். இஸ்மவேல் மற்றவர்களைப் பரியாசம் பண்ணுகிறவனாகக் காணப்பட்டான் என்று ஆதியாகமம் 21:9 அறிவிக்கிறது. ஆனாலும் ஈசாக்கு அவனுடைய நற்குணத்தினிமித்தம் தெரிந்துகொள்ளப்பட்டான் என்று தன்னுடைய வாசகர்கள் முடிவு செய்துவிடக்கூடாது என்பதற்காகவே தாயின் வயிற்றிலேயே யாக்கோபு தேவனால், தேவனுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டதை பவுல் தெளிவுபடுத்துகிறார்.

நாம் அறிந்துகொள்ளவேண்டிய காரியம் இதுதான். இரண்டு சகோதரர்களுமே பாவத்தில் பிறந்தவர்கள்தான். தேவகோபாக்கினையின் பிள்ளைகள்தான். இருவரிடமும் தேவனுடைய இரக்கத்தைப் பெற எந்த தகுதியும் இல்லை. இதை நாம் உணர்ந்துகொண்டால் மட்டுமே தேவனால் தெரிந்துகொள்ளப்படுவது என்பது அவருடைய தீர்மானத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது என்பதை அறிந்துகொள்ளமுடியும். மனித இனம் முழுவதுமே தேவகோபாக்கினையைச் சந்திக்கும் நிர்ப்பந்தத்துக்குள்ளானதாக இருக்கிறது. தேவன் நீதியை மட்டுமே உடையவராக இருந்திருப்பானால் அத்தனைபேரையும் அவர் அக்கினிக் கடலில் போட்டு தண்டித்திருக்கவேண்டும். அவர்களில் ஒரு சிலரையாவது தன்னுடைய கிருபையினிமித்தம் மீட்கவேண்டும் என்று தேவன் சித்தம் கொண்டார். இதன் விளைவே தேவனுடைய தெரிந்துகொள்ளுதல். அவர்களை நயங்காட்டி தன்னோடு இணைத்துக்கொள்கிறார். மற்றவர்களை அவர்கள் நடந்து வந்த கோபாக்கினையின் பாதையில் தொடர்ந்து நடக்க அனுமதிக்கிறார். இதினிமித்தம் தேவன்மேல் குறைகாண யாருக்கும் உரிமை இல்லை. ஏனென்றால் தேவன் ஒருவரே ஞானமுள்ளவர். அவர் ஒருவரே நீதியுள்ளவர்.

தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் கிரியைகளை அடிப்படையாகக் கொண்டதில்லை என்பதை மட்டும் நாம் அறிந்துகொண்டால் போதும். **தெரிந்து கொள்ளுதலுக்கான காரணகாரியங்களை மனுஷீக ஞானத்தினால் நாம் அறிந்துகொள்ள முடியாது என்பதே உண்மை.** சீனாய் மலையின் அடிவாரத்தில் பொன்னால் செய்யப்பட்ட கன்றுக்குட்டியை வார்ப்பித்தது ஆரோன். அதற்கு முன்பாக பலிபீடத்தைக் கட்டி பண்டிகை கொண்டாடும்படியாக அறிவிப்பு கொடுத்ததும் ஆரோன். மோசே வழிநடத்திச் சென்ற சகல ஜனங்களும் "அதிகாலையில் எழுந்து, சர்வாங்க தகனபலிகளையிட்டு, சமாதானபலிகளைச் செலுத்தினார்கள்; பின்பு, ஜனங்கள் புசிக்கவும், குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்" (யாத் 32:6) என்று வாசிக்கிறோம். ஆனாலும் அவர்கள் அத்தனைபேரும் சங்கரிக்கப்படவில்லையே! (யாத் 32:28). கன்றுக்குட்டியை வார்ப்பித்த ஆரோன் ஆசாரிய ஊழியத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்டார் என்று பார்க்கிறோமே! ஒரு கொலைகாரன் மூலமாக "கொலை செய்யாதிருப்பாயாக" என்ற கற்பனையை வழங்குகிறார் தேவன். இவற்றை எல்லாம் எப்படி விளங்கிக்கொள்வது?

கர்த்தர் சாமுவேலை சவுலின் ஸ்தானத்தில் அரச பதவியை ஏற்கும்படியாக பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு அனுப்பும்போது "அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்துகொண்டேன்" (1 சாமு 16:1) என்கிறார். ஈசாயின் குமாரர்கள் சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்படும்படியாக பலிவிருந்துக்கு கொண்டுவரப்படுகிறார்கள். எலியாப் என்பவன் வந்தபோது "நான் இவனைப் புறக்கணித்தேன்" (1 சாமு 16:7) என்கிறார் கர்த்தர். அடுத்ததாக அபினதாப் வருகிறான். "இவனையும் கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லை" (வசனம் 8) என்று வாசிக்கிறோம். சம்மாவையும் "கர்த்தர் தெரிந்துகொள்ளவில்லை" (வசனம் 9). "இப்படி தன் குமாரரில் ஏழுபேரை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணினான்; பின்பு சாமுவேல் ஈசாயைப் பார்த்து : கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்துகொள்ளவில்லை" (வசனம் 10) என்கிறார். **தேவனால் தெரிந்துகொள்ளப்படுவது அல்லது புறக்கணிக்கப்படுவது தேவ தீர்மானத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது.** மனித ஞானத்தினால் தேவனுடைய தீர்மானத்தை விளங்கிக் கொள்ளமுடியாது. தீர்க்கதரிசியாகிய சாமுவேலாலும் அதை அறிந்துகொள்ளமுடியவில்லை.

தெரிந்துகொள்ளுதல், தேவனுடைய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அது அழைத்தவரால் நிலைநிற்கும் என்ற முக்கியமான சத்தியம் மறைமுகமாக இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. காரணம் இதுதான். இந்தத் திட்டம் ஏற்கனவே தேவனால் உருவாக்கப்பட்டுவிட்டது.

அதை நிலைத்திருக்கச் செய்வது, நம்மை வழுவாதபடி காத்துக்கொள்வது, நம்மை அழைத்த தேவனுடைய செயல். நம்முடைய உதவி அல்லது ஒத்துழைப்பு சர்வ வல்லமையுள்ள தேவனுக்குத் தேவையில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். நம்முடைய செயல்பாடுகளினாலோ அல்லது ஜெபத்தினால்கூட அவருடைய தீர்மானத்தை மாற்றி அமைக்கமுடியாது, அவருடைய சித்தத்தின்படி கேட்கும்போது மட்டுமே அவர் செவிகொடுக்கிறார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 யோவான் 5:14).

ஆதியாகமம் 48:17-20 வாசித்துப்பாருங்கள். தன் தகப்பனாரிடமிருந்து மூத்தவனாகிய மனாசே கூடுதலான ஆசீர்வாதங்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடு யாக்கோபின் வலதுகையை எப்பிராயீமுடைய தலையில் இருந்து எடுத்து மனாசேயின் தலையில் வைக்க தேவமனிதனாகிய யோசேப்பு முயற்சிசெய்கிறார். தோல்வியடைகிறார். பரிசுத்தவானாகிய யோசேப்பினாலேயே தேவனுடைய தெரிந்துகொள்ளுதலைக் குறித்த தீர்மானத்தை மாற்றமுடியவில்லை என்றபோது உங்களாலும் என்னாலும் முடியுமா?

மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வான் என்று அவளுடனே சொல்லப்பட்டது. (ரோமர் 9:12)

கர்த்தராகிய ஆண்டவர், ஈசாக்கின் இரண்டு பிள்ளைகளில் தன்னுடைய நாமத்தை விளங்கப் பண்ணும்படியாக யாரைத் தெரிந்துகொண்டார் என்பதை, தன் தாசனாகிய ஈசாக்கினிடம் அறிவிக்காமல் சீரிய தேசத்தாளாகிய அவருடைய மனைவி ரெபெக்காளிடம் சொல்கிறார். "இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும், அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப்பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளையவனைச் சேவிப்பான்" (ஆதி 25:23). மூத்தவனுக்கு வழங்காத மேலான ஒரு சிலாக்கியத்தை இளையவனுக்கு வழங்குவதே தன்னுடைய சித்தம் என்கிறார் தேவன்.

ஒரு குடும்பத்தில் மூத்தமகன் தகப்பனுடைய காலத்துக்குப்பின் குடும்பத்தலைவனாக மட்டுமல்ல, குடும்பத்தின் காரியங்களை தேவ சமுகத்துக்குக் கொண்டுவரும் ஆசாரியனாகவும் அந்நாட்களில் கருதப்பட்டான். அதினிமித்தம் ஆபிரகாமும் (ஆதி 17:18), ஈசாக்கும் (ஆதி 27:1-4; 30-33) யோசேப்பும் (ஆதி 48:17-20) தங்களுடைய மூத்தபிள்ளைகள் மற்ற பிள்ளைகளைவிட மேலான முறையில் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்று விரும்பினார்கள். நியாயப்பிரமாண

விதிமுறைகளின்படியும் மூத்தமகனுக்கு தகப்பனுடைய உடமைகளில் கூடுதலான பங்கு வழங்கப்பட்டது. உலகமெங்கும் இன்றுவரை குடும்பத்தின் மூத்தமகனுடைய அந்தஸ்தும் அதிகாரமும் மற்றவர்களைவிட கூடுதலாகவே இந்நாள் வரை இருந்துவருகிறது.

மூத்தவன் இளையவனுக்கு சேவை செய்வான் என்ற தேவனுடைய அறிவிப்பு முற்றிலுமாக வித்தியாசமானதாகக் காணப்படுகிறது. இந்த அறிவிப்புக்கான காரண காரியங்கள் எதுவும் சொல்லப்படவில்லை. ஈசாவைப் புறக்கணித்து, யாக்கோபை தேவன் தன்னுடைய ஜாதியாக, தன்னுடைய சொந்த ஜனமாகத் தெரிந்துகொண்டார் என்பது மட்டும் புலனாகிறது. தேவன் யாக்கோபை முதலாவதாகப் பிறக்கும்படியாகச் செய்திருக்கலாம். அப்படிச் செய்ய அவரால் முடியும். ஆனால் அப்படி செய்திருந்தால் அவருடைய தீர்மானம் கிரியைகளினால் நிலைத்திராமல் அவருடைய தெரிந்துகொள்ளுதல் மற்றும் அழைப்பின் அடிப்படையிலேயே நிலைத்திருக்கிறது என்ற சத்தியத்தை நாம் அறிந்திருக்க முடியாது.

மூத்தவன் என்ற வார்த்தை மூத்த சகோதரனான ஏசாவை மட்டும் குறிப்பிடாமல் அவனுடைய சந்ததியரான ஏதோமியரையும் குறிப்பிடுவதாக சில வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். "ஏதோமியருக்குத் தகப்பன் ஏசா" (ஆதி 36:43) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வண்ணமாகவே யாக்கோபு என்ற வார்த்தை அவருடைய இஸ்ரவேல் சந்ததியை குறிப்பிடுவதாக எடுத்துக்கொண்டால் ஏதோமியரை இஸ்ரவேலர் மேற்கொள்வார்கள் என்பதை தேவன் முன்னறிவிப்பதாக இந்த வசனத்தை எடுத்துக்கொள்ளலாம் (2 சாமு 8:14, 1 இராஜா 22:47, 2 இராஜா 14:7). ஓபதியா 18 வாசித்துப்பாருங்கள். ஓபதியா முழுவதிலுமே ஏசா சந்ததியாரின் வீழ்ச்சியைக் குறித்து வாசிக்கிறோம்.

அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. (ரோமர் 9:13)

ரெபெக்காளிடம் தேவன் மூத்தவன் இளையவனுக்கு ஊழியம் செய்வான் என்று மட்டுமே சொன்னார். யாக்கோபை சிநேகித்து ஏசாவை வெறுப்பேன் என்று அவர் சொல்லவில்லை. அவர்கள் பிறந்து சுமார் 1400 ஆண்டுகள் கழிந்தபின் வாழ்ந்த மல்கியா தீர்க்கதரிசியிடம் தான் அவர் சொல்கிறார்: "ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவையோ நான் வெறுத்தேன்; அவனுடைய மலைகளைப் பாழும், அவனுடைய சுதந்தரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன்" (மல் 1:2,3).

11-வது வசனத்தோடு இதை இணைத்துப் பார்ப்போமானால் யாக்கோபு பிறந்து நற்கிரியைகள் எதுவும் செய்வதற்கு முன்பாகவே தேவனால் நேசிக்கப்பட்டதாகவும். அதைப்போல் ஏசா பிறந்து துர்கிரியைகள் எதுவும் செய்வதற்கு முன்பாகவே தேவனால் வெறுக்கப்பட்டதாகவும் எடுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. இந்த வசனம் வேதபண்டிதர்கள் மத்தியில் மிகுந்த குழப்பத்தை உண்டாக்கியிருப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

"யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:26) என்ற வசனத்தில் வருவதுபோன்று "வெறுப்பது" என்ற வார்த்தையை குறைவாக நேசிப்பது என்று பொருள்கொள்ளவேண்டும் என்று சில வேதபண்டிதர்கள் சொல்கிறார்கள். எனவே, "ஏசாவை வெறுத்தேன்" என்று தேவன் சொல்லும்போது யாக்கோபைவிட ஏசாவை குறைவாக நேசிப்பதாக மட்டுமே எடுத்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். மத்தேயு 10:37,38, யோவான் 12:25 ஆகிய வசனங்களையும் இவ்விதமாகவே பொருள் கொள்ளமுடியும் என்பது இவர்களுடைய கருத்து.

இந்த விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆண்டவராகிய தேவன் அன்பும், இரக்கமும், கிருபையும் நிறைந்தவர். பாரபட்சமற்ற தேவன், ஒரு மனிதன் தன் தாயின் வயிற்றில் இருக்கும்போதே, எந்தவிதமான கிரியைகளையும் நடப்பிப்பதற்கு முன்பே ஒருவனை ஏன் குறைவாக நேசிக்கவேண்டும் என்ற கேள்விக்கு இவர்களால் பதில்தரமுடியவில்லை. மேலும் இந்த அதிகாரத்தில் 15, 16, 17, 18 ஆகிய வசனங்கள் தேவன் சிலர்மேல் அதிக இரக்கமுள்ளவராயிருக்கிறார் என்பதையும், சிலர்மேல் வெறுப்புடையவராய் அவர்களைக் கடினப்படுத்துபவராகவும் இருக்கிறார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. **தேவநீதி எவ்வளவு பரிபூரணமானது என்றால் மனிதனுடைய நற்குணத்தையோ அல்லது துர்க்குணத்தையோ அது சார்ந்திராமல் தனித்து நிலைத்திருந்து அவருடைய நோக்கத்தை நிறைவேற்றக்கூடியது.**

"தேவன் அன்பாகவே இருக்கிறார்" (1 யோவான் 4:16) என்பது உண்மைதான். அதே சமயத்தில் அவரால் சிலரையும், சில காரியங்களையும் வெறுக்கவும் முடியும். அவர் எரிச்சல்படக்கூடியர் (யாத் 20:5, 1 கொரி 10:22). நாகூம் 1:2 சொல்லுகிறது: "கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிகட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்து

வைக்கிறவர்". அவர் கோபங்கொள்ளக்கூடியவர் என்பது மட்டுமல்ல, அந்த கோபம் பற்றியெரியக்கூடியது (சங் 2:12). தாவீது சொல்கிறார்: "வீம்புக்காரர் உம்முடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்கமாட்டார்கள்; அக்கிரமக்காரர் யாவரையும் வெறுக்கிறீர்" (சங் 5:5) "துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" (சங் 11:5). "பெருமையையும், அகந்தையையும், தீயவழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்" (நீதி 8:13) என்கிறார் தேவன். எதையெல்லாம் தேவன் வெறுக்கிறார் என்பதை அறிந்துகொள்ள நீதிமொழிகள் 6:16-19; 8:13, ஏசாயா 1:14; 61:8, எரே 44:4, ஓசியா 9:15, ஆமோஸ் 5:21, சக 8:17, மல் 2:16, யோவான் 3:36 வாசித்துப்பாருங்கள்.

உண்மையில் அவர் பாவமான எல்லா காரியங்களையுமே வெறுக்கிறார். **தேவன் பாவத்தை வெறுக்கிறார் என்றும், பாவிகளை நேசிக்கிறார் என்றும் பொதுவாக சொல்லப்படுகிறது. பரிசுத்தமான தேவன் பாவத்தோடு சம்பந்தப்பட்ட எதையும், யாரையும் நேசிக்கவே முடியாது. அதை அவர் வெறுத்தே ஆகவேண்டும்.** தன் ஒரேபேறான இயேசுகிறிஸ்துவின்மேல் பாவம் சுமத்தப்பட்டபோது அவர் தன் முகத்தை மறைத்துக்கொண்டார். இமைப்பொழுது அவரைக் கைவிட்டார். அவரைத் தண்டித்தார். பாவியை நேசிக்க அவரால் முடியாது.

ஏசா தாயின் வயிற்றில் இருக்கும்போதே தேவன் அவனை வெறுத்தார் என்றால் அதற்குக்காரணம் அவன் ஆதாமுக்குள் பாவம் செய்தவன். ஆதாமை வெறுத்த தேவன் அவனுக்குள் ஏசாவையும் வெறுத்திருக்கவேண்டும். ஏசாவும் யாக்கோபும் தாவீதைப்போல் அவர்களுடைய தாயின் வயிற்றிலிருக்கும்போதே பாவத்தில் கர்ப்பந்தரிக்கப்பட்டவர்கள் (சங் 51:5). யாக்கோபு தாயின் வயிற்றில் இருக்கும்போது தேவனால் நேசிக்கப்பட்டார் என்றால் அதற்குக் காரணம் அவர் கிறிஸ்துவுக்குள் நீதிமானாகக் கருதப்பட்டதுதான்.

ஏசாவையும் யாக்கோபையும் பற்றி இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கும் காரியம் இந்த நாளில் நம் ஒவ்வொருவருக்கும் பொருந்துவதாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள். நாம் நம்முடைய தாயின் வயிற்றில் இருக்கும்போது ஒன்று தேவன் நம்மை கிறிஸ்துவுக்குள் கண்டு நேசித்திருக்கவேண்டும். அல்லது ஆதாமுக்குள் கண்டு வெறுத்திருக்கவேண்டும். இன்று நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்றால் நாம் நம் தாயின் வயிற்றிலிருக்கும்போதே நம்மைக் கண்டு நம்மை நேசித்திருந்ததினால் தான் (சங் 139:16).

உபதேசத்துக்கடுத்த காரியங்களில் தேவனுடைய வார்த்தை என்ன

சொல்கிறதோ, அதை அப்படியே எழுத்தின்படியாக எடுத்துக்கொள்வதே ஞானமான காரியம். நம்முடைய சொந்த அபிப்பிராயங்களையும், விருப்பு வெறுப்புகளையும் தேவனுடைய வார்த்தைக்குள் புகுத்த முயற்சிப்பது மிகவும் ஆபத்தானது. தேவனுடைய வார்த்தை என்ன சொல்லவேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அந்தக் கருத்தை தேவனுடைய வார்த்தைக்குள் திணிக்காதிருப்போம். தேவனுடைய வார்த்தையை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அதற்குக் கீழ்ப்படிய நாம் நம்மை ஒப்புக்கொடுப்போம். அது என்ன சொல்லுகிறதோ அதை நம்புவோம்.

தேவன் யாக்கோபை சிநேகித்தார் என்று சொல்லும்போது தகுதியில்லாத ஒரு மனிதன்மேல், தன்னுடைய தயவுள்ள சித்தத்தின்படி கிருபையையும் இரக்கத்தையும் தேவன் வெளிப்படுத்தினார் என்று எடுத்துக்கொள்ளவேண்டும். தேவன் ஏசாவை வெறுத்தார் என்று சொல்லும்போது தகுதியற்ற அந்த மனிதன்மேல், தன்னுடைய தயவுள்ள சித்தத்தின்படி கிருபையையும் இரக்கத்தையும் வெளிப்படுத்தவில்லை என்று எடுத்துக்கொள்ளவேண்டும்.



இன்னொருவகையில் சொல்வோமானால் தேவன் கிறிஸ்துவினுடைய நீதியின் அடிப்படையில் மட்டும் யாக்கோபுடனும் இடைபட்டிருப்பாரானால் இரண்டு நபர்களையுமே அவர் வெறுத்திருக்கவேண்டும். ஏனென்றால் அவர்கள் இரண்டுபேருமே ஆதாமுக்குள் பாவிகளாகவும், ஆக்கினைத் தீர்ப்புக்கு மட்டுமே பாத்திரர்களாகவுமே இருக்கிறார்கள். அவர்களில் ஒருவனைத் தேவன் தனக்கென்று தன் தீர்மானத்தின் அடிப்படையில் தன்னுடைய ஊழியத்தைச் செய்யும்படியாக இஸ்ரவேலாகத் தெரிந்துகொள்கிறார் (ஆதி 32:28). மற்றவன் புறக்கணிக்கப்படுகிறான்.

அவருடைய தெரிந்துகொள்ளுதல் நீதியானது என்பதை ஏசாவின் வாழ்க்கை நிரூபிக்கிறது. எபிரெயர் 12:16,17ல் அவன் வேசிக்கள்ளனாகவும்,

ஒருவேளைப் போஜனத்துக்காக தன்னுடைய சேஷ்டபுத்திர பாகத்தை விற்றுப்போட்டவனாகவும், ஆகாதவனென்று தள்ளப்பட்டவனாகவும் விவரிக்கப்படுகிறான். தன்னுடைய வாழ்நாட்களில் ஒருதடவைகூட அவன் தேவனைத் தேடியதாகச் சொல்லப்படவில்லை. ஒரு உலகத்து மனிதனைப்போல மாம்சத்தின் இச்சைகளை எல்லாம் நிறைவேற்றுகிறவனாகவே காணப்பட்டான். குடும்பத்தின் தலைமகன் என்ற முறையில் தன்னால் சுதந்தரிக்கப்படவேண்டிய சேஷ்டபுத்திரபாகத்தை அலட்சியம் பண்ணினான் (ஆதி 25:34). குடும்பத்தின் ஆசாரியனாக செயல்படவேண்டியவன் தேவனுடன் கொண்டிருக்கவேண்டிய உறவை இழந்துபோகிறான்.

இந்த மேலான ஆசீர்வாதங்களை எல்லாம் சுதந்தரித்துக்கொள்ள வாஞ்சையாயிருந்த யாக்கோபு நேரம்பார்த்து, தன் சகோதரனிடமிருந்து அவற்றைக் கைப்பற்றிக்கொள்கிறார். தேவனுடன் ஐக்கியங்கொள்ள விரும்பும் மனிதனாகவும் அவர் வேதத்தில் சித்தரிக்கப்படுகிறார். ஓசியா 12:4 சொல்கிறது, "அவன் தூதனானவரோடே போராடி மேற்கொண்டான், அழுது அவரை நோக்கிக் கெஞ்சினான்". "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை" (ஆதி 49:10) என்று அறிவித்து கிறிஸ்துவின் வருகையை முன்னறிவித்த தீர்க்கதரிசிகளில் ஒருவராகத் திகழ்கிறார். விசுவாச வீரர்களின் பட்டியலில் (எபி 11:21) இன்றும் யாக்கோபின் பெயர் காணப்படுகிறது.

ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே (ரோமர் 9:14)

"தேவவசனம் அவமாய்ப் போயிற்றென்று சொல்லக்கூடாது" என்று 6-வது வசனத்தில் சொன்ன பவுல், இந்த வசனத்தில் தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லக்கூடாது என்கிறார். "ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்" என்று ரோமர் 6:1; 7:7 லும் பவுல் பேசுகிறார்.

ஒரு எத்தனைப்போல பலமுறை யாக்கோபு செயல்பட்டார் என்பதை வேதம் சுட்டிக்காட்டுகிறது. ஏசா தன் சகோதரனைப் பொறுத்தவரை பெருந்தன்மையாக நடந்துகொண்டதையும் வேதம் அறிவிக்கத் தவறவில்லை (ஆதி 33:4,9). அப்படி இருந்தும் தேவன் யாக்கோபின்மேல் அன்பு செலுத்தி, ஏசாவை வெறுத்தது, அவர்கள் பிறப்பதற்குமுன்பே மூத்தவன் இளையவனுக்குச் சேவை செய்வான் என்று ரெபெக்காளிடம் அறிவித்தது, தேவனை அநீதியுள்ளவராகக் காட்டுகிறதா என்ற வினாவை பவுல் எழுப்பிவிட்டு, அப்படிக்கேட்பது தவறு என்றும் பகிலளிக்கிறார்.

உலக ரீதியாகப் பார்ப்போமானால், தேவன் ஒருவனைத் தெரிந்துகொண்டார் என்பதை ஏதோ ஒரு விதத்தில் ஏற்றுக்கொள்ளமுடிகிறது. இன்னொருவனை வெறுத்தார், அல்லது காரணகாரியமின்றி புறக்கணித்தார் என்பதை ஜீரணித்துக்கொள்ள சற்று கடினமானதாகத்தான் இருக்கிறது. ஏன் தேவன் சிலரைத் தெரிந்துகொள்கிறார் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கிறதென்றால் ஏன் சிலரைப் புறக்கணிக்கிறார் என்பதை விளங்கிக்கொள்ள இன்னும் கடினமானதாக இருக்கிறது. ஆனால் தேவன் தன்னுடைய செயல்பாடுகளுக்கான காரணகாரியங்களை அறிவிப்பதில்லை. அவர் இவ்வாறு அறிவிக்கவேண்டிய அவசியமும் அவருக்கு இல்லை.

ஆதாமின் பாவத்தினிமித்தம் மனித இனம் முழுவதும் தேவகோபாக்கினையை மட்டுமே எதிர்நோக்கியிருக்கிறது. அவர்களில் சிலரைத் தெரிந்துகொண்டு இரட்சிக்கிறார். சிலரை அவர்கள் செல்லும்வழியிலேயே தொடர்ந்து செல்லும்படியாக விட்டுவிடுகிறார். அது அவருடைய சொந்த தீர்மானத்தையே அடிப்படையாகக் கொண்டது. **நம்முடைய ஞானம் குறைவுள்ளது. குறைவுபட்ட மனித அறிவினால் அவருடைய செயல்பாடுகளின் பின்னணியை விளங்கிக்கொள்ள முடியாது.** அதை விளங்கிக்கொள்ள முயற்சிப்பது, அதை விமரிசிப்பது முட்டாள்தனமான காரியம். "கோபாக்கினையைச் செலுத்துகிற தேவன் அநீதராயிருக்கிறார் என்று சொல்லலாமா? அப்படிச் சொல்லக்கூடாது" (ரோமர் 3:5,6). ஆபிரகாமைப்போல் "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ" (ஆதி 18:25) என்று சொல்லுவதோடு நிறுத்திக்கொள்வோம்.

தேவன் நித்திய நித்தியமாக, எல்லா வேளைகளிலும், எல்லா மனிதர்களிடமும் நீதியுள்ளவராகவே இருக்கிறார் என்பதை நம்புவோம். அவர் தன்னில்தானே நீதியுள்ளவராக இருக்கிறார். அவரிடமிருந்து நீதியற்ற, நீதியில் குறைவுபட்ட கிரியைகள் எதுவுமே வெளிப்படாது. அநீதியுள்ள ஒருவர் தேவனாக இருக்கமுடியாது. இஸ்மவேலுக்குப் பதிலாக ஈசாக்கைத் தேவன் தெரிந்துகொண்டது, அவருடைய நீதியையே வெளிப்படுத்துகிறது. ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபைத் தெரிந்துகொண்டதும் அவருடைய நீதியையே வெளிப்படுத்துகிறது. இதன் தொடர்ச்சியாக பவுல் சொல்ல விரும்பும் காரியம் என்ன? முந்தின நாட்களில் தான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலரை இன்று புறக்கணித்துவிட்டு, புறஜாதியாரைத் தெரிந்துகொண்டதும் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவைப் புறக்கணித்த யூதர்களுக்குப் பதிலாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புறஜாதியாரை தெரிந்துகொள்ள அவர் அதிகாரம் படைத்தவர்.

அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார். (ரோமர் 9:15)

தேவனுடைய தெரிந்துகொள்ளுதலைக் குறித்து பவுல் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அது முற்றிலுமாக தேவனுடைய சித்தத்தையே அடிப்படையாகக் கொண்டது என்பதை நிரூபிக்கும்படியாக யாத்திராகமம் 33:19ல் தேவன் மோசேயிடம் பேசியதை மேற்கோள்காட்டுகிறார். தான் விரும்பும் எவருக்கும், அவர்கள் யாராக, எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, தனது இரக்கத்தையும், அன்பையும் காட்டுவார் என்று தேவன் திட்டவட்டமாக அந்த வசனத்தில் அறிவிக்கிறார். ஆனாலும் பெருமை நிறைந்த மனிதர்களால் இதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

எத்தகைய பின்னணியில் தேவன் இவ்வாறு மோசேயிடம் பேசினார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நாற்பது நாட்கள் தேவனோடு சஞ்சரித்த மோசே தேவனுடைய விரலினால் எழுதப்பட்ட பத்துக்கற்பனைகளின் கற்பலகைகளோடு சீனாய் மலையின் அடிவாரத்துக்கு வருகிறார். அங்கே முதல் பிரதான ஆசாரியனாக தெரிந்துகொள்ளப்படவிருக்கும் ஆரோனின் தலைமையில் பயங்கரமான விக்கிரக ஆராதனை நடக்கிறது (யாத் 32:6,7). அவர்கள் எல்லாரையும் நிர்மூலமாக்கி மோசேயை பெரிய ஜாதியாக்குவதாக தேவன் அறிவிக்கிறார். மோசேயின் பரிந்துபேசுதலினிமித்தம் தேவன் இஸ்ரவேலருக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு பரிதாபங்கொள்கிறார். கர்த்தரின் கண்களில் மோசேக்கு கிருபை கிடைக்கிறது (யாத் 33:17). அதைப் பயன்படுத்தி "மோசே உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்" (யாத் 33:18) என்று ஜெபிக்கிறார்.

அப்பொழுது தேவன் சொல்கிறார்: "என்னுடைய தயையை எல்லாம் நான் உனக்கு முன்பாகக் கடந்துபோகப்பண்ணி, கர்த்தருடைய நாமத்தை உனக்கு முன்பாகக் கூறுவேன்; எவன்மேல் கிருபையாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் கிருபையாயிருப்பேன்; எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ, அவன்மேல் இரக்கமாயிருப்பேன்" (யாத் 33:19). இஸ்ரவேலை தேவன் அழிக்காமல் விட்டார் என்றால் அது அவருடைய கிருபையையும் இரக்கத்தையுமே காட்டுகிறது. தேவன் தன்னுடைய தயையை (பரிபூரண நன்மையை) மோசேக்கு வெளிப்படுத்துகிறார் என்றால் அது மோசேயின் தகுதியையோ அல்லது அவர் தேவனுக்கென்று செய்துகொண்டிருக்கும் ஊழியத்தையோ அடிப்படையாகக் கொண்டதல்ல. தேவனுடைய சுத்த கிருபை என்பதை

மோசே உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே தேவன் இவ்வாறு பேசுகிறார்.

யாத்திராகமத்தில் கிருபை, இரக்கம் என்று சொல்லப்படும் தேவனுடைய குணாதிசயங்களை பவுல் இரக்கம், உருக்கம் என்று சற்று மாற்றியிருக்கிறார். "அவர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன்" (சங் 86:15). தேவனுடைய இரக்கம் எத்தகையது என்பதை அறிந்துகொள்ள உபா 30:3, 2 நாளா 36:15, சங் 78:38, எரே 12:15, புல 3:32, மீகா 7:19 வாசித்துப்பாருங்கள். ஆனாலும் எல்லார்மீதும் அவர் சமமாக இரக்கம் பாராட்டியே தீரவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் இல்லை. அவருடைய இரக்கத்தின்மேல் எந்த மனிதனும் உரிமை பாராட்ட முடியாது என்பதே இந்த வசனம் அறிவிக்கும் சத்தியம்.

உலகமனிதர்கள் பொதுவாகச் சொல்லும் காரியம் என்ன? தேவன் எல்லா மனிதர்களையும் ஒரே விதமாக, ஒரே அளவுதான் நேசிப்பார் என்பதுதான் அவர்களுடைய நம்பிக்கை. இதன்விளைவாக கிறிஸ்தவர்களாகிய நாமும் இது உண்மையாக இருப்பதாக நினைக்கிறோம். ஆனால் தேவன் அறிவிக்கும் காரியம் என்ன? யாரை நேசிக்க விரும்புகிறாரோ அவரை நேசிக்கிறார். தன்னுடைய அன்பையும் கருணையையும் வெளிப்படுத்த தகுதியான ஒருவனை அவர் தேர்ந்தெடுக்கிறார். அவன்மேல் இரக்கமாயிருக்கிறார். அவன்மேல் உருக்கமாயிருக்கிறார். அவருடைய இரக்கத்துக்கு அவரே காரணமாயிருக்கிறார்.

இன்று தேவன் நம்மை நேசிக்கிறார் என்றால் நாம் அவருக்காக எதையோ செய்துவிட்டோம் என்பதல்ல. நம்முடைய பெலன், நிர்வாகம், திறமை அல்லது முயற்சி அதை நிர்ணயம் செய்வதில்லை, செய்யப்போவதும் இல்லை. **கிறிஸ்துவுக்குள் நம்மை நேசிக்க தேவன் சித்தம் கொண்டிருப்பதினால் அவர் நேசிக்கிறார். அவருடைய தீர்மானமும், அழைப்பும் அவருடைய சித்தத்தையே உறுதிப்படுத்துகிறது.** அவரைப்பற்றி வெளி 3:7 சொல்கிறது: அவர் "ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர்".

இந்த வசனம் அறிவிக்கும் காரியங்களாவன:

1. தேவன் யாருக்கும் எந்த விதத்திலும் கடன்பட்டவரல்ல.

2. தேவனிடமிருந்து வெளிப்படும் இரக்கம் முற்றிலும் இலவசமானது.

3. தேவன் தனது மன விருப்பத்தின்படி தான் தெரிந்துகொண்ட சிலருக்கு அதை வழங்குகிறார்.

4. தேவனுடைய கிருபை அவருடைய ராஜரீக சித்தத்தையே அடிப்படையாகக் கொண்டது.

ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம். (ரோம் 9:16)

இந்த வசனத்தில் ஏழு வார்த்தைகள்தான் காணப்படுகின்றன. ஆனால் ஒரு ஆழமான சத்தியத்தை பவுல் இந்த வசனத்தின் மூலமாகப் போதிக்கிறார். தேவனால் தெரிந்துகொள்ளப்படுவது என்பது மனித விருப்புகளுக்கும், முயற்சிகளுக்கும் அப்பாற்பட்டது என்கிறார் பவுல். நம்முடைய விரும்புதலும் நம்முடைய ஓடுதலும் அதற்குக் காரணமாய் அமைவதில்லை. இந்த வசனத்தில் "ஓடுகிறது" என்ற வார்த்தை மனித முயற்சியைக் காட்டுகிறது (கலா 2:2, பிலிப் 2:14). மனிதனுடைய முயற்சிகளுக்கோ, தகுதிக்கோ, கிரியைகளுக்கோ தேவனுடைய தெரிந்துகொள்ளுதலுக்கு இடம் இல்லை. இந்த விஷயத்தில் தேவன் தன்னிச்சையாகச் செயல்படுகிறார். அவர் செயல்படும் விதத்தை நிர்ணயம் பண்ணுவது, நாம் அல்ல - அவருடைய இரக்கம் மட்டுமே.

தீத்து 3:5 சொல்கிறபடி "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்". அதனால்தான் தானியேல் ஜெபிக்கிறார்: "நாங்கள் எங்கள் நீதிகளை அல்ல, உம்முடைய மிகுந்த இரக்கங்களையே நம்பி, எங்கள் விண்ணப்பங்களை உமக்கு முன்பாகச் செலுத்துகிறோம்" (தானி 9:18). **பரிசுத்தவானும் தேவனுக்குப் பிரியமானவனுமான** (தானி 10:11) **தானியேலே தன்னுடைய நீதியை நம்பி தேவசமுகத்துக்குள் வரமுடியவில்லை.**

தேவன் இரங்குகிறவராய் இருப்பதினால் நாம் இரக்கத்தைப் பெறுகிறோம். அதனால்தான் பவுல் சொல்கிறார்: "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே 2:4,5). நம்முடைய வாழ்க்கையில் இரட்சிப்பின் அனுபவத்தைக் குறித்து சற்று யோசித்துப் பார்ப்போம்.

இரட்சிக்கப்படவேண்டும் என்று நாம் தீர்மானம் செய்ததினாலா இரட்சிக்கப்பட்டோம்? அதற்காக நாம் ஏதோ காரியங்களைச் செய்ததினாலா இரட்சிக்கப்பட்டோம்? அப்படி ஒன்றும் இல்லை என்றுதான் இந்த வசனம் அறிவிக்கிறது. ஏனென்றால் நாம் நித்தியத்திலேயே இரட்சிக்கப்பட்டுவிட்டோம். இந்த வசனத்தின் அடிப்படையில் மூன்று கேள்விகளும் அதின் பதில்களும்.

கேள்வி 1)
தேவன் எப்போது தன்னுடைய இரக்கத்தை காட்டினார்?

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்தபோது.

கேள்வி 2)
தேவன் நம்மை எப்போது நேசிக்க ஆரம்பித்தார்?

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்தபோது.

கேள்வி 3)
தேவன் தன் அன்பை எப்போது வெளிப்படுத்தினார்?

நாம் அக்கிரமங்களில் மரித்தவர்களாய் இருந்தபோது.

இஸ்ரவேலரின் பாரம்பரிய வரலாற்றுப் பின்னணியில் இரட்சிப்பைப் பொறுத்தவரை மனிதனுடைய பரிதாபத்துக்குரிய நிலை என்ன என்பதை இந்த வசனத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கிறார். தான் இரட்சிக்கப்படவேண்டும் என்று ஒரு மனிதன் வாஞ்சிக்கலாம். அதற்கான பல முயற்சிகளைச் செய்யலாம். அதில் வெற்றியடையும் நம்பிக்கையும் அவனில் காணப்படலாம். ஆனால் இவைகளினிமித்தம் ஒருவன் இரட்சிக்கப்படுவதில்லை. வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது, "இரட்சிப்பு கர்த்தருடையது" (யோனா 2:9), "இது தேவனுடைய ஈவு" (எபே 2:8). யார் இரட்சிக்கப்படக்கூடும் என்ற கேள்விக்கான பதில் மத்தேயு 19:25, 26, மாற்கு 10:26, லூக்கா 18:26 ஆகிய மூன்று சுவிசேஷங்களிலும் காணப்படுகிறது. "மனுஷரால் இது கூடாததுதான்; தேவனால் எல்லாம் கூடும்". மனிதனுடைய சொந்த முயற்சியினால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை.

ஒருவன் தேவனுடைய ஆசீர்வாதத்தை விரும்பக்கூடாது என்றோ, அதற்காக முயற்சி செய்யக்கூடாது என்றோ பவுலும் சொல்லவில்லை, நானும் சொல்லவில்லை. ஆனால் ஒருவனுடைய விருப்பமும் முயற்சியும் அவன் பெற்றுக்கொண்ட கிருபையின் செயலாற்றலே. தேவனுடைய இரக்கமும் கிருபையுமே சகல ஆசீர்வாதங்களுக்கும் மூலகாரணம்

என்பதை தன் வாசகர்கள் அறிந்து உணர்ந்துகொள்ள வேண்டும் என்று பவுல் விரும்புகிறார். ஏனென்றால் ஒருவன் ஆசீர்வாதங்களை வாஞ்சிக்கிறான், அதற்காகப் பிரயத்தனப்படுகிறான் என்பதற்காக அதைக் கொடுத்தே தீரவேண்டும் என்ற கட்டாயத்துக்குள் தேவன் இல்லை. "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும்" (நீதி 21:31) யுத்தத்துக்கு ஆயத்தப்படுவது மனிதன் செய்யவேண்டிய வேலை. ஆனால் தேவனுடைய ஏகாதிபத்தியமே வெற்றியைத் தீர்மானிக்கிறது. ஒருவனை விரும்பவும் ஓடவும் செய்வது தேவனுடைய கிருபையே. **தன்னுடைய அன்பின் அடிப்படையில் அவர் மனிதனை ஆசீர்வதிக்கிறாரே தவிர, யாருக்கும் கடன்பட்ட நிலையில் அவர் யாரையும் ஆசீர்வதிப்பதில்லை.**

"அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப் 2:12) என்று பவுல் சொல்லியிருக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் பயமும் நடுக்கமும் பிரயாசமும் இரட்சிப்பைத் தருவதில்லை. அடுத்த வசனத்தில் அவரே சொல்கிறார்: "ஏனெனில், தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்". தேவனுடைய ஆசீர்வாதங்களை வாஞ்சிக்கும் விருப்பத்தை நம்மில் உருவாக்குவது தேவனே என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவர் சொல்கிறார்: "உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்" (எசே 36:27).

1. விசுவாசம் நம்மை இரட்சிப்பதில்லை. ஏனென்றால் அது தேவனுடைய ஈவு

2. மனந்திரும்புதல் நம்மை இரட்சிப்பதில்லை. ஏனென்றால் அதையும் அவரே அருளிச்செய்கிறார்.

3. நாம் தேவனை நேசிப்பதால் இரட்சிக்கப்படுவதில்லை. ஏனென்றால் அவரே முந்தி நம்மீது அன்புகூருகிறார்.

4. நம்முடைய பெலன் நம்மை இரட்சிப்பதில்லை. ஏனென்றால் அவரே பெலன்தந்து வழுவாதபடி காத்துக்கொள்கிறார்.

எனவே இரங்குகிற தேவனாலே எல்லாம் ஆகும் என்று முடிவுசெய்கிறோம்.

மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும், உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லியிருக்கிறது. (ரோமர் 9:17)

தன்னுடைய இரக்கத்தினிமித்தம் தேவன் சிலரை இரட்சிப்புக்கென்று தெரிந்துகொள்கிறார் என்பதை அறிவித்த பவுல், அவருடைய தெரிந்துகொள்ளுதலினிமித்தம் அவர் அநீதியுள்ளவராகக் கருதப்படமுடியாது என்று முந்தின வசனங்களில் அறிவித்ததைப் பார்த்தோம்.

தேவன் சிலரை தெரிந்துகொள்கிறார் என்று சொல்லும்போது தேவன் சிலரைப் புறக்கணிக்கிறார் ' என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். **தெரிந்துகொள்ளுதலும் புறக்கணிப்பதும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது.** இவ்வாறு புறக்கணிப்பதும் தேவனுடைய தீர்மானத்தையே அடிப்படையாகக் கொண்டது. இதைக் குறித்து 17-23 உள்ளடங்கிய வேதபகுதியில் பேசும் பவுல், இந்த உபதேசத்தினிமித்தமும் தேவன் அநீதியுள்ளவராகக் கருதப்படக்கூடாது என்பதை வலியுறுத்துகிறார்.

உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவன் சிலரை இரட்சிப்புக்கென்று தெரிந்துகொண்டு தன்னுடைய கிருபையை வெளிப்படுத்துவதுபோல் சிலரை கோபாக்கினைக்கென்று தெரிந்துகொண்டு, அவர்களை இரட்சிக்காமல் அவர்கள் தங்கள் வழியிலேயே செல்ல அனுமதித்து அவர்களைத் தண்டித்து தன்னுடைய நீதியை வெளிப்படுத்துகிறார். இந்த உபதேசம் உண்மையிலேயே ஏற்றுக்கொள்வதற்குக் கடினமாகத்தான் இருக்கிறது. பல கிறிஸ்தவர்கள் இதை ஏற்றுக்கொள்வதில்லை. வேதம் வித்தியாசமான முறையில், நாம் எளிதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் எழுதப்பட்டிருந்தால் நலமாயிருக்கும் என்று நினைப்போமானால் தவறு நம்முடையதுதான். நம்முடைய மனுஷீக ஞானம் போதிக்கிற காரியத்தை நம்புகிறதைவிட வேதத்தை நம்புவதே நன்மையானது.

1 பேதுரு 2:8 வாசித்துப்பாருங்கள்: "அவர்கள் (கீழ்ப்படியாமலிருக்கிறவர்கள்) திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்து இடறுகிறார்கள்; அதற்கென்றே நியமிக்கப்பட்டவர்களாயும் இருக்கிறார்கள்". தேவன் சிலரை அழிவுக்கென்று நியமித்திருக்கிறார் என்றுதான் இந்த வசனம் அறிவிக்கிறது. இவ்வாறு தேவன் யாரையேனும் அழிவுக்கென்று நியமித்திருப்பாரானால் உங்களாலும் என்னாலும் எப்படி

அவர்களை இரட்சிப்புக்குள் வழிநடத்தமுடியும்?

தேவன் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்புவதில்லை என்பது உண்மைதான் (எசே 33:11). ஆனாலும் தான் நீதியுள்ளவர் என்பதை விளங்கப்பண்ணும்படியும், ஜீவன் உண்டாகும்படி அவரிடத்தில் வர மனதில்லாதவர்களை (யோவான் 5:40) அவர்கள் போகிற வழியிலேயே விட்டுவிடுகிறார். இவர்களுடைய பெயர் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படுவதேயில்லை (வெளி 17:8).

கிறிஸ்து ஏன் ஜனங்களோடு உவமைகளாகப் பேசுகிறார் என்று அவரிடம் சீஷர்கள் கேட்கும்போது அவர் சொல்கிறார்: "பரலோக ராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை" (மத் 13:11) இரட்சிப்புக்கடுத்த காரியங்களை சிலரால் கேட்கத்தான் முடியும். அவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதாக இயேசு பேசுகிறார், ஏனென்றால் இந்த கிருபை அவர்களுக்கு அருளப்படுவதே இல்லை.

இந்த வசனம் குறிப்பிடும் பார்வோன் யார் என்பதையும், அவன் என்ன செய்தான் என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். மோசேயின் நாட்களில் எகிப்து சாம்ராஜ்யத்தின் பேரரசனாக ஆண்டுகொண்டிருந்த பார்வோனின் பெயர் ராம்சே II. இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அழைத்துவரும்படியாக தேவன் மோசேயை அனுப்பும்போது தேவன் சொல்கிறார்: "நான் உன்கையில் அளித்திருக்கிற அற்புதங்கள் யாவையும் பார்வோனுக்கு முன்பாகச் செய்யும்படி எச்சரிக்கையாயிரு; ஆகிலும் நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்துவேன்; அவன் ஜனத்தைப் போகவிடான்" (யாத் 4:21).

மோசேயும் ஆரோனும், தேவன் தங்களுக்கு சொன்னதை பார்வோனிடம் அறிவித்தபோது உடனடியாக அவன் சொல்கிறான்: "நான் இஸ்ரவேலைப்போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்? நான் கர்த்தரை அறியேன்; நான் இஸ்ரவேலைப் போகவிடுவதில்லை" (யாத் 5:2). "நான் கர்த்தரை அறியேன்" என்று சொன்னதினிமித்தம், கர்த்தர் தான் யார் என்பதை பார்வோனுக்கு மட்டுமல்லாமல், எகிப்தின் குடிமக்களுக்கு மட்டுமல்லாமல் உலகமக்கள் அத்தனைபேரையும் அறிந்துகொள்ளச் செய்கிறார். அதனால்தான் மோசே மூலமாக தேவன் பார்வோனிடம் சொல்கிறார்: "என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன்" (யாத் 9:16).

தேவன் பார்வோனிடம் சொல்லும் காரியம் இதுதான்: கர்த்தராகிய

நானே என்னுடைய தீர்மானத்தின்படி உன்னை எகிப்து சாம்ராஜ்யத்தின் அதிபதியாக உயர்த்தினேன். அதிகாரத்தையும், மகத்துவத்தையும் உனக்குக் கொடுத்தேன். உன்மேல் கொண்டுள்ள அன்பினால் இதை நான் செய்யவில்லை. சர்வ வல்லமையுள்ள நீ என்னை எதிர்த்து வரும்போது உன்னை நிர்மூலமாக்கி நான் யார் என்பதை உனக்கும் சகல ஜாதிஜனங்களுக்கும் தெரியப்படுத்தி என்னுடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும் என்பதே என்னுடைய திட்டம்". இவ்வாறு சொல்வதாக "வேதத்தில் சொல்லியிருக்கிறது" என்று பவுல் சொல்லும்போது வேத வசனங்கள் ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தை என்பதை (2 தீமோ 3:16) பவுல் உறுதிப்படுத்துகிறார்.

எகிப்தில் வெளிப்பட்ட தேவனுடைய வல்லமையைக் குறித்து பேசும் சில வேத வசனங்கள்: யாத் 15:13-16, உபா 6:21-23; 7:18,19; 11:3-6, யோசுவா 2:9,10, 1 சாமு 4:8, சங் 78:12,13; 105:26-38; 106:9-11; 136:10-15. "கர்த்தர் சகலத்தையும் தமக்கென்று படைத்தார்; தீங்கு நாளுக்காகத் துன்மார்க்கனையும் உண்டாக்கினார்" (நீதி 16:4) என்ற வசனத்தின்படி பார்வோனை உண்டாக்கி நிலைநிறுத்தியிருந்தார் என்று பார்க்கிறோம். இன்றும் எங்கெங்கு யாத்திராகமப் புஸ்தகம் வாசிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் தேவனுடைய ஓங்கின கையின் மகத்துவமும், பராக்கிரமும் அறிவிக்கப்படுகிறது என்பதில் சந்தேகமே இல்லை.

இந்த வசனம் அறிவிக்கும் காரியங்கள்

1. நித்திய அழிவுக்கென்று (புறக்கணிக்கப்படுவதற்கு) பார்வோன் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன்.
2. இவ்வாறு பார்வோன் தெரிந்துகொள்ளப்பட்டதின் நோக்கம் தேவனுடைய நாமம் பிரஸ்தாபிக்கப்பட வேண்டும் என்பதே.

ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார். (ரோமர் 9:18)

யாத்திராகமம் 33:19 -ன் பிரதிபலிப்பாக இந்த வசனம் அமைகிறது. இந்த வசனத்தின் முதல் பகுதியை ஏற்கனவே பவுல் இருமுறை அறிவித்திருக்கிறார். தேவன் இரக்கத்துக்குரியவர்களாக யாரையெல்லாம் தெரிந்தெடுத்திருக்கிறாரோ அவர்கள்மேல் இரக்கமாயிருப்பது உண்மை. தேவனிடமிருந்து இரக்கத்தைப்பெற எந்த ஒரு மனிதனும் உரிமை

படைத்தவன் அல்ல. தகுதியுள்ளவன் அல்ல. இரக்கம் என்றாலே அது ஒருவனுடைய தகுதியின் அடிப்படையில் உண்டாவதில்லை என்பது புலனாகிறது. **தேவனிடமிருந்து இரக்கத்தைப் பெறாதநிலையில் எந்த மனிதனும் தேவனிடம் வரமுடியாது. தேவன் நீதியை மட்டும் கொண்டவராக இருந்திருப்பாரானால் ஒருவனும் இரட்சிக்கப்பட முடியாது.**

அடுத்த ஒரு சத்தியத்தையும் பவுல் அறிவிக்கிறார். தேவன் கடினமாயிருக்க தேர்ந்தெடுத்தவர்களிடத்தில் கடினமாக இருக்கிறார். தன்னுடைய சுயாதீன திட்டத்தின்படியும், தீர்மானத்தின்படியும் சிலர்மேல் இரக்கம் காட்டும் தேவன் (உதாரணம்: மோசே), அதே சுயாதீன திட்டத்தின்படியும் தீர்மானத்தின்படியும் சிலர்மேல் இரக்கம் காட்டாமலும் இருக்கக்கூடும் (உதாரணம் : பார்வோன்). பவுல் இவ்வாறு சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல் இன்னும் ஒருபடி மேலே சென்று அவர்களைக் கடினப்படுத்த சித்தமுடையவராய் கடினப்படுத்தவும் செய்கிறார் என்கிறார். **கடினப்படுத்துதல் என்பது தேவகோபாக்கினையின் செயல்பாடு. சிலருடைய அழிவை தேவன் முன்னறிந்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, அதை அவரே நடப்பிக்கிறார்.** இவ்வாறு கடினப்படுத்தப்படப்பட்டவர்கள் இரக்கத்தைப் பெற தகுதியற்றவர்களாகிறார்கள், மனந்திரும்ப வகையில்லாதவர்களாய் போகிறார்கள். மோசே தேவனிடமிருந்து இரக்கத்தைப் பெறுகிறார் என்றால் பார்வோன் கடினப்படுத்தப்படுகிறான். தேவனைப் பொறுத்தவரை இரண்டுமே நீதியான கிரியைகள்தான். ஏனென்றால் இவை இரண்டினாலும் தேவன் மகிமைப்படுகிறார். இவை இரண்டிலும் தேவனுடைய தீர்மானமே செயல்படுகிறது.

தேவன் தன்னுடைய சாயலில் சிருஷ்டித்த மனிதரில் சிலரைக் கடினப்படுத்தி ஆக்கினைக்கு ஒப்புக்கொடுப்பாரா என்று நாம் ஆச்சரியப்படவோ, விசனப்படவோ வேண்டியதில்லை. ரோமர் நிருபத்தின் முதல் அதிகாரத்தில், "தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்" (வசனம் 24), "இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்" (வசனம் 26), "கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" (வசனம் 28) என்றெல்லாம் வாசித்தோம். "அவர்களை அவர்கள் இருதயத்தின் கடினத்திற்கு விட்டுவிட்டேன்" (சங் 81:12), "தேவன் அவர்களைவிட்டு விலகி, வானசேனைக்கு ஆராதனை செய்ய அவர்களை ஒப்புக்கொடுத்தார்" (அப் 7:42) என்றெல்லாம் வாசிக்கிறோம். நீதிமொழிகள் 16:4 சொல்கிறது: "கர்த்தர் சகலத்தையும் தமக்கென்று படைத்தார். தீங்கு நாளுக்காகத் துன்மார்க்கனையும் உண்டாக்கினார்".

பலவேளைகளில் தேவன் மனிதனை தன்னிச்சையாகச் செயல்பட்டு, தன்னுடைய மனவிருப்பத்தின்படியெல்லாம் நடந்து தன்னுடைய வாழ்க்கை

சரித்திரத்தை அவனே நிர்ணயம் செய்துகொள்ளும்படியாக விட்டுவிடுகிறார் என்பதுபோல் தோன்றுகிறது, அவனுடைய பாவ சுபாவத்தையோ, இருதயத்தின் விருப்பு வெறுப்புகளையோ அவர் மாற்றுவதில்லை. தேவன் விரும்பியிருந்தால் ஏவாளின் இருதயத்தை மாற்றி அவள் பாவஞ்செய்யாதபடி தடைசெய்திருக்கலாமே, பார்வோனின் இருதயம் கடினப்பட அனுமதிக்காமல் இருந்திருக்கலாமே. நாம் பாவம் செய்யும்வேளைகளில்கூட அதை தடைசெய்திருக்கலாமே. அதற்கான வல்லமை அவரிடம் உண்டு. ஆனால் பலவேளைகளில் மனிதன் தன் மனவிருப்பத்தின்படி செய்து, அதின் விளைவுகளைச் சந்திக்க அனுமதிக்கிறார் என்பதுதான் உண்மை. வேதத்தில் இருந்து நாம் அறிந்துகொள்ளும் காரியம் அதுதான்.

மோசேயிடம், "நான் அவன் இருதயத்தை கடினப்படுத்துவேன்" (யாத் 4:21) என்றும், "நான் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி எகிப்து தேசத்தில் என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பேன்" (யாத் 7:3) என்று தேவன் சொன்னார். என்றாலும் இது நடக்கப்போகிற ஒரு காரியத்தின் முன்னறிவிப்பாகவும் ஆலோசனையுமாகவே மோசேயிடம் சொல்லப்பட்டது. எகிப்துக்கு எதிராக எந்த வாதையையும் தேவன் நடப்பிக்குமுன்பே, "கர்த்தரின் வார்த்தையைக் கேட்கிறதற்கு அவர் யார்" (யாத் 5:2) என்கிறான். பார்வோனே முதலாவதாக தன்னைக் கடினப்படுத்துகிறான். யாத்திராகமம் 7:13 சொல்கிறது: "கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது". அதுமட்டுமல்ல, முதல் ஐந்து வாதைகளை மோசே எகிப்தில் நடப்பித்தபோதும் ஒவ்வொரு முறையும் பார்வோன் தன் இருதயத்தைக் கடினப்படுத்தினான் என்று வேதம் திட்டவட்டமாக அறிவிக்கிறது. யாத் 7:22; 8:15,19,32; 9:7 வாசித்துப்பாருங்கள்.

ஆறாவது வாதைக்கும் பார்வோன் எதிர்த்து நிற்கும் வேளையில்தான், முதல்முறையாக, "கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்" (யாத் 9:12) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏழாவது வாதையான "கல்மழையும் இடிமுழக்கமும் நின்றுபோனதைப் பார்வோன் கண்டபோது, அவனும் அவன் ஊழியக்காரரும் பின்னும் பாவம்செய்து, தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தினார்கள்". "கர்த்தர் மோசேயைக் கொண்டு சொல்லியிருந்தபடியே, பார்வோனின் இருதயம் கடினப்பட்டது" (யாத் 9:34,35) என்றுதான் வாசிக்கிறோம்.

எட்டாவது வாதை வெட்டுக்கிளிகள் மூலமாக உண்டான பேரழிவு. இதினிமித்தம் பார்வோன் "கர்த்தருக்கும் உங்களுக்கும் விரோதமாகப் பாவம் செய்தேன்" (யாத் 10:16) என்று அறிவித்தாலும், "கர்த்தரோ

பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார்; அவன் இஸ்ரவேல் புத்திரரைப் போகவிடவில்லை" (யாத் 10:20) என்று வாசிக்கிறோம். **பாவம் செய்யும் ஒவ்வொரு மனிதனும் தன்னைக் கடினப்படுத்திக்கொள்கிறான். தொடர்ந்து பாவம் செய்யும்போது தேவனிடம் திரும்ப அவனால் முடியாமற் போகிறது.** முதலாவது தன்னைக் கடினப்படுத்திக்கொண்டது பார்வோன்தான். தொடர்ந்து அவன் தன்னைக் கடினப்படுத்திக் கொண்டுவரும்போது அந்த கடினத்தன்மை அவனை இறுகப்பிடித்துக்கொள்கிறது. அதற்குப்பின் அவன் தன் பாவத்தைக் குறித்து வேதனை அடைந்தாலும் அதைவிட்டு விடுதலைபெற மார்க்கமில்லாமல் போகிறது. அவன் தன்னுடைய துன்மார்க்கத்தில் நிலைத்திருக்கவும், தேவனால் ஆக்கினைத்தீர்ப்பைப் பெறவும் தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்கிறான்.

ஒரு மனிதன், தனக்கு அருளப்பட்ட தெய்வீக வெளிச்சத்தை ஏற்றுக்கொள்ளாமல், தேவ இரக்கத்தையும் ஆலோசனையையும் புறக்கணித்து, தன்னிச்சையாய் துணிகரமாக நடக்கும்போது தேவன் அவர்களை அழிவுக்கு ஒப்புக்கொடுப்பதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை. பார்வோன் எத்தனையோ எச்சரிக்கைகளைப் பெறுகிறான். அவனுடைய மந்திரவாதிகளே சொல்கிறார்கள், "இது தேவனுடைய விரல்" (யாத் 8:19). "தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஆராதனை செய்ய அந்த மனிதரைப்போகவிடும்; எகிப்து அழிந்துபோகிறதை நீர் இன்னும் அறியவில்லையா" என்கிறார்கள் அவனுடைய ஊழியக்காரர். இதன் விளைவாக பார்வோனின் இருதயம் மட்டுமல்ல, அவனுடைய வீரர்களின் இருதயமும் மேலும் கடினப்படுகிறது (யாத் 14:17, 1 சாமு 6:6).

இன்னொரு காரியத்தையும் கவனிக்கவேண்டும். முந்தித் தன்னுடைய இருதயம் கடினப்படுத்தப்பட்டதின் விளைவாக ஒருவனும் தன்னுடைய ஆத்துமாவை இழந்துபோவதில்லை. தன்னுடைய ஆத்துமாவை இழந்துபோனதின் விளைவாகவே அவன் கடினப்படுத்தப்படுகிறான். பவுல் சொல்கிறார்: "சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத் தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" (2 தெச 2:11,12). வெளி 17:17 வாசித்து கடைசி காலங்களில் சம்பவிக்கும் ஒரு நிகழ்ச்சியை அறிந்துகொள்ளுங்கள்.

யோவான் 12:40ல், "அவர்கள் கண்களினால் காணாமலும், இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல் இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர் குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்"

என்ற ஏசாயாவின் அறிக்கையைக் காணலாம். சங்கீதம் 105:25 சொல்கிறது: "தம்முடைய ஜனங்களைப் பகைக்கவும், தம்முடைய ஊழியக்காரரை வஞ்சனையாய் நடத்தவும், அவர்களுடைய இருதயத்தை மாற்றினார்". இயேசு சொல்கிறார் : "அவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்" (மத் 15:14). தேவன் சொல்கிறார் : "எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். அவனைப் போகவிடு" (ஓசியா 4:17). வெளி 22:11ல் தேவன் சொல்கிறார் : "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்".

மனிதர்கள் தங்களைக் கடினப்படுத்திக் கொண்டதின் விளைவாகவே தேவன் அவர்களைக் கடினப்படுத்துகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். தேவன் ஒருவனைக் கடினப்படுத்துகிறார் என்பதினால் அவர் அவனுடைய பாவத்துக்குக் காரணமாக அமைகிறார் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.

எஸ்போனின் ராஜாவாகிய சீகோனின் இருதயத்தை தேவன் கடினப்படுத்திய செய்தியை மோசே உபா 2:30-ல் இவ்வாறு அறிவிக்கிறார்: "உன் தேவனாகிய கர்த்தர் அவனை உன் கையில் ஒப்புக்கொடுக்கும்படி, அவன் மனதைக் கடினப்படுத்தி, அவன் இருதயத்தை உரங்கொள்ளப்பண்ணியிருந்தார்". கிபியோனின் குடிகளாகிய ஏவியரைத் தவிர லீபனோன், கோசேன் மற்றும் பக்கத்து தேசத்து ராஜாக்களும் இருதயம் கடினப்படுத்தப்பட்டவர்களாய் யோசுவாவுக்கு விரோதமாக யுத்தம் செய்வதைப் பார்க்கிறோம் (யோசுவா 11:19,20). ஏசாயா ஜெபிப்பதைப் பாருங்கள்: "கர்த்தாவே, நீர் எங்களை உம்முடைய வழிகளைவிட்டுத் தப்பிப்போகப்பண்ணி, எங்கள் இருதயத்தை உமக்குப் பயப்படாதபடிக்குக் கடினப்படுத்துவானேன்?"

தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் நன்மையானதே (வசனம் 19-29)

இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார்? அவர் சித்தத்துக்கு எதிர்த்துநிற்பவன் யார்? என்று என்னுடனே சொல்லுவாய்? (ரோமர் 9:19)

இந்த வசனம் அறிவிக்கும் காரியம் இதுதான். தேவன் சிலர்மேல் இரக்கமாயிருக்க சித்தமாயிருக்கிறார். சிலரை கடினப்படுத்தி புறக்கணிக்க சித்தமாயிருக்கிறார். இவ்வாறு புறக்கணிக்கப் பட்டவர்களோ விடுதலையோடு பாவம் செய்கிறார்கள். தேவன் இதை

அனுமதிக்கிறபடியால் பாவம் செய்யும்போதெல்லாம் அவர்கள் தேவனுடைய சித்தத்தையே நிறைவேற்றுகிறவர்களாக தங்களைக் குறித்து எண்ணிக்கொள்கிறார்கள். அப்படியிருக்கும்போது தேவன் அவர்களை ஏன் பாவத்தினிமித்தம் குற்றப்படுத்தி ஆக்கினைத்தீர்ப்பை வழங்கவேண்டும் என்று தேவனுக்கு விரோதமாக பேசுகிறார்கள். எந்த ஒரு மனிதனாலும் தேவசித்தத்துக்கு எதிராக செயல்படமுடியாதே. எனவே அவர்கள் சொல்கிறார்கள்: "தேவன் எங்கள் பாவத்தினிமித்தம் ஏன் கோபப்படவேண்டும்? நாங்கள் இவ்வாறு செயல்படும்படியாக எங்களை உருவாக்கியதும், அனுமதித்ததும் அவர்தானே. அவருடைய கரத்தின் கிரியைகளாகிய எங்களை அழித்து அவர் என்னத்தைச் சாதிக்கப்போகிறார்? அவருடைய சித்தத்துக்கு எதிராக நாங்கள் என்ன முயற்சிசெய்தாலும் நாங்கள் வெற்றியடையப் போவதில்லையே".

தேவனே அவர்களை பாவங்களுக்கு ஒப்புக்கொடுத்திருக்க (ரோமர் 1:24, 26, 28) அதன்விளைவாக பாவத்தை மேற்கொள்ளும் பெலன் அவர்களில் இல்லாதிருக்க, தேவன் அவர்களைக் குற்றப்படுத்துவாரானால் அது சரியல்ல என்ற இந்த கேள்வி பவுலுக்கு முன்பாக வைக்கப்படுகிறது. ஏற்கனவே இந்த அதிகாரத்தில் தேவவசனம் செயலிழந்து போயிற்றா என்ற கேள்வியையும் (வசனம் 6), தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லலாமா என்ற கேள்வியையும் (வசனம் 14) பவுல் சந்தித்து அதற்கான பதில்களைக் கூறியதை தியானித்திருக்கிறோம் இப்போது மூன்றாவது கேள்விக்கான பதிலை பவுல் 20-23 வசனங்களில் வழங்குகிறார்.

அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? (ரோமர் 9:20)

தேவனைக் குற்றப்படுத்தும் கேள்விக்கு பவுல் காரசாரமாகவே பதில் கொடுக்கிறார். ஏனென்றால் பெருமையும், மனமேட்டிமையும் நிறைந்த ஒரு மனிதனிடமிருந்துதான் இப்படிப்பட்ட கேள்வி வரமுடியும். இந்த மனிதன் தான் செய்யும் பாவங்களினிமித்தம் தேவனைக் குற்றப்படுத்த முயற்சிக்கிறான் என்பதே உண்மை.

மனிதன், சர்வவல்லமையுள்ள தேவனால் ஏதேன் தோட்டத்து மண்ணில் இருந்து சிருஷ்டிக்கப்பட்டவன். அவருடைய ஜீவசுவாசத்தைப் பெற்றுக்கொண்டதினிமித்தம் ஜீவனைப் பெற்றுக்கொண்டவன். நாசியில் சுவாசமுள்ள மனிதன் சரீரத்திலும், ஆத்துமாவிலும் பெலவீனம் நிறைந்தவன். அவனில் ஏதேனும் ஞானம் காணப்படுமானால் அது நிச்சயமாக தேவனுடையதாகத்தான் இருக்கும். குறைவுபட்ட தன்னுடைய

ஞானத்தினால் எந்த மனிதனாலும் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிந்துகொள்ளமுடியாது. மனித புத்திசாலித்தனத்தினால் தேவனுடைய இரக்கத்தின் மகத்துவத்தை உணர்ந்துகொள்ளமுடியாது. அதனால்தான் தேவன் எல்லாரையும் நேசிக்கிறார், எல்லாரையும் அழைக்கிறார், எல்லாரையும் விடுவிக்கிறார் என்று முடிவு செய்து விடுகிறோம். தேவன் சிலரைத் தெரிந்துகொள்கிறார் என்பதையும், சிலரைப் புறக்கணிக்கிறார் என்பதையும் விளங்கிக்கொள்ளாத நிலையில் "புத்தியில்லாத, காட்டுக் கழுதைக்குட்டிக்கு ஒப்பாகப் பிறந்த மனிதன்" (யோபு 11:12) தேவ நீதியைக் குறித்துக் கேள்விகேட்கத் துணிகரம் கொள்கிறான் என்பதுபோல் பவுல் பேசுகிறார்.

பாவ மனிதன் இவ்வாறு சொல்கிறான்: "நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டிருப்பேனேயாகில் பரலோகத்துக்குப் போகிறேன். அவரால் தெரிந்து கொள்ளப்படவில்லை என்றால் நரகத்துக்குப் போகிறேன்". எதைக் குறித்தும் கவலைப்பட்டு ஒரு பிரயோஜனமுமில்லை. ஆனால் நாம் தியானித்த வசனங்கள் சொல்லுவதென்ன? யாரிடம் இரக்கம் காட்ட தேவன் விரும்புகிறாரோ அவர்களுக்கு இரக்கம் காட்டுகிறார். அதற்கு அவர் முழு உரிமையும் பெற்றவராயிருக்கிறார். யூதனானாலும் சரி, எகிப்தியனானாலும் சரி யாரும் அவருடைய இரக்கத்தில் உரிமை கொண்டாடமுடியாது. இரண்டு ஜாதியாருமே பாவிகள், விக்கிரக ஆராதனைக்காரர். ஆனாலும் தன்னுடைய தீர்மானத்தின் அடிப்படையிலும், முற்பிதாக்களிடம் தான் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் நிமித்தமும் யூதர்களுக்கு இரக்கம்பாராட்ட அவர் முடிவு செய்திருக்கிறார். எகிப்தியர்களைவிட அவர்கள் நல்லவர்கள் என்பதால் அவர்கள் தெரிந்து கொள்ளப்படவில்லை.

எகிப்தியரிடம் தேவன் இரக்கம் பாராட்டவில்லை என்று தேவனைக் குற்றப்படுத்த ஒருவராலும்கூடாது. தேவனால் புறக்கணிக்கப்பட்டவர்கள் பார்வோனைப்போல் தங்களை முன்னதாக கடினப்படுத்திக் கொண்டவர்கள், பெருமைக்காரர்கள். தேவனுடைய வல்லமையை ஏற்றுக்கொள்ளாதவர்கள். தேவனிடமே கேள்விகேட்பவர்கள். கடைசி நாட்களில் பிதாவின் பெரிய வெள்ளை சிங்காசனத்தின் முன் (வெளி 20:11) நிறுத்தப்பட்டிருக்கும்போது அவர்கள் நாங்கள் தெரிந்து கொள்ளப்படவில்லை அதனால்தான் இங்கே நிற்கிறோம் என்று சொல்லி அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. ஏனென்றால் அது உண்மை அல்ல. புஸ்தகங்களில் எழுதப்பட்டிருக்கும் இவர்களுடைய பாவக்கிரியைகளே அவர்களை ஆக்கினைக்குள்ளாக நியாயந்தீர்க்கும்.

ஏசாயா 45:9ல் தேவன் சற்று வித்தியாசமாகக் கேட்கிறார்:

"மண்ணோடுகளுக்கொத்த ஓடாயிருந்தும், தன்னை உருவாக்கினவரோடே வழக்காடுகிறவனுக்கு ஐயோ! களிமண் தன்னை உருவாக்கினவனை நோக்கி: என்ன செய்கிறாயென்று சொல்லத்தகுமோ?", "ஒருவன் களிமண்ணுக்குச் சமானமாக எண்ணப்படலாமா? உண்டாக்கப்பட்டது தன்னை உண்டாக்கினவரைக் குறித்து: அவர் என்னை உண்டாக்கினதில்லை என்றும்; உருவாக்கப்பட்டது, தன்னை உண்டாக்கினவரைக் குறித்து; அவருக்கு புத்தியில்லையென்றும் சொல்லத்தகுமோ" (ஏசாயா 29:16). நேபுகாத்நேச்சார் சொல்கிறார்: "பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கைகளைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை" (தானி 4:35).

தேவனுடைய ராஜரீக அதிகாரத்தையும், மேன்மையையும் குறித்து பேசும் வேத வசனங்களை (உபா 4:39, 1 நாளா 29:12, யோபு 9:12; 12:19; சங் 29:10; 47:2; 83:17,18; 93:1; 135:6, நீதி 21:1, தானி 2:20) வாசித்துப்பாருங்கள், தேவனுடைய மகத்துவத்தை அறிந்து கொள்ளுங்கள். தேவன் தன்னுடைய கிரியைகளைக் குறித்து யாருக்கும் கணக்கு ஒப்புவிக்க வேண்டியதில்லை.

மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கும் மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ? (ரோமர் 9:21)

19-வது வசனத்தின் கேள்விக்கு பவுலின் இரண்டாவது பதிலாக இது அமைகிறது. மனிதனை தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்த விலையேறப்பெற்ற கற்கள், பொன், வெள்ளியிலிருந்து உருவாக்கவில்லை. மண்ணிலிருந்து உருவாக்கினார் (ஆதி 2:7; 3:19) அதனால்தான் ஏசாயா சொல்கிறார்: "கர்த்தாவே நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை" (64:8). "களிமண்போல என்னை உருவாக்கினீர்" என்கிறார் யோபு (10:9). தேவன் சொல்கிறார்: "களிமண் குயவன் கையில் இருக்கிறதுபோல் நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள்" (எரே 18:6). இந்தக் களிமண், தன்னை உருவாக்கிய குயவனைப் பார்த்து கேள்வி கேட்கிறது என்றால் அது எவ்வளவு துணிகரமான காரியம்? விலக்கப்பட்ட ஆகமமாக ஞானாகமம் 12:12 சொல்கிறது : "நீர் என்ன செய்தீர் என்று கேட்பவன் யார். உமது நீதித்தீர்ப்பை எதிர்ப்பவர் யார்? நீர் உண்டாக்கிய மக்களினத்தாரின்

அழிவுபற்றி குற்றம் சுமத்துபவர் யார்? நீதியற்றோரை நீர் பழிவாங்கும்போது, அவர்கள் சார்பாக உம் திருமுன் பரிந்துரைப்பவர் யார்?", "தேவன் எவ்வளவு மகத்துவமானவர்? ஜாதிகள் ஏற்றச்சாலில் தொங்கும் துளிபோலவும், தராசிலேபடியும் தூசிபோலவும் எண்ணப்படுகிறார்கள்; இதோ, தீவுகளை ஒரு அணுவைப்போல் தூக்குகிறார்" (ஏசாயா 40:15) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

குயவன் ஒரு பாத்திரத்தை கனமான காரியத்துக்கும் (சிறப்பான பயனுக்காகவும்) இன்னொன்றை கனவீனமான பாத்திரத்துக்கும் (அன்றாட பயனுக்கும்) களிமண்ணில் இருந்து உருவாக்க அவனுக்கு அதிகாரம் உண்டு. ஒரு வீட்டில் இருக்கும் பாத்திரங்களில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள் (2 தீமோ 2:20), **ஒருவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான், இப்படிப்பட்டவனே தெரிந்துகொள்ளப்பட்டவன். தெரிந்து கொள்ளப்படாதவனோ இத்தகைய மேன்மைகளுக்கென்று தெரிந்துகொள்ளப்படாதவன்.** மோசேயும் பார்வோனும் ஒரே களிமண்ணில் இருந்து உருவாக்கப்பட்ட இரண்டு வித்தியாசமான பாத்திரங்கள், தேவன் கேட்கும் கேள்வி இதுதான்: "என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா?" (மத் 20:15). குயவன்தான் பாத்திரங்களை உருவாக்குகிறவன். களிமண்ணின் அனுமதிகேட்டு அதை அவன் உருவாக்குவதில்லை. பாத்திரங்கள் தன்னைத்தானே உருவாக்கிக் கொள்வதுமில்லை. பாத்திரங்கள் பயன்படும் விதத்தில் வித்தியாசத்தை நிர்ணயம் பண்ணுகிறவர் தேவனே. அதைக் குறித்த விளக்கத்தை அவர் யாருக்கும் தரவேண்டியதில்லை.

பவுல் என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள். "அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?" (1 கொரி 4:7)

தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும் (ரோமர் 9:22)

19-வது வசனத்தில் எழுப்பப்பட்ட சந்தேகத்துக்கான முன்றாவது பதில் 22,23 வசனங்களில் காணப்படுகிறது. முந்தின வசனத்தில் மனித இனம் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டதைப் பார்த்தோம்.

1) கனமான பாத்திரம்

2) கனவீனமான பாத்திரம்

இவர்களில் கனவீனமான பாத்திரமாக தேவன் தெரிந்துகொண்டவர்களைப் பொறுத்தவரை தேவன் என்ன செய்கிறார் என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

1) கனவீனமான பாத்திரத்தின் மேல் தன் கோபத்தைக் காட்டுகிறார்.

2) கனவீனமான பாத்திரத்தின் மேல் தன் வல்லமையை வெளிப்படுத்துகிறார்.

கனவீனமான பாத்திரமாக தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு மனிதன் பார்வோன். அவன்மேல் தன்னுடைய கோபத்தையும் வல்லமையையும் தேவன் வெளிப்படுத்தினார் என்பதை அறிவோம். அவர் வல்லமை நிறைந்தவர். தாவீது சொல்கிறார்: "தேவரீர் எல்லாவற்றையும் ஆளுகிறவர்; உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு; எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும்" (1 நாளா 29:12). "அவர் தமது வல்லமையினால் சமுத்திரக் கொந்தளிப்பை அமரப்பண்ணி, தமது ஞானத்தினால் அதின் மூர்க்கத்தை அடக்குகிறார்" (யோபு 26:12). சங்கீதம் 62:11; 66:7; 93:4 வாசித்துப் பாருங்கள். எகிப்து சந்தித்த பத்து வாதைகளும் அவருடைய வல்லமையையே வெளிப்படுத்துகிறது.

1) நதியின் தண்ணீர் இரத்தமாக மாறியது (யாத் 7:20)

2) தவளைகள் எகிப்து தேசத்தை முற்றுகையிட்டது (யாத் 8:6)

3) பேன்களினால் தேசமெங்கும் உண்டான வாதை (யாத் 8:17)

4) வண்டுகளினால் தேசம் கெட்டுப்போனது (யாத் 8:24)

5) மிருக ஜீவன்களின் மரணம் (யாத் 9:6)

6) எரிபந்தமான கொப்புளங்கள் (யாத் 9:10)

7) தேசமெங்கும் கல்மழையோடே கலந்த அக்கினி (யாத் 9:24)

8) வெட்டுக்கிளிகளினால் உண்டான அழிவு (யாத் 10:13)

9) மூன்று நாள் தேசமெங்கும் காரிருள் (யாத் 10:22)

10) மனிதர்கள் மற்றும் மிருக ஜீவன்களின் தலையீற்றுகள் மரணம் (யாத் 12:29)

ஆனாலும், தேவனுடைய மகத்துவமான வல்லமையைக் கண்ட பார்வோனோ, எகிப்தியரோ மனந்திரும்பவில்லை என்று பார்க்கிறோம். தனக்கு எதிராக தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தியவர்களை தேவனே கடினப்படுத்தியதால் இது சம்பவிக்கிறது. "ஜனங்கள் தங்களை அடிக்கிறவரிடத்தில் திரும்பாமலும், சேனைகளின் கர்த்தரைத் தேடாமலும் இருக்கிறார்கள்" (ஏசாயா 9:13) என்று வாசிக்கிறோம். கனவீனமான பாத்திரத்துக்கு இன்னொரு உதாரணம் யூதாஸ். லூக்கா 22:22, யோவான் 13:18; 17:12, அப் 1:15-20 வாசித்துப்பாருங்கள்.

தேவனுடைய பல இயற்பண்புகள் (குணாதிசயங்கள்) வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவருடைய சம்பூரணமான ஞானம் (யோபு 37:16), அறிவு (சங் 147:5), பரிசுத்தம் (1 கொரி 1:31, சங் 71:22), நீதி (உபா 32:4), உண்மை (எண் 23:19), நன்மை (லூக்கா 18:19, சங் 100:5), அன்பு (1 யோவான் 4:8,16), இரக்கம் (2 சாமு 24:14), சமாதானம் (ரோமர் 15:33; 16:20), நியாயம் (உபா 32:4), எரிச்சல் (யாத் 34:14) ஆகியவற்றைக்குறித்து ஊழியக்காரர்கள் பிரசங்கித்திருப்பதைக் கேட்டிருப்போம். அவருடைய கடுங்கோபத்தைக் குறித்து (உபா 9:7) பொதுவாக யாருமே பேசுவதில்லை. அவர் தம்முடைய ஆயுதசாலையில் சினத்தின் அஸ்திராயுதங்களை வைத்திருக்கிறாராம் (எரே 50:25). "கரிநெருப்பை ஊதி, தன் கிரியைக்கான ஆயுதத்தை உண்டுபண்ணுகிற கொல்லனையும் நான் சிருஷ்டித்தேன்; கெடுத்து நிக்கிரமாக்குகிறவனையும் நான் சிருஷ்டித்தேன்" (ஏசாயா 54:16) என்று தேவன் சொல்கிறார். "அவருடைய கோபத்தின் ஆயுதங்களும் தேசத்தையெல்லாம் அழிக்க, வானங்கவிழ்ந்த கடையாந்தர தேசத்திலிருந்து வருகிறது" (ஏசாயா 13:5).

நன்மையான, நீதியான காரியங்களை நேசிக்கும் தேவன் அவைகளுக்கு விரோதமான காரியங்களைப் அழித்தே ஆகவேண்டும். பரிசுத்தமான தேவன் பாவத்தை வெறுத்தே ஆகவேண்டும். இஸ்ரவேலர் பாவம் செய்தபோது மோசேயிடம் தேவன் சொல்கிறார்: "என் கோபம் இவர்கள்மேல் மூளவும், நான் இவர்களை அழித்துப்போடவும் நீ என்னை விட்டுவிடு" (யாத் 32:10). யோசியா ராஜா சொல்கிறார்: "இந்தப் புஸ்தகத்தின் வார்த்தைகளுக்குச் செவிகொடாதபடியினால், நம்மேல் பற்றியெரிந்த கர்த்தருடைய உக்கிரம் பெரியது" (2 இராஜா 22:13). "குமாரனை

விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36) என்று வாசிக்கிறோம். உபா 29:23, ரோமர் 1:18; 2:5,8; 5:9; 9:22, கொலோ 3:6, 1 தெச 1:10; 2:16; 5:9; எபி 3:11, வெளி 6:16,17; 19:15 வாசித்துப் பாருங்கள். தேவனுடைய மற்ற குணாதிசயங்களினிமித்தம் தேவனை ஸ்தோத்திரிக்கும் நாம், அவருடைய உக்கிரகோபத்தினிமித்தமும் அவருக்கு நன்றி சொல்லக் கற்றுக்கொள்வோம்.

தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய், அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன? (ரோமர் 9:23)

'மகிமை' என்ற வார்த்தை இரண்டுமுறை இந்த வசனத்தில் பயன்படுத்தப்படுகிறது. இரண்டு இடத்திலும் தேவனுடைய இரக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு பவுல் இந்த வார்த்தையை பயன்படுத்துகிறார். அவருடைய இரக்கத்தை ஏற்றுக்கொள்ள ஒரு மனிதன் ஆயத்தமாயிருப்பானேயானால், அவன்மேல் இரக்கம் பாராட்ட தேவன் நீதியுள்ளவராக இருக்கிறார். அதே நேரத்தில் ஒருவன் தன்னுடைய இரக்கத்தைப் புறக்கணித்தால் கோபாக்கினையை வெளிப்படுத்தி அவனை அழித்துப்போடுவதிலும் அவர் நீதியுள்ளவராகவே இருக்கிறார். ஆனாலும் தேவனிடம் நீடிய சாந்தமும் பொறுமையும் காணப்படுவதினால் துன்மார்க்கரை அழித்துப்போடுவதை கூடியமட்டும் தாமதப்படுத்திக்கொண்டே இருக்கிறார் என்பதே உண்மை.

தேவன் நீடிய பொறுமையோடே காத்துக் கொண்டிருப்பதைக் குறித்து 1 பேதுரு 3:20; 2 பேதுரு 3:9ல் வாசிக்கிறோம். தேவன் சொல்கிறார்: "என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை நிறுத்திவைத்தேன்; உன்னைச் சங்கரிக்காதபடிக்கு நான் என் புகழ்ச்சியினிமித்தம் உன்மேல் பொறுமையாயிருந்தேன்" (ஏசாயா 48:9). எரேமியா அழகாகச் சொல்லுகிறார்: "நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" (புலம் 3:22).

21-வது வசனத்தில் கனமான பாத்திரம் எனப்பட்டது இங்கே கிருபா பாத்திரம் (Vessel of Mercy) என்றும், கனவீன பாத்திரம் எனப்பட்டது கோபாக்கினைப் பாத்திரம் (Vessel of Wrath) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

கோபாக்கினைப் பாத்திரங்கள் நித்திய அழிவுக்குப் பாத்திரர் என்றாலும் தேவன் அவர்களை உடனடியாக அழிப்பதில்லை என்பதை நம்முடைய வாழ்க்கையின் பல்வேறு அனுபவங்களில் இருந்து அறிவோம். ஆசாபின் 73-வது சங்கீதத்தை வாசித்துப்பாருங்கள். துன்மார்க்கருக்கு மரணபரியந்தம் இடுக்கண்கள் இல்லை. வியாதி வருத்தங்கள் இல்லை. பெருமை மிக்கவர்களாய், விலையுயர்ந்த ஆடை அணிகலன்களோடு பவனிவருகிறார்கள். சீர்கெட்டுப்போய் அகந்தையாய் வானமட்டும் எட்டப்பேசுகிறார்கள். அவர்கள் ஆஸ்தி பெருகிக் கொண்டே இருக்கிறது. கோபாக்கினைப் பாத்திரங்களின் புறம்பான செழிப்பினிமித்தம், கிருபாபாத்திரமான ஆசாப் பின்மாற்றமடைந்து பாவம் செய்யத் தொடங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனாலும் கிருபா பாத்திரங்களின் மேல் தன்னுடைய மகிமையின் ஐசுவரியத்தை வெளிப்படுத்தும் தேவன் ஆசாபின் கால்களை தள்ளாடுதலுக்கும், அடிகள் சறுக்குதலுக்கும் தப்புவிக்கிறார் (வசனம் 2). "செழித்து வளர்ந்து துன்மார்க்கர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (வசனம் 19) என்ற வெளிப்பாடு அவருக்குத் தரப்படுகிறது.

ஏற்கனவே நாம் பார்த்ததுபோல் அன்பும் இரக்கமும் நிறைந்த தேவன் எவ்வாறு அவர்களில் சிலரை நித்திய அழிவுக்கென்று ஆயத்தப்படுத்தியிருக்கமுடியும் என்று ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஆக்கினைத் தீர்ப்பு வழங்கவேண்டுமென்று தேவன் அவர்களை சிருஷ்டிக்கவில்லை. ஆனாலும் அவர்கள் பார்வோனைப்போல துன்மார்க்கத்தில் தொடர்ந்து நடந்து கொள்ளும்போது அவர்களுக்கு விரோதமாக தேவன் செயல்பட்டு, அவர்களை விழத்தட்டியே ஆகவேண்டும். அதைத்தான் நீதிமொழிகள் 16:4, சங் 58:3; 105:25 எசே 3:20; 20:24,25, 1 பேதுரு 2:8 ஆகிய வசனங்கள் வெளிப்படையாக அறிவிக்கின்றன.

சில வேத வசனங்கள் தேவனைப்பற்றி நாம் பொதுவாகக் கொண்டிருக்கும் கருத்துகளுக்கும், எண்ணங்களுக்கும் மாறாக இருக்கிறது என்பதற்காக, அல்லது அவை ஏற்றுக்கொள்ள கடினமானதாக இருக்கிறது என்பதற்காக அந்த வசனங்களைப் புறக்கணிப்போமானால் தவறு நம்முடையதே. தேவசாயலில் உருவாக்கப்பட்ட மனிதன், தேவனை தன்னுடைய சாயலில் உருவாக்க விரும்புகிறான். தன்னுடைய எதிர்பார்ப்பின்படி அவர் செயல்பட வாஞ்சிக்கிறான். "மோசம் போகாதிருங்கள். தேவன் நம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்" (கலா 6:7).

தேவன் அவர்களைத் தண்டிப்பதில் "பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன" என்று பவுல் சொல்வது, "நீ தேவனை நியாயந்தீர்க்கும் நியாயாதிபதி அல்ல" என்று சொல்வதுபோல் இருக்கிறது. துன்மார்க்கர்கள் "நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெச 1:10) என்பதில் சந்தேகமே இல்லை. நாம் எதிர்பார்க்கும் நேரத்தில் அது நடவாமல் இருக்கலாம். அது எப்போது நடக்கும் என்பதை அறிந்துகொள்ள அந்த அதிகாரத்தின் 2 தெச 1 முதல் 10 வசனங்களை வாசித்துப் பாருங்கள். சுமார் இருபது இடங்களுக்குமேல் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படும் 'அழிவு' என்ற வார்த்தை, பொதுவாக உலகத்தில் இயற்கையின் சீற்றத்தினால் உண்டாகும் நாசமோசங்களைக் குறிப்பிடாமல் ஒருவன் அக்கினிக்கடலில் தள்ளப்படும் இரண்டாவது மரணம் என்றும் அனுபவத்தையே குறிப்பிடுகிறது, அதிலிருந்து அவன் ஒருநாளும் தப்பிவர முடியாது.

அடுத்ததாக கிருபாபாத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

1) அவர்களுக்காக மகிமை ஆயத்தமாக்கப் பட்டிருக்கிறது.

2) அவர்கள் மகிமையின் ஐசுவரியத்தைப் பெறுவார்கள்.

மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள் என்ற வார்த்தை, தேவனுடைய கிருபையில் பங்குகொள்ளும்படியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்று பொருள்படும். "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே" (2 கொரி 5:5). அவர்கள் அதற்காக தங்களைத்தாங்களே ஆயத்தமாக்கிக் கொண்டார்கள் என்று சொல்லமுடியாது. அதை அவர்களால் நடப்பிக்கவும் முடியாது. இந்த மகிமையை வழங்குபவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.

"உம்முடைய குமாரன் உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகிமைப்படுத்தும்" என்று ஜெபிக்கும் அதே வேளையில் "நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவான் 17:2,22) என்று கிறிஸ்து அறிவிப்பதைக் கவனியுங்கள். மகிமை தேவனுடையது என்றாலும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அதை இலவசமாகச் சுதந்தரித்துக்கொள்கிறார்கள். அது அவர்களுக்கு கிறிஸ்துவால் வழங்கப்படுகிறது.

அரைகுறையாக, அவர்கள் மகிமையைப் பெறுவதில்லை.

கொஞ்சங்கொஞ்சமாக அதை அவர்கள் பெறுவதும் இல்லை. மகிமையின் ஐசுவரியத்தையே அவர்கள் பெறுகிறார்கள் என்கிறார் பவுல். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" (எபே 1:7). "தம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார்" (ரோமர் 10:12). "அவர் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர்" (எபே 2:4). ரோமர் 2:4; 11:33, 2 கொரி 8:9, எபே 2:4; 3:8, பிலிப் 4:9, கொலோ 1:2) வாசித்துப்பாருங்கள். "தேவன் நம்மைக் கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்" (1 தெச 5:9) என்பதே கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுக்கொண்ட மிகவும் விலையேறப்பெற்ற மகிமையின் ஐசுவரியம், இதை நாம் ஒருபோதும் இழந்துபோவதில்லை.

அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிடமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே. (ரோமர் 9:24)

தேவன் தனக்கென்று தன்னுடைய மகிமைக்காக சில கிருபா பாத்திரங்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு தன்னுடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்துகிறார் என்பதை முந்தின வசனத்தில் தெரிவித்தபோது அவர்கள் யார் என்பதையும் எங்கிருந்து வருகிறார்கள் என்பதையும் பவுல் குறிப்பிடவில்லை. இந்த வசனத்தில் அவை சொல்லப்படுகின்றன.

யூதரிலிருந்து சிலரை தேவன் தெரிந்து கொண்டு அழைத்திருக்கிறார் என்பது உண்மைதான். அதே சமயத்திலும் புறஜாதியாரிலும் மகிமையின் பாத்திரங்கள் இருக்கிறார்கள் என்கிறார் பவுல். புறஜாதியாரிலிருந்தும் தேவன் சிலரை அழைத்திருக்கிறார் என்ற பவுலின் அறிக்கையை இஸ்ரவேலர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதை பவுல் நன்றாகவே அறிந்திருக்கவேண்டும். அப்போஸ்தலருடைய நடபடிகைகளில் 15-வது அதிகாரம் முழுவதும் வாசிப்போமானால் யூதர்கள் புறஜாதியாரை கிறிஸ்துவுக்குள் ஏற்றுக்கொண்டார்கள் என்றாலும் மோசேயின் முறைமைகளின்படி அவர்கள் விருத்தசேதனம் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள் (வசனம் 1) என்று பார்க்கிறோம். தேவன்மீது அவர்கள் கொண்ட நம்பிக்கையைவிட விருத்தசேதனக்கிரியையின் மீது அவர்கள் கொண்ட நம்பிக்கை பெரியது.

விருத்தசேதனம் செய்துகொள்வதினால் அல்ல, தேவனிடமிருந்து அழைப்பைப் பெற்றுக் கொண்டதினாலேயே ஒருவன் இரட்சிப்பின்

நிச்சயத்தைப் பெறுகிறான் என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவித்துவிட்டு, தன்னுடைய வாதத்தை பழைய ஏற்பாட்டு வசனங்களின் உதவியோடு தொடர்ந்து வரும் வேதபகுதியில் நிரூபிக்கிறார். **அழைப்பு என்பது ஒரு மனிதனின் இருதயத்தில் பரிசுத்த ஆவியானவர் நடப்பிக்கும் செயலாற்றலாகும். அதன் விளைவாக அவன் பாவ உணர்வடைந்து மீட்பராகிய இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொள்கிறான்.** இந்த அழைப்பை ஆபிரகாமின் சந்ததியார்தான் பெறுவார்கள் என்பதல்ல புறஜாதியாரும் பெறலாம். அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்கள் பெற்றுக்கொள்ளும் மேலான ஆசீர்வாதங்களை ரோமர் 8:28-30ல் ஏற்கனவே தியானித்தோம். அதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

தேவனுடைய அழைப்பைப் பெறுவதற்கு முன்பு புறஜாதியாரின் நிலை என்ன என்பதை எபேசியர் 2:3ல் வாசிக்கிறோம். பவுல் சொல்கிறார்: "நாமெல்லாரும் முன்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்". அழைப்பைப் பெற்றுக்கொண்டதின் விளைவாக அவர்கள் தேவனுடைய சுவிகாரப் புத்திரராகிறார்கள் (எபே 1:8). "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" (1 கொரி 1:9).

இந்த அழைப்பு தேவ தீர்மானத்தையும் கிருபையையும் மட்டுமே அடிப்படையாகக் கொண்டது (கலா 1:15). "அவர் தம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும் நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ 1:9). **நற்கிரியைகளைச் செய்வதினால் தேவன் நம்மை அழைப்பதில்லை. தேவனால் அழைக்கப்பட்டபடியால் நற்கிரியைகளைச் செய்கிறோம்.**

தேவனுடைய கிருபாபாத்திரமாகத் தெரிந்துகொள்ளப்பட்டு, ஏற்ற நேரத்தில் அவருடைய அழைப்பைப் பெற்றுக்கொண்ட ஒரு புறஜாதிமனிதன் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக மாறிவிடுகிறான். அதற்குப்பின் அவன் யூதனா புறஜாதியானா என்ற வித்தியாசம் முற்றிலுமாக மறைந்துவிடுகிறது. ரோமர் 1:13-16; 2:10,11; 3:22-24; 4:11,12; 10:4,9,12; 11:32, கலா 3:9,28, எபே 2:14-18 வாசித்துப்பாருங்கள்.

அந்தப்படி: எனக்கு ஜனங்களல்லாதவர்களை என்னுடைய

ஜனங்கள் என்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப் பட்டவள் என்றும் சொல்லி அழைப்பேன். (ரோமர் 9:25)

தேவனால், அவருடைய மகிமையின் ஐசுவரியத்தை வெளிப்படுத்தும் கிருபாபாத்திரங்களாக முதலாம் உடன்படிக்கையின் அடிப்படையில் யூதர்கள் தெரிந்து கொள்ளப்பட்டு அழைக்கப்பட்டிருந்தார்கள் என்பது உண்மைதான். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்" (உபா 14:2) என்கிறார் மோசே. ஏசாயா 43:1; 63:16, ஓசியா 11:1 ஆகிய வசனங்களும் இதையே அறிவிக்கிறது.

கோத்திரப் பிதாவான ஆபிரகாம் மற்றும் முற்பிதாக்கள் அத்தனைபேரும் தேவனுடைய நேரடியான அழைப்பைப் பெற்றிருந்தார்கள். புதிய உடன்படிக்கையின் அடிப்படையில் புறஜாதியாரும் அதே விதமான அழைப்பைப் பெறுகிறார்கள் என்பதுதான் ஆதி அப்போஸ்தல சபையில் மிகவும் சர்ச்சைக்குரிய காரியமாக இருந்தது. தன்னுடைய வாதத்தை சபை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக 25 முதல் 30 வரையுள்ள வசங்களில் பழைய ஏற்பாட்டின் ஓசியா 2:23;1:10, ஏசாயா 10:22,23; 1:9 ஆகிய வசனங்களை தன்னுடைய வாசகர்களுக்கு முன்பாக பவுல் வைக்கிறார். வேத வசனங்கள் தேவனுடைய வார்த்தையாக இருப்பதினால் அது சபையின் நாட்களில் நிறைவேறிக் கொண்டிருப்பதை எவராலும் தடைசெய்ய முடியாது என்கிறார்.

ஓசியா 2:23ல் தேவன் இவ்விதமாகச் சொல்கிறார்: "இரக்கம் பெறாதிருந்தவளுக்கு இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி, நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்". பழைய ஏற்பாட்டு நாட்களில் புறஜாதியார் தேவனுடைய ஜனங்களாகக் கருதப்படவே இல்லை. "முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:10) என்கிறார் பேதுரு.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதினிமித்தம் புறஜாதியார் தேவனுடைய பிள்ளைகளாவார்கள் என்பது பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்கு கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய

ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" (தானி 7:14) என்று வாசிக்கிறோம். தேவன் சொல்கிறார்: "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது: நீர் பூமியின் கடைசி பரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி, உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன்" (ஏசாயா 49:6). பூமியின் கடைசிபரியந்தமுமுள்ள புறஜாதியார் கிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளப்போகிறார்கள், அதன் மூலமாகவே கிறிஸ்து ஜாதிகளுக்கு ஒளியாகமுடியும். ஆதி 22:18, சங் 22:27; 86:9, ஏசாயா 9:2; 60:3 வாசித்துப்பாருங்கள்.

புறஜாதியாரும் தேவனுடைய அழைப்பைப் பெறுவார்கள் என்ற திட்டவட்டமான அறிவிப்பு ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவிடமிருந்தே வெளிப்படுகிறது. யோவான் 10:16ல் அவர் சொல்கிறார்: "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும்; அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்". யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் அவர் ஒருவரே மேய்ப்பராகிறார்.

நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறது. (ரோமர் 9:26)

ஓசியா முதலாம் அதிகாரத்தில் அந்தத் தீர்க்கதரிசி தேவனுடைய உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து கோமேர் என்ற வேசியைத் திருமணம் செய்வதினால் அவள் ஒரு ஆண்மகனைப் பெற்றெடுக்கிறாள். அவனுக்கு யெஸ்ரயேல் என்று பெயரிடும்படி தேவன் சொல்கிறார். "இஸ்ரவேல் வம்சத்தாரின் ராஜ்யபாரத்தை ஒழியப்பண்ணுவேன்" (வசனம் 5) என்கிறார். "அடுத்த குமாரனுக்கு லோகு காமா என்று பெயரிடு, இனி இஸ்ரவேல் வம்சத்தாருக்கு இரக்கஞ்செய்வதில்லை, நான் அவர்களை முழுவதும் அகற்றிவிடுவேன்" (வசனம் 6) என்கிறார். "மூன்றாவது குமாரனுக்கு லோகம்மீ என்று பேரிடு; ஏனெனில் நீங்கள் என் ஜனமல்ல, நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை" (வசனம் 9) என்கிறார். நான் உங்கள் தேவனல்ல என்ற திட்டவட்டமான அறிக்கை அவரிடமிருந்து வெளிப்படுகிறது. தேவன் இஸ்ரவேலை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டதைப் போல் காணப்பட்டாலும் அடுத்த 10-வது வசனத்தில் அவர் சொல்கிறார்: "இஸ்ரவேல் புத்திரரின் தொகை அளக்கவும் எண்ணவும் கூடாத கடற்கரை மணலைப்போலிருக்கும்; நீங்கள் என் ஜனமல்ல என்று அவர்களுக்குச்

சொல்வதற்குப் பதிலாக நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்று அவர்களுக்குச் சொல்லப்படும்".

பவுல் சொல்லும் காரியம் இதுதான். **"நான் உங்கள் தேவனாயிருப்பதில்லை" என்ற அறிவிப்பு இஸ்ரவேலைப் பொறுத்தவரை தேவனுடைய கடைசி வார்த்தையாக இருக்கவில்லை.** அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளாக மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்படுவது உறுதி. இதுகுறித்து ரோமர் 11-வது அதிகாரத்தில் தியானிக்கவிருக்கிறோம். இந்த புறக்கணிப்பு தற்காலிகமானது. இஸ்ரவேலின் நாட்களில் புறஜாதியார் புறக்கணிக்கப்பட்டவர்களாகக் காணப்பட்டார்கள் என்பது உண்மைதான். ஒரு புறஜாதி மகளின் விடுதலைக்காக இயேசுவின் சீஷர்கள் அவரை வேண்டிக்கொண்ட போது, "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றபடியல்ல" (மத் 15:24) என்கிறார். அவளிடமும் சொல்கிறார்: **"முந்தி பிள்ளைகள் திருப்தியடையட்டும்; பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல" (மாற்கு 7:27). இது அவர் பேசின கடினமான வார்த்தைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.**

தன்னுடைய சீஷர்களை ஊழியம் செய்யும்படியாக இயேசு தெரிந்துகொண்டார் என்பதை அறிவோம். அவர்களை "இயேசு அனுப்புகையில், அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னது என்னவென்றால்: "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்". புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதைக்கூட கிறிஸ்து தடை செய்திருந்தார் என்று பார்க்கிறோம். அவர்களின் புறக்கணிக்கப்பட்ட நிலை தொடர்கிறது.

இவ்வாறு தேவனால் புறக்கணிக்கப்பட்டிருந்த புறஜாதியார் கிறிஸ்துவின் பாடு மரணத்துக்குப்பின் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகளாக அங்கீகரிக்கப்படுகிறார்கள். மேசியாவை யூதர்கள் ஏற்றுக்கொள்ளாததினால் இந்த மாற்றம் உண்டாகிறது. "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15), "மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக்கா 24:4) என்கிறார் இயேசு. ஏனென்றால் தேவனுடைய தீர்மானத்தின்படி கிறிஸ்து "உலகரட்சகர்" (யோவான் 4:42) என்று அங்கீகரிக்கப்பட வேண்டியதிருக்கிறது.

புறஜாதி சபையான எபேசு சபையாருக்கு இந்தச் சத்தியத்தை பவுல்

இவ்விதமாக அறிவிக்கிறார்: "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள். முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள், இருதிறத்தாரையும் (இஸ்ரவேலர், புறஜாதியார்) ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே (சரீர மரணத்தினாலே) ஒழித்து, இரு திறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி பகையைச் சிலுவையினாலே கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக (சபையாக) தேவனுக்கு ஒப்புரவாக்கினார். அல்லாமலும் அவர் வந்து, தூரமாயிருந்த உங்களுக்கும், சமீபமாயிருந்த அவர்களுக்கும், சமாதானத்தைச் சுவிசேஷமாக அறிவித்தார்" (2:12-17). தூரமாயிருந்தவர்களும் சமீபமாக இருந்தவர்களும் ஒரே சமாதானத்தைப் பெறுகிறார்கள்.

"ஜீவனுள்ள தேவன்" (கிரேக்க பதம் zao theos) என்று பவுல் தேவனை அழைக்கிறார். நாம் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்பதை உணர்ந்து தேவனைத் துதிக்கவேண்டும் (ரோமர் 8:16). தாயின் மடியிலிருக்கும் குழந்தை இயேசுவை அல்ல, கல்லறையில் இருக்கும் மரித்த கிறிஸ்துவை அல்ல, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, இன்றும் ஜீவனோடிருக்கும் தேவனை நாம் ஆராதிக்கிறோம். "மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளி 1:18) என்கிறார், வேதத்தின் கடைசி புத்தகத்திலே யோவானுக்கு வெளிப்பட்ட கிறிஸ்து. 'ஜீவனுள்ள தேவன்' என்ற வார்த்தை எரே 10:10, மத் 10:16; 26:63, யோவான் 6:69, அப் 14:15, 1 தெச 1:9 ஆகிய இடங்களிலும் சொல்லப்படுகிறது.

அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும்: (ரோமர் 9:27)

முந்தின மூன்று வசனங்களில் தேவனுடைய ஜனங்களாகக் கருதப்படாமலும், அவரால் சிநேகிக்கப்படாதவர்களுமாயிருந்த புறஜாதியார் அவருடைய பிள்ளைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என்பதை பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அதிகாரத்தின் மீதமுள்ள வசனங்களில் (வசனம் 28-33) தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர்

எவ்விதமாக புறக்கணிக்கப் படுகிறார்கள் என்பதை பவுல் அறிவிக்கிறார். **எந்தவொரு நேரத்திலும் இஸ்ரவேல் தன்னுடைய தகுதியின் அடிப்படையிலோ அல்லது நீதியின் அடிப்படையிலோ நிலை நிற்கவில்லை.** அவர்களுடைய தகுதி தேவனுடைய இரக்கத்தை மட்டுமே சார்ந்திருந்தது என்பதை பவுல் வேத வசனத்தின் அடிப்படையில் தெளிவுபடுத்துகிறார்.

தன்னுடைய வாதத்தை நிரூபிக்க பவுல் ஏசாயா 10:22,23 வசனங்களை ஆதாரமாக எடுத்துக்கொள்கிறார். "மீதியானவர்கள் (remnant), யாக்கோபில் மீதியாயிருப்பவர்களே, வல்லமையுள்ள தேவனிடத்தில் திரும்புவார்கள். இஸ்ரவேலே, உன் ஜனங்கள் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், அவர்களில் மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் திரும்புவார்கள்; தீர்மானிக்கப்பட்ட அழிவு நிறைந்த நீதியோடே புரண்டுவரும்". "மீதியானவர்கள்" என்ற வார்த்தை (கிரேக்க பதம் ataleimma) யுத்தகளத்தில் தப்பிப்பிழைப்பவர்களைக் குறிக்கிறது. "உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்" (ஆதி 22:17) என்று தேவன் வாக்குக் கொடுத்திருந்தாலும் அவர்கள் அத்தனைபேரும் இரட்சிக்கப்படுவதில்லை என்பதை ஏசாயா தெளிவுபடுத்துகிறார். இதன் விளைவாக இஸ்ரவேலில் பெரும்பான்மை யானவர்கள் புறக்கணிக்கப்படுவார்கள் என்பது தெளிவு.

"சேனைகளின் கர்த்தர் நமக்குக் கொஞ்சம் மீதியை வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம்" (ஏசாயா 1:9) என்று வாசிக்கிறோம். ஆபிரகாமின் சந்ததியார் அத்தனைபேரும் இரட்சிக்கப்படுவார்கள் என்றிருந்தால் மீதியானவர்கள் என்று சிலரை மட்டும் பிரத்தியேகமாக குறிப்பிடவேண்டியதில்லை. மீதியானவர்களைக் குறித்து பேசும் ஏசாயா, 10:21,22; 11:11,16; 46:3, எரே 23:3, எசே 6:8-10, யோவேல் 2:32, ஆமோஸ் 5:15, மீகா 2:12, 5:7,8, செப 2:7,9, சக 8:6,11,12 ஆகிய வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

செப்பனியா 3:13 சொல்கிறது: "இஸ்ரவேலில் மீதியானவர்கள் அநியாயஞ்செய்வதில்லை; அவர்கள் பொய் பேசுவதுமில்லை, வஞ்சக நாவு அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை, அவர்கள் தங்களைப் பயப்படுத்துவாரில்லாமல் புசித்துப் படுத்துக்கொள்வார்கள்". எலியாவிடம் தேவன் சொல்கிறார்: "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1 இராஜா 19:18). தேவன் தெரிந்துகொண்ட இந்த

ஏழாயிரம் பேரையும் துன்மார்க்கமான ஆகாப் மற்றும் யேசபேல் ஆகியோர் என்ன செய்தாலும் அவர்கள் வழிவிலகிப்போகவில்லை.

மீதியானவர்களைக் குறித்த உபதேசம் ரோமர் 11:1-10ல் கூடுதலாக விளக்கப்படுகிறது. தற்காலிகமாக, தேவனால் புறக்கணிக்கப்பட்ட யூதர்கள் மீண்டுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரால் மகிமைப்படுத்தப்பட்டு, வல்லமையாக பயன்படுத்தப்படும் நாள் ஒன்று உண்டு என்பதை அந்த அதிகாரம் அறிவிக்கிறது. அந்திக்கிறிஸ்துவின் ஆளுகைக்குட்பட்ட உபத்திரவகாலத்தின் பின்பகுதியில் இது சம்பவிக்கும்.

அவர் நீதியோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் ஏசாயா இஸ்ரவேலைக்குறித்துச் சொல்லியிருக்கிறார் (ரோமர் 9:28)

தேவன் செய்யப்போகிற காரியத்தைக் குறித்த இரண்டு விஷயங்களை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்

1) அவருடைய காரியம் (நியாந்தீர்க்கும் காரியம்) நீதியானது

2) அவருடைய அந்த காரியம் சீக்கிரத்தில் நிறைவேற்றப்படும்.

தேவன் தான் நிறைவேற்றி முடிக்க முடியாத காரியத்தைத் துவங்கமாட்டார். அவரால் முடிக்க முடியாத காரியமே இல்லை என்பதை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். மனிதர்கள் ஒரு காரியத்தைத் துவங்கிவிட்டு நடுவழியில் விட்டுவிடலாம். தேவன் அப்படி செய்வதில்லை. அவர் சொல்கிறார்: "நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்; நான் நிர்ணயித்தபடியே நிலைநிற்கும்" (ஏசாயா 14:24). "கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும். அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாயும் நிற்கும்" (சங் 33:11). "என் ஆலோசனை நிலைநிற்கும். எனக்குச் சித்தமானதையெல்லாம் செய்வேன்" (ஏசாயா 46:10). நேபுகாத்நேச்சார் சொல்வதுபோல், "அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை" (தானி 4:35).

பூமியில் நடக்கும் சகல காரியங்களும் அவராலே நிர்ணயிக்கப்பட்டு அவருடைய ஆளுகைக்குட்பட்டதாகவே நடக்கின்றன. மண்ணினால்

உருவாக்கப்பட்டு நாசியில் சுவாசமுள்ள மனிதன் தன் சுயசித்தத்தின்படி சில காரியங்களை நடப்பிக்கக்கூடும் என்று நம்பும் நாம் தேவன் விரும்பும் சில காரியங்களை அவர் நடப்புவிக்கமுடியாதபடி இருக்கிறார் என்று நினைப்போமானால் சர்வவல்லமையுள்ள தேவனை அவருடைய சிங்காசனத்திலிருந்து இறக்குகிறவர்கள் ஆகிறோம். தேவனுடைய ஆளுகையை மட்டுப்படுத்துகிறவர்கள் தேவனையே மட்டுப்படுத்துகிறார்கள். அவர் யார் என்பதை அறிந்துகொள்ளாமல் இருக்கிறார்கள்.

நீதியாகவும், அதே சமயத்தில் சீக்கிரமாகவும் தேவன் நிறைவேற்றி முடிக்கும் காரியம் என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தான் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலரைப் பொறுத்தவரை தேவன் பல நூற்றாண்டுகளாக நீடிய பொறுமையுள்ளவராகத்தான் இருந்தார். மேசியாவைக் குறித்த எத்தனையோ வெளிப்பாடுகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் அவரைப் புறக்கணிக்கிறார்கள் (யோவான் 1:11). அவரை பாடு மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து "இவனுடைய இரத்தப்பழி எங்கள்மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத் 27:25) என்று தங்கள்மீதும், தங்கள் சந்ததியார்மேலும் சாபத்தை வருவித்துக் கொள்கிறார்கள். அவருடைய தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தவர்கள் தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவையே கொலைசெய்கிறார்கள். இதினிமித்தம் அவர்களில் பெரும்பாலானோர் கொல்லப்பட்டு, இன்னும் பலர் உலகமெங்கும் சிதறடிக்கப்படுவார்கள் என்பதைக் குறித்த வெளிப்பாட்டை தன் மனதில் வைத்துக்கொண்டு பவுல் பேசுவதுபோல் தெரிகிறது.

இந்த அழிவு சடுதியில் நடப்பதாக பவுல் பேசினாலும் கி.பி. 70ல் எருசலேமின் வீழ்ச்சி யூதர்களின் வாதைக்குக் காரணமாக இருந்தது. கி.பி. 68-79ல் அரசாண்ட ரோம பேரரசனாகிய வெஸ்பேஷியன் காலத்தில் தீத்து என்ற அவனுடைய குமாரன் எருசலேமுக்கு விரோதமாக படையெடுத்து வந்து அதை முற்றிலுமாக அழித்துப்போட்டான். தேவாலயத்தின் கட்டிடங்களில் ஒரு கல்லின்மேல் ஒரு கல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் (மத் 24:2) என்ற தீர்க்கதரிசனம் எழுத்தின்படியே நிறைவேறியது. இரண்டாயிரம் ஆண்டுகளாக குடியிருப்புக்கு ஒரு தேசமும் இல்லாத நிலையில் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்ட அவர்களை, உலகில் உள்ள எல்லா நாடுகளும் துன்புறுத்தின. முந்தின காலங்களில் அவர்களுடைய முரட்டாட்டத்தினிமித்தம் தேவன் அவர்களை இவ்வாறு தண்டித்தார். முற்றிலுமாகத் தங்களது அழைப்பை இழந்துபோனார்கள். பவுல் புறஜாதியாரின் அப்போஸ்தலனாகத் தெரிந்துகொள்ளப்பட்டார் (அப் 9:15).

இன்றளவும் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது.

ஏசாயா 28:22 இவ்விதமாகச் சொல்கிறது: "தேசம் அனைத்தின்மேலும் நிர்ணயிக்கப்பட்ட சங்காரத்தின் செய்தியைச் சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே கேள்விப்பட்டிருக்கிறேன்". ரோமர் நிருபம் கி.பி. 58ல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. சுமார் 12 ஆண்டுகளுக்குள் தேவன் தான் நியமித்த நியாயந்தீர்க்கும் காரியத்தைச் செய்துமுடித்துவிட்டார், அது ஒரு சரித்திர நிகழ்ச்சி.

அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி: சேனைகளின் கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம் (ரோமர் 9:29)

கி.பி. 70ல் பெப்ரவரி மாதத்தில் தீத்து என்ற ரோம தளபதி (இவன் கி.பி. 79-ல் ரோம பேரரசனானான்) சுமார் 80,000 போர்வீரர்களோடு எவ்வாறு எருசலேம் பட்டணத்தை முற்றுகையிட்டான் என்பதை யோசபஸ் என்ற சரித்திர ஆசிரியர் விளக்கமாக எழுதியிருக்கிறார். சுமார் ஆறுமாதங்களில் பட்டணத்தில் ஏற்பட்ட பஞ்சத்தினால், பெண்கள் பசியினால் மரித்த தங்கள் பிள்ளைகளை சமைத்துச் சாப்பிட்டார்களாம். கி.பி.70, செப்டம்பர் 8ம்நாளில் கோட்டைச் சுவரை இடித்து உள்ளே பிரவேசித்த ரோம வீரர்கள் தேவாலயத்தை உடைத்து தீயிட்டார்கள். இலட்சக்கணக்கான யூதர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள். தேவாலயக் கட்டிடத்தின் சுவர்களில் யூதர்கள் பொன், வெள்ளி போன்ற உலோகங்களை மறைத்துவைத்திருக்கக்கூடும் என்று நம்பிய வீரர்கள் கல்லின் மேல் கல் இராதபடி அவைகளை உடைத்து, ஆலயத்தைச் சுட்டெரித்தார்கள். 35 ஆண்டுகளுக்கு முன் இயேசு சொன்ன தீர்க்கதரிசனம் (மத் 24:1,2) எழுத்தின்படியே நிறைவேறிற்று. இலட்சக்கணக்கான யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு ரோமாபுரிக்கு கொண்டுபோகப்பட்டார்கள். 8-9-70ல் எருசலேம் முற்றிலுமாக அழிந்தது.

ஆனாலும் எருசலேம் சந்திக்கும் அழிவு சோதோம் கொமோராவின் அழிவுக்கு ஒப்பானதல்ல என்கிறார் பவுல். கர்த்தராலே "வானத்திலிருந்து கந்தகத்தையும் அக்கினியையும் வருஷிக்கப்பண்ணி, அந்தப்பட்டணங்களையும், அந்தச் சமபூமியனைத்தையும், அந்தப் பட்டணங்களின் எல்லாக் குடிகளையும், பூமியின் பயிரையும் அழித்துப்போட்டார்" என்று ஆதியாகமம் 19:24,25ல் வாசிக்கிறோம். அந்த நாளிலே ஒருவரும் தப்பவில்லை.

தீத்து எருசலேமை முற்றுகை போட ஆயத்தமாகும்போதே மத்தேயு 24-வது அதிகாரத்தில் கிறிஸ்து அறிவித்த தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலின் காலம் வந்துவிட்டது என்பதை உணர்ந்த யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், வசனங்கள் 16, 17, 18ல் சொல்லப்பட்ட ஆலோசனையின்படி பட்டணத்திலிருந்து வெளியே தப்பி ஓடிவந்துவிட்டார்கள். "அந்நாட்கள் குறைக்கப்படாதிருந்தால், ஒருவனாகிலும் தப்பிப் போவதில்லை; தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோ அந்த நாட்கள் குறைக்கப்படும்" (வசனம் 22) என்று சொல்லப்பட்டிருக்கிறது. எருசலேமிலிருந்து தப்பித்துக்கொள்ளும்படியாக தெரிந்து கொள்ளப்பட்டவர்களையே மீதியாக வைக்கப்பட்ட யூத சந்ததியாக பவுல் குறிப்பிடுகிறார். இவர்கள்தான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் எடுத்துச் சென்றார்கள் என்று பார்க்கிறோம். புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவித்தவர்கள் யூதர்களே.

எருசலேம் அழிக்கப்பட்டபோது கிறிஸ்துவை அறிந்தும், அவரை ஏற்றுக்கொள்ளாத பல யூதர்களும் தப்பிப்போய் பல தேசங்களில் குடியிருந்தார்கள் என்பதை சரித்திர ரீதியாக அறிந்துகொள்கிறோம். கேரளாவின் எர்ணாகுளம் அருகே மட்டஞ்சேரி என்ற தீவில் பலயூதர்கள் குடியிருந்தார்கள் என்பதை அறிவோம். யூதர்களின் ஜெபக்கூடம் (Synagogue) இன்றும் அங்கே இருக்கிறது. பல உபத்திரவங்கள் மத்தியிலும், மற்ற நாடுகளிலும் இருந்த யூதர்கள், இஸ்ரவேல் ஒரு தேசமாக மீண்டும் உருவாகவேண்டும் என்று வாஞ்சையோடு செயல்பட்டதின் விளைவாக 14-5-1948ல் பாலஸ்தீனாவில் தனி நாடாக இஸ்ரவேல் என்ற நாடு ஐக்கிய நாடுகள் சபையில் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்று அங்கு குடியிருக்கும் யூதர்கள் மேசியாவை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும், அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிக்காலப் பின்பகுதியான 3 1/2 ஆண்டுகளில் மெய்தேவனை அறிந்துகொண்டு ஊழியம் செய்து, இதுவரை இவ்வுலகம் கண்டிராத மிகப்பெரிய எழுப்புதலை உருவாக்குவார்கள் (வெளி 11).

இஸ்ரவேலின் வீழ்ச்சிக்கான காரணம்
(வசனம் 30-33)

இப்படியிருக்க நாம் என்ன சொல்லுவோம்? நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள்; அது விசுவாசத்தினாலாகும் நீதியே. (ரோமர் 9:30)

இந்த அதிகாரத்தின் முடிவுரையாக இந்த கடைசி நான்கு வசனங்கள் (30, 31, 32, 33) அமைகிறது. தன்னுடைய நிருபத்தில் 'என்ன சொல்லுவோம்?' என்ற கேள்வியை ஏழாவது முறையாக இந்த வசனத்தில்

பவுல் எழுப்புகிறார் (3:5; 4:1; 6:1; 7:7; 8:31; 9:14). இதுவரை தான் பேசிய காரியங்களைக் குறித்து நான்கு முடிவுகளை பவுல் இந்த வேதபகுதியில் அறிவிக்கிறார்.

1) யூதரல்லாதவர்கள் எந்த முயற்சியும் செய்யாமலே நீதிமான்களாக்கப்பட்டார்கள், இது தேவ கிருபையை வெளிப்படுத்துகிறது (வசனம் 30)

2) யூதர்களோ நியாயப்பிரமாண விதிகளின்படி நடந்து நீதிமான்களாக முயற்சிசெய்து தோல்வி அடைந்தார்கள் (வசனம் 31)

3) அவர்களுடைய தோல்விக்குக் காரணம் கிறிஸ்துவின் மேல் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் நீதியைத் தேடாமல் கிரியைகள் மூலம் தேடியதுதான் (வசனம் 32)

4) யூதர்களைப் பொறுத்தவரை கிறிஸ்துவே இடறுதலுக்கான கல்லாகவும், தவறுவதற்கான கன்மலையாகவும் இருக்கிறார். (வசனம் 33)

புறஜாதியார் நீதியைத் தேடாதவர்கள் மட்டுமல்ல, நீதியைக் குறித்த அறிவு இல்லாதவர்கள். அவர்களுடைய துன்மார்க்கத்தைக் குறித்த விளக்கத்தை பவுல் ரோமர் நிருபத்தின் முதலாவது அதிகாரத்தில் அறிவித்ததைப் பார்த்தோம். அவர்கள் தேவனை மகிமைப்படுத்தாதவர்கள், ஸ்தோத்திரியாதவர்கள், உணர்வில்லாதவர்கள், இருளில் இருப்பவர்கள், பயித்தியக்காரர், விக்கிரக ஆராதனைக்காரர், இச்சை நிறைந்தவர்கள், அசுத்தத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள், சிருஷ்டியைச் சேவிப்பவர்கள், இச்சைரோகத்துக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள், விரகதாபமுள்ளவர்கள், அவலட்சணமானதை நடப்பிப்பவர்கள், கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள், அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்கள், புறங்கூறுகிறவர்கள், அவதூறு பண்ணுகிறவர்கள், தேவபகைஞர், துராகிருதம் பண்ணுகிறவர்கள், அகந்தைக்காரர், வீம்புக்காரர், பொல்லாதவைகளை இணைத்துப் பிணைக்கிறவர்கள், பெற்றோருக்குக் கீழ்ப்படியாதவர்கள், உணர்வில்லாதவர்கள், உடன்படிக்கைகளை மீறுகிறவர்கள், சுபாவ அன்பில்லாதவர்கள், இணங்காதவர்கள், இரக்கமில்லாதவர்கள் (ரோமர் 1:21-31).

புறஜாதியாரின் தகுதியின்மையை பவுல் நன்றாகவே அறிந்திருந்தார் (எபேசியர் 2:1-3; 12; அப் 14:16; 17:30) ஆனாலும் **தங்களுடைய தகுதியின்மையை உணர்ந்து கிறிஸ்து மூலமாக தேவசமுகத்தை விசுவாசத்தோடு நாடிவரும்போது தேவகிருபை அவர்களைத் தள்ளிவிடவில்லை. அரவணைத்து ஏற்றுக்கொண்டது. கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை அவர்களுக்குத் தரிப்பித்தது.** "தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" (லூக்கா 18:13) என்று தேவசமுகத்துக்கு வந்த ஆயக்காரன், "நீதிமானாக்கப் பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்" (வசனம் 14) என்று வாசிக்கிறோம். "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்" (லூக்கா 15:21) என்று தன்னிடம் வந்த இளையகுமாரனை தகப்பன் அரவணைத்து, விலையுயர்ந்த வஸ்திரத்தை உடுத்தி மகிழ்ச்சியடைகிறான்.

நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப் பிரமாணத்தை அடையவில்லை. (ரோமர் 9:31)

புறஜாதியார் விசுவாசத்தினால் சுதந்தரித்துக்கொண்ட நீதியை இஸ்ரவேலர் தங்களுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியும் கிரியைகளின்மேல் கொண்டிருந்த நம்பிக்கையினால் இழந்து போகிறார்கள். என்ன பரிதாபம் பாருங்கள். லூக்கா 18ம் அதிகாரத்தில் நாம் சந்திக்கும் பரிசேயன், "நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்தி லெல்லாம் தசமபாகம் செலுத்துகிறேன்" என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான் (18:11,12) என்று வாசிக்கிறோம். அவன் நீதிப்பிரமாணத்தை நடப்பித்தான் என்பது மட்டுமல்ல, ஜெபவீரனாகவும் இருக்கிறான். ஆனால் அந்த ஜெபத்தின் மூலமாக மகிமைப்படுவது தேவனல்ல. எனவே நீதிமானாக்கப்பட்டவனாய் அவன் வீட்டுக்குத் திரும்பவில்லை தன்னுடைய தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து, வயலுக்குச் சென்று வேலை செய்து வந்த மூத்தகுமாரனுடைய நிலை என்ன? உவமையின் முடிவில் தகப்பனுடைய வீட்டுக்கு வெளியேதான் நின்றுகொண்டிருக்கிறான். பாவம்செய்த இளைய குமாரனோ கனம்பண்ணப்படுகிறான்.

நீதிப்பிரமாணம் என்ற வார்த்தை சீனாய்மலையில் வழங்கப்பட்ட நியாயப்பிரமாணத்தையே குறிப்பிடுகிறது. அந்த சட்டவிதிகளின்படி வாழ்ந்து, தாங்கள் தேவனுக்கேற்ற நீதிமான்களாக மாறிவிடலாம் என்ற

நம்பிக்கையே அவர்களுடைய வீழ்ச்சிக்குக் காரணமாய் இருந்தது. "**கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" (யாத் 19:8) என்ற அறிக்கை, தங்களுடைய மாமிச பலத்தினால் ஆவிக்குரிய பிரமாணங்களைக் கடைப்பிடிக்கமுடியும் என்ற அவர்களுடைய தவறான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.** இதன் விளைவாக நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் முன்னறிவித்த மேசியாவையும், அவர் மூலமாக உண்டாகும் இரட்சிப்பையும் அறிந்து கொள்ளத்தவறினார்கள். "அவர் தனக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்கிறார் யோவான் (1:11).

பவுலின் அனுபவத்தைப் பாருங்கள் : "மாம்சத்தின்மேல் நம்பிக்கை வைக்கவேண்டுமானால் நானும் வைக்கலாம்; வேறொருவன் மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிருக்க நினைத்தால் நான் அதிகமாய் அப்படிச் செய்யலாம். நான் எட்டாம் நாளில் விருத்தசேதன மடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன், பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவன்" (பிலிப் 3:4-6). ஆனாலும், அவருடைய நீதியின் கிரியைகள் அவருக்கு இரட்சிப்பைத் தரவில்லையே! பாவமன்னிப்பின் நிச்சயம் அவருக்கு இல்லாதிருந்ததே?

என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள். *(ரோமர் 9:32)*

இஸ்ரவேலர், தாங்கள் வாஞ்சையோடு தேடிய நீதியை அடைந்துகொள்ள முடியாமல் போனதற்கு காரணம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். அவர்கள் நீதியைத் தேடினார்கள் என்பது பாராட்டப்படக்கூடிய காரியம்தான். ஆனாலும் நியாயப்பிரமாணம் ஒரு மனிதனில் சுயநீதியை அல்ல, தேவநீதியை மட்டுமே எதிர்பார்க்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளத் தவறினார்கள்.

தேவன் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேவநீதியை மனித இனத்துக்கு வழங்கும்படியாகவே கிறிஸ்து வந்தார். அதை விசுவாசத்தின் மூலமாகவே பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. தங்களுடைய கிரியைகளினால் நீதியைச் சுதந்தரிக்கலாம் என்று தவறாக

நம்பினார்கள். முழுமையான பரிபூரணமான கீழ்ப்படிதலின் மூலம் அதை அவர்கள் சுதந்தரித்திருக்கலாம், உபாகமம் 6:25 அதைத்தான் அறிவிக்கிறது. "என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு, உண்மையாயிருப்பானாகில் அவனே நீதிமான்; அவன் பிழைக்கவே பிழைப்பான்" (எசே 18:9) என்று தேவன் சொல்லியிருந்தார் என்பது உண்மைதான். ஆனால் யாக்கோபு 2:10 திட்டவட்டமாக அறிவிக்கிறது, "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்". "நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோமர் 2:13).

இந்த நிலையில், எல்லா பிரமாணங்களுக்கும் முற்றிலுமாகக் கீழ்ப்படிந்து, கிறிஸ்து தன்னையே பாவநிவாரணபலியாக ஒப்புக்கொடுத்ததினால் உண்டான தேவநீதியை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதிலேயே தங்கள் இரட்சிப்பு அமைந்திருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. "நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்கும் எவர்கள் மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை" (ரோமர் 3:21,22) என்ற வசனத்தை தியானித்தோம். "அவன் (ஆபிரகாம்) கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதி 15:6, ரோமர் 4:3) என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது. **ஆபிரகாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்று** சொல்லப்படவில்லை. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண விதிகளில் ஊறிப்போயிருந்த யூதர்கள் விசுவாசத்தின் மேன்மையை அறிந்துகொள்ளத் தவறிவிட்டார்கள்.

"இடறுதலுக்கான கல்லில் இடறினார்கள்" என்று பவுல் இஸ்ரவேலின் வீழ்ச்சியை வருத்தத்தோடு அறிவிக்கிறார். தங்களுடைய சுயநீதியின்மேல் கொண்டிருந்த நம்பிக்கையின் விளைவாக அவர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்தார்கள். 1 கொரி 1:23,24ல் சொல்கிறார்: "நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்".

இந்த இடறல் எவ்வாறு உண்டானது? மகிமையான, வல்லமை நிறைந்த, உலகமனைத்தையும் அரசாட்சி செய்யும் மேசியாவை அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படி ஆளுகைசெய்யும் ஒரு மேசியாவை வேத வசனங்கள் முன்னறிவித்தது என்பது உண்மைதான் (ஏசாயா 9:6,7, எரே 23:5, தானி 7:14). பாடுபட்டு மரிக்கும் மேசியாவை ஏசாயா 53 முன்னறிவித்ததை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. புதிய ஏற்பாட்டின் முதல் வாக்குத்தத்தம் என்ன சொல்கிறது? "அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21). தமது ஜனங்களின் எதிரிகளை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்று சொல்லப்படவில்லை. தன்னுடைய இரண்டாவது வருகையின்போது தான் அவர் இஸ்ரவேலின் விரோதிகளை முறியடித்து தன்னுடைய ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் (வெளி 19,20).

தேவநீதியைப் பெற்றுக்கொள்ளாத இஸ்ரவேலருக்கு என்ன சம்பவித்தது என்பதை வசனத்தின் பின்பகுதியில் பவுல் அறிவிக்கிறார். "இடறுதலுக்கான கல்லில் இடறினார்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடறுதலுக்கான கல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே என்பதை அடுத்த வசனத்தில் தெளிவாக அறிந்துகொள்ளப்போகிறோம். மனித இரட்சிப்புக்கான தேவநீதியை அவர் கல்வாரி சிலுவையில் சம்பாதித்தார். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்பவர்கள் யாராயிருந்தாலும், சரி, அந்த நீதியை கிருபையாகப் பெற்றுக்கொள்கிறார்கள். இஸ்ரவேலரோ, தாங்கள் யார் மூலமாக, யாரால் இரட்சிக்கப்பட முடியுமோ அவரைப் புறக்கணிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்த மேசியாவாக அவர் காணப்படவில்லை. **தேவன் இஸ்ரவேலரைப் புறக்கணித்தார் என்று சொல்வதைவிட, தேவனை அவர்கள் புறக்கணித்தார்கள் என்று சொல்வதுதான் சரியானதாக இருக்கும்.** தங்கள் சுயநீதியில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையே அவர்களை இடறலடையச்செய்தது.

இன்றைய கிறிஸ்தவ உலகத்திலும் இரட்சிப்பைக் குறித்து தவறான நம்பிக்கைகள், போதனைகள் பரவலாகக் காணப்படுகின்றன. நம்முடைய முயற்சி, பக்தி வைராக்கியம், சபை பாரம்பரியம், காணிக்கை மற்றும் பிரயாசங்களின் அடிப்படையில் நாம் இரட்சிக்கப்படக்கூடும் என்று நினைப்போமானால் நாமும் யூதர்களைப்போல் இடறலடைய வேண்டியதிருக்கும்.

ஒரு காரியத்தை நிச்சயமாக அறிந்துகொள்ளுங்கள். ஒரு மனிதன்

கிறிஸ்துவைக் குறித்து ஒரு தீர்மானத்தை எடுத்தால், தேவன் அவனை நிச்சயமாகவே ஏற்றுக்கொள்வார் என்று எழுப்புதல் கூட்டங்களில் பிரசங்க அழைப்பின்போது ஊழியர்கள் உற்சாகமாக அறிவிப்பதைப் பார்க்கிறோம். தேவன் இப்படி முன்வருபவர்களை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்று போதிப்போமானால் மனித இரட்சிப்பில் கிருபைக்கும், இரக்கத்துக்கும் இடமில்லை என்பதாகிவிடும். இது புதிய ஏற்பாட்டு உபதேசத்துக்கு முற்றிலும் புறம்பானது. "இரட்சிப்பு கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே, அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால், கிரியையானது கிரியையல்லவே" (ரோமர் 11:6) என்று வாசிக்கிறோம். கீழ்ப்படிதலினிமித்தம் காட்டப்படும் இரக்கம் உண்மையான இரக்கமாக இருக்கமுடியாது. அது தேவனுடைய ஈவு என்றும் சொல்லப்படமுடியாது. "இரட்சிப்பு கர்த்தருடையது" என்பதை சந்தேகத்துக்கிடமின்றி அறிந்துகொள்ளுங்கள்.

இதோ, இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருப்பவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிறபடியாயிற்று. (ரோமர் 9:33)

"எழுதியிருக்கிறபடி ஆயிற்று" என்று பவுல் ஏசாயா 8:14,15; 28:16 ஆகிய இரண்டு வசனங்களை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார். இந்த அதிகாரத்தில் 7, 9, 11-13, 15, 17, 20, 21, 25-29 ஆகிய வசனங்களும் நேரடியான முறையில் பழைய ஏற்பாட்டு வசனங்களோடு தொடர்புடையவை என்பதைப் பார்த்தோம். பவுல் எழுதும் வசனங்களே தேவனுடைய வார்த்தையாக இருக்க, அவரே வேத வசனங்களை தன்னுடைய வாதத்தை நிரூபிக்கப் பயன்படுத்துவாரானால் இன்றைய பிரசங்கங்கள் எந்த அளவுக்கு தேவனுடைய வார்த்தையை உள்ளடங்கியதாக இருக்கவேண்டும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். தனிப்பட்ட அனுபவங்களைக் குறித்து பேசாமல், தேவனுடைய வார்த்தையை மட்டும் பிரசங்கிப்பதே மேலான ஊழியம்.

ஏசாயா 8:14,15ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு கோத்திரத்துக்கும் தடுக்கலின் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்கும் கண்ணியுமாயிருப்பார். அவர்களில் அநேகர் இடறி விழுந்து நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்". இரண்டு

கோத்திரங்கள் என்பது இஸ்ரவேலையும், யூதாவையும் குறிக்கிறது. தேவன் அவர்களுக்கு பரிசுத்த ஸ்தலமாயிருப்பார் என்று சொல்வது, அவர் இந்த இரண்டு கோத்திரத்தாருக்கும் பாதுகாப்பாகவும், அடைக்கலமாகவும், புகலிடமாகவும் இருப்பார் என்பதை அறிவிக்கிறது. அதே நேரத்தில் அவர் இஸ்ரவேலின் இரண்டு குடும்பங்களையும் இடறச்செய்யும் பாறையுமாக இருப்பார் என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. "சுருக்குக் கண்ணி" என்பது பறவைகளைப் பிடிக்கும் வலையைக் குறிப்பிடுகிறது. இஸ்ரவேலில் ஏராளமானோர் கன்மலையில் விழுவார்கள் என்பதும், வலைக்குள் அகப்பட்டு மாண்டுபோவார்கள் என்பதும் தீர்க்கதரிசனமாக ஏசாயாவால் முன்னறிவிக்கப்படுகிறது.

ஏசாயா 28:16ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும்". சீயோனில் அஸ்திபாரமாக வைக்கப்பட்ட விலைஉயர்ந்த மிக முக்கியமான, பரீட்சிக்கப்பட்ட மூலைக்கல் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. எருசலேமில் தேவாலயம் கட்டப்பட்ட மோரியா மலைக்கு அடுத்ததாக மிக முக்கியமான மலை சீயோன். "எபூசியரிடமிருந்து தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்து தன்னுடைய நகரமாக்கிக் கொண்டார்" (2 நாளா 11:5-7). சங் 87:2 சொல்கிறது: "கர்த்தர் யாக்கோபின் வாசஸ்தலங்களெல்லாவற்றைப்பார்க்கிலும் சீயோனின் வாசல்களில் பிரியமாயிருக்கிறார்: ஏனென்றால் என்னுடைய பரிசுத்தபர்வதமாகிய சீயோன் மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம் பண்ணிவைத்தேன்" (சங் 2:6) என்கிறார் தேவன்.

குழந்தை இயேசுவை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கும்படியாக தேவாலயத்துக்கு அவருடைய பெற்றோர் கொண்டுவந்தபோது சிமியோன் சொல்லுகிறார்: "இதோ, அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக, இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும், விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்" (லூக்கா 2:34). தன்னுடைய வீட்டை (சபையை) கட்டுவதற்காக தேவனால் முதலாவது நியமிக்கப்பட்டவர்கள் யூதர்களே, அந்த கட்டிடத்தின் மூலைக்கல்லாக கன்மலையாகிய கிறிஸ்து விளங்குகிறார். சபையின் அஸ்திபாரமாக அவர் விளங்கவேண்டும் என்பதற்காகவே அவர் உலகத்துக்கு அனுப்பப்பட்டார். ஆனால், சீயோனில் (இஸ்ரவேலில்) தேவனால் வைக்கப்பட்ட கல் யூதர்களால்

புறக்கணிக்கப்பட்டது. **தன்னுடைய ஒரேபேறான குமாரனைப் புறக்கணித்த இஸ்ரவேலரை தேவன் புறக்கணிக்கவேண்டியதாயிற்று.**

"வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று" (சங் 118:22) என்ற வசனம் தன்னையே குறிப்பிடுகிறது என்று கிறிஸ்து மத் 21:42,43; மாற்கு 12:10,11; லூக்கா 20:17,18ல் அறிவிக்கிறார். தன்னைப் புறக்கணித்ததினிமித்தம் தேவனுடைய ராஜ்யம் இஸ்ரவேலரிடமிருந்து பிடுங்கப்பட்டு புறஜாதியாரிடம் வழங்கப்படும் என்பதை இயேசு வெளிப்படையாக இவ்வாறு அறிவிக்கிறார்: "வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லே மூலைக்குத் தலைக்கல்லாயிற்று, அது கர்த்தராலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறது என்று நீங்கள் வேதத்தில் ஒருக்காலும் வாசிக்கவில்லையா? ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 21:42,43). **கனிகளைக் கொடுக்கும் ஜனங்களாக, சபையாகிய நம்மை இயேசு தெரிந்துகொண்டிருக்கிறார். கனிகொடுக்காதபட்சத்தில் நாமும் புறக்கணிக்கப்படக்கூடும்** என்பதை அடுத்த அதிகாரத்தில் தெரிந்துகொள்வோம் (வசனம் 17-20).

எருசலேமிலே பிரசங்கிக்கும் பேதுரு சொல்கிறார், "வீடு கட்டுகிறவர்களாகிய உங்களால் (இஸ்ரவேலரால்) அற்பமாய் எண்ணப்பட்ட அவரே மூலைக்குத் தலைக்கல்லானவர். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை" (அப் 4:11,12). "இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது" (எபே 2:20,21).

சீயோனில் வைக்கப்பட்ட கன்மலையாகிய கிறிஸ்து இடறுதலுக்கான கல்லாக இருந்தாலும் அவர்மேல் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்படுகிறது. நம்முடைய விசுவாசமே நம்மை கிறிஸ்துவோடு இணைக்கிறது, அதன் விளைவாக நாம் வெட்கமடைவதில்லை. அதாவது ஏமாற்றமடைவதில்லை. இகழ்ச்சி அடைவதில்லை.

பேதுரு சொல்கிறார் : "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து

மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள். அந்தப்படியே: இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது: கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக்கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" (1 பேதுரு 2:4-7).

10

இஸ்ரவேல் புறக்கணிக்கப்படக் காரணம்

முந்தின அதிகாரத்தில், இஸ்ரவேலை தேவன் தெரிந்து கொண்டதினிமித்தம் பெற்றுக்கொண்ட சிலாக்கியங்களையும், அதன் கடந்தகால சரித்திரத்தையும் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக இந்த அதிகாரத்தில், கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக (சபையின் காலத்தில்) இஸ்ரவேல் புறக்கணிக்கப்பட்டதற்கான காரணம் என்ன என்பதையும் உலக இரட்சகராக (யோவான் 4:42) வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாமல்-மேசியாவைக் கொலை செய்த இஸ்ரவேலர், தேவனால் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுவதையும் பவுல் விளக்குகிறார்.

இந்த அதிகாரத்தில் சொல்லப்படும் முக்கியமான போதனைகள் இரண்டு:

1. யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, தேவன் அவர்களிடம் எதிர்பார்க்கும் ஒரே காரியம் - தேவநீதி. இதனை, கிரியைகளினால் அல்ல, கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் பெற்றுக் கொள்ளமுடியும்.

2. **யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடு சபையின் நாட்களிலிருந்தே முற்றிலுமாக அகற்றப்பட்டு விட்டது. பெந்தெகொஸ்தே நாள்துவங்கி தேவன் இன்று தேசங்களோடு அல்ல, சபையோடு மட்டும் இடைபடுகிறார்.**

நியாயப்பிரமாணத்தினால் வரும் சுயநீதியும் விசுவாசத்தினால் வரும் தேவநீதியும் (வசனம் 1-11)

சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது. (ரோமர் 10:1)

முந்தின அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்களில் இஸ்ரவேலர் நிமித்தமாக தான் அனுபவிக்கும் மனவேதனையைக் குறித்து பவுல் பேசியதைப் பார்த்தோம். அவர்கள் எப்படியாவது இரட்சிக்கப்படவேண்டும் என்று விரும்புவதோடு நிறுத்திக் கொள்ளாமல் அவர்கள்மேல் கொண்டிருந்த அன்பினிமித்தம் அவர்களுக்காக தேவனிடம் வேண்டி பிரார்த்தனை செய்துகொண்டிருப்பதாக இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கிறார். **நம்முடைய இருதயத்தின் உள்ளான வாஞ்சைகள் ஜெபமாக மாறும்போது தேவன் நிச்சயமாகவே பதில் தருவார்.**

பவுலுக்கும், அவருடைய ஊழியத்துக்கும் எதிராக அவர்கள் எவ்வளவுதூரம் தொடர்ந்து செயல்பட்டார்கள் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகளிலிருந்து அறிந்துகொள்கிறோம். ஆனாலும் தன்னுடைய இனத்தாரைக் குறித்த ஆத்தும தாகத்தோடு பவுல் பேசுகிறார். 9,10,11 ஆகிய மூன்று அதிகாரங்களிலுமே, முதலாவது வசனம் பவுல் தன் இனத்தாரினிமித்தம் அனுபவிக்கும் மனவேதனையை வெளிப்படுத்துகிறது. அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று பவுல் சொல்லும்போது அது அவர்களுடைய ஆத்தும இரட்சிப்பைக் குறிப்பிடுகிறது. **நம்முடைய உற்றார் உறவினரின் இரட்சிப்புக்காக பாரப்பட்டு ஜெபிக்கவேண்டியது நம்முடைய பொறுப்பு.**

தேவனைப் பற்றி அவர்களுக்கு வைராக்கியமுண்டென்று அவர்களைக்குறித்துச் சாட்சி சொல்லுகிறேன்; ஆகிலும் அது அறிவுக்கேற்ற வைராக்கியமல்ல. (ரோமர் 10:2)

இஸ்ரவேலரை தேவன் தெரிந்து கொண்டிருந்தார் என்பது உண்மைதான். இன்று அவர்கள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்று பவுல் சொல்லுவதைக் குறித்து யூதர்கள் இன்னும் கோபமடைவார்கள் என்பதை அறிந்தவராய், தான் அவர்களில் காணும் பாராட்டத்தக்க ஒரு காரியத்தை முதலாவதாக அறிவிக்கிறார். அவர்கள் தேவனைக் குறித்த வைராக்கியமுடையவர்கள் என்கிறார்.

ஆனால் ஒரு மனிதனுடைய வைராக்கியம் எப்போதுமே மெய்யான சத்தியத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதனால் எந்த மேன்மையும் இல்லை. ஒரு ரயில் எஞ்சின் மிகுந்த வல்லமையுடையது என்பது உண்மைதான். ஆனால் அது தண்டவாளத்தை விட்டு இறங்கியபின் அதனால் என்ன பயன்? தேவனைப் பற்றிய வைராக்கியம் நம் ஒவ்வொருவருக்கும் தேவை. ஏதோ ஒரு கடமை உணர்வோடு நாம் தேவனை ஆராதிப்போமானால் அது போதாது. யோவான் 2:16, 17 வாசித்துப் பாருங்கள். இஸ்ரவேலர் தேவனைப் பின்பற்றி அவரை மகிமைப்படுத்தவே விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் அவரைக் கனப்படுத்தும் சரியான வழியைக் கண்டுபிடிக்கத் தவறிவிட்டார்கள். கிழக்கே போகவேண்டும் என்று விரும்பும் மனிதன் மேற்கு திசையில் நடந்தால் என்ன பிரயோஜனம்? அவர்களுடைய வைராக்கியம் முட்டாள்தனமானது என்று அறிவிக்காமல் "அறிவுக்கேற்றதல்ல" என்று அவர்களை அதிகம் புண்படுத்தாவண்ணம் எழுதுகிறார். தேவனை அறிந்த அவர்கள்அவரை அறியவேண்டிய விதத்தில் அறியவில்லை.

2 முதல் 4 வரையுள்ள வேதபகுதியில் யூதர்கள் இடறலடைந்ததற்கான இரண்டு காரணங்களை பவுல் சுருக்கமாக அறிவிக்கிறார்.

1. யூதர்களின் தவறான வைராக்கியம் (வசனம் 2)
2. யூதர்கள் நம்பியிருக்கும் தவறான நீதி (வசனம் 3-4)

தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கை அனுபவத்திலிருந்து பவுல் பேசுவதுபோல் தெரிகிறது. பவுல் பக்திவைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவர், நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவர் (பிலிப் 3:6). "நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத் தினம் நீங்களெல்லாரும் தேவனைக் குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" (அப் 22:3) என்கிறார் பவுல். ஆனாலும் அந்த வைராக்கியம் அறிவுக்கேற்றதாக இருக்கவில்லை.

பிதாவின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியத்தினால்தான் (யோவான் 2:17) கிறிஸ்து, தேவாலயத்தை வியாபார ஸ்தலமாக மாற்றியவர்களை விரட்டியடித்தார் என்று வாசிக்கிறோம். இன்று

ஊழியர்கள் மத்தியில் தேவனைக் குறித்த வைராக்கியம் குறைவுபட்டதினால்தான் பிரபலமானவர்களின் ஊழியங்கள் வியாபாரக் கண்ணோட்டத்தோடு நடத்தப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். விசுவாசிகள் மத்தியிலும் இந்த வைராக்கியம் குறைவுபட்டதினால்தான் இத்தகைய ஊழியங்கள் பெருகிவளர்கின்றன.

யூதர்களின் தவறான வைராக்கியத்தினால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதை இயேசு இவ்விதமாகச் சொல்லுகிறார் : "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" (மத் 23:15). அவர்களுடைய வைராக்கியம் எப்படிப்பட்டதாய் இருந்தது என்றால் அதினால் அவர்களுக்கும் பிரயோஜனமில்லை, மற்றவர்களுக்கும் நன்மை இல்லை.

"என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" (கலா 1:14) என்கிறார் பவுல். நியாயப்பிரமாணத்திலும், யூத பாரம்பரிய நியாயங்களிலும் அவர் கொண்டிருந்த கண்மூடித்தனமான வைராக்கியத்தினிமித்தமே பவுல் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு சபைக்கு எதிராக பல துன்மார்க்கமான காரியங்களைச் செய்து வந்தார். தான் செய்துவந்த அதே தவறை யூதர்கள் செய்து கொண்டிருப்பதினிமித்தம் மிகுந்த மனவேதனையுடையவராய் பவுல் பேசுகிறார்.

இன்றும் கிறிஸ்தவ வட்டாரத்தில் விசுவாசிகளிடம் தங்கள் சபைகளைக் குறித்தும், தாங்கள் ஐக்கியங்கொண்டிருக்கும் ஊழியங்களைக் குறித்தும், குறிப்பிட்ட ஊழியக்காரர்களைக் குறித்தும் மிகுந்த வைராக்கியம் காணப்படுவதைப் பார்க்கிறோம். தங்களுடைய மீட்பர் ஒருவரே என்பதையும், அவரைக் குறித்து மட்டுமே மேன்மை பாராட்டவேண்டும் என்பதையும் (எரே 9:23,24) அவர்கள் அறிந்துகொள்வதில்லை. **வசனத்தின் அடிப்படையில் இல்லாத வைராக்கியம் அறிவுக்கேற்றதல்ல. தன்னை மட்டுமே மகிமைப்படுத்தும் வைராக்கியத்தையே தேவன் ஏற்றுக்கொள்வார்.**

எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். (ரோமர் 10:3)

யூதர்களுடைய வைராக்கியம் அறிவுக்கேற்றதல்ல என்பதை பவுல்

நிரூபிக்க ஆரம்பிக்கிறார். அவர்களுடைய வைராக்கியம் நியாயப்பிரமாணத்தையே அடிப்படையாகக் கொண்டது. அது தேவனால் அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது உண்மைதான். வேறு எந்த ஜாதிக்கும் தேவன் தன்னுடைய நியாயங்களை அறிவிக்கவில்லை. இதன் விளைவாக பிரமாணங்களுக்கு கீழ்ப்படிவதினால் தாங்கள் தேவனுக்கேற்ற நீதிமான்களாகிவிடலாம் என்று யூதர்கள் நம்பினார்கள். அதன்மூலமாக தாங்கள் பெற்றுக்கொள்வது சுயநீதிதான் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளவில்லை. பிரமாணங்கள் அவர்களை நல்லவர்களாக்கவோ, நீதிமான்களாக்கவோ கொடுக்கப்படவில்லை. **அவர்களிடம் எந்த நன்மையான காரியங்களும் கிடையாது என்பதை அறிந்து, உணர்ந்து, தேவனுடைய பாதத்தில் சரணடைந்து அவருடைய இரக்கத்தைக் கெஞ்சிப் பெற்றுக்கொள்ளும்படியாகவே நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது.**

தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தி, தங்கள் சொந்த வழியிலேயே தங்களைத் தாங்களே நீதிமான்களாக்கும் முயற்சியில் ஈடுபட்ட யூதர்கள் தேவநீதியின் அவசியத்தை கடைசிவரை அறிந்துகொள்ளாமலே போய்விட்டார்கள். தேவநீதி என்றால் என்ன என்பதை பலமுறை ரோமர் நிருபத்தில் வாசித்து தியானித்திருக்கிறோம். பிரச்சனை என்னவென்றால் பவுல் அறிவிக்கும் பல சத்தியங்களை வாசிக்கும் போது அதை விளங்கிக்கொண்டது போலத்தான் தோன்றும். ஆனால் விரைவில் அவற்றை மறந்துவிடுகிறோம். எனவேதான் மீண்டும் மீண்டும் அது அறிவிக்கப்படவேண்டியதாயிருக்கிறது.

தேவநீதியைக் குறித்த அறிமுகம் ரோமர் 3:21-22ல் சொல்லப்பட்டது: விசுவாசத்தினாலுண்டாகும் தேவநீதி இரட்சிப்புக்கேதுவானது மட்டுமல்ல, அது கீழ்க்கண்ட மூன்று செயல்பாடுகளினிமித்தம் மூன்று காலங்களையும் உள்ளடக்கியது:

1. நீதிமானாக்கப்படுதல் (கடந்தகாலம்)
2. பரிசுத்தமாக்கப்படுதல் (நிகழ்காலம்)
3. மகிமைப்படுத்தப்படுதல் (எதிர்காலம்)

"நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது (தேவன் வேறு ஒரு வழியில் மக்களை நீதிமான்களாக்க முடிவுசெய்துவிட்டார்). அதைக் குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசு கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே. (இயேசுவின் மீட்பின் கிரியையின்மேல் ஒருவன் வைக்கும் விசுவாசம் தேவநீதியாக

ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தது நீதியாக எண்ணப்பட்டதுபோல் இதுவும் ஆயிற்று). விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும் (யூதர், புறஜாதியார் என்ற வேறுபாடின்றி தேவனே இதைச் செய்தார்)." (ரோமர் 3:21,22). அப்போஸ்தலர் 13:39 வாசிக்க.

தேவநீதியைப்பற்றி நாம் அறிந்துகொண்ட காரியங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வோம்.

1. தேவநீதி தேவனுடையது. தேவனால் வழங்கப்படுகிறது. (எரே 23:6; 33:16)
2. கிறிஸ்துவின் பாடுமரணத்தினால் தேவநீதி உருவானது. (ரோமர் 3:24; 5:8, 17, 18; 8:3, 4:32)
3. தேவநீதியைப் பெற ஒருவனுக்கும் தகுதியில்லை.
4. தேவநீதியை மட்டுமே தேவன் ஏற்றுக்கொள்கிறார்.
5. தேவநீதியின்மேல் ஒருவனும் உரிமை கொண்டாடமுடியாது.
6. தேவநீதியினால் மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது.
7. தேவநீதி பவுல் அறிவிக்கும் சுவிசேஷத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.
8. தேவநீதியை மனிதன் தன் விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்கிறான். (ரோமர் 1.17; 4:3-5, 16, 23-25; 5:1)
9. தேவநீதியோடு மனிதன் தன் சுயநீதியை சேர்த்துக் கொள்ளமுடியாது, இரண்டுக்கும் சம்பந்தமில்லை.

இந்த தேவநீதி எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை அறிவிப்பதே கிறிஸ்துவின் சுவிசேஷம். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது" (ரோமர் 1:17). "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (ரோமர் 4:5). விசுவாசம், நீதி என்கிற அங்கீகாரத்தைப் பெறுகிறது.

தாங்கள் நற்கிரியைகள் செய்து அதனால் உண்டாகும் சுயநீதி,

தங்களை இரட்சிக்கும் என்ற நம்பிக்கை உடையவர்களுக்கு இந்த வசனம் மிகப்பெரிய எச்சரிக்கையாக அமைகிறது. ரோமர் 4:16, 23, 25; 5:1, 17, 18; 8:3, 4, 32 ஆகிய வசனங்களில் நாம் தியானித்த காரியங்களையும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். யூதர்கள் செய்த மூன்று தவறுகளை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார்.

1. யூதர்கள் தேவநீதியை அறியவில்லை.
2. யூதர்கள் தேவநீதிக்குக் கீழ்ப்படியவில்லை.
3. யூதர்கள் சுயநீதியை நிலைநிறுத்துகிறார்கள்.

யூதர்கள் தேவநீதியை அறியாதிருக்க அதற்கு எப்படி கீழ்ப்படிய முடியும்? அத்தகைய கீழ்ப்படியாமையினிமித்தம் எப்படி தேவன் தண்டிக்க முடியும் என்ற கேள்வி எழும்பக்கூடும். தேவ நீதியைக் குறித்து தேவன் அவர்களுக்கு ஆதி 15:6, ஏசாயா 45:24; 50:8,9; 53:4-8, எரே 23:6, ஆப 2:4, சங் 48:10, 97:2, 119:137, 145:17 ஆகிய வசனங்களினால் பேசியிருந்தும் அதை அறியாதவர்களைப் போல் செயல்பட்டார்கள் என்பதே உண்மை.

யூதர்கள் தேவநீதிக்குக் கீழ்ப்படியவில்லை என்று சொல்லும்போது, அதை விசுவாசித்து அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதாகத்தான் பொருள்கொள்ளவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலைப்போல், "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாசமூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும் . . . அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலிப் 3:9-11) என்று சொல்லும் வைராக்கியம் அவர்களிடம் இல்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று கிறிஸ்துவுக்காக எல்லாவற்றையும் நஷ்டமாகவும், குப்பையாகவும் எண்ணுகிறோமோ?

தன்னுடைய சுயநீதியைக் குறித்து மேன்மைபாராட்டும் ஒரு மனிதனால் நிச்சயமாக தேவநீதியை அறிந்துகொள்ளவும் முடியாது. அங்கீகரிக்கவும் முடியாது. இவன் ஒருநாளும் நீதிமானாக்கப்படுவதில்லை. இன்றும் கிறிஸ்தவ சபைகளில் தங்களுடைய நீதியைக் குறித்து பெருமைப்படும் மனிதர்களை நாம் பார்க்க முடியும். நான் ஞானஸ்நானம் எடுத்திருக்கிறேன். ஒரு ஆவிக்குரிய சபைக்கு ஒழுங்காக சென்று வருகிறேன். குறிப்பிட்ட ஊழியர்கள் அனுதினமும் எனக்காக ஜெபிக்க ஏற்பாடுகளைச் செய்திருக்கிறேன். ஒழுங்காக தசமபாகம் செலுத்துகிறேன். ஊழியங்களைத்

தாங்குகிற பங்காளராக இருக்கிறேன். தவறாமல் ஜெபிக்கிறேன் என்று பெருமைப்படுகிறவர்கள் தேவநீதி என்றால் என்ன என்பதை அறியாதவர்கள், தங்கள் பார்வையில்தான் நீதிமான்களாயிருப்பார்கள். "தன் பார்வைக்கு ஞானியாயிருப்பவனைக் கண்டாயானால், அவனைப் பார்க்கிலும் மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாயிருக்கலாம்" (நீதி 26:12) என்கிறார் சாலொமோன். இவர்கள் "நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும்" (லூக்கா 10:25) என்று கிறிஸ்துவிடம் வந்த நியாயசாஸ்திரியைப் போன்றவர்கள். மனிதநீதிக்கும் தேவநீதிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாகக் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். (ரோம 10:4)

கிறிஸ்து நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராகவே பூமியில் பிறந்தார் என்பதை கலாத்தியர் 4:5 சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கிறது. "நியாயப்பிரமாணத்தை அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்" என கிறிஸ்து மத் 5:17ல் சொல்லியிருக்கிறார். பாவமற்ற, பாவமறியாத கிறிஸ்து மனித இனத்தின் சகல மீறுதல்களையும் தன்மேல் ஏற்றுக்கொண்டு மரித்தபோது நியாயப்பிரமாணத்துக்கு முடிவை உண்டாக்கினார். 'முடிவு' என்பதற்குப் பயன்படுத்தப்படும் telos என்ற கிரேக்க பதம் நியமிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுதல் என்று பொருள்படும். கிறிஸ்து தனக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்கும் ஒவ்வொருவரும், கல்வாரி சிலுவையில் வெளிப்பட்ட தேவ நீதியை சுதந்தரிக்கிறவர்கள் ஆகிறார்கள். அவர்களைக் குற்றப்படுத்தும் அதிகாரத்தை நியாயப்பிரமாணம் இழந்துவிடுகிறது. தேவனுடைய பார்வையில் அவர்கள் ஏற்கனவே நீதிமான்களாகிவிட்டபடியால் அவர்கள்மேல் நியாயப்பிரமாணத்துக்கு அதிகாரம் இல்லை. கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என்பது இதைத்தான் குறிப்பிடுகிறது.

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் உணர்த்தலாம். 1947வரை இந்தியா ஆங்கிலேயருடைய ஆளுகைக்குட்பட்டதாக இருந்தது. இங்கிலாந்து நாடு பிறப்பிக்கும் சட்டதிட்டங்களுக்கு இந்தியர்களும் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். மகாத்மா காந்தியின் தலைமையின்கீழ் நடந்த மிகுந்த போராட்டத்துக்குபின் இந்தியா சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன்பின் இங்கிலாந்து நாட்டின் சட்டங்கள் இந்தியாவில் யாரையும் கட்டுப்படுத்தமுடியாது. ஒருவகையில் காந்தி இங்கிலாந்தின் சட்டதிட்டங்களுக்கு முடிவாயிருக்கிறார்.

ரோமர் 7:10ல் "ஜீவனுக்கேதுவான கற்பனையே எனக்கு மரணத்துக்கேதுவாயிருக்கக் கண்டேன்" என்று பவுல் அறிவித்ததைத் தியானித்தோம். அதற்குக் காரணம் எந்த ஒரு மனிதனாலும் எல்லாப் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய முடியாதிருப்பதுதான் என்பதையும் பார்த்தோம். இந்த அவலநிலையை நீக்கும்படியாகவே கிறிஸ்து உலகில் அவதரித்தார். "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" (ரோமர் 8:3). "சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து" (எபே 2:15) என்று வாசிக்கிறோம். "நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்" (வசனம் 4). "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" (2 கொரி 5:21). நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி அதை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தார்.

கிறிஸ்துவின் மரணத்தினால் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதல் பூரணமாயிற்று என்பதினால் கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். "நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" (யோவான் 17:4) என்கிறார் இயேசு. முடிவு என்ற வார்த்தை பயன்படுத்தப்படும் மத் 10:22; 24:6, 14; லூக்கா 1:33, யோவான் 13:1, ரோமர் 6:21, 1 கொரி 1:18; 15:24, 2 கொரி 1:13; 3:13; 11:15, பிலிப் 3:9, எபி 6:12; 1 பேதுரு 4:7 வாசித்துப்பாருங்கள். **நியாயப்பிரமாணத்தின் முடிவே தேவநீதி வெளிப்பட காரணமாக இருக்கிறது.** இந்த நீதியினிமித்தமே ஒருவன் தேவ சமுகத்தில் நிற்கமுடியும். "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரே 23:6) என்பது அவருடைய திருநாமங்களில் ஒன்று.

இஸ்ரவேலர் தேவநீதியைக் குறித்து கரிசனை உள்ளவர்கள்தான். அதை விசுவாசத்தின் அடிப்படையில் தேடாமல் கிரியைகளின் அடிப்படையில் தேடியதுதான் அவர்களுடைய தவறு. அவர்கள் தங்களுடைய இயலாமையை உணர்ந்து கொண்டு தங்களை தேவசமுகத்தில் தாழ்த்தி இரட்சகராகிய கிறிஸ்துவை தேட வேண்டும் என்பதற்காகவே நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டது. **நியாயப்பிரமாணத்தின் ஒவ்வொரு உபதேசமும், ஒவ்வொரு கற்பனையும், ஒவ்வொரு வாக்குத்தத்தமும் கிறிஸ்துவையே சுட்டிக்காட்டுகிறது.** ஒரு மனிதனை இரட்சகரிடம் வழிநடத்துவதோடு நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டதின் நோக்கம் நிறைவேறி விடுகிறது. அதற்குப்பின் நியாயப்பிரமாணத்துக்கு வேலை இல்லை. நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு

நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் (ஆசிரியராக, எஜமானனாக) இருந்தது. "விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே" (கலா 3:24, 25). கிறிஸ்து தன்னை பாவ நிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தபின்பு அதின் நிழலாட்டமாக நியாயப்பிரமாணம் அறிவித்த சகலவிதமான பலிகளும் நிறைவடைந்துவிட்டதே! கிறிஸ்துவின் மரணம் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டதே!

நியாயப்பிரமாணம் கிறிஸ்துவினால் முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டியதுதான் என்பதில் சந்தேகமே இல்லை. ஏனென்றால் மனிதனுக்குத் தேவையான தேவநீதி நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இல்லாமல் கிறிஸ்துவின் பாடு மரணத்தை விசுவாசிப்பவர்களுக்கு வழங்கப்பட்டுவிடுகிறது. நியாயப்பிரமாணத்தில் கீழ்க்கண்ட குறைபாடுகள் காணப்படுகின்றன.

1. நியாயப்பிரமாணம் ஒருபோதும் பாவத்தை நிவர்த்தி செய்வதில்லை (எபி 10:1)
2. அது மனிதன் மூலமாக வழங்கப்பட்டது (யோவான் 1:17)
3. அது பெலவீனமானது, பயனற்றது (எபி 7:18)
4. அது கீழ்ப்படிதல் என்ற நிபந்தனையை உடையது (உபா 28)
5. அது வாக்குத்தத்தம் இல்லாதது (ரோமர் 4:13)
6. அது அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்பட்டது (கலா 5:1)
7. அது பிழையுள்ளது (எபி 8:7)
8. அது மனிதர்களைக் குற்றப்படுத்துகிறது (எபி 8:8)
9. அது இரக்கமற்றது (எபி 10:28)
10. அது மனிதர்களை சாபத்துக்குட்படுத்துகிறது (கலா 3:10)
11. அது மனிதர்களின் மரணத்துக்கேதுவானது (2 கொரி 3:7)
12. அது எதையும் பூரணப்படுத்தக் கூடாதது (எபி 7:19)

13. அது மனித இனத்தின் ஆக்கினைத் தீர்ப்புக்கு காரணமாக இருப்பது (2 கொரி 3:9)

மோசே நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதியைக் குறித்து : இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறான். (ரோமர் 10:5)

ஏற்கனவே அறிவித்த சத்தியத்தை பவுல் மீண்டுமாக அறிவிக்கிறார். தேவனால் வழங்கப்பட்ட பரிசுத்தமான நியாயப்பிரமாணம் நீதியை வழங்கக்கூடியது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. உபாகமம் 6:25ல் இந்த எல்லா கட்டளைகளின்படியும் செய்யச் சாவதானமாயிருந்தால், நமக்கு நீதியாயிருக்கும் என்று மோசே அறிவித்ததைப் பார்த்தோம். லேவி 18:5ல் கர்த்தர் சொல்லுகிறார் : "என் கட்டளைகளையும் என் நியாயங்களையும் கைக்கொள்ளக்கடவீர்கள்; அவைகளின்படி செய்கிறவன் எவனும் அவைகளால் பிழைப்பான்; நான் கர்த்தர்". ஆனால் கலாத்தியர் 3:12ல் பவுல் சொல்லுகிறார்: "நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான்", லூக்கா 10:28ல் நியாயசாஸ்திரியிடம் கிறிஸ்து சொல்லுகிறார், "அப்படியே செய், அப்பொழுது பிழைப்பாய்", எசேக்கியேல் 20:11 சொல்லுகிறது, "அவைகளின்படி செய்கிற மனுஷன் அவைகளால் பிழைப்பான், என் கட்டளைகளின்படியே மனுஷன் செய்தால் அவைகளால் பிழைப்பானே" (வசனம் 21) என்கிறார் தேவன்.

நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படி செய்யத் தவறும் மனிதர்கள்மேல் வரும் சாபங்கள் உபாகமத்தில் (27:26, 28:15-68) சொல்லப்பட்டிருக்கின்றன. இவைகளைச் செய்கிற மனுஷன் பிழைப்பான் என்று சொல்லும்போது, கீழ்ப்படிதலினால் உண்டாகும் சகல ஆசீர்வாதங்களும் அவனுக்கு உண்டாயிருக்கும் என்று பொருள் கொள்ளலாம். ஆனால் நியாயப்பிரமாணம் அறிவிக்கும் 613 பிரமாணங்களுக்கும் அவன் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். யாக்கோபு திட்டவட்டமாக அறிவிக்கிறார், "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான்" (2:10). இதன் பொருள் என்ன? ஒருவன் இந்த 613 பிரமாணங்களில் ஒரு பிரமாணத்துக்குக் கீழ்ப்படியவில்லை என்றாலும் எல்லா பிரமாணங்களுக்கும் கீழ்ப்படியவில்லை என்றே கருதப்படுவான். அதற்குப் பின் நடப்பதென்ன? "இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்" (உபா 27:26) என்று மோசே சொல்லுகிறார். "ஆமென்" என்று பதில்

சொல்லி தங்களை இஸ்ரவேலர் சகலவிதமான சாபத்துக்கும் தகுதிப்படுத்திக் கொள்கிறார்கள் (நெகே 10:29).

எந்த மனிதனாலும் எல்லாப் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிய முடியாது. ஒரு தவறான சிந்தனை, பார்வை அல்லது யோசனை நம்மை ஆக்கினைக்குள் வழிநடத்திவிடக்கூடும். நியாயப்பிரமாணம் ஒருவர்மேலும் இரக்கம் பாராட்டுவதில்லை (எபி 10:28). கிரியைகளில் மட்டுமல்ல, பேச்சு, சிந்தனை எல்லாவற்றிலும் பரிசுத்தம் இருந்தாகவேண்டும் என்று நியாயப்பிரமாணம் வலியுறுத்துகிறது. அதனால்தான் பவுல் சொல்கிறார் : "நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே" (கலா 3:10), இவ்விதமாக நியாயப்பிரமாணம் ஒருவனை நீதிமானாக்குவதற்குப் பதிலாக அவனை சபிக்கிறது, சாபமாக்குகிறது என்று பார்க்கிறோம். அதனால்தான் அதை "ஆக்கினைத் தீர்ப்புக்கொடுக்கும் ஊழியம்" (2 கொரி 3:9) என்று பவுல் குறிப்பிடுகிறார்.

விசுவாசத்தினாலுண்டாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கி வரப்பண்ணும்படி பரலோகத்துக்கு ஏறுகிறவன் யார்? (ரோமர் 10:6)

ரோமர் 10:6-7 வேதபகுதியில் கிரியைகளினால் அல்லாமல் விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதியைக் குறித்த தெய்வீக சாட்சி என்ன என்பதை உபாகமம் 30:11-13 வசனங்களை சற்று மாற்றி அமைத்து பவுல் பேசுகிறார். மோசே நியாயப்பிரமாணத்தின்மேல் நம்பிக்கை வைக்குமாறு பேசுவதை, கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசமாக மாற்றி அமைத்து பவுல் பேசுவதைப் பார்க்கிறோம். மோசே சொல்லுகிற காரியம் இதுதான்: "நான் இன்று உனக்கு விதிக்கிற கட்டளை உனக்கு மறைபொருளும் அல்ல, அது உனக்குத் தூரமானதும் அல்ல. நாங்கள் அதைக்கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் வானத்துக்கு ஏறி, அதை எங்களுக்குக் கொண்டுவருகிறவன் யாரென்று நீ சொல்லத்தக்கதாக, அது வானத்திலுள்ளதும் அல்ல; நாங்கள் அதைக்கேட்டு, அதின்படி செய்யும்பொருட்டு, எங்கள் நிமித்தம் சமுத்திரத்தைக் கடந்து, அதைக் கொண்டுவருகிறவன் யார் என்று நீ சொல்லத்தக்கதாக, அது சமுத்திரத்திற்கு அப்புறத்திலுள்ளதும் அல்ல"

எப்படிப்பட்ட சூழ்நிலையில் மோசே இஸ்ரவேலரோடு இவ்விதமாக

இடைபடுகிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். 28-வது அதிகாரத்தில் கீழ்ப்படிதலினால் உண்டாகும் ஆசீர்வாதங்களையும் கீழ்ப்படியாமையினால் உண்டாகும் சாபங்களையும் அறிவித்த மோசே, கானானுக்குள் பிரவேசிக்கவிருக்கும் யூதர்களை அதற்கு ஆயத்தம்பண்ணும்படியாக இறுதி ஆலோசனை கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

கானானுக்குள் பிரவேசிப்பதென்பது மனித இனம் நித்திய நித்தியமாக பரலோகத்தில் அனுபவிக்கவிருக்கும் இளைப்பாறுதலுக்கு நிழலாட்டமாக இருக்கிறது என்பதை அறிவோம். (எபி 4:5-9) மோசே சொல்கிற காரியம் இதுதான்: "நான் வழங்கியிருக்கும் கட்டளைகள் கடினமானதும் அல்ல, தூரமானதும் அல்ல, தேவனுடைய விருப்பு வெறுப்புகள் என்ன என்பதை அறிந்துகொள்ள நீங்கள் யாரையும் பரலோகத்துக்கு அனுப்பி, விசாரித்து தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இதைக்குறித்த ஆலோசனைகளைப் பெற கடலுக்கு அக்கரையிலுள்ள தூரத்து இடங்களுக்குச் சென்று அதைக் கற்றுக்கொண்டுவர வேண்டிய அவசியமும் இல்லை. தான் யார் என்றும், தன்னை ஆராதிப்பது எப்படி என்றும், தன்னுடைய சித்தத்தை அறிந்து கொள்வது எப்படி என்றும், இன்னும் அவரைப் பற்றிய சகல காரியங்களையும் தேவன் யாவரும் அறிந்துகொள்ளும்படியாக எந்த சந்தேகத்துக்கும் இடமின்றி வெளிப்படுத்திவிட்டார்.

இந்த வேதவசனங்களின் பின்னணியில் பவுல் சொல்லும் காரியம், விசுவாசத்தினால் நீதிமானாவதைப் பற்றி அறிந்துகொள்ள, ஒருவனும் பரலோகத்துக்குப் போய் கிறிஸ்துவை பூமிக்கு வரச்செய்து அவரிடம் விசாரிக்க வேண்டியதில்லை. மனித இரட்சிப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் கிறிஸ்து ஏற்கனவே செய்துமுடித்துவிட்டார். அப்போஸ்தலனாகிய பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் ஒருவன் எவ்வாறு நீதிமானாக்கப்படுகிறான் என்ற சத்தியத்தையே அறிவிக்கிறது. நியாயப்பிரமாணம் மனிதர்களைக் குறித்த தேவசித்தத்தை எவ்வாறு வெளிப்படுத்தியதோ, அவ்வாறே விசுவாசத்தை கனப்படுத்தும் சுவிசேஷமும் மனிதர்களைக் குறித்த தேவசித்தத்தையே வெளிப்படுத்துகிறது.

மோசே அறிவித்த நியாயப்பிரமாணம் பவுல் அறிவிக்கும் சுவிசேஷத்துக்கு முன்னடையாளமாகவும், நிழலாட்டமாகவும் இருக்கிறது. "இதைச் செய்து ஜீவனோடு இரு" என்று நியாயப்பிரமாணம் சொல்கிறதென்றால், "இதை விசுவாசித்து ஜீவனோடு இரு" என்கிறது பவுலின் சுவிசேஷம். நியாயப்பிரமாணம் 'இதைச் செய்' என்கிறது.

சுவிசேஷம் 'கிறிஸ்து செய்துமுடித்துவிட்டார்' என்கிறது.

நியாயப்பிரமாணம் அறிவிக்கும் பலிகள், கிறிஸ்துவின் தியாகபலிக்கு நிழலாட்டமாகவே அமைந்திருக்கிறது. நியாயப்பிரமாணம் மனிதர்களுடைய பெலவீனத்தினிமித்தம் உருவாக்கமுடியாத நீதியை சுவிசேஷம் விசுவாசத்தின் மூலமாக உருவாக்கியிருக்கிறது. மனித முயற்சியின் அடிப்படையில் இல்லாமல் கிறிஸ்து என்ற இரட்சகரின் மத்தியஸ்தத்தினாலே இது சாத்தியமாகிறது. தேவநீதியை வழங்கும்படியாகவே, "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோவான் 1:14). இனி அவர் மீண்டும் இறங்கி வந்து நீதியை வழங்கவேண்டியதில்லை, மனிதனால் செய்யக்கூடாததை தேவன் செய்து, மனித இனத்தின் இரட்சிப்புக்குத் தேவையான நீதியை ஆயத்தமாக்கிவிட்டார். எனவே நீதியை வழங்கும்படியாக அவர் திரும்பிவரவேண்டியதில்லை. ஆனாலும் அவர் மீண்டும் ஒரு முறை வருவார். நீதியை வழங்கும்படியாக அல்ல, அந்த நீதியை ஏற்றுக்கொள்ளாதவர்களை நியாயந்தீர்க்கும்படியாக வருவார்.

அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப் பண்ணும்படி பாதாளத்துக்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறதுமன்றி, (ரோமர் 10:7)

தேவநீதியைக் குறித்து அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக ஒருவனும் கிறிஸ்துவை மரணத்திலிருந்து ஏறிவரப்பண்ணவேண்டும் என்கிற அவசியமும் இல்லை என்கிறார் பவுல். யூதர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக எழும்பி அவரைக் கொலை செய்தார்கள் என்பது உண்மைதான். ஒரு புதிய கல்லறையிலே அவருடைய சரீரத்தை வைத்து, கல்லறையின் வாசலிலே ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்து அடக்கம் பண்ணினார்கள் (மத் 27:60) என்பதும் உண்மைதான். அதினிமித்தம் நாமும் பாதாளத்தில் இறங்கி நம்காரியங்களை அவரோடு சரிசெய்துகொண்டு நம்மை நீதிமான்களாக்க முயற்சிசெய்வோமானால் அது முட்டாள்தனம் என்பதை இந்த வசனம் அறிவிக்கிறது. இப்படிப்பட்ட ஆலோசனை உன் உள்ளத்திலேயே உருவாகவேண்டாம் என்கிறார் பவுல். **தன் பாடுமரணத்தின் மூலம் தேவநீதியைப் பிறப்பித்த கிறிஸ்து இன்று பாதாளத்தில் இல்லை. பிதாவின் வலது பாரிசத்தில் உன்னதங்களில் வீற்றிருக்கிறார்.**

பல கிறிஸ்தவர்கள், தங்களுடைய இரட்சிப்பை தாங்களே உருவாக்கிக்கொள்வதாகவும் அல்லது சில ஊழியக்காரர்கள் தங்களுடைய

கண்ணீர் ஜெபத்தினால் தங்களுக்கு ஆயத்தமாக்கிக் கொடுப்பதாகவும் நினைத்துக்கொண்டு, சரீர ரீதியாகவும், ஆத்தும ரீதியாகவும் பல கிரியைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த முயற்சிகளையே பவுல் பரலோகத்துக்கு ஏறுவது, பாதாளத்துக்கு இறங்குவது என குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். அங்கேயும் இங்கேயும் ஓடி அலைந்து தேவநீதியைப் பெற முயற்சிசெய்வது புத்திசாலித்தனம் அல்ல. தங்களைத் தாங்களே இரட்சித்துக்கொள்ள முயன்று கொண்டிருக்கும் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய சபைகளிலும்கூட காணப்படுகிறார்கள்.

மோசே அறிவித்த நியாயப்பிரமாணம் என்ன சொல்கிறது? "இதைச் செய், அதைச் செய்யாதே, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்" என்கிறது. பவுல் அறிவிக்கும் சுவிசேஷம் என்ன சொல்லுகிறது? "உனக்காக, உன் சார்பில் எல்லாவற்றையும் செய்துமுடித்த கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்" என்கிறது. அதை நாம் இங்கே இப்பொழுதே செய்யலாம். அவர் இன்று பரலோகத்தில் இருக்கிறார் என்பதற்காக பரலோகத்துக்குப் போய் விசாரிக்கவேண்டியதில்லை. அல்லது மூன்றுநாள் பாதாளத்தில் இருந்தார் என்பதற்காக பாதாளத்துக்குள்ளும் போய் விசாரிக்க வேண்டியதில்லை.

இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது: இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே. *(ரோமர் 10:8)*

உபாகமம் 30:14ல் "நீ அந்த வார்த்தையின்படியே செய்யும்பொருட்டு, அது உனக்கு மிகவும் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" என்று மோசேயின் வசனத்தையே பவுல் சிறிது மாற்றியமைத்திருக்கிறார். மனிதனை இரட்சிப்புக்குள் வழிநடத்தும் தேவநீதி வெகுதொலைவில் இல்லை. அது பரலோகத்திலும் இல்லை. பாதாளத்திலும் இல்லை. அது கிறிஸ்துவுக்குள் இருக்கிறது. கிறிஸ்துவில் இருக்கிறது. அவர் வார்த்தையாகவே இருப்பதினால் (யோவான் 1:1, 14), இன்று அவருடைய வார்த்தையின் மூலமாக மட்டுமே இரட்சிப்பு வெளிப்படுகிறது. இந்த இரட்சிப்பின் வார்த்தையையே பவுல் இன்று தன்னுடைய நிருபங்களின் மூலமாக மனிதர்களுக்கு அறிவிக்கிறார்.

தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்கிறவர்களுக்கு வார்த்தை சமீபமாக, அதாவது அவர்களுடைய வாயில் இருக்கிறது (அதை மீண்டும் மீண்டும் அறிக்கையிட). அது அவர்களுடைய இருதயத்தில் இருக்கிறது

(அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள). ஒருவனுடைய இருதயத்தில் உள்ளதையே வாய் பேசவேண்டும். நமக்கு மிகவும் சமீபமாக இருக்கும் தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதைக் கவனிக்காமல் கரடுமுரடான வழிதெரியாத பாதைகளில் திசை தெரியாமல் நடந்து, பரலோகத்துக்குள் பிரவேசிக்க முயற்சிசெய்வது மதியீனமான காரியம். ஏசாயா 46:12, 13ல் தேவன் என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள் : "முரட்டு இருதயமுள்ளவர்களே, நீதிக்குத் தூரமானவர்களே, எனக்குச் செவிகொடுங்கள். என் நீதியைச் சமீபிக்கப் பண்ணுகிறேன், அது தூரமாயிருப்பதில்லை; என் இரட்சிப்புத் தாமதிப்பதுமில்லை". வார்த்தையாக வெளிப்பட்ட இயேசுகிறிஸ்து இம்மானுவேலாக நம்மோடிருக்கிறார். "இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார்" என்று அர்த்தமாம் (மத் 1:23).

வார்த்தை எவ்வளவு சமீபமாய் இருக்கிறதென்றால், அது உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருப்பதாக பவுல் சொல்கிறார். "உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும் இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்" என்று ஏசாயா 59:21ல் வாசிக்கிறோம். அது நம்முடைய இருதயத்தில் இருக்கிறது என்பதை எரேமியா 3:33 இவ்வாறு உறுதிப்படுத்துகிறது : "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்". இருதயம் என்ற வார்த்தை ஒரு மனிதனுடைய அறிவு, உணர்ச்சிகள், சித்தம் ஆகியவை அடங்கிய ஆள்தத்துவத்தைக் குறிப்பிடுகிறது. இருதயத்தில் இல்லாத ஒரு காரியத்தை வாய் பேசுமானால் அது மாய்மாலமான வார்த்தையாகத்தான் இருக்கும்.

"நாங்கள்" என்று பவுல் தன்னோடு சகஊழியக்காரர்களையும் சேர்த்துக் கொள்கிறார். அவர்கள் பிரசங்கிக்கும் விசுவாச வார்த்தை என்ன என்பதை அடுத்த வசனத்தில் பவுல் அறிவிக்கிறார்.

என்னவென்றால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)

'இரட்சிப்பு' என்றால் என்ன என்பதை மீண்டுமாக நினைவுபடுத்திக்கொள்வோம். விடுதலை, மீட்பு, நித்திய பாதுகாப்பு ஆகிய

மூன்றையும் இது உள்ளடக்கியது. ஒரு ஆத்துமா நித்திய நித்தியமாக அனுபவிக்கும் பேரின்ப பாக்கியமே இரட்சிப்பு இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன் பாவத்தின் வல்லமை, அதிகாரம், பாவத்தின் சம்பளமான மரணம் ஆகியவற்றை மேற்கொள்கிறான். இதுவே பவுல் அறிவிக்கும் நற்செய்தி.

இரட்சிப்பை விரும்பும் ஒரு மனிதன் செய்ய வேண்டிய ஒரே காரியம், கல்வாரி சிலுவை அருகே வந்து, கிறிஸ்துவின் பாதத்தை முத்திசெய்து, அங்கே அவர் நிறைவேற்றி முடித்த (மத் 5:17) காரியத்தை, அதை நமக்காக, நம் சார்பில் நிறைவேற்றினார் என்று விசுவாசித்து ஏற்றுக்கொள்வதுதான். அவர்கள் செய்யவேண்டிய மூன்று காரியங்கள் என்ன என்பது இந்த வசனத்தில் சுருக்கமாகச் சொல்லப்படுகிறது.

1. இயேசு இரட்சகர் என்பதை வாயினால் அறிக்கையிடவேண்டும்.
2. இயேசு தங்களுக்காக மரித்தார் என்பதை இருதயத்தில் விசுவாசிக்கவேண்டும்.
3. பிதாவாகிய தேவன் அவரை மூன்றாம் நாளில் எழுப்பினார் என்பதை நம்பவேண்டும்.

மனித இரட்சிப்பில் வாயினால் நாம் செய்யும் அறிக்கை மிகவும் முக்கியமானது. கிறிஸ்து யார் என்பதை நாம் அறிந்திருந்தால் மட்டும் போதாது, அதை வெளிப்படையாகச் சொல்லவேண்டும். "இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப் 2:11) என்று வாசிக்கிறோம். கிறிஸ்து சொல்லுகிறார் : "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்" (மத் 10:32). "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷகுமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கை பண்ணுவார்" (லூக்கா 12:8). யோவான் சொல்கிறார் : "குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையும் உடையவனாயிருக்கிறார்" (1 யோவான் 2:23). "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கை பண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார்" (1 யோவான் 4:15).

கிறிஸ்துவைப் பற்றி அறிக்கையிடப்படவேண்டிய முக்கியமான சத்தியங்கள் :

1. மனித இனத்துக்கு இரட்சிப்பு உண்டாக தேவகுமாரனாகிய கிறிஸ்து வந்தார்

2. மனித இனத்தின் பாவங்களை எல்லாம் சிலுவையில் தன்மேல் ஏற்றுக்கொண்டார்.

3. மரித்து, உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

4. மீண்டுமாக அவர் உலகை நியாயந்தீர்க்கும்படியாக வருவார்.

இரண்டாவதாக பவுல், கிறிஸ்து மரித்தார் என்பதையும், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதையும் இருதயத்தில் விசுவாசிக்கவேண்டும் என்கிறார். ஒரு முக்கியமான உபதேசம் இங்கே சொல்லப்படுகிறதைக் கவனியுங்கள். வாயினால் அறிக்கையிடப்படும் சத்தியம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாக இருக்கவேண்டும். இருதயத்தில் ஏற்றுக்கொண்ட ஒரு காரியத்தை அறிக்கையிடாமல் இருப்பதும் தவறுதான். "இருதயத்தின் நிறைவினால் வாய்பேசும்" (மத் 12:34) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடைசிவரை நான் இரகசிய கிறிஸ்தவனாக இருப்பேன் என்று ஒருவன் சொல்வானேயானால் எங்கேயோ தவறு இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

"இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். இரட்சிப்பில் விசுவாசத்தின் பங்கை தருணம் கிடைக்கும்போதெல்லாம் பவுல் வலியுறுத்துகிறார். உலகில் உள்ள அத்தனைபேருக்காகவும் அவர் மரித்தார். அவர் "சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்" (1 யோவான் 2:2). ஆனாலும் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படுகிறதில்லை, அதற்குக் காரணம் அவர்களில் விசுவாசம் இல்லை என்பதுதான். "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்ற கேள்வியோடு தங்களை அணுகிய பிலிப்பி பட்டணத்து சிறைச்சாலைக்காரனிடம் பவுலும் சீலாவும் சொல்கிறார்கள், "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப் 16:31). எதை விசுவாசிக்கவேண்டும் என்ற கேள்விக்கும் பதில் இந்த வசனத்தில் கொடுக்கப்படுகிறது.

1. கிறிஸ்து நமக்காக மரித்தார் என்பதை விசுவாசிக்கவேண்டும்.

2. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை விசுவாசிக்கவேண்டும்.

நாம் விசுவாசிக்கவேண்டிய மூன்றாவது முக்கியமான காரியம் அவருடைய உயிர்த்தெழுதல். கிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டதன் விளைவாக அவர் தண்டிக்கப்பட்டு விட்டார் என்பதை உறுதிப்படுத்துகிறது. நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டுவிட்டது என்ற நிச்சயத்தை உண்டாக்குகிறது. ஆனாலும் அவருடைய உயிர்த்தெழுதலின் மூலமாகவே நாம் நீதிமானாக்கப்படுகிறோம். **இரட்சிப்பின் கிரியை நிறைவேறிவிட்டது, கிறிஸ்து தன்னை பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்ததை பிதாவானவர் அங்கீகரித்து ஏற்றுக்கொண்டார் என்பதை அவருடைய உயிர்த்தெழுதலே நிரூபிக்கிறது.** கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாக மீட்பு உண்டாயிற்று என்றாலும், பாவத்தின்மேலும், மரணத்தின்மேலும், சாத்தானின் மேலும் நமக்கு வெற்றி உண்டு என்பதை அவருடைய உயிர்த்தெழுதலே உறுதிப்படுத்துகிறது. அவர் மரித்தவராகவே இருந்திருப்பாரானால் மரித்த ஒருவரை எந்த அளவுக்கு நம்பமுடியுமோ, அந்த அளவுக்குத்தான் நாம் அவரை நம்பமுடியும். மரித்த யாரையாவது உங்களால் நம்ப முடியுமா?

"அவர் உயிர்த்தெழுந்தார்" (மாற்கு 16:6) என்பதுதான் கிறிஸ்துவைப் பற்றி வேதத்தில் சொல்லப்பட்ட மிக முக்கியமான சத்தியம். கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்தவமே இல்லை. "கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. . . . கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள். கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே" (1கொரி 15:14-18) என்கிறார் பவுல். "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" (1 கொரி 15:20). நாமும் ஒருநாள் உயிர்த்தெழுவோம் என்ற நிச்சயம் அவர் "முதற்பலனானவர்" என்று சொல்லப்படுவதினால் நமக்கு உண்டு. "அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்" (ரோமர் 6:5) என்ற வசனத்தை தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இருதயத்தின் விசுவாசமும், வாயின் அறிக்கையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை என்பதை ஏற்கனவே பார்த்தோம் (லூக்கா 12:8, யோவான் 9:22; 12:42, 43, 1 தீமோ 6:12, 1 யோவான் 2:23; 4:15). ஒரு விசுவாசி எந்த அளவுக்கு தன் வாயினால் கிறிஸ்துவை அறிக்கையிட்டு, எந்த அளவுக்கு மரித்த கிறிஸ்துவை பிதாவானவர் எழுப்பினார் என்பதை

இருதயத்தில் விசுவாசிக்கிறானோ, அந்த அளவுக்கு தன் இரட்சிப்பைக் குறித்த நிச்சயமுடையவனாக இருக்கிறான். **வெறுமனே விசுவாசமும், அறிக்கையும் ஒரு மனிதனை இரட்சிப்புக்கு வழிநடத்துவதில்லை. கிறிஸ்துவைக் குறித்த விசுவாசமும் அவரைக்குறித்த அறிக்கையும் மட்டுமே நம்முடைய நித்தியத்தை நிர்ணயம் பண்ணுகிறது.** "நான் வெட்கப்படுகிறதில்லை; ஏனென்றால் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" (2 தீமோ 1:12) நாம் விசுவாசிக்கும் நபர் இயேசுகிறிஸ்துவாக இருக்கும்போது அவருடைய நீதியின் வஸ்திரத்தினால் நாம் மூடிக்கொள்ளப்படுகிறோம். நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லாமற்போகிறது (ரோமர் 8:1).

நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோமர் 10:10)

முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட சத்தியம் மீண்டுமாக அறிவிக்கப்படுகிறது. முந்தின வசனத்தில் வாயின் அறிக்கை முதலாவதாகச் சொல்லப்பட்டு, இருதயத்தின் விசுவாசம் இரண்டாவதாக குறிப்பிடப்பட்டது. இந்த வசனத்தில் நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும் என்பது முதலாவதாக சொல்லப்பட்டு, வாயின் அறிக்கை இரண்டாவது இடத்தைப் பிடிக்கிறது. உள்ளான இருதயத்திலேதான் நம் விசுவாசம் வாசமாயிருக்கிறது. இந்த விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே சரியான அறிக்கை வாயின்மூலமாக வரமுடியும்.

நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், அதாவது நாம் கிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் விசுவாசித்தால் தேவனுக்கேற்ற நீதிமானாகிறோம். கிறிஸ்துவின் நீதி நாம் அவர்மேல் வைக்கும் விசுவாசத்தினால் நம்முடையதாகிறது. "ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது" (ரோமர் 4:3) என்று வாசித்தோம். தேவநீதி "விசுவாசத்தினால் வருகிற நீதி" (ரோமர் 4:13) என்று சொல்லப்படுகிறது. "அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதி;" (ரோமர் 3:22) என்றும் "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி" (பிலிப் 3:9) என்றும் குறிப்பிடப்படுகிறது. **ரோமர் நிருபம் முழுவதிலும் தேவனிடமிருந்து வெளிப்படும் கிருபையையும், மனிதனிடமிருந்து வெளிப்பட்டு அந்த கிருபையை ஏற்றுக்கொள்ளும் விசுவாசத்தையுமே பவுல் வலியுறுத்திப்பேசுவதைப் பார்க்கிறோம்.**

இருதயத்தில் விசுவாசிப்பதின் மூலமாகவே நீதியைச்

சுதந்தரிக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். மேலோட்டமாகவோ, நம்முடைய மூளை அறிவைப் பயன்படுத்தியோ கிறிஸ்துவை நம்பினால் மட்டும் போதாது. கிறிஸ்துவைப் பற்றி அறிந்துகொண்டிருப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்பதல்ல. நம்முடைய உள்ளான ஆள்தத்துவத்தில் (அறிவு, உணர்ச்சிகள், சித்தம்) கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கவேண்டும். இதுவே மேலான விசுவாசம். தேவனால் அங்கீகரிக்கப்படும் விசுவாசம். இருதயத்தில் ஒருவன் கிறிஸ்துவை விசுவாசிப்பது அவனுடைய வாயின் வார்த்தையில் வெளிப்படுகிறது. விசுவாசத்தின் விளைவாகவே அறிக்கை உருவாகிறது. கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட மறுகணமே நாத்தான்வேல் சொல்கிறார் : "ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" (யோவான் 1:49). கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர்கள் அவரைக் குறித்து தைரியமாக அறிக்கையிடுவதன் மூலமாகவே தேவனுடைய ராஜ்யம் கட்டப்படமுடியும். சபையில் மட்டும் அறிக்கையிட்டால் போதாது. "மனுஷர் முன்பாக" (மத் 10:32) அறிக்கையிடவேண்டும். "ஜாதிகளுக்குள் அவருடைய அதிசயங்களையும் விவரித்துச் சொல்லுங்கள்" (சங் 96:3) என்று வாசிக்கிறோம். தேவன் தன்னுடைய சுவிசேஷத்தை அறிவிக்கும் பணியை, உங்களிடமும் என்னிடமும் தான் ஒப்புவித்திருக்கிறார், தேவதூதர்களிடம் அல்ல.

கிறிஸ்துவை அறிக்கையிடாமல் இரகசிய கிறிஸ்தவனாகவே இருந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்பவர்கள் இரகசியமாக பரலோக ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கலாமென்று நினைக்கிறார்கள். கிறிஸ்து நம்மை இரகசியமாக சிநேகிக்கவில்லை. வெளிப்படையாக நேசித்தார். பாடுமரணத்தை அதினிமித்தமே சகித்தார். நிக்கொதேமு இராக்காலத்திலே இரகசியமாகவே கிறிஸ்துவைச் சந்திக்க வந்தவர்தான். ஆனாலும் பிரதான ஆசாரியர் முன்னிலையில் வெளிப்படையாக அவரை ஆதரித்துப் பேசினார் (யோவான் 7:50-52) அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு இரகசிய சீஷனாக இருந்தவர்தான். ஆனாலும் கிறிஸ்து மரித்தபோது, அவருடைய சீஷர்கள் எல்லாரும் ஓடிப்போனார்கள் என்றாலும் தைரியமாக பிலாத்துவிடம் போய் கிறிஸ்துவின் சரீரத்தைப் பெற்று அடக்க ஏற்பாடுகளைச் செய்கிறார் (மத் 27:58). "மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது" (மத் 5:14) என்று சொல்லப்பட்டிருக்கிறதே !

கிறிஸ்துவை வாயினாலே அறிக்கை பண்ணுகிறவர்கள் தங்கள் கிரியைகளின் மூலமாகவும் அவரை அறிக்கை பண்ணுகிறவர்களாய் இருக்கவேண்டும். "இயேசுவே, நான் உம்மை விசுவாசிக்கிறேன் என்று சொன்னால் மட்டும் போதாது. நம் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும்

அவரை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளவேண்டும். அவர் நம்மை ஆளுகை செய்கிறவராகவேண்டும். "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா 2:20) என்று அறிக்கையிடக்கூடியவர்களே மெய்யான கிறிஸ்தவர்கள்.

இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைபண்ணப்படும் என்று பவுல் சொல்வதினால் நம்முடைய அறிக்கையே இரட்சிப்புக்குக் காரணமாக இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. அல்லது அறிக்கையே இரட்சிப்பைப் பூரணப்படுத்துகிறது என்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது. **அறிக்கையிடுவதினால் ஒருவன் இரட்சிக்கப்படுவதில்லை. இரட்சிக்கப்பட்டதினால் ஒருவன் அறிக்கையிடுகிறான்.** இருதயத்தில் விசுவாசிப்பதினாலேயே இரட்சிப்பு உறுதிப்படுகிறது என்றாலும், கடைசி நாளில் நம்முடைய அறிக்கை நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதற்கு சாட்சியாக விளங்குகிறது. லூக்கா 12:8ல் இயேசு சொல்கிறார்: "மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை மனுஷ குமாரனும் தேவதூதர் முன்பாக அறிக்கைபண்ணுவார்". "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" (எபி 10:23) என்று வாசிக்கிறோம்.

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது. (ரோமர் 10:11)

முந்தின வேதபகுதியில் தேவன் ஏன் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலரைப் புறக்கணித்தார் என்பதை அறிவித்த பவுல், மீண்டுமாக புறஜாதியாரின் அழைப்பைக் குறித்துப் பேச ஆரம்பிக்கிறார்.

"இடறுதற்கான கல்லையும், தவறுதற்கான கன்மலையையும், சீயோனில் வைக்கிறேன்; அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை என்று எழுதியிருக்கிற படியாயிற்று" என்ற ரோமர் 9:33 வசனத்தை ஏற்கனவே தியானித்திருக்கிறோம். ஏசாயா 28:16ல் தேவன் சொல்கிறார்: "இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்" திடமான அஸ்திபாரத்தின்மேல் தன்னுடைய வாழ்க்கையைக் கட்டியிருக்கும் ஒரு மனிதன் பெருமழையினாலும் பெருவெள்ளத்தினாலும், காற்றினாலும் பாதிக்கப்படுவதில்லை (மத் 7:25). எனவே அவன் வெட்கப்படுவதில்லை.

தான் அறிவிக்கும் சத்தியம் ஏற்கனவே தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தப்பட்டவைதான் என்பதை பவுல் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம். தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசிய காரியங்களில் (2 பேதுரு 1:21) மாறுபாடு இருக்கமுடியாது. "விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லை" என்று சொல்லும்போது அவன் யூதனாகவும் இருக்கலாம், கிரேக்கனாகவும் இருக்கலாம், ரோமனாகவும் இருக்கலாம், புறஜாதியானாகவும் இருக்கலாம் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது. "வெட்கப்படுவதில்லை" என்ற வார்த்தையை அவர்கள் தோல்வி அடையமாட்டார்கள் என்றும், பயப்படமாட்டார்கள் என்றும் பொருள்கொள்ளலாம். "நான் வெட்கப்படேன்; நான் வெட்கப்பட்டுப் போவதில்லையென்று அறிந்திருக்கிறேன்" என்று ஏசாயா 50:7ல் வாசிக்கிறோம். "என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை" (யோவேல் 2:26) என்கிறார் தேவன். பேதுருவும் (1 பேதுரு 4:16), யோவானும் (1 யோவான் 2:28) கிறிஸ்துவினிமித்தம் வெட்கப்படத்தேவையில்லை என்று அறிவிப்பதை வாசித்துப்பாருங்கள்.

விசுவாசிக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று சொல்லும் பவுல் அந்த விசுவாசம் எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்று சொல்லவில்லை. "விசுவாசம் எல்லாரிடத்திலுமில்லையே (2 தெச 3:2) என்ற வசனத்தின்படி சிலரிடம் விசுவாசம் இருப்பதில்லை. "ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று?" (மாற்கு 4:40) என்று இயேசு ஆச்சரியப்படுகிறார். குறைவான விசுவாசத்தையும் தேவன் கனம்பண்ணுகிறார். ஏனென்றால் "நெரிந்த நாணலை அவர் முறியாமலும் மங்கியெரிகிற திரியை அணையாமலும் இருக்கும் நல்ல தேவன்" (ஏசாயா 42:3). "அற்ப விசுவாசம்" (மத் 6:30) உள்ளவர்களையும் அவர் ஆசீர்வதிக்கிறார்.

இன்னொரு காரியத்தையும் நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். **நம்முடைய விசுவாசம் நம்மை இரட்சிப்பதில்லை - ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தன்னுடைய கிருபையினால் நம்மை இரட்சிக்கிறார்.** கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார் என்பதை விசுவாசத்தின் மூலம் நாம் அறிந்து அங்கீகரிக்கிறோம். எனவே உங்கள் விசுவாசத்தை விசுவாசத்தின்மேல் வைக்காமல், "விசுவாசத்தை துவங்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற" (எபி 12:1) இயேசுவின்மேல் வையுங்கள். பவுலைப்போல், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள்வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12) என்று அறிக்கையிடுங்கள்.

விசுவாசம் எல்லாரையும் நீதிமானாக்கும் (வசனம் 12-21)

யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை; எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். (ரோமர் 10:12)

எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள் (ரோமர் 3:23). **பாவம் செய்வதில் யூதர் கிரேக்கர் என்று வித்தியாசம் இல்லாதிருந்தது. அப்படியே இரட்சிக்கப்படுவதிலும் அவர்களில் வித்தியாசம் இருக்கமுடியாது.** இருதரத்தாரையும் சிருஷ்டித்தவர் அவரே. தேவன் தன்னில்தானே நீதிபரர் என்பதால் அவர் பாரபட்சமுடையவராய் இருக்கமுடியாது. தன்னுடைய நீதியை ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் அதைக் கொடுக்க அவர் நீதியுள்ளவராயிருக்கிறார். யூதர்களுக்கு எந்த அளவுக்கு இரட்சிப்பு தேவையோ அதே அளவுக்கு கிரேக்கருக்கும் தேவை. இரண்டுபேருக்குமே அதை தாராளமாக வழங்குவதற்கு அவர் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். தாவீது சொல்கிறார், "ஆண்டவரே நீர் நல்லவரும், மன்னிக்கிறவரும், உம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர் மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறீர்" (சங் 86:5).

ரோமர் 3:29,30ல் வாசித்தோம் : "தேவன் யூதருக்கு மாத்திரமா தேவன்? புறஜாதிகளுக்கும் தேவனல்லவா? ஆம், புறஜாதிகளுக்கும் அவர் தேவன்தான். விருத்தசேதனமுள்ளவர்களை விசுவாசத்தினாலும், விருத்தசேதனமில்லாதவர்களை விசுவாசத்தின் மூலமாகவும் நீதிமான்களாக்குகிற தேவன் ஒருவரே". "கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும் விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்" (கொலோ 3:11).

தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் அவர் தன்னுடைய நீதியை வழங்க ஐசுவரியசம்பன்னராக, (போதுமானவராக) இருக்கிறார் என்கிறார் பவுல். தன்னுடைய ஐசுவரியத்தை தாராளமாகப் பகிர்ந்து கொடுப்பதின் விளைவாக அவர் குறைவுபடப்போவதில்லை. தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்களே அவரை விசுவாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்களே வேதத்தில் அவரைப்பற்றி சொல்லப்பட்ட சகல சத்தியங்களையும் ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். சமாரிய ஸ்திரீயிடம் இயேசு சொல்கிறார்: "இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும்

பிதாவைத் தொழுதுகொள்ளும் காலம் வருகிறது" (யோவான் 4:21). தொழுதுகொள்வதைக் குறிப்பிடும் proskuneo என்ற வார்த்தை ஒரு குட்டிநாய் தன் எஜமானனின் கால்களை பணிவோடு நக்கி முத்தமிடுவதற்கு ஒப்பானது.

"அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ள ஆரம்பித்தார்கள்" (ஆதி 4:26) என்ற வசனமே தொழுதுகொள்ளுதலைக் குறித்துப்பேசும் முதல் வேதவசனம். தேவனைத் தொழுதுகொள்ளும் ஒரு மனிதன் தன் ஆவி, ஆத்துமா, சரீரத்தில் முழுமையாக, முற்றிலுமாக தேவனோடு ஐக்கியப்பட்டவனாகிறான். தேவ சமுகத்தில் அவன் தன்னைத் தாழ்த்தி வெறுமையாக்குகிறான். அவருடைய வல்லமையை உணர்ந்து கொள்கிறான். அவருடைய மாட்சிமையை ஆராதிக்கிறான். அவருடைய வாக்குத்தத்தங்களை நம்புகிறான். அவருடைய இரக்கத்தைப் பறைசாற்றுகிறான். தன்னுடைய இரட்சகராக அங்கீகரிக்கிறான். ஆதி 13:14; 21:33; 26:25, 2 இராஜா 5:11; சங் 116:4,13 வாசித்துப்பாருங்கள்.

"யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை" என்று பவுல் வலியுறுத்துவதைக் கவனியுங்கள். ஏனென்றால் "தேவனிடத்தில் பட்சபாதமில்லை" (ரோமர் 2:11). ரோமர் 1:16; 3:10-18, 22-24; 3:29,30; 4:9-12; 5:18,19; 9:24; 11:32, 1 கொரி 7:19, கலா 3:9,29; 5:6; 6:15 எபே 2:14-18 கொலோ 3:11 வாசித்துப்பாருங்கள். "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா 3:28).

தேவன் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார் என்கிறார் பவுல். அவருடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும் ஐசுவரிய சம்பன்னராகத்தான் இருக்கமுடியும் (எபே 3:8), வெள்ளியும் பொன்னும் அவருடையது (ஆகாய் 2:8). சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் மலைகளிலுள்ள பறவைகளும், வெளியில் நடமாடுகிறவைகளும் அவருடையவை (சங் 50:10-11). அவர் கிருபையில் ஐசுவரியமானவர் (எபே 1:7) என்பதுமட்டுமல்ல தம்முடைய கிருபையின் மகாமேன்மையான ஐசுவரியத்தை விளங்கச் செய்ய விரும்புகிறவர் (எபே 2:6). தம்முடைய ஐசுவரியத்தின்படி நம் குறைவை எல்லாம் நிறைவாக்குகிறவர் (பிலிப் 4:19). நாம் அனுபவிக்கிறதற்கு சகலவித நன்மைகளையும் சம்பூரணமாய் கொடுப்பவர் (1 தீமோ 6:17). 2 கொரி 9:8, யோவேல் 2:13, எபே 3:20 வாசித்துப் பாருங்கள்.

இந்த வசனம் அறிவிக்கும் இரண்டு காரியங்கள்:

1. இரட்சிப்பைப் பொறுத்தவரை யூதன், கிரேக்கன் என்று வித்தியாசம் இல்லை.

2. தன்னைத் தொழுதுகொள்கிற யாவரையும் அவர் ஆசீர்வதிக்கிறார்.

ஆதலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். (ரோமர் 10:13)

"ஆதலால்" என்ற வார்த்தை தேவன் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறபடியால் என்பதைக் குறிப்பிடுகிறது. "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்; கர்த்தர் சொன்னபடி சீயோன் பர்வதத்திலும் எருசலேமிலும் கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்" (யோவேல் 2:32) என்ற வசனத்தில் முதல் பகுதியை பவுல் இங்கே உபயோகப்படுத்துகிறார், பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளின் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களையே பவுல் அறிவிக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்தபோது பேதுரு சொல்கிறார்: "அப்பொழுது கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான் என்று தேவன் உரைத்திருக்கிறார்" (அப் 2:21). கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவன் 'இரட்சகர்' என்ற அவருடைய நாமத்தை உரிமையாக்கிக்கொள்கிறான்.

"கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்" (நீதி 18:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய நாமம் கர்த்தர் யார் என்பதையே குறிப்பிடுவதால் இரட்சிக்கப்படுகிறவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையே தொழுதுகொள்ளுகிறார்கள். "அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24) என்ற ஆலோசனையை இயேசு தருகிறார். இவ்வாறு தொழுதுகொள்ளும் மனிதனுடைய ஆராதனை அவனுக்குப் புறம்பே இருந்து அல்ல, உள்ளான இருதயத்திலிருந்து புறப்பட்டுவருவதினால் அது ஆவிக்குரியதாக இருக்கிறது. அதை உடனடியாக தேவன் ஏற்றுக்கொள்வதால் அவனிடம் இரட்சிப்பின் நிச்சயம் உண்டாகிறது.

ஆறு வார்த்தைகளையுடைய இந்தச் சிறிய வசனத்தில் ஆழமான ஆறு சத்தியங்கள் புதைந்துகிடக்கின்றன.

1. உன்னை இரட்சித்துக்கொள் என்று வசனம்

சொல்லவில்லை. "இரட்சிக்கப்படுவாய்" என்றுதான் சொல்கிறது.

2. இரட்சிப்பவர் தேவனாகிய கர்த்தர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

3. இரட்சிப்பு ஏற்கனவே மனிதர்களுக்கு தேவனால் வாக்களிக்கப்பட்டிருக்கிறது.

4. இயேசு (இரட்சகர்) என்ற நாமம் தொழுதுகொள்ளப்படவேண்டும் என்பதே தேவனுடைய நிபந்தனை.

5. தன்னைத் தொழுதுகொள்ளுபவர்களை மட்டுமே அவர் இரட்சிக்கிறார்.

6. அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் யாராக இருந்தாலும் இரட்சிக்கப்படுவார்கள்.

அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக்குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? (ரோமர் 10:14)

கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களே இரட்சிக்கப்படுவார்கள் என்பதை முந்தின வசனத்தில் உறுதிப்படுத்திய பவுல், அதின் தொடர்ச்சியாக இந்த வசனத்திலும், அடுத்த வசனத்திலுமாக நான்கு கேள்விகளை தன்னுடைய வாசகர்களுக்கு முன்பாக வைக்கிறார்.

முதலாவது கேள்வியான விசுவாசியாதவர்கள் எப்படித்தொழுதுகொள்ளமுடியும் என்பது விசுவாசத்தை முக்கியப்படுத்துவதாக இருக்கிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பதே இரட்சிப்பின் அஸ்திபாரமாகச் சொல்லப்படுகிறது. **மெய்தேவன் யார் என்பதை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரைத் தொழுதுகொள்ளமுடியாது, அவரை ஆராதிக்கமுடியாது, அவரிடம் வேண்டுதல் செய்யமுடியாது.** "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபி 11:6).

அவரைக்குறித்து கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள் என்பது **இரண்டாவது கேள்வி,** ஒருவரை நாம் நம்பி

ஏற்றுக்கொள்ளுவதற்கு முன் அவரைக்குறித்து விசாரித்து அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. தேவன் ஒருவர் உண்டு என்பதை எல்லாரும் அறிந்திருக்கலாம். ஆனால் அவர் இரட்சகராக வெளிப்பட்ட கிறிஸ்து என்பதை பலர் கேள்விப்பட்டிருக்கமாட்டார்கள். தேவனுடைய அன்பு, அறிவு, வல்லமை, இரக்கம் முதலிய குணாதிசயங்களைக் குறித்து கேள்விப்படாத நிலையில் யாராலும் அவரை விசுவாசிக்கமுடியாது. ஏதோ ஒரு வகையில் தேவனைக்குறித்த வெளிப்பாடுகள் அவர்களுக்கு உண்டாகவேண்டும்.

தேவனைக்குறித்து ஒருவன் பிரசங்கித்தால் மட்டுமே அவர்கள் கேள்விப்படமுடியும் என்பது **மூன்றாவது கேள்வியின்** பதிலாக அமைகிறது. தேவனைக்குறித்து பொதுவாக சுவிசேஷக்கூட்டங்களில் அல்லது சபைகளில் பிரசங்கங்கள் மூலமாகவே அறிந்துகொள்கிறோம். தேவதூதர்கள் மூலமாக தேவன் சுவிசேஷத்தை அறிவிப்பதில்லை. தேவனைப்பற்றியே வேதத்தின் நான்கு சுவிசேஷங்களும், நிருபங்களும் எழுதப்பட்டன என்றாலும், அதில் உள்ள சத்தியங்கள் அறிவிக்கப்பட்டால் மட்டுமே அதை மனிதர்கள் விளங்கிக்கொள்ளமுடியும். எத்தியோப்பிய ராஜஸ்திரீயின் அதிகாரி ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்தார் என்றாலும், வேதவாக்கியங்களைக் குறித்து பிலிப்பு அவருக்கு பிரசங்கிக்கவேண்டியதிருந்தது (அப் 8:27-40). கொர்நேலியு என்ற ரோம நூற்றுக்கதிபதி தேவபக்தியுள்ளவன் மாத்திரமல்ல, தருமங்கள் செய்துவந்த நல்ல மனிதன். அவனும் அவன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவதற்கு பேதுரு வந்து பிரசங்கித்து, சுவிசேஷத்தைச் சொல்லவேண்டியதிருந்தது (அப் 10:1-8, 34-36). அதுவரை அவன் இரட்சிக்கப்படவில்லை.

அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே. (ரோமர் 10:15)

பிரசங்கிக்கிறவர்கள் இல்லாவிட்டால் எப்படி கேள்விப்படுவார்கள் என்று கேட்ட பவுல், அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள் என்ற **நான்காவது கேள்வியை** எழுப்புகிறார். இப்படி அடுக்கடுக்கான கேள்விகள் யோபு 38:2-38, 4:1-7, ஏசாயா 40:12-14,21 ஆகிய வேதபகுதிகளிலும் காணப்படுகின்றன.

புறஜாதியார் மத்தியில் பவுல் செய்த ஊழியத்தின் நிமித்தமாகவே யூதர்கள் அவர்மேல் மிகுந்த கோபமுடையவர்களாக இருந்தார்கள்

என்பதை அறிவோம். தான் செய்வது சரியான காரியம்தான் என்பதை பவுல் இந்த வேதபகுதியில் உறுதிப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளலாம். பிரசங்கிமார்களை எழுப்பி அவர்களை தேசமெங்கும் அனுப்புவது தேவனாகிய கர்த்தர். "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்" (ஏசாயா 6:8) என்கிறார் பிதாவாகிய தேவன். "பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21) என்கிறார் கிறிஸ்து. தேவனால் அனுப்பப்பட்டவர்களே "அப்போஸ்தலர்" (apostalōsin) என்று அழைக்கப்படுகிறார்கள் என்று பார்த்தோம்.

உலகமெங்கும் சுவிசேஷம் சொல்லப்படுவதற்கு தேவன் வைத்திருக்கும் திட்டம் இவைதான்.

1. இரட்சிக்கப்படவேண்டுமானால் ஒருவன் தேவனைத் தொழுதுகொள்ளவேண்டும்.
2. தொழுதுகொள்ளவேண்டுமானால் ஒருவன் தேவனை விசுவாசிக்கவேண்டும்.
3. விசுவாசிக்கவேண்டுமானால் ஒருவன் தேவனைக்குறித்து கேள்விப்படவேண்டும்.
4. கேள்விப்படவேண்டுமானால் தேவனைக்குறித்து மற்றொருவன் பிரசங்கிக்கவேண்டும்.
5. பிரசங்கிக்கப்படவேண்டுமானால் ஒருவன் அனுப்பப்படவேண்டும்.

தன்னுடைய வாதத்தை ஏசாயா 52:7 மூலமாக பவுல் உறுதிப்படுத்துகிறார்: "சமாதானத்தைக்கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவித்து, இரட்சிப்பைப் பிரசித்தப்படுத்தி: உன் தேவன் ராஜரீகம் பண்ணுகிறாரென்று சீயோனுக்குச் சொல்லுகிற சுவிசேஷகனுடைய பாதங்கள் மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன?" மிஷனரி ஊழியத்தின் மேன்மை இங்கே அறிவிக்கப்படுகிறது. அவர்கள் தேவனால் கனப்படுத்தப்படுவது உறுதி. "சமாதானத்தைக் கூறுகிற சுவிசேஷகனுடைய கால்கள் மலைகளின்மேல் வருகிறது" என்று நாகூம் 1:15ல் வாசிக்கிறோம். நியாயப்பிரமாணம் நியாயத்தீர்ப்பைப் பிரசங்கிக்கிறது என்றால் சுவிசேஷம் சமாதானத்தைப் பிரசங்கிறது. தன்னுடைய அப்போஸ்தலர்கள் தேசமெங்கும் சென்று சமாதானத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவிருப்பதினால்தான் கிறிஸ்து அவர்களுடைய கால்களை கழுவினாரோ? (யோவான் 13:5).

சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக ஊழியர்கள் அனுப்பப்படவேண்டும் என்பதினால்தான் இயேசு தன் சீஷர்களிடம் சொல்கிறார்: "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" (மத் 9:37,38). எரேமியாவிடம் தேவன் உத்தரவிடுகிறார்: "நான் உன்னை அனுப்புகிற எல்லாரிடத்திலும் நீ போய், நான் உனக்குக் கட்டளையிடுகிறவைகளையெல்லாம் நீ பேசுவாயாக" (எரே 1:7). "அப்பொழுது அவர்கள் என் வார்த்தைகளை ஜனங்களுக்குத் தெரிவித்து, அவர்களைத் தங்கள் பொல்லாத வழிகளையும் தங்கள் செய்கைகளின் பொல்லாப்பையும் விட்டுத் திருப்புவார்கள்" (எரே 23:22)

ஆனாலும் சுவிசேஷத்துக்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக்குறித்து ஏசாயா : கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார் என்று சொல்லுகிறான். (ரோமர் 10:16)

நற்காரியங்களை சுவிசேஷமாக அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் அருமையானவைதான். இந்த நற்செய்தியை அறிவிக்கும்படியாக தேவன் பல ஊழியக்காரர்களை எழுப்பியிருக்கிறார். "எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்" (அப் 1:8) என்று உயிர்த்த இயேசு கட்டளையிட்டார். அவர்களும் உலகமெங்கும் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாகச் சென்று, தேவனோடே ஒப்புரவாகும்படியாக பிரசங்கித்து வருகிறார்கள் (2 கொரி 5:20). ஆனால் சுவிசேஷத்தைக் கேட்ட அத்தனைபேரும் விசுவாசித்தார்களா? இல்லையே! இரண்டாயிரம் ஆண்டுகளாக சுவிசேஷம் சொல்லப்பட்டுவருகிறது. இந்த நாட்களில் ரேடியோ, டெலிவிஷன் மூலமாகவும் சுவிசேஷம் தேசமெங்கும் அறிவிக்கப்பட்டு வருவதினால், சுவிசேஷம் சொல்லப்படாத இடமே உலகத்தில் இல்லை என்றுகூட சொல்லமுடியும். **அப்போஸ்தலனாகிய தோமா சுவிசேஷ ஊழியத்தை இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் ஆரம்பித்து வைத்தும் இன்றும் மூன்று சதவிகித மக்கள் மட்டுமே கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கிறார்கள்.**

ஏசாயா 53:1 வசனத்தின் பின்னணியில் பவுல் பேசுகிறார். அந்த வசனம் சொல்லுகிறது: "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" பழைய ஏற்பாட்டின் மிகப்பெரிய தீர்க்கதரிசியான ஏசாயா சத்தியத்தை அறிவிக்கும்போதே அதைக்கேட்ட பலர் அதை ஏற்றுக்கொள்ளவில்லையே என்கிறார் பவுல். இந்த நாட்களிலும் காரியங்கள்

இவ்விதமாகவே நடக்கிறது. "சுவிசேஷம் அவர்களுக்கு (யூதர்களுக்கு) அறிவிக்கப்பட்டது போல் நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்டவசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை" (எபி 4:2). அதற்கு மூன்று காரணங்களை பவுல் இந்த அதிகாரத்தில் சொல்கிறார்:

1. மக்களின் விசுவாசக் குறைவு (வசனம் 10)
2. விசுவாசித்ததை அறிக்கையிடாதிருத்தல் (வசனம் 10)
3. சுவிசேஷத்துக்கு கீழ்ப்படியாதிருத்தல் (வசனம் 16)

அறிவிக்கப்படும் சுவிசேஷத்தை கேட்டால் மட்டும் போதாது,. விசுவாசித்தால் மட்டும்போதாது, அதை அறிக்கையிட்டால் மட்டும் போதாது, அதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்கிறார் பவுல். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிவது என்றால் சுவிசேஷம் அறிவிக்கும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதாகும். கீழ்ப்படிய தங்களை ஒப்புக்கொடுக்காத மனிதர்கள் கிறிஸ்துவின் நாட்களிலும் இருந்தார்கள். அதனால்தான் "அவர்கள் கண்டும் காணாதவர்களாயும், கேட்டும் கேளாதவர்களாயும், உணர்ந்துகொள்ளாதவர்களாயும் (மத் 13:13) இருப்பதாக இயேசு குறிப்பிடுகிறார்". இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை (யோவான் 12:37) என்று வாசிக்கிறோம். ஏனென்றால் சத்தியத்துக்குக் கீழ்ப்படிய அவர்கள் ஆயத்தமாய் இல்லை.

சுவிசேஷம் பெரும்பாலான மனிதர்களினால் நற்செய்தியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்காக அது தேவனிடமிருந்து வந்த செய்தி அல்ல என்று முடிவு செய்துவிடக்கூடாது. **சுவிசேஷ முயற்சிகள் தோல்வியடைவதைக் குறித்து ஆச்சரியப்படக் கூடாது. ஏனென்றால் இவ்விதமாகவே காரியங்கள் நடக்கும் என்பதை தேவன் முன்னறிந்திருந்தார்.** அதைத் தன்னுடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக வெளிப்படுத்தியும் இருந்தார். கிறிஸ்து சொல்கிறார்: "ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்தில் நிறைவேறுகிறது; அதாவது: காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக, அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே" (மத் 13:14,15). கொழுத்த இருதயத்தில் விசுவாசம் வாசமாயிருப்பதில்லை.

ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17)

பவுலின் வாதத்தினுடைய முடிவுரையாக இந்த வசனம் அமைகிறது. தேவனுடைய வார்த்தையாகிய நற்செய்தியைக் கேட்பதன் மூலமாகவே ஒருவனுடைய இருதயத்தில் விசுவாசம் உருவாகிறது என்கிறார் பவுல். **விசுவாசத்தின் பிறப்பு, படிப்படியான வளர்ச்சி, பெலனடைதல், முயற்சி எல்லாமே தேவனுடைய வார்த்தையையே ஆதாரமாகக் கொண்டவை.** தேவன்தான் நமக்கு விசுவாசத்தை அருளிச்செய்கிறார் என்றாலும், அதற்கு வேதவார்த்தைகளையே ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார். மனித ஞானத்தின் அடிப்படையில் பேசப்படும் வார்த்தைகள் ஒருவனை இரட்சிப்பதில்லை. ஒருவன் செய்யும் அதிசய அடையாளங்கள் ஒருவனை இரட்சிப்பதில்லை. சமாரியா பட்டணத்தில் கிறிஸ்து ஒரு அற்புதத்தையும் நடப்பிக்கவில்லை, ஆனாலும் சமாரியர்கள் சொல்லுகிறார்கள்: "அவருடைய உபதேசத்தை நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்" (யோவான் 4:42). தேவனுடைய வார்த்தையே ஒருவனை உயிர்ப்பிக்கக்கூடியது. தேவ கோபாக்கினைக்குப் பாத்திரனாக இருக்கும் ஒருவனை தேவனுடைய பிள்ளையாக மாற்றுவது தேவனுடைய வார்த்தையே.

ஜெபத்தின் முக்கியத்துவத்தை நாம் அறிந்திருக்குமளவு வேதவசனங்களின் முக்கியத்துவத்தை நாம் அறிந்துகொள்ளவில்லை. ஜெபக்கூட்டங்களிலும், அற்புதத் திருவிழாக்களுக்கும், பேரின்பபெருவிழாக்களுக்கும், கருத்தரங்கங்களுக்கும், தீர்க்கதரிசனம் சொல்லுமிடங்களுக்கும் கூட்டமாகச் செல்லும் கிறிஸ்தவர்கள் வேதபாடங்கள் எடுக்கப்படும் இடங்களுக்குச் செல்வதில்லை. சபைகளிலும் வேதபாடங்கள் முக்கியப்படுத்தப்படுவதில்லை. போதகர்கள் வேதத்தை அறிந்திருந்தால்போதும் என்று கருதப்படுகிறது. ஒருவன் வேதத்தைப் படித்து உணர்ந்துகொள்ளவில்லை என்றால், அல்லது அதில் உள்ள வசனங்களை அவனுக்கு விளங்கிக்கொள்ள முடியாத நிலையில் இரட்சிப்பின் விசுவாசமுடையவனாக மாறவேமுடியாது.

தேவனுடைய வார்த்தை ஒரு மனிதனில் பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்படும்போதே மரித்தநிலையில் இருக்கும் பாவி உயிர்மீட்படைகிறான். "ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63) என்கிறார் இயேசு. தேவனுடைய வார்த்தை ஒருபோதும் மாறுவதில்லை என்பதினால்தான் ஒருவன் விசுவாசத்தில் நிலைத்திருந்து வளர்ச்சியடைய முடியும். பேதுரு

சொல்லுகிறார்: "என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" (1 பேதுரு 1:23). யாக்கோபு சொல்லுகிறார்: "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்" (யாக் 1:18).

தன்னுடைய ஊழியத்தின் வெற்றியின் இரகசியத்தைப் பவுல் 1 தெச 2:13ல் இவ்வாறு அறிவிக்கிறார்: "நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது". "கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்; உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே" (1 பேதுரு 1:25) என்கிறார் பேதுரு. "நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்கிறார் பேதுரு (யோவான் 6:68).

தேவனை விசுவாசித்து இரட்சிக்கப்படுவதற்கு தேவனுடைய வார்த்தையைக் கேட்பதைத்தவிர வேறு மார்க்கம் வேதத்தில் சொல்லப்படவில்லை. அதனால்தான் "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" என்று இயேசு பல இடங்களில் சொல்கிறார் (மத் 2:7, 11, 17, 29; 3:6, 13, 22; 13:9, 43 மாற்கு 4:9, 23 லூக்கா 8:8; 14:35 வெளி 2:7, 11, 17, 29; 3:6, 13, 22; 13:19. பவுல் சொல்லுகிறார், "தேவஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில், பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று" (1 கொரி 1:21) தேவனுடைய வார்த்தை மட்டுமே ஜீவனுக்கேதுவானது என்பதினால் அது "ஜீவ வார்த்தை" (அப் 5:20) என்று அழைக்கப்படுகிறது. யாக்கோபு சொல்கிறார்: "உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும், உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்" (1:21).

ஒரு மனிதன் எந்த அளவுக்கு வேதவசனங்களைத் தியானித்து தேர்ச்சியடைந்திருக்கிறானோ, அந்த அளவுக்கு விசுவாசத்தில் முதிர்ச்சி அடைந்தவனாக இருப்பான். வேதத்தைக் குறைவாக அறிந்திருக்கும் ஒரு மனிதன் தேவனைக் குறித்து குறைவாகவே அறிந்துகொண்டிருப்பான்.

இப்படியிருக்க, அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன்; கேள்விப்பட்டார்கள்; அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறதே. (ரோமர் 10:18)

"அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது" (சங் 19:4) என்ற வசனத்தை பவுல் இங்கே உபயோகப்படுத்துகிறார். சுவிசேஷங்களின் சத்தம் உலகம் முழுவதும் சென்றது. அவர்களுடைய வார்த்தைகள் உலகின் கடைசிவரை பரவிற்று. சுவிசேஷத்தின் மகத்துவமான சத்தியங்களை அவர்களில் சிலர் கேட்காமல் இருந்திருக்கலாம். ஆனால் சுவிசேஷத்தைப்பற்றி எல்லாருமே கேட்டிருக்கிறார்கள். ஏனென்றால் "ராஜ்யத்தினுடைய இந்தச்சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்" (மத் 24:14) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

உயிர்த்த இயேசு தன் அப்போஸ்தலர்களிடம் சொன்னார், "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" (மத் 28:19,20), "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15). பவுல் சொல்லுகிறார்: "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ 1:23).

"அவர்கள் கேள்விப்படவில்லையா" என்று பவுல் 19-வது சங்கீதத்தின் பின்னணியில் கேட்பதாகவும் எடுத்துக்கொள்ளலாம். 1-வது வசனம் சொல்கிறது: "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது, சூரியன் வானங்களின் ஒரு முனையிலிருந்து புறப்பட்டு, அவைகளின் மறுமுனைவரைக்கும் சுற்றியோடுகிறது; அதின் காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை" (வசனம் 6). சூரியன், சந்திரன், நட்சத்திரங்களின் செயல்பாடுகள் ஞானம், நீதி, வல்லமை நிறைந்த சிருஷ்டி கர்த்தர் ஒருவர் உண்டு என்பதை அமைதியான முறையில் அறிவித்துக்கொண்டே இருக்கின்றன.

லீஸ்திரா பட்டணத்திலே பிரசங்கிக்கும் பர்னபாவும் பவுலும்

சொல்வதுபோல்: "சென்ற காலங்களில் அவர் சகல ஜனங்களையும் தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத்தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் நம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" (அப் 14:16,17). தேவனுடைய பலத்த கிரியைகள் தேவனை பூமியின் நான்கு திசைகளிலும் அறிவித்துக் கொண்டே இருக்கின்றன.

இஸ்ரவேலர் அதை அறியவில்லையா என்று கேட்கிறேன், அறிந்தார்கள். முதலாவது மோசே: எனக்கு ஜனங்களல்லாதவர்களைக் கொண்டு நான் உங்களுக்கு எரிச்சல் உண்டாக்குவேன்; புத்தியீனமுள்ள ஜனங்களாலே உங்களுக்குக் கோபமூட்டுவேன் என்றான். (ரோமர் 10:19)

உலகமெங்கிலும் உள்ள புறஜாதியார், எல்லா எதிர்ப்புகள் மத்தியிலும் தேவனுடைய வார்த்தை அறிவிக்கும் சுவிசேஷத்தைக் கேட்பார்கள் என்பதை முந்தின வேதபகுதியில் பவுல் அறிவித்துவிட்டு தன்னுடைய கவனத்தை அதிகாரத்தின் மீதமுள்ள கடைசி நான்கு வசனங்களில் யூதர்களுக்கு நேராகத் திருப்புகிறார்.

இந்த அதிகாரத்தில் பவுல் பொதுவான முறையில் இரட்சிப்பைப் பொறுத்தவரை இஸ்ரவேலின் தற்போதைய நிலை என்ன என்பதை அறிவிக்கிறார் என்பதை துவக்கத்திலேயே பார்த்தோம். கிறிஸ்து ஊழியம் செய்துகொண்டிருக்கும்போதுகூட அது யூதர்களுக்கு மட்டும் அறிவிக்கப்பட்டு வந்தது என்பதை அறிவோம். அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் அது புறஜாதியாருக்குச் சொல்லப்படும் (ரோமர் 15:22-24, பிலிப் 1:12-18, கொலோ 1:6, அப் 2:41,47; 4:4; 17:6) என்பதை யூதர்கள் அறிந்திருந்தார்கள். இது அவர்களுக்கு மோசே மூலமாகவும், ஏசாயா மூலமாகவும் முன்னறிவிக்கப்பட்டிருந்தது என்கிறார் பவுல்.

யூதர்கள் தன்னால் புறக்கணிக்கப்படுவார்கள் என்பதை மோசே மூலமாக தேவன் இவ்வாறு அறிவிக்கிறார்: "என் முகத்தை அவர்களுக்கு (இஸ்ரவேலருக்கு) மறைப்பேன்; அவர்களுடைய முடிவு எப்படியிருக்கும் என்று பார்ப்பேன்; அவர்கள் மகாமாறுபாடுள்ள சந்ததி; உண்மையில்லாத பிள்ளைகள், தெய்வம் அல்லாதவைகளினால் எனக்கு எரிச்சலைமூட்டி, தங்கள் மாயைகளினால் என்னைக் கோபப்படுத்தினார்கள்; ஆகையால் மதிக்கப்படாத ஜனங்களினால் (புறஜாதியாரால்) அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்"

(உபா 32:20,21). யூதர்கள் தன்னைப் புறக்கணித்து விக்கிரகங்களைத் தெரிந்துகொண்டதனால் எரிச்சலடைந்த தேவன், இஸ்ரவேலரைப் புறக்கணித்து புறஜாதியாரைத் தெரிந்துகொள்கிறார். அதனால் அவர்கள் எரிச்சலடைகிறார்கள்.

இஸ்ரவேலின் துன்மார்க்கத்தினிமித்தம் தேவன் செய்யவிருக்கும் நான்கு காரியங்கள் இங்கே சொல்லப்படுகின்றன. அவர் சொல்லுகிறார்:

1. என் முகத்தை இஸ்ரவேலருக்கு மறைப்பேன்
2. அதன் விளைவாக அவர்களுக்கு என்ன நடக்கும் என்பதைப் பார்ப்பேன்
3. புறஜாதியாரை ஆசீர்வதித்து இஸ்ரவேலரை எரிச்சலடையவும் பொறாமைப்படவும் செய்வேன்
4. மூடஜனங்களாயிருந்த புறஜாதியாரால் அவர்களைக் கோபப்படுத்துவேன்.

சுவிசேஷ அழைப்பு யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டு புறஜாதியாருக்கு வழங்கப்படும் என்பதை ஏசாயா 26:2 மறைமுகமாக அறிவிக்கிறது. "சத்தியத்தைக் கைக்கொண்டு வருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்". ஓசியா 2:23ல் தேவன் எல்லாரும் புரிந்துகொள்ளும்படியாகச் சொல்லுகிறார்: "இரக்கம் பெறாதிருந்தவர்களுக்கு (புறஜாதியாருக்கு) இரங்குவேன்; என் ஜனமல்லாதிருந்தவர்களை நோக்கி நீ என் ஜனமென்று சொல்லுவேன்; அவர்கள் என் தேவனே என்பார்கள்".

இஸ்ரவேலர் தேவனை நேசிப்பதில்லை என்பதினால் தான் புறஜாதியாரை நேசிக்கவிருப்பதாக தேவன் முன்னறிவிக்கிறார். இந்த தீர்க்கதரிசன வார்த்தைகள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை புறஜாதியார் ஏற்றுக்கொள்ளும்போது நிறைவேறுகிறது. அதே நேரத்தில் புறஜாதியாரையும் தேவன் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் அழைக்கவில்லை என்பதையும் இந்த வசனங்கள் தெளிவுபடுத்துகின்றன. ஏனென்றால் புறஜாதியார் எல்லோருமே

1. தேவனால் மதிக்கப்படாதவர்கள்
2. மதிகெட்டவர்கள்
3. இரக்கம் பெறாதவர்கள்
4. தேவனுடைய ஜனமாக இல்லாதவர்கள்

5. தேவனைத் தேடாதவர்கள் (வசனம் 20)

6. தேவனை விசாரித்துக் கேளாதவர்கள் (வசனம் 20)

தேவன் இவ்வளவுதூரம் மனம் மாறி இஸ்ரவேலரைப் புறக்கணித்து, புறஜாதியாரைத் தெரிந்துகொள்வாரா என்பது குறித்து ஆச்சரியப்படவேண்டியதில்லை. தாவீது சொல்கிறார்: "தயவுள்ளவனுக்கு நீர் தயவுள்ளவராகவும், உத்தமனுக்கு நீர் உத்தமராகவும், புனிதனுக்கு நீர் புனிதராகவும், மாறுபாடானவனுக்கு நீர் மாறுபடுகிறவராகவும் தோன்றுவீர்" (2 சாமு 22:26,27; சங் 18:25,26).

யூதர்கள் தேவனால் புறக்கணிக்கப்பட்டு, புறஜாதியார் அவர்கள் இடத்தில் நிலைநிறுத்தப்படுவதைக்குறித்து பேசும் இந்த வசனம் மத் 21:33-43; லூக்கா 20:9-16; மாற்கு 12:1-9ல் இயேசு சொல்லும் உவமையை நினைவுபடுத்துகிறது. திராட்சத்தோட்டத்து எஜமான் தன் தோட்டத்தை குத்தகையாகவிட்டு வெளியூரில் இருக்கிறான். கனிகள் வெளிப்படும்போது விளைச்சலில் எஜமானனின் பங்கைத்தர குத்தகைக்காரன் மறுக்கிறான். அதைக் கேட்டு வந்த எஜமானின் வேலையாட்களையும், எஜமானின் மகனையும் கொலை செய்துபோடுகிறார்கள். எனவே எஜமான் நேரடியாக வந்து அந்த கொடிய மனிதனைக் கொன்று அறுவடை நாட்களில் தனக்கு வரவேண்டிய பங்கை ஒழுங்காகக் கொடுக்கும் விவசாயிகளுக்குக் குத்தகைக்கு கொடுக்கிறான்.

இந்த உவமையின் முடிவில் கிறிஸ்து வெளிப்படையாகச் சொல்கிறார்: "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 21:43). கிறிஸ்துவின் எச்சரிப்பு இன்று சபையாராக நமக்கு எதிராகவும் வரக்கூடும். **நாம் கனிகள் தருகிற ஜனங்களாக இருக்கிறோமா என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். கனிதருகிறவர்கள் மட்டுமே தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமுடியும்.**

அல்லாமலும் ஏசாயா: என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன், என்னை விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானேன் என்று தைரியங்கொண்டு சொல்லுகிறான். (ரோமர் 10:20)

தேவனுடைய தெரிந்துகொள்ளுதலும், அழைப்பும் கிருபை வரங்களும் இஸ்ரவேலரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு புறஜாதியாருக்கு வழங்கப்படுவதைக் குறித்த முன்னறிவிப்பு இங்கு சொல்லப்படுகிறது. ஏசாயா 65:1ல் தேவன் சொல்லுகிறார்: "என்னைக்குறித்து

விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்; என்னுடைய நாமம் விளங்காதிருந்த ஜாதியை நோக்கி: இதோ இங்கே இருக்கிறேன் என்றேன்."

"தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்" (மத் 7:7) என்பதுதான் தேவன் மனிதர்களுக்குக் கொடுத்த நியமம். தேவன் இந்த நியமத்துக்குட்பட்டவரல்ல. என்னைத் தேடாதவர்கள் என்னைக் கண்டுகொண்டார்கள் என்கிறார். புறஜாதியார் அவரைத் தேடாத நிலையிலும் தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்த அவர் சித்தங்கொண்டார். நீதியைத் தேடாத புறஜாதியார் நீதியை அடைந்தார்கள் (ரோமர் 9:30) என்று வாசித்தோம். தன்னைக் குறித்து விசாரித்து கேளாதவர்களுக்கு தன்னை அவர் வெளிப்படுத்த சித்தங்கொண்டார். ஏனென்றால் இதுவரை தேவன் அவர்களுக்குத் தன்னை வெளிப்படுத்தாமலிருந்தார்.

இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாதவர்களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன் என்று அவன் சொல்லியிருக்கிறான். (ரோமர் 10:21)

இஸ்ரவேல் புறக்கணிக்கப்பட்டு புறஜாதியார் தெரிந்துகொள்ளப்பட்டதற்கான காரணம் இங்கே சொல்லப்படுகிறது. முந்தின வசனத்தில் தன்னைத்தேடாத, தன்னைக் குறித்து விசாரித்துக் கேளாமலிருந்த புறஜாதியாருக்கு தேவன் தன்னுடைய கிருபையை வெளிப்படுத்தினார் என்று பார்த்தோம். இந்த வசனத்தில் தான் தேடிய இஸ்ரவேரரைக் குறித்து தேவன் பேசும் ஏசாயா 65:2ல் இருந்து பவுல் பேசுகிறார்: "நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன்" என்கிறார் தேவன். அவர்களின் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மூலமாகவும், தீர்க்கதரிசிகளான ஏசாயா, எசேக்கியா, தானியேல் மூலமாகவும், கடைசியாக தன் குமாரன் மூலமாகவும் தேவன் தன் கரங்களை நீட்டினார். அவருடைய கரங்களிலிருந்து மேலான ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனாலும் அவர் தேடின அந்த ஜனங்களோ அவரைப் புறக்கணிக்கிறார்கள். "அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதயத்தின்படி நடந்தார்கள்" (எரே 11:8). "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11) என்று வாசிக்கிறோம்.

இஸ்ரவேலரைக் குறித்த இரண்டு காரியங்கள் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன.

1. இஸ்ரவேலர்கள் கீழ்ப்படியாதவர்கள்
2. இஸ்ரவேலர் எதிர்த்துப் பேசுகிறவர்கள்

பழைய ஏற்பாடு முழுவதிலும் இஸ்ரவேலின் முரட்டாட்டம் குறித்து தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளின் மூலமாய் எச்சரிப்பதைப் பார்க்கமுடியும். "இவர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள்" (யாத் 32:9) என்கிறார் தேவன். உபாகமம் 31:27, 1 சாமு 8:19, 2 நாளா 24:19, எரே 32:33; 44:16,17 வாசித்துப்பாருங்கள்.

"நாள் முழுவதும் என் கைகளை நீட்டினேன்" என்ற அறிவிப்பு தேவனுடைய நீடிய பொறுமையையும் இரக்கத்தையும் காட்டுகிறது. அவர்களை மீண்டுமாக ஏற்றுக்கொள்ளவும், அவர்களுக்கு இரட்சிப்பை அருளிச்செய்யவும் அவர் ஆயத்தமாய் இருக்கிறார். "கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின்கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" (மத் 23:37) என்று வேதனையோடு கிறிஸ்து பேசியதை இந்த வசனம் நினைவுபடுத்துகிறது. தன்னுடைய இரண்டு கைகளையும் விரித்தவாறு அவர் சிலுவை மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவேளையிலும் இஸ்ரவேலின் ஆசாரியரும் வேதபாரகரும், மூப்பரும், பொதுஜனங்களும் அவரைக் கேலிசெய்து தூஷித்தார்கள் என்று பார்க்கிறோம் (மத் 27:39-42). தன்னைவிட்டுப் பிரிந்துசென்ற தன் குழந்தையை ஏற்றுக்கொள்ளும் ஆயத்தத்தோடு தன் கைகளை விரித்துக் காத்துக்கொண்டிருக்கும் தாயைப்போல தேவன் இருக்கிறார்.

"பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும்" (உபா 26:8) எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலை விடுவித்த தேவன் சொல்கிறார்: "நலமல்லாத வழியிலே தங்கள் நினைவுகளின்படி நடக்கிற முரட்டாட்டமான ஜனத்தண்டைக்கு நாள்முழுதும் என் கைகளை நீட்டினேன்" (ஏசாயா 65:2). நீதிமொழிகள் 1:24ல், "நான் கூப்பிட்டும், நீங்கள் கேட்கமாட்டோம் என்கிறீர்கள்; நான் என் கையை நீட்டியும் கவனிக்கிறவன் ஒருவனும் இல்லை".

தனக்குக் கீழ்ப்படியாதவன், தன்னை எதிர்த்துப்பேசும் ஜனங்களை அணைத்துக்கொள்ளவேண்டும் என்பதற்காக தேவன் தன் கைகளை நீட்டிக்கொண்டிருந்தார் என்பது உண்மைதான். ஆனால் தன்னுடைய நீடிய

பொறுமையில் என்றென்றும் நிலைத்திருப்பாரா? நீதி 29:1 சொல்கிறது, "அடிக்கடி கடிந்துகொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடிதியில் நாசமடைவான்". கானானுக்குள் அழைத்துச் செல்லவேண்டும் என்றுதான் தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்தார். ஆனால் நடந்தது என்ன? "நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி, என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்" (சங் 95:10,11; எபி 3:10,11).

பத்தாவது அதிகாரத்தின் முடிவில் எழுப்பப்படும் கேள்வி இதுதான். தேவன் தான் தெரிந்துகொண்ட இஸ்ரவேலரை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டாரா? இல்லை என்கிறார் பவுல். அவர் தன்னுடைய ஜனங்களோடு செய்துகொண்ட ஒவ்வொரு உடன்படிக்கையையும், அவர்களுக்குக் கொடுத்த ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும், அவர்களோடு பேசிய ஒவ்வொரு வார்த்தையையும் நிச்சயமாக கனம் பண்ணுவார். ஆமோஸ் 9:11,12ல் தேவன் சொல்லிய வார்த்தையை அப் 15:17ல் பேதுரு நினைவுபடுத்துகிறார்: "ஏதோமில் மீதியானவர்களையும், என் நாமம் விளங்கிய சகல ஜாதிகளையும் வசமாக்கிக்கொள்ளும்படிக்கு, அந்நாளிலே விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போனதைச் சீர்ப்படுத்தி, பூர்வநாட்களில் இருந்ததுபோல, அதை ஸ்தாபிப்பேன்". ஆயிர வருட ஆட்சியின்போது உலகம் முழுவதும் தாவீதின் ஆளுகைக்குட்பட்டிருக்கும். ஆசிரியரின் "வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை" புத்தகத்தில் இதன் விளக்கத்தைக் காணலாம்.

சபையின் நாட்களில் இஸ்ரவேல் புறக்கணிக்கப்பட்டதுபோலக் காணப்பட்டாலும், கிறிஸ்துவின் இரகசிய வருகையில் சபை எடுத்துக்கொள்ளப்பட்டபின், நாள் ஒன்றுவரும். அப்பொழுது "இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார்" (ரோமர் 11:26) என்கிறார் பவுல்.

11

இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள்

இஸ்ரவேலின் தெரிந்துகொள்ளுதலைக் குறித்து 9-வது அதிகாரத்திலும், அது ஏன் புறக்கணிக்கப்பட்டது என்பதைக் குறித்து 10-வது அதிகாரத்திலும் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அதைத் தொடர்ந்து 11-வது அதிகாரத்தில், வரும் நாட்களில் இஸ்ரவேல் பெறவிருக்கும் மகிமையான இரட்சிப்பைக் குறித்து பவுல் பேசுகிறார். இந்த அதிகாரத்தை கீழ்க்கண்ட விதமாக பிரித்துத் தியானிக்க தேவன் உதவிசெய்வாராக.

1. புறக்கணிக்கப்பட்டவர்கள்போல் காணப்படும் இஸ்ரவேலருக்குள் தேவன் ஆவிக்குரிய இஸ்ரவேலரை தெரிந்துகொள்கிறார் (வசனம் 1-10)
2. புறஜாதியாரின் நிறைவுக்குப்பின் இஸ்ரவேலின் எதிர்கால தெரிந்துகொள்ளுதல் மகிமையானதாக இருக்கும் (வசனம் 11-24)
3. இதன் விளைவாக இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (வசனம் 25-32).

இஸ்ரவேலைத் தெரிந்துகொண்ட தேவன் இப்போது அவர்களைத் தூரமாகத் தள்ளிவிட்டாரா என்ற கேள்வியுடன் இந்த அதிகாரம் ஆரம்பமாகிறது. இல்லை என்கிறார் பவுல். இஸ்ரவேல் வீழ்ச்சி அடைந்தது உண்மைதான். ஆனால் மீண்டும் எழும்பமுடியாதபடி அது விழவில்லை என்கிறார். கிருபையின் அடிப்படையில் தெரிந்துகொள்ளப்பட்ட அவர்கள் தங்கள் மாம்சபலத்தினால் தேவனுக்கேற்ற நீதிமான்களாக ஆக முயற்சிசெய்தபடியால்

தற்காலிகமாகப் புறக்கணிக்கப்பட்டது உண்மையே. ஆனாலும் அவர்களுக்குள் மீதியானவர்களை தேவன் ஆவிக்குரிய இஸ்ரவேலராகத் தெரிந்துகொண்டிருக்கிறார் என்கிறார் பவுல். இவ்வாறு தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் தானும் ஒருவன் என்று பெருமையோடு அறிவிக்கிறார்.

அதே நேரத்தில் தங்கள் இரட்சிப்பை இஸ்ரவேலர் தற்காலிகமாக இழக்கவேண்டியதிருக்கும் என்பது தேவனால் முன்னறிவிக்கப்பட்ட காரியம் என்பதை பவுல் சபைக்கு அறிவிக்கிறார். புறஜாதியாரைத் தன்னுடைய மந்தையில் சேர்த்துக் கொள்ளும் படியாகவே இஸ்ரவேலின் ஒரு பகுதியினருக்கு கடின இருதயம் உண்டாயிற்று. எனவே புறஜாதியார் தாங்கள் பெற்றுக்கொண்ட கிருபைகளினிமித்தம் மனமேட்டிமை அடையாதபடி எச்சரிக்கையாயிருக்கும்படி ஆலோசனை தருகிறார். இந்த ஆலோசனையை அசட்டை செய்தால் தேவனுடைய திருச்சபைக்கு, அதாவது நமக்கு மிகப்பெரிய ஆபத்து காத்திருக்கிறது.

புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரையே இஸ்ரவேலர் புறக்கணிக்கப்பட்ட நிலையில் இருப்பார்கள் என்றும், அதற்குப்பின் இஸ்ரவேலர் அனைவரும் முன்புபோல் ஒரு தேசம் என்ற முறையில் தேவனுடைய ஜனங்கள் என்ற அங்கீகரிப்பை பெற்றுக்கொள்வார்கள் என்ற நிச்சயத்தோடு பவுல் பேசுகிறார். இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு தேவன் செய்து கொண்டிருந்த உடன்படிக்கையை அவர் ரத்து செய்யவில்லை, தள்ளிப்போட்டிருக்கிறார் என்கிறார்.

இந்த அதிகாரம் நமக்கு அறிவிக்கும் நான்கு சத்தியங்கள்,

1. தேவன் இஸ்ரவேலரை முழுமையாக ஒருபோதும் தள்ளவில்லை (வசனம் 1)
2. புறஜாதியாரின் இரட்சிப்பு இஸ்ரவேலரில் பொறாமையையும் தேவனைக்குறித்த வைராக்கியத்தையும் எழுப்பும், எனவே இஸ்ரவேலின் புறக்கணிப்பு தற்காலிகமானது (வசனம் 11,13)
3. புறஜாதியைச் சேர்ந்த திருச்சபை தங்கள் இரட்சிப்பைக் குறித்து பெருமை பாராட்டுவார்களானால் அவர்களாலும் தப்பித்துக் கொள்ளமுடியாது (வசனம் 21)
4. தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் தேவனாலும், தேவனுக்கென்றும் தொடர்ச்சியாக இயங்கி

வருகிறது. அதை யாரும் தடைசெய்யமுடியாது, அது செயல்படும் விதத்தை யாரும் விளங்கிக்கொள்ளவும் முடியாது (வசனம் 36).

தேவன் இஸ்ரவேலரை முழுமையாகத் தள்ளிவிடவில்லை (வசனம் 1-10)

இப்படியிருக்க, தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிட்டாரோ என்று கேட்கிறேன், தள்ளிவிடவில்லையே; நானும் ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீன் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலன். (ரோமர் 11:1)

முந்தின அதிகாரத்தின் கடைசி வசனத்தில் தேவன் தனக்குக் கீழ்ப்படியாத, தன்னை எதிர்த்துப் பேசுகிற இஸ்ரவேல் ஜனங்களுக்கு நேராக நாள்முழுவதும் தன் கைகளை நீட்டிக்கொண்டிருந்தார் என்பதைப் பார்த்தோம். இதன் விளைவாக தேவன் அவர்களைப் புறக்கணித்து, தூரமாகத் தள்ளிவிட்டாரா என்ற கேள்வி எழும்புகிறது. சுவிசேஷத்தினால் உண்டாகும் ஆசீர்வாதங்களை அவர்கள் இழந்துவிடுவார்களா என்று யாரும் அஞ்சத்தேவையில்லை, தேவன் அவர்களைத் தள்ளிவிடவில்லை என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்.

இஸ்ரவேலைக்குறித்து தேவன் நிபந்தனையற்ற முறையில் சொன்ன ஒரு சில வார்த்தைகளை இந்த இடத்தில் நினைவுகூறலாம்.

1. "இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன்" (யாத் 4:22)
2. "உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக்கொண்டு, உங்களுக்குத் தேவனாயிருப்பேன்" (யாத் 6:7)
3. "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத் 19:6)
4. "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்" (உபா 14:2)
5. "எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய்" (உபா 26:18)
6. "நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும் கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன்" (உபா 26:19)

7. "உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்" (உபா 28:1)

8. "கர்த்தர் உன்னை வாலாக்காமல் தலையாக்குவார், நீ கீழாகாமல் மேலாவாய்" (உபா 28:14)

9. "இஸ்ரவேலே, நீ பாக்கியவான், கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்" (உபா 33:29).

10. "கர்த்தர் யாக்கோபைத் தமக்காகவும், இஸ்ரவேலைத் தமக்குச் சொந்தமாகவும் தெரிந்து கொண்டார்" (சங் 135:4)

11. "உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்" (ஏசாயா 43:1)

12. "இஸ்ரவேல் இளைஞனாயிருக்கும்போது நான் அவனை நேசித்தேன்" (ஓசியா 11:1)

இவ்வாறு பல மேன்மையான காரியங்கள் இஸ்ரவேலைப்பற்றி வேதவசனங்களில் சொல்லப்பட்டிருக்க, அவர்கள் எவ்வாறு தேவனால் புறக்கணிக்கப்படமுடியும் என்பதுதான் பவுலின் கேள்வி. சாமுவேல் சொல்கிற காரியமும் இதுதான். "கர்த்தர் உங்களைத் தமக்கு ஜனமாக்கிக் கொள்ளப் பிரியமானபடியினால், கர்த்தர் தம்முடைய மகத்துவமான நாமத்தினிமித்தம், தமது ஜனத்தைக் கைவிடமாட்டார்" (1 சாமு 12:22). சங்கீதக்காரர் சொல்கிறார்: "கர்த்தர் தம்முடைய ஜனத்தை நெகிழவிடாமலும், தம்முடைய சுதந்தரத்தைக் கைவிடாமலும் இருப்பார்" (சங் 94:14). எரேமியா மூலமாக கர்த்தர் சொல்கிறார்: "மேலே இருக்கிற வானங்கள் அளக்கப்படவும், கீழே இருக்கிற பூமியின் அஸ்திபாரங்கள் ஆராயப்படவும் கூடுமானால், நான் இஸ்ரவேல் வம்சத்தார் அனைவரையும் அவர்கள் செய்த எல்லாவற்றினிமித்தமும் வெறுத்துவிடுவேன்" (31:37). நெகே 9:26-30, ஏசாயா 54:1-8, 13-17 வாசித்துப்பாருங்கள்.

தேவன் இஸ்ரவேலை பலவேளைகளில் கடுமையாகத் தண்டித்தார். அவர்களுக்கு விரோதமாக பலத்த ஜாதிகளை அனுப்பி, அவர்களை முறியடித்தார். இஸ்ரவேல் தேசம் எதிரிகளால் நாசமாக்கப்பட்டது. எருசலேம் நிர்மூலமாக்கப்பட்டது. லட்சக்கணக்கான யூதர்கள் சிறைப்பிடிக்கப்பட்டு அடிமைகளாக்கப்பட்டார்கள். ஆனாலும் அவர்கள் ஒருபோதும் தேவனால் முற்றிலுமாக கைவிடப்படவில்லை என்பதே உண்மை. இந்த அதிகாரத்தின் மையக்கருத்து அதுதான்.

மூன்று வகையில் தேவன் இஸ்ரவேலை தள்ளிவிடவில்லை என்று பவுல் இந்த வேதபகுதியில் அறிவிக்கிறார்.

1. தனிப்பட்ட சில இஸ்ரவேலரை தேவன் தள்ளவில்லை (உதாரணம் : பவுல் - வசனம் 1)

2. கூட்டமாக சில இஸ்ரவேலரை தேவன் தள்ளவில்லை (உதாரணம் : பாகாலை ஏற்றுக்கொள்ளாத ஏழாயிரம் பேர் - வசனம் 2-10)

3. கடைசி நாட்களில் இஸ்ரவேலர் ஒரு தேசம் என்ற முறையில் முற்றிலுமாக முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் (வசனம் 11-33).

இஸ்ரவேல் தேவனால் புறக்கணிக்கப்படாது என்பதை நிரூபிக்கும் ஜீவனுள்ள சாட்சி அப்போஸ்தலனாகிய பவுல். அவர் ஆபிரகாமின் குடும்பத்தைச் சேர்ந்தவர். பென்யமீன் கோத்திரத்தில் பிறந்தவர். பென்யமீனைக் குறித்து மோசே சொல்கிறார்: "கர்த்தருக்குப் பிரியமானவன், அவரோடே சுகமாய்த் தங்கியிருப்பான்; அவனை எந்நாளும் அவர் காப்பாற்றி, அவன் எல்லைக்குள்ளே வாசமாயிருப்பார்" (உபா 33:12). பென்யமீன் யாக்கோபுக்கு மிகவும் பிரியமான மனைவியான ராகேலின் கடைசி மகன் என்பதுமட்டுமல்ல, வாக்குப்பண்ணப்பட்ட கானான் தேசத்தில் பிறந்த ஒரே குமாரன். தன்னைக்குறித்து பவுல் சொல்கிறார்: "நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான்; எபிரெயரில் பிறந்த எபிரெயன்; நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்; பக்தி வைராக்கியத்தின்படி சபையைத் துன்பப்படுத்தினவன்" (பிலிப் 3:5,6).

தன்னுடைய பக்திவைராக்கியத்தினால் சபையைத் துன்பப்படுத்திய ஒரு பாரம்பரியமிக்க யூதனை தேவன் புறக்கணிக்காமல், புறஜாதியார் மத்தியில் திருச்சபைகளை ஸ்தாபிக்கும் மகிமையான ஊழியத்துக்கென்று தெரிந்துகொண்டிருக்கும்போது, எந்த விதத்தில் தேவன் யூதர்களை தள்ளிவிட்டதாகச் சொல்லமுடியும் என்பதுதான் அப்போஸ்தலனாகிய பவுலின் வாதம். யூதர்களைதேவன் தள்ளிவிட்டிருப்பாரானால், பவுலையும் தேவன் தள்ளிவிட்டிருக்கவேண்டுமே !

தேவன் தாம் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை. எலியாவைக் குறித்துச் சொல்லிய இடத்தில், வேதம் சொல்லுகிறதை அறியீர்களா? அவன் தேவனை நோக்கி: (ரோமர் 11:2)

தனிப்பட்ட நபர் என்ற முறையில் தேவன் தன்னை எவ்வாறு தள்ளிவிடவில்லையோ, அதே விதத்தில் அவர் இஸ்ரவேலின் மிகப்பெரிய பின்மார்க்கமான நாட்களில் ஏழாயிரம் பேரைத் தனக்கென்று தெரிந்துகொண்டு, அவர்களை அழிவுக்கோ, பின்மாற்றத்துக்கோ ஒப்புக்கொடாமல் பாதுகாத்தார் என்பதை 2,3 ஆகிய இரண்டு வசனங்களில் பவுல் அறிவிக்கிறார். முதலாவது வசனத்தில் தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை என்று அறிவித்த பவுல், இந்த வசனத்தில் தாம் முன்னறிந்துகொண்ட தம் ஜனங்களைக் கைவிடவில்லை என்கிறார். அவர்கள் பிறப்பதற்கு முன்பே அவர்களை தம் மக்களாக தேர்ந்தெடுக்கிறார் என்பதையும் அவர்கள் தூரத்தள்ளப்படுவதில்லை என்பதையும் இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

"தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" என்று ரோமர் 8:29ல் வாசித்தோம். இஸ்ரவேல் தேசத்தார் அத்தனை பேரையும் தேவன் புறக்கணித்ததுபோல் காணப்பட்டாலும் அவர்களில் சிலரை நித்தியத்திலேயே தேவன் தனக்கென்று தெரிந்து கொண்டிருக்கிறார். அவருடைய தெரிந்துகொள்ளுதல் அவருடைய முன்னறிவையும், அவருடைய மாற்றமுடியாத, மாற்றப்படக்கூடாத தீர்மானத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இவர்கள் தேவனால் அறியப்பட்டவர்கள் (கலா 4:9) என்பதினால் மகாபெரிய உபத்திரவ நாட்களிலும் அவர்கள் தள்ளப்படப்போவதில்லை (மத் 24:22), தேவனே அவர்களை இரட்சிப்பில் நிலைத்திருக்கச் செய்கிறார்.

தன்னுடைய வாதத்தை நிரூபிக்க எலியாவின் காலத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சியை பவுல் தன்னுடைய வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறார். 1 இராஜா 18-19வது அதிகாரங்களை படியுங்கள். பாகாலை வழிபட்ட ஆகாபும் யேசபேலும் தேவனுடைய தீர்க்கதரிசிகளை உபத்திரவப்படுத்துகிறார்கள். அவர்களைக் கொலை செய்த நிகழ்ச்சிகளும் சொல்லப்படுகின்றன. இதன் விளைவாக எலியா திகிலடைந்து தேவனை நோக்கி விண்ணப்பிக்க ஆரம்பிக்கிறார்.

கர்த்தாவே, உம்முடைய தீர்க்கதரிசிகளை அவர்கள் கொலைசெய்து, உம்முடைய பலிபீடங்களை இடித்துப்போட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்களே என்று இஸ்ரவேலருக்கு விரோதமாய் விண்ணப்பம் பண்ணினபோது (ரோமர் 11:3)

"கருத்தாய் ஜெபம்பண்ணுகிறவர்" என்ற சாட்சியைப் பெற்றிருந்த

எலியா (யாக் 5:17) இந்த இடத்தில் தன் சாட்சியை இழந்து இஸ்ரவேலருக்கு விரோதமாக ஜெபம் பண்ணுவதாக பவுல் குறிப்பிடுகிறார். மோசேயைப்போல் (யாத் 32:32) தேவனுடைய பிள்ளைகளுக்காக பரிந்துபேசி ஜெபிக்கவேண்டிய ஒரு தேவமனிதன் அவர்களுக்கு எதிராக ஜெபிக்கிறார் (1 இராஜா 19). **தேவனால் வல்லமையாக பயன்படுத்தப்படும் தேவ ஊழியர்களும் தவறு செய்யக்கூடும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அவர்களும் மனிதர்கள் தானே.**

யேசபேல் தன்னைக் கொலைசெய்யத் தேடுகிறாள் என்பதை அறிந்த எலியா ஒரு வனாந்தரத்துக்குள் தப்பி ஓடி ஒரு சூரைச்செடியின் கீழ் இருந்தவாறு தான் சாகவேண்டும் என்று விண்ணப்பிக்கிறார். தேவதூதன் ஒருவன் அவருக்குப் போஜனம் கொடுத்து ஓரேப் பர்வதத்துக்குப் போகும்படிச் செய்கிறார்; அங்கே தேவன் "எலியாவே, இங்கே உனக்கு என்ன காரியம்" என்று கேட்கும்போது அவர் இவ்விதமாக பதில்சொல்கிறார்: "சேனைகளின் தேவனாகிய கர்த்தருக்காக வெகுபக்தி வைராக்கியமாயிருந்தேன்; இஸ்ரவேல் புத்திரர் உமது உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள்; உம்முடைய பலிபீடங்களை இடித்து, உம்முடைய தீர்க்கதரிசிகளைப் பட்டயத்தினால் கொன்றுபோட்டார்கள்; நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்; என் பிராணனையும் வாங்கத்தேடுகிறார்கள்" (1 இராஜா 19:9,10).

இஸ்ரவேல் புத்திரர் தேவனுடைய உடன்படிக்கையைத் தள்ளிவிட்டார்கள் என்பதுதான் அவர்களுக்கு எதிரான எலியாவின் குற்றச்சாட்டு. அதினிமித்தமாகத்தான் எலியா தான் கெபிக்குள் மறைந்திருப்பதாக சாக்குப்போக்கு சொல்கிறார். மெய்யான தீர்க்கதரிசிகள் கொலைசெய்யப்பட்டார்கள், பலிபீடங்கள் உடைத்துப்போடப்பட்டன என்கிறார். இவைகளின் மத்தியிலும் தான் ஒருவன் தேவனுக்கென்று மீதியாயிருந்து, தேவனுக்கு ஊழியம் செய்வதை சற்று பெருமையோடு அவர் சுட்டிக்காட்டுவதுபோல் தெரிகிறது. அந்த உபத்திரவ நாட்களிலும் ஒபதியா என்ற தீர்க்கதரிசி நூறு தீர்க்கதரிசிகளை கெபிகளில் மறைத்து வைத்து அவர்களைப் பாதுகாத்து வைத்திருந்தார் என்பதை (1 இராஜா 18:4) அவர் முற்றிலுமாக மறந்துவிட்டாரே.

அவனுக்கு உண்டான தேவ உத்தரவு என்ன? பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம் பேரை எனக்காக மீதியாக வைத்தேன் என்பதே. (ரோமர் 11:4)

தன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகவே எலியா விண்ணப்பம் பண்ணுகிறார். தவறான விண்ணப்பமாக இருந்தாலும்

தேவனிடமிருந்து உடனடியாக பதில் வருகிறது. தேவன் சொல்கிறார்: "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம்பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" (1 இராஜா 19:18). நான் ஒருவன்தான் பக்தி வைராக்கியத்தோடு விக்கிரக வழிபாடுகளில் ஈடுபடாதவன் என்று எலியா சொல்வதை தேவன் நிராகரித்து, எலியா அறியாத ஏழாயிரம் பேரை தனக்கென்று மீதியாக வைத்திருப்பதாக சொல்கிறார்.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளும் காரியம் இதுதான். இன்று நாம் விக்கிரக ஆராதனைக்காரர்களாகவோ, பெயர் கிறிஸ்தவர்களாகவோ, துன்மார்க்கர்களாகவோ இராமல் மெய்தேவனைக் குறித்த அறிவை உடையவர்களாக இருக்கிறோம் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. தேவன் நம்மைத் தெரிந்துகொண்டு, தனக்கென்று மீதியாக வைத்திருக்கிறார் என்பதுதான் காரணம். மற்றபடி அது நம்முடைய ஞானத்தையோ, மன உறுதியையோ, தைரியத்தையோ காட்டவில்லை. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலினிமித்தம் முற்றிலுமாக தேவனுடைய பாதுகாப்புக்குள் இருக்கிறோம். **தேவனுடைய பாதுகாப்புக்குள் இருப்பவர்கள் உண்மையான பாதுகாப்புக்குள் இருக்கிறார்கள். எனவே அவர்கள் தங்களுடைய இரட்சிப்பில் நிலைத்திருப்பது உறுதி.**

இவ்வாறு தேவன் தனக்கென்று சிலரை மீதியாக வைத்திராவிட்டால் முழு இஸ்ரவேலுமே அழிக்கப்பட வேண்டியதிருக்கும். அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை நாட்களிலும் தன்னுடைய ஊழியக்காரர்களாக இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் இஸ்ரவேலர்களை தேவன் தனக்கென்று முத்திரைபோட்டு தெரிந்துகொள்வார் என்று பார்க்கிறோம் (வெளி 7:4) இவர்கள் ஒவ்வொருவரும் பவுலைப்போல் வைராக்கியத்தோடு ஊழியம் செய்வதினால் கடைசி நாட்களில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாகியிருக்கும்.

தேவன் ஒருவருக்கு முன்பாக மட்டுமே நாம் முழங்கால்படியிடவேண்டும் (பிலிப் 2:10, எபே 3:15). பாகால் என்பது கானானியர்களின் தேவர்களில் ஒன்று. எபிரெய மொழியில் இந்த வார்த்தை எஜமான் என்று பொருள்படும். ஒரு காளைமாட்டுத் தலையுடன் காணப்படும் இந்த விக்கிரகத்தை பின்மார்க்கமடைந்த இஸ்ரவேலரும் அசிரியரும், பாபிலோனியரும் பிந்தின நாட்களில் வழிபட்டார்கள். பாகால் வழிபாட்டைக் குறித்து நியா 2:11; 8:33; 1 இராஜா 16:32; 18:19; 19:18, 2 இராஜா 10:18,28; 21:3, 2 நாளா 24:7, எரே 2:8; 7:9, ஓசியா 2:8 ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படிப்போல இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது. (ரோமர் 11:5)

எலியாவின் காலத்தில் தேவன் தனக்கென்று ஏழாயிரம்பேரை மீதியாக வைத்திருந்ததுபோல் இக்காலத்திலும் (ஆதி அப்போஸ்தலர்கள் காலத்திலும்) கிருபையினால் உண்டாகும் தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் தேவன் ஒரு பங்கு ஜனங்களை இஸ்ரவேல் கோத்திரத்திலிருந்தும் வைத்திருக்கிறார் என்கிறார் பவுல். எனவே பவுல் மட்டுமல்ல, இன்னும் ஆயிரக்கணக்கான இஸ்ரவேலரை தேவன் தனக்கென்று வேறுபிரித்து வைத்திருக்கிறார். அவர்கள் தங்களுடைய கிரியைகளின் அடிப்படையிலோ, தகுதியின் அடிப்படையிலோ அல்ல, தேவனுடைய கிருபையின் அடிப்படையிலேயே தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். பெந்தெகொஸ்தே தினத்தன்று மட்டுமே மூவாயிரம் யூதர்கள் தேவனை ஏற்றுக்கொண்டார்கள் என்பதை அறிவோம். எருசலேம் துவங்கி ரோமாபுரிவரை கிறிஸ்து மரணமடைந்து ஐம்பது ஆண்டுகளுக்குள் நூறுக்கும் மேற்பட்ட சபைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன என்றால் அதற்குக் காரணம் தேவனால் தன்னுடைய ஊழியத்துக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர்களே. கிறிஸ்துவின் சுவிசேஷம் முதலில் யூதர்களால்தான் அறிவிக்கப்பட்டது.

ஏசாயா 10:20-22ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "அக்காலத்திலே இஸ்ரவேலில் மீதியானவர்களும், யாக்கோபின் வம்சத்தில் தப்பினவர்களும் பின்னொரு போதும் தங்களை அடித்தவனைச் சார்ந்துகொள்ளாமல், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரையே உண்மையாய்ச் சார்ந்துகொள்வார்கள். மீதியாயிருப்பவர்கள், யாக்கோபில் மீதியாயிருப்பவர்களே, வல்லமையுள்ள தேவனிடத்தில் திரும்புவார்கள். இஸ்ரவேலே, உன் ஜனங்கள் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், அவர்களில் மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் திரும்புவார்கள்". யோவேல் 2:32 சொல்கிறது "கர்த்தர்சொன்னபடி, சீயோன் பர்வதத்திலும், கர்த்தர் வரவழைக்கும் மீதியாயிருப்பவர்களிடத்திலும் இரட்சிப்பு உண்டாயிருக்கும்" மீதியானவர்களின் இரட்சிப்பைக் குறித்து பேசும் வசனங்களைத் தியானித்துப் பாருங்கள். (ஏசாயா 1:9; 4:4; 11:11,16; 46:3, எரே 6:9; 23:3; 31:7, ஆமோஸ் 5:15, மீகா 2:12; 7:18, செப் 2:9; 3:13).

"அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர்" (மத் 22:14) என்ற வசனம் மீதியானவர்களைக் குறித்தே பேசுகிறது. ஒரு சிறு மந்தைதான் தேவனால் மீட்டுக்கொள்ளப்படும் (லூக்கா 12:32). நோவா காலத்து

பெருவெள்ளத்திலிருந்து எட்டு பேர்தான் காப்பாற்றப்பட்டார்கள் (1 பேதுரு 3:20), சோதோம் கொமோராவை அழிக்கும்போதும் லோத்துவும் அவருடைய குமாரத்திகள் மட்டுமே பாதுகாக்கப்பட்டார்கள் (ஆதி 19:29, லூக்கா 17:28,29). "சேனைகளின் கர்த்தர் நமக்குக் கொஞ்சம் மீதியை வைக்காதிருந்தாரானால், நாம் சோதோமைப்போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம்" என்கிறார் ஏசாயா (1:9).

இக்காலத்திலேயும் கிருபையினாலே உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஒரு பங்கு மீதியாயிருக்கிறது என்று சொல்லும் நியதி இன்றுவரை பொருத்தமானதாகவே இருக்கிறது. **தாங்கள் மட்டுமே தேவனை நேசிப்பதாகவும், தாங்கள் மட்டுமே அவருக்கு ஊழியம் செய்வதாகவும் எலியாவைப்போல் நினைக்கும் கிறிஸ்தவர்களும், தேவ ஊழியர்களும் இன்றும் இருக்கிறார்கள்.** தன்னை நேசிப்பவர்கள் இன்னார் என்பதை தேவன் அறிவார். அவர்களை அவர் பார்த்துக்கொள்வார். தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின்படி மீதியாயிருக்கும் பங்கில் நாம் இருக்கிறோமா என்பதைக் குறித்து நிச்சயமுடையவர்களாக இருக்கிறோமா? அதுதான் முக்கியம்.

அது கிருபையினாலே உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது; அப்படியல்லவென்றால், கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது; அப்படியல்லவென்றால், கிரியையானது கிரியையல்லவே. (ரோமர் 11:6)

இந்த வசனம் அறிவிக்கும் சத்தியம் இதுதான். எலியா காலத்திலிருந்த ஏழாயிரம் பேரைப்போல், இக்காலத்திலும் (பவுலின் காலமானாலும் சரி, நம்முடைய காலமானாலும் சரி) சிலர் தேவ கிருபையின் செயலாற்றலினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தால், அவர்கள் தங்கள் கிரியைகளை முன்னிட்டு தேர்ந்தெடுக்கப்படவில்லை. தேவன் யாரையும் அவர்களுடைய செய்கைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தாரானால் அது கிருபையாகாது. அது தேவனுடைய ஈவு என்று கருதப்படமுடியாது. தேவன் ஏதோ ஒரு விதத்தில் கடன்பட்டவராய் அதைச் செய்தார் என்று ஆகிவிடும்.

கிருபையும் கிரியையும் இரண்டு எதிர்மறையான தத்துவங்கள் என்பதை மீண்டுமாக பவுல் வலியுறுத்துகிறார். தேவன் மாட்சிமையும், அதிகாரமும் நிறைந்த ஒரு அரசனைப்போல், தன்னுடைய ராஜரீக தீர்மானத்தின் அடிப்படையில், சுயாதீன விருப்பத்தின்படி அவர்களுடைய எந்தவிதமான தகுதியையும் மனதில்கொள்ளாமல் சிலரைத்

தெரிந்துகொண்டு, அவர்களுக்கு தன்னுடைய கிருபையை வெளிப்படுத்தி இரட்சிக்கிறார். இதுவே கிருபையின் தத்துவம். பெருமையும், மேட்டிமையும் நிறைந்த மனிதனால் இந்த உபதேசத்தை அங்கீகரித்துக்கொள்ள முடிவதில்லை. தன்னுடைய சொந்த முயற்சியினாலும், தீர்மானத்தினாலும் மனபெலத்தினாலும் பல நற்கிரியைகள் செய்தும், காணிக்கை கொடுத்தும் தேவனைத் திருப்திப்படுத்தி அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற தன்னைத் தகுதிப்படுத்திக்கொள்ள அவன் முயற்சி செய்துகொண்டிருக்கிறான். இதுவே கிரியையின் தத்துவம். "நித்திய ஜீவனை அடைவதற்கு நான் என்ன நன்மையைச் செய்யவேண்டும்" (மத் 19:16) என்பதுதான் இஸ்ரவேலரின் மனதில் இருந்த பிரதானமான கேள்வி.

ஜென்மசுபாவமுள்ள மனிதனால், தேவனுடைய அன்பைப்பெற தான் தகுதியற்றவன் என்பதை அறிந்துகொள்ள முடிவதில்லை. அதற்குக் காரணம் அவனுடைய சுயபலத்தின்மேலும், ஞானத்தின்மேலும், நற்கிரியைகளின் மேலும் அவன் கொண்டிருக்கும் நம்பிக்கை. **எல்லா மனிதர்களுமே பாவத்தில் மரித்தவர்களாக இருக்கிறார்கள். மரித்த ஒரு மனிதன் தன்னில் புதிய ஜீவனை உருவாக்க முடியாது. அவன் மறுபடியும் பிறந்து தேவனுடைய ஜீவனை அடைவதைத் தவிர அவனுக்கு வேறு மார்க்கம் கிடையாது.** தேவன் எந்த மனிதனுக்கும், எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த விதத்திலும் கடன்பட்டவரல்ல. மனிதனுடைய ஜெபத்துக்கு பதில் தந்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் அவர் இல்லை. நமக்கு அவர்மேல் எந்த உரிமையும் இல்லை. பாவமனிதன் அவரால் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும் என்பதுதான் தேவநீதி. ஆனால் தேவனோ தன்னுடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இலவச நன்கொடையாக உலகத்துக்கு அனுப்பி, பாவமன்னிப்பை வழங்கியதின் மூலம் தன்னுடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். "தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி 9:15) என்று சொல்வோமா.

"கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல் கடனென்றெண்ணப்படும்" (ரோமர் 4:4) என்ற வசனத்தை ஏற்கனவே தியானித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். "அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகால முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2 தீமோ 1:9). நற்கிரியைகள் நம்மை இரட்சிப்பதில்லை. இரட்சிக்கப்பட்டதினால் நற்கிரியைகளைச் செய்கிறோம். தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற்கு

நாம் நற்கிரியைகளைச் செய்வதில்லை. தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதினால் நற்கிரியைகளைச் செய்கிறோம்.

யூதர்கள் தங்கள் கிரியைகளினால் இரட்சிக்கப்படவில்லை என்பது உண்மையானால், புறஜாதியார்களான நாமும் இன்று கிரியைகளினால் இரட்சிக்கப்படுவதில்லை. பவுல் சொல்கிறார்; "புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" (கலா 2:15,16).

இந்த வசனத்தில் கிருபை என்ற வார்த்தையும் கிரியை என்ற வார்த்தையும் தனித்தனியே நான்குமுறை பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். கிருபையின் மகத்துவமான பின்னணி இதுதான். தேவகோபாக்கினையின் விளைவாக கல்வாரி சிலுவையில் கிறிஸ்து மரித்தபோது அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் அத்தனைபேரையும் கிறிஸ்துவுக்குள் தன்னுடைய கோபாக்கினையினிமித்தம் மரித்ததாக பிதாவாகிய தேவன் பார்க்கிறார். கிறிஸ்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தபோது கிறிஸ்துவுக்குள் அவர்களும் உயிர்த்தெழுந்ததாகப் பார்க்கிறார். இதன் விளைவாக பிதா தன் ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறித்து என்னவெல்லாம் நினைக்கிறாரோ, கிறிஸ்துவுக்குள் அந்த விசுவாசிகளையும் அவ்வாறே நினைக்கிறார். அப்போது என்ன நடக்கிறது? நாம் கிருபைக்குப் பாத்திரராகிறோம். கிரியையினால் உண்டாகக்கூடிய சகல மேன்மைகளும் அவசியமில்லாமல் போகிறது.

மனித இரட்சிப்புக்கு கிருபையும் காரணமாக இருக்கிறது, கிரியையும் காரணமாக இருக்கிறது என்று சொல்லப்படுவது தவறு என்பதை உணர்த்தும்படியாகவே, தான் அறிவித்த சத்தியத்தை இந்த வசனத்தில் இரண்டு பகுதிகளாகப் பிரித்துச் சொல்கிறார். ஒரே சத்தியம் இரண்டு வித்தியாசமான முறைகளில் சொல்லப்படுகிறது.

தன்னுடைய நற்கிரியைகளினிமித்தம் ஏதேனும் ஒரு பிரதிபலனை ஒரு கிறிஸ்தவன் தேவனிடமிருந்து எதிர்பார்ப்பானேயாகில் கிருபையின் உபதேசத்தை அவன் விளங்கிக்கொள்ளவில்லை என்றுதான் பொருள். இப்படிப்பட்டவன்

சர்வவல்லமையுள்ள தேவனை கடனாளியாக்க முயற்சிக்கிறான். "நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" (கலா 5:4) என்கிறார் பவுல். அதாவது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து, அதனால் தேவனுக்கு வேண்டியவராக முயற்சி செய்யும் உங்களுக்கு கிறிஸ்துவோடு உள்ள தொடர்பு அற்றுப்போகும். எச்சரிக்கையாயிருங்கள்.

அப்படியானால் என்ன? இஸ்ரவேலர் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றையத்தினம்வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள். (ரோமர் 11:7)

11-வது அதிகாரத்தின் முதல் ஆறு வசனங்களில் தேவன் தான் முன்னறிந்த ஜனங்களை தள்ளிவிடவில்லை என்பதை நிரூபித்த பவுல், அடுத்த நான்கு வசனங்களில் அவர்களுடைய தற்போதைய நிலை என்ன என்பதை அறிவிக்கிறார்.

இஸ்ரவேலரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி அவர்கள் தேடுகிற ஒரே காரியம் நீதிதான். ஏனென்றால் நீதிமான்கள்தான் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கமுடியும். இஸ்ரவேலர் நீதியைத் தேடவில்லை என்று சொல்லமுடியாது. தேவனுக்கேற்ற நீதிமான்களாகவேண்டும் என்று அவர்கள் முயற்சிசெய்தார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் அவர்கள் தங்கள் முயற்சியில் தோல்வி அடைந்தார்கள். அவர்கள் தோல்விக்குக் காரணம் என்ன என்பது ரோமர் 9:31,32 சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தோம். "நீதிப்பிரமாணத்தைத் தேடின இஸ்ரவேலரோ நீதிப்பிரமாணத்தை அடையவில்லை. என்னத்தினாலென்றால், அவர்கள் விசுவாசத்தினாலே அதைத் தேடாமல், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேடினபடியால் அதை அடையவில்லை; இடறுதற்கான கல்லில் இடறினார்கள்" - கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத நிலையில் ஒருவன் நடப்பிக்கும் நற்கிரியைகள் தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தை (ஏசாயா 64:6).

ரோமர்கள் ஆட்சியையும், அதிகாரத்தையும் தேடினார்கள், அதைப் பெற்றுக்கொண்டார்கள். கிரேக்கர்கள் அறிவையும், ஞானத்தையும் தேடினார்கள், அவர்களும் பெற்றுக்கொண்டார்கள். யூதர்கள் நீதியைத் தேடியது பாராட்டப்படக்கூடிய ஒரு காரியம்தான். ஆனால் நீதி என்பது பரிசுத்தமான தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவரோடு சீர்பொருந்தியிருக்கும் ஒரு உன்னதமான அனுபவம். அதை மனித முயற்சியில் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைத்ததுதான் அவர்கள்

செய்த மிகப்பெரிய தவறு. பவுல் சொன்னபடி அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள் (ரோமர் 10:3).

இஸ்ரவேலர் தேடியும் பெற்றுக்கொள்ளாத தேவநீதியை மிகவும் எளிதான முறையில் தெரிந்துகொள்ளப்பட்ட புறஜாதியார் பெற்றுக்கொண்டுவிட்டார்கள். தேவன் தன்னால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களை நீதிமான்களாக்குகிறார் என்பதை ரோமர் 8:33ல் பார்த்தோம். எபேசியர் 1:4, கொலோ 3:12, 1 தெச 1:3,4 வாசித்துப்பாருங்கள்.

தேவனுடைய தெரிந்துகொள்ளுதலைப்பற்றி பாரம்பரிய சபைகளும் போதிப்பதில்லை, ஆவிக்குரிய சபைகளும் போதிப்பதில்லை. இந்த ஒருவிஷயத்தில் அவர்களில் ஒற்றுமை காணப்படுகிறது. அதற்கு மனுஷ ரீதியான பல காரண காரியங்களை அவர்கள் சொல்வார்கள். ஆனால் இந்த சத்திய உபதேசத்தை பவுல் மறைத்துவைக்க விரும்பவில்லை. அதனால்தான் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் நீதிமான்களாக்கப்பட்டு இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்வதோடு நிறுத்திக்கொள்ளாமல், தெரிந்துகொள்ளப்படாதவர்கள் கடினப்பட்டிருக்கிறார்கள் என்று தைரியமாக அறிவிக்கிறார். அவர்கள் முரடர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் குருடர்களாக்கப்பட்டிருக்கிறார்கள் (The rest were blinded) என்று சில ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்புகள் சொல்கின்றன. தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் நித்திய அழிவிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள் என்று சொல்லும்போது, தெரிந்துகொள்ளப்படாதவர்கள் இந்த அழிவிலிருந்து பாதுகாக்கப்படுவதில்லை என்பதும் புலனாகிறது. உண்மையிலேயே இது கடினமான உபதேசம்தான். அடுத்த வசனம் இன்னும் கடினமானதாக இருக்கிறது. ஆனால் அதை தேவனே சொல்கிறார் என்பதை உணர்ந்து தாழ்மையோடு ஏற்றுக்கொள்ள தேவன் உதவி செய்வாராக.

சிலரைத் தெரிந்துகொண்ட தேவன் வேறு சிலரைக் கடினப்படுத்தியிருக்கிறார். தேவனே இதை நடப்பிக்கிறவர் என்று பார்க்கிறோம் (ஏசாயா 29:10; மத் 13:14,15 மாற்கு 6:52, யோவான் 12:40). சிலர் கடினப்படுத்தப்படுவதை மோசேயும் (உபா 29:4, ரோமர் 11:8) தாவீதும் (சங் 69:22, ரோமர் 11:9-10) அங்கீகரிக்கிறார்கள். பொதுவாக தேவன் யாரைக் கடினப்படுத்துகிறார் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். தேவனிடமிருந்து மேலான சிலாக்கி யங்களையும், மேன்மைகளையும் பெற்றவர்களே கடினப்படுத்தப் படுகிறார்கள். ராஜரீக மேன்மைகளைப் பெற்ற பார்வோன் ஒரு நல்ல உதாரணம். அவனை நிலைநிறுத்தியது தேவனே என்று ரோமர் 9:17ல்

பார்த்தோம். இஸ்ரவேலரின் மகத்துவமான மேன்மைகளின் பட்டியல் ரோமர் 9:4,5ல் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தோம். அவர்கள் இன்னும் கடினப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று நம்முடைய நிலை என்ன என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். தேவனிடமிருந்து அபிஷேகத்தையும், கிருபை வரங்களையும் மேலான ஊழிய அந்தஸ்துகளையும் பெற்றுக்கொண்ட நாம் எச்சரிக்கையோடு ஊழியம் செய்யவேண்டும். தேவனைவிட, தேவன் தந்த வரங்களை நம்பி, அவரோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தில் குறைவுபட்டு, நம்மையும், நம்மைச் சுற்றியிருப்பவர்களையும், நம்முடைய நிர்வாகத்தையும் நம்முடைய பெலனாகக் கருதுவோமானால் நம்முடைய இருதயம் கடினப்பட ஆரம்பித்துவிட்டது என்று பொருள். **தேவன் ஈவாகக் கொடுத்த கிருபையை முதலீடாக வைத்து வியாபாரம் பண்ண ஆரம்பித்துவிட்டவர்களின் முடிவு பரிதாபத்துக்குரியதாக இருக்கும்.**

அன்பும் இரக்கமும் நிறைந்த தேவன் எவ்வாறு சிலரைக் கடினப்படுத்தக்கூடும் என்று தேவனுடைய வார்த்தையைக் குறித்து சந்தேகப்படத் தேவையில்லை. தேவனுடைய செயல்பாடுகளைக் குறித்து கேள்விகேட்க நமக்கு உரிமை இல்லை. தேவன் சிலரைத் தெரிந்துகொள்கிறார் என்பது அவருடைய ராஜரீக தீர்மானத்தையும், மாற்றமுடியாத சித்தத்தையும் அடிப்படையாகக் கொண்டது. தேவன் ஒருவனைக் கடினப்படுத்துகிறார் என்று சொல்லும்போது தன்னிச்சையாய், கொடுங்கோன்மையாய் அவர் செய்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. காரணமின்றி தேவன் ஒருவரையும் தண்டிப்பதில்லை. சுபாவரீதியாகவே எல்லா மனிதர்களும் பாவிகளாகவே இருக்கிறார்கள். தன்னிச்சையாக, முழுமனதோடு பாவமும் செய்கிறார்கள். அவர்களை தேவன் கடினப்படுத்துவதின் மூலமாகவும் தண்டிக்கிறார். தேவன் யாரையும் பாவம் செய்யும்படி தூண்டுவதில்லை. தாங்கள் செய்த பாவத்தில் அவர்கள் நிலைத்திருக்க அவர்களை அனுமதிக்கிறார், இதுவே கடினப்படுத்துதலாகிறது.

கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும், தேவன் அவர்களுக்குக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடியாயிற்று. *(ரோமர் 11:8)*

கடினப்படுத்தப்பட்டவர்களாய், தங்கள் இரட்சிப்பை இழந்துவிடும் ஆபத்தான நிலையில் இருப்பதை இஸ்ரவேலர் ஏற்றுக்கொள்ள மறுப்பார்கள் என்பதை அறிந்த பவுல் 8,9,10 ஆகிய மூன்று வசனங்களில் உபாகமம், ஏசாயா மற்றும் சங்கீதங்களிலிருந்து வேத வசனங்களை

மேற்கோள் காட்டுவதைப் பார்க்கிறோம்.

உபாகமம் 29:4ல் மோசே சொல்கிறார்: "கர்த்தர் உங்களுக்கு உணரத்தக்க இருதயத்தையும், காணத்தக்க கண்களையும், கேட்கத்தக்க காதுகளையும் இந்நாள்வரைக்கும் கொடுக்கவில்லை". தேவன் ஏசாயாவிடம் சொல்கிறார்: "நீ போய் இந்த ஜனங்களை நோக்கி, நீங்கள் காதாரக்கேட்டும் உணராமலும், கண்ணாரக்கண்டும் அறியாமலும் இருங்கள் என்று சொல். இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளினால் கேளாமலும், தங்கள் இருதயத்தினால் உணர்ந்து குணப்படாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்க, நீ அவர்கள் இருதயத்தைக் கொழுத்ததாக்கி, அவர்கள் காதுகளை மந்தப்படுத்தி, அவர்கள் கண்களை மூடிப்போடு" (6:9,10). மத் 13:14,15, மாற்கு 4:12, லூக்கா 8:10, யோவான் 12:40, அப் 28:26,27லும் இந்த வசனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தேவன் இவ்வாறு செய்வதற்கு காரணம் என்ன? தேவன் சொல்கிறார்: "இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" (ஏசாயா 29:13). எசேக்கியேலிடம் தேவன் சொல்கிறார்: "நீ கலக வீட்டாரின் நடுவிலே தங்கியிருக்கிறாய்; காணும்படிக்கு அவர்களுக்குக் கண்கள் இருந்தாலும் காணாமற்போகிறார்கள்; கேட்கும்படிக்கு அவர்களுக்குக் காதுகள் இருந்தாலும் கேளாமற்போகிறார்கள்" (12:2). எரேமியாவின் காலத்திலிருந்த ஜனங்களை தேவன் "கண்கள் இருந்தும் காணாமலும், காதுகள் இருந்தும் கேளாமலுமிருக்கிற அறிவில்லாத ஜனங்களே" (5:21) என்கிறார். இஸ்ரவேலின் பின்மாற்றத்தை தேவன் முன்னறிந்திருக்கிறார்.

அன்றியும், அவர்களுடைய பந்தி அவர்களுக்குச் சுருக்கும் கண்ணியும் இடறுதற்கான கல்லும் பதிலுக்குப் பதிலளித்தலுமாகக் கடவது. (ரோமர் 11:9)

மேசியாவாகிய கிறிஸ்துவை பாடு மரணத்துக்கு ஒப்புக்கொடுத்ததினிமித்தம் தாவீது யூதர்களை இவ்விதமாக சபிக்கிறார்: "அவர்களுடைய பந்தி அவர்களுக்குக் கண்ணியும், அவர்களுடைய செல்வம் அவர்களுக்கு வலையுமாயிருக்கக்கடவது" (சங் 69:22) இந்த சங்கீதம் முழுவதும் கிறிஸ்துவின் பாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனமாக அமைந்திருக்கிறது.

பந்தி என்ற வார்த்தை உணவு அருந்தும் மேஜையை மட்டும் குறிப்பிடாமல் ஒருவன் தன் அனுதின வாழ்க்கையில் அனுபவிக்கும் ஆசீர்வாதங்களையும், மகிழ்ச்சி நிறைந்த சகலவிதமான நிகழ்ச்சிகளையும், மேன்மைகளையும் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். இஸ்ரவேல் புத்திரர் தேவனைத் தரிசித்து, பின்பு புசித்துக்குடித்தார்கள் (யாத் 24:11) என்று வாசிக்கிறோம். ஆசரிப்புக் கூடாரத்தில் போஜனபலியைப் புசிக்க ஆசாரியர்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் (லேவி 6:16).

பந்தி என்ற வார்த்தை தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தைக் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். யூதாஸ் கிறிஸ்துவோடு பந்தியிருந்தவன்தான் (யோவான் 13:21-30) அவருடைய கரத்திலிருந்து அப்பத்துண்டை பெற்றுக்கொண்டவன்தான் (லூக்கா 22:20,21). ஆனாலும் அது அவனுக்கு ஆசீர்வாதமாக அமையவில்லை. பெல்ஷாத்சார் ராஜா ஆயிரம்பேருக்கு மகிழ்ச்சியோடு விருந்து கொடுத்தவன்தான் (தானி 5:1-5). அந்த பந்தியின் முடிவு என்ன என்பதை அறிவோம்.

மனமகிழ்ச்சி தரும் பந்தி யூதர்களுக்கு 1) சுருக்காகவும் 2) கண்ணியாகவும் 3) இடறுதலுக்கான கல்லாகவும் 4) பதிலுக்குப் பதிலளித்ததுவாகவும் இருக்கக்கடவது என்கிறார் தாவீது. சுருக்கு என்பது காட்டுப் பறவைகளை பிடிக்கும்படி வேட்டைக்காரர்கள் பயன்படுத்தும் ஒருவகையான வலையாகும். அவர்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடும்போது கண்ணி என்ற கருவியைப் பயன்படுத்துவார்களாம். ஒரு மனிதன் நடந்து செல்லும்போது அவனை விழத்தட்டக்கூடியது இடறுதலுக்கான கல். பதிலுக்குப் பதில் அளிப்பது என்பது ஒருவன் தான் செய்யும் காரியத்துக்கு ஏற்றவாறு உடனடியாக செலுத்தப்படும் பிரதிபலனாகும். இஸ்ரவேலர் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களே அவர்களை அழிவுக்கு நேராக வழிநடத்துவதாக இருந்தது என்பதை இந்த வசனம் அறிவிக்கின்றது.

காணாதபடிக்கு அவர்களுடைய கண்கள் அந்தகாரப்படக் கடவது; அவர்களுடைய முதுகை எப்போதும் குனியப்பண்ணும் என்று தாவீதும் சொல்லியிருக்கிறான். (ரோமர் 11:10)

சங்கீதம் 69:23ல் தாவீது சொல்லுகிறார்: "அவர்களுடைய கண்கள் காணாதபடி அந்தகாரப்படக்கடவது; அவர்கள் இடுப்புகளை எப்போதும் தள்ளாடப்பண்ணும்". யூதர்கள் பிலாத்துவிடம் "இவனுடைய இரத்தப்பழி எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள்மேலும் இருப்பதாக" (மத் 27:25) என்று அறிவித்து தங்கள்மேல் சாபத்தை வருவித்துக் கொண்டதினிமித்தம் ஆயிரக்கணக்கான வருடங்களாக அவர்கள் குருடர்களைப்போல

வழிதவறிப்போனதை சரித்திரம் அறிவிக்கிறது.

முதுகைக் குனியப்பண்ணும் என்று தாவீது சொல்வது அவர்கள் அடைந்த அடிமைத்தனத்தைக் குறிப்பிடுகிறது. ஏற்கனவே எகிப்தில் 400 ஆண்டுகளும், பாபிலோனில் 70 ஆண்டுகளும் அடிமைகளாக இருந்தவர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக சொந்த தேசமில்லாமல், கிறிஸ்தவ நாடுகள் உட்பட எல்லா நாடுகளும் அவர்களை ஏற்றுக்கொள்ளாத நிலையில் உலகமெங்கும் கொடூரமான பாடுகளை அனுபவிக்க வேண்டியதிருந்தது. இது சரித்திர ரீதியான உண்மை. குனிந்து கொண்டிருக்கும் மனிதன் தேவனைக் காண்பதில்லை. தன்னுடைய சுயநீதியையே காண்கிறான்.

நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஆசீர்வாதங்கள் ஆசீர்வாதங்களாக நிலைத்திருக்கவேண்டுமானால் அதற்கும் தேவனுடைய ஒத்தாசை தேவை என்பதை அறிந்துகொள்ளுங்கள். நாம் பெற்றுக்கொண்ட ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் சாபங்களாக மாறிவிடக்கூடும். "நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதைச் சிந்தியாமலுமிருந்தால், நான் உங்களுக்குள்ளே சாபத்தை அனுப்பி, உங்கள் ஆசீர்வாதங்களையும் சாபமாக்குவேன்; ஆம், நீங்கள் அதைச் சிந்தியாமற்போனதினால் அவைகளைச் சபித்தேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (மல் 2:2). ஆசீர்வாதங்களையும் அவரால் சாபமாக மாற்றமுடியும். ஆசாரியனாகிய ஏலியிடம் தேவன் சொல்கிறார் : "உன் வீட்டாரும், உன் பிதாவின் வீட்டாரும் என்றைக்கும் என் சந்நிதியில் நடந்துகொள்வார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லியிருந்தும், இனி அது எனக்குத் தூரமாயிருப்பதாக" (1 சாமு 2:30). தேவன் நிச்சயமாக அறிவித்து வாக்குப்பண்ணிய ஆசீர்வாதம் அவராலேயே மாற்றப்படுகிறது.

இஸ்ரவேலின் வீழ்ச்சி நிரந்தரமானதல்ல (வசனம் 11-16)

இப்படியிருக்க, விழுந்துபோகும்படிக்கா இடறினார்கள் என்று கேட்கிறேன், அப்படியல்லவே; அவர்களுக்குள்ளே வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது. (ரோமர் 11:11)

யூதர்கள் முற்றிலுமாக நிரந்தரமாக அழிந்துபோகிற அளவுக்கா தடுக்கிவிழுந்தார்கள் என்ற கேள்வியை வசனத்தின் முதல்பகுதியில் எழுப்பிவிட்டு, அதற்கான பதிலை பவுல் தருகிறார். அவர்கள் தேவனால்

புறக்கணிக்கப்பட்டவர்களைப்போல் காணப்படுகிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அது நிரந்தரமானதல்ல, தற்காலிகமானது. அவர்களுடைய இந்த வீழ்ச்சியோடு அவர்களின் சரித்திரம் முடிவடைவதில்லை. அவர்கள் விழும்படியாக தேவன் அனுமதித்தார் என்பதிலும் தேவன் ஆதிமுதற்கொண்டு தீர்மானித்திருந்த காரியமே நிறைவேறுகிறது. **யூதர்களின் பின்மாற்றமும், அவிசுவாசமும் யூதர் அல்லாதவர்களுக்கு இரட்சிப்பாக அமைகிறது.** வெகுவிரைவில் தாங்கள் இழந்துபோன ஆசீர்வாதங்களை புறஜாதியார் அடைவதினிமித்தம் இஸ்ரவேலர் அவர்கள்மேல் பொறாமைப்படுவார்கள், கோபப்படுவார்கள், எரிச்சலடைவார்கள். அவர்களுக்குள் தேவனைக்குறித்த வைராக்கியம் மீண்டுமாக உருவாகும். அவர்கள் உயிர்மீட்சியடைவார்கள். மீண்டுமாக தேவனுடைய கிருபையின் ஐசுவரியம் அவர்களுக்கும் உண்டாகியிருக்கும் என்கிறார் பவுல்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப்பின் சம்பவிக்கவிருக்கும் இந்த காரியத்தைக் குறித்த வெளிப்பாட்டை தேவன் மோசேயுடன் இவ்வாறு பகிர்ந்துகொள்கிறார். "தெய்வம் அல்லாதவைகளினால் எனக்கு எரிச்சலை மூட்டி, தங்கள் மாயைகளினால் என்னைக் கோபப்படுத்தினார்கள்; ஆகையால் மதிக்கப்படாத ஜனங்களினால் அவர்களுக்கு எரிச்சலை உண்டாக்கி, மதிகெட்ட ஜாதியினால் அவர்களைக் கோபப்படுத்துவேன்" (உபா 32:21). ரோமர் 10:19ல் பவுல் இதுகுறித்து பேசியதைப் பார்த்தோம். இஸ்ரவேலர் புறக்கணிக்கப்படுவதை உறுதிப்படுத்தி கிறிஸ்துவும் : "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 21:43) என்கிறார்.

மத்தேயு 22-வது அதிகாரத்தில் தன்னுடைய குமாரனுடைய திருமண விருந்துக்கு வரும்படியாக அழைக்கும் ராஜாவைக் குறித்த உவமையை இயேசு சொல்கிறார். அழைக்கப்பட்டவர்கள் அசட்டைபண்ணி, வரமறுத்துவிடுகிறார்கள். அழைப்பைப் புறக்கணித்தவர்களை ராஜா கோபத்தில் அழித்துவிட்டு, தன்னுடைய வேலைக்காரர்களிடம் தெருமுனைகளுக்குச் சென்று கண்ணில் படுகிறவர்கள் எல்லாரையும் விருந்துக்கு அழைத்துவரும்படி உத்திரவிடுகிறார் (வசனம் 1-9). ஏழைகள், ஊனர், சப்பாணிகள், குருடர் ஆகியோர் விருந்தில் கலந்துகொள்கிறார்கள் (லூக்கா 14:21). இஸ்ரவேலர் தங்களின் மேன்மையான அழைப்பை ஏற்றுக்கொள்ளாததினிமித்தமே அப்பிரயோஜனமான புறஜாதியார் தேவனுடைய அழைப்பைப் பெறுகிறார்கள். அப் 13:45-48; 18:6; 28:24-28 வாசித்துப் பாருங்கள்.

அந்தியோகியா பட்டணத்தில் ஊழியம் செய்தபோது பவுலையும் பர்னபாவையும் தடைசெய்த யூதர்களிடம் அவர்கள் சொல்கிறார்கள்: "முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டிய தாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" (அப் 13:46). **தேவன் யூதர்களைப் புறக்கணிக்கவில்லை, அவர்களே தேவனைப் புறக்கணிக்கிறார்கள்.**

பவுலின் நாட்களிலேயே சுவிசேஷம் புறஜாதியாரிடம் அறிவிக்கப்படுவதினிமித்தம் யூதர்கள் மிகுந்த எரிச்சலடைந் திருந்தார்கள். "அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து, புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடைபண்ணுகிறார்கள்" (1 தெச 2:15,16) என்கிறார் பவுல். தேவனைப்பற்றிய வெளிப்பாடுகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக யூதர்களுக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. அதை புறஜாதியார் அறிந்துகொள்ளக்கூடாது என்றும் அவர்கள் விரும்பினார்கள். **தேவனைப்பற்றிய அறிவு அவர்களில் தாழ்மைக்குப் பதிலாக அகங்காரத்தை உருவாக்கிவிட்டது. இது மிகவும் ஆபத்தான ஒரு காரியம். கிறிஸ்தவர்களாகிய நாமும் எச்சரிக்கையாக இருப்போம்.**

"அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது" என்று பவுல் சொல்வதால் எல்லா புறஜாதியாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" (யோவான் 1:11) அதன் விளைவாக இதுவரை அடைக்கப்பட்டிருந்த இரட்சிப்பின் வாசல் புறஜாதியாருக்கு கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் திறக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டுமே இந்த வசனம் குறிப்பிடுகிறது. இஸ்ரவேலரால் புறக்கணிக்கப்பட்ட மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதின் மூலமாக முன்னே தூரமாயிருந்தவர்கள் இரத்தத்தினாலே சமீபமானார்கள் (எபே 2:13). எபேசியர் 2:11 முதல் 22 வரை வாசித்துப்பாருங்கள்.

அவர்களுடைய தவறு உலகத்திற்கு ஐசுவரியமும், அவர்களுடைய குறைவு புறஜாதிகளுக்கு ஐசுவரியமுமாயிருக்க, அவர்களுடைய நிறைவு எவ்வளவு அதிகமாய் அப்படியிருக்கும். (ரோமர் 11:12)

முந்தின வசனத்தில் அறிவிக்கப்படும் முக்கியமான சத்தியங்கள் மூன்று.

1. யூதர்கள் தடுமாறியது உண்மைதான் - ஆனால் அழிந்துபோகிற அளவில் அவர்கள் விழவில்லை.
2. அவர்களுடைய வீழ்ச்சியினால் யூதரல்லாதாருக்கு இரட்சிப்பு கிடைத்தது.
3. புறஜாதியாரின் இரட்சிப்பு அவர்களின் பொறாமையைத் தூண்டி அவர்களை மீண்டும் தேவனுடன் இணைத்து வைக்கும்.

இஸ்ரவேலர் மீண்டுமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற பவுலின் அறிவிப்பை புறஜாதியார் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது என்று விரும்புகிறார். யூதர்களைப் புறக்கணித்து புறஜாதியாரைத் தெரிந்துகொண்ட தேவன், மீண்டும் யூதர்களைத் தெரிந்துகொள்ளும்போது புறஜாதியார் புறக்கணிக்கப்படுவார்களா என்ற பயம் அவர்களில் ஏற்படக்கூடாது என்பதால் பவுல் சொல்கிறார்: யூதர்களுடைய தவறு உலகத்துக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவந்தது. யூதர்களுடைய குறைவு யூதரல்லாதவர்களுக்கு அதிக ஆசீர்வாதமாய் ஆயிற்று. அப்படியிருக்கும்போது யூதர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு, தங்களுடைய தவறுகளையும் குறைவுகளையும் சீர்செய்து கொள்ளும்போது உலகம் பெறும் ஆசீர்வாதம் எவ்வளவு அதிகமானதாக இருக்கும். அதனால் யூதரல்லாதவர்களுக்கு எந்த பாதிப்பும் உண்டாகாது. அவர்கள் எந்தவிதத்திலும் புறக்கணிக்கப்படுவதில்லை.

வசனத்தின் முன்பகுதியில் இஸ்ரவேலரின் வீழ்ச்சியினால் உலகம் பெற்றுக்கொண்ட ஐசுவரியத்தையும், யூதரல்லாதவர்கள் அனுபவிக்கும் ஐசுவரியத்தையும் குறித்துப் பேசுகிறார். ஐசுவரியம் என்ற வார்த்தை பொருளாதார ஆசீர்வாதத்தை மட்டும் குறிப்பிடாமல் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், இரட்சிப்புக்கடுத்த மேன்மைகளையும், கிருபை வரங்களையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். அவர்கள் கிறிஸ்துவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளாததினிமித்தம் அவரை சிலுவை மரணத்துக்கு துணிகரமாக ஒப்புக் கொடுத்தார்கள். பாவநிவாரண பலியாக கிறிஸ்து மரித்ததின் விளைவாகவே பாவமன்னிப்பு ஏற்பட்டது. மரித்து உயிர்த்தெழுந்த பின்புதான் கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம், "நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" (மாற்கு 16:15) என்று கட்டளையிட்டார். இதன் விளைவாக புறஜாதியார் மெய்தேவன் யார் என்பதை அறிந்துகொள்வார்கள். ஏசாயா

19:24,25 இவ்விதமாகச் சொல்கிறது: "அக்காலத்திலே இஸ்ரவேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாக பூமியின் நடுவின் ஆசீர்வாதமாயிருக்கும் அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர்: எகிப்தியராகிற என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரவேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்", எகிப்தும் அசீரியாவும் இஸ்ரவேலை விரோதித்த நாடுகள் என்பதை அறிவோம்.

யூதர்கள் குறைவுபட்டிருந்த நிலையிலும் புறஜாதியாருக்கு ஆசீர்வாதமாகத்தான் இருந்தார்கள் என்பதை மறுக்கமுடியாது. கிறிஸ்துவின் சுவிசேஷத்தை முதலாவது அறிவித்த அத்தனைபேரும் யூதர்களே. உலகமெங்கும் சென்று சபைகளை நிறுவியவர் பவுல் என்பதை அறிவோம். இஸ்ரவேல் குறைவுபட்டிருந்த நாட்களில்தான் புறஜாதி நாடான இந்தியாவுக்கு யூதராகிய தோமா சுவிசேஷத்தைக் கொண்டுவந்தார். இன்று நாம் வாசிக்கும் சத்திய உபதேசங்கள் அடங்கிய எல்லா நிருபங்களும் யூதர்களால்தான் எழுதப்பட்டன. குறைவடைந்திருந்த இஸ்ரவேலர் மீண்டுமாக நிறைவை அடையப்போகிறார்கள் என்பதை பவுல் தீர்க்கதரிசனமாக அறிவிக்கிறார். அது உலகமனைத்துக்கும் மிகுந்த ஆசீர்வாதத்தை உண்டாக்கும் என்கிறார்.

புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன்; புறஜாதிகளுக்கு நான் அப்போஸ்தலனாயிருக்கிறதினாலே, என் இனத்தாருக்குள்ளே நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று (ரோமர் 11:13)

அப்போஸ்தலனாகிய பவுல், தான் புறஜாதிகளின் அப்போஸ்தலன் என்பதை பெருமையோடு அறிவித்துவிட்டு, இந்த வசனம் துவங்கி 24வரை புறஜாதியாருடன் பிரத்தியேகமாக பேசுகிறார். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தும்படியாக தமஸ்கு பட்டணத்துக்குப் போகும் வழியில் கிறிஸ்து அவரைச் சந்திக்கிறார் (அப் 9:2-6). பவுலுக்கு சத்தியத்தைச் சொல்லும்படியாக அனனியாவை அனுப்பும்போது அவரிடம் கிறிஸ்து சொல்கிறார்: "அவன் (பவுல்) புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப் 9:15). "விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டது" (கலா 2:8) என்கிறார் பவுல். அவர் யூதரல்லாதவர்களுக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட ஊழியர் என்பதை அப் 18:6; 22:21, ரோமர் 1:6;

15:15,16, கலா 2:2, எபே 3:1,8, 1 தீமோ 2:7; 2 தீமோ 4:17 ஆகிய வசனங்களும் உறுதிப்படுத்துகின்றன.

புறஜாதியார் மத்தியில் தான் அடைந்த மகத்துவமான வெற்றியை உணர்ந்தவராய் பவுல் பேசுகிறார். அதன்மூலம் தன் இனத்தாராகிய யூதர் வைராக்கியம் உள்ளவர்களாக மாறவேண்டும், சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும் என்ற ஆதங்கத்தோடு பேசுகிறார். மனித இனத்தை தேவனிடம் வழிநடத்தவேண்டிய இஸ்ரவேலர், தங்களுடைய இரட்சிப்பை இழந்த நிலையில் காணப்படுவதைக் குறித்து பாரத்தோடு பேசுகிறார்.

என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன் (ரோமர் 11:14)

புறஜாதியார் மத்தியில் தேவன் தன்னைக்கொண்டு செய்த மகத்துவமான ஊழியத்தினிமித்தம் தான் பெருமைப்படுவதாக பவுல் அறிவிக்கிறார். ஏனென்றால் பவுலின் ஊழியம் அவர்களை தேவனுடைய குடும்பத்தாராக்கிவிடுகிறது. யூதர்கள் பெற்றுக்கொண்டிருந்த சிலாக்கியங்களைவிட மேலானவைகளை அவர்கள் சுதந்தரிக்கிறவர்களாகிறார்கள். ஊழியத்தின் விளைவாக புறஜாதியார் மத்தியில் விலையேறப்பெற்ற இரட்சிப்பு ஏற்படுவதினால் ஒருவன் தன் ஊழியத்தை மேன்மைப்படுத்துவதில் தவறில்லை. **ஊழியக்காரர்களாகிய நாம் நம்மை மேன்மைப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு நம்முடைய ஊழியங்களை மேன்மைப்படுத்துவோமானால் அது தவறு.** ஊழியத்தின் மூலம் நாம்பெறும் உலக ஐசுவரியம், அந்தஸ்து, மதிப்பு, புகழ், மேன்மை ஆகியவற்றுக்காக நாம் நம் ஊழியத்தைப் பிரபலப்படுத்துவோமானால் நாம் தேவனைக் கனம்பண்ணுகிறவர்களாக இருக்கமாட்டோம். தேவனும் நம்மைக் கனம்பண்ணமாட்டார். அவருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தவர்கள், அவருடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினவர்கள், அவருடைய நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தவர்களுங்கூட அக்கிரமச் செய்கைக்காரர்களாகக் கருதப்படக்கூடும் (மத் 7:22,23).

பவுல் ஊழியத்தின் மேன்மை

பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்	பவுல் அப்போஸ்தலன்
அப்போஸ்தலர்கள் இஸ்ரவேல் தேசத்தின் பிரதிநிதிகள் (12 கோத்திரம், 12 சிங்காசனங்கள்) - மத் 19:28	கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் பிரதிநிதி (யூதர்களுக்கும், புறஜாதியாருக்கும்) - எபே 2:18
கிறிஸ்துவால் உலகத்தில் இருக்கும்போது அழைக்கப்பட்டார்கள் - லூக்கா 6:13	பரலோகத்தில் இருந்த கிறிஸ்து பவுலை அழைத்தார் - அப் 9:3-5
பூமியிலிருந்த கிறிஸ்துவையே அவர்கள் அறிந்திருந்தார்கள் - அப் 1:9	பரலோகத்திலிருந்த கிறிஸ்துவை மட்டுமே பவுல் அறிந்திருந்தார் - 1 கொரி 15:8
இஸ்ரவேலருக்கும், புறஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி அனுப்பப்பட்டார்கள் - மத் 10:5, லூக்கா 24:47, 48	பவுல் முழு உலகத்துக்கும் ஊழியராகத் தெரிந்துகொள்ளப் பட்டார் - ரோமர் 10:12; 11:32
பவுல் தெரிந்துகொள்ளப்பட்டபின் இவர்கள் யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்கிறார்கள் - கலா 2:1-9	இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யத்தை புறக்கணித்தபடியால் பவுல் புறஜாதியாரின் அப்போஸ்தலராகிறார் - கலா 2:1-9

அவர்களைத் தள்ளிவிடுதல் உலகத்தை ஒப்புரவாக்கு தலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானது போலிருக்குமல்லவோ? (ரோமர் 11:15)

இஸ்ரவேலை தேவன் தள்ளிவிட்டார் என்பது சரித்திரபூர்வமான உண்மை. அதை யாரும் மறுக்கமுடியாது. ஆனால் அது தற்செயலாக நடந்த ஒரு நிகழ்ச்சியல்ல. உலகத்தை தன்னோடு ஒப்புரவாக்கும்படியாக தேவன் இதை திட்டமிட்டு செய்தார் என்பதைப் பார்த்தோம். புறஜாதியார் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டவர்களாய் தேவனுடைய ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள ஒரு வாய்ப்பு இதனால் உருவாயிற்று. இஸ்ரவேலர், புறஜாதியார் என்ற வித்தியாசம் மறைந்துபோயிற்று. "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது; அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்" (2 கொரி 5:18) என்று பவுல் தன்னுடைய ஒப்புரவாக்கும் ஊழியத்தை மேன்மைப்படுத்துவதைக் கவனியுங்கள். "அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி, பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம் பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கினார்" (எபே 2:14-16).

சங்கீதம் 67:7-ல் யூத இனத்தைச்சேர்ந்த இராகத்தலைவன் சொல்கிறார்: "தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்". சுயநலம் நிறைந்த ஜெபமாக வசனத்தின் முதல் பகுதி அமைந்திருக்கிறது. ஆனாலும் தேவன் இஸ்ரவேலரை ஆசீர்வதிக்கும்போது நடப்பதென்ன? பூமியின் எல்லையில் உள்ளவர்களெல்லாம் இதுவரை இல்லாத அளவுக்கு தேவனுடைய மகத்துவத்தை அறிந்துகொண்டவர்களாய் தேவனிடம் வருவார்கள். "நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம் வருகிறது" (யோவான் 4:21) என்று இயேசு இதை முன்னறிவிக்கிறார்.

உலகத்தைத் தன்னோடு ஒப்புரவாக்கிய தேவன் இன்னுமொரு காரியத்தைச் செய்யப்போகிறார். புறஜாதியாரின் இரட்சிப்பு இஸ்ரவேலரில் வைராக்கியத்தை உருவாக்கி, அவர்கள் மனந்திரும்பச் செய்வதினால்

அவர்கள் மீண்டுமாக தேவனால் அங்கீகரிக்கப்படப் போகிறார்கள். தேவனுக்கென்று வைராக்கியமாய் ஊழியம் செய்யப்போகிறார்கள். கடந்த சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளில் சபையானது ஆத்தும ஆதாயப்பணியை செய்துவந்திருப்பது உண்மைதான். ஆனால் அந்திக்கிறிஸ்துவின் நாட்களில் யூதர்கள் தேவனுக்கென்று செய்யும் ஊழியத்தின்விளைவாக உலகமெங்கும் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாயிருக்கும் என்று பவுல் எதிர்பார்க்கிறார். முத்திரை போடப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரும் (வெளி 7) இரட்டு வஸ்திரமுடுத்திய இரண்டு சாட்சிகளும் (வெளி 11) நடப்பிக்கும் மகத்துவமான ஊழியம், 'ஆசிரியரின் வெளிப்படுத்தின விசேஷம் - விளக்கவுரை' புத்தகத்தில் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேலைத் தள்ளிவிட்டதும் தேவன், அங்கீகரிப்பதும் தேவன் என்பதினால் இந்த மாற்றம் மரித்து கல்லறையில் அடக்கம்பண்ணப் பட்டவர்கள் உயிர்த்தெழுந்துவருவது போன்றிருக்கும் என்கிறார் பவுல். எசேக்கியேலின் எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் தரிசனத்தின் முடிவில் தேவன் சொல்கிறார் : "இதோ, என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படவும், உங்களை இஸ்ரவேல் தேசத்துக்கு வரவும் பண்ணுவேன். என் ஜனங்களே, நான் உங்கள் பிரேதக்குழிகளைத் திறந்து, உங்களை உங்கள் பிரேதக்குழிகளிலிருந்து வெளிப்படப்பண்ணும்போது, நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்" (எசேக் 37:12,13). இது, மகா பெரிய உபத்திரவ காலத்தில் நடக்கும் நிகழ்ச்சி. மரித்த லாசருவை எழுப்பிய தேவன், ஆவியில் மரித்த இஸ்ரவேலரையும் எழுப்புவார் என்பது உறுதி.

மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் *(ரோமர் 11:16)*

தேவன் தம்முடைய ஜனங்களை நிரந்தரமாக தள்ளிவிடவில்லை என்பதுதான் இந்த 11-வது அதிகாரத்தில் பவுல் அறிவிக்கும் முக்கியமான சத்தியம். இரண்டு வாதங்களின் அடிப்படையில் இஸ்ரவேல் மீண்டுமாக அங்கீகரிக்கப்படும் என்பதை பவுல் விளக்கினதைப் பார்த்தோம்.

1. ஆபிரகாமின் சந்ததியிலும் பென்யமீனின் கோத்திரத்திலும் பிறந்த இஸ்ரவேலனாகிய பவுல் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்.
2. எலியாவின் நாட்களில் மிகப்பெரிய பின்மாற்றம்

இருந்தும் கிருபையினால் உண்டாகும் தெரிந்துகொள்ளுதலின்படி ஆயிரக்கணக்கானோர் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தார்கள்.

இஸ்ரவேல் மீண்டுமாக அங்கீகரிக்கப்படும் என்பதைக் குறித்த மூன்றாவது வாதம் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. வசனத்தின் முதல் பகுதியில் நியாயப்பிரமாண விதிமுறைகளின்படி (எண் 15:17-21) நிலத்தில் விளைந்த விளைச்சலின் முதற்பலனை (First fruits, கிரேக்க பதம் aparche) கர்த்தருக்கு கொடுப்பதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. தானியத்தை மாவாக அரைத்து அப்பம், அதிரசம் செய்யும்போது முதலில் செய்யப்படும் பலகாரம் தேவனுக்குக் காணிக்கையாகக் கொடுக்கப்படவேண்டும்.

முதற்பலன் இவ்வாறு பரிசுத்தமாக்கப்படும் போது மீதமுள்ள பிசைந்தமாவினால் செய்யப்படும் பதார்த்தங்களும் பரிசுத்தமாயிருக்கும். "இப்படி உங்கள் தலைமுறைதோறும் உங்கள் பிசைந்த மாவின் முதற்பலனிலே கர்த்தருக்குப் படைப்பை ஏறெடுத்துப் படைக்கக்கடவீர்கள்" (வசனம் 21) என்று வாசிக்கிறோம். "இவ்வாறு கானான் தேசத்தில் நீங்கள் போய்சேர்ந்து, அதின் வெள்ளாண்மையை அறுக்கும்போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்" (லேவி 23:10) என்கிறார் மோசே. இவ்வாறு செய்யும்போது பரிசுத்தமாகிறது. "இஸ்ரவேல் கர்த்தருக்குப் பரிசுத்தமும், அவருடைய விளைவின் முதற்பலனுமாயிருந்தது" (எரே 2:3).

வசனத்தின் பின்பகுதியில் ஒரு மரத்தின் வேர் முதற்பலனாகிய மாவுடன் இணைத்து ஒப்பனையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முதற்பலன் பரிசுத்தமாக்கப்படுவதன் மூலம் மீதமுள்ளவைகளும் பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் தகுதியை அடைவதுபோல, வேர் பரிசுத்தமாயிருக்கும்போது, அந்த மரத்தின் கிளைகளும் பரிசுத்தமானதாகவே இருக்கும். ஏனென்றால் கிளைகளுக்குத் தேவையான தண்ணீர் மற்றும் சகல போஷிப்புகளும் வேரின் மூலமாகவே கிளைகளுக்குச் செல்கின்றன. ஒரு மரம் தன்னுடைய இயல்பான சுபாவத்தை ஒருபோதும் மாற்றுவதில்லை (மத் 7:16-20, 12:33, லூக்கா 6:43, 44). அதன் வேரில் இருந்து பெறும் பரிசுத்தம் கிளைகளிலும், இலைகளிலும் எப்போதும் நிலைத்திருக்கிறது. பரிசுத்தம் என்ற வார்த்தை தேவனுடைய உபயோகத்துக்கென்று பிரித்தெடுக்கப்படும் அனுபவமாகும்.

விளைச்சலின் முதற்பலன் என்றும், மரத்தின் வேர் என்றும் பவுல்

யாரைக் குறிப்பிடுகிறார்? சில வேதபண்டிதர்கள் இது ஆதி அப்போஸ்தலர்களுடைய நாட்களில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட யூதர்களைக் குறிப்பிடுகிறது என்றும், அவர்களினிமித்தம் இப்போது புறக்கணிக்கப்பட்டவர்களாகக் காணப்படும் யூதர்கள் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்றும் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் இஸ்ரவேல் புத்திரரைப் பொறுத்தவரை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு முதலிய முற்பிதாக்கள்தான் முதற்பலனாகவும், மரத்தின் வேராகவும் கருதப்படவேண்டும். **தேவனுக்கென்று, தேவனால் மனித இனத்தை ஆசீர்வதிக்கும்படியாகப் பிரித்தெடுக்கப்பட்ட முதல் மனிதன் ஆபிரகாம்.**

மோசே சொல்கிறார்: "கர்த்தர் உன் பிதாக்கள்மேல் அன்புகூரும்பொருட்டு, அவர்களிடத்தில் பிரியம் வைத்து, அவர்களுக்குப்பின் அவர்களுடைய சந்ததியாகிய உங்களை, இந்நாளில் இருக்கிறபடியே, சகல ஜாதிகளுக்குள்ளும் தமக்கென்று தெரிந்துகொண்டார்" (உபா 10:15). "தேவன் அவர்கள் (இஸ்ரவேலர்) பெருமூச்சைக்கேட்டு, தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் யாக்கோபோடும் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்தார்" (யாத் 2:24). மோசே சொல்கிறார் : "உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்" (உபா 4:31).

இஸ்ரவேலரின் தற்போதைய நிலை உண்மையிலேயே பரிதாபத்துக்குரியதாகத்தான் இருக்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகள் உபத்திரவங்களுக்குப்பின்புதான் அவர்கள் தங்களுக்கு சொந்தமான தேசத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றாலும், தங்களுக்காக பூமியில் அவதரித்த மேசியாவாகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல்தான் இருக்கிறார்கள். அதற்கான காரணத்தை 25-வது வசனத்தில் பவுல் சொல்கிறார். ஆனாலும் நாள் ஒன்றுவரும். அவர்களுடைய முதற்பலனும், வேருமாகிய முற்பிதாக்களினிமித்தம் அவர்கள் தேவனால் மீண்டுமாக அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். உபாகமம் 7:6; 10:15; 4:37; 16:2; 26:19; 4:31, ஏசாயா 43:21, 65:8, 1 சாமு 12:22 வாசித்துப்பாருங்கள். இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் (வசனம் 26) என்று பவுல் தைரியமாக அறிவிக்கிறார்.

இந்த வேத பகுதியிலிருந்து நாம் அறிந்து கொள்ளவேண்டிய காரியம் இதுதான். ஆதாமுக்குள் முழு மனித இனமும் பாவம் செய்தது.

ஆனாலும் தேவன் தன்னால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை இரட்சிக்க தீர்மானம் செய்தார். தன் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்றும்படியாக அவர் ஆபிரகாமைத் தெரிந்துகொண்டார். ஏசாயா 51:1,2ல் அவர் சொல்கிறார். "நீங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கன்மலையையும், நீங்கள் தோண்டி எடுக்கப்பட்ட துரவின் குழியையும் நோக்கிப்பாருங்கள். உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்களைப் பெற்ற சாராளையும் நோக்கிப்பாருங்கள்: அவன் ஒருவனாயிருக்கையில், நான் அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப்பெருகப்பண்ணினேன்".

பவுல் சபையை எச்சரிக்கிறார் (வசனம் 17-24)

சில கிளைகள் முறித்துப்போடப்பட்டிருக்க, காட்டொலிவ மரமாகிய நீ அவைகள் இருந்த இடத்தில் ஒட்டவைக்கப்பட்டு, ஒலிவமரத்தின் வேருக்கும் சாரத்துக்கும் உடன்பங்காளியா யிருந்தாயானால் (ரோமர் 11:17)

முந்தின வசனத்தில் ஆபிரகாம் என்ற வேர் மூலமாக போஷிப்பைப் பெற்றுக்கொண்ட கிளைகளாக இஸ்ரவேலின் பின்சந்ததியார் குறிப்பிடப்பட்டதைப் பார்த்தோம். இந்த மரம் ஒலிவமரம் என்று இங்கு குறிப்பிடப்படுகிறது. "நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும், பச்சையுமான ஒலிவமரமென்னும் பேரைக் கர்த்தர் உனக்கு இட்டார்" என்று எரே 11:16-ல் வாசிக்கிறோம். நோவாவின் காலத்தின் பெருவெள்ளத்துக்குப்பின் அவர் அனுப்பிய புறா ஒலிவமரத்தின் இலையைத்தான் பேழைக்குள் முதலாவது கொண்டுவந்தது (ஆதி 8:11). வேதத்தில் ஒலிவமரம் செழிப்பையும், மனமகிழ்ச்சியையும், அலங்காரத்தையும், மேன்மையையும் பொதுவாகக் குறிப்பிடுகின்றன (சங் 52:8; 128:3, எரே 11:16, ஓசியா 14:6). இஸ்ரவேல் ஒரு தேசம் என்ற முறையில் அத்திமரத்துக்கும், இஸ்ரவேலரின் ஆவிக்குரிய மேன்மையினிமித்தம் திராட்சைச்செடிக்கும் ஒப்பிடப்பட்டாலும், யூதர்களது மதரீதியான சிலாக்கியங்கள் ஒலிவமரத்துக்கு ஒப்பிடப்பட்டு வருவதைப் பார்க்கிறோம்.

காட்டொலிவ மரம் வீடுகளிலோ தோட்டங்களிலோ வளர்க்கப்படுவதில்லை. இதன் இலைகள் ஒலிவமரத்து இலைகளைப்போல் தோற்றமளித்தாலும் இவை ருசியான கனிகளைத் தருவதில்லை. காட்டொலிவ மரங்களை விறகாக மட்டுமே பயன்படுத்தமுடியும். பொதுவாக இந்த மரம் தேவனை அறியாத புறஜாதியாரைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். காட்டொலிவ மரம்

என்று பவுல் உங்களையும் என்னையும்தான் குறிப்பிடுகிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள். நம்முடைய நிலை என்ன என்பதை எபேசியர் 2:12ல் பவுல் சொல்வதைப் பார்த்தோம்.

1. புறஜாதியார் கிறிஸ்துவைச் சேராதவர்கள்
2. புறஜாதியார் இஸ்ரவேலின் மக்கள் அல்ல
3. புறஜாதியாரோடு தேவன் எந்த உடன்படிக்கையும் செய்யவில்லை
4. புறஜாதியாருக்கு எந்தவிதமான நம்பிக்கையும் கிடையாது
5. புறஜாதியாருக்கு தேவனைப்பற்றி தெரியாது

தன்னுடைய இனத்தாராகிய இஸ்ரவேலரின் கௌரவத்தை நிலைநாட்டும் முயற்சியில் பவுல் ஈடுபட்டிருக்கிறார் என்று தெரிகிறது. ஒலிவ மரத்தின் சில கிளைகளை தேவன் ஒடித்தெறிந்திருக்கிறார் என்று பவுல் சொல்லும்போது தேவனால் தெரிந்துகொள்ளப்படாமல் புறக்கணிக்கப்பட்ட இஸ்ரவேலரைக் குறிப்பிடுகிறார். கடந்தகால சரித்திரத்தை பார்ப்போமானால் ஆபிரகாமை வேராகக் கொண்ட ஒலிவமரத்திலிருந்து இஸ்மவேல் என்ற கிளை வெட்டப்பட்டது. ஈசாக்கில் மரம் செழித்தது. அடுத்த தலைமுறையில் ஏசா என்ற கிளை வெட்டப்பட்டது. யாக்கோபின் சந்ததியாரில் அது செழித்தது. இறுதியில் ஒரு தேசமாக எழும்பி இஸ்ரவேல் மேசியாவைப் புறக்கணித்தபோது ஏசாயா 5:1-6ல் தேவனால் பேணிப் பாதுகாக்கப்பட்ட திராட்சத்தோட்டத்தை எவ்வாறு பாழாக்கினாரோ அவ்வாறு ஒலிவமரத்தின் எல்லாக்கிளைகளையும் தேவனே முறித்துப்போட்டார்.

முறித்தெடுக்கப்பட்ட அதே இடத்தில் தேவன் யூதரல்லாத புறஜாதியாரை இணைத்து ஒட்டவைக்கிறார், இதன் விளைவாக பிரயோஜனப்படாத இந்த காட்டொலிவமரத்தின் கிளைகள் ஒலிவமரத்தின் வேரோடு ஐக்கியங்கொண்டு மரச்சாற்றிலிருந்து வரும் மேன்மைகளைச் சுதந்தரித்துக்கொள்கிறது, ஆசீர்வதிக்கப்படுகிறது, ஆசீர்வாதமாக மாறுகிறது. கலாத்தியர் 3:16, 3:29, ரோமர் 4:11,12 வாசித்துப்பாருங்கள். எனவே புறஜாதியார்தான் எல்லாவிதத்திலும் இஸ்ரவேலருக்குக் கடன்பட்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர் எந்த விதத்திலும் புறஜாதியாருக்குக் கடன்படவில்லை என்பதை பவுல் சுட்டிக்காட்டுகிறார்.

பொதுவாக தோட்டக்காரர்கள் அவர்கள் எதிர்பார்க்கும் ருசியான

கனிகளை ஒரு மரம் கொடாதிருக்கும்போது, அந்த மரத்தோடு நல்ல கனிதரும் மரங்களின் கிளைகளை ஒட்டவைப்பார்கள். இதன் விளைவாக அந்தமரம் உயிர்ப்பிக்கப்பட்டு நல்ல கனிகளைக் கொடுக்க ஆரம்பிக்கும். ஆனால் பவுல் இங்கே காட்டொலிவமரத்தின் கிளைகள் நல்ல மரத்தோடு ஒட்டவைக்கப்படுவதைக் குறித்து பேசுகிறார். வாழ்நாள் முழுவதும் பட்டணவாசியாயிருந்த பவுல் விவசாயமுறைமைகளை அறியாதிருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

பிரயோஜனமற்ற, தேவனை அறியாத புறஜாதியார் ஆபிரகாமை வேராகக்கொண்ட நல்ல கனிகளைத்தரும் ஒலிவமரத்தோடு தேவன் ஒட்டவைத்திருக்கிறார் என்பது அவருடைய கிருபையை வெளிப்படுத்துகிறது. தோட்டக்காரன் மரத்தை சீர்செய்ய விரும்புகிறான் என்றால் தேவன் கிளைகளை சீர்செய்யவிரும்புகிறார். "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்" (யோவான் 15:5). "என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" (வசனம் 1). இந்த திராட்சத்தோட்டக்காரர் கொடிகளாகிய நம்மை திராட்சச்செடியாகிய கிறிஸ்துவோடு ஒட்டவைக்கிறார். இவ்வாறு நாம் அவரில் நிலைத்திருக்கும்போது மிகுந்த கனிகளைக் கொடுக்கிறவர்களாகிறோம் (வசனம் 5).

நீ அந்தக் கிளைகளுக்கு விரோதமாய்ப் பெருமை பாராட்டாதே; பெருமை பாராட்டுவாயானால், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள் (ரோமர் 11:18)

பொதுவாகவே கிறிஸ்தவர்கள் யூதர்களுக்கு எதிராக பெருமை பாராட்டிவந்தார்கள் என்பதை இரண்டாயிரம் ஆண்டுகால சபையின் வரலாறு உறுதிப்படுத்துகிறது. சொல்லப்போனால் உலகம் முழுவதிலும் யூதர்களுக்கு விரோதமான ஒரு மனப்பான்மை காணப்படுவதை நாம் அறியலாம். ஹிட்லர் என்ற ஜெர்மன் தேசத்து அதிபதியினால் இலட்சக்கணக்கான யூதர்கள் கொலைசெய்யப்பட்ட போது எந்த ஒரு கிறிஸ்தவ நாடும் அவர்களுக்கு ஆதரவு தர முன்வரவில்லை. உலகின் எந்த நாடும் அவர்களுக்குப் புகலிடம் தரவில்லை. பவுலின் நாட்களிலும் தன்னுடைய இனத்தார் புறக்கணிக்கப்படுவதை உணர்ந்தவராய் பவுல் பேசுகிறார். யூதர்களுக்கு விரோதமாக புறஜாதியார் பெருமை பாராட்டுவது தவறு என்கிறார். ஏனென்றால்

1. யூதர்கள்தான் ஆதிமுதல் தேவனுடைய ஜனங்களாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்
2. முதலாவது கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களும் யூதர்களே

3. புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவித்தவர்கள் யூதர்களே

4. புறஜாதியாரிடமிருந்து யூதர்கள் எந்த நன்மையையும் பெற்றுக்கொள்ளவில்லை

5. மாறாக யூதர்களிடமிருந்து பல ஆசீர்வாதங்களை புறஜாதியார் பெற்றிருக்கிறார்கள்

6. இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது என்பது கிறிஸ்துவின் திட்டவட்டமான அறிவிப்பு (யோவான் 4:22)

7. ஆபிரகாம் என்ற வேர் மூலமாகவே அவர்கள் போஷிப்பைப் பெறுகிறார்கள்

தேவன் நமக்கு தன்னுடைய கிருபையைத் தந்திருக்கிறார் என்பதைக் குறித்து நாம் பெருமை பாராட்டுவது தவறு என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதினிமித்தம் நாம் மற்றவர்களைவிட மேன்மையானவர்கள் என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. இன்று நாம் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இருக்கலாம். ஆவிக்குரிய வரங்கள் நம்மில் செயல்படலாம். ஆனால் ஒரு காரியத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். **நமக்கும், இரட்சிக்கப்படாத ஒரு பாவமனிதனுக்கும் இடையே ஒரு வித்தியாசம் காணப்படுமானால், அந்த வித்தியாசத்தை நம்மில் உருவாக்கியது தேவனுடைய கிருபையே.** நம்முடைய தகுதியின்மையை உணர்ந்து, தேவசமுகத்திலும், மனிதர்கள் முன்னிலையிலும் நம்மைத் தாழ்த்தும்படியாகவே நமக்கு கிருபை வழங்கப்பட்டிருக்கிறது. நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கும்படியாகவே கிருபை வழங்கப்பட்டிருக்கிறது. மனமேட்டிமை அடையும்படியாக அல்ல. எச்சரிக்கையாயிருங்கள்.

புறஜாதி கிறிஸ்தவர்கள் தாங்கள் இலவசமாக, கிருபையாகப் பெற்றுக்கொண்ட இரட்சிப்பைக் குறித்து பெருமைபாராட்டுவதற்கு எந்த காரணமும் இல்லை என்கிறார் பவுல். அதற்கு அவர் சொல்லும் விளக்கம் இதுதான். கிளைகள் ஒருபோதும் வேரைச் சுமப்பதில்லை. வேர்தான் கிளைகளைச் சுமக்கிறது. கிளைகள் வேர்களுக்கு உயிர்கொடுப்பதில்லை. வேர்களே கிளைகளுக்கு உயிர்கொடுக்கிறது. கிளைகள் இல்லாமல் வேர் உயிரோடு இருக்கக்கூடும். வேர் இல்லாமல் கிளைகள் உயிரோடு இருக்கவேமுடியாது.

நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக்கிளைகள் முறித்துப் போடப்பட்டதென்று சொல்லுகிறாயே. (ரோமர் 11:19)

அவர்களுடைய (யூதர்களுடைய) தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது (ரோமர் 11:11) என்று பவுல் அறிவித்தது உண்மைதான். ஆனால் அதைக்குறித்து மேன்மைபாராட்டும் புறஜாதியார் தாங்கள் ஒட்டப்படவேண்டும் என்பதற்காகவே இஸ்ரவேலரை தேவன் புறக்கணித்து, அந்தக் கிளைகளை முறித்துப்போட்டார் என்று சொல்வார்களானால் அது தவறு என்கிறார் பவுல். ஏனென்றால் புறஜாதியார் அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் அவர்கள் ஒட்டப்படவில்லை. கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்குமுன் அவர்களுடைய நிலை எவ்வளவு கேவலமானது என்பதை ரோமர் 1:21-32ல் பார்த்தோம். புறஜாதியாராகிய கிளைகளினால் வேருக்கு எந்த நன்மையும் இல்லை. வேர்தான் கிளைகளுக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிறது. சபையார் இன்று அனுபவிக்கும் சகல மேன்மைகளும் ஆபிரகாமுக்கு தேவன் வாக்குபண்ணியவைகளே. எனவே நாள் ஒன்று வரும். அப்போது அந்த ஆசீர்வாதங்களை ஆபிரகாமின் சந்ததியார் இந்த பூமியிலேயே பெற்று மகிழ்வார்கள், அதுதான் ஆயிரவருஷ அரசாட்சி.

நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப் போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. (ரோமர் 11:20)

உங்களிடமும் என்னிடமும்தான் பவுல் பேசுகிறார். யூதரல்லாதவர்களாகிய நாம் மேட்டிமைச் சிந்தையோடிராமல் பயத்தோடு தேவசமுகத்தில் காணப்படவேண்டும். மேட்டிமையும், பயமின்மையும்தான் இஸ்ரவேலின் வீழ்ச்சிக்குக் காரணம். அவர்களுடைய புறக்கணிப்புக்கும் புறஜாதியாரின் தெரிந்துகொள்ளப்படுதலுக்கும் காரணம் அவர்களின் விசுவாசமின்மையும், இவர்களின் விசுவாசமுமே.

1. நல்ல ஒலிவமரத்தின் இஸ்ரவேலராகிய கிளை முறித்துப்போடப்பட்டதின் காரணம் : **அவிசுவாசம்**

2. முறிக்கப்பட்ட இடத்தில் காட்டொலிவ மரத்தின் கிளைகள் ஒட்டப்படுவதற்கான காரணம்: **விசுவாசம்**

புறஜாதியார் ஒட்டப்படவேண்டும் என்பதற்காக இஸ்ரவேலராகிய கிளை முறித்துப்போடப்படவில்லை. அவர்கள் மேசியாவாக வெளிப்பட்ட இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்பதினாலேயே முறித்துப்போடப்பட்டார்கள். விசுவாசம் என்கிற தேர்வில் அவர்கள் தேர்ச்சிபெறவில்லை. தோல்வி அடைந்தார்கள். அந்த இடத்தில் காட்டொலிவ மரமாகிய பிரயோஜனமற்ற புறஜாதியார் ஒட்டப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது அவர்களுடைய தகுதியின்

அடிப்படையில் அல்ல. "விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகள்" (கலா 3:7) என்று எழுதியிருக்கிறபடி ஆயிற்று. "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே 2:8). நம்மில் காணப்படும் விசுவாசம் தேவனுடைய இலவசமான கிருபை வரங்களில் ஒன்று (ரோமர் 12:6).

நம்மை நாமே இரட்சித்துக்கொள்ளமுடியாது என்பதை திட்டவட்டமாக அறிந்துகொள்ளுங்கள். நாம் செய்த கிரியைகளினால் நாம் இரட்சிக்கப்படுவதில்லை. எனவே தன்னைத்தானே இரட்சித்துக் கொண்டதாக எந்த மனிதனும் பெருமைபாராட்டமுடியாது.

மேட்டிமையான, இறுமாப்பான சிந்தை மிகவும் ஆபத்தானது (1 தீமோ 6:17,18). நாம் விசுவாசத்தில் நிற்கிறோம் என்றால் அதுவும் தேவனுடைய கிருபையே. விசுவாசம் என்பது தேவன் தான் தெரிந்துகொண்டவர்களுக்குத் தரும் மிகப்பெரிய ஈவு (எபே 2:8). அவிசுவாசம் ஒருவனை முறிந்துபோகச் செய்கிறது என்றால் விசுவாசம் அவனை நிற்கச் செய்கிறது. விசுவாசம் நடப்பிக்கும் பலத்த கிரியைகள் வேதம் முழுவதிலும் சொல்லப்படுகின்றன.

1. விசுவாசம் இரட்சிப்பைத் தருகிறது. (எபே 2:8)
2. விசுவாசம் பாவமன்னிப்பை வழங்குகிறது. (அப் 26:18)
3. விசுவாசம் பரிசுத்தமாக்குகிறது. (அப் 26:18)
4. விசுவாசம் சுத்தமாக்குகிறது. (அப் 15:9)
5. விசுவாசம் பிழைத்திருக்கச் செய்கிறது. (கலா 2:20)
6. விசுவாசம் நடக்கச் செய்கிறது. (2 கொரி 5:7)
7. விசுவாசம் நிலைநிற்கச் செய்கிறது. (ரோமர் 11:20)

தங்களைக் குறித்தும், தங்களுடைய ஊழியங்களைக் குறித்தும் மனமேட்டிமையோடு பேசுகிறவர்கள் பவுலின் ஆலோசனையை உன்னித்துக் கவனிப்பார்களாக. நம் ஊழியத்தினிமித்தம் தேவன் நம்மை உயர்த்தும்போது அது மெய்யான மனத்தாழ்மையை நம்மில் உருவாக்கவேண்டும். அதோடுகூட அச்சத்தையும் நடுக்கத்தையும் உண்டாக்கவேண்டும் என்கிறார் பவுல். நம்முடைய நற்கிரியைகளைக் குறித்தும், கொடுக்கும் காணிக்கைகளைக் குறித்தும், ஊழியங்களைத் தாங்குவதைக் குறித்தும் மனமேட்டிமையோடு செயல்படுவோமானால்

இஸ்ரவேலரைவிடக் கடுமையான முறையில் நியாயந்தீர்க்கப்படுவோம்.

"பயந்திரு", என்ற ஆலோசனையை புறஜாதியாரின் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியில் இருந்த சபைக்கு மட்டுமல்ல, இன்று பல்வேறு திருச்சபைகளில் அங்கம் வகிக்கும் தலைவர்களாகிய நமக்கும் கொடுக்கிறார். எதற்காக பயப்படவேண்டும்? இஸ்ரவேலர் தேவனால் புறக்கணிக்கப்பட்டதுபோல் நாமும் புறக்கணிக்கப்படக்கூடாது என்று பயப்படவேண்டும். "எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான்; தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்" (நீதி 28:14) என்று வாசிக்கிறோம். "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலிப் 2:12). எபி 4:1, 1 பேதுரு 1:17 வாசித்துப்பாருங்கள். "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்" (1 கொரி 10:12) என்கிறார் பவுல். **தேவனைக் குறித்த பயம், இந்த நாட்களில் அனேகருக்கு இல்லாமல் போய்விட்டது. அதனால்தான், உலகமெங்கும் மாய்மாலமான ஊழியங்கள் பெருகிவருகின்றன.**

சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிடமாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. (ரோமர் 11:21)

நாம் தியானிக்கும் வேதபகுதியில் பவுல் பயன்படுத்தும் உருவகத்தை நன்றாக மனதில் பதித்துக்கொள்ளுங்கள்.

1. ஒலிவமரத்தின் வேர் - **ஆபிரகாம்**
2. ஒலிவமரத்தின் கிளைகள் - **இஸ்ரவேலர்**
3. காட்டொலிவ மரத்தின் கிளைகள் - **திருச்சபை**

சுபாவக்கிளை என்பது ஒலிவமரத்தின் உண்மையான கிளைகளான இஸ்ரவேலரைக் குறிப்பிடுகிறது. ஒலிவமரத்தின் வேரின் போஷிப்பிலிருந்து இயற்கையான முறையில் உருவான இந்த கிளைகளை மரத்தில் நிலைத்திருக்க தேவன் அனுமதிக்கவில்லை. அப்படியிருக்கும்போது காட்டொலிவ மரத்தின் கிளைகளின் விசுவாசம் குறைவுபடும்போது அவையும் மரத்தோடு இணைந்திருக்க தேவன் அனுமதிக்கமாட்டார் என்பது உறுதி. எனவே அவர்கள் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். "உன்னையும் தப்பவிடமாட்டார்" என்கிறார்.

தேவனோடு இன்று இணைக்கப்பட்டுக் காணப்படும் திருச்சபையின்

ஆபத்தான நிலை என்ன என்பதை அறிந்துகொள்ளவேண்டும். இவர்கள் ஒலிவமரத்துக்குச் சொந்தமான சுபாவக்கிளைகள் அல்ல. வேறு ஒரு மரத்திலிருந்து மேலோட்டமாக ஒட்டவைக்கப்பட்டவர்கள். அந்த மரமானது நல்ல கனிதரும் மரமா என்றால் இல்லை என்றுதான் பதில் சொல்ல வேண்டியதிருக்கிறது. பிரயோஜனமற்ற மரங்கள், நாம் காட்டுக்கிளைகள் என்ற உணர்வை உடையவர்களாய் இருக்கவேண்டும். பவுல் ரோமர் 12:3ல் சொல்கிறார்: "உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்".

ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய். (ரோமர் 11:22)

ஆபிரகாமின் சந்ததியாரின் கீழ்ப்படியாமையையும் அதன் விளைவாக அவர்கள் எவ்வாறு தேவனால் புறக்கணிக்கப்பட்டார்கள் என்பதையும் பார்த்தோம் (9:27, 31; 10:21; 11:7-10, 15). அதன் விளைவாக ஒலிவமரத்தின் கிளைகளாகக் கருதப்பட்டவர்கள் ஒடித்துப்போடப்பட்டனர் (11:17, 19-21). அந்த இடத்தில் புறஜாதியாராகிய திருச்சபை ஒட்டவைக்கப்படுகிறது (11:11, 12, 17, 19). அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாக அங்கீகாரம் பெறுகிறார்கள். இதிலிருந்து தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் அறிந்துகொள்கிறோம். பவுல் இந்த வசனத்தில் அதைத்தான் அறிவிக்கிறார். **தேவனுடைய அன்பைக்குறித்து உற்சாகமாகப் பிரசங்கிக்கும் நாம், அவருடைய கண்டிப்பைக் குறித்தும் எரிச்சலைக் குறித்தும், கோபத்தைக் குறித்தும் பிரசங்கிக்க அறிந்துகொள்ளவேண்டும்.**

இந்த ஒரு வசனத்தில் தயவு (goodness) என்ற வார்த்தை நான்கு முறையும் கண்டிப்பு (severity) என்ற வார்த்தை இரண்டுமுறையும் சொல்லப்படுகிறது. தேவன் தயவுள்ளவர் என்பதில் சந்தேகமே இல்லை. அதே சமயத்தில் அவர் மிகவும் கண்டிப்பானவர் என்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவன் இரக்கமுடையவர்தான். அதே சமயத்தில் அவர் பயங்கரமானவரும்கூட: "தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" (எபி 12:29) என்று வாசிக்கிறோம்.

இஸ்ரவேலரை தனது ஜனமாக தெரிந்துகொண்ட நாளிலிருந்து அவர்களுக்கு தேவன் பாராட்டிய தயவைக்குறித்து நூற்றுக்கணக்கான

வசனங்கள் வேதத்தில் உண்டு. அவர்கள் தன்னிடம் வரவேண்டும் என்பதற்காக அவர் நாள்முழுவதும் கைகளை நீட்டிக் கொண்டிருந்தார் என்று ரோமர் 10:21ல் பார்த்தோம். அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளாததன் விளைவாக அவருடைய கண்டிப்பு வெளிப்பட ஆரம்பிக்கிறது. தேவனிடமிருந்தே அவர்கள் கனநித்திரையின் ஆவியையும், காணாதிருக்கிற கண்களையும், கேளாதிருக்கிற காதுகளையும் பெற்றுக்கொண்டார்கள் என்று ரோமர் 11:8ல் பார்த்தோம். அவர்கள் முறித்துப் போடப்பட்டார்கள் (வசனம் 17-21). ஏனென்றால் அவர்கள் தேவனுடைய தயவில் நிலைத்திருக்கத் தவறினார்கள். தங்களையும், தங்கள் கிரியைகளையும் நம்பினார்கள்.

இஸ்ரவேலரின் வீழ்ச்சியிலிருந்து இன்று நாம் அங்கங் கொண்டிருக்கும் திருச்சபை நல்ல பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்பதே பவுலின் ஆசை. விசுவாசிகள் மத்தியிலும், ஆசாரியர்கள் மத்தியிலும், ஊழியக்காரர்கள் மத்தியிலும் தேவனைக்குறித்த பக்தி வைராக்கியம் குறைவுபட்டுக்கொண்டே வருகிறது. **தேவனுடைய தயவில் நாம் நிலைத்திருப்பதற்குப் பதிலாக தேவன் நம்முடைய தயவில் நிலைத்திருப்பதுபோல் செயல்பட்டுவருகிறோம்.** "கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (லூக்கா 3:9) என்ற எச்சரிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வு நமக்கு இல்லை. கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார் (யோவான் 15:2). "நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்" (மத் 7:19) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என்றும் அப்போது மனிதர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவபிரியரா யிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் என்று 2 தீமோ 3:1-5ல் வாசிக்கிறோம்.

வெளிப்படுத்தின விசேஷம் 2,3 அதிகாரங்களில் சொல்லப்படும் ஏழுசபைகளில் ஐந்து சபைகளுக்கு தேவன் அவைகளின் நிலைகுறித்து கீழ்கண்டவாறு எச்சரிப்பு வழங்குவதைப் பார்க்கிறோம்.

எபேசு சபை:
"நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்" (2:5)

பெர்கமு சபை:
"நீ மனந்திரும்பு, இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்" (2:16)

தியத்தீரா சபை:
"மிகுந்த உபத்திரவத்திலே தள்ளி, அவளுடைய பிள்ளைகளையும் கொல்லவே கொல்லுவேன்" (2:23)

சர்தை சபை:
"திருடனைப்போல் உன்மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (3:3)

லவோதிக்கேயா சபை:
"உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்" (3:16)

கடைசி காலத்து லவோதிக்கேயா சபையின் நாட்களில் நாம் வாழ்ந்துவருகிறோம். கிறிஸ்து சபைக்குப் புறம்பே தள்ளப்பட்டவராகக் காணப்படுகிறார். வெளி 3:20-ன்படி வாசற்படியிலே நின்று, சபையின் கதவை அல்ல, தனிப்பட்ட மனிதர்களின் இருதயக் கதவைத் தட்டிக்கொண்டிருக்கிறார். யாராகிலும் அவருடைய சத்தத்தைக் கேட்டு தங்கள் இருதயத்தைத் திறந்துகொடுத்தால் அவர்களோடு ஐக்கியங்கொள்கிறார். ஆசிரியரின் "வெளிப்படுத்தின விசேஷம்-விளக்கவுரை" புத்தகத்தில் பல்வேறு காலகட்டங்களில் செயல்பட்ட சபைகளைக் குறித்த விளக்கத்தை வாசித்துப் பாருங்கள்.

அன்றியும், அவர்கள் அவிசுவாசத்திலே நிலைத்திராதிருந்தால் அவர்களும் ஒட்டவைக்கப்படுவார்கள்; அவர்களை மறுபடியும் ஒட்டவைக்கிறதற்குத் தேவன் வல்லவராயிருக்கிறாரே. *(ரோமர் 11:23)*

இந்த வேதபகுதியில் தேவனைக் குறித்த மூன்று காரியங்களை பவுல் அறிவிக்கிறார்.

1. தேவனுடைய தயவு (வசனம் 22) - அன்பின் விளைவு
2. தேவனுடைய கண்டிப்பு (வசனம் 22) - நீதியின் விளைவு
3. தேவனுடைய வல்லமை (வசனம் 23) - பராக்கிரமத்தின் விளைவு

புறஜாதியார் தாங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் தேவதயவில் நிலைத்திருக்கவேண்டும் என்ற ஆலோசனையைக் கொடுத்த பவுல், 23,24வது வசனத்தில் இஸ்ரவேலரின் எதிர்காலத்தைக் குறித்த ஒரு முக்கியமான சத்தியத்தை அறிவிக்கிறார். இஸ்ரவேல் என்ற கிளையை தேவன் முறித்துப்போட்டார் என்பது உண்மைதான். அதற்கு ஒரே காரணம் இஸ்ரவேலின் அவிசுவாசம். மீண்டும் அவர்கள் தேவன்மேல் விசுவாசம் வைக்கத்தொடங்குவார்கள் என்றால் அவர்களை மீண்டும் அவர் ஏற்றுக்கொள்வது உறுதி என்கிறார் பவுல். அவர்களை மீண்டும் தன்னுடைய ஜனங்களாக உருவாக்க அவர் வல்லவராயிருக்கிறார். அவரால் செய்யக்கூடாத காரியம் ஒன்றும் இல்லையே.

தேவன் தம்முடைய ஜனங்களைத் தள்ளிவிடவில்லை என்று அதிகாரத்தின் முதல் வசனத்திலேயே பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். ஏனென்றால் இந்த வசனம் சொல்கிறபடி, அவர்கள் மீண்டுமாக ஒட்டவைக்கப்படுவார்கள். இவ்வாறு அவர்கள் ஒட்டவைக்கப்பட வேண்டுமானால் அவர்கள் அவிசுவாசம் முற்றிலுமாக நீங்கவேண்டும். அதற்கு தேவன் வைத்திருக்கும் செயல்திட்டம் என்ன? அவர் சொல்கிறார்? "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும், எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்" (சக 12:10). "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எரே 31:33). "நான் அவர்களை நிர்மூலமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களோடே பண்ணின என் உடன்படிக்கையை அபத்தமாக்கத்தக்கதாகவும், நான் அவர்களைக் கைவிடவும் வெறுக்கவுமாட்டேன்" (லேவி 26:44). இவ்வாறு **இரண்டாவது முறையாகவும் தேவன் இஸ்ரவேலரைத் தெரிந்துகொள்வது அவருடைய தீர்மானத்தை மட்டுமே அடிப்படையாகக்கொண்டது.**

சுபாவத்தின்படி காட்டொலிவமரத்திலிருந்து நீ வெட்டப்பட்டு, சுபாவத்திற்கு விரோதமாய் நல்ல ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்பட்டிருந்தால், சுபாவக்கிளைகளாகிய அவர்கள் தங்கள் சுய ஒலிவமரத்திலே ஒட்டவைக்கப்படுவது அதிக நிச்சயமல்லவா. (ரோமர் 11:24)

நீளமான வசனமானாலும் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகவே இருக்கிறது. பவுல் சொல்லும் காரியம் இதுதான். காட்டுமரத்தின் கிளைகள் நற்கனிதரும் ஒலிவமரத்தின் கிளைகளாக ஒட்டிவளர்வது என்பது இயற்கையான காரியம் அல்ல. அது ஒரு அபூர்வமான நிகழ்ச்சி. ஆனாலும் தேவன் அதைச் செய்திருக்கிறார். யூதர்களோ நல்ல ஒலிவமரத்தின் கிளைகளைப் போன்றவர்கள். ஆபிரகாம் என்ற வேரில் இருந்து பல்லாயிரம் வருடங்களாக போஷிப்பைப் பெற்றுக்கொண்டவர்கள். அவர்கள் தங்கள் சொந்த மரத்தில் எளிதாக ஒட்டிக்கொள்வதில் வியப்படைய ஒன்றுமில்லை.

"அதிக நிச்சயமல்லவா" என்று பவுல் கூறுவதைக் கவனியுங்கள். துன்மார்க்கமும் விக்கிரக ஆராதனையும் நிறைந்த புறஜாதியாரையே தேவன் ஏற்றுக்கொண்டார் என்றால் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தன்னுடைய ஜனங்களாக இருந்து, மெய்தேவனாகிய தன்னை ஆராதித்துவந்த இஸ்ரவேலரை மீண்டும் ஒருமுறை தன்பக்கமாக இழுத்துக்கொள்வது அவருக்கு கடினமான காரியம் அல்ல. ஒரு ஐசுவரியவான் ஒருவனை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம். தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியை ஒருவேளை தான் முன்பின் தெரியாத ஒருவனுக்கு எழுதிவைக்கக்கூடும். அதே ஐசுவரியவான் தன் சொத்தை தன் சொந்த மகனுக்கு எழுதிவைப்பது எளிதான காரியமல்லவா? இஸ்ரவேல் என்ற மெழுகுதிரியை அணைப்பதின் மூலம் புறஜாதியார் என்ற மெழுகுதிரியை தேவன் எரிய வைத்திருப்பாரானால், எரிந்துகொண்டிருக்கும் அந்த மெழுகுதிரியைப் பயன்படுத்தி, சற்றுமுன்வரை எரிந்துகொண்டிருந்து அணைந்துபோன இஸ்ரவேலரை எரியச்செய்து பிரகாசிக்கப்பண்ணுவது அதிக நிச்சயமல்லவா என்ற முறையில் பவுல் பேசுகிறார்.

இன்னொரு காரியத்தையும் அறிந்துகொள்வோம். சில கிளைகள் முறிக்கப்படுகின்றன. சில கிளைகள் ஒட்டவைக்கப்படுகின்றன. ஒட்டவைக்கப்பட்ட கிளைகள் முறித்துப்போடப்படலாம். முறிக்கப்பட்ட கிளைகள் மீண்டும் ஒட்டப்படலாம். ஆனால் மரம் ஒன்றுதான் கிளைகள்தான் மாறுகின்றன, யூதர்களானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, இரட்சிப்பு தேவனால் அவர் முற்பிதாவாகிய ஆபிரகாமுடன் (வேர்)

செய்துகொண்ட உடன்படிக்கையின் மூலமாகவே உண்டாகிறது. "அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய், மரித்தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்" (ரோமர் 4:17). ரோமர் 3:29,30; 5:18,19; 10:12,13 வாசித்துப்பாருங்கள்.

உருவகம்	யாரைக் குறிப்பிடுகிறது?
மரம்	தேவனுடைய ஜனங்கள்
வேர்	ஆபிரகாம்
வெட்டப்பட்ட கிளைகள்	விசுவாசியாத இஸ்ரவேலர்
காட்டொலிவக் கிளைகள்	விசுவாசித்த புறஜாதியார்

புறஜாதியாரின் நிறைவுக்குப்பின் இஸ்ரவேலரின் இரட்சிப்பு (வசனம் 25-32)

மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன்; அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரவேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். (ரோமர் 11:25)

புறஜாதியார் தாங்கள் பெற்றுக்கொண்ட இரட்சிப்பின் விளைவாக தங்களை இஸ்ரவேலரோடு ஒப்பிட்டு மேன்மைப்படுத்திக் கொள்வதினிமித்தம் அவர்கள்மேல் பவுல் கொஞ்சம் எரிச்சலோடு பேசுவதுபோல் தெரிகிறது. "நீங்கள் புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு" என்று அவர் சொல்வது "நீ உன்னை ஞானியென்று எண்ணாதே" (நீதி 3:7) என்ற வசனத்தை நினைவுபடுத்துகிறது.

"சகோதரரே" என்று இந்த வசனம் துவங்குவதைக் கவனியுங்கள். இதுவரை யூதரல்லாத புறஜாதி கிறிஸ்தவர்களோடு மட்டும் இடைபட்டுவந்த பவுல் இந்த வசனம் துவங்கி யூதரும் யூதரல்லாதவர்களும் அடங்கிய முழுசபையோடும் பேசுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும்.

இவ்விதமாகவே "சகோதரரே" என்ற வார்த்தையை பவுல் ரோமர் 1:13, 1 கொரி 10:1; 12:1; 2 கொரி 1:8, 1 தெச 4:13 வசனங்களிலும் பயன்படுத்துகிறார்.

முழுசபைக்கும் தான் ஒரு இரகசியத்தை அறிவிக்கப்போவதாக பவுல் சொல்கிறார். 'இரகசியம்' என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஒருதடவையும் சொல்லப்படவில்லை, புதிய ஏற்பாட்டிலோ 27 இடங்களில் சொல்லப்படுகிறது. இருபது தடவைக்குமேல் பவுல்தான் இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறார் (ரோமர் 11:25; 16:25, 1 கொரி 2:7; 3:16; 4:1; 13:2; 14:2; 15:51, கொலோ 1:27; 2:2; 4:3, எபே 1:10; 3:3; 5:32, 6:20, 1 தீமோ 3:3; 3:16, 2 தெச 2:7) "இரகசியம்" என்ற வார்த்தை வேதத்தில் இதுவரை தேவனால் வெளிப்படையாகச் சொல்லப்படாமல் மறைக்கப்பட்டு இப்போது வெளிப்படுத்தப்படும் ஒரு சத்தியம் என்று பொருள்படும். உபதேசத்துக்கடுத்த பல மூல சத்தியங்களை பவுல் மூலமாக தேவன் சபைக்கு தெரியப்படுத்தியிருக்கிறார். இவைகளைக் குறித்து பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் சில குறிப்புகளை எழுதிவைத்திருந்தாலும் அவைகளைக் குறித்த முழுவெளிப்பாடும் அவர்களுக்கு அருளப்படவில்லை.

"புறஜாதியாரின் நிறைவு" உண்டாகும் வரைக்கும் இஸ்ரவேலரில் ஒருபங்குக்கு கடினமான மனதுண்டாயிருக்கும் என்பதுதான் பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கும் இரகசியம். இஸ்ரவேலரின் புறக்கணிப்பு தற்காலிகமானது என்பதை நிரூபிக்கும் முயற்சியில் பவுல் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிவோம். 23-வது வசனத்தில் அவிசுவாசத்தில் நிலைத்திராவிட்டால் (அதாவது விசுவாசத்தில் நிலைத்திருந்தால்) அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடும் என்ற பவுல், அப்படிச் செய்ய தேவன் வல்லவராயிருக்கிறார் என்றார். 24-வது வசனத்தில் அவர்கள் ஒலிவமரத்தின் பூர்வீக கிளைகளாயிருந்தார்கள் என்பதினால் அவர்கள் ஒட்டப்படுவது நிச்சயம் என்றார். இந்த மூன்றாவது வசனத்தில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, முன்குறிக்கப்பட்ட புறஜாதியார் கிறிஸ்துவை அறிந்துகொண்டு, ஏற்றுக்கொள்ளும் நாள்வரை தற்காலிகமாக இஸ்ரவேலர் கடினப்படுத்தப்பட்ட மனதுடையவர்களாக இருப்பார்கள் என்கிறார். "கடினமான மனது" என்பதற்கு பயன்படுத்தப்படும் Pōrōsis என்ற கிரேக்க வார்த்தை கடினமான பாறை போன்ற மனநிலையைக் காட்டுகிறது.

பவுல் அறிவிக்கும் இரகசியத்தின் பின்னணியை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

1. இஸ்ரவேலின் அவிசுவாசமும், புறக்கணிப்பும்

2. புறஜாதியாரின் அழைப்பும், இரட்சிப்பும்
3. இதைக் குறித்த இஸ்ரவேலரின் வைராக்கியம்
4. இஸ்ரவேலர் எல்லாருக்கும் இரட்சிப்பு

இஸ்ரவேலரின் கடினப்படுத்தப்பட்ட நிலை தற்காலிகமானது என்பதை இந்த வசனம் சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுத்துகிறது. ஏனென்றால் புறஜாதியாரின் நிறைவு அதை முற்றிலுமாக நீக்கிவிடுகிறது. ஆனாலும் அந்த நிறைவு உண்டாகும்வரை அந்த இருதய கடினத்தை யாராலும் நீக்கமுடியாது என்பதும் தெளிவுபடுத்தப்படுகிறது. ஏனென்றால் இது தேவனுடைய தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றல். வறுமை, யுத்தம், பஞ்சம், வியாதி போன்ற நியாயத்தீர்ப்புகளைவிட இது கடினமானது. **தேவனால் கடினப்படுத்தப்பட்டவர்களுக்கு மனந்திரும்புதல் யாராலும் அருளப்படுவதில்லை.** மீண்டும் தேவன் அவர்களுக்காக செயல்படும்வரை அவர்கள் தங்கள் கடினத்திலேயே நிலைத்திருப்பார்கள்.

'புறஜாதியாரின் நிறைவு' என்ற வார்த்தை சற்றுக் குழப்பமானதுதான். எல்லா புறஜாதியாரும் இரட்சிக்கப்படுவதுதான் புறஜாதியாரின் நிறைவு என்று பொருள்கொள்ளமுடியாது. தேவன் யூதரல்லாதவர்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள ஜனங்கள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாக வேண்டும் என்று தேவன் தீர்மானம் செய்திருப்பதுபோல் தெரிகிறது. அந்த எண்ணிக்கையில் ஒன்று குறைவுபட்டாலும், அதை நிறைவு என்று சொல்லமுடியாது. அந்த எண்ணிக்கைக்கு மேலாகவும் போகவாய்ப்பில்லை, **புறஜாதியாரின் நிறைவு ஏற்படும் அந்த நாளில் அந்த வினாடியில் பெந்தெகொஸ்தே நாளில் துவங்கிய சபையின் காலம் முடிவடைகிறது.** யூதரல்லாத புறஜாதியாரில் கடைசி பாவி மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை தன்னுடைய சொந்த இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்ளும் அந்த நிமிடத்திலேயே அவர்களின் நிறைவு ஏற்படுகிறது. சபையின் சரித்திரம் நிறைவடைகிறது.

அந்த நிமிடத்தில் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய மணவாட்டி சபையை ஏற்றுக்கொள்ளும்படியாக மத்திய வானத்தில் வந்து இறங்குவார். இரகசிய வருகையின்போது என்ன சம்பவிக்கிறது என்பதை பவுல் இவ்விதமாக அறிவிக்கிறார்: "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய்

எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (1 தெச 4:16,17).

இவ்வாறு புறஜாதியாரின் நிறைவு ஏற்பட்டு, கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாக மாறிவிட்டவர்கள் வருகையில் எடுத்துக்கொள்ளப்படும் நாள்வரை மட்டுமே இஸ்ரவேலரின் கடினப்பட்ட நிலை நீடிக்கும் என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்படுகிறது. சபை எடுத்துக்கொள்ளப்பட்டதும் உலகில் அந்திக் கிறிஸ்துவின் ஏழு ஆண்டுகால அரசாட்சி உதயமாகிறது. இந்த நாட்களில், முக்கியமாக இந்த அரசாட்சியின் பின்பகுதியில் இஸ்ரவேலர் மத்தியில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாகியிருக்கும். அர்மகெதோனில் பூமியின் ராஜாக்களோடும் அந்திக்கிறிஸ்துவோடும் யுத்தம் பண்ணும்படியாக கிறிஸ்து தன்னுடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்ட மணவாட்டி சபையோடு வெள்ளைக்குதிரையில் வந்து இறங்குவார். இந்த பகிரங்க வருகையோடு பூமியில் புறஜாதியாரின் காலம் முடிவடையும் (லூக்கா 21:24).

புறஜாதியாரின் நிறைவு என்ற வார்த்தையும், புறஜாதியாரின் காலம் என்ற வார்த்தையும் இரண்டு வித்தியாசமான காரியங்களைக் குறிப்பிடுகிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். எருசலேம் பட்டணம் புறஜாதியாரின் ஆளுகைக்குள் இருக்கும் நாட்களே 'புறஜாதியாரின் காலம்' என்று வேதத்தில் குறிப்பிடப்படுகிறது. கிறிஸ்துவின் பகிரங்க வருகைக்குப்பின் எருசலேம் யூதர்களின் ஆளுகைக்குள்ளாக வரும். ஆயிரவருட அரசாட்சியின் காலத்தில் எருசலேம் உலகத்தின் தலைநகரமாக விளங்கும்.

இந்தப் பிரகாரம் இஸ்ரவேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள், மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு விலக்குவார் என்றும் (ரோம் 11:26)

ரோமர் நிருபத்தில் காணப்படும் தீர்க்கதரிசன வசனங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. ரோமர் 10:1ல் "இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது" என்று பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். அதைத் தொடர்ந்து அந்த விண்ணப்பத்துக்கு பதில் பெற்றவராய் இந்த வசனத்தில் இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்கிறார். புறஜாதியாருடைய நிறைவு குறித்து முந்தின வசனத்தில் தியானித்தோம். அவ்வண்ணமாகவே இஸ்ரவேலருடைய நிறைவு உண்டாவதைக் குறித்த தீர்க்கதரிசனமாக இந்த வசனம் அமைகிறது. இதை நடப்பிப்பவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே என்பதும், அவரே நேரடியாக சீயோனிலிருந்து வந்து

யாக்கோபின் அவபக்தியை விலக்கிப்போடுவார் என்பதையும் அறிந்துகொள்கிறோம். அவர்களில் காணப்பட்ட கடினமான மனதை தேவனே செப்பனிடுகிறார். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மேசியாவை எதிர்பார்த்துக் கொண்டிருந்த இஸ்ரவேலர் அவரை முகமுகமாகக் காண்பார்கள். ஒரு ஆட்டுக்குட்டியானவராக அல்ல, கர்ச்சிக்கும் யூதகோத்திரத்து சிங்கமாக வெளிப்படும்போது அவர் யூதர்களின் ராஜாவாக அங்கீகரிக்கப்படுவார்.

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன வசனங்களின் அடிப்படையில் பவுல் பேசுகிறார். ஏசாயா 59:20 சொல்கிறது: "மீட்பர் சீயோனுக்கும், யாக்கோபிலே மீறுதலைவிட்டுத் திரும்புகிறவர்களுக்கும் வருவார்". சங்கீதம் 14:7 சொல்கிறது: "சீயோனிலிருந்து இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு வருவதாக; கர்த்தர் தம்முடைய ஜனத்தின் சிறையிருப்பைத் திருப்பும்போது, யாக்கோபுக்குக் களிப்பும், இஸ்ரவேலுக்கு மகிழ்ச்சியும் உண்டாகும்". "கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார்" (சங் 110:2).

இஸ்ரவேலரின் அவிசுவாசத்தை நீக்கும்படியாக மீட்கிறவர் சீயோனிலிருந்து வருவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சீயோன் என்பது எருசலேமிலுள்ள நான்கு குன்றுகளில் ஒன்று. எபூசியருக்குச் சொந்தமாயிருந்த இந்த நிலப்பகுதியை தாவீது கைப்பற்றினார் (2 சாமு 5:6,7), அங்கே தேவாலயம் கட்டப்பட்டபின் எருசலேம் சீயோன் என்று அழைக்கப்பட்டது (ஏசாயா 2:3). உலகின் கடைசி நாட்களில் சீயோன் மலையின் மேல் ஆட்டுக்குட்டியானவரும், அவருக்கு முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரையும் வெளிப்படுத்தின விசேஷம் 14: 1-4ல் யோவான் தரிசனமாகக் காண்கிறார்.

இஸ்ரவேலர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள் என்ற பவுலின் அறிவிப்பு வேதபண்டிதர்களிடம் சில குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. அந்த வசனத்தில் யாக்கோபின் அவபக்தி நீக்கப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 'இஸ்ரவேலர்' என்ற வார்த்தை ஆபிரகாமின் மாமிசத்தின்படி சந்ததிகளான யூதர்களை மட்டும் குறிப்பிடாமல் ஆபிரகாமின் விசுவாசத்தை உடையவர்களாகிய யூதரல்லாதவர்களையும் (ஆவிக்குரிய இஸ்ரவேல்) குறிப்பிடுவதாக, அகஸ்டின், லூத்தர் முதலிய சில வேதபண்டிதர்கள் கருதினார்கள். ஆனால் இந்த அதிகாரத்தின் மற்ற வசனங்களை கருத்திற்கொண்டு பார்ப்போமானால், இஸ்ரவேலர் என்ற வார்த்தை புறஜாதியார் அல்லாத யூத இனத்தைச் சேர்ந்த இஸ்ரவேலரை மட்டுமே குறிப்பிடுகிறது என்பதை சந்தேகத்துக்கிடமின்றி

அறிந்துகொள்ளலாம். இஸ்ரவேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள் என்பது எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படுவார்கள் என்ற Universal Salvation கொள்கையை அறிவிப்பதாக எடுத்துக்கொள்வது தவறான உபதேசம்.

உபத்திரவ காலத்தின்போது தன்னுடைய ஜனங்களை அந்திக்கிறிஸ்துவின் உபத்திரவங்களிலிருந்து இரட்சிக்கும்படியாக வருவார் என்றும் (ஏசாயா 63 : 1-5, யோபு 19:25-27) அந்த வேளையில் யாக்கோபின் அவபக்தி நீக்கப்படும் என்றும் பொதுவாகக் கருதப்படுகிறது. தேவன் அதை எவ்வாறு செய்வார்? சகரியா 13:9ல் இவ்வாறு வாசிக்கிறோம், "வெள்ளியை உருக்குகிறது போல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறது போல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுது கொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள். நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின் மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறது போல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்" (சக 12:10).

கிறிஸ்துவுக்கு விரோதமாகச் செயல்பட்ட பவுல் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் அவரை தரிசித்ததின் மூலமாக மனந்திரும்பி அவருடைய ஊழியக்காரனாக எவ்வாறு மாறினாரோ, அவ்வண்ணமாகவே, தாங்கள் கொலை செய்த மீட்பரை, அந்திக்கிறிஸ்துவின் ஆட்சிகாலத்தில் ஒலிவமலையிலே தரிசிக்கும் சிலாக்கியத்தை யூதர்கள் பெறுவார்கள். இது அவருடைய பகிரங்க வருகையின் ஒரு பகுதியாக இருக்கும் என்பது புலனாகிறது. அவர்கள் தன் கையில் சிலுவை ஆணியினால் ஏற்பட்ட வடுக்களைக் குறித்து கேட்கும்போது, அவர்கள் மனம் வேதனைப்படக்கூடாது என்பதற்காக "என் சிநேகிதரின் வீட்டிலே காயப்பட்டதினால் உண்டானவைகள்" (சக 13:6) என்று மீட்பர் பதில் சொல்வார். இதன் விளைவாக இஸ்ரவேலர், ஒரு தேசம் என்ற முறையில் மேசியாவை ஏற்றுக்கொள்வார்கள். உலகமெங்கும் கிறிஸ்துவின் ஆயிரவருஷ அரசாட்சி உதயமாகும். "யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்" (ஏசாயா 27:6) என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும். சகரியா 14:8-11 வாசித்துப் பாருங்கள்.

கடைசி நாட்களில் இஸ்ரவேலுக்கு ஒரு மகிமையான எதிர்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது என்பதை பல வேத வசனங்கள் அறிவிக்கின்றன. (ஏசாயா 2:2-5; 19:24, 25; 25:6; 30;18,19; 40:11,31; 65:17, எரே 21:10-12; 46:27,28; எசே 20:34-40; 28:25,26; 24:20; 36:8-16; 37:21-28; 39:25, யோவேல் 3:1-2,17,20,21 ஆமோஸ் 9:9-15, ஓப 17-21, மீகா 4:3-7; 7:18-20, செப 3:19,20) ஆனாலும் கிறிஸ்துவின் பகிரங்க வருகையின் போது பூமியில் இருக்கும் அத்தனை இஸ்ரவேலரும் மீட்டுக் கொள்ளப்படுவார்கள் என்று எடுத்துக் கொள்ள முடியாது. அந்திக்கிறிஸ்துவின் ஆட்சியின் பின்பகுதியில் அவர்கள் மிகப்பெரிய உபத்திரவத்தைச் சந்திப்பார்கள். சகரியா 13:8,9 சொல்கிறது : "தேசமெங்கும் சம்பவிக்கும் காரியம் என்னவென்றால், அதில் இருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டு போவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும், அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன். அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள். நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்".

இஸ்ரவேலைப் பொறுத்தவரை இரட்சிப்பு என்ற வார்த்தை பொதுவாக ஆத்தும மீட்பையும் நித்திய பேரின்ப பாக்கியத்தையும் குறிப்பிடாமல் உலக ரீதியான மேன்மையையும், சிலாக்கியங்களையும், ஆளுகை அதிகாரங்களையும் குறிப்பிடுகிறது. ஆனாலும் இஸ்ரவேலின் பல்வேறு கோத்திரங்களிலிருந்து முத்திரை போடப்பட்டு தெரிந்து கொள்ளப்பட்ட 1,44,000 யூத ஊழியக்காரர்களும் (வெளி 7) இரட்டு வஸ்திரமணிந்த இரண்டு சாட்சிகளும் (வெளி 11) யூதர்கள் மத்தியில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாக காரணமாக இருப்பார்கள் என்பது நிச்சயம்.

எசேக்கியேலின் எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்கின் தரிசனம் இஸ்ரவேலின் கடினப்படுத்தப்பட்ட நிலையையும், அது மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவதையுமே முன்னறிவிக்கிறது (அதிகாரம் 37). உலர்ந்து போய் கிடக்கும் எலும்புகள் மீண்டும் உயிரடையும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனாலும் கர்த்தர் அந்த உலர்ந்த எலும்புகளிடம் சொல்கிறார்: "நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள் மேல் நரம்புகளைச் சேர்த்து, உங்கள் மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியைக் கட்டளையிடுவேன்; அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்கள்" (வசனம் 5,6) மரித்த இஸ்ரவேலர் தாங்கள் உயிர்ப்பிக்கப்படும்போது தங்கள் முற்பிதாக்களின் தேவனை அறிந்து கொள்வார்கள்.

நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. (ரோமர் 11:27)

ஏசாயா 59:20ன் தொடர்ச்சியாக 21-வது வசனத்தில் சொல்லப்படும் உடன்படிக்கையைக் குறித்து பவுல் இதே வசனத்தில் பேசுகிறார். "உன் மேலிருக்கிற என் ஆவியும், நான் உன் வாயில் அருளிய என் வார்த்தைகளும், இதுமுதல் என்றென்றைக்கும் உன் வாயிலிருந்தும், உன் சந்ததியின் வாயிலிருந்தும், உன் சந்ததியினுடைய சந்ததியின் வாயிலிருந்தும் நீங்குவதில்லையென்று கர்த்தர் சொல்லுகிறார்; இது எனக்கு அவர்களோடிருக்கும் என் உடன்படிக்கையென்று கர்த்தர் சொல்லுகிறார்".

இஸ்ரவேலரோடு தேவன் செய்துகொள்ளும் உடன்படிக்கையைக் குறித்து எரேமியா 31:31-34, 32:37-42 ஆகிய வசனங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது: நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எரே 31:33), "அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை" (எரே 32:40) தேவன் பண்ணுவதாகச் சொல்லுகிறார்.

எபிரெயர் 8-வது அதிகாரத்திலும் கடைசி நாட்களில் தேவன் யூதர்களோடு செய்துகொள்ளவிருக்கும் உடன்படிக்கையைப் பற்றி சொல்லப்படுகிறது. **இந்த முறை தேவன் தன்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் எழுதுவதினால் அது நிரந்தரமானதாய் இருக்கும்.** முந்தின உடன்படிக்கை கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்ததை அறிவோம். "இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில்: இஸ்ரவேல் குடும்பத்தோடும், யூதா குடும்பத்தோடும் நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங்காலம் வருகிறது. அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள்

தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எபி 8:8-10) "ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன்" (வசனம் 12).

இஸ்ரவேலருடைய அவிசுவாசமாகிய பாவத்தை நீக்கும்போது தேவன் செய்துகொள்ளும் உடன்படிக்கையைக் குறித்து எசேக்கியேல் 37:21-28லும் சொல்லப்பட்டிருக்கிறது. "நான் அவர்களோடே சமாதான உடன்படிக்கை செய்வேன்; அது அவர்களுக்கு நித்திய உடன்படிக்கையாயிருக்கும்; நான் அவர்களை நிலைப்படுத்தி, அவர்களை வர்த்திக்கப்பண்ணி, அவர்கள் நடுவிலே என் பரிசுத்த ஸ்தலத்தை என்றென்றைக்கும் ஸ்தாபிப்பேன். என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (வசனம் 26,27).

இந்த உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களை இஸ்ரவேலர் அந்திக்கிறிஸ்துவின் உபத்திரவகாலத்துக்குப் பிறகுதான் பெற்றுக்கொள்ளப்போகிறார்கள். அதைக்குறித்து எரேமியா 30:7 சொல்கிறது, "அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்".

சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள்நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள்; தெரிந்துகொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 11:28)

கிறிஸ்துவின் மூலமாக இலவசமாக ஒருமனிதன் பெற்றுக்கொள்ளும் இரட்சிப்பைக் குறித்து சுவிசேஷம் பேசுகிறது. ஆனால் இந்த நற்செய்தியை யூதர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்கள். மேசியாவாக வெளிப்பட்ட கிறிஸ்துவை கொலைசெய்து, அதன் விளைவாக தேவனுடைய எதிரிகளாகிவிட்டார்கள். அவர்களுடைய முரட்டாட்டம் யூதரல்லாதவர்களுக்கு உதவியாய் அமைந்தது. இரட்சிப்பின் வாசல்களை தேவன் அவர்களுக்குத் திறந்தார். அதே நேரத்தில் தன்னுடைய எதிரிகளாகிவிட்ட இஸ்ரவேலரையும் அவர் நேசிக்கத் தவறவில்லை. ஏனென்றால் அவர்களுடைய பிதாக்களுக்கு, அவர்களுடைய சந்ததியை தன்னோடு சேர்த்துக்கொண்டு, தன்னுடைய ஜனமாக வைத்துக்கொள்வேன் என்று அவர் வாக்குக்கொடுத்திருக்கிறார். தேவனுடைய தெரிந்துகொள்ளுதலின் அடிப்படையில் அவர்கள்

அன்புகூரப்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீது முதலான முற்பிதாக்களுடன் தேவன் அவர்கள் சந்ததியாரைக் குறித்து நிபந்தனைகளற்ற நித்திய உடன்படிக்கை செய்து கொண்டபோது, அந்த சந்ததியார் தன்னைவிட்டு வழிவிலகிப்போவார்கள் என்பதை நிச்சயமாகவே அறிந்திருந்தார். ஆகையினால்தான் உபாகமம் 28,29,30 அதிகாரங்களில், மோசே அவர்கள் பெறவிருக்கும் ஆசீர்வாதங்களோடு சாபங்களையும் குறித்து பேசினார். "இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" (உபா 30:15). அவர்களுடைய சகல முரட்டாட்டத்தின் மத்தியிலும் தான் தன்னுடைய ஜனங்களுக்கு வாக்குபண்ணிய காரியங்களை அவர் மறந்துவிடவில்லை. ஆபிரகாமிடம் "உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும், உனக்குப்பின் தலைமுறை தலைமுறையாக வரும் உன் சந்ததிக்கும் நடுவே, என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதி 17:7) என்ற வார்த்தையினிமித்தம் இஸ்ரவேல் புத்திரரை நேசிக்கிறவராயிருக்கிறார். உபாகமம் 4:37; 10:15 வாசித்துப்பாருங்கள்.

ஏசாயா 65:8,9ல் கர்த்தர் சொல்கிறார்: "ஒரு திராட்சக்குலையில் இரசம் காணப்படும்போது: அதை அழிக்காதே, அதிலே ஆசீர்வாதம் உண்டென்று சொல்லுகிறபடி, நான் என் ஊழியக்காரரினிமித்தம் அனைத்தையும் அழிக்காதபடி செய்வேன். யாக்கோபிலிருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரையும் எழும்பப்பண்ணுவேன்; நான் தெரிந்து கொண்டவர்கள் அதைச் சுதந்தரித்துக்கொண்டு, என் ஊழியக்காரர் அங்கே வாசம்பண்ணுவார்கள்". தன்னுடைய ஊழியக்காரரினிமித்தம் அவர்கள் சந்ததியார்மேல் தேவன் வைத்திருக்கும் அன்பு ஒருபோதும் மாறாதது.



நாம் தியானித்த வசனத்தை மேற்கண்ட படத்தின் உதவியோடு அறிந்துகொள்ளுங்கள். தேவன் வழங்கிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாததினிமித்தம் யூதர்கள் தேவனுடைய பகைஞர்களாகவே கருதப்படவேண்டும். ஆனால் அவர்களைக் குறித்து தேவர் அவர்களுடைய முற்பிதாக்களிடம் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறார். அதினிமித்தம் அவர்கள் தேவனால் அன்புகூரப்படுகிறார்கள்.

தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே. (ரோமர் 11:29)

தேவன் தன்னுடைய கிருபைவரங்களையும், அழைப்பையும் ஒருபோதும் மாற்றிக்கொள்வதில்லை என்ற திட்டவட்டமான அறிவிப்புக்காக தேவனுக்கு நன்றி சொல்வோம். ரோமர் நிருபத்தில் மிகவும் முக்கியமான அறிவிப்புகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது. "மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல" (எண் 23:19). "தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும்" (பிர 3:14). "இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8). "அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை" (யாக் 1:17). தாவீது சொல்கிறார்: "நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை" (சங் 102:27). தேவன் சொல்கிறார்: "நான் கர்த்தர், நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை" (மல் 3:6). இந்த வசனத்தின்படி தேவன் தன்னுடைய வரங்களையும் அழைப்பையும் குறித்து மனம் மாறாதவர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

தேவன் மாறாதவராய் இருக்கும்போது அவர் வழங்கும் கிருபை வரங்களும், அழைப்பும் மாறாதவைகளாகத்தான் இருக்கமுடியும். கிருபை வரங்கள் என்று பவுல் சொல்லும்போது 1 கொரிந்தியர் 12ல் சொல்லப்படும் ஒன்பது ஆவிக்குரிய வரங்களை மாத்திரம் குறிப்பிடாமல், பாவமன்னிப்பு, பரிசுத்தமாக்கப்படுதல், நித்திய ஜீவன் ஆகியவற்றையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். ரோமர் 9:4,5ல் சொல்லப்பட்ட புத்திரசுவிகாரம், மகிமை, உடன்படிக்கைகள், நியாயப்பிரமாணம், தேவாராதனை, வாக்குத்தத்தங்கள் ஆகியவைகளும் தேவன் வழங்கும் கிருபை வரங்களே. நாம் அடையவிருக்கும் நித்திய ஜீவனும் கிருபை வரங்களில் ஒன்றுதான் (ரோமர் 6:23). "கிருபைவரமோ அநேக குற்றங்களை நீக்கி நீதி விளங்கும் தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறது" (ரோமர் 5:16)

தேவனுடைய அழைப்பைக் குறித்து ரோமர் 8:30ல் விளக்கமாகப்

பார்த்தோம். தேவனிடமிருந்து ஒரு அழைப்பு வெளிப்படுமானால் அது மாறாததாக இருக்கும் என்பதை நம்பலாம். கிருபையும் அழைப்பும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. **தன்னுடைய வரங்களையும் அழைப்பையும் அவ்வப்போது தேவன் மாற்றிக்கொண்டிருப்பாரானால் தேவன் தேவனாக இருக்கமுடியாது.** அவர் சொல்கிறார்: "கர்த்தராகிய நான் இதைச் சொன்னேன், இது நிறைவேறும், நான் இதைச் செய்வேன்; நான் பின்வாங்குவதும், தப்பவிடுவதும், மனஸ்தாபப்படுவதும் இல்லை" (எசே 24:14).

தேவனுடைய வரங்களும் அழைப்பும் மாறாதவை என்று சொல்லும்போது, அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஒருநாளும் புறக்கணிக்கப்படுவதில்லை என்ற சத்தியம் உறுதிப்படுத்தப்படுகிறது. அவர் கொடுக்கும்போது அதை கஞ்சத்தனமாகவும் கொடுப்பதில்லை. தற்காலிகமாகவும் எவருக்கும் கொடுப்பதில்லை. அவ்வப்போதும் கொடுப்பதில்லை. கொடுத்துவிட்டு பிறகு திரும்பப் பெற்றுக்கொள்வதும் இல்லை.

அழிவின் பாதையில் சென்றுகொண்டிருக்கும் ஒரு பாவ மனிதனை உயிர்ப்பிக்கும்போது, தன்னுடைய நாமத்தினிமித்தமும், தமக்கு மகிமையை வரப்பண்ணும்படியுமே அதைச் செய்கிறார். தன்னால் உயிர்ப்பிக்கப்பட்ட ஆத்துமாவை அழிவுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார் என்றால் அவர் தன்னுடைய முயற்சியில் தோல்வி அடைந்துவிட்டார் என்றுதான் பொருள். தேவன் தோல்வி அடையக்கூடும் என்பதையும் சாத்தான் வெற்றிச் சிறக்கக்கூடும் என்பதையும் கற்பனைசெய்துகூட பார்க்கமுடியாது. தேவன் அறியாத, அவர் எதிர்பாராத எந்தவொரு காரியமும் பூமியில் நடப்பதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். எனவே அவ்வப்போது மனம்மாறி, அவ்வப்போது தன்னுடைய திட்டங்களையும் தீர்மானங்களையும் மாற்றிக்கொள்பவர் தேவன் அல்ல. அவரிடத்தில் திருத்தம் என்பதும் இல்லை. அவர் திருத்தப்படக்கூடியவர் அல்ல. அவர் ஒருபோதும் தவறுசெய்வதில்லை.

ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம்பெற்றிருக்கிறது போல (ரோமர் 11:30)

அதிகாரத்தின் முடிவில் 30,31,32 ஆகிய மூன்று வசனங்களில் தான் பலமுறை அறிவித்த சத்தியத்தையே மீண்டுமாக வலியுறுத்தி தேவன்

தன்னுடைய பெரிதான இரக்கத்தினிமித்தம் தன்னுடைய ஜனங்களான யூதர்களை நிரந்தரமான முறையில் புறக்கணிக்கவில்லை என்பதைப் பவுல் உறுதிப்படுத்துகிறார். தேவனை அறியாமல், அவரைத்தேடாமல், அவருக்குக் கீழ்ப்படியாமல் இருந்த புறஜாதியார் (எபே 2:3) இப்போது இஸ்ரவேலர் கீழ்ப்படியாமல் போனதினிமித்தம் இரக்கம் பெற்றிருக்கிறார்கள் என்ற முந்தின வரலாற்றுப் பின்னணியை பவுல் அறிவிக்கிறார்.

அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாமலிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள். (ரோமர் 11:31)

இஸ்ரவேலின் கீழ்ப்படியாமை புறஜாதியார் இரக்கம் பெறுவதற்குக் காரணமாக இருந்தது. புறஜாதியார் கிருபையின் வாசலுக்குள் பிரவேசித்து இரட்சிப்பைப் பெற்று வருகிறார்கள். இஸ்ரவேலரோ இன்னும் கீழ்ப்படியாமைக்குள் அடைக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனாலும் கீழ்ப்படியாதிருந்த புறஜாதியார் இரக்கம் பெற்றுக்கொண்டார்கள் என்பதால், இஸ்ரவேலரும் இரக்கத்தைப் பெறுவார்கள் என்பது உறுதி.

ஒரு வித்தியாசம் இருக்கிறது, புறஜாதியார் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கும்படியாக யூதர்கள் வெளியே தள்ளப்பட்டார்கள். இப்பொழுது இஸ்ரவேலர் மீண்டும் தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிப்பதற்கு உள்ளே இருக்கும் புறஜாதியார் வெளியே தள்ளப்படவேண்டியதில்லை. தேவனுடைய இரக்கத்தினிமித்தம் அவர்கள் இரட்சிக்கப்படுவார்கள். யூதரானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, அவர்களுடைய இரட்சிப்பு, தேவனுடைய இரக்கத்தையே அடிப்படையாகக் கொண்டது, அவர்களுடைய தகுதியை அல்ல.

ஒருவன் இரக்கம் பெறுகிறான் என்று சொல்லும்போதே அவன் குற்றவாளியாக இருந்தான் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. ஏனென்றால் நீதிமானுக்கு ஒருவனும் இரக்கம் பாராட்டவேண்டியதில்லை. யூதரானாலும் சரி, யூதரல்லாதவர்களானாலும் சரி, எல்லோருக்குமே இரக்கம் தேவைப்படுகிறது. அதனால்தான் பவுல் சொல்லுகிறார்: "இப்படியிருக்க மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே" (ரோமர் 3:27).

முக்கியமான சத்தியம் அடங்கியுள்ள 30, 31 வசனங்களின் வார்த்தைகளின் அமைப்பு எவ்வளவு அழகாக இருக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

வசனம் 30		வசனம் 31
நீங்கள் (புறஜாதிகள்)	. . .	அவர்கள் (இஸ்ரவேலர்)
முற்காலத்திலே (கிறிஸ்துவை அறியுமுன்பு)	. . .	இப்பொழுது (கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின்)
கீழ்ப்படியாமலிருந்து (துன்மார்க்கமாயிருந்து)	. . .	கீழ்ப்படியாமலிருந்தும் (கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமலிருந்தும்)
இப்பொழுது (சுவிசேஷம் அறிவிக்கப்பட்டபின்)	. . .	பின்பு (புறஜாதியாரின் நிறைவுக்குப்பின்)
அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே (இஸ்ரவேலர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாததினாலே)	. . .	உங்களுக்குக் கிடைத்த இரட்சிப்பினாலே (புறஜாதியாரின் இரட்சிப்பினாலே)
இரக்கம் பெற்றிருக்கிறதுபோல (இரட்சிக்கப்பட்டிருப்பதுபோல)	. . .	இரக்கம் பெறுவார்கள் (இரட்சிக்கப்படுவார்கள்)

பவுல் சொல்லும் காரியம் இதுதான். இஸ்ரவேலரின் அவிசுவாசத்தினிமித்தம் புறஜாதியார் தேவனுடைய அழைப்பைப் பெற்றார்கள். வரும் நாட்களில் இஸ்ரவேலர் அந்த அழைப்பைப் பெற புறஜாதியார் அவிசுவாசத்துக்குள் பிரவேசிக்கவேண்டாம். தேவனுடைய இரக்கம் அதை நடப்பிக்கும்.

எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத்தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள்ளே அடைத்துப்போட்டார். (ரோமர் 11:32)

யூதர்களானாலும் சரி, யூதரல்லாதவர்களானாலும் சரி, இரண்டு கூட்டத்தாருமே தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள்தான். அனைத்து மக்களும் தேவனுக்கு பணிய மறுத்தவர்கள்தான். அனைத்து மக்கள் மீதும் தான் பாரபட்சமின்றி இரக்கம் காட்டவேண்டும் என்பதற்காக அனைத்து மக்களையுமே அவர் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டார் என்கிறார் பவுல். மனித இனம் முழுவதுமே பாவத்தின் அடிமைத்தனத்தில் இருக்கிறது. ஒரு சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட குற்றவாளிகளைப்போல் அவர்கள் காணப்படுகிறார்கள். யூதர்களும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், யூதரல்லாதவர்களும் அடைக்கப்பட்டிருக்கிறார்கள், இருதரத்தாருமே தேவனுடைய இரக்கத்தைப் பெற்றுக்கொண்டாலொழிய சிறையில் இருந்து விடுதலை பெறமுடியாது என்ற பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கிறார்கள். பாவம் அவர்களை வேதனைப்படுத்துகிறது, மனச்சாட்சி அவர்களைக் குற்றப்படுத்துகிறது, நியாயப்பிரமாணம் அவர்களை துன்மார்க்கர் என்று தீர்ப்பளிக்கிறது.

எதற்காக நம் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் தேவன் அடைத்துப்போட்டிருக்கிறார் என்பதைப் பார்த்தீர்களா? நமக்கு நித்திய ஆக்கினைத் தீர்ப்பை வழங்கும்படியாக அல்ல. எல்லார் மேலும் இரக்கம் உண்டாகவேண்டும் என்பதற்காகவே அப்படிச் செய்தார். 30,31,32 ஆகிய வசனங்களில் கீழ்ப்படியாமையைக் குறித்து நான்கு இடங்களில் பவுல் பேசினாலும், அதற்கு இணையாக இரக்கம் என்ற வார்த்தையும் நான்குமுறை சொல்லப்பட்டிருக்கிறது. கீழ்ப்படியாமையின் பின்னணியில் இரக்கம் செயல்படுகிறது - மேற்கொள்கிறது.

மனித இனத்தை தேவன் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டார் என்பதினால் அவர்களுடைய கீழ்ப்படியாமைக்கு தேவன் காரணமாயிருந்தார் என்று சொல்லக்கூடாது. அவர்களுடைய அவிசுவாசத்துக்கும் பாவத்துக்கும் அவர்கள் மட்டுமே காரணமாயிருக்கிறார்கள். சிறையில் அடைக்கப்பட்ட எந்த மனிதனும் அதற்குக் காரணம் தன்னை நியாயந்தீர்த்த நீதிபதிதான் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. அவர்கள் செய்த குற்றத்தினிமித்தம் நீதிபதி அவனை சிறைக்குள் தள்ளியிருக்கிறார் என்பதே உண்மை. தங்களுக்கு விடுதலை உண்டாகுமா என்ற ஆதங்கத்தோடு காத்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் திடீரென்று சிறைச்சாலையின் கதவுகள் திறக்கின்றன. தேவனே அந்த கதவுகளைத் திறக்கிறார். சிறைக்குள் இருந்த இருள் நீங்குகிறது. உள்ளே இருக்கும் அத்தனைபேருக்கும் இலவசமான விடுதலையை அவர் அறிவிக்கிறார். வேதனையில் துவண்டுகொண்டிருக்கும் அவர்கள் இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஏனென்றால் அவர்கள் அத்தனைபேருமே தங்கள் குற்றத்தை அறிந்திருந்தார்கள். தங்களுக்கு மன்னிப்பு கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை. ஆனாலும் எல்லாருமே தேவனுடைய நிபந்தனையற்ற இரக்கத்தைப் பெற்றவர்கள் ஆகிறார்கள். கடந்த நாட்களில் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரவேலை விடுவித்த தேவன், வரும் நாட்களில் சாத்தானின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவித்து தன்னுடைய இரக்கத்தை வெளிப்படுத்துவார். எவ்வளவு அருமையாக பவுல் சொல்கிறார்: "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்துஇயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள்" (ரோமர் 3:23,24). அல்லேலூயா!

பவுலின் துதி (வசனம் 33-36)

ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்? (ரோமர் 11:33)

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ரோமர் 1:17) என்பதுதான் தன்னுடைய நிருபத்தில் பவுல் அறிவிக்கும் மிகப்பெரிய வெளிப்பாடு. இந்த சத்தியம் ஏற்கனவே பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளினால் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அந்த வசனத்தின் விளக்கவுரையாக ரோமர் நிருபம் அமைகிறது. அதற்கு இணையான ஒரு முக்கியமான வெளிப்பாட்டை பவுல் இந்த அதிகாரத்தில் கொடுக்கிறார். தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர் தங்கள் அவிசுவாசத்தினிமித்தம் புறக்கணிக்கப்படுவதையும், அந்த இடத்தைப் புறஜாதியார் பெற்றுக்கொள்வதையும் அறிவித்த பவுல் கடைசிக்காலத்தில் மனித இனம் முழுவதையும் ஒட்டுமொத்தமாக கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப்போட்டு, மனித இனம் முழுவதற்கும் இரக்கத்தை வெளிப்படுத்தவிருப்பதை அறிவித்ததைப் பார்த்தோம்.

மீண்டுமாக இஸ்ரவேலில் இரட்சிப்பு உண்டாகியிருக்கும் என்ற வெளிப்பாட்டினிமித்தம் பவுல் எவ்வளவு மனமகிழ்ச்சி அடைகிறார் என்றால் உடனடியாக தேவனைப் புகழ்ந்து பாடாமல் அவரால் இருக்கமுடியவில்லை. அதே நேரத்தில் சபையாரை வாழ்த்தி ஆசீர்வதிக்கவும் ஆரம்பிக்கிறார். இத்தகைய ஆசீர்வாதமான வார்த்தைகளை தொடர்ந்து 15:33; 16:20; 16:24; 16:26-27 ஆகிய வசனங்களிலும் காண்கிறோம்.

முதலாவதாக பவுல் தேவனுடைய ஐசுவரியத்தைக் குறித்துப் பேச ஆரம்பித்து, அதைக்குறித்து மனிதன் ஆராய்ந்து பார்க்கவேமுடியாது என்கிறார். அவருடைய ஐசுவரியம் மிகவும் பெருமை நிறைந்தது. தேவனுடைய பொறுமை, நீடிய சாந்தம் ஆகியவற்றின் ஐசுவரியத்தைக் குறித்து ரோமர் 2:4லும், அவருடைய மகிமையின் ஐசுவரியத்தைக் குறித்து ரோமர் 2:23லும், அவர் ஐசுவரியசம்பன்னராயிருப்பதைக் குறித்து ரோமர் 10:12லும் பார்த்திருக்கிறோம். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தைக் குறித்து எபேசியர் 1:7லும், இரக்கத்தின் ஐசுவரியத்தைக்குறித்து எபேசியர் 2:4லும், மகிமையின் ஐசுவரியத்தைக்குறித்து எபேசியர் 3:19லும், வாசிக்கிறோம். "என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்" (பிலிப் 4:19).

இரண்டாவதாக - தேவனுடைய ஞானம், அறிவு ஆகியவற்றின் ஆழம் எத்தகையது என்பதை பவுல் பாராட்ட ஆரம்பிக்கிறார். "கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார்" (நீதி 3:19) என்று வாசிக்கிறோம். தானியேலோ : "அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும்" (தானி 2:22) என்கிறார். பவுல் சொல்கிறபடி "அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ 2:3). நித்தியத்துக்கடுத்த காரியங்களையும் தேவன் அறிவார் (ஞானம்), உலகத்துக்கடுத்த காரியங்களையும் அவர் அறிவார் (அறிவு).

மூன்றாவதாக தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அளவிட முடியாதவை என்கிறார் பவுல். அவருடைய நியாயத்தீர்ப்பில் இருக்கும் நீதியை நாம் அறிந்துகொள்ளாமல் இருக்கலாம் (ரோமர் 9:22,23). யோபு 5:9 சொல்கிறது: "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்". "நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" (சங் 97:2).

நான்காவதாக தேவனுடைய வழிகளைப்பற்றி பவுல் தேவனைத் துதிக்கிறார். "அவருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்" (வெளி 15:3). "தேவனுடைய வழி உத்தமமானது" (சங் 18:30). "கர்த்தர் தமது வழிகளிலெல்லாம் நீதியுள்ளவரும், தமது கிரியைகளிலெல்லாம் கிருபையுள்ளவருமாயிருக்கிறார்" (சங் 145:17). "அவருடைய வழிகள் நியாயமானவைகள்" (தானி 4:37). "கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள்" (ஓசியா 14:9). ஏசாயா 55:9, யோபு 23:8-10, அப் 13:10 வாசித்துப்பாருங்கள். ஆசாப் சொல்கிறார் : "உமது வழி கடலிலும்,

உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந்தது; உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று" (சங் 77:19).

கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்? (ரோமர் 11:34)

இந்த வேதவசனத்திலும், அடுத்துவரும் வசனத்திலும் மூன்று கேள்விகளை பவுல் சபைக்கு முன்பாக வைக்கிறார். மூன்றுக்குமே ஒருவரும் இல்லை என்றுதான் பதில் சொல்லவேண்டியதிருக்கிறது.

1. கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? (வசனம் 34)
2. கர்த்தருக்கு ஆலோசனைக்காரனாக இருந்தவன் யார்? (வசனம் 34)
3. தனக்குப் பதில் கொடுக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? (வசனம் 35)

ஏசாயா 40:13,14 வசனங்களின் ஆதாரத்தைக் கருத்திற்கொண்டு பவுல் பேசுகிறார். "கர்த்தருடைய ஆவியை அளவிட்டு, அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்து, அவருக்குப் போதித்தவன் யார்? தமது அறிவை உணர்த்தவும், தம்மை நியாயவழியிலே உபதேசிக்கவும், தமக்கு ஞானத்தைக் கற்றுக்கொடுக்கவும், தமக்கு விவேகத்தின் வழியை அறிவிக்கவும், அவர் யாரோடே ஆலோசனை பண்ணினார்?" 1 கொரி 2:16ல் பவுல் சொல்கிறார், "கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்?" "கர்த்தருடைய ஆலோசனையில் கூடநின்று, அவருடைய வார்த்தையைக் கேட்டறிந்தவன் யார்?" (எரே 23:18).

"தேவனுடைய சிந்தையை அறிந்தவன் ஒருவனும் இல்லை. அவருடைய மகத்துவம் பெரிதானது. "ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார்" (யோபு 5:9). சோப்பார் சொல்வதாவது : "தேவனுடைய அந்தரங்க ஞானத்தை நீர் ஆராய்ந்து, சர்வவல்லவருடைய சம்பூரணத்தை நீர் அறியக்கூடுமோ?" (யோபு 11:7). பிரசங்கி சொல்கிறார், "தேவன் ஆதிமுதல் அந்தம்மட்டும் செய்துவரும் கிரியையை மனுஷன் கண்டுபிடியான்" (3:11).

அவருக்கு ஆலோசகனாக இருந்தவன் யார் என்பது பவுல் கேட்கும் இரண்டாவது கேள்வி. உலகத்து ராஜாக்களும், அதிபதிகளும், செல்வந்தர்களும் அவர்கள் எவ்வளவு கற்றறிந்தவர்களாக இருந்தாலும்

பல்வேறு காரியங்களில் தங்களுக்கு ஆலோசனை சொல்ல பலரை நியமித்திருப்பார்கள். ஆனால் தேவனுக்கு ஆலோசனை சொல்ல யாரும் தேவையில்லை. அதனால்தான் அவர் கேட்கிறார்: "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி" (யோபு 38:4), தேவன் இந்த உலகத்தையும், அதின் அண்டசராசரங்களையும் உருவாக்கி, அதில் மனிதனையும், மிருக ஜீவன்களையும், பலவிதமான பறவை, மீன் இனங்களையும் வைத்தபோது யாருடைய ஆலோசனை அவருக்குத் தேவைப்பட்டது? தேவன் சொல்கிறார்: "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். பூமியைப் பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" (ஏசாயா 55:8,9).

பவுல் சொல்கிறார்: "இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. ..... ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறார்" (1 கொரி 3:19,20) தேவனுடைய மகத்துவத்தையும் மேன்மையையும் உணர்ந்துகொள்ளாமல், உலக ஞானத்தின் அடிப்படையில் நாம் தேவன் எப்படி இருப்பார், எப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார் என்பதை முடிவுசெய்துகொள்கிறோம். வேதஅறிவு சபைகளில் குறைந்துகொண்டே இருப்பதினால் வேதம் வெளிப்படுத்தும் தேவன் யார் என்பதை உணர்ந்துகொள்ளாமலே இருக்கிறோம். அதனால்தான் தேவனையே கேள்விகேட்கும் மனிதர்கள் சபையில் காணப்படுகிறார்கள். அவரை நியாயந்தீர்க்கும் முயற்சியில் ஈடுபடும் துணிகரமான மனிதர்களும் உலகில் இருக்கிறார்கள். ஏசாயா சொல்கிறார்: "சகல ஜாதிகளும் அவருக்கு முன்பாக ஒன்றுமில்லை, அவர்கள் சூனியத்தில் சூனியமாகவும், மாயையாகவும் எண்ணப்படுகிறார்கள். இப்படியிருக்க, தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்? எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்" (40:17,18).

தனக்குப் பதில்கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? (ரோமர் 11:35)

இது பவுல் கேட்கும் மூன்றாவது கேள்வி. யோபுவிடம் தேவன் கேட்கிறார்: "தனக்குப் பதில்கொடுக்கப்படும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள்" (41:11). தேவனுக்கு யாரும் எதையும் கொடுத்ததில்லை என்பதினால் எவருக்கும் அவர் எதையும் திருப்பிக் கொடுக்கத்தேவையில்லை. எந்த ஒரு மனிதனும் எந்த ஒரு

காரியத்துக்காகவும் தேவனிடம் உரிமைபாராட்ட முடியாது. அவர் யாருக்கும் எந்த விதத்திலும் கடன்படவும் முடியாது. 1 கொரிந்தியர் 4:7ல் பவுல் சொல்கிறார்: "உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்?"

தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளாத எதையும் நாம் அவருக்குக் கொடுத்ததில்லை. கொடுக்கப்போவதும் இல்லை. தேவனுக்குக் கொடுப்பதைக் குறித்து பலவேளைகளில் நாம் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். தேவனுக்கு நாம் ஆசீர்வாதமாக இருப்பது எப்படி என்று கருத்தரங்குகள் நடத்தி கற்றுக்கொடுக்கும் ஊழியக்காரர்கள் பலர் இன்று காணப்படுகிறார்கள். கற்றுக்கொடுக்கும் ஊழியர்களும், தங்களுடைய முயற்சியினாலும், திறமையினாலும் சாமர்த்தியத்தினாலும் மட்டுமே தேவனுடைய ஊழியங்கள் நடைபெறுவதாக நினைக்கும் விசுவாசிகளும் இன்றைய சபைகளில் பெருகிக் காணப்படுகிறார்கள். தேவாலயத்தைக் கட்டும்படியாக பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், பலவகையான கற்கள், விலையேறப்பெற்ற ரத்தினங்கள், வெண்கற்பாளங்கள், கோமேதகம் முதலியவற்றை சேகரித்து தேவனுக்குக் கொடுத்தபோது தாவீது சொல்கிறார் : "இப்படி மனப்பூர்வமாய்க் கொடுக்கும் திராணி உண்டாவதற்கு நான் எம்மாத்திரம்? எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம்" (1 நாளா 29:14). "எங்கள் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய பரிசுத்த நாமத்திற்கென்று உமக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுகிறதற்கு, நாங்கள் சவதரித்திருக்கிற இந்தப்பொருள்கள் எல்லாம் உமது கரத்திலிருந்து வந்தது; எல்லாம் உம்முடையது" (1 நாளா 29:16).

உபாகமம் 10:14 சொல்கிறபடி: "வானங்களும் வானாதிவானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள்". சங்கீதம் 24:1 சொல்கிறது: "பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது". தேவன் சொல்கிறார், "பூமியும் அதின் நிறைவும் என்னுடையவைகளே" (சங் 50:12).

நாம் அவருக்கு எந்த அளவுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்றால் அவருக்கு நன்றி சொல்லி, அவரை தொடர்ந்து மகிமைப்படுத்திக்கொண்டே இருக்கவேண்டும். "நன்றி, நன்றி, உமக்கு நன்றி" என்று எல்லாரோடும் சேர்ந்து பாடுவது லேசான காரியம். உள்ளத்தின் ஆழத்தில் இருந்து அந்த துதி வெளிப்படுகிறதா? இந்த நாட்களில் தேவனுக்கு நன்றி சொல்லக்கூட நமக்கு நேரமில்லை. ஏதோ

ஒரு துதியின் பாடலை கேசட்டில் போட்டுவிட்டு, யாரோ ஒருவரை தேவனைத் துதிக்கவும் ஆராதிக்கவும் வைத்துவிட்டு அதிலேயே திருப்தி அடைந்துவிடுகிறோம். ஊழியக்காரர்களுக்கு காணிக்கை அனுப்பி அவர்களை நமக்காக ஜெபிக்கவைத்துவிடுகிறோம். தேவனைப் பற்றியும், அவர் நமக்கு என்ன செய்தார் என்பதைப் பற்றியும் மற்றவர்களுக்கு அறிக்கையிடும் போதுதான் தேவன் மகிமைப்படுகிறார் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

தேவனுடைய மகத்துவத்தைக் குறித்து தன்னுடைய நிருபத்தின் இடைப்பகுதியில் பவுல் அறிவிப்பதற்கு காரணம் : இரண்டு முக்கியமான காரியங்களை யூதர்களும், யூதரல்லாதவர்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்று அவர் வாஞ்சிப்பதே. அவை:

1. யூதர்கள் தங்களுடைய சிலாக்கியங்களை தேவன் எடுத்துப்போட்டார் என்பதைக் குறித்து விசனப்படவேண்டியதில்லை. ஏனென்றால் அவற்றை முதலாவது இலவசமாக வழங்கியது அவரே.
2. யூதரல்லாதவர்கள் தாங்கள் பெற்றுக்கொண்ட சிலாக்கியங்களினிமித்தம் யூதர்களைக் குறைவாக நினைக்கக்கூடாது. ஏனெனில் அது யூதரல்லாதவர்களின் தகுதியை அடிப்படையாகக் கொண்டதல்ல.

சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (ரோமர் 11:36)

அதிகாரத்தின் கடைசி வசனத்தில் மூன்று முக்கியமான காரியங்கள் சொல்லப்படுகின்றன.

1. சகலத்தையும் உருவாக்கினவர் தேவன் (of Him)
2. சகலமும் அவரால் இயக்கப்படுகின்றன (through Him)
3. சகலமும் தொடர்ச்சியாக அவருக்காக செயல்படுகின்றன (to Him)

சகலத்தையும் உருவாக்கியவர் தேவன். வேதத்தின் முதல் வசனம் சொல்கிறது: "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"

(ஆதி 1:1). தாவீது சொல்கிறார்: "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது" (சங் 102:25). "நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வசேனைகளையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்" (நெகே 9:6). இன்னும் யோபு 26:7, சங் 104:5, ஏசாயா 40:28, 45:12; 48:13, அப் 4:24; 7:50; 14:15, எபி 11:3 வாசித்துப்பாருங்கள்.

தான் சிருஷ்டித்த சகலத்தையும் இயக்கிக்கொண்டிருப்பவரும் தேவனே. பரலோகத்தில் இருபத்துநான்கு மூப்பர்களும் தேவனை எவ்வாறு துதிக்கிறார்கள் என்று பாருங்கள்: "தேவரீர், மகிமையையும், கனத்தையும், வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது" (வெளி 4:11).

சகலமும் அவருக்காகவே இருக்கிறது. தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவைகளானாலும் சரி, தேவனால் பூமியில் பிரவேசிக்கும்படியாக அனுமதிக்கப்பட்ட காரியங்களானாலும் சரி, சகலமும் அவரை மகிமைப்படுத்துவதாகத்தான் இருக்கும். "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங் 19:1).

"அவருக்கே என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக" என்பதோடு இந்த அதிகாரம் முடிவடைகிறது. தாவீது ஜெபிக்கிறார்: "கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்" (1 நாளா 29:11). சேராபீன்கள் அறிவிக்கின்றன: "பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" (ஏசாயா 6:3).

தேவனுக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாக வேண்டுமானால் கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டியது என்ன என்பதை பவுல் தன் நிருபத்தில் இனிவரும் அதிகாரங்களில் விளக்குகிறார்.

12

கிறிஸ்தவ கடமைகளும் பொறுப்புகளும்

இந்த அதிகாரத்திலிருந்து ரோமர் நிருபத்தில் ஒரு புதிய பகுதி ஆரம்பமாகிறது. இதுவரை நியாயப்பிரமாணத்தைக் குறித்து கூடுதலாக பேசிவந்த பவுல், இந்த வசனம் துவங்கி 15:13வரை கிறிஸ்துவின் பிரமாணத்தைக் குறித்து (கலா 6:2, 1 கொரி 9:21) பேச ஆரம்பிக்கிறார். "அப்படியிருக்க" என்று பவுல் இந்த அதிகாரத்தை ஆரம்பிக்கும்போது முந்தின 11 அதிகாரங்களிலும் உள்ள 315 வசனங்களிலும் அறிவித்த சத்தியங்களின் ஆதாரத்தில் பவுல் பேசுகிறார் என்பது தெளிவாகிறது. பாவத்தினால் உண்டாகும் அடிமைத்தனத்தையும், கிருபையினால் உண்டாகும் மீட்பையும் குறித்து பவுல் அறிவித்த மூல சத்தியங்களை மீண்டும் நினைவுபடுத்திக்கொள்வோம்.

1. யூதரோ, யூதரல்லாதவர்களோ, எல்லோருமே பாவிகள் (3:23)
2. கிரியைகளினால் அல்ல, விசுவாசத்தினால் மட்டுமே ஒருவன் நீதிமானாக்கப்படுகிறான் (3:28)
3. பரிசுத்த ஆவியானவர் ஒருவனுக்குள் வாசமாயிருப்பதன் விளைவாகவே அவன் பரிசுத்தமாக்கப்படுகிறான் (8:4)
4. தேவனுடைய தெரிந்துகொள்ளுதலே ஒருவனை குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறது (8:9)
5. தேவனுடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களை தேவன் மகிமைப்படுத்தியே

தீருவார் (8:30)

6. தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கும் சக்தி எதுவும் உலகில் இல்லை (8:39)

7. தெரிந்துகொள்ளப்பட்ட இஸ்ரவேலர் புறக்கணிக்கப்பட்டவர்கள்போல் காணப்பட்டாலும் இரட்சிக்கப்படுவார்கள் (11:26)

8. தேவனுடைய கிருபைவரங்களும் அழைப்பும் மாறாதவை (11:29)

ரோமர் 1 முதல் 11 வரையுள்ள அதிகாரங்களில் நமக்கு தேவன் செய்த காரியங்கள் என்னென்னவென்பதை அறிவித்த பவுல், நிருபத்தின் பின்பகுதியில் தேவனுடைய பிள்ளைகள் என்ற முறையில் கிறிஸ்தவர்களாகிய நம்மில் வெளிப்படவேண்டிய நீதி என்ன என்பதைச் சொல்கிறார். **நரக ஆக்கினையிலிருந்து தப்பித்துக்கொண்டு பரலோகத்துக்குள் பிரவேசிப்பதுதான் இரட்சிப்பு என்பதல்ல.** இரட்சிக்கப்பட்ட நாம் பூமியில் பல ஆண்டுகள் ஜீவிக்கிறோம். அப்போது கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற முறையில் நாம் என்ன செய்யவேண்டும் என்ற ஆலோசனைகளை பவுல் தர ஆரம்பிக்கிறார். நமக்காக இரத்தம் சிந்தி, தன் ஜீவனைக் கொடுத்த தேவனை நாம் இந்த பூமியில் மகிமைப்படுத்தும்படியாக நற்கிரியைகளைச் செய்யவேண்டியது அவசியமாகிறது. பவுலின் ஆலோசனைகள் நான்கு சுவிசேஷங்களிலும் காணப்படும் கிறிஸ்துவின் போதனைகளுக்கு இணையானதாக இருப்பதால், ரோமர் 12,13,14,15 ஆகிய நான்கு அதிகாரங்களை "பவுலின் மலைப்பிரசங்கம்" என்று சில வேத பண்டிதர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த அதிகாரத்தில் பவுல் கிறிஸ்தவ கடமைகளையும், பொறுப்புகளையும் கீழ்க்கண்ட மூன்று பகுதிகளாகப் பிரித்துப் பேசுகிறார்.

1. நம்முடைய சரீரத்தோடும் ஆத்துமாவோடும் சம்பந்தப்பட்ட காரியங்கள் (வசனம் 1,2)

2. கிறிஸ்தவ சகோதரர்கள் ஒருவருக்கொருவர் செய்ய வேண்டிய காரியங்கள் (வசனம் 3-13)

3. விரோதிகள் உட்பட நம்முடைய அயலார்களோடு கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கவேண்டிய உறவுமுறைகள் (வசனம் 14-21)

ஜீவபலியும், மறுரூபமாகுதலும் (வசனம் 1-2)

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. (ரோமர் 12:1)

"சகோதரரே" என்று பாசத்தோடும், உரிமையோடும் ரோமாபுரி விசுவாசிகளை அழைக்கும் பவுல், அவர்களுக்கு தான் கட்டளையிடுவதாக அவர்கள் நினைத்துக் கொள்ளக் கூடாது என்பதால் வேண்டிக்கொள்வதாகச் சொல்கிறார். சபையாருக்கு கட்டளையிட பவுல் ஒருபோதும் விரும்புவதில்லை. "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்" (2 கொரி 1:24) என்றுதான் பவுல் குறிப்பிடுகிறார். ஊழியக்காரர்கள் தங்களை விசுவாசிகளுக்கு எஜமான்களாக்கிக்கொள்ளக்கூடாது.

தேவன் நம்மிடம் மிகுந்த இரக்கத்தைக் காட்டியிருக்கிறார். பாவமனிதனுக்கு கிறிஸ்து இரக்கம் பாராட்டியதன் விளைவாகவே இரட்சிப்பு உண்டானது. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதன் கிறிஸ்து மனமகிழ்ச்சி அடையும்படி மூன்று காரியங்களைச் செய்யும்படியாக சபையாரை பவுல் கேட்டுக்கொள்கிறார்.

1. உங்கள் சரீரங்களை பரிசுத்தமாக்குங்கள்.
2. உங்கள் சரீரங்களை உயிர்ப்பலியாகத் தாருங்கள்.
3. உங்கள் சரீரங்களை தேவனுக்கு ஒப்புவியுங்கள்.

இந்த வசனத்தில் சரீரம் என்ற வார்த்தை ஒருவனுடைய சதை, தோல், எலும்பு முதலிய சரீர உறுப்புகளைக் குறிப்பிடாமல் மனிதனுடைய முழு ஆள் தத்துவத்தைக் குறிப்பிடுகிறது என்று கால்வின் கருதுகிறார். சரீரத்தை ஒப்புக்கொடுக்கிறவர்கள் தங்களையே ஒப்புக்கொடுக்கிறவர்கள் ஆகிறார்கள். "உன் இருதயத்தை எனக்குத் தா" (நீதி 23:26) என்றுதான் அவர் கேட்கிறார்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நம்முடைய சரீரங்களை பாவத்துக்கு ஒப்புக்கொடுத்திருந்தோம். மாமிச இச்சைகளை நிறைவேற்றும்படியாக ஒப்புக்கொடுத்திருந்தோம். இரட்சிக்கப்பட்ட பின்பும்

நம் சரீரத்தில் பாவம் வாசமாயிருக்கிறது என்று பார்த்தோம் (ரோமர் 7:20). இப்போது இந்த வசனத்தில் பவுல் நம்மிடம் கேட்கும் காரியம் என்ன? அதே சரீரத்தை தேவனிடம் அவருடைய ஆளுகைக்கு ஒப்புக்கொடுங்கள் என்கிறார்.

நாம் இரட்சிக்கப்படவேண்டும் என்பதற்காக நம் சரீரத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. ஏற்கனவே இரட்சிக்கப்பட்டு விட்டோம். அவரிடமிருந்து எதையோ பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக நாம் நமது சரீரத்தை ஒப்புக்கொடுப்பதில்லை. அவரை நாம் எவ்வளவாக நேசிக்கிறோம் என்பதை வெளிப்படுத்தும்படியாக, ஜீவனுள்ள, உயிர்ப்பலியாக நம் சரீரத்தை ஒப்புக்கொடுக்கவேண்டும். **முதலாவதாகத் தன்னைத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த ஒரு மனிதனால்தான் தன் சரீரத்தை அவருக்கு ஒப்புக்கொடுக்கமுடியும்** (2 கொரி 8:15). இரட்சிக்கப்படாத ஒரு மனிதனால் தேவனுக்கு பிரியமான எதையும் செய்யமுடியாது என்று பார்த்தோம் (ரோமர் 8:8). தேவனை அவனால் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளமுடியாது (யோவான் 4:23).

சரீரம் ஏன் ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்ற கேள்வி எழும்பலாம். ஏனென்றால் நம்முடைய சகல செயல்பாடுகளும் சரீரத்தின் மூலமாகவே நடைபெறுகிறது. நம்முடைய சரீரத்தின் ஐம்புலன்களின் மூலமாகவே நாம் வெளி உலகத்தோடு தொடர்புகொள்கிறோம். எனவே நம்முடைய சரீரம் தேவனுடைய ஆட்சிக்குட்படவேண்டும்.

"அப்படியிருக்க" என்று இந்த வசனம் ஆரம்பிக்கிறது. அப்படியிருக்க என்பது தேவன் உங்களை தமது கிருபையினாலும், இரக்கத்தினாலும், பாவத்தின் வல்லமையிலிருந்தும், ஆதிக்கத்திலிருந்தும் மீட்டுக்கொண்டிருக்க என்று பொருள்படும். அதன் விளைவாக தேவனுடைய ஆலோசனைகளைக் கைக்கொள்வது நம்முடைய கடமையாகிறது. இஸ்ரவேலரோடு சம்பந்தப்பட்ட காரியங்களை 9,10,11 அதிகாரங்களில் பேசிமுடித்துவிட்ட பவுல் இப்போது கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்பட்டு அவருடைய சரீரத்தின் அங்கமாகிவிட்ட திருச்சபையோடு இடைபடுகிறார். உங்களோடும் என்னோடும் பேசுகிறார்.

பழைய ஏற்பாட்டு நாட்களில் இஸ்ரவேல் புத்திரர் பலிசெலுத்த வரும்போது மிருகங்கள் கொல்லப்பட்டு, அதன் இரத்தம் பலிபீடத்தின்மேல் தெளிக்கப்படவேண்டும். அந்த மிருகம் பலிபீடத்தின் அக்கினியில் தகனிக்கப்படவேண்டும். சர்வாங்க தகன பலிகள் எவ்வாறு செலுத்தப்பட்டன என்பதை லேவி 1:3-17 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். இதற்கென்று ஆசாரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் (எபி 5:1)

கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் நாமே ஆசாரியர்களாகிறோம் (1 பேதுரு 2:9). புதிய ஏற்பாட்டு நாட்களில் நாம் மிருகங்களை அல்ல, நம்மையே தேவசமுகத்தில் ஒப்புக்கொடுக்க வேண்டும். நம் சரீரம் ஜீவபலியாக, அதாவது உயிருள்ளபலியாக அர்ப்பணிக்கப்படவேண்டும். பாவத்தினிமித்தம் மரித்த நிலையில் இருக்கும் சரீரம் தேவனுக்கென்று ஜீவனுள்ளதாகக் காணப்படவேண்டும் (ரோமர் 8:10).

கிறிஸ்துவுக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொல்லும் ஊழியக்காரர்களை நாம் பார்க்கமுடியும். தேவன் நம்மை மரிக்கும்படியாக சொல்லவில்லை - பாவம் நிறைந்த உலகில், வைராக்கியமாக உயிர் வாழ்ந்து, அவருக்கு கடைசிவரை சாட்சியாக இருப்பதையே தேவன் விரும்புகிறார். **மோசேயின் பிரமாணத்தின்படி ஒரு மிருகம் மரித்த நிலையில் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறது. நம்மை நாம் உயிரோடு ஒப்புக்கொடுக்கிறோம்.**

ஒரு கிறிஸ்தவன் தன் முழு சரீர பலத்தோடு தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுத்து அவருடைய அடிமையாக, அவருடைய சித்தத்தை மட்டும் செய்கிறவனாக வாழ்வதையே தேவன் விரும்புகிறார். உதாரணமாக நம்முடைய சரீரம் இச்சித்த அசுத்தமான காரியங்களை பார்த்து ரசித்துக் கொண்டிருந்த கண்கள், அதற்கு மரித்து, நாம் பார்க்கவேண்டும் என்று தேவன் விரும்புகிற காரியங்களைப் பார்ப்பதில் ஜீவனுடையதாக இருக்கவேண்டும். நம்முடைய முழு ஆள்தத்துவமும் உயிருள்ள பலியாக தேவனுடைய பலிபீடத்தில் படைப்பதே புத்தியுள்ள ஆராதனையாகும். இத்தகைய அர்ப்பணத்தில் மட்டுமே தேவன் பிரியமாயிருக்கிறார் என்கிறார் பவுல்.

நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் ஆலயமாயிருக்கிறது (1 கொரி 3:16,17; 6:19). "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆதலால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்" (1 கொரி 6:20). நம்முடைய சரீரத்தின் அவயவங்கள் அத்தனையும் தேவனுக்கடுத்த காரியங்களில் அவரை மகிமைப்படுத்தும்படியாக பயன்படுத்தப்படவேண்டும்.

ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பரிமாண நிலையில் தேவன் மனிதனை சிருஷ்டித்தார் (ஆதி 2:7) என்பதினால் மனிதனுடைய இரட்சிப்பில் அவனுடைய சரீரத்துக்கும் பங்கு உண்டு (ரோமர் 8:23, 1 கொரி 6:13; 15:54-56). "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலிப் 3:21) என்று

சொல்லப்பட்டிருக்கிறது. "உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா" (1 கொரி 6:15) என்கிறார் பவுல். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே 5:30). நாம் அவரோடு கொண்டிருக்கும் ஐக்கியம் நிரந்தரமானது.

சரீரத்தை ஜீவபலியாக (கிரேக்க பதம் zao thusia) ஒப்புக்கொடுப்பதின் நியமம் என்ன என்பதை ரோமர் 6:13 விளக்குகிறது. "நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்". பூமியின் மண்ணினாலே தேவனே மனிதனுடைய சரீரத்தை உருவாக்கினார் என்பதனால் அது அவருக்கு சொந்தமானதுதான் என்றாலும், மனிதன் தன்னிச்சையாக அதை அவருக்கு அர்ப்பணம் செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

நீதிக்குரிய ஆயுதங்களாக ஒப்புக்கொடுக்கப்படும் நம் சரீரம் பரிசுத்தமானதாக இருப்பது அவசியம். பழைய ஏற்பாட்டு நாட்களிலும், பலிபீடத்துக்குக் கொண்டுவரப்படும் மிருகங்களில் முடம், குருடு முதலான குறைகள் ஏதும் இருக்கக்கூடாது. உபா 15:21, லேவி 1:3, 10; 3:1; 22:20, 22 வாசித்துப் பாருங்கள். "நம் தேவன் பரிசுத்தர் என்பதினால் பரிசுத்தக் குறைச்சலான எதையும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. "நான் பரிசுத்தர்; ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி 11:45; 19:2, 1 பேதுரு 1:16). "பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்" (1 நாளா 16:29) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே" (எபி 12:14). "உங்களில் அவனவன் தன்தன் சரீரபாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி" (1 தெச 4:5) பவுல் ஆலோசனை தருகிறார். ரோமர் 6:16, 19, 22 மீண்டுமாக வாசித்துப் பாருங்கள். "பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்" (வசனம் 19).

எல்லாவற்றுக்கும் மேலாக நாம் ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பது தேவனுக்கு பிரியமானதாக இருக்கவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். பலவேளைகளில் நாம் மனிதர்களைப் பிரியப்படுத்தும் காரியங்களையே செய்யவிரும்புகிறோம். தேவனுக்குப் பிரியமானதைச் செய்வதே மேலான ஆசீர்வாதத்தைத் தரும். "கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும்" (எபே 5:2) ஒப்புக்கொடுத்தார் என்று பார்க்கிறோம். அதை தேவன் பிரியமாக

ஏற்றுக்கொண்டார். ஒருவன் தன்னை பரிசுத்தமான ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்தாலும், அதைக் கொடுப்பதின் உள் நோக்கம் தவறானதாக இருந்தால் அதில் தேவன் பிரியப்படமாட்டார். "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்" (1 சாமு 16:7) என்கிறார் தேவன். காயினின் காணிக்கையை தேவன் அங்கீகரிக்கவில்லையே. தனக்குப் பிரியமில்லாத காணிக்கைகளையும் பலிகளையும் குறித்து தேவன் பேசுவதை மல்கியா 1:7,8 வாசித்துப்பாருங்கள்.

இன்னொரு காரியத்தையும் நாம் கவனிக்கவேண்டும். பழைய ஏற்பாட்டுப் பலிகள் எல்லாம் தேவனால் நியமிக்கப்பட்டவைதான், பரிசுத்தமானவைதான். ஆனால் இன்று தேவன் அவைகளில் பிரியமாயிருப்பாரா? கிறிஸ்து தன்னையே ஜீவாதாரபலியாக ஒப்புக்கொடுத்தபின், மிருக பலிகளில் தேவன் பிரியமாயிருப்பதில்லை. கத்தோலிக்க திருச்சபையில் செலுத்தப்படும் திருப்பலிகளிலும் தேவன் பிரியமாயிருக்கமுடியாது.

தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்வதாக பவுல் சொல்லுகிறார். வேண்டிக்கொள்வது என்பதற்கு பயன்படுத்தப்படும் parakaleō என்ற வார்த்தை புத்தி சொல்லுதல் என்று பொருள்படும் (ரோமர் 15:32; 16:17). பழைய ஏற்பாட்டு நியமங்கள் இதைச் செய், இதைச் செய்யாதே என்று ஆணையிட்ட போதிலும், மோசே எந்த இடத்திலும் தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு இஸ்ரவேல் சபையை வேண்டிக்கொள்வதாக அறிவிக்கவில்லை. புறஜாதியாரின் அப்போஸ்தலனாகிய பவுலோ, தான் பெற்றுக்கொண்ட அதிகாரத்தின்படி சபைக்கு உத்தரவிடவும் கூடும் என்றாலும் மிகுந்த மனத்தாழ்மையோடு பேசுவதைக் கவனியுங்கள். இன்னொரு இடத்தில் சொல்கிறார்: "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி 1:10). **தேவனுடைய ஊழியக்காரர்களாகிய நாம் பவுலிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய காரியங்கள் அதிகம் உண்டு.**

'இரக்கங்கள்' என்று பன்மையில் பவுல் பேசுகிறார். கிறிஸ்துவின் பாடுமரணத்தின் மூலமாகவே மனித இனம் தேவனுடைய இரக்கங்களை பெறமுடிகிறது. இஸ்ரவேலருக்கும் தேவன் இரக்கம் பாராட்டினார். இன்று புறஜாதியாருக்கும் இரக்கம் பாராட்டுகிறார். "அவருடைய இரக்கங்கள் மகா பெரியது" (2 சாமு 24:14). உபா 4:31, 2 கொரி 1:3, பிலிப் 2:1 வாசித்துப் பாருங்கள். "அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை" (புலம் 3:22). தங்களுடைய தெரிந்துகொள்ளுதலின் மேல் நம்பிக்கை உடையவர்களாய் தேவனுடைய இரக்கத்தை புறக்கணித்த இஸ்ரவேலரின் நிலை சபைக்கும் வந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தோடு பவுல் பேசுகிறார்.

"இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" என்கிறார் பவுல். இந்த ஆராதனையை நாம் தொடர்ச்சியாகச் செய்துகொண்டிருக்கவேண்டும். நியாயப்பிரமாணம் நியமித்திருந்த ஆராதனைகளையும் பலிகளையும் தேவன் இன்று ஏற்றுக்கொள்வதில்லை. தேவன் தான் நியமித்த ஆராதனையையே ஏற்றுக்கொள்கிறார். "இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (எபி 13:16) என்று வாசிக்கிறோம். "இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படி" (1 பேதுரு 2:5) பேதுரு ஆலோசனை தருகிறார். தேவனை ஆராதிக்கும் ஒரு மனிதன் தன்னுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை முழுமையாக அர்ப்பணிக்கிறான். கீழ்ப்படிதலையும் அர்ப்பணிப்பையும் அடிப்படையாகக் கொண்டிராத ஆராதனையை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. ஏசாயா 1:10-17; 58:1-11, ஆமோஸ் 5:21-24 வாசித்துப் பாருங்கள்.

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் *(ரோமர் 12:2)*

இரண்டு ஆலோசனைகளை பவுல் இந்த வசனத்தில் தருகிறார்.

1. வேஷந்தரியாதிருங்கள் (Be not conformed)
2. மறுரூபமாகுங்கள் (Be transformed)

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய சரீரத்தைப் பொறுத்தவரை என்ன செய்யவேண்டும் என்ற ஆலோசனையை முதலாவது அறிவித்துவிட்டு, இரண்டாவது வசனத்தில் அவனுடைய மனதைக் குறித்து பேச ஆரம்பிக்கிறார். வெளிப்படையான சரீரம் ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டால் மட்டும் போதாது. உள்ளான மனதிலும் மாற்றம் தேவை. மனது (mind) என்ற வார்த்தை ஒருவனுடைய ஆத்துமாவைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். ஒரு மனிதனுடைய அறிவு (intellect), சித்தம் (will), உணர்வுகள் (emotions) ஆகியவற்றை அவனுடைய மனதுதான் ஆளுகைசெய்கிறது. நாம் எதை யோசிக்கிறோம், எதை நிர்ணயம் பண்ணுகிறோம், எதை உணர்கிறோம் என்பதைப் பொறுத்தே நம்முடைய வாழ்க்கை அமைகிறது என்பதினால் நம்முடைய மனம் புதிதாகவேண்டும் என்கிறார் பவுல். "ஏனென்றால் அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதி 23:7). எனவே நீங்கள் மறுரூபமாகுங்கள் என்கிறார் பவுல். நம்முடைய

சுய அறிவு, சுயமாமிச உணர்வு, சுயசித்தம் ஆகிய மூன்றிலும் தேவனுடைய சுத்திகரிக்கும் வல்லமை செயல்பட ஒப்புக்கொடுக்கப்படவேண்டும். இவ்வாறு மனம் புதிதாகி மறுரூபப்படுவதால் நாம் பெற்றுக்கொள்ளும் இரண்டு சிலாக்கியங்கள்:

1. பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரியாதிருப்போம். (உலகத்து மனிதர்களைப்போல் மாறமாட்டோம், உலகத்தைக் குறித்த எண்ணங்களை மாற்றிக் கொள்வோம்)

2. நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான தேவனுடைய திருச்சித்தம் என்ன என்பதை பகுத்தறிவோம். (நல்லவை எவை, தேவனுக்கு விருப்பமானவை எவை, என்பதை அறிந்துகொள்வோம்).

மறுரூபமாகுதல் (கிரேக்க பதம் metaporphoō) என்பது ஒரு மனிதனில் உண்டாகக்கூடிய பரிபூரணமான நிரந்தர மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 17:2, மாற்கு 9:2, லூக்கா 9:29 ஆகிய வசனங்களில் கிறிஸ்து மறுரூபமானதையும் அவருடைய முகம் சூரியனைப்போல் பிரகாசமானதையும், உடைகள் ஒளியைப்போல் வெண்மையானதையும் குறித்து சொல்லப்படுகிறது. நாம் தியானிக்கும் இந்த வசனம் உள்ளான மனது புதிதாகிறதினாலே உண்டாகும் மறுரூபமாவதைக் குறித்து பேசுகிறது. "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்" (2 கொரி 3:18). மறுரூபமாகும்போது மட்டுமே தேவனுடைய சாயல் நம்மில் உருவாகிறது.

ஒருவன் தன்னுடைய சுயமுயற்சியினால் தன்னை மறுரூபப்படுத்தமுடியாது. கர்த்தருடைய மகிமை நம்மை மறுரூபமடையச் செய்யும்போது நாம் மறுரூபமடைகிறோம். அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறுகிறோம் (1 யோவான் 3:2) "உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதியமனுஷனைத் தரித்துக்கொள்ளும்போது" (எபே 4:23,24) மறுரூபமாகிறோம். "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (11 கொரி 5:17). இவ்விதமாக முழுமையாக மாற்றமடையாத ஒருவன் கிறிஸ்தவனாயிருக்கமுடியாது.

'பிரபஞ்சம்' என்ற வார்த்தை (கிரேக்க பதம் aion - 1கொரி 1:20;

2:6; 3:8, கலா 1:4) நாம் வாழும் இந்த பாவம் நிறைந்த பொல்லாத உலகத்தையும், உலக மக்களையும், அவர்களுடைய சகலவிதமான பழக்கவழக்கங்களையும், வாழ்க்கை முறைகளையும் பாரம்பரியங்களையும், கலாச்சாரத்தையும் குறிப்பிடுகிறது. 2 கொரி 4:4ல் சாத்தான் இப்பிரபஞ்சத்தின் தேவன் என்று அழைக்கப்படுவதையும், அவன் மனிதர்களுடைய மனதைக் குருடாக்குகிறான் என்பதையும் கவனியுங்கள். முழு உலகமும் சாத்தானின் ஆளுகைக்குட்பட்டதாக இருக்கிறது. "முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாக" (எபே 2:2) நாம் நடந்துகொண்டிருந்தோம் என்பது உண்மைதான். ஆனால் இரட்சிக்கப்பட்டபின் உலகத்தைப் பிரியப்படுத்துகிறவர்களாக நாம் இருக்கக்கூடாது. "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக் 4:4).

மேலும் இந்த பிரபஞ்சத்தின் வேஷம் நிரந்தரமானது அல்ல. அது நாளுக்கு நாள், இடத்துக்கு இடம் மாறிக்கொண்டே இருக்கிறது என்பதினால் பவுல் சொல்லுகிறார் "இவ்வுலகத்தின் வேஷம் கடந்துபோகிறதே" (1 கொரி 7:31). "இப்பிரபஞ்சத்தின் ஞானத்தினால் யாருக்கும் நன்மை இல்லை" (1 கொரி 2:6). தேவனை அறியாத மக்களுடைய கலாச்சாரம், ஞானம், வாழ்க்கைமுறை, பழக்கவழக்கங்கள், பகட்டு, வியாபார மோகம், பொழுதுபோக்குகள், ஆடை அணிகலன்கள், வாஞ்சைகள் ஆகியவற்றைக் கைக்கொள்வோமானால், நாம் இன்னும் இந்த பிரபஞ்சத்துக்கு ஒத்தவேஷம் தரித்தவர்களாயிருக்கிறோம் என்றுதான் பொருள்.

இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் இருந்தால் மட்டும் போதாது, தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுத்தறியவேண்டும் என்கிறார் பவுல். ஏனென்றால் 1 யோவான் 2:17 சொல்கிறபடி "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்". தேவனுடைய சித்தத்தைப் பற்றி மூன்று காரியங்கள் நாம் தியானிக்கும் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. தேவனுடைய சித்தம் நன்மையானது
2. தேவனுடைய சித்தம் பிரியமானது
3. தேவனுடைய சித்தம் பரிபூரணமானது

தேவனுடைய சித்தம் நாம் அனுபவிக்கவேண்டிய பல காரியங்களை நமக்குத் தடைசெய்வதாக சிலவேளைகளில் நினைக்கலாம். தேவனுடைய சித்தம் நவீனகாலத்து நடைமுறைகளுக்கு ஒத்துவராது என்று கருதலாம். ஆனால் அவருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிவதே நமக்கு நன்மையையும் மேன்மையையும் தரும். பிதாவாகிய தேவனுடைய சித்தத்தின்படி குமாரன் நம்முடைய பாவங்களுக்காக தன்னை ஒப்புக்கொடுத்ததினால்தான் (கலா 1:4) மனித இனத்துக்கு இரட்சிப்பு உண்டானது. மனம் புதிதாக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும் தன்னைக் குறித்த தேவனுடைய சித்தம் தனக்கு இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதமாகத்தான் இருக்கும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். **ஒருவன் எந்த அளவுக்கு தேவசித்தத்தை நிறைவேற்ற தன்னை ஒப்புக்கொடுக்கிறானோ, அந்த அளவுக்கு தேவன் அவனை மேன்மைப்படுத்துவார்.**

"ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:6) என்று கேள்வியோடு கிறிஸ்துவுக்குள் அடியெடுத்துவைத்த பவுல், அவரோடு பல ஆண்டுகள் ஊழியம்செய்த சீஷர்களைவிட மேலான வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டார் என்பதை நாம் அறிவோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் சகோதரர்கள் ஆகிறார்கள் (மத் 12:50).

தேவனுடைய சித்தம் பிரியமானது என்று சொல்லும்போது, அது தேவனால் அங்கீகரிக்கப்படும் தகுதியை உடையது என்று பொருள் கொள்ளவேண்டும். தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம் அதில்தான் அடங்கியிருக்கிறது. "கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்" (எபே 5:10) என்கிறார் பவுல். தன்னுடன் ஊழியம் செய்யும் எப்பாப்பிராவைப் பற்றி அவர் சொல்கிறார்: "இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும், நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்" (கொலோ 4:12).

மூன்றாவதாக, தேவனுடைய சித்தம் பரிபூரணமானது என்று பார்க்கிறோம். தேவன் பரிபூரணராயிருப்பதினால் சர்வ வல்லவருடைய சித்தம் பரிபூரணமானதாக, அதாவது குற்றமற்றதாக, குறையற்றதாக, பழுதற்றதாக, மாற்றப்படக்கூடாததாக மட்டுமே இருக்கமுடியும். அது பரிபூரணமாக இருப்பதால் அதோடு எதையும் கூட்டத்தேவையில்லை. அதிலிருந்து எதையும் குறைக்கவும் நமக்கு அதிகாரம் இல்லை. அதனால்தான் பவுல் சொல்கிறார்: "நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்" (எபே 5:17).

கர்த்தருடைய சித்தத்தை உணர்ந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள் மதியற்றவர்களாகத்தான் இருப்பார்கள். "என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்" (சங் 40:8) என்று ஜெபிப்போமானால் நிச்சயமாக தேவன் நம்மைக்குறித்த தன் சித்தத்தை வெளிப்படுத்துவார்.

விசுவாச ஐக்கியம் (வசனம் 3-8)

அல்லாமலும், எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது: உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். (ரோமர் 12:3)

"தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்" என்று முதல் வசனத்தில் அறிவித்து தன்னைத் தாழ்மைப்படுத்திய பவுல், இங்கே "எனக்கு அருளப்பட்ட கிருபையினாலே நான் சொல்லுகிறதாவது" என்று தன்னுடைய தகுதியின்மையை மீண்டுமாக உறுதிப்படுத்துகிறார். "எனக்கு அருளப்பட்ட தேவகிருபையின்படியே" என்று 1 கொரி 3:10லும், "நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன்; ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது" என்று 1 கொரி 15:10லும், "எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது" என்று கலா 2:9லும் பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். பவுலைப்போல் மனத்தாழ்மை உள்ளவர்களால்தான் தேவனுக்கு ஊழியம் செய்யமுடியும்.

இந்த வசனங்களில் பவுல் குறிப்பிடும் கிருபை என்ற வார்த்தை ஒரு மனிதனுடைய இரட்சிப்புக்குக் காரணமாயிருக்கும் பொதுவான கிருபையைக் குறிப்பிடாமல் புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்படியாக பவுல் தேவனிடம் பெற்றுக்கொண்ட விசேஷித்த அப்போஸ்தல ஊழியத்தைக் குறிப்பிடுகிறது (கலா 1:15, 1 தீமோ 1:13-16, ரோமர் 15:15,16). "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே 3:8). தேவன் தன்னுடைய ஒவ்வொரு ஊழியக்காரருக்கும் வித்தியாசமான கிருபை வரங்களை அருளிச்செய்கிறார்.

ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள், தேவன் அருளிச்செய்த வரங்களைக் குறித்து தன்னை மேன்மைப்படுத்திக்கொள்ளும் ஒரு மனிதன் தேவன் ஒருவருக்கே சொந்தமான மகிமையைத் திருடுகிறவனாக இருக்கிறான். அதைக் குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்பதற்காக மூன்று ஆலோசனைகளை பவுல் இந்த வசனத்தில் வழங்குகிறார்.

1. நீங்கள் யார் என்பதை அறிந்துகொண்டவர்களாய் உங்களைக் குறித்து மேட்டிமையாக எண்ணாதிருங்கள்
2. தேவன் உங்களுக்குக் கொடுத்த விசுவாசத்தின் அடிப்படையில் உங்களை நிதானித்துக் கொள்ளுங்கள்.
3. தெளிந்த எண்ணமுடையவர்களாய் இருங்கள். உங்களுக்குக் கொடுக்காத வரங்களை, தேவன், மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கலாம்.

தன்னுடைய மலைப்பிரசங்கத்தின் துவக்கத்திலேயே ஆவியில் எளிமையாயிருப்பதின் மேன்மையை கிறிஸ்து அறிவித்ததைப்போல், சபைக்கு பவுல் கொடுக்கும் ஆலோசனையின் துவக்கத்தில் உங்கள் நிலைமைக்கு மீறின நினைவுகளைக் கொள்ளாதிருங்கள் என்கிறார். தங்களைக் குறித்து மிஞ்சி எண்ணும் பழக்கம் இன்றும் விசுவாசிகளிடமும், ஊழியக்காரர்களிடமும் காணப்படுகிறது. **தேவன் நமக்கு வழங்கியிருக்கும் கிருபை வரங்கள் நாம் சம்பாதித்துக்கொண்டவைகள் அல்ல. அவை நமக்குச் சொந்தமானதல்ல. நம்முடைய தகுதியின் அடிப்படையில் நமக்கு வழங்கப்பட்டதல்ல.** இந்த மூன்று காரியங்களையும் நாம் அறிந்துகொண்டோமானால் நாமும் பவுலைப்போல் மனத்தாழ்மை-யுள்ளவர்களாக இருப்போம். "என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5) என்று இயேசு சொல்லியிருக்கிறார். இதை நடைமுறையில் அறிந்து உணர்ந்துகொண்டவர்களே உண்மையான ஊழியக்காரர்.

தான் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணியதின் விளைவாகவே லூசிபர் வீழ்ச்சி அடைந்தான் என்பதை அறிவோம். "நான் உன்னதமான தேவனைப்போல் ஆவேன். நான் வானத்துக்கும் ஏறுவேன், நான் என் சிங்காசனத்தை தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேல் ஸ்தாபிப்பேன். நான் பரிசுத்தமான பர்வதங்களில் அமர்வேன். நான் மேகங்களிலுள்ள பலிபீடத்துக்குப் போவேன், நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன்" (ஏசாயா 14:13,14) என்று அறிக்கையிட்டவன் தன் சகல மேன்மைகளையும் நொடிப்பொழுதில் இழந்துபோனான்.

நம்மிடம் இல்லாத ஒன்றை, இருப்பதைப்போல் நம்பி செயல்படும்போதுதான் எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணுபவர்கள் ஆகிறோம். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவனாகக் கருதப்பட்ட (அப் 13:22) தாவீது சொல்வதைப் பாருங்கள்: "கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவை களுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை" (சங் 131:1). தன்னை எவ்வாறு தாவீது நிதானித்துக்கொள்கிறார் என்பதைப் பாருங்கள்.

தேவன் பகிர்ந்தளித்த விசுவாசத்தைக் குறித்து பவுல் அடுத்ததாகப் பேசுகிறார். நம்மைக்குறித்து நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை, நம்முடைய சொந்தத் திறமைகளை ஆதாரமாகக் கொண்டிராமல், தேவன் நமக்கு பகிர்ந்து கொடுத்திருக்கும் கிருபை வரமாகிய விசுவாசத்தை மட்டுமே ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் பவுல். "கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத் தக்கதாக நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது" (எபே 4:7). நாம் அனுபவிக்கும் சகல மேன்மைகளும் தேவனால் நமக்கு வழங்கப்பட்டவை என்பதனால் பவுல் சொல்கிறார்: "உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?" (1 கொரி 4:7). அதிகாரத்தின் 16-வது வசனத்தில் பவுல் சொல்கிறார்: "ஒருவரோடோருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்"

ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளில் பலர் ஒருவேளை கூடுதலான விசுவாசமுடையவர்களாய் இருக்கலாம். இவர்கள் தங்களை மற்றவர்களைவிட மேலானவர்களாகக் கருதிக்கொண்டிருக்கலாம் (ரோமர் 11:18-21; 14:1-4). ஆனால் அந்த மேன்மை அவர்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு. "ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே 2:8,9). "பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்" (யோவான் 3:27) என்று வாசிக்கிறோம். பிறக்கும்போது ஒருவரும் விசுவாசத்தோடு பிறக்கவில்லையே. தங்கள் சுயமுயற்சியினால் அவர்கள் விசுவாசத்தைப் பெருக்கிக்கொள்ளவும் இல்லை. ஒருவனுடைய விசுவாசம் மட்டுமல்ல, அவன் எந்த அளவு விசுவாசமுடையவன் என்பதை நிர்ணயம் பண்ணுகிறவரும் தேவனே. தேவன் நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்கிறார். நமக்கு எந்த அளவு விசுவாசம் தேவை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். தன்னுடைய தீர்மானத்தின் அடிப்படையில் அவர் அதை

நமக்கு அருளிச்செய்கிறார். கூடுதலாகவும் அவர் கொடுப்பதில்லை, குறைவாகவும் அவர் கொடுப்பதில்லை.

தான் ஏற்கனவே அறிவித்த சத்தியங்களின் அடிப்படையில் தெளிந்த எண்ணமுடையவர்களாக இருக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். தெளிந்த எண்ணமுடையவர்களாக இருப்பது எப்படி? நீங்கள் யார் என்பதை நீங்கள் அறிந்துகொண்டிருப்பீர்கள் என்றால் நீங்கள் தெளிந்த எண்ணமுள்ளவர்கள். நம்மில் மேன்மைபாராட்ட ஒன்றும் இல்லை. தேவன் எந்த நோக்கத்தோடு நம்மை தன்னுடைய சரீரமாகிய சபையோடு இணைத்திருக்கிறாரோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றும்படியாக மட்டுமே வரங்கள் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. இன்னொருவனுக்கு தேவன் கூடுதலாக விசுவாசம் என்ற ஈவைக் கொடுத்திருப்பாரானால் அதுகுறித்து நாம் எரிச்சல்படவேண்டியதில்லை. கடுகுவிதையளவு விசுவாசம் மலையை அசைக்குமானால், அதற்கும் கூடுதலான விசுவாசத்தை வைத்து நாம் என்ன செய்யப்போகிறோம்? **நாம் எதை விரும்புகிறோம் என்பதல்ல, தேவன் எதை விரும்புகிறார் என்பதே காரியத்தை நிர்ணயம் செய்கிறது.** நம்மைக் குறித்த தேவனுடைய தீர்மானத்தோடு இணைந்து நாம் செயல்படும்போது தேவன் மகிமைப்படுவார்; நாம் ஆசீர்வதிக்கப்படுவோம். **நாம் யாராயிருக்கிறோம் என்பதல்ல, யாரோடு இருக்கிறோம் என்பதைக் குறித்தே மேன்மைபாராட்ட அறிந்துகொள்வோம்.**

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராதது போல (ரோமர் 12:4)

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையைக் குறித்த உபதேசம் பவுலின் நிருபங்களில் மட்டுமே காணப்படுகிறது. இந்த அதிகாரத்தின் 4,5,6 ஆகிய வசனங்களில் சொல்லப்படும் சத்தியத்தின் விளக்கவுரையாக 1 கொரி 12:12-22 வசனங்கள் அமைகின்றன. கொலோ 1:18 சொல்கிறது : "அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்". எபேசியர் 4:16 சொல்கிறது: "அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியை செய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது". விசுவாசிகளுக்குள் இருக்கவேண்டிய ஐக்கியத்தை இந்த உருவகம் வலியுறுத்துகிறது.

ஒரு மனிதனுடைய சரீரத்தில் நூற்றுக்கணக்கான அவயவங்கள்

இருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் அந்த சரீரத்தில் ஒரு இடம் உண்டு. சில அவயவங்கள் சிறியதாகவும், சில பெரியதாகவும் இருக்கின்றன. வெவ்வேறு அவயவங்களும் வெவ்வேறு கிரியைகளை நடப்பிக்கின்றன. நகம், கால்விரல்கள் போன்ற அவயங்களின் வேலை இருதயம், ஈரல் போன்றவற்றின் வேலைகளைப் அவ்வளவு முக்கியமானதல்ல. சரீரத்தின் மிக முக்கியமான அவயவம் தலை. கிறிஸ்துவே சரீரத்தின் தலையாக உருவகப்படுத்தப்படுகிறார். முழு சரீரத்தையும், சரீரத்தின் சகல உறுப்புகளையும் ஒன்றோடொன்று இணைத்து போஷித்து வழிநடத்துவது பரிசுத்த ஆவியானவர்.

1 கொரி 12:12 சொல்கிறது: "சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. காலானது நான் கையாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? காதானது நான் கண்ணாயிராதபடியினாலே, நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ? சரீரம் முழுவதும் கண்ணானால், செவி எங்கே? அது முழுவதும் செவியானால், மோப்பம் எங்கே? தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். அவைகளெல்லாம் ஒரே அவயவமாயிருந்தால், சரீரம் எங்கே? அவயவங்கள் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றே. கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும்; தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது. சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்" (வசனம் 14-23).

நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? சரீர அவயவங்களில் பெரியவன், சிறியவன் என்ற வேறுபாடு இல்லை. அவை ஒன்றோடொன்று போட்டியிடுவதில்லை, பெருமைப்பட்டுக்கொள்வதில்லை, தன்னிச்சையாகச் செயல்படுவதில்லை, ஒவ்வொன்றும் அதற்கு நியமிக்கப்பட்ட வேலையைச் செய்துவருகிறது. இதற்கு எதிர்மறையாக கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களான நாம் என்ன செய்கிறோம்? முந்தின வசனத்தில் பவுல் அறிவித்தபடி நம்மைப்பற்றி எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணிக்கொள்கிறோம் மற்றவர்களை மட்டமாக மதிப்பிடுகிறோம், சபையில் உள்ள விசுவாச ஐக்கியத்தில் குறைவு ஏற்படுகிறது.

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம் (ரோமர் 12:5)

"அநேகராகிய நாம்" என்று பவுல் சொல்லும்போது ரோமாபுரி சபையாரை மட்டுமோ அல்லது தான் நிருபங்கள் எழுதிய கொரிந்து, கலாத்தியா, எபேசு, பிலிப்பி, கொலோசெயா, தெசலோனிக்கேயா பட்டணங்களில் இருந்த சபையாரை மட்டுமோ குறிப்பிடவில்லை. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகால சரித்திரத்தில் உலகில் பலவேறு இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட பல்வேறு சபைகளில் உள்ள கோடிக்கணக்கான விசுவாசிகளையும் இந்த வார்த்தை உள்ளடக்கியதாக இருக்கிறது.

அவர்கள் அத்தனைபேருமே கிறிஸ்துவின் சரீரத்தோடு ஐக்கியப்பட்டவர்களாக இருக்கிறார்கள். கிறிஸ்துவுக்குள் அவர்கள் அத்தனைபேருமே ஒரே சரீரமாயிருக்கிறார்கள். அவர்கள் அந்த சரீரத்தின் பல்வேறு உறுப்புகளாயிருக்கிறார்கள். "நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்" (1 கொரி 12:27), "அவயவங்கள் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றே" (1 கொரி 12:20) "தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்" (1 கொரி 12:18). இவ்வாறு ஒவ்வொரு உறுப்பும் மற்ற உறுப்புகளை சார்ந்துள்ளதாய் இருக்கிறது. இந்த தெய்வீக ஐக்கியம் நாம் ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் இருப்பதினால் சாத்தியமாகிறது. கிறிஸ்துவுக்குள் எல்லா விசுவாசிகளுக்கும் இந்த விசுவாச ஐக்கியத்தில் பங்குண்டு.

இதன் விளைவாகவே ஒருவருக்கொருவர் நாம் அவயவங்களாகிறோம் என்கிறார் பவுல். ஒருவரோடு ஒருவர் நெருக்கமான ஐக்கியம் உள்ளவர்களாக இருக்கிறோம். சரீரத்தின் ஒரு அவயவம் பாதிப்படையும்போது முழுசரீரமும் பாதிக்கப்படுகிறது. சபையின் ஒரு விசுவாசி சந்திக்கும் இழப்பினால் முழுசபையும் நஷ்டமடைகிறது. ஒரு விசுவாசி பின்மார்க்கமடைந்தால், முழுசபையிலும் குறைவு உண்டாகிறது.

ஒரு மனிதனுடைய சரீரத்தில் உள்ள எல்லா அவயவங்களும் அவனுடைய தலையின் ஆளுகைக்குட்பட்டு செயல்படுகிறது. சரீரத்துக்கடுத்த எல்லா காரியங்களையும் தலையே தீர்மானம் பண்ணுகிறது. பவுல் சொல்கிறார்: "எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை (கிறிஸ்துவை) எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" (எபே 1:23). கிறிஸ்து சபையின் தலை என்று சொல்லும்போது அவர் சபை அங்கத்தினர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட ஆலோசகராக, வழிநடத்துபவராக, மீட்பராக, நியாயாதிபதியாகக் கருதப்படவேண்டும். தன்னுடைய சபையின்

மூலமாகவே கிறிஸ்து உலகில் செயல்படுகிறார். இயேசு சொல்கிறார்: "நானே திராட்சச் செடி; நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" (யோவான் 15:5)

ஒரே சரீரத்தில் ஒருவருக்கொருவர் அவயவங்களாக இருக்கிறபடியால் நாம் ஒருவரை ஒருவர் நேசிப்பது அவசியமாகிறது. அதனால்தான் "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (மத் 22:39) என்பது இரண்டாவது பிரதான கற்பனையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "தன் சகோதரனில் அன்பு கூருகிறவன் தன்னையே நேசிக்கிறவனாகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே" (எபே 5:29) என்று வாசிக்கிறோம்.

நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன். (ரோமர் 12:6)

பவுல் சொல்கிற சத்தியத்தை சரியாக அறிந்துகொள்வோம். பல தேசத்து, பல ஊரைச் சேர்ந்த மக்களாக, பல பாஷைகளைப் பேசுகிறவர்களாக, பல கலாச்சாரங்களை உடையவர்களாக நாம் இருந்தாலும், நாம் அனைவரும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருக்கிறோம். ஒரே சரீரத்தின் பல அவயவங்களாக, ஒருவரோடு ஒருவர் ஐக்கியங்கொண்டிருக்கிறோம். ஒருவரை ஒருவர் சார்ந்தவர்களாக இருக்கிறோம். நமக்கு பலவிதமான வரங்களை தேவன் வழங்கியிருக்கிறார். இவை இலவசமாக, தேவனுடைய இரக்கத்தினால் கிடைத்தது. இவ்வாறு இருப்பதினால் தீர்க்கதரிசனம் சொல்லும் வரத்தையுடைய ஒரு விசுவாசி அதனை தன்னுடைய விசுவாசத்துக்கு ஏற்றவகையில் பயன்படுத்தவேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் வெவ்வேறு வரங்களை உடையவர்களாக இருக்கிறோம். அவை தேவனால் நமக்கு அருளப்பட்டிருக்கின்றன. என்னிடத்தில் எந்த வரமும் இல்லை என்று எந்த விசுவாசியும் சொல்லமுடியாது. தன்னிடம் உள்ள வரம் என்ன என்பதை அவன் கண்டுபிடித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குத் தன்னை பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும். நமக்கு தேவன் கொடுத்திருக்கும் வரங்களில் திருப்தியடையக் கற்றுக்கொள்ள வேண்டும். வரங்களை தேவன் ஈவாக நமக்குக் கொடுக்கிறார். ஈவு (gift) என்றால் நன்கொடை என்று பொருள். தேவன் நமக்கு இலவசமாகத் தருவதை

ஏற்றுக்கொள்கிறோம். மற்றபடி வரங்கள் நாம் நம் சுயமுயற்சியினால் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு காரியமோ, நாம் சம்பாதித்துக்கொள்ளக்கூடிய ஒரு காரியமோ அல்ல. யார் யாருக்கு எந்த வரம் கொடுப்பது என்பதை தீர்மானிப்பது தேவனே. வரங்கள் தேவன் ஒருவருக்கே சொந்தமானது.

ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வரங்களையோ, தாலந்துகளையோ, திறமைகளையோ, நேரத்தையோ, செல்வாக்கையோ வீணாக்குவானேயாகில், அவன் தன்னுடையதை அல்ல, தேவன் அவனுக்கு ஒப்புவித்த, தேவனுக்குரியவற்றை வீணாக்குகிறான். ஒருவனுக்கு தேவன் வரங்களைக் கொடுத்துவிட்டு அதை அவர் திரும்பப் பெற்றுக்கொள்வதில்லை. லூசிபர் இன்றுவரை தனக்குக் கொடுக்கப்பட்ட வரங்களை செயல்படுத்திக்கொண்டு இருக்கிறான். "தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே" (ரோமர் 11:29) என்று பார்த்தோம். **எனவே தேவன் வழங்கிய வரங்களை சுயநல நோக்கத்தோடும், ஆதாய நோக்கத்தோடும் உபயோகப்படுத்துவோமானால் தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சந்திக்கவேண்டியதிருக்கும்.**

சபையின் பக்திவிருத்தியைக் கருத்தில்கொண்டே வரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. பழைய ஏற்பாட்டு நாட்களில் தேவன் தன்னுடைய வேலைகளை நடப்பிக்கும்படியாக பலவேளைகளில் தேவதூதர்களைப் பயன்படுத்தினார் என்பதை அறிவோம். ஆனால் இப்போது மனிதர்களுக்கு வரங்களை அருளி, தன்னுடைய ஊழியத்தில் அவர்களை மட்டுமே பயன்படுத்துகிறார். பேதுரு சொல்கிறார்: "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக" (1 பேதுரு 4:10,11) ஊழியங்கள் வியாபார ஸ்தாபனங்களாக மாறிக் கொண்டிருக்கும் நாட்களில் நாம் எச்சரிக்கையோடு இருப்போம்.

1 கொரிந்தியர் 12:8-10ல் ஞானத்தைப் போதிக்கும் வரம், அறிவை உணர்த்தும் வரம், விசுவாச வரம், குணமாக்கும் வரம், ஆவிகளைப் பகுத்தறியும் வரம், பாஷைகள் பேசும் வரம், பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம் ஆகிய ஏழுவரங்கள் குறிப்பிடப்படுகின்றன. நாம் தியானிக்கும் வேதபகுதியில் (ரோமர் 12:6-8) கீழ்க்கண்ட ஏழு வரங்கள்

சொல்லப்படுகின்றன.

1. தீர்க்கதரிசன வரம் (prophecy)
2. ஊழிய வரம் (ministry)
3. போதிக்கிற வரம் (teaching)
4. புத்திசொல்லுகிற வரம் (exhortation)
5. பகிர்ந்துகொடுக்கும் வரம் (charity)
6. தலைமைத்துவ வரம் (leadership)
7. இரக்கங்காட்டும் வரம் (mercy)

தீர்க்கதரிசிகள் என்றால் வருங்காலத்தில் நடக்கிறவைகளை முன்னறிவிப்பவர்கள் என்று மட்டும் எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒரு **ஆசாரியன் சபையின் பிரதிநிதியாக தேவனிடம் செயல்படுவதுபோல். ஒரு தீர்க்கதரிசி தேவனுடைய பிரதிநிதியாக சபையில் செயல்படுகிறார்.** "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்" (1 கொரி 14:3). தேவன் தன்னுடைய இரகசியங்களை தன்னுடைய தீர்க்கதரிசிகள் மூலமாக சபைக்கு வெளிப்படுத்துகிறார். மார்ட்டின் லூத்தர், கால்வின், ஜாண் பன்யன், வெஸ்லி, மூடி முதலான வேத பண்டிதர்களும் தீர்க்கதரிசிகளாகவே கருதப்படவேண்டும். தேவனுடைய வார்த்தைகளை அறிவிப்பவர்களே தீர்க்கதரிசிகள். "ஞான வரங்களையும் விரும்புங்கள் ; விசேஷமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்" (1 கொரி 14:1) என்று வாசிக்கிறோம்.

தீர்க்கதரிசி தன்னுடைய "விசுவாசப் பிரமாணத்துக்கேதுவாகச் சொல்லக்கடவன்" என்கிறார் பவுல். "விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்" (சங் 116:10) என்று எழுதியிருக்கிறபடி, தேவனிடமிருந்து நேரடியாக, சந்தேகத்துக்கிடமின்றி பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டையே தீர்க்கதரிசி அறிவிக்கவேண்டும். தனக்கு அருளப்பட்ட வெளிப்பாட்டை மிஞ்சி, உணர்ச்சிவசப்பட்ட நிலையில், தன்னுடைய சொந்த எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் மற்றவர்களை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக தீர்க்கதரிசனம் சொல்லிவிடக்கூடாது. இந்தத் தவறு இறைவாக்கினர் மத்தியில் காணப்படுவதினால்தான் "தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது" (1 கொரி 13:9) என்று பவுல் ஒத்துக்கொள்ளவேண்டியதிருக்கிறது. அதேவேளையில் "தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதிருங்கள். எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்" (1 தெச 5:20,21) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. வேத வசனத்தோடு ஒத்துப்போகாத காரியங்களை யாரேனும் சொல்வார்களேயானால் அவர்கள் தேவனுடைய

தீர்க்கதரிசிகள் அல்ல. அதனால்தான் தீர்க்கதரிசனங்கள் நிதானிக்கப்பட வேண்டியதிருக்கிறது (1 கொரி 14:29). புதிய ஏற்பாட்டில் உள்ள எல்லா வசனங்களும் பழைய ஏற்பாட்டு வசனங்களோடு இணைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், (ரோமர் 12:7)

ஊழிய வரமும், போதிக்கிற வரமும் இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. ஊழியஞ்செய்கிறவர்கள் என்று சொல்லும்போது சபையின் கண்காணிகளையும், உதவிக்காரரையும் (1 தீமோ 3:1,8, 10,12,13, அப் 6:1-3; 11:29) மட்டும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அப்போஸ்தலர்கள், போதகர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசியும் சபையைப் பொறுத்தவரை ஒரு ஊழியர்தான் (1 கொரி 16:15, கொலோ 4:17). ஏனென்றால் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா 6:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஊழியத்தைக் குறித்து பேசும் அப் 1:17,24; 6:4; 12:25; 20:24; 21:19, ரோமர் 11:14, 2 கொரி 5:18; 6:3, எபே 4:12, 1 தீமோ 1:21 ஆகிய வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

போதிக்கிற ஊழியம் மற்ற ஊழியங்களை விட மிகவும் முக்கியமானது (கலா 6:6) என்பதில் சந்தேகமே இல்லை. தீர்க்கதரிசிகள் தேவனிடமிருந்து நேரடியாக வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டு அவைகளை அறிவிக்கிறார்கள் என்றால், அந்த வெளிப்பாடுகளில் உள்ள உபதேசங்களை சபை புரிந்துகொள்ளும் விதத்தில் அறிவிப்பது போதகர்களுடைய கடமையாகிறது. ரோமர் நிருபம் பவுலின் போதக ஊழியமாகவே இருக்கிறது (அப் 13:1; 15:35). அதன் விளக்கவுரையும் ஒரு போதக ஊழியமே. "திருவசனத்திலும் உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்" (1 தீமோ 5:17) என்று சொல்லப்பட்டிருக்கிறது. சபை ஊழியர்களின் பட்டியலில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகளை அடுத்து போதகர்களே முக்கியப்படுத்தப்படுகிறார்கள் (1 கொரி 12:28, எபே 4:13, 1 கொரி 12:8). போதிக்கிற ஒரு போதக ஊழியன் தன்னை தீர்க்கதரிசியாக மாற்றிவிடக்கூடாது. இரண்டு ஊழியங்களும் வித்தியாசமானவை. "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்" (1 பேதுரு 4:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது. போதகர்களுக்கு ஆழமான வேதஅறிவு இன்றியமையாதது. தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிப்பதினால்தான் தவறான உபதேசங்கள் இந்த நாட்களில் பெருகிவருகின்றன. "கடைசி நாட்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும்

பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தைவிட்டு விலகிப்போவார்கள்" (1 தீமோ 4:1) என்று எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன் (ரோமர் 12:8)

மீதியான நான்கு வரங்கள் இந்த ஒரே வசனத்தில் அறிவிக்கப்படுகின்றன. பொதுவாக போதிக்கிற வரத்தைப்பெற்றவர்கள் புத்திசொல்வதிலும் தேர்ச்சி பெற்றிருப்பார்கள். அதனால்தான் பவுல் சொல்கிறார்: "ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும்" (தீத்து 1:9). "நான் வருமளவும் வாசிக்கிறதிலும், புத்திசொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு" (1 தீமோ 4:13). "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" (2 தீமோ 4:2).

அடுத்ததாக பகிர்ந்து கொடுப்பதைக் குறித்து பவுல் பேசுகிறார். பகிர்ந்து கொடுத்தால் மட்டும் போதாது. அதை வஞ்சனையில்லாமல் செய்யவேண்டும், தாராளமாகக் கொடுக்கவேண்டும். லூக்கா 10:7, 1 தீமோ 5:18 வாசித்துப் பாருங்கள். வஞ்சனையோடு கொடுத்த அனனியா சப்பீராளுக்கு என்ன நடந்தது என்பதை அறிவோம் (அப் 5:1-9). மக்கெதோனியா சபையினரைப் பற்றி இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது: "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்" (2 கொரி 8:2). பவுல் சொல்கிறார்: "அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்" (2 கொரி 9:7). புதிய ஏற்பாட்டு நாட்களில் நியாயப்பிரமாணத்தின் தசம பாகங்களைக் கொடுப்பவர்களில் அல்ல, உதாரத்துவமாயும், ஒருவன் தன் மனதில் நியமித்தபடியேயும், உற்சாகமாகவும் கொடுக்கிறவனிடத்திலேயே தேவன் பிரியமாயிருக்கிறார்.

வஞ்சனையில்லாமல் கொடுக்கவேண்டும் என்பதை

பெருந்தன்மையோடு, சுயநலநோக்கமின்றி, எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பாராமல் கொடுக்கவேண்டும் என்று பொருள்கொள்ளலாம். "உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது" (மத் 6:3) என்கிறார் இயேசு. அதாவது நீ கொடுப்பதை நீயே அறிந்துகொண்டிருக்கக்கூடாது. நீ கொடுக்கிறாய் என்பதினிமித்தம் நீயே உன்னை மேன்மைபாராட்டக்கூடாது. உங்கள் உதவி இரகசியமாய் செய்யப்படவேண்டும். உலகத்து மக்கள்தான் எல்லாரும் காணும்படியாக தெருக்களிலும், ஆலயங்களிலும் தாரை ஊதிக்கொண்டே செய்வார்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதைப்பற்றி பேசும் சில வேத வசனங்கள்: லூக்கா 3:11, அப் 2:44-47; 4:34-37, ரோமர் 15:26, 2 கொரி 8:8,9; 9:2,12, கலா 2:10. இன்று மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பது சபையின் ஊழியமாகக் கருதப்படவில்லை. தனிப்பட்டவர்கள் இதைச் செய்யட்டும் என்று சபை இதைப் புறக்கணித்துவிட்டதுபோல் காணப்படுகிறது.

"முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்" என்று பவுல் சொல்லும்போது முதலாளி என்ற வார்த்தையை நாம் பொதுவாக நினைப்பதுபோல் எஜமானன் என்ற பொருளில் எடுத்துக்கொள்ளக் கூடாது. இது ஆளுகையையும், சபையின் தலைமைத்துவத்தையும் குறிப்பிடுகிறது. ஒரு குடும்பத்தையோ, நிர்வாகத்தையோ, சபையையோ ஊழிய ஸ்தாபனத்தையோ தலைமையேற்று நடத்துகிறவர்கள் எவ்வாறு செயல்படவேண்டும் என்ற ஆலோசனை இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. அது அவர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட பொறுப்பு என்பதினால் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அளவுக்குமீறிய செழிப்பு, பகட்டான ஆடை அலங்காரங்கள், ஆடம்பர மோகம் ஊழியர் மத்தியில் இருக்கக்கூடாது. கர்த்தர் சொல்கிறார் : "தங்களையே மேய்க்கிற இஸ்ரவேலின் மேய்ப்பருக்கு, ஐயோ! மேய்ப்பர் அல்லவா மந்தையை மேய்க்கவேண்டும். நீங்கள் நெய்யைச் சாப்பிட்டு, ஆட்டுமயிரை உடுப்பாக்கிக் கொள்ளுகிறீர்கள்; கொழுத்ததை அடிக்கிறீர்கள்; மந்தையையோ மேய்க்காமல் போகிறீர்கள்" (எசே 34:2,3). தொடர்ந்து வரும் வசனங்களையும் வாசித்துப் பாருங்கள். பேதுரு சொல்கிறார்: "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாகமனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்" (1 பேதுரு 5:2,3). 1 தெச 5:12, 1 தீமோ 3:4,5; 5:17 வாசித்துப பாருங்கள். கர்த்தரின் ஊழியத்தில் சுயநலத்துக்கு இடமிருக்கமுடியாது.

கடைசியாக இரக்கம் செய்கிறவர்களைக் குறித்து பவுல் பேசுகிறார். ஏழை எளியவர்கள் மீதும், தேவையோடு இருப்பவர்கள் மீதும் இரக்கம் பாராட்டினால் மட்டும் போதாது, அதை உண்மையான மனமகிழ்ச்சியோடு செய்யவேண்டும். தகுதியற்றவர்களாயிருந்தும் தேவனிடமிருந்து இரக்கம் பெற்ற நாம் மற்றவர்களிடம் முழுமனதோடு இரக்கம்பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் வெறுமனே கடமை உணர்வோடும், விளம்பர நோக்கத்தோடும் இரக்கம் பாராட்டுவோமென்றால் அதில் மேன்மை இல்லை. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் அனுபவமே இரக்கம் பாராட்டுதல் (கலா 6:2). உண்மையான அன்பின் அடிப்படையில் இரக்கம் பாராட்டவேண்டும். எனவே அதிகாரத்தின் பின்பகுதியில் பவுல் அன்பின் மேன்மையைக் குறித்துப் பேசப்போகிறார்.

கிறிஸ்துவின் பிரமாணம் - அன்பு (வசனம் 9-21)

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள் (ரோமர் 12:9)

ரோமர் நிருபத்தில் இதுவரை 'அன்பு' என்ற வார்த்தை 5:5,8; 8:36, 39 ஆகிய நான்கு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நான்கிலும் தேவன் மனிதன்மேல் காட்டும் அன்பைக் குறித்தே பவுல் பேசினார். நாம் தியானிக்கும் இந்த வசனத்திலோ அன்பு என்ற வார்த்தை கிறிஸ்தவ சகோதரர்கள் ஒருவர்மேல் ஒருவர் பாராட்டும் அன்பு குறிப்பிடப்படுகிறது. அது மாயமற்றிருக்கவேண்டும் என்கிறார் பவுல். இந்த சகோதர அன்பின் மேன்மையைக் குறித்து, ரோமர் 13:8-10ல் பவுல் அருமையாக பேசவிருக்கிறார்.

முந்தின ஆறு வசனங்களில் ஏழு கிருபை வரங்களின் அடிப்படையில் கிறிஸ்தவர்களாகிய நம்மிடம் தேவன் எதிர்பார்க்கும் காரியங்கள் என்னென்ன என்பதை அறிவித்த பவுல், அதிகாரத்தின் பின்பகுதியில் கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யும் காரியங்கள் அத்தனையும் அன்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார். மோசேயின் சட்டங்களில் எது மிக முக்கியமானது என்று தன்னிடம் விசாரித்த நியாய சாஸ்திரியிடம் கிறிஸ்து தேவனிடமும், பிறரிடத்தும் அன்புகூருவது தான் என்கிறார் (மத் 22:36-39). நியாயப்பிரமாண கட்டளைகள் மற்றும் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்களும் அன்பையே ஆதாரமாகக் கொண்டவை. யோவானின் முதலாவது நிருபமும், 1 கொரிந்தியர் 13-வது அதிகாரமும் கிறிஸ்தவ அன்பின் மகத்துவத்தை விளங்கப்பண்ணுகின்றன. அடுத்த அதிகாரத்திலும் மீண்டுமாக அன்பைப்

பற்றி பேசும் பவுல் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று திட்டவட்டமாக அறிவிக்கிறார் (13:10). "அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8) என்கிறார் பேதுரு.

கிறிஸ்து சொல்லியிருக்கிறார் : "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:34,35). வேதபுத்தகத்தைத் தூக்கிக்கொண்டு ஆலயத்துக்குப்போவதினால் நம்மை இயேசுவின் சீஷர்கள் என்று உலகம் ஏற்றுக்கொள்ளாது. நம்மில் கிறிஸ்துவின் அன்பு வெளிப்படுகிறதா என்பதை நம்மைச் சுற்றியிருப்பவர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடன் நமக்கு கருத்து வேறுபாடு இருக்கலாம். அதற்காக அவர்களை பகைக்க வேண்டும் என்பதில்லை.

'அன்பு மாயமற்றிருப்பதாக' என்று பவுல் இந்த வேதபகுதியைத் துவங்குகிறார். நம்மிடம் இல்லாத ஒன்றை இருப்பதைப்போல் காட்டுவதுதான் மாய்மாலம். கிறிஸ்தவ அன்பு உண்மையானதாக இருக்கவேண்டும், கள்ளமற்றதாக இருக்கவேண்டும். மாயமற்ற சகோதர சிநேகத்தைக் குறித்து பேதுருவும் (1 பேதுரு 1:22) பவுலும் (2 கொரி 6:6) பேசுகிறார்கள். **புனிதமான அன்பில்கூட மாய்மாலம் கலந்துவிடக்கூடும் என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகின்றது.** மாய்மாலமான அன்பு நம்முடைய ஆத்துமாவை அழித்துவிடும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். பொல்லாத உலகில் நாம் வாழ்ந்துவருகிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை அன்புள்ளவர்களாக, அன்பு செலுத்துகிறவர்களாக காட்டிக்கொள்ள விரும்புகிறோம். அனாதைக் குழந்தைகளுக்காக விடுதிகள், முதியோர் இல்லங்கள், ஆஸ்பத்திரிகள் நடத்தும்போது மெய்யான அன்பின் அடிப்படையில் மட்டுமே நடந்துகொள்கிறோமா என்பதை சற்று யோசித்துப் பார்ப்போம். "வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1 யோவான் 3:18) என்கிறார் யோவான். வார்த்தையிலும், பேச்சிலும் மட்டும் நம் அன்பு இருந்தால் போதாது. அன்பைப்பற்றி பேசிக்கொண்டே இருக்கும் பலரை இன்று பார்க்கமுடியும். நாம் செய்கிற கிரியைகளில் அன்பு வெளிப்படவேண்டும். அது உண்மையானதாகவும் இருக்கவேண்டும்.

1 கொரிந்தியர் 13:2,3ல் மனுஷர் பாஷைகளையும் தூதர்

பாஷைகளையும் ஒருவன் பேசியும், தீர்க்கதரிசனம் உரைத்தும், தேவனுடைய இரகசியமான காரியங்களை உணர்ந்திருந்தும், மலைகளை அசைக்கவல்ல அரிய விசுவாசத்தை உடையவனாக இருந்தும் "அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை" என்கிறார் பவுல். **அன்பில்லாதவர்களிடமிருந்தும் வரங்கள் செயல்படக்கூடும் என்று பார்க்கிறோம்.** நிச்சயமாக இந்த காரியங்களை நடப்பிக்கிறவர்கள் தங்களை அன்புடையவர்களாகத்தான் வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அது உண்மையானதல்ல என்று காண்கிறோம். ஆதாம் தனக்கு தேவனால் வழங்கப்பட்ட சுயமாய் செயல்படும் சித்தத்தை பாவம் செய்வதற்குத் தெரிந்துகொண்ட நாள் முதற்கொண்டு, அவனுடைய சந்ததியாரும் பிறப்பிலிருந்தே பாவம் செய்வதில் விருப்பமுடையவர்களாகவே இருக்கிறார்கள். இதன் விளைவாக அவர்கள் நடப்பிக்கும் அன்பின் கிரியைகளிலும் மாய்மாலம் கலந்துவிடுகிறது.

போலியான, மாய்மாலமான அன்பைவிட மோசமான பாவம் உலகத்தில் இருக்கமுடியாது. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரை ஒருவர் "சகோதரர்" என்று பாசத்தோடு அழைக்கிறோம். மேடைகளில் பிறர்காணும்படியாக ஒருவரை ஒருவர் வாழ்த்துகிறோம், அணைத்துக் கொள்ளுகிறோம். இது மாயமான அன்பாக இருக்குமானால் இவ்வாறு செய்து மற்றவர்களைத்தான் ஏமாற்றுகிறோம் என்பதல்ல, நம்மையும் ஏமாற்றிக் கொள்கிறோம். யூதாஸ் கிறிஸ்துவை முத்தமிட்டுத்தான் காட்டிக்கொடுத்தான். அவனுடைய உதடுகளில் வெளிப்பட்ட அன்பு அவனுடைய இருதயத்தில் இல்லை, மாயமற்ற அன்பு அவனிடம் காணப்படவில்லை. சபைகளிலும், குடும்பங்களிலும் காணப்படும் பல்வேறு குழப்பங்களுக்கு மாய்மாலமான, மேற்போக்கான அன்பே காரணம் என்று சொல்லமுடியும்.

அடுத்ததாக பவுல், தீமையை வெறுக்கும்படியாகவும், நன்மையைப் பற்றிக் கொள்ளும்படியாகவும் ஆலோசனை தருகிறார். மாயமான அன்பை உடையவன்தான் தீமையை நேசிக்கிறவனாக இருப்பான். நன்மையைப் பற்றிக்கொள்ளாதவனாக இருப்பான். தாவீது சொல்கிறார்: "தீமையை விட்டு விலகி, நன்மை செய்" (சங் 34:14). "கர்த்தரில் அன்பு கூருகிறவர்களே, தீமையை வெறுத்துவிடுங்கள்" (சங் 97:10). **தீமையை நடப்பிக்காமல் இருந்தால் மட்டும் போதாது, அதை வெறுக்கவேண்டும். ஒரு கிறிஸ்தவன் சில காரியங்களை வெறுக்கிறவனாகவும் இருக்கவேண்டியதிருக்கிறது.** தேவன் அன்பும் இரக்கமும் நிறைந்தவர் ஆனாலும், "ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். அவையாவன: மேட்டிமையான கண், பொய்நாவு,

குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை, துராலோசனையைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல் ஆகிய இவைகளே" (நீதி 6:16-19) என்று வாசிக்கிறோம். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" (1 தெச 5:22) என்கிறார் பவுல்.

தீமையை வெறுக்கும்படியாக எதிர்மறையாகப் பேசிய பவுல் இந்த வசனத்தின் மூன்றாவது ஆலோசனையாக நன்மையைப் பற்றிக் கொள்ளும்படியாகச் சொல்லுகிறார். நன்மையைச் செய்யுங்கள் என்று சொல்லுவதைவிட பற்றிக்கொள்ளுங்கள் என்று சொல்லுவது இன்னும் ஆணித்தரமாக இருக்கிறது. நல்லவற்றை மட்டுமே செய்யுங்கள் என்று பொருள் கொள்ளும்படியாக இருக்கிறது. "உமது சாட்சிகள்மேல் பற்றுதலாயிருக்கிறேன்" (சங் 119:31) என்று வாசிக்கிறோம்.

சகோதர சிநேகத்திலே ஒருவர் மேலொருவர் பட்சமாயிருங்கள்; கனம் பண்ணுகிறதிலே ஒருவருக்கொருவர் முந்திக்கொள்ளுங்கள். (ரோமர் 12:10)

பொதுவான அன்பைக்குறித்து முந்தின வசனத்தில் பேசிய பவுல் இந்த வசனத்தில் சகோதர சிநேகத்தைப் பற்றி பேசுகிறார். இது ஒரு குடும்பத்தில் உள்ள சகோதர சகோதரிகளுக்கிடையேயுள்ள குடும்ப உறவை மட்டும் குறிப்பிடாமல் கிறிஸ்துவுக்குள் சபையோர் அத்தனைபேரும் ஒரே ஆவிக்குரிய குடும்பத்தார் என்ற முறையில் உண்டாகும் ஆவிக்குரிய உறவைக் குறிப்பிடுகிறது. "யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்யக்கடவோம்" (கலா 6:10) என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் சக விசுவாசிகளை கூடுதலாக சிநேகிக்கவேண்டும். கிறிஸ்தவர்கள் அத்தனைபேருக்கும் பிதா ஒருவரே (எபே 3:15, 2 கொரி 6:18, ரோமர் 8:15, கலா 4:6, 3:26). கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும் சகோதரியும், தாயுமாய் இருக்கிறான்" (மத் 12:50). பேதுரு சொல்கிறார்: "தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2 பேதுரு 1:7).

1 யோவான் 2:10,11 சொல்கிறது: "தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான்; அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக்

குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்". 4:20,21 சொல்கிறது : "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்புகூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூரவேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்". கிறிஸ்து சொல்கிறார்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:35). யோவான் சொல்கிறார்: "நாம் சகோதரரிடத்தில் அன்பு கூருகிறபடியால், மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான்" (1 யோவான் 3:14) அன்பில்லாத தன்மையும் மரணமும் ஒன்றுதான்.

பவுல், அடுத்ததாக, கனம்பண்ணுவதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ளுங்கள் என்கிறார். உலகத்து மனிதர்கள் தங்களை மற்றவர்கள் கனம்பண்ணவேண்டுமென்று விரும்புவார்கள். நாமோ மற்றவர்களைக் கனம்பண்ண விரும்புகிறவர்களாக இருக்கவேண்டும். மற்றவர்களை கனம்பண்ணினால் மட்டும் போதாது. அவசர அவசரமாக முந்திக்கொண்டு கனம்பண்ணவேண்டும். மற்றவர்களை கனம்பண்ணும் சந்தர்ப்பத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் இழந்துவிடக்கூடாது.

பிலிப்பியர் 2:3,4ல் பவுல் சொல்கிறார்: "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக". இப்படிப்பட்ட மனப்பான்மையை உடையவனாக இருந்தபடியால்தான் பவுல் தன்னைப்பற்றி "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான்" (எபே 3:8) என்று சொல்லமுடிந்தது. தியோத்திரேப்புவைப் போல் எல்லாரிலும் முதன்மையாயிருக்க விரும்பக்கூடாது (3 யோவான் 9). இயேசு சொல்கிறார் : "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்." (லூக்கா 14:11).

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள். (ரோமர் 12:11)

மூன்று வித்தியாசமான ஆலோசனைகளை பவுல் இந்த வசனத்தில் கொடுத்திருக்கிறார் என்றாலும் அவை மூன்றுமே ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை.

அசதியாயிராமல் ஜாக்கிரதையாக இருக்கும்படியாக பவுல் முதலாவதாகச் சொல்லுகிறார். இந்த வசனத்தை மார்ட்டின் லூத்தர் "நீங்கள் செய்யவேண்டிய காரியங்களில் சோம்பேறித்தனமாக இராதிருங்கள்" என்று மொழிபெயர்க்கிறார். "தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்" (நீதி 18:9) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனை ஆவிக்குரிய காரியத்துக்கும் பொருந்தும், உலகத்துக்கடுத்த காரியத்துக்கும் பொருந்தும். அசதியாயும் ஜாக்கிரதையற்றவனாயும் இருந்த பிரயோஜனமற்ற ஊழியக்காரன் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் புறம்பான இருளில் தள்ளப்படுவதை மத்தேயு 25:30ல் பார்க்கிறோம். பிரசங்கி சொல்கிறார்: "செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்" (9:10). கலாத்தியர் 6:9ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "நன்மைசெய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும், நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" (எபி 6:11).

ஒரு கிறிஸ்தவன் இந்த கடைசி நாட்களில் அசதியாக இருக்கக்கூடாது. "கர்த்தருடைய வேலையை அசதியாகச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" (எரே 48:10). 1 தெசலோனிக்கேயர் 4:12ல் பவுல் சொல்கிறார்: "அமைதலுள்ளவர்களாயிருக்கும்படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம்". "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்கு கட்டளையிட்டோமே" (2 தெச 3:10). ஏதேன் தோட்டத்தில் சகல ஆசீர்வாதங்களும் இருந்தபோதிலும் அதை பண்படுத்தவும் காவல்காக்கவும் ஆதாமுக்கு தேவன் கட்டளையிட்டிருந்தார் (ஆதி 2:15). "என் பிதா இதுவரைக்கும் கிரியை செய்து வருகிறார், நானும் கிரியை செய்து வருகிறேன்" (யோவான் 5:17). "பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும்" (9:4) என்று இயேசு சொல்வதைக் கவனியுங்கள். பன்னிரண்டு வயதான சிறுவனாய் இருந்தபோதே கிறிஸ்து தன்னைத் தேடிவந்த பெற்றோரிடம் சொல்லுகிறார்: "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என்

பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா?" (லூக்கா 2:49) தன்னுடைய சிறுவயதிலேயே அவர் அசதியாயிருக்கவில்லை.

ஆவியில் அனலுள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பது பவுல் தரும் இரண்டாவது ஆலோசனை. அசதியின் எதிர்பதம் அனல். ஆவியில் அனலுள்ளவர்கள் தேவபிரசனத்தில் இருப்பார்கள் என்பது மட்டுமல்ல, தேவபிரசனத்தை வெளிப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். இந்த வசனத்தில் பரிசுத்த ஆவியானவரின் அனலோடு ஊழியஞ் செய்வதைக் குறித்து பவுல் பேசுவதாகக் கருதப்படுகிறது என்றாலும் பல வேத வசனங்களில் பவுல் ஆவி என்ற வார்த்தையை மனிதனில் இருக்கும் மனுஷீக ஆவியையும் உள்ளடக்கிப் பேசுவதைப் பார்க்கிறோம் (ரோமர் 1:9, 1 கொரி 2:11; 5:4, 2 கொரி 7:1, எபே 4:23, 1 தெச 5:23). அப்பொல்லோ என்ற ஊழியரைக் குறித்து அவர் "ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப்போதகம் பண்ணிக்கொண்டு வந்தான்" (அப் 18:25) என்று வாசிக்கிறோம்.

கர்த்தருக்கு ஊழியஞ்செய்யவேண்டும் என்பது பவுல் தரும் மூன்றாவது அறிவுரை. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் தேவனுக்கென்று ஊழியம் செய்யும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். தேவனை மகிமைப்படுத்தும் ஒவ்வொரு கிரியையும் அவருக்குச் செய்யும் ஊழியமாகவே இருக்கிறது. "பயத்துடனே கர்த்தரைச் சேவியுங்கள்" (சங் 2:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" என்று எபேசியர் 6:8ல் வாசிக்கிறோம். "தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்கள்" (1 தீமோ 6:5) செய்யும் ஊழியங்கள் மகிமையானதாக தோற்றமளிக்கலாம். ஆனால் அவை கர்த்தருடைய ஊழியமாகக் கருதப்படாது.

தேவனுடைய ஊழியத்தில் முழுநேர ஊழியம், பகுதிநேர ஊழியம் என்று பாகுபாடு இல்லை. ஒரு கிறிஸ்தவன் முழுமையாகவும், எல்லாநேரங்களிலும், தேவ ஊழியனாகவே இருக்கிறான். ஒருவன் சபையில் ஆராதனையை நடத்தும்போது, அல்லது வேதபாடம் எடுக்கும்போது, அல்லது ஞாயிறு பள்ளி பாடங்களைக் கற்றுக்கொடுக்கும் போது அல்லது பிரசங்கம் பண்ணும்போதுதான் தேவனுக்கு ஊழியஞ்செய்கிறான் என்பதல்ல. அவன் செய்யும் அனுதின கிரியைகள் அத்தனையும் தேவனுடைய அதிகாரத்துக்குட்பட்டதாக இருக்கும்போது மட்டுமே அவன் ஊழியக்காரனாகக் கருதப்படமுடியும். பவுல் சொல்கிறார்:

"நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி 10:31) அவருடைய மகிமைக்கென்று செய்யப்படும் எல்லா காரியங்களும் ஊழியங்களாகவே கருதப்படவேண்டும்.

நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள். (ரோமர் 12:12).

இந்த வசனத்திலும் பவுல் மூன்று ஆலோசனைகளை சபைக்கு வழங்குவதைப் பார்க்கிறோம். முதலாவதாக நம்பிக்கையிலே சந்தோஷமாயிருக்கும்படியாக பவுல் சொல்கிறார். சகல காரியங்களிலும், சகல வேளைகளிலும் நாம் கர்த்தரைக் குறித்து சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதை பல வேதவசனங்கள் வலியுறுத்துகின்றன. கிறிஸ்துவினிமித்தம் நாம் நிந்தனைகளைச் சந்திக்கும் வேளைகளிலும் நாம் சந்தோஷப்படவேண்டும் (மத் 5:12, லூக்கா 6:23, 1 பேதுரு 4:13). பொருளாதார நெருக்கடிகள் நஷ்டங்கள் மத்தியிலும் "நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூருவேன்" என்கிறார் ஆபகூக் (3:18). இந்த சந்தோஷம் ஒருவன் தேவன்மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது.

"அந்த நம்பிக்கையினாலே நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" (ரோமர் 8:24,25) என்று பார்த்தோம். ஆபிரகாமைக் குறித்து இவ்வாறு வாசித்தோம்: "தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (ரோமர் 4:18). **நம்பிக்கை விசுவாசத்தை ஆதாரமாகக் கொண்டது (எபி 11:1). விசுவாசம் தேவனைக் குறித்த சாட்சியை ஆதாரமாகக் கொண்டது (கலா 5:5).** "நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" என்று 1 தீமோ 1:1ல் வாசிக்கிறோம். "இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 1:13) என்கிறார் பேதுரு.

வேதத்தில் நாம் பார்க்கும்போது, மிகவும் கடினமான உபத்திரவங்களைச் சந்தித்த ஒரு மனிதன் யோபு. ஆனாலும் அவர் சொல்கிறார்: "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (13:15). "அவர் என்னைச் சோதித்தபின் நான்

பொன்னாக விளங்குவேன்" (23:10) என்ற நம்பிக்கை அவரிடம் இருந்தது. **நம்பிக்கையின் வழியாகத்தான் ஒருவன் நம்பிக்கைக்கு அப்பாற்பட்டதையும் பெறக்கூடும்.** ஆபகூக்கின் அபரிதமான நம்பிக்கையும் அதன்விளைவாக அவர் பெற்றுக்கொண்ட சந்தோஷத்தையும் குறித்து இவ்வாறு வாசிக்கிறோம்: "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூறுவேன்" (ஆல 3:17,18).

உபத்திரவத்திலே பொறுமையாயிருக்கவேண்டும் என்பது பவுல் தரும் இரண்டாவது ஆலோசனை. யாக்கோபு சொல்கிறார், "இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்" (5:11). தாவீது சொல்கிறார்: "கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார்" (சங் 40:1). "கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவருக்குக் காத்திரு; காரியசித்தியுள்ளவன் மேலும், தீவினைகளைச் செய்கிற மனுஷர் மேலும் எரிச்சலாகாதே" (சங் 37:7).

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" (யோவான் 16:33) என்ற வார்த்தையை பவுல் நினைவுபடுத்துகிறார். உலகத்தில் உங்களுக்கு செழிப்பு உண்டு என்று அவர் சொல்லவில்லை. தன்னுடைய ஊழியத்தில் மிகுந்த உபத்திரவங்களைச் சந்தித்த மனிதன் பவுல், ஆனாலும் அவர் சொல்வதைக் கவனியுங்கள் : "எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்" (2 கொரி 7:4). "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ 3:12). "தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும், அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரி 1:4). "அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டும்" (அப் 14:22). ரோமர் 8:18 சொல்கிறபடி : "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்".

மூன்றாவதாக ஜெபத்திலே உறுதியாய் தரித்திருப்பதைக் குறித்து

பவுல் ஆலோசனை தருகிறார். ஜெபியுங்கள் என்று சொல்லாமல் ஜெபத்தில் தரித்திருங்கள் என்கிறார். ஜெபிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. உபத்திரவங்களின் மத்தியில் பொறுமையாய் இருக்கவேண்டுமானால் அதற்கு ஜெபம் தேவைப்படுகிறது. ஒருநாளில் எத்தனைமுறை ஜெபிக்கவேண்டும் என்பதைக்குறித்த ஆலோசனை வேதத்தில் சொல்லப்படவில்லை. சங்கீதக்காரன் சொல்கிறான் : "உமது நீதி நியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்" (119:164). ராஜ்யம் முழுமைக்கும் அதிகாரியாக நியமிக்கப்பட்ட தானியேல் "தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" (தானி 6:10) என்று வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டில் ஜெபத்தைக் குறித்து நமக்குச் சொல்லப்படும் ஆலோசனை இவைதான். "இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" (1 தெச 5:17). "சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டும்" (லூக்கா 18:1). "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்" (கொலோ 4:2)

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 7:7) என்று திட்டவட்டமாக இயேசு அறிவித்திருக்கிறார். "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவான் 16:24) தன் சீஷர்களிடம் இயேசு சொல்கிறார்: "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்" (மத் 26:41). "எந்தச் சமயத்திலும், சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும், ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" (எபே 6:18). "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்" (1 யோவான் 5:14,15).

ஆதி அப்போஸ்தல சபையின் ஜெப ஜீவியத்தைக் குறித்து அறிந்துகொள்ள அப் 2:42,46,47; 6:4; 12:5,12 முதலிய வசனங்களை வாசித்துப்பாருங்கள். ஜெபத்தைப் பற்றி மற்றுமொரு காரியத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். **வாயின் வார்த்தையாக வெளிப்படுவது எல்லாம் ஜெபமாகிவிடாது. நம்முடைய உள்ளான இருதயம் தேவனிடம் பேசாத நிலையில், வாயின் வார்த்தைகள் பிரயோஜனமற்றவை.** "அன்னாள் தன் இருதயத்திலே பேசினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது.

அவள் சத்தமோ கேட்கப்படவில்லை" (1 சாமு 1:13) என்று வாசிக்கிறோம். ஆசாரியனாகிய ஏலி அதை ஒரு ஜெபமாக எண்ணவில்லை. ஆனால் தேவன் அவளுடைய ஜெபத்தைக் கேட்டார்.

பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்யுங்கள்; அந்நியரை உபசரிக்க நாடுங்கள். (ரோமர் 12:13)

தேவனுடைய பிள்ளைகளுக்கு தேவை ஏற்படும்போது அவர்களுக்காக ஜெபிப்பதோடு நிறுத்திக்கொள்ளக்கூடாது. ஜெபிப்பது நல்லதுதான். ஆனால் அவர்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய்வது நம்முடைய கடமை, அவசியப்பட்டால் பரிசுத்தவான்களை உபசரித்து, அவர்களுக்கு உங்கள் வீடுகளில் அடைக்கலம் கொடுங்கள் என்கிறார் பவுல். அந்நியர்களை உபசரிப்பது என்பது ஒரு முக்கியமான கிறிஸ்தவ பண்பு. எபிரெயர் 13:2 சொல்லுகிறது: "அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு". ஆதியாகமம் 18:1-16 வாசித்துப்பாருங்கள்.

கலாத்தியர் 6:10ல் பவுல் சொல்கிறார்: "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்". ஏராளமான பணவசதி உள்ளவர்கள் எல்லாருக்கும் உதவிசெய்யலாம் என்றாலும், குறைவான வசதியுள்ள கிறிஸ்தவர்கள் சகவிசுவாசிகளுக்கு உதவிசெய்யும்படியாக பவுல் ஆலோசனை தருவதுபோல் தெரிகிறது. இரண்டுபேர் பசியாயிருக்கிறார்கள். நம்மிடம் இருக்கும் ஒரு ரொட்டியால் ஒருவருடைய பசியைத்தான் தீர்க்கமுடியும் என்றால் அவர்களில் கிறிஸ்தவனைத் தெரிந்துகொள்வோம்.

நீதிமொழிகள் 14:21 சொல்கிறது: "தரித்திரனுக்கு இரங்குகிறவனோ பாக்கியமடைவான்". சங்கீதம் 41:1-3 சொல்கிறது: "சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்கு நாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்; பூமியில் அவன் பாக்கியவானாயிருப்பான்; அவன் சத்துருக்களின் இஷ்டத்திற்கு நீர் அவனை ஒப்புக்கொடீர். படுக்கையின்மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவீர்".

"ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை

நோக்கி; நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?" என்கிறார் யாக்கோபு (2:15,16). யோவான் சொல்கிறார்: "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" (1 யோவான் 3:17).

ஆதி அப்போஸ்தல சபையில் "அவர்கள் ஜெபம் பண்ணியபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது" (அப் 4:31) என்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த நாட்களில் அந்த அசைவு காணப்படுவதில்லை. ஏனென்றால் என்னுடையது, எனக்குரியது, என் வீட்டாருக்குரியது, என் சபைக்குரியது என்ற மனப்பான்மையுடன் நாம் செயல்படுகிறோம். இந்த மனநிலையில் கிறிஸ்துவின் ஒரே சரீரத்தில் நாம் வெவ்வேறு அங்கங்களாக இருக்கிறோம் என்று எப்படி சொல்லமுடியும்?

ஆதி அப்போஸ்தல சபையின் பல காரியங்களைக் குறித்து இன்று பிரசங்கங்களை கேட்கிறோம். ஆனாலும் அப் 2:44-47, 4:32-35 வசனங்களை மட்டும் யாருமே பிரசங்கிப்பதில்லை, இதில் சொல்லப்பட்டவை நடைமுறைக்கு ஒத்துவராது என்று ஒதுக்கிவைத்து விட்டோம். அந்த வசனங்களை வாசித்துப்பாருங்கள்.

கிறிஸ்தவர்களாகிய நாம் மனித இனம் முழுவதையும் நேசிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பது உண்மைதான் (மத் 5:43,44, 1 தீமோ 6:18, தீத்து 3:8, எபி 13:16). ஆனாலும் கிறிஸ்தவ சகோதரர்களைப் பொறுத்தவரை நாம் கூடுதலாகக் கரிசனை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று கிறிஸ்து விரும்புகிறார்: "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே, என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக் கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற்போவதில்லை" (மாற்கு 9:41). "உன் சகோதரன் தரித்திரப்பட்டு, கையிளைத்துப்போனவனானால், அவனை ஆதரிக்கவேண்டும்" (லேவி 25:35).

அடுத்ததாக அந்நியரை உபசரியுங்கள் என்று பவுல் சொல்லாமல் அவர்களை "உபசரிக்க நாடுங்கள்" என்கிறார். அந்நியரை உபசரிக்கும் வாய்ப்புகளை நீங்களாகவே முயற்சி எடுத்து உருவாக்கிக்கொள்ளுங்கள் என்று பொருள் கொள்ளலாம். இது புதிய ஏற்பாட்டில் மட்டும் கூறப்படும் கட்டளையா? அல்லவே . . . மோசேயும்கூட "நீங்களும் எகிப்துதேசத்தில் அந்நியராயிருந்தபடியால், அந்நியரைச் சிநேகிப்பீர்களாக" (உபா 10:19)

என்கிறார். "அந்நியனைச் சிறுமைப்படுத்தாமலும் ஒடுக்காமலும் இருப்பீர்களாக" (யாத் 22:21). "அந்நியனை ஒடுக்காயாக; எகிப்து தேசத்தில் அந்நியர்களாயிருந்த நீங்கள் அந்நியனுடைய இருதயத்தை அறிந்திருக்கிறீர்களே" (யாத் 23:9). "உங்களிடத்தில் வாசம் பண்ணுகிற அந்நியனைச் சுதேசிபோல எண்ணி, நீங்கள் உங்களில் அன்புகூருகிறதுபோல அவனிலும் அன்புகூருவீர்களாக" (லேவி 19:34).

நியாயப்பிரமாணத்தின் நாட்களுக்கு முன்பே அந்நியரை உபசரிப்பது ஒரு முக்கியமான கடமையாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். அதனால்தான் ஆபிரகாம் தன்னிடம் வந்த மூன்று புருஷர்களை அவ்வளவு உற்சாகமாக வரவேற்கிறார் (ஆதி 18:1-8). சோதோம் பட்டணத்துக்கு இரண்டு தூதர் வந்தபோதும் "அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து, எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து: ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டுமுகமாய் நீங்கள் திரும்பி உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம்" (ஆதி 19:1,2) என்று சொல்லி உபசரிப்பதைப் பார்க்கிறோம்.

அந்நியரை உபசரிப்பது என்பது சபை நிர்வாகிகளின் கடமைகளில் ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது (1 தீமோ 3:2, தீத்து 1:8). "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்" (1 பேதுரு 4:9) என்கிறார் பேதுரு. கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான். தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்ற பலனை அடைவான்; நீதிமான் என்னும் நாமத்தினிமித்தம் நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன், நீதிமானுக்கேற்ற பலனை அடைவான்" (மத் 10:40,41). தீத்து 1:8, எபி 13:2 வாசித்துப்பாருங்கள்.

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள்; ஆசீர்வதிக்க வேண்டியதேயன்றிச் சபியாதிருங்கள். (ரோமர் 12:14)

சபை விசுவாசிகள் மத்தியில் சகோதர சிநேகத்தின் மேன்மையைக் குறித்து முந்தின வேதபகுதியில் அறிவித்த பவுல், உலகத்து மனிதர்களோடு, முக்கியமாக நம்மை விரோதித்து நமக்கு எதிராக செயல்படுகிறவர்களோடு எவ்வாறு நடந்துகொள்வது என்ற தேவ ஆலோசனையை அதிகாரத்தின் மீதியான பகுதியில் (வசனம் 14-21) கொடுக்கிறார். கிறிஸ்தவ விசுவாசிகளோடு மட்டும்தான் நம்முடைய உறவுமுறைகள் அன்பின்

அடிப்படையில் இருக்கவேண்டும் என்பதல்ல (வசனம் 9-13). நம்மை பகைக்கிறவர்களையும் நாம் நேசிக்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. நமக்குத் தீமை செய்கிறவர்களுக்கும் நாம் நல்லதையே செய்யவேண்டும். அவர்களுக்கு ஆசி கூறவேண்டும். எந்த காரணத்தைக் கொண்டும் அவர்களைச் சபிக்கக்கூடாது.

மலைப்பிரசங்கத்தின் வாசனை இந்த வசனத்தில் வீசுவதை உடனடியாகக் கண்டுகொள்ளலாம். கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத் 5:44,45). லூக்கா 6:27,28ம் வாசித்துப்பாருங்கள். 1 தெச 5:15ல் பவுல் சொல்கிறார்: "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள். பேதுரு சொல்கிறார்: "நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்" (1 பேதுரு 3:17).

துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதிப்பது என்பது எளிதான காரியம் அல்ல. அதனால்தான் கால்வின் இவ்வாறு சொல்கிறார் : "இந்த பிரமாணத்துக்கு முழுமையாகக் கீழ்ப்படிகிறேன் என்று எந்த மனிதனாலும் சொல்லமுடியாது. ஆனாலும் இதற்குக் கீழ்ப்படிய முயற்சி செய்யாத எந்த ஒரு மனிதனும் தன்னைக் கிறிஸ்தவன் என்று சொல்லமுடியாது".

தன்னைச் சிலுவையில் அறைந்து, அவமானப்படுத்தி, துன்பப்படுத்தியவர்களை கிறிஸ்து எவ்வாறு ஆசீர்வதித்தார் என்று பாருங்கள், "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34). பேதுரு சொல்கிறார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). புதிய ஏற்பாட்டின் முதல் இரத்த சாட்சியான ஸ்தேவானை யூதர்கள் கல்லெறிந்து கொன்றபோது அவர் "ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப்பாவத்தைச் சுமத்தாதிரும் என்று ஜெபித்தார்" என்று பார்க்கிறோம் (அப் 7:60).

துன்பப்படுத்துகிறவர்களை நாம் ஆசீர்வதிப்பது எப்படி? மூன்று

காரியங்களை நாம் செய்யலாம். முதலாவதாக, அவர்களைக்குறித்த நல்ல காரியங்களை மட்டுமே நாம் பேசலாம். எவ்வளவுதான் துன்மார்க்கமான மனிதர்களாக இருந்தாலும் அவர்களில் பாராட்டுதற்குரிய ஒன்றிரண்டு காரியங்கள் நிச்சயமாக இருக்கும். அதைத் தேடிப்பிடித்து மற்றவர்களிடம் அறிவிக்கலாமே! இரண்டாவதாக அவர்களைச் சந்தித்து, அன்பாக, மரியாதையாகப் பேசலாம். மூன்றாவதாக தேவ சமுகத்தில் அவர்களுக்காக ஜெபிக்கலாம். அவர்கள் தங்களுடைய பாவ வாழ்க்கையினிமித்தம் ஜெபம் பண்ணமுடியாமல் இருப்பார்கள். அவர்கள் இரட்சிப்புக்காக ஜெபிப்பது நம்முடைய கடமையாகிறது. மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து அழகாகச் சொல்கிறார்: "உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரை மாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும் அப்படிச் செய்கிறார்கள் அல்லவா?" (மத் 5:46,47).

அராபியர்கள் இன்றும் தங்கள் அயலார்களைச் சந்திக்கும்போது, வலது கரத்தினால் தங்கள் நெற்றியையும், உதடுகளையும், இருதயத்தையும் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுவார்களாம். உங்களைப் பற்றி எப்போதும் மேன்மையானதையே யோசிக்கிறேன். உங்களைப் பற்றி நல்ல காரியங்களையே பேசுகிறேன். உங்களுக்காகவே என் இருதயம் துடித்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக இந்த கிரியைகளைச் செய்கிறார்களாம்.

"ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள்" என்று பவுல் இந்த ஆலோசனையை மீண்டுமாக முக்கியப்படுத்துவதைக் கவனியுங்கள். தேவனுடைய கற்பனைகளுக்கு உடனடியாகக் கீழ்ப்படிய கற்றுக் கொள்ளுங்கள். பலவேளைகளில் இப்படிப்பட்ட தேவ ஆலோசனைகளில் நம் வசதிக்கேற்றபடி கீழ்ப்படிய விரும்புகிறோம். அது தவறு. ஒருவரை நாம் ஆசீர்வதிக்கும்போது உண்மையில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் அவர்மேல் தங்கியிருக்கவேண்டும் என்று ஜெபிக்கிறோம் (எபி 11:20). ஒருவரை சபிக்கும்போது தேவன் அவரை நிர்மூலமாக்கவேண்டும் என்று ஜெபிக்கிறவர்கள் ஆகிறோம் (மத் 25:41). கிறிஸ்து சபித்த அத்திமரம் பட்டுப்போயிற்று என்பதை அறிவோம் (மாற்கு 11:21). மற்றவர்களைச் சபிக்கிறவர்கள் உண்மையான கிறிஸ்தவர்களாக இருக்கவேமுடியாது. பவுல் தன்னுடைய ஊழிய அனுபவத்தைக் குறித்து இவ்விதமாகச் சொல்லுகிறார்: "இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். எங்கள் கைகளினாலே வேலை செய்து, பாடுபடுகிறோம்;

வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்" (1 கொரி 4:11-13).

நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த வசனத்தின் அடிப்படையில் யோசித்துப்பார்ப்போம். பதிலுக்குப் பதில் செய்ய விரும்புகிறவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது.

சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்; அழுகிறவர்களுடனே அழுங்கள். (ரோமர் 12:15)

நமக்கு வேண்டியவர்கள், நம்மைச் சுற்றியிருப்பவர்கள் மகிழ்ச்சியோடு இருக்கும்போது நாமும் அவர்களோடு மகிழ்ச்சியோடு இருக்கவேண்டும். அவர்கள் துக்கமாயிருக்கும்போது நாமும் துக்கமாயிருக்கவேண்டும். இந்த இரண்டில் முதலாவது காரியம் சற்று கடினமானது. மற்றவர்களிடம் துக்கம் விசாரிப்பதில் முந்திக்கொள்ளும் நாம் அவர்கள் சந்தோஷப்படும்போது அவர்களை வாழ்த்துவதில் ஆர்வம் காட்டுவதில்லை. அவர்களுடைய சுகத்திலும், துக்கத்திலும் நாம் பங்கு கொள்ளவேண்டும். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள், அண்டை வீட்டார், அடுத்த தெருவினர், பக்கத்து ஊரினர் ஆகியோரைக் குறித்த கரிசனை நமக்கு இருக்கவேண்டும். கலாத்தியர் 6:2 சொல்கிறது: "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்". மற்றவர்களுடைய பாரத்தைச் சுமப்பதும் நியாயப்பிரமாண விதிகளில் ஒன்றுதான்.

யோவான் சுவிசேஷத்தில் கிறிஸ்து செய்த முதலாவது அற்புதம் ஒரு திருமண வீட்டில் நடந்தது. அவர்களுடைய சந்தோஷத்தில் தானும் பங்குகொள்ளும் விதத்தில் தண்ணீரை திராட்சரசமாக்கினார் (யோவான் 2). யோவான் எழுதிய சுவிசேஷத்தில் அவருடைய கடைசி அற்புதமான லாசருவின் உயிர்த்தெழுதல் ஒரு துக்கவீட்டில் நடந்தது. மரியாளும் அவளோடே வந்த யூதர்களும் லாசருவின் மரணத்தினிமித்தம் அழுகிறதைக்கண்ட இயேசு "ஆவியிலே கலங்கி துயரமடைந்தார்" (யோவான் 11:33). "இயேசு கண்ணீர் விட்டார்" (வசனம் 35) என்று வாசிக்கிறோம். தான் லாசருவை உயிரோடு எழுப்பப் போவதை அவர் அறிந்திருந்தும் அந்த வீட்டின் துக்கத்திலும் அவர் பங்கு கொண்டார்.

நாம் பரலோகத்து ராஜ்யத்தின் பிரஜைகள், இந்த உலகத்தில் பரதேசிகளாகத்தான் இருக்கிறோம் என்பதினால் கிறிஸ்தவர்களுடைய சந்தோஷங்களிலும், துக்கங்களிலும்தான் நாம் பங்குகொள்ளவேண்டும் என்று நினைக்கக்கூடாது. நாம் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை

நடத்தவேண்டும் என்பதற்காக தேவனை அறியாதவர்களோடு உறவு கொள்ளக்கூடாது என்பதல்ல, **ஆத்தும ஆதாயம் பண்ணவேண்டுமானால் மீன்களைத் தேடி நாம்தான் போகவேண்டும். மீன்கள் நம்மைத் தேடிவந்து நம் வலைகளில் விழும் என்று எதிர்பார்க்கக்கூடாது.** அவர்களுடைய சுகதுக்கங்களில் பங்குகொள்ளும் போதுதான் அவர்கள் நம்மிடமிருந்து வெளிப்படும் கிறிஸ்தவ அன்பை உணர்ந்து கொள்ளமுடியும். நம்மில் எத்தனைபேர் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு சந்தோஷமாயிருக்கும் போது அதைக் குறித்து மனமகிழ்ச்சி அடைகிறோம் என்பதை யோசித்துப்பார்ப்போம். அவர்கள் நஷ்டங்கள் அல்லது துயரங்களைச் சந்திக்கும்போது அதைக்குறித்து கரிசனையுள்ளவர்களாய் இருக்கிறோமா? அல்லது அவர்களுடைய தோல்வி, இழப்பு பெலவீனங்களினிமித்தம் இரகசியமாய் மகிழ்ச்சியடைகிறோமா?

ஒருவரோடொருவர் ஏகசிந்தையுள்ளவர்களாயிருங்கள்; மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல், தாழ்மையானவர்களுக்கு இணங்குங்கள்; உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். (ரோமர் 12:16)

நான்கு ஆலோசனைகளை பவுல் இந்த ஒரே வசனத்தில் சபைக்கு வழங்குகிறார். மற்றவர்களுடன் ஏகசிந்தை உடையவர்களாயிருப்பதைக் குறித்து பவுல் பேசுகிறார். ஒரே மனதை உடையவர்களாக, ஒருவரோடு ஒருவர் சமாதானமுள்ளவர்களாக இருப்பதை இந்த மனப்பான்மை குறிப்பிடுகிறது. "நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள்" என்று சபைக்கு பவுல் ஆலோசனை தருவதைப் பார்க்கிறோம் (பிலிப் 2:2). கொரிந்து சபையாரிடம் சொல்கிறார்; "நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" (1 கொரி 1:10). "நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்; ஏக சிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள்" (2 கொரி 13:11) எபேசியர் சபைக்குச் சொல்கிறார்: "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" (4:3). பேதுரு சொல்கிறார்: "நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டவர்களென்று அறிந்து

ஆசீர்வதியுங்கள்" (1 பேதுரு 3:8,9).

ஏக சிந்தை என்ற வார்த்தை ஒரே சிந்தையை குறிப்பிடுகிறது. நம்மைக் குறித்த ஒரு சிந்தையும், மற்றவர்களைக் குறித்து வேறு ஒரு சிந்தையும் வைத்துக் கொள்ளக்கூடாது. உங்களைக் குறித்து எதை சிந்தித்து திட்டமிட்டுக் கொண்டிருக்கிறீர்களோ, அதையே மற்றவர்களைக் குறித்தும் சிந்தித்துத் திட்டமிடுங்கள். பவுல் சொல்கிறார் : "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப் 2:4,5). அவருடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருந்தது என்பதை பிலிப்பியர் 2:6,7,8 ஆகிய வசனங்கள் அறிவிக்கின்றன, வாசித்துப்பாருங்கள்.

இரண்டாவதாக மேட்டிமையான காரியங்களைச் சிந்திக்கவேண்டாம் என்று பவுல் ஆலோசனை தருகிறார். உங்கள் ஞானம், திறமை, அந்தஸ்து, அதிகாரம், ஊழியம் ஆகியவற்றைக் குறித்து மமதை கொண்டிருக்கக்கூடாது. மேட்டிமையாக செயல்படக்கூடாது என்று பவுல் அறிவிக்காமல் மேட்டிமையானதை சிந்திப்பதே தவறு என்கிறார். பரலோகத்திலிருந்தபோது லூசிபர் மேட்டிமையான கிரியைகள் எதையும் செய்யவில்லை. மேட்டிமையான சிந்தனை உடையவனாக இருந்ததினிமித்தமே அவன் தண்டிக்கப்பட்டான். "நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே, ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்" (ஏசாயா 14:14,15) என்று வாசிக்கிறோம். "முதன்மையாயிருக்க விரும்புகிற தியோத்திரேப்பு" (3 யோவான் 9) என்று யோவான் அவனைக் குற்றப்படுத்துவதைக் கவனியுங்கள்.

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து தன்னைக்குறித்து என்ன சிந்தனை உடையவராய் இருந்தார் என்பதைப் பாருங்கள். அவர் சொல்கிறார்: "நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்" (மத் 11:29) மலைப்பிரசங்கத்தின் முதலாவது ஆசீர்வாதம் ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கே வழங்கப்படுகிறது (மத் 5:2). யோவான் 13:5ல் இயேசு ஒரு பாத்திரத்தில் தண்ணீரை ஊற்றி, தன் சீஷர்களின் கால்களைக் கழுவி சுத்தம்பண்ணி, தன்னுடைய இடுப்பில் இருந்த துண்டினால் அவர்கள் கால்களைத் துடைத்த நிகழ்ச்சி சொல்லப்படுகிறது. அதற்கு இரண்டு வசனங்களுக்கு முன்பு அவரைக் குறித்து மூன்று காரியங்கள் சொல்லப்பட்டிருப்பதைப் பாருங்கள்.

1. தனக்கு பிதா எல்லா அதிகாரங்களையும் கொடுத்திருந்தார் என்பதை கிறிஸ்து அறிந்திருந்தார்.
2. தான் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை கிறிஸ்து அறிந்திருந்தார்.
3. தான் விரைவில் தன் பிதாவினிடம் திரும்பிப் போகவேண்டும் என்பதையும் கிறிஸ்து அறிந்திருந்தார்.

அப்படி இருந்தும் அவரிடம் எந்த மனமேட்டிமையும் காணப்படவில்லை. மாறாக அந்த மேன்மைகளினிமித்தம் அவரிடம் மனத்தாழ்மை காணப்பட்டது. அதனால்தான் தன்னுடைய சீஷர்களின் கால்களைக் கழுவிவிட்டு, அவர்களிடம் "நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" (யோவான் 13:15) என்கிறார். அந்த மாதிரியை நாம் உண்மையாகவே உணர்ந்து, கற்றுக்கொண்டிருக்கிறோமா? கர்த்தருடைய பந்தியில் கலந்துகொள்ளுமுன் அதைக் கடைப்பிடிக்கிறோமா? "ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (வசனம் 14) என்று திட்டவட்டமாக கிறிஸ்து சொல்லியிருக்கிறாரே.

தன்னுடைய ஆரோகண சங்கீதத்தில் தாவீது சொல்கிறார்: "கர்த்தாவே, என் இருதயம் இறுமாப்புள்ளதல்ல, என் கண்கள் மேட்டிமையுள்ளவைகளுமல்ல; பெரிய காரியங்களிலும், எனக்கு மிஞ்சின கருமங்களிலும் நான் தலையிடுகிறதுமில்லை" (சங் 131:1). தேவன் சொல்லுகிறார்: "நீ உனக்குப் பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ? தேடாதே" (எரே 45:5). "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை" (1 தீமோ 6:7) என்பதை நாம் உணர்ந்துகொள்வோமானால் நம்மில் மேட்டிமையான சிந்தைகள் உருவாகாது. "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்" (எபி 13:5). உலக ஐசுவரியம் எந்த ஒரு மனிதனையும் மனமேட்டிமையுள்ளவனாக மாற்றிவிடும்.

தாழ்மையானவர்களுக்கு இணங்கும்படியான ஆலோசனை மூன்றாவதாகக் கொடுக்கப்படுகிறது. நம்முடைய வாழ்க்கையில் சந்திக்கும் பலர் நமக்கு முக்கியமானவர்களாகத் தோன்றாமல் இருக்கலாம். ஆனாலும் அவர்களைக் கனம் பண்ணி, அவர்களோடு நட்புறவு கொள்ளவேண்டும். பவுல் சொல்லுகிறார்: "மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர்

தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப் 2:3,4).

தாழ்மையானவர்களுக்கு இணங்காத ஒரு ஊழியக்காரரைக் குறித்து யாக்கோபு 2:2-9ல் சொல்லப்பட்டிருக்கிறது. சிறந்த ஆடைகளையும், தங்க மோதிரங்களையும் அணிந்துகொண்டு ஆலயத்துக்கு வரும் பணக்காரன் போதகரால் வரவேற்கப்படுகின்றான். பழைய அழுக்கான ஆடைகளை அணிந்துவரும் விசுவாசியோ புறக்கணிக்கப்படுகிறான். உலகம் யாரை தாழ்மையானவனாகக் காண்கிறதோ, அவனை தேவன் விசுவாசத்தில் ஐசுவரியவானாகக் காணலாம் என்பதை மறந்துவிடுகிறோம்.

ஊழியக்காரர்களாகிய நாம் பொதுவாக யார் மத்தியில், யாருடைய இல்லங்களில் காணப்பட வாஞ்சிக்கிறோம் என்பதை யோசித்துப்பாருங்கள். நம்முடைய ஐக்கியம், உறவு, நெருக்கம் பெரிய மனிதர்களோடு, பிரபலமானவர்களோடு, பணக்காரர்களோடு இருக்கிறதா? அல்லது தாழ்மை நிலையில் இருப்பவர்களோடு இருக்கிறதா: "நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும், சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும்" (லூக்கா 14:13,14) என்ற வேதவசனம் வேதத்தில் இருக்கிறது என்பதை உண்மையாகவே உணர்ந்திருக்கிறோமா? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தன்னுடைய ஊழிய நாட்களில் பெரிய பெரிய பட்டணங்களிலும், அங்குள்ள அரண்மனைகளிலும், விளையாட்டு அரங்கங்களிலும் காணப்பட்டாரா? அல்லது தெருவீதிகளிலும், கடற்கரைகளிலும் காணப்பட்டாரா?

அப்போஸ்தலனாகிய பவுல் தான் செய்துவந்த ஊழியத்தைக் குறித்து 1 கொரி 9:19-23ல் எழுதி வைத்திருப்பதை வாசித்துப்பாருங்கள். "பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (வசனம் 22).

இறுதியாக உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள் என்கிறார் பவுல். ரோமர் 11:25லும் இந்த ஆலோசனை தரப்பட்டது. நீதிமொழி 3:7 சொல்கிறது: "நீ உன்னை ஞானியென்று எண்ணாதே". "தன் பார்வைக்கு ஞானியாயிருப்பவனைக் கண்டாயானால், அவனைப் பார்க்கிலும் மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாயிருக்கலாம்" (நீதி 26:12). "ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னை ஒரு

பொருட்டென்று எண்ணினால், தன்னைத்தானே வஞ்சிக்கிறவனாயிருப்பான்" (கலா 6:3). "தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ!" (ஏசா 5:21) பவுல் அருமையாகச் சொல்கிறார்: "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாய் அவன் இன்னும் அறியவில்லை" (1 கொரி 8:2). **ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள். முட்டாள்தனத்தின் முதல்படியே ஒருவன் தன்னை புத்திமான் என்று எண்ணுவதுதான்.**

வேதத்தில் அப்சலோமும் (2 சாமு 15:4), தியோத்திரேப்பும் (3 யோவான் 9) தங்களை ஞானிகளாக கருதிக்கொண்டவர்கள். அவர்கள் இருவருமே ஆசீர்வதிக்கப்பட்ட மனிதர்களாகத் தெரியவில்லை. கிறிஸ்து சொல்கிறார்: "உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மாற்கு 10:43-45).

ஒருவனுக்கும் தீமைக்குத் தீமை செய்யாதிருங்கள்; எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள். (ரோமர் 12:17)

மத்தேயு சுவிசேஷத்தின் மலைப்பிரசங்கப் பகுதியை தனக்கு முன்பாக வைத்துக்கொண்டு பவுல் இந்த அதிகாரத்தை எழுதியிருக்கிறாரா? "ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் போ" (மத் 5:39-41). லூக்கா 6:29,30ம் வாசித்துப்பாருங்கள். 1 தெச 5:15ல் பவுல் சொல்கிறார்: "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்கும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்". 1 பேதுரு 3:9ல் பேதுரு சொல்கிறார்: "தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிகட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள்". "தீமையை விட்டு விலகி, நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்" (சங் 37:27).

பாவம் நிறைந்த இந்த உலகில் நாம் நேர்மையாக நடக்கும்போதும், நமக்கு எதிராக தீமைசெயல்படும் என்பது உறுதி. காரணமின்றி மற்றவர்கள் நமக்கு எதிராக செயல்படும்போது அதை எதிர்த்து நிற்பதுதான் பொதுவான மனித சுபாவம். ஆனால் இயேசு சொல்லியிருக்கிறார்: "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்" (மத் 5:39). யோசேப்புக்கு எதிராக அவருடைய சகோதரர்கள் எத்தனையோ தீமைகளைச் செய்தார்கள். "அவன் எனக்குச் செய்தபிரகாரம் நானும் அவனுக்குச் செய்வேன், அவன் செய்த செய்கைக்குத்தக்கதாக நானும் அவனுக்குச் சரிகட்டுவேன்" (நீதி 24:29) என்று அவர் சொல்லவில்லை அவர்களுக்கு மிகுந்த நன்மைகளைச் செய்தார் (ஆதி 45). "நன்மைக்குத் தீமை செய்கிறவன் எவனோ, அவன் வீட்டை விட்டுத் தீமை நீங்காது" (நீதி 17:13).

நம்முடைய விரோதிகளுக்கும் நன்மை செய்யவேண்டும் என்ற ஆலோசனை நியாயப்பிரமாணத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. "உன்னைப் பகைக்கிறவனுடைய கழுதை சுமையோடே விழுந்துகிடக்கக் கண்டாயானால், அதற்கு உதவி செய்யாதிருக்கலாமா? அவசியமாய் அவனோடேகூட அதற்கு உதவி செய்வாயாக" (யாத் 23:5). நீதிமொழிகள் 20:22 சொல்லுகிறது : "தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே". மோசேக்கு விரோதமாக மிரியாம் செயல்பட்டு அதன் விளைவாக குஷ்டரோகியானபோது "மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்" (எண் 12:13) என்று எழுதப்பட்டிருக்கிறது. 2 நாளாகமம் 28:8-15ல் சொல்லப்படும் நிகழ்ச்சியை வாசித்துப் பாருங்கள்.

"ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (கொலோ 3:13) என்று வாசிக்கிறோம். தனக்கு எதிராக செய்யப்பட்ட நம்முடைய பாவங்களை தேவன் மன்னிப்பதோடு நிறுத்திக்கொள்வதில்லை. அவற்றை மறந்துவிடுகிறார். "நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்?" (எபி 8:12) "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்" (மத் 6:14) என்கிறார் இயேசு. இவ்வாறு மற்றவர்களை நாம் மன்னிக்காவிட்டால் என்ன நடக்கும் என்று யோசித்துப்பாருங்கள்.

"புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம்

சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்" (1 பேதுரு 2:12) என்கிறார் பேதுரு.

அடுத்ததாக பவுல் எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானதைச் செய்ய நாடுங்கள் என்கிறார். "நாடுங்கள்" என்று பவுல் சொல்லும்போது அவ்வாறு செய்ய "திட்டமிட்டுச் செயல்படுங்கள்" என்று பவுல் அறிவிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். நம்முடைய வெளிப்படையான உணர்ச்சிகளின் அடிப்படையில் அல்ல, மன விருப்பத்தின்படி அல்ல, திட்டவட்டமான தீர்மானத்தின் அடிப்படையில் எல்லாராலும் நல்லவை என்று எண்ணப்படும் காரியங்களை எவ்வளவு அதிகமாகச் செய்யமுடியுமோ அவ்வளவு அதிகமாகச் செய்யவேண்டும். எல்லா மனுஷருக்கு முன்பாகவும் என்று பவுல் சொல்வதினால் சபைக்கு வெளியே உள்ள மனிதர்களையும் பவுல் உள்ளடக்கிப் பேசுகிறார் என்பது புலனாகிறது. அவர் சொல்கிறார்: "தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" (2 கொரி 4:2). ஒரு தேவனுடைய ஊழியக்காரன் "நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்" (1 தீமோ 3:7).

சபையிலும், விசுவாசிகள் மத்தியிலும் மட்டுமல்ல, வெளி உலகத்து மக்களோடு நாம் நடப்பிக்கும் சகல கிரியைகளிலும் உண்மையுள்ளவர்களாயும், நேர்மையானவர்களாயும் இருக்கவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் நாம் மற்றவர்களுக்கு இடறலாயிருக்கக்கூடாது (மத் 17:27). என்னுடைய மனச்சாட்சி சீரானதாகத்தான் இருக்கிறது - மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதுபற்றி எனக்குக் கவலையில்லை என்று பேசும் சில கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய கிரியைகளைக் குறித்து வீணான சந்தேகங்கள் மற்றவர்களிடம் உருவாகுவதற்குக்கூட நாம் காரணமாக இருக்கக்கூடாது. அதனால்தான் பவுல் சொல்லுகிறார்: "கர்த்தருக்கு முன்பாக மாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுகிறோம்" (2 கொரி 8:21).

கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். (ரோமர் 12:18)

"ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களுமாயும் இருங்கள்" (மாற்கு 9:50) என்கிறார் இயேசு. "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்" (எபி 12:14) என்று

வாசிக்கிறோம். "சமாதானம் பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம்" (நீதி 12:20). மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து சொல்கிறார்: "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத் 5:9). நம் தேவன் சமாதானத்தின் தேவன் என்று அழைக்கப்படுகிறார் (1 கொரி 14:33, 1 தெச 5:23). "சமாதானத்தைத் தேடி, அதைத் தொடர்ந்துகொள்" (சங் 34:14) என்று வாசிக்கிறோம்.

சமாதானத்தின் மேன்மையை அறிந்தவர்களாய் எல்லாரோடும் சமாதானமாயிருக்க கிறிஸ்தவர்களாகிய நாம் முயற்சிசெய்தாலும், அதில் பலவேளைகளில் தோல்வியைச் சந்திக்கவேண்டியதிருக்கலாம் என்பதை உணர்ந்த பவுல், முடிந்தவரை எல்லா மக்களோடும் சமாதானமாயிருக்கும்படியாக ஆலோசனை தருகிறார். சமாதானமாயிருக்கவேண்டும் என்ற முயற்சியை எந்தக் காரணத்தைக்கொண்டும் நாம் கைவிட்டு விடக்கூடாது. சமாதானக் குலைச்சல் ஏற்படுவதற்கு நாம் எந்த விதத்திலும் காரணமாக இருந்துவிடக்கூடாது. ஆபிரகாமின் சமாதான முயற்சியை ஆதி 13:7-9ல் வாசித்துப்பாருங்கள்.

1 கொரி 6:7ல் பவுல் சொல்கிறார்: "நீங்கள் ஒருவரோடொருவர் வழக்காடுகிறது எவ்விதத்திலும் குற்றமாயிருக்கிறது. அப்படிச் செய்கிறதைவிட நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக்கொள்கிறதில்லை, ஏன் நஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுகிறதில்லை". சமாதானமாக இருப்பதற்கு நாம் ஏதேனும் கிரையம் கொடுக்கவேண்டுமென்றால், அதற்கும் நாம் ஆயத்தமாய் இருக்கவேண்டும்.

இன்னொரு காரியத்தையும் அறிந்துகொள்ளவேண்டும். எல்லாரோடும் சமாதானமாயிருக்கும் முயற்சியில், நம்முடைய கடமைகளைச் செய்வதில் தவறிவிடக்கூடாது. சக விசுவாசிகள் மற்றும் ஊழியர்களிடம் சமாதானமாக இருக்கவேண்டும் என்பதற்காக அவர்களுடைய பாவங்களைக் கண்டும் காணாதவர்களைப் போல் இருந்துவிடக்கூடாது. மேலும் நாம் சமாதானமாயிருக்கவேண்டும் என்பதற்காக கிறிஸ்தவ உபதேசத்துக்கடுத்த காரியங்களை விட்டுக்கொடுத்து விடக்கூடாது. சபைகள் எல்லாம் ஒன்றாக இணையவேண்டும் என்ற முயற்சியில் விக்கிரக ஆராதனை செய்து, தவறான உபதேசங்களைப் போதிக்கும் சபைகளோடு உறவுகொள்ள வாஞ்சிப்போமானால் அந்த சமாதானத்தை, எல்லாருடனும் சமாதானமாக இருக்கும்படி ஆலோசனை தரும் பவுலும் ஏற்றுக்கொள்ளமாட்டார். கிறிஸ்துவும் ஏற்றுக்கொள்ளமாட்டார். மத் 10:34-36, லூக்கா 12:51-53ல் கிறிஸ்து என்ன சொல்கிறார் என்பதைப் பாருங்கள்.

பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். (ரோமர் 12:19)

எல்லாரோடும் சமாதானமாயிருக்கும் முயற்சியில் பலவேளைகளில் நாம் தோல்வியடையக்கூடும் என்பதைப் பார்த்தோம். அதுமட்டுமல்ல, எந்த அளவுக்கு தேவனோடு ஐக்கியம் கொண்டு அவரை மட்டும் திருப்திப்படுத்த விரும்புகிறோமோ, அந்த அளவுக்கு நமக்கு எதிர்ப்புகள் நாம் எதிர்பாராத இடங்களிலிருந்தும் உருவாகும். பலர் நம்மை நேரடியாகவும் மறைமுகமாகவும் விரோதித்து, நமக்கு எதிராகச் செயல்பட ஆரம்பிப்பார்கள், இந்த எதிரிகளிடம் நாம் எவ்வாறு நடந்துகொள்வது என்பதைக் குறித்து பவுலின் ஆலோசனை அதிகாரத்தின் கடைசி மூன்று வசனங்களில் சொல்லப்படுகிறது. அவர்களைத் தண்டிக்க நாம் எந்த விதத்திலும் முயற்சி செய்யக்கூடாது என்கிறார் பவுல். தேவன் தன்னுடைய உக்கிர கோபத்தால் அவர்களைத் தண்டிக்கும்வரை பொறுமையாகக் காத்திருக்கவேண்டும். அவருடைய பழிவாங்குதல் கொடுமையானதாக இருக்கும். அது இப்போதே வெளிப்படலாம். அல்லது அவருடைய நியாயத்தீர்ப்பு நாளில் வெளிப்படலாம். எதுவானாலும் அவரே பதில் செய்யும்படி அமைதலாயிருக்கும்படி பவுல் சொல்லுகிறார்.

"பழிவாங்குவதும் பதிலளிப்பதும் எனக்கு உரியது" (உபா 32:35) என்ற தேவனுடைய வார்த்தையை பவுல் இங்கே பயன்படுத்துகிறார். பழிவாங்குதல் தேவனுக்கு உரியது என்பதினால் அது நமக்கு உரியதல்ல என்பதாகிறது. பதில் அளிப்பதும் அவரே என்பதினால் அதையும் நாம் செய்யத்தேவையில்லை. நம்மைப் பழிவாங்கவும் பதிலளிக்கவும் தூண்டும் பல காரியங்கள் நம்மைச் சுற்றிலும் நடந்துகொண்டுதான் இருக்கும். ஆனாலும் அவற்றை நாம் செய்யாமலிருப்பதில்தான் நம்முடைய மனமகிழ்ச்சியும் ஆசீர்வாதமும் அடங்கியிருப்பதை அறிந்துகொள்ளவேண்டும். நம்மைப் பொறுத்தவரை பழிவாங்குதல் தடைபண்ணப்பட்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள் (லேவி 19:18, நீதி 20:22; 24:29).

"கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத் 14:14) என்ற வசனத்தை இங்கே நினைவுகூறுகிறோம். நமக்கு சமாதான குலைச்சலை உண்டாக்குகிறவர்களுக்கு எதிராக நாம் செயல்படாமல், தேவனுடைய கரத்தில் அதை ஒப்புக்கொடுக்கும்போது தேவன் நம்முடைய சார்பில் செயல்பட ஆரம்பிக்கிறார். "அவர் நீதியைச் சரிகட்டுகிற தேவன்" (சங்

94:1). "உக்கிரமான தண்டனையினால் அவர்களில் கொடிதாய்ப் பழிவாங்குவேன்; நான் அவர்களில் பழிவாங்கும்போது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வார்கள்" (எசே 25:17) என்று அவர் சொல்லியிருக்கிறார். "கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிகட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிகட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர்" (நாகூம் 1:2). எபிரெயர் 11:30,31ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்". 'தேவகோபம்' என்ற வார்த்தை ரோமர் நிருபத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (1:18-25; 2:5,8; 3:5; 5:9; 9:22; 13:4).

நமக்கு விரோதமாகப் புறப்பட்டு வருகிறவர்களை நாம் பழிவாங்க ஆரம்பிக்கும்போது, நம்மை நாமே தேவனாக்கிக்கொள்ள முயற்சிக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். தாவீது என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள்: "என் பிராணனை வாங்கத்தேடுகிறவர்கள் எனக்குக் கண்ணிகளை வைக்கிறார்கள்; எனக்குப் பொல்லாங்கு தேடுகிறவர்கள் கேடானவைகளைப் பேசி, நாள்முழுதும் வஞ்சனைகளை யோசிக்கிறார்கள். நானோ செவிடனைப் போலக் கேளாதவனாகவும், ஊமையனைப் போல வாய் திறவாதவனாகவும் இருக்கிறேன். காது கேளாதவனும், தன் வாயில் மறுஉத்தரவுகள் இல்லாதவனுமாயிருக்கிற மனுஷனைப்போலானேன். கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன்; என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறு உத்தரவு கொடுப்பீர்" (சங் 38:12-15). துன்மார்க்கன் தண்டிக்கப்படவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் நம்மால் அல்ல, நீதியுள்ள நியாயாதிபதியால் அவன் தண்டிக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் மாதிரியைப் பாருங்கள். "அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23).

கர்த்தருடைய பழிவாங்குதல் எவ்வளவு கடினமானதாக இருக்கும்? அவரே சொல்கிறார்: "என் கைக்குத் தப்புவிப்பார் இல்லை. நான் என் கரத்தை வானத்திற்கு நேராக உயர்த்தி, நான் என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவர் என்றேன். மின்னும் என் பட்டயத்தை நான் கருக்காக்கி, என் கையானது நியாயத்தைப் பிடித்துக்கொள்ளுமானால், என் சத்துருக்களிடத்தில் பழிவாங்கி, என்னைப் பகைக்கிறவர்களுக்குப் பதிலளிப்பேன். கொலையுண்டும் சிறைப்பட்டும் போனவர்களுடைய இரத்தத்தினாலே என் அம்புகளை வெறிகொள்ளப்பண்ணுவேன்; என் பட்டயம் தலைவர் முதற்கொண்டு, சகல சத்துருக்களின் மாம்சத்தையும்

பட்சிக்கும்", (உபா 32:39-42). சங்கீதம் 37:1-17, 2 தெச 1:6-10, வெளி 6:9-11 வாசித்துப்பாருங்கள்.

அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் போஜனங்கொடு; அவன் தாகமாயிருந்தால், அவனுக்கு பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய். (ரோமர் 12:20)

சவால் நிறைந்த வார்த்தைகள் இந்த வசனத்தில் காணப்படுகின்றன. "உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக" என்று நீதிமொழிகள் 24:17ல் வாசிக்கிறோம், பவுல் சொல்கிற காரியம் இதுதான். உன்னுடைய எதிரி தேவையோடு இருப்பதை நீ காண்கிறாய். ஏதோ பிரச்சனையில் அகப்பட்டுக்கொண்டு சிரமப்பட்டுக் கொண்டிருப்பது உனக்குத் தெரியவருகிறது. உடனடியாக நீ என்ன நினைக்கிறாய்? தேவன் உன் நிமித்தம் அவனைத் தண்டித்துக்கொண்டிருப்பதாகக் கருதுகிறாய். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்று சொல்லி சும்மா இருந்துவிடுகிறாய், அப்படிச் செய்வது தவறு என்கிறார் பவுல். அவனுடைய பசியைப்போக்கும் ஆகாரத்தையும், தாகத்தை நீக்கும் தண்ணீரையும் நீ கொடு என்கிறார். பசி, தாகம் என்ற வார்த்தை பொதுவாக மனித தேவைகளைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். **நம்முடைய சத்துருக்களை நிரந்தரமாக அழிக்கவேண்டுமானால் அதற்கு ஒரே வழி அவர்களை நம்முடைய நண்பர்களாக்கிக் கொள்வதுதான்.** இந்த விதமாக தன்னுடைய எதிரிகள் புசித்துக் குடிக்கும்படியாக ஒரு பெரிய விருந்தை எலிசா ஏற்பாடு செய்த சம்பவம் 2 இராஜா 6:20-23ல் சொல்லப்பட்டிருப்பதை வாசியுங்கள். நமக்கு எதிராக மனிதர்கள் செயல்படுவதை நம்மால் தடைசெய்யமுடியாமல் இருக்கலாம். ஆனாலும் உண்மையில் கிறிஸ்தவர்களாகிய நாம் யாருக்கும் எதிரிகள் அல்ல என்பதே இந்த வசனத்தில் பவுல் அறிவிக்கும் சத்தியம்.

நமக்கு எதிராக செயல்படும் துன்மார்க்கமான மனிதனின் தேவைகளை நாம் சந்திக்க முற்படும்போது அவனுடைய தலையின்மேல் எரிதழலை குவிப்பதாக பவுல் சொல்கிறார். நீதிமொழிகள் 25:21,22 வசனங்களைப் பவுல் இந்த இடத்தில் பயன்படுத்துகிறார். "உன் சத்துரு பசியாயிருந்தால், அவனுக்குப் புசிக்கக்கொடு; அவன் தாகமாயிருந்தால், குடிக்கத் தண்ணீர் கொடு. அதினால் நீ அவன் தலையின் மேல் எரிகிற தழல்களைக் குவிப்பாய்; கர்த்தர் உனக்குப் பதிலளிப்பார்". இந்த வசனத்தின் கடைசி பகுதியை பவுல் சேர்க்கவில்லை. தன்னை குற்றமற்றவன் என்று நிரூபிக்கும்படியாக எகிப்து தேசத்தில் சாம்பலும் எரிதழல்களும் அடங்கிய ஒரு பாத்திரத்தைத் தன் தலைகளில்

சுமந்துகொண்டு ஒரு மனிதன் தெரு வீதிகளில் நடந்துவரும் பழக்கம் இருந்ததாம். அது ஒரு தண்டனையாகவும், அவனை அவமானப்படுத்தும் ஒரு காரியமாகவும் அமைந்திருக்கும். "நெருப்புத்தழல் அவர்கள்மேல் விழுவதாக, அக்கினியிலும், அவர்கள் எழுந்திருக்கக்கூடாத படுகுழிகளிலும் தள்ளப்படுவதாக" (சங் 140:10) என்று வாசிக்கிறோம்.

இரும்பு போன்ற கடினமான உலோகங்களை நமக்குப் பயன்படும் கருவிகளாக மாற்றும்போது அதின்மேல் அக்கினித்தழல்களைப் போட்டு சூடாக்கி, உருக்கும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது. நம்மை எதிரிகளாகக் கருதி தீங்கு செய்பவர்களுக்கு நாம் நன்மை செய்யும்போது, அவர்களுக்கு நம் அன்பை வெளிப்படுத்தும்போது, அவர்கள் தங்கள் மனச்சாட்சியில் குத்தப்பட்டு, அவர்களில் மனந்திரும்புதலும், நல்லுறவும் ஏற்படக்கூடும் என்பதை இந்த வேதபகுதி குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். பேதுரு சொல்கிறார்: "நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 பேதுரு 2:15).

இன்னொரு விதத்திலும் இந்த வேதபகுதிக்குப் பொருள் கொள்ளலாம். நம்மை விரோதிக்கும் சத்துருக்களுக்கு எதிராக நாம் செயல்படும்போது தேவன் அவர்களுக்கு எதிராக செயல்படுவதில்லை. தேவனுடைய கரத்தில் அவர்களை ஒப்புக்கொடுத்து அவர்களுக்கு நன்மை செய்யும்போது அவர் நம் சார்பில் அவர்களுக்கு எதிராக யுத்தம் செய்கிறார். அவர்களுக்கு நாம் நன்மை செய்யும்போது இன்னும் கூடுதலான முறையில் அவர்கள் தேவ கோபாக்கியின் பாத்திரர்களாக மாறுகிறார்கள். தேவனுடைய இரக்கத்தைப் பெற முற்றிலுமாகத் தகுதியற்றவர்கள் ஆகிறார்கள். "கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்; துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது. துன்மார்க்கன்மேல் கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு" (சங் 11:6,7).

நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. (ரோமர் 12:21)

யாரும் உங்களுக்குத் தீமை செய்தால், அவர்களுக்கு தீமையையே பதிலுக்குச் செய்யாதிருங்கள் என்று 17-வது வசனத்தில் அறிவித்த பவுல், இந்த வசனத்தில் ஒரு புதிய காரியத்தைச் சேர்த்துக்கொள்கிறார். அவர்களுடைய தீமையை நன்மையினாலே வெல்லும்படியாகச் சொல்லுகிறார். எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் பதிலுக்குப் பதில்

செய்து, பாவத்திடம் தோல்வி அடைந்துவிடாதீர்கள், உலகத்து மனிதர்களைப் போல மாறிவிடாதிருங்கள் என்கிறார். உங்களை விரோதிப்பவர்களுக்கும் நன்மை செய்து தீமையை நீங்கள் தோற்கடியுங்கள் என்கிறார். ஏனென்றால் அவர்களுக்கு பதிலுக்குப் பதில் செய்யும்போது தீமை நம்மை வெல்கிறது, தேவனுடைய பார்வையில் நாம் தீமையால் தோற்கடிக்கப்பட்டவர்கள் ஆகிறோம்.

மலைப்பிரசங்கத்து உபதேசத்தின் உச்சகட்டமாக இந்த வசனம் அமைகிறது. இயேசு சொல்கிறார்: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்: உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" (மத் 5:44). "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்" (லூக்கா 6:27). "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாயிருப்பீர்கள்; அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே" (லூக்கா 6:35).

ஒரு காரியத்தை அறிந்து கொள்ளுங்கள். கிறிஸ்தவர்களாகிய நாம், நமக்கு எதிராக தீமைகள் செய்யப்படும்போது, பதிலுக்குப் பதில் செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. கோபப்படாமல், இருந்தால் மட்டும் போதாது, எரிச்சலடையாமல் இருந்தால் மட்டும் போதாது. ஏனென்றால் இவைகளை உலகத்து மனிதர்களாலும் செய்யமுடியும். நாம் உன்னதமானவருடைய பிள்ளைகள் என்பதைக் காட்டவேண்டுமானால் ஐந்து காரியங்களைச் செய்யவேண்டும்.

1. நம் சத்துருக்களை சிநேகிக்கவேண்டும்.
2. நம்மை சபிப்பவர்களை ஆசீர்வதிக்கவேண்டும்.
3. நம்மைப் பகைப்பவர்களுக்கு நன்மை செய்யவேண்டும்.
4. நம்மை நிந்தித்து துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணவேண்டும்.
5. நம் சத்துருக்களுக்கு கைம்மாறு கருதாமல் கடன் கொடுக்கவேண்டும்.

இந்த வசனத்தின் அடிப்படையில் உண்மையிலேயே நாம் தேவனுடைய பிள்ளைகள்தானா என்பதை நிதானித்து அறிந்துகொள்ள பரிசுத்த ஆவியானவர் உதவிசெய்வாராக.

13

சமுதாயத்துக்கடுத்த அறிவுரைகள்

ஒரு மனிதன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டதும் உடனடியாக பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவர்களுக்காக ஜெபிக்கும்போது கிறிஸ்து சொல்கிறார்: "நான் உலகத்தானல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவான் 17:14,15). அவருடைய ஊழியத்தைச் செய்யும்படியாகவே நம்மை இந்த உலகத்தில் இருக்கும்படி கிறிஸ்து நியமித்திருக்கிறார். அதற்காகவே நாம் தீமையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளப்பட்டிருக்கிறோம்.

இவ்வாறு நாம் பூமியில் இருக்கும்போது நம்முடைய சமுதாய வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்ற ஆலோசனையை பவுல் இந்த 13-ம் அதிகாரத்தில் கொடுக்கிறார். இது அந்த நாட்களில் ரோமாபுரியில் உள்ள சபையாருக்கு கொடுக்கப்பட்டாலும் அவர்களுக்கு மட்டும் பொருந்தும் என்பதல்ல. கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சி பூமியில் ஸ்தாபிக்கப்படும் நாள் வரையில் பல்வேறு காலக்கட்டங்களில் உலகில் உண்டாயிருக்கும் பலவேறு அரசாங்கங்கள், ஆளுகைகள், சாம்ராஜ்யங்கள் ஆகியவற்றின் அங்கங்களாயிருக்கும் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் பொருத்தமுடையதாக இருக்கிறது. இந்த 13ம் அதிகாரத்தை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

1. அரசாங்கத்துக்கும், அதிகாரிகளுக்கும் கீழ்ப்படிதலைக் குறித்த விதிமுறைகள் (வசனம் 1-7)
2. ஒரு கிறிஸ்தவன் பிறரோடு கடைப்பிடிக்கவேண்டிய

சமுதாய உறவுமுறைகளுக்கடுத்த விதிமுறைகள் (வசனம் 8-10)

3. பொதுவான நன்நடத்தைக்குரிய விதிமுறைகள் (வசனம் 11-14)

கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய ராஜ்யத்தின் பிரஜைகள். இந்த பூமியில் பரதேசிகளாக நாம் சஞ்சரித்தாலும் இதை ஆட்சி செய்கிறவர் தேவனே. பூமியில் பாவமும், விரோதங்களும், குற்றங்களும் பெருகியபோது பூமியை ஆண்டுகொள்ளும் அதிகாரத்தை, தேவன், தான் தெரிந்துகொண்ட மனிதர்களுக்கு வழங்கியிருக்கிறார் (ஆதி 9:1-6). சட்டதிட்டங்களின் ஆளுகைக்குட்படாத மனிதன் வெகுவிரையில் பாவத்தில் விழுவது உறுதி. இந்த சமுதாய மற்றும் அரசியல் சட்டதிட்டங்களைப் பூமியில் செயல்படுத்துகிற அதிகாரம் படைத்த மனிதர்கள் நல்லவர்களாக இருக்கலாம், அல்லது துன்மார்க்கர்களாக இருக்கலாம், மக்கள் பிரதிநிதிகளாக இருக்கலாம், அல்லது கொடுங்கோலர்களாக இருக்கலாம். அதுபற்றி பிரச்சனை இல்லை, ரோமாபுரியை அந்த நாட்களில் நீரோ என்ற கொடுமை நிறைந்த ராஜா ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன், தான் ஆட்சிக்குவர உதவிசெய்த தன் சொந்த தாயான அகிரிப்பானாவையும் மனைவி மற்றும் பிள்ளைகளையும் கொலை செய்தவன். ரோமாபுரி பட்டணத்தையே தீ வைத்து எரித்தவன். ஆனாலும் அவனுடைய அதிகாரிகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் கீழ்ப்படியும்படியாகவே தன்னுடைய நிருபத்தில் பவுல் ஆலோசனை தருகிறார்.

முந்தின அதிகாரத்தில் தன்னுடைய சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான உயிருள்ள பலியாக ஒப்புக்கொடுத்ததின் விளைவாக, மனம் புதிதாகும் மேலான ஆவிக்குரிய அனுபவத்தை ஒரு கிறிஸ்தவன் பெற்றுக்கொள்கிறான் என்பதைப் பார்த்தோம். சபை விசுவாசத்தில் வளரவும், ஸ்திரப்படவும் வித்தியாசமான வரங்களை தேவன் அவர்களுக்கு அருளிச்செய்கிறார். அவைகளின் அடிப்படையில் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிற வெவ்வேறு அவயவங்கள் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டும் என்ற ஆலோசனையை பவுல் வழங்கினார். கிறிஸ்துவின் சரீரத்தோடு இணைந்துவிட்டதின் விளைவாக நம்மைச் சுற்றியிருக்கும் மக்களோடு நமக்கு உறவு இல்லை என்று ஆகிவிடாது. சமுதாய மக்களோடு கொண்டிருக்கவேண்டிய இந்த உறவுமுறை கீழ்ப்படிதலையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதை பவுல் இந்த 13-வது அதிகாரத்தில் வலியுறுத்துகிறார். ரோமர் நிருபத்தில் குறைவான வசனங்கள் உள்ள அதிகாரம் இதுதான்.

அதிகாரத்துக்குக் கீழ்ப்படியுங்கள் (வசனம் 1-7)

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)

"எந்த மனுஷனும்" என்று பவுல் இந்த அதிகாரத்தைத் துவக்குகிறார். இந்த ஆலோசனை ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு மட்டுமல்ல, வித்தியாசமான காலகட்டங்களில் வாழும் சகல மனிதர்களுக்கும் இது பொருந்தும் என்பது தெளிவாகிறது. மேலான அதிகாரமுள்ளவர்கள் என்று சொல்லும்போது அந்த நாட்களில் ரோம பேரரசனாக இருந்த நீரோ மன்னனை மட்டுமல்லாமல், அவனால் நியமிக்கப்பட்டிருந்த தேசாதிபதிகள், துரைத்தனத்தார்கள் மற்றும் சகலவிதமான அரசாங்க அதிகாரிகளையும் (நீதிமன்றம், காவல்துறை, நகராட்சி, வரிவசூல் துறை) குறிப்பிடுகிறது. 1 கொரி 15:24, எபே 3:10; 6:12, கொலோ 1:16; 2:10,15, 1 பேதுரு 3:22 ஆகிய வசனங்களில் அதிகாரங்கள் என்ற வார்த்தை தேவ தூதர்களையும் குறிப்பிடுகிறது. தானியேல் 10:13, கொலோ 1:16, லூக்கா 12:11 ஆகிய வசனங்களின் அடிப்படையில் அதிகாரங்கள் என்ற வார்த்தை பல்வேறு நாட்டின் பிரதிநிதிகளை மறைமுகமாக ஆளுகை செய்யும் அசுத்த ஆவிகளையும் குறிப்பிடலாம் என்று சில வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள்.

அதிகாரங்களுக்கு ஏன் கீழ்ப்படியவேண்டும் என்பதையும் பவுல் உடனடியாகச் சொல்கிறார். அதிகாரம் செய்கிறவர்களுக்கு அந்த அதிகாரத்தைக் கொடுத்திருப்பது வேறு யாரும் அல்ல. சர்வ வல்லமையுள்ள தேவன். தானியேல் 2:37; 4:25.32.35; 5:21 வாசித்துப்பாருங்கள். இஸ்ரவேல் நாடு யூதா, இஸ்ரவேல் என்று இரண்டாகப் பிரிவதற்கு யெரோபெயாம் காரணமாயிருந்தவன் என்பது மட்டுமல்ல, பெத்தேலிலும், தாணிலும் விக்கிரக ஆராதனையைக் கொண்டுவந்தவன். அவனுக்கும் அதிகாரத்தை வழங்கியது தேவனே (1 இராஜா 12:15). கோரேஸ் ஒரு விக்கிரக ஆராதனைக்காரன்தான். ஆனாலும் தேவன், "அவன் என் மேய்ப்பன்" (ஏசாயா 44:28) என்று அழைத்து, "நீ என்னை அறியாதிருந்தும், நான் உனக்கு இடைக்கட்டு கட்டினேன்" (ஏசாயா 45:6) என்கிறார். அவனுடைய அதிகாரமும் தேவனாலேயே உண்டாயிருந்தது. யூதர்களை அடிமைத்தனத்துக்கு வழிநடத்திய நேபுகாத்நேச்சாருக்கு அந்த வல்லமையைக் கொடுத்தது தேவனே (எரே 27:8; 29:21; 32:28). தானியேல் சொல்கிறார்: "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக்கொடுத்து,

மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்" (தானி 4:17). **ஆளுகை செய்வது தேவன். அதிகாரம் பண்ணுவது அவர் நியமித்த மனிதன்.**

எரேமியா 27:5ல் தேவன் சொல்கிறார்: "நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண்டாக்கினேன்; எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக்கொடுக்கிறேன்". நீதிமொழிகள் 8:15,16ல் சொல்கிறார்: "என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள். பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள், என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும் பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகைசெய்து வருகிறார்கள்." சங்கீதம் 75:7 சொல்கிறது: "தேவனே நியாயாதிபதி; ஒருவனைத் தாழ்த்தி, ஒருவனை உயர்த்துகிறார். அவர் ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர்" (தானி 2:21). பிலாத்துவிடம் கிறிஸ்து சொல்கிறார்: "பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது" (யோவான் 19:16). ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டு காடுகளில் அலைந்துகொண்டிருந்த தாவீதை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணியவர் தேவனே (2 சாமு 12:7).

பேதுரு சொல்கிறார் : "நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும், நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி கீழ்ப்படியுங்கள்" (1 பேதுரு 2:13,14). கர்த்தர் நிமித்தமாக மனிதர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்கிறார் பேதுரு.

அதிகாரங்கள் தேவனால் வழங்கப்பட்டிருப்பதினால்தான் பிரசங்கி சொல்லுகிறார்: "ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே" (10:20). நோவா காலத்து பெருவெள்ளத்துக்குப்பின் "மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:6) என்று ஆணையிட்டு அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு ஒரு மனிதனுடைய உயிரை எடுக்கவும் தேவன் உரிமை வழங்கினார் என்று பார்க்கிறோம். இது குறித்து அடுத்த வசனத்தைத் தியானிக்கும்போது அறிந்துகொள்வோம்.

பொதுவாகவே யூதர்கள், தாங்கள் வாசமாயிருக்கும் தேசங்களில் உள்ள அதிகாரிகளுக்கு கீழ்ப்படிவதை விரும்புவதில்லை. பவுலின் இந்த ஆலோசனையை கடைப்பிடிக்கத் தவறியதின் விளைவாகவே இந்த நிருபம் எழுதப்பட்டு சுமார் பத்து ஆண்டுகளில் தீத்துராயனின்

உத்தரவின்படி தேவாலயம் உட்பட எருசலேம் பட்டணம் முழுவதையுமே ரோம போர்வீரர்கள் அழிந்து நிர்மூலமாக்கினார்கள், இலட்சக்கணக்கான யூதர்கள் சிறைப்படுத்தப்பட்டார்கள், ஆயிரக்கணக்கான யூதர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதற்காக, தேவனுடைய பிரமாணங்களுக்கு எதிராக அரசாங்கங்கள் செயல்படும்போது அதை கிறிஸ்தவர்கள் ஆதரிக்கவேண்டும் என்பதில்லை, பேதுருவும் யோவானும் சுவிசேஷம் சொன்னதை, ரோம சேனைத்தலைவனும் பிரதான ஆசாரியனும் தடைசெய்தபோது அவர்கள் தைரியமாக எதிர்த்து நின்று சொல்கிறார்கள்: "தேவனுக்குச் செவிகொடுக்கிறதைப் பார்க்கிலும் உங்களுக்குச் செவிகொடுக்கிறது தேவனுக்கு முன்பாக நியாயமாயிருக்குமோ என்று நீங்களே நிதானித்துப்பாருங்கள்" (அப் 4:19). "மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது" (அப் 5:29). நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலைக்கு பணிந்துகொள்ள மறுத்த சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ ஆகியோரின் கீழ்ப்படியாத சாட்சியினிமித்தம் அந்த மாமன்னனிடமிருந்து "இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லை" (தானி 3:29) என்ற அறிக்கை வெளிப்படுகிறது. "நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்" (1 கொரி 7:23) என்கிறார் பவுல்.

ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்கிறார்கள். *(ரோமர் 13:2)*

ஆட்சிபுரியும் அதிகாரத்தை தேவனே கொடுத்திருக்கிறார் என்பதினால் அரசு அதிகாரத்துக்கு எதிராக நிற்பவர்கள், தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராக செயல்படுகிறவர்களாகிறார்கள். இந்த அதிகாரிகளின் பின்னணியில் நின்று செயல்படும் தேவனையே எதிர்க்கிறவர்கள் ஆகிறார்கள், இதன்விளைவாக தங்களுக்கு அவர்கள் ஆக்கினையை உருவாக்கிக்கொள்கிறார்கள். அதாவது தங்கள் மீது தண்டனைத் தீர்ப்பை தாங்களே வருவித்துக்கொள்கிறார்கள். அரசாங்கத்துக்கு விரோதமாகப் போராடுகிறவர்கள் அந்த அரசாங்கத்தாலே தண்டிக்கப்படுவது உறுதி. மற்றபடி இதன் விளைவாக அவர்கள் தேவனுடைய நித்திய ஆக்கினைத் தீர்ப்பைப் பெறுவார்கள் என்றும் அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள் என்றும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

இந்த தேவ நியமம் எப்போது உருவாயிற்று என்பது ஆதியாகமம் 9:1-6 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். மனிதர்களுடைய அக்கிரமம் பூமியிலே பெருகி அவனுடைய இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்று கண்ட தேவன் மனிதர்களை பூமியிலே படைத்ததற்காக வருத்தப்பட்டார். அனைத்து மனிதர்களையும், மிருகங்களையும், ஊர்வனவற்றையும், பறவைகளையும் அழிக்கத் தீர்மானித்தார் (ஆதி 6:5-8). ஆனாலும் கர்த்தரின் கண்களில் நோவாவுக்குக் கிருபை கிடைத்தபடியால் அவர் குடும்பத்தோடு பாதுகாக்கப்பட்டார். அவர்களுடைய சந்ததியார் மீண்டும் பாவ வாழ்க்கைக்குள் பிரவேசிக்கக்கூடாது என்பதற்காக அவர்கள் கடைப்பிடிக்கவேண்டிய சில விதிமுறைகளை அறிவித்து, அதை மீறுகிறவர்கள் மனிதர்களாலேயே தண்டிக்கப்படவேண்டும் என்ற ஒரு காலக்கட்டத்தை (Dispensation of Human Government) உருவாக்குகிறார்.

ஒரு மனிதன் செயல்படுத்தக்கூடிய மிகப்பெரிய அதிகாரம் தவறுசெய்த ஒரு மனிதனை சட்டபூர்வமாக மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பதில் அமைந்திருக்கிறது. "மனுஷனுடைய இரத்தத்தை எவன் சிந்துகிறானோ, அவனுடைய இரத்தம் மனுஷனாலே சிந்தப்படக்கடவது" (ஆதி 9:6) என்று தேவன் ஆணையிடுகிறார். ஒரு அரசாங்கம் செயல்படுத்தக்கூடிய சகல ஆளுகை அதிகாரங்களும் இந்த ஒரு ஆணையில் உள்ளடங்கியிருப்பதாக எடுத்துக்கொள்ளலாம்.

பலவேளைகளில் இந்த அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட மனிதர்கள் நீதியான முறையில் செயல்படுவதில்லை என்பது உண்மைதான். அவர்களுடைய கிரியைகள் தராசிலே நிறுக்கப்பட்டு "குறையக்காணப்படலாம்" (தானி 5:27). ஆனாலும் தானியேலைப் போன்ற தேவனுடைய பரிசுத்தவான்களும் அந்த அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். குடிமதிப்பு எழுதப்படவேண்டும் என்கிற கட்டளை ரோம பேரரசின் அகஸ்து ராயனிடமிருந்து வெளிப்பட்டபோது கிறிஸ்துவின் பெற்றோர்கள் அதற்குக் கீழ்ப்படிந்து பெத்லகேம் சென்றார்கள். ராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ என்று தன்னிடம் கேட்டவர்களிடம் கிறிஸ்து சொல்கிறார்: "இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள்" (மத் 22:21). வரிவசூலிப்பவர்கள் வந்தபோது பேதுருவிடம் இயேசு: "ஒரு வெள்ளிப்பணத்தை எடுத்து எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு" (மத் 17:27) எனக்கூறி, வரி செலுத்துவது ஒரு கிறிஸ்தவனுடைய கடமை என்பதை உணர்த்துகிறார்.

அரசாங்க அதிகாரத்துக்குப்பின் தேவ கரம் இருப்பதை சந்தேகத்துக்கிடமின்றி அறிந்து கொள்ளவேண்டும். அதிகாரத்தைச் செயல்படுத்துகிறவர் ஒரு காவலராக இருக்கலாம், தாசில்தாராக இருக்கலாம், நீதிபதியாக இருக்கலாம், வருமானவரி அதிகாரியாக இருக்கலாம், அவர்கள் கிறிஸ்தவர்களா, கிறிஸ்தவரல்லாதவர்களா, நல்லவர்களா, கெட்டவர்களா என்பது பற்றி நமக்கு அக்கறை இல்லை. அவர்கள் எல்லாருமே தேவ ஊழியக்காரர் (வசனம் 4,6). அவர்களை தேவனே நியமிக்கிறார் என்பது மட்டுமல்ல, அவர்கள் மூலமாகவே தன்னுடைய வல்லமையை மனிதர்கள் காணும்படியாகச் செய்கிறார். அதனால்தான் யாத் 22:28 சொல்கிறது "நியாயாதிபதிகளைத் தூஷியாமலும், உன் ஜனத்தின் அதிபதியைச் சபியாமலும் இருப்பாயாக". பிரசங்கி 10:20 சொல்கிறது, "ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே. உன் ஜனத்தின் அதிபதியைத் தீது சொல்லாயாக" (அப் 23:5). மனிதர்களை ஏமாற்றுவது தவறு என்பதானால் அரசாங்கத்தை ஏமாற்றுவதும் தவறுதான்.

மேலும் அதிகாரிகள் நற்கிரியைகளுக்கல்ல, துர்க்கிரியைகளுக்கே பயங்கரமாயிருக்கிறார்கள்; ஆகையால் நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்கவேண்டுமானால், நன்மை செய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். (ரோமர் 13:3)

அதிகாரங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதற்கு ஒரு காரணம் இந்த வசனத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக நற்கிரியைகளைச் செய்கிறவர்கள் யாருமே ஆளுகை செய்கிறவர்களைக் குறித்து அச்சப்படவேண்டியதில்லை. தீமை செய்கிறவர்கள் தான் அவர்களுக்குப் பயப்படுவார்கள். ஒழுங்காக வருமானவரி செலுத்துகிறவர்கள் வருமானவரி அதிகாரிகளைக் குறித்து பயப்படத்தேவையில்லை. நீங்கள் அதிகாரிகளைக் கண்டு அச்சம் கொள்வதில் இருந்து விடுதலை பெறவேண்டுமானால் நன்மையே செய்து அவர்களுடைய அங்கீகரிப்பைப் பெறுங்கள் என்று பவுல் ஆலோசனை தருகிறார். அப்படிச் செய்யும்போது உண்மையில் அவர்கள் உங்களைப் பாராட்டுவார்கள் என்கிறார்.

கொலை செய்யாமல் இருக்கிறாய், திருடாமல் இருக்கிறாய், யாரையும் துன்புறுத்தாமல் இருக்கிறாய் என்பதற்காக எந்த நாட்டு அரசாங்கமும் ஒருவனை ஜெயிலில் போடுமா? அரசாங்கங்களையும் அதிகாரங்களையும் தேவன் நியமித்த நோக்கமே மனிதர்கள் நல்ல நடத்தை உடையவர்களாய் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான். பேதுரு சொல்கிறார்: "மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும், நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரங்களுக்கானாலும் சரி, கீழ்ப்படியுங்கள்"

(1 பேதுரு 2:14). அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவது உங்களுக்குப் புகழ்ச்சியைத் தரும் என்கிறார்.

நன்மை செய்வதே புத்திசாலித்தனமான காரியம் என்பதை உலக ரீதியான முறையிலும் அறிந்து கொள்ளவேண்டும். உலகமெங்கும் துன்மார்க்கம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும், பயத்தின் காரணமாக மட்டுமே அதின் வளர்ச்சி ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் தங்களைக் கண்டுபிடித்து தண்டிப்பார்கள். அதன் விளைவாக அவமானப்பட நேரிடும் சிறைச்சாலையில் இருக்கவேண்டியது வரும் என்பது போன்ற காரணத்துக்காகவே பலர் வெளிப்படையான தவறுகளைச் செய்யாதிருக்கிறார்கள். நன்மைகள் செய்வதினால் உலகரீதியான புகழ்ச்சி ஏற்படும் என்பதை எதிர்பார்த்து நல்ல காரியங்களைச் செய்யும் மனிதர்கள் கிறிஸ்தவ வட்டாரங்களிலும் காணப்படுகிறார்கள். சுனாமி போன்ற பேரழிவுகள் உண்டாகும்போது உதவியாக நன்கொடைகளையும் உதவிகளையும் கொடுத்துவிட்டு தங்களுடைய பெயரும் போட்டோவும் பத்திரிகைகளில் வருவதை ஆவலோடு எதிர்பார்க்கும் மனிதர்கள் பலர் இருக்கிறார்கள்.

இந்த வசனத்தை ஒரு பொதுவான அறிவிப்பாகத்தான் எடுத்துக்கொள்ளவேண்டும். சிலவேளைகளில் அதிகாரிகள் நற்கிரியைகளையும் தண்டிக்கக்கூடும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். ரோம தேசாதிபதியாகிய பிலாத்து, மாசற்ற கிறிஸ்துவிடம் ஏதேனும் துர்க்கிரியை கண்டுபிடித்தா மரணதண்டனைக்கு ஒப்புக்கொடுத்தான்? இல்லையே. மனித இனம் இரட்சிப்பைப் பெறும்படியான தேவ திட்டம் நிறைவேற பிலாத்து ஒரு கருவியாக்கப்பட்டான். அவ்வளவே. தங்களுடைய எந்த கிரியைகளினிமித்தம் பவுலும் சீலாவும் அடிக்கப்பட்டு, சிறைச்சாலையில் கட்டிவைக்கப்பட்டார்கள்? (அப் 16:19-24).

உனக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, அவன் தேவ ஊழியக்காரனாயிருக்கிறான். நீ தீமை செய்தால் பயந்திரு; பட்டயத்தை அவன் விருதாவாய்ப் பிடித்திருக்கவில்லை; தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப்பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவ ஊழியக்காரனாயிருக்கிறானே. *(ரோமர் 13:4)*

அதிகாரிகள் மூலமாக நன்மை செய்கிறவர்களுக்கு புகழ்ச்சி உண்டாகும் என்பதை அறிவித்த பவுல், இந்த வசனத்தில் அதிகாரிகள் தீமை செய்பவர்களைத் தண்டிப்பதால் நன்மையும் உண்டாகும் என்கிறார்.

மனிதர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதற்காகவே தேவன் அதிகாரிகளை நியமித்திருக்கிறார். பவுலின் ஊழிய நாட்களில் பலமுறை அவர் ரோம அதிகாரிகளிடமிருந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டதை அப் 18:12-17; 19:35-41; 22:25,26 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். தவறு செய்கிறவர்கள்தான் அவர்களுக்கு அஞ்சி நடக்கவேண்டும். பட்டயம் என்ற வார்த்தை மத் 26:52, லூக்கா 21:24, அப் 12:2; 16:27, எபி 11:34,37 வெளி 13:10 ஆகிய இடங்களில் கொலை செய்ய பயன்படுத்தும் ஒரு ஆயுதமாகக் குறிப்பிட்டாலும் இந்த வசனத்தில் தண்டிக்கும் அதிகாரத்தைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அதிகாரத்தை அவர்கள் துன்மார்க்கர்மேல் செயல்படுத்தும் போது, ஒருவகையில், நிச்சயமாக அவர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்ற அடிப்படையிலே செயல்படுகிறார்கள்.

யூதாவின் ராஜாவாகிய யோசபாத் தன் பட்டணங்களில் நியாயாதிபதிகளை நியமிக்கும்போது சொல்கிறார்: "நீங்கள் செய்கிற காரியங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; நீங்கள் மனுஷனுடைய கட்டளையினால் அல்ல, கர்த்தருடைய கட்டளையினால் நியாயம் விசாரிக்கிறீர்கள்; நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார். ஆதலால் கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் உங்களிடத்தில் இருக்கக்கடவது, எச்சரிக்கையாயிருந்து காரியத்தை நடத்துங்கள்; உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது" (2 நாளா 19:6,7).

யோசபாத் மூலமாக வெளிப்படும் தெய்வீக ஆலோசனையை இன்று செயல்படும் சகல அரசாங்க அதிகாரிகளும் அறிந்திருப்பார்கள் என்றால் நலமாக இருக்கும். அவர்கள் கைகளில் வைத்திருக்கும் பட்டயம் துன்மார்க்கரைத் தண்டித்தே தீரும். தவறு செய்தவர்கள் தப்பித்துக்கொள்ள தேவன் அனுமதிப்பதே இல்லை. பழிவாங்குதல் கர்த்தருடையது என்றாலும் அதை அவர் தான் நியமித்த அதிகாரிகள் மூலமாகவே செய்கிறார்.

அதிகாரிகளைக் குறித்தும் அதிகாரங்களைக்குறித்தும் நாம் கற்றுக்கொண்ட ஆறு காரியங்கள்

1. அதிகாரிகளை தேவனே நியமித்து அதிகாரம் கொடுத்திருக்கிறார் (வசனம் 1)
2. அதிகாரங்களை எதிர்ப்பவன் தேவனுடைய கட்டளையை எதிர்க்கிறான் (வசனம் 2)

3. அதிகாரங்களை எதிர்ப்பவன் தண்டிக்கப்படுவது உறுதி (வசனம் 2)

4. நன்மை செய்கிறவர்கள் அதிகாரிகளைக் குறித்து அச்சப்பட வேண்டியதில்லை (வசனம் 3)

5. நன்மை செய்கிறவர்களை அதிகாரிகள் பாராட்டுவார்கள் (வசனம் 3)

6. நல்லவர்களுக்கு உதவி செய்யும்படியாகவே தேவன் அதிகாரிகளை நியமித்திருக்கிறார் (வசனம் 4).

ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். (ரோமர் 13:5)

தன்னுடைய பட்டயத்தை கரத்தில் வைத்திருந்து கோபாக்கினையை வெளிப்படுத்துவான் என்ற அச்சத்தினிமித்தம் மட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சியினிமித்தமும் அதிகாரிகளின் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்கிறார் பவுல். தண்டனைக்குப் பயந்து ஒருவன் தவறு செய்யாதிருந்தால் அதில் பாராட்டக்கூடிய காரியம் எதுவும் இல்லை. தன்னுடைய சொந்த மனச்சாட்சி தன் துன்மார்க்கத்தை அங்கீகரிக்காது என்ற உணர்வுடன் தேவனுக்குப் பயந்து நேர்மையாக நடப்பவனே பாராட்டுதலுக்குரியவன்.

ரோம தேசாதிபதி விசாரிக்கும் வேளையில் பவுல் சொல்கிறார்: "நான் தேவனுக்கும் மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாயிருக்கப் பிரயாசப்படுகிறேன்" (அப் 24:16). மனித கோபாக்கினைக்கும் தேவ கோபாக்கினைக்கும் பயப்படுவதின் விளைவாக உலகத்து மனிதர்கள் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கலாம். கிறிஸ்தவர்களாகிய நாமோ தேவனுக்கும் மனிதருக்கும் முன்பாக நாம் சரியானது, நீதியானது என்று எவற்றை நம்புகிறோமோ அவற்றையே எப்பொழுதும் செய்ய முயற்சி செய்யவேண்டும் என்கிறார் பவுல்.

ஒரு மனிதனுடைய கிரியை சரியானதா, தவறானதா என்பதை அவனுடைய மனச்சாட்சி முடிவுசெய்கிறது. 'மனச்சாட்சி' என்பதற்கு பயன்படுத்தப்படும் suneidesis என்ற கிரேக்க பதம் புதிய ஏற்பாட்டில் 32 தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மனச்சாட்சி என்ற வார்த்தையை நல்மனச்சாட்சி (அப் 23:1), குற்றமற்ற மனச்சாட்சி (அப் 24:16), மனது சொல்லும் சாட்சி (2 கொரி 1:12), சுத்தமனச்சாட்சி (1 தீமோ 3:9; 2 தீமோ 1:4) என்று பல வகைகளாக பவுல் குறிப்பிட்டாலும் அது ஒரு மனிதன்

தேவனோடு கொண்டிருக்கவேண்டிய சீரான உறவுமுறையையே குறிப்பிடுகிறது. மனச்சாட்சியினிமித்தம் கீழ்ப்படியவேண்டும் என்று சொல்லும்போது, அதிகாரிகள் அல்லது அரசாங்கங்களின் உத்தரவு தேவசித்தத்துக்கு விரோதமாக இருக்கும்போது அதற்குக் கீழ்ப்படியத் தேவையில்லை என்பது புலனாகிறது. பிரசங்கி சொல்கிறார்: "ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட என்று நான் உனக்கு எச்சரிக்கிறேன்; நீ தேவனுக்கு இட்ட ஆணையின்படியே இதைச் செய்" (8:2). அதேநேரத்தில் நம்முடைய கீழ்ப்படிதலை தேவன் அங்கீகரிப்பாரா என்பதை நாம் கவனிக்கவேண்டும். அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிவதினால் தேவனுக்கும் நமக்கும் இடையே அமைந்திருக்கும் உறவுமுறையில் எந்த பாதிப்பும் ஏற்பட்டுவிடாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராயிருக்கிறார்களே. (ரோமர் 13:6)

கோபாக்கினையினிமித்தமும், மனச்சாட்சியினிமித்தமும் அதிகாரங்களுக்கு கீழ்ப்படியவேண்டும் என்ற கட்டாயத்துக்குள் கிறிஸ்தவர்களாகிய நாம் இருக்கிறோம். நம்முடைய கீழ்ப்படிதலின் வெளிப்படையான அடையாளமாகவே நாம் அரசாங்கத்துக்கு வீட்டு வரி, சொத்து வரி, வருமான வரி, விற்பனை வரி, சேவை வரி, சுங்க வரி போன்ற பல வித்தியாசமான வரிகளையும் செலுத்திவருகிறோம். இந்த வரிகளை முறையாக செலுத்தும்போது தேவ நியமத்தைக் கனம் பண்ணுகிறவர்களாக இருக்கிறோம் (மத் 22:21, மாற்கு 12:17, லூக்கா 20:24-26). வரி செலுத்துவதின் மூலம், அரசாங்கத்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டு, அறிக்கையிடுகிறவர்களாக இருக்கிறோம். **வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த சர்வ வல்லமையுள்ள தேவன் தான் உலகில் ஜீவித்த நாட்களில் வரிசெலுத்தினார் (மத் 17:27). அதுமட்டுமல்ல இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதை தேவனுக்கும் செலுத்துங்கள் (மாற்கு 12:16) என்றார்.**

வரிவசூலிக்கும் ஊழியர்கள் தேவனுடைய ஊழியக்காரர்கள் என்பது மீண்டுமாக அறிவிக்கப்படுகிறது. ஊழியக்காரர்களாகிய நாம் விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய சக ஊழியர்களை ஏமாற்றலாமா? வரிசெலுத்துவதில் வீணானமுறையில் காலதாமதம் பண்ணலாமா? "என்னாலே ராஜாக்கள் அரசாளுகிறார்கள், பிரபுக்கள் நீதி செலுத்துகிறார்கள். என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள்" (நீதி 8:15,16) என்று சொல்லப்பட்டிருக்கிறதே.

ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். (ரோமர் 13:7)

ஜெபம் பண்ணுவது மட்டும்தான் நம்முடைய கடமை என்பதல்ல. நாம் கொடுக்கவேண்டிய வரிகளையும், தீர்வைகளையும் செலுத்துவதும் நம்முடைய கடமைதான். மத்தேயு 22:21, லூக்கா 20:25 வாசித்துப்பாருங்கள். வருமான வரியிலிருந்து தப்பித்துக் கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக தர்மசகாய நிலையங்கள், அறக்கட்டளைகள், கல்வி ஸ்தாபனங்கள் நடத்தும் கிறிஸ்தவர்களும் உண்டு. தேவன் அதை அங்கீகரிக்கமாட்டார். ராயனுக்குரியது ராயனுக்குத்தான் செலுத்தப்படவேண்டும். செலுத்திவிட்டு வருமானவரி அதிகாரிகள் சட்டரீதியாகத் தரும் சலுகைகளைப் பெற்றுக்கொள்ளலாம். கள்ளக்கணக்குகளின் அடிப்படையில் வரிசெலுத்தாதிருந்தால் அது ஒரு பாவம்.

அதிகாரிகளுக்கு பயப்படவேண்டும். அவர்களுக்குரிய மரியாதையைச் செலுத்தவேண்டும் என்பது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. வரியைச் செலுத்துவதோடு நம்முடைய கடமை முடிந்துவிடுவதில்லை. பயத்தோடும், கனத்தோடும் செலுத்தப்படவேண்டும். அதாவது சரியான நேரத்தில் அதைச்செய்யவேண்டும். நீரோவைப்போன்ற துன்மார்க்கமான ராஜா உலகத்தில் இருந்திருக்கமுடியாது. ஆனாலும் அந்த நீரோவின் காலத்தில் வாழ்ந்த பேதுரு சொல்கிறார்: "எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள்; தேவனுக்குப் பயந்திருங்கள்; ராஜாவைக் கனம்பண்ணுங்கள்" (1 பேதுரு 2:17). "என் மகனே, நீ கர்த்தருக்கும், ராஜாவுக்கும் பயந்திரு" (நீதி 24:21) என்கிறார் சாலொமோன். தன்னை செசரியா பட்டணத்திலே நியாயம் விசாரித்த பேலிக்ஸ் என்ற ரோம தேசாதிபதியிடம் பவுல் எவ்வளவு மரியாதையோடு பேசுகிறார் என்பதைப் பாருங்கள். "கனம் பொருந்திய பேலிக்ஸே, உம்மாலே நாங்கள் மிகுந்த சமாதான சவுக்கியத்தை அநுபவிக்கிறதையும், உம்முடைய பராமரிப்பினாலே இந்தத் தேசத்தாருக்குச் சிறந்த நன்மைகள் நடக்கிறதையும் நாங்கள் எப்பொழுதும் எங்கும் மிகுந்த நன்றியறிதலுடனே அங்கீகாரம் பண்ணுகிறோம்" (அப் 24:3).

அன்பு என்கிற கடன் (வசனம் 8-10)

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் (ரோமர் 13:8)

அன்பின் பிரமாணத்தின் மேன்மையைக் குறித்து பவுல் மீண்டுமாகப் பேச ஆரம்பிக்கிறார். ஒருவரில் ஒருவர் அன்புகூருவது நம்முடைய கடன் ஆகிறது. அன்புக்கு நாம் கடன்பட்டே ஆகவேண்டும். அரசாங்கத்துக்கு செலுத்தவேண்டிய வரிகளையும் தீர்வைகளையும் நாம் கடனாக கருதுவதுபோல், நம்மைச் சுற்றியிருப்பவர்களிடம் அன்பு செலுத்த கடன்பட்டவர்களாக இருக்கிறோம். **அன்பின் கடன் எப்படிப்பட்டது என்றால், ஒருபோதும் அதை நம்மால் திருப்பிச் செலுத்தி தீர்க்கமுடியாது.** அதனால்தான், என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்கவேண்டும் என்ற பேதுருவின் கேள்விக்கு "ஏழெழுபது தரமட்டும்" (மத் 18:21,22) என்று கிறிஸ்து பதில் தருகிறார். நாறூற்று தொண்ணூறு தடவை (7x70) மன்னிக்கவேண்டுமாம்.

அன்பைத்தவிர வேறு எதிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள் என்று பவுல் எச்சரிக்கிறார். கிறிஸ்தவர்களாகிய நாம் கடன் வாங்காமல் நம்முடைய வருமானத்திற்குள் வாழ்வது அவசியமாகிறது. அதுதான் தேவனுடைய ஆலோசனை. "நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா 28:12) என்பதுதான் நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம். "உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே" (மத் 5:42) என்று கிறிஸ்துவும் சொல்லியிருக்கிறார். "கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள், அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்" (லூக்கா 6:35) என்கிறார். "நீதிமான் நித்தம் இரங்கிக் கடன் கொடுக்கிறான், அவன் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்" (சங் 37:26) என்று வாசிக்கிறோம். கடன்கொடுப்பது ஆசீர்வாதத்துக்கு அடையாளமாகவும், கடன் வாங்குவது சாபத்துக்கு அடையாளமாகவும் கணக்கிடப்படவேண்டும். "உங்களுக்குள் சிறுமைப்பட்டிருக்கிற என் ஜனங்களில் ஒருவனுக்கு நீங்கள் பணம் கடனாகக் கொடுத்திருந்தால், வட்டிவாங்குகிறவர்கள் போல அவனிடத்தில் வட்டி வாங்கவேண்டாம்" (யாத் 22:28).

கடன் கொடுப்பது பாவமில்லை என்பதினால் கடன் வாங்குவதும் பாவமில்லை என்றுதான் நினைக்கிறோம். ஒருவன் பாவம் செய்ய நாம் காரணமாயிருக்க தேவன் அனுமதிக்கமாட்டார் என்பது உண்மைதான்.

ஆனால் திருப்பிக் கொடுக்கமுடியாதபடி கடன் வாங்குவது, எதெற்கெடுத்தாலும் கடன் வாங்குவது, கடன் சுமையை சந்ததியார்மேல் செலுத்துவது நிச்சயமாகவே பாவமாகிறது. "துன்மார்க்கன் கடன்வாங்கிச் செலுத்தாமற் போகிறான்" (சங் 37:21) என்று வாசிக்கிறோம். கடனில் கிடைக்கிறது என்பதினால் தேவையற்ற பொருட்களை வாங்கி வீட்டில் குவிக்காதிருங்கள். கடனில் இருக்கும் மனிதன் கடன் கொடுத்தவனுக்கு அடிமையாயிருக்கிறான். தேவனுடைய பிள்ளைகள் யாருக்கும் அடிமைப்பட்டிருப்பதை தேவன் விரும்பமாட்டார்.

உங்கள் குடும்பத்தின் செலவுகளை கணவன், மனைவி, பிள்ளைகள் எல்லாருமாக இணைந்து திட்டமிடுங்கள். பிள்ளைகள் எவ்வளவு செலவு பண்ணலாம் என்பதைக் குறித்த வரம்புகளை நிர்ணயம் பண்ணுங்கள். ஒரு பொருளின் விலை குறைவாகச் சொல்லப்பட்டிருக்கிறதே என்பதினால் அதை வாங்க முற்படாதிருங்கள். தேவையற்ற பொருள் மலிவானதாக இருந்தாலும் அது கூடுதல் விலையுள்ளதுதான். மற்றவர்களுக்கு கடன்வாங்க உதவி செய்யும்படியாக ஜாமீன்தாரராகாதீர்கள். பிறரிடம் கடன்படாமல், அதே சமயத்தில் பிறருக்கு கடன் கொடுக்க தருணத்தை எதிர்நோக்கியிருங்கள். வாங்கின கடனை திருப்பிக் கொடுக்கமுடியாத ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய சாட்சியை விரைவில் இழந்துபோவான் என்பதில் சந்தேகமில்லை.

தேவன் அன்பாகவே இருப்பதினால் (1 யோவான் 4:16) பிறனிடம் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் என்கிறார் பவுல். தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதாக பவுல் சொல்லவில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரில் ஒருவர் பாராட்டவேண்டிய அன்பைப்பற்றியே பவுல் இந்த வசனத்தில் பேசுகிறார். ஏற்கனவே இந்த நிருபத்தில் பல இடங்களில் இந்த சகோதர அன்பைக்குறித்து பவுல் பேசியிருப்பதை விளக்கமாகத் தியானித்திருக்கிறோம்.

பிறனிடத்தில் அன்புகூருபவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் என்று பவுல் சொல்லும்போது "பிறன்" என்று யாரைக் குறிப்பிடுகிறார்? நாம் விரும்பும், நமக்குப் பிடித்தமான மனிதர்கள்மேல் அன்புகூருவதில் எந்த மேன்மையும் இல்லை. எப்போதெல்லாம் தேவையோடிருக்கும் ஒரு மனிதனை தேவன் நம்மிடம் அனுப்புகிறாரோ, அவன் யாராயிருந்தாலும் சரி, அவனை நேசிக்கவேண்டும். தேவையோடிருக்கும் ஒரு மனிதனுக்கு நாம் உதவி செய்யும்போது நாம் அவருக்குப் பிறன் ஆகிறோம் (லூக்கா 10:36,37) என்கிறார் இயேசு.

அன்பு செலுத்த வேண்டிய கடமையை நாம் நிறைவேற்றும்போது, மற்ற எல்லா கிறிஸ்தவ கடமைகளையும் நிறைவேற்றுகிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். தேவன் மோசே மூலம் வழங்கிய 613 நியாயப்பிரமாணங்களும், "அன்பு செய்வாயாக" என்ற பிரமாணத்தின் ஒரு பகுதியாகிவிடுகிறது. ஏனென்றால் தேவனையும் பிறனையும் நேசிக்கவேண்டும் என்பதே நியாயப்பிரமாணம் வழங்கப்பட்டதின் நோக்கம் (மத் 22:37-39; லூக்கா 10:25-28). நியாயப்பிரமாணம் ஒரு மனிதனில் உருவாக்க விரும்பும் ஒரே காரியம் அன்பு. தேவன் ஒரு மனிதனில் எதிர்பார்ப்பதும் அன்புதான். அன்பற்ற நிலையில், ஒருவனிடமிருந்து வெளிப்படும் ஏதேனும் நல்ல காரியத்தையும் கூட தேவன் அங்கீகரிக்க மாட்டார் (1 கொரி 13:1-3).

எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இச்சியாதிருப்பாயாக என்கிற இந்தக் கற்பனைகளும், வேறே எந்தக் கற்பனையும், உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்கிற ஒரே வார்த்தையிலே தொகையாய் அடங்கியிருக்கிறது. (ரோமர் 13:9)

சீனாய் மலையிலே ஆண்டவராகிய தேவன் மோசே மூலமாக 613 பிரமாணங்களை இஸ்ரவேல் புத்திரருக்கு வழங்கினார் என்றாலும், அவைகளில் மிக முக்கியமான பத்துக்கற்பனைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதி மோசேயிடம் கொடுத்தார் (யாத் 28:1-17). முதலாவது கற்பலகையில் தேவனோடு மனிதன் கொண்டிருக்கவேண்டிய உறவு முறைகளை தேவன் அறிவித்திருந்தார். மனிதர்கள் ஒருவரோடொருவர் கொண்டிருக்கவேண்டிய உறவு முறைகளுக்கடுத்த ஆறு பிரமாணங்கள் இரண்டாவது பலகையில் எழுதப்பட்டிருந்தன. அதிலுள்ள ஐந்து விதிமுறைகளில் ஏழாவது, ஆறாவது, எட்டாவது, பத்தாவது கற்பனைகளை மட்டும் பவுல் பட்டியலிட்டு இந்த வசனத்தில் குறிப்பிட்டுப் பேசுகிறார். ஐந்தாவது, ஒன்பதாவது கற்பனைகளை "வேறே எந்த கற்பனை" என்று குறிப்பிடுகிறார்.

"தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூருவதிலும், பிறனிடத்தில் அன்புகூருவதிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது" (மத் 22:40) என்கிறார் கிறிஸ்து. "இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை" (மாற்கு 12:31) என்கிறார். பவுல் பட்டியலிட்டுக் காட்டும் கற்பனைகள் கடைப்பிடிப்பதற்கு கடினமானவைகளாகத் தோன்றலாம். ஆனாலும் நம் உள்ளத்தில் உண்மையான அன்பு இருக்குமேயானால் இவை மிகவும்

எளிதானவைகளாகின்றன. நாம் யாரை நேசிக்கிறோமோ அவர்களுக்கு எதிராக விபசாரம் செய்யமாட்டோம். அவர்களைக் கொலை செய்யமாட்டோம். அவர்கள் பொருட்களைத் திருடமாட்டோம். அவர்களுக்கு எதிராக பொய்சாட்சி சொல்லமாட்டோம். அவர்களுக்கு சொந்தமான காரியங்களை இச்சிக்கமாட்டோம்.

விபசார பாவத்தைக் குறித்து யாத் 20:14, லேவி 20:10 உபா 5:18, யோபு 24:15, மத் 5:27; 19:9, ரோமர் 7:23, 1 கொரி 6:9, 2 பேதுரு 2:14, கொலை பாவத்தைக் குறித்து யாத் 20:13, உபா 5:17, மத் 19:18, 1 பேதுரு 4:15, 1 யோவான் 3:15, திருட்டுப் பாவத்தைக் குறித்து யாத் 20:15 உபா 5:19, 23:24 எபே 4:28, 1 பேதுரு 4:15, பொய்சாட்சி குறித்து யாத் 20:16; 23:1, நீதி 12:17; 19:9; 24:28; 25:18, இச்சையைக் குறித்து யாத் 20:17, உபா 5:21, சங் 10:3, நீதி 28:16, எசேக் 33:31, மீகா 2:2, ஆப 2:9, லூக்கா 12:15, கொலோ 3:5 ஆகிய வசனங்கள் பேசுகின்றன.

எல்லா கற்பனைகளுமே, ஒருவன் தன்னை நேசிப்பது போலவே அடுத்தவனையும் நேசிக்கவேண்டும் என்ற ஒரே பிரமாணத்தை ஆதாரமாகக் கொண்டவை. பொதுவாக ஒரு மனிதன் தன்னை நேசிக்கிறவனாகவே இருக்கிறான். அதனால்தான் கிறிஸ்து, "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத் 7:12) என்கிறார். எந்த மனிதனும் தனக்கு தீங்கு உண்டாகவேண்டும் என்றோ, தான் வியாதிப்படவேண்டும் என்றோ விரும்புவதில்லை. அதனால்தான் "உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர்" (லேவி 19:18) என்று தேவன் சொல்கிறார். மாற்கு 12:31, லூக்கா 10:27 ஆகிய வசனங்களில் இயேசு இந்த வசனத்தைச் சுட்டிக்காட்டுகிறார். நம்மை நேசிப்பதில் தவறில்லை. நம்மை நேசித்துக்கொண்டு மற்றவர்களை நேசியாமல் இருப்பதே பாவமாகிறது. நம்முடைய பெலவீனங்கள், குறைகள் மத்தியிலும் நாம் நம்மை நேசிக்கத் தவறுவதில்லை. "தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே" (எபே 5:29) என்கிறார் பவுல். ஆனால் வேதம் சொல்வது என்ன? "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப் 2:4). சபையிலும், சமுதாயத்திலும் நம்முடைய பெயர் கெட்டுப்போய் விடக்கூடாது என்று நினைக்கும் நாம் மற்றவர்களைக் குறித்து எவ்வாறு பேசுகிறோம் என்பதில் கவனமாயிருக்கிறோமா?

அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால் அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது (ரோமர் 13:10)

பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான் (வசனம் 8) என்று பவுல் ஏற்கனவே திட்டவட்டமாக அறிவித்துவிட்டார். இவ்வாறு அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது என்று பவுல் சொல்வதற்கான காரணம் இந்த வசனத்தில் சொல்லப்படுகிறது. அன்பு யாருக்குமே பொல்லாங்கு செய்வதில்லை என்பதே பவுலின் அறிக்கைக்குக் காரணம். அது யாருக்கும் தவறு செய்வதில்லை, அது யாரையும் கெடுப்பதில்லை. அது யாரையும் நஷ்டப்படுத்துவதில்லை. அன்பின் மேன்மைகளைக் குறித்து 1 கொரிந்தியர் 13:5-7 வசனங்களில் வாசித்துப்பாருங்கள்.

ஒருவன் பிறனுக்கு எந்த தவறும் செய்யக்கூடாது என்று விரும்பினால் அவன் செய்யவேண்டிய ஒரே காரியம் அவர்களை நேசிப்பதுதான். அன்பு பொல்லாங்கு செய்யாது என்று சொல்லும்போது அன்பு பிறனுக்கு நன்மை செய்யும் என்றும் பொருள்கொள்ளலாம். நாம் யாரில் அன்புகூருகிறோமோ அவர்களுக்காக நம்மால் கற்பனைகூட செய்யமுடியாத நல்ல காரியங்களையும் செய்ய ஆயத்தமாகிவிடுவோம். எனவே அன்பினால்தான் ஒருவன் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள முடியும். மற்றபடி நியாயப்பிரமாணம் ஒருவனுக்கு நித்தியஜீவனைத் தரும் ஒரு மார்க்கம் அல்ல.

இரட்சிக்கப்படாத ஒருவனுக்கு இரட்சிப்பை வழங்கும்படியாக நியாயப்பிரமாணம் வழங்கப்படவில்லை. இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனுக்கு வாழ்க்கை முறையாகவும் அது தரப்படவில்லை. சொல்லப்போனால் கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குப் பின் நியாயப்பிரமாணம் மனிதனுக்கு எதையுமே செய்வதில்லை. ஒரு கிறிஸ்தவன் என்ற முறையில், நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் உதவியோடும் சமுதாய வாழ்க்கையில் இந்த பிரமாணங்களைக் கடைப்பிடிப்பது நம் கடமையாகிறது. அதற்கு வேண்டிய பெலன் நமக்கு கிருபையாக அருளப்படுகிறது. மீண்டுமாக அறிந்துகொள்ளுங்கள் - நியாயப்பிரமாணம் ஒருவனையும் இரட்சிப்பதில்லை. ஏனென்றால் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிவதினால் ஒருவனும் இரட்சிக்கப்படுவதில்லை. கிருபையினால், மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மேல் கொண்டிருக்கும் விசுவாசத்தின் மூலமாகவே நாம் இரட்சிக்கப்பட்டோம் என்பதை ரோமர் முதல் எட்டு அதிகாரங்களில் கற்றுக்கொண்டோம்.

நாம் இந்த உலகத்தில் இருக்கும் நாட்களில் நம்முடைய அயலார்களோடும், நம்மைச்சுற்றி இருப்பவர்களோடும், மற்றும் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரோடும் நிறைவேற்றவேண்டிய சில கடமைகளும், பொறுப்பும் நமக்கு உண்டு. அதை நிறைவேற்ற நாம்

அவர்கள்மேல் அன்பு செலுத்தவேண்டியதிருக்கிறது. இதைத்தவிர தேவனுடைய அன்பைப்பெற வேறு மார்க்கம் வேதத்தில் சொல்லப்படவில்லை என்பதினால் கலாத்தியர் 5:13,14லும் பவுல் சொல்கிறார், "... அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள். உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்". கலாத்தியர் 6:2ல் சொல்கிறார்: "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்." அன்பின் பிரமாணமே கிறிஸ்துவின் பிரமாணம். கலாத்தியர் 5:6ல் சொல்கிறார்: "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்". விசுவாசத்தின் மூலம் அன்பின் கிரியை வெளிப்படுகிறது. விசுவாசத்தை விட அன்பே முக்கியமானது.

நியாயப்பிரமாணம் தடைசெய்யும் எந்த காரியத்தையும் அன்பின் பிரமாணமும் தடைசெய்யும் என்பதை அறிந்துகொள்ளுங்கள். நியாயப்பிரமாணம் உற்சாகப்படுத்தும் எந்த காரியத்தையும் அன்பும் உற்சாகப்படுத்தும். அதனால்தான் கிறிஸ்துவின் சகோதரனாகிய யாக்கோபு சொல்கிறார்: "உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள்" (யாக் 2:8). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தான் சிலுவையிலறையப்படும் சில மணி நேரங்களுக்கு முன்பு தன்னுடைய சீஷர்களிடம் சொல்கிறார்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" (யோவான் 13:34,35). கிறிஸ்தவர்களாகிய நாம் ஜெபிக்கவேண்டும். ஊழியம் செய்யவேண்டும், கொடுக்கவேண்டும், எல்லாம் சரிதான். ஆனால் இவைகள் அல்ல, **நம்மிடமிருந்து வெளிப்படும் அன்பே நாம் கிறிஸ்துவின் சீஷர்கள் என்பதை நிரூபிக்கிறது. ஏனென்றால் தேவன் அன்பாயிருக்கிறார்.**

இரட்சிப்பின் நாள் சமீபம் (வசனம் 11-14)

நித்திரையைவிட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்றென்று, நாம் காலத்தை அறிந்தவர்களாய், இப்படி நடக்கவேண்டும்; நாம் விசுவாசிகளானபோது இரட்சிப்பு சமீபமாயிருந்ததைப் பார்க்கிலும் இப்பொழுது அது நமக்கு அதிக சமீபமாயிருக்கிறது. (ரோமர் 13:11)

இரட்சிப்பு என்ற வார்த்தை கடந்தகால நிகழ்ச்சியாகவும், நிகழ்கால நிகழ்ச்சியாகவும், வருங்கால நிகழ்ச்சியாகவும் மூன்று விதங்களில் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் முழுமனதோடு எப்போது ஏற்றுக்கொண்டோமோ அப்போதே நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டோம். ஏனென்றால் அந்த நாளில் இருந்து கிறிஸ்துவின் ஜீவனுக்கு நாம் பங்குதாரர்கள் ஆகிவிட்டோம். நம்முடைய ஆவி இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டுவிட்டது.

அடுத்ததாகப் பார்ப்போமானால் நாம் அனுதினமும் இரட்சிக்கப்பட்டுக்கொண்டு வருகிறோம். பாவ உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம் சரீரத்தில் பாவம் குடிகொண்டிருக்கிறது. எனவே ஒவ்வொரு நாளும் நாம் இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

மூன்றாவதாக எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் இரட்சிக்கப்படவேண்டும். கிறிஸ்துவின் இரகசிய வருகையில் நம் சரீர இரட்சிப்பாகிய மீட்பு நடைபெறுகிறது. மகிமையின் சரீரத்தை உடையவர்களாகிறோம், அதோடு நம்மில் இரட்சிப்பு நிறைவுபெறுகிறது.

பாவத்தின் விளைவாக நாம் பெறவேண்டிய தண்டனையிலிருந்து நாம் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டுவிட்டோம். இப்பொழுது பாவத்தின் வல்லமையிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் அனுதினமும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். கிறிஸ்துவின் வருகையின் விளைவாக பாவபிரசன்னமே நம்மில் உருவாகமுடியாத முழுமையான இரட்சிப்பு உண்டாகிறது. பாவத்துக்கும் நமக்கும் சம்பந்தமே இல்லாமல் போகிறது.

எனவே பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான். நாம் மிகவும் முக்கியமான காலக்கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம்முடைய தூக்கத்திலிருந்து எழும்பவேண்டிய நேரம் வந்துவிட்டது. நாம் முதலில் நம்பியதைக் காட்டிலும் இரட்சிப்பின் காலம் இன்னும் அதிகமாக நெருங்கிவிட்டது. "நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி 10:25) என்று வாசிக்கிறோம். தான் நித்திரையை விட்டு எழும்பி உடனடியாக மனந்திரும்பவேண்டும் என்ற உணர்வில்லாத ஒரு மனிதன் இரட்சிப்பின் அவசியத்தை அறிந்துகொள்வதில்லை என்று பொருள்.

'நித்திரை' என்ற வார்த்தை வேதத்தில் சில இடங்களில் சரீர மரணத்தைக் குறிப்பிட்டாலும் (யோவான் 11:11, 1 இராஜா 2:10, சக 9:31), சோம்பேறித்தனத்தையும், செயலற்ற தன்மையையும், தேவனற்ற

நிலையில் மனம்போனபடியெல்லாம் இருளில் நடப்பதையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். பேதுரு சொல்வதுபோல், "சென்ற வாழ்நாட்காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டது போதும்; அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச் செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்" (1 பேதுரு 4:3). கிறிஸ்தவர்களாகிய நாம் புத்தியில்லாத ஐந்து கன்னிகளைப்போல் மணவாளன் வரத்தாமதித்தபோது நித்திரை மயக்கமடைந்து தூங்கிவிடக்கூடாது (மத் 25:5). வருகையின் காலத்தை அறிந்தவர்களாய், புத்தியுள்ள கன்னிகைகளைப்போல் கதவு அடைக்கப்படுமுன் கலியாண வீட்டுக்குள் பிரவேசிக்கும்படியாக ஆயத்தமாக இருக்கவேண்டும். பவுல் சொல்கிறார்: "மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்" (1 தெச 5:6). "நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள்" (மாற்கு 13:36).

"காலத்தை அறிந்தவர்கள்" என்று பவுல் சொல்லும்போது வருகையின் காலத்தைக் குறிப்பிடுகிறார் (மாற்கு 13:33, லூக்கா 21:8, அப் 1:7; 2:17, 1 தெச 5:1, 1 தீமோ 4:1, 2 தீமோ 3:1, எபி 1:2, 1 யோவான் 2:18). காலத்தை அறிந்த ஒரு மனிதன் நித்திரை பண்ணுகிறவனாய் இருக்கமாட்டான். இது குறித்து மூன்று காரியங்களை அறிந்துகொள்ளலாம்.

1. ஆதி அப்போஸ்தல சபை கிறிஸ்துவின் வருகையை உடனடியாக எதிர்பார்த்தது (1 கொரி 7:28-31).
2. வருகை சற்று தாமதிக்கும் என்ற வெளிப்பாட்டைப் பெற்றபின்னும் ஆதிசபை அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது (2 தீமோ 4:6-8).
3. வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு எல்லா வேளைகளிலும் சபையில் காணப்பட்டது (வெளி 2:25; 3:11; 22:20).

கிறிஸ்தவர்களாகிய நாம் இன்று உலகத்தின் கடைசி நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். **கிறிஸ்துவின் வருகையைக் குறித்த எதிர்பார்ப்பு ஆதிசபையில் காணப்பட்டதினால்தான் அவர்கள் விழிப்போடு செயல்பட்டு மிகப்பெரிய ஆத்தும ஆதாயம் உண்டாகக் காரணமாயிருந்தார்கள்.** வருகையைக்

குறித்த எதிர்பார்ப்பு இப்போது சபைகளில் படிப்படியாக குறைந்துகொண்டே இருக்கிறது. **கிறிஸ்துவினுடைய வருகையைக் குறித்தும் அதற்குத் தேவையான பரிசுத்தத்தைக் குறித்தும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்ததுமான பிரசங்கங்களை சபைகளில் கேட்கமுடிவதில்லை.** இம்மைக்குரிய ஆசீர்வாத பிரசங்கங்கள், சரீர சுகத்துக்கடுத்த பிரசங்கங்கள், ஆறுதல் பிரசங்கங்கள், செழிப்பின் பிரசங்கங்கள், தனிப்பட்ட அனுபவங்களை மகிமைப்படுத்தும் பிரசங்கங்கள், புகழ்ச்சிப் பிரசங்கங்கள் ஆகியவை மட்டுமே இன்று பலிபீடங்களில் இருந்தும், மேடைகளிலிருந்தும் தொலைக்காட்சிகளிலிருந்தும் வெளிப்படுகின்றன. இவை (Health and wealth preachings) நம்மை எந்த அளவு ஆற்றித் தேற்றுகிறதென்றால் நிச்சயமாக நம்மை நித்திரையடைச்செய்துவிடுகின்றன. ஆவிக்குரிய தூக்கம் மிகவும் ஆபத்தானது (ஏசாயா 56:10, ரோமர் 11:8, மீகா 3:6). "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பார்" (எபே 5:14) என்று வாசிக்கிறோம்.

இந்நாள் வரையிலும் நாம் பாவ இருளில் இருந்தோம் என்பது உண்மைதான். இப்பொழுதோ நாம் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தின் வெளிச்சம் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. நாம் போகுமிடம் இன்னது என்பதை நாம் இப்போது அறிவோம். அதற்கு மிகவும் நெருக்கமாக நாம் வந்துவிட்டோம் என்பதை அறிந்தவர்களாய் செயல்படவேண்டியது கிறிஸ்தவர்களாகிய நம்முடைய கடமை. ஆனால் இன்றைய நாட்களில் கிறிஸ்தவ ஊழியம் என்றாலே சரீர சுகம் பெறுவது, வீடுகட்ட வேண்டுவது, வேலை கேட்பது, குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிப்பது, கடன் நீங்க வேண்டுதல் செய்வது, பரீட்சையில் வெற்றிபெறக் கேட்பது, அரசியலில் மாற்றம் உருவாக கூட்டங்கள் நடத்துவது என்பது போன்று ஆகிவிட்டது. நமக்காக தன் ஜீவனைக் கொடுத்த இயேசுவை விரைவில் சந்திக்கவிருக்கிறோம் என்பதைப் பற்றியும் அதற்காக நம்மைப் பரிசுத்தப்படுத்திக்கொண்டு காத்திருப்பதுபற்றியும் பேசுகிறவர்கள் மிகவும் குறைவு.

"கர்த்தர் சமீபமாயிருக்கிறார்" (பிலிப் 4:5) என்கிறார் பவுல். "நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார்" (லூக்கா 12:40). "எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள்" (லூக்கா 12:37). "இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள்" (2 கொரி 6:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இரவு சென்றுபோயிற்று, பகல் சமீபமாயிற்று; ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின்

ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளக்கடவோம். (ரோமர் 13:12)

இரவு என்ற வார்த்தை ஒரு விசுவாசி பூமியில் வாசம்செய்யும் நாட்களையும், பகல் என்ற வார்த்தை பரலோகத்தில் வாசம் செய்யவிருக்கும் நாட்களையும் குறிப்பிடுவதாக வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். இரவு ஏறக்குறைய முடிந்துவிட்டது. பகல் அநேகமாக துவங்கிவிட்டது. எனவே இருட்டுக்குச் சொந்தமான சகல துன்மார்க்கமான கிரியைகளையும் நம்மைவிட்டு விலக்கிவிட்டு வெளிச்சத்தின் ஆயுதங்களை அணிந்துகொள்ளும்படியாக பவுல் சபைக்கு ஆலோசனை தருகிறார். "நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்" (1 கொரி 15:34).

அந்தகாரத்தின் கிரியைகள் என்ற வார்த்தை பொதுவாக இருளில் நடப்பிக்கப்படும் இரகசியமான பாவ கிரியைகளைக் குறிப்பிடுகிறது. யோபு 24:14, நீதி 7:8,9 வாசித்துப்பாருங்கள். 'அந்தகாரம்' என்ற வார்த்தை அறியாமையையும், துன்மார்க்கத்தையும் குறிப்பிடுகிறது. ஆறு அந்தகாரக் கிரியைகளை பவுல் அடுத்த வசனத்தில் பட்டியலிட்டுக் காட்டுகிறார். இத்தகைய இருளின் கிரியைகளை வெறுத்து, வெளிச்சத்தின் கிரியைகளை நேசிப்பதில்தான் நம்முடைய பரிசுத்தம் அடங்கியிருக்கிறது.

கிறிஸ்து சொல்கிறார்: "ஒருவன் பகலிலே நடந்தால் அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடியினால் இடறமாட்டான். ஒருவன் இரவிலே நடந்தால் தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறுவான்" (யோவான் 11:9,10). நாம் ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்ளும்போது நம்முடைய உள்ளான சிந்தனை, பேச்சு, செயல்பாடுகள் ஆகிய மூன்றிலும் பரிசுத்தம் உண்டாகியிருக்கும். தேவனுக்கும் சபைக்கும் முன்பாக பரிசுத்தமுள்ளவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ளும் பலர் உலகத்துக்கடுத்த காரியங்களில் நேர்மையாக நடக்கவிரும்புவதில்லை. இப்படிப்பட்டவர்கள் இன்னும் இருளுக்குள் இருந்துகொண்டு இருளில் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒளியின் ஆயுதங்களைத் தரித்துக்கொள்வது மட்டுமே நமக்கு உலகில் இருக்கும் நாட்களில் உண்மையான பாதுகாப்பைத் தரும். "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்" (1 பேதுரு 5:8) என்கிறார் பேதுரு. நம்முடைய கைகளின் பெலத்தினால் இந்தச் சிங்கத்தை விழுத்தட்டமுடியாது. வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றியடைய வேண்டுமானால் நாம் ஒரு போர் வீரனைப்போல் சகல ஆயுதங்களையும்

தரித்துக்கொண்டு விழித்திருப்பது அவசியமாகிறது. பவுல் சொல்கிறார்: "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே 6:11). தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களே ஒளியின் ஆயுதங்கள் என்று இந்த வசனத்தில் குறிப்பிடப்படுகின்றன.

தேவன் நமக்குத் தந்திருக்கும் ஒளியின் ஆயுதங்கள் என்னவென்பது எபேசியர் 6:14-16ல் அறிவிக்கப்படுகிறது. "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத் தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்".

களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய் நடக்கக்கடவோம். (ரோமர் 13:13)

இருளில் நடக்கிறவர்கள் என்ன செய்கிறார்கள்? "இவர்கள் ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி, கறைகளும் இலச்சைகளுமாயிருந்து, உங்களோடே விருந்துண்கையில் தங்கள் வஞ்சனைகளில் உல்லாசமாய் வாழ்கிறவர்கள்; விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்" (2 பேதுரு 2:13,14).

கிறிஸ்தவர்களாகிய நாமோ, பகலிலே நடக்கிறவர்கள்போல் சீராய் நடக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். பகலுக்குரியவர்கள் செய்யத்தக்கச் செயல்களை நாம் செய்யவேண்டும். "சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது" (1 கொரி 14:40) என்கிறார் பவுல். சகல காரியங்களிலும் கிறிஸ்தவர்கள் மதிப்போடு நடந்து கொள்ளவேண்டும். ஏனென்றால் "நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே" (1 தெச 5:6). "முந்தின நாட்களில் நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து,

மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம்" (1 பேதுரு 4:3).

சீராக நடக்கிறவர்கள் எவ்வாறு நடக்கவேண்டும்? "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள்" (எபே 5:8) 'நடப்பது' என்ற வார்த்தை மனிதர்கள் காணக்கூடிய வெளிப்படையான வாழ்க்கை முறைகளைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளவேண்டும். இவ்வாறு நடப்பவர்களிடம் களியாட்டு, வெறி (குடிவெறி), வேசித்தனம், காமவிகாரம், வாக்குவாதம், பொறாமை ஆகிய ஆறு இருளின் கிரியைகள் காணப்படாது. இந்த பழைய மனுஷனுக்குரிய செயல்பாடுகள் இனி நம்மில் காணப்படக்கூடாது. ரோமர் 6:6 சொல்கிறபடி, "நாம் இனிப்பாவத்துக்கு ஊழியஞ்செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்". இதன் விளைவாக இருளின் கிரியைகள் நம்மை ஆட்கொள்ளமுடியாது என்பதைப் பார்த்தோம்.

வேதத்தில் சொல்லப்படும் முதல் களியாட்டு சீனாய் மலையின் அடிவாரத்தில் ஆரோனின் தலைமையில் நடந்தது. "ஜனங்கள் புசிக்கவும் குடிக்கவும் உட்கார்ந்து, விளையாட எழுந்தார்கள்" என்று யாத் 32:6ல் வாசிக்கிறோம். இன்னும் நியா 9:27; 16:25, 1 சாமு 25:36; 30:16 வாசித்துப்பாருங்கள். அவர்களுடைய சரீரம் எகிப்தை விட்டு வெளியே வந்துவிட்டது. ஆனால் அவர்களுடைய இருதயமோ எகிப்தை நோக்கிச் சென்று கொண்டிருந்ததுதான் இதற்குக் காரணம்.

குடிவெறிக்கு எதிராகப் பல வேத வசனங்கள் உள்ளன. இந்த வெறித்தனத்துக்கும் மற்ற பாவங்களுக்கும் நெருங்கிய உறவு உண்டு. "சாராயத்தை நாடி, அதிகாலமே எழுந்து, மதுபானம் தங்களைச் சூடாக்கும்படி தரித்திருந்து, இருட்டிப்போகுமளவும் குடித்துக்கொண்டேயிருக்கிறவர்களுக்கு ஐயோ" (ஏசாயா 5:11). இன்னும் நீதி 20:1; 23:20; 23:29,30, ஆப 2:15 வாசித்துப்பாருங்கள்.

வேசித்தனம் எவ்வளவு பெரிய பாவம் என்றால் 1 கொரி 10:8ல் இவ்வாறு வாசிக்கிறோம் : "அவர்களில் சிலர் வேசித்தனம் பண்ணி, ஒரே நாளில் இருபத்து மூவாயிரம்பேர் விழுந்து போனார்கள்; அதுபோல நாமும் வேசித்தனம் பண்ணாதிருப்போமாக". மனிதனின் கிரியைகளில் மட்டும் அல்லாமல், இருதயத்திலிருந்தும் வேசித்தனங்கள் புறப்படக்கூடும். கிறிஸ்து சொல்கிறார்: "ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரஞ்செய்தாயிற்று" (மத் 5:28).

கலாத்தியர் 5:19ல் காமவிகாரம் மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது, மாற்கு 7:22, 1 பேதுரு 4:3, 2 பேதுரு 2:7,18 வாசித்துப்பாருங்கள்.

பொதுவாகவே தங்களில் யார் பெரியவன், யார் சொல்லை யார் கேட்கவேண்டும் என்பதில்தான் வாக்குவாதங்கள் உண்டாகும் (லூக்கா 9:46; 22,24). வேதத்தில் முதல் வாக்குவாதம் ஆபிரகாமின் மேய்ப்பர்களுக்கும் லோத்துவின் மேய்ப்பர்களுக்கும் இடையே உண்டானது (ஆதி 13:7). உபா 33:8, நியா 8:1, யோவான் 3:25, 6:52 வாசித்துப்பாருங்கள்.

"பொறாமையோ எலும்புருக்கி" என்று நீதி 14:30ல் வாசிக்கிறோம் "ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர் மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்" (கலா 5:26). "பாவிகள், துன்மார்க்கர்கள் மீதும் நாம் பொறாமைப்படக்கூடாது" (சங் 37:1, 73:3, நீதி 3:31; 24:1,19). காயீனுடைய பொறாமையின் நிமித்தமாகவே (ஆதி 4:5,6) உலகில் முதலாவது கொலை என்ற பாவம் பிரவேசித்தது, 1 கொரி 3:3, கொலோ 3:8, 1 பேதுரு 2:2 வாசித்துப்பாருங்கள்.

துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப்பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். (ரோமர் 13:14)

12 மற்றும் 13 ஆகிய இரண்டு அதிகாரங்களில் சொல்லப்பட்ட சகல சத்தியங்களையும் இந்த ஒரே வசனம் உள்ளடக்கியதாய் இருக்கிறது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக் கொண்டிருக்கிறவனே உண்மையான கிறிஸ்தவன் என்ற முறையில் பவுல் பேசுகிறார்.

நாம் நம்முடைய உடலைப் பேணாமலிருக்க வேண்டும் என்று பவுல் சொல்லும்போது உடல் என்ற வார்த்தை நம்முடைய சரீரத்தை மட்டும் குறிப்பிடவில்லை. ஏனென்றால் நம்முடைய சரீரத்தைப் பேணி, பாதுகாத்து, போஷிப்பது நம் ஒவ்வொருவருடைய கடமை. இந்த இடத்தில் உடல் என்ற வார்த்தை நம்முடைய பாவ சுபாவத்தைக் குறிப்பிடுகிறது (ரோமர் 7:18,25; 8:5-8, கலா 5:19-21; எபே 2:3). நம்முடைய சரீரம் இன்னும் இரட்சிக்கப்படவில்லை என்பதையும், கிறிஸ்துவின் வருகையின்போது மறுரூபமான சரீரத்தைப் பெறும்போதுதான் சரீர மீட்பாகிய இரட்சிப்பு உண்டாகிறது என்பதையும் பார்த்தோம். "என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லை" (ரோமர் 7:18). உலகில் இருக்கும் நாட்களில் ஒருவனுடைய உடலில் பாவபிரமாணம் குடியிருக்கிறது (ரோமர் 8:23-25) என்பதை விளக்கமாகப் பார்த்தோம். தன்னுடைய

மாம்சத்தையும் மாம்ச இச்சைகளையும் போஷித்துக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் தனக்குள்ளேயே ஒரு பயங்கரமான எதிரியை உண்டாக்கிக்கொண்டிருக்கிறான். அதனால்தான் நம்முடைய சரீரங்கள் தேவனுக்கு ஜீவபலியாக (உயிரோடு இருப்பவைகளாக) ஒப்புக்கொடுக்கப்படவேண்டும் என்று ரோமர் 12:1ல் பவுல் கேட்டுக்கொண்டார்.

நம்மில் வாசமாயிருக்கும் பாவம் துர்இச்சைகளினால் பெலனடைந்து நம்மை ஆட்கொள்ள முயன்றுகொண்டிருப்பதினால் அதைக்குறித்த எச்சரிக்கையை வசனத்தின் முதல் பகுதியில் பவுல் அறிவிக்கிறார். நீதிமொழிகள் 6:24-29ல் ஒரு துன்மார்க்கமான ஸ்திரீயைக் குறித்து வாசிக்கிறோம். "உன் இருதயத்திலே அவள் அழகை இச்சியாதே; அவள் தன் கண்ணிமைகளினால் உன்னைப் பிடிக்கவிடாதே" (வசனம் 25). "கண்களின் துர்இச்சை முழு சரீரத்தையும் பாவத்தில் விழத்தட்டிவிடக்கூடியது" (2 சாமு 11:2-4, யோபு 31:1, மத் 5:28, 1 யோவான் 2:16). எனவே துர்இச்சைகள் வாசம் செய்து, பலுகிப் பெருகும் இடமாக நம்முடைய சரீரம் மாறிவிடக்கூடாது.

அதற்கு நாம் செய்யவேண்டிய காரியம் என்ன? "மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" (எபே 4:24). இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஏற்கனவே இதை செய்துவிட்டார்கள் என்ற நிச்சயத்தினால் பவுல் மேலும் சொல்கிறார்: "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ 3:10).

இந்தப் புதிய மனிதன் யார்? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அதனால்தான் அதிகாரத்தின் கடைசி வசனத்தில் பவுல் சொல்கிறார்: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்". நம்முடைய நீதியின் கிரியைகள் தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையாக இருப்பதினால் நம்முடைய சுயநீதியை நாம் தரித்துக்கொள்ள முடியாது (ஏசா 64:6). எனவே நம்முடைய நிர்வாணத்தை மூடிக்கொள்ளவேண்டும் என்றால் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுவதே ஒரே வழி. இவ்வாறு செய்யும்போது மட்டுமே தேவ ஆவியின் வல்லமை நம்மை எல்லாவேளைகளிலும் சூழ்ந்துகொண்டிருக்கும். "கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும், விசுவாச மூலமாய்த் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதி" (பிலிப் 3:9) நம்மை மூடிக்கொள்ளும்போது பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய் தேவனுடைய பிரசன்னத்துக்குள் செல்லத் தகுதியுள்ளவர்களாகிறோம். கிறிஸ்துவைத் தரித்துக் கொள்வது எப்படி?

பவுல் : "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" (கலா 3:27) என்று பதிலளிக்கிறார். கிறிஸ்துவுக்குள் மரித்து உயிர்த்தெழுந்தவர்கள் அவரைத் தரித்துக்கொள்கிறார்கள்.

இந்த உலகில் இருக்கும் நாட்களில் ஒரு தீர்மானத்தின் அடிப்படையில், கிறிஸ்துவோடு தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்கள்தான் கிறிஸ்துவோடு ஞானஸ்நானம் பெற்றவர்கள் ஆகிறார்கள். "என் கர்த்தராகிய கிறிஸ்துஇயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்" (பிலிப் 3:8) என்று பவுல் சொல்கிறபடி அனுதினமும் அவரோடு கூடுதலான நெருக்கத்தை உடையவர்களாக இருங்கள். உங்களுடைய சகல தேவைகளுக்கும் அவரை மட்டுமே நம்பியிருங்கள். கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வது என்பது இவற்றைத்தான் குறிப்பிடுகிறது. அவர் ஒருவரே உங்கள் எஜமானனாகவும் பங்காளராகவும் இருப்பாராக.

ஒருவன் ஒரு ஆடையைத் தரித்துக்கொள்ளும்போது அதற்குள் தன்னை மறைத்துக்கொண்டவன் ஆகிறான். **கிறிஸ்துவுக்குள் உங்களை மறைத்துக்கொள்ளுங்கள். உங்கள் சிந்தை, பேச்சு எல்லாம் அவரைப்பற்றியதாக இருக்கட்டும். கிறிஸ்து உங்களுக்குள் இருக்கட்டும். உங்கள் மூலமாக அவர் வெளிப்பட அனுமதியுங்கள்.** கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் (2 கொரி 13:5) என்பதை மனப்பூர்வமாக நம்புங்கள். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் 1:21) என்று சொல்லுங்கள். "அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்" (பிலிப் 3:11) என்று அறிக்கையிடுங்கள். கிறிஸ்துவையே தரித்துக்கொள்ளுங்கள். அவரைவிட மேலான அலங்காரம் உலகில் இல்லை.

ரோமர் 13-வது அதிகாரம், பேதுருவின் முதலாம் நிருபம் இரண்டாவது அதிகாரத்தின் வசனங்களோடு இணைந்து செல்வதைப் பார்க்கிறோம். பேதுருவும் அந்த அதிகாரத்தில் அரசாங்கத்தைக் குறித்து நம்முடைய கடமைகள் என்ன என்பதை 13-17 வசனங்களிலும், பிறரோடு கொண்டிருக்கவேண்டிய உறவுமுறைகளைக் குறித்து 19-21 வசனங்களிலும், நமது தனிப்பட்ட வாழ்க்கை விதிமுறைகளை 11,12 வசனங்களிலும் அறிவிக்கிறார்.

கி.பி.386ல் புனிதர் அகஸ்டின் என்ற வேதபண்டிதரின் மனமாற்றத்துக்கு ரோமர் 13-ம் அதிகாரமே காரணமாகச்

சொல்லப்படுகிறது. முப்பது வயது வாலிபராக இத்தாலி தேசத்து மிலான் பட்டணத்து பூங்கா ஒன்றில் அமர்ந்திருந்த அகஸ்து அங்கு கிடந்த ரோமர் புத்தகத்தைப் பார்த்து, வாசிக்க ஆரம்பித்தார். அவர் முதலாவது வாசித்தது இந்த அதிகாரத்தின் 13,14 வசனங்கள் என்று சொல்லப்படுகிறது. வேதவசனம் அவரோடு பேசியது. கிறிஸ்துவை உடனடியாக ஏற்றுக்கொண்ட அவர் திருச்சபையின் தூண்களில் ஒருவராக இன்றும் கருதப்படுகிறார்.

14

பலவீன சகோதரர்களைத் தாங்குதல்

ரோமர் நிருபத்தில் முதல் 8 அதிகாரங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்தவ மூல உபதேசங்களை அறிவித்துவிட்டு, 9,10,11 ஆகிய மூன்று அதிகாரங்களில் இஸ்ரவேலரைக் குறித்த சில காரியங்களை அறிவித்தார் என்பதைப் பார்த்தோம். 12-வது அதிகாரத்தில் விசுவாசிகளாகிய நாம் தேவனோடு கொண்டிருக்கவேண்டிய ஐக்கியம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதையும், கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்கள் என்ற முறையில் நாம் ஒருவரோடொருவர் கொண்டிருக்கவேண்டிய உறவுமுறைகளைப் பற்றியும் பவுல் பேசினார். 13-வது அதிகாரத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை ஆளுகை செய்கிறவர்களோடும், நம்முடைய அயலாரோடும், நம்மைச் சுற்றியிருப்பவர்களோடும் வைத்திருக்கவேண்டிய சமுதாய உறவுமுறைகள் விளக்கப்பட்டன.

இப்போது நாம் தியானிக்கும் 14-வது அதிகாரத்தில் சக விசுவாசிகளைக் குறித்து பவுல் பேசுகிறார். ஒரு சபையில் ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் இருந்தாலும் சிலர் பலவீனர்களாக இருக்கலாம். இவர்கள் ஆண்டவரை அறிந்து பல ஆண்டுகளுக்குப் பின்னும் விசுவாசத்தில் பலப்படாமல், தவறான கோட்பாடுகளை உடையவர்களாய், வசனத்தை புரிந்துகொள்ளாதவர்களாய் இருக்கலாம், அவர்களையும் நேசித்து, உற்சாகப்படுத்தி சபை ஐக்கியத்தில் நிலைநிறுத்தி அன்பு பாராட்டுவது நம்முடைய கடமை என்பதை பவுல் இந்த அதிகாரத்தில் வலியுறுத்துகிறார்.

இந்த அதிகாரத்தை வேதபண்டிதர்கள் கீழ்க்கண்ட இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கிறார்கள்.

1. சபை ஐக்கியத்தைக் குறித்த நியதிகளும் பவுலின் கடிந்துரையும் (வசனம் 1-12)

2. விசுவாசத்தில் வளர்ச்சியடைந்த விசுவாசிகளுக்கு பவுல் தரும் ஆலோசனை (வசனம் 13-23)

யாரையும் நியாயந்தீர்க்காதிருங்கள் (வசனம் 1-12)

விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள். (ரோமர் 14:1)

விசுவாசத்தில் பலவீனமான சகோதரர்கள் எல்லா சபைகளிலும், காணப்படுகிறார்கள். ரோமாபுரியில் மட்டுமல்ல, கொரிந்து பட்டண சபையிலும் இப்படிப்பட்டவர்கள் நிறைய இருந்திருக்கவேண்டும். கொரிந்தியருக்கு எழுதிய முதலாம் நிருபத்தின் இரண்டு அதிகாரங்களில் (8,10) பவுல், தங்களை பலமுள்ளவர்களாகக் கருதும் விசுவாசிகள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்ற ஆலோசனையைத் தருகிறார்.

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப் பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே 2:8) என்ற வசனத்தின்படி ஒரு மனிதனை இரட்சிப்புக்குள் வழிநடத்தும் விசுவாசம் முற்றிலுமாக தேவனுடைய ஈவு. அது இலவசமாக தேவனால் வழங்கப்படுகிறது. மனந்திரும்புதலும் தேவனுடைய ஈவாகவே அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அருளப்படுகிறது. அப் 5:31, 2 தீமோ 2:25 வாசித்துப்பாருங்கள். இரட்சிப்புக்கேதுவான விசுவாசம் முற்றிலுமாக தேவனுடைய செயலாற்றல் என்றாலும் தனக்கு அருளப்பட்ட விசுவாசத்தை தன்னுடைய வாழ்க்கையில் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் செயல்படுத்துவது ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகிறது.

இந்தக் கடமையைச் செய்வதில் குறையுள்ளவர்கள், இந்தக் கடமையைச் செய்யத்தவறுகிறவர்கள் இன்றும் எல்லா சபைகளிலும் காணப்படுகிறார்கள். குறைவான வேத அறிவே விசுவாசிகளுடைய சகல பலவீனங்களுக்கும் மூல காரணம். கொலோசெயர் 2:14,15 அறிவிக்கும் கிறிஸ்துவினால் உண்டாகும் விடுதலையைக் குறித்தும், அதிகாரத்தைக் குறித்தும் இவர்கள் அறியாதவர்களாயிருக்கிறார்கள். இதனால் விசுவாசிகளில் சிலர் சிறு பிள்ளைகளாக இருக்கிறார்கள். சிலர் வாலிபர்களாக இருக்கிறார்கள். சிலர் பிதாக்களாக இருக்கிறார்கள் (1 யோவான் 2:12-14). கிறிஸ்துவுக்குள் சிறு குழந்தைகளாகவும் சிலர் இருக்கிறார்கள் (1 கொரி 3:1,2; 1 கொரி 13:11). அவர்கள் கொண்டிருக்கும் விசுவாச அளவு ஒருவருக்கொருவர் வித்தியாசமானதாக இருக்கிறது.

அதனால்தான் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும்" (லூக்கா 17:5) என்று அப்போஸ்தலர்கள் இயேசுவை வேண்டிக்கொண்டனர்.

விசுவாசத்தில் அவர்கள் பலவீனர்களாய் இருக்கலாம். ஆனாலும் அவர்களுக்குள் விசுவாசம் இருக்கிறது. கடுகு விதையளவு விசுவாசத்தையும் தேவன் கனம்பண்ணுகிறவர் (லூக்கா 17:6). விசுவாச வீரர்களான ஆபிரகாமின் விசுவாசம் (ஆதி 22:8), காலேபின் விசுவாசம் (யோசுவா 14:12), யோனத்தானின் விசுவாசம் (1 சாமு 14:6), தாவீதின் விசுவாசம் (1 சாமு 17:37), சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ ஆகிய யூதவாலிபர்களின் விசுவாசம் (தானி 3:17) அவர்களில் இல்லாதிருக்கலாம். ஆனால் நம்முடைய தேவன் நெரிந்த நாணலை முறியாதவர். மங்கியெரிகிற திரியை அணையாதவர் (ஏசாயா 42:3). எனவே அவர்களுடைய குறைந்த விசுவாசமும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது. அவர்கள் கிறிஸ்துவை உடையவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களாயிருக்கிறார்கள்.

அப்படி இருப்பதினால் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களை ஏற்றுக்கொள்வது நம் ஒவ்வொருவரின் கடமையாயிருக்கிறது. சபை ஐக்கியங்களில் அவர்களைப் பங்கு பெறச்செய்யவேண்டும். அவர்களுடைய மனதில் எழும்பும் சந்தேகங்களைக் குற்றமாக நிர்ணயம் பண்ணாதிருங்கள் என்கிறார் பவுல். விசுவாசத்தில் பலவீனமானவர்களின் பிரச்சனை என்னவென்றால் பல சத்தியங்களைக் குறித்து அவர்கள் மனதில் சந்தேகமுடையவர்களாக இருப்பார்கள். கிறிஸ்துவுக்குள் வந்தபின்னும் அவர்களுடைய பாரம்பரியமான கோட்பாடுகளை அவர்கள் புறக்கணிக்காதிருப்பார்கள். அவர்கள் அறிந்துகொண்ட தவறான போதனைகளிலிருந்து முழுமையான விடுதலையற்றவர்களாக இருப்பார்கள். இவற்றைக்குறித்து நாம் அவர்களைக் குற்றப்படுத்தக்கூடாது. அவர்களைக் குற்றவாளிகளாக்கக்கூடாது என்கிறார் பவுல். நம்முடைய பேச்சுத்திறமையினாலும் கூடுதலான வேத அறிவினாலும் வாக்குவாதம் பண்ணி அவர்களை தோற்கடிக்க முயற்சி செய்யக்கூடாது. வேத வசனத்தில் வளர்ந்து, விசுவாசத்தில் படிப்படியாக கட்டப்பட அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். பவுலின் ஆலோசனையைக் கவனியுங்கள்: "பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமுமானேன்" (1 கொரி 9:22).

ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று

நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளைமாத்திரம் புசிக்கிறான் *(ரோமர் 14:2)*

உணவுப்பொருட்கள் விஷயத்தில் விசுவாச பலவீனங்கள் உண்டாகக்கூடும் என்பதை முதலாவது பவுல் அறிவிக்கிறார். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் காய்கறி உணவை மட்டுமே சாப்பிட்டு வந்தார். "பூமியின்மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது" (ஆதி 1:29) என்பதுதான் தேவனுடைய நியமம். தேவனுடைய பரிபூரண சித்தம். பல நூற்றாண்டுகளுக்குப்பின் நோவாவிடம் தேவன் சொல்கிறார் : "நடமாடுகிற ஜீவஜந்துக்கள் யாவும், உங்களுக்கு ஆகாரமாய் இருப்பதாக; பசும்பூண்டுகளை உங்களுக்குத் தந்ததுபோல, அவைகள் எல்லாவற்றையும் உங்களுக்குத் தந்தேன்" (ஆதி 9:3). மாமிச உணவு தேவன் அனுமதித்த காரியமே அன்றி அவருடைய பரிபூரண சித்தம் அல்ல என்பது சில வேதபண்டிதர்களின் கருத்து. இதன் அடிப்படையில் சிலவிசுவாசிகள் காய்கறி உணவை புசிக்க விரும்புகிறார்கள். கிறிஸ்து காய்கறி புசிக்கிறவராகவா இருந்தார்? இல்லையே. உயிர்த்து மகிமையின் சரீரத்தில் வெளிப்பட்டபோதும் கடற்கரையில் கரி நெருப்பில் மீன் பொறித்துக்கொண்டிருந்தாரே! (யோவான் 21:9). எனவே மரக்கறியை மட்டும் புசிப்பதினால் எந்த மேன்மையும் இல்லை.

மேலும் ரோமாபுரியில் உள்ள யூத இனத்தைச் சேர்ந்த விசுவாசிகள் விசுவாசத்தில் பலவீனர்களாக கருதப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் புறஜாதியாருக்கு எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக்கூடாது என்று எந்தவிதமான விதிமுறைகளும் கிடையாது. எதை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் அவர்கள் விடுதலையோடு சாப்பிடலாம். ஆனால் யூதர்களுக்கோ, அவர்கள் புசிக்கத்தக்க ஜீவஜந்துக்கள் எவை, புசிக்கத்தகாதவை எவை என்று நியாயப்பிரமாணத்தில் திட்டவட்டமான உத்தரவுகளைத் தேவன் கொடுத்திருந்தார், லேவியர் 11:1-45, உபாகமம் 14:3-21 வாசித்துப்பாருங்கள். உணவு சம்பந்தமான இந்த விதிமுறைகளை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் அனுசரித்து வந்தார்கள்.

பேதுரு யோப்பா பட்டணத்தில் ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தபோது தேவன் நியாயப்பிரமாணம் விலக்கிய சில மிருக ஜீவன்களை அவருக்கு தரிசனத்தில் காட்டி "அடித்துப்புசி" என்கிறார். "அப்படியல்ல, ஆண்டவரே, தீட்டும் அசுத்தமுமாயிருக்கிற யாதொன்றையும் நான் ஒருக்காலும் புசித்ததில்லை" (அப் 10:14) என்று பேதுரு பதில் சொல்கிறார். கிறிஸ்துவின் மரணத்தோடு நியாயப்பிரமாணத்து

சடங்குமுறைகள் ஒழித்துக் கட்டப்பட்டுவிட்டது என்பதைப் பேதுரு அறியாதிருந்தார். பேதுருவைப் போன்ற யூதர்கள் ரோம தேசத்திலும் இருந்திருக்கவேண்டும். அவர்கள் அங்கே இறைச்சி உணவைச் சாப்பிடும்போது அது நியாயப்பிரமாணத்தின்படி சாப்பிடக்கூடியதா, சாப்பிடக்கூடாததா என்பதை அறியாததினால் பொதுவாக மரக்கறி உணவோடு திருப்தியடைந்தார்கள்.

அந்நிய தேவர்களுக்கு பலியிடப்பட்ட மிருகங்களின் இறைச்சியைச் சாப்பிடுவதும் யூதர்களுக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது (யாத் 34:15,16). இதனால்தான் பாபிலோனில் இருந்தபோது தானியேல் பருப்பு முதலான மரக்கறிகளை மட்டுமே சாப்பிட்டுத் திருப்தியடைந்தார் (தானி 1:8-16) என்று வாசிக்கிறோம். புறஜாதி நாடுகளில் இறைச்சிக் கடைகளில் விற்கப்படும் ஆடு, மாடுகள் அங்குள்ள விக்கிரக ஆலயங்களில் பலியிடப்பட்டதாகவே இருந்தது. அவற்றைப் புசித்தால் தாங்கள் தீட்டுள்ளவர்களாவோம் என்று யூத கிறிஸ்தவர்கள் எண்ணியிருக்கலாம்.

ஆனால் சபையின் நாட்களில் பிரமாணத்தின் விதிமுறைகளுக்குப் பயந்து காய்கறியை மட்டும் புசிப்பவர்கள் நிச்சயமாக பலவீனர்களாகத்தான் கருதப்படவேண்டும். ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் தாங்கள் பெற்றிருக்கும் விடுதலையை அவர்கள் இன்னும் அறியாதிருக்கிறார்கள். எல்லா உணவு வகைகளையும் சாப்பிடுகிறவர்களோ "புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாதென்று" (மாற்கு 7:18) கிறிஸ்துவின் பிரமாணத்தில் நம்பிக்கை உடையவர்கள். "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1 தீமோ 4:4) என்கிறார் பவுல்.

புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே. (ரோமர் 14:3)

விசுவாசத்தில் பலமுள்ளவர்களின் தவறு என்ன? விசுவாசத்தில் பலவீனர்களின் தவறு என்ன? இவை இரண்டும் ஒரே நேரத்தில் இந்த வசனத்தில் சொல்லப்படுகின்றன. ஒருவரை ஒருவர் அற்பமாக குற்றவாளியாக எண்ணுகிறார்கள். **தான் எல்லாவற்றையும் அறிந்திருப்பதாக நினைப்பவன், தன்னுடைய அறிவின் மேட்டிமையினால் மற்றவனை அவமதிக்கிறான்.** அறியாமை என்னும் பலவீனத்தில் இருப்பவன் தன்னிலும் மேலாக வேத சத்தியங்களை அறிந்தவனை, குற்றவாளியாகக் கருதுகிறான்.

மனிதர்களாகிய நாம் ஒருவரை ஏற்றுக்கொள்வதினாலோ, அல்லது ஏற்றுக்கொள்ளாதிருப்பதினாலோ யாருக்கும் எந்த மேன்மையும் இல்லை. தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதே ஒருவனுடைய நித்தியத்தை நிர்ணயம் பண்ணுகிற காரியம். ஒருவன் காய்கறி உணவைச் சாப்பிடுகிறானா அல்லது இறைச்சி உணவைச் சாப்பிடுகிறானா என்பதின் அடிப்படையில் தேவன் யாரையும் ஏற்றுக்கொள்வதில்லை. "போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை" (1 கொரி 8:8). "போஜனபதார்த்தங்களினாலல்ல, கிருபையினாலே இருதயம் ஸ்திரப்படுகிறது நல்லது; போஜன பதார்த்தங்களில் முயற்சிசெய்கிறவர்கள் பயனடையவில்லையே" (எபி 13:9).

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை சாப்பிடுவதைக் குறித்து பவுல் சொல்கிறார்: "விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்கிற விஷயத்தைப் பற்றி, உலகத்திலே விக்கிரகமானது ஒன்றுமில்லையென்றும் ஒருவரேயன்றி வேறொரு தேவன் இல்லையென்றும் அறிந்திருக்கிறோம்" (1 கொரி 8:4). இந்த நிச்சயத்தை உடையவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளை தைரியமாகச் சாப்பிடுகிறார்கள். அதனால் அவர்களுக்கு சரீரத்திலோ ஆத்துமாவிலோ எந்த பாதிப்பும் உண்டாவதில்லை. ஆனால் சிலர் இன்றைய வரைக்கும் விக்கிரகத்தை ஒரு பொருளென்று எண்ணி, விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதைப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி பலவீனமாயிருப்பதால் அசுசிப்படுகிறது" (1 கொரி 8:7). விக்கிரக வழிபாட்டில் படைக்கப்பட்ட இறைச்சியை சாப்பிட்டாலும், அதில் ஒரு பிரச்சனையும் இல்லை என்ற நம்பிக்கை இல்லாதபடியால், விசுவாசத்தில் குறைவுபட்ட விசுவாசிகள் குற்றமனப்பான்மை உடையவர்களாகிறார்கள். அது அவர்களுடைய சரீரத்திலும் ஆத்துமாவிலும் பலவிதமான பாதிப்புகளை உண்டாக்குகிறது. அதைச் சாப்பிட்டதினால்தான் இப்படி ஆயிற்று என்று கலங்குகிறார்கள்.

அதனால் பவுல் தரும் ஆலோசனை இதுதான்: "உங்களுக்கிருக்கும் உரிமை மனவலிமையற்றவர்களுக்குத் தடைக்கல்லாயிராதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். அறிவு கொண்டுள்ள நீங்கள் சிலைவழிபாட்டுக் கோயிலில் பந்தியமர்ந்திருப்பதை வலுவற்ற மனச்சான்று உடைய சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் காண்பாரானால் அவரும் சிலைகளுக்குப் படைக்கப்பட்டவற்றை உண்ணத் தூண்டப்பெறுவாரல்லவா? இவ்வாறு இந்த அறிவு வலுவற்றவரின் அழிவுக்குக் காரணமாகிறது. அவர் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் அல்லவா? அவருக்காகவும் கிறிஸ்து இறந்தார்

அல்லவா? இவ்வாறு நீங்கள் வலுவற்ற மனச்சான்றைக் காயப்படுத்திச் சகோதரர் சகோதரிகளுக்கு எதிராகப் பாவம் செய்தால், அது கிறிஸ்துவுக்கே எதிரான பாவம் ஆகும். ஆகையால் என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நான் உண்ணும் உணவு ஒரு தடைக்கல்லாக இருக்குமானால் இறைச்சியை ஒரு நாளும் உண்ணமாட்டேன். அவர் பாவத்தில் விழ நான் காரணமாய் இருக்கமாட்டேன்" (1 கொரி 8:9-13, திருவிவிலியம் - பொது மொழிபெயர்ப்பு).

பவுலின் பெருந்தன்மையான மனப்பான்மை கிறிஸ்தவர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் தேவை. மற்றவர்களுடைய வீழ்ச்சிக்கு நாம் காரணமாக இருக்கக்கூடாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே இறைச்சியைப் புசிக்கிறவனையும் ஏற்றுக்கொள்கிறார், இறைச்சியைப் புசிக்காதவனையும் ஏற்றுக்கொள்கிறார் என்று இருக்கும்போது, அவரால் தன்னுடைய சரீரத்தின் அங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு மனிதனை நாம் அங்கீகரிக்க மறுப்போமானால் அது எவ்வளவு துணிகரமான காரியம்? **பலவேளைகளில் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனைவிட பரிசுத்தவான்களாகக் காட்டிக்கொள்ள விரும்புகிறோம்.** "உங்களில் எவனானாலும் தன்னைக்குறித்து எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும்" (ரோமர் 12:3) என்பதைப் பார்த்தோம்.

மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே. *(ரோமர் 14:4)*

பலவான் பலவீனனை அற்பமாய் எண்ணுகிறான் என்றால் பலவீனன் பலவானை குற்றப்படுத்தி, நியாயந்தீர்க்கவும் துணிகரம் கொள்கிறான் என்பதை முந்தின வசனத்தில் பார்த்தோம். இறைச்சி உணவைப் புசிக்கிறவனானாலும் சரி, புசியாதிருப்பவனானாலும் சரி இருவருமே தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்ற முறையில் அவருடைய பணிவிடையாட்களாகிறார்கள். தேவன் ஒருவரே அவர்களுடைய எஜமான், அவர்கள் நம்முடைய சகோதரர்கள் - வேலைக்காரர்கள் அல்ல. நம்முடைய சகோதரர்களை வேலைக்காரர்களாக்க முயற்சிசெய்யக்கூடாது. சர்வ வல்லவரான தேவனுடைய வேலைக்காரனை நியாயந்தீர்க்க உங்களுக்கும் எனக்கும் அதிகாரம் இல்லை. அவன் செய்கிற தவறையும் நன்மையையுங் குறித்து தீர்ப்பு சொல்லும் அதிகாரம் எஜமானனுக்கு

மட்டுமே உண்டு. "எஜமானனாகிய தேவன் தன் ஊழியனை ஏற்றுக்கொள்வார்" (வசனம் 3) என்பது மட்டுமல்ல, நிலைநிறுத்தவும் செய்வார். நம்மை நாமே நிலைநிறுத்திக்கொள்வதில்லை. தேவனே நம்மை நிலைநிறுத்துகிறார். அவ்வாறு நிலைநிறுத்தும் வல்லமையும் அதிகாரமும் அவருக்கு உண்டு என்கிறார் பவுல். இந்த வேலைக்காரர்கள் "உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்" (1 பேதுரு 4:5). நம்மிடம் கணக்கொப்புவிக்க வேண்டும் என்கிற அவசியம் யாருக்கும் இல்லை. மற்றவர்களின் கணக்கை விசாரிக்கும் அதிகாரம் நமக்கு கொடுக்கப்படவில்லை.

ஒருவன் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டாலும், அவனை தேவனால் நிலைநிறுத்தமுடியும். வழுவாதபடி நம்மைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே நம்மை மாசற்றவர்களாய் நிறுத்தவும் அவருக்கு வல்லமை உண்டு (யூதா 24). ஒரு காரியத்தை அறிந்துகொள்ளுங்கள். நம்முடைய பெலத்தின் அடிப்படையிலோ, கிரியைகளின் அடிப்படையிலோ நாம் நிலை நிறுத்தப்படுவதில்லை. நம்முடைய கிரியைகளை உறுதிப்படுத்துகிறவர் தேவன். அதனால்தான் மோசே ஜெபிக்கிறார்: "எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்" (சங் 90:17). கிறிஸ்துவின் நீதியே நம்மை நிலைநிறுத்துகிறது. யாக்கோபு சொல்வது போல் "நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே. அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்" (4:12).

கிறிஸ்து சொல்கிறார் : "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்களும் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள், மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலை பண்ணுங்கள்; அப்பொழுது நீங்களும் விடுதலை பண்ணப்படுவீர்கள்" (லூக்கா 6:37). "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப்பார்க்கிறதென்ன ?" (லூக்கா 6:41) மத்தேயு 7:3-5 வாசித்துப் பாருங்கள்.

அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழுநிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். (ரோமர் 14:5)

பலவீனமான மனிதனையும் தேவன் ஏற்றுக்கொள்கிறார். பலமுள்ள மனிதனையும் அவர் ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் எஜமானுக்கு மட்டுமே தங்களுடைய கணக்கை ஒப்புவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களை நிலைநிறுத்த தேவன் வல்லவராயிருக்கிறார் என்பதையும் அறிவித்த பவுல், அடுத்த இரண்டு வசனங்களில் ஓய்வு நாட்களையும், பண்டிகை நாட்களையும் அனுசரிக்கும் கிறிஸ்தவர்களைப் பற்றி பேச ஆரம்பிக்கிறார். நாட்களை அனுசரிக்கும் விஷயத்திலும் கிறிஸ்தவர்கள்மத்தியில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு சாபாத் என்றோ, ஓய்வுநாள் என்றோ எதுவும் கிடையாது. தேவனுக்கடுத்த காரியங்களைக் கவனிக்கும்படியாகவும், சபையாக தேவனை ஆராதிக்கும்படியாகவும் ஞாயிற்றுக்கிழமையை நாம் ஒதுக்கிவைத்திருக்கிறோம் என்பது உண்மைதான். அது ஒரு நல்ல காரியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதை ஒரு பிரமாணமாக மாற்றுவோமானால் தவறு செய்கிறவர்களாகிறோம். ஏனென்றால் அந்த முறைமையைக் கைக்கொள்ளாதவர்கள் நம்முடைய பார்வையில் பாவிகளாகத் தோற்றமளிக்கிறார்கள்.

பவுல் திட்டவட்டமாகச் சொல்கிறார்: "போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும், ஓய்வு நாட்களையுங்குறித்தாவது ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக" (கொலோ 2:16). ஆனாலும் ரோமாபுரியிலிருந்த யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவ விசுவாசிகளால் பாரம்பரியமாய் தாங்கள் அனுசரித்து வந்த ஓய்வு நாட்களையும் பண்டிகைகளையும் மறக்க முடியவில்லை. மற்ற நாட்களைவிட இவைகளை மேன்மையானதாகக் கருதினார்கள். ஆனால் எல்லா நாட்களுமே தேவனால் உண்டாக்கப்பட்டவைதான் என்பது புறஜாதி கிறிஸ்தவர்களின் முடிவு. இது சரியான முடிவுதான் என்றாலும், இதினிமித்தம் தங்களை விசுவாசத்தில் மேம்பட்டவர்களாகக் கருதுவதை பவுல் அங்கீகரிக்க மறுக்கிறார்.

பவுல் வழங்கும் ஆலோசனை இதுதான். ஒருநாளை மற்றவர்களைவிட சிறப்பாக ஒருவன் கருதுகிறான். மற்றவன் எல்லா நாட்களையுமே ஒன்றுபோல எண்ணுகிறான். எதுவானாலும் தங்கள் நம்பிக்கையைக் குறித்த உறுதி அவர்களில் இருக்கவேண்டும். தங்கள் மனதில் அதைக் குறித்த முழு நிச்சயமுடையவர்களாக இருக்கவேண்டும். ஒரு காரியத்தைச் செய்யுமுன், அல்லது தீர்மானிக்குமுன் மனச்சாட்சியின் அடிப்படையில் அதைக்குறித்த உறுதிவேண்டும். **அரைகுறையான நம்பிக்கையோடும், தங்களில்தானே அதைக்குறித்த நிச்சயமற்றவர்களாய் நாட்களை அனுசரிப்பதினால்தான் பிரச்சனைகள் உண்டாகிறது.** தான்

செய்யும் காரியத்தைக் குறித்து உறுதியான நம்பிக்கை உடையவனாக இருந்தால் மட்டுமே நாம் தியானிக்கவிருக்கும் 6-வது வசனம் அவனைப் பொறுத்தவரை உண்மையானதாக இருக்கும்.

நாட்களை விசேஷித்துக் கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக் கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக் கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான் (ரோமர் 14:6)

கிறிஸ்தவர்களில் சிலர் ஒரு நாளை மற்ற நாட்களைவிட சிறப்பானதாகக் கருதுகிறார்கள். உதாரணமாக யூத பின்னணியில் வந்த கிறிஸ்தவர்கள் வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமையை சாபாத் ஓய்வு நாளாக எண்ணினார்கள் (யாத் 20:11). புறஜாதி பின்னணியில் உள்ள கிறிஸ்தவர்களோ வாரத்தின் முதல்நாளான ஞாயிற்றுக்கிழமையை கர்த்தரின் நாளாக முக்கியப்படுத்துகிறார்கள் (மத் 28:1, மாற்கு 16:2, லூக்கா 24:1, யோவான் 20:1,19, அப் 20:7, 1 கொரி 16:2, வெளி 1:10). கிறிஸ்து ஞாயிற்றுக்கிழமைதான் உயிர்த்தெழுந்தார். தன் சீஷர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைதான் காட்சி கொடுத்தார் என்பது காரணமாகச் சொல்லப்படுகிறது. இவ்வாற நாட்களை விசேஷித்துக்கொள்கிறவர்களைக் குறித்து பவுல் சொல்கிறார் : "நாட்களையும் மாதங்களையும், காலங்களையும் வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ" (கலா 4:10,11).

அதுபோல் எல்லாவகை உணவுகளை உண்பவர்களும் அதை தாங்கள் கர்த்தருக்காக, கர்த்தரின் வார்த்தையின் நிமித்தமாகவே, தேவனுக்கு நன்றி செலுத்தி, செய்வதாகச் சொல்கிறார்கள். சில உணவு வகைகளை நான் சாப்பிடமாட்டேன் என்று மறுப்பவர்களும் அதை தாங்கள் கர்த்தருக்காகவே செய்வதாகத்தான் சொல்கிறார்கள், அவர்களும் தேவனுக்கு நன்றி செலுத்துகிறார்கள். இவ்விதமாக இரு தரத்தாருமே தேவனை மகிமைப்படுத்த விருப்பமுள்ளவர்களாகவே காணப்படுகிறார்கள்.

தேவனை மகிமைப்படுத்தும் எந்த ஒரு காரியமும் தேவனால் அங்கீகரிக்கப்படுவது உறுதி. இந்த ஒரு வசனத்தில் 'கர்த்தருக்கென்று' என்ற வார்த்தை நான்குமுறை சொல்லப்படுவதைக் கவனியுங்கள். எனவே இரு பிரிவினருமே ஏதோ ஒரு வகையில், தாங்கள் பெற்றுக்கொண்ட

வெளிச்சத்தின் அடிப்படையில் தேவனையே கனம்பண்ணுகிறார்கள். **ஒருவன் கூடுதலான வெளிச்சத்தை உடையவனாக இருக்கிறான். மற்றவன் சற்று குறைவான வெளிச்சத்தை உடையவனாக இருக்கிறான். எல்லா கிறிஸ்தவர்களுமே ஒரே மாதிரி இருக்கவேண்டும் என்பதில்லை.** அப்படி இருக்கவேண்டும் என்று தேவன் விரும்புவதாகவும் தெரியவில்லை. கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பை ஒருவன் விசுவாசித்து ஏற்றுக்கொண்டிருக்கிறானா என்பதுதான் பிரதானமான காரியம். இப்படி இருக்கும்போது ஒருவரை ஒருவர் நியாயந்தீர்ப்பது என்பது தவறு என்கிறார் பவுல்.

நாம் எதைச் சாப்பிடுகிறோம், எதைச் சாப்பிடாதிருக்கிறோம் என்பது முக்கியமல்ல. எந்த நாளை பரிசுத்த ஓய்வுநாளாகக் கருதுகிறோம் என்பது முக்கியமல்ல. "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1 தீமோ 4:4). நம்முடைய சரீரத்தைப் போஷிக்கும்படியான ஆகாரத்தை ஆயத்தப்படுத்தி நமக்குத் தருகிறவர் தேவன். எனவே சாப்பிடும் வேளையில் அவருக்கு நன்றி சொல்கிறோம். "நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக் குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்? ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி 10:30,31). கிறிஸ்து பந்தியில் அமர்ந்த ஒவ்வொரு வேளையிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செய்யத்தவறவில்லை (மத் 14:19; 15:36; 26:25; மாற்கு 6:41; 8:6,7; 14:22, லூக்கா 9:16; 24:30) என்பதை அறிவோம்.

பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார்: "போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையுங்குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது" (கொலோ 2:16,17). "மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (கொலோ 2:21-23).

இந்த வசனம் ரோமர் நிருபத்தின் முக்கியமான வசனங்களில் ஒன்றாகக் கருதப்படவேண்டும். ஏனென்றால் பவுல் அறிவிக்கும் சத்தியம் இந்த கடைசிநாட்களில் கிறிஸ்தவ உலகில் நாம் எதிர்கொள்ளும் பல கேள்விகளுக்குப் பதிலாக அமைகிறது. நகை அணியலாமா? டெலிவிஷன் பார்க்கலாமா? கதைப் புத்தகங்கள் படிக்கலாமா? கிறிஸ்துமஸ், ஈஸ்டர் கொண்டாடலாமா? நாடக நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாமா? விளையாட்டுகளில் பங்குகொள்ளலாமா? இவை எல்லாவற்றையும் நாம் செய்யலாம் - நாம் அவற்றை கிறிஸ்துவுக்குள் மனமகிழ்ச்சியோடும் விடுதலையோடும் செய்து தேவனை ஸ்தோத்திரிக்கக்கூடுமானால். இவ்வாறு அந்த காரியங்களைச் செய்வதினால் தேவனை ஸ்தோத்திரிக்க முடியாமல் போகிறது என்றால் அவைகளைச் செய்யக்கூடாது. இந்த வசனத்தில் பவுல் இதைத்தான் சொல்லுகிறார்.

நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை. (ரோமர் 14:7)

மறுபடியும் பிறந்து கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாகிவிட்ட நாம் நமக்குரியவர்கள் அல்ல. நாம் வாழ்வதோ, சாவதோ நமக்காக அல்ல. பெலவீனமான கிறிஸ்தவர்களும் கர்த்தருக்காகத்தான் வாழ்கிறார்கள். பலமுள்ள கிறிஸ்தவர்களும் கர்த்தருக்காகத்தான் வாழ்கிறார்கள். **தனக்கென்று வாழ்கிறவன் ஒருபோதும் உண்மையான கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. நம்முடைய சகல செயல்பாடுகளும், தேவனை மட்டுமே மையமாகக் கொண்டிருக்கவேண்டும்.** நம்முடைய எல்லா கிரியைகளின் மூலமும் தேவன் ஒருவரே மகிமைப்படவேண்டும். எல்லாவற்றிலும் நாம் அவரால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதே நம்முடைய வாழ்க்கையின் பிரதானமான நோக்கமாக இருக்கவேண்டும். பவுல் சொல்கிறார்: "கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்". "கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம்பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர் பேரில் பயபக்தியாயிருங்கள்" (சங் 22:23).

ஒரு கிறிஸ்தவன் உயிரோடிருக்கும் போதும் சரி, மரிக்கும்போதும் சரி, தான் தேவனுக்குச் சொந்தமானவன் என்பதை உணர்ந்தவனாய் எல்லாவற்றையும் தேவகரத்தில் ஒப்புக்கொடுத்தவனாக காணப்படவேண்டும். நாம் கிறிஸ்துவுக்காக வாழ்கிறோம். கிறிஸ்துவுக்காக மரிக்கிறோம். அவரிடமிருந்து நம்மை எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது என்ற நிச்சயமுடையவர்களாய் இருக்கவேண்டும். கிறிஸ்துவுக்குள் நாம்

யார் என்பதைக் குறித்த அறிவை உடையவர்களாய் இருக்கவேண்டும். பவுல் அறிவிக்கும் இந்த காரியங்கள் எல்லாமே மெய்யான கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும். கோடிக்கணக்கான பெயர்க் கிறிஸ்தவர்கள் உலகில் இருக்கிறார்கள். இவர்கள் தங்களை கிறிஸ்தவர்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் இவர்கள் தங்கள் வாழ்க்கையின் முடிவில் கிறிஸ்தவ கல்லறைகளைத்தான் சுதந்தரித்துக் கொள்வார்கள், பரலோகத்தை அல்ல.

ஒரு கிறிஸ்தவன் தனக்குத்தானே மரிப்பதும் இல்லை என்கிறார் பவுல். தன்னுடைய ஜீவனை இழந்துபோக அவனுக்கே அதிகாரம் இல்லை. அதே நேரத்தில் கிறிஸ்துவுக்காக தன்னுடைய ஜீவனைக் கொடுக்க எல்லா வேளைகளிலும் அவன் ஆயத்தமாயிருக்கவேண்டும். சொல்லப்போனால் தேவனுடைய கட்டளைகளைமீறி உயிர் வாழ்வதைவிட மரிப்பதே அவனுக்கு நலமானதாக இருக்கும். இப்படிச் செய்து அவன் தேவனை மகிமைப்படுத்துகிறவனாய் காணப்படவேண்டும். ஏனென்றால் அவனுக்கு தன்னுடைய சுவாசத்தின் மூலமாய் ஜீவனைக் கொடுத்தவர் அவர்தான். அவனுடைய உயிரின்மேல் அதிகாரம் உள்ளவரும் அவர்தான். தேவனுக்கு சித்தமில்லாத நிலையில் உயிர்வாழ ஆசைப்படுவதும் தவறுதான். அவருக்கு சித்தமில்லாத நிலையில் மரிக்க ஆசைப்படுவதும் தவறுதான். ஒருவன் தன்னுடைய மரணத்தின் மூலமாகக்கூட தேவனை மகிமைப்படுத்த முடியும். பேதுரு மரணம் அடைந்து அதன்மூலம் தேவனுக்கு மகிமை சேர்க்கப்போகிறார் என்பதை கிறிஸ்து அறிந்திருந்தார் என்று யோவான் 21:19ல் சொல்லப்பட்டிருக்கிறது.

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர் களாயிருக்கிறோம். (ரோமர் 14:8)

முந்தின வசனத்தில் ஒரு கிறிஸ்தவன் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை. தனக்கென்று மரிக்கிறதுமில்லை என்பதை அறிவித்த பவுல், இந்த வசனத்தில் நாம் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், கர்த்தருக்கென்று மரிக்கிறோம் என்கிறார். நாம் முற்றிலுமாக தேவனுடையவர்கள் என்பதினால் நம்முடைய ஜீவன்மேலும் மரணத்தின்மேலும் நமக்கு அதிகாரம் இல்லை. நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள். அவர் நம்முடைய எஜமான் என்பது மட்டுமல்ல, நம்முடைய வாழ்வையும் மரணத்தையும் நிர்ணயிப்பவர் அவர். நமக்காக மரித்ததின் விளைவாக இந்த அதிகாரத்தை உடையவராக இருக்கிறார். 2 கொரி 5:15ல் பவுல் சொல்சிறார்: "பிழைத்திருக்கிறவர்கள் இனித்

தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்". "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" (கலா 2:20).

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடையவர்கள் அல்ல. நம்முடைய எஜமான் நாம் அல்ல. நம் மனவிருப்பத்தின்படி வாழ நாம் அதிகாரம் உடையவர்கள் அல்ல. நமக்காக இரத்தம் சிந்தி, கிரையம் செலுத்தி, மீட்டுக்கொண்ட இயேசுகிறிஸ்துவே நம்முடைய முதலாளி. எனவே நம்முடைய வாழ்க்கை நம்மைத் திருப்திப்படுத்துகிறதாக இருக்கக்கூடாது என்பதை மறுபடியும் பவுல் வலியுறுத்துகிறார். இன்று நாம் பிழைத்திருக்கிறோம் என்பது உண்மையானால் ஒருநாள் மரிக்கப்போகிறோம் என்பதும் நிச்சயம். மக்கெதோனியா தேசத்து அதிபதியான பிலிப்பு என்பவன் தன்னுடைய வேலைக்காரனிடம் தினமும் காலையில் தன்னிடம் வந்து, "பிலிப்புவே, ஒருவேளை இன்று நீ மரித்துவிடக்கூடும்" என்று மூன்றுமுறை சத்தமாக அறிவிக்கும்படி உத்தரவிட்டிருந்தானாம். **நம்முடைய வாழ்க்கையில் நிச்சயமாக ஒரு காரியம் நடக்கும் என்று இருந்தால் அது நம்முடைய மரணமே.** பவுல் அது சம்பந்தமான இன்னொரு நிச்சயத்தை அறிவிக்கிறார். கிறிஸ்துவுக்காக நாம் வாழ்ந்திருப்போமானால் நாம் கிறிஸ்துக்காக மரிக்க ஆயத்தமானவர்களாய் இருப்போம்.

இந்த நிச்சயத்தின் விளைவாகத்தான் பவுல் சொல்கிறார் : "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் 1:21). "தேகத்தைவிட்டுப்பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" (வசனம் 23). "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தைவிட்டுக் குடிபோகவும் கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம். அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும் குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" (2 கொரி 5:8,9).

கிறிஸ்துவும் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். (ரோமர் 14:9)

கிறிஸ்து மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார் என்றால் அதற்குக்

காரணம் என்ன என்பதை வேத வசனங்கள் இவ்விதமாக அறிவிக்கின்றன:

1. பாவ மனிதனை தேவனோடு ஒப்புரவாக்க (2 கொரி 5:19)
2. பாவ மனிதனை நீதிமானாக்க (ரோமர் 4:25)
3. பாவ மனிதனை மீட்டுக்கொள்ள (1 பேதுரு 1:18,19)
4. பாவ மனிதன் தேவன்மேல் நம்பிக்கை வைக்கும்படியாக (1 பேதுரு 1:21)

கிறிஸ்து மரித்தார் என்பதும் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து இன்று பிழைத்திருக்கிறார் என்பதும் சரித்திர ரீதியான உண்மைகள். இவ்வாறு அவர் மரித்து உயிர்த்தெழுந்ததின் நோக்கம் என்ன? தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள ஒரே மத்தியஸ்தர் என்ற முறையில் மரித்தோர் மேலும் ஜீவனுள்ளோர் மேலும் அதிகாரமுள்ளவராகும்படிக்கே அவர் மரித்து உயிர்த்தெழுந்தார். மரணத்திற்கும், பாதாளத்துக்குமுரிய திறவுகோல்களைப் பெறும்படியாகவே அவர் மரித்து உயிர்த்தெழுந்தார். பத்மு தீவிலே யோவானுக்குத் தன்னை வெளிப்படுத்திய கிறிஸ்து சொல்கிறார்: "மரித்தேன், ஆனாலும், இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென், நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்;" (வெளி 1:18). கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்நாட்களில் மாத்திரமல்ல, நம்முடைய மரணத்துக்குப் பின்னும் நம்மேல் அவருக்கு அதிகாரம் உண்டு.

கிறிஸ்து நமக்காக மரித்து, எழுந்து பிழைத்திருக்கிறபடியால் நம்முடைய ஆண்டவராக இருக்கிறார் என்கிறார் பவுல். அவர் நம்முடைய இரட்சகர் என்பது மட்டுமல்ல, நம்முடைய ஆண்டவர். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் அவர் ஆளுகிறார். ஒரு கிறிஸ்தவனை தேவன் ஆண்டு கொண்டிருக்கிறார் என்று சொல்லும்போது அந்த சகோதரனை நியாயந்தீர்க்க நமக்கு அதிகாரம் இல்லை என்பது தெளிவாகிறது. கிறிஸ்துவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்குகொண்டிருக்கும் ஒரு மனிதன் அவர் ஒருவருக்கே பதில்சொல்ல கடமைப்பட்டிருக்கிறான்.

ஜீவனுள்ளோருக்கு மட்டுமல்ல, மரித்தோருக்கும் அவர் ஆண்டவராக இருக்கிறார். மத்தேயு 22:31,32ல் இயேசு சொல்லுகிறார்: "நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று தேவனால் உங்களுக்கு உரைக்கப்பட்டிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையா? தேவன்

மரித்தோருக்குத் தேவனாயிராமல், ஜீவனுள்ளோருக்குத் தேவனாயிருக்கிறார்". ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய முற்பிதாக்கள் மரித்துவிட்டார்கள் - ஆனாலும் அவர்களுக்கும் அவர் தேவனாய் இருக்கிறார் என்பது அவர்கள் ஒரு வித்தியாசமான பரிமாணத்தில் ஜீவனோடு இருக்கிறார்கள் என்பதையே காட்டுகிறது. அவர்களுக்கும் அவர் ஆண்டவராக இருக்கிறார். "கிறிஸ்துவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்" (பிலிப் 2:10) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து சொல்கிறார்: "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" (மத் 28:18), "அவர் எல்லாருக்கும் கர்த்தர்" (அப் 10:36).

பவுல் இந்த வேத பகுதியில் அறிவிக்கும் சத்தியம் இதுதான். கிறிஸ்து மரித்து எழுந்து பிழைத்திருக்கிறார் என்பது நாம் அறிக்கையிடவேண்டிய மூல உபதேசம். திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய இயேசுகிறிஸ்து, பரிசுத்த ஆவியினால் உற்பத்தியாகி, மரியாளின் வயிற்றில் ஒரு மனிதனாகப் பிறந்து, மனித இனத்தின் பாவங்களை கல்வாரி சிலுவையில் தன்மேல் ஏற்றுக்கொண்டு, அதன் விளைவாக மரித்தார். மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். தான் வழங்கிய இலவசமான இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்களை நியாயந்தீர்க்கும்படியாக மீண்டும் வருவார். இந்த சத்தியத்தை ஏற்றுக்கொண்டவர்கள் யாவரும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகிறார்கள். இவர்களிடம் எதைப் புசிப்பது, எதைப் புசியாதிருப்பது, எதை அனுசரிப்பது, எதை அனுசரியாதிருப்பது என்று கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் இதினிமித்தம் திருச்சபையில் பிரிவினைகள் உண்டாக வேண்டியதில்லை.

இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே. (ரோமர் 14:10)

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மை பலமுள்ளவர்களாக நினைத்துக்கொண்டு இரண்டு காரியங்களைச் செய்கிறோம்.

1. நம் சகோதரர்களை குற்றவாளியென்று நியாயந்தீர்க்கிறோம்.
2. அப்படி அவர்களை வெளிப்படையாக நியாயந்தீர்க்க நம்மிடம் துணிவு இல்லாவிட்டால் அவர்களை நம்

மனதில் அற்பமாக எண்ணி திருப்தியடைகிறோம்.

நியாயப்பிரமாணம் தடைசெய்யும் தீட்டான உணவுகளைச் சாப்பிடுவது தவறு என்ற நம்பிக்கையில் அதைச் சாப்பிடுகிறவர்களைக் குற்றப்படுத்தும் பலவீனனும் தவறு செய்கிறான். உணவு வகைகளைக் குறித்த நியாயப்பிரமாணத்துக்கு விதிமுறைகள் கிறிஸ்துவின் மரணத்துக்குப் பின் இல்லாமல் போய்விட்டது என்ற சத்தியத்தை அறிந்ததின் விளைவாக, எதையும் சாப்பிட எனக்கு விடுதலை உண்டு என்று விசுவாசிக்கும் முதிர்ந்த விசுவாசி இதைக் குறித்த நம்பிக்கையற்ற பெலவீன சகோதரனை அற்பமாக நினைத்து தவறு செய்கிறான் என்கிறார் பவுல். ஒருவேளை இந்த முதிர்ந்த விசுவாசி மற்றவனைக் குற்றப்படுத்தாவிட்டாலும் அவனை மட்டமாக நினைத்து ஒதுக்கிவைக்கிறான். இருதரத்தாறுமே தவறு செய்கிறார்கள் என்கிறார் பவுல்.

இவ்வாறு குற்றப்படுத்துவதும் தவறு, வெறுப்பதும் தவறு என்பதை நிரூபிக்க ஒரு புதிய காரணத்தை பவுல் இதே வசனத்தில் அறிவிக்கிறார். இந்த இருதரத்து மனிதர்களுமே தேவனுடைய வேலைக்காரர்கள் என்பது ஒரு காரணமாக ஏற்கனவே சொல்லப்பட்டதைப் பார்த்தோம். இந்த வசனத்தில் இருதரத்தாருமே தங்களைக் குறித்த கணக்கை ஒப்புவிக்கும்படியாக கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன்பாக நிற்கவேண்டியதிருக்குமே என்கிறார். பிரசங்கி 12:14 சொல்கிறது: "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்". தேவன் நம்மை நியாயத்திலே கொண்டுவருகிறவராயிருக்க ஒருவரை ஒருவர் நம்மை நாமே நியாயந்தீர்க்க முயற்சிப்பது பாவம் என்கிறார். உண்மையில் அது நம்முடைய மனமேட்டிமையையும், பெருமையையும், அறியாமையையும் வெளிப்படுத்துகிறது.

மத்தேயு 16:27 சொல்கிறது : "மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்". சங்கீதம் சொல்கிறது: "அவர் வருகிறார், அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; அவர் பூலோகத்தை நீதியோடும், ஜனங்களைச் சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார்" (96:13). "அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; பூலோகத்தை நீதியோடும், ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்" (98:9). "பிதாவைக் கனம்பண்ணுகிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்படிக்கு, பிதாவானவர்தாமே ஒருவருக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம்

முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்" (யோவான் 5:22). பவுல் சொல்கிறதுபோல, "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்" (அப் 17:31).

ஏழு வகையான நியாயத்தீர்ப்புகளைக் குறித்து வேதம் பேசுகிறது.

1. விசுவாசிகளின் பாவங்கள் நியாயந்தீர்க்கப்படுதல். இது கல்வாரி சிலுவையில் நிறைவேறி முடிந்தது. (யோவான் 12:31,32).

2. விசுவாசிகள் தங்களைத்தாங்களே நியாயந்தீர்த்துக் கொள்தல் (1 கொரி 11:31,32). கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும்போது இது நடைபெறுகிறது.

3. கிறிஸ்துவின் சிங்காசனத்தின்முன் நியாயத்தீர்ப்பு (2 கொரி 5:10; 1 கொரி 3:11-15). விசுவாசிகள் தங்கள் கிரியைகளுக்கேற்ற பலனைப் பெறுகிறார்கள்.

4. தேசங்களை கிறிஸ்து நியாயந்தீர்த்தல் (மத் 25:32-46) இது ஆயிரவருட அரசாட்சிக்கு முன் நடைபெறும்.

5. இஸ்ரவேல் நியாயந்தீர்க்கப்படுதல் (எசேக் 20:34-44) இது கிறிஸ்துவின் இரண்டாவது வருகையில் நடைபெறும்.

6. தேவதூதர்கள் நியாயந்தீர்க்கப்படுதல் (யூதா 6) இதுவும் கிறிஸ்துவின் வருகையின்போதுதான் நடைபெறும்.

7. வெள்ளை சிங்காசன நியாயந்தீர்ப்பு (வெளி 20:11-15) ஆயிரவருட அரசாட்சியின் முடிவில் எல்லா துன்மார்க்கர்களும் ஆக்கினைத் தீர்ப்படைவார்கள்.

பொதுவான நியாயத்தீர்ப்பு ஒன்று உண்டு என்பதை பிர 12:14, எபே 6:7, வெளி 20:11-15 அறிவிக்கின்றன. தேவ சமுகத்தில் எல்லா மனிதர்களும் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். (அல் 10:42, 1 கொரி 3:8-15; 4:5, 2 கொரி 5:10). இயேசுவும் நியாயத்தீர்ப்பு நாளைக்குறித்து பேசுகிறார். (மத் 16:27; 25:31-46). கிறிஸ்து மூலமாகவே நியாயத்தீர்ப்பு நடைபெறுகிறது (மத் 16:27; 25:31-46, யோவான் 5:22 அப் 10:42, 1 கொரி 4:5, 2 கொரி 5:10).

நாம் தியானிக்கும் வசனத்தில் கிறிஸ்துவின் சிங்காசனத்து நியாயத்தீர்ப்பைப்பற்றி மட்டுமே பவுல் குறிப்பிடுகிறார். இது கிறிஸ்துவை இரட்சகராகவும் ஆண்டவராகவும் அறிந்து ஏற்றுக்கொண்டவர் களுக்குரியது. இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன்பாக நிற்பார்கள். "என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே" (1 கொரி 4:4) என்று பவுல் இந்த நியாயத்தீர்ப்பைப் பற்றி குறிப்பிடுவதைக் கவனியுங்கள்: "நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே (கிறிஸ்துவின் நியாயாசன தீர்ப்பு நாளிலே) அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோ 4:8).

எனவே கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவின் கரத்திலிருந்து பரிசுகளையும் வெகுமானங்களையுமே பெற்றுக்கொள்ளவிருக்கிறோம் என்பதை அறிந்துகொள்ளுங்கள். அதனால்தான் பவுல் 2 கொரி 5:10ல் சொல்கிறார்: "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் (பவுல் உட்பட எல்லா கிறிஸ்தவர்களும்) கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்". இவர்களில் ஒருவரும் ஆக்கினைத்தீர்ப்பைப் பெறுவதில்லை. வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு முற்றிலுமாக வித்தியாசமானது (வெளி 20:11-15). ஆதாம் காலம் துவங்கி உபத்திரவ காலத்தின் முடிவுவரையுள்ள சகல துன்மார்க்கர்களும் ஆயிர வருட அரசாட்சிக்குப்பின் வெள்ளை சிங்காசனத்துக்கு முன்பாக நிறுத்தப்பட்டு அத்தனைபேருமே ஆக்கினைத்தீர்ப்பை மட்டுமே பெறுவார்கள். அக்கினிக்கடலில் தள்ளப்படுவார்கள். இதுவே இரண்டாவது மரணம் என்று அழைக்கப்படுகிறது (வெளி 20:6).

1 கொரிந்தியர் 3:11-15 வாசித்து கிறிஸ்துவின் நியாயாசன நியாயத்தீர்ப்பைக் குறித்து அறிந்துகொள்ளுங்கள். இரட்சிக்கப்பட்ட ஒரு மனிதனின் அஸ்திபாரம் கிறிஸ்து. ஒரு கட்டிடத்தில் அஸ்திபாரம் போடுவதோடு பணி முடிந்துவிடுவதில்லை. அந்த மனிதனுடைய கிரியைகள் ஒவ்வொன்றும் அந்த அஸ்திபாரத்தின்மேல் எழுப்பப்படும் கட்டிடத்தின் பகுதிகள். அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல் ஆகியவற்றால், அதாவது நற்கிரியைகளினால் கட்டடங்கள் கட்டுபவர்கள் உண்டு. மரம், புல், வைக்கோலினால் வீடு கட்டப்படுவது என்பது அவர்களுடைய துர்க்கிரியைகளைக் குறிப்பிடுகிறது. கிறிஸ்துவின் சிங்காசனத்திற்கு முன் பரிசுத்த

ஆவியானவராகிய அக்கினி ஒவ்வொரு கிரியைகளையும் சோதிக்கிறது. "அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும், அதின்மேல் ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்" (வசனம் 13:15). அவனுடைய இரட்சிப்பில் பாதிப்பு ஏற்படுவதில்லை என்பதைக் கவனியுங்கள்.

அவர்களுடைய கிரியைகளுக்கேற்ற பிரதிபலனை அவர்கள் அடைவார்கள். தேவன் ஏற்றுக்கொள்ளாத கிரியைகளை நடப்பிப்பவர்கள் குறைவான பிரதிபலனை அடைவார்கள் என்றாலும் அவர்கள் தங்களுடைய அஸ்திபாரத்தினிமித்தம் காப்பாற்றப்படுவார்கள். அக்கினியிலிருந்து தப்பி வந்தாற்போன்ற ஒரு நிலையை அவர்கள் அடைவார்கள். யோவான் 5:24ன் படி அவர்களுக்கு நிச்சயமாக ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. ஏனென்றால் கிறிஸ்துவை முழுமனதோடு விசுவாசித்து ஏற்றுக்கொண்டவர்களைப் பொறுத்தவரை சகல பாவங்களும் (இரட்சிக்கப்படுவதற்கு முன்பு செய்தவைகளும் பின்பு மரணநாள் வரை செய்தவைகளும்) கல்வாரி சிலுவையில் கிறிஸ்துவில் ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று. அவை மீண்டுமாக கிறிஸ்துவின் நியாயாசனத்தில் எழுப்பப்படுவதில்லை.

அந்தப்படி: முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் தேவனை அறிக்கைபண்ணும் என்று என் ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. (ரோமர் 14:11)

நாமெல்லாரும் ஒருநாளில் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டும் என்பதை நிரூபிக்கும்படியாக பழைய ஏற்பாட்டிலிருந்து ஆதாரமாக ஒரு வசனத்தை பவுல் உபயோகப்படுத்துகிறார். "முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், நாவு யாவும் என்னை முன்னிட்டு ஆணையிடும் என்று நான் என்னைக் கொண்டே ஆணையிட்டிருக்கிறேன்; இந்த நீதியான வார்த்தை என் வாயிலிருந்து புறப்பட்டது; இது மாறுவது இல்லையென்கிறார்" (ஏசாயா 45:23). சத்தியத்துக்கடுத்த சகல உபதேசங்களும் வேத வசனங்களை மட்டுமே ஆதாரமாகக் கொண்டிருக்கவேண்டும். அதனால்தான் "எழுதியிருக்கிறது" என்று இந்த வசனம் முடிவடைகிறது. **தேவ ஊழியர்கள் வசனத்தை மட்டுமே பிரசங்கிக்கவேண்டும். தங்களுடைய தனிப்பட்ட அனுபவங்களையும், கருத்துக்களையும் அல்ல. வசனத்தைப் பிரசங்கிக்கும்போது மட்டுமே சபையோடு தேவன் பேசுவார்.**

தேவனுக்கு முன்பாக சகலரின் முழங்கால்களும் ஏன் முடங்கவேண்டும் என்பதற்கும், நாவுகள் ஏன் அவரை அறிக்கையிடவேண்டும் என்பதற்கும் காரணம் அடுத்த வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையைப்பற்றி தேவனுக்கு கணக்கு ஒப்படைக்கவேண்டிய கட்டாயத்துக்குள் இருக்கிறான். சரீர ரீதியாக ஒருவன் தேவ சமுகத்தில் முழங்கால்படியிட்டால் போதாது. நம்முடைய உள்ளான இருதயமும் முழங்கால்படியிடவேண்டும். அவ்வாறு நம் இருதயம் தேவசமுகத்தில் தன்னைத் தாழ்த்தியிருக்கிறதா என்பதை நாவின் அறிக்கை உறுதிப்படுத்தும். "இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்" (மத் 12:34) என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிலிப்பியர் 2:10,11ல் இவ்வாறு வாசிக்கிறோம்: "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". சங்கீதம் 22:27,28, ஏசாயா 66:23, வெளி 15:4 வாசித்துப்பாருங்கள்.

தான் சொல்வது சத்தியமானது என்பதை உறுதிப்படுத்த தன் ஜீவனைக்கொண்டு உரைப்பதாக தேவன் ஆணையிட்டுச் சொல்கிறார். இந்த வார்த்தை எண் 14:28, உபா 32:40 ஆகிய இடங்களிலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆணையிடுகிறவர்கள் பொதுவாக தங்களுடைய ஜீவனைக்கொண்டும் (1 சாமு 1:26; 20:3, 2 இராஜா 2:2), அதிபதிகளின் ஜீவனைக்கொண்டும் (1 சாமு 1:26; 25:26) ஆணையிடுபவர்களின் சிரசைக்கொண்டும் (மத் 5:36), பூமியைக்கொண்டும் (மத் 5:35), வானத்தைக்கொண்டும் (மத் 5:34; 23:22), தேவாலயத்தைக் கொண்டும் (மத் 23:16) ஆணையிடுவதைப் பார்க்கிறோம். தான் அறிவிக்கும் காரியம் உண்மையானது என்பதை உறுதிப்படுத்தும்படியாக ஆணையிடும் பழக்கம் இருந்துவந்திருக்கிறது. தேவன் ஏன் ஆணையிடவேண்டும் என்ற கேள்விக்கு பதில் எபிரெயர் 6:13-19ல் சொல்லப்பட்டிருக்கிறது, வாசியுங்கள்.

கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்கப்போவது உறுதி. அப்படியிருப்பதால் ஒரு கிறிஸ்தவ சகோதரன் நமக்கு எதிராக தவறாக பேசினாலோ, அல்லது செயல்பட்டாலோ பதிலுக்குப் பதில் எதுவும் செய்யாமல் காத்திருக்கும்போது, நீதியுள்ள நியாயாதிபதியாக கிறிஸ்து எல்லாவற்றையும் நீதியாக நியாயந்தீர்ப்பார். அதுவரை பொறுமையோடு இருக்கும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார்.

ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். (ரோமர் 14:12)

"நம்மில் ஒவ்வொருவனும்" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தேவனுடைய நியாயத்தீர்ப்பில் இருந்து எந்த ஒரு மனிதனாலும் தப்பித்துக் கொள்ளமுடியாது. ஒருவன் சாதாரண விசுவாசியாக இருக்கலாம், அல்லது உலகம் புகழும் ஊழியக்காரனாக இருக்கலாம். ஒரு சாதாரண போதகனாக இருக்கலாம், அல்லது அபிஷேகிக்கப்பட்ட பிஷப்பாக இருக்கலாம். யாராயிருந்தாலும் சரி, தேவசமுகத்தில் தங்களைக் குறித்து கணக்கு ஒப்புவித்தே ஆகவேண்டும். நம்முடைய கிரியைகளைக் குறித்து, ஒருவேளை நற்கிரியைகளையே செய்திருந்தாலும் அவற்றின் நோக்கங்களைக் குறித்து, நம்முடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து, இருதயத்தின் சிந்தனைகளைக் குறித்தும், நமக்கு அருளப்பட்ட கிருபை வரங்களை எவ்வாறு பயன்படுத்தினோம் என்பதைக் குறித்தும், நம்முடைய நேரத்தை எவ்வாறு செலவு செய்தோம் என்பதைக் குறித்தும் கணக்கு ஒப்புவிக்கவேண்டும் (1 கொரி 3:11-15, 2 கொரி 5:10).

நாம் யாரைக் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதைக் கவனியுங்கள். நம்முடைய சகோதரர்களைப் பற்றி அல்ல, நம்முடைய அயலார்களைப் பற்றி அல்ல, நம்முடைய விசுவாசிகளைப் பற்றி அல்ல, நம்மைக் குறித்தே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். பவுல் சொல்கிறார்: "அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப் பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும்போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டாகும். அவனவன் தன்தன் பாரத்தைச் சுமப்பானே" (கலா 6:4,5). "நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1 கொரி 11:31). யோபு சொல்கிறார்: "நான் தப்பி நடந்தது மெய்யானாலும், என் தப்பிதம் என்னோடே தான் இருக்கிறது" (19:4). எரேமியா 31:30ல் "அவனவன் தன்தன் அக்கிரமத்தினிமித்தமே சாவான்; எந்த மனுஷன் திராட்சக்காய்களைத் தின்பானோ அவனுடைய பற்களே கூசிப்போகும், பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல் தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல் தான் இருக்கும்" (எசேக் 18:20). மோசே சொல்கிறார்: "பிள்ளைகளுக்காகப் பிதாக்களும், பிதாக்களுக்காகப் பிள்ளைகளும் கொலை செய்யப்படவேண்டாம்; அவனவன் செய்த பாவத்தினிமித்தம் அவனவன் கொலை செய்யப்படவேண்டும்" (உபா 24:16).

நாம் எவற்றைக்குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்பதை சில வேத வசனங்கள் அறிவிக்கின்றன.

1. நம்முடைய வாயின் வார்த்தைகளைக் குறித்து (மத் 12:36)
2. நம்முடைய தாலந்துகளையும் திறமைகளையும் எவ்வாறு செலவுசெய்தோம் என்பதைக் குறித்து (லூக்கா 16:2)
3. நம்முடைய ஐசுவரியங்களை எவ்வாறு செலவு செய்கிறோம் என்பதைக் குறித்து (1 தீமோ 6:10)

யாருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும் இந்த வசனம் திட்டவட்டமாக அறிவிக்கிறது. நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு அல்ல, நம்முடைய பெற்றோர்களுக்கு அல்ல, நம்முடைய சபைக்கு அல்ல, தேவனிடமே கணக்கு ஒப்புவிக்கவேண்டும். கணக்கு ஒப்புவிப்பது என்று பவுல் சொல்வது இந்த வசனத்தில் கிறிஸ்துவின் சிங்காசனத்துக்கு முன்பாக நிற்பதையே குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். கிறிஸ்தவர்களாகிய நம்முடைய பாவங்களை கிறிஸ்துவின் இரத்தம் கழுவி சுத்தப்படுத்தியிருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும் மேலும் பாவம் செய்து கிறிஸ்தவ வாழ்க்கை என்ற கட்டிடத்தை பிரயோஜனமற்ற மரம், புல் மற்றும் வைக்கோல் கொண்டு கட்டும் துணிகரம் நம்மில் உண்டாகக்கூடாது என்பதையே பவுல் வலியுறுத்துகிறார்.

கிறிஸ்துவுக்குள் விடுதலை (வசனம் 13-23)

இப்படியிருக்க, நாம் இனிமேல் ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக, ஒருவனும் தன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடலாகாதென்றே தீர்மானித்துக்கொள்ளுங்கள். (ரோமர் 14:13)

"இப்படியிருக்க" என்று இந்த வசனம் துவங்குகிறது. நாம் எல்லாருமே கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டியதிருக்க என்று பொருள் கொள்ளவேண்டும். இந்த வசனத்திலிருந்து அதிகாரத்தின் இரண்டாவது பகுதி ஆரம்பமாகிறது. முதல் 12 வசனங்களில் பலவீனருக்கு கூடுதலாக ஆலோசனை வழங்கி வந்த பவுல் இந்த வசனம் துவங்கி அதிகாரத்தின் முடிவு வரை (வசனம் 13-23) பலமுள்ள விசுவாசிகளுடன் இடைபட ஆரம்பிக்கிறார். விசுவாசத்தில்

தேர்ச்சிபெற்ற, முதிர்ச்சி அடைந்த விசுவாசிகள் பலவீனர்களை அன்போடும், இரக்கத்தோடும் தாங்கவேண்டும் என்பதை பவுல் வலியுறுத்துகிறார். நாம் ஒரே சரீரத்தின் வித்தியாசமான அவயவங்கள் என்பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இரட்சிப்பின் மேன்மையை அறிந்துகொள்ளாததனாலேயே, நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்க துணிகரம் கொள்கிறோம். நாம் எதையோ செய்கிறோம் என்பதாலேயோ, எதையோ செய்யாதிருக்கிறோம் என்பதாலேயோ நம்மை தேவன் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கவில்லை, **கிறிஸ்து கல்வாரி சிலுவையில் என்ன செய்தார் என்பதிலேயே இரட்சிப்பின் மேன்மை அடங்கியிருக்கிறது.** இதை சரிவர உணர்ந்துகொண்டால் மற்றவர்களை நியாயந்தீர்க்கவும் மாட்டோம், அவர்களுக்கு முன்பாக தடுக்கலையும் இடறலையும் போடவும் மாட்டோம்.

மற்றவர்கள் பாவத்தில் விழும் வகையில் நாம் எதையுமே செய்துவிடக்கூடாது - அவ்வாறு செய்யமாட்டேன் என்று தீர்மானம் எடுத்துக்கொண்டு செயல்படும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். தடுக்கலையும், இடறலையும் போடுகிற வேதபாரகரையும், பரிசேயரையும் குறித்து கிறிஸ்து சொல்கிறார்: "உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை" (மத் 23:13). எனவே யாருக்கும் இடறலாக நாம் அமைந்துவிடாதபடி மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும். "எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" (மத் 18:7) என்று சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் சொல்கிறார்: "எவ்விதத்திலும் பலவீனருக்குத் தடுக்கலாகாதபடிக்குப் பாருங்கள்" (1 கொரி 8:9).

'தடுக்கல்' என்பது பொதுவாக யுத்த நாட்களில் எதிரி ராணுவ வீரர்கள் வரக்கூடிய பாதைகளில் அவர்கள் வரும்போது அவர்களை விழத்தட்டும்படி மறைவான முறையில் வைக்கப்படும் தளவாடங்களைக் குறிப்பிடுகிறது. **நம்முடைய பேச்சு, நடத்தை, ஞானம் மட்டுமல்ல, நாம் செயல்படுத்தும் கிருபை வரங்கள்கூட மற்றவர்கள் இடறலடையக் காரணமாக இருக்கக்கூடாது.** கிறிஸ்து சொல்லியிருக்கிறார்: "இடறல்கள் வராமல் போவது கூடாத காரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ! அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டுபோவது அவனுக்கு நலமாயிருக்கும்" (லூக்கா 17:1,2).

"நியாயந்தீர்க்காதிருங்கள்" என்ற பவுலின் அறிவுரை மீண்டுமாக கிறிஸ்துவின் மலைப்பிரசங்க உபதேசங்களை நினைவுபடுத்துகிறது. கிறிஸ்து சொல்கிறார்: "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்" (மத் 7:1-5).

ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயத்திருக்கிறேன்; ஒரு பொருளைத் தீட்டுள்ளதென்று எண்ணிக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு அது தீட்டுள்ளதாயிருக்கும். (ரோமர் 14:14)

ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்ல என்ற அறிக்கை இந்த வசனத்தில் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வெளிப்படுகிறது. அதாவது எந்த உணவையும் உண்ணத்தகாதது என்று சொல்லமுடியாது. ஒரு விசுவாசி ஒரு குறிப்பிட்ட உணவை சாப்பிடுவது தவறு என்று நம்புவாரானால் மட்டுமே அது அவருக்குத் தீட்டுள்ளது ஆகும் என்கிறார் பவுல். இந்த அறிவிப்பு நூற்றுக்கணக்கான நியாயப்பிரமாண விதிமுறைகளுக்கு எதிராக மிகவும் வெளிப்படையாகக் காணப்படுகிறது. இதினிமித்தம், தான் மிகுந்த எதிர்ப்புகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பதை அறிந்தவராய் தான் அறிவிக்கும் சத்தியம் உண்மையானது என்பதை கிறிஸ்துவுக்குள் தான் அறிந்து நிச்சயித்திருப்பதாகச் சொல்கிறார். கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசி பெற்றிருக்கும் விடுதலை என்ன என்பதையும் அதை அவன் எவ்வாறு செயல்படுத்தவேண்டும் என்பதையும் பவுல் இந்த வேதபகுதியில் அறிவிக்கிறார்.

லேவியர் 11:4-8,10-20,23,26-31,41-43 ஆகிய வசனங்கள் இஸ்ரவேலருக்கு தீட்டான மிருக ஜீவன்கள், பறவை இனங்கள் என்ன என்பதைக் குறிப்பிடுகின்றன. தேவன் திட்டவட்டமாக அறிவிக்கிறார்: "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர், நான் பரிசுத்தர்; ஆகையால், தரையில் ஊருகிற எந்தப்பிராணிகளிலும் உங்களைத் தீட்டுப்படுத்தாமல், உங்களைப்

பரிசுத்தமாக்கிக்கொண்டு, பரிசுத்தராயிருப்பீர்களாக" (லேவி 11:44) உபாகமம் 14:1-19லும் தீட்டான மிருக ஜீவன்களைக் குறித்த நீண்ட பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. "அருவருப்பானதொன்றையும் புசிக்கவேண்டாம்" (உபா 14:3) என்ற திட்டவட்டமான ஆணை மோசே மூலமாக வெளிப்படுகிறது. ஆதி அப்போஸ்தலர்களுடைய நாட்களில்கூட அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் பேசி முடிவுசெய்து, "நெருங்குண்டு செத்தவை, இரத்தம்" (அப் 15:20,29) ஆகிய இரண்டும் தீட்டானவைகள் என்று அறிவித்து இவைகளுக்கு சபை விலகியிருக்கவேண்டும் என்று தீர்மானித்தது.

அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் பிரமாணம் என்ன சொல்கிறது என்பதையும், அதின்படி எதுவுமே தீட்டானதல்ல என்றும் சபைக்கு அறிவிக்கிறார். பாவத்தின் விளைவாக சகல சிருஷ்டியும் சாபத்தை ஏற்றுக்கொண்டது என்பதினால் சில காரியங்கள் விலக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால் கிறிஸ்துவின் மரணம் சகல சாபங்களுக்கும் நிரந்தரமான முடிவைக் கொண்டுவந்தது. இனி எந்தப் பொருளும் தீட்டானது என்று சொல்லமுடியாது. கிறிஸ்துவின் பிரமாணம் என்ன என்பதை மாற்கு 7:14-23 வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

"மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது; அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும்" (மாற்கு 7:15). "எப்படியெனில் மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும்" (வசனம் 21,22). மத்தேயு 15:10, 11, 16-20 வாசித்துப்பாருங்கள்.

மத்தேயு 15:11ல் கிறிஸ்து சொல்கிறார் : "வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்". இந்த புதிய பிரமாணத்தின் அடிப்படையில், "தேவன் சுத்தமாக்கினவைகளை நீ தீட்டாக எண்ணாதே" (அப் 11:9) என்று பேதுருவுக்கு அறிவிக்கப்பட்டது அப் 11:5-10 வாசித்துப்பாருங்கள். பலமுறை சொல்லப்பட்டும், அப்போஸ்தலனாகிய பேதுருவினாலேயே இதை உடனடியாக ஏற்றுக்கொள்ள முடியவில்லையே (அப் 10:12-15). வேதம் திட்டவட்டமாகச் சொல்கிறது: "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1 தீமோ 4:4).

யாராவது ஒரு பொருளை அல்லது காரியத்தை தீட்டானதாக தன்னுடைய மனதிலே தீர்மானம் பண்ணினால் மட்டுமே அது அந்த மனிதனுக்கு தீட்டாகிறது என்கிறார் பவுல். ஏதேனும் ஒரு செயலை பாவமாக நாம் கருதுவோமானால் அது ஒரு நற்கிரியையாக இருந்தாலும்கூட நமக்கு பாவமாகிறது. தீத்து 1:15ல் பவுல் சொல்வதுபோல்: "சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும்". இதன் அடிப்படையில் நாம் செய்கிற ஒரு காரியத்தை தேவன் விரும்பமாட்டார் என்று நாம் நம் உள்ளான மனதில் நினைப்போமானால், அதைச் செய்யாதிருப்பதே நலமானது. அவ்வண்ணமாகவே அறியாமையில் இருக்கும் ஒரு கிறிஸ்தவ விசுவாசியை போதித்து வழிநடத்துவது நம்முடைய கடமைதான் என்றாலும், தேவனுடைய சித்தமல்ல என்று அவர்கள் தங்கள் மனதில் முடிவுசெய்திருக்கும் ஒரு காரியத்தை அவர்கள் செய்யும்படியாக அவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது.

"கர்த்தராகிய இயேசுவுக்குள் அறிந்து நிச்சயித்திருக்கிறேன்" என்று பவுல் அறிவிப்பதைக் கவனியுங்கள். பவுல் அறிவிக்கும் காரியம் அவருடைய தனிப்பட்ட ஆலோசனை அல்ல. கிறிஸ்துவின் வெளிப்படையான அறிவிப்பின் ஆதாரத்தில் பவுல் பேசுகிறார் (மாற்கு 7:15, மத் 15:11, 15-20). நான்கு சுவிசேஷங்களுமே பவுலின் நிருபங்கள் எழுதப்பட்டபின்புதான் சுவிசேஷகர்களினால் எழுதப்பட்டன என்றாலும் தான் அறிவிக்கும் சத்தியங்களை கிறிஸ்துவே போதித்தார் என்ற நிச்சயம் பவுலிடம் இருந்தது. எனவேதான், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயத்துமிருக்கிறேன்" (2 தீமோ 1:12) என்கிறார்.

போஜனத்தினாலே உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்கினால், நீ அன்பாய் நடக்கிறவனல்ல; அவனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே, கிறிஸ்து அவனுக்காக மரித்தாரே. (ரோமர் 14:15)

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துகிறவர்களாக இருக்கவேண்டும் என்பதையும் (ரோமர் 12:9-13), நியாயாதிபதிகளாக மாறிவிடக்கூடாது என்பதையும் (ரோமர் 14:3) பார்த்தோம். நம்முடைய சகல உறவுமுறைகளிலும் சகோதர அன்பு ஆளுகை செய்யவேண்டும் என்பதை பேதுருவும் (1 பேதுரு 4:8),

யோவானும் (1 யோவான் 4:8) வலியுறுத்துகிறார்கள்.அந்த சகோதர அன்பின் நிமித்தம் உன் சகோதரனின் நம்பிக்கையை குலைக்காதே என்கிறார் பவுல். சில உணவு வகைகளைச் சாப்பிடுவது தவறு என்று அவன் தன்னுடைய குறைவான விசுவாசத்தினிமித்தம் நினைக்கிறான். அவனுக்கு முன்பாக நீ அவைகளைச் சாப்பிட்டு அவன் கொண்டிருக்கும் நம்பிக்கையை அழித்துப் போடாதே என்கிறார். ஏனென்றால் இந்தப் பெலவீனமான சகோதரன் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீனமான நிலைமை என்ன என்பதை (கலா 5:1) அறிந்துகொள்ளவில்லை என்றாலும், தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றவன். கிறிஸ்து அவனுக்காகவும் மரித்தாரே என்கிறார் பவுல்.

"அவனை உன் போஜனத்தினால் கெடுக்காதே" என்று பவுல் சொல்லுவதைக் கவனியுங்கள். கெடுக்காதே என்ற வார்த்தை நித்திய அழிவைக் குறிக்கிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள் (மத் 18:14, லூக்கா 9:25; 13:3, யோவான் 3:16; 10:28, ரோமர் 2:12, 1 கொரி 8:11; 15:18, 2 கொரி 4:3). நீ சாப்பிடும் உணவு உன்னுடையது தான். அதை நீ விரும்புகிறபடி சாப்பிட உண்மையில் உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அதை நீ சாப்பிடுவதன் மூலமாக பாதிக்கப்படும் ஆத்துமா கிறிஸ்துவினுடையது. தன் இரத்தத்தைச் சிந்தி அதை அவர் சத்துருவின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக் கொண்டிருக்கிறார். அப்படியிருக்க உன்னுடைய உணவினிமித்தம் அந்த ஆத்துமா இடறலடைகிறது என்றால் அதினிமித்தம் தேவனே விசனமடையப்போகிறார். 20-வது வசனத்தில் பவுல் இன்னும் தெளிவுபட சொல்கிறார்: "போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப் போடாதே". போஜனத்தைக் குறித்த முழுமையான ஆலோசனை 1 கொரிந்தியர் 10:27-31ல் கொடுக்கப்பட்டிருக்கிறது.

"அவிசுவாசிகளில் ஒருவன் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, போக உங்களுக்கு மனதிருந்தால், மனச்சாட்சியினிமித்தம் ஒன்றையும் விசாரியாமல், உங்கள்முன் வைக்கப்படுகிற எதையும் புசியுங்கள். ஆயினும் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதென்று ஒருவன் உங்களுக்குச் சொன்னால், அப்படி அறிவித்தவனிமித்தமும், மனச்சாட்சியினிமித்தமும் புசியாதிருங்கள்" (வசனம் 27, 28) புசிப்பது தவறல்ல, பாவமல்ல. ஆனால் இது விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டது என்று அறிவிக்கும் விசுவாசி அதைத் தவறாக நினைக்கிறான். அவனுடைய ஆத்துமாவை மனதில் கொண்டு புசியாதிருங்கள் என்கிறார் பவுல்.

"என் சகோதரனுக்கு நான் காவலாளியோ" ஆதி 4:9 என்பதுதான்

வேதத்தில் தேவனுக்கு எதிராக எழுப்பப்பட்ட முதல் கேள்வி. அந்தக் கேள்வி உலகின் முதலாவது கொலைகாரனிடமிருந்து வருகிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் வித்தியாசமான அங்கங்கள் என்ற முறையில் சகவிசுவாசிகள் எந்தவிதத்திலும் பாதிப்படையாதபடி பாதுகாத்துக் கொள்வது நம்முடைய கடமையாகிறது. கிறிஸ்துவின் மரணம் கிறிஸ்தவர்களாகிய நம்மை ஒருவரோடு ஒருவர் பிரிக்கக்கூடாதபடி ஐக்கியப்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளவேண்டும்.

பவுல் சொல்கிறார் : "ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்" (1 கொரி 10:24), "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலிப் 2:4). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பலவீனர்களாகிய பாவிகளிடம் காட்டிய அன்பு எவ்வளவு மேன்மையானது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். நாம் தியானித்த ரோமர் 12:9,10,13,16 மீண்டும் வாசித்துப் பாருங்கள்.

உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். (ரோமர் 14:16)

நல்லவை என்று நாம் நம்பிக்கொண்டிருக்கும் காரியங்கள் உண்மையிலேயே நல்லவைகளாக இருக்கலாம். ஆனால் பெலவீன சகோதரர்கள் இடறலடையும்படியாக நாம் நடந்துகொள்ளும்போது அவை தீமை என்று மற்றவர்கள் அதைப் பழிக்கக்கூடும் என்கிறார் பவுல். உங்களுக்கு நன்மையாயிருப்பது மற்றவர்களுடைய பழிச்சொல்லுக்கு இடந்தராதிருப்பதாக என்கிறார். **கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் விடுதலை நம்முடைய சகோதரர்களை பலவீனப்படுத்துமானால் அந்த விடுதலையை அனுபவிக்காமலிருப்பதே மேன்மை என்கிறார் பவுல்.**

நன்மை என்று பவுல் குறிப்பிடுவது கிறிஸ்துவுக்குள் ஒருவன் பெற்றுக்கொள்ளும் விடுதலையையும், சுயாதீனத்தையும் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம். பவுல் சொல்கிறார்: "என் சுயாதீனம் மற்றொருவனுடைய மனச்சாட்சியினாலே குற்றமாய் எண்ணப்படவேண்டுவதென்ன? மேலும் நான் அதை ஸ்தோத்திரிப்புடனே அநுபவித்தால், ஸ்தோத்திரித்து அநுபவிக்கிற பொருளைக்குறித்து நான் தூஷிக்கப்படுவானேன்? ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1 கொரி 10:29-31). நம்முடைய கிரியைகள் நீதியானதாகவே இருக்கலாம். ஆனாலும் அவைகளைச் செய்வதினால் தேவன் மகிமைப்படவேண்டுமானால் அதைச் செய்வது நம்முடைய சகோதரனில்

எந்த பாதிப்பையும் உருவாக்கக் கூடாது. அதனால்தான் பவுல், "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது" என்கிறார் (1 கொரி 10:23).

ஒரு காரியத்தை திட்டமாக அறிந்துகொள்ளுங்கள். ஒரு கிரியை தன்னில்தானே நீதியானதாக இருக்கலாம். ஆனால் அதை நடப்பிக்கும் முறையும், அதின் பின்னணியும், சூழ்நிலையும் கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் மகத்துவமான இரட்சிப்பின் மேன்மையை மட்டுப்படுத்துமானால் அந்த நிமிடத்திலேயே அது தவறானதாகிவிடுகிறது. புறக்கணிக்கப்படவேண்டியதாகிறது.

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14:17)

கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்தும்படியாகவும் அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணும்படியாகவும் (மத் 3:3) அனுப்பப்பட்ட யோவான்ஸ்நானன், "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத் 3:2) என்ற பிரசங்கத்தோடுதான் தன்னுடைய ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் காவலில் வைக்கப்பட்டதும் கலிலேயாவில் தன் ஊழியத்தைத் துவக்கிய கிறிஸ்துவும் "மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கிக்கத் தொடங்கினார் என்று மத் 4:17ல் வாசிக்கிறோம். இந்த பிரகடனமே நற்செய்தி அல்லது சுவிசேஷம். **கிறிஸ்துவோடு ஒருவர் ஏற்படுத்தும் தொடர்புமூலம் இந்த அரசாட்சிக்குள் ஒருவர் வருகிறார்.** என் நாமத்தினிமித்தம் (மத் 19:29), தேவனுடைய ராஜ்யத்தின் நிமித்தம் (லூக்கா 18:29) என்ற பதங்களை கிறிஸ்து ஒரே பொருள்படும்படி மாறிமாறி உபயோகிப்பதைக் கவனியுங்கள். மலைப்பிரசங்கத்தில் முதல் உபதேசமாக கிறிஸ்து சொல்கிறார் : "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது" (மத் 5:3).

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து வேதத்தில் பல இடங்களில் பார்க்கிறோம் (1 கொரி 4:20; 6:9; 15:24; எபே 5:5; கொலோ 1:13; 4:11, 1 தெச 1:11, 2 தெச 1:5). பல வசனங்களில் இந்த வார்த்தை எதிர்காலத்தில் ஸ்தாபிக்கப்படவிருக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறிப்பிட்டாலும், சிலவற்றில் தற்போது பூமியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தேவனுடைய இறையாட்சியைக் குறிப்பிடுகிறது. "இதோ, தேவனுடைய

ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே" (லூக்கா 17:21) என்று கிறிஸ்து சொல்லியிருக்கிறாரல்லவா. அவருடைய ஆட்சியின் கீழ் எப்படி உறவுகள் மாற்றம்பெறும் என்பதை கிறிஸ்து அறிவித்தார் என்பது மட்டும் அல்ல, தன்னில் தேவராஜ்யத்தின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் வெளிப்படுத்தினார். அவரே அவ்வாட்சியின் விளக்கம். அவரே அவ்வாட்சியின் பிரதிபலிப்பு. அவரே அவ்வாட்சியின் உறைவிடம். ரோமர் நிருபத்தில் இந்த வார்த்தை இந்த ஒரு இடத்தில் மட்டுமே சொல்லப்படுகிறது. இன்று பூமியில் செயல்படும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்தே பவுல் பேசுகிறார்.

தேவனுடைய ராஜ்யம் நமக்குள் இருக்கிறது என்பதை நம்புங்கள். அதினிமித்தமாகவே நாம் நீதியையும், சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உடையவர்களாகிறோம் என்கிறார் பவுல். இவைகளையெல்லாம் உருவாக்குகிறவர் பரிசுத்த ஆவியானவர். நமக்குத் தேவையான நீதியை கிறிஸ்து கல்வாரி சிலுவையில் வழங்கிவிட்டார் என்றாலும் ஆவியானவரே அதை நமக்கு அருளிச்செய்கிறார். இதன் விளைவாக நாம் தேவனுடன் ஒப்புரவாகி தேவ சமாதானத்தை உடையவர்களாகிறோம். மெய்யான சந்தோஷத்தையும் ஆவியானவர் நமக்கு அருளிச் செய்கிறார். எதைப் புசிக்கலாம், எதைக் குடிக்கலாம் என்பதுபோன்ற விதிமுறைகள் இந்த சந்தோஷத்தில் எந்த பாதிப்பையும் உண்டாக்க அனுமதிக்கக்கூடாது என்கிறார் பவுல்.

பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் புசிப்பையும் குடிப்பையும் குறித்த பல உபதேசங்கள் இடம் பெற்றிருப்பதைப் பார்த்தோம். ஆனால் "இந்த காணிக்கைகளும் பலிகளும் ஆராதனை செய்கிறவனுடைய மனச்சாட்சியைப் பூரணப்படுத்தக்கூடாதவைகளாம். இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல" (எபி 9:9,10). இந்த விதிமுறைகள் இன்று நடைமுறையில் இல்லை. "போஜனமானது நம்மைத் தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது; என்னத்தினாலெனில், புசிப்பதினால் நமக்கு ஒரு மேன்மையுமில்லை, புசியாதிருப்பதினால் நமக்கு ஒரு குறைவுமில்லை" (1 கொரி 8:8). "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும், ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார்" (1 கொரி 6:13).

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல என்பதை உறுதிப்படுத்தும் விதத்தில் பவுல் சொல்கிறார். "மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே,

ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே, இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (கொலோ 2:21-23).

தேவனுடைய ராஜ்யம் என்ற வார்த்தை எதைக் குறிப்பிடுகிறது என்று பவுல் தொடர்ந்து அறிவிக்கிறார். மூன்று காரியங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் உண்டாகியிருக்கும் என்கிறார்.

1. நீதி (இதைக் குறித்து விளக்கமாக தியானித்திருக்கிறோம்)
2. சமாதானம் (இது கிறிஸ்து சபைக்கு இலவசமாகத் தரும் நன்கொடை (யோவான் 14:27; 16:33; 20:19, 21, 26)
3. பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷம். (நமக்குள் வாசமாயிருக்கும் ஆவியானவரின் செயலாற்றல்)

இந்த மூன்று ஆசீர்வாதங்களை மனித இனத்துக்கு வழங்கும்படியாகவே இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்தார். கிறிஸ்தவர்கள் எதைப்புசிப்பது, எதைக் குடிப்பது, எதை புசிக்காதிருப்பது, எதைக் குடிக்காதிருப்பது என்ற ஆலோசனை வழங்கும்படியாக அல்ல. தேவனுடைய ராஜ்யத்தில் இதைவிட விலையேறப்பெற்ற, மேலான காரியங்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றன.

"நம் தேவன் நீதியுள்ளவர். நீதியும் நியாயமும் அவருடைய சிங்காசனத்தின் ஆதாரம்" (சங் 97:2). "கர்த்தாவே, நீர் நீதிபரர், உமது நியாயத்தீர்ப்புகள் செம்மையானவைகள், நீர் கட்டளையிட்ட சாட்சிகள் நீதியும், மகா உண்மையுமானவைகள்" (சங் 119:137,138) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்" (ஏசாயா 32:17).

இந்த இடத்தில் நீதி என்ற வார்த்தை தேவ நீதியை மட்டும் குறிப்பிடாமல் கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனைப் பின்பற்றி

செயல்படுவதின் விளைவாக ஒருவரோடு ஒருவர் பாராட்டும் கடமை உணர்வினால் உண்டாகும் நீதியைக் குறிப்பிடுகிறது. யோவான் சொல்கிறார்: "அவர் நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால், நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள்" (1 யோவான் 2:29). கிறிஸ்து சொல்கிறார்: "வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" (மத் 5:20). **தேவ நீதியை இலவசமாகப் பெற்றுக்கொண்டவர்கள் நீதியின் கிரியைகளை தங்கள் வாழ்க்கையில் நடப்பிக்கிறவர்களாய் இருக்கவேண்டும்.**

தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து சொல்லப்படும் இரண்டாவது காரியம் அது வழங்கும் சமாதானம். ஏசாயா 57:21 சொல்கிறது: "துன்மார்க்கருக்கு சமாதானம் இல்லை". "கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி, அவர்களை ஆசீர்வதிப்பார்" (சங் 29:11) என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து பிறந்தபோது வெளிப்பட்ட தேவதூதர்கள், "தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக" (லூக்கா 2:14) என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். தன்னுடைய மரணத்துக்கு முந்தின நாளில் கிறிஸ்து தன்னுடைய சீஷர்களிடம் சொல்கிறார்: "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 14:27). ஏனென்றால் "நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" (ஏசாயா 53:5) என்று தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று" (கொலோ 1:20).

பாவமனிதன், கிறிஸ்து மூலமாக தேவனோடு ஒப்புரவு ஆனதின் விளைவாகவே இந்த சமாதானம் விசுவாசிகளிடம் உருவாகிறது. "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்" (மத் 6:33) என்ற வசனத்தின்படி நீதியைத் தேடுகிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் சமாதானத்தையும் பெறுகிறார்கள். புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் முகத்தில் காணப்படும் அபரிமிதமான சமாதானத்தை எப்போதாவது

கவனித்திருக்கிறீர்களா? கிறிஸ்துவுக்குள் விடுதலையையும், பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், புதிய ஜீவனையும் பெற்றுக்கொண்ட அவர்கள் சத்திய உபதேசங்களில் தேர்ச்சியற்றவர்களாக இருக்கலாம். ஆனாலும் அவர்கள் சொல்வார்கள்: "சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்" (சங் 4:8).

தேவனுடைய ராஜ்யம் மனிதர்களுக்கு வழங்கும் மூன்றாவது காரியம் சந்தோஷம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் பரிசுத்த ஆவியானவரால் வழங்கப்படும் சந்தோஷம் என்று பார்க்கிறோம். அவர் நமக்குள் வாசமாயிருப்பதின் விளைவாக ஆவியின் கனிகளான சமாதானமும் சந்தோஷமும் நமக்கு அருளப்படுகிறது. **ஒரு கிறிஸ்தவன் சமாதானமாயும் சந்தோஷமாயும் இல்லை என்றால் அவனுக்குள் தேவநீதி இருக்கிறதா என்ற சந்தேகம் உருவாகிவிடக்கூடும்.** இயேசுகிறிஸ்து ஆவியிலே களிகூர்ந்த ஒரே ஒரு நிகழ்ச்சி லூக்கா 10:21ல் சொல்லப்பட்டிருக்கிறது. தாவீது சொல்கிறார்: "உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு" (சங் 16:11). "கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது" என்று ஏசாயா 61:10ல் வாசிக்கிறோம்.

இவைகளிலே கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கிகரிக்கப் பட்டவனுமாயிருக்கிறான் (ரோமர் 14:18)

கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவன் முந்தின வசனத்தில் சொல்லப்பட்ட நீதியையும், சமாதானத்தையும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷத்தையும் உடையவனாக இருக்கிறான். கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும்படியாக மட்டுமே நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோம். நாம் உயிர்வாழும்படியாகவே புசிக்கிறோம், குடிக்கிறோம். தேவனுக்கென்று ஊழியம் செய்யும்படியாகவே உயிர்வாழ்கிறோம். இவ்வாறு ஊழியம் செய்யும்போது மட்டுமே தேவனுக்கு பிரியராகிறோம். எல்லா மனிதர்களாலும் அங்கிகரிக்கப்படுகிறோம்.

கிறிஸ்து, 'தேவன்' என்ற சத்தியம் சந்தேகத்துக்கிடமின்றி இந்த வசனத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் தேவன்

ஒருவருக்குத்தான் நாம் ஊழியம்பண்ணமுடியும். இவ்வாறு கிறிஸ்துவுக்கு சேவை செய்கிறவர்கள் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியங்கள் இரண்டு

1. அவர்கள் தேவனுக்குப் பிரியராக இருப்பார்கள். (தேவனுக்கு ஏற்றவர்களாக இருப்பார்கள்)

2. அவர்கள் மனிதர்களால் அங்கீகரிக்கப்படுவார்கள். (மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்)

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவான் 12:26) என்கிறார் இயேசு. கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவர்களை பிதா நிச்சயமாகப் பெருமைப்படுத்துவார். பிதா நம்மை கனப்படுத்த வேண்டுமானால், "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்" (எபே 6:6) என்கிறார் பவுல். பார்வைக்கு ஊழியஞ்செய்யும் ஊழியக்காரர்கள் பலர் உருவாகக்கூடும் என்பதை அறிந்தவராய் பவுல் பேசுகிறார். எனவே மீண்டுமாகச் சொல்கிறார்: "மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" (வசனம் 8).

இவ்வாறு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவர்கள் தேவனுக்குப் பிரியராயிருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. பேதுரு சொல்கிறார்: "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ, அவனே அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" (அப் 10:35). அவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல, மனிதர்களாலும் அங்கீகரிக்கப்படுகிறார்கள் என்கிறார் பவுல். "ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துருக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார்" என்று நீதி 16:7ல் வாசிக்கிறோம். ஜனங்களின் கண்களில் நமக்கு இரக்கம் கிடைக்கிறது என்றால் அதற்குக் காரணம் தேவனாகிய கர்த்தர் (யாத் 3:21; 11:3). "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப் போலிக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" (நீதி 21:1) என்று வாசிக்கிறோம். "இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ

கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்" (லூக்கா 2:52) மனிதர்களுடைய தயவு எல்லாருக்கும் தேவைப்படுகிறது. பிதாவாகிய தேவனும் அவரில் பிரியமாயிருந்தார் (மத் 3:17).

மனிதர்கள் தங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் கவலைப்படவேண்டியதில்லை என்ற மனநிலை சில கிறிஸ்தவர்களிடம் காணப்படுகிறது. இது தவறானது, "எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்யநாடுங்கள்" (ரோமர் 12:17) என்று பார்த்தோம். ஒரு ஊழியக்காரன் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை அறிவிக்கும்போது பவுல் சொல்கிறார்: "அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்கவேண்டும்" (1 தீமோ 3:6,7). கிறிஸ்தவர்களாகிய நாம் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவேண்டியது மிகவும் அவசியம். உங்களுடைய இரட்சிப்பை அவர்கள் அங்கீகரியாமல் இருக்கலாம். **நீங்கள் கிறிஸ்துவோடு கொண்டிருக்கும் உறவை உலகத்தார் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் கனிகொடுக்கும் உங்களுடைய வாழ்க்கையை எந்த மனிதனாலும் புறக்கணிக்கமுடியாது.**

ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். (ரோமர் 14:19)

பலமுள்ள விசுவாசிகள் பலவீனமான சகோதரர்களைத் தாங்கி, அவர்களை தங்கள் ஐக்கியத்தில் நிலைப்படுத்தி, தேவஊழியத்தை நிறைவேற்றும்போது சபைபெற்றுக்கொள்ளும் இரண்டு ஆசீர்வாதங்கள்

1. சமாதானம்
2. பக்தி விருத்தி

ஒருவரோடொருவர் சமாதானத்தோடு வாழவேண்டும் என்பதற்காக சகலவிதமான முயற்சிகளையும் எடுப்பது கிறிஸ்தவர்களுடைய கடமையாகிறது. நம் தேவன் "சமாதானத்தின் தேவன்" என்று அழைக்கப்படுகிறார் (பிலிப் 4:9, 1 தெச 5:23). ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாக்கவேண்டும் என்பதற்காக தேவையான உதவிகளை

செய்ய எல்லாவேளைகளிலும் ஆயத்தமாயிருக்கவேண்டும். மற்றவர்களும் வளர்ச்சியடையவேண்டும் என்ற வாஞ்சையுள்ளவர்களே உண்மையான கிறிஸ்தவர்கள்.

"ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாகவும் இருங்கள்; கூடுமானால் உங்களானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18) என்று பவுல் அறிவித்ததை தியானித்தோம். "யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்" (எபி 12:14) என்று சொல்லப்பட்டிருக்கிறது. "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்" (மத் 5:9) என்கிறார் கிறிஸ்து. "சமாதானம் பண்ணுகிற ஆலோசனைக்காரருக்கு உள்ளது சந்தோஷம்" (நீதி 12:20) என்று வாசிக்கிறோம்.

அந்நியோந்நிய பக்தி விருத்தியை உண்டாக்கவேண்டும் என்று பவுல் சொல்வது மற்றவர்கள் வளர்ச்சியடைவதை வாஞ்சிக்கும் மனப்பான்மையைக் குறிக்கிறது. ஆவிக்குரிய காரியங்களில் நாம் தனிப்பட்டமுறையில் வளர்ச்சியடைவதில் மட்டும் திருப்தி அடைந்துவிடக்கூடாது. **சுயநலத்துக்கும் கிறிஸ்தவத்துக்கும் சம்பந்தமே இல்லை. ஊழியர்களில் போட்டி மனப்பான்மை மிகவும் ஆபத்தானது.** மற்றவர்களின் நலனில் கூடுதலாக அக்கறை செலுத்த அறிந்துகொள்ளவேண்டும். அதனால்தான் பவுல், "சகலமும் பக்திவிருத்திக்கேதுவாகச் செய்யப்படக்கடவது" (1 கொரி 14:26) என்கிறார். "சகலத்தையும் உங்கள் பக்திவிருத்திக்காகச் செய்கிறோம்" (2 கொரி 12:19) என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். "பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்" (எபே 4:29) என்று ஆலோசனை தருகிறார். "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும் அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபே 4:12,13) என்று சொல்லப்பட்டிருக்கிறது. சபையில் பக்திவிருத்தி உண்டாக்குவதுதான் இந்த ஊழியர்களின் பிரதானமான வேலை.

இப்படிப்பட்ட மகிமையான ஊழியத்தைத்தான் பவுல் துவக்கநாட்களிலிருந்து செய்துவந்தார். அதன் விளைவாக "யூதேயா கலிலேயா சமாரியா நாடுகளிலெங்கும் சபைகள் சமாதானம் பெற்று, பக்திவிருத்தியடைந்து, கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்த ஆவியின் ஆறுதலோடும் நடந்து பெருகின" (அப் 9:31) சபைகளோடு உறவுகொள்ளாமல், தனிப்பட்ட முறையில் கர்த்தருடைய ஊழியங்களைச் செய்யும் ஸ்தாபனங்களும் தங்களுடைய தனிப்பட்ட வளர்ச்சியை மட்டும் கருத்திற் கொள்ளாமல், சபையின் பக்தி விருத்தியே தங்களுடைய முக்கியமான குறிக்கோள் என்பதை ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும். தீர்க்கதரிசன ஊழியம் செய்கிற ஊழியர்களைக் குறித்து பவுல் சொல்கிறார்: "தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப் பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான்" (1 கொரி 14:3).

போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப்போடாதே. எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; ஆனாலும், இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும். (ரோமர் 14:20)

தான் ஏற்கனவே அறிவித்த சத்தியத்தை வலியுறுத்தும்படியாக மீண்டும் பவுல் அதைச் சொல்கிறார். விளக்கவுரையிலும் நாம் அதைச் செய்ய வேண்டியதிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய கிரியையாக இருக்கிறோம். நாம் நம்முடையவர்கள் அல்ல, நமக்கு உரியவர்கள் அல்ல. "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" (எபே 2:10) என்கிறார் பவுல். "தேவனுடைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறோம்" என்று 1 கொரி 3:9ல் பவுல் சொல்கிறார். "தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" (1 கொரி 3:17).

தேவனுடைய "கிரியை" என்று சொல்லும்போது கிரியை என்ற வார்த்தை தேவன் ஒரு விசுவாசியில் உருவாக்கும் விசுவாசம், பரிசுத்தம், அன்பு ஆகியவற்றையும் குறிப்பிடுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். "அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது" (யோவான் 6:29) என்று இயேசு சொல்வதைக் கவனியுங்கள். தேவனுடைய கிரியை என்ற வார்த்தை மனிதனில் தேவன் எதிர்பார்க்கும் கீழ்ப்படிதலையும், நல்நடத்தையையும் குறிப்பிடுவதாகவும்

எடுத்துக்கொள்ளலாம்.

"ஒரு பொருளும் தன்னிலே தீட்டுள்ளதல்ல" என்று 14-வது வசனத்தில் திட்டவட்டமாக அறிவித்ததைப் பார்த்தோம். கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றுக்கொண்ட சுயாதீனத்தின் அடிப்படையில் எந்த போஜனமும் கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரையில் சுத்தமானதுதான். அதைச் சாப்பிட நமக்கு உரிமை உண்டு, அனுமதியும் உண்டு, ஆனால் அது இன்னொரு கிறிஸ்தவ சகோதரனை இடறலடையச் செய்யுமானால் அது தீமையானதாகிறது என்கிறார் பவுல். கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கும் விடுதலையை தவறாகப் பயன்படுத்துவது கூடாது என்கிறார்.

மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது, பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும். (ரோமர் 14:21)

மோசேயின் நியாயப்பிரமாணம் தடைசெய்த காரியங்களான மாம்ச உணவு பதார்த்தங்கள், ஓய்வு நாட்களை அனுசரித்தல் போன்ற காரியங்களைக் குறித்து பவுல் இதுவரை பேசிக்கொண்டிருந்தார். அவைகளில் இருந்து நாம் பெற்றிருக்கும் விடுதலை பலவீனர்களுக்கு இடறலாக இருக்குமானால் அந்த விடுதலையை நாம் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமலிருப்பதே கிறிஸ்தவ அன்பு என்ற முறையில் பேசினார். இந்த வசனத்தில் மதுபானம் பண்ணுகிறது, மற்றெதையாகிலும் செய்கிறது என்று தடை செய்யப்பட்ட காரியங்களின் பட்டியல் சற்று விரிவாக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணம் மது அருந்துவதை தடைபண்ணவில்லை. நசரேய விரதமாகிய பொருத்தனை செய்துகொண்டவர்களே மது அருந்துவதில்லை (எண் 6:2-4).

கிறிஸ்தவர்கள் புகைபிடிக்கலாமா? மிதமான அளவு தங்கள் சரீரபாதிப்பு ஏற்படாத முறையில் மது அருந்தலாமா, நடன நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளலாமா, சினிமாக் காட்சிகளைப் பார்க்கலாமா? பொழுதுபோக்கு மையங்களில் நேரத்தைச் செலவிடலாமா முதலிய பல்வேறு கேள்விகளுக்குப் பதில் இந்த வசனத்தில் காணப்படுகிறது. பவுல் தன்னுடைய அனுபவத்தையும் ஆலோசனையையும் 1 கொரி 10:32,33ல் இவ்வாறு அறிவிக்கிறார்: "நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள்

இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும், எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல; நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்". மேலே சொல்லப்பட்ட காரியங்கள் மற்றவர்களை இடறலடையச் செய்யுமானால் அவற்றைச் செய்ய நமக்கு அனுமதியில்லை. சபைக்கு இடறலற்றவர்களாயிருப்பதால் மூன்று நன்மைகள் உண்டாகின்றன.

1. தேவன் இதில் பிரியப்படுகிறார்.
2. இது நம் சகோதரனுக்கு பிரயோஜனமாயிருக்கிறது.
3. இதனால் நமக்கு எந்த நஷ்டமும் இல்லை.

உனக்கு விசுவாசமிருந்தால் அது தேவனுக்கு முன்பாக உன்மட்டும் இருக்கட்டும். நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னைக் குற்றவாளியாக்காதவன் பாக்கியவான். (ரோமர் 14:22)

இந்த அதிகாரத்தில் நாம் தியானித்த வேதபகுதியில் பவுல் எடுத்த வாதத்தின் முடிவுரையாக இந்த வசனம் அமைகிறது. கிறிஸ்துவுக்குள் ஒருவன் பெற்றிருக்கும் விடுதலை, சுயாதீனம் ஆகியவற்றைக் குறித்த விசுவாசம் பாராட்டக் கூடியதுதான். மேன்மையானதுதான். இந்த விடுதலை விசுவாசத்தையே ஆதாரமாகக் கொண்டது என்பதும் உண்மைதான். ஆனால் பவுல், "உனக்கு விசுவாசமிருந்தால்" என்று சொல்லும்போது, உனக்கு விசுவாசத்தில் நம்பிக்கை இருந்தால் என்று சொல்வதாக எடுத்துக்கொள்ளவேண்டும். உன்னுடைய நம்பிக்கை உனக்கும் தேவனுக்கும் இடையே இரகசியமாக வைக்கப்படட்டும். இவற்றைப் பற்றிய உறுதியான மனநிலையை உங்களோடு வைத்துக்கொள்ளுங்கள் அது உங்களுக்கும் தேவனுக்கும் மட்டும் தெரிந்திருக்கட்டும். நகை போடுவது பாவம் என்று நினைப்பீர்களென்றால் அந்த நம்பிக்கை உங்களுக்குள் இருக்கட்டும்.

தான் செய்வது நீதியானதுதான் என்று ஒருவன் நினைக்கும் காரியத்தில், அவன் தன்னுடைய சகோதரனால் குற்றவாளியாகத் தீர்க்கப்படாமல் இருப்பது பெரும் பாக்கியமாகும். தன்னைக் குறித்த நல்மனச்சாட்சியை உடைய ஒரு மனிதன் உண்மையிலேயே ஆசீர்வதிக்கப்பட்டவன் என்கிறார் பவுல்.

உதாரணமாக, விக்கிரக ஆராதனைகளுக்காக தயாரிக்கப்படும் லட்டு

போன்ற பலகாரங்களை நம் நண்பர்கள் உற்சாகமாக நம் வீட்டுக்குக் கொண்டு வந்து தருவார்கள். அதைச் சாப்பிட்டால் நமக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற நம்பிக்கை நம்மில் இருக்கிறது. அதைக் குறித்த நிச்சயம் இருப்பதினால் அதைச் சாப்பிடுவதில் தவறில்லை. அந்த நம்பிக்கையை நம்மோடு வைத்துக் கொள்ளவேண்டும். பலவீனமான கிறிஸ்தவர்களிடம் அதைக் குறித்து பெருமையாகப் பேசி நம்மை மேன்மைப்படுத்தக் கூடாது. இந்த வசனத்தில் விசுவாசம் என்ற வார்த்தை இரட்சிப்புக்காக தேவனால் வழங்கப்படும் விசுவாசத்தைக் குறிப்பிடாமல், ஒரு குறிப்பிட்ட காரியத்தில் ஒரு மனிதன் தன்னுடைய மனச்சாட்சியின் அடிப்படையில் கொண்டிருக்கும் நம்பிகையை மட்டுமே குறிப்பிடுகிறது. இந்த நம்பிக்கை ஒருவருக்கு ஒருவர் வித்தியாசமானதாக இருக்கும்.

ஒருவன் சமுசயப்படுகிறவனாய்ப் புசித்தால், அவன் விசுவாசமில்லாமல் புசிக்கிறபடியினால், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுகிறான். விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே. *(ரோமர் 14:23)*

"சமுசயம்" என்ற வார்த்தை ஒரு காரியத்தைக்குறித்த தெளிவற்ற மனநிலையைக் குறிக்கிறது. ஏற்கனவே சொன்னதை மீண்டும் பவுல் அறிவிக்கிறார். தான் செய்வது சரிதான் என்ற நிச்சயமில்லாமல் ஒருவன் சந்தேகத்தோடு எதையாவது உண்பானேயானால், தன்னுடைய மனச்சாட்சியில் அது குறித்த நிச்சயம் இல்லாதபடியினால் அவன் தனக்குத் தானே தவறு செய்கிறவனாகிறான். ஏனென்றால் தன்னுடைய கிரியை தேவனை விசனப்படுத்துவதாக தன் உள்மனதில் உணர்கிறான். அவனுடைய செயலில் அவனுக்கு நம்பிக்கை இல்லை. **நம்முடைய மனதில் இது சரியில்லை என்ற உணர்வோடு எந்த ஒரு காரியத்தையும் தேவனுக்கும் மனிதர்களுக்கும் செய்யக்கூடாது.** தேவன் ஏற்றுக் கொள்ளவேண்டிய விதத்தில் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டுமானால் நாம் செய்கிற காரியத்தைக் குறித்த நம்பிக்கை நமக்கு வேண்டும். ஒரு காரியத்தைச் செய்வதைக் குறித்த உள்ளான விடுதலையைப் பெறாதநிலையில் ஒருவன் அதைச்செய்யும்போது அது பாவமாகிறது.

"விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" என்ற அறிக்கையுடன் இந்த அதிகாரம் நிறைவடைகிறது. பாவம் என்றால் என்ன என்பதைக் குறித்த விளக்கம் இதற்கு மேலாக வேதத்தில் எங்கும் சொல்லப்படவில்லை. கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்திராத ஒரு

மனிதன் பாவியாகிறான், அவன் செய்வதெல்லாம் பாவமாகிறது என்றும் பொருள்கொள்ளலாம். உறுதியான மனநிலையோடு விசுவாசத்தோடு செய்யாத சகல காரியங்களும் பாவமாகிறது என்றும் பொருள்கொள்ளலாம். ஏனென்றால் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்" (எபி 11:6). கிறிஸ்தவர்களாகிய நாம் நடப்பிக்கும் ஒவ்வொரு காரியமும் கிறிஸ்து கல்வாரியில் நிறைவேற்றி முடித்த கிரியையின்மேல் வைக்கும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஏனென்றால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உண்டாகக்கூடிய சகல உறவுமுறைகளுக்கும் விசுவாசம் மட்டுமே ஆதாரம். விசுவாசமில்லாத எல்லா கிரியைகளும் தவறானவை, வெளிப்படையான கிரியைகளிலும், வெளித்தோற்றத்திலும் தேவன் திருப்தியடைவதில்லை. உலகரீதியான எல்லா மதங்களுமே பாவத்தின் எதிர்ப்பதம் நற்கிரியை என்று சொல்கிறது. கிறிஸ்தவமோ பாவத்தின் எதிர்ப்பதம் விசுவாசம் என்கிறது.

பொதுவாக "நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" (1 யோவான் 3:4) என்று நினைக்கிறோம். அது உண்மைதான். "ஒருவனுக்கு நன்மை செய்யத் தெரிந்திருந்தும் அதைச் செய்யாதிருந்தால் அது பாவம்" (யாக் 4:17). "அநீதியெல்லாம் பாவம்" (1 யோவா 5:17). "தீய நோக்கம் பாவம்" (நீதி 14:21). "அதிகமாகப் பேசுவதுகூட பாவம்" (நீதி 10:19). ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த அதிகாரத்தில் தான் அறிவித்த சகல சத்தியங்களையும் உள்ளடக்கி "விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே" என்கிறார். தான் தேவனுடைய சித்தத்தையே நிறைவேற்றுகிறேன் என்று முழுநிச்சயத்தோடு விசுவாசிக்கும் ஒரு கிறிஸ்தவன் - ஒருவேளை உண்மையில் அந்த கிரியை தேவனுடைய சித்தத்தின்படி இல்லாதிருந்தாலும் - அவனுடைய விசுவாசத்தினிமித்தம் தேவனால் அங்கீகரிக்கப்படக்கூடும் என்று சில வேதபண்டிதர்கள் இந்த வசனத்தின் அடிப்படையில் கருதுகிறார்கள்.

15

பவுலின் இறுதி ஆலோசனை

முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாகவும், ரோமர் நிருபத்தின் முடிவுரையாகவும் இந்த 15-வது அதிகாரத்தின் முதல் 13 வசனங்கள் அமைகின்றன. பலவீனமான விசுவாசிகளுக்கும் பலமுள்ள விசுவாசிகளுக்குமிடையே இருக்கவேண்டிய உறவுமுறைகளைக் குறித்த ஆலோசனை இந்த வேதபகுதியில் (வசனம் 1-13) சொல்லப்படுகிறது.

1. பலவீனர்களுக்கு பலமுள்ள விசுவாசிகள் உதவி செய்வதினால் அவர்கள் பக்தி விருத்தியடைந்து நன்மை அடைந்து மகிழ்ச்சியுறச் செய்யவேண்டும் (வசனம் 1, 2)

2. வேத வசனத்தினால் உண்டாகும் பொறுமையும், ஆறுதலும், பலவீனரிலும், பலமுள்ளவர்களிலும் நம்பிக்கையை உருவாக்கி, அவர்கள், தேவனை மகிமைப்படுத்தும்படிச் செய்யும் (வசனம் 3-6)

3. கிறிஸ்து நம்மை நம்முடைய பலவீனங்களின் மத்தியிலும் ஏற்றுக்கொண்டது போல் நாம் பலவீனர்களை ஏற்றுக்கொள்ளும்போது தேவன் மகிமைப்படுகிறார் (வசனம் 7)

4. யூதர்கள் மாத்திரமல்ல, புறஜாதியாரும் கிறிஸ்துமூலமாக தேவனிடம் இரக்கம் பெறுவார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (வசனம் 9-12)

5. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை எல்லா விசுவாசிகளையும் சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிரப்பும் (வசனம் 13)

இந்த அதிகாரத்தின் இரண்டாவது பகுதியில் (வசனம் 14-33). தன்னுடைய தனிப்பட்ட ஊழியத்தைக் குறித்து பவுல் பேசுகிறார். ரோமர் நிருபம் எழுதப்பட்டதன் நோக்கம் என்ன என்பதை முதலாவதாக அறிவித்துவிட்டு (வசனம் 14-16), புறஜாதியாரின் தேசங்களில், தான் மேற்கொள்ளவிருக்கும் ஊழியப் பயணத்தின் திட்டம் என்ன என்பதை ரோம சபைக்குச் சொல்கிறார் (வசனம் 22-29). அதில் பல தடைகளும் காலதாமதங்களும் ஏற்படக்கூடும் என்று எதிர்பார்க்கிறார் என்பதால் அவைகள் நீங்கும்படியாக ரோமசபை போராடி ஜெபிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார் (வசனம் 30-32). கடைசி 33-வது வசனத்தில் பவுல் ரோமசபையை ஆசீர்வதிக்கிறார்.

பலமுள்ள விசுவாசிகளின் கடமைகள் (வசனம் 1-7)

அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். (ரோமர் 15:1)

பலமுள்ளவர்கள் என்று பவுல் சொல்லும்போது சரீர பலமுடையவர்களைப் பற்றிப் பேசாமல், விசுவாசத்தில் பலமுள்ளவர்களையே குறிப்பிடுகிறார். "பலமுள்ளவர்களாகிய நாமும்" என்று சொல்லும்போது பவுல் தன்னையும் அந்த பிரிவினரோடு சேர்த்துக்கொள்கிறார். விசுவாசத்தில் உறுதியாயிருப்பவர்கள் ஒருபோதும் தங்களுக்குத் தாங்களே பிரியமாய் நடக்கக்கூடாது. அதாவது தங்களைப் பிரியப்படுத்துவதில் திருப்தி அடைந்துவிடக்கூடாது. பலம் குறைந்தவர்களுக்கு உதவிசெய்யும் பொறுப்பு நமக்கு உண்டு. கிறிஸ்தவர்கள் தம்முடைய திருப்திக்காக மட்டுமே வாழ்தல் கூடாது. மற்றவர்களுடைய குறைபாடுகளைத் தாங்கிக்கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்கிறார் பவுல்.

மல்யுத்த வீரர்கள் பலவான்களல்ல. உலக ஞானத்தினாலும், திறமையினாலும் நிறைந்திருப்பவர்கள் பலவான்கள் அல்ல. உலகின் ஆளுகை அதிகாரங்களை உடையவர்கள் பலவான்களல்ல. மெய்யான விசுவாசத்தில் வளர்ச்சி அடைந்தவர்களாய், வேத வசனங்கள் அறிவிக்கும் மெய் தேவனை அறிந்திருப்பவர்களே பலவான்கள்.

எரேமியா 9:23,24ல் கர்த்தர் சொல்கிறார்: "ஞானி தன் ஞானத்தைக் குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மை பாராட்டவேண்டாம்; மேன்மை பாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும், நியாயத்தையும், நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்".

பலமுள்ளவர்கள் மூன்று காரியங்களைச் செய்யவேண்டும் என்று பவுல் இந்த வேதபகுதியில் அறிவிக்கிறார். இந்த வசனத்தில் கூறும் இரண்டு காரியங்களாவன:

1. பலமுள்ளவர்கள் தங்களுக்குப் பிரியமாக நடக்கக்கூடாது
2. பலமுள்ளவர்கள் பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்.
3. பலவீனர்கள் பிரியப்படும் வகையில் நடந்து அவர்களில் பக்திவிருத்தி உண்டாக்கவேண்டும் (வசனம் 2).

தேவனை அறிந்து உணர்ந்திருக்கிறோம் என்பதைக் குறித்து மேன்மை பாராட்டுவதில் தவறில்லை, அதே நேரத்தில் பலவீனர்களைத் தாங்குவது நம்முடைய கடமை என்பதை உணர்ந்துகொள்ளவேண்டும். உலக ரீதியான பலமுள்ளவர்கள் யாவரும் தங்களுக்குப் பிரியமான முறையில் தங்களுடைய இஷ்டத்தின்படியெல்லாம் நடப்பார்கள். தங்களைவிட குறைந்தநிலையில் இருப்பவர்களை மட்டமாக நினைப்பார்கள். பரிசேயர்களைப்போல் மற்றவர்களுடைய பலவீனங்களைக் குறித்து மகிழ்ச்சியடைகிறவர்களாக இருப்பார்கள். தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளை மட்டும் நிறைவேற்றுகிறவர்களாகக் காணப்படுவார்கள். கிறிஸ்துவின் சீஷன் என்று சொல்லிக்கொள்பவன் அப்படி இருக்கக்கூடாது.

இயேசு சொல்லியிருக்கிறார் : "ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" (மத் 16:24). மனிதர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக வந்த கிறிஸ்து அதைத்தான் செய்தார். நம்முடைய பலவீனங்களில் நம்மை தாங்கவேண்டும் என்பதற்காக "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே

வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலிப் 2:6,7). "அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" (பிலிப் 2:4,5) என்கிறார் பவுல்.

தங்களை விசுவாச வீரர்களாக நினைத்துக்கொள்ளும் கிறிஸ்தவர்கள் தங்களுக்கு உகந்ததைத் தேடுகிறவர்களாக இருந்தால்மட்டும் போதாது, பெலவீனர்களின் குறைபாடுகளைத் தாங்குகிறவர்களாகவும் இருக்கவேண்டும். அதுதான் கிறிஸ்து இயேசுவின் சிந்தை. கிறிஸ்து உலகில் ஊழியம் செய்த நாட்களில் அவரோடிருந்த சீஷர்களிடம் பெருமைப்படக்கூடிய எந்த ஒரு நல்ல காரியமும் இல்லை. அவர்களிடம் காணப்பட்டதெல்லாம் அறியாமை, அவிசுவாசம், பயம், பொறாமை, எரிச்சல், மன்னிக்காத தன்மை, பெருமை, பொருளாசை ஆகியவைதான். இன்றும் அவருடைய ஊழியக்காரர்களாகிய நம்மிடம் இப்படிப்பட்ட பல குறைகள் உண்டு. இந்த சகல பலவீனங்களையும் கிறிஸ்து இயேசு பொறுத்துக்கொண்டு நம் எல்லாரையும் தாங்குகிறார். அவருடைய மரணவேளை வந்தபோது யோவானைத் தவிர மற்றவர்கள் அத்தனைபேரும் அவரைவிட்டு ஓடிப்போகிறார்கள். மூன்றாம்நாள் அவர் உயிர்த்தெழுவார் என்கிற நம்பிக்கை அவர்களில் ஒருவருக்கும் இல்லை. ஆனாலும் உயிர்த்தெழுந்த இயேசு அவர்களை எந்த விதத்திலும் குற்றப்படுத்தவில்லை. அவர்களைக் குறைகூறவில்லை, அவர்கள்மேல் எரிச்சலடையவில்லை, இயேசு அவர்களிடம் "உங்களுக்குச் சமாதானம்" (லூக்கா 24:36) என்கிறார், இதுதான் கிறிஸ்துஇயேசுவின் சிந்தை.

நாம் எந்த அளவுக்கு கிறிஸ்துவுக்குள் பலமுள்ளவர்களாய் இருக்கிறோமோ, அந்த அளவுக்கு பலவீனர்களைத் தாங்கும் பொறுப்பு நமக்கு உண்டு. தேவன் நமக்கு அதிகமான பலத்தையும் விசுவாசத்தையும் கொடுத்த நோக்கமே அதுதான். மற்றவர்களுடைய பலவீனங்களைத் தாங்குவதைக் குறித்து கலாத்தியர் 6:1,2ல் பவுல் என்ன சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள். "ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; . . . ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படி கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்". ஆவிக்குரியவர்கள் சாந்தமுள்ள ஆவியோடு செயல்படவேண்டும். தங்கள் பலவீனங்களை அவர்களே தாங்கிக்கொள்ளும்படியாக அவர்களை விட்டுவிடக்கூடாது. அவர்கள் நிரந்தரமான முறையில் விழுந்துவிட அனுமதிக்கக்கூடாது. ரோமர் 14:1ல், "விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்" என்ற

வசனத்தைத் தியானித்தோம். 1 கொரி 9:19ல் பவுல் சொல்கிறார்: "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்".

உண்மையான சகோதர அன்பு உடையவர்களால்தான் மற்றவர்களுடைய பாரத்தைச் சுமக்கமுடியும். ஒரு சின்னப்பெண் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு களைப்போடு நடந்து வந்துகொண்டிருக்கிறாள். அதைப்பார்த்த ஒரு பெரியவர் "குழந்தை ரொம்ப பாரமாக இருக்கிறதா" என்று கேட்கிறார். அதற்கு அந்தப்பெண் : "இல்லை. அது என்னுடைய தம்பி" என்றாள். அவள் அக்குழந்தைமேல் கொண்டிருந்த அன்பு பாரத்தை மறக்கச்செய்கிறது.

நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். (ரோமர் 15:2)

இந்த வேதபகுதியில் பவுல் அறிவிக்கும் காரியம் இதுதான். ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய வாழ்க்கையில் எதிர்கொள்ளும் ஒவ்வொரு காரியத்திலும் அது தன்னை எவ்வாறு பாதிக்கிறது என்பதைவிட, அது மற்றவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதில் கரிசனை உள்ளவனாக இருக்கவேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு விதத்தில் தன்னுடைய சகோதரனுக்கு காவலாளியாகவே இருக்கிறான் (ஆதி 4:9). தன்னைக்குறித்த பொறுப்புதான் அவனுக்கு இருக்கிறது என்பதல்ல, அவனோடு உறவாடும் ஒவ்வொருவரைக் குறித்தும் பொறுப்பு அவனுக்கு உண்டு. தன்னுடைய பக்திவிருத்தியைக் குறித்து எந்த அளவு கரிசனை உள்ளவனாக இருக்கிறானோ அந்த அளவுக்கு மற்றவர்களுடைய பக்திவிருத்தியைக் குறித்தும் கரிசனை உள்ளவனாக இருக்கவேண்டும். பலமுள்ளவர்களுக்கு பவுல் தரும் மூன்றாவது ஆலோசனை இதுதான்.

நம்மை நாமே பெரியவர்களாக எண்ணிக் கொண்டிராமல், பலவீன சகோதரர்களுடைய நன்மைக்காகவும் செயல்பட்டு, அவர்களுக்கு உகந்தவர்களாக, அதாவது அவர்களுடைய வளர்ச்சியில் ஆர்வங்கொண்டவர்களாக வாழும்படியாக பவுல் இந்த வசனத்தில் ஆலோசனை தருகிறார். 1 தெச 5:14ல் பவுல் சொல்கிறார்: "ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்". எந்த விதத்திலாவது அவர்களை பக்திவிருத்தி அடையச்செய்தால் அதுவே நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய

ஊழியமாயிருக்கும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய தேவைகளோடுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சனையை அறிந்துகொண்டு அவர்களை உற்சாகப்படுத்துவது அவர்களுக்கு ஆலோசனை தருவது நம்முடைய கடமை. அவர்களில் குறைகள், தவறுகள், பாவங்கள் இருக்கலாம். ஆனாலும் பேதுரு சொல்கிறபடி: "ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8). **தன்னைவிட தன்னுடைய அயலானை நேசிக்கிற ஒரு மனிதன் உண்மையில் தன்னைத்தானே நேசிக்கிறவனாக இருக்கிறான்.** ஏனென்றால் ஒரு மனிதனுடைய சுயநலமற்ற அன்பு அவனை பரலோகத்துக்கு நேராக வழிநடத்துகிறது. 1 கொரிந்தியர் 10:32, 33 வாசித்துப் பாருங்கள்.

"நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா 1:10) என்று சொல்லும் பவுல் இந்த வசனத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் பலவீனமான சகோதரர்களுக்குப் பிரியமாக நடந்துகொள்ளும்படியாகச் சொல்லுகிறார். ஏனென்றால் அவர்கள் நம்முடைய சகோதரர்கள். அது மட்டுமல்ல, நாம் பிரியமாக நடப்பதின் மூலமாய் அவர்களில் பக்திவிருத்திக்கேதுவான நன்மை உண்டாகிறது. மேலும் அவ்வாறு பிரியமாய் நடப்பதால் அவர்கள் நம்மை எளிதாக ஏற்றுக்கொள்கிறார்கள். **நம்மை ஏற்றுக்கொள்ளாத நிலையில் அவர்களால் நம்முடைய ஆலோசனைகளை அங்கீகரிக்க முடியாது.** கிறிஸ்துவுக்குள் அவர்களை உற்சாகப்படுத்தவேண்டுமானால் அவர்களுக்குப் பிரியமாக நடந்துதான் ஆகவேண்டும். "பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப் போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1 கொரி 9:22). முந்தின மூன்று வசனங்களையுங்கூட வாசியுங்கள். அவர்களுக்கு நன்மை உண்டாகவேண்டும் என்பதற்காகத்தான் பிரியமாக நடக்கிறோம். மற்றபடி எந்தவிதமான சுயநலத்துக்காகவும் அல்ல. 1 கொரி 10:24ல் பவுல் சொல்கிறார்: "ஒவ்வொருவனும் தன் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், பிறனுடைய பிரயோஜனத்தைத் தேடக்கடவன்".

கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார். (ரோமர் 15:3)

தமக்கு மட்டுமே பிரியமாக நடக்கக்கூடிய அதிகாரமும் தகுதியும் உள்ள ஒரு மனிதர் உலகில் இருந்தாரென்றால் அது தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துதான். அவ்வாறு அவர் நடந்திருந்தால் யாரும் அவரை

குறைசொல்லியிருக்க முடியாது. ஆனாலும் அவர் தன்னுடைய வாழ்நாட்களில் ஒருமுறையாவது தனக்குப் பிரியமாக, தன்னுடைய திருப்திக்காக வாழவில்லை. தனக்கு உகந்தது எது என்பதை அவர் ஒருபோதும் தேடினதில்லை. சுயநலம் ஒருநாளும் அவரில் காணப்படவில்லை. அவருடைய ஒவ்வொரு செயல்பாடும் தேவன் ஒருவரையே திருப்திப்படுத்துவதாய் இருந்தது. "நான் என் சுயமாய் ஒன்றுஞ்செய்கிறதில்லை" (யோவான் 5:30) என்று கிறிஸ்து சொல்கிறார். அந்த வசனத்தில் தொடர்ந்து அவர் தான் தனக்கு பிடித்தமானதைச் செய்யாமல், தன்னை அனுப்பினவருக்குப் பிரியமானதையே செய்வதாகச் சொல்லுகிறார். "என்னை அனுப்பினவரின் சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது" (1 யோவான் 4:34) எபி 10:5-9 வாசித்துப்பாருங்கள். கிறிஸ்து உலகில் இருந்த நாட்களில் தனக்குப் பிரியமாக நடந்திருந்தாரானால் ஒருவேளை உலகம் அவரை ஏற்றுக்கொண்டிருக்கும். ஆனால் அன்று அவ்வாறு நடந்திருந்தாரானால், இன்று நாம் எங்கே இருப்போம் என்பதை யோசித்துப்பாருங்கள்.

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது" (சங் 69:9) என்ற வசனத்தை பவுல் இங்கே பயன்படுத்துகிறார். இந்த 69-வது சங்கீதம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இதில் உள்ள 7 வசனங்கள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. கிறிஸ்து சிலுவையில் தொங்கியபோது இந்த சங்கீதத்தையும் 22-வது சங்கீதத்தையும் சொல்லிக்கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. கிறிஸ்துவின் பாடு மரணத்தைப்பற்றி தீர்க்கதரிசனமாக அறிவிக்கும் 69-வது சங்கீதத்தில் (வசனம் 4, 8, 9, 11, 12) நிந்தை என்ற வார்த்தை ஐந்து தடவை வருகிறது. "உமது நிமித்தம் நிந்தையைச் சகித்தேன்; இலச்சை என் முகத்தை மூடிற்று" (வசனம் 7). "என் ஆத்துமா வாடும்படி உபவாசித்து அழுதேன்; அதுவும் எனக்கு நிந்தையாய் முடிந்தது" (வசனம் 10). "தேவரீர் என் நிந்தையையும் என் வெட்கத்தையும் என் அவமானத்தையும் அறிந்திருக்கிறீர்" (வசனம் 19). "நிந்தை என் இருதயத்தைப் பிளந்தது" (வசனம் 20). கிறிஸ்துவின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு முக்கியமான நிகழ்ச்சியையும் தீர்க்கதரிசனமாக பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார்.

"உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தை என்மேல் விழுந்தது" என்று கிறிஸ்து சொல்லும்போது "உம்மைக் கேலிசெய்யும் ஜனங்களின் அவதூறுகளை நான் என்மேல் ஏற்றுக்கொள்கிறேன்" என்று கல்வாரி சிலுவையில் கிறிஸ்து பிதாவிடம் சொல்வதாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

அவருடைய உறவினர் மதிமயங்கியவர் என்று சொல்லி பிடித்துக்கொண்டு போக வந்தார்கள். வேதபாரகர்கள் அவரைப் பிசாசுபிடித்தவன் என்றார்கள் (மாற்கு 3:21-23, மத் 12:24). ஆனாலும் கிறிஸ்து பிதாவிடம் இவ்வாறு பேசுகிறார்: 'என்னுடைய ஜனங்கள் அவர்கள் செய்த பாவங்களின் மூலமாய் பரிசுத்தமான உம்மை நிந்தித்தார்கள், புறக்கணித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அந்த நிந்தையை நான் அவர்கள் சார்பில் என்மேல் ஏற்றுக்கொண்டிருக்கிறேன். எனவே என்னைத் தண்டித்து, அவர்களை மன்னியும்'. "மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்" (ஏசாயா 53:4) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் கிறிஸ்துவின் அன்பு. "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13).

அவர் மரித்தபோதும் பல்வேறு நிந்தைகளை அனுபவிக்க வேண்டியதிருந்தது. மத்தேயு 27:40-42 வாசித்துப்பாருங்கள். "நான் சிறுமையும் எளிமையுமானவன், என் இருதயம் எனக்குள் குத்துண்டிருக்கிறது. சாயும் நிழலைப்போல் அகன்று போனேன்; வெட்டுக்கிளியைப்போல் பறக்கடிக்கப்படுகிறேன்" (சங் 109:22,23) என்று அவரைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத் 20:28) என்று வாசிக்கிறோம். பவுல் சொல்கிறார்: "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே" (2 கொரி 8:9). ஏசாயா 53:2-8ல் அவர் சந்தித்த நிந்தைகள் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே தமக்குப் பிரியமாக நடவாமல் பலவீனருக்குப் பிரியமாய் நடந்தார் என்றால், அவரைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் நாம் அவர் வைத்துச் சென்ற மாதிரியின்படி நடக்கவேண்டியது மிகவும் அவசியமல்லவா? தன்னைப் பிரியப்படுத்தும், தான் விரும்பும் காரியமாக கிறிஸ்து தன் வாழ்நாட்களில் ஒரே ஒரு காரியத்தைத் தான் பிதாவிடம் அறிவிக்கிறார். அதை யோவான் 17:24ல் வாசிக்கிறோம்: "பிதாவே, உலகத்தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை, நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்".

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சகோதரர்களினிமித்தம் நிந்தையை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறோமா என்பதை யோசித்துப்பாருங்கள். அப்படி ஏற்றுக்கொண்டால்தானே "கிறிஸ்து-அவர்கள்" என்று நம்மை உலகம் அங்கீகரிக்கும். ஒரு **மனிதன் தன் வாழ்க்கையில் எந்த அளவுக்கு கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றுகிறானோ, அந்த அளவுக்கு முதிர்ச்சியடைந்திருக்கிறான் என்று சொல்லமுடியும்.** அதனால்தான் தன்னைப் பின்பற்றும்படியாக கிறிஸ்து ஆலோசனை தருகிறார். (மத் 11:29; 16:24; 20:27,28, மாற்கு 10:42-45, யோவான் 13:15). பவுலும் பல இடங்களில் இதுகுறித்துப் பேசுகிறார். (2 கொரி 8:9; 10:1; எபே 2:5, பிலிப் 2:5, கொலோ 3:13, எபி 3:1).

தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது. (ரோமர் 15:4)

முந்தின வசனத்தில் சங்கீதம் 69:9 வசனத்தின் ஆதாரத்தில் கிறிஸ்து தனக்குப் பிரியமாக நடக்கவில்லை, தன்னுடைய பிதாவின் சித்தத்தின்படி நடந்து, பலவீனமான தன்னுடைய சகோதரர்களுக்கு பாவமன்னிப்பு உண்டாகும்படியாக சகல நிந்தைகளையும் தன்மேல் ஏற்றுக்கொண்டார் என்பதைப் பார்த்தோம். தன்னுடைய நிருபத்தில் பழைய ஏற்பாட்டு வசனங்களை இவ்விதமாக பயன்படுத்தி, தான் அறிவிக்கும் சகல சத்தியங்களும் மெய்யானவை என்பதை பவுல் நிரூபித்துக்கொண்டு வருகிறார். அதன் அடிப்படையில் இந்த வசனத்தில் முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு அறிவுரையாக எழுதப்பட்டிருக்கிறது என்கிறார். இந்த வசனம் முழு பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுகிறது. முந்தின நாட்களில் மறைவாக வைக்கப்பட்டவை இப்போது வெளியரங்கமாகின்றன. அவை தேவனுடைய வார்த்தையாக இருக்கிறபடியினால் அந்தப் போதனைகளை நாம் சந்தேகப்படாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நம்மில் தேவனுடைய வசனங்கள் மூன்று ஆசீர்வாதங்களை உருவாக்குகின்றன.

1. பொறுமை
2. ஆறுதல்
3. நம்பிக்கை

முதலாவது ஆசீர்வாதமாக பொறுமை சொல்லப்படுகிறது. வேத வசனங்கள் நமக்குப் பொறுமையைக் கற்றுத்தருகின்றன. "கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்" (யாக் 5:10,11) என்று வாசிக்கிறோம். மிகப்பெரிய சோதனைகளின் மத்தியிலும் யோபு பொறுமையாய் இருந்தபடியால் இரட்டத்தனையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார். ஆபிரகாம், யோசேப்பு, தாவீது போன்ற பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் தங்கள் பொறுமையைக் காத்துக்கொண்டபடியால் தங்களுக்கு மட்டுமல்ல, தங்கள் சந்ததியாருக்கும் மேலான நன்மைகள் உண்டாகக் காரணமாயிருந்தார்கள்.

இரண்டாவதாக தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதால் நாம் ஆறுதல் அடைகிறோம் என்று பவுல் அறிவிக்கிறார். யோபு 5:19; 11:16 சங் 27:5; 30:5; 42:5; 103:13; 119:50; 138:7, ஏசாயா 46:4; 61:3; 63:9 முதலிய வசனங்களை வாசிப்பது எவ்வளவு ஆறுதலாக இருக்கிறது. பிதாவாகிய தேவன் "சகலவிதமான ஆறுதலின் தேவன்" (2 கொரி 1:3) என்று அழைக்கப்படுகிறார். அவருடைய ஆறுதல் அவருடைய ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்படுகிறது. "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவை-களாயிருக்கிறது" என்று 2 தீமோ 3:16,17ல் வாசிக்கிறோம்.

வேத வசனத்தின் அடிப்படையில் உண்டாகும் பொறுமையும் ஆறுதலும் நம்மில் எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையை உருவாக்குகிறது. தேவனாகிய கர்த்தர் "இரட்சிப்பின் நம்பிக்கையென்றும் தலைச்சீராவை" (1 தெச 5:8) நமக்கு வழங்கியிருக்கிறார். தாவீது சொல்கிறார்: "இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை" (சங் 39:7) ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டு பொறுமையோடு இருந்தது மட்டுமல்ல, "உன் சந்ததி இவ்வளவாயிருக்கும் என்று சொல்லப்பட்டபடியே, தான் அநேக ஜாதிகளுக்குத் தகப்பனாவதை நம்புகிறதற்கு ஏதுவில்லாதிருந்தும், அதை நம்பிக்கையோடே விசுவாசித்தான்" (ரோமர் 4:18). நம்பிக்கையோடு எப்போதுமே பொறுமை இணைந்திருக்கிறது. "நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்" (ரோமர் 8:25).

நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, (ரோமர் 15:5)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவன் என்று 2 கொரி 1:3; 11:31, எபே 1:3, 1 பேதுரு 1:3 ஆகிய வசனங்களிலும் பிதா குறிப்பிடப்படுகிறார். எபேசியர் 1:17ல் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர்" என்று அவர் அழைக்கப்படுகிறார். மத்தேயு 27:46ல் கிறிஸ்து அவரை "என் தேவனே" என்று இரண்டு முறை அழைக்கிறார். யோவான் 20:17ல் "என் பிதாவும் உங்கள் பிதாவும், என் தேவனும், உங்கள் தேவனும்" என்று குறிப்பிட்டு அவருக்கும் பிதாவுக்கும் இடையே உள்ள உறவுமுறை விசுவாசிகளாகிய நாம் தேவனுடன் கொண்டிருக்கும் அல்லது கொள்ளப்போகும் உறவுமுறையைவிட வித்தியாசமானது என்பதை உறுதிப்படுத்துகிறார்.

பிதாவாகிய தேவன் மகிமைப்படவேண்டும் என்றால் சபை இரண்டு காரியங்களைச் செய்யவேண்டும்.

1. சபை ஒருமனப்படவேண்டும் (இருதயத்தில் ஒற்றுமை)
2. சபை ஒரே வாயினால் தேவனை அறிக்கையிடவேண்டும் (வாயின் வார்த்தையில் ஒற்றுமை)

சபையில் பலவீனர்கள், பலமானவர்கள் என்ற பாகுபாடு எதுவும் இல்லாதிருந்தால்தான் இந்த இரண்டு காரியங்களையும் நாம் செய்யமுடியும். கிறிஸ்துவின் சரீரத்தில் நாம் ஒவ்வொருவரும் வித்தியாசமான அவயவங்கள் என்பதைப் பார்த்தோம். "சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. மேலும், சரீர அவயவங்களில் கனவீனமாய்க் காணப்படுகிறவைகளுக்கே அதிக கனத்தைக் கொடுக்கிறோம்" (1 கொரி 12:22,23).

விசுவாசிகளின் இருதயத்தில் உண்டாயிருக்கும் ஒற்றுமை எந்த அளவுக்கு இருக்கவேண்டும் என்றால் இந்த எல்லா வித்தியாசமான அவயவங்களும் தேவனை ஒருமனப்பட்டு, மகிமைப்படுத்தி துதிக்கும்போது, அந்தத் துதி ஒரே வாயிலிருந்து வெளிப்படுவதைப் போல் இருக்கவேண்டும். விசுவாசிகள் ஒருமனப்பட்டு தேவனைத் துதித்தும்போது தேவபிரசன்னம் இறங்கிவருகிறது. ஏனென்றால் அதின்மூலம் தேவன் மகிமைப்படுகிறார்.

தான் மகிமைப்படவேண்டும் என்பதற்காகவே தேவன் மனிதனை சிருஷ்டித்தார். மனிதன் பாவத்தில் விழுந்தபோதும் தன்னுடைய குமாரன் மூலமாக அவனை இரட்சித்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனை மகிமைப்படுத்துவது எப்படி? மத்தேயு 5:16ல் இயேசு சொல்கிறார் : "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது". எனவே நம்முடைய கிரியைகள் மூலமாகவும் தேவனை மகிமைப்படுத்தலாம்.

அடுத்தாக நம்முடைய கனி நிறைந்த வாழ்க்கை நிச்சயமாக தேவனை மகிமைப்படுத்தும். இயேசு சொல்கிறார்: "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்" (யோவான் 15:8). இந்த வசனத்தின்படி சபை ஒருமனப்பட்டு, ஒரே வாயினால் தேவனைத் துதிக்கும்போது அவர் மகிமைப்படுகிறார். தாவீது சொல்கிறார்: "கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள், யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர்பேரில் பயபக்தியாயிருங்கள்" (சங் 22:23). "எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்." (1 பேதுரு 4:11).

பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக. (ரோமர் 15:6).

தேவ வசனத்தினால் பொறுமையும் ஆறுதலும் உண்டாகிறது என்று 4-வது வசனத்தில் அறிவித்த பவுல் இந்த வசனத்தில் அவற்றின் உறைவிடம் தேவன் என்கிறார். அவற்றை அருளிச்செய்வது பிதாவாகிய தேவன். "நன்மையான எந்த ஈவும், பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது" (யாக் 1:17). "அவர் நீடிய பொறுமை உள்ளவர்" (2 பேதுரு 3:9) என்பதை அறிவோம். தன்னை மறுதலித்த பேதுருவிடமும் அவர் பொறுமையுள்ளவராகத்தான் இருந்தார். உயிர்த்தெழுந்த தன்னை நம்ப மறுத்த தோமாவிடமும் பொறுமையுள்ளவராகத்தான் இருந்தார். என்னிடமும் உங்களிடமும் கூட இன்று தேவன் நீடிய பொறுமையுள்ளவராகத்தான் இருக்கிறார். அவ்விதமாகவே அவர் சகலவிதமான ஆறுதலின் தேவனாகவும் இருக்கிறார்

(2 கொரி 1:3). பொறுமையையும், ஆறுதலையும் தேவன் தான் அருளிச்செய்யவேண்டும்.

பொறுமையுள்ளவர்களால்தான் மற்றவர்களை ஆறுதல்படுத்த முடியும். தன்னுடைய பொறுமையையும், ஆறுதலையும் தன்னுடைய பிள்ளைகளுக்கு கிருபை வரங்களாக அருளிச்செய்ய தேவன் வாஞ்சையோடு இருக்கிறார். நம்முடைய தகுதியை அவர் கணக்கிட்டுப் பார்த்திருப்பாரானால் அவரிடமிருந்து ஒரு வரத்தையும் நாம் பெற்றிருக்கமுடியாது. நம்முடைய வரங்களைக் குறித்து பெருமைப்படும் நாம் இதை மனதில் வைத்துக்கொள்வோம்.

"கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே" என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். அவர் ஒளியாயிருக்கிறதுபோல நாமும் ஒளியில் நடக்கவேண்டும் (1 யோவான் 1:7). அவர் நடந்தபடியே நாமும் நடக்கவேண்டும் (1 யோவான் 2:6). அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறதுபோல் நாமும் சுத்தமுள்ளவர்களாயிருக்கவேண்டும் (1 யோவான் 3:3). பேதுரு சொல்கிறார்: "கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்" (1 பேதுரு 2:21).

தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்துக்கொள்ள சபையாகிய நம்மிடம் ஏக சிந்தை வேண்டியதாயிருக்கிறது. **ஏக சிந்தையோடு சபை விசுவாசிகள் செயல்படாததனால்தான் அவர்களுக்குள் யார் பெரியவன், யார் சிறியவன் என்ற பாகுபாடுகள் உருவாகின்றன.** இந்த ஏக சிந்தனையை சபைக்கு வழங்கும்படியாக பவுல் இந்த வசனத்தில் ஜெபிக்கிறார். இத்தகைய ஜெப வேண்டுதல்கள் 1 தெச 5:23; 2 தெச 3:5, 16, 2 தீமோ 1:18, எபி 13:20-21 லும் காணப்படுகின்றன. அந்த ஏக சிந்தையும் கிறிஸ்து இயேசுவின் மாதிரியின்படியே இருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார். "கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது" என்று பிலிப்பியர் 2:5ல் சொல்லப்பட்டதைத் தியானித்திருக்கிறோம்.

ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள் (ரோமர் 15:7)

ரோமர் 14:1 முதல் 15:6 வரை நாம் தியானித்த வேதபகுதியின் முடிவுரையாக இந்த வசனம் அமைகிறது. கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டிருக்கிறார் என்ற நிச்சயம் நமக்கு உண்டு. சொல்லப்போனால்

இந்த நிச்சயத்தில்தான் நம்முடைய இரட்சிப்பு அடங்கியிருக்கிறது. நம்முடைய நித்தியம் அதைத்தான் ஆதாரமாகக் கொண்டது. "நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போது, நாம் அக்கிரமக்காரர்களாக இருக்கும்போது" (ரோமர் 5:6), பரிசுத்தமான தேவன் நம்மை ஏற்றுக்கொண்டார். தேவனை மகிமைப்படுத்தும்படியாகவே கிறிஸ்து இரட்சிப்பின் பாத்திரங்களாக நம்மை அங்கீகரித்தார். அவர் பிதாவிடம் இவ்விதமாகச் சொல்லி ஜெபிக்கிறார் : "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படிக்கு நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்து முடித்தேன்" (யோவான் 17:4).

இந்த வசனத்தில் சொல்லப்படும் ஆலோசனை பலமுள்ளவர்கள் பலவீனர்களாகிய இரு தரத்தார்களுக்கும் கொடுக்கப்படுகிறது. கிறிஸ்து எவ்விதமாக நம்மை, நம்முடைய சகல பலவீனங்களின் மத்தியிலும் ஏற்றுக்கொண்டாரோ அவ்விதமாகவே ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்படியாக பவுல் ஆலோசனை தருகிறார். "நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்" என்று யோவான் 13:15ல் கிறிஸ்து சொல்லுகிறார். கிறிஸ்து பலவான்களையும், பரிசுத்தவான்களையும், கல்விமான்களையும், ஞானிகளையும் தேடி வரவில்லை. "நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்கவந்தேன்" என்று மத்தேயு 9:13, மாற்கு 2:17, லூக்கா 5:32ல் அவர் சொல்கிறார். அவர் உலகில் இருந்த நாட்களில் அவரைச் சுற்றிலும் பாவிகளும், பலவீனர்களும், ஆயக்காரரும், பல்வேறு குறைகள் உள்ளவர்களுமே காணப்பட்டார்கள். "தன்னிடத்தில் வந்த ஒருவனையும் அவர் புறம்பே தள்ளவில்லை" (யோவான் 6:37). நாமும் அவருடைய மாதிரியின்படியே செய்யவேண்டும் என கிறிஸ்து எதிர்பார்க்கிறார்.

இன்னொரு காரியத்தையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து இயேசு ஒரு மனிதனை ஏற்றுக் கொள்வதற்கும், கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு பலவீனமான மனிதனை ஏற்றுக்கொள்வதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. ஒரு பலவீனனை ஏற்றுக் கொள்ள தேவகுமாரனாகிய கிறிஸ்து தன்னுடைய பரலோக மேன்மைகளை எல்லாம் துறந்து, உலகில் அவதரித்து, அவமானமான வேதனை நிறைந்த பாடு மரணத்தைச் சகிக்கவேண்டியதிருந்தது. ஆனால் ஒரு விசுவாசி தன்னுடைய சகவிசுவாசியை ஏற்றுக்கொள்ள எந்த ஒரு தியாகத்தையும் செய்யவேண்டியதில்லை. அதனால் அவன் எதையும் இழந்துபோவதில்லை.

"யூதரானாலும், புறஜாதியாரானாலும் இரட்சிப்பு ஒன்றே" (வசனம் 8-13)

கிறிஸ்தவ அன்பு பலவீனர்களைத் தாங்குவதில் வெளிப்படவேண்டும் என்பதை முந்தின அதிகாரத்தின் தொடர்ச்சியாக இந்த அதிகாரத்தில் 7-வது வசனம் வரை அறிவித்ததைப் பார்த்தோம். தன்னுடைய நிருபத்தை முடிப்பதற்கு முன்பாக யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள், புறஜாதியாராக இருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவர்கள் ஆகியோரிடம் காணப்பட்ட கருத்து வேறுபாடுகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவர பவுல் விரும்புகிறார் என்பதை 8 முதல் 13 வரையுள்ள வேதபகுதியில் அறிந்துகொள்கிறோம். இதன் பின்னணியில் நாம் சில காரியங்களை அறிந்துகொள்ளவேண்டும்.

யூதர்கள் மத்தியில், யூதர்களுக்காக மட்டுமே கிறிஸ்து ஊழியம்செய்தார். அவருடைய மரணத்துக்கும், உயிர்த்தெழுதலுக்கும் பிறகுதான் சுவிசேஷம் புறஜாதியாருக்கு அறிவிக்கப்பட அனுமதி வழங்கப்பட்டது. எனவே ஆதி நாட்களில் கிறிஸ்தவ சபை யூதர்களை மட்டுமே உள்ளடக்கியதாக இருந்தது. சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அதை ஏற்றுக்கொண்ட முதல் புறஜாதி மனிதன் செசரியா பட்டணத்து ரோம ராணுவத்தின் நூற்றுக்கு அதிபதி கொர்நேலியு. அவருடைய இரட்சிப்பைக் குறித்து அப்போஸ்தலர் 10-வது அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வெகுவிரைவில் அந்தியோகியா, எபேசு, பிலிப்பு, கொரிந்து, ரோமாபுரி ஆகிய பட்டணங்களில் புறஜாதியார் மத்தியில் சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. எருசலேமில் யூதர்களை மட்டும் உள்ளடக்கிய சபைத்தலைவர்களும், மூப்பர்களும் புறஜாதியாருக்கு சுவிசேஷம் சொல்லப்படுவதை அதிகமாக விரும்பவில்லை. புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமானால் மோசேயின் நியாயப்பிரமாண முறைமைகளின்படி விருத்தசேதனம் செய்தல், ஓய்வு நாட்களை அனுசரித்தல், உணவுமுறைகளைக் கடைப்பிடித்தல் போன்ற கடமைகளைக் கைக்கொள்ளவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினார்கள்.

"நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" (அப் 15:1) என்று வாசிக்கிறோம். **கிறிஸ்தவம் என்பதை யூத கோட்பாடுகள் மற்றும் சடங்காச்சாரங்களின் ஒரு விரிவாக்கமாகவே அவர்கள் கருதினார்கள். அது ஒரு புதிய மார்க்கம் என்பதை யூதர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.** ஆதி அப்போஸ்தலர்கள் மத்தியிலும் அதுகுறித்த சரியான வெளிப்பாடு

இல்லை. சில சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிவதனால் ஒருவன் கிறிஸ்தவனாவதில்லை.

கிறிஸ்தவம் (Christianity) யூத கோட்பாடுகளில் (Judaism) இருந்து முற்றிலும் வித்தியாசமானது என்பதை நிலைநிறுத்தியவர் அப்போஸ்தலனாகிய பவுல். இரண்டும் வேறுபட்டது என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே கிறிஸ்தவர்களை பவுல் உபத்திரவப்படுத்தி வந்தார். கிறிஸ்து அவருக்குத் தன்னை தேவகுமாரனாக வெளிப்படுத்தியபின் கிறிஸ்தவம் இதுவரை அதின் நிழலாட்டமாக வெளிப்படுத்தப்பட்ட யூதகோட்பாடுகளில் சம்பந்தப்படவில்லை என்பதை பவுல் தெளிவாக அறிந்துகொண்டார். யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஒரே தேவனையே ஆராதிக்கிறவர்களாக இருந்தாலும், பழைய ஏற்பாட்டு வேதபுத்தகத்தின் மேல் நம்பிக்கை உடையவர்களாக இருந்தாலும் கிறிஸ்துவின் வருகைக்குப்பின் இரட்சிப்பு யூதர்களுக்கு மட்டுமே என்ற நிலை முற்றிலுமாக மாறிவிட்டது என்பதை பவுல் தைரியமாக அறிவித்தார். நியாயப்பிரமாண விதிமுறைகள் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன என்பதை உறுதியாக அறிவித்தார்.

யூதர்களானாலும் சரி, புறஜாதியாரானாலும் சரி, கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதன்விளைவாக அவர்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கங்களாகிவிடுகிறார்கள். யூத கோட்பாடுகளுக்கும் சபைக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல் போகிறது. மரித்து, உயிர்த்தெழுந்து, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கிறிஸ்து, முதல்முறையாக அப் 9:6-15லும், இரண்டாவது முறையாக அப் 10:13-16லும் மனிதர்களோடு இடைபடுகிறார். இரண்டு இடங்களிலேயுமே புறஜாதியாருக்கு சுவிசேஷம் அறிவிப்பதைக் குறித்தே அவர் பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

யோவான் ஸ்நானனை இஸ்ரவேலர் ஏற்றுக்கொள்ளாததினால் அவரை அனுப்பிய திருத்துவத்தின் முதல் நபராகிய பிதாவை அவர்கள் புறக்கணித்தார்கள். திருத்துவத்தின் இரண்டாவது நபராகிய கிறிஸ்துவை அவர்கள் சிலுவையில் அறைந்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் முழுமையான நிறைவினால் ஊழியம் செய்த ஸ்தேவானைக் கொலை செய்து திருத்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரையும் புறக்கணித்தார்கள். அவர்களுடைய புறக்கணிப்பு நிறைவானதின் விளைவாக இன்று சபையின் நாட்களிலே இஸ்ரவேல் கனநித்திரையின் ஆவியோடும், காணாதிருக்கிற கண்களோடும், கேளாதிருக்கிற காதுகளோடும் இன்று செயல்படுகிறார்கள் என்பதை ரோமர் 11-வது அதிகாரத்தில் பார்த்தோம்.

ஆனாலும் அவர்களுக்கு மகிமையான எதிர்காலம் உண்டு (ரோமர் 12).

மேலும், பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கு, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் இயேசுகிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும் (ரோமர் 15:8)

கிறிஸ்து பூமியில் இருந்த நாட்களில் விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரராக இருந்தார். சுவிசேஷம் யூதர்களுக்கு மட்டுமே அறிவிக்கப்பட்டது. யோவான் 1 : 11 சொல்கிறபடி, "அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை". தன்னுடைய சீஷர்களிடம், "நீங்கள் புறஜாதியார் நாடுகளுக்குப் போகாமலும், சமாரியர் பட்டணங்களில் பிரவேசியாமலும், காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்குப் போங்கள்" (மத் 10:5,6). தன்னைத்தேடிவந்த கானானியஸ்திரீயிடம் சொல்கிறார்: "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்ல" (மத் 15:24). அவரை நாடி தூர இடத்திலிருந்து வந்த கிரேக்கர்களை அவர் சந்தித்ததாக வேதத்தில் சொல்லப்படவில்லை (யோவான் 12:20,22). இவ்வாறு இயேசுகிறிஸ்து விருத்தசேதனம் செய்துகொண்ட ஆபிரகாமின் சந்ததியாரான யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்கிறவராகக் காணப்பட்டார். கிறிஸ்து ஒரு யூதர் என்பது மட்டுமல்ல, அவருடைய 12 அப்போஸ்தலர்களும், 120 சீஷர்களும் யூதர்கள். வேதத்தில் ஐந்தில் நான்கு பகுதி யூதர்களைப் பற்றியது.

இதற்கான காரணம் வசனத்தின் முற்பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. பிதாவாகிய தேவன் இஸ்ரவேலின் முற்பிதாக்களோடு செய்துகொண்ட வாக்குத்தத்தங்களை உறுதியாக்கும்படிக்கே கிறிஸ்து யூதர்களுக்கு ஊழியக்காரராக இருந்தார். தேவன் அவர்களோடு செய்து கொண்ட உடன்படிக்கைகள் உண்மையானவை என்பதை நிரூபித்துக் காட்டினார். உடன்படிக்கை என்பது தேவன் தன்னுடைய சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு மனிதனுக்கு வழங்கும் வாக்குறுதியாகும். தேவன் ஆபிரகாமோடு செய்துகொண்ட உடன்படிக்கைகளை ஆதி 12:1-3; 15:1-7; 18-21; 17:1-27 வாசித்து அறிந்துகொள்ளுங்கள். "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி 12:3). "உன் சந்ததி வானத்து நட்சத்திரங்களைப் போலிருக்கும்" (ஆதி 15:5). "உனக்கும் உனக்குப்பின் வரும் உன் சந்ததிக்கும் நான் தேவனாயிருக்கும்படி எனக்கும் உனக்கும்,

உனக்குப் பின் தலைமுறை தலைமுறையாகவரும் உன் சந்ததிக்கும் நடுவே என் உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்" (ஆதி 17:7). தேவன் ஈசாக்குடனும் (ஆதி 26:2,3) யாக்கோபுடனும் (ஆதி 28:13-15; 32:28.29; 48:2-4) கூட உடன்படிக்கை செய்திருந்தார். தாவீதுடன் தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையை 2 சாமு 7:4-17, சங் 89:3,4, 30-36 வாசித்துப் பாருங்கள். தாவீதிடம் அவர் சொல்கிறார்: "உன் வீடும், உன் ராஜ்யமும் என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" (2 சாமு 7:16).

கிறிஸ்து தன்னில்தானே சத்தியமாயிருந்தும் (யோவான் 14:6; 18:37) தேவனுடைய சத்தியத்தினிமித்தம், அவருடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானவை என்பதை உறுதிப்படுத்தும் படியாகவே யூதர்களுக்கு ஊழியக்காரராக பூமியில் அவதரித்தார். கிறிஸ்துவின் பிறப்பை மரியாளிடம் அறிவிக்கும் தேவதூதர் சொல்கிறார் : "கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" (லூக்கா 1:32, 33).

புறஜாதியாரும் இரக்கம் பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன். அந்தப்படி: இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கை பண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம் பாடுவேன் என்று எழுதியிருக்கிறது. (ரோமர் 15:9)

கிறிஸ்து விருத்தசேதனமுள்ள யூதர்கள் மத்தியில் மட்டுமே ஊழியம் செய்ததின் இரண்டு காரணங்கள் இந்த வேத பகுதியில் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. முற்பிதாக்களுக்கு தேவன் வழங்கிய வாக்குத்தத்தங்கள் (வசனம் 8)

2. தாமதமாக இரக்கம் பெற்ற புறஜாதியாரிடமிருந்து தேவன் பெறும் மகிமை (வசனம் 9)

"விருத்தசேதனமுள்ளவராய், நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டவராய்" (கலா 4:5), விருத்தசேதனமுள்ளவர்கள் மத்தியில் மட்டும் கிறிஸ்து ஊழியம் செய்தார் என்றாலும், தன்னுடைய ஊழியத்தின் உச்சகட்டத்தில் அவர் சொல்லுகிறார் : "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு;

அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவான் 10:16). விருத்தசேதனக்காரர்களை அவர் இவ்விதமாக எச்சரிக்கிறார் : "தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் (புறஜாதிகளுக்கு) கொடுக்கப்படும்" (மத் 21:43). மேசியாவாக வெளிப்பட்ட கிறிஸ்துவை யூதர்கள் புறக்கணித்ததினிமித்தம் புறஜாதியார் தேவனிடமிருந்து இரக்கம் பெறவிருக்கிறார்கள் என்பதை இந்த இரண்டு வசனங்களும் முன்னறிவிக்கின்றன. அதன் மூலமாக தேவன் மகிமைப்படவிருக்கிறார்.

இந்த வசனத்தில் 'இரக்கம்' என்ற வார்த்தை புறஜாதியார் கிறிஸ்து மூலமாக பெற்றுக்கொள்ளவிருக்கும் இலவசமான இரட்சிப்பைக் குறிப்பிடுகிறது. தேவனுடைய ராஜ்யம் விரிவடைவதின் மூலமாக தேவன் நிச்சயமாகவே மகிமைப்படப்போகிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து சீஷர்களிடம் சொல்கிறார் : "மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது" (லூக்கா 24:47).

வசனத்தின் பிற்பகுதியில் "இதினிமித்தம் கர்த்தாவே, ஜாதிகளுக்குள்ளே உம்மைத் துதித்து, உம்முடைய நாமத்திற்குச் சங்கீதம் பாடுவேன்" (சங் 18:24, 2 சாமு 22:50) என்ற பழைய ஏற்பாட்டு வசனத்தை பவுல் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவின் முன்னோடி என்ற முறையில் தாவீதிடமிருந்து இந்த வார்த்தை வெளிப்படுகிறது. சங்கீதம் 22:22ல் தாவீது கிறிஸ்துவின் வாயாக இருந்து, "உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதிப்பேன்" என்கிறார். நேரடியான முறையில் புறஜாதியார் மத்தியில் கிறிஸ்து ஊழியம் செய்ததில்லை என்பது உண்மைதான். ஆனாலும் புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக தன்னுடைய மிகச்சிறந்த ஊழியரான பவுலையும், இன்னும் பலரையும் கிறிஸ்து பயன்படுத்தினார் (அப் 9:15). அவர்கள் புறஜாதிகளிடம் செய்யும் ஊழியத்தை கிறிஸ்துவே செய்வது போல சங்கீத புத்தகத்தின் வசனங்கள் சொல்லுகின்றன. புறஜாதியாருக்கு இந்த ஊழியக்காரர்கள் மூலமாக தேவனுடைய நாமம் அறிவிக்கப்படாத நிலையில் தேவன் மகிமைப்படமுடியாது, யாரும் அவரை அறிக்கையிடமுடியாது, யாரும் அவருடைய நாமத்தைச் சொல்லமுடியாது, யாரும் அவரைப் புகழ்ந்து சங்கீதம் பாடமுடியாது. மேலும் அடுத்த வசனம் சொல்கிறபடி அவர்கள் யூதர்களோடு சேர்ந்து களிகூரமுடியாது.

மேலும், புறஜாதிகளே, அவருடைய ஜனங்களோடே கூடக்

களிகூருங்கள் என்கிறார். (ரோமர் 15:10)

உபாகமம் 32:43ல் மோசே சொல்வது தேவனே சொல்லுவதைப்போல் இந்த வசனம் அறிவிக்கிறது. "ஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள்; அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து, தமது தேசத்தின்மேலும், தமது ஜனங்களின்மேலும் கிருபையுள்ளவராவார்". புறஜாதியார் தேவனுடைய ஜனங்களான யூதர்களோடுகூட ஐக்கியப்பட்டு மகிழ்ச்சியடையும்படியான அழைப்பு இந்த வசனத்தின் மூலமாக விடுவிக்கப்படுகிறது. இது வரும் நாட்களில் அவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வதின்மூலம் தேவனுடைய பிள்ளைகளாக அங்கிகரிக்கப்படுவதைக் குறித்த முன்னறிவிப்பாக எடுத்துக்கொள்ளலாம்.

சங்கீதம் 67:3,4-லும் இதுபோன்ற ஒரு வசனம் காணப்படுகிறது. "தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக. தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்; ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்". யூதர்களானாலும் சரி, புறஜாதியார்களானாலும் சரி, சுவிசேஷம் உலகமெங்கும் அறிவிக்கப்பட்டு, தேவனுடைய ராஜ்யம் விரிவாக்கப்படுவதைக் குறித்து நிச்சயமாகவே மனமகிழ்ச்சியடைவார்கள் என்பது உறுதி. இதினிமித்தம் தேவன் துதிக்கப்படுவார்.

மேலும், புறஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் புகழுங்கள் என்றும் சொல்லுகிறார் (ரோமர் 15:11).

இந்த வசனம் சங்கீதம் 117:1-ல் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. அது சொல்கிறது : "ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள்". தேவனைப் பற்றி அறியாத ஜனங்களால் தேவனைத் துதிக்கவோ, புகழவோ முடியாது. எனவே இரட்சிப்பு எல்லா ஜனங்களுக்கும் அருளப்படவிருக்கிறது என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது. தேவனை அறிந்து அவரை ஏற்றுக்கொண்டவர்களால்தான் அவரை உண்மையான முறையில் துதிக்கமுடியும். "சீயோனில் வாசமாயிருக்கிற கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணி, அவர் செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள்" (சங் 9:11). "தேவனே ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக" (சங் 67:3) என்பது போன்ற பல வசனங்கள்

வேதத்தில் காணப்படுகின்றன.

மேலும், ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கை வைப்பார்கள் என்று ஏசாயா சொல்லுகிறான். (ரோமர் 15:12)

ஏசாயா 11:10ல் இவ்விதமாகச் சொல்லுகிறார்: "அக்காலத்திலே, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும் ஈசாயின் வேருக்காக ஜாதிகள் விசாரித்துக்கேட்பார்கள்; அவருடைய தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்". வெளிப்படுத்தின விசேஷம் 22:16ல் தாவீதின் வேர் என்று அழைக்கப்படும் இயேசுகிறிஸ்து ஏசாயாவினால் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் வேர் (ஏசாயா 11:1, 1 சாமு 17:58) என்று அழைக்கப்படுகிறார். ஒரு மரம் வெட்டப்பட்டபின்பும் வேர் உயிரோடு இருக்கிறது. அதிலிருந்து மீண்டும் மரம் உருவாகிறது. இஸ்ரவேல் என்ற மரம் வெட்டப்பட்டாலும் சபை என்ற மரம் வெளிப்படுகிறது. தாவீது ராஜா யூதர்களை மட்டுமே ஆளுகை செய்தார் என்றால் அவருடைய சந்ததியில் வெளிப்படும் இயேசுகிறிஸ்து புறஜாதியாரையும் ஆளுகைசெய்யவிருக்கிறார் என்பது தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்படுகிறது. தங்களது தேவனுடைய ராஜ்யத்தில் புறஜாதியாரும் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள் என்ற சத்தியத்தை யூதர்கள் எளிதில் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதினால் மீண்டும் மீண்டும் அவர்களுடைய வேதபுத்தகத்தில் உள்ள வேதவசனங்களில் இருந்தே பவுல் தன்னுடைய வாதத்துக்கு ஆதாரங்களைக் கொடுக்கிறார்.

புறஜாதியார் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கை வைப்பார்கள் என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மனித இனத்தின் பாவமன்னிப்பு கிறிஸ்து என்கிற இரட்சகர்மேல் வைக்கும் விசுவாசத்தையே அடிப்படையாகக் கொண்டது. அவன் யூதனா அல்லது புறஜாதியானா என்பது இனி கருதப்படப்போவதில்லை. பவுல் சொல்வது போல, "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை; அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்துஇயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்" (கலா 3:28,29). ஆபிரகாமின் சந்ததியார் என்ற முறையில் கிறிஸ்தவர்கள் எல்லாரும் இஸ்ரவேலர்களே.

பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால்

உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக (ரோமர் 15:13)

பவுலின் அருமையான சிறிய ஜெபத்துடன் இந்த வேதபகுதி நிறைவடைகிறது. சகல நம்பிக்கைக்கு ஊற்றாக இருப்பதால் அவர் "நம்பிக்கையின் தேவன்" என்று அழைக்கப்படுகிறார். நிகழ்காலத்துக்கும் அவரை நம்பலாம், எதிர்காலத்துக்கும் அவரை நம்பலாம். நம்முடைய சகல நம்பிக்கைக்கும் அவரே அஸ்திபாரமாக இருக்கிறார். யூதர்களும் அவர்மேல் நம்பிக்கை வைக்கலாம். புறஜாதியாரும் அவர்மேல் நம்பிக்கை வைக்கலாம். அவர்தான் நம்மில் நம்பிக்கையை உருவாக்குகிறவர். அதை படிப்படியாகக் கட்டி எழுப்புகிறவர். அதைக் கனப்படுத்துகிறவர். இந்த தேவன் எல்லாவிதமான சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நம் எல்லாரையும் நிரப்பவேண்டுமென்று பவுல் இந்த வசனத்தில் ஜெபிக்கிறார். இவை இரண்டுமே விசுவாசத்தினாலே உண்டாகிறது என்பதையும் பவுல் அறிவிக்கிறார். ஏனென்றால் கிறிஸ்தவர்கள் அனுபவிக்கும் சந்தோஷமும் சமாதானமும் ஆவிக்குரிய வரங்களும் விசுவாசத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இவைகளைப் பெற்றுக்கொண்டதின் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் பலத்திலே சபையாருக்கு நம்பிக்கை பெருகும் என்ற நிச்சயத்தை உடையவராய் பவுல் பேசுகிறார். ஏனென்றால் சகல கிருபை வரங்களும் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே நமக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. "இவைகளையெல்லாம் அந்த ஒரே ஆவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்" (1 கொரி 12:11).

நம்முடைய நம்பிக்கை பெருகவேண்டும் என்கிறார் பவுல். பரிசுத்த ஆவியின் பலத்தினாலே நாம் அவரை நம்ப அறிந்துகொள்ளவேண்டும். ஆவியானவர் மேல் நம்பிக்கை இல்லாத நிலையில் ஒருவரும் உயிர்ப்பிக்கப்பட முடியாது. நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் உண்மையிலேயே கடினமானவை. ஆவியானவருடைய ஒத்தாசையின்றி நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கவே முடியாது. எல்லா சூழ்நிலைகளிலும் அவர் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையே நமக்கு பெலன் தருகிறது. "அவர் நமக்குள் வாசமாயிருந்து நம்மை வழிநடத்துகிறார்" (யோவான் 14:17). "எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14). நம்முடைய போராட்டங்களில் நாம் வெற்றியடையும்படியாக "ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்" (ரோமர் 8:26).

அடுத்ததாக கிறிஸ்தவர்களாகிய நாம் எதை நம்பவேண்டும் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். நாம் எதை நம்பவேண்டும் என்பது ரோமர் நிருபத்தில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

1. தேவன் நம்மைக் குறித்து என்ன சொல்கிறார் என்பதை நம்பவேண்டும் (நாம் எல்லாருமே பாவிகள்)

2. பாவத்தைக் குறித்துவேதம்என்ன சொல்கிறது என்பதை நம்பவேண்டும் (நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது)

3. கிறிஸ்துவைக் குறித்து தேவன் என்ன சொல்கிறார் என்பதை நம்பவேண்டும் (அவர் தேவனுடைய குமாரன்)

4. சிலுவையைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை நம்பவேண்டும் (அது பாவமனிதனை தேவனோடு ஒப்புரவாக்கிவிட்டது).

பவுலின் முடிவுரை (வசனம் 14-30)

என் சகோதரரே, நீங்கள் நற்குணத்தினால் நிறைந்தவர்களும், சகல அறிவினாலும் நிரப்பப்பட்டவர்களும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று நானும் உங்களைக் குறித்து நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 15:14)

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் முந்தின வசனத்தோடு நிறைவு பெற்றுவிட்டது என்பதை ஏற்கனவே பார்த்தோம். அதிகாரத்தின் மீதியான வசனங்கள் நிருபத்தின் முடிவுரையாகக் கருதப்படவேண்டும். இதில் ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளோடு தன்னை நெருக்கமான முறையில் ஐக்கியப்படுத்தி, தன்னைப்பற்றிய பல காரியங்களை பவுல் அவர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். தன்னுடைய பிரயாணத் திட்டங்களை அவர்களுக்கு அறிவித்து தனக்காக அவர்கள் ஜெபிக்கும்படியாக வேண்டிக்கொள்கிறார்.

ரோமாபுரி சபையாரைப் பற்றி மூன்று காரியங்களை இந்த வசனத்தில் பவுல் குறிப்பிட்டு, அவர்களைப் புகழ்ந்து பாராட்டுகிறார்.

1. அவர்கள் நற்குணம் நிறைந்தவர்கள்
2. எல்லா அறிவினாலும் நிரம்பப்பெற்றவர்கள்
3. மற்றவர்களை அறிவுறுத்தக் கூடியவர்கள்

இதுவரை பவுல் ரோமாபுரிக்குச் சென்றதில்லை என்றாலும் அவர்களைக் குறித்த காரியங்களை அறிந்தவராய், அவர்கள்மேல் மிகுந்த நம்பிக்கை உடையவராய் இருக்கிறார். போலியான முறையில் யாரையும் புகழவேண்டும் என்ற அவசியம் பவுலுக்கு இல்லை. பொதுவாக நாம் மற்றவர்களில் குறைகளைக் கண்டுபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். அப்படி இருப்பது தவறு, யோவானும் "சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்" (1 யோவான் 2:21) என்று தன் வாசகர்களைப் பாராட்டுவதைக் கவனியுங்கள். மற்றவர்களைக் பாராட்டும்போது அவர்கள் நாம் சொல்வதை கவனிக்க ஆரம்பிக்கிறார்கள்.

அப்படியிருந்தும், சகோதரரே, புறஜாதியாராகிய பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து புறஜாதிகளுக்கு இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாகும்பொருட்டு, (ரோமர் 15:15)

ரோம சபையார் நல்லவர்களாகவும் அறிவாளிகளாகவும், ஒருவருக்கொருவர் புத்திசொல்ல வல்லவர்களுமாய் இருந்தாலும், புறஜாதியார் மத்தியில் ஆசாரிய ஊழியத்தைச் செய்யும்படியாக தேவன் தன்னை தெரிந்துகொண்டதினிமித்தம், தான் அவர்களோடு இடைபடுவதாக பவுல் அறிவிக்கிறார். நியாயப்பிரமாண நாட்களில் எவ்விதமாக மோசேயும், ஆரோனும் அவருடைய குமாரர்களும் இஸ்ரவேல் சபையாருக்கு ஆசாரியர்களாகச் செயல்பட்டு, இஸ்ரவேலர் கொண்டு வந்த பலிகளை தேவ சமுகத்துக்குக் கொண்டுவந்து தேவனால் அங்கீகரிக்கும்படி உதவி செய்தார்களோ, அவ்வண்ணமாகவே புதிய ஏற்பாட்டு நாட்களில் புறஜாதியாரின் ஆசாரியன் என்ற முறையில் அவர்கள் கொண்டுவரும் ஆவிக்குரிய பலிகள் பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டு தேவனால் அங்கிகரிக்கப்படும்படியாக தான் செயல்படவிருப்பதை பவுல் குறிப்பிடுகிறார்.

இன்று தேவசமுகத்துக்கு நாம் கொண்டுவரும் பலிகள், ஜெபங்கள், ஸ்தோத்திரங்கள் எல்லாமே பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட வேண்டியதிருக்கிறது. பழைய ஏற்பாட்டு நாட்களில் பலியாகக் கொண்டுவரப்படும் ஆடு, மாடு முதலியவை உப்பு, எண்ணெய் முதலியவற்றால் ஆசாரியர்கள் பரிசுத்தப்படுத்தவேண்டியதாயிருந்தது. தேவனால் அபிஷேகிக்கப்பட்ட ஆசாரியர்கள் இந்தப் பணிகளை நிறைவேற்றி வந்தார்கள். புதிய ஏற்பாட்டு நாட்களில் நம்முடைய சரீரமே பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுள்ள ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கப்படவேண்டும் என்று ரோமர் 12:1-ல் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம்.

ஆசாரியன் என்ற முறையில் பவுல் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளையே தேவசமுகத்தில் பலியாக படைப்பதாகவும் இந்த வசனத்திலிருந்து பொருள் கொள்ளமுடியும் விசுவாசிகள் ஒவ்வொருவரையும் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினிமித்தம் பரிசுத்தமாக்கிவிடுகிறார். "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" (யோவான் 17:19) என்று கிறிஸ்து பிதாவிடம் ஜெபித்திருக்கிறார்.

தேவன் எனக்கு அளித்த கிருபையினாலே உங்களுக்கு ஞாபகப்படுத்தும்படிக்கு இவைகளை நான் அதிக தைரியமாய் எழுதினேன். (ரோமர் 15:16)

எவ்வாறு பேதுரு யூதர்களின் ஊழியக்காரராகத் தெரிந்து கொள்ளப்பட்டாரோ, அவ்வாறு புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும் கிருபை அப்போஸ்தலனாகிய பவுலுக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை ரோமாபுரி சபையாருக்கு பவுல் நினைவுபடுத்துகிறார். கலாத்தியர் 2:7,8ல் அவர் சொல்கிறார், "விருத்தசேதனமுள்ளவர்களுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி பேதுருவைப் பலப்படுத்தினவர் புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கும்படி என்னையும் பலப்படுத்தினபடியால், விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டது போல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டது". இதன் விளைவாக பவுல் தைரியமாக சகல சத்தியங்களையும் ரோமசபைக்கு எழுதியிருப்பதாகச் சொல்கிறார்.

இவ்வண்ணமாகவே பேதுருவும் சொல்வதைக் கவனியுங்கள்: "இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற

சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன்" (2 பேதுரு 1:12). சபை விசுவாசிகள் உபதேசத்துக்கடுத்த காரியங்களை அறிந்திருந்தாலும், ஊழியர்கள் அதைக்குறித்து திருப்தியடைந்து விடக்கூடாது. விதைக்கப்பட்ட விதைகளில் பலவற்றை பறவைகள் வந்து பட்சித்துப்போடலாம். சில விதைகள் சீக்கிரமாய் முளைத்தாலும் உலர்ந்துபோகலாம். முள் வளர்ந்து அதை நெருக்கிப்போடலாம் (மத் 13:3-7). அறிவிக்கப்பட்ட சத்தியங்களை ஊழியர்கள் விசுவாசிகளுக்கு நினைப்பூட்டிக் கொண்டே இருக்கவேண்டும்.

ஆதலால் நான் தேவனுக்குரியவைகளைக் குறித்து இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மேன்மைபாராட்ட எனக்கு இடமுண்டு. (ரோமர் 15:17)

அப்போஸ்தலனாகிய பவுல் தான் பிதாவானவராகிய தேவனுக்காக குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக செய்த பணிகள் நிமித்தமாக பெருமை கொள்வதாக இந்த வசனத்தில் அறிவிக்கிறார். பவுல் மூலமாக கிறிஸ்துவே கிரியைகளை நடத்தினாலும் (2 கொரி 13:3), புறஜாதியார் மத்தியில் பவுல் நடப்பித்த அற்புதமான ஊழியங்களினிமித்தம் அவர் பெருமைப்படுவதில் தவறில்லை. கலாத்தியர் 6:4ல் அவர் சொல்கிறார்: "அவனவன் தன்தன் சுயகிரியையைச் சோதித்துப்பார்க்கக்கடவன்; அப்பொழுது மற்றவனைப் பார்க்கும் போதல்ல, தன்னையே பார்க்கும்போது மேன்மை பாராட்ட அவனுக்கு இடமுண்டு". எத்தனையோ எதிர்ப்புகள் போராட்டங்கள் மத்தியில் அவை நடப்பிக்கப்பட்டன. அதில் அவர் சந்தித்த வெற்றி இயேசுகிறிஸ்துவிடமிருந்து அவர் பெற்றுக்கொண்ட அப்போஸ்தல ஊழியத்தை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

தான் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மேன்மை பாராட்ட இடமுண்டு என்றுதான் பவுல் தாழ்மையோடு அறிவிக்கிறார். தான் மேன்மைபாராட்டுவதாகச் சொல்லவில்லை. 1 கொரிந்தியர் 1:30 மற்றும் 2 கொரிந்தியர் 10:17லும் "மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டக்கடவன்" என்கிறார். ஏனென்றால் "தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்" (2 கொரி 10:18). சீலாவுடன் இணைந்து அம்பிபோலி பட்டணத்தில் பவுல் செய்த ஊழியத்தினிமித்தம் அவர்கள் இருவரும் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" (அப் 17:6) என்று அழைக்கப்பட்டார்கள். ஆனாலும் அதுகுறித்து பவுல் தன்னை எந்த விதத்திலும் மேன்மைப்படுத்திக் கொள்ளவில்லை. 1 கொரி 9:16ல் அவர் சொல்லுகிறார்: "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான்

பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ".

புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும் தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை. (ரோமர் 15:18)

ஒரு ஊழியக்காரனது வெற்றியின் மூலமாக அவன் எவ்விதத்திலும் தன்னை பெருமைப்படுத்திக்கொள்ளக்கூடாது. தேவன் ஒருவரே அதன்மூலமாக மகிமைப்படவேண்டும். ஏனென்றால் அந்த வெற்றியின் பின்னணியில் இருந்து செயல்படுவது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே. "எல்லாரையும் மீட்கும்பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்துஇயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது. இதற்காகவே நான் பிரசங்கியாகவும், அப்போஸ்தலனாகவும், புறஜாதிகளுக்கு விசுவாசத்தையும் சத்தியத்தையும் விளங்கப்பண்ணுகிற போதகனாகவும் நியமிக்கப்பட்டிருக்கிறேன்; நான் பொய் சொல்லாமல் கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன்" (1 தீமோ 2:6,7). மனித இனத்தின் இரட்சிப்புக்காக மரித்தவர் கிறிஸ்து ஒருவரே. பவுல் சொல்கிறபடி : "பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினான். தேவனே விளையச் செய்தார் அப்படியிருக்க நடுகிறவனாலும் ஒன்றுமில்லை. நீர் பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை. விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்" (1 கொரி 3:5-7).

தன்னுடைய தனிப்பட்ட ஊழியத்தைக் குறித்து இந்த வேதபகுதியில் பின்வரும் வசனங்களில் ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளோடு பவுல் பேச ஆரம்பிக்கிறார். அவருடைய ஊழிய வெற்றியின் இரகசியங்கள் இவைதான்.

1. அற்புத அடையாளங்கள்
2. தேவ ஆவியின் பலம்
3. பவுல் மூலமாக வெளிப்பட்ட கிறிஸ்துவின் கிரியைகள்

பவுல் மூலமாக தேவன் நடப்பித்த முக்கியமான ஏழு அற்புதங்கள் அப்போஸ்தலருடைய நடபடிகளில் குறிப்பிடப்படுகின்றன.

1. பாப்போ பட்டணத்தில் மாயவித்தைக்காரன் குருடனாக்கப்பட்டது (அப் 13:6-12)
2. இக்கோனியா பட்டணத்தில் நடந்த பலவிதமான அடையாளங்களும் அற்புதங்களும் (அப் 14:1-3)
3. லீஸ்திரா பட்டணத்தில் பிறப்பிலிருந்தே சப்பாணியாயிருந்தவன் குணமடைதல் (அப் 14:8-10)
4. பிலிப்பி பட்டணத்தில் குறிசொல்ல ஏவுகிற ஆவியையுடைய பெண் குணமடைதல் (அப் 16:16-18)
5. எபேசு பட்டணத்தில் பவுலின் உடலில் பட்ட கைக்குட்டைகள், துண்டுகள் மூலமாக வியாதியஸ்தரின் பிணிகள் நீங்குதல் (அப் 19:11,12)
6. துரோவா பட்டணத்தில் மாடியில் இருந்து விழுந்து மரித்த வாலிபன் உயிரடைதல் (அப் 20:9,10)
7. மெலித்தா தீவின் அதிபதியின் தகப்பனும் மற்றும் பல நோயாளிகளும் குணமடைதல் (அப் 28:8,9)

இந்த அற்புதங்கள் எல்லாம் தேவ ஆவியின் பலத்தினால் மட்டுமே நடைபெற்றன என்பதை பவுல் உடனடியாக அறிவிக்கிறார். யூதர்கள் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக பரிசுத்த ஆவியின் வல்லமையை பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பெற்றுக்கொண்டதைப் போலவே (அப் 2), புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்யும்படியாக, அதே வல்லமையை தமஸ்கு பட்டணத்தில், அனனியா கரங்களை வைத்தபோது பவுல் பெற்றுக்கொண்டார் (அப் 9).

மூன்றாவதாக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவே பவுலின் மூலமாக சொல்லாலும், செயலாலும், அரும் அடையாளங்கள் மூலமாயும், அருஞ்செயல்கள் மூலமாக கிரியை நடப்பித்ததாக பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தன்னுடைய செயல்பாடுகளினால் உண்டான மகிமையை பவுல் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். "துதி கனம் மகிமை நீரே வைத்துக் கொள்ளும்" என்று வாயினால் மட்டும் அறிக்கையிடும் பல ஊழியர்கள் இன்று தங்களையும் தங்கள் ஊழியங்களையும் மட்டுமே மகிமைப்படுத்துவதைப் பார்க்கிறோம்.

தன்னுடைய ஊழியத்தின் நோக்கம் என்ன என்பதை வசனத்தின் துவக்கத்திலேயே பவுல் அறிவிக்கிறார். வேதத்தை அறியாதவர்களாகவும், விக்கிரக ஆராதனைக்காரர்களாகவும் இருந்த புறஜாதியாரை

சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியச்செய்யவேண்டுமானால் அற்புத அடையாளங்கள் சிலவேளைகளில் தேவைப்படுகின்றன என்பது உண்மைதான். சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாத நிலையில் அவை யாருக்கும் எந்த நன்மையும் செய்வதில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள். அந்தக் கீழ்ப்படிதல் மனந்திரும்புதலிலும், பாவமன்னிப்புக்கென்று கிறிஸ்துவை விசுவாசிப்பதிலும் மட்டுமே அடங்கியிருக்கிறது.

ஒரு பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு, அதன்முடிவில் மேடைக்கு முன்னால் வந்து, பிரசங்கியாரைத் தொடர்ந்து, "ஆண்டவரே நான் பாவி. என் இருதயத்துக்குள் வாரும்" என்று கிளிப்பிள்ளையைப் போல் சொல்வதினால் ஒருவன் இரட்சிக்கப்படுகிறான் என்பதல்ல. வேதத்தில் இப்படி பாவிகளின் ஜெபத்தைச் சொல்லி இரட்சிக்கப்படும் ஒரு அனுபவமும் சொல்லப்படவில்லை. **ஒருவனை சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியச் செய்யும் வல்லமை, வேத வசனத்தின் மூலமாக தேவனிடமிருந்து வெளிப்படும்போதுதான் அவன் இரட்சிக்கப்படுகிறான்.** அதனால் தான் பவுல் இவ்வாறு சொல்லி, தேவனுக்கு நன்றி சொல்கிறார்: "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச்சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (2 கொரி 2:14)

இப்படி எருசலேம் துவங்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன். (ரோமர் 15:19)

முந்தின வசனத்தின் முடிவில் கிறிஸ்து பவுல் மூலமாக நடப்பித்தவைகளைத் தவிர வேறு எதையும் செய்யத் துணிவதில்லை என்பதை அறிவித்த பவுல் இந்த வசனத்தில் குறிப்பாக தான் செய்த இரண்டு காரியங்களை அறிவிக்கிறார்.

1. தான் சுவிசேஷம் அறிவித்த ஊழிய எல்லைகளைக் குறித்து பவுல் பெருமையோடு பேசுகிறார்.
2. தான் அறிவித்த கிறிஸ்துவின் சுவிசேஷம் பூரணமானது என்பதைக் குறித்து பெருமைப் படுகிறார்.

இரட்சிக்கப்பட்டதும் பவுல் முதலாவது தமஸ்குவில்தான் ஊழியம் செய்தார் (அப் 9:19,20). அதன்பின் பவுலின் மூன்று மிஷனரி பயணங்களும் சிரியா தேசத்துப் பட்டணமாகிய அந்தியோகியாவிலிருந்து துவங்கியது

"... எருசலேம் துவங்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும், ..." (ரோமர் 15:19)



(அப் 13:1-3; 15:40,41; 18:22,23), ஆனாலும் தன்னுடைய ஊழியம் எருசலேமை மையமாகக் கொண்டிருந்தது என்பதை உணர்த்தும்படியாக எருசலேமில் துவங்கியதாக பவுல் அறிவிக்கிறார். அதற்கு ஒரு காரணமும் உண்டு. புறஜாதி தேசங்களில் பவுலும் பர்னபாவும் செய்த ஊழியங்கள் முதல் பயணத்துக்குப்பின் யாக்கோபின் தலைமையில் செயல்பட்ட ஆதிசபையின் அதிகாரப்பூர்வமான அங்கீகாரத்தைப் பெறவேண்டியதிருந்தது. அப்போஸ்தலர் 15:1-35, கலா 2:9,10 வாசித்துப்பாருங்கள். மேலும் எருசலேம் தேவாலயத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கும் வேளையில் கிறிஸ்து அவரிடம், "நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; ஆதலால் நீ தாமதம் பண்ணாமல் சீக்கிரமாய் எருசலேமைவிட்டுப் புறப்பட்டுப் போ" (அப் 22:18) என்று கட்டளையிட்டார். எனவே எருசலேமில் தன்னுடைய ஊழியம் துவங்கியது என்கிறார்.

எருசலேம் துவங்கி இல்லிரிக்கம் பட்டணம் வரை பல எதிர்ப்புகள், இடைஞ்சல்கள் மத்தியில் பிரயாணம் பண்ணி, ஊழியம் செய்ததை பவுல் சுட்டிக்காட்டுகிறார். இல்லிரிக்கம் என்பது இன்றைய யூகோஸ்லாவியா, அல்பேனியா தேசங்களை உள்ளடக்கியதாகும். தமஸ்கு, அரேபியா, சிரியா, ஆசியா மைனர், கிரீஸ், தெசலோனியா, மக்கெதொனியா ஆகிய நிலப்பகுதிகளில் பவுல் செய்த ஊழியங்கள் அப்போஸ்தலர் 13, 14, 15, 16 ஆகிய அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இல்லிரிக்கத்தின் ஊழியம் குறித்து வேதத்தில் எதுவும் சொல்லப்படவில்லை.

கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாக பிரசங்கித்ததாக பவுல் அறிவிக்கிறார். கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற வார்த்தை 1 கொரி 9:12, 2 கொரி 2:12; 9:13 ஆகிய இடங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ரோமர் 2:16; 16:26 ஆகிய வசனங்களில் சுவிசேஷத்தை "என் சுவிசேஷம்" என்று பவுல் அழைக்கிறார். "எங்கள் சுவிசேஷம்" என்ற வார்த்தை 2 கொரி 4:3ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சுவிசேஷத்தைப் பூரணமாக அறிவிப்பது என்றால் தேவனுக்கடுத்த சகல உபதேசங்களையும் தைரியமாக, எதையும் மறைக்காமல் அறிவிப்பது ஆகும்.

மேலும் செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்து கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே, (ரோமர் 15:20)

ஏசாயா 52:15ல், "தங்களுக்குத் தெரிவிக்கப்படாதிருந்ததை அவர்கள் காண்பார்கள்; கேள்விப்படாதிருந்ததை அவர்கள் அறிந்துகொள்வார்கள்" என்று வாசிக்கிறோம். இதுவரை இயேசுவின் நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் தான் ஊழியம் செய்ய வாஞ்சிப்பதைக் குறித்து பவுல் அடுத்த வசனத்தில் அறிவிக்கிறார். அதன் மூலமாக சுவிசேஷ செய்தியைப் பற்றி கேள்விப்படாத மக்கள் இருக்கும் தேசங்களுக்குச் சென்று சத்தியத்தை அறிவிப்பதினால் ஏசாயாவில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது.

கிறிஸ்துவின் செய்தியை அறியாதவர்கள் என்பது தூரதேசங்களிலுள்ள புறஜாதியாரைக் குறிப்பிடுகிறது. யூதர்கள் மேசியாவைக் குறித்து அறியாமலிருந்தார்கள் என்று சொல்லமுடியாது. பழைய ஏற்பாட்டு எல்லா புத்தகங்களுமே அவருடைய வருகையைக் குறித்தும் செயல்பாடுகளைக் குறித்தும் பேசியிருக்கின்றன. வேத அறிவு அதிகம் இல்லாத சமாரிய ஸ்திரீயே "கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன்" (யோவான் 4:25) என்கிறாள்.

"என்னைக் குறித்து விசாரித்துக் கேளாதிருந்தவர்களாலே தேடப்பட்டேன்; என்னைத் தேடாதிருந்தவர்களாலே கண்டறியப்பட்டேன்;" (ஏசாயா 65:1) என்ற வசனத்தையும் பவுல் ரோமர் 15:20-கு ஆதாரமாக எடுத்திருக்கலாம். **யூதர்கள் அறிந்து ஏற்றுக்கொண்டிருக்கும் வேத வசனங்களின் ஆதாரத்தில் கிறிஸ்து தேவகுமாரன் என்பதை பவுல் நிரூபிக்கிறார்.**

நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். (ரோமர் 15:21)

பவுலின் நாட்களிலேயே பல புறஜாதி தேசங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷம் பல ஊழியக்காரர்கள் மூலமாக அறிவிக்கப்பட்டு வருவதை பவுல் அறிந்திருந்தார். மற்றவர்கள் சுவிசேஷ விதைகளை விதைத்துச் சென்றிருக்க, தான் போய் அறுவடை செய்ய விரும்பவில்லை என்கிறார் பவுல். ஒரு கட்டிடம் கட்டும்போது அஸ்திபாரம் போடுவதுதான் மிகவும் கடினமானது. அதை ஒருவன் மிகுந்த ஜாக்கிரதையோடும் கவனத்தோடும் செய்யவேண்டும். கட்டிடத்தின் மேல் பகுதிகளை கட்டும் வேலை சற்று

எளிதானது என்பதினால் அஸ்திபாரம் போட்டவனே மிகுந்த கனத்தைப் பெறுகிறான் (1 கொரி 3:10). கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதில் கடினமானதையே தான் செய்யும்படியாக பவுல் விரும்புகிறார். சபைகள் இல்லாத இடங்களுக்குச் சென்று கிறிஸ்துவை அறிவித்து சபைகளை உருவாக்க விரும்புகிறார். சபைகளை நிறுவியபின், விசுவாசிகளை போஷித்து வழிநடத்த தகுதியான சகஊழியர்களை நியமித்துவிட்டு, அஸ்திபாரம் போடப்படாத புது இடங்களுக்குச் செல்வதையே பவுல் பழக்கமாகக் கொண்டிருந்தார் என்று தெரிகிறது.

கொரிந்து சபையாரிடம் பவுல் சொல்கிறார்: "நாங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, உங்களிடம் வரைக்கும் வந்தோமே. எங்கள் அளவைக் கடந்து மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு மேன்மை பாராட்டமாட்டோம். ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது, மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மை பாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்" (2 கொரி 10:14-16). மற்றவர்களால் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஊழியத்தை தாங்கள் செய்ததாகக் கூறி தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்ளமாட்டோம் என்கிறார் பவுல்.

ரோமாபுரி விசுவாசிகளுக்கு தன்னுடைய நிருபத்தின் மூலமாக சத்தியத்தை அறிவிக்கும் பவுல், தான் அவர்களை நேரில் சந்திக்க வாஞ்சையோடிருப்பதை அறிவித்ததைப் பார்த்தோம். அதே நேரத்தில் ரோமில் தேவனுடைய சபை ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு, சகல ஆசீர்வாதங்களோடும் செயல்பட்டு வருவதையும் அவர் அறிந்திருந்தார். ரோமாபுரியில் எந்த பிரபலமான ஊழியரோ, அப்போஸ்தலர்களோ சபையை ஸ்தாபித்ததாகத் தெரியவில்லை. பெந்தெகொஸ்தே நாளில் ஆவியானவர் தந்தருளப்பட்டு வெவ்வேறு பாஷைகளைப் பேசியதை வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் (அப் 2:5) கேட்டார்கள். அந்த நாளில் ரோமாபுரியாரும் எருசலேமில் காணப்பட்டார்கள் (அப் 2:10). அன்றைய தினம் பேதுருவின் பிரசங்கத்தின் மூலமாக ஒரே நாளில் மூவாயிரம்பேர் சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள் (அப் 2:41) இவர்களில் சிலர் ரோமாபுரியிலிருந்து வந்தவர்களாயிருக்கவேண்டும் என்றும் இவர்கள்தான் ரோமுக்குத் திரும்பியபின் சபையை ஸ்தாபித்திருக்கவேண்டும் என்றும்

கருதப்படுகிறது.

உங்களிடத்தில் வருகிறதற்கு இதினாலே அநேகந்தரம் தடைபட்டேன். (ரோமர் 15:22)

ரோமாபுரி பட்டணம் அந்த நாட்களில் உலகத்தின் தலைநகரமாக விளங்கியது. ரோமாபுரியிலிருந்த சபை விசுவாசிகளும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள் என்பதை 14-வது வசனத்தில் பார்த்தோம். அதினிமித்தம் அவர்களை நேரில் சந்தித்து அவர்களை இன்னும் பலப்படுத்தவும், அதின்மூலமாக தானும் ஆறுதலடையவும் பவுல் அதிக வாஞ்சையுள்ளவராயிருந்தார் (ரோமர் 1:10-12). பலமுறை முயற்சி செய்தும் அதில் தடைகள் உண்டானது என்பதின் முக்கியமான காரணம், மற்றவர்கள் ஏற்கனவே தொடங்கிவிட்ட ஊழியங்களில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக்கொள்ள பவுல் விரும்பாததுதான்.

தெசலோனிக்கேயர் சபைக்கு பவுல் எழுதுகிறார்: "நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம்; பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடைபண்ணினான்" (1 தெச 2:18).

ஊழியர்களாகிய நாம் நம்முடைய சொந்த தீர்மானத்தின் அடிப்படையில் தேவனுடைய வேலையைச் செய்யும்படியாகப் புறப்படக்கூடும். அப்படிச் செய்யும்போது பரிசுத்த ஆவியானவரே அதைத் தடைபண்ணுவார். பவுலும் தீமோத்தேயுவும் ஆசியாவிலே ஊழியம் செய்யப்புறப்படுகிறார்கள். அப்போது என்ன நடக்கிறது என்பதைப்பாருங்கள். "ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப்போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்" (அப் 16:6,7). ஏனென்றால் அவர் மக்கெதோனியாவில் ஊழியம் செய்யவேண்டும் என்பதுதான் தேவனுடைய சித்தம் (வசனம் 9). தேவ தரிசனங்களையும், தெய்வீக வெளிப்பாடுகளையும் அபரிமிதமாகப் பெற்று, தேவனுக்கென்று வல்லமையாக ஊழியம் செய்த பவுலே தன்னுடைய ஊழிய வாஞ்சையினிமித்தம் தவறான வழியைத் தெரிந்துகொள்ளக்கூடும்.

இந்த நாட்களில் செய்யப்படும் பிரபலமான ஊழியங்களில் பல

மனிதர்களின் ஞானத்தின் அடிப்படையில், மனிதர்களால் திட்டமிடப்பட்ட ஒரு வியாபார ஸ்தாபனத்தைப்போல நடத்தப்படுவதைப் பார்க்கிறோம். சபை போதகர்கள் ஞாயிறு ஆராதனைகளில் கொடுக்கும் செய்திகளைக்கூட இப்போது தேவசமுகத்தில் காத்திருந்து பெற்றுக்கொள்வதில்லை. **விசுவாசிகளுக்கு எது பிரயோஜனமாயிருக்கும் என்பதைவிட, எதைப் பிரசங்கித்தால் தங்கள் ஸ்தாபனங்களுக்கு நன்மையானதாக இருக்கும் என்பதில் ஊழியர்கள் அதிக கரிசனையுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்,** வெளியிடங்களில் இருந்து பிரசங்கிமார் வரும்போதுகூட அவர்கள் என்ன பேசவேண்டும், எப்படிப் பேசவேண்டும், எதை முக்கியப்படுத்தவேண்டும் என்ற ஆலோசனைகளை உள்ளூர் சபையே கொடுத்துவிடுகிறது. இதன் விளைவாக பரிசுத்த ஆவியானவர் இந்த ஊழியக்காரர்கள் மூலமாக கிரியை நடத்தமுடியாமல் போகிறது.

இப்பொழுது இந்தத் திசைகளிலே எனக்கு இடமில்லாத படியினாலும், உங்களிடத்தில் வரும்படி அநேக வருஷமாய் எனக்கு மிகுந்த விருப்பம் உண்டாயிருக்கிறபடியினாலும் (ரோமர் 15:23)

சுவிசேஷம் சொல்லப்படாத இடங்களில் ஊழியம் செய்வதற்கு முன்னுரிமை கொடுத்த பவுல் இதுவரை ரோமாபுரி பட்டணத்துக்கு செல்லாமல் இருந்தார். இப்பொழுது முக்கியமான புறஜாதிப் பட்டணங்களில் எல்லாம் தான் ஊழியம் செய்து முடித்துவிட்டதாக பவுல் கருதுகிறார். முதல் மிஷினரி பயணத்தில் அந்தியோகியாவில் துவங்கி சிப்புருத்தீவு, கலாத்தியா முதலிய முக்கியமான பட்டணங்களில் நிறைவேற்றிவிட்டு, தான் சென்ற வழியிலேயே அந்தியோகியா திரும்பினதை அப் 13:1 முதல் 14:26 வசனங்களில் வாசிக்கிறோம். இரண்டாவது பயணம் அங்கிருந்து துவங்கி கலாத்தியா, துருவா, மக்கதோனியா அத்தேனா, கொரிந்து, எபேசு, செசரா, எருசலேம் வழியாக அந்தியோகியாவில் நிறைவடைகிறது. (அப் 15:36-18:22). மூன்றாவது பயணமும் அங்கிருந்து துவங்கி கலாத்தியா, மக்கதோனியா, எபேசு, துருவா, வழியாக கொரிந்து வந்து சேர்ந்திருக்கும் பவுல் (அப் 18:23-20:3) அங்கிருந்தவாறு இந்த நிருபத்தை எழுதுகிறார். தன்னுடைய ரோமாபுரி பயணத்தைக் குறித்து திட்டமிடுகிறார். பவுலின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு இந்த புத்தகத்தின் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ரோமர் நிருபம் கி.பி.58-ல் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று

வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். கொரிந்துவிலிருந்து எருசலேமுக்கு வந்த பவுலை யாக்கோபுவின் தலைமையில் செயல்பட்ட சபையார் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனாலும் அங்குள்ள யூதர்களைப் பிரியப்படுத்தும்படியாக நியாயப்பிரமாணத்தின் விதிமுறைகளின்படி தேவாலயத்தில் தலைச்சவரம் பண்ணி சுத்திகரிப்பு செய்துகொள்ள பொருத்தனை பண்ணியிருக்கும் நான்கு யூதர்களோடு பவுலும் சேர்ந்துகொள்ளவேண்டும் என்றும், அவர்களுடைய செலவுகளை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் ஆலோசனை கொடுக்கிறார்கள் (அப் 21:20-26). உள்ளூர் சபையின் ஆலோசனையை ஏற்றுக்கொண்ட பவுல் (!) சுத்திகரிப்பை நிறைவேற்றும்போது ஏழாவது நாளில் உண்டான கலவரத்தினிமித்தம் ரோம சேனாபதியினால் கைதுசெய்யப்படுகிறார். செசரியா பட்டணத்தில் ஏரோதின் அரண்மனையில் சில ஆண்டுகள் காவலில் வைக்கப்படுகிறார். கடினமான கப்பல் பிரயாணத்துக்குப்பின் ஒரு கைதியாக ரோமாபுரி வந்து சேருகிறார். ரோமாபுரி செல்லவேண்டும் என்ற பவுலின் திட்டம் வித்தியாசமான முறையில் நிறைவேறுகிறது.

நான் ஸ்பானியா தேசத்திற்குப் பிரயாணம் பண்ணுகையில் உங்களிடத்தில் வந்து, உங்களைக் கண்டுகொள்ளவும், உங்களிடத்தில் சற்றுத் திருப்தியடைந்தபின்பு, அவ்விடத்திற்கு உங்களால் வழிவிட்டனுப்பப்படவும், எனக்குச் சமயம் கிடைக்குமென்று நம்பியிருக்கிறேன். *(ரோமர் 15:24)*

பவுலின் எதிர்காலப் பிரயாணத்திட்டத்தை அவர் இங்கே அறிவித்துக் கொண்டிருக்கிறார். மேற்கு திசை நாடுகளாகிய ஸ்பானியா (ஸ்பெயின் நாடு) மற்றும் அதை அடுத்த போர்ச்சுகல் தேசம் அந்தநாட்களில் ரோம சாம்ராஜ்யத்தின் பகுதியாக இருந்தது. இதுவரை அங்கு சுவிசேஷம் அறிவிக்கப்படவில்லை. எனவே அங்கு போகும்போது வழியில் இருக்கும் ரோமாபுரி பட்டணத்தில் அங்குள்ள விசுவாசிகளைக் கண்டுகொள்ளவும், அவர்களோடு தங்கியிருந்து மகிழ்ச்சியடையவும் பவுல் திட்டமிடுகிறார். அங்கிருந்து புறப்பட்டுப் போகும்போது அங்கிருந்து சில விசுவாசிகளை தன்னுடன் ஊழியம் செய்யும்படியாக அழைத்துச்செல்ல ஒருவேளை பவுல் யோசித்திருக்கலாம். அதனால்தான் உங்களால் வழிவிட்டனுப்பப்படவும் எதிர்பார்ப்பதாக பவுல் சொல்கிறார். எபேசு பட்டணத்தில் இருந்தபோதே பவுல் இதுகுறித்துத் திட்டமிட்டிருந்தார் என்பதை அப் 19:21,22ல் இருந்து கண்டுகொள்கிறோம். இதுவரை அந்தியோகியாவை மையமாகக்கொண்டு செயல்பட்ட பவுல், வரும்

நாட்களில் ரோமாபுரியில் இருந்து செயல்பட்டால் புதிய இடங்களில் சபைகள் ஸ்தாபிக்கப்பட உதவியாயிருக்கும் என்று நினைத்திருப்பார்.

எதிர்காலத்தைக் குறித்து திட்டமிடுவது நல்ல காரியம்தான். நீங்கள் எதைக்குறித்தும் திட்டமிடவில்லை என்றால் தோல்வியடையத் திட்டமிட்டிருக்கிறீர்கள் என்று பொருள். ஆனாலும் யாக்கோபின் ஆலோசனை என்ன? "நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப்போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாத்தியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்" (யாக் 4:14,15).

ரோமாபுரி மிகப்பெரிய பட்டணமாக இருந்திருக்கலாம். அங்குள்ள சபை மிகச்சிறந்ததாக இருந்திருக்கலாம். ஆனாலும், இந்த வசனத்திலும் தன்னுடைய ரோமாபுரி விஜயத்தை பவுல் முக்கியப்படுத்தவில்லை என்பதைக் கவனியுங்கள். ஸ்பானியா தேசம் போகும் பாதையில் அங்கு வரவிரும்புவதாகவே அறிவிக்கிறார். தன்னுடைய வாழ்நாட்களில் ஸ்பானியா சென்று பவுல் ஊழியம் செய்தாரா என்பதைக் குறித்து வேதபண்டிதர்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஒரு சிறைக்கைதியாக ரோமாபுரி வந்தடைந்த பவுல் மூன்று ஆண்டுகளுக்குப்பின் நீரோ மன்னனால் விடுதலை செய்யப்பட்டதாகவும், அதன்பின் அவர் இரண்டு ஆண்டுகள் ஸ்பானியாவில் ஊழியம் செய்ததாகவும் கருதப்படுகிறது. இது குறித்து வேதத்தில் குறிப்புகள் இல்லை. இரண்டாவது முறையாக சிறைப்படுத்தப்பட்டபோதுதான் அவருக்கு ரோமில் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இப்பொழுதோ பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யுங்காரியமாக நான் எருசலேமுக்குப் பிரயாணம்பண்ண எத்தனமாயிருக்கிறேன். (ரோமர் 15:25)

எருசலேமில் உள்ள பரிசுத்தவான்களுக்கு பண உதவி செய்யும்படியாக கொரிந்துவின் ஊழியத்தை முடித்துவிட்டு, எருசலேமுக்குப் புறப்பட்டுப்போகும்படியாக பவுல் திட்டமிட்டிருக்கிறார். பவுலும் பர்னபாவும்

புறஜாதியார் மத்தியில் செய்த ஊழியங்களை எருசலேமில் இருந்த ஆதிசபை அதிகமாக விரும்பவில்லை. அப்போஸ்தலர் 15-வது அதிகாரத்தில், பல எதிர்ப்புகள், தர்க்கங்கள், வாக்குவாதங்கள் மத்தியில் அதை அங்கிகரிக்கிறார்கள்.

அதைக்குறித்து கலாத்தியர் 2:8-10ல் பவுல் சொல்கிறார்: "விருத்தசேதனமுள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டதுபோல, விருத்தசேதனம் இல்லாதவர்களுக்குப் பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டதென்று அவர்கள் கண்டு; எனக்கு அளிக்கப்பட்ட கிருபையை அறிந்தபோது, தூண்களாக எண்ணப்பட்ட யாக்கோபும், கேபாவும், (பேதுரு) யோவானும், தாங்கள் விருத்தசேதனமுள்ளவர்களுக்கும், நாங்கள் புறஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும்படி, அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக எனக்கும் பர்னபாவுக்கும் வலது கை கொடுத்து, தரித்திரரை நினைத்துக் கொள்ளும்படிக்கு மாத்திரம் சொன்னார்கள்; அப்படிச் செய்யும்படி அதற்கு முன்னமே நானும் கருத்துள்ளவனாயிருந்தேன்".

"அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று" என்று அப் 8:1-ல் வாசிக்கிறோம். கிறிஸ்தவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் துன்பப்படுத்தப்பட்டார்கள் (அப் 12:1). ஆதிசபையின் ஆலோசனையின்படி தான் ஊழியம் செய்த இடங்களில் காணிக்கைகளை வசூல் பண்ணியிருந்தார் (2 கொரி 8:2-6, 9:1-12). அவைகளை தான் நேரில் சென்று எருசலேமிலுள்ள மூப்பர்களிடம் ஒப்படைக்கப் பவுல் விரும்பினார் என்று பார்க்கிறோம். எருசலேம் விசுவாசிகளும் மூப்பர்களும் புறஜாதியார்மேல் கொண்டிருந்த பகையுணர்வை சரிசெய்து கொள்வார்கள் என்று பவுல் எதிர்பார்த்திருக்கலாம். செசரியா பட்டணத்தில் தன்னை பேலிக்ஸ் நியாயம் விசாரிக்கும்போது அவனிடம் தான் எருசலேமுக்கு வந்த நோக்கத்தை இவ்விதமாகச் சொல்கிறார்: "அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப்பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்" (அப் 24:17). பவுலின் தர்ம ஊழியத்தைக் குறித்து அப் 10:27-30; 12:25, 1 கொரி 16:1-4 -ல் சொல்லப்பட்டிருக்கிறது.

மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ளவர்கள் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குள்ளே இருக்கிற

தரித்திரருக்காகச் சில பொருள் சகாயம் செய்ய விருப்பங் கொண்டிருக்கிறார்கள். (ரோமர் 15:26)

ஒரு மனிதனுடைய ஆத்துமா போஷிக்கப்பட்டால் மட்டும் போதாது. அவனுடைய சரீரமும் போஷிக்கப்படவேண்டும். தனக்கே உரிய வித்தியாசமான பாணியில் யாக்கோபு சொல்லுகிறார்: "ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?" (யாக் 2:15,16). பசியாயிருந்தவர்களுக்கு உணவளித்தவர்கள், தாகமேற்பட்டபோது தண்ணீர் கொடுத்தவர்கள், தனித்திருந்தபோது வீட்டுக்கு அழைத்தவர்கள், ஆடையின்றி இருந்தபோது உடுக்க ஆடை அளித்தவர்கள், நோயுற்றபோது கவனித்துக்கொண்டவர்கள், சிறைப்பட்டபோது காணவந்தவர்கள் ஆகியோருக்கு தேவனுடைய ராஜ்யத்தில் இடம் உண்டு (மத் 25:35,36).

மக்கெதோனியா மற்றும் அகாயாவில் உள்ள சபைகளின் விசுவாசிகள் புறஜாதியார் ஆவார்கள். யூதர்கள் அல்ல, எருசலேம் சபையில் உள்ளவர்களோ யூதர்கள். அந்த சபையாரைக்குறித்து பவுல் இவ்விதமாக சொல்கிறார்: "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு, நான் சாட்சியாயிருக்கிறேன்" (2 கொரி 8:2,3). தேவையோடிருப்பவர்களுக்கு உதவி செய்வது கிறிஸ்தவர்களுடைய கடமை.

மக்கெதோனியா கிரேக்க நாட்டின் முக்கியமான பகுதியாகும். இதன் தலைநகரமான பிலிப்பியிலும் இன்னொரு பட்டணமான தெசலோனிக்கேயாவிலும் பவுல் பெரிய சபைகளை ஸ்தாபித்திருந்தார். அகாயா கிரேக்க தேசத்தின் மேற்குப் பகுதியில் இருந்தது. இதன் தலைநகரம் கொரிந்து. அகாயாவில் உள்ளவர்களும் பவுலின் தர்மகாரியத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர்கள் என்பதை 2 கொரி 9:1,2 அறிவிக்கிறது.

இப்படிச் செய்வது நல்லதென்று எண்ணினார்கள்; இப்படிச்செய்கிறதற்கு அவர்கள் கடனாளிகளாயும் இருக்கிறார்கள். எப்படியென்றால், புறஜாதியார் அவர்களுடைய ஞானநன்மைகளில் பங்குபெற்றிருக்க, சரீரநன்மைகளால் அவர்களுக்கு உதவிசெய்ய இவர்கள் கடனாளிகளாயிருக்கிறார்களே. (ரோமர் 15:27)

மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் உள்ள விசுவாசிகள் எருசலேமில் உள்ள விசுவாசிகளை தங்களுடைய பொருளினால் தாங்குவது நல்லது என்று எண்ணினார்கள் என்கிறார் பவுல். தன்னுடைய வற்புறுத்தலின் அடிப்படையில் அவர்கள் கொடுக்கவில்லை என்கிறார். இன்றும் தேவன் சில மனிதர்களை தேவைகளோடு இருக்கும்படியாக நியமித்திருக்கிறார். அவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய முறையில் சிலரை வசதிகளோடு வைக்கிறார். மனமுவந்து குறையுள்ளவர்களுக்கு உதவிசெய்யும்போது ஒருவரோடொருவர் சகோதர ஐக்கியமுடையவர்களாகிறார்கள்.

மக்கெதோனியா, அகாயாவில் உள்ள விசுவாசிகளைக்குறித்து பவுல் இன்னொரு காரியத்தையும் சொல்கிறார். எருசலேம் சபையாருக்கு தங்கள் மனவிருப்பத்தின்படி தாராளமாகக் கொடுத்தது பாராட்டக்கூடிய ஒரு காரியம்தான் என்றாலும், ஒருவகையில் அவ்வாறு செய்வது அவர்களுடைய கடமை என்கிறார். முதலாவதாக புறஜாதியார் தாங்கள் யூதர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட சுவிசேஷத்தினிமித்தம் அவர்களுக்கு கடன்பட்டிருக்கிறார்கள். தேவனுடைய ராஜ்யம் யூதர்கள் மத்தியில்தான் உதயமானது என்பது மட்டுமல்ல, யூதர்கள் மூலமாகத்தான் புறஜாதியாருக்கு அறிவிக்கப்பட்டது. இவற்றையே பவுல் "ஞானநன்மைகள்" என்று இந்த வசனத்தில் குறிப்பிடுகிறார். ரோமர் 9:4ல் சொல்லப்படும் புத்திரசுவிகாரம், மகிமை, உடன்படிக்கை, நியாயப்பிரமாணம், தேவாராதனை, வாக்குத்தத்தம் ஆகியவைகளும் யூதர்களின் ஞான நன்மைகளாகக் கருதவேண்டும். "இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது" (யோவான் 3:22) என்பது கிறிஸ்துவின் திட்டவட்டமான அறிவிப்பு.

1 கொரிந்தியர் 9:11ல் பவுல் சொல்கிறார்: "நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? எவன் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? (ராணுவத்தில் பணிபுரியும் வீரன் தேசபக்தி உடையவனாய் இருந்தாலும், தன் செலவுக்குத் தன்னுடைய

சொந்த பணத்தைக் கொடுப்பதில்லை, மாதந்தோறும் சம்பளம் வாங்கிக்கொண்டுதான் செய்கிறான். எவன் திராட்சத் தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்?" (வசனம் 7). சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டு ஒருவன் பெறும் மெய்சமாதானமும் நித்திய ஜீவனைக்குறித்த நம்பிக்கையும் ஒருவன் பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் காரியம் அல்ல என்பதை அறிந்துகொள்ளவேண்டும், அதற்கு விலையே கிடையாது. ஆனாலும் விசுவாசிகளிடமிருந்து சரீர நன்மைகளை அறுத்துக்கொள்ளும் ஊழியர்கள் அதைக்குறித்து பிரதான மேய்ப்பனுக்குக் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்.

இந்தக் காரியத்தை நான் நிறைவேற்றி, இந்தப் பலனை அவர்கள் கையிலே பத்திரமாய் ஒப்புவித்தபின்பு, உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன். (ரோமர் 15:28)

24-வது வசனத்தில் ரோமாபுரி மார்க்கமாக ஸ்பானியா தேசத்துக்குப் போக தனக்கு "சமயம் கிடைக்குமென்று நம்பியிருக்கிறேன்" என்று அறிவித்த பவுல் இந்த வசனத்தில் "உங்கள் ஊர் வழியாய் ஸ்பானியாவுக்குப் போவேன்" என்று மிகுந்த நிச்சயத்தோடு பேசுகிறார். பவுலின் பயணத்திட்டம் ஒருவேளை தேவனுடைய வெளிப்பாட்டின் அடிப்படையில் அல்லாமல் அவருடைய மனவிருப்பத்தின்படி தீர்மானிக்கப்பட்டதாக இருந்திருக்கலாம். ஊழியக்காரர்கள் பேசும் எல்லா காரியங்களும் வெளிப்படையாக இருக்கவேண்டும் என்பதில்லை. எதுவானாலும் தான் வசூலித்த தொகையை எருசலேம் சென்று சபையில் ஒப்புவித்த பின்புதான் இந்தப் பயணத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறார் என்பது புலனாகிறது.

2 கொரி 8:1-4, 9:2 வசனங்களை வாசித்துப்பார்த்தால் பவுல் ஒரு கணிசமான தொகையை வசூலித்து வைத்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. அதை வேறு யார் மூலமாவது எருசலேமுக்கு அனுப்பிவிட்டு பவுல் கொரிந்துவிலிருந்து ஸ்பானியா நோக்கி பயணத்தை ஆரம்பித்திருக்கலாமே என்ற கேள்வி எழும்புகிறது. வேறு யாரையும் அவர் நம்பவில்லை என்பதல்ல, தான் நேரில் சென்று எருசலேம் சபைக்கும் புறஜாதியார்களின் சபைகளுக்கும் இடையே ஒரு அன்பின் பாலத்தை உருவாக்கவேண்டும் என்ற விருப்பம் அவரில் இருந்திருக்கலாம்.

நான் உங்களிடத்தில் வரும்போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன். (ரோமர் 15:29)

கிறிஸ்துவின் முழுமையான ஆசீர்வாதத்தை தான் ரோமசபைக்கு வழங்கமுடியும் என்ற அபரிதமான நம்பிக்கை பவுலிடம் இருக்கிறது. தன் நிருபத்தின் துவக்கத்திலேயே பவுல் இதை அறிவித்ததைத் தியானித்திருக்கிறோம் (ரோமர் 1:10,11). எந்த ஒரு ஊழியக்காரனும், தான் கர்த்தரின் ஊழியத்துக்காக புறப்பட்டுப்போகும்போது இப்படிப்பட்ட நிச்சயத்தோடுதான் போகவேண்டும். இந்த நிச்சயமில்லாத நிலையில் அவன் ஊழியத்துக்குப் போகாதிருப்பதே மேன்மை.

சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதம் என்று பவுல் கீழ்க்கண்ட காரியங்களைக் குறிப்பிடுவதாக எடுத்துக்கொள்ளலாம்.

1. கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டான இரட்சிப்பின் நிச்சயம். (என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்று ஒரு கிறிஸ்தவன் சொல்லமுடியும்).

2. இரட்சிக்கப்பட்ட ஒருவன் கிறிஸ்துவுக்குள் வைக்கப்பட்ட நிச்சயம். (நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன், கிறிஸ்து எனக்குள் இருக்கிறார் என்று ஒரு கிறிஸ்தவன் சொல்லமுடியும்).

3. பரிசுத்த ஆவியானவரைப் பெற்றிருக்கும் நிச்சயம். (நான் தேவனுடைய சொந்தபிள்ளை என்று ஒரு கிறிஸ்தவன் சொல்லமுடியும்).

4. பாவத்தை மேற்கொண்டு வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியும் என்ற நிச்சயம். (அனுதின வாழ்க்கையில் கர்த்தர் என்னை வழிநடத்துகிறார் என்று ஒரு கிறிஸ்தவன் சொல்லமுடியும்).

பவுல் இதை எழுதும்போது, இன்னும் சில ஆண்டுகளில் அவர் ஒரு சிறைக் கைதியாக ரோமாபுரிக்கு கொண்டு செல்லப்படுவாரென்றோ, போகும் வழியில் அவர் பிரயாணித்த கப்பல் சேதமடையுமென்றோ, இறுதியில் ரோமாபுரியில் வருடக்கணக்கில் காவலில்

வைக்கப்படுவாரென்றோ அவருக்குத் தெரியாது. **வருங்காலத்தில் நடக்கவிருக்கும் சகல காரியங்களையும் தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தவேண்டும் என்கிற அவசியம் இல்லை.** "தன் காலத்தை மனுஷன் அறியான்; மச்சங்கள் கொடிய வலையில் அகப்படுவது போலவும், குருவிகள் கண்ணியில் பிடிபடுவதுபோலவும், மனுபுத்திரர் பொல்லாத காலத்திலே சடிதியில் தங்களுக்கு நேரிடும் ஆபத்தில் அகப்படுவார்கள்" (பிர 9:12). "நடக்கப்போகிறது இன்னதென்று மனுஷன் அறியான்" (பிர 10:14). உபாகமம் 29:29 சொல்லுகிறது: "மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்", "காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை" (நீதி 25:2).

இருந்தாலும் பவுல் எருசலேமில் சந்திக்கவிருக்கும் ஆபத்துக்களைக் குறித்து சில வெளிப்பாடுகள் பவுலுக்கு வழங்கப்பட்டிருந்தன. பித்தொலேமாய் பட்டணத்தில் பிலிப்புவின் வீட்டில் அநேக நாட்கள் பவுல் தங்கியிருந்தார். பிலிப்புவின் நான்கு குமாரத்திகளும் தீர்க்கதரிசிகள். ஆனாலும் அவர்கள் மூலமாக பவுல் எந்த வெளிப்பாட்டையும் பெற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் அங்கு வந்த அகபு என்ற தீர்க்கதரிசி பவுல் எருசலேமில் யூதர்களால் புறஜாதியார் கையில் ஒப்புவிக்கப்படுவதை முன்னறிவிக்கிறார். இந்த வெளிப்பாட்டைப் பெறுவதற்கு முன்பே பவுல் மிலேத்துத் துறைமுகத்தில் இருக்கும்போது எபேசு சபையின் மூப்பர்களை வரவழைத்துச் சொல்கிறார்: "இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடும் காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்" (அப் 20:22,23).

தான் சிறைப்பட்ட நிலையிலும் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடுதான் பவுல் ரோமாபுரியில் ஊழியம் செய்தார். அப்போஸ்தலர்களுடைய நடபடிகளின் கடைசி இரண்டு வசனங்கள் சொல்கின்றன: "பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷமுழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்". அவருடைய சிறையிருப்பு நாட்களில் எழுதப்பட்ட நிருபங்கள் இன்றும்

நமக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கின்றன. "அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

பவுலின் ஜெபக்குறிப்புகள் (வசனம் 30-33)

மேலும் சகோதரரே, தேவசித்தத்தினாலே நான் சந்தோஷத்துடனே உங்களிடத்தில் வந்து உங்களோடே இளைப்பாறும்படியாக, (ரோமர் 15:30)

தன்னுடைய பிரயாணத்திட்டத்தில் தேவசித்தம் இருக்கிறதா என்பதை பவுல் இந்த வசனத்தில் நிதானிக்கத் துவங்கிவிட்டார் என்று நினைக்கிறேன். ஒரு காரியத்தைக் குறித்து ஒரு மனிதனுடைய வாஞ்சையோ, அதை நிறைவேற்றி முடிக்கவேண்டும் என்பதற்காக அவன் எடுக்கும் முயற்சிகளோ காரியத்தின் வெற்றியை முடிவுசெய்வதில்லை. அது தேவனுடைய சித்தத்தின்படி இருக்கவேண்டும். அவருடைய சித்தம் மட்டுமே நன்மையானது, பிரியமானது, பரிபூரணமானது என்று ரோமர் 12:2ல் பார்த்தோம்: எபேசியர் 5:17ல் பவுல் சொல்கிறார்: "நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்". தேவனுடைய சித்தத்தைப் பற்றி மத் 6:10; 12:50; 18:14, யோவான் 7:17, ரோமர் 2:18, எபே 1:6,12; 6:6, கலா 1:4, 1 தெச 4:3, 1 பேதுரு 3:17, 2 பேதுரு 1:21, வெளி 4:11 வாசித்து அறிந்துகொள்ளுங்கள்.

இந்த வேதபகுதியில் ரோமாபுரி விசுவாசிகள் தனக்காக தேவனிடம் பிரார்த்தனை செய்யவேண்டும் என்று பவுல் கேட்டுக்கொள்கிறார். "இஸ்ரவேல் வம்சத்தாருக்காக நான் இதை அநுக்கிரகஞ்செய்யும்படி அவர்கள் என்னிடத்தில் விண்ணப்பம் பண்ணவேண்டும்" (எசேக் 36:37) என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார். எவ்வளவு பெரிய ஊழியக்காரராக இருந்தாலும் சரி, அவர் ஆயிரக்கணக்கானவர்களுக்காக ஜெபிக்கிறவராக இருந்தாலும் சரி, அவருக்கும் ஜெபம் தேவை. அப்போஸ்தலனாகிய பவுலுக்கே ஜெபம் தேவைப்பட்டது. மூன்று காரியங்களுக்காக பவுல் ஜெபிக்கும்படிச் சொல்லுகிறார்.

1. எருசலேமில் சகல போராட்டங்களையும் மேற்கொண்டு அவர்களோடு இளைப்பாறும்படியாக பிரார்த்தனை செய்யுங்கள்.

2. யூதேயாவிலுள்ள நம்பிக்கையற்றவர்களிடமிருந்து தப்பித்துக்கொள்ளும்படி பிரார்த்தனை செய்யுங்கள் (வசனம் 31)

3. எருசலேமில் தான் செய்யவிருக்கும் உதவி அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள் (வசனம் 31)

ஓய்வின்றி வேலை செய்யும் ஒரு மனிதனுக்கு நிச்சயமாகவே இளைப்பாறுதல் தேவைதான். ஆவிக்குரிய இளைப்பாறுதலையும் கிறிஸ்தவர்களாகிய நமக்கு தேவன் வாக்குபண்ணியிருக்கிறார். மோசேயிடம் அவர் சொல்கிறார்: "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" (யாத் 33:14), கிறிஸ்து சொல்கிறார்: "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத் 11:28) தேவ சித்தத்தின்படி நடப்பவர்கள் நிச்சயமாகவே இளைப்பாறுதலைப் பெறுவார்கள். ஏனென்றால் அவர்கள் தேவனுடைய கிரியைகளை பூமியில் நிறைவேற்றுகிறார்கள். எபிரெயர் 4:9, 10 வாசித்துப்பாருங்கள்.

யூதேயாவிலிருக்கிற அவிசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படும்படிக்கும், நான் எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்குச் செய்யப்போகிற தர்மசகாயம் அவர்களால் அங்கீகரிக்கப்படும்படிக்கும், (ரோமர் 15:31)

யூதேயாவிலிருக்கிற யூதர்களில் அநேகர் அவிசுவாசிகள்தான். புறஜாதியாருக்கு தங்களுடைய தேவனாகிய யெகோவாவின் ஆசீர்வாதங்கள் செல்வதை அவர்களால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. புறஜாதியாருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் பவுலை கொலை செய்யவும் அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள். அவரைக் கொலை செய்யுமளவும் ஒன்றும் புசிப்பதில்லை என்று சபதம் எடுத்த யூதர்களும் உண்டு (அப் 23:14). அப்போஸ்தலர் 9:29,30; 20:22,23; 21:4, 10-11; 11:27 வாசித்துப்பாருங்கள். கிறிஸ்துவுக்காக நம் ஜீவனைக் கொடுக்க நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும் என்றாலும், நம் ஜீவனை அனாவசியமாக இழந்துவிடாதபடி எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டும். யாரும் தேவையற்றமுறையில் இரத்த சாட்சியாக மரிக்கவேண்டும் என்பதில்லை. நம்முடைய பாதுகாப்புக்காக நாமும் ஜெபிக்கவேண்டும். மற்றவர்களையும்

ஜெபிக்க உற்சாகப்படுத்தவேண்டும், இதைத்தான் பவுல் செய்கிறார்.

மூன்றாவதாக, எருசலேம் சபை, தான் கொண்டு வந்திருக்கும் தர்மசகாயங்களை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ரோமசபை ஜெபிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத யூத அவிசுவாசிகள்தான் பவுலை எதிர்த்தார்கள் என்பது மட்டுமல்ல, யூத இனத்தைச் சேர்ந்த கிறிஸ்துவ விசுவாசிகளும் பவுலை நேசித்ததாகத் தெரியவில்லை. புறஜாதி விசுவாசிகள் உதாரத்துவமாக பொருளுதவி செய்திருக்கிறார்கள் என்றால் அதை நன்றியோடு ஏற்றுக்கொள்வது யூத விசுவாசிகளின் கடமை. ஆனால் யூதர்கள் தாங்கள் தீட்டானவர்களாக கருதும் புறஜாதியாரின் பொருட்களை ஏற்றுக்கொள்ள விரும்பாத கிறிஸ்தவ விசுவாசிகளும் எருசலேமில் இருந்திருக்கவேண்டும். விருத்தசேதனம் இல்லாமல் இரட்சிப்பு உண்டாகக்கூடும் என்ற பவுலின் உபதேசம் அவர்களுக்கு பவுல்மேல் வெறுப்பை உண்டாக்கியிருக்கவேண்டும். இன்றும் நம்முடைய சபைகளில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளிலும் தங்கள் பாரம்பரியங்களைவிட்டு முற்றிலுமாக வெளியேவராமல் இருக்கும் கிறிஸ்தவர்களைப் பார்க்கமுடியும்.

நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராட வேண்டுமென்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். (ரோமர் 15:32).

நான் போராடி ஜெபிப்பதைப்போல் நீங்களும் என்னோடே கூட போராடி ஜெபியுங்கள் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். நாம் நம்முடைய தேவைகளுக்காக மற்றவர்களை ஜெபிக்கும்படியாக சொல்லிவிட்டு நாம் சும்மா இருப்போமானால் அதில் எந்த மேன்மையும் இல்லை. தங்கள் காணிக்கைகளோடு ஜெபக்குறிப்புக்களை ஊழியக்காரர்களுக்கு அனுப்பிவிட்டு அதில் திருப்தியடையும் விசுவாசிகள் பலர் இன்று சபைகளில் பெருகிவருகிறார்கள். ஜெபக்குறிப்புகளை காணிக்கையோடு அனுப்புங்கள்-நாங்கள் இருபத்து நான்கு மணிநேரமும் ஜெபிக்கிறோம் என்று விளம்பரப்படுத்தும் நவீன ஊழியக்காரர்களும் இன்று தோன்றியிருக்கிறார்கள், . . . பணம் கொடுத்து ஜெபத்தை வாங்க

முயற்சிப்பதும் பாவம், பணத்துக்காக ஜெபிப்பதும் பாவம்.

2 கொரிந்தியர் 1:11ல் பவுல் சொல்கிறார்: "அநேகர் மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவி செய்யுங்கள்". பிலிப்பியர் 1:19ல் சொல்கிறார்: "அது உங்கள் வேண்டுதலினாலும், இயேசு கிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியினாலும் எனக்கு இரட்சிப்பாக முடியுமென்று அறிவேன்". கொலோசெயர் 4:4ல் சொல்கிறார்: "திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்". 1 தெசலோனிக்கேயர் 5:25ல் சொல்கிறார் : "சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்". 2 தெசலோனிக்கேயர் 3:2ல் சொல்கிறார்: "துர்க்குணராகிய பொல்லாத மனுஷர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படும்படிக்கும், எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்".

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும் தனக்காக வேண்டிக்கொள்ளுமாறு பவுல் ரோமசபையைக் கேட்கிறார். கிறிஸ்துவினிமித்தம் நாம் வேண்டிக்கொள்ளும் ஒரு காரியம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவது உறுதி. தேவனுடைய சித்தத்துக்குப் புறம்பானதாக இருக்கும் ஒரு காரியத்துக்காக கிறிஸ்துவினிமித்தம் வேண்டுதல் செய்வதில் எந்த நன்மையும் இல்லை. விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பது கிறிஸ்துவை பிரீதிப்படுத்துவதாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

அடுத்ததாக ஆவியானவரின் அன்பினிமித்தம் வேண்டிக்கொள்வதாக பவுல் சொல்லுகிறார்? ஆவியானவரின் அன்பு என்ற வார்த்தை சபையின்மேல் பரிசுத்த ஆவியானவர் பொழிந்திருக்கும் அன்பைக் குறிப்பிடுகிறது (ரோமர் 5:5). அதினிமித்தமே நாம் ஒருவரில் ஒருவர் அன்புடையவர்களாக இருக்கிறோம். இந்த அன்பின் அடிப்படையில் ரோமசபை தனக்காக ஜெபிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்.

பவுல் தனக்காக ஜெபிக்கிறார். அவருடைய ஜெபக்குறிப்பின்படி ரோம சபையும் ஜெபித்திருப்பார்கள். அதன்படி எருசலேமில் உள்ள சபை பவுல் கொண்டுவந்த காணிக்கைகளை உற்சாகமாக ஏற்றுக்கொண்டது

என்பது உண்மைதான் (அப் 21:17-20). ஆனால் மேற்கொண்டு பவுல் எதிர்பார்த்தபடி காரியங்கள் நடக்கவில்லை. எருசலேம் தேவாலயத்தில் யூதர்கள் அவரைப் பிடித்து துன்புறுத்த முயற்சி செய்கிறார்கள் (அப் 21:27-32). ரோம போர்வீரர்கள் அவரைக் கைது செய்து பல ஆண்டுகள் சிறையில் அடைக்கிறார்கள். சிறைப்பட்டவராய் அவர் ரோமாபுரிக்கு அழைத்துக்கொண்டு போகப்படுகிறார் (அப் 27). அவர்கள் பிரயாணம் செய்த கப்பல் பெரிய விபத்தைச் சந்திக்கிறது (அப் 27). ரோமாபுரியில் காவலில் வைக்கப்பட்ட நிலையில் பவுலின் ஊழியம் தொடர்கிறது. "அவன் (பவுல்) காலமே தொடங்கிச் சாயங்கால மட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சி கொடுத்து விஸ்தரித்துப் பேசினான்" (அப் 28 : 23) என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் நிச்சயமாகவே ஜெபத்தைக் கேட்கிறார். எவ்வாறு எப்போது கேட்பார் என்பதை நம்மால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை.

சமாதானத்தின் தேவன் உங்களனைவரோடுங்கூட இருப்பாராக. ஆமென் (ரோமர் 15:33)

பழைய ஏற்பாட்டில் சேனைகளின் கர்த்தர் என்று அழைக்கப்படும் தேவன், ரோமர் 15:33; 16:20, பிலிப் 4:9, 1 தெச 5:23, எபி 13:20 ஆகிய வசனங்களில் சமாதானத்தின் தேவன் என்றும், 2 தெச 3:16ல் சமாதானத்தின் கர்த்தர் என்றும், 2 கொரி 13:11ல் சமாதானத்துக்குக் காரணராகிய தேவன் என்றும் அழைக்கப்படுகிறார். தன்னுடைய நிருபங்களில் பல இடங்களில் சபையாருக்கு சமாதானத்தை பவுல் ஆசீர்வாதமாக அறிவிப்பதைப் பார்க்கிறோம் (1 கொரி 1:3, 2 கொரி 1:2, கலா 1:3, எபே 1:2, பிலிப் 1:2, 1 தெச 1:1, 2 தெச 1:2, 1 தீமோ 1:2, 2 தீமோ 1:2, தீத்து 1:2).

16

பவுலின் வாழ்த்துரை

பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின நிருபம் வேதத்தின் மிக முக்கியமான ஐந்து புத்தகங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது (மற்ற புத்தகங்கள்: ஆதியாகமம், ஏசாயா, யோவான், வெளிப்படுத்தின விசேஷம்). இது அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரிசபையாருக்கு மட்டும் எழுதிய கடிதம் அல்ல, ஆண்டவராகிய கர்த்தர் மனித இனத்துக்கு எழுதிய ஒரு கடிதம். ஆனாலும் ரோமர் நிருபத்தின் எல்லா அதிகாரங்களையும் மிகுந்த கவனத்தோடு படிப்பவர்கள்கூட 16-வது அதிகாரத்தை உற்சாகமாக படிப்பதில்லை. உபதேசங்கள், சத்தியங்கள், ஆலோசனைகள் எதுவுமே அதில் சொல்லப்படவில்லை என்பதுதான் அதற்குக்காரணம். அது மட்டுமல்ல உச்சரிக்கமுடியாத, விளங்கிக்கொள்ளமுடியாத ரோமாபுரியில் உள்ள 26 தனிப்பட்ட நபர்களின் பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அங்குள்ள 5 வீட்டு சபைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. சிலருடைய பெயர்கள் சொல்லப்படவில்லை. அவர்களின் 9 பேர் பெண்கள். கொரிந்துவில் பவுலின் சக ஊழியர்கள் 8 பேருடைய பெயரும் காணப்படுகிறது. ரோமாபுரியில் உள்ள அத்தனைபேரையும் அப்போஸ்தலனாகிய பவுல் தனித்தனியாக வாழ்த்தி, தன்னுடைய நிருபத்தை முடிக்கிறார்.

இத்தகைய பெயர் பட்டியல் எபிரெயர் 11-வது அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. விசுவாச வீரர்களாக ஆபெல், ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே, கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் ஆகிய 14 ஆண்களும், சாராள், ராகாப் ஆகிய 2 பெண்களும் அதில் குறிப்பிடப்படுகிறார்கள். 2 சாமுவேல் 23ல் தாவீதின் ராணுவத்தில் இருந்த 27 பராக்கிரமசாலிகளின் பெயர்களும், அவர்களில் சிலருடைய செயல்பாடுகளும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

பவுல் சபையாரை வாழ்த்துகிறார் (வசனம் 1-16)

கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொண்டு, (ரோமர் 16:1)

அதிகாரத்தின் துவக்கத்தில் பெபேயாள் என்ற ஒரு சகோதரியை பவுல் ரோமாபுரியில் உள்ள சபையாருக்கு அறிமுகப்படுத்துகிறார். அவள் கொரிந்துவின் துறைமுகப்பட்டணமான கெங்கிரேயாவின் சபையில் ஊழியம் செய்துகொண்டிருந்த ஒரு ஸ்திரீ. கொரிந்துவிலிருந்து எட்டுமைல் தூரத்தில் இருக்கும் இந்த ஊரில் பவுல் சுவிசேஷம் அறிவித்துவிட்டு பிரிஸ்கில்லா, ஆக்கில்லாவோடு சிரியா தேசத்துக்குப் புறப்பட்டு போன நிகழ்ச்சி அப் 18:18ல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த சகோதரி தன் வேலையினிமித்தம் ரோமாபுரி பட்டணத்துக்குச் செல்லும்போது, அவளை ரோம சபையின் விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களுக்கு தகுதியான முறையில் ஏற்றுக்கொள்ளும்படியாக பவுல் வேண்டிக்கொள்ளுகிறார். ஊழியக்காரர்கள் புதிய இடங்களுக்குப் பிரயாணமாகப் போகும்போது அவர்களை அறிமுகப்படுத்தி இப்படிப்பட்ட உபசார நிருபங்களை மூப்பர்கள் கொடுத்தனுப்பும் பழக்கம் அந்த நாட்களில் இருந்தது (2 கொரி 3:1, அப் 18:27). முதல்முறையாக பவுல் எருசலேம் சபைக்குப் போனபோது, அவருக்கே பர்னபாவின் சிபாரிசு தேவைப்பட்டது (அப் 9:27).

எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்யவேண்டுமென்று, அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன்; அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள். (ரோமர் 16:2)

பெபேயாளை சகல மரியாதையோடு ஏற்றுக்கொள்வது மட்டுமல்ல, அவருக்கு ரோமாபுரியில் எந்த காரியங்களில் உதவி தேவைப்பட்டாலும் அதைச் செய்யும்படியாக பவுல் சபையைக் கேட்டுக்கொள்கிறார். அவர் மூலமாக பவுல் பலமுறை உதவி பெற்றிருப்பதையும் நன்றியறிதலோடு சபையாருக்கு அறிவிக்கிறார். **மற்றவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளை மறப்பவர்கள் கிறிஸ்தவர்கள் அல்ல.**

கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களிலும் பல சகோதரிகள் அவருக்கு உதவியாக இருந்தார்கள் (மத் 27:55,56, மாற்கு 14:3) என்பதை அறிவோம். பெபேயாள் பவுலுக்கு என்ன உதவி செய்தார் என்பது நமக்குத் தெரியாது.

இந்த சகோதரியின் மூலமாகத்தான் பவுல் தன்னுடைய விலையேறப்பெற்ற ரோமர் நிருபத்தை கொரிந்துப் பட்டணத்திலிருந்து ரோமாபுரிக்கு அனுப்பியிருக்கவேண்டும், அதனால்தான் இந்த வாழ்த்துரையில் முதலாவதாக அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று பல வேதபண்டிதர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். சபை அறிந்துகொள்ளவேண்டிய முக்கியமான உபதேச சத்தியங்கள் அடங்கிய விலையேறப்பெற்ற இந்த நிருபம் மோசேயின் நியாயப்பிரமாணத்தைவிட முக்கியமானது என்று சொல்லலாம். ஒரு சகோதரி மூலமாக அது ரோமுக்கு அனுப்பப்பட்டது என்பது பெண்கள் எல்லாரும் பெருமைப்படக்கூடிய ஒரு காரியம்.

கிறிஸ்துஇயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:3)

உடன் வேலையாட்களைக் கனம்பண்ணும் ஊழியக்காரர்கள் இன்று மிகவும் குறைவு. பிரிஸ்கில்லாள் ஆக்கில்லாவைப் பற்றி பவுல் ரோமர் நிருபத்தில் மூன்று வசனங்களில் குறிப்பிட்டுப் பேசுவதைக் கவனியுங்கள். கணவனும் மனைவியுமாக இணைந்து தேவனுடைய ஊழியத்தை உற்சாகமாகச் செய்யும் இந்த தம்பதிகள் தீர்க்கதரிசிகளோ, போதகர்களோ, அப்போஸ்தலர்களோ அல்ல, சாதாரண விசுவாசிகள்தான். இந்த வசனம் தவிர 2 தீமோ 4:19லும் இவர்கள் பவுலிடமிருந்து வாழ்த்துதலைப் பெறுகிறார்கள். 1 கொரி 16:19ல் பவுலுடன் இணைந்து கொரிந்து சபையை வாழ்த்துகிறார்கள்.

ரோமாபுரியில் கூடாரம் செய்யும் தொழில் செய்துவந்த இந்த யூத தம்பதிகள், கிலவுதியுராயன் என்ற ரோமபேரரசன் கி.பி.47ல் யூதர்களனைவரும் ரோமைவிட்டு வெளியேறும்படியாக உத்தரவு பிறப்பித்ததினால் கொரிந்து பட்டணத்துக்கு வந்து தொழில் செய்கிறார்கள். பவுலும் தன்னுடைய சகல ஊழியங்களின் மத்தியிலும் அந்தத் தொழிலைச் செய்தபடியால் அவர்களோடு இணைந்துகொள்கிறார் (அப் 18:1-3). மூன்றுபேரும் அங்கிருந்து ஊழியம் செய்யும்படியாக சீரியா தேசத்துக்குப் போகிறார்கள் (அப் 18:18). இந்த தம்பதிகள் எபேசு பட்டணத்தில் ஊழியம் செய்த நாட்களில் அங்கு வந்த அப்பொல்லோ என்ற யூத ஊழியக்காரர், ஆவியில் அனலுள்ளவராய் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய் போதனை பண்ணினாலும், உபதேசத்துக்கடுத்த காரியங்களில் அவரிடம் குறைவு இருந்தது. ஆனாலும் இந்தத் தம்பதியர் அவரைப் புறக்கணிக்காமல் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய சத்திய மார்க்கத்தை அவருக்கு விவரித்துக்காட்டினார்கள் என்பதை அப் 18:24-26ல்

அறிந்துகொள்கிறோம். உபதேச சத்தியங்களை சரியாக அறிந்துகொள்ளாமலே உற்சாகமாக ஊழியம் செய்யும் நபர்கள் இன்றும் உண்டு. அவர்களுக்கு போதனை வழங்குவது நம்முடைய கடமை.

"வாழ்த்துங்கள்" என்ற வார்த்தை இந்த அதிகாரத்தில் 16 இடங்களிலும் "வாழ்த்துகிறார்கள்" என்ற வார்த்தை 3 இடங்களிலும் சொல்லப்படுகிறது. மேலும் 2 வசனங்களில் வாழ்த்துதல் சொல்லப்பட்டிருக்கிறது.

அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப்பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 16:4)

இந்த தம்பதியர் பவுலுடைய உயிரைக் காப்பாற்றும்படியாக தங்களுடைய உயிரைக் கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள் என்று அவரே குறிப்பிடுகிறார். அவர்கள் சிறிது காலம் எபேசுவில் இருந்தார்கள் என்பதை 2 தீமோ 4:19 உறுதிப்படுத்துகிறது. அப் 19:23-41ல் தியானா என்ற கிரேக்க தேவதையின் சிலைகளை விற்று வியாபாரம் பண்ணிவந்த தட்டான் மூலமாக ஏற்பட்ட பெரிய கலவரத்தின்போது பவுலின் உயிருக்கு பெரிய ஆபத்து உண்டாயிருந்தது. அப்பொழுதுதான் பிரிஸ்கில்லா ஆக்கில்லா தம்பதியர் பவுலுக்கு அடைக்கலம் கொடுத்து அவருடைய உயிரைக் காப்பாற்றியிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இவ்வாறு செய்வதினால் தங்களுடைய உயிருக்கு ஆபத்து உண்டாகக்கூடும் என்றாலும் அதை அவர்கள் பொருட்படுத்தாமல் உதவியாயிருந்தார்கள். இது நடந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன என்றாலும் பவுல் அதை இன்னும் மறக்கவில்லை.

மேலும் அவர்கள் பொதுவாக புறஜாதி தேசங்களில் ஸ்தாபிக்கப்பட்ட பல சபைகளுக்கு ஆதரவாக இருந்தார்கள் என்பதை பவுல் அறிவிக்கிறார். இதினிமித்தம் அந்த நாட்களில் இருந்த பல சபைகளில் அவர்கள் அறியப்பட்டிருந்தார்கள் என்பதுமட்டுமல்ல, சபையார் தாங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மைகளினிமித்தம் நன்றியுள்ளவர்களாயிருந்தார்கள்.

அவர்களுடைய வீட்டிலே கூடிவருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள். (ரோமர் 16:5)

ஆதி நாட்களில் இன்றுபோல் தேவாலயங்கள், ஜெபகோபுரங்கள்,

ஜெபத்தோட்டங்கள், ஜெபமலைகள் என்று எதுவுமே கிடையாது. குறிப்பிட்ட சில விசுவாசிகளின் வீடுகளில் சிறுசிறு குழுக்களாக பரிசுத்தவான்கள் கூடி தேவனை ஆராதித்து வந்தார்கள். இதினிமித்தமாக விசுவாசிகள் ஒருவரையொருவர் தனிப்பட்டமுறையில் அறிந்துகொள்ளவும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும் வாய்ப்பு இருந்தது. கி.பி.54ல் கிலவுதியுராயனின் மரணத்துக்குப்பின் இந்த தம்பதியர் மீண்டும் ரோமாபுரிக்கு வந்து குடியிருந்தார்கள். அவர்களுடைய பொறுப்பில் நடந்துவரும் ஆக்கில்லாவின் வீட்டுச் சபையின் உறுப்பினர்களை பவுல் இந்த வசனத்தில் வாழ்த்துகிறார். அவர் கொரிந்துவில் இருந்தபோதும் இந்த தம்பதியர் வீட்டில் ஒரு சபை செயல்பட்டு வந்ததை 1 கொரி 16:19 அறிவிக்கிறது. இப்படிப்பட்ட வீட்டுச் சபைகளைக் குறித்து அப் 12:12, கொலோ 4:15, பிலெமோன் 1 முதலிய வசனங்கள் பேசுகின்றன.

இந்த அதிகாரத்தில் இப்படிப்பட்ட ஐந்து ஜெபக்குழுக்கள் செயல்படுவதாக பவுல் குறிப்பிட்டாலும், இந்த வசனத்தில் மட்டுமே "சபை" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். இந்தக்குடும்பத்தார் மேல் பவுல் மிகுந்த அன்பும், மரியாதையும் வைத்திருந்தார் என்று பார்க்கிறோம். கணவனும் மனைவியும் இணைந்து ஒரு ஊழியத்தைச் செய்வது உண்மையிலேயே மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும். என்னுடைய கிறிஸ்தவ இலக்கிய ஊழியம் இப்படிப்பட்ட ஒரு குடும்ப ஊழியமாகத்தான் இருந்துவருகிறது என்பதினால் தேவனைத் துதிக்கிறேன்.

அடுத்ததாக பவுல் எப்பனெத் என்ற சகஊழியரை வாழ்த்துகிறார். அவரை அகாயாவில் கிறிஸ்துவின் முதற்பலன் என்கிறார். முதற்பலன் என்பது ஒருவன் தன்னுடைய விளைச்சலில் தேவனுக்கு காணிக்கையாக கொடுக்கவேண்டிய முதற்பங்காகும் (யாத் 22:29; 23:16, லேவி 2:12, உபா 18:4). 1 கொரிந்தியர் 16:15ல் ஸ்தேவானுடைய வீட்டார் அகாயா நாட்டிலே முதற்பலனானவர்கள் என்று சொல்வதினால், இந்த எப்பனெத்து ஸ்தேவானின் குடும்பத்தில் ஒருவராய் அகாயா பட்டணத்தில் பவுலின் ஊழியத்தில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட முதல் நபராக இருக்கலாம். இவருடைய பெயர் வேதத்தில் வேறு எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை.

எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள். (ரோமர் 16:6)

மிரியாம் என்ற எபிரெய பெயர் மரியாள் என்பதாகும். மரியாள் என்று பெயர் கொண்ட பல சகோதரிகள் வேதபுத்தகத்தில்

குறிப்பிடப்படுகிறார்கள். உதாரணமாக இயேசுவின் தாய் (மத் 1:16), மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானின் தாய் (அப் 12:12), லாசருவின் சகோதரி (லூக்கா 10:39, யோவான் 11:1), மகதலேனா மரியாள் (மத் 27:61, யோவான் 19:25), பொல்லாத பிசாசு பிடித்திருந்த மகதலேனாள் என்ற மரியாள் (லூக்கா 8:2).

அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்களும் எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்குள்ளானவர்களும் என் இனத்தாரும் என்னுடனேகூடக் காவலில் கட்டுண்டவர்களுமாயிருக்கிற அன்றோனீக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:7)

அன்றோனீக்கையும், யூனியாவையும் வாழ்த்தும் பவுல் அவர்களைக் குறித்து நான்கு காரியங்களைச் சொல்கிறார். அப்போஸ்தலருக்குள் பெயர்பெற்றவர்கள் என்பது முதலாவதாகச் சொல்லப்படுகிறது. பர்னபா, அப்பொல்லோ, தீமோத்தேயுவைப் போல இவர்களும் அப்போஸ்தலர்களாக கருதப்பட்டிருக்கலாம். ஆனால் கிறிஸ்துவால் ஊழியம் செய்யும்படியாக அவருடைய அதிகாரத்தோடு அனுப்பப்பட்டவர்களே அப்போஸ்தலர்கள். பன்னிரெண்டு அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் வாழ்க்கையில், அதாவது அவருடைய போதனைகள், அற்புதங்கள், பாடுகள், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள். அப்போஸ்தலனாகிய பவுல் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால் நேரடியாக தெரிந்துகொள்ளப்பட்டு, போதிக்கப்பட்டு, ஊழியம் செய்யும்படியாக அனுப்பப்பட்டவர் (அப் 22:15, 9:15,16) என்ற முறையில் அப்போஸ்தலராகிறார். இன்று சபைகளுக்குள் இருந்து பல்வேறு பணிகளைச் செய்கிறவர்கள், அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்படமுடியாது. அப்போஸ்தலர் என்றாலே "அனுப்பப்பட்டவர்கள்" என்று பொருள் என்பதைப் பார்த்தோம்.

இந்த இரண்டு சகோதரர்களும் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கு அறிமுகமானவர்கள் என்பது மட்டுமல்ல, பவுல் கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கு முன்பே கிறிஸ்துவுக்குள்ளானவர்கள். அவர்களை கனப்படுத்தவேண்டும் என்பதற்காக பவுல் இதைச் சொல்கிறார். எப்போதுமே பவுல் மற்றவர்களைக் கனப்படுத்த முந்திக்கொள்வார். கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் என்றால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தின் அவயவங்கள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

கிறிஸ்து ஊழியத்துக்கென்று தெரிந்துகொண்ட எழுபது சீஷர்கள் அடங்கிய குழுவில் இவர்கள் இருந்திருப்பார்கள் என்று கருதப்படுகிறது. என் இனத்தார் என்று பவுல் சொல்வதினால் பவுலுக்கு அவர்கள்

ஒருவகையில் உறவினர்களாக இருந்திருக்கலாம். தன்னோடு அவர்கள் சிறையில் இருந்தார்கள் என்பதையும் பவுல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் பலமுறை காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதை அறிவோம் (2 கொரி 11:23) கிறிஸ்துவினிமித்தம் சிறையில் அடைக்கப்படுவது என்பது ஒரு பெருமைக்குரிய காரியம். கிறிஸ்துவினிமித்தம் பாடுகளை அனுபவிப்பது எவ்வளவு பெரிய பாக்கியம். இன்றும் எத்தனை மிஷனரி ஊழியர்கள் சத்தியம் சொல்லப்படாத காடுகளிலும் மலைகளிலும் உள்ள மனிதர்களுக்கு பலபாடுகள் மத்தியில் கிறிஸ்துவை அறிவித்து வருகிறார்கள். அவர்களுக்காக தேவனுக்கு நன்றிசொல்வோம், அவர்களுடைய ஊழியங்களைத் தாங்குவோம்.

கர்த்தருக்குள் எனக்குப் பிரியமான அம்பிலியாவை வாழ்த்துங்கள். (ரோமர் 16:8)

தனிப்பட்டவர்களை, தனிப்பட்டவிதத்தில் நினைவுகூர்ந்து பவுல் வாழ்த்துவதைக் கவனியுங்கள். கர்த்தருக்குள் எனக்கு பிரியமானவர் என்று அவர் அம்பிலியைக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவுக்குள் எல்லா பரிசுத்தவான்களையும் வாழ்த்துங்கள் என்று பவுல் ஒட்டுமொத்தமாகச் சொல்லி, தன் கடமையை ஒரே வசனத்தில் முடித்திருக்கலாம். ஒருவேளை நாம் அப்படித்தான் செய்திருப்போம். தன் ஆடுகளை பேர் சொல்லிக் கூப்பிட்டு, வழிநடத்தும் (யோவான் 10:3) பிரதான மேய்ப்பரை பவுல் பின்பற்றுகிறார்.

கிறிஸ்துவுக்குள் நம்மோடே உடன்வேலையாளாகிய உர்பானையும், என் பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:9)

தன்னுடைய சக ஊழியர்களை கனப்படுத்துவதில் பவுல் ஆர்வமுடையவர் என்பதை ஏற்கனவே பார்த்திருக்கிறோம். உர்பான் என்ற வார்த்தை மரியாதைக்குரியவர் என்று பொருள்படும். ஸ்தாக்கியை தனக்குப் பிரியமானவராக பவுல் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள், அரிஸ்தொபூலுவின் வீட்டாரை வாழ்த்துங்கள். (ரோமர் 16:10)

கிறிஸ்துவுக்குள் உத்தமன் என்று சொல்லும்போது கிறிஸ்துவால் சோதிக்கப்பட்டு அங்கிகரிக்கப்பட்டவன் என்று பொருள்கொள்ளவேண்டும். மனிதர்கள் நம்மை உத்தமர்களாகக்

கருதுவதில் எந்த மேன்மையும் இல்லை. "தேவனாலே மாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்?" (யோவான் 5:44) என்கிறார் இயேசு.

அரிஸ்தொபூலுவின் வீட்டாரை வாழ்த்தும்படியாக பவுல் சொல்வதின் நோக்கம் ஒருவேளை அவருடைய குடும்பத்தார் மட்டுமே இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களாக இருக்கலாம். எனவே அவர்கள் மட்டுமே பவுலினுடைய வாழ்த்துதலுக்குப் பாத்திரர் ஆகிறார்கள். அரிஸ்தோபூல், யூதேயாவின் ராஜாவாயிருந்த அகிரிப்பாவின் சகோதரனும், ஏரோது ராஜாவின் பேரனுமாவார். அவனுடைய வீட்டார் என்பது அவனுடைய குடும்பத்தாரையும், அவர் வீட்டில் பணிபுரியும் அடிமைகளையும் குறிப்பிடுகிறது. தேவனுடைய தெரிந்துகொள்ளுதல் வித்தியாசமான முறையில் செயல்படுகிறது.

என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள், நர்கீசுவின் வீட்டாரில் கர்த்தருக்குட்பட்டவர்களை வாழ்த்துங்கள். (ரோமர் 16:11)

ஏரோதியோன் பவுலின் உறவினர் என்பது தெளிவாகிறது. இவர் மிகுந்த செல்வந்தராகவும், கிலவுதியுராயனின் ஆலோசகராகவும் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. நீரோவின் ஆட்சிக்காலத்தில் இவர் கொலை செய்யப்பட்டதாக அறிகிறோம். அவரை வாழ்த்திய பவுல், நர்கீசுவின் குடும்பத்தில் இரட்சிக்கப்பட்டவர்களை மட்டும் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டு வாழ்த்துகிறார். நர்கீசு ரோம ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகிறது.

கர்த்தருக்குள் பிரயாசப்படுகிற திரிபேனாளையும் திரிபோசாளையும் வாழ்த்துங்கள். கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பெர்சியாளை வாழ்த்துங்கள் (ரோமர் 16:12)

திரிபேனாளும் திரிபோசாளும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் என்று கருதப்படுகிறது. இவர்கள் கிறிஸ்துவுக்காக பிரயாசப்பட்டார்கள் என்றாலும் பெர்சியாளைக் குறித்து அவள் கிறிஸ்துவுக்காக மிகவும் பிரயாசப்பட்டவள் என்று குறிப்பிடப்படுகிறது. ஆதிசபையில் பெண்கள் சபைகளில் பிரசங்கம் பண்ணவும், போதிக்கவும் அனுமதிக்கப்படவில்லை என்றாலும் பல வித்தியாசமான ஊழியங்களை அவர்கள் செய்துவந்தார்கள்.

கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ரூபையும், எனக்கும் தாயாகிய அவனுடைய தாயையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:13)

கிறிஸ்தவர்களாகிய நாம் எல்லாருமே கர்த்தருக்குள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்தான் (எபே 1:4, ரோமர் 8:23, கொலோ 3:12, 2 தீமோ 2:10, தீத்து 1:1). யாரையுமே, அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் தேவன் தெரிந்துகொள்வதில்லை. கிறிஸ்துவுக்குள் தேவன் ஒருவனைத் தெரிந்துகொள்கிறார் என்பதை விளக்கமாகப் பார்த்தோம். இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் கல்வாரிக்குச் சுமந்துசெல்ல உதவிசெய்த சீமோனின் குமாரன் என்று மாற்கு 15:21ல் இருந்து அறிந்துகொள்கிறோம். ரூபையும் அவருடைய தாயாரும் அந்தியோகியாவில் குடியிருந்தபோது அவர்கள் பவுலை ஒரு மகனைப்போல கவனித்து, போஷித்திருக்கவேண்டும். அதை மிகுந்த மகிழ்ச்சியோடு அறிவித்து, பவுல் அவர்களை கனப்படுத்துகிறார்.

அசிங்கிரீத்துவையும், பிலெகோனையும், எர்மாவையும், பத்திரொபாவையும், எர்மேயையும், அவர்களோடிருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:14)

ஐந்து சகோதரர்களின் பெயர்கள் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டு அவர்களுடைய ஐக்கியத்தில் தேவனுடைய ஊழியம் செய்தவர்களையும் சேர்த்து பவுல் வாழ்த்துகிறார். இவர்களில் எர்மே என்பவர் குறிப்பிடத்தக்கவர். பல தரிசனங்களையும், நேரடியான வெளிப்பாடுகளையும் தேவனிடமிருந்து பெற்ற அவர், பிந்தின நாட்களில் எழுதிய நிருபங்கள் சபைகளில் வாசிக்கப்பட்டன என்று சொல்லப்படுகிறது.

பிலொலோகையும், யூலியாளையும், நேரேயையும், அவனுடைய சகோதரியையும், ஒலிம்பாவையும், அவர்களோடிருக்கிற பரிசுத்தவான்களெல்லாரையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:15)

பிலொலோகும், யூலியாளும் கணவன் மனைவி என்றும் மற்ற மூவரும் அவருடைய குடும்பத்தார் என்றும் கருதப்படுகிறது. இவர்களைப் பற்றி வேறு குறிப்புகள் வேதத்தில் இல்லை.

இந்த வசனத்துடன் பவுலின் வாழ்த்துரை நிறைவடைகிறது. உச்சரிக்க சிரமமான பல பரிசுத்தவான்களுடைய பெயர்களை நாம் இந்த அதிகாரத்தில் வாசித்தோம். ரோமர் நிருபத்தில் பெயர்

எழுதப்பட்டிருப்பதினால் மட்டுமல்ல, ஜீவபுஸ்தகத்திலும் பெயர் எழுதப்பட்டிருப்பதைக் குறித்தே அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவனுக்கென்று என்ன செய்தார்கள் என்பது நமக்கு இன்று தெரியாது. ஆனால் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்கும்போது அவை பகிரங்கமாக அறிவிக்கப்படும். **மிகப்பெரிய காரியங்களைச் செய்தால்தான் தேவன் நம்மைப் பாராட்டுவார் என்பதல்ல. நாம் செய்யும் சாதாரணமான, சிறு காரியங்களிலும் நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்போமானால் தேவனுடைய அங்கீகரிப்பை பெறுவது உறுதி.**

தன்னுடைய சகஊழியர்களை பாராட்டி அவர்களை வாழ்த்தும் அப்போஸ்தலனாகிய பவுல் உபதேசத்துக்கடுத்த காரியங்களில் கண்டிப்பானவராகவும் இருந்தார் என்று பார்க்கிறோம். "சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததைக் கண்டபோது" பேதுருவையே முகமுகமாக பவுல் எதிர்த்தார். கலா 2:11-14 வாசித்துப் பாருங்கள். ஊழியக்காரர்கள் மாயம் பண்ணியபோது அவரால் பொறுத்துக்கொண்டு சும்மா இருக்கமுடியவில்லை. ஒருதடவை கடுங்கோபத்தோடு மாற்குவை தன்னுடன் ஊழியத்துக்கு அழைத்துக்கொண்டு போக மறுத்தார் (அப் 15:37-39). தேமா என்பவன் பவுலின் கண்டிதத்தினிமித்தம் அவரைவிட்டு பிரிந்து சென்றான் (2 தீமோ 4:10). எயோதியாளும் சிந்திகேயாவும் வழிவிலகிப்போகும்போது பவுல் கண்டித்து புத்திசொல்கிறார் (பிலிப் 4:2). தவறு செய்யும் ஊழியக்காரர்களை கண்டித்து சீர்பொருந்தச்செய்வது சகஊழியர்களின் கடமை.

ஒருவரையொருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள், கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். (ரோமர் 16:16)

ரோமாபுரியிலுள்ள சகோதரர்களுக்கு தன்னுடைய தனிப்பட்ட வாழ்த்துதல்களைத் தெரிவித்த பவுல், சபையார் ஒருவரையொருவர் எவ்வாறு வாழ்த்தவேண்டும் என்ற அறிவுரையை வசனத்தின் துவக்கத்தில் கொடுக்கிறார். பரிசுத்த முத்தத்தோடு ஒருவரையொருவர் வாழ்த்தும்படியாக சொல்கிறார். இதே ஆலோசனையை பவுல் 1 கொரிந்தியர் 16:20, 2 கொரிந்தியர் 13:12, 1 தெச 5:26லும் கொடுப்பதைப் பார்க்கிறோம். பேதுருவும் இவ்வாறு சொல்கிறார்: "ஒருவரையொருவர் அன்பின் முத்தத்தோடே வாழ்த்துதல் செய்யுங்கள்" (1 பேதுரு 5:14). முத்தம் என்பது ஒருவர்மேல் கொண்டுள்ள அன்பு, மற்றும் மரியாதையின் வெளிப்படையான அடையாளமாக இருக்கவேண்டும். இந்த நாட்களில் கைகளைக் குலுக்குகிறோம். ஒருவரையொருவர்

அணைத்துக்கொள்கிறோம். முத்தமிட்டு வாழ்த்துதலைக் குறித்து கிறிஸ்து ஒரு இடத்திலும் ஆலோசனை தரவில்லை.

நட்பின் அடிப்படையில் யூதர்கள் ஒருவரையொருவர் முத்தமிடும் பழக்கம் அந்த நாட்களில் இருந்தது. அன்பு ஏதோ ஒரு கிரியையில் வெளிப்படையாகக் காட்டப்படுவது நல்லதுதான். பரிசேயனாகிய சீமோனிடம் இயேசு சொல்கிறார், "நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்ததுமுதல், என்பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்" (லூக்கா 7:45) ஆனால் முத்தம் பரிசுத்தமானதாக இருக்கவேண்டும். கிறிஸ்துவை யூதாஸ் காட்டிக் கொடுக்கும்படியாக முத்தம் செய்தான் (மத் 26:47-49, மாற்கு 14:44,45, லூக்கா 22:47,48) என்று வாசிக்கிறோம், இது பரிசுத்தமானதல்ல. வேதத்தில் முத்தமிடும் நிகழ்ச்சிகள் ஆதி 27:27; 29:11; 45:15; 1 சாமு 10:1; 20:41, 1 இராஜா 19:20, லூக்கா 7:38, அப் 20:39 ஆகிய இடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதி சபையில் கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ளும்போது ஒருவரையொருவர் முத்தமிட்டு தங்கள் அன்பை வெளிப்படுத்துவார்களாம். இன்றும் கத்தோலிக்க சபைகளில் திருவிருந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் குருக்கள் அப்பம், இரசம் அடங்கிய பாத்திரங்களை முத்தமிடுவதைப் பார்க்கலாம்.

தன்னுடைய தனிப்பட்ட வாழ்த்துதலைத் தெரிவித்த பவுல் கொரிந்து சபையார் மற்றும் ரோமாபுரி சபையாரை வாழ்த்துகிறார் என்று இந்த வேத பகுதியை முடிக்கிறார். எந்த சபையின் பெயரையும் குறிப்பிடாமல், கிறிஸ்துவின் சபையார் வாழ்த்துகிறார்கள் என்று சொல்வதால், தன்னால் ஸ்தாபிக்கப்பட்டு பல்வேறு இடங்களில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் சகல சபைகளும் ரோமாபுரி சபையை வாழ்த்துவதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

பவுலின் இறுதி எச்சரிக்கை (வசனம் 17-20)

அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களைவிட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். (ரோமர் 16:17)

தன்னுடைய வாழ்த்துதல்களின் மத்தியில் 17-20 ஆகிய வசனங்களில் தவறான உபதேசங்களினிமித்தம் சபைகளில் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்கும் மனிதர்களைக் குறித்து பவுல் எச்சரிப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் நம்முடைய விசுவாசத்தைக் குலைத்துவிடக்கூடும்

என்பதினால் அவர்களைவிட்டு விலகும்படியாக பவுல் ஆலோசனை கொடுக்கிறார். பவுல் ஊழியம் செய்த எல்லா சபைகளிலுமே அவருடைய உபதேசங்களுக்கு எதிராக பிரிவினை சக்திகள் செயல்பட்டதை பார்க்கிறோம் (கலா 3:1; 5:7, கொலோ 2:20-23, பிலிப் 3:19).

அவர்கள் கொண்டுவரும் உபதேசம் தவறானது என்பதை இனங்கண்டுகொள்வது எப்படி என்பதை பவுல் இந்த வசனத்தில் அறிவிக்கிறார். ரோமாபுரி சபையார் பவுலின் நிருபங்களின் மூலம் அறிந்துகொண்ட சத்தியத்துக்கு விரோதமாகச் சொல்லப்படும் எல்லா சத்தியங்களுமே தவறானவை என்கிறார். கலாத்தியர் 1:7-9ல் இவ்விதமாக பவுல் சொல்கிறார்: "வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவன், முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்".

கிறிஸ்தவர்களாகிய நாம் யாரைவிட்டு விலகியிருக்கவேண்டும் என்பதைக் குறித்து பல ஆலோசனைகள் வேதத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 2 யோவான் 9:10 சொல்கிறது: "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறிநடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்". தீத்து 3:10 சொல்கிறது: "வேதப்புரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு நீ இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவனைவிட்டு விலகு". 2 தெச 3:16 சொல்கிறது: "மேலும் சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமைகளின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்".

தீமோத்தேயுவிடம் பவுல் சொல்கிறார்: "உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற

கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு, சிலர் அதைப் பாராட்டி, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள்" (1 தீமோ 6:20,21). "சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு: அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்; அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப்போலப் படரும்" (2 தீமோ 2:16,17). "புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு" (வசனம் 23). "புத்தியீனமான தர்க்கங்களையும், வம்சவரலாறுகளையும், சண்டைகளையும், நியாயப்பிரமாணத்தைக்குறித்து உண்டாகிற வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவைகள் அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்" (தீத்து 3:9).

"அவர்களைவிட்டு விலகவேண்டும்" என்பதே பவுல் தரும் ஆலோசனை. ஏனென்றால் அவர்களோடு உபதேசத்துக்கடுத்த காரியங்களை கலந்துரையாடியோ, விவாதம் பண்ணியோ எந்த பிரயோஜனமும் இல்லை. இவர்கள் சாத்தானின் பிரதிநிதிகளாக உலகில் செயல்படுகிறவர்கள். அதனால்தான் பவுல் எச்சரிக்கிறார்: "நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். ஏனெனில், அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்: அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரம் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்" (பிலிப் 3:17:18).

இவர்களை எதிர்த்து நின்றால் பாதிக்கப்படுவது நாம்தான். தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம் (மத் 5:39) என்பதுதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்குத் தந்த ஆலோசனை. சபைகளில் தவறான உபதேசங்களைக் கொண்டுவந்து பிரிவினைகளையும் இடறல்களையும் கொண்டுவருபவர்களை தேவன் பார்த்துக்கொள்வார். "இடறல்களினிமித்தம் உலகத்துக்கு ஐயோ, இடறல்கள் வருவது அவசியம், ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!" (மத் 18:7) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (ரோமர் 16:18)

இரண்டு வகையான ஊழியங்களைக் குறித்து பவுல் இந்த வசனத்தில் பேசுகிறார்.

1. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்தல்
(கிறிஸ்துவுக்காக செய்யும் ஊழியம்)

2. தங்கள் வயிற்றுக்கு ஊழியம் செய்தல்
(சுயலாபத்துக்காக சேவைசெய்யும் அட்டூழியம்)

யோவான் 12:26ல் கிறிஸ்து சொல்கிறார்: "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்". தேவனுக்கு ஊழியம் செய்வதைவிட மகிமையான வேலை ஒன்றும் இருக்கமுடியாது. கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்கிறவர்கள் சொல்கிறதென்ன? "அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப்பேசாமல் துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்ட பிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்" (2 கொரி 2:17).

ஊழியம் செய்வதாக விளம்பரப்படுத்திக் கொள்ளும் அத்தனைபேரும் கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்வதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. இதை நான் சொல்லவில்லை, வசனம் சொல்லுகிறது. **தங்கள் வயிற்றுக்கு ஊழியம் செய்யும் ஊழியக்காரர்கள் பவுலின் நாட்களிலும் இருந்திருக்கிறார்கள், இன்றும் இருக்கிறார்கள்.** இவர்கள் "தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து, அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்" (2 தீமோ 3:5) இவர்கள் தங்களுடைய லாபத்துக்காகவும், பெயர் புகழுக்காகவும் செயல்படுகிறவர்கள். **தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாகக் காட்டிக்கொண்டாலும் மறைமுகமாக தங்களையும், தங்கள் ஊழியங்களையும், தங்கள் குடும்பத்தாரையும் மட்டுமே விளம்பரப்படுத்தி மகிமைப்படுத்துவார்கள்.** வியாபார நோக்கத்தோடு ஊழியம்செய்யும் இவர்களுடைய ஆவிக்குரிய நிலை உண்மையிலேயே பரிதாபமானதாக இருக்கும். ஏனென்றால் இவர்கள் தங்களையும், தங்களைச் சுற்றியிருப்பவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஊழியர்களைக் குறித்து பிலிப்பியர் 3:19ல் பவுல் சொல்கிறார்: "அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்". "இவர்கள் தேவ பக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்கள்" (1 தீமோ 6:5). அதாவது தேவனுடைய ஊழியத்தைச் செய்வதை செல்வந்தனாவதற்கு ஒரு சுலபமான வழியாக இவர்கள் கருதுகிறார்கள். அதற்காகவே திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள். தேவனை நேசிப்பதாகத்தான் இவர்கள் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இவர்களை இவர்களுடைய சுயலாபம், பெயர், புகழ், உலகரீதியான மேன்மை ஆகியவைதான் ஆட்கொண்டிருக்கும். பேராசை உள்ளவர்களாய், விளம்பர மோகம்

உள்ளவர்களாய், ஆடம்பரப்பிரியராய், ஊழியங்களை பொருள் ஈட்டும் நோக்கத்தோடு செய்வார்கள். பரிசுத்த ஜீவியமும், பிரதிஷ்டையுமில்லாமல் இவர்கள் செய்யும் ஊழியத்தினால் தேவனுடைய நாமம் தூஷிக்கப்படுகிறது (1 தீமோ 6:1).

இந்த அட்டூழியக்காரர்களின் உலகப்பிரகாரமான வெற்றியின் இரகசியம் என்ன என்பதையும் பவுல் அறிவிக்கத் தவறவில்லை.

1. நயவசனிப்பு (இன்சொல், நாகரீகமான பேச்சு)
2. இச்சகப் பேச்சு (வஞ்சனை நிறைந்த பெருமையான பேச்சு)

இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து தேவன் சொல்கிறார்: "அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப்போகிறது" (எசேக் 33:31). "அவர்கள் தங்கள் வாயினால் அவருக்கு (தேவனிடத்தில்) இச்சகம் பேசி, தங்கள் நாவினால் அவரிடத்தில் பொய் சொன்னார்கள்" (சங் 78:36) என்று வாசிக்கிறோம். வயிற்றுக்கு ஊழியம் செய்கிறவர்கள் தேவனிடமே பொய் சொல்கிறவர்களாக இருக்கிறார்கள். **தங்களுடைய மாய்மாலம் தேவனுக்கு தெரிந்திராது என்று நினைக்கிறார்கள்.** "தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்" (மாற்கு 7:6). "இஸ்ரவேலிலே அநேகநாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை" (2 நாளா 15:3) என்று ஆவியானவர் வேதனையோடு எழுதிவைத்திருக்கிறார். ஊழியக்காரர்களின் வயிறு தேவனாக மாறிவிட்டது. அந்தத்தின் கூலியை விரும்பி வீழ்ச்சியடைந்த பிலேயாமைப்போல் ஊழியர்கள் செயல்படும் விதத்தை 2 பேதுரு 2:13-19 வாசித்துத் தெரிந்துகொள்ளுங்கள். "இவர்கள் தண்ணீரில்லாத கிணறுகளும் சுழல்காற்றினால் அடியுண்டோடுகிற மேகங்களுமாயிருக்கிறார்கள். என்றென்றைக்குமுள்ள காரிருளே இவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது" (வசனம் 17). எசேக்கியேல் 22:25-29 நவீன ஊழியங்களைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

'இச்சகப் பேச்சு' வஞ்சனை நிறைந்த பேச்சு என்று பொருள்கொள்ளப்படும். மேலோட்டமாகப் பார்த்தால் அது மிகுந்த ஆறுதலைத் தருவதைப்போலிருக்கும். ஏதேன் தோட்டத்தில் ஏவாளிடம் சர்ப்பம் எவ்வாறு பேசியது என்பதைக் கவனியுங்கள். இச்சகப் பேச்சு

பேசுகிறவர்களைக் குறித்து பவுல் சொல்கிறார்: "அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய (சாத்தானுடைய) ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே; அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்" (2 கொரி 11:13-15).

பேதுரு சொல்கிறார்: "உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள்; அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்வார்கள்" (2 பேதுரு 2:1-3).

இந்த ஊழியர்கள் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை எளிதில் வஞ்சித்துவிடுகிறார்கள் என்கிறார் பவுல். இந்த நயவஞ்சகர்கள் அப்பாவி மக்கள் தங்களை நம்பும்படியாகச் செய்து, தவறான வழியில் நடத்திவிடுகிறார்கள். அதனால்தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சர்ப்பங்களைப்போல வினாவுள்ளவர்களாயிருக்கும்படியாக ஆலோசனை தருகிறார் (மத் 10:16). "குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராதிருங்கள்" (எபே 4:14) என்று பவுல் ஆலோசனை தருகிறார். ஏனென்றால் அவர்கள் "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள். மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்" (2 தீமோ 3:13). இதனால் சபைகள் ஸ்தாபனங்களாக மாறி உலக ஞானத்தின் அடிப்படையில் செயல்படுகின்றன.

நயவசனிப்பு, இச்சகப்பேச்சு மூலமாக வயிற்றுக்கு ஊழியம் செய்யும் மனிதர்களிடமிருந்து வெளிப்படும் தவறான உபதேசங்களினால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் நிரந்தரமான முறையில் வழிவிலகிப் போய்விடுமா என்று பயப்படத்தேவையில்லை. பவுலின் ஆலோசனையை ஒரு எச்சரிக்கையாக மட்டுமே

எடுத்துக்கொள்ளவேண்டும். "ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச்சொல்லுகிறேன்" (கொலோ 2:4) என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். தேவனால் நீதிமானாக்கப்பட்ட ஒருவனை எந்த ஒரு சக்தியாலும் அநீதிமானாக்க முடியாது.

நல்ல மேய்ப்பன் உவமையில் கிறிஸ்து இவ்விதமாகச் சொல்கிறார்: "அவன் (மேய்ப்பன்) தன்னுடைய ஆடுகளைப் பேர் சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு போகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்ட பின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான். ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின் செல்லாமல், அவனை விட்டோடிப்போம்" (யோவான் 10:3-5) அந்நியர் என்ற வார்த்தை தவறான உபதேசங்களைக் கொண்டு வருபவர்களைக் குறிப்பிடுகிறது.

அடுத்ததாக ஒரு கேள்வி எழும்புகிறது. சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள முன்வந்து, சபை ஆராதனைகளில் கலந்துகொண்டு, ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு, அதற்குப்பின் வழிவிலகிப் போவதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்களைக் குறித்து யோவான் இவ்வாறு சொல்லுகிறார்: "அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்து போனார்கள், ஆகிலும் அவர்கள் நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்" (1 யோவான் 2:19) **இவர்களுடைய இரட்சிப்பு துவக்கத்திலேயே உண்மையானதல்ல. கற்பாறை இடங்களிலும் முள்ளுள்ள இடங்களிலும் விழுந்த விதைகள் உடனே முளைத்து எழும்புவது போல் தோற்றமளிக்கும், ஆனால் அவை பலன்தருவதில்லை (மத் 13:20-22).**

இப்படிப்பட்ட தவறான, கபடான, மாய்மாலமான ஊழியங்களை தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்பது தெரியவில்லை. ஏதேன் தோட்டத்தில் தன்னுடைய நயவசனிப்பினால் சர்ப்பம் ஏவாளை வஞ்சித்ததை தேவன் தடைபண்ணியிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை. அவரிடம் காரணம் கேட்க யாருக்கும் அனுமதியில்லை. தன்னுடைய விசுவாசிகள் இப்படிப்பட்டவர்களைக் குறித்து எச்சரிக்கையாய் இருக்கவேண்டும் என்ற ஆலோசனையை மட்டும் தேவன் தருகிறார். சபையைக் குறித்த பாரத்தினால் பவுல் சொல்கிறார்: "சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்" (2 கொரி 11:3).

வயிற்றுக்கு ஊழியம் செய்பவர்களை தேவன் ஏன் உலகரீதியாக செழிக்கவைக்கிறார் என்று நாம் எரிச்சலடையவேண்டாம். சங்கீதம் 73 முழுவதும் வாசித்துப்பாருங்கள். ஆசாப் துன்மார்க்கரின் செழிப்பைக் கண்டபோது விசனத்தோடு சொல்லுகிறார்: "நான் விருதாவாகவே என் இருதயத்தைச் சுத்தம்பண்ணி, குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்?" (வ 13), தன் உள்ளத்தை மாசற்றதாய் வைத்துக்கொண்டதும், குற்றமற்றவனாக இருந்ததும் வீண்தானா என்று புலம்புகிறார். ஆனால் முடிவில் சொல்கிறார்: "அவர்கள் முடிவைக் கவனித்து உணருமளவும், அது என் பார்வைக்கு விசனமாயிருந்தது," சங் 73:17,18,19 வாசித்துப்பாருங்கள். அவர்களின் முடிவு பரிதாபமானதாக இருக்கும்.

உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது. ஆகையால் உங்களைக் குறித்துச் சந்தோஷப்படுகிறேன்; ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். (ரோமர் 16:19)

ரோமாபுரி சபையாருக்கு முந்தின இரண்டு வசனங்களில் தான் கொடுத்த ஆலோசனையினிமித்தம் பவுல் இதை எழுதுகிறார் என்று தோன்றுகிறது. ரோமசபை மாய்மாலமான ஊழியக்காரர்களினால் வஞ்சிக்கப்படக்கூடும் என்ற பயத்தினால் பவுல் அவர்களை எச்சரிக்கவில்லை. ஏனென்றால் ரோமசபை சுவிசேஷத்தை அறிந்து, முற்றிலுமாக தேவசித்தத்துக்கு கீழ்ப்படிந்து நடந்துவரும் சபை என்பதை தான் அறிந்திருப்பதாகச் சொல்லுகிறார். அவர்களைப்பற்றிய இந்த நல்ல சாட்சியைக் குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைவதாகச் சொல்கிறார். அதே நேரத்தில் இறுதியாக மிகச்சிறந்த ஆலோசனை ஒன்றையும் கொடுக்கத்தவறவில்லை. நன்மையைப் பற்றிய காரியங்களை அறிந்துகொள்வதில் ஞானியாக இருங்கள். தீமையைப் பற்றிய காரியங்களை அறிந்துகொள்வதில் அப்பாவிகளாயிருங்கள் என்கிறார். அதாவது தீமை என்றால் என்ன என்பதையே அறியாதபடி கபடமற்றவர்களாய் இருங்கள் என்கிறார். 1 கொரி 14:20ல் சொல்கிறார்: "புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாயும், புத்தியிலோ தேறினவர்களாயுமிருங்கள்" 1 தெச 5:21, 22ல் சொல்லுகிறார்: "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்".

தன்னுடைய நிருபத்தின் துவக்கத்திலேயே பவுல் ரோமசபையாரிடம் "உங்கள் விசுவாசம் உலகமெங்கும் பிரசித்தமாகிறபடியினாலே, முதலாவது

நான் உங்களெல்லாருக்காகவும் இயேசுகிறிஸ்து மூலமாய் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்" (1,8) என்று சொல்லி அவர்களைப் பாராட்டியதைப் பார்த்தோம். நிருபத்தின் முடிவில் ரோமசபையின் கீழ்ப்படிதலை பவுல் பாராட்டுகிறார். **விசுவாசம் எங்கே இருக்கிறதோ அங்கே கீழ்ப்படிதலும் இருக்கும்.** கீழ்ப்படிதல் என்ற வார்த்தையை தன் நிருபத்தில் பொதுவான முறையில் சுவிசேஷத்துக்கும், தேவனுடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிவதையே பவுல் குறிப்பிடுகிறார் (1:7; 6:16; 15:18; 16:25). கீழ்ப்படிதல் இல்லாத ஒரு மனிதன் கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவே கீழ்ப்படிந்தவராக இருந்தார் (எபி 5:8) யோவான் 14:31; 15:10, ரோமர் 5:19, எபி 10:9 வாசித்துப்பாருங்கள். நோவா, ஆபிரகாம், யோசுவா, எசேக்கியா ராஜா, பவுல் ஆகியோரின் கீழ்ப்படிதலைக்குறித்து ஆதி 6:22; 22:2,3, யோசுவா 11:15, 2 இராஜா 18:6, அப் 26:19 ஆகிய வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

ரோமசபையின் விசுவாசமும், கீழ்ப்படிதலும் யாவருக்கும் தெரியவந்திருப்பதினால் பவுல் சந்தோஷப்படுகிறார் என்றாலும், தனக்குக் கிடைத்த வெளிப்பாட்டின் அடிப்படையில், அவர்களுடைய தவறு என்ன என்பதை அறிந்தவராய் அவர்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்கு குழந்தைகளுமாய் இருக்கவேண்டும் என்று தான் விரும்புவதாக அறிவிக்கிறார். இந்த உலகில் நன்மையும் இருக்கிறது, தீமையும் இருக்கிறது. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டும் தேவன் ஆதாமுக்கு விலக்கியிருந்தார். ஏதேன் தோட்டத்திலிருந்த மற்ற எல்லாவற்றையும் அவர்கள் அனுபவிப்பதில் எந்த தடையும் இல்லை. **தேவனை மட்டுமே சார்ந்திராமல், தன்னுடைய ஞானத்தின் அடிப்படையில் எது நன்மையானது எது தீமையானது என்பதை கண்டுகொள்ள ஆதாம் முயற்சி செய்த அதே வேளையில் பாவம் பூமிக்குள் பிரவேசித்தது.** பவுல் இந்த வசனத்தில் தரும் ஆலோசனை இதுதான். கிறிஸ்தவர்களாகிய நாம், நன்மையை மட்டும் அறிந்துகொண்டால் போதும். தீமையைப் பற்றி அறிந்துகொள்வதில் அப்பாவிகளாயிருங்கள், அதாவது அதை அறிந்துகொள்ளவே வேண்டாம்.

"ஆண்டவருக்குப் பயப்படுவதே ஞானம், பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி" (யோபு 28:28) என்று வாசிக்கிறோம். "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" (நீதி 3:13). "முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது" (நீதி 8:11). பொதுவாக ரோமாபுரியில் உள்ள மனிதர்கள் உலக ஞானத்தையும், புத்தியையும் தேடுகிறவர்களாக இருந்தார்கள் என்பதை அறிவோம். நன்மையானவற்றில் மட்டும் ஞானியாக இருங்கள் என்கிறார் பவுல். ஆனால் அவர் தீமோத்தேயுவுக்கு தனிப்பட்டமுறையில்

ஆலோசனை தருகிறபடி தேவனுடைய வார்த்தைகளில் மட்டுமே மெய்யான ஞானம் அடங்கியிருக்கிறது (2 தீமோ 3:15).

தீமையான காரியங்களில் ஞானவான்களாயிராமல் பேதைகளாயிருங்கள் என்கிறார் பவுல். இன்று சபைகளுக்குள்ளும், வீடுகளுக்குள்ளும் தவறான உபதேசங்களைக் கொண்டுவரும் மனிதர்கள் வேண்டாத, தேவையில்லாத காரியங்களைக் குறித்து மிகுந்த ஞானத்தோடு பேசுவார்கள். வெளி 2:24 சொல்லும் சாத்தானின் ஆழங்களை இவர்கள் அறிந்தவர்களாக இருப்பார்கள். அந்த தவறான ஞானத்தை நம்முடைய தலைக்குள் திணிக்க முயற்சிசெய்வார்கள். தவறான பல உபதேசங்கள் அருமையான வெளித்தோற்றத்தை உடையதாக இருக்கும். கர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல சத்துரு வெளிப்படும்போது அவனை நாம் எளிதில் கண்டுகொள்ள முடியும். அதே சாத்தான் ஒளியின் தூதனைப்போலவும் வெளிப்படமுடியும். எனவே மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்.

சில தவறான காரியங்களை அறிந்துகொள்ளாமல் இருப்பதில்தான் உண்மையான ஞானம் அடங்கியிருக்கிறது. தேவன் வேதனையோடு சொல்கிறார்: "என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள், அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச்செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்" (எரே 4:22). நாம் இப்படி இருக்கக்கூடாது என்பதினால்தான் பவுல் ஆலோசனை தருகிறார்: "சகோதரரே, நீங்கள் புத்தியிலே குழந்தைகளாயிராதேயுங்கள்; துர்க்குணத்திலே குழந்தைகளாகவும், புத்தியிலே தேறினவர்களாயுமிருங்கள்" (1 கொரி 14:20).

இந்த வேதபகுதியில் சபையார் செய்யவேண்டிய சில காரியங்களை வெளிப்படையாகவும், திட்டவட்டமாகவும் பவுல் அறிவிப்பதைப் பார்க்கிறோம். எச்சரிக்கையாயிருங்கள் என்கிறார், சிலரைவிட்டு விலகுங்கள் என்கிறார், கீழ்ப்படியுங்கள் என்கிறார். சில காரியங்களில் ஞானிகளாயிருங்கள் என்கிறார். சில காரியங்களில் பேதைகளாயிருங்கள் என்கிறார். தேவன் நமக்காக எல்லாவற்றையும் செய்துமுடிப்பார் என்பது உண்மைதான். அவரே எல்லா காரியங்களையும் வாய்க்கப்பண்ணுகிறார் என்பதும் உண்மைதான். அதனால் நாம் ஒன்றுமே செய்யமாட்டேன், நான் எதையும் செய்யவேண்டிய அவசியமில்லை என்று இருக்கக்கூடாது. நாம் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

பெலிஸ்தனிடம் யுத்தம்பண்ணும்படியாக வந்த தாவீது அவனிடம் சொல்கிறார்: "நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய

சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்திலே வருகிறேன், யுத்தம் கர்த்தருடையது" என்கிறார் (1 சாமு 17:45,47). அப்படிச் சொல்லிவிட்டு அங்கே சும்மா நின்றுகொண்டிருக்கவில்லை. ஜெபம் பண்ணிக்கொண்டிருக்கவில்லை, செயல்படுகிறார். "தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான்", என்று 48,49ம் வசனங்களில் வாசிக்கிறோம். நம்முடைய விசுவாசத்தைச் செயல்படுத்துகிறவர்களாய் நாம் இருக்கவேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிருபைக்குட்பட்டவர்கள். நாம் எதையும் செய்யவேண்டியதில்லை, கிருபை எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும் என்று இருக்கக்கூடாது. கிருபையின் பிரமாணங்களை நாம் கைக்கொள்ளவேண்டியது அவசியம். நாம் செய்யவேண்டிய சில காரியங்களைக் குறித்து அறிவிக்கும் வேத வசனங்களை வாசித்துப்பாருங்கள். லூக்கா 6:36; 12:40, அப் 23:11, ரோமர் 12:2, 10, 16, 21, 2 கொரி 5:20; 6:14-17, கலா 6:7, எபே 4:32; 6:10, பிலிப் 4:6, கொலோ 3:15, 1 தெச 5:13, எபி 13:5, யாக் 1:22; 5:7, 1 பேதுரு 1:16; 3:8; 5:8, வெளி 2:10; 3:2, 19. தான் உயிரோடிருந்த கடைசி சில மணிநேரங்களில் கிறிஸ்து வழங்கிய சில பிரமாணங்களை யோவான் 13:34, 35; 14:15, 21, 23, 24; 15:10, 17 ஆகிய வசனங்களில் வாசித்துப்பாருங்கள். இவற்றுக்கு நாம் கீழ்படிந்தே ஆகவேண்டும்.

சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென். (ரோமர் 10:20)

ரோமாபுரியிலுள்ள சபையார் ஒருவரோடு ஒருவர் சமாதானமுள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்திய பவுல், மீண்டுமாக சமாதானத்தின் தேவனிடம் ஜெபிக்கிறார் (ரோமர் 15:33). "யெகோவா ஷாலோம்" (நியா 6:24) என்பது கர்த்தரின் உடன்படிக்கைப் பெயர்களில் ஒன்று. நம்முடைய சமாதானத்தின் காரணர் தேவனே. அவருடைய உதவியின்றி ஒருவரும் இந்த உலகில் சமாதானமாக இருக்கமுடியாது. "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்" (யோவான் 14:27) என்று கிறிஸ்து வாக்களித்திருக்கிறார்.

இரண்டு காரியங்களுக்காக பவுல் ஜெபிக்கிறார்

1. சாத்தானை தேவன் தோற்கடித்து விசுவாசிகளின் கால்களின்கீழ் நசுக்கிப்போடும்படியாக

2. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை விசுவாசிகளோடு தொடர்ந்து இருக்கும்படியாக

சாத்தானைத் தோற்கடிக்க உங்களாலும் என்னாலும் முடியாது, சாத்தானை பாதாளத்தில் தள்ள உங்களாலும் என்னாலும் முடியாது. அப்படி முடியும் என்றால் முந்தின வேதபகுதியில் சபை என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று அறிவித்த பவுல் அதோடு சேர்த்து சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போடுங்கள் என்றும் சொல்லியிருப்பார். தேவன் சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போடுவார் என்றுதான் பவுல் சொல்கிறார். ஆதி 3:15, சங் 91:13 வசனங்கள் நினைவுபடுத்தப்படுகின்றன.

"லூசிபர் விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம். ஞானம் நிறைந்தவன், முழுமையான அழகுள்ளவன். பலமுள்ளவனாக சிருஷ்டிக்கப்பட்டவன், அபிஷேகம் பண்ணப்பட்ட கேரூப்" (எசேக்கியேல் 28). பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவருக்கு அடுத்தபடியாக கூடுதல் வல்லமையுள்ள ஒருவர் உண்டென்றால் அது லூசிபர்தான். அதனால்தான் "வானத்துக்கு ஏறுவேன், சிங்காசனத்தை தேவனுடைய நட்சத்திரங்களுக்குமேல் வைப்பேன், தேவனுடைய பர்வதத்திலே வீற்றிருப்பேன், உன்னதமான தேவனுக்கு ஒப்பாயிருப்பேன்" என்று அவனால் சொல்லமுடிந்தது (ஏசாயா 14). அவனை இந்த உலகத்தின் அதிபதியென்று கிறிஸ்துவே அவனைக்குறித்து கூறுகிறார் (யோவான் 12:31). அவனை வானத்திலிருந்து பூமியிலே தள்ளுவதற்கு மிகாவேலும் அவனுடைய தூதர்களும் மிகப்பெரிய யுத்தம் பண்ணவேண்டியதிருக்கும் (வெளி 12:7). இன்றும் அவன் மிகுந்த அதிகாரம் உள்ளவனாகத்தான் இருக்கிறான்.

சாத்தானைத் தோற்கடித்து, நம்முடைய கால்களின் கீழே நசுக்கிப்போடுகிறவர் சமாதானத்தின் தேவன் என்பதை அறிந்துகொள்ளுங்கள். கால்களின் கீழ்மிதித்துப்போடுவது என்பது எதிரிகளை முற்றிலுமாக மேற்கொள்வதை உறுதிப்படுத்தும் ஒரு காரியம். "அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி 3:15) என்ற வசனத்தை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதினால் சாத்தான் நசுக்கப்படுவது உறுதி. கல்வாரி சிலுவையில் சாத்தானை மேற்கொண்ட கிறிஸ்துவின் வெற்றியில் நம் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு. யோசுவா 10:24-ல் எமோரியரின் ஐந்து

ராஜாக்களின் கழுத்துகளின்மேல் தங்கள் கால்களை வைக்கும்படியாக யோசுவா ஆணையிடுவதைப் பார்க்கிறோம்.

சாத்தானிடம் யுத்தம் செய்ய நம்முடைய பலம் போதாது என்பதனால் அவனை எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபே 6:13) என்று பவுல் ஆலோசனை தருகிறார். சர்வாயுதவர்க்கம் என்ற வார்த்தை கிறிஸ்துவையே குறிப்பிடுகிறது. அர்மகெதோன் யுத்தத்தில் அந்திக்கிறிஸ்து தோற்கடிக்கப்படும்போது அந்த யுத்தத்தில் பங்குகொள்ளும்படியாக வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய் வெள்ளைக் குதிரைகளில் தேவனுடைய பரிசுத்தவான்கள் வருவார்கள் என்பது வெளி 19:13,14ல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அப்போது யுத்தம் செய்வது கிறிஸ்து மட்டுமே. "கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்" (யாத் 14:14) என்று சொல்லப்பட்டிருக்கிறதே.

சாத்தான் மட்டுமல்ல, தேவனுடைய பிள்ளைகளை எதிர்க்கிறவர்கள் அவர்களை உபத்திரவப்படுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தோற்கடிக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கு ஒரேயொரு காரணம்தான் உண்டு. அதுதான் தேவனுடைய கிருபை. அதனால்தான் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக என்று பவுல் சபையை ஆசீர்வதிக்கிறார். பொதுவாக தன்னுடைய எல்லா நிருபங்களிலும் பவுல் இவ்விதமாக ஆசீர்வதிப்பதைப் பார்க்கிறோம் (1 கொரி 16:23, கலாத் 6:18, பிலிப் 4:23, 1 தெச 5:28; 2 தெச 3:18, 2 தீமோ 4:22, பிலேமோன் 25).

உடன் ஊழியர்கள் வாழ்த்துகிறார்கள் (வசனம் 21-24)

என் உடன்வேலையாளாகிய தீமோத்தேயும், என் இனத்தாராகிய லூசியும், யாசோனும், சொசிபத்தரும் உங்களை வாழ்த்துகிறார்கள். (ரோமர் 16:21)

ரோமாபுரி சபையாரை வாழ்த்திவிட்டு, சில ஆலோசனைகளையும், ஆசீர்வாதத்தையும் அறிவித்து முடித்த பவுல் அடுத்த மூன்று வசனங்களில் கொரிந்து பட்டணத்தில் தன்னோடு ஊழியம் செய்துகொண்டிருந்த எட்டு பரிசுத்தவான்களின் பெயரைக் குறிப்பிட்டு, அவர்களுடைய வாழ்த்துதல்களை ரோமாபுரி சபை விசுவாசிகளுக்கு அறிவிக்கிறார்.

வித்தியாசமான சபைகளில் உள்ள விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியம் உடையவர்களாயிருக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். அவர்களில் முதலாவது சொல்லப்படுபவர் தீமோத்தேயு, இவர் பவுலின் பிரதானமான உதவியாளர். அவருடைய தகப்பன் ஒரு கிரேக்கன், தாய் விசுவாசமுள்ள யூதஸ்திரீ (அப் 16:1). அவருடைய பாட்டியும் தாயும் விசுவாச வீரர்களாக இருந்தார்கள் (2 தீமோ 1:5). தன்னோடிருந்த யூதர்களைத் திருப்திப்படுத்தும்படியாக பவுல் அவரை விருத்தசேதனம் செய்து கொள்ளவைத்த நிகழ்ச்சி அப் 16:3ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவருடைய பெயர் வேதத்தில் சுமார் இருபது இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது (1 கொரி 4:17; 16:10, 2 கொரி 1:1,19, பிலி 1:1; 2:19, கொலோ 1:1, 1 தீமோ 1:1; 3:2,6, 2 தீமோ 1:1, பில 1, அப் 16:1-3; 17:14; 18:5; 19:22; 20:4). அவருடைய பெயரில் இரண்டு நிருபங்களை பவுல் எழுதியிருக்கிறார்.

லூசியைக் குறித்து அப் 13:1லும், யாசோனைக் குறித்து அப் 17:9லும் சொல்லப்பட்டிருக்கிறது. யாசோன் ஒரு போதகராக இருந்திருக்கவேண்டும். சொசிபத்தர் அப் 20:4ல் சோபத்தர் என்று குறிப்பிடப்படுகிறார். இந்த மூன்றுபேருமே பவுலின் உறவினர்களாகக் குறிப்பிடப்படுகிறார்கள்.

இந்த நிருபத்தை எழுதின தெர்தியுவாகிய நான் கர்த்தருக்குள் உங்களை வாழ்த்துகிறேன். (ரோமர் 16:22)

தெர்தியு என்பவர் பவுலின் உதவியாளராக அவரோடு செயல்பட்டு வந்திருக்கவேண்டும். "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" (2 தீமோ 3:16) என்ற வசனத்தின்படி பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினால் பவுல் அறிவித்த வார்த்தைகளை அவர் சொல்லச் சொல்ல தெர்தியு அவற்றை எழுதியிருக்கவேண்டும். பவுல் அறிவிக்காத ஒரு வசனத்தையும் தெர்தியு எழுதியிருக்க முடியாது. பொதுவாக வேறு ஒருவர் தன்னுடைய நிருபங்களை எழுதினாலும், கடைசியில் சில வசனங்களை பவுல் தன் கைப்பட எழுதும் பழக்கம் உடையவர் (கலா 6:11, 2 தெச 3:17, 1 கொரி 16:21, கொலோ 4:18) என்று தெரிகிறது.

தெர்தியு கர்த்தருக்குள் ரோம சபையாரை வாழ்த்துவதாகச் சொல்கிறார். ஒருவேளை ரோமபுரியில் யாரையும் அவர் தனிப்பட்ட விதத்தில் அறிந்திருக்காத நிலையில், கர்த்தருக்குள், அதாவது ஒரு கிறிஸ்தவ சகோதரன் என்ற முறையில் தன் அன்பை வெளிப்படுத்தி அவர்களை வாழ்த்துகிறார்.

என்னையும் சபையனைத்தையும் உபசரித்துவருகிற காயு உங்களை வாழ்த்துகிறான். பட்டணத்து உக்கிராணக்காரனாகிய ஏரஸ்தும், சகோதரனாகிய குவர்த்தும் உங்களை வாழ்த்துகிறார்கள் (ரோமர் 16:23).

சபைகளைக் கண்காணித்து நிர்வகித்து வரும் காயு இந்த வசனத்தில் முதல்நபராகக் குறிப்பிடப்படுகிறார். பவுல் தன் சக ஊழியருடன் காயுவின் வீட்டில் இருந்தபோதுதான் இந்த நிருபம் எழுதப்பட்டது. கிறிஸ்பு, காயு ஆகிய இரண்டு பேருக்கு மட்டுமே பவுல் நேரடியாக ஞானஸ்நானம் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது (1 கொரி 1:15). மிஷனரி ஊழியங்களில் பவுலோடு பல பாடுகளை காயு சந்தித்திருக்கிறார் (அப் 19:29; 20:4). 3 யோவான் நிருபம் இவ்விதமாகத் துவங்குகிறது, "மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற காயுவுக்கு எழுதுகிறதாவது: பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்".

ஏரஸ்து என்பவர் கொரிந்து பட்டணத்து உக்கிராணக்காரர் (பொருளாளர்) என்று குறிப்பிடப்படுகிறார். இவருடைய பெயர் அப் 19:22, 2 தீமோ 4:20லும் சொல்லப்படுகிறது. கி.பி.80–100 காலத்திலுள்ள கல்வெட்டு 1931ல் கொரிந்து இடிபாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதில் ஏரஸ்து என்பவரின் பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. குவர்த்துவின் பெயர் வேறு எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. இந்த மூன்று பேருமே கொரிந்துப் பட்டணத்து சபையைச் சேர்ந்தவர்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். (ரோமர் 16:24)

20-வது வசனத்தின் ஜெபத்தை மீண்டுமாக பவுல் சொல்கிறார். கெத்செமனே தோட்டத்தில் ஒரே வார்த்தையை மூன்றுமுறை சொல்லி கிறிஸ்து ஜெபித்தார் என்பதை நினைவுகூருகிறோம்.

பவுலின் முடிவுரை (வசனம் 25-27)

ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான, (ரோமர் 16:25)

இந்த வசனத்தில் பவுல் விவரிக்கும் காரியம் அப்போஸ்தலனாகிய

பவுல் பிரசங்கிக்கும் சுவிசேஷத்தைப் பற்றியது என்பதை அடுத்த வசனத்தில் இருந்து அறிந்துகொள்கிறோம். தன்னுடைய ரோமர் நிருபத்தில் அந்த சுவிசேஷத்தையே பவுல் அறிவிக்கிறார். இந்த வசனம் அறிவிக்கும் காரியங்கள் :

1. ஆதிகாலமுதல் சுவிசேஷம் அடக்கமாயிருந்தது (அதாவது தொடக்க காலத்தில் அது சற்று மறைக்கப்பட்டிருந்தது)
2. அதை வெளியரங்கமாக்கும்படியாக தேவனே இப்போது கட்டளையிட்டிருக்கிறார்.
3. எனவே தீர்க்கதரிசிகள் அந்த சத்தியத்தை வெளிப்படையாக அறிவிக்கிறார்கள்.
4. அவர்கள் அறிவித்ததின் நோக்கம் மனிதர்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதே.
5. இவ்வாறு அவர்கள் கீழ்ப்படியும்போது தேவனால் ஸ்திரப்படுத்தப்படுகிறார்கள் (பலப்படுத்தப்படுகிறார்கள்) (வசனம் 26).

ரோமர் நிருபத்தின் முடிவுரையான கடைசி மூன்று வசனங்களைத் தியானித்துக் கொண்டிருக்கிறோம். அது அறிவிக்கும் முதலாவது சத்தியம் : "கிறிஸ்துவினால் உண்டாகும் இலவசமான இரட்சிப்பைக் குறித்த சத்தியம் ஆதிநாட்களில் இரகசியமாக இருந்தது. மோசேயின் நாட்களில் சுவிசேஷம் வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. "என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா 18:15) என்று மட்டுமே மோசேயினால் வரப்போகிற கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லமுடிந்தது. அவர் மூலமாக மனித இனம் முழுவதும் இரட்சிக்கப்படும் என்ற வெளிப்பாடு அவருக்குக் கொடுக்கப்படவில்லை. "காரியங்களை மறைப்பது தேவனுக்கு மேன்மை" (நீதி 25:2) என்ற வசனத்தின்படி, மேசியாவைக் குறித்த முழுமையான வெளிப்பாடு ஆதி நாட்களில் எந்த தீர்க்கதரிசிக்கும் வழங்கப்படவில்லை.

இப்போது வெளிப்படுத்தப்பட்டாலும் இதுவரை தேவனுடைய சித்தத்தின்படி மறைவாக வைக்கப்பட்ட சத்தியங்களே 'இரகசியம்' என்று அழைக்கப்படுகிறது. இந்த வார்த்தை தானியேலில் ஒன்பது தடவையும் மத்தேயு, மாற்கு, லூக்கா எழுதிய சுவிசேஷங்களில் ஒவ்வொருமுறையும்

(13:11, 4:11; 8:10), பவுலின் நிருபங்களில் இருபது இடங்களிலும் வெளிப்படுத்தின விசேஷத்தில் நான்கு தடவையும் பயன்படுத்தப்படுகிறது.

ஆனால் இந்த சத்தியங்களை நிரந்தரமாக மறைந்திருக்க தேவன் விரும்பவில்லை. எனவே அவற்றை பகிரங்கமாக வெளிப்படுத்தும்படியாக தன் தீர்க்கதரிசிகளுக்குக் கட்டளையிடுகிறார். கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்க்கை, பாடுமரணம் அதனால் உண்டாகும் இரட்சிப்பைக் குறித்து படிப்படியாக சங்கீதம் மற்றும் பல தீர்க்கதரிசன புத்தகங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மிகவும் கூடுதலான முறையில் மேசியாவைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்று அறிவித்தவர் ஏசாயா தீர்க்கதரிசி. ஏசாயா 53-வது அதிகாரம் முழுவதும் வாசித்துப் பாருங்கள். மனித இனத்தின் அக்கிரமங்கள், பாடுகள், துக்கங்கள் அவர்மேல் சுமத்தப்பட்டன. இதன் விளைவாக கர்த்தரே அவரை நொறுக்கினார் என்கிறார் ஏசாயா. அநேகருடைய பாவத்தை அவர் சுமந்ததின் விளைவாக அவர் "தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்" (ஏசாயா 53:11) என்று வாசிக்கிறோம்.

தேவ கற்பனைக்குக் கீழ்ப்படிந்து புதிய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துவினால் உண்டாகும் இரட்சிப்பைக் குறித்து யாவரும் அறிந்துகொள்ளும்படியாக அதைத் தங்கள் நிருபங்களில் வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள். அவர்களில் பிரதானமானவர் அப்போஸ்தலனாகிய பவுல். "புறஜாதிகள் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்குள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தங்களுக்கு உடன் பங்காளிகளுமாயிருக்கிறார்களென்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்" (எபே 3:4). 1 கொரி 2:7, எபே 1:10, கொலோ 2:2, 1 தீமோ 3:16 வாசித்துப் பாருங்கள். **புதிய ஏற்பாட்டின் சத்தியங்கள் பழைய ஏற்பாட்டில் மறைக்கப்பட்டிருந்தது. பழைய ஏற்பாட்டில் மறைக்கப்பட்ட சத்தியங்கள் புதிய ஏற்பாட்டில் தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டிருக்கின்றன.**

இவ்வாறு மறைக்கப்பட்டிருந்த சுவிசேஷம் தேவனுடைய உத்தரவின்படி தீர்க்கதரிசிகள் மூலமாக யாவரும் அறிந்து கொள்ளும்படியாக அறிவிக்கப்பட்டதின் நோக்கம் நான்காவதாக வசனத்தின் முடிவில் சொல்லப்படுகிறது. யூதர்கள் மாத்திரமல்ல, பூமியில் நான்கு திசைகளிலுமுள்ள புறஜாதியாரும், சத்தியத்தை விசுவாசத்தோடு ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மத்தேயு சுவிசேஷத்தின் கடைசி இரண்டு வசனங்களில் கிறிஸ்து தன் சீஷர்களிடம் சொல்கிறார் : "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல

ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத் 28:19,20). சகல ஜாதிகளும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமானால் சகல ஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டே ஆகவேண்டும். அதைத்தான் இந்த நாட்களில் நாம் செய்துகொண்டிருக்கிறோம். மிஷனரி ஊழியர்களின் முக்கியத்துவம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்தவல்லவரும், (ரோமர் 16:26)

தேவனுடைய கட்டளையின்படி உலகமெங்கும் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தை அவர்கள் விசுவாசித்து அதற்குக் கீழ்ப்படிவதினால் உண்டாகும் ஆசீர்வாதம் என்ன என்பதை பவுல் இந்த வசனத்தில் சொல்கிறார். தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்கள் தேவனால் ஸ்திரப்படுத்தப்படுவார்கள். அதாவது மென்மேலும் பலப்படுத்தப்படுவார்கள், இரட்சிப்பில் நிலைத்திருப்பார்கள்.

"இயேசுகிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷம்" என்று உரிமையோடும், சற்றுப் பெருமையோடும் பவுல் ரோமாபுரி சபையாரிடம் தன்னுடைய அதிகாரத்தை அவர்கள் கண்டுகொள்ளும்படியாக பவுல் பேசுகிறார் என்றால் அதற்குக் காரணம் இதுதான். கிறிஸ்து யார் என்பதையும், அவர் மனித இனத்துக்கு என்ன செய்தார் என்பதையும் அறிவிப்பதே சுவிசேஷம். அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவை மட்டுமே பிரசங்கித்தார் (1 கொரி 1:23; 2 கொரி 4:5). தங்களையும், தங்கள் ஊழியங்களையும் பிரசங்கிக்கும் ஊழியக்காரர்களால் இவ்வளவு அதிகாரத்தோடு பேச முடியாது. கலாத்தியர் 1:11-12ல் பவுல் சொல்கிறார் : "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்". தேவனிடமிருந்து நேரடியான வெளிப்பாட்டைப் பெறும் ஊழியர்கள் உண்மையிலேயே பாக்கியவான்கள். தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறிவித்துக்கொண்டிருக்கும் ஊழியர்கள் பலர் உண்டு. கிறிஸ்து என்ன செய்தார் என்பதை அறிவிப்பதே சுவிசேஷ ஊழியம். **நாம் தேவனுக்கு என்ன செய்கிறோம் என்பதல்ல. தேவன் நமக்கு என்ன செய்தார் என்பதே முக்கியமானது.**

நம்மைத் தெரிந்து கொண்ட சர்வவல்லமையுள்ள தேவன் நம்மை ஸ்திரப்படுத்துகிறவராயும் இருக்கிறார் என்பதுதான் சுவிசேஷம் அறிவிக்கும் காரியம்.

நாம் எப்போது ஸ்திரப்படுத்தப்படுகிறோம்.

1. நம்முடைய சிந்தை, உணர்வுகள், பேச்சு, நடத்தை, நம்பிக்கை, எதிர்பார்ப்பு ஒவ்வொன்றிலும் தேவன் தன்னுடைய முத்திரையைப் பதிப்பிக்கும்போது.

2. பாவம், இரட்சிப்பு, மரணம், ஜீவன், நித்தியம் ஆகியவைகளைக் குறித்து வேதம் என்ன சொல்கிறதோ அதை விசுவாசிக்கும்போது.

ஒரு மனிதன் தன்னுடைய சொந்த திறமையினாலோ, முயற்சியினாலோ தன்னை தேவ சமுகத்தில் ஸ்திரப்படுத்திக்கொள்ள முடியாது. இன்று நாம் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டிருக்கிறோம் என்றால் அது தேவனுடைய கிருபை. நாம் இரட்சிக்கப்பட்டதோடு கிருபையின் செயலாற்றல் முடிந்துவிடவில்லை. எபேசு சபையின் மூப்பர்களுக்கு பவுல் கொடுக்கும் கடைசி ஆலோசனை இதுதான்: "நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" (அப் 20:32). வார்த்தை தேவனாய் இருப்பதினால் (யோவான் 1 : 1) தேவனுடைய வார்த்தையினாலே நாம் பிழைக்கிறோம் (மத் 4 : 4)

பிலிப்பியர் 1:5,6ல் பவுல் ஜெபிக்கிறார் : "உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்". 24ல் அவர் ஜெபிக்கிறார் : "வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்". 1 தெச 3:13ல் பவுல் ஜெபிக்கிறார் : "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற

பரிசுத்தவான்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக."

தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென் (ரோமர் 16:27)

ரோமர் நிருபத்தின் கடைசி இரண்டு வசனங்களில் தேவனைப் பற்றிய இரண்டு முக்கியமான சத்தியங்களை பவுல் அறிவிக்கிறார்.

1. தேவன் ஸ்திரப்படுத்த வல்லவர் (வசனம் 26)
2. தேவன் ஒருவரே ஞானமுள்ளவர் (வசனம் 27)

தாம் ஒருவரே ஞானமுள்ளவர் என்று சொல்வதை "ஞானமே உருவாகிய தேவன்" என்றும் பொருள் கொள்ளலாம். நீதிமொழிகள் 3:19,20 சொல்கிறது: "கர்த்தர் ஞானத்தினாலே பூமியை அஸ்திபாரப்படுத்தி, புத்தியினாலே வானங்களை ஸ்தாபித்தார். அவருடைய ஞானத்தினாலே ஆழங்கள் பிரிந்தது, ஆகாயமும் பனியைப் பெய்கிறது". தேவனுடைய ஞானம் எவ்வளவு மகிமையானது என்றால், "தேவனுடைய பைத்தியம் என்னப்படுவது மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது" (1 கொரி 1:25). சங்கீதக்காரன் சொல்கிறார் : "கர்த்தாவே, உமது கிரியைகள் எவ்வளவு திரளாயிருக்கிறது! அவைகளையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்" (சங் 104:24). தேவனுடைய அபரிமிதமான ஞானத்தைக் குறித்து ரோமர் 11:33லும் தியானித்திருக்கிறோம். மனித இரட்சிப்பின் திட்டம் தேவனுடைய அநந்த ஞானத்தை வெளிப்படுத்துகிறது என்று எபேசியர் 3:10 அறிவிக்கிறது.

"இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்கு என்றும் மகிமை உண்டாவதாக" என்று தன்னுடைய துதியோடு பவுல் தன் நிருபத்தை முடிக்கிறார். "தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக" (யூதா 25) என்று யூதாவும் தன் நிருபத்தை முடிக்கிறார். தேவன் ஒருவரே மகிமைக்கும் துதிக்கும் பாத்திரர். தாவீது சொல்கிறார் : "கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே, அவரைத் துதியுங்கள்; யாக்கோபின் சந்ததியாரே, நீங்கள் எல்லாரும் அவரைக் கனம் பண்ணுங்கள்; இஸ்ரவேலின் வம்சத்தாரே, நீங்கள் எல்லாரும் அவர் பேரில் பயபக்தியாயிருங்கள்" (சங் 22:23). பவுல் சொல்கிறார் : "நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள

தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்" (1 தீமோ 1:17).

நிருபத்தின் கடைசி மூன்று வசனங்களை தன்னுடைய செயலாளர் தெர்தியுவின் உதவியின்றி பவுல் தன்னுடைய கைகளினால் எழுதியிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. மிகவும் கவனமாய், "இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமை உண்டாவதாக" என்று பவுல் தன் நிருபத்தை முடிக்கிறார்.

பாவிகள், புறஜாதியார் இரட்சிக்கப்படுவதின் மூலம் தேவன் மகிமைப்படுவது உறுதி. இந்த இரட்சிப்பு கிறிஸ்துவின் மூலமாகவே சாத்தியமாயிற்று. அவர் மூலமாகவே கல்வாரியில் இரட்சிப்பு வெளிப்பட்டது. கிறிஸ்துவின் கிரியை தேவனை நித்திய நித்தியமாக மகிமைப்படுத்துகிறது என்றால் அதற்கு ஒரு காரணத்தைத்தான் சொல்லமுடியும். இருவரும் ஒருவராயிருக்கிறார்கள். பரிசுத்தமான தேவனை நாம் மகிமைப்படுத்தும்போதும் கிறிஸ்து மூலமாகவே நாம் அதைச் செய்யமுடியும். நம்முடைய பலத்தின் அடிப்படையிலோ, தகுதியின் அடிப்படையிலோ நாம் பரிசுத்தமான தேவனை அணுகவே முடியாது. பரலோகத்தில் இருப்பவைகளும், பூலோகத்தில் உள்ளவைகளும் கிறிஸ்து மூலமாக மட்டுமே இணைக்கப்படுகின்றன.

இந்த ரோமர் நிருபத்தின் விளக்கவுரையை எழுதி முடிக்கத்தேவையான கிருபையை தேவன் எனக்குத் தந்திருக்கிறார். அதை வாசித்து தியானிக்கத் தேவையான கிருபையை அவர் உங்களுக்குத் தந்திருக்கிறார். அவருக்கு நன்றி சொல்வோமா? தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

- - -

அப்போஸ்தலனாகிய பவுல் - வாழ்க்கை வரலாறு

புதிய ஏற்பாட்டில் உள்ள 27 புத்தகங்களில் 14 புத்தகங்கள் அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்பட்டவை ஆகும். ஆதி அப்போஸ்தல சபை செயல்பட்ட விதத்தை அறிவிக்கும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் பவுல் நடப்பித்த ஊழியமே கூடுதலாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த சுமார் முப்பது ஆண்டுகளில் தேசமெங்கும் சபைகளை தொடர்ந்து ஸ்தாபித்து, கிறிஸ்தவத்தை உலகமெங்கும் அறிமுகப்படுத்திய பெருமை பவுலையே சாரும். பவுல் தலைசிறந்த மிஷனரி ஊழியக்காரர் என்பது மட்டுமல்ல, சத்திய உபதேசத்துக்கடுத்த வெளிப்பாடுகளை கிறிஸ்துவிடமிருந்து நேரடியாகப் பெற்று சபைக்கு அறிவித்த தீர்க்கதரிசி.

ரோமர் நிருபத்தின் முதல் அதிகாரம் முதல் வசனத்தில் பவுல் தன்னை இவ்விதமாக அறிமுகப்படுத்துகிறார்.

1) இயேசுகிறிஸ்துவின் ஊழியக்காரர்

2) அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவர்

3) சுவிசேஷத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்டவர்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, பவுலை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் என்பதைப் பாருங்கள்: "அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான்" (அப் 9:15). பவுல் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, அழைக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட கிறிஸ்துவின் ஊழியக்காரர்.

பவுலின் அழைப்பு

எரேமியாவைப்போல், தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே தேவன் பவுலை அறிந்திருந்தாலும் (எரே 1:5), அவர் கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்ற அங்கீகாரமும், அழைப்பும், பிரித்தெடுக்கப்படுதலும் தமஸ்கு பட்டணத்துக்குச் செல்லும் வீதியில்தான் நடக்கிறது. இந்த சம்பவம் 25.1.34ல் நடந்திருக்கவேண்டும் என்று வேத பண்டிதர்கள் கருதுகிறார்கள். இந்த நிகழ்ச்சி குறித்து, லூக்கா, அப் 9:1-19, 22:3-16, 26:2-18 ஆகிய மூன்று இடங்களிலும், கலாத் 1:15,16, 1 கொரி 9:11; 5:8-10, பிலிப் 3:4-11, 1 தீமோ 1:12-16 ஆகிய இடங்களில் பவுலும் குறிப்பிடுகிறார்கள்.

யூத மதத்தில் வைராக்கியமுடையவராய் கிறிஸ்துவுக்கு விரோதமாக செயல்பட்ட பவுல் (கலா 1:13,14) அந்த சமயத்தில் சுமார் 29 வயதுள்ள வாலிபன். "சவுல் வீடுகள்தோறும் நுழைந்து, புருஷரையும் ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து, சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்" (அப் 8:3) என்று வாசிக்கிறோம். புதிய ஏற்பாட்டு சபையின் முதல் இரத்தசாட்சியான ஸ்தேவானைக் கொலை செய்கிறதற்கு சவுலும் சம்மதித்திருந்தான் (அப் 8:1). யூதர்களின் தலைமை ஆலோசனை சங்கத்தின் (சனதரீம்) உறுப்பினராக இருந்தும், ஸ்தேவானின் சாட்சி பவுலின் இருதயத்தைத் தொட்டிருக்க வேண்டும். ஆனாலும் பிரதான ஆசாரியனின் அனுமதியுடன் தமஸ்குவில் உள்ள கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தச்செல்லும் வழியில் கிறிஸ்து அவரைச் சந்திக்கிறார் (1 கொரி 9:1; 15:8). தமஸ்குவிலிருந்து ஐந்துமைல் தூரத்தில் உள்ள மெஸ்லே என்ற கிராமத்தில் இந்த சம்பவம் நடந்ததாகக் கருதப்படுகிறது.

கிறிஸ்து பவுலிடம் பேசிய முதல் வார்த்தை இதுதான்: "சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்? முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்" (வசனம் 9:4,5). முள் என்பது விவசாய வேலைகளில் காளைகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தப்படும் தாற்றுக்கோல் ஆகும். உன்னையே நீ ஏன் காயப்படுத்திக்கொள்ளவேண்டும் என்கிறார். வானத்திலிருந்து வெளிப்பட்ட ஒளியின் பிரகாசத்தில் பார்வையை இழந்த பவுல், கீழே விழுந்தாலும், யூதர்களால் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவே அவர்கள் நெடுங்காலமாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மேசியா என்பதை அறிந்து கொள்கிறார்.

உடனே, தன்னை தேவசித்தத்துக்கு ஒப்புக்கொடுக்கிறார். "ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்" (அப் 9:6) என்கிறார். கிறிஸ்துவின் ஆணையின்படி அனனியா என்ற தேவஊழியர் பவுலை சந்தித்து, சத்தியத்தை அறிவித்து, ஞானஸ்நானம் கொடுத்த

நிகழ்ச்சி அப் 9:10-18; 22:12-16ல் சொல்லப்பட்டிருக்கிறது. பார்வையடைந்த பவுல், "தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான்" (அப் 9:20) என்று ஆவியானவர் எழுதிவைத்திருக்கிறார்.

பவுலின் பிறப்பும், வளர்ப்பும்

பவுல் கி.பி. 5ல் பிறந்ததாகக் கருதப்படுவதினால், இவர் கிறிஸ்துவைவிட இளையவர். அவர் பிறந்த ஊர் மத்தியதரைக்கடலின் வடகிழக்குப் பகுதியில் உள்ள சில்சியா தேசத்தில் உள்ள தர்சு பட்டணம் (அப் 21:39; 22:3). ரோமதேசத்தின் பிரஜைகளாயிருந்த இவருடைய யூத பெற்றோர் (அப் 16:37; 22:25 - 29) இவருக்கு வைத்த எபிரெய பெயர் சவுல் (Shául). Paulus என்ற பதம் சிறியவன் என்று பொருள்படும். "நான் எட்டாம் நாளில் விருத்தசேதனமடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், பென்யமீன் கோத்திரத்தான், எபிரெயரில் பிறந்த எபிரெயன், நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயன்" (பிலிப் 3:5) என்று சற்று பெருமையோடு பவுல் தன்னை அறிமுகப்படுத்துவதைக் கவனியுங்கள். பரிசேயர் என்றால் பிரித்தெடுக்கப்பட்டவர் என்று பொருள்.

தன்னுடைய ஆறாவது வயதிலிருந்து எபிரெய மொழியில் பவுல் வேதத்தை கற்றறிந்திருக்கவேண்டும். பதினான்காவது வயதுக்குப்பின் எருசலேமில் உள்ள தன்னுடைய சகோதரியின் வீட்டிலிருந்து (அப் 23:16) கமாலியேல் என்ற பிரபலமான வேத பண்டிதரிடம் பழைய ஏற்பாட்டு சத்தியங்களில், தான் போதிக்கப்பட்டிருந்ததை அப் 22:3ல் பவுல் அறிவிக்கிறார். கூடாரம் பண்ணுகிற தொழிலிலும் அவர் தேர்ச்சியடைந்திருந்தார் (அப் 18:3, 1 கொரி 4:12) .

"என் ஜனத்தாரில் என் வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும் யூதமார்க்கத்திலே தேறினவனாய், என் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்காக மிகவும் பக்திவைராக்கியமுள்ளவனாயிருந்தேன்" (கலா 1:14) என்று பவுல் தன்னைப்பற்றி குறிப்பிடுகிறார். இதன் விளைவாக, சவுலாக இருந்தபோது, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை (கலா 3:13, 1 கொரி 1:23) மேசியா என்றும், தேவகுமாரன் என்றும் அங்கீகரித்த கிறிஸ்தவர்களை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனாலும் கிருபையின் உபதேசத்தை பவுல் மூலமாக உலகத்துக்கு வெளிப்படுத்த விரும்பிய தேவகுமாரன், பவுலை சந்தித்தார், அது மட்டுமல்ல, புறஜாதியாருக்கும் அதை அறிவிக்கும் ஊழியத்தையும் அவரை நம்பி ஒப்புவித்தார்.

இரண்டாவது நூற்றாண்டில் எழுதப்பட்ட விலக்கப்பட்ட

ஆகமங்களில் ஒன்றான "பவுல் மற்றும் தெக்லா (Thecla) நடபடிகள்" "என்ற புத்தகத்தில் பவுலைக் குறித்த பல காரியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் உயரத்தில் குறைந்தவராகவும், மொட்டைத் தலை கொண்டவராகவும், பலவீனமான கால்களை உடையவராகவும் அதில் சித்தரிக்கப்படுகிறார் (2 கொரி 10:10, கலா 4:13, 14; 6:11). 2 கொரி 12:7ல் தன்னுடைய மாம்சத்தில் கொடுக்கப்பட்ட முள்ளைப்பற்றி பவுல் பேசுகிறார். கடுமையான ஒற்றைத் தலைவலியும், கால்கைவலிப்பு நோயும், ஒரு கண்ணில் பார்வைக்குறைவும் பவுலுக்கு இருந்ததாகக் கருதப்படுகிறது. தன்னுடைய சரீரசுகத்துக்காக மூன்று தரம் ஜெபித்தும், "என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" (வசனம் 9) என்ற பதிலை மட்டுமே பவுல் பெற்றுக் கொள்கிறார். பவுலின் திருமண வாழ்க்கையைக் குறித்து வேதத்தில் எந்த குறிப்பும் சொல்லப்படவில்லை.

பவுலின் ஆரம்பகால ஊழியம் (கி.பி. 34-45)

கலாத்தியர் 1:16,17-ல் பவுல் இவ்வாறு சொல்கிறார்: "தம்முடைய குமாரனை நான் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக, அவரை எனக்குள் வெளிப்படுத்தப் பிரியமாயிருந்தபோது, உடனே நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் யோசனை பண்ணாமலும், எனக்கு முன்னே அப்போஸ்தலரானவர்களிடத்திலே எருசலேமுக்குப் போகாமலும், அரபிதேசத்திற்குப் புறப்பட்டுப்போய், மறுபடியும் தமஸ்கு ஊருக்குத் திரும்பி வந்தேன்". சுமார் மூன்று ஆண்டுகள் அரேபியாவில் இருந்தபோது சத்தியவேதத்துக்கடுத்த சகல காரியங்களையும் தேவன் அவருக்குப் போதித்திருக்க வேண்டும். அதனால்தான் "நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக் கொண்டேன்" (1 கொரி 11:23) என்று அவரால் தைரியமாக சொல்லமுடிந்தது. "என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியானதல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை மனுஷனால் பெற்றதுமில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்" (கலா 1:11,12) என்கிறார்.

அரேபியாவில் அவர் செய்த ஊழியத்தின் விளைவாக யூதர்கள் அவரைக் கொலைசெய்யத் திட்டமிடுகிறார்கள். அரேத்தா ராஜாவின் சேனைத்தலைவனிடமிருந்து தப்பித்துக் கொள்ள தமஸ்குவின் கோட்டை மதில் வழியே ஒரு கூடையில் வைத்து பட்டணத்துக்கு வெளியே இறக்கிவிடப்படும் நிகழ்ச்சி 2 கொரி 11:32-33, அப் 9:23-25ல் சொல்லப்படுகிறது. உடனடியாக பவுல் எருசலேம் போகிறார். "பேதுருவைக் கண்டுகொள்ளும்படி நான் எருசலேமுக்குப் போய்,

அவனிடத்தில் பதினைந்து நாள் தங்கியிருந்தேன். கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை" (கலா 1:18-19). "சவுல் எருசலேமுக்கு வந்து, சீஷருடனே சேர்ந்துகொள்ளப் பார்த்தான்; அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல் எல்லாரும் அவனுக்குப் பயந்திருந்தார்கள்" (அப் 9:26) என்று வாசிக்கிறோம். தேவன் தெரிந்துகொண்ட ஊழியரை தேவனுடைய சபையே ஏற்றுக்கொள்ளவில்லை.

"பின்பு, சீரியா, சிலிசியா நாடுகளின் புறங்களில் வந்தேன்" (கலா 1:21) என்கிறார் பவுல். அதன்பின்பு அவன் எருசலேமிலே அவர்களிடத்தில் போக்கும் வரத்துமாயிருந்து (அப் 9 :26; 11:30; 15:4; 18:22; 21:15) "கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தர்க்கித்தான்; அவர்களோ அவனைக் கொலை செய்ய எத்தனம் பண்ணினார்கள். சகோதரர் அதை அறிந்து, அவனைச் செசரியாவுக்கு அழைத்துக் கொண்டு போய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள்" (அப் 9:28-29).

சுமார் பத்து ஆண்டுகால ஊழியத்தின் போது ஐசுவரியவான்களாயிருந்த பவுலின் குடும்பத்தார் பவுலை புறக்கணித்ததாகச் சொல்லப்படுகிறது. "எனக்கு லாபமாயிருந்தவை களெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்" (பிலிப் 3:7) என்கிறார் பவுல். இந்த காலகட்டத்தில் அவர் ஊழியத்தினிமித்தம் அனுபவித்த பாடுகள் 2 கொரி 11:23-27ல் சொல்லப்பட்டிருக்கிறது. "யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்" (2 கொரி 11:24) என்கிறார் பவுல். இந்த நாட்களில்தான் பவுல் மூன்றாம் வானம் வரைக்கும் எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கவேண்டும் (2 கொரி 12 : 1-9) என்று வேதபண்டிதர்கள் கருதுகிறார்கள். "அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்" (வசனம் 2) என்கிறார் பவுல். உன்னதமான ஆவிக்குரிய மேன்மையைப் பெற்றுக் கொண்ட பவுல் எவ்வாறு தன்னைத் தாழ்த்திப் பேசுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

சீரியாவில் உள்ள அந்தியோகியா பட்டணத்தில் உள்ள கிரேக்கர்கள் மத்தியில் மிகப்பெரிய எழுப்புதல் உண்டாவதைக் குறித்து கேள்விப்பட்ட எருசலேமிலுள்ள சபையார் அதை விசாரிக்கும்படியாக பர்னபாவை அங்கே அனுப்பி வைத்தார்கள் (அப் 11:21-23). புறஜாதியார் மத்தியில் ஊழியம் செய்ய பவுல் தேர்ச்சி பெற்றிருப்பதை அறிந்த பர்னபாஸ் உடனடியாக "சவுலைத் தேடும்படி தர்சுவுக்குப் புறப்பட்டுப் போய்,

அவனைக் கண்டு, அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டு வந்தான்" (அப் 11:25). அவர்கள் இருவரும் செய்த ஊழியத்தினிமித்தமாக "முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப் 11:26) என்று வாசிக்கிறோம்.

அகபு என்ற தீர்க்கதரிசி, "உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகும் என்று ஆவியானவராலே அறிவித்தான். அது அப்படியே கிலவுதியுராயனுடைய நாட்களிலே (கி.பி. 41-54) உண்டாயிற்று" (அப் 11:28). எருசலேமில் இருந்த கிறிஸ்தவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். "அப்பொழுது (அந்தியோகியா) சீஷரில் அவரவர் தங்கள் தங்கள் திராணிக்குத்தக்கதாக யூதேயாவில் குடியிருக்கிற சகோதரருக்கு உதவியாக பணஞ்சேகரித்து அனுப்பவேண்டுமென்று தீர்மானம் பண்ணினார்கள். அப்படியே அவர்கள் சேகரித்து, பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையிலே கொடுத்து, மூப்பரிடத்திற்கு அனுப்பினார்கள்" (அப் 11:29, 30). இது கி.பி.46ல் நடந்ததாகக் கருதப்படுகிறது (கலா 2:1-10). "பர்னபாவும் சவுலும் தர்ம ஊழியத்தை நிறைவேற்றியபின்பு மாற்கு என்னும் மறுபேர் கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு எருசலேமை விட்டுத் திரும்பிவந்தார்கள்" (அப் 12:25). இந்த மாற்கு பர்னபாவின் உறவினன் (கொலோ 4:10).

முதல் மிஷனரி பயணம் (கி.பி. 46-48)
அப் 13:4 - 14:28

ஒருநாள் அந்தியோகியா பட்டணத்து சபையின் ஊழியர்கள் உபவாசத்தோடு கர்த்தரை ஆராதித்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்கள்" (அப் 13:1) என்று ஆவியானவர் பேசினார். உடனடியாக சபையார், "உபவாசித்து ஜெபம் பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள்" (வசனம் 3) என்று வாசிக்கிறோம்.

"அப்படியே அவர்கள் பரிசுத்த ஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியா பட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி அங்கிருந்து சீப்புரு தீவுக்குப் (பர்னபாவின் ஊர், அப் 4:36) போனார்கள். சாலமி பட்டணத்தில் வந்தபோது அவர்கள் யூதருடைய ஜெப ஆலயங்களில் தேவவசனத்தைப் பிரசங்கித்தார்கள். யோவானும் அவர்களுக்கு உதவிக்காரனாயிருந்தான்" (அப் 13:4,5). அங்கிருந்து தெற்கு கடற்கரை ஓரமாக நான்கு நாட்கள் பிரயாணம் பண்ணி பாப்போ பட்டணம் வந்தபோது, அவர்களுக்கு விரோதமாய் வந்த மாயவித்தைக்கார யூதன் ஒருவனை பவுல் சபித்தபோது, "மந்தாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது; அவன்

தடுமாறி, கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினான்" (அப் 13:11) என்று எழுதப்பட்டிருக்கிறது. இதன்விளைவாக செர்கியு பவுல் என்ற புறஜாதி இனத்தைச் சேர்ந்த ரோம அதிபதி இரட்சிக்கப்படுகிறான் (வசனம் 12).

"பின்பு பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் பாப்போ பட்டணத்தை விட்டுக் கப்பல் ஏறிப் பம்பிலியாவிலிருக்கும் பெர்கே பட்டணத்துக்கு (175 மைல் தூரம்) வந்தார்கள். யோவான் அவர்களை விட்டுப் பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப் போனான்" (அப் 13:13). மாற்கு யோவான் எதற்காகப் பிரிந்துசென்றார் என்பது சொல்லப்படவில்லை. பவுல் பிரபலமாவதை அவரால் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை என்று கருதப்படுகிறது.

இதுவரை "பர்னபாவும் பவுலும்" என்று பர்னபாவின் பெயரை முதலாவதாக எழுதிவந்த லூக்கா இந்த வசனம் துவங்கி பவுலை முக்கியப்படுத்த ஆரம்பிக்கிறார். அங்கிருந்து 100 மைல் வடக்கேயுள்ள பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு சென்று, பவுல் நிகழ்த்திய நீண்ட பிரசங்கம் அப் 13:15-41ல் எழுதப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் உதவியின்றி கிறிஸ்துவின்மேல் ஒருவன் வைக்கும் விசுவாசம் ஒரு மனிதனை இரட்சிக்கிறது என்ற சத்தியத்தை இதுவரை பவுலைத்தவிர வேறெந்த மனிதனும் பிரசங்கித்ததில்லை.

இந்தப் பட்டணத்தில் பவுலின் ஊழியத்துக்கு மிகுந்த எதிர்ப்பு உண்டானபடியால் பிசீதியா, அந்தியோகியாவிலிருந்து, தென்கிழக்கில் 90 மைல் தூரத்திலுள்ள இக்கோனியாவுக்கு அவர்கள் வருகிறார்கள். "அங்கே சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்" (அப் 13:52) என்று வாசிக்கிறோம். "கர்த்தர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளினால் செய்யப்படும்படி அநுக்கிரகம் பண்ணினார்" (அப் 14:3). அதையடுத்து லீஸ்திராவில் ஊழியம் செய்யும்போது பிறவி சப்பாணியாயிருந்த ஒரு மனிதன் குணமடைகிறான் (அப் 14:8-10). பவுல் செய்ததை ஜனங்கள் கண்டு, "தேவர்கள் மனுஷரூபமெடுத்து நம்மிடத்தில் இறங்கி வந்திருக்கிறார்கள்" (வசனம் 11) என்றார்கள். அடுத்து 60 மைல் பிரயாணம் பண்ணி தெர்பையில் ஊழியம் செய்தார்கள்.

அதன்பின் லீஸ்திரா, இக்கோனியா, பிசீதியா, பெர்கே வழியாக அத்தலியா வந்து, "அங்கே கப்பல் ஏறி தாங்கள் நிறைவேற்றின கிரியைக்காக தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டுப் புறப்பட்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள். அவர்கள் அங்கே சேர்ந்தபொழுது, சபையை கூடிவரச்செய்து, தேவன் தங்களைக்கொண்டு

செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும் அறிவித்து, அங்கே சீஷருடனேகூட அநேகநாள் சஞ்சரித்திருந்தார்கள்" (அப் 14:26-28). பவுலின் முதல் மிஷனரி பயணம் நிறைவடைகிறது.

திருச்சபைச் சங்கக் கூட்டம் (கி.பி.50)
அப் 15:1-32, கலா 2:1-10

சுமார் ஒரு வருடம் பவுல் அந்தியோகியாவில் இருந்ததாகக் கருதப்படுகிறது. இந்த நாட்களில் ஏரோது பேதுருவைக் கொலை செய்யத் தேடியபடியால் அவர் அங்கிருந்து அந்தியோகியா வந்து தங்கியிருந்தார். யோப்பா பட்டணத்தில், தான் பெற்றுக்கொண்ட வெளிப்பாட்டின் அடிப்படையில் (அப் 10) புறஜாதியாருடன் சாப்பிடுவது, அவர்களோடு ஐக்கியம் கொள்வது ஆகிய காரியங்களில் விடுதலையோடு செயல்பட்டுக்கொண்டிருந்தார் என்று தெரிகிறது. பாரம்பரிய சடங்காச்சாரங்களில் நம்பிக்கை கொண்டிருந்த எருசலேமிலிருந்த ஆதி சபை இதை அங்கீகரிக்கவில்லை. பவுல் சொல்கிறார் : "யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்கு முன்னே அவன் (பேதுரு) புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோதோ, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப்பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனே கூட மாயம் பண்ணினார்கள்; அவர்களுடைய மாயத்தினாலே பர்னபாவும் இழுப்புண்டான்" (கலா 2:12,13) என்கிறார் பவுல்.

பேதுரு அந்தியோகியாவில் இருந்தபோது, "அவன்மேல் குற்றஞ்சுமந்ததினால், நான் முகமுகமாய் அவனோடே எதிர்த்தேன்" (வசனம் 11) என்கிறார் பவுல். எருசலேம் சபையின் தூண்களில் ஒருவராக பேதுரு கருதப்பட்டிருந்தாலும் (கலா 2:9), சத்திய உபதேசத்தின்மேல் கொண்டிருந்த வைராக்கியத்தினிமித்தம் பேதுருவையே எதிர்த்து நிற்கும் தைரியம் பவுலிடம் இருந்தது. **ஊழியக்காரர்கள் தவறு செய்யும்போதுகூட அதைக் கண்டிக்கக்கூடாது என்பது நவீனகாலத்து தவறான உபதேசம்.**

மேலும் சிலர் யூதேயாவிலிருந்து வந்து : "நீங்கள் மோசேயினுடைய முறைமைகளின்படியே விருத்தசேதனமடையாவிட்டால் இரட்சிக்கப்பட மாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம் பண்ணினார்கள்" (அப் 15:1), "பக்கவழியாய் நுழைந்த கள்ள சகோதரர்" (கலா 2:4) கலாத்தியாவில் இந்தத் தவறான உபதேசத்தைக் கொண்டுவந்ததினிமித்தம் பவுலும், பர்னபாவும், இன்னும் சில ஊழியர்களும் எருசலேமுக்குச் சென்று யாக்கோபு மற்றும் அப்போஸ்தலர்களைச் சந்தித்து இதுகுறித்து தீர்வு காண

விரும்புகிறார்கள். இந்தக் காலகட்டத்தில் "பவுல் கலாத்தியருக்கு எழுதின நிருபம்" எழுதப்பட்டு அனுப்பப்படுகிறது. கிருபையின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டபின், நியாயப்பிரமாணத்துக்குத் திரும்பிச்சென்ற அவர்களை "புத்தியில்லாத கலாத்தியரே" (கலா 4:1) என்கிறார். புத்தியில்லாத கிறிஸ்தவர்கள் எல்லா நாட்களிலும் இருந்திருக்கிறார்கள்.

எருசலேமில் முதலாம் திருச்சபைச் சங்கக்கூட்டம் கி.பி.50-ல் நடந்ததாகக் கருதப்படுகிறது (கலா 2:1-10, அப் 15:1-21). இதில் கலந்துகொள்ளும்படியாக, பெனிக்கே மற்றும் சமாரியாவில் சுவிசேஷத்தை அறிவித்தவாறு பவுல் எருசலேம் வந்து சேருகிறார். "அப்போஸ்தலரும் மூப்பரும் இந்தக் காரியத்தைக் குறித்து ஆலோசனை பண்ணும்படி கூடினார்கள்" (அப் 15:6) என்று வாசிக்கிறோம். "பரிசேய சமயத்தாரில் விசுவாசிகளான சிலர் எழுந்து, அவர்களை விருத்தசேதனம்பண்ணுகிறதும், மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பிக்கிறதும் அவசியம் என்றார்கள்" (வசனம் 5). பவுல் இதை எதிர்த்து நிற்கிறார். மிகப்பெரிய தர்க்கம் உண்டாகிறது.

அந்தியோகியாவில் தான் நடந்துகொண்ட விதம் தவறு என்பதை உணர்ந்த பேதுரு, பவுலின் உபதேசத்துக்கு ஆதரவாக குரல் கொடுக்கிறார். "நம்முடைய பிதாக்களாலும் நம்மாலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர் கழுத்தின்மேல் சுமத்துவதினால், நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்? கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையினாலே அவர்கள் இரட்சிக்கப்படுகிறது எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிக்கப்படுவோமென்று நம்பியிருக்கிறோம்" (அப் 15:10,11) என்கிறார்.

இறுதியில் சபையின் தலைவராகக் கருதப்பட்ட கிறிஸ்துவின் சகோதரர் யாக்கோபு பேச ஆரம்பிக்கிறார். ஆமோஸ் 9:11,12ன் அடிப்படையில் புறஜாதியார் மத்தியில் செய்யப்படும் ஊழியம் தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலே என்றும், "புறஜாதிகளில் தேவனிடத்தில் திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணலாகாது" (அப் 15:19) என்றும் சொல்கிறார். "புறஜாதியார் விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும் நெருக்குண்டு செத்ததற்கும், இரத்தத்திற்கும், விலகியிருக்கும்படி அவர்களுக்கு நாம் எழுதவேண்டுமென்றும் நான் தீர்மானிக்கிறேன்" (வசனம் 20) என்று முடிவு செய்கிறார். இவ்வண்ணமாக புறஜாதி சபைகளுக்கு ஒரு நிருபம் எழுதி அனுப்பப்படுகிறது. அதை அவர்கள் வாசித்து, அதனாலுண்டாகிய ஆறுதலுக்காகச் சந்தோஷப்பட்டார்கள் (அப் 15:31) என்று எழுதப்பட்டிருக்கிறது. பவுலின் ஊழியமும் அவர் அறிவித்த சுவிசேஷமும் முற்றிலுமாக அங்கீகரிக்கப்படுகிறது.

இரண்டாவது மிஷனரி பயணம் (கி.பி.50-52)
அப் 15:36-18:22

தங்களால் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளின் வளர்ச்சியைக் கண்காணிக்கும்படியாக இரண்டாவது மிஷனரி பயணத்துக்கு பவுல் பர்னபாவை அழைக்கும்போதே அவர்களுக்குள் பிரச்சனை உருவாகிறது. பர்னபா தன் உறவினன் மாற்குவையும் அழைத்துச்செல்ல விரும்பினான். "பவுலோ: அவன் பம்பிலியா நாட்டிலே நம்மைவிட்டுப் பிரிந்து நம்மோடேகூட ஊழியத்துக்கு வராததினாலே, அவனை அழைத்துக்கொண்டு போகக்கூடாது" என்கிறார்.

இதைப்பற்றி அவர்களுக்குள்ளே கடுங்கோபமூண்டபடியினால் அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தார்கள். பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு கப்பல் ஏறிச் சீப்புரு தீவுக்குப் போனான். பவுலோ சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே தேவனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு, சீரியாவிலும் சிலிசியாவிலும் திரிந்து சபைகளைத் திடப்படுத்தினான்" (அப் 15:38-41) என்று லூக்கா எழுதி வைத்திருக்கிறார். அப்போஸ்தலர் நடபடிகளில் பர்னபாவைக் குறித்து மேற்கொண்டு எந்தக் குறிப்பும் இல்லை. ஆனாலும் கடைசி நாட்களில் மாற்கு மீண்டுமாக பவுலினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார் என்பதை 2 தீமோ 4:11, கொலோ 4:10, பிலமோன் 24-ல் இருந்து அறிந்துகொள்கிறோம்.

இந்த பிரயாணத்தின்போது லீஸ்திரா பட்டணத்தில் தீமோத்தேயு என்ற சீஷனை பவுல் தன்னோடு சேர்த்துக் கொள்கிறார். அவருடைய தாய் யூதஸ்திரீயாயிருந்தும் தகப்பன் கிரேக்கன் என்பதினால் அவர் விருத்தசேதனம் பண்ணவேண்டியதாயிற்று (அப் 16:1-3). இந்த மூவரும் "பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்கு பரிசுத்த ஆவியினாலே தடைபண்ணப்பட்டு, மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்" (அப் 16:6,7)என்று வாசிக்கிறோம். அந்த நாட்களில் சபையின் செயல்பாடுகள் மனிதர்களுடைய ஆலோசனையின்படி நடக்கவில்லை என்று பார்க்கிறோம்.

ஒருநாள் இரவு தரிசனத்தில் மக்கெதோனியா (கிரீஸ்) தேசத்து மனிதனை பவுல் பார்க்கிறார். அவன் பவுலை தன் தேசத்தில் ஊழியம் செய்யும்படி வேண்டிக்கொண்டபடியால் அங்கு செல்ல எத்தனப்படுகிறார்கள். துரோவாவில் கப்பல் பிடித்து பிலிப்பி பட்டணத்துக்குப் போகும்போது லூக்காவும் அவர்களோடு சேர்ந்து

கொள்கிறார் (அப் 16:9-12). இந்த பட்டணத்தில் (அப் 16:12-40) லீதியாள் என்ற பெண்ணும் அவளுடைய குடும்பத்தாரும் ஞானஸ்நானம் எடுத்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறார்கள்.

அங்கு குறிசொல்லும் ஆவியை விரட்டும்போது நகரத்தில் கலவரம் உண்டாகி, பவுலும் சீலாவும் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். அந்த நிலைமையிலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடியபோது, பூமி அதிர்ச்சி உண்டாகி, சிறைக்கதவுகள் திறக்கின்றன. கைதிகள் தப்பி ஓடியிருப்பார்களோ என்ற அச்சத்தில் சிறைச்சாலைக்காரன் தற்கொலை செய்ய முயற்சிக்கிறான். பவுல் அதை தடைபண்ணுகிறார். இறுதியில் "ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்" என்ற அவனுடைய கேள்விக்கு பவுல் சுருக்கமாக பதில் சொல்கிறார் : "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப் 16:31). இதன் விளைவாக பிலிப்புவில் ஒரு பெரிய சபை உருவாகிறது.

அதைத் தொடர்ந்து மேற்கத்திய நாடுகளில் அம்பிபோலி, தெசலோனிக்கே (அப் 17:1-9), பெரோயா (அப் 17:10-14), அத்தேனே (அப் 17:15-24) பட்டணங்களிலும் ஊழியம் நடந்தது. பிலிப்பியிலிருந்து 90 மைல் தூரத்திலுள்ள தெசலோனிக்கேயில் மூன்று வாரங்களே தங்கியிருந்தாலும், "உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள்" (அப் 17:6) என்று அவர்களைக் குறித்து சாட்சி எழும்புகிறது.

பெரோயாவிலும் குழப்பம் உருவானபடியால் சக ஊழியர்களை அங்கு வைத்துவிட்டு பவுல் மட்டும் அத்தேனே பட்டணத்துக்கு விரைகிறார். அந்தப் பட்டணத்தாரிடம் அவர் மார்ஸ் மேடையில் நின்றுகொண்டு தைரியமாக சத்தியத்தை அறிவிக்கிறார். "அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவதா பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" (அப் 17:22,23). நியாயத்தீர்ப்பைக் குறித்த சத்தியத்தையும் பவுல் அவர்களுக்கு அறிவிக்கத் தவறவில்லை. 31-வது வசனத்தில் சொல்கிறார் : "ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார்".

இதை அடுத்து கொரிந்து பட்டணம் சென்ற பவுல் அங்கு 18 மாதத்துக்குமேல் தங்கியிருந்தார் என்று பார்க்கிறோம். இரண்டாவது மிஷனரி பயணத்தின் மிக முக்கியமான ஊழியம் இந்த பட்டணத்தில் நடைபெறுவதை அப் 18:1-18 அறிவிக்கிறது. ரோமாபுரியிலிருந்து கிலவுதியுராயனால் நாடுகடத்தப்பட்ட ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் தம்பதிகள் பவுலுக்கு உதவியாக இருக்கிறார்கள். "மக்கெதோனியாவிலிருந்து சீலாவும் தீமோத்தேயுவும் வந்தபோது, பவுல் ஆவியில் வைராக்கியங்கொண்டு, இயேசுவே கிறிஸ்து என்று யூதருக்குத் திருஷ்டாந்தப்படுத்தினான்" (அப் 18:5). பவுல் கொரிந்துவில் இருக்கும்போது தெசலோனிக்கேயருக்கு இரண்டு நிருபங்களை எழுதினார். கிறிஸ்துவின் வருகையைக் குறித்த சத்தியங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கின்றன.

கொரிந்துவில் கிறிஸ்து மீண்டும் பவுலுக்குத் தரிசனமாகி: "நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்கு செய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை; இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு" (அப் 18:9-10) என்றார்.

யூதர்கள் பவுலை கல்லியோன் என்ற ரோம அதிபதிக்கு முன்பு கொண்டுவந்து அவருக்கு விரோதமாக குற்றஞ்சாட்டினாலும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை (வசனம் 12-16). அதன்பின் ஆக்கில்லா தம்பதியருடன் அங்கிருந்து புறப்பட்டு எபேசு பட்டணம் வந்து பவுல் ஊழியம் செய்கிறார். "அவன் (பவுல்) இன்னுஞ் சிலகாலம் தங்களுடனே இருக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டபோது, அவன் சம்மதியாமல், வருகிற பண்டிகையிலே எப்படியாயினும் நான் எருசலேமில் இருக்கவேண்டும்,தேவனுக்குச் சித்தமானால் திரும்பி உங்களிடத்திற்கு வருவேனென்று சொல்லி, அவர்களிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கப்பல் ஏறி எபேசுவை விட்டுப் புறப்பட்டு, செசரியா பட்டணத்துக்கு வந்து, எருசலேமுக்குப் போய் சபையைச் சந்தித்து, அந்தியோகியாவுக்குப் போனான்" (அப் 18:20-22).

பவுலின் இரண்டாவது மிஷனரி பயணமும் தாய் சபையாக மாறிவிட்ட அந்தியோகியாவில் முடிவடைகிறது. எருசலேம் சபை கூடுதலாக யூதர்களை மட்டும் உள்ளடக்கியதாக இருந்ததினால் அதன் முக்கியத்துவம் குறைய ஆரம்பிக்கிறது.

மூன்றாம் மிஷனரி பயணம் (கி.பி.53-58)
அப் 18:23-21:16

ஊழியத்தை முடித்துவிட்டு தன் தாய் சபைக்குத் திரும்பிய பவுல் அந்தியோகியாவில் எவ்வளவு காலம் இருந்தார், என்ன செய்தார் என்பதையெல்லாம் அறிவிக்காமல், "அங்கே சிலகாலம் சஞ்சரித்தபின்பு, புறப்பட்டு, கிரமமாய்க் கலாத்தியா நாட்டிலேயும், பிரிகியா நாட்டிலேயும் சுற்றித்திரிந்து, சீஷரெல்லாரையும் திடப்படுத்தினான்" (அப் 18:23) என்று லூக்கா மூன்றாவது மிஷனரி பயணத்தின் துவக்கத்தை அறிவிக்கிறார். இவ்வாறு அந்தியோகியாவை விட்டுப் புறப்படும்போது கடைசி தடவையாக அங்கிருந்து செல்கிறார் என்பதை பவுல் அறிந்திருக்கமுடியாது. இந்த பயணத்தின்போது தீமோத்தேயுவும் எரஸ்துவும் மட்டுமே (அப் 19:22) அவருக்கு உதவியாளர்களாக இருந்தார்கள் என்று பார்க்கிறோம். இந்த முறை ஆசியாவில் உள்ள எபேசு பட்டணத்தில் மூன்று ஆண்டுகள் பவுல் தங்கியிருந்து ஊழியம் செய்கிறார் (அப் 20:31). முந்தின பயணத்தின்போது எபேசுவில் விடப்பட்ட ஆக்கில்லா தம்பதியர் பவுலுடன் ஊழியத்தில் இணைந்துகொள்கிறார்கள்.

எபேசு பட்டண ஊழியம் அப் 19:1-41-ல் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஆசியாவில் குடியிருந்த யூதரும், கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள். பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டுவந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களை விட்டு நீங்கிப்போயின; பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன" (அப் 19:10-12). எபேசுவில் அப்பொல்லோ என்ற யூத வேதபண்டிதர் ஊழியம் செய்தபோது பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டைக்குறித்து சரியாக போதிக்கவில்லை என்பதை பவுல் அறிந்து, அங்குள்ள சீஷர்களுக்கு சரியான ஆலோசனை வழங்கி, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்த நிகழ்ச்சி அப் 19:1-7ல் சொல்லப்பட்டிருக்கிறது.

எபேசுவின் ஜெப ஆலயத்தில், பவுல் பிரசங்கம் பண்ண, யூதர்கள் தடை உண்டுபண்ணியபோது திறன்னு என்பவனின் வித்தியாசாலையிலே பவுல், "அநுதினமும் சம்பாஷித்துக் கொண்டு வந்தான், இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக் கேட்டார்கள்" (அப் 19:9,10) என்று வாசிக்கிறோம். சில யூத மந்திரவாதிகள் பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின் நாமத்தில் பொல்லாத ஆவிகளைத் துரத்த

முற்பட்டபோது, தோல்வியடைந்த நிகழ்ச்சி அப் 19:11-20-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக விசுவாசித்த "மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்" (வசனம் 19).

தன்னுடைய இரண்டாவது மிஷனரி ஊழியத்தின் இறுதிக்கட்டத்தில் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய ஒரு நிருபம் (1 கொரி 5:9) தொலைந்துபோய்விட்டதாகக் கருதப்படுகிறது. பவுல் எபேசுவில் இருக்கும்போது கொரிந்து சபையில் உண்டான குழப்பங்களையும், வாக்குவாதங்களையும் குறித்து கேள்விப்படுகிறார் (1 கொரி 1:11). அங்கிருந்து எபேசு வந்த ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயு போன்ற ஊழியக்காரர்கள் கொரிந்து சபையாரிடமிருந்து உபதேசத்துக்கடுத்த சில சந்தேகங்களைக் கேட்டனர் (1 கொரி 7:1, 16:17). எனவே 1 கொரிந்தியர் நிருபத்தை எழுதி தீமோத்தேயு மூலமாக அவர்களுக்கு அனுப்பினார் (1 கொரி 4:17; 16:10). கொரிந்து சபை ஊழியர்கள் சிலர் தன்னை எதிர்த்து வருவதை அறிந்த பவுல் எபேசுவில் இருந்து ஒருமுறை கொரிந்துவுக்கு பிரயாணம் பண்ணிவிட்டு உடனடியாக எபேசு திரும்பியதாகவும் கருதப்படுகிறது. அதை அவர் எழுதிய 2 கொரிந்தியர் நிருபத்தின் சில வசனங்கள் உறுதி செய்கின்றன (2 கொரி 2:2; 12:4; 13:1,2). மிகுந்த வியாகுலத்தோடும், மன இடுக்கத்தோடும், கண்ணீரோடும் இந்த இரண்டாவது நிருபம் எழுதப்பட்டது என்று பார்க்கிறோம் (2 கொரி 2:4,9). பவுல் ஆத்தும பாரம் மிகுந்தவர் என்பதையே இது காட்டுகிறது.

அப் 19:23-41ல் தியானாவின் விக்கிரகங்களை வெள்ளியில் செய்து வியாபாரம் செய்துகொண்டிருந்த தட்டான், பவுல் அறிவித்த சுவிசேஷத்தினிமித்தம் பாதிப்படைந்து எபேசுவில் பவுலுக்கு எதிராக மிகப்பெரிய கலவரத்தை உண்டாக்குவதைப் பார்க்கிறோம். பட்டணத்து அதிபதி ஜனங்களை அமர்த்தி பாதுகாப்பு வழங்கினாலும் "கலகம் அமர்ந்தபின்பு பவுல் சீஷரைத் தன்னிடத்திற்கு வரவழைத்து, வினவிக்கொண்டு, மக்கெதோனியாவுக்குப் போகப்புறப்பட்டான். அவன் அந்தத் திசைகளிலே சுற்றி நடந்து, சீஷர்களுக்கு வெகுவாய்ப் புத்தி சொல்லி, கிரேக்கு தேசத்திலே சேர்ந்தான்" (அப் 20:1,2) என்று வாசிக்கிறோம்.

அப்பொழுது கிரேக்க தேசத்தில் கொரிந்து பட்டணத்தில் சுமார் மூன்று மாதங்கள் காயு என்பவரின் வீட்டில் பவுல் தங்கியிருந்ததாகத் தெரிகிறது. இந்த வேளையில்தான் கொரிந்து சபையின் பிரச்சனைகளைத் தீர்வு செய்தார் என்று பார்க்கிறோம் (2 கொரி 13:1,2). அதுமட்டுமல்ல, **'பவுல் எழுதிய சுவிசேஷம்' என்று அழைக்கப்படக்கூடிய ரோமர் நிருபம்**

இங்கிருந்துதான் எழுதப்பட்டது. பெபேயாள் என்ற சகோதரி அதை ரோமாபுரிக்கு எடுத்துச் செல்கிறார்.

கொரிந்துவிலிருந்து சீரியாவுக்குப் புறப்பட்டுப்போக பவுல் திட்டமிடுகிறார். யூதர்களின் எதிர்ப்பினிமித்தம் சுற்றுவழியாக மக்கெதோனியா தேசத்து பிலிப்பி பட்டணத்துக்கு வந்து, பின்பு துரோவா பட்டணத்துக்கு வருகிறார்கள். அங்கு ஏழு நாட்கள் தங்கி ஊழியம் செய்தபோது பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட வாலிபன் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்த நிகழ்ச்சி அப் 20:3-12ல் சொல்லப்பட்டிருக்கிறது. பவுல் அவனை உயிரோடு எழுப்புகிறார்.

பிறகு ஆசோ, மித்திலேனே, சாமு தீவு, துரோக்கில்லியோன் வழியாக பவுல் மிலேத்து பட்டணம் வந்து சேருகிறார். மீண்டும் எபேசுவுக்குச் செல்ல நேரமில்லாதபடியால், எபேசுவுக்கு ஆள் அனுப்பி சபையின் மூப்பரை வரவழைத்தார் என்று அப் 20:17ல் சொல்லப்பட்டிருக்கிறது. அப் 20:17-38ல் உள்ள பவுலின் வழியனுப்பும் பிரசங்கம் இன்றும் ஊழியக்காரர்கள் எல்லாருக்கும் பிரயோஜனமானதாக இருக்கிறது. "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்" (வசனம் 29), "இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன்" (வசனம் 22,23). "ஒருவனுடைய வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும், வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" (வசனம் 33) என்கிறார். இப்படிப்பட்ட பொருளாசை இல்லாத ஊழியக்காரர்கள் இன்று தேவை.

பவுலின் மூன்றாவது மிஷனரி பயணம் எவ்வாறு எருசலேமில் முடிவடைகிறது என்பதை அப் 22:1-16-ல் வாசிக்கிறோம். தீரு பட்டணத்துறையில் அவரைச் சந்தித்த சீஷர்கள், "நீர் எருசலேமுக்குப் போகவேண்டாம்" (வசனம் 4) என்று ஆவியின் ஏவுதலினாலே எச்சரிக்கிறார்கள். அதை மீறி, செசரியா பட்டணம் வந்த பவுல் பிலிப்புவின் வீட்டில் சில நாட்கள் தங்கியிருக்கிறார். அங்கு வந்த அகபு என்ற தீர்க்கதரிசியும் பவுல் எருசலேமில் கட்டப்பட்டு புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுவார் என்பதை முன்னறிவிக்கிறார் (வசனம் 11). ஆனாலும் பவுல் எருசலேமில் "நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன்" (வசனம் 13) என்று பிடிவாதமாக புறப்பட்டுப் போகிறார். "நாங்கள் எருசலேமுக்கு வந்தபோது, சகோதரர் எங்களைச்

சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்" (வசனம் 17) என்று எழுதி அவரோடு பிரயாணம் பண்ணிய லூக்கா, பவுலின் மூன்றாவது மிஷனரி பயணத்தை நிறைவு செய்கிறார்.

எருசலேமிலும் செசரியாவிலும் பவுல் (கி.பி.59,60)
அப் 21:17-23:30

தான் எருசலேமுக்கு வந்ததின் நோக்கத்தை பவுல் இவ்விதமாகச் சொல்கிறார் : "அநேக வருஷங்களுக்குப் பின்பு நான் என் ஜனத்தாருக்குத் தர்மப் பணத்தை ஒப்புவிக்கவும், காணிக்கைகளைச் செலுத்தவும் வந்தேன்" (அப் 24:17). இரண்டாவது மிஷனரி பயணத்தை முடித்து எருசலேமுக்கு வந்த நிகழ்ச்சியை லூக்கா ஒரே வசனத்தோடு அறிவித்து நிறுத்திவிடுவதைப் பார்க்கிறோம் (அப் 18:22). புறஜாதி நாடுகளில், அதுவும் முக்கியமாக அங்குள்ள யூதர்கள் மத்தியில் பவுல் செய்த ஊழியத்தைக் குறித்து எருசலேமில் இருந்த ஆதிசபையின் தலைவர்கள் மிகுந்த அதிருப்தி அடைந்திருந்தார்கள் என்பதை மட்டும் கண்டுகொள்கிறோம். நியாயப்பிரமாணத்துக்கு எதிராக, முக்கியமாக விருத்தசேதனத்தைப் புறக்கணித்து அவர் எழுதிய நிருபங்களே இதற்குக் காரணம். தான் கொண்டுவரும் காணிக்கைகளை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா என்ற சந்தேகம்கூட பவுலிடம் இருந்தது என்று பார்க்கிறோம் (ரோமர் 15:31). அதை அவர்கள் ஏற்றுக்கொண்டதாக வேதத்தில் சொல்லப்படவில்லை.

எருசலேம் வந்த "மறுநாளிலே பவுல் எங்களைக் கூட்டிக்கொண்டு, யாக்கோபினிடத்திற்குப் போனான்; மூப்பரெல்லாரும் அங்கே கூடிவந்தார்கள்" (அப் 21:18) என்று லூக்கா எருசலேமில் நடந்த காரியங்களை வேதனையோடு விவரிக்கிறார். பேதுருவும் யோவானும் எருசலேமில் அந்த சமயம் இருந்ததாகத் தெரியவில்லை. கிபி. 62-ல் ஏரோதுவினால் கொலைசெய்யப்படும்வரை யாக்கோபுவே சபையின் தலைவராக செயல்பட்டு வந்தார் என்று அறியப்படுகிறது. யாக்கோபின் சார்பில், மூப்பர்கள் பவுலிடம், எருசலேமில் உள்ள யூதவிசுவாசிகள் மோசேயின் பிரமாணத்தின்படி விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லை என்ற பவுலின் அறிவிப்பினிமித்தம் அவருடைய ஊழியத்தை அங்கீகரிக்காமல் இருக்கிறார்கள் என்றும், அவர்களைத் திருப்திப்படுத்தும்படி பவுல் "நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடக்கிறவர்" (அப் 21:24) என்று காட்டவேண்டும் என்றும் சொல்கிறார்கள். நியாயப்பிரமாண கட்டளைகளின்படி தலைச்சவரம் பண்ணி தேவாலயத்தில் பிரார்த்தனை செய்துகொள்ள பொருத்தனை செய்து கொண்ட நான்கு யூதர்களுடன் பவுல் இணைந்து மொட்டை

அடிக்கவேண்டும், அவர்களுடைய செலவை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் ஆலோசனை தருகிறார்கள் (அப் 21:20-24).

"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லை" (கலா 2:15) என்று திட்டவட்டமாக அறிவித்த பவுல் ஏனோ இதை ஏற்றுக்கொள்கிறார். "பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனரைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்" (1 கொரி 9:22) என்ற வசனத்தின்படி பவுல் நடந்துகொள்வதுபோல் தெரிகிறது. "அப்பொழுது பவுல் அந்த மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, மறுநாளிலே, அவர்களுடனேகூடத் தானும் சுத்திகரிப்பு செய்துகொண்டு, தேவாலயத்தில் பிரவேசித்து, அவர்களில் ஒவ்வொருவனுக்காக வேண்டிய பலி செலுத்தித் தீருமளவும் சுத்திகரிப்பு நாட்களை நிறைவேற்றுவேனென்று அறிவித்தான்" (அப் 21:26) என்று வாசிக்கிறோம்.

"அந்த ஏழு நாட்களும் நிறைவேறிவருகையில், ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் அவனைத் தேவாலயத்திலே கண்டு, ஜனங்களெல்லாரையும் எடுத்துவிட்டு, அவன்மேல் கைபோட்டு; இஸ்ரவேலரே, உதவிசெய்யுங்கள். நம்முடைய ஜனத்திற்கும், வேதப்பிரமாணத்திற்கும் இந்த ஸ்தலத்திற்கும் விரோதமாக எங்கும் எல்லாருக்கும் போதித்து வருகிறவன் இவன்தான்; இந்தத் தேவாலயத்திற்குள்ளே கிரேக்கரையும் கூட்டிக்கொண்டுவந்து, இந்தப் பரிசுத்த ஸ்தலத்தைத் தீட்டுப்படுத்தினான் என்று சத்தமிட்டார்கள்" (அப் 21:27,28).

இதன்விளைவாக ஒரு பெரிய கலவரம் உண்டாகிறது. எருசலேம் சபையாரின் ஆலோசனையின்படிதான் பவுல் அந்தச் சடங்குகளை நிறைவேற்றினார், பவுலுக்கு எதிரான குற்றச்சாட்டில் உண்மை இல்லை என்பதை சபை அறிந்திருந்தும், பவுலுக்கு அவர்கள் உதவிசெய்ய முன்வரவில்லை. ரோம போர்ச்சேவகரின் சேனாதிபதி கிலவுதியு லீசியா (அப் 23:26) விரைந்துவந்து பவுலைக் காப்பாற்றியிராவிட்டால் அந்த யூதர்கள் அங்கேயே பவுலைக் கொலைசெய்திருப்பார்கள். சங்கிலியால் கட்டப்பட்ட பவுல் சேனாதிபதின் அனுமதியோடு யூதர்களுக்கு அவர்களுடைய அராமிக் பாஷையில் தன்னுடைய சாட்சியை அறிவிக்கிறார் (அப் 22:1-21). அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதினால் சேனாதிபதி பவுலை சாட்டையால் அடித்து விசாரிக்க முற்படுகிறார். பவுல் ரோம பிரஜை என்பதினால் அடிவாங்காமல் தப்பித்துக் கொள்கிறார் (அப் 22:25-29).

மறுநாள் ஆலோசனை சங்கத்தார் முன்னிலையில் பவுலுக்கு எதிராக விசாரணை நடக்கிறது (அப் 23:1-10). பிரதான ஆசாரியன் பவுலை அடிக்கக் கட்டளையிட்டபோது, பவுல் "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே, தேவன் உம்மை அடிப்பார்" (அப் 23:3) என்று பதில் பேசுகிறார். இந்த விசாரணையில் யாக்கோபும் சபை மூப்பர்களும் பவுலுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. இருந்தாலும் தன்னைக் குற்றஞ்சாட்டும் மனிதர்களுள் சதுசேயர் ஒரு பங்கும், பரிசேயர் ஒரு பங்கும் இருப்பதை அறிந்துகொண்ட பவுல் அவர்களிடையே சாமர்த்தியமாக ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி தப்பித்துக் கொள்கிறார். சேனாதிபதி மீண்டுமாக பவுலை கோட்டையில் அடைத்துவைத்து பாதுகாக்கிறார் (அப் 23:1-10). அன்று இராத்திரியிலே கர்த்தர் பவுலின் அருகே நின்று : "பவுலே, திடன்கொள்; நீ என்னைக் குறித்து எருசலேமிலே சாட்சிகொடுத்ததுபோல ரோமாவிலும் சாட்சி கொடுக்கவேண்டும் என்றார்" (வசனம் 11).

நாற்பதுக்கும் மேற்பட்ட யூதர்கள் பவுலை கொலை செய்யுமளவும் புசிப்பதும் குடிப்பதும் இல்லை என்று சபதமிட்டு பிரதான ஆசாரியனோடு இணைந்து செயல்படுவதை பவுலின் சகோதரியின் மகன் கேள்விப்பட்டு, அதை பவுலிடம் அறிவிக்கிறான். இந்தச் செய்தி சேனாதிபதிக்குத் தெரியவந்ததும் இரவோடிரவாக இரண்டு நூற்றுக்கு அதிபதிகள் பொறுப்பில் இருநூறு காலாட்கள், எழுபது குதிரை வீரர்கள், இருநூறு ஈட்டிக்காரர்கள் காவலுடன் செசரியாவில் உள்ள பேலிக்ஸ் என்ற தேசாதிபதியிடம் அனுப்பி வைக்கிறான். உடனடியாக பேலிக்ஸ் பவுலை ஏரோதின் அரண்மனையிலே காவல்பண்ணும்படி கட்டளையிடுகிறான் (அப் 23:12-35).

"ஐந்து நாளைக்குப்பின்பு பிரதான ஆசாரியனாகிய அனனியா மூப்பர்களோடும் தெர்த்துல்லு என்னும் ஒரு நியாய சாதுரியனோடும்கூட (வழக்கறிஞர்) போனான். அவர்கள் பவுலுக்கு விரோதமாய்த் தேசாதிபதியிடத்தில் பிராது பண்ணினார்கள்" (அப் 24:1) என்று வாசிக்கிறோம். கலவரம் பண்ணுவது தன்னுடைய நோக்கம் அல்ல என்கிறார் பவுல். அவர் சொல்வதை நிரூபிக்க எருசலேம் சபையில் இருந்து சாட்சிகள் யாரும் முன்வரவில்லை. இதனால் எந்த முடிவுக்கும் வரமுடியாத தேசாதிபதி, "சேனாதிபதியாகிய லீசியா வரும்போது, உங்கள் காரியங்களைத் திட்டமாய் விசாரிப்பேன் என்று சொல்லி, பவுலைக் காவல் பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும், அவனுக்கு ஊழியஞ்செய்கிறதற்கும் அவனைக் கண்டுகொள்ளுகிறதற்கும் வருகிற அவனுடைய மனுஷர்களில் ஒருவரையும் தடைசெய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்குக் கட்டளையிட்டு, அவர்களைக் காத்திருக்கும்படி செய்தான்" (அப் 24:22,23) என்று வாசிக்கிறோம்.

பேலிக்ஸ் தன்னுடைய யூத மனைவியாகிய துருசில்லாளுடன் பவுலை அழைத்துப் பேசும்போது பவுல் நீதியையும், இச்சைபடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசினார் என்று பார்க்கிறோம். காவலில் இருக்கும் பவுல் தேசாதிபதியின் தயவைப் பெற்று விடுதலை பெற முயற்சி செய்யாமல் அவனிடமே நியாயத் தீர்ப்பைக் குறித்துப் பேசும் துணிவு பவுலிடம் இருந்தது. கிறிஸ்துவின் அன்பையும் மனதுருக்கத்தையும் பற்றி அதிகமாகப் பேசும் நாம், அவருடைய நியாயத்தீர்ப்பைப் பற்றி பேசவும் அறிந்திருக்கவேண்டும். பவுலிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொள்ளலாம் என்று கருதிய பேலிக்ஸ் பவுலை விடுவிக்காமலேயே இருந்து விடுகிறான் (அப் 24:24-27).

இரண்டு ஆண்டுகள் கடந்தபின்பும் எருசலேம் சபையாரோ, மூப்பர்களோ செசரியாவுக்கு வந்து பவுலை விசாரித்ததாகவோ, அவரை விடுவிக்க முயற்சித்ததாகவோ எந்தக் குறிப்பும் வேதத்தில் இல்லை. இந்த நிலையில் பெஸ்து என்ற புது தேசாதிபதியை ரோம் நியமிக்கிறது. பதவி ஏற்று மூன்று நாட்களில் எருசலேம் சென்ற பெஸ்துவிடம் யூத ஆலோசனை சங்கத்தினர் பவுலை எருசலேமுக்குக் கொண்டுவந்து விசாரித்து தீர்ப்பிடுமாறு வற்புறுத்துகிறார்கள். பவுல் செசரியாவில் காவல் வைக்கப்பட்டிருப்பதினால் பத்து நாட்களில் தான் அங்கு திரும்பிச் சென்றதும் விசாரித்து தீர்ப்பிடுவதாக உறுதி சொல்கிறான்.

அவ்வண்ணமாக பெஸ்து செசரியா வந்தபோது, எருசலேமிலிருந்து வந்த யூதர்கள் அவனைச் சூழ்ந்து நின்று, தங்களால் ரூபிக்கக்கூடாத அநேகங் கொடிய குற்றங்களை அவன்மேல் காட்டினார்கள்" (அப் 25:7). பவுலுக்கு உதவக்கூடிய சாட்சிகள் இல்லாத நிலையில் பெஸ்து யூதருக்குத் தயவு செய்ய மனதாய், பவுலை நோக்கி : "நீ எருசலேமுக்குப் போய், அவ்விடத்திலே இந்தக் காரியங்களைக் குறித்து எனக்குமுன்பாக நியாயம் விசாரிக்கப்பட உனக்குச் சம்மதியா என்றான்" (அப் 25:9). அதற்குப் பவுல், "நான் இராயருடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிற்கிறேன்; அதற்கு முன்பாக நான் நியாயம் விசாரிக்கப்படவேண்டியது" (வசனம் 10) என்று அறிவித்து வழக்கு ரோமில் விசாரிக்கப்பட மனு செய்கிறார். பெஸ்து தன் ஆலோசனைக்காரருடனே ஆலோசித்து ரோமதேசத்து பிரஜைகளுக்கு இந்த உரிமை உண்டு என்பதினால் : "நீ இராயருக்கு அபயமிட்டாயே, இராயரிடத்திற்கே போகக்கடவாயென்று உத்தரவு சொன்னான்" (அப் 25:12).

அந்த நாட்களில் செசரியாவுக்கு, ஏரோது அகிரிப்பா II ராஜா தன் மனைவி பெர்னீக்கேயாளுடன் வருகிறார். அவர் பவுலை சந்தித்த நிகழ்ச்சி அப் 25:13-26:1-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களிடம், தான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை தமஸ்கு பட்டணம் அருகே சந்தித்த

நிகழ்ச்சியை மகிழ்ச்சியோடு சாட்சி சொல்லி, சுவிசேஷத்தை அறிவிக்கிறார். "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய்" என்கிறார் அகிரிப்பா. அதற்குப் பவல், "நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறையமாத்திரம் அல்ல, இந்தக் கட்டுகள் தவிர முழுவதும் என்னைப் போலாகும்படி தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன்" (அப் 26:28,29) என்றார். இக்கட்டான நிலையிலும் பவுலின் வைராக்கியமான பக்தியைக் கவனியுங்கள். "இந்த மனுஷன் இராயனுக்கு அபயமிடாதிருந்தானானால், இவனை விடுதலை பண்ணலாகும்" (அப் 26:32) என்று அவர்கள் முடிவு செய்கிறார்கள். ஆனால் பவுல் ரோமாபுரியில் சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கும்போது அதை யார் தடைசெய்யமுடியும்?

நான்காவது மிஷனரி பயணமும் ரோம சிறையிருப்பும் (கி.பி.61,62)

அப் 27:1-28:31

"நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்டபோது, பவுலையும் காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும் அகஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர் கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்" (அப் 27:1). நாங்கள் என்று சொல்வதினால், இதை எழுதிய லூக்காவும் இந்த 1400 மைல் தூர பயணத்தில் பவுலோடு சேர்ந்துகொள்கிறார் என்பது தெளிவாகிறது. தன் வாழ்நாளில் பவுல் சுமார் 15,000 மைல் தூரம் பிரயாணம் பண்ணியிருப்பார் என்று சொல்லப்படுகிறது. பவுல் செசரியாவில் இருந்த இரண்டு ஆண்டு காலத்தில் லூக்கா தன்னுடைய சுவிசேஷத்தை எழுத ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்ததாகக் கருதப்படுகிறது. அரிஸ்தர் என்ற சக ஊழியரும் பவுலுடன் பிரயாணப்படுகிறார் (அப் 27:2, 20:4). எருசலேமின் மூப்பர்கள் ஒருவர்கூட பவுலை வழியனுப்ப வந்ததாக லூக்கா அறிவிக்கவில்லை. சீப்புரு, சிலிசியா, பம்பிலியா வழியாக மீறா என்ற பட்டணத்திலிருந்து இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சாந்திரியா கப்பலில் அவர்கள் ஏறிக்கொள்கிறார்கள்.

கடுமையான காற்று அவர்களுடைய பிரயாணத்தைத் தடைசெய்கிறது. மிகுந்த சிரமத்தோடு நல்ல துறைமுகம் என்ற இடத்துக்கு வருகிறார்கள். மேற்கொண்டு பிரயாணம் செய்வது ஆபத்தானது என்று பவுல் எச்சரிக்கிறார். நூற்றுக்கு அதிபதியும் மாலுமிகளும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. கிலவுதா என்ற தீவிலே கப்பலை ஒதுக்கி

சரக்குகளை எல்லாம் கடலிலே எறிகிறார்கள். "அநேகநாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக்கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப்பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று" (அப் 27:20). ஒருநாள் இரவில் கர்த்தருடைய தூதன் பவுலிடம் வந்து, "பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார்" (வசனம் 24) என்றான்.

பதினான்கு நாட்கள் பிரயாணத்துக்குப் பின் நடுஇரவில் கப்பல் மெலித்தா தீவின் சமீபத்தில் வந்து கரை தட்டுகிறது. தப்பிஓடமுயன்ற கப்பலாட்களை பவுல் தடைசெய்கிறார். மறுநாள் கப்பலில் இருந்த 276 பேரும் பத்திரமாக தீவுக்குள் பிரவேசிக்கிறார்கள். அந்தத் தீவில் இருந்தவர்கள் அவர்கள்மேல் அன்புபாராட்டி அவர்களை ஏற்றுக்கொள்கிறார்கள். நெருப்பை மூட்டி குளிர்காயும்போது விறகுகளில் இருந்து வெளிப்பட்ட விரியன் பாம்பு பவுலின் கையைக் கவ்வினாலும் அதனால் அவருக்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. தீவின் அதிபதி உட்பட பல வியாதியஸ்தர்கள் பவுலின் ஜெபத்தினால் குணமடைகிறார்கள் (அப் 28:1-10). இந்தத் தீவிலும் பவுலின் மிஷனரி ஊழியம் நடந்திருக்கவேண்டும்.

மூன்று மாதங்களுக்குப் பின் மிதுனம் என்ற கப்பலில் பவுல் ரோமாபுரிக்கு கொண்டுபோகப்படுகிறார். அங்குள்ள கிறிஸ்தவ விசுவாசிகள் பவுலை எதிர்கொண்டுவந்து அவரை வரவேற்கிறார்கள். "அவர்களைப் பவுல் கண்டு, தேவனை ஸ்தோத்திரித்துத் தைரியமடைந்தான்" (வசனம் 15). ஆனாலும் அவர்கள் சொல்கிறார்கள் : "உன்னைக் குறித்து யூதேயாவிலிருந்து எங்களுக்குக் காகிதம் வரவுமில்லை, வந்த சகோதரரில் ஒருவனும் உன்பேரில் ஒரு பொல்லாங்கை அறிவித்ததுமில்லை, அதைப்பற்றிப் பேசினதுமில்லை" (வசனம் 21). எருசலேம் சபை பவுலையும் அவருடைய மகத்துவமான ஊழியத்தையும் முற்றிலுமாக மறந்துவிட்டதுபோல் தெரிகிறது. "நூற்றுக்கு அதிபதி தன் காவலிலிருந்தவர்களைச் சேனாபதியினிடத்தில் ஒப்புக்கொடுத்தான் ; அப்பொழுது பவுல் தன்னைக் காத்திருக்கிற சேவகனுடனே தனித்துக் குடியிருக்கும்படி உத்தரவு பெற்றுக்கொண்டான்" (அப் 28:15,16) என்று வாசிக்கிறோம்.

மூன்று நாட்களுக்குப்பின் பவுல் ரோமாபுரியிலிருந்த பிரதானமானவர்களை வரவழைத்து தன்னுடைய சாட்சியை அறிவித்து, "இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால்

கட்டப்பட்டிருக்கிறேன்" (அப் 28:20) என்கிறார். இந்த சிறையிருப்பு நாட்களிலும் பவுலின் சுவிசேஷ ஊழியம் தொடர்கிறது இந்த சிறையிருப்பின்போதுதான், விலைமதிப்பற்ற எபேசியர், கொலோசெயர், பிலிப்பியர், பிலமோன் நிருபங்களை பவுல் எழுதினார். இன்றும் அவை சபைக்கு ஆசீர்வாதமாக இருக்கின்றன.

ஆனாலும் அப்போஸ்தலருடைய நடபடிகள் கீழ்க்கண்ட இரண்டு வசனங்களுடன் சடுதியில் நிறைவடைகிறது. "பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான்". பவுலின் சுவிசேஷ ஊழியம் சிறையிருப்பிலும் தொடர்கிறது. இராயனுடைய அரண்மனையிலுள்ளவர்களும்கூட சத்தியத்தை அறிந்துகொள்கிறார்கள் (பிலிப் 4:22) என்று பார்க்கிறோம்.

சில ஆண்டுகள் கடந்தபின் ரோம பேரரசன் நீரோவுக்கு முன்பாக பவுலின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. எருசலேமில் அவரைக் குற்றப்படுத்தியவர்கள் யாரும் அதை நிரூபிக்க சாட்சிகளோடு ரோமாபுரிக்கு வரவில்லை. மேலும் அந்த நாட்களில் நீரோ தன்னுடைய மனைவி ஒக்டேவியாவை விவாகரத்து பண்ணிவிட்டு பொப்பேயியா என்ற யூத பெண்ணோடு வாழ்ந்து கொண்டிருந்தபடியால், அவளுடைய சிபாரிசின்படி பவுல் விடுதலை செய்யப்படுகிறார்.

பவுலின் ஐந்தாவது மிஷனரி பயணமும் மறைவும் (கி.பி.63-66)

பவுலின் ஐந்தாவது மிஷனரி பயணத்தைப் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளில் எதுவுமே சொல்லப்படவில்லை. ஆனால் பவுல் விடுதலை பெற்று வெளியே வந்தபின் எழுதிய 1 தீமோத்தேயு, தீத்து, எபிரெயர் மற்றும் பவுலின் கடைசி நிருபமான 2 தீமோத்தேயுவில் அவருடைய இந்தப் பிரயாணங்களைக் குறித்து பவுலே எழுதியிருக்கிறார். தீமோத்தேயுவுடன் மக்கெதோனியாவிலிருந்து எபேசுவுக்குப் போவது (1 தீமோ 1:4). தீத்துவை பவுல் கிரேத்தா தீவில் ஊழியத்துக்கு நியமித்து வருவது (தீத்து 1:5), துரோவா பட்டணத்தில் பவுல் செய்த ஊழியம் (2 தீமோ 4:13), கொரிந்துவில் துரோப்பீமுவுடன் ஊழியம் (2 தீமோ 4:20), இத்தாலியாவில் பவுல் செய்த ஊழியம் (எபி 13:24) ஆகியவை லூக்காவினால் அப்போஸ்தலருடைய நடபடிகளில்

குறிப்பிடப்படவில்லை என்பதினால் இவை பவுலின் ஐந்தாவது மிஷனரி பயணத்தின்போது நடந்தவை என்று முடிவு செய்கிறோம். இத்தாலியாவில் இருந்துதான், பவுல், பின்மார்க்கப்பாதையில் போய்க்கொண்டிருக்கும் யூதர்களை எச்சரித்து எபிரெயர் நிருபத்தை எழுதுகிறார் (எபி 13:24). மேலும் ரோமாபுரியில் உடனடியாக பவுல் கொலை செய்யப்பட்டிருப்பாரானால் லூக்கா அவருடைய மரணத்தைக் குறிப்பிடாமல் இருந்திருக்கமாட்டார்.

கி.பி.180-ல் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் விலக்கப்பட்ட ஆகமங்களில் ஒன்றான "பேதுருவின் நடபடிகள்" மற்றும் கி.பி.175-ல் எழுதப்பட்ட Muratorian Canon என்ற புத்தகம் ஆகிய இரண்டும் பவுல் ஸ்பானியாவில் செய்த ஊழியத்தைக் குறித்து பேசுகின்றன. அங்கு செல்லவேண்டும் என்ற ஆசையை ரோமர் 15:28-ல் பவுல் அறிவித்ததைப் பார்த்தோம். பிலெமோன் 22 மற்றும் பிலிப்பியர் 2:24ல் (முதலாவது ரோம சிறையிருப்பில் எழுதிய நிருபங்கள்) பவுல் தான் மீண்டும் ஆசியா மற்றும் மக்கெதோனியாவுக்கு செல்லவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை தெரிவிப்பதைப் பார்க்கிறோம். பவுல் மக்கெதோனியாவிலிருந்துதான் தீத்துவுக்கு நிருபம் எழுதினார் என்று சொல்லப்படுகிறது.

அவருடைய நிக்கொப்போலி பயணத்தைக் குறித்து தீத்து 3:12ல் மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது. லூக்கா அதை ஒரு இடத்திலும் குறிப்பிடவில்லை. துரோவா பட்டணத்தில் அவர் தனியே ஊழியம் செய்ததைக் குறித்து 2 தீமோ 4:13லும், கொரிந்துவில் எரஸ்துவோடு செய்த ஊழியத்தைக் குறித்து 2 தீமோ 4:20-லும் பவுல் குறிப்பிடுகிறார். இந்தப் பட்டணங்களுக்கு தன்னுடைய மூன்றாவது மிஷனரி பயணமாக பவுல் போயிருந்தார் என்றாலும் அது நடந்து, குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்குப் பின், 2 தீமோத்தேயு எழுதப்பட்டது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகளாக பவுல் அதில் இவற்றைக் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது முறையாக பவுல் துரோவா பட்டணத்தில் கைது செய்யப்பட்டு உடனடியாக ரோமுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. அதனால்தான் அங்கு கார்ப்பு என்பவரின் வீட்டில் வைத்திருந்த மேலங்கியையும் புஸ்தகங்களையும், விசேஷமாக தோற்சுருள்களையும் ரோமாபுரி சிறைக்குக் கொண்டுவரும்படியாக பவுல் இரண்டாவது சிறையிருப்பின்போது வேண்டுகிறார் (2 தீமோ 4:13). இந்த முறை பவுலின் சிறையிருப்பு மிகவும் கடினமானதாக இருந்திருக்கவேண்டும் என்று தெரிகிறது. அவரைக் காணும்படியாக ரோமிற்கு வந்த ஒநேசிப்போர் வீட்டார் பவுலை எளிதில்

அடையாளங்காணமுடியவில்லை என்று பார்க்கிறோம் (2 தீமோ 1:16,17). இந்த சிறையிருப்பில் லூக்கா மட்டுமே பவுலுடன் இருக்கிறார் (2 தீமோ 4:11).

"நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" (2 தீமோ 4:16,17) என்கிறார் பவுல்.

இந்த முதலாவது விசாரணையில் அவர் தண்டிக்கப்படவில்லை என்றாலும், தான் இந்த முறை தப்பித்துக் கொள்ளமுடியாது என்பதை பவுல் அறிந்தவராய் சொல்கிறார் : "நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்" (2 தீமோ 4:6-8).

இரண்டாவது விசாரணையில் பவுல் தலைவெட்டப்பட்டு கொலைசெய்யப்படவேண்டும் என்று தீர்ப்பளிக்கப்படுகிறார். "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலிப் 1:21) என்று அறிக்கையிட்ட பவுல் ரோமிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள ஆஸ்டியன் வழி என்னும் இடத்தில் சிரச்சேதம் செய்யப்படுகிறார். அவருடைய கழுத்திலிருந்து இரத்தத்துக்குப் பதிலாக பால் வெளிவந்தது என்று பாரம்பரியமாக நம்பப்படுகிறது.

பவுலின் நண்பர்கள் அவரை அடக்கம் பண்ணிய இடத்தில் கி.பி.324-ல் ரோம பேரரசன் கான்ஸ்டன்டின் ஒரு ஆலயத்தைக் கட்டினான். 1854-ல் ஒன்பதாம் பயஸ் என்ற கத்தோலிக்க சபை போப், புனிதர் பவுல் தேவாலயத்தை அந்த இடத்தில் கட்டினார் என்று பார்க்கிறோம். அப்போது Paulo Apostoloi Mart (அப்போஸ்தலரும் இரத்தசாட்சியுமான பவுலுக்கு) என்ற நான்காவது நூற்றாண்டு கல்வெட்டு அங்கே கண்டுபிடிக்கப்பட்டது. கொடுங்கோலன் நீரோவின் ஆளுகை கி.பி.67-ல் முடிவுற்றதினால் கி.பி.66-ல் பவுல் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. அவர் மரித்து சில ஆண்டுகளில் கி.பி. 70-ல் எருசலேம் தேவாலயம் அழிக்கப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு எபேசு சபையின் மூப்பர்களிடம் பவுல் சொன்னதை இந்த இடத்தில் நினைவுபடுத்திக்கொள்வோம். "ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்" (அப் 20:24).

மனித இனத்தின் சரித்திரத்தில் மிகப்பெரிய மாற்றத்தை உண்டுபண்ணிய மனிதன் பவுலாகத்தான் இருக்கமுடியும். ஆனாலும் பவுல் தன்னைப்பற்றி எவ்வாறு சொல்கிறார் என்பதைக் கவனியுங்கள் : "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவன்" (எபே 3:8), "அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவன்" (1 கொரி 15:9), "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும், எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமானது; அவர்களில் பிரதான பாவி நான்" (1 தீமோ 1:15).

பவுலைப் போல தாழ்மையும், அர்ப்பணிப்பும், வைராக்கியமும் உள்ள ஊழியக்காரர்களே இன்றைய கிறிஸ்தவத்தின் தேவை.

முடிவுரை

கர்த்தருக்குள் பிரியமானவர்களே !

ரோமர் நிருபத்தின் விளக்கவுரையையும், அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையையும் வாசித்த உங்கள் உள்ளத்தில் பவுலைப்போல் வைராக்கியமாய் தேவனுடைய ஊழியங்களைச் செய்யவேண்டும் என்ற வாஞ்சை உருவாக வேண்டும் என்பதே என் விருப்பம்.

புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் தேவனுடைய நாமத்தை அறிவிப்பதற்காக தெரிந்துகொண்ட பாத்திரமாகிய பவுல் (அப் 9:15) தேவனிடமிருந்து தான் பெற்றுக்கொண்ட சத்திய உபதேசங்களின்மேல் உறுதியாகக் கட்டப்பட்டு, எந்த சூழ்நிலையிலும் தன்னுடைய அழைப்பை மறக்காமல், தனக்கு லாபமாயிருந்தவைகளை நஷ்டமாக எண்ணி, தேவனுக்கென்று சத்தியத்தை அறிவித்ததினாலே சபைக்கு சத்துருவாக மாறினாலும் (கலா 4:16) "பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா 2:20) என்று துணிச்சலோடு அறிவித்து "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" (2 தீமோ 4:7) என்று சொல்லி, தன் வாழ்க்கையை வெற்றியோடு ஓடி முடித்தார்.

மனிதனுடைய இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய தீர்மானம் என்ன என்பதை தேவனிடமிருந்து நேரடியான வெளிப்பாடாகப் பெற்றுக்கொண்ட பவுல் இவ்விதமாகச் சொல்கிறார் : "நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லை" (ரோமர் 3:20, கலா 2:16). இதனை விளங்கிக்கொள்ளாத கிறிஸ்தவர்கள் தாங்கள் ஒழுங்காக ஆலயத்திற்குச் செல்வதினாலும், காணிக்கை கொடுப்பதினாலும், ஊழியங்களைச் செய்வதினாலும், ஊழியர்கள் தங்களுக்காக ஜெபிப்பதினாலும் தாங்கள் இரட்சிக்கப்படக்கூடும் என்று தவறாக எண்ணுகிறார்கள்.

இரட்சிப்பு முற்றிலுமாக தேவனுடையது. பாவச்சேற்றில் மூழ்கிக் கிடக்கும் எந்த ஒரு மனிதனும் தன்னுடைய நற்கிரியைகளினால் தன்னை நீதிமானாக்கிக் கொள்ளமுடியாது.

பவுல் அறிவிக்கும் இரட்சிப்பின் தீர்மானம் நித்தியமானது என்பது மட்டுமல்ல, அது தேவனுடைய குணாதிசயங்களாகிய நீதி, இரக்கம், பரிசுத்தம், ஞானம், வல்லமை, அன்பு, மாட்சிமை ஆகியவற்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டது. "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்" (ரோமர் 5:8).

மனிதனுடைய பாவம் தண்டிக்கப்படாமல் பாவமன்னிப்பு உண்டாகாது. இதற்கு தேவன் செய்த காரியம், "தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார்" (ரோமர் 8:3). எந்த ஒரு மனிதனும் தன் முயற்சியினால் நீதிமானாக முடியாத நிலையில் தேவன் இதை எவ்வாறு செய்து முடித்தார் என்பதே பவுல் அறிவிக்கும் சுவிசேஷம். "எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்" (ரோமர் 3:23,24). "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (ரோமர் 4:5).

பிதாவாகிய தேவன் பாவமறியாத, பரிசுத்தமான தன் குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின்மேல் மனிதர்களுடைய பாவத்தை சுமத்தி, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, தன்னுடைய இலவசமான கிருபையினால் உண்டாகும் இரட்சிப்பை அதை விசுவாசிக்கும் ஒவ்வொருவருக்கும் ஆயத்தம் பண்ணுகிறார். பிதாவின் இந்த இரட்சிப்பின் தீர்மானத்தை கல்வாரி சிலுவையில் நிறைவேற்றி முடித்தவர் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து. அதை நமக்குப் பகிர்ந்து தருபவர் பரிசுத்த ஆவியானவர்.

இரட்சிப்பு தேவனுடைய தீர்மானமாக இருப்பதினால் நம்முடைய இரட்சிப்பின் நிச்சயத்தைக் குறித்து எந்த சந்தேகமும் நமக்கு இருக்கவேண்டியதில்லை. அவருடைய தீர்மானத்தின்படியும், முன்னறிவின்படியும் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை தேவன் அழைத்து, நீதிமானாக்கி, மகிமைப்படுத்துகிறார் என்று பவுல் திட்டவட்டமாக அறிவிக்கிறார். ரோமர் 8:28-30 வாசித்துப் பாருங்கள்.

இரட்சிப்பின் மேன்மையையும், மகத்துவத்தையும் சரியாக அறிந்துகொள்ளாததால்தான் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் அனுபவிக்க முடியாமல் போகிறது. "நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே" (ரோமர் 5:10). இவ்விதமாக மனிதனுடைய இரட்சிப்பு கிறிஸ்துவை மட்டுமே

மையமாகக் கொண்டிருக்கிறது. ஆபிரகாமின் விசுவாசம் நீதியாக எண்ணப்பட்டதே தவிர இரட்சிப்புக்கு ஏதுவாக அமையவில்லை. கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அவருடைய நீதியை நமக்கு தருகிறார் என்று விசுவாசிக்கும்போது மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம்.

இந்த விசுவாசம் எப்படி வருகிறது ?

வேதத்தை வாசித்து, தியானித்து தேவனோடு ஐக்கியம் கொள்ளும்போது மட்டுமே வரும். "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று ரோமர் 10:17-ல் வாசிக்கிறோம்.

"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு" (யோவான் 5:39) என்கிறார் இயேசு. ஒருவரை விசுவாசிக்கவேண்டுமானால் அவரைக்குறித்து தனிப்பட்ட முறையில் அறிந்திருக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை அறிய ஒரே வழி வேதத்தை வாசிப்பதுதான். விளக்கவுரையை வாசித்த நீங்கள் அதில் திருப்தியடையாமல் ரோமர் நிருபத்தை மறுபடியும் வாசித்து தேவனோடு ஐக்கியம் கொள்ளுங்கள்.

தேவன் இலவசமாய் நமக்குக் கொடுக்கும் இரட்சிப்பை விசுவாசியுங்கள். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல" (எபே 2:8,9). இரட்சிப்பு தேவன் தரும் அன்பின் பரிசு.

வேதவசனங்களை தியானிக்கும்போது மட்டுமே கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ளவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவருடைய மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே அனுக்கிரகத்தை பெறவும்முடியும். இதுவே நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்காக இருக்கவேண்டும் என்று வாஞ்சிக்கிறேன்.

கிறிஸ்துவின் பணியில்,

பிரிசில்லா தியாகராஜ்

BIBLIOGRAPHY

Alan E. Johnson, *The Freedom Letter*
Albert Barnes, *Barnes notes*
Alex W. Ness, *Triumphant Christian Living*
Andrew Wommack, *Romans*
Arthur, Mac, *The Charismatic Chaos*
Augustine St., *Of the Spirit & the Letter*
Augustine St., *Propositions from the Epistle to the Romans*
Bachanan, *The Doctrine of Justification*
Ben Witherington, *Paul's Letter to the Romans*
Bruce F.F., *The Epistlo of Paul to the Romans*
Calvin, *Romans Commentary*
Charles M. Home, *Salvation*
Colin urquhart, *In Christ Jesus*
Cranfield, *Romans, a Shorter Commentary*
De Haan, *Law or Grace*
Donald Grey Barnhouse, *Expositions on Romans*
Douglas Mou, *The Epistle to the Romans*
Frederic Louis Godet, *Commentary on Romans*
G.H. Spurgeon, *All of Grace*
Granfield, *Romans*
Granfield, *Romans*
Griffith Thomas W.H., *St. Paul's Epistle to the Roman*
Griffith Thomas, *Romans*
Gruden, *Systematic Theology*
Harold J. Ockenga, *Everyone that believeth*
Hegre T.A., *The Will of God*
Herman Redderbos, *Paul, An outline of his Theology*
Horbart E. Freedom, *Deeper Life in the Spirit*
James M. Stifler, *The Epistle to the Romans*
John Devries, *Faith*
John Devries, *Salvation through Faith*
John Murray, *Romans*

John Murray, *The Epistle to the Romans*
John Phillips, *Exploring Romans*
John Stevenson, *Romans, The Righteousness of God*
John Stott, *The Cross of Christ*
Joseph A. Fitzmyer, *Spiritual Exercise*
Klaus Haacker, *The Theology of Paul's Letter to the Romans*
Lagrange M.J., *The Gospel of Jesus Christ*
Liardon Roberts, *God's Generals*
Louis Berkhof, *Systematic Theology*
Martin Luther, *Commentary on Romans*
Martyn Lloyd Jones, *Romans*
Martyn Lloyd Jones, *Saved in Eternity*
Michael Grant, *Saint Paul, the Man*
Michael J Garman, *The Apostle of the Crucified Lord*
Pink A.W., *Gleanings from Paul*
Pink A.W., *Gleanings from the Scriptures*
Pink A.W., *Practical Christianity*
Pink A.W., *The Doctrine of Election & Justification*
Pink A.W., *The Doctrine of Salvation*
Plumer S., *Commentary on Romans*
Robert Haldane, *Romans*
Robert L.Reymond, *Paul*
Schwarz Leo. W, *Great Ages and Ideas of the Jewish people*
Watchman Nee, *The Glorious Church*
Watchman Nee, *The Spiritual man*
Wesley S. Tawel, *Gods Salvation*
William Hendriksen, *Romans*
William R. Nowell, *Romans Verse by Verse*
Williomson Clark, *Has God rejected His people*
Willmington H.L., *Guide to the Bible*



Dr. P. V. THIAGARAJ

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய ரோமர் நிருபம் ஐந்தாவது சுவிசேஷம் என்றும் வேத புத்தகங்களின் சிகரம் என்றும் அழைக்கப்படுகிறது.

சுவிசேஷம் என்றால் நற்செய்தி என்று பொருள். தேவனே நம்மை தமது தயவுள்ள சித்தத்தின்படி நீதிமானாக்குகிறார் என்பதுதான் பவுல் அறிவிக்கும் நற்செய்தி. "ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்" (ரோமர் 4:5).

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ அடிப்படை உபதேசங்களுக்கடுத்த சகல சத்தியங்களையும் உள்ளடக்கிய ஒரே புத்தகம் ரோமர் என்று சொல்லலாம். இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் (ரோமர் 3:24) என்பதுதான் பரிசுத்த ஆவியானவர் பவுல் மூலமாய் சபைக்கு அறிவிக்கும் வெளிப்பாடு.

தேவனுடைய மகத்துவமான இரட்சிப்பின் திட்டம் இங்கே அறிவிக்கப்படுகிறது என்பதினால் ரோமர் நிருபத்தை விளங்கிக்கொள்ளாத ஒருவன் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழமுடியாது.

ரோமர் நிருபத்தின் 16 அதிகாரங்களில் உள்ள 433 வசனங்களையும் தனித்தனியாக ஆயிரக்கணக்கான இணை வசனங்களின் உதவியோடு யாவரும் விளங்கிக்கொள்ளும் விதத்தில் சகோதரன் பி.வி. தியாகராஜ் இந்த விளைக்கவுரையை எழுதியிருக்கிறார் இதை தியானித்து வாசிப்பவர்கள் சத்தியத்தை அறிந்து கொண்டவர்களாய் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

EPHRATH
PUBLICATIONS

54/A, Lakshmi Apartments, Sangam Colony
Kottivakkam, Chennai - 600 041
Phone : +91-44-24925464
Mobile : +91-98415 85547
E-mail : pv_thiagaraj@yahoo.com
www.pvthiagaraj.com